ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

ஆறாவது,

யுத்தகாண்டம்.

தெய்வப்புலமைக்

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இஃது

கோமளபுரம் வித்வான்.

இராஜகோபாலபிள்ளை மாணாக்கராகிய

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ப. சண்முகம்பிள்ளை அவர்களால்

பரிசோதித்து பிரதிக்கிணங்க,

அமரம்பேடு

இரங்கசாமி முதலியார் & சன்ஸ்

அவர்களாற்றமது

சென்னை:

பூமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

உயுத்தகாண்டம்.

படலங்களின் அட்டவணை.

எண்.	படலம்.	பக்கம்.
க-வது.	கடல்காண்படலம்.	௩
உ-வது.	மந்திரப்படலம்.	ரு
௩-வது.	இரணியன்வதைப்படலம்.	உ0
௪-வது.	வீடணனடைக்கலப்படலம்.	௪உ
ரு-வது.	இலங்கைகேள்விப்படலம்.	௬உ
௬-வது.	வருணனைவழிவேண்டுபடலம்.	எக
எ-வது.	சேதுபந்தனப்படலம்.	அஉ
அ-வது.	ஒற்றுக்கேள்விப்படலம்.	௯க
௯-வது.	இலங்கைகாண்படலம்.	௯௯
க0-வது.	இராவணன்றானைகாண்படலம்.	க0ரு
கக-வது.	மகுடபங்கப்படலம்.	கக0
கஉ-வது.	அணிவகுப்புப்படலம்.	கக௬
க௩-வது.	அங்கதன்றூதுப்படலம்.	கஉ0
க௪-வது.	முதற்போர்ப்படலம்.	கஉ௬
கரு-வது.	கும்பகருணன்வதைப்படலம்.	கருஎ
க௬-வது.	மாயாசனகப்படலம்.	உ0௩
கஎ-வது.	அதிகாயன்வதைப்படலம்.	உகரு
கஅ-வது.	நாகபாசப்படலம்.	உ௪அ
க௯-வது.	படைத்தலைவர்வதைப்படலம்.	உ௯அ
உ0-வது.	மகரக்கண்ணன்வதைப்படலம்.	௩கக
உக-வது.	பிரமாத்திரப்படலம்.	௩க௬
உஉ-வது.	பிராட்டிகளங்காண்படலம்.	௩௪ரு
உ௩-வது.	மருத்துமலைப்படலம்.	௩௪௯
உ௪-வது.	களியாட்டுப்படலம்.	௩௬௬
உரு-வது.	மாயாசீதைப்படலம்.	௩௬எ
உ௬-வது.	நிகும்பலைப்படலம்.	௩அ0
உஎ-வது	இந்திரசித்துவதைப்படலம்.	௪0௪
உஅ-வது.	இராவணன்சோகப்படலம்.	௪க௩
உ௯-வது.	படைக்காட்சிப்படலம்.	௪உஉ
௩0-வது.	மூலபலவதைப்படலம்	௪உஅ
௩க-வது.	வேலேற்றப்படலம்.	௪ருஅ
௩உ-வது.	வானரர்களங்காண்படலம்.	௪௬௬

௩௩-வது.	இராவணன்களங்காண்படலம்.	௪௭0
௩௪-வது.	தேரேறுபடலம்,	௪௭௪
௩௫-வது.	இராவணன்வதைப்படலம்.	௪௮௨
௩௬-வது.	மீட்சிப்படலம்.	௫௧௭
௩௭-வது.	திருமுடிசூட்டுப்படலம்.	௫௬௫
௩௮-வது.	விடைகொடுத்தபடலம்.	௬00

படலங்களின் அட்டவணை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

ஆறாவது,

உயுத்தகாண்டம்.

முதலாவது கடல்காண்படலம்.

தனியன்கள்.

மகிழ்மாறனைவழுத்துவாயென்றுனக்கு
நெகிழ்மாறனைநினைக்குநேயம்—முகிழ்மா
முலைக்கமலையேற்றமொழிகாவியத்தால்
நிலைக்கமலைவேகவருணீ.

கம்பன் கவித்திறங் கழறல்.

கம்பர்வீட்டுவொருசிறுபுன்கட்டுத்தறியுங்கவிசெயுமென்
றிம்பர்நாட்டுமன்பதைகூறிருஞ்சொல்புலவீர்கேட்டுவந்தாம்
சம்புநீட்டுசடைத்தலைக்குத்தகுவர்தலைக்குத்திருப்பாத
அம்புநாட்டுமால்சரிதமன்னோர்பாடலதுவியப்பே.

காப்பு.

ஒன்றேயென்னினொன்றேயாம்பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேயென்னினன்றேயாமாமேயென்னினாமேயாம்
இன்றேயென்னினின்றேயாமிலதென்றுரைக்கினிலதேயாம்
நன்றேநம்பிகுடிவாழ்க்கைநமக்கிங்கென்னோபிழைப்பம்மா. (க)

நூல்.

* ஊழிதிரியுங்காலத்துமுலையாநிலையவுயர்கிரியும்
வாழிவற்றுமறிகடலுமண்ணும்வடபால்வான்றோயப்
பாழித்தெற்குள்ளனகிரியுநிலனுந்தாழப்பரந்தெழுந்த
எழுபத்தின்பெருவெள்ளமகரவெள்ளத்திறுத்ததால். (௨)

பொங்கிப்பரந்தபெருஞ்சேனைபுறத்துமகத்தும்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்ததகையாளைப்பிரிந்தபின்புதமக்கினமாம்

---

* ஊழிதிரியுங்காலத்தும்-உலகமாறுபடுஞ்சமயத்தும்.

கொங்கிற்பொலிந்ததாமரையின்குழுவுந்துயில்வுற்றிதழ்குவிக்கும்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கண்ணுற்றான். (௩)

* சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தான்மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன்வந்தானினிவளர்வானென்றுகருதிவருந்தென்றல்
தூயமலர்போனுரைத்தொகையுமுத்துஞ்சிந்திப்புடைசுருட்டிப்
பாயலுதறிப்படுப்பதேயொத்ததிரையின்பரப்பம்மா. (௪)

வழிக்குங்கண்ணீரழுவத்துவஞ்சியழுங்கவந்தடுத்த
பழிக்குங்காமன்பூங்கணைக்கும்பற்றாநின்றான்பொற்றோளைச்
சுழிக்குங்கொல்லனெல்லுலையிற்றுள்ளும்பொறியிற்சுடுமென்றோ
கொழிக்குங்கடலினெடுந்திரைவாய்த்தென்றறாற்றுங்குறுந்திவலை (௫)

நென்னற்கண்டதிருமேனியின்றுபிறிதாய்நிலைதளர்வான்
தன்னைக்கண்டிரங்காதுதனியேதறுந்தடங்கடல்வாய்ப்
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்களுயிர்க்கும்
புன்னைக்குறும்பூநறுஞ்சுண்ணம்பூசாதொருகாற்போகாதே. (௬)

சிலைமேற்கொண்டதிருநெடுந்தோட்குவமைமலையுஞ்சிறிதேய்ப்ப
நிலைமேற்கொண்டுமெலிகின்றநெடியோன்றன்முன்படியேழும்
தலைமேற்கொண்டகற்பினுன்மணிவாயென்னத்தனித்தோன்றிக்
கொலைமேற்கொண்டாருயிர்குடிக்குங்கூற்றங்கொல்லோகொடிப்பவளம்.

தூரமில்லைமயிலிருந்த † சூழலென்றுமனஞ்செல்ல
வீரவில்லிநெடுமோனம்வெல்லநாளுமெலிவானுக்
கீரமில்லாநிருதரோடென்னவுறவுண்டுனக்கேழை
மூரன்முறுவற்குறிகாட்டிமுத்தேயுலகைமுடிப்பாயோ. (௮)

இந்துவன்னநுதற்பேதையிருந்தாணீங்காவிடர்கொடியேன்
தந்தபாவைதவப்பாவைதனிமைதகவோவெனத்தளர்ந்து
சிந்துகின்றநறுந்தரளக்கண்ணீர்ததும்பித்திரைத்தெழுந்து
வந்துவள்ளன்மலர்த்தாளின்வீழ்வதேய்க்குமறிகடலே. (௯)

பள்ளியரவிற்பேருலகம்பசுங்கல்லாகப்பணிக்கற்றை
துள்ளுநறுமென்புனறெளிப்பத்தூநீர்க்குழுவிமுறைசுற்றி
வெள்ளிவண்ணநுரைக்கலவைவெதும்புமண்ணறிருமேனிக்
கள்ளியப்பத்திரைக்கரத்தாலரைப்பதேய்க்குமணியாழி. (௰)

கொங்கைக்குயிலைத்துயர்நீக்கியிமையோர்க்குற்றகுறைமுற்ற
வெங்கைச்சிலையன்றாணியினன்விடாதுமுனிவின்மேற்செல்லும்
கங்கைத்திருநாடுடையானைக்கண்டுநெஞ்சங்களிகூர
அங்கைத்திரள்களெடுத்தோடியார்த்ததொத்ததணியாழி. (௧௧)

---

* சேயகாலம்- வெகுகாலம்.

† சூழலென்று - இடமென.

இன்னதாயகருங்கடலையெய்தியிதனுக்கெழுமடங்கு
தன்னதாயநெடுமோனந்துயரங்காதலிவைதழைப்ப
என்னதாகுமேல்விளைவென்றிருந்தானிராமனிகலிலங்கைப்
பின்னதாயகாரியமுநிகழ்ந்தபொருளும்பேசுவாம். (௧௨)

க - வது, கடல்காண்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௪.

---

௨ - வது, மந்திரப்படலம்.

பூவருமயனொடும்புகுந்துபொன்னகர்
மூவகையுலகினுமழகுமுற்றுற
ஏவனவியற்றினன்கணத்தினென்பரால்
தேவருமருள்கொளத்தெய்வத்தச்சனே. (௧)

பொன்னினுமணியினுமமைந்தபொற்புடை
நன்னகர்நோக்கினானாகநோக்கினான்
முன்னையினழகுடைத்தென்றுமொய்கழல்
மன்னனுமுவந்துதன்முனிவுமாறினான். (௨)

முழுப்பெருந்தனிமுதலுலகின்முந்தையோன்
எழிற்குறிகாட்டிநின்றியற்றியீந்தனன்
பழிப்பருமுலகங்களெவையும்பன்முறை
அழித்தழித்தியற்றுவாற்கரிதுண்டாகுமோ. (௩)

திருநகர்முழுவதுந்திருந்தநோக்கிய
பொருகழலிராவணனயற்குப்பூசனை
வரன்முறையியற்றிநீவழிக்கொள்வாயென்றான்
அரியனதச்சற்குமுதவியாணையான். (௪)

அவ்வழியாயிரமாயிரமவ்வவிர்
செவ்வழிச்செம்மணித்தூணஞ்சேர்த்திய
இவ்வழிமண்டபத்தரிகளேந்திய
செவ்வழியாசனத்தினிதுமேவினான். (௫)

வரம்பறுசுற்றமுமந்திரத்தொழில்
நிரம்பியமுதிஞருஞ்சேனைநீள்கடற்
றரம்பெறுதலைவருந்தழுவத்தோன்றினான்
அரம்பையர்கவரியோடாடுந்தாரினான். (௬)

முனைவருந்தேவருமற்றுமுற்றுளோர்
எனைவருந்தவிர்கெனவேயவாணையான்
புனைகுழன்மகளிரோடிளைஞர்ப்போக்கினன்
நினைவுறுகாரியநிகழ்த்துநெஞ்சினன். (எ)

பண்டிதர்பழையவர்கிழவர்பண்பினர்
தண்டலின்மந்திரத்தலைவர்சார்கெனக்
கொண்டெணிருந்தனன்கொற்றவாணையான்
வண்டொடுகோலையும்வரவைமாற்றினன். (அ)

ஆன்றமைகேள்வியரெனினுமாண்டொழிற்
கேன்றவர்நண்பினரெனினும்யாரையும்
வான்றுணைச்சுற்றத்துமக்கடம்பியர்
போன்றவரல்லரைப்புறத்துப்போக்கினன். (௯)

திசைதொறுநிறுவினருலகுசேரினும்
பிசைதொழின்மறவரைப்பிறிதென்பேசுவ
விசையுறுபறவையும்விலங்கும்வேற்றவும்
அசைதொழிலஞ்சினசித்திரத்தினே. (௧௦)

இராவணன் மந்திரிமாரிடந் தங்குறையுரைத்தல்.

தாட்சியிங்கிதனின்மேற்றருவதென்னினி
மாட்சியோர்குரங்கினாலழிந்தமாநகர்
ஆட்சியுமமைவுமென்னரசுநன்றெனாச்
சூட்சியின்கிழவரைநோக்கிச்சொல்லினன். (௧௧)

சுட்டதுகுரங்கெரிசூறையாடிடக்
கெட்டதுகொடிநகர்கிளையுநண்பரும்
பட்டனர்பரிபவம்பரந்ததெங்கணும்
இட்டதிவ்வரியணையிருந்ததென்னுடல். (௧௨)

ஊறுகின்றனகிணறுதிரமொண்ணகர்
ஆறுகின்றிலதனலகிலுநாவியும்
கூறுமங்கையர்நறுங்கூந்தலின்சுறு
நாறுகின்றநுகர்ந்திருந்தநாமெலாம். (௧௩)

மற்றிலதாயினுமலைந்தவானரம்
இற்றிலதாகியதென்னும்வார்த்தையும்
செற்றிலம்பிறந்திலமென்னும்பேறலால்
முற்றுவதென்னினிப்பழியின்மூழ்கினம். (௧௪)

* பண்டிதர் பழையவர்கிழவர் பண்பினர் - பண்டிதரும் பழையவரும் கிழவரும்பண்பினருமாகிய என்க.

இராவணசேனாதிபன் தன்மனநிலைகூறல்.

என்றவனியம்பலுமெழுந்திறைஞ்சினான்
கன்றியகருங்கழற்சேனைகாவலன்
ஒன்றுளதுணர்த்துவெனொருங்குகேளெனா
நின்றனனிகழ்த்தினன்புணர்ப்பினெஞ்சினன். (௧௫)

வஞ்சனை * மனிசரையியற்றிவாணுதற்
பஞ்சனமெல்லடிமயிலைப்பற்றுதல்
அஞ்சினர்தொழிலெனவறிவித்தேற்கது
தஞ்செனவுணர்ந்திலையுணருந்தன்மையோய். (௧௬)

கரன்முதல்வீரரைக்கொன்றகள்வரை
விரிகுழலுங்கைமூக்கரிந்தவீரரைப்
† பரிபவஞ்செய்ஞ்ஞரைப்படுக்கலாதுநீ
அரசியலழிந்ததென்றயர்திபோதுமால். (௧௭)

தண்டமென்றொருபொருட்குரியதக்கரைக்
கண்டவர்பொறுப்பரோவுலகங்காவலர்
வண்டமரலங்கலாய்வணங்கிவாழ்வரோ
விண்டவருறுவலியடக்கும்வெம்மையோர். (௧௮)

செற்றனரெதிரெழுந்தேவர்தானவர்
கொற்றமும்வீரமும்வலியுங்கூட்டற
முற்றிமூன்றுலகுநீமுதல்வனாயது
வெற்றியோபொறைகொலோவிளம்பல்வேண்டுமால். (௧௯)

விலங்கினருயிர்கெடவிலக்கிமீள்கலா
திலங்கையினினிதிருந்தின்பந்துய்த்துமேல்
குலங்கெழுகாவலகுரங்கிற்றங்குமோ
உலங்குநம்மேல்வரவொழிக்கற்பாலதோ. (௨௦)

தேவருமடங்கினரியக்கர்சிந்தினர்
தாவருந்தானவர்தருக்குத்தாழ்ந்தனர்
யாவருமிறைவரென்றிறைஞ்சுமேன்மையர்
மூவருமொதுங்கினருனக்குமொய்ம்பினோய். (௨௧)

போயினகுரங்கினைத்தொடர்ந்துபோயவண்
எயினருயிர்குடித்தெவ்வந்தீர்கலம்
வாயினுமனத்தினும்வெறுத்துவாழ்துமேல்
ஓயுநம்வலியெனவுணரக்கூறினான். (௨௨)

---

* மனிசரை - மனிதரை. † பரிபவம் - துன்பம்.

முதன்மந்திரியான மகோதரன் தன்மனநிலை உரைத்தல்.

மற்றவன்பின்னுறமகோதரப்பெயர்க்
கற்றடந்தோளினனெரியுங்கண்ணினன்
முற்றுறநோக்கினன்முடிவுமன்னதால்
கொற்றவகேளெனவினையகூறினன். (உ௩)

ஏற்றமென்பிறிதினியெவர்க்குமின்னுயிர்
மாற்றருமுறைறமைசால்வலியின்மாண்பமை
கூற்றுவன்றன்னுயிர்கொள்ளுங்கூற்றெனத்
தோற்றுநின்னேவறன்றலையிற்சூடுமால். (உ௪)

வெள்ளியங்கிரியினைவிடையின்பாகனோ
டள்ளிவிண்டொடவெடுத்தார்த்தவாற்றலாய்
* சுள்ளியினிருந்துறைகுரங்கின்றோள்வலிக்
கெள்ளுதிபோலுநின்புயத்தையெம்மொடும். (உ௫)

மண்ணினும்வானினுமற்றுமுற்றுநின்
கண்ணினுநீங்கினர்யாவர்கண்டவர்
நண்ணரும்வலத்தினர்யாவர்நாயக
எண்ணிலரிறந்தவரெண்ணிலாவரோ. (உ௬)

† இடுக்கிவணியம்புவதில்லையீண்டெனை
விடுக்குவையாமெனிற்குரங்கைவேரறுத்
தொடுக்கருமனிசரையுயிருண்டுன்பகை
முடிக்குவென்யானெனமுடியக்கூறினன். (உ௭)

வச்சிரதந்தன் தன்மனநிலைகூறுதல்.

இச்சிரத்தவனுரைத்திறுக்குமேல்வையில்
வச்சிரத்தெயிற்றவன்வல்லைகூறினன்
‡ அச்சிரத்தைச்கொருபொருளின்றாயினும்
பச்சிரத்தம்பொழிபரிதிக்கண்ணினன். (உ௮)

போயினமனிசரைக்குரங்கைப்பூமியில்
தேயுமின்கைகளாற்றின்மினென்றமை
எயினையிருக்குவதன்றியென்னினி
ஆயுமதெம்வயினயிர்ப்புண்டாங்கொலோ. (உ௯)

எவ்வுலகத்துநின்னேவல்கேட்கிலாத்
தெவ்வினையறுசதுனக்கடிமைசெய்தயான்

---

* சுள்ளி - உலர்ந்தசிறுவிறகு. † இடுக்கு - உத்தரவளிப்பாயாக.
‡ அச்சிரத்தைக்கு - அம்மந்திராலோசனையின் தன்மைக்கேற்ற.

தவ்வினபணியுளதாகத்தான்கொலோ
இவ்வினையென்வயினீகலாதென்றான். (௩௰)

துன்முகன் தன் மனநிலைகூறல்.

நின்மினென்றவன்றனைவிலக்கிநீயிவை
என்முனுமெளியர்போலிறுத்தியோவென
மன்முகநோக்கினன்வணங்கிவன்மையால்
துன்முகனென்பவனினையசொல்லினான். (௩௧)

திக்கயம்வலியிலதேவர்மெல்லியர்
முக்கணும்கயிலையுமுரணின்றாயது
மக்களுங்குரங்குமேவலியவாமெனின்
அக்கடவிராவணற்கமைந்தவாற்றலே. (௩௨)

பொலிவதுபொதுவுறவெண்ணும்புன்றொழில்
மெலியவர்கடனமக்கிறுதிவேண்டுவார்
வலியினரெனினவர்க்கொதுங்கிவாழ்துமோ
ஒலிகழலொருவநம்முயிருக்கன்பினால். (௩௩)

கண்ணியமந்திரக்கருமங்காவல
மண்ணியன்மணிசருங்குரங்குமற்றவும்
உண்ணியவமைந்தனவுணவுக்குட்குமேல்
திண்ணியவரக்கரிற்றீரர்யாவரோ. (௩௪)

எரியுறமடுப்பதுமெதிர்ந்துளோர்படப்
பொருதொழில்யாவையும்புரிந்துபோவதும்
வருவதுங்குரங்குநம்வாழ்க்கையூர்கடந்
தரிதுகொலிராக்கதர்க்காழிநீந்துதல். (௩௫)

வந்துனதிருக்கையுமரணும்வன்மையும்
வெந்தொழிற்றானையின்விரிவும்வீரமும்
சிந்தையினுணர்பவர்யாவரேசிலர்
உய்ந்துதம்முயிர்கொடிவ்வுலகத்துள்ளார். (௩௬)

ஒல்வதுநினையினுமூறுதியோரினும்
வெல்வதுவிரும்பினும்வினையம்வேண்டினும்
செல்வதங்கவருழைச்சென்றுதீர்ந்தறக்
கொல்வதுகருமமென்றுணரக்கூறினான். (௩௭)

பெரும்பக்கன் தன்மனநிலை கூறுதல்.

காவலன்கண்ணெதிரவனைக்கைகவித்
தியாவதுண்டினிநமக்கென்னச்சொல்லினான்

கோவமும்வன்மையுங்குரங்குக்கேயெனு
மாபெரும்பக்கனென்றொருவன்வன்மையான். (௩அ)

முந்தினர்முரணிலர்சிலவர்மொய்யமர்
நந்தினர்தமரொடுநனிநயந்ததோ
வந்தொருகுரங்கிடுதீயின்வன்மையால்
வெந்ததோவிலங்கையோடரக்கர்வெம்மையும். (௩௯)

மானுடரேவுவார்குரங்குவந்திவ்வூர்
தானெரிமடுப்பதுநிருதர்தானையே
ஆனவரதுகுறித்தழுங்குவாரெனின்
மேனிகழ்வதற்கினிவிளம்பல்வேண்டுமோ. (௪0)

நின்றுநின்றிவைசிலவிளம்பநேர்கிலன்
நன்றெனினரரொடுகுரங்கை * நாமறக்
கொன்றுதின்றல்லதோரெண்ணுங்கூடுமோ
என்றனனிகல்குறித்தெரியுங்கண்ணினன். (௪௧)

பிசாசன் தன்மனநிலைகூறுதல்.

திசாதிசைபோதுநாமரசன்செய்வினை
உசாவினனுட்கினனெழிதும்வாழ்வென்றான்
பிசாசனென்றொருபெயர்பெற்றபெய்கழல்
† நிசாசரனுருப்புணர்நெருப்புநீர்மையான். (௪௨)

பானுகோபன் தன் மனநிலைமைகூறுதல்.

ஆரியன்றன்மையீதாயினுய்வுறு
காரியமீதெனிற்கண்டவாற்றினல்
சீரியர்மனித்தரேசிறியம்யாமெனுச்
சூரியன்பகைஞனென்றொருவன்சொல்லினன். (௪௩)

வேள்விப்பகைஞனென்பவன் தன்மனநிலைகூறுதல்.

ஆள்வினைநிலைமையுமரக்கராற்றலும்
தாழ்வினியிதனின்மேற்பகரத்தக்கதோ
சூழ்வினைமனிசராற்றேன்றிறறுமெனு
‡ வேள்வியின்பகைஞனுமுரைத்துவெள்கினன். (௪௪)

தூமிராட்சன் தன்மனநிலைகூறுதல்.

தொகைநிறக்குரங்குடைமனிசர்ச்சொல்லினென்
சிகைநிறச்சூலிதன்றிறத்திற்செல்லினும்
தகைநிறத்தண்ணறன்சமைதனன்றெனுப்
புகைநிறக்கண்ணனும்புகன்றுபொங்கினன். (௪௫)

---

* நாமற - பெயரற.
† நிசாசரன் - அசுரன்.
‡ வேள்வியின்பகைஞன் - எக்ஞவிரோதன்.

மற்றவன் பின்னுறமற்றையோர்களும்
இற்றிதுவேநலமெண்ணமற்றிலென்
றுற்றனவுற்றனசொல்லியோங்கினார்
புற்றுறையரவெனப்புழுங்குநெஞ்சினார். (சசு)

வேறு.

கும்பகருணன்றன் மனநிலைகூறுதல்.

வெம்பிகலரக்கரைவிலக்கிவினைதேரா
நம்பியரிருக்கவெனநாயகனைமுன்னா
எம்பியெனநிற்கிலுரைசெய்வலிதமென்னாக்
கும்பகருணப்பெயரினானிவைகுறித்தான். (சஎ)

நீயயன்முதற்குலமிதற்கொருவனின்றாய்
ஆயிரமறைப்பொருளுணர்ந்தறிவமைந்தாய்
தீவினைநயப்புறுதல்செய்தனைதெரிந்தால்
ஏயினவுறத்தகையையித்துணையவேயோ. (சஅ)

ஓவியமமைந்தநகர்தீயுண * வுளைந்தாய்
கோவியலழிந்ததெனவேறொருகுலத்தோன்
தேவியைநயந்துசிறைவைத்தசெயனன்றே
பாவியருறும்பழியிதிற்பழியுமுண்டோ. (சகூ)

மன்னகரழிந்ததெனநாணினைநயத்தால்
உன்னுயிரெனத்தகையதேவியர்களுன்மேல்
இன்னகைதரத்தரவொருத்தன்மனையுற்றாள்
பொன்னடிதொழத்தொழமறுத்தல் † புகழ்போலாம். (ருo)

என்றொருவனில்லுறைதவத்தியையிரங்காய்
வன்றொழிலினாய்மறைதுறந்துசிறைவைத்தாய்
அன்றொழிவதாயினுமரக்கர்புகழைய
புன்றொழிலினாலிசைபொறுத்தல்புலமைத்தோ. (ருக)

ஆசில்பரதாரமவையஞ்சிறையடைப்பேம்
மாசில்புகழ்காதலுறுவேமவளமைகூரப்
பேசுவதுமானமிடைபேணுவதுகாமம்
கூசுவதுமானுடரைநன்றுநமகொற்றம். (ருஉ)

சிட்டர்செயல்செய்திலைகுலச்சிறுமைசெய்தாய்
மட்டவிழ்மலர்க்குழலினாளையினிமன்னோ
விட்டிடுதுமேலினியமாதுமவர்வெல்லப்
பட்டிடுதுமேலதுவுநன்றுபழியன்றால். (ருங)

* உளைந்தாய் - வருந்தினை.
† புகழ்போலாம் - அன்றென்பது குறிப்பு.

மரன்படர்வனத்தொருவனேசிலைவலத்தால்
கரன்படைபடுத்தவனைவென்றுகளைகட்டால்
நிரம்பிடுவதன்றதுவுநின்றதினிநம்பால்
உரம்படுவதேதயிதனின்மேலுறுதியுண்டோ. (ருச)

வென்றிடுவர்மானுடவரேனுமவர்தம்மேல்
நின்றிடைவிடாதுநெறிசென்றுறநெருக்கித்
தின்றிடுதல்செய்கிலமெனிற்செறுநரோடும்
ஒன்றிடுவர்தேவருலகேழுமுடனென்றும். (ருரு)

ஊறுபடையூறுவதன்முன்னமொருநாளே
ஏறுகடலேறிநரர்வானரரையெல்லாம்
வேறுபெயராதவகைவேரொடுமடங்க
நூறுவதுவேகருமமென்பதுநுவன்றான். (ருசு)

கும்பகருணன் உரைத்ததை இராவணனங்கீகரித்தல்.

நன்றுரைசெய்தாய்குமரநானிதுநினைந்தேன்
ஒன்றுமினியாய்தல்பழுதொன்னலரையெல்லாம்
கொன்றுபெயர்வாநமகொடிப்படையையெல்லாம்
இன்றெழுதனன்றெனவிராவணனிசைத்தான். (ருஎ)

இந்திரசித்துத் தன்மனநிலைகூறுதல்.

என்றவனியம்பியுறுமெல்லையினில்வல்லே
சென்றுபடையோடுசிறுமானுடர்சினப்போர்
வென்றுபெயர்வாயரசநீகொலெனவீரம்
நன்றுபெரிதென்றுமகனக்கிவைநவின்றான். (ருஅ)

ஈசனருள்செய்தனவு * மேடவிழ்மலர்ப்பே
ராசனமுவந்தவனளித்தனவுமாயப்
பாசமுதல்வெம்படைசுமந்துபலர்நின்றார்
ஏசவுழல்வேனொருவன்யானுமுளனென்றான். (ருகு)

முற்றுமுதலாயுலகமூன்றுமெதிர்தோன்றிச்
செற்றமுதலோரொடுசெறுத்ததொர்திறத்தும்
வெற்றியுனதாகவிளையாடொழியினென்னைப்
பெற்றுமிலையா † னெறிபிறந்துமிலெனென்றான். (சுO)

குரங்குபடமேதினிகுறைத்தலைபடப்போர்
அரங்குபடமானுடரலந்தலைபடப்பே

---

* ஏடவிழலர்ப்பேராசனமுவந்தவன் - இதழ்விரிந்த பெரியகமலாசனத்தினையுடைய பிரமதேவன்.

† நெறிபிறந்துமிலன் - முறையாக உனக்கேபிறந்தவனுமல்லேன்.

* இரங்குபடர்சீதைபடவின்றிருவர்நின்றார்
சிரங்குவடெனக்கொணர்தல்காணுதிசினத்தோய். (சுக)

சொல்லிடைகழிக்கிலைசுருங்கியகுரங்கென்
கல்லிடைகழித்தவுருமிற்கடுமைகாணும்
வில்லிடைகழித்தமிடல்வாளிவெருவித்தம்
பல்லிடைகிழித்திரிவகண்டுபயனுய்ப்பாய். (சுஉ)

யானையிலர்தேர்புரவியாதுமிலரேவும்
தானையிலர்நின்றதவமொன்றுமிலர்தாமோர்
கூனன்முதுகின்சிறுகுரங்கொடுவெல்வார்
ஆனவருமானுடர்நம்மாண்மையினிதன்றே?. (சுஙு)

நீருநிலனுநெடியகாலுநிமிர்வானும்
பேருமுலகியாவுமொருநாள்புடைபெயர்ந்தே
யாருமொழியாமைநரர்வானரர்களென்பார்
வேருமொழியாதவகைகொன்றலதுமீளேன். (சுச)

விபீடணன் இந்திரசித்தை மறுத்துத் தன்மனநிலை உரைத்தல்.

என்றடியிறைஞ்சினனெழுந்துவிடை † ஈமோ
வன்றெழிலினுயெனவும்வாளெயிறுவாயில்
தின்றனன்முனிந்துநனிதீவினையையெல்லாம்
வென்றவரினன்றுணரும்வீடணன்விளம்பும். (சுரு)

வேறு.

‡ நூலினுணங்கியவறிவுநோக்கினை
போலுமாலுறுபொருளுணரும்பூட்சியோய்
காலமேல்விளைபொருளுணருங்கற்பிலாப்
பாலநீயினையனபகரற்பாலையோ. (சுசு)

கருத்திலான்கண்ணிலானொருவன்கைக்கொடு
திருத்துவான்சித்திரமனையசெப்புவாய்
விருத்தமேதகையவர்வினையமந்திரத்
திருத்தியோவிளமையான்முறைமையெண்ணிலாய். (சுஎ)

தூயவர்முறைமையேதொடங்குந்தொண்மையோர்
ஆயவர்நிற்கமற்றவுணராதியாம்
தீயவரறத்தினாற்றேவராயது
மாயமோவஞ்சமோவன்மையேகொலோ. (சுஅ)

---

* இரங்குபடர்-அமுதற்றுற்பம்.
† ஈமோ - அருளுதீர்.
‡ நூலினுணங்கிய-சாத்திரவாராய்ச்சியால் நுட்பமடைந்த.

அறந்துறந்தமரரையென்றவாண்டொழில்
திறந்தெரிந்திடினது தானுஞ்செய்தவம்
நிறந்திறம்பாவகையியற்றுநீர்மையால்
மறந்துறந்தவர்தரும்வரத்தின்வண்மையால். (சுக)

மூவரையென்றுமூன்றுலகுமுற்றுறக்
காவலினின்றுதங்களிம்புக்கைம்மிக
வீவதுமுடிவெனவீந்ததல்லது
தேவரையென்றவர்யாவர்தீமையோர். (எ0)

வினைகளையென்றுமேல்வீடுகண்டவர்
எனைவரென்றியம்புகேனெவ்வந்தீர்க்கையால்
முனைவருமமரருமுன்னும்பின்னரும்
அனையவர்திறத்துளர்யாவராற்றினர். (எக)

விபீடணன் என்னுரையை இகழாதிருந்தியே லுரைக்கின்றேனென இராவணனை நோக்கிக் கூறுதல்.

பிள்ளைமைவிளம்பினைபேதைநீயென
ஒள்ளியபுதல்வனையுரப்பியென்னுரை
எள்ளலையாமெனினியம்பலாற்றுவென்
தெள்ளியபொருளென * வரசற்செப்பினன். (எஉ)

எந்தைநீயாயுநீயெம்முன்நீதவம்
வந்தனைத்தெய்வநீமற்றுமுற்றுநீ
இந்திரப்பெரும்பதமிழக்கின்றாயென
நொந்தனனாகலினுவல்வதாயினேன். (எங)

கற்றுறுமாட்சியென்கண்ணின்றாயினும்
உற்றுறுபொருடெரிந்துணர்தலோயினும்
† சொற்றுறுசூழ்ச்சியின்றுணிவுசோரினும்
முற்றுறக்கேட்டபின்முனிதிமொய்ம்பினோய். (எச)

கோனகர்முழுவதுநினதுகொற்றமும்
சானகியெனும்பெயருலகின்றம்மனை
ஆனவள்கற்பினால்வெந்ததல்லதோர்
வானரஞ்சுட்டதென்றுணர்தன்மாட்சியோ. (எரு)

எண்பொருட்டொன்றநின்றெவருமெண்ணினால்
விண்பொருட்டொன்றியவுயர்வுமீட்சியும்

---

* அரசற்செப்பினன் - இராவணனுக்குரைத்தான்.

† சொற்றுறுசூட்சியின் றுணிவுசோரினும்-மந்திராலோசனைச்சொற்களின் தீர்மானத்துக்கு மாறுபட்டாலும்.

பெண்பொருட்டன்றியும்பிறிதுண்டாமெனின்
மண்பொருட்டன்றியும்வரவும்வல்லதோ. (எசு)

மீனுடைநெடுங்கடலிலங்கைவேந்தன்முன்
தானுடைநெடுந்தவந்தளர்ந்துசாய்வதோர்
மானுடமடந்தையாலென்னுவாய்மொழி
தேனுடையலங்கலாயின்றுதீர்ந்ததோ. (எஎ)

ஏறியநெடுந்தவமிழைத்தவெல்லைநாள்
ஆறியபெருங்குணத்தறிவனாணையால்
கூறியமனிசர்பாற்கொற்றங்கொள்ளலை
வேறினியவர்வயின்வென்றியாவதோ. (எஅ)

ஏயதுபிறிதுணர்ந்தியம்பவேண்டுமோ
நீயொருதனியுலகேழுநீந்துவாய்
ஆயிரந்தோளவற்காற்றறோற்றனை.
மேயலையாமெனின்விளம்பவேண்டுமோ. (எகூ)

மேலுயர்கயிலையைவென்றமேலைநாள்
நாலுதோணந்திதானவின்றசாபத்தால்
கூலவான்குரங்கினாற்குறுகுங்கோளது
வாலிபாற்கண்டனம்வரம்பிலாற்றலாய். (அ0)

தீயிடைக்குளித்தவத்தெய்வக்கற்பினாள்
வாயிழைமொழிந்தசொன்மறுக்கவல்லமோ
நோயுனக்கியானென நுவன்றுளாளவள்
ஆயவள்சீதைபண்டமுதிற்றோன்றினாள். (அக)

வேறு.

சம்பரப்பெயருடைத்தானவர்க்கிறைவனைத்தனுவலத்தால்
அம்பரத்தும்பர்புக்கமரிடைத்தலைதுமித்தமரருய்ய
உம்பருக்கிறைவனுக்கரசளித்துதவினானொருவனேமி
இம்பரிற்பணிசெயத்தயரதப்பெயரினானிசைவளர்த்தான். (அஉ)

மிடல்படைத்தொருவனாயமரர்கோன்விடையதாய்வெரிநின்மேலாய்
உடல்படைத்தவுணராயினரெலாமடிய * வாளுருவினானும்
அடல்படைத் † தவனியைப்பெருவளந்தருகவென்றருளினானும்
‡ கடல்படைத்தவனெடுங் $ கங்கைதந்தவன்வழிக்கடவுண்மன்னன். ()

பொய்யுரைத்துலகினிற்சினவினார்குலமறப்பொருதுதன்வேல்
நெய்யுரைத்துறையினிட்டறம்வளர்த்தொருவனானெறியினின்றான்

---

* வாளுருவினான் - காகுத்தன்.

† அவனியைப்பெருவளந்தருக வென்றருளினான். பிருதுச்சக்கரவர்த்தி.

‡ கடல்படைத்தவன்-சகரன். $ கங்கைதந்தவன்-பகீரதன்.

மய்யுரைத்துலவுகண்மனைவிபால்வரமளித்தவைமறாதே
மெய்யுரைத்துயிர்கொடுத்தமரரும்பெறுகிலாவீடுபெற்றான். (அச)

அனையவன்சிறுவரெம்பெருமவுன்பகைஞரானவரையம்மா
இனையரென்றுணர்தியேலிருவரும்மொருவருமெதிர்கிலாதார்
முனைவரும்மமரரும்முழுதுணர்ந்தவர்களும்முற்றுமற்றும்
நினைவருந்தகையர்நம்வினையினான்மனிசராயெளிதினின்றார். (அரு)

கோசிகபெயருடைக்குலமுனித்தலைவனக்குலிர்மலர்ப்பே
ராசனத்தவனொடெவ்வுலகமுந்தருவெனென்றமையலுற்றான்
ஈசனிற்பெறுபடைக்கலமிமைப்பளவினெவ்வுலகம்யாவும்
நாசமுற்றிடநடப்பனகொடுத்தவைபிடித்துடையர்நம்பர். (அசு)

எறுழ்வலிப்பொருவிறாளவுணரோடமரர்பண்டிகல்செய்காலத்
துறுதிறற்கலுழன்மீதொருவனின்றமர்செய்தானுடையவில்லும்
தெறுசினத்தவர்கண்முப்புரநெருப்புறவுருத்தெய்தவம்பும்
குறுமுனிப்பெயரினானிறைதவர்க்கிறைதரக்கொண்டுநின்றான். (அஎ)

நாவினாலுலகைநடுக்கிடுவெதிக்களவிடற்குரியநாளும்
மேவுதீவிடமுயிர்ப்பனவெயிற்பொழியெயிற்றனையவீரர்
ஆவமாமரியபுற்றுறைவமுற்றறிவருக்கழிவுசெய்யும்
பாவகாரியருயிர்ப்பதமலாதிரைபெறாப்பகழிநாகம். (அஅ)

பேருமோவொருவராலவர்களாலல்லதிஃபெரியவேனும்
நாருமூரியுமறாநம்முடைச்சிலைகள்போனவியலாமோ
தாருவோவேணுவோதானுவாயுலகினைத்தழுவிநிற்கும்
மேருவோமால்வரைக்குலமதோவல்லவோவில்லுமன்றே. (அகூ)

உரமொருங்கியதுநீர்கடையும்வாலியதுமார்புலகைமூடும்
மரமொருங்கியகராதியர்விராதனதுமால்வரைகண்மானும்
சிரமொருங்கினவினிச்செருவொருங்குளதெனிற்றெவ்வரென்பார்
பரமொருங்குவதலாற்பிறிதொருங்காததோர்பகையுமுண்டோ. (கூ0)

சொல்வரம்பெரியமாமுனிவரென்பவர்கடந்துணையிலாதார்
ஒல்வரம்பெரியதோளிருவரும்மமரரோடுலகம்யாவும்
வெல்வரென்பதுதெரிந்தெண்ணினார்நிருதர்வேர்முதலும்வீயக்
கொல்வரென்றுணர்தலாலவரைவந்தமைவதோரியையுகொண்டார். ()

துஞ்சுகின்றிலர்களாலிரவுநன்பகலுநிற்சொல்லவொல்கி
நெஞ்சுநின்றயருமிந்நிருதர்பேர்சனகியாநெடியதாய
நஞ்சுதின்றவர்கடாநண்ணுவார்நரகமென்றெண்ணிநம்மை
அஞ்சுகின்றிலர்கணின்னருளலாற்சரணிலாவமரரையா. (கூஉ)

புகன்மதித்துணர்கிலாமையினமக்கெளிமைசால்பொறுமைகூர
நகன்மதிக்கிலமறுப்பொலியவாளொளியிழந்துய்தனண்ணும்
பகன்மதிக்குவமையாம்விபுதராமிரவுகால்பருவநாளின்
அகன்மதிக்குவமையாயினதபோதனருளார்வதனமம்மா. (௯௩)

சிந்துமுந்துலகினுக்கிறுதிபுக்குருவொளித்துறழல்செய்யார்
இந்துவின்றிருமுகத்திறைவிநம்முறையுளாரென்றலோடும்
அந்தகன்முதலினோரமரரும்முனிவரும்பிறருமஞ்சார்
வந்துதம்முலகமும்வானமுங்கண்டுவெந்தகல்வர்மன்னோ. (௯௪)

சொலத்தகாத்துன்னிமித்தங்களெங்கணும்வரத்தொடர்வவொன்றோ
செலத்தகாவமரரும்மவுணருஞ்செருவில்விட்டனவிடாத
குலத்தகால்வயநெடுங்குதிரையுங்குஞ்சரக்குன்றுமென்றும்
வலத்தகான்முந்துறத்தந்துநம்மனையிடைப்புகுதுமன்னோ. (௯௫)

வாயினும்பல்லினும்புனல்வறநதுரறினார்நிருதர்வைகும்
பேயினும்பெரியபேய்நரிகளும்புரிதரும்பிறவுமெண்ணின்
கோயிலுநநகரமும்மடநலார்குழலுநங்குஞ்சியோடும்
தீயின்வெந்திடுமெலாலொருநிமித்தம்பெறாநதிறனுமுண்டோ. (௯௬)

சிந்தமாளாகரைச்சிரமுருக்கியகரன்றிரிசிரத்தோன்
முந்தமாளாயினான்வாலியேமுதலினோர்முடிவுகண்டால்
அந்தமானிடவனோடாழிமாவலவனும்பிறருமையா
இந்தமானிடவராமிருவரோடெண்ணலாமொருவர்யாரே. (௯௭)

இன்னமொன்றுரைசெயவானினிதுகேளெம்பிரானிருவராய
அன்னவன்றன்னொடும்வானரத்தலைவராயனுகினின்றார்
மன்னுநம்பகைஞராம்வானுளோரவரொடும்மாறுகோடல்
* கன்னமன்றிதுநமக்குறுதியென்றுணர்தலுங்கருமமன்றால். (௯௮)

வேறு.

இசையுஞ்செயகையுமுயர்குலத்தியற்கையு † மெஞ்ச
வசையுங்கீழ்மையுமீக்கொளக்கிளையொடுமடியா
தசைவில்கற்பினவ்வணங்கைவிட்டருளுதியிதன்மேல்
விசையமில்லெனசசொல்லினனறிஞரின்மிக்கோன். (௯௯)

இராவணன் விபீடணை இகழ்ந்துகூறுதல்.

கேட்டவாண்டகைகரத்தொடுகரதலங்கிடைப்பப்
பூட்டிவாய்தொறும்பிறைக்குலம்வெண்ணிலாப்பொழிய
வாட்டடந்தவழாரமும்வயங்கொளிமார்பும்
தோட்டடங்களுங்குலுங்கநக்கிவையிவைசொன்னான். (௧௦௦)

* கன்னம்—முறை.

† எஞ்ச—குறைய.

இச்சைநல்லனவுறுதிகளிசைக்குவெனென்றாய்
பிச்சர்சொல்லுவசொல்லினையென்பெருவிறலைக்
கொச்சைமானுடர்வெல்குவரென்பதுகுறித்த
தச்சமோவவர்க்கன்பினோயாவதோவையா. (௧0௧)

ஈங்குமானுடப்பசுக்களுக்கிலைவரமென்றாய்
தீங்குசொல்லினைதிசைகளையுலகொடுஞ்செருக்கால்
தாங்குமானையைத்தள்ளியத்தழனிறத்தவனை
ஓங்கறன்னொடுமெடுக்கவும்வரங்கொண்டதுளதோ. (௧0௨)

மனக்கொடன்றியும்வறியனவழங்கினைவானோர்
சினக்கொடும்படைசெருக்களத்தென்னையென்செய்த
எனக்குநிற்கமற்றென்னொடிங்கொருவயிற்றுதித்த
உனக்குமானுடர்வலியராந்தகைமையுமுளதோ. (௧0௩)

சொல்லுமாற்றங்கடெரிந்திலைபன்முறைதோற்றும்
வெல்லுமாற்றலுமொருமுறைபொறுத்தனன்விண்ணைக்
கல்லுமாற்றலென்கிளையையுமென்னையுங்களத்தில்
கொல்லுமாற்றலருளரெனக்கோடலுங்கொண்டாய். (௧0௪)

தேவரிற்பெற்றவரத்தினிற்பெருஞ்செருக்கென்னின்
மூவரிற்பெற்றமுடையவன்றன்னொடுமுழுதும்
காவலிற்பெற்றதிகிரியோன்றன்னொடுங்கடந்த
தேவரிற்பெற்றவரத்தினாலியம்புதியிளையோய். (௧0௫)

நந்திசாபத்தினமையடுங்குரங்கெனினம்பால்
வந்தசாபங்களெனைப்பலவவைசெய்தவலியென்
இந்தியாதிகளவித்தவர்தேவர்நம்மிறுதி
சிந்தியாதவர்யாரவைநம்மையென்செய்த. (௧0௬)

* அரங்கினுடொற்கன்பூண்டிடைவரமறியேன்
இரங்கியானிற்பவென்வலியவன்வயினெய்த
வரங்கொள்வாலிபாற்றோற்றனென்மற்றும்வேறுள்ள
குரங்கெலாமெனைவெல்லுமென்றெங்ஙனங்கோடி. (௧0௭)

நீலகண்டனு † நேமியுநேர்நின்றுநேரின்
ஏலுமன்னவருடைவலியவன்வயினெய்தும்
சாலுநல்வரநினைந்தவனெதிர்செலத்தவிர்ந்து
வாலிதன்னையுமணித்தனுமறைந்துநின்றெய்தான். (௧0௮)

---

* அரங்கில்-நடனசாலையில்.

† நேமியும்-சக்கரத்தினையுடையவனும்.

ஊனில்வீறுத்தோட்டைமாமரத்துளம்போட்டிக்
கூனிசூழ்ச்சியாலரசழிந்துயர்வனங்குறுகி
யானிழைத்திடவில்லிழந்தின்னுயிர்சுமக்கும்
மானிடன்வலிநீயலாதாருளர்மதிப்பார். (௧௦௯)

பின்னும் விபீடணன் கூறுதல்.

என்றுதன்னுரையிழித்துநீயுணர்விலியென்று
நன்றுபோதுநாமெழுகெனுமரக்கனைநணுகா
ஒன்றுகேளினமுறுதியென்றன்பினனெழியான்
துன்றுதாரவன்பின்னருமினையனசொல்வான். (௧௧௦)

தன்னின்முன்னியபொருளிலாவொருதனித்தலைவன்
அன்னமானுடனாகிவந்தவதரித்தமைந்தான்
சொன்னநம்பொருட்டும்பர்தஞ்சூழ்ச்சியின்றுணிவால்
இன்னமேகுதிபோலுமென்றடிதொழுதிரந்தான். (௧௧௧)

பின்னுமிராவணன் கூறுதல்.

அச்சொற்கேட்டவனழியானென்றனையாயின்
கொச்சைத் * துன்மதியெத்தனைபோரிடைக்குறைந்தான்
இச்சைக்கேற்றனயான்செய்தவித்தனைகாலம்
முச்சற்றான்கொலம்முழுமுதலோனெனமுனிந்தான். (௧௧௨)

இந்திரன்றனையிருஞ்சிறையிட்டநாளிமையாத்
தந்திகோடிறத்தகர்ந்தநாடன்னையான்முன்னம்
வந்தபோர்தொறுந்துரந்தநாள்வானவருலகைச்
சிந்தவென்றநாள்சிறியன்கோனீசொன்னதேவன். (௧௧௩)

சிவனுநான்முகத்தொருவனுந்தேவர்க்குந்தெரியா
அவனுமற்றுளவமரருமுடனுறைந்தடங்காப்
புவனமூன்றும்யானாண்டுள தாண்டவப்பொருவில்
உவனிலாமையிலோவலியொதுங்கியோவுரையாய். (௧௧௪)

ஆயிரம்பெருந்தோள்களுமத்துணைத்தலையும்
மாயிரும்புவியுள்ளடியடக்குரும்வடிவும்
தீயசாலவுஞ்சிறிதெனநினைந்துநாந்தின்னும்
ஓயுமானுடவுருவுகொண்டனன்கொலாமொருவன். (௧௧௫)

† பித்தனாகியவீசனுமாலுமென்பெயர்கேட்
டெய்த்தசிந்தையரேகுழியேகுழியெல்லாம்
கைத்தவேற்றினுங்கடாவியபுள்ளினுமுதுகில்
தைத்தவாளிகணின்றுளகுன்றின்வீழ்தடித்தின். (௧௧௬)

---

* துன்மதி - துற்புத்தியையுடையாய்.

† பித்தனாகிய - உன்மத்தமுடையவனாகிய.

வெஞ்சினந்தருபோரிலென்னுடனெழவேண்டா
இஞ்சிமாநகரிடமுடைத்தீண்டினிதிருத்தி
அஞ்சலஞ்சலென்றயலிருந்தவர்முகநோக்கி
நஞ்சின்வெய்யவன்கையெறிந்தருமெனநக்கான். (கசஎ)

விபீடணன் இரணியன் சரிதைகேளென உரைத்தல்.

பின்னும்வீடணனையரின்றரமலபெரியோர்
முன்னைநாளவன்முனிந்திடக்கிளையொடுமுடிந்தார்
இன்னமுண்டியானியம்புவதிரணியனென்பான்
தன்னையுள்ளவாகேட்டியென்றுரைசெயச்சமைந்தான். (கசஅ)

உ - வது, மந்திரப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கநஉ.

௩ - வது, இரணியன்வதைப்படலம்.

வேதங்கண்ணியபொருளெலாம்விரிஞ்சனேயீந்தான்
போதங்கண்ணியவரமவன்றரக்கொண்டுபோந்தான்
காதுங்கண்ணுதலோனயன்கடைமுறைகாணுப்
பூதங்கண்ணியவலியெலாமொருதனிபொறுத்தான். (க)

எற்றைநாளினுமுளனெனுமிறைவனுமயனும்
கற்றையஞ்சடைக்கடவுளுங்காத்தளித்தழிக்கும்
ஒற்றையண்டத்தினளவினோவிதன்புறத்துலவா
மற்றையண்டமுந்தன்பெயரேசொலவாழ்ந்தான். (உ)

பாழிவன்றடந்திசைசுமந்தோங்கியப்பணைக்கைப்
பூழிவன்கரியிரண்டிருகைகொடுபொருத்தும்
ஆழுங்காணுதற்கரியவாயகன்றவோராழி
ஏழுந்தன்னிருதாளளவெனக்கடந்தேறும். (௩)

வண்டற்றெண்டிரையாற்றுநீர்சிலவென்றுமருவான்
கொண்டல்கொண்டநீர்குளிப்பிலவென்றவைகுடையான்
பண்டைத்தெண்டிரைப்பரவைநீருவரென்றுபடியான்
அண்டத்தைப்பொதுத்தப்புறத்தப்பினுலாடும். (௪)

சார்விமானத்திற்சந்திரன்றனிப்பதஞ்சரிக்கும்
தேரின்மேனின்றுமிரவிதன்பெரும்பதஞ்செலுத்தும்

பேர்விலெண்டிசைக்காவலர்கருமமும்பிடிக்கும்
மேருமாவரையுச்சிமேலரசுவீற்றிருக்கும். (௫)

நிலனுநீரும்வெங்கனலொடுகாலுமாய்நிமிர்ந்த
தலனுணீடியவவற்றினத்தலைவரைமாற்றி
உலவுங்காற்றொடுகடவுளர்பிறருமாயுலகின்
வலியுஞ்செய்கையும்வருணன்றன்கருமமுமாற்றும். (௬)

* தாமரைத்தடங்கண்ணினான்பேரவைதவிர
நாமந்தன்னதேயுலகங்கள்யாவையுநவிலத்
தூமவெங்கனலந்தணர்முதலினர்சொரிந்த
ஓமவேள்வியினிறையவர்பேறெலாமுண்ணும். (௭)

காவல்காட்டுதறுடைத்தலென்றித்தொழில்கடவ
மூவரும்மவைமுடிக்கிலார்பிடிக்கிலார்முறையின்
ஏவர்மற்றவர்யோகிகளுறுபதமிழந்தார்
தேவரும்மவன்றாளலாதருச்சனைசெய்யார். (௮)

மரபின்மாபெரும்புறக்கடன்மஞ்சனமருவி
அரவினாட்டிடைமகளிரோடின்னமுதருந்திப்
பரவுமிந்திரன்பதியிடைப்பகற்பொழுதகற்றி
இரவினேலக்கநான்முகனுலகத்துளிருக்கும். (௯)

பண்டுவானவர்தானவர்யாவரும்பற்றித்
தெண்டிரைக்கடல்கடைதரவலியதுதேடிக்
கொண்டமத்தினைக்கொற்றத்தன்குலவுத்தோட்கமைந்த
தண்டெனக்கொளலுற்றதுநொய்தெனத்தவிர்ந்தான். (௧௦)

மண்டலந்தருகதிரவன்வந்துபோய்மறையும்
எண்டலந்தொடற்கரியனதடவரையிரண்டும்
கண்டலம்பசும்பொன்னவன்முன்னவன்காதின்
குண்டலங்கண்மற்றென்னினிப்பெருவிறல்கூறின். (௧௧)

மருக்கொடாமரைநான்முகனைம்முகன்முதலோர்
குருக்களோடுகற்றோதுவதவன்பெருங்கொற்றம்
சுருக்கநான்மறைதொன்றுதொட்டுரைதொறுந்தோன்றா
திருக்குந்தெய்வமுமிரணியனேநமவென்னும். (௧௨)

மயருமன்னெடுஞ்சேவடிமண்ணிடைவைப்பின்
அயரும்வாளெயிற்றாயிரம்பணந்தலையநந்தன்
உயருமேலண்டமுகடுதன்முடியுறவுயரும்
பெயருமேனெடும்பூதங்களைந்தொடும்பெயரும். (௧௩)

---

* தாமரைத்தடங்கண்ணினான் - புண்டரீகாட்சனான திருமாலின்.

பெண்ணிற்பேரெழிலாணினி * லயினிற்பிறிதும்
உண்ணிற்கும்முயிருள்ளதினில்லதி † னுலவான்
கண்ணிற்காண்பனகருதுவயாயினுங்கழியான்
மண்ணிற்சாகிலன்வானினுஞ்சாகிலன்வரத்தால். (கச)

தேவராயினரேவருந்திரிதருமியக்கர்
யாவராயினுமெண்ணவுநினைக்கவுமியன்ற
கோவைமாலயன்மானுடன்யாவருங்கொல்ல
ஆவிதீர்கிலனாற்றலுந்தீர்கிலனனையான். (கரு)

நீரிற்சாகிலனெருப்பினுஞ்சாகிலனிமிர்ந்த
மாருதத்தினமண்ணின்மற்றெவற்றினுமாளான்
ஓருந்தேவருமுனிவரும்பிறர்களுமுரைப்பச்
சாருஞ்சாபமுமன்னவன்றனைச்சென்றுசாரா. (கசு)

உள்ளிற்சாகிலன்புறத்தினு ‡ முலக்கிலனுலவாக்
கொள்ளைத்தெய்வவான்படைக்கலம்யாவையுங்கொல்லா
$ நள்ளிற்சாகிலன்பகலிடைச்சாகிலனமனார்
கொள்ளச்சாகிலனாரினியவனுயிர்கொள்வார். (கஎ)

பூதமைந்தொடும்பொருந்தியவுணர்வினிற்புணரும்
வேதநான்கினும்விளம்பியபொருள்களால்விளியான்
தாதைதன்னைத்தான்றனிக்கொலைசூழினுஞ்சாகான்
ஈதவன்னிலையெவ்வுலகங்கட்குமிறைவன். (கஅ)

ஆயவன்றனக்கருமகனறிஞரினறிஞன்
தூயரென்பவர்யாரினுமறையினுந்தூயன்
நாயகன்றனிஞானநல்லறத்துக்குநாதன்
தாயின்மன்னுயிர்க்கன்பினனுளனொருதக்கோன். (கக)

வாழியானவன்றனைக்கண்டுமனமுவந்துருகி
ஆழியைநீயறிதியான்மறையெனவறைந்தான்
o ஊழியுகங்கடந்துயர்கின்றவாயுளானுலகம்
எழுமேழும்வந்தடிதொழவரசுவீற்றிருந்தான். (உ0)

என்றொரந்தணனெல்லையிலறிஞனையேவி
நன்றுநீயிவற்குதவுதிமறையெனநவின்றான்
சென்றுமற்றவன்றன்னொடுமொருசிறைசேர்ந்தான்
அன்றுநான்மறைமுதலியவோதுவானமைந்தான். (உக)

---

* அலியினில் - பேட்டினில்; பேடுநபுஞ்சகம்-ஆண்டன்மையற்றது.
† உலவான் - நீங்காதிருப்பான். உலக்கிலன் - குறயான்.
$ நள்ளில் - உச்சிப்பொழுதில். ஊழி - விதி.

ஓதப்புக்கவனுந்தைபேருரையெனவோடும்
போதத்தன்செவித்தொளையிருகைகளாற்பொத்தி
மூதக்கோயிதுநற்றவமன்றெனமொழியா
* வேதத்துச்சியின்மெய்ப்பொருட்பெயரினைவிரித்தான். (௨௨)

ஓநமோநாராயணாயவென்றுரைத்துளமுருகித்
தானமைந்திருதடக்கையுந்தலையின்மேற்றாங்கிப்
பூநிறக்கண்கள்புனலுகமயிர்புறம்பொடிப்ப
ஞானநாயகனிருந்தனனந்தணனடுங்கி. (௨௩)

கெடுத்தொழிந்தனையென்னையுமுன்னையுங்கெடுவாய்
படுத்தொழிந்தனைபாவியத்தேவரும்பகர்தற்
கடுத்ததன்றேயயலொன்றுபகரநின்னறிவின்
எடுத்ததென்னிதுவென்செய்தவண்ணநீயென்றான். (௨௪)

என்னையுய்வித்தேனெந்தையையுய்வித்தேனினைய
உன்னையுய்வித்திவ்வுலகையுமுய்விப்பானமைந்து
முன்னைவேதத்தின்முதற்பெயர்மொழிவதுமொழிந்தேன்
என்னைகுற்றநானியம்பியதியம்புதியென்றான். (௨௫)

முந்தைவானவர்யாவர்க்குமுதல்வற்குமுதலோன்
உந்தைமற்றவன்றிருப்பெயருரைசெயற்குரிய
அந்தணாளனேனென்னினுமறிதியோவையா
இந்தவிப்பெயருரைத்தெனைக்கெடுத்திடலென்றான். (௨௬)

வேதபாரகனவ்வுரைசெய்தலும்விமலன்
ஆதிநாயகன்பெயரன்றியான்பிறிதறியேன்
ஓதவேண்டுவதில்லையென்னுணர்வினுக்கொன்றும்
போதியாததுமில்லையென்றிவையிவைபுகலும். (௨௭)

தொல்லைநான்மறையாவையுந்துணிபொருட்கெல்லாம்
† எல்லைகொண்டவனகம்புகுந்திடங்கொண்டதென்னுள்
இல்லைவேறினிப்பெரும்பதம்யானறியாத
வல்லையேலினியோதுவிநீதியின்வழாத. (௨௮)

ஆரைச்சொல்லுவதந்தணரருமறையறிந்தோர்
ஓரச்சொல்லுவதெப்பொருளுபநிடதங்கள்
தீரச்சொல்லுவதேவரும்முனிவருஞ்செப்பும்
பேரைச்சொல்லுவதல்லதுபிறிதுமொன்றுளதோ. (௨௯)

---

* வேதத்துச்சியின் மெய்ப்பொருள்பெயர் - ஹரியென்பது.
† எல்லைகொண்டவன்-முடிபொருளாகநின்றுள்ளவன்.

வேதத்தாலுநல்வேள்வியினாலுமெய்யுணர்ந்த
போதத்தாலுமப்புறத்துளவெப்பொருளாலும்
சாதிப்பார்பெறும்பெரும்பதந்தலைக்கொண்டுசெமைந்தேன்
ஓதிக்கேட்பனபரம்பொருளினுமொன்றுளதோ. (௩௦)

காடுபற்றியுங்கனவரைபற்றியுங்கலைத்தோல்
மூடுபற்றியுமுண்டித்துநீட்டியுமுறையால்
வீடுபெற்றவர்பெற்றதின்விழுமிதென்றுரைக்கும்
மாடுபெற்றனனென்மற்றினியென்பெறவருந்தி. (௩௧)

செவிகளாற்பலகேட்கிலராயினுந்தேவர்க்
கவிகொணான்மறையகப்பொருள்புறப்பொருளறிவார்
கவிகளாகுவார்காண்குவார்மெய்ப்பொருள்காலாற்
புவிகொணாயகற்கடியவர்க்கடிமையிற்புக்கார். (௩௨)

எனக்குநான்முகத்தொருவற்கும்யாரினுமுயர்ந்த
தனக்கும்வேறுளசராசரமனைத்திற்குந்தலைவன்
மனக்குவந்தனன்வந்தனயாவையுமறையோய்
உனக்கு * மின்னதினல்லதொன்றில்லெனவுரைத்தான். (௩௩)

மாற்றம்யாதொன்றுமுரைத்திலன்மறையவன்மறுகி
ஏற்றமென்னெனக்கிறுதிவந்தெய்தியதென்று
ஊற்றமில்லவனோடினன்கனகனையுற்றான்
தோற்றவந்ததோர்கனவுகண்டனனெனச்சொன்னான். (௩௪)

எந்தைகேளெனக்கிம்மைக்குமறுமைக்குமியம்பச்
சிந்தையா † லிறைநினைத்தற்குமடாதனசெப்பி
முந்தையேநினைந்தென்பொருண்முற்றுமென்றுரைத்தான்
மைந்தனோதிலன்வேதமென்றுரைத்தனன்வணங்கி. (௩௫)

அன்னகேட்டவனந்தணவந்தணர்க்கடாத
முன்னர்யாவருமொழிதருமுறைமையிற்படாத
தன்னதுள்ளுடையுணர்ச்சியாற்புதுவதுதந்த
தென்னசொல்லவனியம்பியதியம்புதியென்றான். (௩௬)

அரசனன்னவையுரைசெயமறைவனஞ்சிச்
சிரதலங்கரஞ்சேர்த்திடச்செவித்தொளைசேர்ந்த
உரகமன்னசொல்யானுனக்குரைசெயினுரவோய்
நரகமெய்துவனாவும்வெந்துகுமெனநவின்றான். (௩௭)

---

* இன்னதின் - இந்நமோநாராயணாவென்பதின்.
† இறை-ஒருசிறிதும்.

கொணர்கென்மைந்தனைவல்விரைந்தென்றனன்கொடியோன்
உணர்வினஞ்சினனேவலாற்கடிதினினோடிக்
கணனினெய்தினர்பணியெனத்தாதையைக்கண்டான்
* துணையிலான்றனத்துணையெனவுடையவன்றொழுதான். (௩அ)

தொழுதமைந்தனைச்சுடர்மணிமார்பிடைச்சுண்ணம்
எழுதவன்பினோடிறுகுறத்தழுவிமாடிருத்தி
முழுதுநோக்கிநீவேதியன்கேட்கலின்முனியப்
பழுதுசொன்னசொலென்னதுபகருதியென்றான். (௩௯)

சுருதியாதியிற்றொடங்குறுமெல்லையிற்சொன்ன
ஒருவன்யாவர்க்குநாயகன்றிருப்பெயருணரக்
கருதக்கேட்டிடக்கட்டுரைத்திடர்க்கடல்கடக்க
உரியமற்றிதினல்லதொன்றில்லெனவுரைத்தான். (௪௦)

தேவர்செய்கையனங்கனமுறைசெயத்தீயோன்
தாவில்வேதியன்றக்கதேயுரையெனத்தகுவன்
ஆவதாகுகவன்றெனினறிகுவமென்றே
ஏவதவ்வுரைவிளம்புதிவிளம்புதியென்றான். (௪௧)

† காமம்யாவையுந்தருவதுகாப்பதங்கடந்தார்
சேமவீடுறச்செய்வதுஞ்செந்தழன்முகந்த
ஓமவேள்வியினுறுபதமுய்ப்பதுமொருவன்
நாமமன்னதுகேணமோநாராயணாய. (௪௨)

மண்ணினின்றுமேன்மலரயனுலகுறவாழும்
எண்ணில்பூதங்கணிற்பனதிரிவனவிவற்றின்
உண்ணிறைந்துறைகரணத்தினூங்குளவுணர்வின்
எண்ணுகின்றதிவ்வெட்டெழுத்தேபிறிதில்லை. (௪௩)

முக்கட்டேவனுநான்முகத்தொருவனுமுதலா
மக்கட்காறுமிம்மந்திரமறந்தவர்மறந்தார்
புக்குக்காட்டுவதரிதிதுபொதுவறக்காண்பார்
ஒக்கநோக்கினரல்லவரதனிலையுணரார். (௪௪)

தோற்றமென்னுமத்தொல்வினைத்தொடற்சுழிநின்
றேற்றுநன்கலனருங்கலன்யாவர்க்குமினிய
மாற்றமங்கலமாதவவேதத்தின்வரம்பின்
தேற்றமெய்ப்பொருடெரிந்தமற்றிதனிலைசிறந்த. (௪௫)

உன்னுயிர்க்குமென்னுயிர்க்குமிவ்வுலகத்தினுள்ள
மன்னுயிர்க்குமீதுறுதியென்றுணர்வுறமதித்துச்

* துணையிலான் - ஒப்பற்றஸ்ரீஹரி.
† காமம் - சேதனரினிச்சை.

சொன்னவிப்பெயரென் றனனறிஞரிற் றாயான்
மின்னுயிர்க்கும்வேலிரணியன் றழலெழவிழித்தான். (௪௬)

அற்றைநாண் முதல்யானுளநாள்வரையப்பேர்
சொற்றவாயையுங்கருதியமனத்தையுஞ்சுடுமென்
ஒற்றையானைமற்றியாருனக்கிப்பெயருரைத்தார்
கற்றதாரொடுசொல்லுதிவிரைந்தெனக்கென்றான். (௪௭)

முனைவர்வானவர்முதலினர்மூன் றுலகத்தும்
இனையருள்ளவர்யாவருமென்னிருகழலே
நினைவதேத்துவதென்பெயர்நினக்கிதுநேரா
அனையரஞ்சுவர்மைந்தநீயாரிடையறிந்தாய். (௪௮)

மறங்கொள்வெஞ்செருமலைகுவான் பன் முறைவந்தான்
கறங்குவெஞ்சிறைக்கலுழன் றன்கடுமையிற்கரந்தான்
பிறங்குதெண்டிரைப்பெருங்கடல்புக்கினம்பெயரா
துறங்குவான்பெயருறுதியென் றாருனக்குரைத்தார். (௪௯)

பரவைநுண்மணலெண்ணினுமெண்ணரும்பரப்பின்
குரவர்நங்குலத்துள்ளவரவன்கொலக்குறைந்தார்
அரவினாமத்தையெலியிருந்தோதினாலதற்கு
விரவுநன்மையென் * றுன்மதிவிளம்பெனவெகுண்டான். (௫௦)

வயிற்றினுள்ளுலகேழினோடேழையும்வைக்கும்
அயிர்ப்பிலாற்றலென்னநசனையேனமொன்றாகி
எயிற்றினாலெறிந்தின்னுயிருண்டவனாமம்
பயிற்றவோர்நினைப்பயந்ததுநானெனப்பகர்ந்தான். (௫௧)

ஒருவன்யாவர்க்குமெவற்றிற்குமுலகிற்குமுதல்வன்
தருதல்காத்தலைதவிர்த்தலென் றிவைசெயத்தக்கோன்
கருமத்தாலன் றிக்காரணத்தாலுள்ளக்காட்சி
திருவிலீமற்றிதெம்மறைப்பொருளெனத்தெரிந்தாய். (௫௨)

ஆதியந்தங்களிதனின்மற்றில்லைபேருணரின்
வேதமெங்ஙனமங்ஙனமவைசொன்னவிதியால்
கோதினல்வினைசெய்தவருயர்குவர்குறித்துத்
தீதுசெய்தவர்தாழ்குவரிதுமெய்ம்மைதெரியின். (௫௩)

செய்தமாதவமுடைமையினரியயன்சிவனென்
றெய்தினார்பதமிழந்தனர்யான் றவமியற்றிப்
பொய்யினாயகம்பூண்டலினினியிதுபுரிதல்
நொய்யதாகுமென் றாருமென்காவலினுழைவார். (௫௪)

---

* துன்மதி - துன்மதியே.

வேள்வியாகியபுண்ணியந்தவத்தொடும்விலக்கிக்
கேள்வியாவையுந்தவிர்த்தனெனிவைகிளர்பகையைத்
தாழ்வியாதனசெய்யுமென்றனேயவர்தம்பால்
வாழ்வியாதயலெவ்வழிப்புறங்கொண்டொழ்வார். (ருரு)

பேதைப்பிள்ளைநீபிழைத்ததுபொருத்தனெனென்பெயர்த்தும்
ஏதில்வார்த்தைகளிளையன விளம்பலைமுனிவன்
யாதுசொல்லினனவையிவையிதமெனவெண்ணி
ஓதி * போதியென்றுரைத்தனனுலகெலாமுயர்ந்தோன். (ருசு)

வேறு.

உரையுளதுணர்த்துவதுணர்ந்துகோடியேல்
விரையுளவலங்கலாய்வேதவேள்வியின்
கரையுளதியாவருங்கற்குங்கல்வியின்
பிரையுளதென்பதுமைந்தன்பேசினன். (ருஎ)

வித்தின்றிவிளைவதொன்றில்லைவேந்தநின்
பித்தின்றியுணர்தியேலவைப்பெய்தனன்
உய்த்தொன்றுமொழிவின்றியுணர்தற்பாற்றெனக்
† கைத்தொன்றுநெல்லியின்கனியிற்காண்டியால். (ருஅ)

தன்னுளேயுலகங்களவையுந்தந்தவை
தன்னுளேநின்றுதானவற்றுட்டங்குவான்
பின்னிலன்முன்னிலனொருவன்பேரிலன்
தொன்னிலையொருவராற்றுணியற்பாலனே. (ருகூ)

சித்தெனவருமறைச்சிரத்திற்றேறிய
தத்துவமவனதுதம்மைத்தாமுணர்
வித்தகரறிகுவர்வேறுவேறுணர்
பித்தருமுளர்சிலர்வீடுபெற்றிலார். (சுo)

‡ அளவையானளப்பரிதறிவினப்புறத்
துளவையாயுபநிடதங்களோதுவ
இளவியாற்பொருள்களாற்கிளக்குறுதவன்
களவையாரறிகுவார்மெய்ம்மைகண்டிலார். (சுக)

மூவகையுலகுமாய்க்குணங்கண்மூன்றுமாய்
யாவையுமெவையுமாயெண்ணில்வேறுபட்
டோவலினொருநிலையொருவன்செய்வினை
தேவருமுனிவருமுணரத் ¶ தேயுமோ. (சுஉ)

---

* ஓதி - ஓதுதி. போதி - போவாயாக.
† கய்த்து - கையினிடத்து.
‡ அளவையான் - காண்டல்கருதலாதிய காட்சி அவைகளால்.
¶ தேயுமோ - குறைவுறுமோ.

* சாங்கியம் † யோகமென்றிரண்டுதன்மைய
வீங்கியபொருளெலாம்வேறுகாண்பன
ஆங்கவையுணர்ந்தவர்க்கன்றியன்னவன்
ஓங்கியமேனிலையுணரற்பாலதோ. (சுங)

கருமமுங்கருமத்தின்பயனுங்கண்ணிய
தருமுதற்றலைவனுந்தானுந்தானவன்
அருமையும்பெருமையுமறிவரேலவர்
இருமையென்றுரைசெயுங்கடனின்றேறுவார். (சுச)

மந்திரமாதவமென்னுமாலைய
தந்துறுபயனிவைமுறையிற்சாற்றிய
நந்தலிறெய்வமாய்நல்குநான்மறை
அந்தமில்வேள்விமாட்டவிசுமாமவன். (சுரு)

முற்பயப்பயன்றருமுன்னினின்றவர்
பிற்பயப்பயன்றரும்பின்புபோலவன்
தற்பயன்றன்னெறிதருமாறில்லையஃ
தற்புதமாயையாலறிகிலார்பலர். (சுசு)

ஒருவினையொருபயனன்றியுய்க்குமோ
இருவினையென்பவையியற்றியிட்டவை
கருதினகருதினகாட்டுகின்றன
தருபரனருளினிற்சான்றுவேண்டுமோ. (சுஎ)

ஓராவுதிகடைமுறைவேள்வியோம்புவோர்
அராவணையமலனுக்களிப்பராலது
சராசரமனைத்தினுஞ்சாருமென்பது
பராவருமறைப்பொருள்பயலுமன்னதால். (சுஅ)

பகுதியினுட்பயன்பயந்ததன்னதின்
மிகுதியின்மிகுதிகளெவையுமேலவர்
வகுதியின்வசத்தனவரவுபோக்கது
புகுதியில்லாதவர்புலத்திற்றுகுமோ. (சுகூ)

எழுத்தியலுளத்தெண்ணலாவகை
முழுத்தனிநான்முகன்முதலமற்றுயிர்
வழுத்தரும்பொகுட்டதோர்புரையின்வைகுமால்
விழுத்தனிப்பல்லிதழ்விரையிலாமுகிழ். (எ0)

கண்ணினுங்கரந்துளன்கண்டுகொட்டுவான்
உண்ணிறைந்திடுமுணர்வாகியுண்மையால்

---

* சாங்கியம் - கபிலமதம்.
† யோகம் - பதஞ்சலிமதம்.

மண்ணினும்வானினுமற்றைமூன்றினும்
எண்ணினுநெடியவனொருவனெண்ணிலான். (எக)

சிந்தையிற்செய்கையிற்சொல்லிற்சேர்ந்துளன்
இந்தியந்தொறுமுளனுற்றதெண்ணினன்
முந்தையோரெழுத்தெனலந்தமும்முறைச்
சந்தியும்பதமுமாய்த்தழைத்ததன்மையான். (எஉ)

காமமும்வெகுளியுமுதலகண்ணிய
தீமையும்வன்மையுந்தீர்க்குஞ்செய்கையால்
நாமமுமவன்பிறநலிகொடாநெடுஞ்
சேமமும்பிறர்களாற்செப்பற்பாலவோ. (எங)

காலமுங்கருவியுமிடனுமாய்க்கடைப்
பாலமைபயனுமாய்ப்பயன்றுய்ப்பானுமாய்ச்
சீலமுமவைதருந்திருவுமாயுளன்
ஆலமும்வித்துமொத்தடங்குமாண்மையான். (எச)

உள்ளுறவுணர்விணிதுணர்ந்தவோசையோர்
தெள்விளியாழிடைத்தெரியுஞ்செய்கையான்
உள்ளுளன்புறத்துளனென்றுநண்ணலான்
தள்ளருமறைகளு * மருளுந்தன்மையான். (எரு)

ஓமெனுமோரெழுத்ததனினுள்ளுயிர்
ராமவனறிவினுக்கறிவுமாயினன்
தாமமூவுலகமுந்தழுவிச்சார்தலால்
† தூமமுங்கனலும்போற்றொடர்ந்ததோற்றத்தான். (எசு)

காலையினுமலரொன்றக்கட்டிய
மாலையின்மலர்புரைசமயவாதியர்
சூலையின்றிருக்கலாச்சொல்லுவோர்க்கெலாம்
வேலையுந்திரையும்போல்வேறுபாடிலான். (எஎ)

இன்னதோர்தன்மையனிகழ்வுற்றெய்திய
நன்னெடுஞ்செல்வமுநாளுநாமற
மன்னுயிரிழத்தியென்றிறைஞ்சிவாழ்த்தினேன்
சொன்னவனுமமென்றுணரச்சொல்லினன். (எஅ)

வேறு.

எதிரினின்றவனிவையுரைத்திடுதலுமெவ்வுலகமுமஞ்ச
முதிரும்வெங்கதமொழிகொடுமூண்டதுமுதுகடற்கடுவேய்ப்பக்

---

* மருளுந்தன்மைமான் - தன்னிலையுணராது மயங்கத்தக்க தகுதியினையுடையான்.

† தூமம் - புகை.

கதிரும்வானமுஞ்சுழன்றனநெடுநிலங்கம்பித்தகனகன்கண்
உதிரங்கான்றனதோன்றினபுகைக்கொடியுமிழ்ந்ததுகொடுந்தீயே. (எக)

வேறுமென்னொடுதரும்பகைபிறிதினிவேண்டலென்வினையத்தால்
ஊறுயென்னுளேயுதித்ததுகுறிப்பினியுணர்குவதுளதன்றால்
ஈறிலென்பெரும்பகைஞனுக்கன்புசாலடியென்யானென்கின்றான்
* கோறிரென்றனனென்றலும்பற்றினர்கூற்றினுங்கொலைவல்லார். (அ0)

குன்றுபோன்மணிவாயிலின்பெரும்புறத்துய்த்தனர்மழுக்கூர்வாள்
ஒன்றுபோல்வனவாயிரமீதெடுத்தோச்சினருயிரோடும்
தின்றுதீர்குதுமென்குநருமெனத்தெழித்தனர்சினவேழக்
கன்றுபுல்லியகோளரிக்குழுவெனக்கனல்கின்றதறுகண்ணார். (அக)

தாயின்மன்னுயிர்க்கன்பினன்றனையத்தவமெனுந்தகவில்லோர்
ஏயெனுந்துணைமாத்திரத்தெய்தனவெறிந்தனவெறிதோறும்
தூயவன்றனைத்துணையெனவுடையவவ்வொருவனைத்துன்னாதார்
வாயின்வைதனவொத்தன † வத்தனைமழுவொடுகொலைவாளும். (அஉ)

எறிந்தவெய்தனவெற்றினகுத்தினவீர்த்தனபடையாவும்
முறிந்தநுண்பொடியாயினமுடிந்தனமுனிவிலான்முழுமேனி
சொறிந்ததன்மையுஞ்செய்திலவாயனதூயவன்றுணிவொன்றா
அறிந்தநாயகன்சேவடிமறந்திலனயர்த்திலனவனுமம். (அங)

உள்ளவான்பெரும்படைக்கலம்யாவையுமுக்கனவுரவோய்நின்
பிள்ளைமேனிக்கோராணிவந்திலதினிச்செயலென்கொல்பிறிதென்னக்
கள்ளவுள்ளத்தன்கட்டினன்கருவிகள்கதுமெனக்கனல்பொத்தித்
தள்ளுமின்னெனவுரைத்தனன்வயவருமத்தொழிற்றலைநின்றார். (அச)

குழியிலிந்தனமடுக்கினர்குன்றெனக்குடந்தொறுங்கொணரெண்ணெய்
இழுதுநெய்சொரிந்திட்டனர்நெருப்பெழுந்திட்டதுவிசும்பெட்ட
அழுதுநின்றவரயர்வுறவையனைப்பெய்தனரரீஇயென்று
தொழுதுநின்றனனாயகன்றாளிணைகுளிர்ந்ததுசுடுதீயே. (அரு)

காலவெங்கனல்கதுவியகாலையிற்கற்புடையவள்சொற்ற
சீலநல்லுரைசீதமிக்கடுத்தலிற்கிழியொடுநெய்தீற்றி
ஆலமன்னவர்கரங்களால்வயங்கெரிமடுத்தலிலநுமன்றன்
‡ கூலமாமெனவென்புறக்குளிர்ந்ததக்குருமணித்திருமேனி. (அசு)

சுட்டதில்லைநின்றோன்றலைச்சுடர்க்கனல்சுழிபடரழுவத்துள்
இட்டபோதினுமென்னினிச்செயத்தக்கதென்றனரிகல்வெய்யோர்
கட்டித்தீயையுங்கடுஞ்சிறையிடுமினக்கள்வனைக்கவர்ந்துண்ண
எட்டுப்பாம்பையும்விடுமின்களென்றனனெரியெழுதறுகண்ணான். (அஎ)

* கோறிர் - கொல்லுதிர். † அத்துணை - அவ்வளவு.
‡ கூலம் - வால்.

அநந்தனே முதலாகியநாகங்களருளொன்கொலெனவன்றான்
கினந்தமாத்திரத்தெய்தினநொய்தினினெருப்புகுபகுவாயால்
வனந்ததாமன்னமேனியினன்றன்மேல்வாளெயிறுறவூன்றிச்
சினந்தமீக்கொளக்கடித்தனதுடித்திலன்றிருப்பெயர்மறவாதான். (அஅ)

பக்கமின்றவைபயத்தினிற்புயற்கரைபசும்புனல்பகுவாயில்
தக்கவெஞ்சிறைநக்கவுழனுநடுக்குறகவ்வியகாலத்துள்
செக்கர்மேகத்துச்சிறுபிறைநுழைந்தனசெய்கையவாலிசிந்தி
உக்கபற்குலமொழுகினவெயிற்றிரும் * புரைதொறுமமிழ்தூறி. (அக)

வேறு.

குழப்பற்றினசுற்றுமெயிற்றின்
போழக்கிற்றிலவென்றுபுகன்றார்
வாழித்திக்கின்மயக்கின்மதந்தாழ்
வேழத்துக்கிடுமின்னெனவிட்டான். (௯௦)

† பசையிற்றங்கலில்சிந்தையர்பல்லோர்
திசையிற்சென்றனர்செப்பினனென்னும்
இசையிற்றந்தனனிந்திரனென்பான்
விசையிற்றிண்பணைவெஞ்சினவேழம். (௯௧)

கய்யிற்கால்களின்மார்புகழுத்தில்
தெய்வப்பாசமுறப்பிணிசெய்தார்
மய்யற்காய்கரிமுன்னுறவைத்தார்
பொய்யற்றானுமிதொன்றுபுகன்றான். (௯௨)

எந்தாய்ப்பண்டொரிடங்கர்விழுங்க
முந்தாய்நின்றமுதற்பொருளேயென்
றுந்தாய்தந்தையினத்தவனேத
வந்தானென்றன்மனத்தினனென்றான். (௯௩)

என்றான்முன்னமிருங்களிறுந்தன்
டொன்றோரோடைபொருந்தநிலத்தின்
அன்றானைத்தொழுதஞ்சியகன்ற
தொன்றோரத்திறமெய்தியுரைத்தார். (௯௪)

‡ வல்வீரைத்துயில்வானைமதித்தென்
நல்வீரத்தையழித்ததுநண்ணுற்
றோல்வீரொற்றையுரக்கரிதன்னைக்
கொல்வீரென்றனனெஞ்சுகொதிப்பான். (௯௫)

---

* புரைதொறும் - துவாரந்தோறும்.
† பசையில்தங்கலில் - இரக்கமற்ற.
‡ வல்வீரை - பெரியசமுத்திரம்.

தன்னைக்கொல்லுநர்சாருதலோடும்
பொன்னைக்கொல்லுமொளிப்புகழ்பொய்யா
மன்னைக்கொல்லியவந்ததுவாரா
மின்னைக்கொல்லும்வெயிற்றினெயிற்றால். (கூசு)

வீரத்திண்டிறன்மார்பினில்வெண்கோ
டாரக்குத்தியழுத்தியநாகம்
வாரத்தண்குலைவாழைமடற்சூழ்
ஈரத்தண்டெனவிற்றனவெல்லாம். (கூஎ)

வெண்கோடிற்றனமெய்யிலர்செய்யும்
கண்கோடற்பொறியிற்கடிதேகி
எண்கோடற்கரிதென்னவெகுண்டான்
திண்கோடைக்கதிரிற்றெறுகண்ணான். (கூஅ)

தள்ளத்தக்கில்பெருஞ்சயிலத்தோ
டெள்ளக்கட்டியெடுத்துவிசித்துக்
கள்ளத்திங்கிவனைக்கரைகாணா
வெள்ளத்துய்த்திடுவீரெனவிட்டான். (கூகூ)

ஒட்டிக்கொல்லவுணர்ந்துவெகுண்டான்
விட்டிட்டானலனென்றுவிரைந்தார்
கட்டிக்கல்லொடுகொல்விசையிற்போய்
இட்டிட்டார்கடலின்னடுவெந்தாய். (க00)

நடுவொக்குந்தனிநாயகனாமம்
விடுகிற்கின்றிலனாகலின்வேலை
மடுவொத்தங்கதின்வங்கமுமன்றாய்க்
* குடுபத்தன்மையதாயதுகுன்றம். (க0க)

மோதுற்றார்திரைவேலையின்மூழ்கான்
மீதுற்றார்சிலைமீதுகிடந்தான்
ஆதிப்பண்ணவனாயிரநாமம்
ஓதுற்றான்மறையொல்லையுணர்ந்தான். (க0உ)

தலையிற்கொண்டதடக்கையினான்றன்
நிலையிற்றீர்வின்மனத்தினினைந்தான்
சிலையிற்றிண்புனலிற்சினையாலின்
இலையிற்பிள்ளையெனப்பொலிகின்றான். (க0௩)

---

* உடுபத்தன்மையதாயது - ஓடத்தின்றன்மையால் மிதந்துநின்றது.

வேறு.

அடியாரடியேனெனுமார்வமலால்
ஒடியாவலியானுடையேனுளனோ
கொடியாய்குறியாய்குணமேதுமிலாய்
நெடியாயடியேனிலைநேர்குதியோ. (௧௦௪)

கள்ளந்திரிவாரவர்கைதவநீ
உள்ளந்தெரியாதவுனக்குளவோ
துள்ளும்பொறியின்னிலைசோதனைதான்
வெள்ளந்தருமின்னமுதேதவிதியோ. (௧௦௫)

வருநான்முகனைம்முகன்வானவர்கோன்
திருநான்மறையின்னெறியேதிரிவார்
பெருநாடெரிகின்றிலர்பேதைமையேன்
ஒருநாளுனையெங்ஙனமுள்ளுவெனோ. (௧௦௬)

செய்யாதனவோவிலைதீவினைதான்
பொய்யாதனவந்துபுணர்ந்திடுமால்
மெய்யேயுயிர்தீர்வதொர்மேல்வினைநீ
ஐயாவொருநாளுமயர்த்தனையோ. (௧௦௭)

ஆயப்பெறுநன்னெறிதம்மறிவென்
றேயப்பெறுமீசர்களெண்ணிலரால்
நீயப்புறநிற்கநினைக்கிலர்நின்
மாயப்பொறிபுக்குமயங்குவரால். (௧௦௮)

தாமேதனிநாயகராயெவையும்
போமேபொருளென்றபுராதனர்தாம்
யாமேபரமென்றனரென்றவர்க்
* காமேபிறர்நின்னலதாருளரே. (௧௦௯)

ஆதிப்பரமாமெனிலன்றெனலாம்
ஓதப்பெருநூல்களுலப்பிலவால்
பேதிப்பனநீயவைபேர்கிலையால்
வேதப்பொருளேவிளையாடுதியோ. (௧௧௦)

அம்போருகனாரனாரறியார்
எம்போலியரெண்ணிடினென்பலவாக்
கொம்போடடைபூக்கனிகாயெனினும்
வம்போமரமொன்றெனும்வாசகமே. (௧௧௧)

---

* ஆகும்-ஆகுமா ஆகாது.

நின்னிற்பிறிதாய்நிலையிற்றிரியா
தன்னிற்பிறிவாயினதானறமும்
உன்னிற்பிறிதாயினவோவுலகம்
பொன்னிற்பிறி * தாகியபொற்கலனே. (கக௨)

தாய்தந்தையெனுந்தகைவந்தனைதான்
நீய்தந்தனைநீயுறுநெஞ்சினனான்
நோய்தந்தவனேநுவறீர்வுமெனா
வாய்தந்தனசொல்லிவணங்கினனால். (கக௩)

அத்தன்மையறிந்தவருந்திறலோன்
உய்த்துய்ம்மினென்முன்னெனவுய்த்தனரால்
பித்துண்டதுபோர்வுறுமாபெறுதும்
கைத்துங்கடுநெஞ்சினெனக்கனலா. (கக௪)

இட்டார்கவெல்விடமெண்ணுடையான்
தொட்டானுகரத்தொகைவன்கசையிற்
கட்டார்கமெத்திகைகண்கொடியோன்
விட்டானவன்மேலவர்வீசினரால். (கக௫)

வெய்யார்முடிவில்லவர்வீசியபோ
துய்யானெனும்வேலையினுள்ளுறைவோன்
கையாயிரமல்லகணக்கிலவென்
றெய்யாவுலகியாவையுமெண்ணினவால். (கக௬)

ஊனோடுயிர்வேறுபடாவுபயம்
தானேயுடையன்றனிமாயையினால்
யானேயுயிருண்பனெனக்கனலா
வானேழுநடுங்கிடவந்தனனால். (கக௭)

வந்தானைவணங்கியென்மன்னுயிர்தான்
எந்தாய்கொளவெண்ணினையேலிதுதான்
† உந்தாரியதன்றுலகியாவுமுடன்
தந்தார்கொளநின்றதுதானெனலும். (கக௮)

வேறு.

எவரேயுலகந்தந்தாரென்பெயரேத்திவாழும்
மூவரேயல்லராகின்முனிவரேமுழுதுந்தோற்ற
தேவரேபிறரேயாரேசெப்புதிதெரியவென்றான்
கோவமூண்டெழுந்துங்கொல்லான்காட்டுமேற்காட்சிகொள்வான். (ககக)

---

* ஆகிய—விறு.

† உந்தாரியதன்று-நும்வழிப்பட்டதன்று.

உலகுதந்தானும்பல்வேறுயிர்கடந்தானுமுள்ளாற்
றுலைவிலாவுயிர்கடோறுமங்கங்கேயுறைகின்றானும்
மலரினில்வெறியுமெள்ளிலெண்ணெயுமற்றுங்கேளாய்
அலகிறொல்புகழும்பற்றிமுற்றியவரிகாணத்தா. (௧௨௦)

என்கணோக்கிக்காண்டற்கெங்கணுமுளன் * காணெந்தை
உன்கணானன்பிறற்சோறலுறுகோளென்றுணரகில்லாய்
நின்கணோக்கிக்காண்டற்கெளியனோநினக்குப்பின்னோன்
பொன்கணுவியுண்டபுண்டரீகக்கணம்மான். (௧௨௧)

மூன்றவன்குணங்கள்செய்கைமூன்றவனுருவமூன்று
மூன்றுகண்சுடர்கள்சோதிமூன்றுதன்னுலகமூன்று
தோன்றலுமிடையுமீறுந்தொடங்கியபொருள்கட்கெல்லாம்
சான்றவனிதுவேவேதமுடிவதுசரதமென்றான். (௧௨௨)

என்றலுமவுணர்வேந்தனெயிற்றரும்பிலங்கநக்கான்
ஒன்றலில்பொருள்கட்கெல்லாமொருவன்புக்குறைவனென்றாய்
நன்றதுகண்டுபின்னர்நல்லவாபுரிதுந்தூணில்
நின்றுளனென்னிற்கள்வகிரப்புதிநிலைமையென்றான். (௧௨௩)

சாணினுமுளனோர்தன்மையணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகன்சொன்னான். (௧௨௪)

உம்பர்க்குமுனக்குமொத்திவ்வுலகெங்கும்பரந்துளானைக்
கம்பத்தின்வழியேகாணக்காட்டுதிகாட்டிடாயேல்
கும்பத்தின்கரியைக் † கோண்மாக்கொன்றெனநின்னைக்கொன்றுன்
செம்பொத்தகுருதிதேக்கியுடலையுந்தின்பெனென்றான். (௧௨௫)

என்னுயிர்நின்னாற்கோறற்கெளியதொன்றன்றியான்முன்
சொன்னவன்றொட்டதொட்டவிடந்தொறுந்தோன்றானாயின்
என்னுயிர்யானேமாய்ப்பல்பின்னும்வாழ்வுகப்பலென்னின்
அன்னவற்கடியேனல்லேனென்றனனறிவின்மிக்கான். (௧௨௬)

நரசிங்காவதாரம்.

நசைதிறந்திலங்கப்பொங்கிநன்றுநன்றென்னநக்கு
விசைபிறந்துருமுவீழ்ந்ததென்னவோர்தூணின்வென்றி
இசைதிறந்தமர்ந்தகையாலெற்றினனெற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறிச்சிரித்ததுசெங்கட்சீயம். * (௧௨௭)

---

* காண் - முன்னிலையசை.

† கோண்மா - சிங்கம்.

நாடிநான்றருவெனென்றநல்லறிவாளனாளும்
தேடிநான்முகனுங்காணாச்சேயவன்சிரித்தலோடும்
ஆடினானழுதான்பாடியரற்றினான்சிரத்திற்செங்கை
சூடினான்றொழுதானோடியுலகெலாம் * துகைத்தான்றுள்ளி. (கஉஅ)

ஆரடாசிரித்தாய்சொன்னவரிகொலோவஞ்சிப்புக்க
நீரடாபோதாதென்றுநெடுந்தறினோடினாயோ
போரடாபொருதியாயிற்புறப்படுபுறப்படென்றான்
பேரடாநின்றதாளோடுலகெலாம்பெயரப்போவான். (கஉகூ)

பிளந்ததுதூணுமாங்கேபிறந்ததுசீயம்பின்னை
வளர்ந்ததுதிசைகளெட்டும்பகிரண்டமுதலமற்றும்
அளந்ததப்புறத்துச்செய்கையாரறிந்தறையகிற்பார்
கிளர்ந்தது † ககனமுட்டைகிழிந்ததுகீழுமேலும். (கங0)

மன்றலந்துளபமாலைமானுடமடங்கல்வானில்
சென்றதுசெரிதறேற்றாச்சேவடிபடியிற்றீண்டி
நின்றதோர்பொழுதினண்டநெடுமுகட்டிருந்தமுன்னோன்
அன்றவனுந்திவந்தானுமெனத்தோன்றினானல். (கஙக)

எத்துணைபோதுங்கையென்றியம்பினாலெண்ணற்கேற்ற
வித்தகருளரேயந்தத்தானவர்விரிந்தசேனை
பத்துநூறமைந்தகோடிவெள்ளத்தாற்பகுதிசெய்த
அத்தனைகடலுமாளத்தனித்தனியள்ளிக்கொண்ட. (கஙஉ)

ஆயிரங்கோடிவெள்ளத்தயிலெயிற்றவுணர்க்கங்கங்
கேயினவொருவர்க்கோரோர்திருமுகமிரட்டிப்பொற்றாள்
தீயெனக்கனலுஞ்செங்கண்சிரந்தொறுமூன்றுந்தெய்வ
வாயினிற்கடல்களேழுமலைகளுமற்றுமுற்றும். (கஙங)

முடங்குவாருளையவண்டமுழுவதுமுடிவினுண்ணும்
கடங்கொள்வெங்காலச்செந்தீயதனைவந்தழிக்குங்கால
மடங்கலினுயிர்ப்புறமற்றக்காற்றினைமாற்றுமானால்
அடங்கலும்பகுவாயாக்கையப்புறத்தகத்ததம்மா. (கஙச)

‡ குயிற்றியவண்டங்குஞ்சையிட்டிலாமுட்டைமுட்டப்
பயிற்றியபருவமொத்தகாலத்துளமுதுபல்கும்
எயிற்றுவன்பகுவாயுள்புக்கிருக்குநரிருக்கையெய்தி
வயிற்றின்வந்தந்நாளிந்நாள்வாழுமன்னுயிர்கண்மன்னோ. (கஙரு)

---

* துகைத்தான்-மிதித்தான். † ககனமுட்டை - அண்டமுகடு.

‡ குயிற்றிய-தான்செய்த. அண்டம்-அண்டமாகிய. குஞ்சையிட்டிலா முட்டை-குஞ்சுபொரிக்காத முட்டை.

நன்மையிற்றொடர்ந்தார்க்குண்டோகேடுநான் * முகத்தோனாதி
† தொன்மையிற்றொடர்ந்தவாய்மையறத்தொடுந்தொடர்ந்திலோரை
அன்வயித்தோருந்தீயவவுணரல்லாரையந்நாள்
தன்வயிற்றகத்துவைத்துத்தந்ததச்சீயந்தாயின். (௧௩௬)

பேருடையவுணர்தம்மைப்பிறையெயிற்றடக்கும்பேராப்
பாரிடைத்தேய்க்குமீளப்பகிரண்டத்தடிக்கும்பற்றி
மேருவிற்புடைக்குமாளவிரல்களிற்பிசையும்வேலை
நீரிடைக்குமிழியூட்டுநெருப்பிடைச்சுரிக்கநீட்டும். (௧௩௭)

வகிர்ப்படுத்துறக்கும்பற்றிவாய்களைப்பிளக்கும்வன்றோல்
துகிற்படுத்துரிக்குஞ்செந்தீக்கண்களைச்சூலுஞ்சுற்றிப்
பகிர்ப்படக்குடரைக்கொய்யும்பசையறப்பிசையும்பல்கா
லுகிர்ப்புரைபுக்கோர்தம்மையுகிர்களாலுறக்குழன்றி. (௧௩௮)

யானையுந்தேருமாவும்யாவையுமுயிரிராமை
ஊனொடுந்தின்னும்பின்னையொலிதிரைப்பரவையெழும்
மீனொடுங்குடிக்குமேகத்துருமொடும்விழுங்கும்விண்ணில்
தானொடுங்காதென்றஞ்சித்தருமமுஞ்சலித்ததம்மா. (௧௩௯)

ஆழிமால்வரையோடெற்றுஞ்சிலவரையண்டகோளச்
சூழிருஞ்சுவரிற்றேய்க்குஞ்சிலவரைத்தளக்கில்குன்றம்
ஏழினோடெற்றிக்கொல்லுஞ்சிலவரையெட்டுத்திக்கும்
தாழிருட்பிழம்பிற்றேய்க்குஞ்சிலவரைத்தடக்கைதாக்கி. (௧௪௦)

மலைகளிற்புரண்டுவீழவள்ளுகிர்நுதியால்வாங்கித்
தலைகளைக்கிள்ளுமள்ளித்தழலெழப்பிசையுந்தக்க
கொலைகளிற்கொல்லும் ‡ வாங்கியுயிர்களைக்குடிக்கும்வான
நிலைகளிற்பரக்கும்வேலைநீர்களைநிரம்பத்தூர்க்கும். (௧௪௧)

முப்புறத்துலகத்துள்ளுமொழிவறமுற்றும்பற்றித்
தப்புதலின்றிக்கொன்றுதையலார்கருவுந்தள்ளி
இப்புறத்தண்டத்தியாருமவுணரில்லாமையெற்றி
அப்புறத்தண்டந்தோறுந்தடவினசிலகையம்மா. (௧௪௨)

கனகனு ? மவனில்வந்தவானவர்களைகளுனை
அனைவருமொழியப்பல்வேறவுணரானவரையெல்லாம்
நினைதன்முன்னங்கொன்றுநின்றதந்நெடுங்கட்சீயம்
வனைகழலவனுமற்றமடங்கலின்வரவுநோக்கி. (௧௪௩)

---

* நான்முகத்தோனாதி - பிரமன்முதலாக.
† தொன்மையிற்றொடர்ந்துவந்த-புராதனமாக ஒட்டிவந்த.
‡ வாங்கி - எடுத்து.
? அவனில்வந்த-அவனிடத்துமகனாகவந்த.

வயிரவாளுறையின்வாங்கிவானகமறைக்கும்வட்டச்
செயிரறுகிடுகும்பற்றிவானவருள்ளந்தீய
அயிர்படர்வேலையேழுமலைகளுமஞ்சவார்த்தங்
குயிருடைமேருவென்னவாய்மடித்துருத்துநின்றான். (கசச)

நின்றவன்றன்னைநோக்கிநிலையிதுகண்டுநீயும்
ஒன்றுமுன்னுள்ளத்தியாதுமுணர்ந்திலைபோலுமன்றே
வன்றொழிலாழிவேந்தைவணங்குதிவணங்கவேயுன்
புன்றொழில்பொறுக்குமென்றானுலகெலாம் * புகழநின்றான். (கசரு)

கேளிதுநீயுங்காணக்கிளர்ந்தகோளரியின்கேழில்
தோளொடுதாளுநீக்கிநின்னையுந்துணித்துப்பின்னென்
வாளினைத்தொழுவதல்லால்வணங்குதன்மகளிரூடல்
நாளினுமுளதோவென்றுவண்டங்கணடுங்கநக்கான். (கசசு)

நகைசெயாவாயுங்கையும்வாளொடுநடந்ததாளும்
புகைசெயாநெடுந்தீப்பொங்கவுருத்தெதிர்பொருந்தப்புக்கான்
தொகைசெய்வார்க்கரியதோளாற்றுள்களாற்சுற்றிச்சூழ்ந்தான்
மிகைசெய்வார்வினைகட்கெல்லாமேற்செயும்வினையம்வல்லான். (கசஎ)

இரணிய சிங்கப்போர்.

இருவரும்பொருந்தப்பற்றியெவ்வுலகுக்குமேலாய்
ஒருவருங்காணுவண்ணமுயர்ந்ததற்குவமைவேண்டின்
வெருவருதோற்றத்தஞ்சாவெஞ்சினவவுணன்மேரு
அருவரையொத்தானண்ணலல்லவையெல்லாமொத்தான். (கசஅ)

ஆர்ப்பொலிமுழக்கின்வெவ்வாய்வள்ளுகிர்ப்பாரமான்ற
வற்றருங்கரத்திற்பல்வேறெறிதிரைப்பரப்பினுற்ற
பாற்கடல்பரந்துபொங்கிப்பங்கயத்தொருவனுட்டின்
மேற்சென்றதொத்தான்மாயன்கனகனுமேருவொத்தான். (கசகூ)

வாளொடுதோளுங்கையுமகுடமுமலரோன்வைத்த
நீளிருங்ககனமுட்டைநெடுஞ்சுவர்தேய்ப்ப † நேமி
கோளொடுந்திரிவதென்னக்குருமணிக்கொடும்பூண்மின்னத்
தாளிணையிரண்டும்பற்றிச்சுழற்றினன்றடக்கையொன்றால். (கருo)

சுழற்றியகாலத்திற்றூங்குகுண்டலங்கணீங்கிக்
கிழக்கொடுமேற்கினோடுவிழுந்தனகிடந்தவின்றும்
அழற்றருகதிரோன்றோன்றுமுதயத்தோடத்தமான
நிழற்றருங்காலைமாலைநெடுமணிச்சுடரினீத்தம். (கருக)

---

* புகழநின்றான் - பிரகலாதாழ்வார்.
† நேமி - சக்கரவாளகிரி.

போன்றனவினையதன்மைபொருவியதினையதென்று
தான்றனியொருவன்றன்னையுரைசெயுந்தரத்தினானே
வான்றருவள்ளல்வெள்ளைவள்ளுகிர்வயிரமார்பின்
ஊன்றலுமுதிரவெள்ளம்பரந்துளதுலகமெங்கும். (௧௫௨)

இரணியனைக் கொல்லுதல்.

ஆயவன்றன்னைமாயனந்தியினவன்பொற்கோயில்
வாயலின்மணிக் * கவான்மேல்வயிரவாளுகிரின்வாயில்
மீயெழுகுருதிபொங்கவெயில்விரிவயிரமார்பு
தீயெழப்பிளந்துநீக்கித்தேவர்களிடுக்கண்டீர்த்தான். (௧௫௩)

முக்கணனெண்கணனுமுளரியாயிரக்கணனும்
திக்கணுந்தேவரோடுமுனிவரும்பிறருந்தேடிப்
புக்கநாடறிகுறாமற்றிரிகின்றார்புகுந்துமொய்த்தார்
எக்கணாற்காண்டுமெந்தையுருவமென்றிரங்கிநின்றார். (௧௫௪)

நோக்கினார்நோக்கினார்முன்னோக்குறுமுகமுங்கையும்
ஆக்கையுந்தாளுமாகியெங்கணுந்தானேயாகி
வாக்கினான்மனத்தினான்மற்றறிவினாலளக்கவாரா
மேக்குயர்சீயந்தன்னைக்கண்டனர்வெருவுகின்றார். (௧௫௫)

பல்லொடுபல்லுக்கெல்லையாயிரக்காதப்பத்தி
சொல்லியவதனங்கோடிகோடிமேல்விளங்கித்தோன்ற
எல்லையிலுருவிற்றாகியிருந்ததையெதிரநோக்கி
அல்லியங்கமலத்தண்ணலவன்புகழ்விரிப்பதானான். (௧௫௬)

வேறு.

பிரமதேவன் உக்கிரநரசிங்கத்தை துதித்தல்.

தன்னைப்படைத்ததுவுந்தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவேகாட்டும்பெரும்பெருமை
உன்னைப்படைத்தாய்நீயென்றாலுயிர்படைப்பான்
என்னைப்படைத்தாய்நீயெனுமிதுவுமெற்றாமோ. (௧௫௭)

பல்லாயிரகோடியண்டம்பனிக்கடலுள்
நில்லாதமொக்குளெனத்தோன்றுமானின்னுழையே
எல்லாவுருவமுமாய்நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தால்வரம்பின்மைவாராதோ. (௧௫௮)

பேரையொருபொருட்கேபல்வகையாற்பேர்த்தெண்ணும்
தாரைநிலையைதமியையிறரில்லை

---

* கவான்மேல் - தொடைமீது.

யாரைப்படைக்கின்றதியாரையளிக்கின்ற
தியாரைத்துடைக்கின்றதையாவறியேமால். (௧௫௯)

நின்னுளேயென்னைநிருமித்தாய் * நீயல்லா
தென்னுளேயெப்பொருளும்யாவரையும்யானீன்றேன்
பின்னிலேன்முன்னிலேனெந்தைபெருமானே!
பொன்னுளேதோன்றியதோர்பொற்கலனேபோல்கின்றேன். (௧௬௦)

என்றாங்கியம்பியிமையாதவெண்கணனும்
வன்றாண்மழுவோனும்யாரும்வணங்கினரால்
நின்றாரிருமருங்குநேமிப்பெருமானும்
ஒன்றாதசீற்றத்தையுள்ளேயொடுக்கினான். (௧௬௧)

† எஞ்சுமுலகனைத்துமிப்பொழுதேயென்றென்று
நெஞ்சுநடுங்கிநெடுந்தேவரைநோக்கி
அஞ்சன்மினென்னாவருள்சுரந்தநோக்கினால்
கஞ்சமலர்பழிக்குங்கையபயங்காட்டினான். (௧௬௨)

பூவிற்றிருவையழகின்புனைகலத்தை
யாவர்க்குஞ்செல்வத்தைவீடென்னுமின்பத்தை
ஆவித்துணையையமுதிற்பிறந்தாளைத்
தேவர்க்குந்தம் ‡ மோயையேவினார்பாற்செல்ல. (௧௬௩)

செந்தாமறைபொகுட்டிற்செம்மாந்துவீற்றிருக்கும்
நந்தாவிளக்கைநறுந்தாழிளங்கொழுந்தை
முந்தாவுலகுமுயிருமுறைமுறையே
தந்தாளைநோக்கினான்றன்னொப்பொன்றில்லாதான். (௧௬௪)

தீதிலாவாகாவுலகீன்றதெய்வத்தைக்
காதலானோக்கினான்கண்டமுனிக்கணங்கள்
ஓதினார்சீர்த்தியுயர்ந்தபரஞ்சுடரும்
நோதலாங்கில்லாதவன்பனையேநோக்கினான். (௧௬௫)

பிரகலாதாழ்வானை நரசிங்கப்பெருமாள் புகழ்தல்.

உந்தையையுன்முன்கொன்றுடலைப்பிளந்தளையச்
சிந்தைதளராதறம்பிழையாச்செய்கையாய்
அந்தமிலாவன்பென்மேல்வைத்தாயளியத்தாய்
எந்தையினியிதற்குக்கைம்மாறியாதென்றான். (௧௬௬)

$ அயிராவிமைப்பினையோராயிரங்கூறிட்ட
செயிரிலொருபொழுதினுந்தையாஞ்சீறி

---

* நீயல்லாது - உன்னையன்றி. † எஞ்சும் - அழியும்.
‡ மோய் - அன்னை. $ அயிரா - ஒய்ந்துநில்லாத.

உயிர்தேடுவான்போலுடலையக்கண்டும்
செயிர்சேராவுள்ளத்தார்க்கென்னினியாஞ்செய்கேம். (௧௬௭)

கொல்லேமினியுன்குலத்தோரைக்குற்றங்கள்
எல்லையிலாதனசெய்தாரேயென்றாலும்
நல்லேமுனக்கெம்மைநாளுமனுஞ்செய்வ
தொல்லையுளதேலியம்புதியாலென்றுரைத்தான். (௧௬௮)

முன்புபெறப்பெற்றபேறோமுடிவில்லை
பின்புபெறும்பேறுமுண்டோபெறுகுவெனேல்
என்புபெறாதவிழிபிறவியெய்திடினும்
அன்புபெறுகையரும்பேறெனக்கென்றான். (௧௬௯)

அன்னானைநோக்கியருள்சுரந்தநெஞ்சினனாய்
என்னானைவல்லேனெனமகிழ்ந்தபேரீசன்
முன்னானபூதங்கள்யாவையுமுற்றிடினும்
எந்நாளுமுலவாய்நீ * யென்போலுளையென்றான். (௧௭௦)

மின்னைத்தொழுவளைத்ததன்னமிளிரொளியாய்
முன்னைத்தொழும்புனக்கேயாமன்றோமூவுலகும்
என்னைத்தொழுதேத்தியெய்தும்பயனெய்தி
உன்னைத்தொழுதேத்தியுய்கவுலகெல்லாம். (௧௭௧)

ஏனவர்க்குவேண்டினெளிதன்றோவெற்கன்பர்
ஆனவர்க்கமெல்லாநினக்கன்பராயினார்
தானவர்க்குவேந்தனீயென்னுந்தரத்தாயோ
வானவர்க்குநீயேயிறைதொன்மறைவல்லோய். (௧௭௨)

நல்லறமுமெய்ம்மையுநான்மறையுநல்லருளும்
எல்லையின்ஞானமுமீறிலாவெப்பொருளும்
தொல்லைசாலெண்குணனுநின்சொற்றொழில்செய்க
வல்லவுருவொளியாய்நாளுவளர்கநீ. (௧௭௩)

பிரகலாதாழ்வானுக்கு முடிசூட்டுதல்.

என்றுவரமருளியெவ்வுலகுங்கைகூப்ப
முன்றின்முரசமுழங்கமுடிசூட்டி
நின்றவமரரனைவீருநேர்ந்திவனுக்
கொன்றுபெருமையுரிமைபுரிகென்றான். (௧௭௪)

† தேமனுரிமைபுரியத்திசைமுகத்தோன்
ஓமமியற்றவுடையான்முடிசூட்டக்

---

* என்போலுளை என்றது-தனது நித்தியத்துவத்தை விளக்கிநின்றது.

† தேமன்—இந்திரன்.

கோமன்னவனாகிமூவுலகுங்கைக்கொண்டான்
நாமமறையோதாதோதிநனியுயர்ந்தான். (௧௭௫)

ஈதாகுமுன்னிகழ்ந்ததெம்பெருமானென்மாற்றம்
யாதானுமாகநினையாதிகழ்தியேல்
தீதாய்விளைதனனிதிண்ணமெனச்செப்பினான்
மேதாவிகட்கெல்லாமேலாயமேன்மையான். (௧௭௬)

௩-வது, இரணியன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௦௮.

௪-வது, விபீடணனடைக்கலப்படலம்.

இராவணன் விபீடணன்மீது கோபங்கொள்ளுதல்.

கேட்டனனிருந்துமக்கேள்விதேர்கலாக்
கோட்டியசிந்தையனுறுதிகொண்டிலன்
மூட்டியதீயெனமுடுகிப்பொங்கினான்
ஊட்டரக்கூட்டியவனையவொண்கணான். (௧)

இரணியனென்பவனெம்மனோரினும்
முரணியனவன்றனைமுருக்கிமுற்றினான்
அரணியனெவன்றறற்கன்புபூண்டனை
மரணமென்றொருபொருண்மாற்றும்வன்மையோய். (௨)

ஆயவன்வளர்த்ததன்றாதையாகத்தை
மாயவன்கல்லியமகிழ்ந்தமைந்தனும்
ஏயுநம்பகைஞனுக்கினியநண்புசெய்
நீயுமேநிகர்பிறர்நிகர்க்கநேர்வரோ. (௩)

* பாழிசாலிரணியன்புதல்வன்பண்பெனச்
சூழ்வினைமுற்றியானவர்க்குத்தோற்றபின்
ஏழைநீயென்பெருஞ்செல்வமெய்திப்பின்
வாழவோகருத்ததுவரவற்றாகுமோ. (௪)

முன்புறவனையர்பானண்புமுற்றினை
† வன்பகைமனிசரின்வைத்தவன்பினை

---

* பாழிசால்—வன்மைமிக்க.

† வன்பகை—கொடியபகையினையுடைய.

என்புறவுருகுதியமுதியேத்துதி
உன்புகலவர்பிறிதுரைக்கவேண்டுமோ. (ரு)

நண்ணினமனிசரைநண்புபூண்டனை
எண்ணினைசெய்வினையென்னைவெல்லுமா
றுண்ணினையுநின்மேலாசையூன்றினை
திண்ணிதுன்செயல்பிறர்செறுநர்வேண்டுமோ. (சு)

வேறு.

அன்றுவானரம்வந்துநஞ்சோலையையழிப்பக்
கொன்றுதின்றிடுமின்னெனத்தூதரைக்கோறல்
வென்றியன்றெனவிலக்கினைமேல்விளைவெண்ணித்
துன்றுதாரவற்றுணையெனக்கோடலேதுணிந்தாய். (எ)

வேறு.

அஞ்சினையாதவினமர்க்குமாளலை
தஞ்செனமனிசர்பால்வைத்தசார்பினை
வஞ்சனைமனத்தினை * பிறப்புமாற்றினை
நஞ்சினையுடன்கொடுவாழ்தனன்றரோ. (அ)

பழியினையுணர்ந்தியான்படுக்கிலேனுனை
ஒழிகிலைபுகலுதலொல்லைநீங்குதி
விழியெதிர்நிற்றியேல்விளிதியென்றனன்
அழிவினை † யெய்துவானறிவுநீங்கினான். (கூ)

என்றலுமிளவலுமெழுந்துவானிடைச்
சென்றனன்றுணைவருந்தானுஞ்சிந்தியா
நின்றனன்பின்னருநீதிசான்றன
ஒன்றலபலபலவுறுதியோதினான். (க0)

வாழியாய்கேட்டியால்வாழ்வுகைம்மிக
ஊழிகாண்குறுநினதுயிரையோர்கிலாய்
கீழ்மையோர்சொற்கொடுகெடுதனேர்தியோ
வாழ்மைதானறம்பிழைத்தவர்க்குமாகுமோ. (கக)

புத்திரர்குருக்கணின்பொருவில்கேண்மையர்
மித்திரரடைந்துளோர்மெலியர்வன்மையோர்
இத்தனைபேரையுமிராமன்வெஞ்சரஞ்
சித்திரவதஞ்செயக்கண்டுதீர்தியோ. (கஉ)

* பிறப்புமாற்றினை-அரக்கர்குலவியற்கையையொழித்தனை.
† எய்துவான்-எய்துதற்கு.

எத்துணைவகையினுமுறுதியெய்தின
ஒத்தனவுணர்த்தினேனுணரகிற்றிலை
அத்தவென்பிழைபொறுத்தருடியாலெனு
உத்தமனந்நகரொழியப்போயினான். (௧௩)

அனலனுமனிலனுமரன்சம்பாதியும்
வினையவர்நால்வரும்விரைவின்வந்தனர்
கனைகழற்காலினர்கருமச்சூட்சியர்
இனைவரும்வீடணனோடுமேயினார். (௧௪)

அரக்கனுமாங்கணோரமைச்சர்நால்வரும்
குரக்கினத்தவரொடுமெனிசர்கொள்ளைநீர்க்
கரைக்கண்வந்திருத்தனரென்றகாலையில்
பொருக்கெனவெழுதுமென்றெண்ணிப்போயினார். (௧௫)

அளக்கரைக்கடந்து * மேலறிந்தநம்பியும்
விளக்கொளிபரத்தலிற்பாலின்வெண்கடல்
வளத்தடந்தாமரைமலர்ந்ததாமெனக்
களப்பெருந்தானையைக்கண்ணினோக்கினான். (௧௬)

ஊனுடையுடம்பினவுயிர்கள்யாவையும்
ஏனையவொருதலைநிறுத்தியெண்ணினால்
வானரம்பெரிதெனமறுவில்சிந்தையான்
தூநிறச்சுடுபடைத் † துணைவர்ச்சொல்லினான். (௧௭)

அறந்தலைநின்றவர்க்கன்புபூண்டனன்
மறந்துநன்புகழலால்வாழ்வுவேண்டிலேன்
பிறந்தவென்னுறுதிநீபிடிக்கலாயெனுத்
துறந்தனனினிச்செயல்சொல்லுவீரென்றான். (௧௮)

மாட்சியினமைந்ததுவேறுமற்றிலை
தாட்சியிற்பொருடருந்தருமமூர்த்தியைக்
‡ காட்சியேயினிக்கடனென்றுகல்விசால்
சூட்சியின்கிழவருந்துணிந்துசொல்லினார். (௧௯)

நல்லதுசொல்லினீர்நாமும்வேறினி
அல்லதுசெய்துமேலரக்கராதுமால்
எல்லையில்பெருங்குணத்திராமன்றாளிணை
புல்லுதும்புல்லியிப்பிறவிபோக்குதும். (௨௦)

முன்புறக்கண்டிலேன்கேள்விமுன்பிலேன்
அன்புறக்காரணமறியகிற்றிலேன்

---

* மேலறிந்தநம்பியும் - வருங்காரியமுணர்ந்த விபீடணனும்;
† துணைவர் - மந்திரியர்.
‡ காட்சியே - காணுதலே.

என்புறக்குளிருநெஞ்சுருகுமேலவன்
புன்புலப்பிறவியின்பகைஞன்போலுமால். (௨௧)

ஆதியம்பரமனுக்கன்புநல்லறம்
நீதியின்வழாமையுமுயிர்க்குநேயமும்
வேதியரருளுநான்விரும்பிப்பெற்றனென்
போதுறுகிழவனைத்தவமுன்பூண்டநாள். (௨௨)

ஆயதுபயப்பதோரமைதியாயது
தூயதுநினைந்ததுதொல்லையாவர்க்கும்
நாயகன்மலர்க்கழனணுகிநம்மனத்
தேயதுமுடித்துமென்றினிதுமேயினன். (௨௩)

இருளுறவெய்துவதியல்பன்றுமெனப்
பொருளுறவுணர்ந்தவப்புலன்கொள்புந்தியார்
மருளுறுசூழலின்மறைந்துவைகினர்
உருளுறுதேரவனுதயமெய்தினன். (௨௪)

அப்புறத்திராமனவ்வலங்குவேலையைக்
குப்புறக்கருதுவான்குவளைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய்நினைந்துசோர்குவான்
இப்புறத்திருங்கரைமருங்கினெய்தினன். (௨௫)

கானலுங்கழிகளுமணலுங்காண்டலும்
பானலுங்குவளையும்பரந்தபுன்னையும்
மேனிறையன்னமும் * பெடையும்வேட்கைகூர்
பூநிறச்சோலையும்புரிந்துநோக்கினன். (௨௬)

† தரளமும்பவளமுந்தரங்கமீட்டிய
திரண்மணிக்குப்பையுங்கனகதீரமும்
மருளுமென்பொதும்பருமணலின்குன்றமும்
புரணெடுந்திரைகளும்புரிந்துநோக்கினன். (௨௭)

மின்னகுமணிவிரற்றேயவீழ்கணீர்
நன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்வினோ
டின்னகைநளசரியிழைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினன். (௨௮)

கூதிர்நுண்குறும்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேல்

---

* பெடையும் என்பது பிறவும் எனப் பாடமோதப்படுகின்றது.
† தரளம் - முத்து.

எத்துணைவகையினுமுறுதியெய்தின
ஒத்தனவுணர்த்தினேனுணரகிற்றிலை
அத்தவென்பிழைபொறுத்தருடியாலென்று
உத்தமனங்கரொழியப்போயினான். (௧௩)

அனலனுமனிலனுமரன்சம்பாதியும்
வினையவர்நால்வரும்விரைவின்வந்தனர்
கனைகழற்காலினர்கருமச்சூட்சியர்
இனைவரும்வீடணனோடுமேயினார். (௧௪)

அரக்கனுமாங்கனோரமைச்சர்நால்வரும்
குரக்கினத்தவரொடுமனிசர்கொள்ளைநீர்க்
கரைக்கண்வந்திருத்தனரென்றகாலையில்
பொருக்கெனவெழுதுமென்றெண்ணிப்போயினார். (௧௫)

அளக்கரைக்கடந்து * மேலறிந்தநம்பியும்
விளக்கொளிபரத்தலிற்பாலின்வெண்கடல்
வளத்தடந்தாமரைமலர்ந்ததாமெனக்
களப்பெருந்தானையைக்கண்ணினோக்கினான். (௧௬)

ஊனுடையுடம்பினவுயிர்கள்யாவையும்
ஏனையவொருதலைநிறுத்தியெண்ணினால்
வானரம்பெரிதெனமறுவில்சிந்தையான்
தூநிறச்சுடுபடைத் † துணைவர்ச்சொல்லினான். (௧௭)

அறந்தலைநின்றவர்க்கன்புபூண்டனன்
மறந்துநன்புகழலால்வாழ்வுவேண்டிலேன்
பிறந்தவென்னுறுதிநீபிடிக்கலாயெனாத்
துறந்தனனினிச்செயல்சொல்லுவீரென்றான். (௧௮)

மாட்சியினமைந்ததுவேறுமற்றிலை
தாட்சியிற்பொருடருந்தருமமூர்த்தியைக்
‡ காட்சியேயினிக்கடனென்றுகல்விசால்
சூட்சியின்கிழவருந்துணிந்துசொல்லினார். (௧௯)

நல்லதுசொல்லினீர்நாமும்வேறினி
அல்லதுசெய்துமேலரக்கராதுமால்
எல்லையில்பெருங்குணத்திராமன்றாளிணை
புல்லுதும்புல்லியிப்பிறவிபோக்குதும். (௨௦)

முன்புறக்கண்டிலேன்கேள்விமுன்பிலேன்
அன்புறக்காரணமறியகிற்றிலேன்

---

* மேலறிந்தநம்பியும் - வருங்காரியமுணர்ந்த விபீடணனும்;
† துணைவர் - மந்திரியர்.
‡ காட்சியே - காணுதலே.

என்புறக்குளிருநெஞ்சுருருமேலவன்
புன்புலப்பிறவியின்பகைஞன்போலுமால். (உக)

ஆதியம்பரமனுக்கன்புநல்லறம்
நீதியின்வழாமையுமுயிர்க்குநேயமும்
வேதியரருளுநான்விரும்பிப்பெற்றனென்
போதுறுகிழவனைத்தவமுன்பூண்டநாள். (உஉ)

ஆயதுபயப்பதோரமைதியாயது
தூயதுநினைந்ததுதொல்லையாவர்க்கும்
நாயகன்மலர்க்கழனணுகிநம்மனத்
தேயதுமுடித்துமென்றினிதுமேயினன். (உந)

இருளுறவெய்துவதியல்பன்றுமெனப்
பொருளுறவுணர்ந்தவப்புலன்கொள்புந்தியார்
மருளுறுசூழலின்மறைந்துவைகினார்
உருளுறுதேரவனுதயமெய்தினன். (உச)

அப்புறத்திராமனவ்வலங்குவேலையைக்
குப்புறக்கருதுவான்குவளைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய்நினைநதுசோர்குவான்
இப்புறத்திருங்கரைமருங்கினெய்தினன். (உரு)

கானலுங்கழிகளுமணலுங்காண்டலும்
பானலுங்குவளையும்பரந்தபுன்னையும்
மேனிறையன்னமும் * பெடையும்வேட்கைகூர்
பூநிறச்சோலையும்புரிந்துநோக்கினன். (உசா)

† தரளமும்பவளமுந்தரங்கமீட்டிய
திரண்மணிக்குப்பையுங்கனகதீரமும்
மருளுமென்பொதும்பருமணலின்குன்றமும்
புரணெடுந்திரைகளும்புரிந்துநோக்கினன். (உஎ)

மின்னகுமணிவிரற்றேயவீழ்கணீர்
துன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்விறே
டின்னகைநளைச்சியரிழைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினன். (உஅ)

கூதிர்நுண்குறும்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேல்

---

* பெடையும் என்பது பிறவும் எனப் பாடமோதப்படுகின்றது.
† தரளம் - முத்து.

பாதியஞ்சிறையிடைப்பெடையைப்பாடணைத்
தோதிமந்துயில்வகண்டுயிர்ப்புவீங்கினான். (௨௯)

அருந்துதற்கினியமீன்கொணரவன்பினால்
பெருந்தடங்கொம்பிடைப்பிரிந்தசேவலை
வருந்திசைநோக்கியோர்மழலைவெண்குரு
கிருந்ததுகண்டுநின்றிரங்கலெய்தினான். (௩௦)

ஒருதனிப்பேடைமேலுள்ளமோடலால்
பெருவலிவயக் * குருகிரண்டும்போர்கில
திருகுவெஞ்சினத்தனதருகட் உயன
பொருவனகண்டுதன்புருவங்கோட்டினான். (௩௧)

உண்ணிறையூடலிற்றேற்றவோதிமம்
கண்ணுறுகலவியால்வெல்லக்கண்டவன்
தண்ணிறப்பவளவாயிதழைத்தற்பொதி
வெண்ணிறமுத்தினைநக்கிவிம்மினான். (௩௨)

இத்திறமெய்தியகாலையெய்துறும்
வித்தகர்சொற்களான்மெலிவுநீங்கினான்
ஒத்தனனிராமனுமுணர்வுதோன்றிய
பித்தரினொருவகைபெயர்ந்துபோயினான். (௩௩)

உறைவிடமெய்தினனொருங்குகேள்வியின்
துறையறிதுணைவரோடிருந்தசூழலின்
முறைபடுதானையின்மருங்கு † முற்றினான்
அறைகடல்வீடணனயிர்ப்பில்சிந்தையான். (௩௪)

விபீடணன் இராம நின்னடைக்கலமென்று கூறுதல்.

மற்றொருபொருளுளதென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக்கூயதோருரை
உற்றதுசெவித்தலத்தையனொல்லென
நற்றுணைவரைமுகநயந்துநோக்குறா. (௩௫)

எந்தையேயிராகவசரணமென்றசொல்
தந்தவ ‡ ரெனைவரோசாற்றுமின்னென
மந்தணமுற்றுழீஇவயவெஞ்சேனையின்
முந்தினர்க்குற்றதைமொழிகுவாமரோ. (௩௬)

முற்றியகுரிசிலைமுழங்குதானையின்
உற்றனர்நிருதர்வந்தென்னவொன்றினார்

---

* குருகு - ஒருசாதிப்பறவை.
† முற்றினான் - அடைந்தான்.
‡ எனைவரோ - யாவரோ.

எற்றுதிர்பற்றுதிரெறிதிரென்றிடை
சுற்றினருருமெனத்தெழிக்குஞ்சொல்லினார். (௩௭)

தந்ததுதருமமேகொணர்ந்துதானிவன்
வெந்தொழிற்றீவினைபயந்தமேன்மையான்
வந்தனனிலங்கையர்மன்னனாகுநஞ்
சிந்தனைமுடிந்தனவென்னுஞ்செய்கையார். (௩௮)

இருபதுகரந்தலையீரைந்தென்னுமத்
திருவிலிக்கன்னவைசிதைந்தவோவென்பார்
பொருதொழிலெம்மொடும்பொருதிபோரென்பார்
ஒருவரினொருவர்சென்றுறுக்கியூன்றுவார். (௩௯)

பற்றினஞ்சிறையிடைவைத்துப்பாருடைக்
கொற்றவர்க்குணர்த்துதுமென்றுகூறுவார்
எற்றுவதன்றியேயிவனைக்கண் * டிறை
நிற்றலென்பிறிதெனநெருக்கிநேர்குவார். (௪0)

இமைப்பதன்முன்விசும்பெழுந்துபோயபின்
அமைப்பதென்பிறிதிவரரக்கரல்லரோ
† சமைப்பதுகொலையலாற்றக்கதியாவதோ
குமைப்பதுநலனெனமுடுகிக்கூறினார். (௪௧)

இயைந்தனவியைந்தனவினையகூறலும்
மயிந்தனுந்துமிந்தனுமென்னுமாண்பினார்
அயிந்திரநிறைந்தவனாணையேவலால்
நயந்தெரிகாவலரிருவர்நண்ணினார். (௪௨)

விலக்கினர்படைஞரைவேதநீதிநூல்
இலக்கணநோக்கியவியல்பரெய்தினார்
சலக்குறியிலரெனவருகுசார்ந்தனர்
புலக்குறியறநெறிபொருந்தநோக்கினார். (௪௩)

யாரிவணெய்தியகருமம்யாவது
போரதுபுரிதிரோபுறத்ததோவெண்ணமோ
சார்புறநின்றநீர்சமைந்தவாறெலாஞ்
சோர்விலிர்மெய்ம்முறைசொல்லுவீரென்றான். (௪௪)

பகலவன்வழிமுதற்பாரினாயகன்
புகலவன்கழலடைந்துய்யப்போந்தனன்
தகவுறுசிந்தையன்றருமநீதியன்
மகன்மகன்மைந்தனான்முகற்குவாய்மையான். (௪௫)

---

* இறை - சிறிது. சமைப்பது - செய்வது.

அறநிலைவழாமையுமாதிமூர்த்திபால்
நிறைவருநேசமுநின்றவாய்மையும்
மறையவர்க்கன்புமென்றினையமாமலர்
இறையவன்றரநெடுந்தவத்தினெய்தினன். (௪௬)

சுடுதியைத்துகிலிடைப்பொதிந்ததுன்மதி
இடுதியேசிறையிடையிறைவன்றேவியை
விடுதியேலுய்குதிவிடாதுவேட்டியேல்
படுதியென்றுறுதிகள்பலவும்பன்னினன். (௪௭)

மறந்தருசிந்தையன்மதியினீங்கினன்
பிறந்தனைபின்பதிற்பிழைத்திபோகுதி
இறந்தனைநிற்றியேலென்னவின்னவன்
துறந்தனனெனவிரித்தனலன்சொல்லினன். (௪அ)

மயிந்தனுமவ்வுரைமனத்துவைத்துநீ
இயைந்ததுநாயகற்கியம்புவேனெனாப்
பெயர்ந்தனன்றம்பியும்பெயர்வில்சேனையும்
அயர்ந்திலிர்காமினென்றமைவதாக்கியே. (௪௯)

தருமமுஞானமுந்தவமும்வேலியாய்
மருவருமபெருமையும்பொறையும்வாயிலாய்க்
கருணையங்கோயிலுளிருந்தகண்ணனை
அருணெறிமெய்யதிச்சென்றடிவணங்கினன். (௫0)

உண்டுரையுணர்த்துவதூழியாயெனப்
புண்டரீகத்தடம்புரையும் * பூட்சியான்
மண்டிலச்சடைமுடிதுளக்கிவாய்மையாய்
கண்டதுங்கேட்டதுங்கழறுவாயென்றான். (௫௧)

விளைவினையறிந்திலம்வீடணப்பெயர்
நளிர்மலர்க்கையினனல்வரோடுடன்
களவியல்வஞ்சனையிலங்கைகாவலற்
கிளவனஞ்சேனையினவெணெய்தினன். (௫௨)

கொல்லுமின்பற்றுமினென்னுங்கொள்கையால்
பல்பெருந்தானைசென்றடர்க்கப்பார்த்தியாம்
நில்லுமினென்றுநீயாரைநின்னிலை
சொல்லுதியென்னவோர்துணைவன்சொல்லினன். (௫௩)

முரண்புகுதீவினைமுடித்தமுன்னவன்
† கரண்புகுசூழலேசூழக்காண்பதோர்

---

* பூட்சியான் - உடலினன்.
† கரண்புகுசூழலேசூழ - மனஞ்சென்றவழியிற்செல்ல.

அரண்பிறிதில்லெனவருளின்வேலையைச்
சரண்புகுந்தனனெனமுன்னஞ்சாற்றினான். (௫௪)

ஆயவன்றருமமுமாதிமூர்த்திபால்
மேயதோர்சிந்தையுமெய்யும் * வேதியர்
நாயகன்றானெடுந்தவத்துநண்ணினன்
தூயவனென்பதோர்பொருளுஞ்சொல்லினான். (௫௫)

கற்புடைத்தேவியைவிடாதுகாத்தியேல்
எற்புடைக்குன்றமாமிலங்கையேழைநின்
பொற்புடைமுடித்தலைபுரளுமென்றொரு
நற்பொருளுணர்த்தினனென்றுநாட்டினான். (௫௬)

எந்தெழிலிராவணனினையசொன்னநீ
சாந்தொழிற்குரியையென்சார்புநிற்றியேல்
ஆந்தினைப்பொழுதினிலகறியாமெனப்
போந்தனனென்றனன்புகுந்ததீதென்றான். (௫௭)

அப்பொழுதிராமனுமருகினண்பரை
இப்பொருள்கேட்டநீரியம்புவீரிவன்
கைப்புகற்பாலனோகழியற்பாலனோ
ஒப்புறநோக்கிநும்முணர்வினாலென்றான். (௫௮)

விபீடணனைக்குறித்துச் சுக்கிரீவன் தன் கருத்துரைத்தல்.

தடமலர்க்கண்ணனைத்தடக்கைகூப்பிநின்
றிடனிதுகாலமீதென்னவெண்ணுவான்
கடனறிகாவலன்கழறினானரோ
சுடர்நெடுமணிமுடிச்சுக்கிரீவனே. (௫௯)

நனிமுதல்வேதங்களுலுநாமநூல்
மனுமுதல்யாவையும்வரம்புகண்டநீ
இனையனகேட்கவோவெம்மனோர்களை
வினவியகாரணம்விதிக்குமேலுளாய். (௬0)

ஆயினும்விளம்புவெனருளினாழியாய்
ஏயினதாகலினறிவிற்கேற்றன
தூயவென்றெண்ணினுந்துணிவன்றென்னினும்
மேயதுகேட்டியால்விளைவுநோக்குவாய். (௬௧)

வெம்முனைவிளைதலினன்றுவேறொரு
சும்மையானுயிர்கொளத்துணிதலாலன்று

* வேதியர்நாயகன் - பிரமன்.

தம்முனைத்துறந்ததுதருமநீதியோ
* செம்மையிலரக்கரில்யாவர்சீரியோர். (௬௨.)

தகையுறுதம்முனைத்தாயைத்தந்தையை
மிகையுறுகுரவரையுலகின்வேந்தனைப்
பகையுறவருதலுந்துறந்தபண்பிது
நகையுறலன்றியுநயக்கற்பாலதோ. (௬௩)

வேண்டுழியினையனவிளம்பிவெம்முனை
பூண்டுழியஞ்சிவெஞ்செருவிற்புக்குடன்
மாண்டுழியன்றிநம்மருங்குவந்தவன்
ஆண்டொழிலுலகினுக்காணியாமன்றே. (௬௪)

மிகைப்புலந்தருமமேவேட்டபோதவர்
தகைப்புலந்துறந்துபோய்ச்சார்தலன்றிறே
நகைப்புலம்பொதுவுறநடந்தநாயகன்
பகைப்புலஞ்சார்தலோபழியினீங்குமோ. (௬௫)

வார்க்குறுவனைகழற்றம்முன்வாழ்ந்தநாள்
சீர்க்குறவாயிடைச்செறுநர்சீறிய
போர்க்குறவன்றியேபுகுந்தபோதிவன்
ஆர்க்குறவாகுவனருளினாழியாய். (௬௬)

ஒட்டியகனகமானுருவமாகிய
சிட்டனன்மருமகனிழைத்ததீவினை
கிட்டியபோதினிற்றவமுங்கேள்வியும்
விட்டதுகண்டுநாம்விடாது † வேட்குமோ. (௬௭)

கூற்றுவன்றன்னொடிவ்வுலகங்கூடிவந்
தேற்றனவென்னினும்வெல்லவேற்றுள
மாற்றவன்றம்பிநம்மருங்குவந்திவண்
தோற்றமோவன்னவன்றுணைவனாகுமோ. (௬௮)

அரக்கரையாசரக்கொன்றுநல்லறம்
புரக்கவந்தனமெனும்பெருமைபூண்டநாம்
இரக்கமிலவரையேதுணைக்கொடேறலால்
சுருக்கமுண்டவர்வலிக்கென்றுதோன்றுமால். (௬௯)

விண்டுழியொருநிலைநிற்பர்மெய்ம்முகம்
கண்டுழியொருநிலைநிற்பர்கைப்பொருள்
கொண்டுழியொருநிலைநிற்பர்கூழுடன்
உண்டுழியொருநிலைநிற்பருற்றவர். (௭௦)

---

* செம்மையில்-ஒழுக்கமற்ற.
† வேட்குமோ-விரும்புவேமோ.

வஞ்சனையியற்றிடவந்தவாறலால்
தஞ்செனநம்வயிற்சார்ந்துளானலன்
நஞ்செனக்கொடியனைநயந்துகோடியோ
அஞ்சனவண்ணவென்றறியக்கூறினான். (எக)

அன்னவன்பின்னுறவலகில்கேள்வியால்
தன்னிகர்பிறிதிலாத்தகையசாம்பனை
என்னையுன்கருத்தென * விறைவினுயினான்
தொன்முறைநெறிதெரிந்தவனுஞ்சொல்லுவான். (எஉ)

விபீடணனைக்குறித்துச் சாம்பன் தன்கருத்துணர்த்துதல்.

அறிஞரேயாயினுமரியதெவ்வரைச்
செறிஞரேயாவரேற்கெடுதறிண்ணமாம்
நெறிதனைநோக்கினுநிருதர்நிற்பதோர்
குறிநனியுளதெனவுலகங்கொள்ளுமோ. (எங)

வெற்றியுந்தருகுவர்வினையம்வேண்டுவர்
முற்றுவருறுகுறைமுடிப்பர்முன்பினல்
உற்றுறுநெடும்பகையுடையரல்லதூஉம்
சிற்றினத்தவரொடுஞ்செறிதல்சீரிதோ. (எச)

வேதமும்வேள்வியுமயக்கிவேதியர்க்
கேதமுமிமையவர்க்கிடருமீட்டிய
பாதகர்நம்வயிற்படர்வராமெனின்
தீதிலராய்நமக்கன்புசெய்வரோ. (எரு)

கைப்புகுந்துறுசரணருளிக்காத்துமேல்
பொய்க்கொடுவஞ்சனைபுணர்த்தபோதினும்
மெய்க்கொளவிளியினும்விடுதுமென்னினும்
திக்குறுநெடும்பழியறமுஞ்சீறுமால். (எசு)

மேனனிவிளைவதுவிளம்பல்வேண்டுமோ
கானகத்திறைவியோடிறையுங்காலையின்
மானெனவந்தவன்வரவை † மானுமிவ்
வேனையன்வரவுமென்றினையகூறினான். (எஎ)

பால்வருபனுவலின்றுணிவுபற்றிய
சால்பெருங்கேள்வியின்றனைநாயகன்
நீலனைநின்கருத்தியம்புநீயென
‡ மேலவன்விளம்பலும்விளம்பன்மேயினான் (எஅ)

---

* இறை-இராமன்.
† மானும்-ஒக்கும்.
‡ மேலவன்-இராமன்.

விபீடணனைக்குறித்து நீலன் தன்கருத்துணர்த்துதல்.

பகையுரை துணையெனப்பற்றற்பாலவாம்
வகையுளவன்னவைவரம்பில்கேள்வியாய்
தொகையுறக்கூறுவேன்குரங்கின்சொல்லென
நகையுறத்தக்கனநயந்துகோடியால். (௭௧)

தங்குலக்கிளைஞரைத்தருக்கும்போரிடைப்
பொங்குநர்க்கொன்றவர்க்கெளியர்போந்தவர்
மங்கையர்திறத்தினின்வயிர்த்தசிந்தையர்
சிங்கலில்பெரும்பொருளிழந்துசீறினோர். (௮0)

பேரபிமானங்களூற்றபெற்றியோர்
போரிடைப்புறங்கொடுத்தஞ்சிப்போந்தவர்
நேர்வருதாயத்து * நிரப்பினோர்பிறர்
சீரியர்கிளைஞரைமடியச்செற்றுளோர். (௮௧)

அடுத்தநாட்டரசியல்புடையவாணையாற்
படுத்தவர்பட்டவர்பகைஞரோடொரு
மடக்கொடிபயந்தவர்மைந்தராயினும்
உடற்கொளத்தகையர்நம்முழைவந்தொன்றினால். (௮௨)

தாமவர்க்கெளிவருந்தகைமையாரலர்
நாமுறவல்லவர்நம்மைநண்ணினார்
தோமுறநீங்குதறுணிவராதலின்
யாமிவன்வரவிவற்றென்னென்றுன்னுவாம். (௮௩)

காலமேநோக்கினுங்கற்றநூல்களின்
மூலமேநோக்கினுமுனிந்துபோந்தவன்
சீலமேநோக்கியாந்தெளிந்துதேறுதற்
கேலுமேயென்றெடுத்தினையகூறினான். (௮௪)

மற்றுளமந்திரிக்கிழவர்வாய்மையால்
குற்றமில்கேள்வியரன்புகூர்ந்தவர்
பற்றுதல்பழுதெனப்பழுதுறுவொரு
பெற்றியினுணர்வினார்முடியப்பேசினார். (௮௫

உறுபொருள்யாவருமொன்றக்கூறினார்
செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதியென்னுநேரிலா
அறிவனைநோக்கினனறிவின்மேலுளான். (௮௬)

* நிற்பினோர் என்னும் பாடம்.

* இணங்கினரறிவிலரெனினுமெண்ணுங்கால்
கணங்கொள்கைநம்மனோர்கடன்மைகாணென
வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
நுணங்கியகேள்வியானுவல்வதாயினான். (௮௭)

விபீடணனைக்குறித்து அனுமன் தன்கருத்துணர்த்துதல்.

எத்தனையுளர்தெரிந்தெண்ணவேய்ந்தவர்
அத்தனைவருமொருபொருளையன்றென
உத்தமரதுதெரிந்துணரவோதினார்
வித்தகவினிச்சிலவிளம்பவேண்டுமோ. (௮௮)

தூயவர்துணிதிறனன்றுதூயதே
ஆயினுமொருபொருளுரைப்பெனுழியாய்
தீயனென்றிவனையானயிர்த்தல்செய்கிலேன்
மேயினசிலபொருள்விளம்பவேண்டுமால். (௮௯)

வண்டுளறலங்கலாய்வஞ்சர்வாண்முகம்
கண்டோர்பொழுதினிற்றெரியுங் † கைதவம்
உண்டெனினஃதவர்க்கொளிக்கவொண்ணுமோ
விண்டவர்பலபகன்மருவிவீழ்வரோ. (௯௦)

உள்ளத்தினுள்ளதையுரையின்முந்துற
மெள்ளத்தம்முகங்களேவிளம்புமாகலால்
கள்ளத்தின்விளைவெலாங்கருத்திலாவிருட்
பள்ளத்தினன்றியேவெளியிற்பல்குமோ. (௯௧)

வாலிவிண்பெறவரசிளையவன்பெறக்
கோலியவரிசிலைவலியுங்கொற்றமும்
சீலமுமுணர்ந்துநிற்சேர்ந்துதெள்ளிதின்
மேலரசெய்துவான்விரும்பிமேயினான். (௯௨)

செறிகழலரக்கர்தமரசுசீரியோர்
நெறியலதாகலினிலைக்கலாமையும்
எறிகடலுலகெலாமிளவற்கீந்ததோர்
பிறிவருங்கருணையுமெய்யும்பேணினான். (௯௩)

காலமன்றிவன்வருகாலமென்பரேல்
வாலிதன்னுறுபகைவலியதேறிய
தாலினியங்கிவற்கிறுதியாவதால்
மூலமென்றுனைவரைப்பிரிவுமுற்றினான். (௯௪)

---

* இணங்கினர் - சினேகித்தவர்கள்.
† கைதவம் - வஞ்சனை.

தீத்தொழிலரக்கர்தமாயச்செய்வினை
வாய்த்துளரன்னவையுணருமாண்பினால்
காய்த்தவரவர்களைகையுற்றார்நமக்
கேற்றதோருறுதியுமெளிதினெய்துமால். (௯௫)

தெளிவுறலரிதிவர்மனத்திற்றீமையாம்
விளிவதுசெய்குவரென்னவேண்டுதல்
ஒளியுறவுயர்ந்தவரொப்பவெண்ணலார்
எளியவர்திறத்திணையெண்ணலேயுமோ. (௯௬)

கொல்லுமினிவனையென்றரக்கன்கூறிய
எல்லையிற்றூதரையெறிதலென்பது
புல்லிதுபழியொடும்புணரும்போர்த்தொழில்
வெல்லலம்பின்னையென்றிடைவிலக்கினான். (௯௭)

மாதரைக்கோறலுமறத்துநீங்கிய
ஆதரைக்கோறலுமழிவுசெய்யினும்
தூதரைக்கோறலுந்தூய்தன்றாமென
ஏதுவிற்சிறந்தனவெடுத்துக்காட்டினான். (௯௮)

எல்லியில்யானிவ * னிரணமாளிகை
செல்லியபோதினுந்திரிந்தபோதினும்
நல்லனநிமித்தங்கணனிநயந்துள
அல்லதுமுண்டுநானறிந்ததாழியாய். (௯௯)

நிந்தனைநறவமுநெறியிலூண்களும்
தந்தனகண்டிலென்றருமதானமும்
வந்தனைநீதியும்பிறவுமாண்பமை
† தந்தணரில்லெனப்பொலிந்ததாமரோ. (௧௦௦)

‡ அன்னவன்றனிமகளலரின்மேலயன்
சொன்னதோர்சாபமுண்டென்னைத்துன்மதி
நன்னுதனீண்டுமேனானுங்கூற்றென
என்னுடையிறைவிக்குமினிதுகூறினாள். (௧௦௧)

வேறு.

பெற்றுடையபெருவரமும் பிறந்துடையவஞ்சனையும் பிறவுமுன்கை,
வற்றொருடையின் விடுகணையால் வெந்தொழியு மெனக்கருதி மேற்சொல்

---

* இரணிமாளிகை-முரசொலியினையுடைய மாளிகை.

† இக்கவியாலந்தணர்கள் ஊனுங்கள்ளுமுண்ணாதாரென்பது நன்கு விளங்குதல்காண்க. ‡ அன்னவன்-அவ்விபீடணன்.

லோடும், உற்றுடையபெருவரமுமுகந்துடையதண்ணளியுமுணர்வுநோக்கின், மற்றுடையர்தாமுளரோவாளரக்கனன்றியேதவத்தின்வாய்த்தார்.

தேவர்க்குந்தானவர்க்குந்திசைமுகனேமுதலாயதேவதேவர்
மூவர்க்குமுடிப்பரியகாரியத்தைமுற்றுவிப்பான்மூண்டுநின்றே
ஆவத்தின்வந்தபயமென்றுனையயிர்த்தகலவிடுதியாயின்
* கூவத்தின்சிறுபுனலைக்கடலயிர்த்ததொவ்வாதோகொற்றவேந்தே. ()

பகைப்புலத்தோர்துணையல்லரென்றிவனைப்பற்றேமேலறிஞர்பார்க்கின்
நகைப்புலத்ததாமன்றேநற்றாயமுளதாயபற்றான்மிக்க
தகைப்புலத்தோர்தந்தையர்கடம்பியர்கடமையரிவர்தாமேயன்றோ
மிகைப்புலத்துவிளைகின்றதொருபொருளைக்காதலிக்கின்விளிஞராவர். ()

ஆதலாலிவன்வரவுநல்வரவேயெனவுணர்ந்தேனடியனேனுன்
வேதநூலெனத்தகையதிருவுளத்தின்குறிப்பறியேனென்றுவிட்டான்
காதனான்முகனாலுங்கணிப்பரியகலையனைத்துங்கதிரோன்முன்சென்
றோதினானேதநீர்கடந்துபகைகடிந்துலகையுய்யக்கொண்டான். (௧0௫)

வேறு.

இராமன் விபீடணனைக்குறித்து தன்கருத்துரைத்தல்.

மாருதிவினையவார்த்தைசெவிமடுத்தமிழ்தின்மாந்திப்
பேரறிவாளநன்றுநன்றெனப்பிறரைநோக்கிச்
சீரிதுமேலிம்மாற்றந்தெளிவுறத்தேர்மினென்னா
ஆரியனுரைப்பதானானைவருமதனைக்கேட்டார். (௧0௬)

கருத்துறநோக்கிப்போந்தகாலமுநன்றுகாதல்
அருத்தியுமரசின்மேற்றேயறிவினுக்கவதியில்லை
பெருத்துயர்தவத்தினானும்பிழைப்பிலனென்னும்பெற்றி
திருத்தியதாகுமன்றேநம்வயிற்சேர்ந்தசெய்கை. (௧0௭)

மற்றினியுரைப்பதில்லைமாருதிவடித்துச்சொன்ன
பெற்றியேபெற்றியன்னதன்றெனிற்பிறிதொன்றானும்
வெற்றியேபெருகதோற்கவீகவீயாதுவாழ்க
பற்றுதலன்றியுண்டோபுகலெமைப்பகர்கின்றானை. (௧0௮)

இன்றுவந்தானென்றுண்டோவெந்தையையாயைமுன்னைக்
கொன்றுவந்தானென்றுண்டோபுகலதுகூறுகின்றான்
தொன்றுவந்தன்புபேணுந்துணைவனுமவனேபின்னைப்
பின்றுமென்றாலுநம்பாற்புகழன்றிப்பிறிதுண்டாமோ. (௧0௯)

பிறந்தநாட்டொடங்கியாருந்துலைபுக்கபெரியோன்பெற்றி
மறந்தநாளுண்டேயென்னைச்சரணென்றுவாழ்கின்றானைத்

* கூவம் - கிணறு.

துறந்தநாட்டின்றுவந்துதுன்னினான்சூட்சியாலே
இறந்தநாளன்றோவென்றுமிருந்தநாளாவதென்றான். (௧௧௦)

இடைந்தவர்க்கபயம்யாமென்றிரந்தவர்க்கெறிநீர்வேலை
கடைந்தவர்க்காகியாலமுண்டவற்கண்டிலீரோ
உடைந்தவர்க்குதவானாயினுள்ளதொன்றீயானாயின்
அடைந்தவர்க்கருளானாயினறமென்னாமாண்மையென்னாம். (௧௧௧)

பேடையைப்பிடித்துத்தன்னைப்பிடிக்கவந்தடைந்தபேதை
வேடனுக்குதவிசெய்துவிறகிடைவெந்தீமூட்டிப்
பாடுறுபசியைநோக்கித்தன்னுடல்கொடுத்த * பைம்புள்
வீடுபெற்றுயர்ந்தவார்த்தைவேதத்தின்விழுமிதன்றோ. (௧௧௨)

† போதகமொன்றுகன்றியிடங்கர்மாப்பொருதபோரின்
ஆதியம்பரமேயானுன்னபயமென்றழைத்தவந்நாள்
வேதமுமுடிவுகாணாமெய்ப்பொருள்வெளிவந்தெய்தி
மாதுயர்துடைத்தவார்த்தைமறப்பரோமறப்பிலாதார். (௧௧௩)

மன்னுயிரெல்லாந்தானேவருவித்துவளர்க்குமாயன்
தன்னனவுலகமெல்லாந்தருமமுமவையுந்தானே
என்னினுமடைந்தோர்தம்மையேமுறவினிதினோம்பிப்
பின்னும்வீடளிக்குமென்றாற்பிறிதொருசான்றுமுண்டோ. (௧௧௪)

நஞ்சினைமிடற்றுவைத்த ‡ நகைமழுவாளனானும்
தஞ்சென முன்னந்தானே தாதைபாற்கொடுத்துச்சாதல்
அஞ்சினேனபயமென்றவந்தணற்காகியந்நாள்
வெஞ்சினக்கூற்றைமாற்றுமேன்மையின்மேன்மையுண்டோ. (௧௧௫)

சரணெனக்கியார்கொலென்றுசானகியழுதுசாம்ப
அரணுனக்காவென்வஞ்சியஞ்சலென்றருளினெய்தி
முரணுடைக்கொடியோன்கொல்லமொய்யமர்முடித்துத்தெய்வ
மரணமென்றாதைபெற்றதென்வயின்வழக்கன்றாமோ. (௧௧௬)

உய்யநிற்கபயமென்றானுயிரைத்தன்னுயிரி $ னோம்பாக்
கய்யனுமொருவன்செய்தவுதவியிற்கருத்திலோனும்
மய்யறநெறியினோக்கிமாமறைநெறியினின்ற
மெய்யினைப்பொய்யென்றானுமீள்கிலாநரகின்வீழ்வார். (௧௧௭)

சீதையைக்குறித்ததேயோதேவரைத்தீமைசெய்த
பேதையைக்கொல்வெனென்றுபேணியவிரதப்பெற்றி

---

* பைம்புள்-புறா. † போதகம்-யானை.

‡ நகைமழு-ஒளிவிடுகின்றபரசு. $ ஓம்பா-இரக்ஷிக்காத.

வேதியரபயமென்றார்க்கன்றுநான்விரித்துச்சொன்ன
காதையைக்குறித்துநின்றவவ்வுரைகடக்கலாமோ. (௧௧௮)

காரியமாகவன்றேயாகுக * கருணையோர்க்குச்
சீரியதன்மைநோக்கினிதனின்மேற்சிறந்ததுண்டோ
பூரியரேயுந்தன்மைப்புகல்புகுந்தோர்க்குப்பொன்றா
ஆருயிர்கொடுத்துக்காத்தற்கெண்ணிலாவரசர்க்கென்னும். (௧௧௯)

ஆதலானபயமென்றபொழுதத்தேயபயதானம்
ஈதலேகடப்பாடென்பதியம்பினீரென்பால்வைத்த
காதலானினிவேறெண்ணக்கடவதென்கதிரோன்மைந்த
கோதிலாதவனைநீயேயென்வயிற்கொணர்தியென்றான். (௧௨௦)

சுக்கிரீவன் விபீடணனை நாடிவருதல்.

அய்யுறவெல்லாந்தீருமளவையாயமைந்ததன்றே
தெய்வநாயகனதுள்ளந்தேறியவடைவேதேறிக்
கய்புகற்கமைவதானான்கடிதினிற்கொணர்வலென்று
மெய்யினுக்குறையுளானவொருவன்பால்விரைவிற்சென்றான். (௧௨௧)

விபீடணன் சுக்கிரீவனெதிரே செல்லுதல்.

வருகின்றகவியின்வேந்தைமயிந்தனுக்கிளையவள்ளல்
தருகென்றானண்ணனின்னையெதிர்கொளற்கருக்கன்றந்த
இருகுன்றமனையதோளானெய்தினனென்னலோடும்
திரிகின்றவுள்ளத்தானுமகமலர்ந்தவன்முன்சென்றான். (௧௨௨)

இருவருமொருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்தல்.

தொல்லருங்காலமெல்லாம்பழகினுந்தூயரல்லார்
புல்லலருள்ளந்தூயார்பொருந்துவரெதிர்ந்தஞான்றே
ஒல்லைவந்துணர்வுமொன்றவிருவருமொருநாளுற்ற
எல்லியும்பகலும்போலத்தழுவினரெழுவிற்றோளார். (௧௨௩)

சுக்கிரீவன் விபீடணனை இராமனடிபணிய வருந்தல்.

தழுவினர்நின்றகாலைத்தாமரைக்கண்ணன்றங்கள்
முழுமுதற்குலத்திற்கேற்றமுறைமையாலுவகைமூள
வழுவவிலபயமுன்பால்வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியால்விரைவினென்னாக்கதிரவன்சிறுவன்சொன்னான். (௧௨௪)

சிங்கவேறனையான்சொன்னவாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்தினான்றன்கண்மழைத்தாரைகான்ற
அங்கமு † மனமதென்னக்குளிர்ந்ததவ்வகத்தைமிக்குப்
பொங்கியவுவகையென்னப்பொடித்தனவுரோமப்புள்ளி. (௧௨௫)

---

* கருணையோர்க்கு-அருளுடையோர்க்கு.

† மனமதென்ன-மனதையொப்ப.

பஞ்செனச்சிவக்குமென்காற்றேவியைப்பிரித்தபாவி
வஞ்சனுக்கிளையவென்னைவருகவென்றருள்செய்தானோ?
தஞ்செனக்கருதினானோதாழ்சடைக்கடவுளுண்ட
நஞ்செனத்தகையேனன்றோநாயகனருளினாயேன். (௧௨௬)

மறுளுறுமனத்தினானென்வாய்மொழிமறுத்தான்வானத்
துருளுறுதேரினானுமிலங்கைமீதோமென்றே
தெருளுறுசிந்தைவந்ததேற்றமீதாகிற்செய்யும்
அருளிதுவாயிற்கெட்டேன்பிழைப்பரோவரக்கராயோர். (௧௨௭)

தீர்வருமின்னறம்மைச்செய்யினுஞ்செய்யசிந்தைப்
பேரருளாளர்தத்தஞ்செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரைநிறுவித்தன்னைக்கனலெழக்கலக்கக்கண்டும்
ஆர்கலியமரருய்யவமிழ்துபண்டளித்ததன்றே. (௧௨௮)

துறவியினுறவுபூண்டதூயவர்துணைவனென்னை
உறவுவந்தருளிமீளாவடைக்கலமுதவினானே
மறவினைநீக்கலில்லாமாயமுமாயவாழ்க்கைப்
பிறவியும்பெயர்த்தேன்பின்னுநரகினிற்பிழைப்பதானேன். (௧௨௯)

திருத்தியவுணர்வுமிக்கசெங்கதிர்ச்செல்வன்செம்மல்
ஒருத்தரைநலனுந்தீங்குந்தேரினுமுயிரினோம்பும்
கருத்தினனன்றேதன்னைக்கழலடைந்தோரைக்காணும்
அருத்தியனமலன்றாழாதேகுதியறிஞவென்றான். (௧௩௦)

* மொய்தவழ்கிரிகண்மற்றும்பலவுடன்முடுகிச்செல்ல
மய்தவழ்கிரியுமேருக்குன்றமும்வருவதென்னச்
செய்தவம்பயந்தவீரரிரண்மாமேழுந்தீய
எய்தவனிருந்தசூழலிருவருமெய்தச்சென்றார். (௧௩௧)

விபீடணன் இராமனைத் தரிசித்தல்.

மாற்கடஞ்சூழ்ந்தவைப்பினங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுடுத்தபாரினாயகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கைவடவரைபாங்குநிற்பக்
கார்க்கடல்கமலம்பூத்ததெனப்பொலிவானைக்கண்டான். (௧௩௨)

அள்ளிமீதுலகைவீசுமரிக்குலச்சேனைநாப்பண்
தெள்ளுதண்டிரையிற்றாகிப்பிறிதொருதிறனுஞ்சாரா
வெள்ளியகடலின்மேனாள்விண்ணவர்தொழுதுவேண்டப
பள்ளிதீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினானை. (௧௩௩)

---

* மொய்தவழ்-யானைகளுலாவுகின்ற.

கோணுதற்கமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதற்கினியமுத்தின்பொலிமணல்பரந்தவைப்பிற்
காணுதற்கினியநீளவெண்மையிற்கருமைகாட்டி
வாணுதற்சீதைகண்ணின்மணியெனவயங்குவானை. (௧௫-௪)

படர்மழைசுமந்தகாலைப்பகர்வருமமரர்கோமான்
அடர்சிலைதுறந்ததென்னவாரந்தீர்மார்பினானைக்
கடர்கடைமத்திற்பாம்புகழற்றியதென்னக்காசின்
சுடரொளிவலயந்தீர்ந்தசுந்தரத்தோளினானை. (௧௫௫)

கற்றைவெண்ணிலவுநீக்கிக்கருணையாலமிழ்தங்காலும்
முற்றுறுகலையிற்றூயமுழுமதிமுகத்தினானைப்
பெற்றவனளித்தமோலியிளையவன்பெறத்தான்பெற்ற
சிற்றவைபணித்தமோலிபொலிகின்றசென்னியானை. (௧௫௬)

வீரனைநோக்கியங்கணென்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிசசெங்கணஞ்சனமலையன்றாகில்
கார்முகில்கமலம்பூத்ததன்றிவன்கண்ணன்கொல்லாம்
ஆரருள்சுரக்குநீதியறநறங்கரிதோவென்றான். (௧௫௭)

மின்மினியொளியின்மாயும்பிறவியைவேரின்வாங்கச
செம்மணிமகுடநீக்கித்திருவடிபுனைந்தசெல்வன்
தன்முனோர்கமலத்தண்ணறாதையார்சரணந்தாழ
என்முனோரெனக்குசசெய்தவுதவியென்றேமபலுற்றான். (௧௫௮)

பெருந்தவமியற்றினோர்க்கும்பேர்வரும்பிறவிநோய்க்கு
மருந்தனநின்றான்றனேவடிக்கணைதொடுத்துக்கொல்வான்
இருந்தனனின்றதென்னாமியம்புவதில்லைதீந்த
அருந்தவமுடையரம்மாவரக்கரென்றகத்துட்கொண்டான். (௧௫௯)

கரங்கண்மீசசுமந்துசெல்லுங்கதிர்மணிமுடியன்கல்லும்
மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளல்
இரங்கினனேக்குந்தோறுமிருநிலத்திறைஞ்சுகின்றான்
வரங்களின்வாரியன்னதாளிணைவந்துவீழ்ந்தான். (௧௬௦)

அழிந்ததுபிறவியென்னு * மகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணான்மார்புறவணங்கினானைப்
பொழிந்ததோர்கருணைதன்னாற்புல்லினனென்றுதோன்ற
எழுந்தினிதிருத்தியென்றுமலர்க்கையாலிருக்கையீந்தான். (௧௬௧)

---

* அகத்தியல் - உள்ளத்தின்தன்மை.

இராமன் விபீடணனுக்கு இலங்கையரசளித்தேனெனல்.

ஆழியானவனைநோக்கியருள்சுரந்துவகைதூண்ட
ஏழிரண்டேழாய்நின்றவுலகுமென்பெயருமெந்நாள்
வாழுநாளன்றுகாறும்வாளெயிற்றரக்கர்வைகும்
தாழ்கடலிலங்கைச்செல்வநின்னதேதந்தேனென்றான். (௧௪௨)

அனைத்துயிரும் வாழ்ந்தேமென வார்த்தல்.

தீர்த்தனதருளைநோக்கிச்செய்ததோர்சிறப்புப்பெற்றான்
கூர்த்தநல்லறத்தைநோக்கிக்குறித்ததோயாதுகொல்லோ
வார்த்தையஃதுரைத்தலோடுந்தனித்தனிவாழ்ந்தேமென்ன
ஆர்த்தனவுலகினுள்ளசராசரமனைத்துமம்மா. (௧௪௩)

இராமன் விபீடணனுக்கு மகுடதாரணஞ்செய்யக் கட்டளையிடுதல்.

உஞ்சனேனடியனேனென்றூழ்முறைவணங்கிநின்ற
அஞ்சனமேனியானையழகனுமருளினோக்கித்
தஞ்சநற்றுணைவனானதவறிலாப்புகழான்றன்னைத்
துஞ்சலினயனத்தையசூட்டுதிமகுடமென்றான். (௧௪௪)

வீபீடணன் பாதுகைமகுடம் விரும்புதல்.

விளைவினையறியும்வென்றிவீடணனென்றும்வீயா
அளவறுபெருமைச்செல்வமளித்தனையாயினைய
களவியலரக்கன்பின்னேதோன்றியகடன்மைதீர
* இளையவற்கவித்தமோலியென்னையுங்கவித்தியென்றான். (௧௪௫)

குகனொடுமைவரானேமுன்புபின் † குன்றுசூழ்வான்
மகனொடுமறுவரானேமெம்முழையன்பின்வந்த
அகனமர்காதலையவென்னொடுமெழுவரானேம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை. (௧௪௬)

விபீடணன் திருவடிமகுடஞ் சூடிநிற்றல்.

நடுவினிப்பகர்வதென்னேநாயகநாயினேனை
உடனுதித்தவர்களோடுமொருவனென்றுரையாநின்றாய்
அடிமையிற்சிறந்தேனென்னாவுயிர்ப்பொடுமச்சநீங்கித்
தொடுகழற்செம்பொன்மௌலிசென்னியிற்சூட்டிக்கொண்டான். (௧௪௭)

திருவடிமுடியிற்சூட்டிச்செங்கதிருச்சிசேர்ந்த
அருவரையென்னநின்றவரக்கர்தம்மரசைநோக்கி
இருவருமின்பமுற்றார்யாவருமின்பமுற்றார்
பொருவருமமரர்வாழ்த்திப்பூமழைபொழிவதானார். (௧௪௮)

---

* இளையவற்கவித்தமோலி - பரதனுக்களித்த பாதுகைமகுடம்.
† குன்றுசூழ்வான் மகன் - சுக்கிரீவன்.

ஆர்த்தனபரவையேழுமார்த்தனமேகமார்த்த
வார்த்தொழிற்புணருந்தெய்வமங்கலமுரசுஞ்சங்கும்
தூர்த்தனகனகமாரிசொரிந்தனநறுமென்சுண்ணம்
போர்த்ததுவானத்தன்றங்கெழுந்ததுதுழனிப்பொம்மல். (கசகூ)

மொழிந்தசொல்லமிழ்தமன்னோடிறத்தினின்முறைமைநீங்கி
இழிந்தவென்மரபுமின்றேயுயர்ந்தவென்றிடரிற்றீர்ந்தான்
செழுந்தனிமலரோன்பின்னையிராவணன்றீமைச்செல்வம்
அழிந்ததென்றறனுந்தன்வா * யாவலங்கொட்டிற்றன்றே. (கரு௦)

இன்னதோர்செவ்வித்தாகவிராமனுமிலங்கைவேந்தன்
தன்னெடுஞ்செல்வந்தானேபெற்றமைபலருங்கேட்பப்
பன்னெடுந்தானைசூழப்பகலவன்சேயுநீயும்
மன்னெடுங்குமரபாடிவீட்டினைவலஞ்செய்கென்றான். (கருக)

முடிசூடியவிபீடணனைப் பாடிவீட்டினை வலம் வருவித்தல்.

அந்தமில்குணத்தினானையடியிணைமுடியினேடிச்
சந்தனவிமானமேற்றிவானரத்தலைவர்தாங்க
இந்திரற்குரியசெல்வமெய்தினனிவனென்றேத்தி
மந்தரத்தடந்தோள்வீரர்வலஞ்செய்தார்தானைவைப்பை. (கருஉ)

இராமன் திருவடியின்பெருமை சொல்லொணாதெனல்.

தேடுவார்தேடநின்றசேவடிதானுந்தேடி
நாடுவானன்றுகண்டநான்முகன்கழீஇயநன்னீர்
ஆடுவார்பாவமஞ்சுநீங்கிமேலமரராவார்
சூடுவாரெய்துந்தன்மைசொல்லுவார்யாவர்சொல்லீர். (கருங)

விபீடணன்பெற்ற பேற்றினைவியத்தல்.

இற்றைநாளளவும்யாருமிருடிகளிமையோர்ஞான
முற்றினோரன்புபூண்டார்வேள்விகண்முடித்துநின்றார்
மற்றுமாதவருமெல்லாம்வாளெயிற்றிலங்கைவேந்தன்
பெற்றதார்பெற்றாரென்றுவியந்தனர்பெரியோரெல்லாம். (கருச)

ச - வது, விபீடணனடைக்கலப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - சகூஉ.

---

* ஆவலங்கொட்டல்-வாயாலொலித்தல்.

௫ - வது, இலங்கைகேள்விப்படலம்.

வந்தடிவணங்கியநிருதர்மன்னவற்
கந்தமிலாததோருறையுளவ்வழித்
தந்தனன்விடுத்தபினிரவிதன்கதிர்
சிந்தினவெய்யவென்றெண்ணித்தீர்ந்தனன். (௧)

அந்திமாலைப்பொழுது வருதல்.

சந்திவந்தனைத்தொழின்முடித்துத்தன்னெடும்
புந்திநொந்திராமனுமுயிர்ப்பப்பூங்கணை
சிந்திவந்திறுத்தனன்மதனன்றீநிறத்
தந்திவந்திறுத்ததுகறுத்ததண்டமே. (௨)

நட்சத்திரோதயம்.

மாத்தடந்திசைதொறுமறைந்தவல்லிருள்
கோத்ததுகருங்கடல்கொள்ளைகொண்டென
நீத்தநீர்ப்பொய்கையினிறைந்தநாண்மலர்
பூத்தனமீன்குலம்பொலிந்ததண்டமே. (௩)

சில்லியல்கோதையைநினைந்துதேம்பிய
வில்லியைத்திருமனம்வெதுப்பும்வேட்கையால்
* எல்லியைக்காண்டலுமலர்ந்தவீட்டினால்
மல்லிகைக்கானமும்வானமொத்ததே. (௪)

சந்திரோதயம்.

ஒன்றுமுட்கறுப்பினோடொளியின்வாளுரீஇத்
தன்றனிமுகத்தினாலென்னைத் † தாழ்ந்தற
வென்றவடுணைவனையின்றுவெல்குவேன்
என்றதுபோலவந்தெழுந்ததிந்துவே. (௫)

கண்ணினையப்புறங்கரந்துபோகினும்
பெண்ணிறமுண்டெனிற்பிடிப்பலீண்டென
உண்ணிறைநெடுங்கடலுலகமெங்கணும்
வெண்ணிறநிலவெனும்வலையைவீசினான். (௬)

கடலொலி.

புடைக்கைவன்றிரையெடுத்தார்க்கும்போர்க்கடல்
உடைக்கருந்தன்னிறமொளித்துக்கொண்டவன்

---

* எல்லியை-இரவை. † தாழ்ந்தற-கெடுமாறு.

அடைக்கவந்தானெனேயரியின்றனையால்
இடைக்கவந்தானெனக்கிளர்ந்தெழுந்ததே. (எ)

நிலாப்பரந்தல்.

மேலுகத்தொகுதியான்முதிர்ந்தமெய்யெலாம்
தோலுகுத்தாலெனவரவத்தொல்கடல்
வாலுகத்தாலிடைப்பரந்தவைப்பெலாம்
பாலுகுத்தாலெனநிலவுபாய்ந்ததால். (அ)

தென்றல் வீசுதல்.

* மன்றல்வாய்மல்லிகையெயிறுவண்டினம்
கன்றியவிடத்ததுநறவின்கண்ணது
குன்றின்வாய்முழையினிற்குலாயகொட்பது
தென்றலென்றொருபுலியுயிர்த்துசசென்றதால். (௯)

மன்மதபாணமும் சந்திரிகையும்.

கரத்தொடும்பாழிமாக்கடல்கடைந்துளான்
உரத்தொடுங்காலொடுமுருவவோங்கிய
மரத்தொடுந்தொளைத்தவன்மார்பின்மன்மதன்
சரத்தொடும்பாய்ந்தனநிலவின்றுரைவாள். (௧௦)

இரவில் இராமன் சீதையைநினைந்து வருந்தியதுரைத்தல்.

உடலினைநோக்குமின்னுயிரைநோக்குமால்
இடரினைநோக்குமற்றியாதுநோக்கலன்
கடலினைநோக்குமக்கள்வன்வைகுறும்
திடரினைநோக்குந்தன்சிலையைநோக்குமால். (௧௧)

பணிபழுத்தமைந்தபூணல்குற்பண்பினல்
பிணிபழுத்தமைந்ததோர்பித்தினுள்ளத்தான்
அணிபழுத்தமைந்தமுத்தரும்புசெம்மணி
மணிபழுத்தமைந்தவாய்மறக்கவல்லனே. (௧௨)

சுக்கிரீவன்மேலாக வேண்டுவன நினையெனல்.

ஆயதோரளவையினருக்கன்மைந்தனீ
தேய்வதென்காரியநிரப்புஞ்சிந்தையை
மேயவன்றன்னொடுமெண்ணிமேலினித்
தூயதுநினைக்கிலையென்னச்சொல்லினன். (௧௩)

அவ்வழியுணர்வுவந்தயர்வுநீங்கினன்
செவ்வழியறிஞனைக்கொணர்திசென்றென

---

* மன்றல்வாய்மல்லிகை யெயிறுவண்டுணக், கன்றியநீர்த்தது நில வின் கண்ணது என்றும் பாடம்.

இவ்வழிவருதியென் றியம்பவெய்திஞன்
வெவ்வழிவிலங்கினனெறியைமேவிஞன். (கச)

மருக்கிளர்தாமரைவாசநாண்மலர்
நெருக்கிடுதடமெனவிருந்தநீதியான்
திருக்கிளர்தாமரைபணிந்தசெம்மலை
இருக்கவீண்டெழுந்தனவிருந்தகாலையில். (கரு)

ராமன் விபீடணனை இலங்கையின்றிற முரையெனல்.

ஆர்கலியிலங்கையினரணுமவ்வழி
வார்கெழுகனைகழலரக்கன்வன்மையும்
தார்கெழுதானையினளவுந்தன்மையும்
நீர்கெழுதன்மையாய்நிகழ்த்துவாயென்ருன். (கசு)

எழுதலுமிருத்தியென் றிராமனேயிஞன்
முழுதுணர்புலவனைமுளரிக்கண்ணிஞன்
பழுதறவினவியபொருளைப்பண்பிஞல்
தொழுதுயர்கையிஞன் றெரியச்சொல்லிஞன். (கஎ)

இலங்கையினற்பவ முரைத்தல்.

நிலையுடைவடவரைகுலையநேர்ந்ததன்
தலையெனவிளங்கியதமனியப்பெரு
மலையினைமும்முடிவாங்கியோங்குநீர்
அலைகடலிட்டனனனுமன்றுதையே. (கஅ)

எழுநூறுயோசனையகலமிட்டகீழ்
ஆழநூறியோசனையாழிமால்வரை
வாழியாயுலகினைவளைந்தவண்ணமே
சூழுமாமதிலதுசுடர்க்குமேலதால். (கக)

மருங்குடைவினையமும்பொறியின்மாட்சியும்
இருங்கடியரணமும்பிறவுமெண்ணிஞல்
சுருங்கிடுமெனைப்பலசொல்லிற்சுற்றிய
கருங்கடலழகதுநீருங்கண்டிரால். (உ0)

வடதிசைவயங்கொளிவாயில்வைகுவோர்
இடையிலரெண்ணிருகோடியென்பரால்
கடையுகமுடிவினிற்காலனென்பதென்
விடைவருபாகனைப்பொருவுமேன்மையோர். (உக)

மேற்றிசைவாயிலின்வைகும்வெய்யவர்க்
கேற்றமுமுளவவர்க்கிரண்டுகோடிமேல்
கூற்றையுங்கட்பொறிகுறுகக்காண்பரேல்
ஊற்றுறுகுருதியோடியிருமுண்பரால். (உஉ)

தென்றிசைவாயிலின்வைகுந்தீயவர்
என்றவரெண்ணிருகோடியென்பரால்
குன்றுறழ்நெடியவர்கொடுமைகூறியென்
வன்றிறல்யமனையுமரசுமாற்றுவார். (௨௩)

கீட்டிசைவாயிலின்வைகுங்கீழவர்
ஈட்டமுமெண்ணிருகோடியென்பரால்
கோட்டிருந்திசைநிலைக் * கும்பக்குன்றையும்
தாட்டுணைபிடித்தகன்றரையினெற்றுவார். (௨௪)

விண்ணிடைவிழித்தனர்நிற்கும்வெய்யவர்
எண்ணிருகோடியினிரட்டியென்பரால்
மண்ணிடைவானவர்வருவரென்றவர்
கண்ணிலர்கரையிலர்கரந்துபோயினார். (௨௫)

பிறங்கியநெடுமதிற்பின்னுமுன்னரும்
உறங்கல † ருண்டதமுலவையாதலால்
கறங்கெனத்திரிபவர்கணக்குவேண்டிமேல்
அறைந்துளதையிருநூறுகோடியால். (௨௬)

இப்படிமதிலொருமூன்றுவேறினி
ஒப்பரும்பெருமையுமுரைக்கவேண்டுமோ
மெய்ப்பெருந்திருநகர்காக்கும்வெய்யவர்
முப்பதுகோடியின்மும்மைமுற்றினார். (௨௭)

சிறப்பவன்செய்திடச்செல்வமெய்தினார்
அறப்பெரும்பகைஞர்களளவிலாற்றவர்
உறப்பெரும்பகைவரினுதவுமுண்மையர்
இறப்பிலரெண்ணிருநூறுகோடியே. (௨௮)

விடமலவிழியெனும்வெகுளிக்கண்ணினர்
கடனலவிமைத்தலுமென்னுங்காவலர்
வடவரைபுரைவனகோயில்வாயிலின்
இடம்வலம்வருபவரெண்ணெண்கோடியால். (௨௯)

பேயனேனென்பலபிதற்றிப்பேர்த்தவன்
மாயிருஞாலத்துவைத்தமாப்படை
தேயினுநாளெலாந்தேய்க்கவேண்டுவ
தாயிரவெள்ளமென்றறிந்ததாழியாய். (௩௦)

* கும்பக்குன்றையும்-மத்தகத்தினையுடைய யானையையும்.
† உண்பதுமுலவையாயென என்றும்பாடம்.

* அன்றியுமவனகன்கோயில்வாய்மனை
முன்றிலின் † வைகுவார்முறைமைகூறிடின்
ஒன்றியவுலகையுமெடுக்குமூற்றத்தார்
குன்றினும்வலியவர்கோடிகோடியால். (௩௧)

தேர்பதினாயிரம்பதுமஞ்செம்முகக்
கார்வரையவற்றினுக்கிரட்டிகால்வயத்
தூர்பரியவற்றினுக்கிரட்டியொட்டகம்
தார்வருபுரவியினிரட்டிசாலுமே. (௩௨)

இலங்கையினரணிதுபடையினெண்ணிது
வலங்கையில்வாள்சிவன்கொடுக்கவாங்கிய
அலங்கலந்தோளவன்றுணைவரந்தமில்
வலங்களும்வரங்களுந்தவத்தின்வாய்த்தவர். (௩௩)

வேறு.

தும்பியீட்டமுமிரதமும்புரவியுந்தொடர்ந்த
அம்பொன்மாப்படையையிருகோடிகொண்டமைந்தான்
செம்பொனாட்டுளசித்தரைச்சிறையிடைவைத்தான்
கும்பனென்றுளனாழிவெங்கதிரினுங்கொடியான். (௩௪)

உகம்பல்காலமுந்தவஞ்செய்துபெருவரமுடையான்
சுகம்பல்போரலால்வேறிலன்பொருபடைத்தொகையான்
நகம்பலென்றிவையில்லதோர்நரசிங்கமனையான்
அகம்பனென்றுளனலைகடல்பருகவுமமைவான். (௩௫)

பொருப்பைமீதிடும்புரவியும்பூட்கையுந்தேரும்
உருப்பவிற்படையொன்பதுகோடியுமுடையான்
செருப்பைவானிடைச்சினக்கடாய்கடாய்வந்துசெறுத்த
நெருப்பைவென்றவனிகும்பனென்றுளனொருநெடியோன். (௩௬)

பேயையாளியையானையைக்கழுதையப்பிணித்த
ஆயதேர்ப்படையையிருகோடிகொண்டமைந்தான்
தாயையாயினுஞ்சலித்திடுவஞ்சனைதவிரா
மாயையானுளன்மகோதரனென்றொருமறவோன். (௩௭)

குன்றில்வாழ்பவர்கோடிநாலைந்தினுக்கிறைவன்
இன்றுளார்பின்னைநாளையிலாரெனவெயிற்றால்
தின்றுளானெடும்பன்முறைதேவரைச்செருவின்
வென்றுளானுளன்வேள்வியின்பகைஞனோர்வெய்யோன். (௩௮)

---

* அன்றுமவன்மகன் எனவும்பாடம் உண்டு.
† மாறினர்-முறையின்வைகுவாரும்என, பிரதியந்தரம்.

மண்ணுளாரையும்வானிலுள்ளாரையும்வருத்தால்
உண்ணுநாளொருநாளினென்றெளிர்படைத்தானை
எண்ணிலிருகோடியனெரியஞ்சவிழிக்கும்
கண்ணுளானுளன்சூரியன்பகையென்றோர்கழலான். (௩௯)

தேவருந்தக்கமுனிவருந்திசைமுகன்முதலா
மூவரும்பக்கநோக்கியேமொழிதரமுனிவான்
தாவரும்பக்கமெண்ணிருகோடியின்றலைவன்
மாபெரும்பக்கனென்றுளன்குன்றினும்வலியான். (௪௦)

உச்சிரத்தெரிகதிரெனவுருத்தெரிமுகத்தன்
நச்சிரப்படைநாலிருகோடிக்குநாதன்
முச்சிரத்தயிற்றலைவற்கும்விலக்கருமொய்ம்பன்
வச்சிரத்தெயிற்றவனுளன்கூற்றுவன்மாற்றான். (௪௧)

அசஞ்சலப்படையையிருகோடியனமரின்
வசஞ்செயாதவன்றனன்றிப்பிறரிலாவலியான்
இசைந்தவெஞ்சமத்தியக்கரைவேரொடுமுன்னாள்
பிசைந்துபோந்தவன்பிசாசனென்றுளனொருபித்தன். (௪௨)

சில்லிமாப்பெருந்தேரொடுங்கரிபரிசிறந்த
வில்லின்மாப்படையேழிருகோடிக்குவேந்தன்
கல்லின்மாப்படிகலக்குவன்கடலெனக்காந்திச்
சொல்லுமாற்றலன்றுன்முகனென்றறந்துறந்தான். (௪௩)

இலங்கைநாட்டன்னவெறிகடற்றீவிடையுறையும்
* அலங்கல்வேற்படையையிருகோடிக்குமரசன்
வலங்கொள்வாட்டொழில்விஞ்சையர்பெரும்புகழ்மறைத்தான்
விலங்குநாட்டவனென்றுளன்வெயிலுகவிழிப்பான். (௪௪)

நாமநாட்டியசவமெனினனென்றுமொருவர்
ஈமநாட்டிடையிடாமற்றன்னெயிற்றிடையிடுவான்
தாமநாட்டியகொடிப்படைப்பதுமத்தின்றலைவன்
தூமநாட்டவனென்றுளன்றேவரைத்துரந்தான். (௪௫)

போரின்மத்தனும்பொருவருமத்தனுமுலவா
நீரின்மத்தனும்பெருமையார்நெடுங்கடற்படையார்
ஆருமத்தனைவலியுடையாரிலையவரால்
பேருமத்தனையெத்தனையுலகமும்பெரியோய். (௪௬)

இன்னதன்மையரேதனையாயிரரென்கேன்
அன்னவன்பெருந்துணைவராயமர்த்தொழிற்கமைந்தார்

---

* அலங்கல்-மாலை.

சொன்னசொன்னவாபடைத்துணையிரட்டியின்றொகையான்
பின்னையெண்ணுவான்பிரகத்தனென்றொருபித்தன். (௪௭)

சேனைகாவலனிந்திரன்சிந்துரச்சென்னி
யானைகால்குலைந்தாழியோரேழும்விட்டகல
எனைவானவரிருக்கைவிட்டிரியலுற்றலையச்
சோனைமாரியிற்சுடுகணைபலமுறைதுரந்தான். (௪௮)

தம்பிமுற்பகற்சந்திரர்நால்வரிற்றயங்கும்
கும்பமாக்கரிக்கோடிருகைகளால்வாங்கிச்
செம்பொன்மால்வரைமதம்பட்டதாமெனத்திரிந்தான்
கும்பகன்னனென்றுளன்பண்டுதேவரைக்குமைத்தான். (௪௯)

கோளிரண்டையுங்கொடுஞ்சிறைவைத்தவக்குமரன்
மூளும்வெஞ்சினத்திந்திரசித்தெனமொழிவான்
ஆளுமிந்திரற்கன்னவன்பிணித்ததற்பின்னைத்
தாளுமார்பினுந்தோளினுமுளவினுந்தழும்பு. (௫0)

தன்னையுந்தெறுந்தருமமென் * றிறைமனந்தாழான்
முன்னவன்றரப்பெற்றதோர்முழுவலிச்சிலையன்
அன்னவன்றனக்கிளையவனப்பெயரொழித்தான்
பின்னொரிந்திரனிலாமையிற்பேரதிகாயன். (௫௧)

தேவராந்தகனராந்தகன்றிரிசிராவென்னும்
மூவராந்தகைமுதல்வராந்தலைவருமுனையில்
போவராந்தகையழிவராமெனத்தனிப்பொருவார்
ஆவராந்தகையிராவணற்கரும்பெறற்புதல்வர். (௫௨)

விபீடணன் இராவணன் திறமுரைத்தல்.

இனையதன்மையர்வலியிஃதிராவணனென்னும்
அனையவன்றிறம்யானறியளவெலாமறைவன்
தனயனான்முகன்றகைமகன்சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வரமுக்கணன்வரத்தொடுமுயர்ந்தான். (௫௩)

எள்ளிலம்பெரும்பூதமும்யாவையுஞ்சூழப்
புள்ளிமானுரியாடையனுமையொடும்புணர்ந்த
வெள்ளியம்பெருந்தடங்கிரிவேரொடும்வாங்கி
அள்ளிவிண்டொடவெடுத்தனனுலகெலாமனுங்க. (௫௪)

ஆன்றவெண்டிசையுலகெலாஞ்சுமக்கின்றயானை
ஊன்றுகோடிறத்திரள்புயத்தழுத்தியவொண்மை

* இறை - சிறிதும்.

தோன்றுமென்னவேதுணுக்கமுற்றறிவரத்தொகுதி
மூன்றுகோடியின்மேலொருமுப்பத்துமூவர். (௫௫)

குலங்களோடுந்தங்குலமணிமுடியொடுங்குறைய
அலங்கல்வாள்கொடுகாலகேயரைக்கொன்றதற்பின்
இலங்கைவேந்தனென்றுரைத்தலுமிடியுண்டவரவிற்
கலங்குமாலினுந்தானவர்தேவியர்கருப்பம். (௫௬)

குரண்டமாடுநீரளகையினொளித்துறைகுபேரன்
* திரண்டமாடுந்தன்றிருவொடுநிதியமுமிழந்து
புரண்டுமான்றிரள்புலிகண்டதாமெனப்போனான்
இரண்டுமானமுமிலங்கைமாநகரமுமிழந்து. (௫௭)

புண்ணுஞ்செய்ததுமுதுகெனப்புறங்கொடுத்தோடி
உண்ணுஞ்செய்கையிற்றசமுகக்கூற்றந்தன்னுயிர்மேல்
நண்ணுஞ்செய்கையதெனக்கொடுநாடொறுந்தன்னாள்
எண்ணுஞ்செய்கையனந்தகன்றன்பதமிழந்தான். (௫௮)

இருணன்காசறவெழுகதிரவனிற்கவென்றும்
அருணன்கண்களுங்கண்டிலாவிலங்கைபண்டமரில்
பருணன்றன்பெரும்பாசமும்பறிப்புண்டுபயத்தால்
வருணனுய்ந்தனன்மகரநீர்வெள்ளத்துமறைந்து. (௫௯)

என்றுலப்புறச்சொல்லுகேனிராவணனென்னும்
குன்றுலப்பினுமுலப்பிலாத்தோளினான்கொற்றம்
இன்றுலப்பினுநாளையேயுலப்பினுஞ்சிலநாள்
சென்றுலப்பினுநினக்கன்றிப்பிறர்க்கென்றுந் † தீரான். (௬0)

விபீடணன் அனுமன்றிறமுரைத்தல்.

ஈடுபட்டவரெண்ணிலர்தோரணத்தெழுவால்
பாடுபட்டவர்படுகடன்மணலினும்பலரால்
சூடுபட்டதுகொடிநகரடுபுலிதுரந்த
ஆடுபட்டதேபட்டனரனுமனாலரக்கர். (௬௧)

காய்த்தவக்கணத்தரக்கர்தமுடலுகுகறைத்தோல்
நீத்தவெக்கரினிறைந்துளகருங்கடனெருப்பின்
வாய்த்தவக்கணைவரிசிலைமலையொடும்வாங்கித்
தேய்த்தவக்குழம்புலர்ந்திலவிலங்கையிற்றெருவில். (௬௨)

சேனைக்காவலரோரைவருளர்பண்டுதேவர்
வானைக்காவலுமானமுமாற்றியமறவர்

---

* இரண்டுமாடுமென்றும் பாடம்.
† தீரான் - அழியான்.

தானைக்கார்வருங்கடலொடுந்தமரொடுந்தாமும்
யானைக்காற்பட்டசெல்லெனவொல்லையினவிந்தார். (சுங)

எங்குலத்தவரெண்பதினாயிரரிறைவர்
இங்கரப்பெயர்கிரியனதோற்றத்தர்கிளர்ந்தார்
வெங்கரத்தினுங்காலினும்வாலினும்வீக்கிச்
சங்கரற்கழிமுப்புரத்தவரெனச்சமைந்தார். (சுச)

வெம்புமாகடற்சேனைகொண்டெதிர்பொரவெகுண்டான்
அம்புமாயிரத்தாயிரமிவன்புயத்தழுத்தி
உம்பர்வானகத்தொருதனிநமனைச்சென்றுற்றான்
சம்புமாலியும்வில்லினாற் * சுருக்குண்டுதலைவ. (சுரு)

சொன்னமாமதிலிலங்கையின்பரப்பிது துகைத்துச்
சின்னமானவர்கணக்கிலர்நீர்களேகெரிதிர்
இன்னமாருளர்வீரர்மற்றிவன்சுடவெரிந்த
வன்னமாநகரரவிந்தக்குருதியாலகன்று. (சுசு)

இராவணனேழுநாள் விசும்பிடை இருந்தான்.

விலங்கல்வொந்தவாவேறினிவிளம்புவதெவனோ
அலங்கன்மாலையுஞ்சாந்தமுமன்றுதானணிந்த
கலன்களோடுமெச்சாத்தியதுகிலொடுங்கதிர்வாள்
இலங்கைவேந்தனுமேழுநாள்விசும்பிடையிருந்தான். (சுஎ)

பிரமன் இலங்கையை முன்போல வியற்றினன்.

நொதுமற்றிண்டிரலரக்கனதிலங்கையைநுவன்றேன்
அதுமற்றவ்வழியரணமும்பெருமையுமறைந்தேன்
இதுமற்றவ்வழியெய்தியதிராவணனேவப்
பதுமத்தண்ணலேபண்டுபோலந்நகர்படைத்தான். (சுஅ)

சாந்துமானையிற்கரன்முதல்வீரருங்கவியின்
வேந்துமென்றிவர்விளிந்தவாகேட்டன்றுவிலங்கல்
தீந்தவாகண்டுமரக்கரைச்செருவிடைமுருக்கிப்
போந்தவாகண்டுநொனிங்குப்புகுந்ததுபுகழோய். (சுகூ)

கேள்கொண்மேலையான்கிளத்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொணோக்கியைப்பாக்கியம்பழுத்தனமயிலை
நாள்கள்சாலவுநீங்கலினலங்கெடமெலிந்த
தோள்கள்வீங்கித்தன்றூதனைப்பார்த்திவைசொன்னான். (எ0)

* சுருக்குண்டு - உயிர்குறைந்து.

இராமனனுமனைப் புகழ்தல்

கூட்டினார்படைபாகத்தின்மேற்படக்கொன்றாய்
ஊட்டினாயெரியூர்முற்றுமினியங்கொன்றுண்டோ
கேட்டவாற்றினாற்கிளிமொழிச்சீதையைக்கிடைத்தும்
மீட்டிலாததென்விற்றொழில்காட்டக்கொல்வீர. (எக)

நின்செய்தோள்வலிநிரம்பியவிலங்கையைநேர்ந்தோம்
பின்செய்தோஞ்சிலவவையினிப்பீடின்றுபெறுமோ
பொன்செய்தோளினாய்போர்ப்பெரும்படையொடும்புக்கோம்
என்செய்தோமென்றுபெரும்புகழெய்துவானிருந்தோம். (எஉ)

என்னதாக்கியவலியொடவ்விராவணன்வலியும்
உன்னதாக்கினைபாக்கியமுருக்கொண்டதொப்பாய்
முன்னதாக்கியமூவுலகாக்கியமுதலோன்
பின்னதாக்கியபதநினக்காக்கினெனன்பெற்றாய். (எங)

என்றுகூறலுமெழுந்திருநிலனுறவிறைஞ்சி
ஒன்றும்பேசலனாணினன்வணங்கியவுரவோன்
நின்றவானரத்தலைவருமரசுமந் * நெடியோன்
வென்றிகேட்டலும்வீடுபெற்றாரெனவியந்தார். (எச)

ரு-வது, இலங்கைகேள்விப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ரு௱ரு.

சு-வது, வருணனைவழிவேண்டுபடலம்.

தொடக்குமென்னினிவ்வுலகொருமூன்றையுந்தோளால்
அடக்கும்வண்ணமுமழித்தலுமொருபொருளன்றால்
கிடக்கும்வண்ணவெங்கடலினைக்கிளர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமெண்ணுதியெண்ணுநூல்கற்றாய். (க)

கரந்துநின்றநின்றன்மையையதுசெலக்கருதும்
பரந்ததுன்றிருக்குலமுதற்றலைவராற்பரிவாய்
வரந்தரும்மிந்தமாக்கடல்படைசெலவழிவே
றிரந்துவேண்டுதியெறிதிரைப்பரவையையென்றான். (உ)

---

* நெடியோன்என்ற தீண்டனுமனை.

நன்றிலங்கையர்நாயகன்மொழியெனநயந்தான்
ஒன்றுதன்பெருந்துணைவரும்புடைசெலவுரவோன்
சென்றுவேலையைச்சேர்தலும்விசும்பிடைச்சிவந்த
குன்றின்மேனின்றுகுதித்தனபகலவன்குதிரை. (௩)

கொழுங்கதிர்ப்பகைக்கோளிருணீங்கியகொள்கை
செழுஞ்சுடர்ப்பணிக்கலையெலாநிரம்பியதிங்கள்
புழுங்குவெஞ்சினத்தஞ்சனப்பொறிவரியரவம்
விழுங்குநீங்கியதொத்ததுவேலைசூழ்ஞாலம். (௪)

இராமன் புல்லணையிற்கிடந்து வருணமந்திரஞ் செபித்தல்.

தருணமங்கையைமீட்பதோர்நெறிதருகென்னும்
பொருணயந்துநன்னூனெறியடுக்கியபுல்லில்
கருணையங்கடறுயின்றனன்கருங்கடனோக்கி
வருணமந்திரமெண்ணினன்விதிமுறைவணங்கி. (௫)

பூழிசென்றுதன்றிருவுருப்பொருந்தவம்பொரைதீர்
வாழிவெங்கதிர்மணிமுகம்வருடவும்வளர்ந்தான்
ஊழிசென்றனவொப்பனவொருபகலவையோர்
எழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன். (௬)

இராமன் வருணன் வராமையாற் சீற்றங்கொள்ளுதல்.

ஊற்றமீக்கொண்டவேலையானுண்டிலையென்னும்
மாற்றமீக்கவும்பெற்றிலம்யாமெனுமனத்தால்
எற்றமீக்கொண்டபுனலிடையெரிமுளைத்தென்னச்
சீற்றமீக்கொண்டுசிவந்தனதாம்பிரைச்செங்கண். (௭)

மாண்டவில்லிழந்தயருநாள்வழிதனைவணங்கி
வேண்டவில்லையென்றெளித்ததாமெனமனம்வெதும்பி
நீண்டவில்லுடைநெடுங்கனலுயிர்ப்பொடுநெடுநாண்
பூண்டவில்லெனக்குனித்தனகொழுங்கடைப்புருவம். (௮)

ஒன்றுவேண்டலராயினுமொருவர்பாலொருவர்
சென்றுவேண்டுவரேலவர்சிறுமையிற்றீரார்
இன்றுவேண்டியதெறிகடனெறிதனைமறுத்தால்
நன்றுநன்றெனநகையொடும்புகையுகநக்கான். (௯)

பாரநீங்கியசிலையினனிராவணன்பறிப்பத்
தாரநீங்கியதன்மையனுதலிற்றகைசால்
வீரநீங்கியமனிசனென்றிகழ்ச்சிமேல்விளைய
ஈரநீங்கியதெறிகடலாமெனவிசைத்தான். (௧௦)

புரந்துகோடலும்புகழொடுகோடலும்பொருது
துரந்துகோடலுமென்றிவைதொன்மையிற்றொடர்ந்த
இரந்துகோடலுளியற்கையுந்தருமமுமெஞ்சக்
கரந்துகோடலேநன்றினிநின்றதென்கழறி. (௧௧)

கானிடைப்புகுந்திருங்கனிகாயொடுநுகர்ந்த
ஊனுடைப்பொறையுடம்பினனென்றுகொண்டுணர்ந்த.
மீனுடைக் $ கடற்பெருமையும்வில்லொடுநின்ற
மானுடச்சிறுதன்மையுங்காண்பரால்வானோர். ௧௨)

ஏதமஞ்சினானிரந்ததேயெளிதெனவிகழ்ந்த
ஓதமஞ்சினோடிரண்டும்வெந்தொருபொடியாகப்
பூதமஞ்சும்வந்தஞ்சலித்துயிர்கொண்டுபொருமப்
பாதமஞ்சலர்செஞ்செவேபடர்வரென்படைஞர். (௧௩)

மறுமைகண்டமெய்ஞ்ஞானியர்ஞாலத்தவரினும்
வெறுமைகண்டபின்யாவரும்யாரெனவிரும்பார்
குறுமைகண்டவர்கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர்பெருமைகண்டல்லதுதேறார். (௧௪)

திருதியென்பதொன்றிழிதரவூழியிற்சினவும்
பருதிமண்டிலமெனப்பொலிமுகத்தினன்பலகால்
தருதிவில்லெனுமளவையிற்றம்பியும்வெம்பிக்
குருதிவெங்கனலுமிழ்கின்றகண்ணினன்கொடுத்தான். (௧௫)

வாங்கிவெஞ்சிலைவாளியின்மற்றொருவேலை
வீங்குதோள்வலம்வீக்கினன்கோதையைவிரலால்
தாங்கினாணினைத்தாக்கினன்றூக்கியதமரம்
ஓங்குமுக்கணான்றேவியைத்தீர்த்துளதூடல். ௧௬)

மாரியின்பெருந்துளியினும்வரம்பிலவடித்த
சீரிதென்றவையெவற்றினுஞ்சீரியதெரிந்து
பாரியங்கிரும்புனலெலாமுடிவினிற்பருகும்
சூரியன்கதிரனையனசுடுசரந்துரந்தான். (௧௭)

பெரியமால்வரையேழினும்பெருவலிபெற்று
வரிகொள்வெஞ்சிலைவளர்பிறையாமெனவாங்கித்
திரிவகிற்பனயாவையுமுடிவினிற்றீக்கும்
எரியின்மும்மடிகொடியனசுடுசரமெய்தான். (௧௮)

மீனுநாகமும்விண்டொடுமலைகளும்விறகாய்
ஏனகிற்பனயாவையுமேலெரியெய்தப்

$ கடற்பெருமையும்-கடற்கரசனான வருணன் பெருமிதமும்.

பேணநீர்நெடுநெய்யெனப்பெய்கணைநெருப்பால்
கூனையங்கியின்குண்டமொத்தகடற்குட்டம். (௧௯)

பாழிவன்னெடுங்கொடுஞ்சிலைவழங்கியபகழி
எழுவேலையுமெரியொடுபுகைமடுத்தேகி
ஊழிவெங்கனற்கொழுந்துகளுருத்தெழுந்தோடி
ஆழிமால்வரைக்கப்புறத்திருளையுமவித்த. (௨௦)

மருமதாரையினெரியுண்டமகரங்கண்மயங்கிச்
செருமவானிடைக்கற்பகமரங்களுந்தீய
நிருமியாவிட்டநெடுங்கணைபாய்தலினெருப்போ
டுருமுவீழ்ந்தெனச்சென்றனகடற்றுளியும்பர். (௨௧)

கூடும்வெம்பொறிக்கொடுங்கனறொடர்ந்தனகொளுந்த
ஓடுமேகங்கள்பொரிந்திடையுதிர்ந்தனவும்பர்
ஆடுமங்கையர்கருங்குழல்விளர்த்தனவளக்கர்
கோடுதீந்தெழக்கொழும்புகைப்பிழம்புமீக்கொள்ள. (௨௨)

நிமிர்ந்தசெஞ்சரநிறந்தொறும்படுதலுநெய்த்தோர்
உமிழ்ந்துலர்ந்தனமகரங்களுலப்பிலவுருவத்
துமிந்ததுண்டமும்பலபடத்துரந்தனதொடர்ந்து
திமிங்கிலங்களுந்திமிங்கிலகிலங்களுஞ்சிதறி. (௨௩)

நீறுமீச்செலநெருப்பெழப்பொருப்பலாமெரிய
தூறுமாயிரகோடியுங்கடுங்கணைநுழைய
ஆறுகீழ்ப்படவளறுபட்டழுந்தியவளக்கர்
சேறுதீந்தெழக்காந்தினசேடன்றன்சிரங்கள். (௨௪)

மொய்த்தமீன்குலமுதலறமுருங்கினமொழியில்
பொய்த்தசான்றவன்குலமெனப்பொருகணையெரிய
உய்த்தகூம்புடைநெடுங்கலமோடுவகடுப்பத்
தய்த்தவம்பொடுந்திரிந்தனசாலமீன்சாலம். (௨௫)

சிந்தியோடியகுருதிவெங்கனல்களேசெறிய
அந்திவானகங்கடுத்ததவ்வளப்பருமளக்கர்
பந்திபந்திகளாய்நெடுங்கடுங்கணைபடா
வெந்துதீந்தனகரிந்தனபொரிந்தனசிலமீன். (௨௬)

வய்யநாயகன்வடிக்கணைக்குடித்திடவற்றி
அய்யநீருடைத்தாய்மருங்கருங்கனன்மண்டக்
கய்கலந்தெரிகருங்கடல்காரகல்கடுப்ப
வெய்யநெய்யிடைவேவனவொத்தனசிலமீன். (௨௭)

குணிப்பருங்கொடும்பகழிகள்குருதிவாய்மடுப்பக்
கணிப்பரும்புனல்கடையுறக்குடித்தலிற்காந்து
மணிப்பருந்தடங்குப்பைகண்மறிகடல்வெந்து
தணிப்பருந்தழல்சொரிந்தனபோன்றனதயங்கி. (௨௮)

எங்கும்வெள்ளிடைமடுத்தலினிழுதுடையினமீன்
சங்கமுங்கறிகிழங்கெனவிடையிடைத்தழுவி
அங்கம்வெந்துபேரளற்றிடையடுக்கியகிடந்த
பொங்குநன்னெடும்புனலறப்பொரித்தனபோன்ற. (௨௯)

அதிரும்வெங்கணையொன்றையொன்றடர்ந்தெரியுய்ப்ப
வெதிரின்வன்னெடுங்கானெனவெந்தனமீனம்
பொதுவின்மன்னுயிர்க்குலங்களுந்துணிந்தனபொழிந்த
உதிரமுங்கடற்றிரைகளும்பொருவனவொருபால். (௩0)

அண்ணல்வெங்கணையறுத்திடத்தெறித்தெழுந்தளக்கர்
பண்ணைவெம்புனல்படப்படநெருப்பொடும்பற்றி
மண்ணில்வேருறப்பற்றியநெடுமரமற்றும்
எண்ணெய்தோய்ந்தனவெரிந்தெனகிரிக்குலமெல்லாம். (௩௧)

தெய்வநாயகன்றெரிகணைதிசைமுகத்தொருவன்
வைவிதாமெனப்பிழைப்பிலமனத்தினுங்கடுக
வெய்யவன்னெருப்பிடையிடைபொறித்தெழவெறிநீர்ப்
பொய்கைதாமரைபூத்தெனப்பொலிந்தனபுணரி. (௩௨)

செப்பின்மேலவர்சீறினுமதுசிறப்பாதல்
தப்புமேயதுகண்டனமுவரியிற்றணியா
வுப்புவேலையென்றுலகுறுபெரும்பழிநீங்கி
* அப்புவேலையாய்நிறைந்ததுகுறைந்ததோவளக்கர். (௩௩)

தாரையுண்டபேரண்டங்களடங்கலுந்தானே
வாரியுண்டருள்செய்தவற்கிதுவொருவலியோ
பாரையுண்பதுபடர்புனலப்பெரும்பரவை
நீரையுண்பதுநெருப்பெனுமப்பொருணிறுத்தான். (௩௪)

வேறு.

மங்கலம்பொருந்தியதவத்துமாதவர்
கங்குலும்பகலுமக்கடலுள்வைகுவா
ரங்கம்வெந்திலரவனடிகளெண்ணலால்
பொங்குவெங்கனலெனும்புனலிற்போயினர். (௩௫)

தென்றிசைகுடதிசைமுதலதிக்கெலாந்
துன்றியபெரும்புகைப்படலஞ்சுற்றலாற்

* அப்புவேலை - அம்புக்கடல்.

கன்றியகிறத்தனகதிரவன்பரி
நின்றனசென்றிலநெறியினீங்கின. (௩௬)

பிறிந்தவர்க்குறுபொருளுணரும்பெற்றியோர்
அறிந்திருந்தறிந்திலரனையராமெனச்
செறிந்ததம்பெடைகளைத்தேடித்தீக்கொள
மறிந்தனகரிந்தனவானப்புள்ளெலாம். (௩௭)

கமையறுகருங்கடல்கனலிகைபரந்
தமைவனவொத்தபோதறையவேண்டுமோ
சுமையுறுபெரும்புகைப்படலஞ்சுற்றலால்
* இமையவரிமைத்தனர்வியர்ப்புமெய்தினார். (௩௮)

பூச்செலாதவணடைபோலிலாமையால்
ஏச்செலாமெய்தியவன்னம்யாவையுந்
தீச்செலாநெறிபிறிதின்மையாற்றிசை
மீச்செலாபுனலவன்புகழின்வீந்ததால். (௩௯)

பம்புறுநெடுங்கடற்பறவையாவையு
மும்பரிற்செல்லலுற்றுருகிவீழ்ந்தன
வம்பரமம்பரத்தேகலாற்றல
விம்பரினுதிர்ந்தனவெரியுமெய்யன. (௪0)

பட்டனபடப்படப்படாதபுட்குலஞ்
சுட்டுவெந்தெரிக்குலப்படலஞ்சுற்றலா
லிட்டுழியறிகிலவிரியல்போவன
முட்டையென்றெடுத்தன † கடுத்தமுத்தெலாம். (௪௧)

வள்ளலைப்பாவிகாண்மனிதனென்றுகொண்
டெள்ளலுற்றறைந்தனமெண்ணிலாமென
வெள்ளிவெண்பற்களைக்கிழித்துவிண்ணுறத்
துள்ளலுற்றிரிந்தனகுரங்குசூழ்ந்தில. (௪௨)

தானெடுந்தீமைகளுடையதன்மையார்
மாநெடுங்கடலிடைமறைந்துவைகுவார்
தூநெடுங்குருதிவேலவுணர்துஞ்சினார்
மீநெடுங்கிரியெனமிதந்துவீங்கினார். (௪௩)

தசும்பிடைவிரிந்தனவென்னுந்தாரைய
பசும்பொனின்விமானங்களுருகிப்பாய்ந்தன
‡ அசும்பறவறந்தனவானவாறெலாம்
விசும்பிடைவிளங்கியமீனும்வெந்தவால். (௪௪)

* இமையவர்-தேவர். † கடுத்த-முட்டையையொத்த.
‡ அசும்பற - ஊற்றில்லாதாக.

செறிவுறுசெம்மையதீயையோம்புவ
நெறியுறுசெலவினதவத்தினீண்டன
வுறுசினமுறப்பலவுருவுகொண்டன
குறுமுனியெனக்கடல்குடித்தகூர்ங்கணை. (சரு)

மோதலங்கணைகடன்முழங்கத்தீயினூற்
பூதலங்காவொடுமெரிந்தபொன்மதில்
வேதலுமிலங்கையுமீளப்போயின
தூதன்வந்தானெனத்துணுக்கங்கொண்டதால். (சசு)

அருக்கனிலொளிவிடுமாடகக்கிரி
யுருக்கெனவுருகினவுதிரந்தோய்ந்தன
முருக்கெனச்சிவந்தனமுரியவெந்தன
கரிக்குவைநிகர்த்தனபவளக்காடெலாம். (சஎ)

பேருடைக்கிரியெனப்பெருத்தமீன்களு
மோரிடத்துயிர்தரித்தொதுங்ககிற்றில
நீரிடைப்புகுஞ்சிலநெருப்புநன்றெனப்
பாரிடைக்குதித்தனபதைக்குமெய்யென. (சஅ)

சுருள்கடற்றிரைகளைத்தொலையவுண்டனல்
பருகிடப்புனலிலபகழிபாரிட
மருள்கொளப்படர்வனநாகர்வைப்பையு
மிருள்கெடச்சென்றுளவிரவிபோல்வன. (சகூ)

கரும்புறக்கடல்களோடுலகங்காய்ச்சிய
விரும்புறச்செல்வனவிழிவகீழுற
வரும்புறத்தண்டத்தையுருவியப்புறம்
பெரும்புறக்கடலையுந்தொடர்ந்துபின்செல்வ. (ருO)

திடறிறந்துகுமணித்திரள்கள்சேணில
முடறிறந்துதிரம்வந்துகுவபோன்றன
கடறிறந்தெங்கணும்வற்றவக்கடல்
* குடறிறந்தனவெனக்கிடந்தகோளரா. (ருக)

ஆழியிற்புனலறமணிகளட்டிய
பேழையிற்பொலிந்தனபரவைபேதுறப்
பூழையிற்பொருகணையுருவப்புக்கன
மூழையிற்பொலிந்தன † முரலும்வெள்வளை. (ருஉ)

நின்றுநூறாயிரம்பகழிநீட்டலாற்
குன்றுநூறாயிரங்கோடியாயின

---

* குடறிறந்தனவென-குடல்வெளிப்பட்டாங்கு.
† முரலும்-ஒலிக்கின்ற.

சென்றுதேய்வுறுவரோபுலவர்சீறினு
மொன்றுநூறுயினவுவரிமுத்தெலாம். (ருங)

சூடுபெற்றையனேதொலைக்குமன்னுயிர்
வீடுபெற்றனவிடைமிடைந்தவேணுவின்
காடுபற்றியபெருங்கனலிகைபரந்
தோடியுற்றதுநெருப்புவரிநீரெலாம். (ருச)

காலவான்கடுங்கணைசுற்றுங்கவ்வலா
னீலவான்றுகிலினைநீக்கிப்பூநிறக்
கோலவான்களிநெடுங்கூறைசுற்றினள்
போலமாநிலமகள்பொலிந்துதோன்றினள். (ருரு)

கற்றவர்கற்றவருணர்வுகாண்கிலாக்
கொற்றவன்படைக்கலங்குடித்தவேலைவிட்
டுற்றுயிர்படைத்தெழுந்தோடலுற்றதால்
மற்றொருகடல்புகவடவைத்தீயரோ. (ருசு)

வாழியருலகினைவளைத்துவானுறச்
சூழிரும்பெருஞ்சுடர்ப்பிழம்புதோன்றலா
லூழியினுலகெலாமுண்ணவோங்கிய
வாழியிற்பொலிந்ததவ்வாழியன்னநாள். (ருஎ)

ஏனையரெண்ணவேறுலகினீண்டினு
ரானவர்செய்தனவறையவேண்டுமோ
மேனிமிர்ந்தெழுகனல்வெதுப்பமீதுபோய்
வானவர்மலரயனுலகின்வைகினர். (ருஅ)

* இடுக்கினியியம்புவலென்னையிவ்வழி
முடுக்குவென்வருணனையென்னமூண்டெழு
தடுக்கருங்வெகுளியான்சதுமுகன்படை
தொடுத்தனனமரருந்துணுக்கமெய்தினர். (ருகூ)

மழைக்குலங்கதறினவருணன்வாயுலர்ந்
தழைத்தனனுலகமுமடைத்தவாறெலாம்
இழைத்தனநெடுந்திசையாதும்யாரினிப்
பிழைப்பிலரென்பதோர்பெரும்பயத்தினல். (சுo)

வேறு.

அண்டமூலத்துக்கப்பாலாழியுங்கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கைசெப்பியென்றேவன்சென்னி

* இடுக்கு - வருத்தம்.

பண்டைநாளிருந்தகங்கைநங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகையிருந்தநீரும் * குளுகுளுகொதித்ததன்றே. (சுக)

இரக்கம்வந்தெதிர்ந்தகாலத்துலகெலாமீன்றுமீளக்
கரக்குநாயகனைத்தானுமுணர்ந்திலன்சீற்றங்கண்டும்
வரக்கருதாதுதாழ்த்தவருணனின்மாறுகொண்டா
ரரக்கரேயல்லரென்னாவறிஞருமலக்கணுற்றார். (சுஉ)

உற்றொருதனியேதானேதன்கணேயுலகமெல்லாம்
பெற்றவன்முனியப்புக்கானடுவினிப்பிழைப்பதெங்ஙன்
குற்றமொன்றிலாதோர்மேலுங்கோள்வரக்குறுகுமென்னா
மற்றையபூதமெல்லாம்வருணனைவைதமாதோ. (சுங)

இராமனெதிரே வருணனெய்துதல்.

எழுசுடர்ப்படலையோடுமிரும்புகையெழும்பியெங்கும்
வழிதெரிவறிவிலாதநோக்கினன்வருணனென்பா
னழுதழிகண்ணனன்பாலுருகியநெஞ்சனஞ்சித்
தொழுதெழுகையனெய்திற்றோன்றினன்வழுத்துஞ்சொல்லான். (சுச)

நீயெனைநினைந்ததன்மைநெடுங்கடன்முடிவின்றே
றாயினேனறிந்திலேனென்றண்ணலுக்கயிர்ப்புநீங்கக்
காயெரிப்படலைசூழ்ந்தகருங்கடற்றரங்கத்தூடே
தீயிடைநடப்பான்போலச்செறிபுனற்கிறைவன்சென்றான். (சுரு)

வந்தனனென்பமன்னோமறிகடற்கிறைவன்வாயிற்
சிந்தியமொழியன்றீந்தசென்னியன்றிகைத்தநெஞ்சன்
வெந்தழிந்துருகுமெய்யன்விழுப்புகைப்படலம்விம்ம
வந்தரினலமந்தஞ்சித்துயருழந்தலக்கணுற்றான். (சுசு)

நவையறுமுலகிற்கெல்லாநாயகநீயேசீறிற்
கவையநின்சரணமல்லாற்பிறிதொன்றுகண்டதுண்டோ
இவையுனக்கரியவோதானெனக்கெனவலிவேறுண்டோ
வவையநின்னவயமென்னாவடித்தடித்தரற்றுகின்றான். (சுஎ)

இராமனை வருணன் துதித்தல்.

ஆழிநீயனலுநீயேயல்லவையெல்லாநீயே
யூழிநீயுலகுநீயேயவற்றுறையுயிருநீயே
வாழியாயடியேனின்னைமறப்பனோவயங்குசெந்தீச்
சூழுறவுலைந்துபோனேன்காத்தருள்சுருதிமூர்த்தி. (சுஅ)

காட்டுவாயுலகங்காட்டிக்காத்தவைகடையிற்செந்தீ
யூட்டுவாயுண்பாய்நீயேயுனக்குமொண்ணாததுண்டோ

* கொளகொள என்றும்பாடம்.

நீட்டுவான்பகழியொன்றாலுலகங்களெவையுந்தீய
வீட்டுவாய்நினையினாயேற்கித்தனைவேண்டுமோதான். (௬௯)

சண்டவான்கிரணவாளாற்றயங்கிருட்காடுசாய்க்கு
மண்டிலத்துறையுஞ்சோதிவள்ளலேமறையின்வாழ்வே
பண்டைநான்முகனேயாதிச்சராசரத்துள்ளபள்ளப்
புண்டரீகத்துவைகும்புராதனாபோற்றிபோற்றி. (௭0)

கள்ளமாயுலகங்கொள்ளுங்கருணையான்மழையிற்கூறும்
எள்ளலாகாதமூலத்தியாதுக்குமுதலாயுள்ள
வள்ளலேகாத்தியென்றமாகரிவருத்தந்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும்புராதனாபோற்றிபோற்றி. (௭௧)

அன்னைநீயத்தனீயேயல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயேபேறுநீயிகழ்வுநீயே
யென்னைநீயிகழ்ந்ததென்றதெங்ஙனேயீசனாய
வுன்னைநீயுணராய்நாயேனெங்ஙனமுணர்வேனுன்னை. (௭௨)

பாயிருள்சீக்குந்தெய்வப்பரிதியைப்பழிக்குமாலை
மாயிருங்கரத்தான்மண்மேலடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற்பொறுப்பதுபெரியோர்மேற்றே
ஆயிரநாமத்தையாசரணமென்றடியில்வீழ்ந்தான். (௭௩)

இராமன் கோபமாறுதல்.

பருப்பதம்வேவதென்னப்படரொளிபடரானின்ற
உருப்பெறக்காட்டிநின்றுயானுனக்கபயமென்ன
அருப்பறப்பிறந்தகோபமாறினானுருவாற்றல்
நெருப்புறப்பொங்கும் * வெம்பானீருற்றதன்னநீரான். (௭௪)

ஆறினமஞ்சனுன்பாலளித்தனமபயமன்பால்
ஈறிலாவணக்கஞ்செய்தியாமிரந்திடவெய்தாதே
சீறுமாகண்டுவெந்ததிறத்தினைத்தெரிவதாகக்
கூறுநீயறியவென்றான்வருணனுந்தொழுதுகூறும். (௭௫)

பார்த்தனிற்பொறையின்மிக்கபத்தினிக்குற்றபண்பு
வார்த்தையினறிந்ததல்லாற்றேவர்பால்வந்திலேனால்
தீர்த்தநின்னாணையேழாஞ்செறிதிரைக்கடலின்மீனின்
போர்த்தொழில்விலக்கப்போனேனறிந்திலேன்புகுந்ததொன்றும். (௭௬)

என்றலுமிரங்கியையனித்திறநிற்கவிந்தப்
பொன்றலில்பகழிக்கப்பாலிலக்கமென்புகறியென்ன

* வெம்பால்-இனிமையானபால்.

நன்றெனவருணன்யானுமுலகமுநலிவுதீர்ந்தாம்
குன்றெனவுயர்ந்ததோளாய்கூறுவலென்றுகூறும். (௭௭)

இராமன் கணைக்குவருணன் இலக்குரைத்தல்.

மன்னவமருகாந்தாரமென்பதோர்தீவின்வாழ்வார்
அன்னவர்சதகோடிக்குமேலுளாரவுணராயோர்
இன்னவேயுலகமெல்லாந்தீந்தனவெனக்குந்தீயார்
மின்னுமிழ்கணையைவெய்யோர்மேற்செலவிடுதியென்றான். (௭௮)

நேடிநூறெறிந்துளோர்க்குமுணர்விற்குநிமிரநின்றோன்
கோடிநூறாயதீயவவுணரைக்குலங்களோடும்
ஓடிநூறென்றுவிட்டானோரிமையொடுங்காமுன்னம்
பாடிநூறாகநூறிமீண்டதப்பகழித்தெய்வம். (௭௯)

ஆய்வினையுடையராகியறம்பிழையாதார்க்கெல்லாம்
ஏய்வனநலனேயன்றியிறுதிவந்தடைவதுண்டோ?
மாய்வினையியற்றிமுற்றும்வருணன்மேல்வந்தசீற்றம்
தீய்வினையுடையார்மாட்டேதீங்கினைச்செய்ததன்றே. (௮௦)

பாபமேயியற்றினாரைப்பன்னெடுங்காதமோடித்
* தூபமேபெருகும்வண்ணமெரியெழச்சுட்டதன்றே
தீபமேயனையஞானத்திருமறைமுனிவன்செப்பும்
சாபமேயொத்ததம்புதருமமேவலியதம்மா. (௮௧)

மொழியுனக்கபயமென்றாயாதலான்முனிவுதீர்ந்தேன்
பழியெனக்காகுமென்றுபாதகர்பரவையென்னும்
குழியினைக்கருதிச்செய்த † குமண்டையைக்குறித்துநீங்க
வழியினைத்தருதியென்றான்வருணனைநோக்கிவள்ளல். (௮௨)

ஆழமுமகலந்தானுமளப்பரிதெனக்குமைய!
எழவையடுக்கின்றவலகுக்குமெல்லையில்லை
வாழியாய்வற்றிநீங்கில்வரம்பிலகாலமெல்லாம்
தாழுநின்சேனையுள்ளந்தளர்வுறுந்தவத்தின்மிக்காய். (௮௩)

கல்லெனவலித்துநிற்பிற்கணக்கிலவுயிர்களெல்லாம்
ஒல்லையினுலந்துவீயுமிட்டதொன்றொழுகாவண்ணம்
எல்லையில்காலமெல்லாமேந்துவெனெளிதினெந்தாய்
செல்லுதிசேதுவென்றொன்றியற்றியென்சிரத்தின்மேலாய். (௮௪)

* தூபம்-புகை. † குமண்டையை-குற்றத்தினை.

நன்றிதுபுரிதுமன்றேநளிகடற்பெருமைநம்பால்
இன்றிதுதீருமென்னிலெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேதுகுயிற்றுதிரென்றுகூறிச்
சென்றனனிருக்கைநோக்கிவருணனுமருளிற்சென்றான். (௮௫)

௬ - வது, வருணனைவழிவேண்டுபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௬௧௧.

---

௭ - வது, சேதுபந்தனப்படலம்.

அளவறுமறிஞரோடரக்கர்கோமகற்
கிளவலுமினிதுடனிருக்க * வெண்ணினான்
விளைவனசெய்வனமுடிக்கவேண்டுவான்
நளன்வருகென்றனன்கவிக்குநாயகன். (௧)

வந்தனன்வானரத்தச்சன்மன்னநின்
சிந்தனையென்னெனச்செறிதிரைக்கடல்
பந்தனைசெய்குதல்பணிநமக்கென
நிந்தனையிலாதவன்செய்யநேர்ந்தனன். (௨)

காரியங்கடலினையடைத்துக்கட்டலே
சூரியன்காதலேசொல்லியென்பல
மேருவுமணுவுமோர்வேறுருவகை
ஏருறவியற்றுவென்கொணர்தியென்றனன். (௩)

இளவலுமிறைவனுமிலங்கைவேந்தனும்
அளவறுநங்குலத்தரசுமல்லவர்
வளைதருங்கருங்கடலடைக்கவம்மெனத்
† தளமலிசேனையைச்சாம்பன்சாற்றினான். (௪)

கருவரைகாதங்கள்கணக்கிலாதன
இருகையிற்றோள்களிற்சென்னியேந்தின
ஒருகடலடைக்கமற்றொழிந்தவேலைகள்
வருவெனவாமெனவந்தவானரம். (௫)

---

* எண்ணினான் - ஆலோசனைசெய்தான்.

† தளமலி - கூட்டத்தின்மிகுந்த.

பேர்த்தனமலைசிலபேர்க்கபேர்க்கநின்
றீர்த்தனசிலசிலசென்னியேந்தின
தூர்த்தனசிலசிலதூர்க்கதூர்க்கநின்
றூர்த்தனசிலசிலவாடிப்பாடின. (௬)

காலிடையொருமலையுருட்டிக்கைகளின்
மேலுடைமலையினைவாங்கிவிண்டொடும்
சூலிடைமழைமுகில்சூழ்ந்துசுற்றிய
வாலிடையொருமலையீர்த்துவந்தவால். (௭)

முடுக்கினன்றருகெனமூன்றுகோடியர்
எடுக்கினுமம்மலையொருகையேந்தியிட்
டடுக்கினன்றன்வலிகாட்டியாழியை
நடுக்கினனளனெனுநவையினீங்கினான். (௮)

மஞ்சினிற்றிகழ்தருமலையைமாக்குரங்
கெஞ்சுறக்கடிதெடுத்தெறியவேநளன்
* விஞ்சையிற்றாங்கினன்சடையன்வெண்ணெயில்
தஞ்சமென்றோர்களைத்தாங்குந்தன்மைபோல். (௯)

சயக்கவிப்பெரும்படைத்தலைவர்தாள்களால்
முயற்கறைமதிதவழ்முன்றிற்குன்றுகள்
அயக்கலின்முகிற்குலமலறியோடின
இயக்கருமகளிருமிரியல்போயினார். (௧௦)

வேருடைநெடுங்கிரிதலைவர்வீசின
ஓரிடத்தொன்றின்மேலொன்றுசென்றுக
நீரிடைநிமிர்பொறிபிறக்கநீண்டவி
தாருடைநெருப்பெனவருணனஞ்சினான். (௧௧)

ஆனிறக்கண்ணனென்றொருவனங்கையால்
கானிறமலைகொணர்ந்தெறியக்கார்க்கடல்
நூனிறமுத்தினந்துவலையோடும்போய்
வானிறைமீனொடுமாறுகொண்டவே. (௧௨)

சிந்துரத்தடவரையெறியச்சேணிடை
முந்துறத்தெறித்தெழுமுத்தந் † தொத்தலால்
அந்தரத்தெழுமுகிலாடையாவகண்
பந்தரொத்ததுநெடும்பரிதிவானமே. (௧௩)

வேணுவினெடுவரைவீசமீமிசை
சேணுறுதிவலையானனைந்தசெந்துகில்

---

* விஞ்சை - தான்கற்றசிற்பவித்தை.
† தோற்றலால் - என்றும்பாடம்.

பூணுறுமல்குலிற்பொருந்திப்போதலால்
நாணினர்வானவர்நாட்டுநங்கைமார். (கச)

தேனிவர்தடவரைதிரைக்கருங்கடல்
தாணிமிர்தரவிடைகுவியத்தள்ளுநீர்
மேனிமிர்திவலைமீச்சென்றுமீடலால்
வானவர்நாட்டினுமழைபொழிந்தவால். (கரு)

வேறு.

மய்யுறுமலைகளோடுமெறிகடல்வந்துவீழ்ந்த
வெய்யவாய்மகரம்பற்றவெருவினவிளைப்பமேனாள்
பொய்கையினிடங்கர்கவ்வப்புராதனுபோற்றியென்று
கய்யெடுத்தழைத்தயானைபோன்றனகளிநல்யானை. (கசு)

அசும்புபாய்தேனும்பூவுமாரமுமகிலுமற்றும்
விசும்பெலாமுலவுந்தெய்வவேரியின்மிடைந்துவிம்மத்
தசும்பெலாம்வாசமூட்டிச்சார்த்தியதண்ணீரென்னப்
பசும்புலாறுறும்வேலைபரிமளங்கமழ்ந்ததன்றே. (கஎ)

தேமுதற்கனியுங்காயுந்தேனிறாலுந்தெய்வப்
பூமுதலாயவெல்லாமீன்கொளப்பொலிந்தவன்றே
மாமுதற்றருவோடாக்கும்வானுயர்மானக்குன்றம்
தாமுதலோடுங்கெட்டாலொழிவரோவண்மைதக்கோர். (கஅ)

மண்ணுறச்சேற்றுட்புக்குச்சுரிகின்றமாலைக்குன்றம்
கண்ணிறைபோதுங்காயுங்கனிகளும்பிறவுங்கவ்வி
வெண்ணிறமீன்களெல்லாம்வறியவரென்னமேன்மேல்
உண்ணிறைசெல்வநல்காதொளிக்கின்றவுலோபரொத்த. (ககூ)

கறங்கெனத்திரியும்வேகக்கவிக்குலங்கதுவவாங்கிப்
பிறங்கிருங்கடலிற்பெய்தபோழ்தத்தும்பெரியபாந்தள்
மறங்கிளர்மானயானைவயிற்றினவாகவாய்சோர்ந்
துறங்கினகேடுற்றாலுமுணர்வரோவுணர்விலாதார். (உ0)

இழையெனத்தகையபின்னினெயிற்றினமுழக்கமெய்தப்
புழையுடைத்தடக்கையொன்றோடொன்றிடைபொருந்தச்சுற்றிக்
கழையுடைக்குன்றின்முன்றிலுருமொடுகலந்தகால
மழையெனப்பொருதவேலைமகரமுமத்தமாவும். (உக)

பொன்றினசிறியவாயபுண்ணியம்புரிந்தோர்போலக்
குன்றுகள்குரக்குவீரர்குவித்தனர்நெருப்புக்கோப்ப
ஒன்றின்மேலொன்றுவீழவுகைத்தெழுந்தும்பர்நாடு
சென்றமேலிடம்பெறாதுதிரிந்தனசிகரச்சில்லி. (உஉ)

கூறுடையெயிற்றுக்கோண்மாச்சுறவினமெறிந்துகொல்லப்
பேருடையரியும்வெய்யபுலிகளும்யாளிப்போத்தும்
நீரிடைத்தோற்றவன்றேதங்கிலைநீங்கிற்றென்றால்
ஆரிடைத்தோலார்மேலோரறிவிடைநோக்கினம்மா. (௨௩)

ஒள்ளியவுணர்வுகூடவுதவலரெனினுமொன்றோ
வள்ளியராயோர்செல்வமன்னுயிர்க்குதவுமன்றே
துள்ளினகுதித்தமானத்தும்பர்தங்குவட்டிற்றூங்கும்
கள்ளினைநிறையமாந்திக்கவியெனக்களித்தமீன்கள். (௨௪)

மூசெரிபிறக்கமீக்கொண்டிறக்கியமுடுக்கந்தன்னால்
கோசொரிநறவமென்னத்தண்புனலுகுக்குங்குன்றின்
வேசொரிமுத்துக்கம்மாவிருந்துசெய்திருந்தவீண்ட
வாய்சொரியிப்பியோடும்வலம்புரியுமிழ்ந்தமுத்தம். (௨௫)

வேறு.

விண்டலந்தொடுமால்வரைவேரொடும்
கொண்டலங்கொளவீரர்குவித்தலால்
திண்டலங்கடலானதுநீர்செல
மண்டலங்கடலாகிமலிந்ததே. (௨௬)

அய்யன்வேண்டினதுவிதுவாமன்றே
வெய்யசீயமும்யாளியும்வேங்கையும்
மொய்கொள்குன்றின்முதலினமொய்த்தலால்
நெய்தல்வேலிகுறிஞ்சிநிகர்த்ததால். (௨௭)

யானுற்றனவிங்கிவையென்னவே
தீனுற்றனவென்னிதுசெய்யுமே
மானுற்றதிரைக்கடல்வாழ்தரு
மீனுற்றனவில்லைவிலங்கரோ. (௨௮)

வவ்விலங்குவளத்தவர்மாட்டருள்
செவ்விலங்கலில்சிந்தையர்தீர்வரோ
இவ்விலங்கல்விடேமினியென்பபோல்
எவ்விலங்கும்வந்தெய்தினவேலையே. (௨௯)

கனிதருந்நெடுங்காய்தருநாடொறும்
இனிதருந்தவநோய்தினியற்றலால்
பணிதருங்கிரிதம்மனம்பற்றறு
முனிவரும்முனியார்முடிவுன்னுவார். (௩௦)

புலையின்வாழ்க்கையரக்கர்பொருப்புளார்
தலையின்மேல்வைத்தகையினர்சாற்றுவார்

மலையிலேமற்றுமாரினிவாழ்வதோர்
நிலையிலேமென்றிலங்கைநெருக்குவார். (௩௧)

முழுக்கநீரிற்புகாமுழுகிச்செலாக்
குழுக்களோடணைசோளரியாலிகள்
இழுக்கில்பேரணையின்னிருபக்கமும்
ஒழுக்கின்மாலைவகுத்தனவொத்தவால். (௩௨)

பளிக்குமால்வரைமுந்துபடுத்தன
ஒளிக்குமாழிகிடந்தனவோர்கிலர்
வெளிக்குமால்வரைவேண்டுமெனக்கொணர்ந்
தளிக்கும்வானரவீரரனேகரால். (௩௩)

பாரினுண்முதுகுந்நெடும்பாழ்பட
மூரிவானரம்வாங்கியமொய்ம்மலை
வேரினுமென வெம்முழையினுழை
சோருநாகநிலனுறத்தூங்குமால். (௩௪)

அருணச்செம்மணிக்குன்றயலேசில
இருணற்குன்றமடுச்சினவேய்ந்தன
கருணைக்கொண்டல்வறியன்கழுத்தென
வருணற்கீந்தவருணசரத்தையே. (௩௫)

எய்ந்ததம்முடம்பிட்டவுயிர்க்கிடம்
ஆய்ந்துகொள்ளுமறிஞரினாழ்கடல்
பாய்ந்தபண்டுறையும்மலைப்பாந்தள்கள்
போந்தமாமலையின்முழைபுக்கவே. (௩௬)

சேதுவின்பெருமைகிணைசெப்பவோர்
எதுவேண்டுமென்றெண்ணுவதென்கொலோ
* தூதனிட்டமலையின்றுவலையால்
மீதுவிட்டுலகுற்றனமீன்களும். (௩௭)

நீலநிட்டநெடுவரைநீணில
மூலமுட்டலின்மொய்புனல்கைம்மிகக்
† கூலமிட்டியவார்கலிகோத்ததால்
ஓலமிட்டெழுந்தோடியுலகெலாம். (௩௮)

மயிந்தனிட்டநெடுவரைவானுற
உயர்ந்துமுட்டிவிழவெழுந்தோதநீர்
‡ தியந்தமுட்டத்திசைநிலையானையும்
பெயர்ந்துவிட்டவையாவும்பிளிறுவ. (௩௯)

---

* தூதன் - அனுமான்.

† கூலம் - கரை. ‡ தியந்தம் - திகந்தம்.

இலக்குவன்சரமாயினுமென்றெதிர்
விலக்கினும்விலங்காதவிலங்கலால்
அலக்கணெய்தியமிழ்ந்தெழ * வாழியைக்
கலக்கினான்மகன்மீளக்கலக்கினான். (சுo)

மருத்தின்மைந்தன்மணிநெடுந்தோளனப்
பெருத்தகுன்றங்கரடிப்பெரும்படை
விருத்தனிட்டவிசையினின்வீசிய
திருத்தம்வானவர்சென்னியிற்சென்றதால். (சக)

குமுதனிட்டகுலவரைகூத்தரின்
திமிதமிட்டுத்திரையுந்திரைக்கடல்
துமிதமூர்புகவானவர்துள்ளினார்
அமிதமின்னுமெழுமெனுமாசையால். (சஉ)

கனசினைத்துருமிற்கடுங்கார்வரை
பனசனிட்டனயாவும்பரிக்கிலன்
மனசினைத்தவனந்தனவ்வாழ்விகந்
தனசினைத்தொழின்மேற்கொள்வதாயினான். (சங)

எண்ணிலெண்ணினமிட்டகிரிக்குலம்
உண்ணவுண்ணச்சென்றான்றிறோடொன்றுறச்
சுண்ணநுண்பொடியாகித்தொலைந்தன
புண்ணியம்பொருந்ாதமுயற்சிபோல். (சச)

ஆரவாயிரயோசனையாழமுந்
தீரநீண்டபெருந்ததிமிங்கிலம்
பாரமால்வரையேறப்பதைத்துடல்
பேரவேகுன்றும்வேலையும்பேர்ந்தவால். (சரு)

குலைகொளக்குறிநோக்கியகொள்கையான்
சிலைகளொக்கமுறித்துச்செறித்தநேர்
மலைகளொக்கவடுக்கிமணற்படத்
தலைகளொக்கத்தடவுந்தடக்கையால். (சசு)

தழுவியாயிரகோடியதாங்கிய
குழுவின்வானரந்தந்தகிரிக்குலம்
எழுவினீள்கரத்தெற்றிடவிற்றிடை
வழுவிவீழ்வனகால்களின்வாங்குவான். (சஎ)

மலைசுமந்துவருவனவானரம்
நிலையினின்றனசெல்லநிலம்பெரு

---

* ஆழியை - பாற்கடலை.

அலைநெடுங்கடலன்றியுமாண்டுத்தந்
தலையின்மேலொருசேதுதருவ * போன்ம். (சஅ)

பருத்தமால்வரையேந்தியபல்படை
நிரைத்தலிற்சிலசெல்லநிலம்பெருக்
கரத்தினேந்தியகார்வரைகண்ணகன்
சிரத்தின்மேற்கொண்டுநீந்தினசென்றவால். (சகூ)

ஆய்ந்துநீளமரிதுசுமந்தன
ஓய்ந்தகாலபசியினுலந்தன
ஏந்துமால்வரைவைத்தவற்றீண்டுதேன்
மாந்திமாந்திமறந்துதுயின்றவால். (ருo)

போதல்செய்குநரும்புகுவார்களும்
மாதிரந்தொறும்வானரவீரர்கள்
சேதுவெத்துணைசென்றதென்பார்சிலர்
பாதிசென்றதெனப்பகர்வார்சிலர். (ருக)

குறைவில்குங்குமமுங்குகைத்தேன்களும்
நிறைமலர்க்குலமுந்நிறைந்தெங்கணும்
துறைதொறுங்கிரிதூங்கினதோய்தலால்
† நறைநெடுங்கடலொத்ததுநாமநீர். (ருஉ)

நெடும்பன்மால்வரைதூர்த்துநெருக்கவும்
‡ துடும்பல்வேலைதுளங்கியதில்லையால்
இடும்பையெத்தனையும்படத்தெய்தினும்
குடும்பந்தாங்குங்குடிப்பிறந்தாரினே. (ருங)

கொழுந்துடைபவளக்கொடியின்குலம்
அழுந்தவுய்த்தவடுக்கநகர்ந்தயல்
விழுந்தபன்மணியின்னொளிமீமிசை
எழுந்தவெங்கணுமிந்திரவில்லினே. (ருச)

பழுமரம்பறிக்கப்பறவைக்குலம்
தழுவிநின்றொருவன்றனிதாங்குவான்
விழுதலும்புகல்வேற்றிடமின்மையால்
அழுதரற்றுங்கிளையெனவானவால். (ருரு)

தாவலோவலமென்றதுதாங்கிய
மாவெலாங்கடல்வீழ்தலும்வண்டெலாம்

---

* போன்ம் - போலும்.
† நறைநெடுங்கடல்-தேனினையுடையநெடிசமுத்திரம்.
‡ துடும்பல் - துளும்பல்.

காவலாளாவிழக்களைகண்ணிலா
ஏவலாளரினெங்குந்திரிந்தவால். (ருசு)

தொக்கடங்கலவோடுந்துவலைகள்
மிக்கடங்கலும்போவனமீன்குலம்
அக்கருங்கடறூரவயற்கடற்
புக்கடங்கிடப்போவனபோன்றவே. (ருஎ)

மூசுவண்டினமும்மதயானையின்
ஆசைகொண்டனபோற்றொடர்ந்தாடின
ஓசையொண்கடல்குன்றொடவைபுக
வேசைமங்கையராமெனமீண்டவே. (ருஅ)

நிலமரங்கியவேரொடுநேர்பறித்
தலமருந்துயரெய்தியவாயினும்
வலமரங்களைவிட்டிலமாசிலாக்
குலமடந்தையரென்னக்கொடிகளே. (ருகூ)

* துப்புறக்கடறாயதுவலையால்
அப்புறக்கடலுஞ்சுவையற்றன
எப்புறத்துருமேறுங்குளிர்ந்தன
உப்புறைததனமேகமுகுத்தநீர். (சு0)

மூதிர்நெடுங்கிரிவீழமுழங்குநீர்
எதிரெழுந்துநிரந்தரமெய்தலால்
மதியவன்கதிரிற்குளிர்வாய்ந்தன
கதிரவன்கனல்வெங்கதிர்க்கற்றையே. (சுக)

நன்கொடித்துநறுங்கிரிசிந்திய
† பொன்கொடித்துவலைப்பொதிந்தோடுவ
வன்கொடிப்பவளங்கள்வயங்கலால்
மின்பொடித்ததுபோன்றனவிண்ணெலாம். (சுஉ)

ஓடுமோட்டருமொன்றின்முன்னொன்றுபோய்க்
காடுநாடுமரங்களுங்கற்களும்
நாடுநாட்டுநெளிர்கடனூட்டிலோர்
‡ பூடுமொட்டவிலாயபொருப்பரோ. (சுங)

வரைப்பரப்பும்வனப்பரப்பும்மூவர்த்
தரைப்பரப்புவதென்னத்தனித்தனி
உரைப்பரப்புமுறுகிரியொண்கவிக்
கரைப்பரப்புக்கடற்பரப்பானதால். (சுச)

---

* துப்புறக்கடல்-பவளக்கொடிகளையுடையவக்கடல்.
† பொன்கொடி-பொன்மயமானகொடி.
‡ பூடு—சிறுசெடி.

உற்றதாலணையோங்கலிங்கையை
முற்றமூன்றுபகலிடைமுற்றவும்
பெற்றவார்ப்புவிசும்புபிளந்ததால்
மற்றிவானம்பிறிதொருவான்கொலோ. (௬௫)

நாடுகின்றதென்வேறென்றுநாயகன்
தோடுசேர்குழலாடுயர்நீக்குவான்
ஓடுமென்முதுகிட்டெனவோங்கிய
சேடனென்னப்பொலிந்ததுசேதுவே. (௬௬)

மெய்யினீட்டத்திலங்கையர்மேன்மகள்
பொய்யினீட்டியதீமைபொறுக்கலா
தய்யனீட்டியசேனைகண்டன்பினால்
கையைநீட்டியதன்மையுங்காட்டுமால். (௬௭)

கானயாறுபரந்தகருங்கடல்
ஞானநாயகன்சேனைநடத்தலால்
ஏனையாறினியானலதாரென
வானயாறிம்பர்வந்ததுமானுமால். (௬௮)

* கற்கிடந்தொளிர்காசினங்காந்தலால்
மற்கடங்கள்வகுத்தவயங்கணை
எற்கடந்தவிருளிடையிந்திரன்
விற்கிடந்தனவென்னவிளங்குமால். (௬௯)

ஆனபேரணையன்பினமைத்தனர்
ஞானவாழ்க்கைக்கவிக்குலநாதனும்
மானவேலையிலங்கையர்மன்னனும்
ஏனையோருமிராமனையெய்தினர். (௭௦)

எய்தயோசனையீண்டொருநூறிவை
ஐயிரண்டினகலமமைந்திடச்
செய்ததாலணையென்றதுசெப்பினர்
வய்யநாதன்சரணம்வணங்கியே. (௭௧)

ஏ - வது, சேதுபந்தனப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௬௯௧.

---

* கற்கிடந்து-மணிகள்தங்கி.

அ-வது, ஒற்றுக்கேள்விப்படலம்.

இராமன் நளனைக் கட்டித்தழுவியது கூறல்.

ஆண்டகையுமன்பினொடுகாதலமிழ்தூற
நீண்டகையினனளனைநெஞ்சினொடுபுல்லி
ஈண்டவெழுகென்றனனிழைத்தபடியெல்லாம்
காண்டலதன்மேனெடியகாதன்முதிர்கின்றான். (க)

பண்டையுறையுட்கெதிர்படைக்கடலின்வைகும்
கொண்டலெனவந்தவணையைக்குறுகிநின்றான்
அண்டமுதல்வனொருதனுவியனையாளைக்
கண்டனெனப்பெரியகாதன்முதிர்கின்றான். (உ)

இராமன் நளனைப்புகழ்தல்.

நின்றுநெடிதுன்னியநிரைக்கடனிரம்பக்
குன்றுகொடடைத்தணைகுயிற்றியதொர்கொள்கை
அன்றுலகுதந்தமுதலந்தணனமைத்தான்
என்றபொழுதின்கணுமிதென்றி * யலுமென்றான். (ங)

ஊழிமுதனாயகன்வியப்பினொடுவந்தான்
ஆழமுரைசெய்யுமளவேயினியதொன்றோ
ஆழியிலிலங்கைபெரி † தத்திசையதாமேல்
எழுகடலுங்கடிதடைப்பனிவனென்றான். (ச)

என்றுநளனைக்கருணையிற்றழுவியன்பால்
அன்றுவருணன்னுதவுமாரமுமளித்துத்
துன்றுகதிர்பொற்கலனுமற்றுளதொகுத்தே
வென்றியினியென்றுபடையோடுடன்விரைந்தான். (ரு)

இராமன் சேதுவிற்செல்லுதல்.

நெற்றியிலரக்கர்பதிசெல்லநிறைநன்னூல்
கற்றுணருமாருதிகடைக்குழைவரத்தன்
வெற்றிபுணர்தம்பியொருபின்புசெலவீரப்
பொற்றிரள்புயக்கருநிறக்களிறுபோனான். (சு)

இருங்கவிகொள்சேனைமணியாரமிடறத்தன்
மருங்குவளர்தண்டலைவயங்குதிரைமான
ஒருங்குநனிபோயினவுயர்ந்தகரையூடே
கருங்கடல்புகப்பெருகுகாவிரிகடுப்ப. (எ)

---

* இயலும் - முற்றும்.
† அத்திசையதாமேல்-அந்ததூரதிசையிலிருப்பதானால்.

ஓதியகுறிஞ்சிமுதலாயநிலமுள்ள
கோதிலவருந்துவனகொள்ளையின்முகந்துற்
றியாதுமொழியாவகைசுமந்துகடலெய்தப்
போதலுறுமன்னபடைபொன்னியெனலான. (அ)

ஆயதுநெருங்கவடியிட்டடியிடாமல்
தேயுநெறிமாடுதிரையூடுவிசைசெல்லப்
போயசிலபொங்குதொறுபொங்குதொறு * பூசற்
பாய்புரவியிற்படர்வபோலினிதுபாய்வ. (கூ)

மெய்யிடைநெருங்க † விசையுற்றவயல்வீழும்
‡ பொய்யிடமிலாதபுனலிற்புகலிலாத
உய்விடமளிக்குமருளாளர்முறையுய்த்தார்
கய்யினிடைசென்றுகரைகண்டகரையில்லை. (கo)

§ இழைத்தனையவெங்கதிரின்வெஞ்சுடரிராமன்
மழைத்தமுகிலன்னமணிமேனிவருடாமல்
தழைத்தநிழலுற்றகுளிர்சந்தனமுயர்ந்த
அழைத்தவையெடுத்தருகுசென்றனரனேகர். (கக)

ஓமநெறிவாணர்மறைவாய்மையொருதாமே
ஆமரசர்மைந்தர்திருமேனியலசாமே
பூமரனிறுத்தவைபொருத்துவபொருத்திச்
சாமரையின்வீசினர்படைத்தலைவர்தாமே. (கஉ)

இராமனக்கரையடைதல்.

மருங்கடவளர்ந்தமுலைமங்கைமணமுன்னா
வருங்கடசமங்கையினில்வள்ளனினைகின்றான்
ஒருங்கடலுயர்ந்தபடர்தானையொடுமோதத்
திருங்கடல்கடந்துகரையேறினனிராமன். (கங)

பெருந்தவமுயன்றமரர்பேணியதவத்தால்
மருந்தனையதம்பியொடும்வன்றுணைவரோடும்
அருந்ததியும்வந்தனைசெயஞ்சொலிளவஞ்சி
இருந்தநகரின்புறனொர்குன்றிடையிறுத்தான். (கச)

வேறு.

நீலனைநெடிதுநோக்கிநேமியோன்விரையநீநம்
பால்வருசேனைக்கெல்லாமிழைத்தியாற்பாடியென்னாக்
கால்வரைவணங்கிப்போனான்கல்லினாற்கடலைக்கட்டி
நூலுரைவழிசெய்தானுக்கந்நிலைநொய்திற்சொன்னான். (கரு)

---

* பூசல் - போர்.
† வடியிட்டடியிடாமல் எனப் பாடமுமுண்டு.
‡ பொய்யிடம் - வெற்றிடம்.
§ இழைத்தனைய - பதித்துவைத்தாற்போன்ற.

பொன்னினுமணியினாலுநான்முகன்புனைந்தபொற்பின்
நன்னலமாகவாங்கிநான்முகச்சதுரநாட்டி
இன்னரென்னாதவண்ணமிறைவர்க்கும்பிறர்க்குமெல்லாம்
நன்னகர்நொய்திற்செய்தான்றனையுநாளுட்கொண்டான். (௧௬)

வில்லினார்க்கிருக்கைசெய்யும்விருப்பினாற்பொருப்பின்வீங்கும்
கல்லினாற்கல்லையொக்கக்கடாயினான்கழைகளான
* நெல்லினாலலக்குங்காலுநிரப்பினான்றருப்பையென்னும்
புல்லினாற்றொடுத்துவாசப்பூவினால்வேய்ந்துபோனான். (௧௭)

வாயினுமனத்தினாலும்வாழ்த்திமன்னுயிர்கட்கெல்லாம்
தாயினுமன்பினானைத்தாளுறவணங்கித்தத்தம்
எயினவிருக்கைநோக்கியெண்டிசைமருங்கும்யாரும்
போயினர்பன்னசாலையிராமனுநொய்திற்புக்கான். (௧௮)

பப்புநீராயவீரர்பருவரைகடலிற்பாய்ச்சத்
துப்புநீராயதூயசுடர்களுங்கறுக்கவந்திட்
டுப்புநீரகத்துட்டோய்ந்தவொளிநிறம்விளங்கவப்பால்
அப்புநீராடுவான்போலருக்கனுமத்தஞ்சேர்ந்தான். (௧௯)

மாலுறுகுடகவானின்வயங்கியவந்துதோன்றும்
பாலுறுபசுவெண்டிங்கள்பங்கயநயனத்தண்ணல்
† மேலுறுபகழிவாங்கிவெகுண்டனன்விரைவின்வந்த
காலுறவளைத்தகாமன்வில்லெனக்காட்டிற்றன்றே. (௨௦)

நூற்றிதழ்க்கமலந்தந்தநண்ணறுஞ்சுண்ணமுண்ணத்
தேற்றிமென்பனிநீர்தோய்ந்தசீகரத்தென்றலென்னும்
காற்றினுமாலையானகனலினுங்காமவாளிக்
கூற்றினும்வெம்மைகாட்டிக்கொதித்ததக்குளிர்வெண்டிங்கள். (௨௧)

‡ செயிர்ப்பினுமழகுசெய்யுந்திருமுகத்தணங்கைத்தீர்ந்து
துயிற்சுவைமறந்தான்றோளிற்றாய்நிலாத்தவழுந்தோற்றம்
மயிற்குலம்பிரிந்ததென்னமரகதமலைமேன்மெள்ள
உயிர்ப்புடைவெள்ளைப்பிள்ளைவாளராவூர்வபோன்ற. (௨௨)

மன்னெடுநகரமாடேவருதலால்வயிரச்செங்கைப்
பொன்னெடுந்திரடோளையன்மெய்யுறப்புழுங்கிநைந்தான்
பன்னெடுங்காதத்தேயுஞ்சுடவல்லபவளச்செவ்வாய்
அந்நெடுங்கருங்கட்டையலையணுகினாற்றணிவதுண்டோ. (௨௩)

இற்றதுகாலமாகவிலங்கையர்வேந்தனேவ
ஒற்றர்வந்தளவுநோக்கிக்குரங்கெனவுழல்கின்றாரைப்

---

* நெல் - மூங்கில்.
† மேல் - மீது.
‡ செயிர்ப்பினும் - கோபங்கொண்டாலும்.

பற்றினனென்பமன்னோபண்டுதான்பலநாட்செய்த
நற்றவப்பயன்றந்துய்ப்பமுந்துறப்போந்த * நம்பி. (௨௪)

பேர்வுறுகவியின்சேனைப்பெருங்கடல்வெள்ளந்தன்னுள்
தீர்வுறுமனத்தனாகியொற்றரையுணர்ந்துகொண்டான்
சேர்வுறுபாலின்வேலைசிறுதுளிதெரித்தவேனும்
நீரினைவேறுசெய்யுமன்னத்தினீரனானான். (௨௫)

பெருமையுஞ்சிறுமைதானுமுற்றுறுபெற்றியாற்ற
அருமையினகன்றுநீண்டவிஞ்சையுளடங்கித்தாமும்
உருவமுந்தெரியாவண்ணமொளித்தனருறையுமாயத்
† திருவரையொருங்குகாணும்யோகியுமென்னலானான். (௨௬)

கூட்டியவிறற்றிண்கையாற்குரங்குகளிரங்கக்குத்தி
மீட்டொருவினைசெய்யாமன்மாணையின்கொடியால்வீக்கிப்
பூட்டியகையர்வாயாற்குருதியேபொழிகின்றாரைக்
காட்டினன்கள்வனொன்றாக்கருணையங்கடலுங்கண்டான். (௨௭)

பாம்பிழைப்பள்ளிவள்ளல்பகைஞரென்றுணரான்பல்லோர்
நோம்பிழைசெய்தகொல்லோகுரங்கெனவிரங்கிநோக்கித்
தாம்பிழைசெய்தாரேனுந்தஞ்சமென்றடைந்தோர்தம்மை
நாம்பிழைசெய்யலாமோநலிந்திடல்விடுதியென்றான். (௨௮)

அகனுறப்பொலிந்தவள்ளல்கருணையாலழுதகண்ணன்
நகனிறைகானின்வைகுநம்மினத்தவருமல்லர்
தகநிறைவில்லாவுள்ளத்திராவணன்றந்தவொற்றர்
சுகனிவனவனுஞ்சாரனென்பதுந்தெரியச்சொன்னான். (௨௯)

கல்விக்கண்மிக்கோன்சொல்லக்கருமனநிருதக்கள்வர்
வல்விற்கைவீரமற்றிவ்வானரர்வலியைநோக்கி
வெல்விக்கையரிதென்றெண்ணிவினையத்தாலெம்மையெல்லாம்
கொல்விக்கவந்தான்மெய்ம்மைகுரங்குநாங்கொள்கவென்றார். (௩௦)

‡ கள்ளரேகாண்டியென்னுமந்திரங்கருத்துட்கொண்டான்
தெள்ளியதெரிக்குந்தெவ்வர்தீர்வினைசேர்தலோடும்
§ துள்ளியினிரதந்தோய்ந்துதொன்னிறங்கரந்துவேறாய்
வெள்ளியோடிருந்தசெம்புமாமெனவேறுபட்டார். (௩௧)

மின்குலாமெயிற்றராகிவெருவந்துவெற்பினின்ற
வன்கணார்தம்மைநோக்கிமணிநகைமுறுவறோன்றப்

---

* நம்பி - விபீடணன்.
† இருவரை - சீவேசுரர்களாகிய இருவரை.
‡ கள்ளரே - அரக்கரே.
§ துள்ளியினிரதம் - துளியானபாதரசம்.

புன்கணார்புன்மைநீக்கும்புரவலன்போந்ததன்மை
என்கொலாந்தெரியவெல்லாமியம்புதிரஞ்சலென்றான். (௩௨)

தாய்தெரிந்துலகுகாத்ததவத்தியைத்தன்னைக்கொல்லும்
நோய்தெரிந்துணரான்றேடிக்கொண்டன * நுவலவென்று
வாய்தெரிந்துணராவண்ணங்கழறுவார்வணங்கிமாய
வேய்தெரிந்துரைக்கவந்தேம்வினையினால்வீரவென்றார். (௩௩)

எல்லையிலிலங்கைச்செல்வமிளையவற்கீந்ததன்மை
சொல்லுதிர்மகரவேலைகவிக்குலவீரர்தூர்த்த
கல்லினிற்கடந்தவாறுங்கழறுதிர் † காலந்தாழ்த்த
வில்லினர்வந்தாரென்றும்விளம்புதிர்விளம்பலாதீர். (௩௪)

கொத்துறுதலையான்வைகுங்குறும்புடையிலங்கைக்குன்றம்
தத்துறுதடநீர்வேலைதனிலொருசிறையிற்றாதல்
ஒத்துறவுணர்ந்திலாமையுயிரொடுமறவினோடும்
இத்துணையிருந்ததென்னுந்தன்மையுமியம்புவீரால். (௩௫)

சண்டங்கொள்வேகமாகத்தனிவிடையுவணந்தாங்கும்
துண்டங்கொள்பிறையான்மோலித்துளவினோடுந்தொல்லை
அண்டங்களெவையுந்தாக்கிக்காப்பினுமறமிலாதான்
கண்டங்கள்பலவுங்காணக்காண்பதுங்கழறுவீரால். (௩௬)

நீட்டுறுமழுவாள்வீரன்றாதையைச்செற்றோன்சுற்றம்
‡ மாட்டியவண்ணமென்னவருக்கமுமற்றுமுற்றும்
வீட்டியென்றாதைக்காகமெய்ப்பலிவிசும்புளோருக்
கூட்டுவனுயிர்கொண்டென்னும்வார்த்தையுமுணர்த்துவீரால். (௩௭)

தாழ்விலாத்தவத்தோர்தையறனியொருசிறையிற்றாகச்
சூழ்விலாவஞ்சஞ்சூழ்ந்ததன்னைத்தன்சுற்றத்தோடும்
வாழ்வெலாந்தம்பிகொள்ளவயங்கெரிநரகமென்னும்
வீழ்விலாச்சிறையின்வைப்பெனென்பதும்விளம்புவீரால். (௩௮)

நோக்கினிர்தானையெங்குநுழைந்தனிரினிவேறொன்றும்
ஆக்குவதில்லையாயினஞ்சலென்றஃதுண்டன்றே
வாக்கினின்மனத்திற்கையின்மற்றினிவலியாவண்ணம்
போக்குமின்விரைவினென்றானுய்ந்தனமென்றுபோனார். (௩௯)

வேறு.

இராவணனது மந்திராலோசனை.

அரவமாக்கடலஞ்சியவச்சமும்
உரவுநல்லணையோட்டியவூற்றமும்

---

* நுவலவென்று-ஒற்றிவாருமென்று கூறாநிற்ப.
† காலந்தாழ்த்த-வாழ்நாளைக்குறைக்க.
‡ மாட்டிய-அழித்த.

வரவுநோக்கியிலங்கையர்மன்னவன்
இரவினெண்ணிடவேறிருந்தானரோ. (௪௦)

வார்குலாமுலைமாதருமைந்தரும்
ஆருநீங்கவறிஞரோடேகினான்
சேர்கவெண்ணினல்லாலன்றுதென்றலும்
சார்கிலாநெடுமெந்திரசாலையே. (௪௧)

உணர்வினெஞ்சினருமருரைப்பொருள்
புணருங்கேள்வியரல்லர்பொறியிலர்
கொணருங்கூனர்குறளர்கொழுஞ்சுடர்
துணருநல்விளக்கேந்தினர்சுற்றினார். (௪௨)

நணியர்வந்துமனிதர்நமக்கினித்
துணியுங்காரியம்யாதெனச்சொல்லினான்
பணியுந்தானவராதியர்பன்முடி
மணியினான்விளங்கும்மணித்தாளினான். (௪௩)

காலவெங்கனல்போலுங்கணைகளால்
வேலைவெந்துநடுங்கிவெயில்புரை
மாலைகொண்டுவணங்கியவாறெலாஞ்
சூலமென்னவென்னெஞ்சைத்தொளைக்குமால். (௪௪)

கிழிபடக்கடல்கீண்டதுமாண்டது
மொழிபடைத்தவலியெனமூண்டதோர்
பழிபடைத்தபெரும்பயத் * தன்னவன்
வழிகொடுத்ததென்னுள்ளம்வருத்துமால். (௪௫)

படைத்தமால்வரையாவும்பறித்துவேர்
துடைத்தவானரவீரர்தந்தோள்களைப்
புடைத்தவாறும்புணரியைப்போக்கற
அடைத்தவாறுமென்னுள்ளத்தடைத்ததால். (௪௬)

காந்துவெஞ்சினவீரர்கணக்கிலார்
தாந்தமாற்றலுக்கேற்றதரத்தா
வேந்தவெற்பையொருவன்விரல்களால்
ஏந்தியிட்டதென்னுள்ளத்தினிட்டதால். (௪௭)

சுட்டவாகண்டுந்தொன்னகர்வேலையைத்
தட்டவாகண்டுந்தாவற்றதெவ்வரைக்
கட்டவாகண்டுங்கண்ணெதிரேவந்து
விட்டவாகண்டுமேலெண்ணம்வேண்டுமோ. (௪௮)

* அன்னவன் - அக்கடலிறைவன்.

என்றுதாயைப்பயந்தோனியம்பலும்
தின்றுவாயைவிழிவழித்தீயுக
நன்றுநன்றுநம்மந்திரநன்றெனு
* என்றும்வாழ்தியிளவலோடேகென்றான். (௪௧)

ஈனமேகொலிதமெனவெண்ணுறா
மோனமாகியிருந்தனன்முற்றினான்
ஆனகாலையடியினிறைஞ்சிய
சேனைநாதனினையனசெப்பினான். (௫௰)

கண்மையின்னகர்வேலைகடந்தவத்
திண்மையொன்றுமலாற்றிசைகாவலர்
எண்மரும்மிவற்கேவல்செய்கின்றவவ்
வுண்மையொன்றுமுணர்ந்திலைபோலென்றான். (௫௧)

கூசிவானரங்குன்றுகொடிக்கடல்
வீசினாரெனும்வீரம்விளம்புவாய்
ஊசிவேரொடுமோங்கலையோங்கிய
ஈசனோடுமெடுத்ததுமில்லையோ. (௫௨)

அதுகொடென்சிலவாரமர்மேலினி
மதிகெடுந்தகையோர்வந்துநாமுறை
பதிபுகுந்தனர்தம்மைப்படுப்பதோர்
விதிகொடுந்தவிளைந்ததுதானென்றான். (௫௩)

முற்றுமூடியகஞ்சுகன்மூட்டிய
வெற்றனற்பொறிக்கண்ணினன்வேத்திரம்
பற்றுமங்கையினன்படிசாரகன்
ஒற்றர்வந்தனரென்னவுணர்த்தினான். (௫௪)

மனைக்கண்வந்தவன்பாதம்வணங்கினார்
பனைக்கைவன்குரங்கின்படர்சேனையை
நினைக்குந்தோறுமலமருநெஞ்சினார்
கனைக்குந்தோறுமுதிரங்கள்கக்குவார். (௫௫)

ஒற்றரை இராவணனுற்றதுரைமினெனல்.

வெள்ளவாரிவிரிவொடவ்வீடணன்
தள்ளவாரிநிலைமையுந்தாபதன்
உள்ளவாறுமுரைமினென்றானுயிர்
கொள்ளவாய்வெருவுங்கொடுங்கூற்றனான். (௫௬)

* என்றும் - எப்பொழுதும்.

அடியமர்நெடுஞ்சேனையையாசையால்
முடியநோக்கலுற்றேமுதுவேலையின்
படியைநோக்கியபாரம் * படர்குற்ற
கடியவேகக்கலுழனிற்கண்டிலம். (ருஎ)

நவலயாம்வரவேண்டியநோக்கதோ
கவலைவேலையெனுங்கரைகாண்கிலா
தவலமெய்தியடைத்துழியார்த்தெழும்
† துவலையேவந்துசொல்லியதில்லையோ. (ருஅ)

எல்லைநோக்கவுமெய்திலதாமெனும்
சொல்லைநோக்கியமானுடன்றோளெனும்
கல்லைநோக்கிக்கணைகளைநோக்கித்தன்
வில்லைநோக்கவும்வெந்ததுவேலையே. (ருகூ)

தாருலாமணிமார்பனின்றம்பியே
தேருலாவுகதிருந்திரிந்துதன்
பேருலாவுமளவினும்பெற்றனன்
நீருலாவுமிலங்கைநெடுந்திரு. (சு0)

சேதுபந்தனஞ்செய்தனனென்றதிப்
போதுவந்தபுதுவலியோவொரு
தூதுவந்தவன்றோள்வலிசொல்லிய
ஏதுவந்தமிலாதவிருக்கவே. (சுக)

மருந்துதேவரருந்தியமாலைவாய்
‡ இருந்ததானவர்தம்மையியைந்துமுன்
பெருந்திண்மாயற்குணர்த்தியபெற்றியின்
தெரிந்துகாட்டினனும்பிசினத்தினன். (சுஉ)

பற்றிவானரவீரர்பணைக்கையால்
எற்றியெங்களையேநெடுந்தோளுறச்
சுற்றியீர்த்தலைத்துச்சுடர்போலொளிர்
வெற்றிவீரனிற்காட்டிவிளம்பினன். (சுங)

சரங்களிங்கிவற்றிற்பண்டுதானுடை
வரங்கள்சிந்துவெனென்றனன்மற்றெமைக்
குரங்கலாமைதெரிந்துமக்கொற்றவன்
இரங்கவுய்ந்தனமீதெங்களொற்றென்றார். (சுச)

---

* பாரம்-முடிவை.
† துவலை-நீர்த்துளி.
‡ இருந்ததானவர்-இராகுவாதியர்.

மற்றும்யாவையும்வாய்மையவானவன்
சொற்றயாவையுஞ்சோர்வின்றிச்சொல்லினார்
குற்றம்யாவையுங்கோளொடுநீங்குக
இற்றைநாண்முதலாயவுண்டாகென்றார். (௬௫)

௮ - வது, ஒற்றுக்கேள்விப்படலம் - முற்றிற்று.

ஆ- திருவிருத்தம்-எ௫௬.

---

௯ - வது, இலங்கைகாண்படலம்.

வய்தெனக்கொல்லும்விற்கைமானுடர்மகரநீரை
நொய்தினினடைத்துமானத்தானையானுவன்றநம்மூர்
எய்தினரென்றபோதின்வேறினியெண்ணவேண்டும்
செய்திறனுண்டோவென்னச்சேனைகாவாளன்செப்பும். (௧)

விட்டனமாதையென்றபோதினும்வெருவிவேந்தன்
பட்டதென்றிகழ்வர்விண்ணோர்பற்றியும்பகையைத்தீர
ஒட்டலாம்போரிலொன்றோரொட்டினுமும்பியொட்டான்
கிட்டியபோதுசெய்வதென்னினிக்கிளத்தல்வேண்டும். (௨)

ஆண்டுசென்றரிகளோடுமெனிதரையமரிற்கொன்று
மீண்டுநம்மிருக்கைசேர்துமென்பதுமேற்கொண்டேமேல்
ஈண்டுவந்திறுத்தாரென்னுமீதலாதுறுதியுண்டோ
வேண்டியதெய்தப்பெற்றால்வெற்றியின்விழுமிதன்றே. (௩)

ஆயிரவெள்ளமானவரக்கர்தந்தானையைய
தேயினுமூழிநூறுவேண்டுமோற்சிறுமையென்றே
நாயினஞ்சீயங்கண்டதாமெனநடப்பதல்லால்
நீயுருத்தெழுந்தபோதுகுரங்கெதிர்நிற்பதுண்டோ. (௪)

வந்தவர்தானையோடு * மறிந்துமாக்கடலில்வீழ்ந்து
சிந்தனரிரிந்துபோகச்சேனையும்யானுஞ்சென்று
வெந்தொழில்புரியுமாறுகாணுதிவிடையீகென்றே
இந்திரன்முதுகுகண்டவிராவணற்கேயச்சொன்னான். (௫)

மதிநெறியறிவுசான்றமாலியவானவ்வாய்மை
பொதுநெறிநிலையதாகப்புணர்த்துதல்புலமையென்றே

---

* மறிந்து - திரும்பி.

விதிநெறிநிலையதாகவிளம்புகின்றோருமீண்டுச்
செதுநெறிநிலையினாரேயென்பதுந்தெரியச்சொல்லும். (௬)

பூசற்குமுயன்றாரம்பாற்பொருதிரைப்புணரிவேலைத்
தேசத்துக்கிறைவனானதசரதசிறுவன்றன்னை
மாசற்றசோதிவெள்ளத்துச்சியின்வரம்பிற்றோன்றும்
ஈசற்குமீசன்வந்தானென்பதோர்வார்த்தையிட்டார். (௭)

அன்னவற்கிளவறன்னையருமறைபரமென்றோதும்
நன்னிலைநின்றுதீர்ந்துநவையிலாவுயிர்கடோறும்
தொன்னிலைபிரிந்தானென்னப்பலவகைநின்றதூயோன்
இன்னணமெவருங்கேட்கவியம்புவரேதியாதோ. (௮)

அவ்வமர்க்கமைந்தவில்லுங்குலவரையவற்றினான்ற
வெவ்வலிவேறுவாங்கிவிரிஞ்சனேவிதித்தமேனாள்
செவ்வழிநாணுஞ்சேடன்றெறிகணையாகச்சேர்த்திக்
கவ்வயில்காலநேமிக்கணக்கையுங்கடந்ததென்பார். (௯)

வாலிமாமகன்வந்தானைவானவர்க்கிறைவனென்றார்
நீலனையுலகமுண்ணுநெருப்பினுக்கரசனென்றார்
காலனையொக்குந்தூதன்காலுங்கண்ணுதலுமென்றார்
மேலுமொன்றுரைத்தாரன்னான்விரிஞ்சனுமினிமேலென்றார். (௧௦)

அப்பதமவனுக்கீந்தானரக்கர்வேரறுப்பதாக
இப்பதியெய்தினானவ்விராமனென்றெவருஞ்சொன்னார்
ஒப்பினாலுரைக்கின்றாரோவுண்மையேயுணர்த்தினாரோ
செப்பியென்குரங்காய்வந்தார்தனித்தனிதேவரென்றார். (௧௧)

ஆயதுதெரிந்தோர்தங்களச்சமோவறிவோயார்க்கும்
சேயவளெளியளென்னாச்சிந்தையினிகழலம்மா
தூயவளமிழ்தினோடுந்தோன்றினாளென்றுந்தோன்றாத்
தாயவளுலகுக்கெல்லாமென்பதுஞ்சாற்றுகின்றார். (௧௨)

கானிடைவந்ததேயும்வானவர்கடாவவேயால்
மீனுடையகழிவேலைவிலங்கன்மேலிலங்கைவேந்தன்
தானுடைவரத்தையெண்ணித்தனித்தனிதலைவர்தாமே
மானுடவடிவங்கொண்டாரென்பதோர்வார்த்தையிட்டார். (௧௩)

ஆயிர ‡ முற்பாதங்களீங்குளவடுத்தவென்றார்
தாயினுமுயிர்க்குநல்லாளிருந்துழியறியத்தக்கோன்
ஏயினதூதனெற்றப்பற்றுவிட்டிலங்கைத்தெய்வம்
போயினதென்றுஞ்சொன்னார்புகுந்ததுபோருமென்றார். (௧௪)

---

* உற்பாதம்-கெடுதிக்குரிய : புதியதோற்றம்.

அம்பினுக்கிலக்கமாவாரரசொடுமரக்கரென்றார்
நம்பறத்தடங்குமென்னுநாவினிற்பொய்யிலாதான்
உம்பர்மந்திரிக்குமேலாவொருமுழுமுயர்ந்தஞானத்
தம்பியேசாற்றிப்போனானென்பதுஞ்சமையச்சொன்னான். (௧௫)

ஈதெலாமுணர்ந்தேனாயுமென்குலமிறுதியுற்ற
தாதியினிவனாலென்றுமுன்றன்மேலன்பினாலும்
வேதனைநெஞ்சிலெய்தவெம்பியான்விளைவசொன்னேன்
சீதையைவிடுதியாயிற்றீருமித்தீமையென்றான். (௧௬)

மற்றெலாநிற்கவந்தமனிதர்வானரங்கள்வாணின்
இற்றைநாளளவுநின்றாரிமையவரென்னுந்தன்மை
சொற்றவாறன்றியேயுந்தோற்றிநீயென்றுஞ்சொன்னாய்
கற்றவாநன்றுபோவென்றினையனகழறலுற்றான். (௧௭)

பேதைமானுடவரோடுகுரங்கலபிறவேயாகப்
பூதலவரைப்பினுகர்புரத்தினப்புறத்ததாகக்
காதுவெஞ்செருவேட்டென்னைக்காந்தினர்கலந்தபோது
சீதைதன்றிறத்தன்றாயினமர்த்தொழி * றிறம்புவேனோ. (௧௮)

ஒன்றலபகழியென்கைக்குரியனவுலகமெல்லாம்
வென்றனவொருவன்செய்தவினையினும்வலியவெம்போர்
முன்றருகென்றதேவர்முதுகுபுக்கமரின்முன்னம்
சென்றனவின்றுவந்தகுரங்கின்மேற்செல்கலாமோ. (௧௯)

சூலமேய்தடக்கையண்ணறானுமோர்குரங்காய்த்தோன்றின்
ஏனுமேலிடைவதல்லாலென்செய்வனென்னைக்கால
வேலையேகடைந்தமேனாளுலகெலாம்வெருவவந்த
ஆலமோவிழுங்கவென்கையயின்முகப்பகழியம்மா. (௨0)

அறிகிலைபோலுமையவமரெனக்கஞ்சிப்போன
வெறிசுடர்நேமியான்வந்தெதிர்ப்பினுமென்கைவாளிப்
பொறிபடச்சுடர்கடீயப்போவனபோக்கிலாத
மறிகடல்கடையவந்தமணிகொலாம்பூணமார்பில். (௨௧)

கொற்றவனிமையோர்கோமான்குரக்கினதுருக்கொண்டானேல்
அற்றைநாளவன்றான்விட்டவயிற்படையறுத்துமாற்ற
இற்றவான்சிறையவாகிவிழுந்துபோயெழுந்துவீங்காப்
பொற்றைமால்வரைகளோவென்புயநெடும்பொருப்புமம்மா. (௨௨)

உள்ளமேதூதுசெல்லவுயிரனுருறையுண்டும்
கள்ளமாமகளிர்சோரநேமிப்புள்கவர்ச்சிநீங்கக்

---

* திறம்புவேனோ - தவறுவேனோ.

கொள்ளைபூண்டமரர்வைகுங்குன்றையுங்கோட்டிற்கொண்ட
வெள்ளநீர்வடிந்ததென்னவீங்கிருள்விடிந்ததன்றே. (உ௩)

இன்னதோர்தன்மைத்தாமென்றெட்டியும்பார்ப்பவஞ்சிப்
பொன்மதிற்புறத்துநாளும்போகின்றான்போர்மேற்கொண்டு
மன்னவர்க்கரசன்வந்தான்வலியமாலென்றுதானும்
தொன்னகர்காண்பான்போலக்கதிரவன்றோற்றஞ்செய்தான். (உ௪)

இராமன் சுவேலமலைமீதேறி இலங்கைவளங்காணுதல்.

அருந்ததியனையநங்கையவ்வழியிருந்தாளென்று
பொருந்தியகாதறூண்டப்பொன்னகர்காண்பான்போலப்
பெருந்துணைவீரர்சுற்றத்தம்பியும்பின்புசெல்ல
இருந்தமான்மலையினுச்சியேறினனிராமனிப்பால். (உரு)

செருமலிவீரரெல்லாஞ்சேர்ந்தனர்மருங்குசெல்ல
இருதிறல்வேந்தர்தாங்குமிணைநெடுங்கமலக்கையான்
பொருவலிவயவெஞ்சீயம்யாவையும்புலியுஞ்சுற்ற
அருவரையிவர்வதாங்கோரரியரசனையனானான். (உசு)

கதமிகுந்திரைத்துப்பொங்குங்கனைகடலுலகமெல்லாம்
புதைவுசெய்யிருளிற்பொங்குமரக்கர்தம்புரமும்பொற்பும்
சிதைவுசெய்குறியைக்காட்டிவடதிசைச்சிகரக்குன்றின்
உதையமதொழியத்தோன்றுமொருகருஞாயிறொத்தான். (உஎ)

துமிலத்திண்செருவின்வாளிப்பெருமழைசொரியத்தோன்றும்
விமலத்திண்சிலையனாண்டோர்வெற்பினைமேயவீரன்
அமலத்திண்கரமுங்காலும்வதனமுங்கண்ணுமான
கமலத்திண்காடுபூத்தகாளமாமேகமொத்தான். (உஅ)

மற்குவடனையதிண்டோண்மானவன்மானமில்லாக்
கற்குவடடுக்கிவாரிக்கடலினைக்கடந்தகாட்சி
நற்குவடனையவீரரிட்டத்தினடுவணின்றான்
பொற்குவடிடையேதோன்றுமரகதக்குன்றம்போன்றான். (உகூ)

அணைநெடுங்கடலிற்றோன்றவாறறியச்ற்றத்தையன்
பிணைநெடுங்கண்ணியென்னுமின்னுயிர்துறந்தபின்னைத்
துணைபிரிந்தயருமன்றிற்சேவலிற்றுளங்குகின்றான்
இணைநெடுங்கமலக்கண்ணாலிலங்கையையெய்தக்கண்டான். (௩0)

நந்திருநகரேயாதிவேறுளநகர்கட்கெல்லாம்
வந்தபேருவமைகூறிவழுத்துவானமைந்தகாலை
இந்திரனிருக்கையென்பரிலங்கையையெடுத்துக்காட்டார்
அந்தரமுணர்தறேற்றாரருங்கவிப்புலவரம்மா. (௩க)

பழுதறவிளங்குஞ்செம்பொற்றலத்திடைப்பரிதிநாண
முழுதெரிமணியிற்செய்துமுடிந்தனமுனைவராலும்
எழுதருவகையவாயவியையவனவியையச்செய்த
தொழிறெரிகிலவாற்றங்கட்சுடர்மணிக்கற்றைசுற்றி. (௯௨)

விரிகின்றகதிரவாகிமிளிர்கின்றமணிகள்வீசச்
சொரிகின்றசுடரின்சும்மைவிசும்புறத்தொடருந்தோற்றம்
அரியென்றவெற்றியாற்றன்மாருதியமைத்ததீயால்
எரிகின்றதாமேகாணிக்கொடிநகரிருந்ததின்னும். (௯௩)

மாசடைப்பரந்தமானமரகதத்தலத்துவைத்த
காசடைசமைந்தமாடங்கதிர்த்தழைக்கற்றைசுற்ற
ஆசடைகுன்றவெள்ளியகன்மனையன்னமாகப்
பாசடைப்பொய்கைபூத்தபங்கயநிகர்ப்பபாராய். (௯௪)

தீச்சிகைசிவணுஞ்சோதிச்செம்மணிச்செய்ததூணில்
தூச்சுடர்மாடமீண்டித்துறுதலாற்கருமைதோன்றா
மீச்செலுமேகமெல்லாம்விரிசுடரிலங்கைவேறு
காய்ச்சியவிரும்புமானச்சேர்ந்தவையொளிர்வகாணாய். (௯௫)

விற்படிதிரடோள்வீரநோக்குதிவெங்கண்யானை
அற்படிநிறத்தவேனுமாடகத்தலத்தையார்க்கக்
கற்படிவயிரத்திண்காணகங்களிற்கல்லிக்கையால்
பொற்படியென்னவீசிப்பொன்மலையென்னப்போவ. (௯௬)

பூசல்விற்குமரநோக்காய்புகரறவிளங்கும்பொற்பின்
காசுடைக்கவரிக்கற்றைக்கால்களாற்கதுவுகின்ற
வீசுபொற்கொடிகளெல்லாம்விசும்பினின்விரிந்தமேக
மாசறத்துடைத்தவ்வானம்விளங்குவபோலுமாதோ. (௯௭)

நூல்படத்தொடர்ந்தபைம்பொற்சித்திரநணித்தபத்திக்
கோல்படுமனைகளாயகுலமணியெவையுங்கூட்டிச்
சால்படுத்தரக்கன்மாடத்தனிமணிநடுவட்சாத்தி
மால்கடற்கிறைவன்பூண்டமாலைபோன்றுளதிம்மூதூர். (௯௮)

நன்னெறியறிஞநோக்காய்நளிர்நெடுந்தெருவினுப்பண்
பன்மணிமாடப்பத்திநிழல்படப்படர்வபண்பால்
தன்னிறந்தெரிகிலாதவொருநிறஞ்சார்கிலாத
இன்னதோர்குலத்ததென்றுபுலப்படாபுரவியெல்லாம். (௯௯)

வீரநீபாராய்மெல்லென்பளிங்கினால்விளங்குகின்ற
மாரனுமருளச்செய்தமாளிகைமற்றோர்சோதி

சேர்தலுந்தெரிவவன்றேற்றேர்கிலாத்தெரிந்தகாட்சி
நீரினாலியன்றவென்னநிழலெழுகின்றநீர்மை. (௪0)

கோணிறக்குணிவிற்செங்கைக்குமரனேகொழுவெண்டிங்கட்
காணிறக்கதிர்வெண்டிங்கடெற்றியவாயகாட்சி
வாணிறத்தரளப்பந்தர்மரகதநடுவெண்வைத்த
பாணிறப்பரவைவைகும்பரமனைநிகர்ப்பபாராய். (௪௧)

கோளவாவரியேறன்னகுருசிலேகொள்ளநோக்காய்
நாளவாமின்றோய்மாடத்தும்பரோர்நாகர்பாவை
காளவாவுறையின்வாங்குங்கண்ணடிவிசும்பிற்கவ்வி
வாளராவிழுங்கிக்காலுமதியினைநிகர்ப்பபாராய். (௪௨)

கொற்றவான்சிலைக்கைவீரகொடியுடைமாடக்குன்றை
உற்றவான்கழுத்தவானவொட்டகம்வைத்தவும்பர்
* செற்றியமணிகளீன்றசுடர்களைச் † செக்கராத்தின்
கற்றையந்தளிர்களென்னக்கவ்வியநிமிர்வகாணாய். (௪௩)

வாகைவெஞ்சிலைக்கைவீரமலர்க்குழல்வடிக்குமாலைத்
தோகையரிட்டதூமத்தகிற்புகைமுழுதுஞ்சுற்ற
வேகவெங்களிற்றின்வன்றோன்மெய்யுறப்போர்த்ததையல்
பாகனிற்பொலிந்துதோன்றும்பவளமாளிகையைப்பாராய். (௪௪)

காவலன்பயந்தவீரக்கார்முகக்களிறேகற்ற
தேவர்தந்தச்சனீலக்காசினாற்றிருந்தச்செய்த
ஈவதுதெரியாவுள்ளத்திராக்கதரீட்டிவைத்த
‡ பாவபண்டாரமன்னசெய்குன்றம்பலவும்பாராய். (௪௫)

பிணைமதத்தனையநோக்கம்பாழ்படப்பிடியுண்டன்பிற்
துணைவனைப்பிரிந்துபோந்துமருங்கெனத்துவளுமுள்ளம்
பணமயிர்ப்பெய்துமல்குற்பாவையர் ¶ பருவநோக்கும்
கணமயிற்குழுவினம்மைக்காண்கின்றார்தம்மைக்காணாய். (௪௬)

§ நாழ்மலர்த்தெரியல்வீரநம்படைகாணவானத்
தியாழ்மொழித்தெரிவைமாருமைந்தருமேறுகின்றார்
வாழ்வினிச்சமைந்ததென்றேயென்றுமாநகரையெல்லாம்
பாழ்படுத்திரியல்போவாரொக்கின்றபரிசுபாராய். (௪௭)

---

* செற்றிய - நெருங்கிய.
† சேதாரத்தின் என்றும் பாடம்.
‡ பாவபண்டாரம்-பாவத்துக்கிருப்பிடம்.
¶ பருவம்-மழைக்காலம்.
§ நாழ் - நாள்.

இராவணன் கோபுரத்தின்மீதேறி வானரசேனைகளைக் காண்டல்.

இன்னவாறிலங்கைதன்னையிளையவற்கிராமன்காட்டிச்
சொன்னவாசொல்லாவண்ணமதிசயந்தோன்றுங்காலை
அன்னமாநகரின்வேந்தனரிக்குலப்பெருமைகாண்பான்
சென்னிவான்றடவுஞ்செம்பொற்கோபுரத்தும்பர்சேர்ந்தான். (சஅ)

௯ - வது, இலங்கைகாண்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அ0௪.

௧0 - வது, இராவணன்றனைகாண்படலம்.

கவடுகப்பொருதகாய்களிறன்னான்
* அவடியக்கின்மலரம்புறவெம்பும்
சுவடுடைப்பொருவிறோள்கொடனேகம்
குவடுடைத்தனியொர்குன்றெனநின்றான். (௧)

பொலிந்ததாமினிதுபோரெனவோடும்
மலிந்தநங்கையெழிலால்வலிநாளும்
மெலிந்ததோள்கள்வடமேருவின்மேலும்
வலிந்துசெல்லமிசைசெல்லுமனத்தான். (உ)

செம்பொன்மௌலிசிகரங்கடயங்க
அம்பொன்மேருவரைகோபுரமாக
† வெம்புகாலினைவிழுங்கிடமேலுள்
உம்பர்மீதுமிர்வாசுகியொத்தான். (௩)

தொக்கபூதமவையைந்தொடுதுன்னிட்
டொக்கநின்றதிசையொன்பதொடொன்றும்
பக்கமுந்நிழல்பரப்பிவியப்பால்
மிக்கநின்றகுடைமீதுவிளங்க. (௪)

கைத்தருங்கவரிவீசியகாலால்
நெய்த்திருண்டுயருநீள்வரைமீதில்
தத்திவீழருவியின்றிரள்சால
உத்தரீகநெடுமார்பினுலாவ. (௫)

* அவடியக்கு-அச்சீதையின் மோகத்தாலுண்டான மயக்கம்.
† வெம்புகாலினை-சீற்றங்கொண்ட வாயுதேவனை.

வானகத்தினிலுருப்பசிவாசத்
தேனகத்தருதிலோத்தமைசெவ்வாய்
* எனைகைக்குலவரம்பையர்யாரும்
சானகிக்கழகுதந்தயல்சார. (௬)

வீழியின்கனியிதழ்ப்பணைமென்றோள்
ஆழிவந்தவரமங்கையரைஞ்ஞூற்
றேழிரண்டினிரண்டுபயின்றோர்
சூழிரண்டுபுடையும்முறைசுற்ற. (௭)

முழைபடிந்தபிறைமுள்ளெயிறொள்வாள்
இழைபடிந்தவிளவெண்ணிலவீனக்
குழைபடிந்ததொருகுன்றின்முழங்கா
மழைபடிந்தனையதொங்கல்வயங்க. (௮)

ஓதுநூல்கள்வழியின்செவியுள்ளும்
சீதைசீதையெனுமாருயிர்தேய
நாதவீணையிசைநாரதர்பாட
வேதகீதவமிழ்தள்ளிவிழுங்க. (௯)

வெங்கரத்தரயில்வாளினர்வில்லோர்
சங்கரற்கும்வலிசாய்வில்வலத்தோர்
அங்கரக்கர்சதகோடியமைந்தோர்
பொங்கரத்தவிழியோர்புடைசூழ. (௧௦)

கல்லிலங்கையுலகங்கவர்கிற்போர்
நல்லிலங்கைமுதலோர்நவையில்லோர்
சொல்லிலங்கர்சதகோடிதொடர்ந்தோர்
வில்லிலங்குபடையோர்புடைவிம்ம. (௧௧)

பாரியங்குநர்விசும்புபரந்தோர்
வாரியங்குமழையின்குரன்மானும்
பேரியங்கண்முருடாகுளியெட்கும்
தூரியங்கடலினின்றுதுவைப்ப. (௧௨)

நஞ்சுமஞ்சுவிழிநாகியர்நாண
வஞ்சியஞ்சுமிடைமங்கையர்வானத்
தஞ்சொலிஞ்சொலினரம்பையரோடும்
† பஞ்சமஞ்சிவணுமின்னிசைபாட. (௧௩)

* எனைகை-எல்நகை. எல்-பொருந்தின. நகை-தந்தங்களையுடைய.
† பஞ்சமஞ்சிவணும்-தமிழிராகமான பஞ்சமத்தினையொத்த.

நஞ்சுகக்கியெரிகண்ணினர்நாமக்
கஞ்சுகத்தர்கதைபற்றியகையர்
மஞ்சுகக்குமுறுசொல்லினர்வல்வாய்ச்
சிஞ்சுகத்தின்விசையோர்திசைசெல்ல. (௧௪)

கூடயுரைப்பகுலமால்வரையேனும்
சாயுரைப்பரியவாயதடந்தோள்
வாயுரைத்தகலவைக்களிவாசம்
வேயுரைப்பதெனவந்துவிளம்ப. (௧௫)

வேத்திரத்தரெரிவீசிவிழிக்கும்
நேத்திரத்தரிறைநின்றுழிநில்லாக்
காத்திரத்தர்மனைகாவல்விரும்பும்
சூத்திரத்தர்பதினாயிரர்சுற்ற. (௧௬)

தோரணத்தின்மணிவாயின்மிசைச்சூல்
நீரணைத்தமுகிலாமெனநின்றான்
ஆரணத்தையரியைம்மறைநேடும்
காரணத்தைநிமிர்கண்கொடுகண்டான். (௧௭)

மடித்தவாயினன்வயங்கெரிவந்து
பொடித்திழிந்தவிழியன்னதுபோழ்தின்
இடித்தவன்றிசையெரிந்தனநெஞ்சம்
துடித்தகண்ணினொடிடத்திரடோள்கள். (௧௮)

* ஆகராகவனையவ்வழிகண்டான்
மாக † ராகநிறைவாளொளியோனை
‡ ஏகராசியினினெய்தவெதிர்க்கும்
வேகராகுவெனவெம்பிவெகுண்டான். (௧௯)

இராவணனிராமனை யுணர்ந்தே னையோரையுரையெனல்.

ஏனையோனிவனிராமனெனத்தன்
மேனியேயுரைசெய்கின்றதுவென்றிச்
சேனைவீரர்படையைத்தெரியென்று
தான்வினவவெதிர்சாரன்விளம்பும். (௨௦)

இங்கிவன்படையிலங்கையர்மன்னன்
தங்கையென்னலுமுதிர்ந்தசலத்தால்
அங்கைவாள்கொடவளாகம்விளங்கும்
கொங்கைநாசிசெவிகொய்துகுறைந்தான். (௨௧)

---

* ஆக - அவ்வாறாக.

† ராகநிறை - செந்நிறநிறைந்த.

‡ ஏகராசியினில் - அமாவாசையன்று.

அறக்கனென்பதொருகண்ணிலனாகி
நிறக்கருங்கடலுணேமியினின்று
துறக்கமெய்தியவருந்துறவாத
உறக்கமென்பதனையோடமுனிந்தான். (௨௨)

* கய்யவன்றொடவமைந்தகரத்தான்
நய்யவாலியொடிவண்டநடுங்கச்
செய்தவன்செருவினிற்றிகழ்கின்றான்
வெய்யவன்புதல்வன்யாரினும்வெய்யான். (௨௩)

தந்தைமற்றவனசார்வில்வலத்தோர்
அந்தரத்தரமுதார்கலிகாண
மந்தரத்தினொடும்வாசுகியோடும்
சுந்தரப்பெரியதோள்கடித்தான். (௨௪)

நடந்துநின்றவனகுங்கதிர்முன்பு
தொடர்ந்தவன் † னுலகு ‡ சுற்று $ மெயிற்றின்
இடந்தெழுந்தவனையொத்தவன்வேலை
கடந்தவன்சரிதைகண்டனையன்றே. (௨௫)

நீலனின்றவனெருப்பின்மகன்றன்
சூலமுங்கயிறுமின்மைதொடர்ந்தோன்
ஆலமொன்றுநிறமென்றயலோனைக்
காலனென்பவரினைக்கருதாதார். (௨௬)

வேறு.

வேறாகநின்றானளனென்னும்விலங்கலன்னான்
ஏறுவருணன்வழிதந்திலனென்றிராமன்
சீறாதவுள்ளத்தெழுசீற்றமுகுத்தசெந்தீ
ஆறாதமுன்னம்மகன்வேலையை ௦ யாறுசெய்தான். (௨௭)

முக்காலமுமொய்ம்மதியான்முறையினுணர்வான்
புக்காலமெழப்புணரிப்புலவோர்கலக்கும்
அக்காலமுள்ளான்கரடிக்கரசாகின்றான்
இக்காலநின்றுமுலகேழுமெடுக்கவல்லான். (௨௮)

சேனாபதிதன்னயலேயிருள்செய்தகுன்றின்
ஆனாமருங்கேயிரண்டாடகக்குன்றினின்றார்

---

* கய்யவன்றொட - கரத்தினை அவ்விலக்குமணன்றொட.
† உலகு - உலகினை. ‡ சுற்றும் - சுழற்றியெடுத்த.
$ எயிற்றின் - வக்கிரதந்தமுடைய பூவராகப்பெருமாள்.
௦ ஆறுசெய்தான் - சேதுவால் வழியாக்கினன்.

ஏனோரிலிராமனிலக்குவனென்னுமீட்டார்
வானோர்தமருத்துவன்மைந்தர்வலிக்கண்மிக்கார். (௨௯)

உவன்காண்குமுதன்குமுதாக்கனுமூங்கவன்காண்
இவன்காண்கவையன்கவையாக்கனுமீங்கிவன்காண்
சிவன்காணயன்காணெனுந்துதனைப்பெற்றசெல்வன்
அவன்காணெடுங்கேசரியென்பவனுற்றன்மிக்கான். (௩0)

* முரபன்னகுதோளவன்மூரிமடங்கலென்னக்
கரபன்னகமன்னவைமின்னுகக்காந்துகின்றான்
வரபன்னகந்தன்னையும்வேரொடுவேண்டின்வாங்கும்
சரபன்னவனிவன்சதவலியாயதக்கோன். (௩௧)

வேறு.

மூன்றுகண்ணிலனுயினுமூன்றெயிலெரித்தோன்
போன்றுநின்றவன்பனசனிப்போர்க்கெலாந்தானே
ஏன்றுநின்றவனிடபன்மற்றிவன்றனக்கெதிரே
தோன்றுகின்றவன்சுசேடணனறிவொடுதொடர்ந்தோன். (௩௨)

வெதிர்கொள்குன்றெலாம்வேரொடும்வாங்கிமேதினியை
முதுகுநொய்தெனச்செய்தவன்கனலையுமுனிவோன்
கதிரவன்மகற்கிடமருங்கேநின்றகாளை
ததிமுகன்னவன்சங்கனென்றுரைக்கின்றசிங்கம். (௩௩)

அண்ணல்கேளிதற்கவதியுமளவுமொன்றுளதோ
விண்ணின்மீனினைக்குணிப்பினும்வேலையின்மீனை
எண்ணிநோக்கினுமக்கடன்மணலினையெல்லாம்
கண்ணிநோக்கினுங்கணக்கிலதென்றனன்காட்டி. (௩௪)

சினங்கொடிண்டிறலரக்கனுஞ்சிறுநகைசெய்தான்
புனங்கொள்புன்றலைக்குரங்கினைப்புகழுதிபோலாம்
வனங்களும்படர்வரைதொறுந்திரிதருமானின்
இனங்களும்பலவென்றெயுமரியினையென்றான். (௩௫)

என்னும்வேலையினிராவணற்கிளவலையிராமன்
கன்னிமாமதினகர்நின்றுநம்வலிகாண்பான்
முன்னிவானினுமூடிநின்றார்களைமுறையால்
இன்னநாமத்தரினையரென்றியம்புதியென்றான். (௩௬)

நாறுதன்குலக்கிளையெலாநரகத்துநடுவான்
சேறுசெய்துவைத்தானும்பர்திலோத்தமைமுதலாக்

* முரபன் - வன்மையுடையவனும்.

கூறுமங்கையர்குழாத்திடைக்கோபுரக்குன்றத்
தேறிநின்றவன்புன்றொழிலிராவணனென்றான். (௩௭)

சுக்கிரீவன் இராவணன்மீது பாய்தல்.

கருதிமற்றொன்றுகழறுதன்முனம்விழிக்கனல்கள்
பொருதுபுக்கனன்மூந்துறச்சூரியன்புதல்வன்
சுருதியன்னமுன்சிவந்தநற்கனியென்றுசொல்லப்
பருதிமேற்பண்டுபோய்ந்தவனுமெனப்பாய்ந்தான். (௩௮)

சுதையத்தோங்கியசுவேலத்தினுச்சியைத்துறந்து
சிதையத்திண்டிறலிராவணக்குன்றிடைச்சென்றான்
ததையச்செங்கரம்பரப்பியதன்பெருந்தாதை
உதையக்குன்றினின்றுகுன்றிற்பாய்ந்தவனொத்தான். (௩௯)

பள்ளம்போய்ப்புகும்புனலெனப்படியிடைப்படிந்து
தள்ளும்பொற்கிரிசலிப்புறக்கோபுரஞ்சார்ந்தான்
வெள்ளம்போற்கண்ணியழுதலுமிராவணன்மேற்றன்
உள்ளம்போற்செலுங்கழுகினுக்கரசனுமொத்தான். (௪0)

கரியகொண்டலைகருணையங்கடலினைக்காணப்
பெரியகண்கள்பெற்றுவக்கின்றவரம்பையர்பிறரும்
உரியகுன்றிடையுருமிடிவீழ்தலுமுலைவுற்
றிரியல்போயினமயிற்பெருங்குலமெனவிரிந்தார். (௪௧)

க0 - வது, இராவணன்றனைகாண்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - அ௪௫.

கக - வது, மகுடபங்கப்படலம்.

காலவிருள்சிந்துகதிரோன்மதலைகண்ணுற்
றேலவெதிர்சென்றடலிராவணனையெய்தி
நீலமலைமுன்கயிலைநின்றதெனநின்றான்
ஆலவிடமன்றுவரநின்றசிவனன்னான். (௧)

* இத்திசையின்வந்தபொருளென்னெனவியம்பத்
தத்தியெதிர்சென்றுதிசைவென்றுயர்தடந்தோள்

---

* இத்திசையில் - இவ்விடத்தில்.

பத்தினொடுபத்துடையவன்னுடல்பதைப்பக்
குத்தினனுரத்தினிமிர்கைத்துணைகுளிப்ப. (உ)

திருகியசினத்தொடுசெறுத்தெதிர்விழித்தான்
ஒருபதுதிசைக்கணுமொலித்தவொலியொப்பத்
தருவனமெனப்புடைதழைத்துயர்தடக்கை
இருபதுமெடுத்துருமிடித்தெனவடித்தான். (௩)

அடித்தவிரல்பட்டவுடலத்துழியிரத்தம்
பொடித்தெழவுறுக்கியெதிர்புக்குடல்பொருத்திக்
கடுத்தவிசையிற்கடிதெழுந்துகதிர்வேலான்
முடித்தலைகள்பத்தினுமுகத்தினுமுதைத்தான். (ச)

உதைத்தவனடித்துணைபிடித்தொருகணத்தில்
பதைத்துலைவுறப்பலதிரித்திகல்பரப்பி
மதக்கரியையுற்றரிநெரித்தெனமயக்கிச்
சுதைத்தலனிடைக்கடிதடிக்கொடுதுகைத்தான். (ரு)

துகைத்தவனுடற்பொறைசுறுக்கொடவிறுக்கித்
தகைப்பெருவலத்தொடுதலத்திடையமுக்கி
வகைப்பிறைநிறத்தெயிறுடைப்பொறிவழக்கிக்
குகைப்பொழிபுதுக்குருதிகைக்கொடுகுடித்தான். (சா)

கைக்கொடுகுடித்தவனுடற்கனகவெற்பைப்
பைக்கொடுமிடற்றரவெனப்பலகைபற்றி
மைக்கொடுநிறத்தவன்மறத்தொடுபுறத்தில்
திக்கொடுபொருப்புறநெருப்பொடுதிரித்தான். (எ)

திரித்தவனுரத்தினுகிர்செற்றும்வகைகுத்திப்
பெருத்துயர்தடக்கையொடடித்திடைபிடித்துக்
கருத்தழிவுறத்திரிதிறத்தெயில்கணத்தன்
றெரித்தவனையொத்தவனெடுத்தகழியிட்டான். (அ)

* இட்டவனையிட்டவகழிற்கடிதினிட்டான்
தட்டவுயரத்தினிலுறுந்தசமுகத்தான்
ஒட்டவுடனேயவனும்வந்தவனையுற்றான்
விட்டிலர்புரண்டிருவரோரகழின்வீழ்ந்தார். (கூ)

விழுந்தனர்சுழன்றனர்வெகுண்டனர்திரிந்தார்
அழுந்தினரழுந்திலரகன்றிலரகன்றார்
எழுந்தனரெழுந்திலரெதிர்ந்தனர்முதிர்ந்தார்
ஒழிந்தனரொழிந்திலருணர்ந்திலர்களொன்றும். (க௦)

* இட்டவனை - தனைத்தூக்கியிட்டவனை.

அந்தரவருக்கன்மகனூழியகழாகச்
சுந்தரமுடைக்கரம்வலிப்பதொர்சுழிப்பட்
டெந்திரமெனத்திரியிரக்கமிலரக்கன்
மந்தரமெனக்கடையும்வாலியையுமொத்தான். (கக)

ஊறுபடுசெம்புனலுடைந்தகழையுற்ற
ஆறுபடர்கின்றனவெனப்படரவனூர்
பாறுபொருகின்றனபருந்திவையெனப்போய்
ஏறினர்விசும்பிடையிரிந்தவுலகெல்லாம். (கஉ)

தூரநெடுவானின்மலையுஞ்சுடரவன்சேய்
காரினெடுமேருநிகர்காய்சினவரக்கன்
தாருடையதோள்கள்பலவுந்தழுவநின்றான்
ஊரினெடுகோள்கதுவுதாதையையுமொத்தான். (கங)

பொங்கமர்விசும்பிடையுடன்றுபொருபோழ்தில்
செங்கதிரவன்சிறுவனைத்திரள்புயத்தால்
மங்கலவயங்கொளிமறைத்தவலரக்கன்
வெங்கதிர்கரந்ததொருமேகமெனலானான். (கச)

நூபுரமடந்தையர்கிடந்தலற * நோனார்
மாபுரமடங்கலுமிரிந்தயரவன்றாள்
மீபுரமடங்கலெனவெங்கதிரவன்சேய்
கோபுரமடங்கவிடியத்தனிகுதித்தான். (கரு)

ஒன்றுறவிழுந்தவுருவமைத்தொடரவோடா
மின்றெறியெயிற்றினொருமேகம்விழுமென்னத்
தின்றிடுவெனென்றெழுசினத்திறலரக்கன்
பின்றொடரவந்திருகரத்துணைபிடித்தான். (கசு)

வந்தவனைநின்றவன்வலிந்தெதிர்மலைந்தான்
அந்தகனுமஞ்சிடநிலத்திடையரைந்தான்
எந்திரமெனக்கடிதெடுத்தவனெறிந்தான்
கந்துகமெனக்கடிதெழுந்தெதிர்கலந்தான். (கஎ)

படிந்தனமரந்தரைபகிர்ந்தனபரப்பும்
கொடுஞ்சினமுதிர்ந்தனவுரத்தின்மிசைகுத்த
நெடுஞ்சுவர்பிளந்தனநெரிந்தனமிர்குன்றம்
இடிந்தனதகர்ந்தனவிலங்கைமதிலெங்கும். (கஅ)

---

* நோனார் - பகைவரானவசுரர்.

செறிந்துயர்கறங்கனையமேனிகிலேதேரார்
பிறிந்தனர்பொருந்தினரெனத்தெரிதல்பேணுர்
எறிந்திலர்களெய்திலர்களின்னரெனமுன்னின்
றறிந்திலரரக்கருமமர்த்தொழிலயர்ந்தார். (க௯)

வேறு.

இராமன் சுக்கிரீவனைக் காணுது கவற்சியெய்துதல்.

இன்னதோர்தன்மையெய்துமளவையினெழிலிவண்ணன்
மன்னுயிரனையகாதற்றுணைவனைவரவுகாணுன்
உன்னியகருமமெல்லாமுன்னெடுமுடிந்தவென்றுத்
தன்னுணர்வழிந்துசிந்தையலம்வந்துதளர்ந்துசாய்ந்தான். (உ0)

ஒன்றியவுணர்வேயாயவோருயிர்த்துணைவவுன்னை
இன்றியானுளனுய்நின்றென்றியற்றுவதியைவதன்றால்
அன்றியுந்துயரத்திட்டாயமரரையரக்கர்க்கெல்லாம்
வென்றியுங்கொடுத்தாயென்னைக்கெடுத்ததுன்வெகுளியென்றான். (உக)

தெய்வவெம்படையுந்தீராமாயையும்வல்லதீயோன்
கய்யிடைப்புக்காய்நீவேறெவ்வண்ணஞ்சடத்திகாவல்
வய்யமோரேழும்பெற்றால்வாழ்வெனோவாராயாகின்
உய்வனோதமியனேனுக்குயிர்தந்தவுதவியோனே. (உஉ)

ஒன்றுகங்னையவொன்றாய்விளைந்ததென்கருமமங்கோ
என்றாலும்யானேவாழ்வேனியிலையெனவுங்கேளேன்
இன்றுயபழியுங்கற்கநெடுஞ்செருக்களத்தினென்னைக்
கொன்றாய்நீயன்றேநின்னைக்கொல்லுமேற்குணங்கடயோன். (உ௩)

இறந்தனையென்றபோதுமிருந்தியானரக்கரென்பார்
திறந்தனையுலகினீக்கிப்பின்னுயிர்தீர்வெனேனும்
புறந்தருபண்பினுயவுயிரொடும்பொருந்தினேனை
மறந்தனின்வலியனென்பாராதலாலஃதுமாட்டேன். (உ௪)

அழிவனசெய்தாயையவன்பினுளளியற்றேனுக்
கொழிவருமுதவிசெய்தவுன்னையானொழியவாழ்தல்
எழுவதுவெள்ளந்தன்னினீண்டோர்பேரெஞ்சாதேகிச்
செழுங்கரடையினன்றேவித்துயர்தீர்வதென்றான். (உ௫)

இராவணன் மகுடங்களை சுக்கிரீவன் கிரகித் திராமனையடைதல்.

என்றவனிரங்குங்காலத்திருவருமொருவர்தம்மில்
வென்றிலர்தோற்றிலாராய்வெஞ்சமம்விளைக்கும்வேலை
வன்றிறலரக்கன்மௌலித்தனிமணி † வலியால்வாங்கிப்
பொன்றினனுகினன்றென்றவன்வெட்கவிவனும்போந்தான். (உ௬)

† வாயில்வாங்கி என்றும் பாடம்.

கொழுமணிமுடிகடோறுங்கொண்டனகுழுவின்கூட்டம்
அழுதயருறுகின்றான்றனடித்தலமதனிற்சூட்டித்
தொழுதயனாணிநின்றான்றாயவரிருவரோடும்
எழுபதுவெள்ளயாக்கைக்கோருயிரெய்திற்றன்றே. (உ௭)

என்புறக்கிழிந்தபுண்ணினிழிபெருங்குருதியோடும்
புன்புலத்தரக்கன்றன்னைத்தீண்டியதீமைபோக
அன்பனையமரப்புல்லிமஞ்சனமாட்டிவிட்டான்
தன்பெருநயனமென்னுந்தாமரைசொரியுநீரால். (உ௮)

சுக்கிரீவனைப்பார்த் திராமன்கூறுதல்.

ஈர்கின்றதன்றேயென்றனுள்ளத்தையிங்குமங்கும்
பேர்கின்றதாவியாக்கைபெயர்கின்றதில்லைப்பின்னைத்
தேர்கின்றசிந்தையொன்றோதிகைத்தனையென்றுதெண்ணீர்
சோர்கின்றவருவிக்கண்ணான்றுணைவனைநோக்கிச்சொல்லும். (உ௯)

கல்லினும்வலியதோளாய்நின்னையக்கருணையில்லோன்
கொல்லுதல்செய்தானாகிற்கொடுமையாற்குற்றம்பேணிப்
பல்பெரும்பகழிமாரிவேரொடும்பறியநூறி
வெல்லினுந்தோற்றேன்யானேயல்லனோவிளிந்திலாதேன். (௩௦)

பெருமையும்வண்மைதானும்பேரெழிலாண்மைதானும்
ஒருமையினுணரநோக்கிற்பொறையினதாற்றமன்றே
அருமையுமடர்ந்துநின்றபழியையுமயர்ந்தாய்போல
இருமையுங்கெடுத்தாயன்றேயென்னினைந்தென்செய்தாய்நீ. (௩௧)

இந்நிலைவிரைவினெய்தாதித்துணைதாழ்த்தியாயின்
நன்னுதற்சீதையாலென்ஞாலத்தாற்பயனென்னம்பி
உன்னையான்றொடர்வெனென்னைத்தொடருமிவ்வுலகமென்றால்
பின்னையெனிதனைநோக்கிவிளையாடிப்பிழைப்பச்செய்தாய். (௩௨)

என்றனனென்றலோடுமிணையடியிறைஞ்சியாங்குக்
குன்றுறழ்குவவுத்திண்டோட்கொற்றவல்வீரற்காணத்
தன்றனியுள்ளநாணுற்றழல்விழிக்கொலைவெஞ்சீயம்
நின்றெனவெருத்தங்கோட்டிநிலனுறநோக்கிக்கூறும். (௩௩)

காட்டிலேகழுகின்வேந்தன்செய்தனகாட்டமாட்டேன்
நாட்டிலேகுகனார்செய்தநன்மையைநயக்கமாட்டேன்
கேட்டிலேனின்றுகண்டுங்கிளிமொழிமாதராளை
மீட்டிலேன்றலைகள்பத்துங்கொணர்ந்திலேன்வெறுங்கைவந்தேன். (௩௪)

வன்பகைநிற்கவெங்கள்வானரத்தொழிலுக்கேற்ற
புன்பகைகாட்டும்யானோபுகழ்ப்பகைக்கொருவன்போலாம்

என்பகைதீர்த்ததென்றல்லயரசொடுமெனக்குத்தந்த
உன்பகையுனக்குத்தந்தேனுயிர்சுமந்துழலாநின்றேன். (௩௫)

செம்புக்குஞ்சிவந்தசெங்கட்டிசைநிலைக்களிற்றின்சீற்றக்
கொம்புக்குங்குறைந்ததுண்டேயென்னுடைக்கரக்குப்புண்டோள்
அம்புக்குமுன்னஞ்சென்றனரும்பகைமுடிப்பலென்று
வெம்புற்றமனமும்யானுந்நீதின்றிமீளவந்தேன். (௩௬)

நூல்வலிகாட்டுஞ்சிந்தைநும்பெருந்தூதன்வெம்போர்
வேல்வலிகாட்டுவோர்க்கும்வில்வலிகாட்டுவோர்க்கும்
வால்வலிகாட்டிப்போந்தவளநகர்புக்குமற்றென்
கால்வலிகாட்டிப்போந்தேன்கைவலிக்கவதியுண்டோ. (௩௭)

சுக்கிரீவனை விபீடணன் வியந்துரைத்தல்.

இன்னனபலவும்பன்னியிறைஞ்சியமுடியனாகி
மன்னவர்மன்னன்முன்புவானரமன்னனிற்ப
அன்னவன்றன்னைநோக்கியழகனைநோக்கியாழி
மின்னெனவிளங்கும்பைம்பூண்வீடணன்விளம்பலுற்றான். (௩௮)

வாங்கியமணிகளன்றோன்றலைமிசைமௌலிமேலே
ஓங்கியவல்லவோமற்றினியப்பாலுயர்ந்ததுண்டோ
நீங்கிவன்சிரத்தின்மேலுமுயிரினுஞ்சீரிதம்மா
வீங்கியபுகழையெல்லாம்வேரொடும்வாங்கிவிட்டாய். (௩௯)

பாரகஞ்சுமந்தபாம்பின்பணாமணிபறிக்கவேண்டின்
வார்கழற்காலினாலேகல்லவல்லவனைமுன்னாத்
தார்கெழுமௌலிபத்தின்றனிமணிவலிதிற்றந்த
வீரதைவிடைவலோற்குமுடியுமோவேறுமுண்டோ. (௪௦)

கருமணிகண்டத்தான்றன்சென்னியிற்கறைவெண்டிங்கள்
பருமணிவண்ணன்மார்பிற்செம்மணிபறித்திட்டாலும்
தருமணியிமைக்குந்தோளாய்தசமுகன்முடியிற்றைத்த
திருமணிபறித்துத்தந்தவென்றியேசீரிதன்றோ. (௪௧)

தொடிமணியிமைக்குந்தோளாய்சொல்லினும்வேறுமுண்டோ
வடிமணிவயிரத்தொள்வாள்சிவன்வயின்வாங்கிக்கொண்டான்
முடிமணிபறித்திட்டாயோவவனினிமுடிக்கும்வென்றிக்
* கடிமணியிட்டாயன்றேயரிகுலத்தரசவென்றான். (௪௨)

வென்றியென்றென்றுமன்றுவீரர்க்குவிளம்பத்தக்க
நன்றியென்றென்றுமன்றுநானிலமெயிற்றிற்கொண்ட

* கடிமனையென்றும் பாடம்.

பன்றியன்றாகினீதாரியற்றுவார்பரிவினென்று
இன்றிதுவென்றியென்றென்றிராமனுமிரங்கிச்சொன்னான். (௪௩)

தன்றனிப்புதல்வன்வென்றித்தசமுகன்முடியிற்றைத்த
மின்றளிர்த்தனையபன்மாமணியினைவெளியிற்கண்டான்
ஒன்றொழித்தொன்றாமென்றவ்வரக்கனுக்கொளிப்பான்போல
வன்றனிக்குன்றுக்கப்பாலிரவியுமறையப்போனான். (௪௪)

கங்குல்வந்திறுத்தகாலைக்கைவிளக்கெடுப்பக்காவல்
வெங்கழலரக்கன்மௌலிவிளக்கமேவிளக்கஞ்செய்யச்
செங்கதிர்ச்செல்வன்செயதவென்றியைமறையதேக்கிப்
பொங்கியதோளினானுமிழிந்துபோயிருக்கைபுக்கான். (௪௫)

* என்றானுமினையதன்மையெய்தாதவிலங்கைவேந்தன்
நின்றார்கடேவர்கண்டாரென்பதோர்நாணநீள
அன்றாயமகளிர்நோக்கமாடவர்நோக்கமாகப்
பொன்றாதுபொன்றினான்றன்புகழெனவிழிந்துபோனான். (௪௬)

௧௧ - வது, மகுடபங்கப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௮௧௧.

௧௨ - வது, அணிவகுப்புப்படலம்.

மானத்தானல்லற்பட்டமருமத்தான்வதனமெல்லாம்
கூனற்றாமரையிற்றோன்றவான்றொங்கோயில்புக்கான்
† பானத்தானல்லன்றெய்வப்பாடலானலலனூடற்
றானத்தானல்லன்மெல்லென்சயனத்தானுறையுந்தாரான். (௧)

வய்யம்விற்றானுநேராமணியிழந்தனனேமானும்
பய்யணைத்துயிர்க்கும்வெவ்வாய்ப்பஃறலைப்பாம்பின்பாலின்
மெய்யணைத்திரையின்வேலைமென்மலர்ப்பள்ளியான
அய்யனைப்பிரிந்துவைகுமநந்தனேயரக்கர்வேந்தன். (௨)

தாயினும்பழகினாருந்தன்னிலைதெரிக்கலாகா
மாயைவல்லுருவத்தான்முன்வருதலும்வாயில்காப்பான்

* என்றானும்-எப்பொழுதும்.
† பானத்தான்-வெறிபானங்களையுண்பவன். அல்லன்-அல்லாதவன்.

சேயவர்சேனைநண்ணிச்செய்திறந்தெரித்திநீயென்
றேயவனெய்தினானென்றரசனையிறைஞ்சிச்சொன்னான். (௩)

அழையெனவெய்திப்பாதம்வணங்கியவறிஞன்றன்னைப்
பிழையறவறிந்தவெல்லாமுரைத்தியென்றரக்கன்பேச
முழையுறுசீயமன்னான்முகத்தினாலகத்தைநோக்கிக்
குழையுறுமெய்யன்பையவரன்முறைகூறலுற்றான். (௪)

* வீரியவிதியினெய்திப்பதினெழுவெள்ளத்தோடும்
மாருதிமேலைவாயிலுழிஞைமேல்வருவதானான்
ஆரியனமைந்தவெள்ளமத்தனையோடுமேற்றிச்
சூரியன்மைந்தன்றன்னைப்பிரியலனிற்கச்சொன்னான். (௫)

அன்றியும்பதினேழ்வெள்ளத்தரியொடுமரசன்மைந்தன்
தென்றிசைவாயில்செய்யுஞ்செருவெலாஞ்செய்வதானான்
ஒன்றுபத்தாறுவெள்ளத்தரியொடுந்துணைவரோடும்
நின்றனனீலனென்பான்குணதிசைவாயினேற்றி. (௬)

† இம்பரினியைந்தகாயுங்கனியுங்கொண்டிரண்டுவெள்ளம்
வெம்புவெஞ்சேனைக்கெல்லாமுணவுதந்துதவவிட்டான்
உம்பியைவாயிறோறுநிலைதெரிந்துணரச்சொன்னான்
தம்பியுந்தானுநிற்பதாயினான்சமைவீதென்றான். (௭)

சார்த்தூலனிதனைச்சொல்லத்தழுதெறிதறுகணானும்
பார்த்துளிவாடைபொங்கப்பவெதுபமோபார்த்தி
போர்த்துளிதுடைப்பெருளையவருடற்பொறையினின்றும்
தேர்த்தூருகுருதிதன்னாலென்றனனெயிறுதின்னா. (௮)

மாவணைநீலக்குன்றத்திளவெயில்வளர்ந்ததன்னத்
தூவணைக்குருதிச்செக்கர்ச்சுவடுறப்பொலந்தந்தாளான்
ஏவணைவரிவிற்காமன்கணைபடவெரியாநின்ற
பூவணையாற்றவேறோர்புனைமணியிருக்கைபுக்கான். (௯)

செய்வனமுறையினெண்ணித்திறந்திறமுறையிற்றேறும்
‡ மய்யறுமரபின்வந்தவமைச்சரைவருகவென்றான்
பொய்யெனப்பளிங்கினாயவிருக்கையின்புறத்தைச்சுற்றி
அய்யிரண்டாயகோடிப்பேய்க்கணங்காப்பவாக்கி. (௧௦)

அளந்தறிவரியராயவமைச்சரையடங்கநோக்கி
வளைந்ததுகுரங்கின்சேனைவாயில்கடோறும்வந்து
விளைந்ததுபெரும்போரென்றுவிட்டதுவிடாதுநம்மை
உளைந்தனவென்னவெண்ணியென்செயற்குரியவென்றான். (௧௧)

---

* வீரிய - சௌரியமுடையாய். † இம்பரின் - இவ்வுலகில்.
‡ மய்யறு - களங்கமற்ற.

எழுபதுவெள்ளத்துற்றகுரங்கினமெயிலைமுற்றும்
தழுவினவென்றுசெய்யத்தக்கதுசமைதிபோலாம்
அழுவநீர்வேலையன்னதாயிரவெள்ளமன்றே
உழிஞையைத்தொடக்கநோக்கினுச்சிகைக்கொண்டதுன்னார். (கஉ)

எழுமழுத்தண்டுவேல்வாளிலைநெடுஞ்சூலம்வென்றி
முழுமுதற்படைகளேந்தியிராக்கதர்முனைந்தபோது
தொழுதுதம்படைகண்முன்னிட்டோடுவார்சுரர்களென்னின்
விழுமிதுகுரங்குவந்துவெறுங்கையாற்கொள்ளும்வென்றி. கங)

ஈதிவர்நிகழ்ச்சியென்றுவெரிவிழித்திடியினக்குப்
பூதலத்தடித்தகையணிகும்பனென்றொருவன்பொங்கி
வேதனைக்காமமந்தோவேரொடுங்கெடுத்ததென்ன
மாதுலத்தலைவன்பின்னுமன்பினோர்மாற்றஞ்சொன்னான். (கச)

புக்கெரிமடுத்திவ்வூரைப்பொடிசெய்துபோயினாற்குச்
சக்கரமுண்டோகையிற்றசமுகன்றலைகளான
இக்கிரிபத்தின்மௌலியினமணியிடந்துகொண்ட
சுக்கிரிவற்குமுண்டோசூலமும்வாளும்வேலும். (கரு)

தொடைக்கலந்திராமன்வாளிதோன்றுதன்முன்னந்தோன்றா
இடைக்கலம,நதல்செய்யுமுலையினுடன்னையீந்து
படைக்கலமுடையநாமப்படையிலாப்படையையீண்ட
அடைக்கலம்புகுவதல்லாலினிப்புகுமரணுமுண்டோ. (கசு)

என்புழிமாலிதன்னையெரியெழநோக்கியென்பால்
வன்பழிதருதிபோலாம்வரன்முறையறியாவார்த்தை
அன்பழிசிந்தைதன்னாலடாதனவறையலென்றான்
பின்பழியெய்தநின்றானவன்பின்னைப்பேச்சுவிட்டான். (கஎ)

காட்டியகாலகேயர்கொழுநிணக்கற்றைகாலத்
தீட்டியபடக்கைவீரசேனையின்றலைவதெள்ளி
ஈட்டியபடைஞரோடுமிருநூறுவெள்ளங்கொண்டு
கீட்டிசைவாயினிற்றிநின்பெருங்கிளையினோடும். (கஅ)

காலன்றன்களிப்புத்தீர்த்தமகோதரக்காளையேபோய்
மாலொன்றுமனத்துவீரமாபெரும்பக்கனோடும்
கூலங்கொள்குரங்கையெல்லாங்கொல்லுதிவெள்ளமான
நாலைம்பதோடுஞ்சென்றுநமன்றிசைவாயினண்ணி. (ககூ)

ஏற்றமென்சொல்லினென்பாலிந்திரன்பகைஞவந்நாள்
காற்றினுக்கரசன்மைந்தன்கடுமைநீகண்டதன்றோ
நூற்றிரண்டாயவெள்ளநும்பெரும்படைஞர்சுற்ற
மேற்றிசைவாயிற்சேர்திவிடிவதன்முன்னம்வீர. (உ0)

இங்கெங்காலமெல்லாமிமையவர்க்கிறுதிகண்டாய்
புன்னெங்குரங்கிற்சேறல்புல்லிதுபுகழுமன்றால்
அங்கெமூலத்தானையதனெடுமமைச்சரோடும்
தொன்னெடுகரிகாக்கவிருப்பாக்கவென்னச்சொன்னான். (உக)

கடகரிபுரவியாடேர்கமலத்தோனுலகுக்கிப்பால்
புடையுளபொருதுகொண்டுபோர்பொரப்பொங்குகின்ற
இடையிடையிடைந்தசேனையிருநூறுவெள்ளங்கொண்டு
வடதிசைவாயில்காப்பேன்யானெனவகுத்துவிட்டான். (உஉ)

கலங்கியகங்குலாகிநீங்கியகற்பங்காணும்
நலங்கிளர்தேவர்க்கேயோநான்மறைமுனிவர்க்கேயோ
பொலங்கெழுசீதைக்கேயோபொருவலியிராமற்கேயோ
இலங்கையர்வேந்தற்கேயோவெல்லார்க்குஞ்செய்தவின்பம். (உ௩)

அளித்தகையில்லாவாற்றலமைந்தவன்கொடுமையஞ்சி
வெளிப்படவரிதென்றுன்னிவேதனையுழக்கும்வேலை
களித்தவர்க்களிப்புநீங்கக்காப்பவர்தம்மைக்கண்ணுற்
றொளித்தவர்வெளிப்பட்டன்னகதிரவனுதயஞ்செய்தான். (உச)

* உளைப்புறுமோதவேலையோங்கலையொடுங்கத்தூர்ப்ப
அளப்பருந்துளிச்சுண்ணமாசைகளலைப்பப்பூசல்
இளைப்பருந்தலைவர்முன்னமேவலினெயிலைமுற்றும்
வளைத்தனர்விடியத்தத்தம்வாயில்கடோறும்வந்து. (உரு)

† தந்திரமிலங்கைமூதூர்மதிலினைத்தழுவித்தாவி
அந்தரக்குலமீன்சிந்தவண்டமுங்கிழியவார்ப்பச்
செந்தனிச்சுடரோன்சேயுந்தம்பியுமுன்புசெல்ல
இந்திரன்றெழுதுவாழ்த்தவிராமனுமெழுந்துசென்றான். (உசு)

நூற்கடற்புலவராலுநுனிப்பரும்வலத்ததாய
வேற்கடற்றானையானவிரிகடல்விழுங்கிற்றேனும்
கார்க்கடல்புறத்ததாகக்கவிக்கடல்வளைந்தகாட்சி
பாற்கட ‡ லழுவத்துள்ளதொத்ததப்பதகன்மூதூர். (உஎ)

அலகிலாவரக்கன்சேனையகப்படவரியின்றானை
வலைகொலாமென்னச்சுற்றிவளைத்ததற்குவமைகூறின்
கலைகுலாம்பரவையேழுங்கால்கிளர்ந்தெழுந்தகாலத்
துலகெலாமொருங்குகூடியொதுங்கினவேயுமொத்த. (உஅ)

கஉ - வது, அணிவகுப்புப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கககக.

---

* உளைப்புறும்-சலிப்பினையுடைய.

† தந்திரம்-வானரசேனை. ‡ அழுவத்து-நாட்டில்.

௧௮-வது, அங்கதன்றூதுப்படலம்.

வள்ளலும்விரைவினெய்திவடதிசைவாயின்முற்றி
வெள்ளமோரேழுபத்துக்கணித்தவன்சேனையோடும்
கள்ளனைவரவுநோக்கிநின்றனன்கணக்கிலாதான்
ஒள்ளியதுணர்ந்தேயென்னவீடணற்குரைப்பதானான். (௧)

இராமன் இராவணன்பாற் தூதனுப்பவிழைதல்.

தூதுவனொருவன்றன்னையிவ்வழிவிரைவிற்றூண்டி
மாதினைவிடுதியோவென்றுணர்த்தவேமறுக்குமாகின்
காதுதல்கடனென்றுள்ளங்கருதியதறனுமஃதே
நீதியுமஃதேயென்றான்கருணையினிலயமன்னான். (௨)

இலக்குமணன் மறுத்துரைத்தல்.

அரக்கர்கோனதனைக்கேட்டானழகிற்றேயாகுமென்றான்
குரக்கினத்தலைவனின்றான்கொற்றவர்க்குற்றதென்றான்
இரக்கமதிழுக்கமென்றானிளையவனினிநாமம்பு
துரக்குவதல்லால்வேறோர்சொல்லுண்டோவென்னச்சொன்னான். (௩)

தேசியைச்சிறையில்வைத்தான்றேவரையிடுக்கண்செய்தான்
பூசுரர்க்கலக்கணீந்தான்மன்னுயிர்புடைத்துத்தின்றான்
ஆசையினளவுமெல்லாவுலகமுந்தானேயாள்வான்
வாசவன்றிருவுங்கொண்டான்வழியலாவழிமேற்செல்வான். (௪)

வாழியாய்நின்னையன்றுவரம்பறுதுயரின்வைகச்
சூழ்விலாமாயஞ்செய்துன்றேவியைப்பிரிவுசூழ்ந்தான்
ஏழைபாலிரக்கநோக்கியொருதனியிகன்மேற்சென்ற
ஊழிகாண்கிற்கும்வாணாளுந்தையையுயிர்பண்டுண்டான். (௫)

அன்னவன்றனக்குமாதைவிடினுயிரருளுவாயேல்
என்னுடைநாமகிற்குமளவெலாமிலங்கைமூதூர்
மன்னவனீயேயென்றுவந்தடைந்தவற்குவாயால்
சொன்னசொலென்னாமுன்னஞ்சூளுறவென்னாந்தோன்றல். (௬)

அறந்தருதவத்தையாயுமறிவினாலவற்றைமுற்றும்
மறந்தனையெனினுமற்றிவிலங்கையின்வளமைநோக்கி
இறந்ததுபோதறீதென்றிரங்கினையெனினுமெண்ணின்
சிறந்ததுபோரேயென்றான்சேவகன்முறுவல்செய்தான். (௭)

இராமனிலக்குமணனுக்குச் சமாதானமுரைத்தல்.

அயர்த்திலன்முடிவுமஃதேயாயினுமறிஞராய்ந்த
நயத்துறைநூலினீதிநாந்துறந்தமைதனன்றே
புயத்துறைவலியரேனும்பொறையொடும்பொருந்திவாழ்தல்
சயத்துறையறனுமஃதேயென்றிவைசமையச்சொன்னான். (௮)

மாருதியின்னுஞ்செல்லின்மற்றிவனன்றிவந்து
சாருதல்வலியாரில்லையென்பதுசாலுமன்றே
யாரினியேகத்தக்காரங்கதனமையுமொன்னார்
வீரமேவிளைப்பரேனுந்தீதின்றிமீடல்வல்லான். (௯)

அங்கதனை நீ தூதுபோதி யென்றல்.

நன்றெனவவனைக்கூவிநம்பிநீநண்ணலார்பால்
சென்றிரண்டுரையினொன்றைச்செப்பினைதிரிதியென்றான்
அன்றவனருளப்பெற்றவாண்டகையலங்கற்பொற்றோள்
குன்றினுமுயர்ந்ததென்றால்மனநிலைகூறலாமே. (௧௦)

இராவணற்கிவைகளை யுரைத்தியெனல்

என்னவற்குரைப்பதென்னவேந்திழையாளைவிட்டுத்
தன்னுயிர்பெறுதனன்றேவன்றெனிற்றலைகள்பத்தும்
சின்னபின்னங்கள்செய்யச்செருக்களஞ்சேர்தனன்றே
சொன்னவையிரண்டினொன்றேதுணிகெனச்சொல்லிடென்றான். (௧௧)

அறத்துறையன்றுவீரர்க்கழகுமன்றாண்மையன்று
மறத்துறையன்றுசேமமறைந்துறைந்தொதுங்கிவாழ்தல்
நிறத்துறவாளிகோத்துநேர்வந்துநிற்குமாகின்
புறத்துறவெதிரேவந்துபோர்தரப்புகறியென்றான்.

பார்மிசைவணங்கிச்சீயம்விண்மிசைப்படர்வதேபோல்
வீரன்வெஞ்சிலையிற்கோத்தவம்பெனவிசையிற்போனான்
மாருதியல்லனாகினீயெனுமாற்றம்பெற்றேன்
ஆரினியென்னோடொப்பாரென்பதோரின்பமுற்றான். (௧௩)

அங்கதனிராவணன் சபையடைதல்.

அயில்கடந்தெரியநோக்குமரக்கரைக்கடக்கவாழித்
துயில்கடந்தயோத்திவந்தான்சொற்கடவாததூதன்
வெயில்கடந்திலாதகாவன்மேருவின்மேலுநீண்ட
எயில்கடந்திலங்கையெய்தியரக்கனதிருக்கைபுக்கான். (௧௪)

அழுகின்றகண்ணராகியநமன்கொலென்னவஞ்சித்
தொழுகின்றசுற்றஞ்சுற்றுஞ்சொல்லியதுறைகடோறும்

மொழிகின்றவீரன்வார்த்தைமுகங்தொறுஞ்செவியின்மூழ்க
எழுகின்றசேனைநோக்கிவியந்திருந்தானைக்கண்டான். (கரு)

கல்லுண்டுமரமுண்டேழைக்கடலொன்றுங்கடந்தேமென்னும்
சொல்லுண்டேயிவனைவெல்லத்தோற்றத்தோர்கூற்றமுண்டே
எல்லுண்டபடைகைக்கொண்டானெதிருண்டேயிராமன்கையில்
வில்லுண்டேயுண்டென்றெண்ணியாற்றவும்வியந்துநின்றான். (கசு)

இன்றிவன்றன்னைமெய்தநோக்கினேற்கெதிர்ந்தபோரில்
வென்றவென்றுறைமார்பின்வில்லின்மேற்கணையொன்றேவிக்
கொன்றவன்றானேவந்தானென்றுடன்குறிப்பினல்லால்
ஒன்றிவன்றன்னைவெல்லவல்லரோவுயிர்க்குநல்லார். (கஎ)

அணிபறித்தழகுசெய்யுமணங்கின்மேல்வைத்தவாசைப்
பிணிபறித்தவனையாவர்முறிப்பவர்படிக்கட்பேழ்வாய்ப்
பணிபறித்தெழுந்தமானக்கலுழனிவனைப்பற்றி
மணிபறித்தெழுந்தவெந்தையாரினும்வலியனென்றான். (கஅ)

அங்கதனிராவணனெதிரே சென்றுநிற்றல்.

நெடுந்தகைவிடுத்ததூதனிவையிவைநிரம்பவெண்ணிக்
கடுங்கனல்விடமுங்கூற்றுங்கலந்துகால்கரமுங்காட்டி
விடுஞ்சுடர்மகுடமின்னவிரிகடலிருந்ததென்னக்
கொடுந்தொழின்மடங்கலன்னானெதிர்சென்றுகுறுகிநின்றான். (கக)

இராவணனங்கதனை நீயாரெனல்.

நின்றவன்றன்னையன்னானெருப்பெழநிமிரப்பார்த்திங்
கின்றிவண்வந்தநீயாரெய்தியகருமமென்னை
கொன்றிவர்தின்னாமுன்னங்கூறுதிதெரியவென்றான்
வன்திறல்வாலிசேயும்வாளெயிறிலங்கநக்கான். (உ0)

அங்கதன் தன்னையுணர்த்தல்.

பூதநாயகனீர்சூழ்ந்தபுவிக்குநாயகனப்பூமேல்
சீதைநாயகன்வேறுள்ளதெய்வநாயகனீசெப்பும்
வேதநாயகன்மேனின்றவிதிக்குநாயகன்றான்விட்ட
தூதன்யான்பணித்தமாற்றஞ்சொல்லியவந்தேனென்றான். (உக)

அரன்கொலாமரிகொலாமற்றயன்கொலாமென்பாரன்றிக்
குரங்கெலாங்கூட்டிவேலைக்குட்டத்தைச்சேதுகட்டி
இரங்குவானுகினின்னமறிதியென்றுன்னையேவும்
நரன்கொலாமுலகநாதனென்றுகொண்டரக்கனக்கான். (உஉ)

கங்கையும்பிறையுஞ்சூடுங்கண்ணுதல்கரத்துநேமி
சங்கமுந்தரித்தமான்மற்றிந்நகர்தன்னைச்சாரார்

அங்கவர் தம்மையன்றிமனிதனுக்காகவஞ்சா
திங்குவந்திதனைச்சொன்ன தூதனீயாவனென்றான். (௨௩)

இந்திரன்செம்மல்பண்டோரிராவணனென்பான்றன்னைச்
சுந்தரத்தோள்களோடும்வாலிடைத்தூங்கச்சுற்றிச்
சிந்துரக்கிரிகடாவித்திரிந்தனன்றேவருண்ண
மந்தரக்கிரியால்வேலைகலக்கினான்மைந்தனென்றான். (௨௪)

இராவணன் அங்கதனைப்புகழ்தல்.

உந்தையென்றுணைவனன்றேயோங்கறஞ்சான்றுமுண்டால்
நிந்தனையிதன்மேலுண்டேநீயவன்றூதனாதல்
தந்தனனினக்கியானேவானரத்தலைமைதாழா
வந்தனைநன்றுசெய்தாயென்னுடைமைந்தவென்றான். (௨௫)

தாதையைக்கொன்றான்பின்னேதலைசுமந்திருகைநாற்றிப்
பேதையனென்னவாழ்ந்தாயென்பதோர்பிழையுந்தீர்ந்தாய்
சீதையைப்பெற்றேனுன்னை-சிறுவனுமாகப்பெற்றேன்
ஏதெனக்கரியதென்றானிறுதிநாற்கெல்லைகண்டான். (௨௬)

இராவண னங்கதனுக்கு முடிசூட்டுகின்றே னென்றல்.

அந்நரரின்றுநாளையழிவதற்கையமில்லை
உன்னரசுனக்குத்தந்தேனூழியூழிகாலம்
பொன்னரிசுமந்தபீடத்திமையவர்போற்றிசெய்ய
மன்னவனாகயானேசூட்டுவன்மகுடமென்றான். (௨௭)

அங்கதனதனைக்கேளாவங்கையோடங்கைதாக்கித்
துங்கவன்றோளுமார்புமிலங்கையுந்துளங்கநக்கான்
இங்குநின்றார்கட்கெல்லாமிறுதியேயென்பதன்னி
நுங்கள்பானின்றுமெம்பாற்போந்தனனும்பியென்றான். (௨௮)

அங்கதன் இராவணனை யிகழ்தல்.

வாய்தரத்தக்கசொல்லியென்னையுன்வசஞ்செய்வாயேல்
ஆய்தரத்தக்கதன்றோதூதுவந்தரசதாள்கை
நீதரக்கொள்வேன்யானேயிதற்கினிநகர்வேறெண்ணின்
நாய்தரக்கொள்ளுஞ்சீயநல்லரசென்றுநக்கான். (௨௯)

இராவணன் அங்கதனை நீவந்தகாரிய முரையெனல்.

அடுவனேயென்னப்பொங்கியோங்கியவரக்கனந்தோ
தொடுவனேகுரங்கைச்சீறிச்சுடர்ப்படையென்றுதோன்றா
நடுவனேசெய்யத்தக்கநாளுலந்தாற்குத்தூத
படுவதேதுணிந்தாயாயின்வந்ததுபகர்தியென்றான். (௩0)

அங்கதன் தான்வந்த காரியமுரைத்தல்.

கூவியின்றென்னைநீபோய்த்தன்குலமுழுதுங்கொல்லும்
பாவியையெய்தியஞ்சியரண்புக்குப்பதுங்கினானைத்
தேவியைவிடுகவன்றேற்செருக்களத்தெதிர்ந்துதன்கண்
ஆவியைவிடுகவென்றானருளினம்விடுகிலாதான். (௩௧)

பருந்துணப்பாட்டியாக்கைபடுத்தநாள்படைஞரோடும்
மருந்தினுமினியமாமன்மடிந்தநாள்வனத்துள்வைகி
இருந்துழிவந்தநங்கையிருஞ்செவிமுலையுமூக்கும்
அரிந்தநாள்வந்திலாதானினிச்செய்யுமாண்மையுண்டோ. (௩௨)

கிளையொடும்படைஞரோடுங்கேடிலாவுயிர்கட்கெல்லாம்
களையனதம்பிமாரைவேரொடுங்களையக்கண்டும்
இளையவன்பிரியமாயமியற்றியேகொண்டுபோய
வளையெயிற்றரக்கன்வெம்போர்க்கினியிவண்வருவதுண்டோ. (௩௩)

ஏந்திழைதன்னைக்கண்ணுற்றெதிர்ந்தவர்தம்மையெற்றிச்
சாந்தெனப்புதல்வன்றன்னைத்தரையிடைத்தேய்த்துத்தன்னூர்
காந்தெரிமடுத்துத்தானுங்காணவேகடலைத்தாவிப்
போந்தபின்வந்திலாதானினிப்பொரும்போருமுண்டோ. (௩௪)

உடைக்குலத்தொற்றர்தம்பாலுயிர்கொடுத்துள்ளக்கள்ளம்
துடைத்துழிவருணன்வந்துதொழுதுழிதொழாதகொற்றக்
குடைத்தொழிலும்பிகொள்ளக்கொடுத்துழிவேலைகோலி
அடைத்துழிவந்திலாதானினிவரவையமுண்டோ. (௩௫)

மறிப்புண்டதேவர்காணமணிவரைத்தோளின்வைகும்
நெறிப்புண்டரீகமன்னமுகத்தியர்முன்னேநென்னல்
பொறிப்புண்டரீகம்போலுமொருவனாற்புனைந்தமோலி
பறிப்புண்டும்வந்திலாதானினிப்பொரும்பான்மையுண்டோ. (௩௬)

என்றிவையியம்பிவாவென்றேவினனென்னையெண்ணி
ஒன்றுனக்குறுவதுன்னித்துணிந்துரையுறுதிபார்க்கின்
துன்றிருங்குழலைவிட்டுத்தொழுதுவாழ்சுற்றத்தோடும்
பொன்றுதியாயினென்பின்வாயிலிற்புறப்படென்றான். (௩௭)

நீரிலேபட்டுச்சூழ்ந்தநெருப்பிலேபட்டுநீண்ட
பாரிலேபட்டுவானப்பரப்பிலேபட்டவெல்லாம்
போரிலேபட்டுவீழப்பொருதநீயொளித்துப்புக்குன்
ஊரிலேபட்டவென்றாற்பழியெனவுளையச்சொன்னான். (௩௮)

வேறு.

சொற்றவார்த்தையைக்கேட்டலுந்தொல்லுயிர்
முற்றுமுண்பதுபோலுமுனிவினன்
பற்றுமின்கடிதின்னெடும்பார்மிசை
எற்றுமின்னெனநால்வரையேவினன். (௩௯)

ஏவினன்பிடித்தாரையெடுத்தெழத்
தாவினனவர்தந்தலைபோயறக்
கூவினனவன்கோபுரவாயிலில்
தூவினன்றுகைத்தானிவைசொல்லினன். (௪௦)

ஏமஞ்சாரவெளியவர்யாவிரும்
தூமங்கால்வனவீரன்சுடுசரம்
வேமின்போல்வனவீழ்வதன்முன்னமே
போமின்போமின்புறத்தென்றுபோயினன். (௪௧)

அங்கதன்மீண்டிராமனையடைதல்.

அந்தரத்திடையார்த்தெழுந்தானவன்
சிந்துரத்தந்துதைந்தெழுஞ்செச்சையான்
இந்துவிண்ணின்றிழிந்துளதாமென
வந்துவீரனடியின்வணங்கினன். (௪௨)

உற்றபோதவனுள்ளக்கருத்தெலாம்
கொற்றவீரனுணர்த்தென்றுகூறலும்
முற்றவோதியென்மூர்க்கன்முடித்தலை
அற்றபோதன்றியாசையறுனென்றான். (௪௩)

௧௩ - வது, அங்கதன்றூதுப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௧௬௨.

கஎ - வது, முதற்போர்ப்படலம்.

பூசலேபிறிதில்லையெனப்புறத்
தாசைதோறுமுரசமறைந்தெனப்
பாசறைப்பறையின்னிடம்பற்றிய
வாசனோறுமுறையின்வகுத்திரால். (க)

மற்றுநின்றமலையுமரங்களும்
பற்றுவீரர்பறவையின்மும்முறை
கற்றகைகளினுற்கடிமாநகர்
சுற்றுநின்றவகழியைத்தூர்த்திரால். (உ)

இடுமின்பன்மரமெங்குமியங்கறத்
தடுமின்போர்க்குவருகெனச்சாற்றுமின்
கடுமினிப்பொழுதேகதிர்மீச்செலாக்
கொடுமதிற்குடுமித்தலைகொள்கென்றான். (௩)

தடங்கொள்குன்றுமரங்களுந்தாங்கிய
மடங்கலன்னவவ்வானரமாப்படை
* இடங்கர்மாவிரியப்புனலேறிடத்
தொடங்கிவேலையகழியைத்தூர்த்ததால். (௪)

ஏயவெள்ளமெழுபதுமெண்கடல்
ஆயவெள்ளத்தகழியைத்தூர்த்தலும்
தூயவெள்ளந்துணைசெய்வதாமென
வாயிலூடுபுக்கூரைவளைந்ததே. (௫)

விளையும்வென்றியிராவணன்மெய்ப்புகழ்
முளையினோடுங்களைந்துமுடிப்பபோல்
தளையவிழ்ந்தகொழுந்தடந்தாமரை
வளையம்வன்கையில்வாங்கினவானரம். (௬)

† ஏளை ‡ தாரமியம்பியவண்டுகள்
பாளைதாதுகுநீர்நெடும்பண்ணைய
தாளதாமரையன்னங்கடாவிட
வாளைதாவினவானரந்தாவவே. (௭)

இகழுந்தன்மையனாயவிராவணன்
புகழுமேன்மையும்போயினவாமென

---

* இடங்கர்மா - முதலை.
† ஏளை - ஏழ்ஜ. ஏழாகிய - அழகிய. ‡ தாரம் - இசை.

நிகழுங்கண்ணெடுநீலமுகிழ்த்தவால்
அகழிதானுமழுவனபோன்றவே. (௮)

தண்டிருந்தபைந்தாமரைதாளறப்
பண்டிருந்துசிதையப்படர்சிறை
வண்டிருந்தனவாய்தொறுமுட்டையைக்
கொண்டிருந்தனவன்னக்குழாமெலாம். (௯)

தூறுமாமரமும்மலையுந்தொடர்
நீறுநீர்மிசைசென்றுநெருக்கலான்
ஏறுபேரகழின்னின்றினப்பல
ஆறுசென்றனவார்கலிமேலரோ. (௧௦)

இழுகுமாக்கலிடுந்தொறிடுந்தொறும்
சுழிகடோன்றுஞ்சுரித்திடைதோன்றுதேன்
ஒழுகுதாமரையொத்தனவோங்குநீர்
முழுகிமீதெழுமாதர்முகத்தையே. (௧௧)

தன்மைக்குந்தலையாயதசமுகன்
தொன்மைப்பேரகழ்வானரந்தூர்த்தலால்
இன்மைக்குமொன்றுடைமைக்குமியாவர்க்கும்
வன்மைக்குமொர்வரம்புமுண்டாங்கொலோ. (௧௨)

தூர்த்தவானரஞ்சுள்ளிமடுத்திடச்
சீர்த்தபேரணைதன்னையுஞ்சிந்தின
வார்த்ததன்னமதிலின்வரம்புகொண்
டார்த்தவார்கலிகாரொடுமஞ்சவே. (௧௩)

வட்டமேருவிதுவெனவான்முக
டெட்டநீண்டமதிண்மிசையேறிவிண்
தொட்டவானரந்தோன்றினமீத்தொக
விட்டவெண்கொடிவீங்கினவென்னவே. (௧௪)

இறுக்கவேண்டுவதில்லையெண்டீர்மணி
வெறுக்கையோங்கியமேருவிழுக்கலால்
நிறுக்கநேர்வருவீரர்நெருக்கலால்
பொறுக்கலாதுமதிறரைபுக்கதால். (௧௫)

அறைந்தமாமுரசாணைப்பதாகையால்
மறைந்தவானெனுவானகமாதிரம்
குறைந்ததூளிகுழுமிவிண்ணூடுபுக்
குறைந்ததாங்கவர்போர்க்கெழுமோதையே. (௧௬)

கோடலம்பினகோதையலம்பின
* ஆடலம்பரித்தாருமலம்பின
மாடலம்பினமாமணித்தேர்மணி
பாடலம்பினபாய்மதயானையே. (கள)

அரக்கர்தொல்குலவேரறவல்லவர்
வருக்கம்யாவையும்வாழ்வுறவந்தோர்
கருக்கொள்காலம்விதிகொடுகொட்டிடத்
தருக்கியுற்றெதிர்தாக்கினதானையே. (கஅ)

பற்கொடுங்நெடும்பாதவம்பற்றியும்
கற்கொடுஞ்சென்றதக்கவியின்கடல்
விற்கொடுங்நெடுவேல்கொடும்வேறுள
எற்கொடும்படையுங்கொண்ட † இக்கடல். (ககூ)

அம்புகற்களையள்ளினவம்பெலாம்
கொம்புடைப்பணைகூறுறநூறின
வம்புடைத்தடமாமரமாண்டன
செம்புகச்சுடர்வேற்கணஞ்செல்லவே. (உ0)

மாக்கைவானரவீரர்மலைந்தகல்
தாக்கிவஞ்சர்தலைகடகர்த்தலால்
நாக்கினூடுஞ்செவியினுநாகம்வாழ்
மூக்கினூடுஞ்சொரிந்தனமூளையே. (உக)

‡ அற்களோடெதிர்த்தவரக்கர்தம்
விற்களோடுஞ்சரம்படவெம்புணீர்
பற்களோடுஞ்சொரிதரப்பற்றிய
கற்களோடுமுருண்டகவிகளே. (உஉ)

நின்றுமேருநெடுமதினெற்றியின்
வென்றிவானரவீரர்விசைத்தகல்
சென்றுதீயவராருயிர்சிந்தின
குன்றின்வீழுமுருமின்குழுவினே. (உங)

எதிர்த்தவானரமாக்கையொடிற்றன
மதிற்புறங்கண்டுமெண்ணின்மறைந்தன
கதிர்க்கொடுங்கணரக்கர்கரங்களால்
விதிர்த்தெறிந்தவிலங்கிலைவேலினே. (உச)

---

* ஆடலம்பரி—போருக்குரிய அழகியகுதிரை.
† இக்கடல்-இவ்வசுரசேனையாகிய கடல்.
‡ அற்களோடும்-இருட்டுகள் பின்னிடுகின்ற.

கடித்தகுத்தினகையிற்கழுத்தறப்
பிடித்தவள்ளுகிராற்பிளவாக்கின
இடித்தவெற்றினவெண்ணிலரக்கரை
முடித்தவானரம்வெஞ்சினமுற்றின. (உரு)

எறிந்துமெய்துமெழுமுளைத்தண்டுகொண்
டறைந்தும்வெவ்வயிலாகத்தழுத்தியும்
நிறைந்தவெங்கணரக்கர்நெருக்கலால்
குறைந்தவானரவீரர்குழுக்களே. (உசு)

செப்பிற்செம்புனறோய்ந்தசெம்பொன்மதில்
துப்பிற்செய்ததுபோன்றதுசூழ்வரை
குப்புற்றீர்பிணக்குன்றுசுமந்துகொண்
* டுப்பிற்சென்றவுதிரத்தொழுக்கமே. (உஎ)

வந்திரைத்தபறவைமயங்கின
அந்தரத்தினெருங்கலினங்கொரு
பந்தர்பெற்றதுபோன்றதுபற்றுதல்
இந்திரற்குமரியவிலங்கையே. (உஅ)

தங்குவெங்கனலோடுதயங்கிய
பொங்குவெங்குருதிப்புனற்செக்கர்பூங்
கங்குலன்னகவந்தமுங்கையெடுத்
தங்குமிங்குநின்றாடியவாமரோ. (உகூ)

கொன்னிறக்குருதிக்குடைபுட்களின்
தொன்னிறச்சிறையிற்றுளிதூவலால்
பன்னிறத்தபதாகைப்பரப்பெலாம்
செந்நிறத்தனவாயநிறந்தீர்ந்தவே. (ஙo)

பொழிந்தசோரிப்புதுப்புனல்பொங்கிமீ
வழிந்தமாமதில்கைவிட்டுவானரம்
ஒழிந்தமேருவினும்பர்விட்டிம்பரின்
இழிந்தமாகடலென்னவிழிந்ததே. (ஙக)

† பதனமும்மதிலும்படைநாஞ்சிலும்
கதனவாயிலுங்கட்டியட்டாலையும்
முதலயாவையும்புக்குற்றுமுற்றின
விதனவெங்கணிராக்கதர்வெள்ளமே. (ஙஉ)

பாய்ந்தசோரிப்பரவையிற்பற்பல
நீந்தியேகுநெருக்கிடைச்சிற்சில

---

* உப்பில்-கடலில்.

† பதனம்-பதணம் அது மதிலின்கீழ்மேடை.

சாய்ந்துசாய்ந்துசரம்படத்தள்ளலுற்
றேய்ந்துவீழ்ந்தசிலசிலவோடின. (கங)

தழியவானரமாக்கடல்சாய்தலும்
பொழியவெம்படைப்போர்க்கடலார்த்தலால்
ஒழியுங்காலத்துலகொருங்கொன்றுமொத்
தழியுமாக்கடலார்ப்பெடுத்தாயரோ. (கச)

முரைசுமாமுருடும்முரட்சங்கமும்
உரைசெய்காளமுமாகுளிரியோசையும்
விரைசும்பல்லியம்வில்லரவத்தொடும்
திரைசெய்வேலைக்கொராகுலஞ்செய்ததே. (கரு)

ஆயகாலையனைத்துலகுந்தரும்
நாயகன்முகனுலுநடந்தென
மேயசேனைவிரிகடல்விண்குலாம்
வாயிலூடும்புறப்பட்டுவந்ததே. (கசு)

நெடியகாவதம்விட்டுநிரம்பிய
படியவாயிற்பருப்பதம்பாய்ந்தெனக்
கொடியொடுங்கொடிசுற்றத்தொடுத்ததண்
டொடியவூன்றினமும்மதவோங்கலே. (கஎ)

* சூழியானைமதம்படுதொய்யலின்
ஊழிநாணெடுங்காலனவோடுவ
பாழியாள்வயிரப்படிபன்முறை
பூழியாக்கினபொன்னெடுந்தேர்களே. (கஅ)

பிடித்தவானரம்பேரெழிற்றோள்களால்
இடித்தமாமதிலாடையிலங்கையாள்
மடுத்தமாகடல்வாவுந்திரையெலாம்
குடித்துக்கால்வனபோன்றகுதிரையே. (ககூ)

கேளிர்ஞாலங்கிளத்தியதொன்முறை
நாளுநாளுநடந்தனநள்ளிரா
நீளமெய்தியொருசிறைநின்றன
மீளுமாலையும்போன்றனர்வீரரே. (உ0)

பத்திவன்றலைப்பாம்பின்பரங்கெட
முத்திருட்டின்முகத்தினைமுற்றுறப்
பித்திபிற்படவன்றிசைபேர்வுறத்
தொத்திமீண்டிலவானெடுந்தூளியே. (உக)

* சூழியானை-முகபடாமணிந்தயானை.

நெருக்கிவந்துநிருதர்நெருங்கலால்
குரக்கினப்பெருந்தானைகுலைந்துபோய்
அருக்கன்மாமகனாரமராசையால்
செருக்கிநின்றவனின்றுழிச்சென்றவால். (௪௨)

சாய்ந்ததானைத்தளர்வுஞ்சலித்தெதிர்
பாய்ந்ததானைப்பெருமையும்பார்த்துறக்
காய்ந்தநெஞ்சன்கனல்சொரிகண்ணினன்
ஏய்ந்ததங்கொர்மராமரமேந்தினான். (௪௩)

வாரணத்தெதிர்வாசியினேர்வயத்
தேர்முகத்தினிற்சேவகர்மேற்செறுத்
தோரொருத்தர்க்கொருவரினாற்றுயர்
தோரணத்தொருவன்னெனத்தோன்றினான். (௪௪)

களிறுமாவுநிருதருங்காலற
ஒளிறுமாமணித்தேருமுருட்டிவெங்
குளிறுசோரியொழுகக்கொதித்திடை
வெளிறிலாமரமேகொண்டுவீசினான். (௪௫)

அன்னகாலையரிகுலவீரரும்
மன்னன்முன்புகவண்கணருக்கரும்
முன்னுழந்தமுழங்குபெருஞ்செருத்
தன்னில்வந்துதலைமயக்குற்றனர். (௪௬)

கற்றுரந்தகளம்படவஞ்சகர்
இற்றுலந்துமுடிந்தவரெண்ணிலர்
விற்றுரந்தனவெங்கணையாலுடல்
அற்றுலந்தகுரங்குமனந்தமே. (௪௭)

கற்கடந்துமிர்ந்தகடுஞ்செரு
மற்கடங்கள்வலிந்துமலைந்திடத்
* தற்கடங்கியுலந்தவர்தம்முயிர்
தெற்கடங்கிநிறைந்துசெறிந்தவால். (௪௮)

பாடுகின்றனபேய்க்கணம்பல்விதத்
தாடுகின்ற † வறுகுறையாழ்கடற்
கோடுகின்றவுதிரம்புகுந்துடல்
நாடுகின்றனர்கற்புடைநங்கைமார். (௪௯)

யானைப்பட்டவழிபுனல்யாறெலாம்
பானல்பட்டபலகணைமாரியின்

---

* தற்கு—தருக்கு.
† அறுகுறை-கவந்தம்.

சோனைபட்டதுசொல்லரும்வானரச்
சேனைபட்டதுபட்டதுசெம்புணீர். (ரு0)

காய்ந்தவானரவீரர்கரத்தினால்
தேய்ந்தவாயுளரானவர்செம்புணீர்
பாய்ந்ததானைப்படுகளம்பாழ்படச்
சாய்ந்ததானிருதக்கடற்றானையே. (ருக)

தங்கண்மாப்படைசாய்தலுந்தீயெழு
வெங்கண்வாளரக்கன்விரைதேரினைக்
* கங்கசாலந்தொடரக்கடற்செலூஉம்
வங்கமாமெனவந்தெதிர்தாக்கினான். (ருஉ)

வந்துதாக்கிவடிக்கணைமாமழை
சிந்திவானரச்சேனைசிதைத்தலும்
இந்திராதியருந்திகைத்தேங்கினார்
நொந்துசூரியன்கான்முளைநோக்கினான். (ருங)

நோக்கிவஞ்ச † நொறில்வயமாப்பரி
வீக்குதேரினின்மீதெழப்பாய்ந்துதோள்
தூக்குதூணியும்வில்லுந்தொலைத்தவன்
யாக்கையுஞ்சிதைத்திட்டெழுந்தேகினான். (ருச)

மலைகுலைந்தனவச்சிரமுட்டிதன்
நிலைகுலைந்துவிழுதலினின்றுளார்
குலைகுலைந்துகொடிநகர்நோக்கினார்
அலைகிளர்ந்தெனவானரமார்த்தவே. (ருரு)

வீழிவெங்கணிராக்கதர்வெம்படை
ஊழியாழிகிளர்ந்தெனவோங்கின
கீழைவாயிலிற்கிட்டலுமுட்டினர்
சூழும்வானரவீரர்துவன்றியே. (ருசு)

சூலம்வாளயில்சக்கரந்தோமரம்
வாலம்வாளிமழையின்வழங்கியே
ஆலமன்னவரக்கரடர்த்தலும்
காலும்வாலுந்துமிந்தகவிக்குலம். (ருஎ)

வென்றிவானரவீரர்விசைத்தெறி
குன்றுமாமரமுங்கொடுங்காலனிற்

---

* கங்கசாலம்—பறவைக்கூட்டம்.

† நொறில்வயமாப்பரி-வேகத்தினையும் வெற்றியினையுமுடைய சிறந்தகுதிரை.

சென்றுவீசநிருதர்கள்சிந்தினார்
பொன்றிவீழ்ந்தபுரவிவெம்பூட்கைதேர். (௫௮)

தண்டுவாளயில்சக்கரஞ்சாயகம்
கொண்டுசீற்றநிருதர்குதித்தெழப்
புண்டிறந்துகுருதிபொழிந்துக
மண்டியோடினர்வானரவீரரே. (௫௯)

எரியின்மைந்தனிருநிலங்கீழுற
விரியநின்றமராமரம்வேரொடும்
திரியவாங்கிநிருதர்வெஞ்சேனைபோய்
நெரியவூழிநெருப்பெனவீசினான். (௬௦)

தேரும்பாகரும்வாசியுஞ்செம்முகக்
காரும்யாளியுஞ்சீயமுங்காண்டகு
பாரின்வீழப்புடைப்பப்பசும்புணின்
நீரும்வாரியதனைநிறைத்ததே. (௬௧)

அரக்கர்சேனையடுகளம்பாழ்பட
வெருக்கொண்டோடிடவெம்படைக்காவலன்
நெருக்கநேர்ந்துகும்பானுநெடுஞ்சரம்
துரக்கவானரச்சேனைதுணிந்ததே. (௬௨)

கண்டுநின்றகரடியின்காவலன்
எண்டிசாமுகமெங்குமிடும்பனோர்
சண்டமாருதமென்னத்தடவரை
கொண்டுசீறியவனெதிர்குப்புறா. (௬௩)

தொடுத்தவாளிகள்வீழுமுன்சூழ்ந்தெதிர்
எடுத்தகுன்றையிடும்பனெறிதலும்
ஒடித்தவில்லுமிரதமுமொல்லெனப்
படுத்தவாசிபதாகையும்பாழ்பட. (௬௪)

தேரழிந்துசிலையுமழிந்துகக்
காரிழிந்தவுருமெனக்காய்ந்தெதிர்
பார்இழிந்துகப்பாய்ந்தனன்வானவர்
போர்இழிந்துபுறந்தரப்போர்செய்தான். (௬௫)

தத்திமார்பின்வயிரத்தடக்கையால்
குத்திநின்றகும்பானுவைத்தானெதிர்
மொத்திநின்றுமுடித்தலைகவ்வுறப்
பத்திவன்றடந்தோளுறப்பற்றுவான். (௬௬)

கடித்தலத்திருகாலுறக்கைகளாற்
பிடித்துத்தோளைப்பிறங்கலின்கோடுநேர்
முடித்தலத்தினைக்கவ்வுறமூளைகள்
வெடித்துவீழ்தரவீழ்த்தினனுமரோ. (௬௭)

தன்படைத்தலைவன்படத்தன்னெதிர்
துன்படைத்தமனத்தன்சுமாலிசேய்
முன்படைத்தமுகிலன்னகாட்சியின்
வன்படைத்தவரிசிலைவாங்கினான். (௬௮)

வாங்கிவார்சிலைவானரமாப்படை
ஏங்கநாணெறிந்திட்டிடையீடின்றித்
தூங்குமாரியெனச்சுடர்வாளிகள்
வீங்குதோளினன்விட்டனனுமரோ. (௬௯)

நூறுமாயிரமுங்கணைநொய்தினின்
வேறுவேறுபடுதலின்வெம்பியே
ஈறில்வானரமாப்படையெங்கணும்
* பாறவீரன்வெகுண்டெதிர்பார்ப்புற. (௭௦)

குன்றனின்றெதடுத்தெதிர்கூற்றெனச்
சென்றெறிந்தவன்சேனைசிதைத்தலும்
வென்றுவில்லின்விடுகணைமாரியால்
ஒன்றுநூறுதிருற்றதக்குன்றமே. (௭௧)

மீட்டுமெங்கொர்மராமரம்வேரொடும்
ஈட்டிவானத்திடியெனவேற்றலும்
கோட்டும்வில்லுங்கொடியும்வயப்பரி
பூட்டுந்தேரும்பொடித்துகளாயவே. (௭௨)

தேரிழந்துசிலையுமிழந்திடக்
காரிழந்தவுருமெனக்காந்துவான்
பாரிழந்துபருவலித்தண்டொடும்
ஊரிழந்தகதிரெனவோடினான். (௭௩)

வாய்மடித்தழல்கண்டொறும்வந்துகப்
போயடுத்தலுநீலன்புகைந்தெதிர்
† தாயடுத்தவன்றன்கையிற்றண்டொடும்
மீயெடுத்துவிசும்புறவீசினான். (௭௪)

அம்பரத்தெறிந்தார்ப்பவரக்கனும்
இம்பருற்றெறியின்றிருமைந்தன்மேல்

---

* பாற - விலகியழிய.
† மீயெடுத்து - மேலெடுத்து.

செம்புனற்பொழியக்கதைசேர்த்தினான்
உம்பர்தத்தமதுள்ளநடுங்கவே. (எரு)

அடித்தலோடுமெதற்கிளையாதவன்
எடுத்ததண்டம்பறித்தெறியாவிகல்
முடித்துமென்றொருகைகொடுமோதினான்
குடித்துமிழ்ந்தெனக்கக்கக்குருதியே. (எசு)

குருதிவாய்நின்றொழுகவுங்கூசலன்
நிருதனீலனைவெரைமார்பினில்
கருதலாதமுன்குத்தலுங் * கைத்தவர்
பொருதபூசல்புகலவொண்ணதே. (எஎ)

மற்றுநீலனரக்கனைமாடுறச்
சுற்றிவால்கொடுதோளினுமார்பினும்
நெற்றிமேலுநெடுங்கரநீட்டலும்
இற்றுமால்வரையென்னவிழுந்தனன். (எஅ)

இறந்துவீழ்ந்தனனேபிரகத்தனென்
றறிந்துவானவராவலங்கொட்டினார்
வெறிந்தசெம்மயிர்வெள்ளெயிற்றுடவர்
முறிந்துதத்தமுதூர்நகரெய்தினார். (எகூ)

தெற்குவாயிலிற்சென்றநிசாசரர்
மற்குலாவுவயப்புயத்தங்கதன்
நிற்கவேயெதிர்நின்றிலரோடினார்
பொற்குலாவுசுபாரிசன்பொன்றினான். (அ0)

நூற்றிரண்டெனும்வெள்ளமுநோன்கழல்
ஆற்றல்சான்முகனுமங்கார்த்தெழ
மேற்றிண்வாயிலின்மேவினர்வீடினார்
காற்றின்மாமகன்கையெனுங்காலனால். (அக)

அன்னகாலையயிந்திரவாய்முதல்
துன்னுபோர்கண்டதூதுவர்தோன்றினார்
மன்னகேளெனவந்துவணங்கினார்
சென்னிதாழ்க்கச்செவியிடைச்செப்பினார். (அஉ)

கீழைவாயிற்கிளர்நிருதப்படை
ஊழிநாளினும்வெற்றிகொண்டுற்றநின்
ஆழியன்னவனீகத்தலைமகன்
† பூழியானுயிர்புக்கதுவிண்ணென்றார். (அ௩)

* கைத்தவர் - பகைத்து அவர்கள்.
† பூழியான் - புழுதியினிடத்தான்.

வென்றிவேற்கைநிருதர்வெகுண்டெழத்
தென்றிசைப்பெருவாயிலிற்சேர்ந்துழிப்
பொன்றினனச்சுபாரிசன்போயினார்
இன்றுபோனவிடமறியேமென்றார். (அச)

வடக்குவாயிலின்வச்சிரத்தாடவர்
குடக்குவாயிலிற்குன்றனதோளினர்
அடற்கரும்வலத்தைம்பதுவெள்ளமும்
படச்சிதைந்ததுநம்படையென்றனர். (அரு)

என்றவார்த்தையெரிபுகுநெய்யெனச்
சென்றுசிந்தைபுகுதலுஞ்சீற்றத்தீக்
கன்றுகண்ணின்வழிச்சுடர்கான்றிட
நின்றுநின்றுநெடிதுயிர்த்தானரோ. (அசு)

மறுத்துமற்றவனாருயிர்வவ்வினான்
இறுத்துக்கூறியென்றான்றிசையெங்கணும்
நிறுத்துநீலனெனும்பெருஞ்சேனையை
ஒறுத்துமற்றவனோடும்வந்துற்றனன். (அஎ)

உற்றபோதுமிருவருமொன்றல
கற்றபோர்களெலாஞ்செய்தகாலையில்
நெற்றிமேன்மற்றநீலனெடுங்கையால்
எற்றவீந்தனனென்னவியம்பினார். (அஅ)

அன்னவனொடும்போனவரக்கரில்
நன்னகர்க்குவந்தோமையநாங்களே
என்னவென்னவெயிறிகல்வாயினைத்
தின்னத்தின்னவெரிந்தனதிக்கெலாம். (அகூ)

மாடுநின்றநிருதரைவண்கணான்
ஓடநோக்கியுயர்படையான்மற்றக்
கோடுகொண்டுபொருமக்குரங்கினால்
வீடினானென்றுமீட்டும்விளம்பினான். (கூ0)

கட்டதிந்திரன்வாழ்வைக்கடன்முறை
பட்டதிங்கொர்குரங்குபடுக்கவென்
றிட்டவெஞ்சொலெரிபுகுநெய்யெனச்
சுட்டதென்றனிநெஞ்சினைச்சுட்டதால். (கூக)

* கருப்பைப்போற்குரங்கெற்றக்கதிர்சுழல்
பொருப்பையொப்பவர்தாமின்றுபொன்றினார்

---

* கருப்பை - எலி.

* அருப்பமென்றுபகையையுமாரழல்
நெருப்பையும்மிகழ்ந்தாலதுநீதியோ. (கஉ)

நிற்கவன்னதுநீர்நிறைநகண்ணிஞர்
வற்கமாயினமாப்படையோடுஞ்சென்
ருெற்கம்வந்துதவாமலுறுகென
விற்கொள்வெம்படைவீரரையேவிஞன். (கங)

மண்டுகின்றசெருவின்வழக்கெலாம்
கண்டுநின்றுகயிலையிடந்தவன்
புண்டிறந்தனகண்ணினன்பொங்கிஞன்
திண்டிறன்னெடுந்தேர்தெரிந்தேறிஞன். (கச)

ஆயிரம்பரிபூண்டததிர்குரல்
மாயிருங்கடல்போன்றதுவானவர்
தேயமெங்குந்திரிந்ததுதிண்டிறல்
சாயவிந்திரனேபண்டுதந்தது. (கரு)

† ஏற்றியெண்ணியிறைஞ்சியிடக்கையால்
ஆற்றிஞன்றனடுசிலையன்னதின்
மாற்றமென்னெடுநாணெலிவைத்தலும்
கூற்றிஞரையுமாருயிர்கொள்வதே. (கசு)

மற்றும்வான்படைவானவர்மார்பிடை
இற்றிலாதனவெண்ணமிலாதன
பற்றிஞன்கவசம்படர்மார்பிடைச்
சுற்றிஞனெடுந்தும்பையுஞ்சூடிஞன். (கஎ)

பேருங்கற்றைக்கவரிப்பெருங்கடல்
நீருநீர்நுரையும்மெனநின்றவன்
ஊரும்வெண்மையுவாமதிக்கீழுயர்
காருமொத்தனன்முத்தின்கவிகையான். (கஅ)

போர்த்தசங்கப்படகம்புடைத்திடச்
சீர்த்தசங்கக்கடலுகத்தேவர்கள்
‡ வேர்த்தசங்கிடவண்டம்வெடிபட
ஆர்த்தசங்கமறைந்தமுரசமே. (கக)

தேருமாவும்படைஞருந்தெற்றிட
மூரிவன்னெடுந்தானையின்முற்றிஞன்
நீரொரேழுமுடிவினெருக்குநாள்
மேருமால்வரையென்னவிளங்கிஞன். (க00)

* அருப்பம் - அற்பம்.
† ஏற்றி - நாணேற்றி.
‡ வேர்த்தசங்கிட - வேர்த்தசைய.

வேறு.

எழிசைக்கருவிவீற்றிருந்ததென்னினும்
சூழிருந்திசைகளைத்தொடருந்தொல்கொடி
வாழியவுலகெலாம்வளைந்துவாயிடும்
ஊழியினந்தகனாவினோங்கவே. (௧௦௧)

* வேணுயர்நெடுவரையரக்கர்வேலைக்கோர்
தோணிபெற்றனரெனக்கடக்குந்தொல்செருக்
காணியவந்தவர்கலக்கங்கைம்மிகச்
சேணுயர்விசும்பிடையமரர்சிந்தவே. (௧௦௨)

கண்ணுறுகடும்பொறிகதுவக்கார்நிறத்
தண்ணல்வாளரக்கர்தமரத்தப்பங்கிகள்
ஒண்ணிறங்கோடலினுருவின்வேற்றுமை
நண்ணினர்நோக்கவுமயிர்ப்புநல்கவே. (௧௦௩)

கானெடுந்தேருயர் † கதலியுங்கரத்
தேனையரேந்தியபதாகையீட்டமும்
ஆனையின்கொடிகளுமளவித்தோய்தலால்
வானயாறொடுமழையொற்றிவற்றவே. (௧௦௪)

ஆயிரங்கோடிபேயங்கையாயுதம்
தூயனசுமந்துபின்றொடரச்சுற்றொளிர்
சேயிருமணிநெடுஞ்சேமத்தேர்தெரிந்
தேயினவாயிரத்திரட்டியெய்தவே. (௧௦௫)

ஊன்றியபெரும்படையுலையவுற்றுடன்
ஆன்றபோரரக்கர்கணெருங்கியார்த்தெழத்
தோன்றினனுலகெலாந்தொடர்ந்துநின்றன
மூன்றையுங்கடந்தொருவெற்றிமுற்றினான். (௧௦௬)

ஓதுறுகருங்கடற்கொத்ததானையான்
தீதுறுசிறுதொழிலரக்கன்சீற்றத்தான்
போதுறுபெருங்களம்புகுந்துளானெனத்
தூதுவர்நாயகற்கறியச்சொல்லினார். (௧௦௭)

ஆங்கவனமர்த்தொழிற்கணுகினானென
வாங்கினன்சீதையையென்னும்வன்மையால்
தீங்குறுபிரிவினாற்றேய்ந்ததேய்வற
வீங்கினவிராகவன்மீளித்தோள்களே. (௧௦௮)

---

* வேணுயர் - மூங்கில்கள்வளர்ந்த.

† கதலியும் - கொடியையும்.

தொடையுறுவற்கலையாடைசுற்றிமேல்
புடையுறுவயிரவாள்பொலியவீக்கினான்
இடையுறுகருமத்தினெல்லைகண்டவர்
கடையுறுநோக்கினிற்காணுங்காட்சியான். (க0௯)

ஒத்திருசிறுகுரட்பாதமுய்த்தநாள்
வித்தகவருமறையுலகைமிக்குமேல்
பத்துளவிரல்புடைபரந்தபண்பெனச்
சித்திரசேவடிக்கழலுஞ்சேர்த்தினான். (கக0)

பூவுயர்மீனெலாம்பூத்தவானிகர்
மேவிருங்கவசமிட்டிறுகவீக்கினன்
தேவியைத்திருமறுமார்பிற்றீர்ந்தனன்
நோவிலனென்பதுநோக்கினான்கொலோ. (ககக)

நற்புறக்கோதைதன்னளினச்செங்கையில்
நிற்புறச்சுற்றியகாட்சிநேமிசால்
கற்பகக்கொம்பினைக்கரியமாசுணம்
பொற்புறத்தழுவியதன்மைபோன்றவால். (ககஉ)

புதையிருட்பொழுதினுமலரும்பொங்கொளி
சிதைவருநாள்வரச்சிவந்ததாமரை
இதழ்தொறும்வண்டுவீற்றிருந்ததாமெனத்
ததைவுறுநிறைவிரற்புட்டிறாங்கினான். (ககங)

பல்லியலுலகுறுபாடைபாடமைந்
தெல்லையினூற்கடலேறநோக்கிய
நல்லியனவையறுகவிஞர்நாவரும்
சொல்லெனத்தொலைவிலாத்தூணிதூக்கினான். (ககச)

கிளர்மழைக்குழுவிடைக்கிளர்ந்தமின்னென
வளர்பிறைநெற்றியிற்பட்டமார்த்தனன்
இளவரிக்கவட்டிலையாரொடோர்பெறத்
துளவியறும்பையுஞ்சுழியச்சூடினான். (ககரு)

ஓங்கியவுலகமுமுயிருமுட்புறம்
தாங்கியபொருள்களுந்தானுந்தானென
நீங்கியதியாவதுநினைக்கிலேமவன்
வாங்கியவரிசிலைமற்றொன்றேகொலாம். (ககசு)

நாற்கடலுலகமும்விசும்புநாண்மலர்
தூர்க்கவெஞ்சேனையுந்தானுந்தோன்றினான்
மாற்கடல்வண்ணன்றான்வளருமாவிரும்
பாற்கடலோடும்வந்தெதிரும்பான்மையான். (ககஎ)

ஊழியினுருத்திரனுருவுகொண்டுதான்
எழுயருலகமும்வீக்கின்றனென
வாழியவரிசிலைத்தம்பிமாப்படைக்
* கூழையினெற்றிநின்றானைக்கூடினான். (௧௧௮)

என்புழிநிருதராமேழுவேலையும்
மின்பொழியெயிறுடைக்கவியின்வெள்ளமும்
தென்புலக்கிழவனுஞ்செய்கை † நீட்டிடப்
புன்புலக்களத்திடைப்பொருதபோலுமால். (௧௧௯)

தெற்கிவைவடக்கிவையென்னுந்திக்கெலாம்
பற்குவைபரந்தனகுரக்குப்பல்பிணம்
பொற்குவைநிகர்த்தனநிருதர்போர்ச்சவம்
கற்குவைநிகர்த்தனமழையுங்காட்டின. (௧௨௦)

துமிந்தனதலைகுடர்சொரிந்ததேர்க்குலம்
அவிந்தனபுரவியுமாளுமற்றன
குவிந்தனபிணக்குவைசுமந்துகோணிலம்
நிமிர்ந்ததுபரந்ததுகுருதிநீத்தமே. (௧௨௧)

கடுங்குரங்கிருகையாலெற்றக்கால்வயக்
கொடுங்குரந்துணிந்தனபுரவிகுத்திறல்
ஒடுங்குரந்துணிந்தனர்நிருதரோடின
நெடுங்குரம்பெனநிறைகுருதிநீத்தமே. (௧௨௨)

அவ்வழியிராவணனமரரஞ்சத்தன்
வெவ்வழிநெருப்புகவில்லினாணினைச்
செவ்வழிக்கோதையிற்றெறிப்பச்சிந்தின
எவ்வழிமருங்கினுமிரிந்தவானரம். (௧௨௩)

உருமிடித்துழியுலைந்தொளிக்குநாகமொத்
திரியலுற்றனசிலவிறந்தவாற்சில
வெருவலுற்றனசிலவிம்மலுற்றன
பொருகளத்துயிரொடும்புரண்டுபோஞ்சில. (௧௨௪)

பொரக்கருநிறநெடுவிசும்புபுண்பட
இரக்கமிலிராவணனெறிந்தநாணினால்
குரக்கினமுற்றதென்கூறிற்றன்குலத்
தரக்கருமனையதோரச்சமெய்தினார். (௧௨௫)

வீடணனொருவனுமிளையவீரனும்
கோடணைகுரங்கினுக்கரசுங்கொள்கையான்

* கூழையினெற்றி - பின்னணியின்முன்னிடம்.
† தெட்டிட என்பதும் பாடம்.

நாடினர்நின் றனர்நாலு திக்கினும்
ஓடினரல்லவரொளித்ததும்பரே. (௧௨௬)

வேறு.

எடுக்கினானிலத்தையேந்துமிராவணனெறிந்தநாணின்
நடுக்கினானுலகையென்பார்நல்கினானென்னற்பாற்றோ
மிடுக்கினான்மிக்கவானோர்மேக்குயர்வெள்ளமேனாள்
கெடுக்குநாளுருமினார்ப்புக்கேட்டனரென்னக்கேட்டார். (௧௨௭)

இராவண சுக்கிரீவ யுத்தம்.

ஏந்தியசிகரமொன் றங்கிந்திரன்குலிசமென்னக்
காந்தியதுருமின்விட்டான்கவிக்குலத்தரசனக்கல்
நீந்தருநெருப்புச்சிந்திநிமிர்தலுநிருதர்க்கெல்லாம்
வேந்தனும்பகழியொன் றால்வெண்டுகளாக்கிவீழ்த்தான். (௧௨௮)

அண்ணல்வாளரக்கன்விட்டவம்பினாலழிந்துசிந்தித்
திண்ணெடுஞ்சிகரநீறாய்த்திசைதிசைசிந்தலோடும்
கண்ணெடுங்கடுந்தீக்காலக்கவிக்குலத்தரசன்கையால்
மண்மகள்வயிறுகீறமரமொன் றுவாங்கிக்கொண்டான். (௧௨௯)

கொண்டமாமரத்தையம்பின்கூட்டத்தாற்காட்டத்தக்க
கண்டமாயிரத்தின்மேலுமுளவெனக்கண்டங்கண்டான்
விண்டவாளரக்கன்மீதுவிசும்பெரிபரக்கவிட்டான்
பண்டைமால்வரையின்மிக்கதொருகிரிபரிதிமைந்தன். (௧௩௦)

அக்கிரியினையுமாங்கோரம்பினாலறுத்துமாற்றித்
திக்கிரிதரப்போர்வென் றசிலையினையுளையவாங்கிச்
சுக்கிரிவன் றன்மார்பிற்புங்கமுந்தோன் றாவண்ணம்
உக்கிரவயிரவாளியொன் றுபுக்கொளிக்கவெய்தான். (௧௩௧)

சுடுகணைபடுதலோடுந்துளங்கினான் றுளங்காமுன்னம்
குடதிசைவாயினின் றமாருதிபுகுந்தகொள்கை
உடனுறைந்தறிந்தானென்னவோரிமையொடுங்காமுன்னர்
வடதிசைவாயில்வந்துமன்னவன்முன்னரானான். (௧௩௨)

அனுமராவண யுத்தம்.

பரிதிசேய்தளருமுன்னம்பருவலியரக்கபல்போர்
யுரிதியோவென்னோடென்னாப்புகையெழவிழித்துப்பொங்கி
வருதியோவாவென்பான்மேன்மலையொன் றுநிலையின்வாங்கிச்
சுருதியேயனையதோளால்வீசினான்காலின்றோன் றல். (௧௩௩)

மீயெழுமேகமெல்லாம்வெந்துவெங்கரியிற்சிந்தித்
தீயெழவிசும்பினூடுசெல்கின் றசெயலைநோக்கிக்

காய்கணையைந்துமைந்துங்கடுப்புறத்தொடுத்துக்கண்டித்
தாயிரங்கூறுசெய்தானமரரையலக்கண்செய்தான். (௧௩௪)

மீட்டொருசிகரம்வாங்கிவீங்குதோள்விசையின்வீசி
ஒட்டினானோட்டவானத்துருமினுங்கடுகவோடிக்
கோட்டுவெஞ்சிலையின்வாளிமுன்சென்றுகொற்றப்பொற்றோள்
பூட்டியவலயத்தோடும்பூழியாய்ப்போயிற்றன்றே. (௧௩௫)

மெய்யெரியழன்றுபொங்கிவெங்கணான்விம்மிமீட்டோர்
மய்வரைவாங்குவானைவரிசிலையுளையவாங்கிக்
கய்யினுந்தோளின்மேலுமார்பினுங்கரக்கவாளி
அய்யிரண்டழுந்தவெய்தானவனவையாற்றிநின்றான். (௧௩௬)

யாரிதுசெய்யகிற்பாரென்றுகொண்டிமையோரேத்த
மாருதிபின்னுமாங்கோர்மராமரங்கையின்வாங்கி
வேரொடுஞ்சுழற்றிவிட்டான்விடுதலுமிலங்கைவேந்தன்
சாரதிதலையைத்தள்ளிச்சென்றதுதிருதர்சாய. (௧௩௭)

மாறியோர்பாகனேறமறிதிரைப்பரவைபின்னும்
சீறியதனையனுங்கோர்செறிகழலரக்கன்றெய்வ
நூறுகோணெய்திணெய்தானவையுடனுழைதலோடும்
ஆறுபோற்சோரிசோரவனுமனுமலக்கணுற்றான். (௧௩௮)

கற்கொண்டுமரங்கள்கொண்டுங்கைக்கொண்டுங்களித்துநம்வாய்ச்
சொற்கொண்டுமெயிரின்புன்றோற்றோள்கொண்டுஞ்சுள்ளிவெள்ளிப்
பற்கொண்டுமலைகின்றாரிற்பழிகொண்டுபெயந்ததியானோர்
விற்கொண்டுநின்றபோதுவிறல்கொண்டுமிகுதிபோலாம். (௧௩௯)

என்றுரைத்தெயிற்றுப்பேழ்வாயெரியுகநகைசெய்தியான்ற
பொன்றொடர்வடிம்பின்வாளிகடையுகத்துருமுப்போல
ஒன்றினொன்றதிகமாகவாயிரகோடியுய்த்தான்
சென்றதுகுரங்குச்சேனைகாலெறிகடலிற்சிந்தி. (௧௪௦)

இலக்குமண விராவண யுத்தம்.

கலக்கியவரக்கன்வில்லின்கல்வியின்கவிகளுற்ற
அலக்கணுந்தலைவர்செய்ததன்மையுமமையக்கண்டான்
இலக்குவனென்கைவாளிக்கிலக்கிவனிவனையின்று
விலக்குவெனென்னவந்தான்வில்லுடைமேருவென்ன. (௧௪௧)

தேயத்தின்றலைவன்மைந்தன்சிலையைநாணெறிந்தான்றீய
மாயத்தின்வினையைவல்லார்நிலையென்னைமுடிவின்மாரி

ஆயத்தினிடியிதென்றேயஞ்சினவுலகம்யானை
சீயத்தின்முழக்கங்கேட்டல்போன்றனர்செறுநரெல்லாம். (கசஉ)

ஆற்றல்சாலரக்கன்றானுமயனின்றவயவர்நெஞ்சம்
வீற்றுவீற்றாகியுற்றதன்மையும்வீரன்றம்பி
கூற்றின்வெம்புருவமன்னசிலைநெடுங்குரலுங்கேளா
* ஏற்றினன்மகுடமென்னேயிவனொருமனிதனென்னா. (கசங)

கட்டமைதேரின்மேலுங்களிநெடுங்களிற்றின்மேலும்
விட்டெழுபுரவிமேலும்வெள்ளெயிற்றரக்கர்மேலும்
முட்டியமழையின்றுள்ளிமுறைமுறைமொய்க்குமாபோல்
பட்டதுபகழியெங்கும்பரந்தனகுருதிப்பௌவம். (கசச)

நகங்களிற்பெரியவேழநறைமதவருவிநாளும்
முகங்களிற்புக்கவாளியபரத்தைமுற்றிமொய்ம்பர்
அகங்களைக்கழன்றுதேரினச்சினையுருவியப்பால்
உகங்களிற்கடைசென்றாலுமோய்விலவோடலுற்ற. (கசரு)

† நூக்கியகளிறுந்தேரும்புரவியு ‡ நூழில்செய்ய
ஆக்கியவரக்கர்தானையையிருகோடிகையொத்
தூக்கியபடைகள்வீசியுடற்றியதுலகஞ்செய்த
பாக்கியமனையவீரன்றம்பியைச்சுற்றும்பற்றி. (கசசு)

உறுபகைமனிதனின்றெம்மிறைவனையுறுகிற்பானேல்
வெறுவிதுநந்தம்வீரமென்றொருமேன்மைதோன்ற
எறிபடையரக்கரேற்றாரேற்றகைம்மாற்றானென்ன
வறியவனொருவன்வண்மைபூண்டவன்மேற்சென்றென்ன. (கசஎ)

அறுத்தனனரக்கரெய்தவெறிந்தனவறுத்தறாத
பொறுத்தனன்பகழிமாரிபொழிந்தனனுயிரின்போகம்
வெறுத்தனனமனும்வேலையுதிரத்தின்வெள்ளமீள
மறித்தனமறிந்தவெங்கும்பிணங்களம்மலைகண்மான. (கசஅ)

தலையெலாமற்றமற்றதாளெலாமற்றதோளாம்
மலையெலாமற்றபொற்றார்மார்பெலாமற்றசூலத்
திலையெலாமற்றவீரரெயிறெலாமற்றகொற்றச்
சிலையெலாமற்றகற்றசெருவெலாமற்றசிந்தி. (கசகூ)

தேரெலாந்துமிந்தமாவின்றிறமெலாந்துமிந்தசெங்கட்
காரெலாந்துமிந்தவீரர்கழலெலாந்துமிந்தகண்டத்

---

* ஏற்றினன் மகுடம்-மகுடத்தினையுடைய தலையை நிமிர்த்தினான்.
† நூக்கிய-முன்சென்ற.
‡ நூழில்செய்ய-அழிக்க.

தாரெலாந்துமிந்துநின்றதருவெலாந்துமிந்துதத்தம்
போரெலாந்துமிந்துகொண்டபுகழெலாந்துமிந்துபோய். (கரு0)

அரவியற்றறுகண்வன்றாளாள்விழவாண்மேல்வீழப்
புரவிமேற்பூட்கைவீழப்பூட்கைமேற்பொலன்றேர்வீழ
நிரவியதேரின்மேன்மேனெடுந்தலைகிடந்தநெய்த்தோர்
விரவியகளத்துளெங்கும்வெள்ளிடையரிதுவீழ. (கருக)

கடுப்பின்கணமரரேயுங்கார்முகத்தம்புகையால்
தொடுக்கின்றான்றுரக்கின்றானென்றுணர்ந்திலர்துரந்தவாளி
இடுக்கொன்றுங்காணார்காண்பதெய்தகோனெய்திநெய்திப்
படுக்கின்றபிணத்தின்பம்மற்குப்பையின்பரப்பேபல்கால். (கருஉ)

கொற்றவாள்கொலைவேல்சூலங்கொடுஞ்சிலைமுதலகோலி
வெற்றிவெம்படைகள்யாவும்வெந்தொழிலரக்கர்மேற்கொண்
டுற்றனகூற்றுமஞ்சவொளிர்வனவொன்றுநூறா
அற்றனவலதியாவுமறாதனவில்லையன்றே. (கருந)

குன்றனயானைமானக்குரகதக்கொடுந்தேர்கோப
வன்றிறலாளிசீயமற்றையபிறவுமுற்றும்
சென்றனவெல்லையில்லைத்திரிந்தனசிறிதுபோதும்
நின்றனவில்லையெல்லாங்கிடந்தனநெளிந்தபார்மேல். (கருச)

சாய்ந்ததுநிருதர்தானைதமர்தலையிடறித்தள்ளுற்
றோய்ந்ததுவொழிந்ததோடியுலர்ந்ததுமாகவன்றே
வேய்ந்ததுவாகைவீரற்கிளையவன்வரிவில்வெம்பிக்
காய்ந்ததவ்விலங்கைவேந்தன்மனமெனுங்காலச்செந்தீ. (கருரு)

இலக்குமண இராவணயுத்தம்.

காற்றுறழ்கலினமான்றேர்கடிதினிர்கடாவிக்கண்ணுற்
றேற்றனனிலங்கைவேந்தனெரிவிழித்திராமன்றம்பி
கூற்றுயால்கொண்டதென்னக்கொல்கின்றான்குறுகச்சென்றான்
சீற்றமுந்தானுநின்றான்பெயர்ந்திலன்சிறிதும்பாதம். (கருசா)

வேறு.

காக்கின்றவென்னெடுங்காலினன்வலிநீக்கியகள்வ
போக்கின்றனக்கரிதாலெனப்புகன்றான்புகையுயிர்ப்பான்
கோக்கின்றனதொடுக்கின்றனகொலையம்புகடலையோ
டூர்க்கின்றனகனலொப்பனவெய்தானிகல்செய்தான். (கருஎ)

எய்தான்சரமெய்தாவகையிற்றீர்கெனவிடையே
வய்தாலெனவைதாவினவடிவாளியினறுத்தான்

அய்தாதலினறுத்தாயினியறுப்பாயெனவழிகார்
பெய்தாலெனச்சரமாரிகள்சொரிந்தான் * றுயில்பிரிந்தான். (கருஅ)

ஆங்குஞ்சரமனையான்விடுமயில்வாளிகளவைதாம்
வீங்குஞ்சரம்பருவத்திழிமழைபோல்வனவிலக்காத்
தூங்குஞ்சரநெடும்புட்டில்விற்சுடர்வேலவற்கிளையான்
வாங்குஞ்சரம்வாங்காவகையறுத்தானறமறுத்தான். (கருகூ)

அனுமாராவண முட்டியுத்தம்.

அப்போதகனையர்வாறியவனுமானழல்விழியாப்
பொய்ப்போர்சிலபுரியேலெனவவன்றேரெதிர்புகுந்தான்
கய்ப்போதகமெனமுந்தவன்கடுந்தேரெதிர்நடந்தான்
இப்போரொழிபிற்போருளவவைகேளெனவிசைத்தான். (கசுo)

வென்றாயுலகொருமூன்றையுமெலியாநெடுவலியால்
தின்றாய்செறிகழலிந்திரனிசையைத்திசைதிரிந்தாய்
என்றானுமின்றழிவுன்வயினெய்தும்மெனவிசையா
நின்றானவனெதிரேயுலகளந்தானெனநிமிர்ந்தான். (கசுக)

எடுத்தான்வலத்தடக்கையினையதுபோயுலகெல்லாம்
அடுத்தாங்குறவளர்ந்தான்றிருவடிபின்வரவன்றான்
மடுத்தாங்குறவளர்ந்தானெனவளர்கின்றவனுருவம்
கடுத்தானெனக்கடியாற்கெதிர்காண்பாயெனக்காட்டா. (கசுஉ)

வில்லாயுதமுதலாகியவயவெம்படைபிறவோ
டெல்லாமிடைபயின்றாய்புயநாலைந்தினொடியைந்தாய்
வல்லாய்செருவலியாய்திறன்மறவோயிதனெதிரே
நில்லாயெனநிகழ்த்தாநெடுநெருப்பாமெனவுயிர்ப்பான். (கசுங)

நீளாண்மையினுடனேயெதிர்நின்றாயிஃதொன்றோ
வாளாண்மையுமுலகேழினொடுடனேயுடைவலியும்
தாளாண்மையுநிகராருமிறனியாண்மையுமினிநின்
தோளாண்மையுமிசையோடுடன்றுடைப்பேனொருபுடைப்பால். (கசுச)

பரக்கப்பலவுரைத்தென்படர்கயிலைப்பெருவரைக்கும்
அரக்குற்றெறிபொறிக்கட்டிசைக்கரிக்குஞ்சிறிதனுங்கா
உரக்குப்பையினுயர்தோள்பலவுடையாயுரனுடையாய்
குரக்குத்தனிக்கரத்திற்புடைபொறையாற்றுவைகொல்லாம். (கசுரு)

என்றோள்வலியதனாலெடுத்தியானெற்றவுமிறவா
நின்றாயெனினீபின்னெனைநின்கைத்தலநிரையால்
குன்றேபுரைதோளாய்மிடல்கொடுகுத்துதிகுத்தப்
பொன்றேனெனினின்னோடெதிர்பொருகின்றிலெனென்றான். (கசுசு)

---

* துயில்பிரிந்தான் - நித்திரைவிட்ட இலக்குமணன்.

காரிற்கரியவன்மாருதிகழறக்கடிதுகவா
வீரற்குரியதுசொற்றனைவிறலோயொருதனியேன்
நேர்நிற்பவருளரோபிறர்நீயல்லவரினிநின்
பேருக்குலகளவேயினியுளவோபிறவென்றான். (௧௬௭)

ஒன்றாயுதமுடையாயலையொருநீயெனதுறவும்
கொன்றாயுயர்தேர்மேனிமிர்கொடுவெஞ்சிலைகோலி
வன்றானையினுடன்வந்தவனெதிர்வந்துநின்வலியால்
நின்றாயொடுநின்றாரினிநிகரோவுரைநெடியோய். (௧௬௮)

மூத்தேவர்கண்முதலாயினர்முழுமூன்றுலகிடையும்
எத்தேவர்களெத்தானவரெவ்வீரர்களென்னோர்
பித்தேறினரல்லாலிடைபேராதெதிர்மார்பில்
குத்தேயெனநின்றாயிதுகூறுந்தரமன்றால். (௧௬௯)

பொருகைத்தலமிருபத்துளபுகழுஞ்சிறிதுளதால்
வருகைத்தலமதவெங்கரிவலிகெட்டனவருவாய்
இருகைத்தலமுடையாயெதிரிவைசொற்றனையினிமேல்
தருகைக்குரியதார்கொற்றமெனமாதக்கதுமன்றால். (௧௭௦)

திசையத்தனையையும்வென்றதுசிதையப்புகழ்தெறுமவ்
வசைமற்றினியுளவேயெனதுயிர்போல்வருமகனை
அசையத்தரையரைவித்தனையழிசெம்புனலதுவோ
பசையற்றிலதொருநீயெனதெதிர்நின்றிவைபகர்வாய். (௧௭௧)

பூணித்திவையுரைசெய்தனை * யதனாலுரைபொதுவே
பாணித்ததுபிறிதென்சிலபகர்கின்றதுபழியால்
நாணித்தலையிடுகின்றிலெனனிவந்துலகெவையும்
காணக்கடிதெதிர்குத்துதியென்றான்வினைகடியான். (௧௭௨)

வீரத்திறமிதுநன்றெனவியவாமிகவிளியாத
தேரிற்கடிதிவராமுழுவிழியிற்பொறிசிதறா
ஆரத்தொடுகவசத்துடல்பொடிபட்டிடவவன்மா
மார்பிற்கடிதெதிர்குத்தினன்வயிரக்கரமதனால். (௧௭௩)

† அயிருக்கனநெடுமால்வரையனலுக்கனவிழிகள்
தயிருக்கனமுழுமூளைகடலையுக்கனதரியா
உயிருக்கனநிருதக்குலமுயர்வானரமெவையும்
மயிருக்கனவெயிலுக்கனமழையுக்கனவானம். (௧௭௪)

விற்சிந்தினநெடுநாணமிர்கரைசிந்தினவிரிநீர்
கற்சிந்தினகுலமால்வரைகதிர்சிந்தினசுடரும்

* அதனாலுயிர் என்றும்பாடம்.

† அயிருக்கன் - நுண்மணல் சிதறினாற்போல.

பற்சிந்தினமதயானைகள்படைசிந்தினரெவரும்
எற்சிந்தினவெரிசிந்தினவிகலோன்மணியகலம். (க௱௭௫)

கைக்குத்ததுபடலுங்கழனிருதர்க்கிறைகறைநீர்
மைக்குப்பையினெழில்கொண்டொளிர்வயிரத்தடமார்பில்
திக்கிற்சின்மதயானைகள்வயவெம்பணைசெருவில்
புக்கிற்றனபோகாதனபுறமுக்கனபுகழின். (க௱௭௬)

அள்ளாடியகவசத்தவிர்மணியற்றனதிசைபோய்
விள்ளாநெடுமுழுமீனெனவிழிவெம்பொறியெழநின்
றுள்ளாடியநெடுங்கால்பொரவொடுங்காவுகுலையத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தானநம்வலித்தான். (க௱௭௭)

ஆர்த்தார்விசும்புறைவோர்நெடிதனுமான்மிசையதிகம்
தூர்த்தார்நறுமுழுமென்மலரிசையாசிகள்சொன்னார்
வேர்த்தார்நிருதர்கள்வானவர்வியந்தாரவன்விசயம்
தீர்த்தானெனவுவந்தாடினர்முழுமெய்ம்மயிர்சிலிர்த்தார். (க௱௭௮)

கற்றங்கியினெடுவாயுவினிலைகண்டவர்கதியால்
மற்றங்கொருவடிவுற்றதுமாறுற்றுறுகாலைப்
* பற்றங்கொருமையிலன்னதுபயில்கின்றதொர்செயலால்
உற்றங்கதுபுறம்போயுடல்புகுந்தாலெனவுணர்ந்தான். (க௱௭௯)

உணராநெடிதுயிராவுரையுதவாவெரியுமிழா
இணையாருமிலவனோர்வரவெய்தாவலிசெய்தாய்
அணையாயினியெனதூழெனவடராவெளிபடராப்
பணையார்புயமுடையானிடைசிலவிம்மொழிபகர்ந்தான். (க௱௮௰)

வலியென்பதுமுளதேயதுநின்பாலதுமறவோய்
† அலியென்பனபுறநின்றனவுலகேழினுமடைத்தாய்
சலியென்றெதிர்மலரோனுரைதந்தாலிறைசலியேன்
மெலிவென்பதுமுணர்ந்தேனெனைவென்றாயினிவிறலோய். (க௱௮௧)

ஒன்றுண்டினிரைநேர்குவதுன்மார்பினென்றொருகைக்
குன்றின்மிசைகடைநாள்விழுமுருமேறெனக்குளித்தால்
நின்றிந்நிலைதருவாயெனினீயல்லவருளரோ
இன்றும்முளையென்றும்முளையிலையோர்பகையென்றான். (க௱௮௨)

என்றானெதிர்சென்றானிகவடுமொருதியெனாநீ
வென்றாயலையோவுன்னுயிர்வீடாதுரைசெய்தாய்

---

* பற்றங்கொருமையில்- அங்குபற்றியிருந்த ஒரு பிறப்பில்.

† அலியென்பனபுறநின்றன - நின்னையன்றி வேறாகவுள்ளன அலியாயுள்ளன.

நன்றாகனின்னிலைநன்றெனநல்காவெதிர்நடவாக்
குன்றாகியதிரடோளவன்கடன்கொள்கெனக்கொடுத்தான். (௧௮௩)

உறுக்கித்தனியெதிர்நின்றவனுரத்திற்றனைதொளிர்பல்
இறுக்கிப்பலநெடுவாய்மடித்தெரிகண்டொறுமிழிய
முறுக்கிப்பொறிமிரப்பலவிரன்மூரியதிசையக்
குறுக்கிக்கரநெடுநெடுந்தோள்புறமிரக்கொடுகுத்த. (௧௮௪)

பள்ளக்கடல்கொள்ளப்படர்படிபேரினும்பதையா
வள்ளப்பெருவெள்ளத்தெறுழ்வலியாரினும்வலியான்
கள்ளக்கறையுள்ளத்ததிர்கழல்வெய்யவன்கரத்தால்
தள்ளத்தளர்வெள்ளிப்பெருங்கிரியாமெனசசலித்தான். (௧௮௫)

வேறு.

சலித்தகாலையினிமையவருலகெலாஞ்சலித்த
சலித்ததாலறஞ்சலித்ததுமெய்ம்மொழிதகவும்
சலித்ததன்றியும்புகழொடுசுருதியுஞ்சலிதத
சலித்தநீதியுஞ்சலித்தனகருணையுந்தவமும். (௧௮௬)

அனையகாலையினரிகுலத்தலைவரவ்வழியோர்
எனைவரன்னயர்யாவருமோர்குவடேந்தி
நினைவின்முன்னெடுவிசும்பொருவெளியின்றிநெருங்க
வினையிதென்றறிந்திராவணன்மேற்செலவிட்டார். (௧௮௭)

ஒத்தகையினரூழியினிறுதியினுலகை
மெத்தமீதெழுமேகத்தின்விசும்பெலாமிடையப்
பத்தநூறுகோடிக்குமேற்பனிபடுசிகரம்
எத்தமேற்செலவெறிந்தனர்பிறிந்தனரிமையோர். (௧௮௮)

தருக்கிவீசிடவிசும்பிடமின்மையிற்றம்மின்
நெருக்குகின்றனநின்றனசென்றிலநிறைந்த
அருக்கனும்மறைந்தாரிருள்விழுங்கியதண்டம்
சுருக்கமுற்றனராக்கரென்றிமையவர்சூழ்ந்தார். (௧௮௯)

ஒன்றையொன்றுபட்டோடிவனவிடித்துருமதிரச
சென்றவன்பொறிமின்பலசெறிந்திடதெய்வ
வென்றிவில்லெனவிருநிலம்வீழ்ந்திடமேன்மேல்
கன்றியோடிடக்கன்மழைங்கர்த்தனகற்கள். (௧௯௦)

இரிந்துநீங்கியவிராக்கதப்பெரும்படையெங்கும்
விரிந்துசிந்தினவானத்துமீனொடுவிமானம்
சொரிந்தவெம்பொறிபடக்கடல்சுவறினதோற்றம்
கரிந்தகண்டகர்கண்மணியெனப்பலகழறி. (௧௯௧)

இறுத்ததின்றுலகென்பதோர் திமிலம்வந்தெய்தக்
கறுத்தசிந்தையனிராவணனனையதுகண்டான்
ஒறுத்துவானவர்புகழுண்டபாரவில்லுனைய
அறுத்துநீக்கினனுயிரகோடிமேலம்பால். (க௯உ)

தாம்பெலாங்கடிந்துகள்படக்களிறெலாந்துணியப்
பாம்பெலாம்படவாளியுமுழுவையும்பாறக்
கூம்பர்மாமரமெரிந்துகக்குறுந்துகணெருங்கச
சாம்பராயினதடவரைசுடுகணைதடிய. (க௯௩)

* உற்றவாறென்றுமொன்று நூருயிரமுருவா
இற்றவாறென்றுமிடிப்புண்டுபொடிப்பொடியாகி
அற்றவாறென்றுமரக்கனையடுசிலைக்கொடியோன்
கற்றவாரென்றும்வானவர்கைத்தலங்குலைத்தார். (க௯௪)

அடறுடைத்துமென்றரிகுலவீரரன்றறிந்த
† திடறுடைத்தனதசமுகன்சிரமவைதிசைசூழ்
கடறுடைத்தனகளத்தினின்றுயர்தரும்பூழி
உடறுடைத்தனவுதிரமுந்துடைத்ததொண்புடவி. (க௯௫)

கொல்வெனிக்குறியேமற்றிவ்வானரக்குழுவை
வெல்வென்மானுடரிருவரையெனசசினம்வீங்கப்
பல்வன்வார்சிலைபத்துடனிடக்கையின்வாங்கித்
தொல்வன்மாரியிற்றொடர்வனசுடுசரந்துரந்தான். (க௯௬)

அய்யிரண்டுகோர்முகத்தினுமாயிரம்பகழி
கய்களீரைந்தினுலும்வெங்கடுப்பினிற்றொடுத்தற்
றெய்யவெஞ்சினவானமுமிருநிலவரைப்பும்
மொய்கொள்வேலையுந்திசைகளுஞ்சரங்களாய்முடிந்த. (க௯எ)

அந்திவானகமொத்ததவ்வமர்க்களமுதிரம்
சிந்திவேலையுந்திசைகளுநிறைந்தனசரத்தால்
பந்திபந்தியாய்மடிந்ததுவானரப்பகுதி
வந்துமேக்கள்படிந்தனபிணப்பெருமலைமேல். (க௯அ)

நீலனம்பொடுசென்றிலனின்றிலனிலத்தான்
காலனூர்வயத்தடைந்திலனேவுண்டகவயன்
ஆலமன்னதோர்சரத்தொடுமெங்கதனயிர்த்தான்
சூலமன்னதோர்வாளியாற்சோம்பினன்சாம்பன். (க௯௯)

மற்றும்வீரர்தம்மருமத்தினயிலம்புமடுப்பக்
கொற்றவீரமுமாண்டொழிற்செய்கையுங்குறைந்தார்

---

* உற்றஆறுஎன்றும்-மலைகள்வந்தவிதமெனவும்.
† திடல்தூடைத்தன-மலைகளையழித்தனவாகிய.

சுற்றும்வானரப்பெருங்கடறொலைந்ததுதொலையா
துற்றுநின்றவரோடினரிலக்குவனுருத்தான். (௨௦௦)

நூறுகோடியநூறுநூறாயிரகோடி
வேறுவேறெய்தசரமெலாஞ்சரங்களால்விலக்கி
ஏறுசேவகன்றம்பியவ்விராவணனெடுத்த
ஆறுநாலுவெஞ்சிலையையுங்கணைகளாலறுத்தான். (௨௦௧)

ஆர்த்துவானவராவலங்கொட்டினரரக்கர்
வேர்த்துநெஞ்சமும்வெதும்பினர்வினையறுமுனிவர்
தூர்த்துநாண்மலர்சொரிந்தனரிராவணன்றோளைப்
பார்த்துவந்தனன்குனித்ததுநல்லறம்பாடி. (௨௦௨)

நன்றுபோர்வலிநன்றுபோராள்வலிவீரம்
நன்றுநோக்கமுநன்றுகைக்கடுமையுநன்று
நன்றுகல்வியுநன்றுநின்றிண்மையுநலனும்
என்றுகைம்மறித்திராவணனொருவனீயென்றான். (௨௦௩)

கானினன்றிகற்கரன்படைபடுத்தவக்கரியோன்
தானுமிந்திரன்றன்னையோர்தனுவலந்தன்னால்
வானின்வென்றவெண்மதலையும்வரிசிலைபிடித்த
யானுமல்லவர்யாருனக்கெதிரென்றுமிசைத்தான். (௨௦௪)

வில்லினாலிவன்வெலப்படானெனச்சினம்வீங்கக்
கொல்லுநாளுமின்றிதுவெனச்சிந்தையிற்கொண்டான்
பல்லினாலிதழதுக்கினன்பருவலிக்கரத்தால்
எல்லினான்முகன்கொடுத்ததோர்வேலெடுத்தெறிந்தான். (௨௦௫)

எறிந்தகாலவேலெய்தவம்பியாவையுமெரிந்து
பொறிந்துபோயுகத்தீயுகவிசையினிற்பொங்கிச
செறிந்ததாரவன்மார்பிடைச்சென்றதுசிந்தை
அறிந்தமைந்தனுமமர்நெடுங்களத்திடையயர்ந்தான். (௨௦௬)

இரியலுற்றதுவானரப்பெரும்படையிமையோர்
பரியலுற்றனருலைந்தனர்முனிவரும்பதைத்தார்
விரிதிரைக்கடற்கிரட்டிகொண்டார்த்தனர்விரவார்
திரிகையொத்ததுமண்டலங்கதிரொளிதிரிந்த. (௨௦௭)

அஞ்சினானலனயன்றந்தவேலினுமாவி
துஞ்சினானலன்றுளங்கினானென்பதுதுணியா
எஞ்சில்யாக்கையையெடுத்துக்கொண்டகல்வெனென்றெண்ணி
நஞ்சினாற்செய்தமனத்தினான்பாரின்மேனடந்தான். (௨௦௮)

உள்ளிவெம்பிணத்துதிரநீர்வெள்ளத்தினோடி
அள்ளியங்கைகளிருபதும்பற்றிப்பண்டரன்மா
வெள்ளியங்கிரியெடுத்தனன்வெள்கினானென்ன
எள்ளிப்பொன்மலையெடுக்கலுற்றானெனவெடுத்தான். (௨௦௯)

அடுத்தநல்லுணர்வொழிந்தில *னம்பரஞ்செம்பொன்
உடுத்தநாயகன்றானெனவுணர்தலினொருங்கே
தொடுத்தவெண்வகைமூர்த்தியைத்துளக்கிவெண்பொருப்போ
டெடுத்ததோள்களுக்கெழுந்திலனிராமனுக்கிளையான். (௨௧௦)

தலைகள்பத்தொடுந்தழுவியதசமுகத்தலைவன்
நிலைகொண்மாகடலொத்தனன்கரம்புடைநிமிரும்
அலைகளொத்தனவதிலெழுமாமதியொத்தான்
இலைகொடண்டுழாயிலங்குதோளிராமனுக்கிளையான். (௨௧௧)

எடுக்கலுற்றவன்மேனியையேந்துதற்கேற்ற
மிடுக்கிலாமையினிராவணன்வெய்துயிர்ப்புற்றான்
இடுக்கினின்றவம்மாருதிபுகுந்தெடுத்தேந்தித்
தடுக்கலாததோர்விசையினனெழுந்தயல்சார்ந்தான். (௨௧௨)

தொகவொருங்கியஞானமென்றவரினுந்தூயான்
தகவுகொண்டதோரன்பெனுந்தனித்துணையல்லால்
அகவுகாதலாலண்டகையென்னினுமனுமன்
மகவுகொண்டுபோய்மரம்புகுமந்தியைநிகர்த்தான். (௨௧௩)

மய்யல்கூர்மனத்திராவணன்படையினான்மயங்கும்
செய்யவாளரியேறனான்சிறிதினிற்றேறிக்
கய்யுங்கால்களுநயனமுங்கமலமேயனைய
பொய்யிலாதவனின்றிடத்தனுமனும்போனான். (௨௧௪)

போனகாலையிற்புக்கனன்புங்கவன்போர்வேட்
டியானைமேற்செலுங்கோளரியேறிவனென்ன
வானுளோர்கணமார்த்தனர்தூர்த்தனர்மலர்மேல்
தூநவின்றவேலரக்கனுந்தேரினைத்துரந்தான் (௨௧௫)

தேரிற்போரரக்கன்செலச்சேவகன்செவ்வே
பாரிற்செல்கின்றவருமையைநோக்கினன்பரிந்தான்
சீரிற்செல்கின்றதில்லையிச்செருவெனுந்திறத்தால்
வாரிற்பெய்கழன்மாருதிகதுமெனவந்தான். (௨௧௬)

பண்டைநாடருபனித்திரைப்புனல்சடையேற்றுக்
கொண்டதூயவன்கொடுந்தொழினிருதர்கள்குழுமி

* அம்பரம் - ஆடை.

மண்டுவாளமர்க்களத்திலம்மலர்க்கழல்சேறல்
கண்டுகூசலனிற்குமென்றாலதுகடனே. (௨௧௭)

நூறுபத்துடைநொறில்பரித்தேரின்மேனுன்முன்
மாறில்போரரக்கன்பொரநிலத்துநீமலைதல்
வேறுகாட்டுமோர்வெறுமையைமெல்லியவெனினும்
ஏறுநீயையவென்னுடைத்தோளின்மேலென்றான். (௨௧௮)

அனுமன்றோளிலிராமனேறி நிற்றல்.

நன்றுநன்றெனநாயகனேறினனுமக்
குன்றின்மேலிவர்கோளரியேறெனக்கூறி
அன்றுவானவராசிகளியம்பினரீன்ற
கன்றுதாங்கியதாயெனமாருதிகளித்தான். (௨௧௯)

மாணியாயுலகளந்தநாளவனுடைவடிவை
ஆணியாயுணர்மாருதியதிசயமுற்றான்
காணியாகப்பண்டுடையனுமாருதனிக்கலுழன்
நாணினன்மற்றையநந்தனுந்தலைநடுக்குற்றான். (௨௨௦)

ஓதமொத்தனன்மாருதியதன்கத்துறையும்
நாதனொத்தனனன்னரினே துயில்கிலனம்பன்
வேதமொத்தனன்மாருதிவேதத்தின்சிரத்தின்
போதமொத்தனனிராமன்வேறிதனினில்பொருவே. (௨௨௧)

வேறு.

தகுதியாய்நின்றவென்றிமாருதிதனிமைசார்ந்த
மிகுதியைவேறுநோக்கினெவ்வண்ணம்விளம்புந்தன்மை
* புகுதிகூர்ந்துள்ளார்வேதம்பொருவுறப்புலத்துநோக்கும்
பகுதியையொத்தான்வீரன்மேலைத்தன்பதமேயொத்தான். (௨௨௨)

மேருவின்சிகரம்போன்றதென்னினும்வெளிறுண்டாமால்
மூரிநீரண்டமெல்லாம்வயிற்றிடைமுன்னங்கொண்ட
ஆரியற்கனேகமார்க்கத்தாலிடம்வலமதாகச்
சாரிகைதிரியலானமாருதிதருமப்பொற்றோள். (௨௨௩)

வேறு.

ஆசிசொல்லினரருந்தவரறமெனுந்தெய்வம்
காசினன்னெடுங்கரமெடுத்தாடிடக்கயிலை
ஈசனான்முகனென்றிவர்முதலியவிமையோர்
பூசல்காணியவந்தனரந்தரம்புகுந்தார். (௨௨௪)

* புகுதி-புகு, புகுந்த, தி, அறிவு.

அண்ணலஞ்சனவண்ணனுமமர்குறித்தமர்ந்தான்
எண்ணரும்பெருந்தனிவலிச்சிலையைநாணெறிந்தான்
மண்ணும்வானமுமற்றையபிறவுந்தன்வாய்ப்பெய்
துண்ணுங்காலத்தவ்வுருத்திரனார்ப்பொத்ததோதை. (உஉரு)

ஆவிசென்றிலர்நின்றிலரரக்கரோடியக்கர்
நாவுலர்ந்தனர்கலங்கினர்விலங்கினர்நடுங்கிக்
கோவைநின்றபேரண்டமுங்குலைந்தனகுலையாத்
தேவதேவனும்விரிஞ்சனுஞ்சிரதலங்குலைந்தார். (உஉசா)

இராமராவணயுத்தம்.

ஊழிவெங்கனலொப்பனதுப்பனவுருவ
ஆழிநீரையுங்குடிப்பனதிசைகளையளப்ப
வீழின்மீச்செலின்மண்ணையும்விண்ணையுந்தொளைப்ப
ஏழுவெஞ்சரமுடன்றொடுத்திராவணனெய்தான். (உஉஎ)

எய்துவாளியையேழினாலேழினோடேழு
செய்துவெஞ்சரமைந்தொருதொடையினிற்சேர்த்தி
வெய்துகாலவெங்கனல்களும்வெள்குறப்பொறிகள்
பெய்துபோம்வகையிராகவன்சிலைநின்றுபெயர்த்தான். (உஉஅ)

வாளியைந்தையுமைந்தினால்விசும்பிடைமாற்றி
ஆளிமொய்ம்பினவ்வரக்கனுமையிரண்டம்பு
தோளினானுறவாங்கினன்றுரந்தனன்சுருதி
ஆளுநாயகனவற்றையுமவற்றினாலறுத்தான். (உஉகூ)

அறுத்துமற்றவனயனின்றவளக்கருமளக்கர்
செறுத்துவிட்டனபடையெலாங்கணைகளாற்சிந்தி
இறுத்துவீசியகிரிகளையெரியுகநூறி
ஒறுத்துமற்றவர்தலைகளாற்சிலமலையுயர்த்தான். (உ௩0)

மீனுடைக்கருங்கடல்புரையிராக்கதர்விட்ட
ஊனுடைப்படையிராவணனம்பொடுமோடி
வானரக்கடல்படாவகைவாளியான்மாற்றித்
தானுடைச்சரத்தாலவர்தலைமலைமடிந்தான். (உ௩க)

இம்பராமெனனின்விசும்பினாகுமோரிமைப்பின்
தும்பைசூடியவிராவணன்முகந்தொறுந்தோன்றும்
வெம்புவஞ்சகர்விழிதொறுந்திரியுமேனின்றான்
அம்பின்முன்செலுமனத்திற்குமுன்செலுமனுமன். (உ௩உ)

ஆடுகின்றனகவந்தமுமவற்றொடுமோடிப்
பாடுகின்றனவலகையுநீங்கியபணைக்கைக்

கோடுதுன்றியகரிகளும்பரிகளுந்தலைக்கொண்
டோடுகின்றனவுலப்பிலவுதிரவாறுவரி. (௨௩௩)

அற்றவாழியவறுப்புண்டவச்சினவம்போ
டிற்றகொய்யுளைப்புரவியதேர்க்குலமெல்லாம்
ஒற்றைவாளியோடுருண்டனகருங்களிற்றேங்கல்
சுற்றும்வாசியுந்துமிந்தனவமர்க்களந்தொடர்ந்த. (௨௩௪)

தேரிழந்துவெஞ்சிலைகளுமிழந்துசெந்தறுகட்
காரிழந்துவெங்கலினமாக்கால்களுமிழந்து
சூரிழந்துவன்கவசமுமிழந்துதுப்பிழந்து
தாரிழந்துபின்னிழந்தனர்நிருதர்தந்தலைகள். (௨௩௫)

அரவினுண்ணிடையரக்கியர்கணவரன்றற்ற
சிரமுமன்னவையாதலின்வேற்றுமைதெரியாப்
புரவியின்றலைபூட்கையின்றலையிவைபொருத்திக்
கரவிலின்னுயிர்துறந்தனர்க்கவ்வுறத்தழுவி. (௨௩௬)

ஆர்ப்படங்கினவாயெலாமழற்கொழுந்தொழுகப்
பார்ப்படங்கினகண்ணெலாம்பலவகைப்படைகள்
தூர்ப்படங்கினகையெலாந்தூளியின்படலைப்
போர்ப்படங்கினவுலகெலாமுரசெலாம்போன. (௨௩௭)

ஒன்றுநூற்றினோடாயிரங்கொடுந்தலையுருட்டிச்
சென்றுதீர்வனவெனைப்பலகோடியுஞ்சிந்தி
நின்றதேரொடுமிராவணனொருவனுநிற்பக்
கொன்றுவீழ்த்தினதிராகவன்சரமெனுங்கூற்றம். (௨௩௮)

தேரும்யானையும்புரவியுமரக்கருந்தெற்றிப்
பேருமோரிடமின்றெனத்திசைதொறும்பிறங்கிக்
காரும்வானமுந்தொடுவனபிணக்குவைகண்டான்
மூரிவெஞ்சிலையிராவணனராவெனமுனிந்தான். (௨௩௯)

முரண்டொகுஞ்சிலையிமைப்பினின்முறையுறவாங்கிப்
புரண்டுதோளுறப்பொலன்கொணன்மலம்படப்போக்கித்
திரண்டவாளிகள்சேவகன்மரகதசிகரத்
திரண்டுதோளினுமிரண்டுபுக்கழுந்திடவெய்தான். (௨௪௦)

முறுவலெய்தியமுகத்தினன்முளரியங்கண்ணன்
யறுவிலாததோர்வடிக்கணைதொடுத்துறவாங்கி
இறுதியெய்துநாட்சால்பொரமந்தரமிடையிட்
டறுவதாமெனவிராவணன்சிலையினையறுத்தான். (௨௪௧)

மாற்றும்வெஞ்சிலைவாங்கினன்வடிம்புடைநெடுநாண்
ஏற்றுருமுனமிடையறக்கணைகளாலெய்தான்
காற்றினுங்கடிதாவனகதிர்மணிநெடுந்தேர்
ஆற்றுகொய்யுளைப்புரவியின்சிரங்களுமறுத்தான். (௨௪௨)

மற்றும்வெம்படைவாங்கினன்வழங்குருமுன்னம்
இற்றவிந்துகவெரிகணையிடையறவெய்தான்
கொற்றவெண்குடைகொடியொடுந்துணிபடக்குறைத்தான்
கற்றையஞ்சுடர்க்கவசமுங்கட்டறக்கழித்தான். (௨௪௩)

மாற்றுத்தேரவண்வந்தனவந்தனவாரா
வீற்றுவீற்றுகவெயிலுமிழ்கடுங்கணைவிட்டான்
சேற்றுச்செம்புனற்படுகளப்பரப்பிடைச்செங்கட்
கூற்றுங்கையெடுத்தாடிடவிராவணன்கொதித்தான். (௨௪௪)

இராவணன் மகுடபங்கம்.

மின்னும்பன்மணிமவுலிமேலொருகணைவிட்டான்
அன்னகாய்கதிரவிமேற்பாய்ந்தபோரனுமன்
என்னலாயதோர்விசையினிற்சென்றவன்றலையில்
பொன்னின்மாமணிமகுடத்தைப்புணரியில்வீழ்த்த. (௨௪௫)

செறிந்தபன்மணிப்பெருவனந்திசைபரந்தெரியப்
பொறிந்தவாய்வயக்கடுஞ்சுடர்க்கணைபடும்பொழுதின்
எறிந்தகால்பொரமேருவின்கொடுமுடியிழந்து
மறிந்துவீழ்ந்ததுமொத்ததவ்வரக்கன்றன்மகுடம். (௨௪௬)

அண்டர்நாயகனடுஞ்சிலையுதைத்தபேரம்பு
கொண்டுபோகப்போய்க்குரைகடற்குளித்தவக்கொள்கை
மண்டலந்தொடர்வயங்குவெங்கதிர்களைவாயால்
உண்டகோளொடுமொலிகடல்வீழ்ந்ததுமொக்கும். (௨௪௭)

சொல்லுமத்தனையளவையின்மணிமுடிதுறந்தான்
எல்லிமத்தெழுமதியமுஞாயிறுமிழந்த
அல்லுமொத்தனன்பகலுமொத்தனனமர்பொருமேல்
வெல்லுமத்தனையல்லதுதோற்றிலாவிறலோன். (௨௪௮)

மாற்றருந்தடமணிமுடியிழந்தவாளரக்கன்
ஏற்றமெவ்வுலகத்திலுமுயர்ந்துளானெனினும்
ஆற்றனன்னெடுங்கவிஞரோரங்கதமுரைப்பப்
போற்றரும்புகழிழந்தபேரொருவனும்போன்றான். (௨௪௯)

அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்திடநிலம்விரல்கிளைத்திடநின்றான்

இறங்குகண்ணினனெல்லழிமுகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன்விழுதுடையாலன்னமெய்யன். (உருo)

இராமனிராவணனுக்கற முரைத்தல்.

நின்றவன்னிலைநோக்கியநெடுந்தகையிவனைக்
கொன்றலுன்னிலன்வெறுங்கைநின்றானெனக்கொள்ளா
இன்றவிந்ததுபோலுமுன்றீமையென்றிசையோ
டொன்றவந்தனவாசகமினையனவுரைத்தான். (உருக)

அறத்தினாலன்றியமரர்க்குமருஞ்சமங்கடத்தல்
மறத்தினாலரிதென்பதுமனத்திடைவலித்தி
பறத்திநின்னெடும்பதிபுகக்கிளையொடும்பாவி
இறத்தியானதுநினைக்கிலென்றனிமைகண்டிரங்கி. (உருஉ)

உடைப்பெருங்குலத்தினரொடுமுறவொடுமுதவும்
படைக்கலங்களுமற்றுநீதேடியபலவும்
அடைத்துவைத்தனதிறந்துகொண்டாற்றுதியாயின்
இடைத்தியல்லையேலொளித்தியாற்சிறுதொழிற்கீழோய். (உருந)

சிறையில்வைத்தவடன்னைவிட்டுலகினிற்றேவர்
முறையில்வைத்துநின்றம்பியையிராக்கதர்முதற்பேர்
இறையில்வைத்தவற்கேவல்செய்திருத்தியேலின்னும்
தறையில்வைக்கிலெனின்றலைவாளியிற்றடிந்து. (உருச)

அல்லையாமெனினாரமராற்றெனுந்தோற்றம்
வல்லையாமெனினுனக்குளவலியெலாங்கொண்டு
நில்லையாவெனநேர்நின்றுபொன்றுதியெனினும்
நல்லையாகுதிபிழைப்பினியுண்டெனநயவேல். (உருரு)

* ஆளையாவுனக்கமைந்தனமாருதமறைந்த
பூளையாயினகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
நாளைவாவெனநல்கினனாகிளங்கமுகின்
வாளைதாவுறுகோசலநாடுடைவள்ளல். (உருசு)

கச - வது, முதற்போர்ப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉகஅ.

---

* ஆளையா-அரக்கரை ஆளும் அரசனே.

௧௫ - வது, கும்பகருணன்வதைப்படலம்.

வாரணம்பொருதமார்பும்வரையினையெடுத்ததோளும்
நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவும்
தாரணிமவுலிபத்துஞ்சங்கரன்கொடுத்தவாளும்
வீரமுங்களத்தேபோட்டுவெறுங்கையோடிலங்கைபுக்கான். (௧)

கிடந்தபோர்வலியார்மாட்டேகெடாதவானவரையெல்லாம்
கடந்துபோயுலகமூன்றுங்காக்கின்றகாவலாளன்
தொடர்ந்துபோம்பழியினோடுந்தூக்கியகரங்களோடும்
நடந்துபோய்நகரம்புக்கானருக்கனுநாகஞ்சேர்ந்தான். (௨)

மாதிரமெவையுநோக்கான்வளநகர்நோக்கான்வந்த
காதலர்தம்மைநோக்கான்கடற்பெருஞ்சேனைநோக்கான்
தாதவிழ்கூந்தன்மாதர்தனித்தனிநோக்கத்தானப்
பூதலமென்னுநங்கைதன்னையேநோக்கிப்புக்கான். (௩)

நாளொத்தநளினமன்னமுகத்தியர்நயனமெல்லாம்
வாளொத்தமைந்தர்வார்த்தையிராகவன்வாளியொத்த
கோளொத்தசிறைவைத்தாண்டகொற்றவற்கற்றைநாடன்
தோளொத்ததுணைமென்கொங்கைநோக்கங்குத்தொடர்கிலாமை. (௪)

மந்திரச்சுற்றத்தாரும்வாணுதல்சுற்றத்தாரும்
தந்திரச்சுற்றத்தாருந்தன்கிளைச்சுற்றத்தாரும்
எந்திரப்பொறியினிற்பயாவருமின்றித்தானோர்
சிந்துரக்களிறுகூடம்புக்கெனக்கோயில்சேர்ந்தான். (௫)

ஆண்டொருசெம்பொற்பீடத்திருந்துதன்வருத்தமாறி
நீண்டுயர்நினைப்பனாகிக்கஞ்சுகியனின்றானை
ஈண்டுநந்தூதர்தம்மையிவ்வழித்தருதியென்றான்
பூண்டதோர்பணியின்வல்லைநால்வரைக்கொண்டுபுக்கான். (௬)

மனகதிவாயுவேகன்மருத்தன்மாமேகனென்றிவ்
வினையறிதொழிலர்முன்னாவாயிலர்விரவினாரை
நினைவதன்முன்னநீர்போய்நெடுந்திசையெட்டுநீந்தி
கனைகழலரக்கர்தானைகொணருதிர்கடிதினென்றான். (௭)

எழ்பெருங்கடலுஞ்சூழ்ந்தவேழ்பெருந்தீவுமெண்ணில்
பாழியம்பொருப்புங்கீழ்பாலடுத்தபாதாளத்துள்ளும்

ஆழியங்கிரியின்மேலுமரக்கரானவரையெல்லாம்
தாழ்விலிர்கொணர்திரென்றனவரதுதலைமேற்கொண்டார். (௮)

மூவகையுலகுளோருமுறையினின்றேவல்செய்வார்
பாவகமின்னதென்றுதெரிகிலர்பதைத்துவிம்மித்
தூவகலாதவைவாயெஃகுறத்தொளைக்கையானை
சேவகமமைந்ததென்னச்செறிமலரமளிசேர்ந்தான். (௯)

பண்ணிறைபவளச்செவ்வாய்ப்பைந்தொடிச்சீதையென்னும்
பெண்ணிறைகொண்டநெஞ்சினிறைகொண்டபின்னர்க்
கண்ணிறைகோடல்செய்யான்கையறுகவலைசுற்ற
உண்ணிறைமானந்தன்னையுமிழ்ந்தெரியுயிர்ப்பதானான். (௧௦)

வானகுமண்ணுமெல்லாநகுநெடுவயிரத்தோளான்
நானகுபகைஞரெல்லாநகுவரென்றதற்குநாணான்
வேனகுநெடுங்கட்செவ்வாய்மெல்லியன்மிதிலைவந்த
சானகிநகுவளென்றேநாணத்தாற்சாம்புகின்றான். (௧௧)

மாலியவான் இராவணனிடம் வருதல்.

ஆங்கவன்றன்மூதாதையாகியமூப்பின்யாக்கை
வாங்கியவரிவிலன்னமாலியவானென்றோதும்
பூங்கழலரக்கன்வந்துபொலங்கழலிலங்கைவேந்தைத்
தாங்கியவமளிமாடோர்தவிசுடைப்பீடஞ்சார்ந்தான். (௧௨)

இருந்தவனிலங்கைவேந்தனியற்கையையெய்தநோக்கிப்
பொருந்தவந்துற்றபோரிற்றோற்றனன்போலுமென்று
வருந்தினைமனமுந்தோளும்வாடினைநாளும்வாடாப்
பெருந்தவமுடையவையவென்னுற்றபெற்றியென்றான். (௧௩)

இராவணன் மாலியவானிடமிராமன் போர்வலி கூறுதல்.

கவையுறுநெஞ்சன்காந்திக்கனல்கின்றகண்ணன்பத்துச்
சிலையின்வாயென்னச்செந்தீயுயிர்ப்புறச்சிவந்தமூக்கன்
நவையறுபாகையன்றியமுதினைநக்கினாலும்
சுவையறப்புலர்ந்தநாவானினையனசொல்லலுற்றான். (௧௪)

சங்கம்வந்துற்றகொற்றத்தாபதர்தம்மோடெம்மோ
டங்கம்வந்துற்றதாகவமரர்வந்துற்றதாற்றோர்
கங்கம்வந்துற்றசெய்பகளத்துநங்குலத்துக்கொவ்வாப்
பங்கம்வந்துற்றதன்றிப்பழியும்வந்துற்றதென்றான். (௧௫)

இராவண னிலக்குமணனை வியத்தல்.

முளையமைதிங்கள்சூடுமுக்கணான்முதல்வனாகக்
கிளையமைபுவனமூன்றும்வந்துடன்கிடைத்தவேனும்

வளையமைவரிவில்வாளிமெய்யுறவழங்குமாயின்
இளையவன்றனக்குமாற்றாதென்பெருஞ்சேனைநம்ப. (கசு)

இராமனை வியத்தல்.

எறித்தபோரரக்கராவியெண்ணிலாவெள்ளமெஞ்சப்
பறித்தபோதென்னையந்தப்பரிபவமுதுகிற்பற்றப்
பொறித்தபோதன்னானந்தக்கூனிகூன்போகவுண்டை
தெறித்தபோதொத்ததன்றிச்சினவுண்மைதெரிந்ததில்லை. (கஎ)

மலையுறப்பெரியராயவாளெயிற்றரக்கர்தானை
நிலையுறச்செறிந்தவெள்ளநூற்றிரண்டெனினுநேரே
குலையுறக்குளித்தவாளிகுதிரையைக்களிற்றையாளின்
தலையறப்பட்டதல்லாலுடல்களிற்றங்கிற்றுண்டோ. (கஅ)

போயபினவன்கைவாளியுலகெலாம்புகுவதல்லால்
ஓயுமென்றுரைக்கலாமோவூழிசென்றாலுமூழித்
தீயையுந்தீக்குஞ்செல்லுந்திசையையுந்தீக்குஞ்சொல்லும்
வாயையுந்தீக்குமுன்னின்மனத்தையுந்தீக்குமன்றே. (ககூ)

மேருவையுருவுமென்றால்விண்கடந்தேகுமென்றால்
பாரினைப்பிளக்குமென்றாற்கடல்களைப்பருகுமென்றால்
ஆருமேயவற்றினாற்றலாற்றுமேலனந்தகோடி
மேருவும்விண்ணுமண்ணுங்கடல்களும்வேண்டுமன்றே. (உ0)

வரிசிலைநாணிற்கோத்துவாங்கினன்விடுதலொன்றும்
தெரிகிலதமர்தனாற்றல்யாரவன்செய்கைதேர்வார்
பொருசினத்தரக்கராவிபோகியபோகவென்று
கருதியவுலகமெல்லாஞ்சரங்களாய்க்காட்டுமன்றே. (உக)

நல்லியற்கவிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தநாமச்
சொல்லெனச்செய்யுட்கொண்டதொடையெனத்தொடையைநீக்கி
எல்லையில்செல்வந்தீராவிசையெனப்பழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாகுத்தன்பகழிமாதோ. (உஉ)

இந்திரன்குலிசவேலுமீசன்கையிலைமூன்றென்னு
மந்திரவயிலுமாயோன்வளையெஃகின்வரவுங்கண்டேன்
அந்தரநீளிதம்மாதாபதனம்புக்காற்றா
நொந்தனர்யானலாதாராரவைநோக்ககிற்பார். (உந)

பேயிருங்கணங்களோடுசுடுகளத்துறையும்பெற்றி
ஏயவன்றோள்களெட்டுமிந்திரனிரண்டுதோளும்
மாயிருஞாலமுற்றும்வயிற்றிடைவைத்தமாயன்
ஆயிரந்தோளுமன்னான்விரலொன்றினாற்றலாற்றா. (உச)

சீர்த்தவீரியராயுள்ளார்செங்கண்மாலெனினும்யானக்
கார்த்தவீரியனைநேர்வாருளரெனக்கருதலாற்றேன்
பார்த்தபோதவனுமற்றத்தாபதன்றம்பியாதத்
தார்த்ததோர்துகளுக்கொவ்வானாரவற்காற்றகிற்பார். (உரு)

இராமனைப்பினை இராவணன் மெச்சுதல்.

முப்புரமொருங்கச்சுட்டமூரிவெஞ்சிலையும்வீரன்
அற்புதவில்லுக்கையவம்பெனக்கொளலுமாகா
ஒப்புவேறுரைக்கலாவதொருபொருளில்லைவேதம்
தப்பினபோதுமன்னான்றனுவுமிழ்சரங்கடப்பா. (உசு)

உற்பத்தியயனையொக்குமோடும்போதரியையொக்கும்
கற்பத்தினரனையொக்கும்பகைஞரைக்கலந்தகாலைச்
சிற்பத்தினம்மாற்பேசச்சிறியவோவென்னைத்தீராத்
* தற்பத்தைத்துடைத்தவென்றாற்பிறிதொருசான்றுமுண்டோ. (உஎ)

குடக்கதோகுணக்கதேயோகோணத்தின்பாலதேயோ
தடத்தபேருலகத்தேயோவிசும்பதோவெங்குந்தானோ
வடக்கதோதெற்கதோவென்றுணர்ந்திலென்மனிதன்வல்வில்
இடத்ததோவலத்ததோவென்றுணர்ந்திலேன்யானுமின்னும். (உஅ)

ஏற்றமொன்றில்லையென்பதேழைமைப்பாலதன்றே
ஆற்றல்சால்கலுழனேதானாற்றுமேயமரினாற்றல்
காற்றையேமேற்கொண்டானோகனலையேகடாவினானோ
கூற்றையேயூர்கின்றானோகுரங்கின்மேற்கொண்டுநின்றான். (உகூ)

போயினித்தெரிவதென்னேபொறையினாலுலகம்போலும்
வேயெனத்தகையதோளியிராகவன்மேனிநோக்கித்
தீயெனக்கொடியவீரச்சேவகச்செய்கைகண்டால்
நாயெனத்தகுதுமன்றேகாமனுநாமுமெல்லாம். (ங0)

வாசவன்மாயன்மற்றைமலருளோன்மழுவாளங்கை
ஈசனென்றினையதன்மையிளிவருமிவராலன்றி
† நாசம்வந்துற்றபோதுநல்லதோர்பகையைப்பெற்றேன்
பூசல்வண்டுறையுந்தாராயிதுவிங்குப்புகுந்ததென்றான். (ஙக)

இராவணனுக்கு மாலியவான் புத்திகூறல்.

முன்னுரைத்தேனைவாளாமுனிந்தனைமுனியாவும்பி
இன்னுரைப்பொருளுங்கேளாயேதுவுண்டெனினுமோராய்
நின்னுரைக்குரைவேறுண்டோநெருப்புரைத்தாலுநீண்ட
மின்னுரைத்தாலுமொவ்வாவிளங்கொளியிலங்கல்வேலாய். (ஙஉ)

---

* தற்பம் - அகங்காரம்.

† நாசம்வந்துற்றபோது - எனக்கழிவுவந்தகாலத்து.

உளைவனவெனினுமெய்மையுற்றவர்முற்றுமோர்ந்தார்
விளைவனசொன்னபோதுங்கொள்கிலைவிடுதிகண்டாய்
கிளைதருசுற்றம்வெற்றிகேண்மைநன்கல்விசெல்வம்
களைவருதானையோடுகெழிவதுகாண்டியென்றான். (௩௩)

மாலியவானைத்தடுத்து மகோதரனுறுதிகூறல்.

ஆயவனுரைத்தலோடுமெப்புறத்திருந்தானன்ற
மாயைகள்பலவும்வல்லமகோதரன்கடிதின்வந்து
தீயெழநோக்கியென்னிச்சிறுமைநீசெப்பிற்றென்னா
ஓயுறுசிந்தையானுக்குறுதபேருறுதிசொன்னான். (௩௪)

நன்றியீதென்றுகொண்டநயத்தினைநயந்துவேறு
வென்றியேயாகமற்றோர்தோற்றுயிர்விடுதலாக
ஒன்றிலேநிற்றல்போலாமுத்தமர்க்குரியதொல்கிப்
பின்றுமேலவனுக்கன்றோபழியொடுநரகம்பின்னை. (௩௫)

திரிபுரமெரியவாங்கோர்தனிச்சரந்துரந்தசெல்வன்
ஒருவனிப்புவனமூன்றுமோரடியொடுக்கிக்கொண்டோன்
பொருதுனக்குடைந்துபோனார்மானுடர்பொருதபோர்க்கு
வெருவுதிபோலுமானக்கயிலையைவெருவல்கண்டாய். (௩௬)

வென்றவர்தோற்பர்தோற்றோர்வெல்குவரெவர்க்குமேலாய்
நின்றவர்தாழ்வர்தாழ்ந்தோருயர்குவர்நெறியுமஃதே
என்றனரறிஞரன்றேயாற்றலுக்கெல்லையுண்டோ
* புன்றவரிருவர்போரைப்புகழ்தியோபுகழ்க்குமேலோய். (௩௭)

தேவியைவிடுதியாயிற்றீருமுன்றீமையன்றேல்
ஆவியைவிடுதலன்றியல்லதொன்றுவதுண்டோ
தாவரும்பெருமையம்மாநீயினித்தாழ்ந்ததென்னே
காவலவிடுதியின்றிக்கையறுகவலைநொய்தின். (௩௮)

இனியிறைதாழ்த்தியாயினிலங்கையும் † யாமுமெல்லாம்
கனியுடைமரங்களாகக்கவிக்குலங்கடக்குங்காண்டி
பனியுடைவேலைச்சின்னீர்பருகினனிரவியென்னத்
துனியுழந்தயர்வதென்னேதுறத்தியாற்றுன்பமென்றான். (௩௯)

முன்னுனக்கிறைவரானமூவருந்தோற்றார்தேவர்
பின்னுனக்கேவல்செய்யவுலகொருமூன்றும்பெற்றாய்
புன்னுனைப்பனிநீரன்னமனிதரைப்பொருளென்றுன்னி
என்னுனக்கிளையகும்பகருணனையிகழ்ந்ததெந்தாய். (௪௦)

---

* புன்றவர் - குறைந்ததவத்தினையுடையவர்.
† யாமுமெல்லாம் - நம்மனைவரையும்.

ஆங்கவன் றன்னைக்கூவியேவுதியென்னினைய
ஓங்கலேபோல்வான்மேனிகாணவேயொளிப்பரன்றே
தாங்குவார்செருமுன்னென்னிற்றுபதருயிரைத்தானே
வாங்குமென்றினையசொன்னானவனதுமனத்துக்கொண்டான். (சக)

பெறுதியேயெவையுஞ்சொல்லிப்பேரறிவாளசீரிற்
றறிதியேயென்பால்வைத்தவன்பினுக்கவதியுண்டோ
உறுதியேசொன்னாயென்னாவுள்ளமும்வேறுபட்டான்
* இறுதியேயியைவதானாலிடையொன்றுற்றதுடையுண்டாமோ. (சஉ)

தும்பகருணனை இராவணனழைத்துவரச்சொல்லுதல்.

நன்றிதுகருமமென்னாநம்பியைநணுகவோடிச்
சென்றிவட்டருதியென்றானென்றலுநால்வர்சென்றார்
தென்றிசைக்கிழவன்றூதர்தேடினர்திரிவரென்னக்
குன்றினுமுயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில்புக்கார். (சங)

கிங்கரர் தும்பகருணனை எழுவாலடித்துணர்த்தல்.

கிங்கரர்நால்வர்சென்றக்கிரியனான்கிடந்தகோயில்
மங்குறேய்வாயில்சார்ந்துமன்னனீயுணர்தியென்றுந்
தங்கையினெழுவினாலேதலைசெவிதாக்கிப்பின்னும்
வெங்கணார்துயில்கின்றானைவெகுளியாலினையசொன்னார். (சச)

வேறு.

உறங்குகின்றகும்பகன்னவுங்கண்மாயவாழ்வெலாம்
இறங்குகின்றதின்றுகாணெழுந்திராயெழுந்திராய்
கறங்குபோலவிற்பிடித்தகாலதூதர்கையிலே
உறங்குவாயுறங்குவாயினிக்கிடந்துறங்குவாய். (சரு)

என்றுமீறிலாவரக்கரின்பமாயவாழ்வெலாம்
சென்றுதீயநும்முனோனெறிந்துதீமைதேடினான்
இன்றிறத்தறிண்ணமாகவின்னுமுன்னுறக்கமே
அன்றலைத்தசெங்கையாலலைத்தலைத்துணர்த்தினார். (சசா)

என்றுசொல்லவன்னவன்னெழுந்திராமைகண்டுபோய்
மன்றறங்குமாலைமார்பவன்றுயில்லெழுப்பலம்
அன்றுகொள்கைகேண்மினென்றுமாவொடாளியேவினான்
ஒன்றின்மேலொராயிரம்முழக்கிவிட்டெழுப்புவீர். (சஎ)

அனையசானையன்றுசெல்லவாண்டுநின்றுபோர்ந்திலன்
இனையசேனைமீண்டதென்றிராவணற்கியம்பலும்

---

* இறுதியேயியைவதானல் - முடிவுகாலம்பொருந்துமானல்.

வினையம்வல்லநீங்களுங்கடானையோடுசென்மினென்
றினையமல்லராயிராரையேவிநின்றியம்பினான். (௪௮)

வேறு.

சென்றனர்பத்துநூற்றுச்சீரியவீரரோடி
மன்றலந்தொங்கலான்றன்மனந்தனின்வருத்தமாற
இன்றிவன்முடிக்குமென்றுவெண்ணினரெண்ணியீண்டக்
குன்றெனவுயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில்புக்கார். (௪௯)

கும்பகருணன்விட்டமூச்சினால் மல்லரலைதல்.

திண்டிறல்வீரர்வாயிற்றிறத்தலுஞ்சுவாதவாதம்
மண்டுறவீரரெல்லாம்வருவதுபோவதாகிக்
கொண்டுறுதடக்கைபற்றிக்குலமுடைவலியினாலே
கண்டுயிலெழுப்பவெண்ணிக்கடிதொருவாயில்புக்கார். (௫௰)

கும்பகருணனது பிளந்தவாயையு மகன்றமூக்கினையுங்கண்டு மல்லரஞ்சுதல்.

இங்கிவன்றன்னையாமின்றெழுப்பலாம்வகையேதென்று
துங்கபேழ்வாயுமூக்குங்கண்டுமெய்துணுக்கமுற்றார்
அங்கைகணீண்டவஞ்சியாழ்செவியதனினூடு
சங்கொடுதாரைசின்னஞ்சமைவுறச்சாற்றலுற்றார். (௫௧)

இராவணன் கும்பகன்னன்மீது குதிரைகளைவிடச்சொல்லுதல்.

கோடிகறண்டுகூடங்குந்தம்வல்லோர்கள்கூடித்
தாடைகள்சந்துமார்புதலையெனுமவையிற்றாக்கி
வாடியகையராகிமன்னவற்குரைப்பப்பின்னும்
நீடியபரிகளெல்லாநிரப்பிடும்விரைவினென்றான். (௫௨)

குதிரைவீர ராயிரங்குதிரைகளை கும்பகருணன்மீது நடத்துதல்.

கட்டுறுகவனமாவோராயிரங்கடிதின்வந்து
மட்டறவுறங்குவான்றன்மார்பிடைமாலைமான
விட்டுறநடத்தியோட்டிவிரைவுளசாரிவந்தார்
* தட்டுறுகுறங்குபோலத்தடந்துயில்கொள்வதானான். (௫௩)

கொய்மலர்த்தொங்கலான்றன்குரைகழல்வணங்கியைய
உய்யலாம்வகைகளென்றிங்கெழுப்பலாம்வகையேசெய்தும்
கய்யெலாம்வலியுமோய்ந்துகவனமாக்காலுமோய்ந்த
செய்யலாம்வகைவேறுண்டோசெப்புதிதெரியவென்றார். (௫௪)

---

* தட்டுறுகுறங்குபோல - உறக்கம்வருதற்கு கால்பிடிக்கப்பட்டாற்போல். குறங்கு - தொடை.

வேறு.

இடைபேராவிளையாளையிணையாழிமணிநெடுந்தேர்
படைபேராவரும்போதும்பதையாதவுடம்பானை
மடைபேராச்சூலத்தான்மழுவாட்கொண்டெறிந்தாலும்
புடைபேராத்துயிலானைத்துயிலெழுப்பிக்கொணர்கென்றான். (ருரு)

ஆயிரமரக்கர் கும்பகன்னனை கன்னத்திலாயிரமிருப்புலக்கைகளாற் குத்துதலு மவனெழுதலும்.

என்றலுமேயடிவணங்கியீரைஞ்ஞூறிராக்கதர்கள்
வன்றொழிலாற்றுயில்கின்றமன்னவன்றன்மாடணுகி
நின்றிரண்டுகதுப்புமுறநெடுமுசலங்கொண்டடிப்பப்
பொன்றினவனெழுந்தாற்போற்புடைபெயர்ந்தங்கெழுந்திருந்தான். ( )

வேறு.

கும்பகருணன் குருவின்றன்மை.

விண்ணினையிடறுமென்மைவிசும்பினைநிறைக்குமேனி
கண்ணெனுமவையிரண்டுங்கடல்களிற்பெரியவாகும்
எண்ணினும்பெரியனானவிலங்கையர்வேந்தன்பின்னோன்
மண்ணினையளந்துநின்றமாலெனவளர்ந்துநின்றான். (ருஎ)

மூவகையுலகமுட்கமுரட்டிசைப்பணைக்கையானை
தாவருந்திசையினின்றுசலித்திடக்கதிருமுட்கப்
பூவுளான்புணரிமேலான்பொருப்பினான்முதல்வராய
யாவருந்துணுக்குற்றேங்கவெளிதினினெழுந்தான்வீரன். (ருஅ)

வேறு.

உறக்கமவ்வழிநீங்கியுணத்தகும்
வறைக்கமைந்தனவூனொடுவாக்கிய
நறைக்குடங்கள்பெறான்கடைநக்குவான்
இறக்கநின்றமுகத்தினையெய்துவான். (ருகூ)

ஆறுநூறுசகடத்தடிசிலும்
நூறுநூறுகுடங்களுநுங்கினான்
ஏறுகின்றபசியையெழுப்பினான்
சீறுகின்றமுகத்திருசெங்கணான். (சுo)

எருமையேற்றையோரீரறுநூற்றையும்
அருமையின்றியேதின்றிறையாறினான்
பெருமையேற்றதுகோடுமென்றேபிறங்
குருமையேற்றைப்பிசைந்தெரியூதுவான். (சுக)

இருந்தபோதுமிராவணனின்றெனத்
தெரிந்தமேனியன் றிண்கடலின்றிரை
நெரிந்ததன்னபுருவத்துநெற்றியான்
சொரிந்தசோரிதன்வாய்வரத்தூங்குவான். (சுஉ)

உதிரவாரியோடூனொடெலும்புதோல்
உதிரவாரிநுகர்வதோரூணினன்
கதிரவாழ்வயிரம்பணைக்கையினன்
கதிரவாள்வயிரக்கழற்காலினன். (சுங)

(இ-ள்.) உதிரவாரியோடு - உதிரப்பெருக்கத்தையும், ஊனொடு - ஊனையும், எலும்புதோல் - எலும்புந்தோலும், உதிர - சிந்துமாறு, வாரி- ஒருங்கெடுத்து, நுகர்வது - உண்ணுதலாகிய, ஓரூணினன் - ஒருவகை யூணுடையான், கதிர - நெற்கதிரின்வடிவினதாயுள்ள, வாள் - வாளையும், வயிரம் - தண்டத்தையுந் தாங்குகின்ற, பணைக்கையினன் - பணையை யொத்தகையையுடையான், கதிர - சந்திரனுடைய, வாள் - கிரணங்கள் போலுங் கிரணங்களமைந்த, வயிரம் - வயிரமணிகளழுத்திய, கழற்காலி னன் - வீரக்கழலணிந்த பாதமுடையான். எ-று.

ஒடுவிரண்டும் - எண்ணுப் பொருள். கதிர என்னு மிரண்டனுள் முன்னையது பெயரெச்சக்குறிப்பு - பின்னையது ஆறனுருபேற்ற பெயர். கதிரிரண்டும் - ஆகுபெயர். புகழ்பொருளுக்கியையக் கதிரென்பதற்குச் சந்திரனென்று பொருள் கூறலாயிற்று. பணை - மெய்யுருவங்களையும், வாள் - உருவத்தையும் பற்றிவந்தவுவமை. (சுங)

இரும்பசிக்குமருந்தெனவெஃகினோ
டிரும்பசிக்குமருந்துமெயிற்றினன்
வருங்களிற்றினைத்தின்றனன்மாலுறு
அருங்களிற்றிரிகின்றதோராசையான். (சுச)

(இ-ள்.) இரும்பசிக்கு – மிக்க பசிநோய்க்கு, மருந்தென - ஆற்று மருந்தென்று, எஃகினோடிரும்பு - தன்பக்கலுள்ள எழுப்படைகளையும் இருப்புப்படைகளையும், அருந்தும் - மென்றுண்ணும், அசிக்கும் - இவை வலியிலவென்று அவமதித்துச் சிரிக்கும், எயிற்றினன் - பற்களையுடை யான், வருங்களிற்றினை - தன்பாற் செல்லுகின்ற யானைகளை, தின்றனன் - தின்று, மாலுற - பசிமயக்கம் நீங்காமல், அருங்களில் - அருமை யாகிய கள்ளில், திரிகின்றது - இடைவிடாது செல்லுகின்றதாகிய, ஓ ராசையான் - ஒப்பற்ற ஆசையையுடையான். எ-று.

எண்ணொடுநீட்டல்; அவ்வெண்ணிடைச் சொல்லை இரும்பென்பத னோடுங் கூட்டுக. எஃகு - இரும்பு ஆகுபெயர் அறுதென்பதனீறுதொ குத்தல். எனவெனெச்சம் அருந்துமென்னும் வினையொடு முடிதலின் அதனை அசிக்குமென்பதன்முன் கூட்டப்பட்டது. காரியப்பொருள

வாய்கின்ற அருந்துமசிக்குமென்னும் பெயரெச்சமிரண்டடுக்கி எயிறென்னுங் கருவிப்பெயரோடு முடிந்தன. வருங் களிற்றினைத் தின்றனவெனவே புடைபெயரா நிலைமைவாய் நிற்றலிற் றிசைக்களிறுகள் இவனாலுண்ணப்படாமலுய்ந்தன வென்பதும், உறங்குதலின்றி உலாவலின் மிக்க வேட்கையிலனென்பதுங் குறிப்பெச்சம். மருமென்பது - இடவழுவமைதி. "அவற்றுள், தருசொல் வருசொலாயிருகிளவியுந் தன்மை முன்னிலை யாயீரிடத்த" என்பதோத்தாகலின். மது அரக்கர்க்குச் சிறந்ததோர் பானமாகலின் அருங்களென்றார். (௬௪)

சூலமேகந்திருத்தியதோளினான்
சூலமேகமெனப்பொலிதோற்றத்தான்
காலன்மேனிமிர்மத்தன்கழற்பொரு
காலன்மேனிமிர்செம்மயிர்க்கற்றையான். (௬௫)

(இ-ள்.) சூலமே - சூலமொன்றையே, கந்து - கழுத்தடியில், இருத்திய - தங்கப்பிடித்த, தோளினான் - கையையுடையான், சூல - சூல் கொண்ட, மேகம் - கார்மேகத்தை, திருத்திய - திருத்தச்செய்த, தோற்றத்தான் - காட்சியையுடையான், காலன் - காலனானவன், மேனி மிறைக்க - உடல்வருந்திநடுங்க, கழல் - வீரகண்டை, பொரு - தாக்குண்டொலிக்கின்ற, காலன் - காலையுடையான், மேனிமிர் - (தலையில்) மேலோங்கிய, செம்மயிர்க் கற்றையான் - மயிர்த் தொகுதியை யுடையான். எ-று.

ஆலமுண்டவனாற்றரப்பட்டுச் சூருளோர்காலமுண்ட வெற்றியதாக விற் படைபலவற்றுள்ளு மிக்கதொன்றுமே மிகுதியும் பயிறலுடையானென்பார் சூலமேகந்திருத்திய தோளினானென்றார். ஏ - பிரிநிலைக்கண் வந்தது - மிறைக்க வென்னுங் காரியப் பொருட்டாகிய வினையெச்சம் பொரு என்னும் வினைகொண்டது. மேனி ஆகுபெயர். சூலமேகந் திருத்திய தோற்றத்தானென்பது பெயர்பொருட்டற் குறிப்பேற்றவணி.

எயிறலைத்தகரதலத்திந்திரன்
எயிறலைத்தகரதலத்தெற்றினான்
அயிறலைத்தொடரங்கையன்சிங்கவூன்
அயிறலைத்தொடரங்ககல்வாயினான். (௬௬)

(இ-ள்.) எயிறலைத்த - சினங்கொண்டு பற்களை மென்றெதிர்த்த, கரதலத்து - திண்ணிய கரத்தையுடைய, இந்திரன் - இந்திரனை, எயிறலை - அண்டப்பித்திகையின் கண், தகர - வலிசிதையும்படி, தலத்து - பூலோகத்தில், எற்றினான் - எறிந்தான், அயில் - முத்தலையயிலையும், தலை - சிறப்பாகிய, தொடர் - பாசத்தையும் பற்றிய, அங்கையன் - அகங் கையுடையான், ஊன் - (தொழிலாளர் கொண்டுவந்த) தசை, சிங்க - குறைந்தால், அயிறலை - உண்ணலை, தொடர் - மேலுந் தொடர்ந்து, அங்கு - உண்ணவிருந்தவிடத்தே, அகல்வாயினான் - வாயையங் காத்திருப்பவன். எ-று.

எயிறலை தகரதலத்தென்பவற்றில் றகரதகரம்முறையே தொகுத்தல். அயில்தொடரென்பன ஆகுபெயர். தொடரென்னு முதனிலை தொடர்ந்தென வினையெச்சப்பொருள் தந்தது. மற்றையோரால் தாங்கப்படாத திண்மையாகிய வச்சிரத்தைத்தாங்கும் வன்மை சான்றகையுடையானென்பார் வாளாகரதலத்திந்திர னென்றார். இவனதுணையும் படையையும் பலமுறைகூறியது, உணவின் தொழிலையும் சாதுக்களை நலிதலையுமே மிகுதியும் வினோதமாக வேட்டானென்பது தோன்றற்கு. சிங்கவூன் என்பதற்குச் சிங்கத்தினதூனெனெனினும் பொருந்தும். (௬௬)

உடர்கிடந்துழியும்பர்க்குமுற்றுயிர்
குடர்கிடந்தடங்காநெடுங்கோளினான்
கடர்கிடந்ததுநின்றதன்மேற்கதழ்
படர்கடுங்கனல்போன்மயிர்ப்பங்கியான். (௬௭)

திக்கடங்கலும்வென்றவன்சீறிட
மிக்கடங்கலில்வெங்கதிரங்கிகள்
புக்கடங்கியமேருப்புழையெனத்
தொக்கடங்கித்துயிறருகண்ணினான். (௬௮)

காம்புறங்குங்கனவரைக்கைம்மலைத்
தூம்புறங்குமுகத்தினதாய்த்தூடல்
ஓம்புறும்முழையென்றுயர்மூக்கினான்
பாம்புறங்கும்படர்செவிப்பாழியான். (௬௯)

கூயினன்னும்முனென்றவர்கூறலும்
போயினன்னகர்பொம்மென்றிரைத்தெழ
வாயில்வல்லைநுழைந்துமதிதொடும்
கோயிலெய்தினன்குன்றனகொள்கையான். (௭௦)

நிலைகிடந்தநெடுமதிட்கோபுரத்
தலைகிடந்தவிலங்கையரண்ணலைக்
கொலைகிடந்தவேற்கும்பகருணனோர்
மலைகிடந்ததுபோலவணங்கினான். (௭௧)

வன்றுணைப்பெருந்தம்பிவணங்கலும்
தன்றிரண்டதோளாரத்தழுவினான்
நின்றகுன்றொன்றுநீணெடுங்காலொடும்
சென்றகுன்றைத்தழீஇயன்னசெய்கையான். (௭௨)

உடனிருத்தியுதிரத்தொடொண்ணறைக்
குடனிரைத்தவையூட்டித்தசைகொளீஇக்
கடனுரைத்துகில்சுற்றிக்கதிர்க்குழாம்
புடைநிரைத்தொளிர்பல்கலன்பூட்டினான். (௭௩)

பேரவிட்டபெருவலியிந்திரன்
ஊரவிட்டகளிற்றொடுமோடுநாள்
சோரவிட்டசுடர்மணியோடையை
வீரப்பட்டமெனநுதல்வீக்கினான். (எ௪)

மெய்யெலாமிளிர்மின்வெயில்வீசிடத்
தொய்யில்வாசத்துவர்துதைந்தாடிய
கய்யினாகமெனக்கடலாமெனத்
தெய்வநாறுசெஞ்சாந்தமுஞ்சேர்த்தினான். (எ௫)

விடமெழுந்ததுபோனடுவிண்ணினைத்
தொடவுயர்ந்தவன்மார்பிடைச்சுற்றினான்
இடபமுந்துமெரிபுரைநான்குதோட்
கடவுளீந்தகவசமுங்கட்டினான். (எ௬)

அன்னகாலையிலாயத்தம்யாவையும்
என்னகாரணத்தாலென்றியம்பினான்
மின்னினன்னபுருவமும்விண்ணினைத்
துன்னுதோளுமிடநதுடியாநின்றான். (எஎ)

வானரப்பெருந்தானையர்மானுடர்
கோநகர்ப்புறஞ்சுற்றினர்கொற்றமும்
எனையுற்றனர்நீயவரின்னுயிர்
போனகத்தொழின்முற்றுதிபோயென்றான். (எ௮)

வேறு.

கும்பகருணன் இராவணனுக்குப் புத்திகூறுதல்.

ஆனதோவெஞ்சமமலகில்கற்புடைச்
சானகிதுயரினந்தவிர்ந்ததில்லையோ
வானமும்வையமும்வளர்ந்தவான்புகழ்
போனதோபுகுந்ததோபொன்றுங்காலமே. (எ௯)

கிட்டியதோசெருக்கிளர்பொற்சீதையைச்
சுட்டியதோமுனஞ்சொன்னசொற்களால்
திட்டியின்விடமன்னகற்பின்செல்வியை
விட்டிலையோவிதுவிதியின்வண்ணமே. (௮0)

கல்லலாமுலகினைவரம்புகட்டவும்
சொல்லலாம்பெருவலியிராமன்றோள்களை
வெல்லலாமென்பதுஞ்சீதைமேனியைப்
புல்லலாமென்பதும்போலுமாலையா. (௮௧)

புலத்தியன்வழிமுதல்வந்தபொய்யறு
குலத்தியல்பழிந்ததுகொற்றமுற்றுமோ
வலத்தியலழிவதற்கேதுமையறு
நிலத்தியனீரியலென்னுநீரதால். (௮௨)

கொடுத்தனையிந்திரற்குலகுங்கொற்றமும்
கொடுத்தனைநின்பெருங்கிளையுநின்னையும்
படுத்தனைபலவகையமரர்தங்களை
விடுத்தனைவேறினிவீடுமில்லையால். (௮௩)

அறமுனக்கஞ்சியின்றொளித்ததாலதன்
திறமுனமுழத்தலின்வலியுஞ்செல்வமும்
நிறமுனக்களித்ததங்கதனைநீக்கிநீ
இறமுனங்கியாருனையெடுத்துநாட்டுவார். (௮௪)

தஞ்சமுந்தருமமுந்தகவுமேயவர்
நெஞ்சமுங்கருமமுமுரையுமேநெடு
வஞ்சமும்பாவமும்பொய்யும்வல்லநாம்
உஞ்சுமோவதற்கொருகுறையுண்டாகுமோ. (௮௫)

என்றுகொண்டினையனவிளம்பியானுனக்
கொன்றுளதுணர்த்துவதுணர்ந்துகோடியேல்
நன்றதுநாயகநயக்கிலாயெனின்
பொன்றினையாகவேகோடிபோக்கிலாய். (௮௬)

காலினிற்கருங்கடல்கடந்தகாற்றது
போலவன்குரங்குளசீதைபோகிலன்
வாலியையுரங்கிழித்தேகவல்லன
கோலுளயாமுளேங்குறையுண்டாகுமோ. (௮௭)

தையலைவிட்டவன்சரணந்தாழ்ந்துநின்
மையறுதம்பியோடளவளாவுதல்
உய்திறம்றெனின்னுளதுவேறுமோர்
செய்திறமுண்டதுதெளிந்துகோடியால். (௮௮)

பந்தியிற்பந்தியிற்படையைவிட்டவை
சிந்துதல்கண்டுநீயிருந்துதேம்புதல்
மந்திரமன்றுநம்வலியெலாமுடன்
உந்துதல்கருமமென்றுணரக்கூறினான். (௮௯)

இராவணன் கும்பகருணன் மொழியைத்தடுத்துரைத்தல்.

உறுவதுதெரியவன்றுன்னைக்கூயது
சிறுதொழின்மனிதரைக்கோறிசென்றெனக்

கறிவுடையமைச்சனீயல்லையஞ்சினை
வெறிவிதுன்வீரமென்றிவைவிளம்பினான். (௯0)

மறங்கிளர்செருவினுக்குரிமைமாண்டனை
பிறங்கியதசையொடுநறவும்பெற்றனை
இறங்கியகண்முகிழ்த்திரவுமெல்லியும்
உறங்குதிபோயெனவுளையக்கூறினான். (௯௧)

மானுடரிருவரைவணங்கிமற்றுமக்
கூனுடைக்குரங்கையுங்கும்பிட்டுய்தொழில்
ஊனுடையும்பிக்குமுனக்குமேகடன்
யானதுமுடிக்கிலேனெழுதிபோதியால். (௯௨)

தருகவென்றேர்படைசாற்றென்கூற்றையும்
வருகவென்வானமுமண்ணுமற்றவும்
இருகைவன்சிறுவரோடொன்றியென்னொடும்
பொருகைவெம்போரெனப்போதன்மேயினான். (௯௩)

அன்னதுகண்டவன்றம்பியாயவன்
பொன்னடிவணங்கிநீபொறுத்தியாலென
வன்னெடுஞ்சூலத்தைவலத்துவாங்கினான்
இன்னுமொன்றுரையுளதென்னக்கூறினான். (௯௪)

பின்னுங் கும்பகருணனுரைத்தல்.

வென்றிவண்வருவெனென்றுரைக்கிலேன்விதி
நின்றதுபிடர்பிடித்துந்தநின்றது
பொன்றுவென்பொன்றினற்பொலன்கொடோளியை
நன்றெனநாயகவிடுதிநன்றரோ. (௯௫)

இந்திரன்பகைஞனுமிராமன்றம்பிகை
மந்திரவலியினான்மடிதல்வாய்மையால்
தந்திரங்காற்றுறுசாம்பல்பின்னரும்
மந்திரமுணர்ந்துனக்குறுவதாற்றுவாய் (௯௬)

என்னைவென்றுளரெனிலிலங்கைகாவல
உன்னைவென்றுயருதலுண்மையாதலால்
பின்னைநின்றெண்ணுதல்பிழையப்பெய்வளை
தன்னைநன்களிப்பதுதவத்தின்பாலதே. (௯௭)

இற்றைநாள்வரைமுதல்யான்முன்செய்தன
குற்றமுமுளவெனிற்பொறுத்திகொற்றவ
அற்றதான்முகத்தினில்விழித்தலரிய
பெற்றனென்விடையெனப்பெயர்ந்துபோயினான். (௯௮)

அவ்வழியிராவணனனைத்துநாட்டமும்
செவ்வழிநீரொடுங்குருதிதேக்கினான்
எவ்வழியோர்களுமிரங்கியேங்கினார்
இவ்வழியவனும்போய்வாயிலெய்தினான். (௯௯)

இரும்படைகடிப்பெடுத்தெற்றியேகுக
பெரும்படையிளவலோடென்றபேச்சினால்
வரும்படைவந்ததுவானுளோர்கடம்
சுரும்படைமலர்முடிதூளிதூர்க்கவே. (௧௦௦)

தேர்க்கொடியானையின்பதாகைசேணுறு
தார்க்கொடியென்றிவைததைந்துவீங்குவ
பார்க்கொடுந்தூளிபோய்த்துறக்கம்பண்புற
ஆர்ப்பதுதுடைப்பதுபோன்றவாடுவ. (௧௦௧)

எண்ணுறுபடைக்கலமிழுகவெற்றிட
நண்ணுறுபொறிகளும்படைக்குநாயகர்
கண்ணுறுபொறிகளுங்கதுவக்கண்ணகல்
விண்ணுறுமழையெலாங்கரிந்துவீழ்ந்தவால். (௧௦௨)

தேர்செலக்கரிசெலநெருக்கிச்செம்முகக்
கார்செலத்தேர்செலப்புரவிக்கால்செலத்
தார்செலக்கடைசெலச்சென்றதானையும்
பார்செலற்கரிதெனவிசும்பிற்பாய்ந்ததால். (௧௦௩)

ஆயிரங்கோளரியாளியாயிரம்
ஆயிரமதகரிபூதமாயிரம்
மாயிருஞாலத்தைச்சுமப்பவாங்குவ
தேயிருஞ்சுடர்மணித்தேரொன்றேறினான். (௧௦௪)

தோமரஞ்சக்கரஞ்சூலங்கோன்மழு
நாமவேலுலக்கைவாளுஞ்சிறண்டெழு
வாமவில்வலயங்கற்பரிசைமற்றுள
சேமவெம்படையெலாஞ்சுமந்துசென்றவால். (௧௦௫)

நறையுடைத்தசும்பொடுநறையின்வெந்தவூன்
குறைவினிற்சகடமோராயிரங்கொடு
பிறையுடையெயிற்றவன்பின்புசென்றனர்
முறைமுறைகைக்கொடுமுடுகிநீட்டுவார். (௧௦௬)

ஒன்றலபற்பலருதவுமூனறை
பின்றரும்பிலனிடைப்பெய்யுமாறுபோல்
வன்றிறலிருகரம்வழங்கமாந்தியே
சென்றனன்யாவருந்திடுக்கமெய்தவே. (௧௦௭)

கணைந்தருகுரங்கொடுகெழிவதன்றிது
நிணந்தருநெடிந்தடிக்குலகுநேருமோ
பிணந்தலைப்பட்டதுபெயர்வதெங்கினி
உணர்ந்ததுகூற்றமென்றும்பரோடினார். (௧௦௮)

பாந்தளினெடுந்தலைவழுவிப்பாரொடும்
வேந்தனவிளங்கியமேருமால்வரை
போந்ததுபோற்பொலந்தேரிற்பொங்கிய
ஏந்தலையேந்தெழிலிராமனோக்கினான். (௧௦௯)

வீணையென்றுணரினதன்றுவிண்டொடும்
சேணுயர்கொடியதுவயவெஞ்சீயமாக்
காணினுங்காலின்மேலரியகாட்சியன்
பூணொளிமார்பினன்யாவன்போலுமால். (௧௧௦)

தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறின்
நாள்பலகழியுமானடுவணின்றதோர்
தாளுடைமலைகொலாஞ்சமரம்வேட்டதோர்
ஆளெனவுணர்கிலேனார்கொலாமிவன். (௧௧௧)

அரக்கனவ்வுருவொழித்தரியின்சேனையை
வெருக்கொளத்தோன்றுவான்கொண்டவேடமோ
தெரிக்கிலேனிவ்வுருத்தெரியும்வண்ணநீ
பொருக்கெனவீடணாபுகறியாலென்றான். (௧௧௨)

வேறு.

விபீடணன் கும்பகருணன் திறமிராமனுக்குரைத்தல்.

ஆரியனனையகூறவடியிணையிறைஞ்சியைய
பேரியலிலங்கைவேந்தன்பின்னவனெனக்குமுன்னோன்
காரியல்காலனன்னகழற்கும்பகருணனென்னும்
கூரியகுலத்தானென்றவனிலைகூறலுற்றான். (௧௧௩)

தவனுணங்கியரும்வேதத்தலைவருமுணருந்தன்மைச்
சிவனுணர்ந்தலரின்மேலைத்திசைமுகனுணருந்தேவன்
அவனுணர்ந்தெழுந்தகாலத்தசுரர்கள்படுவரெல்லாம்
இவனுணர்ந்தெழுந்தகாலத்திமையவர்படுவரேந்தாய். (௧௧௪)

வேறு.

ஆழியாயிவனாகுவான்
ஏழைவாழ்வுடையெம்முனோன்
தாழ்விலாவொருதம்பியோர்
ஊழிநாளுருமுறங்குவான். (௧௧௫)

காலனாருயிர்காலனால்
காலின்மேனிமிர்காலினான்
மாலினார்கெடவாகையே
சூலமேகொடுசூடினான். (௧௧௬)

தாங்குகொம்பொருநான்குகால்
ஓங்கலொன்றினையும்பர்கோன்
வீங்குநெஞ்சன்விழுந்திலான்
தூங்கநின்றுசுழற்றினான். (௧௧௭)

ஒழிந்ததீயொடுகொலையும்
பிழிந்துசாறுகொள்பெற்றியான்
அழிந்துமீதுகவாழிநீர்
இழிந்துகாலினினெற்றுவான். (௧௧௮)

ஊனுயர்ந்தவுரத்தினான்
மேனிமிர்ந்தமிடுக்கினான்
தானுயர்ந்ததவத்தினான்
வானுயர்ந்தவரத்தினான். (௧௧௯)

திறங்கொள்சாரிதிரிந்தநாள்
கறங்கலாதுகணக்கிலான்
இறங்குதாரவனின்றுகா
றுறங்கலானுலகுய்ந்ததால். (௧௨0)

சூலமுண்டதுசூருளோர்
காலமுண்டதுகைக்கொள்வான்
ஆலமுண்டவ * னாழிவாய்
ஞாலமுண்டவனல்கினான். (௧௨௧)

மின்னினொன்றியவிண்ணுளோர்
முன்னிலென்றமர்முற்றினார்
என்னினென்றுமவெண்ணிலார்
வென்னிலன்றிவிழித்திலான். (௧௨௨)

தருமமன்றிதுதானிதால்
வருநமக்குயிர்மாய்வெனா
உருமில்வெய்யவனுக்குரை
இருமைமேலுமியம்பினான். (௧௨௩)

மறுத்ததம்முனைவாய்மையால்
ஒறுத்துமாவதுணர்த்தினான்

* ஆழிவாழ்ஞாலமுண்டவனல்கினான், என்றும் பாடம்.

வெறுத்துமாய்வதுமெய்யெனு
இறுத்துநின்னெதிரெய்தினன். (கஉச)

நன்றிதன்றுநமக்கெனு
ஒன்றுநீதியுணர்த்தினன்
இன்றுகாலன்முனெய்தினன்
என்றுசொல்லியிறைஞ்சினன். (கஉரு)

வேறு.

என்றவனுரைத்தலோடுமிரவிசேயிவனையின்று
கொன்றொருபயனுமில்லைக்கூடுமேற்கூட்டிக்கொண்டு
நின்றதுபுரிதுமற்றிந்நிருதர்கோனிடருநீங்கும்
நன்றெனநினைத்தேனென்றானுதனுநலனீதென்றான். (கஉசு)

ஏகுதற்குரியார்யாரேயென்னலுமிலங்கைவேந்தன்
ஆகின்மற்றடியெனேசென்றறிவினலவனையுள்ளம்
சேகறத்தெருட்டியீண்டுச்சேருமேற்சேர்ப்பலென்றான்
மேகமொப்பானுநன்றுபோகென்றுவிடையுமீந்தான். (கஉஎ)

விபீடணன் கும்பகருணனைக்கண்டு வணங்குதல்.

தந்திரக்கடலைநீந்தித்தன்பெரும் * பலத்தைச்சார்ந்தான்
வெந்திறலவனுக்கையவீடணன்விரைவினன்பால்
வந்தனனென்னச்சொன்னார்வரம்பிலாவுவகைகூரச்
சிந்தையாற்களிக்கின்றான்றன்செறிகழற்சென்னிசேர்த்தான். (கஉஅ)

முந்திவந்திறைஞ்சினனைமுகந்துயிர்மூழ்கப்புல்லி
உய்ந்தனையொருவன்போனாயெனமனமுவக்கின்றேனென்
சிந்தனைமுழுதுஞ்சிந்தத்தெளிவிலார்போலமீள
வந்ததென்றனியேயென்றான்மழையினீர்வழங்குகண்ணான். (கஉகூ)

கும்பகருணன் விபீடணனை வினவுதல்.

அவையநீபெற்றவாறுமமரரும்பெறுதலாற்றா
உவையமேலாகத்தினுள்ளசிறப்புங்கேட்டுவந்தேனுள்ளம்
கவினரினறிவுமிக்காய்காலன்வாய்க்களிக்கின்றேம்பால்
நவையிலைவந்ததென்னியமுதுண்பாய்நஞ்சுண்பாயோ. (கநூ0)

குலத்தியல்பழிந்ததேனுங்குமரமற்றன்னைக்கொண்டே
புலத்தியன்மரபுமாயாப்புண்ணியம்பொருந்திற்றென்ன
வலத்தியரோளைநோக்கிமகிழ்கின்றேன்மன்னவாயை
உலத்தினைதிரியவந்தாயுளைகின்றதுள்ளமந்தோ. (கநூக)

---

* பலம் - முன்வருசேனை.

அறப்பெருந்துணைவர்தம்மையபயமென்றடைந்தவுன்னைத்
துறப்பது துணியார்தங்களாருயிர்துறந்தபோதும்
இறப்பெனும்பதத்தைவிட்டாயிராமனென்பளவுமற்றிப்
பிறப்பெனும்புன்மையில்லைநினைந்தென்கொல்பெயர்ந்தவண்ணம். ()

அறமெனநின்றநம்பற்கடிமைபெற்றவன்றனாலே
மறமெனநின்றமூன்றுமருங்கறமாற்றிமற்றும்
திறமெனநின்றதீமையின்மையேதீர்ந்தசெல்வ
பிறர்மனைநோக்குவேமையுறவெனப்பெறுதிபோலாம். (கரு௩)

நீதியுந்தருமநின்றநிலைமையும்புலமைதானும்
ஆதியங்கடவுளாலேயருந்தவமாற்றிப்பெற்றாய்
வேதியர்தேவன்சொல்லால்விளிவிலாவாயுப்பெற்றாய்
சாதியின்புன்மையின்னுந்தவிர்ந்திலைபோலுந்தக்கோய். (கரு௪)

ஏற்றியவில்லோன்யார்க்குமிறையவனிராமனின்றான்
மாற்றருந்தம்பிநின்றான்மற்றையோர்முற்றுநின்றார்
கூற்றமுநின்றதெம்மைகொல்லியவிதியுநின்ற
தோற்றவெம்பக்கலையவெவ்வலிதொலையவந்தாய். (கரு௫)

அய்யநீயயோத்திவேந்தற்கடைக்கலமாகியாங்கே
உய்கிலையென்னின்மற்றிவ்வரக்கராயுள்ளோரெல்லாம்
மொய்கணைமாரியாலேயிறந்துபாழ்முழுதும்பட்டால்
கய்யினாலெண்ணீர்நல்கிக்கடன்கழிப்பாரைக்காட்டாய். (கரு௬)

வருவதுமிலங்கையூர்க்கிப்புலையெலாமாண்டபின்னைத்
திருவுறைமார்பனோடும்புகுந்தபின்னென்றுந்தீராப்
பொருவருஞ்செல்வந்துய்க்கப்போதுதிவிரைவினென்றான்
கருமமுண்டுரைப்பவென்றானுரையெனக்கழறலுற்றான். (கரு௭)

விபீடணன் கும்பகருணனை இராமனிடம் அடைக்கலம் புகுதியெனல்.

இருளுறுசிந்தையேற்குமின்னருள்சுரந்தவீரன்
அருளுநீசேரினொன்றோவவயமுமளிக்குமன்றி
மருளுறுபிறவிநோய்க்குமருந்துமாமாறிச்செல்லும்
உருளுறுசகடவாழ்க்கையொழித்துவீடளிக்குமன்றே. (கரு௮)

எனக்கவன்றந்தசெல்வத்திலங்கையுமரசுமெல்லாம்
நினக்குநான்றருவென்றந்துன்னேவலினெளிதினிற்பன்
உனக்கிதினுறுதியில்லையுத்தமவுன்பின்வந்தேன்
மனக்குநோய்துடைத்துவந்தமரபையும்விளக்குவாழி. (கரு௯)

போதலோவரிதுபோனாற்புகலிடமில்லைவல்லே
சாதலோசரதநீதியறத்தொடுந்தழுவிநின்றாய்

ஆதலானுள தாமாவியனாயமேயுகுத்தெனைய
வேதநூன்மரபுக்கேற்றவொழுக்கமேபிடித்தல்வேண்டும். (கச௦)

தீயவைசெய்வராகிற்சிறந்தவர்பிறந்தவுற்றார்
தாயவைதந்தைமாரென்றுணர்வரோதருமம்பார்ப்பார்
நீயவையறிதியன்றேநினக்கியானுரைப்பதென்னோ
தூயவைதுணிந்தபோதுபழிவந்துதொடர்வதுண்டோ. (கசக)

மக்களைக்குரவர்தம்மைமாதரைமற்றுளோரை
ஒக்குமின்னுயிரன்னாரையுதவிசெய்தாரோடொன்றத்
துக்கமித்தொடர்ச்சியென்றுதுறப்பராற்றுணிவுபூண்டோர்
மிக்கதுநலனேயாகிவீடுபேறளிக்குமன்றே. (கசஉ)

தீவினையொருவன்செய்யவவனொடுந்தீங்கிலாதோர்
வீவினையுறுதலையமேன்மையோகீழ்மைதானோ
ஆய்வினையுடையையன்றேயறத்தினைநோக்கியீன்ற
தாய்வினைசெய்யவன்றோகொன்றனன்றவத்தின்மிக்கோன். (கசங)

கண்ணுதறீமைசெய்யக்கமலத்துமுளைத்ததாதை
அண்ணறன்றலையினொன்றையறுக்கவென்றமைந்தானன்றே
புண்ணுறுபுலவுவேலோய்பழியொடும்பொருந்திப்பின்னை
எண்ணுறுநரகின்வீழ்வதறிஞருமியற்றுவாரோ. (கசச)

உடலிடைத்தோன்றிற்றொன்றையறுத்ததனுதிரமுற்றிச்
சுடருறச்சுட்டுவேறோர்மருந்தினாற்றுயரந்தீர்வர்
கடலிடைக்கோட்டந்தேய்த்துக்கழிவதுகருமமன்றால்
மடலுடையலங்கன்மார்பமதியுடையவர்க்குமன்னோ. (கசரு)

காக்கலாநம்முன்றன்னையெனினதுகண்டதில்லை
ஆக்கலாமறத்தைவேறேயெனினுமாங்காவதில்லைத்
தீக்கலாங்கொண்டதேவர்சிரிக்கலாஞ்செருமுன்னாவி
போக்கலாம்புகலாம்பின்னைநரகன்றிப்பொருந்திற்றுண்டோ. (கசசா)

மறங்கிளருலகைவென்றுவாழ்ந்திலைமண்ணின்மேலா
இறங்கினையின்றுகாறுமிளமையும்வறிதேபோக
உறங்கினையென்பதல்லாலுற்றதொன்றுளதோவென்னை
அறங்கெடவுயிரைநீத்துமேற்கொள்வானமைந்ததைய. (கசஎ)

திருமறுமார்பனல்கவனந்தருந்தீர்ந்துசெல்வப்
பெருமையுமெய்திவாழியீறிலாநாளும்பெற்றாய்
ஒருமையேயரசுசெய்வாயுரிமையேயுளதேயொன்றும்
அருமையுமிவற்றினில்லைக்காலமுமடுத்ததைய. (கசஅ)

தேவர்க்குந்தேவனல்கவிலங்கையிற்செல்வம்பெற்றாய்
ஏவர்க்குஞ்சிறியையல்லையாருனைநலியுமீட்டார்
மூவர்க்குந்தலைவராயமூர்த்தியாரறத்தைமுற்றும்
காவற்குப்புகுந்துநின்றார்காகுத்தவேடங்காட்டி. (கசகூ)

உன்மக்களாகியுள்ளாருன்னொடுமொருங்குதோன்றும்
என்மக்களாகியுள்ளாரிக்குடிக்கிறுதிசூழ்ந்தார்
தன்மக்களாகியுள்ளார்தலையொடுந்திரிவரன்றே
புன்மக்கட்டருமம்பூணப்புலமக்கட்டருமம்பூண்டாய். (கரு0)

முனிவருங்கருணைவைப்பர்மூன்றுலகத்துந்தோன்றி
இனிவரும்பகையுமில்லையீறுண்டென்றிரங்கல்வேண்டா
துனிவருஞ்செறுநரானதேவரேதுணைவராவர்
கனிவருங்காலத்தையபூக்கொய்யக்கருதலாமோ. (கருக)

வேதநாயகனேயுன்னைக்கருணையால்வேண்டிவிட்டான்
காதலாலென்மேல்வைத்தகருணையாற்கருமமீதே
ஆதலானவனைக்காணவறத்தொடுந்திறம்பலைய
போதுவாய்நீயேயென்னாப்பொன்னடியிரண்டும்பூண்டான். (கருஉ)

தும்பியந்தொடையன்மாலைச்சுடர்முடியடியிற்றோயப்
பம்புபொற்கழல்கள்கையாற்பற்றினன்புலம்பும்பொற்றோட்
டம்பியையெடுத்துமார்பிற்றழுவித்தன்றறுகணூடு
வெம்புணீர்சொரியநின்றானினையனவிளம்பலுற்றான். (கருங)

கும்பகருணன் வீடணனுரையை மறுத்துரைத்தல்.

நீர்க்கோலவாழ்வைநச்சிநெடிதுநாள்வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலஞ்செய்துவிட்டாற்குயிர்கொடாதங்குப்போகேன்
தார்க்கோலமேனிமைந்தவென்றுயர்தவிர்த்தியாயின்
கார்க்கோலமேனியானைக்கூடுதிகடிதினென்றான். (கருச)

மலரின்மேலிருந்தவள்ளல்வழுவிலாவரத்தினனீ
உலைவிலாத்தருமம்பூண்டாயுலகுளதனையுமுள்ளாய்
தலைவனீயுலகுக்கெல்லாமுனக்கதுதக்கதேயால்
புலையுறுமரணமெய்தலெனக்கதுபுகழதேயால். (கருரு)

கருத்திலாவிறைவன்றீமைகருதினலதனைக்காத்துத்
திருத்தலாமாகினன்றேதிருத்துதறீராதாயின்
பொருத்துறுபொருளுண்டாமோபொருதொழிற்குரியராகி
ஒருத்தரின்முன்னஞ்சாதலுண்டவர்க்குரியதம்மா. (கருசு)

தும்பியந்தொடையல்வீரன்சுடுகணைதுரப்பச்சுற்றும் ஸை
வெம்புவெஞ்சேனையோடும்வேறுளகிளைஞரோடும்

உம்பரும்பிறரும்போற்றவொருவன்மூவுலகையாண்டு
தம்பியரின்றிமாண்டுகிடப்பனோதமையன்மண்மேல். (கருஎ)

அணையின்றியயர்ந்தவென்றியஞ்சினார்நகையதாகப்
பிணையொன்றுகண்ணாள்பங்கன்பெருங்கிரிநெருங்கப்போர்த்த
பணையொன்றுதிரடோள்காலபாசத்தாற்பிணிப்பக்கூசித்
துணையின்றிச்சேறனன்றோதோற்றுளகூற்றின்சூழல். (கருஅ)

செம்பிட்டுச்செய்தவிஞ்சித்திருநகர்ச்செல்வந்தேறி
வம்பிட்டதெரியலெம்முனுயிர்கொண்டபகையைவாழ்த்தி
அம்பிட்டுத்துன்னங்கொண்டபுண்ணுடைநெஞ்சோடைய
கும்பிட்டுவாழ்கிலேன்யான்கூற்றையுமாடல்கொண்டேன். (கருகூ)

அனுமனைவாலிசேயையருக்கன்சேய்தன்னையம்பொற்
றனுவுடையவரைவேறோர்நீலனைச்சாம்பன்றன்னைக்
கனிதொடர்குரங்கின்காலக்கடலொடுங்கடந்துமற்றப்
பணிதுடைத்துலகஞ்சுற்றுங்கதிரெனத்திரிவன்பார்த்தி. (கசுo)

ஆலங்கண்டஞ்சியோடுமமரர்போலரிகளோடச
சூலங்கொண்டோடிவேலைதொடர்வதோர்தோற்றந்தோன்ற
நீலங்கொள்கடலுமோடக்காலொடுநெருப்புமோடக்
காலங்கொளுலகுமோடக்கறங்கெனத்திரிவன்காண்டி. (கசுக)

செருவிடையஞ்சார்வந்தென்கண்ணெதிர்சேர்வரேலக்
கருவரைகனகக்குன்றமென்னலாங்காட்சிதந்த
இருவருநிற்கமற்றிங்கியாருளரவரையெல்லாம்
ஒருவருந்திரியவொட்டேனுயிர்சுமந்துலகினென்றான். (கசுஉ)

தாழ்க்கிற்பாயல்லையென்சொற்றலைக்கொளத்தக்கதென்று
கேட்கிற்பாயாயினெய்தியவரொடுங்கெழீஇயநட்பை
வேட்கிற்பாயினியோர்மாற்றம்விளம்பினல்விளைவுண்டென்று
சூழ்க்கிற்பாயல்லையாருந்தொழுகிற்பாயென்னச்சொன்னான். (கசுங)

நீ இறந்தார்க்குப் பிதிர்க்கடனியற்றெனல்.

போதுநீயையபின்னைப்பொன்றினார்க்கெல்லாநின்ற
வேதியர்தேவன்றன்னைவேண்டினைபெற்றுமெய்ம்மை
ஆதிநூன்மரபினாலேகடன்மையுமாற்றியேற்ற
மாதுயர்நரகநண்ணாவண்ணமுங்காத்திமன்னோ. (கசுச)

ஆகுவதாகுங்காலத்தழிவதுமழிந்துசிந்திப்
போகுவதயலேநின்றுபோற்றினும்போதல்செய்யும்
சேகறவுணர்ந்தோர்நின்னின்யாருளர்வருத்தல்செய்யா
தேகுதியெம்மைநோக்கியிரங்கலையென்றுமுள்ளாய். (கசுரு)

என்றவன்றன்னைமீட்டுமெடுத்துமார்பிறுகப்புல்லி
நின்றுநின்றிரங்கியேங்கிநிறைகண்ணொடிதுநோக்கி
இன்றொடுந்தவிர்ந்ததன்றேயுடன்பிறப்பென்பதென்றான்
வென்றிவெந்திறலினானுமவனடித்தலத்துவீழ்ந்தான். (கசுசு)

வணங்கினான்வணங்கிக்கண்ணும்வதனமுமனமும்வாயும்
உணங்கினானுயிரோடியாக்கையொடுங்கினானுரைசெய்தின்னும்
பிணங்கினாலாவதில்லைப்பெயர்வதென்றெழுந்துபோந்தான்
குணங்களாலுயர்ந்தான்சேனைக்கடலெலாங்கரங்கள்கூப்ப. (கசுஎ)

கள்ளநீர்வாழ்க்கையேமைக்கைவிட்டுக்காலும்விட்டான்
பிள்ளைமைதுறந்தானென்னுப்பேதுறுநிலையனாகி
வெள்ளநீர்வேலைதன்னில்வீழ்ந்தநீர்வீழவெங்கண்
உள்ளநீரெல்லாமாறியுதிரநீரொழுகநின்றான். (கசுஅ)

விபீடணன் இராமனிடங் கும்பகருணன் மனநிலைகூறுதல்.

எய்தியநிருதர்கோனுமிராமனையிறைஞ்சியெந்தாய்
உய்திறனுடையார்கன்றேவுறநெறியொழுக்கமுண்மை
பெய்திறனெல்லாம்பெய்துபேசினேன்பெயருந்தன்மை
செய்திலன்குலத்துமானந்தீர்ந்திலன்சிறிதுமென்றான். (கசுகூ)

கொய்திறச்சடையின்கற்றைகொந்தளக்கோலக்கொண்டல்
நொய்தினிற்றுளக்கியையநுன்னெதிர்நும்முனோனை
எய்துறத்துணித்துவீழ்த்தலினிதன்றென்றினையசொன்னேன்
செய்திறனினிவேறுண்டோவிதியையார்தீர்க்கிற்பார். (கஎ0)

எனவினிதுரைக்கும்வேலையிராக்கதர்சேனையென்னும்
கனைகடல்கவியின்றானைக்கழியினைவளைந்துகட்டி
முனைதொழின்முயன்றதாகமூவகையுலகுமுற்றத்
தனிநெடுந்தூளியார்த்ததார்த்திலபரவைதள்ளி. (கஎக)

அசுரவானர யுத்தம்.

ஓடினபுரவிவேழமோடினவுருளைத்திண்டேர்
ஓடினமலைகளோடவோடினவுதிரப்பேரு
றோடினகவந்தபந்தமாடினவலகைமேன்மேல்
ஆடினபதாகையோங்கியாடினபறவையம்மா. (கஎஉ)

மூளையுந்தசையுமென்புங்குருதியுநிணமுமூரி
வாளொடுங்குழம்புபட்டார்வாளெயிற்றரக்கர்மற்றவ்
வாளிருங்குருதிவெள்ளத்தழுந்தியகவிகளம்பொற்
றோளொடுமரனுங்கல்லுஞ்சூலமும்வேலுந்தாக்க. (கஎங)

எய்தனர்நிருதர்கல்லாலெறிந்தனகவிகளேந்திப்
பெய்தனவரக்கர்பற்றிப்பிசைந்தனரரிகள்பின்றா
வைதனயாதுதானர்வலித்தனர்வானரேசர்
செய்தனர்பிறவும்வெம்போர்திகைத்தனர்தேவரெல்லாம். (களச)

நீரினையோட்டுங்காற்றுங்காற்றெதிர்நிற்குநீரும்
போரினையாகவென்றுபொருகின்றபூசனோக்கித்
தேரினையோட்டிவந்தான்றிருவினைத்தேவர்தங்கள்
ஊரினைநோக்காவண்ணமுதிரவேனோக்கியுள்ளான். (களரு)

கும்பகருணன் வானரங்களை வதைத்தல்.

ஊழியிற்பட்டகாலத்துலசங்கள்பட்டாலொப்பப்
பூழியிற்பட்டுச்செந்நீர்ப்புணரியிற்பட்டுப்பொங்கும்
சூழியிற்பட்டநெற்றிக்களிற்றொடுந்துரந்ததேரின்
ஆழியிற்பட்டவன்றேயவனியிற்பட்டவெல்லாம். (களசு)

குன்றுகொண்டெறியும்பாரிற்குதிக்கும்வெங்கூலம்பற்றி
ஒன்றுகொண்டொன்றையெற்றுமுதைக்கும்விட்டுழக்கும்வாரித்
தின்றுதின்றுமிழும்பற்றிச்சிரங்களைத்திருகுந்தேய்க்கும்
மென்றுமென்றிழிச்சும்விண்ணில்வீசுமேற்பிசைந்துபூசும். (களஎ)

வாரியின்முகக்குங்கையான்மண்ணிடைத்தேய்க்கும்வாரி
நீரிடைக்குவிக்குமப்பானெருப்பிடைநிமிரவீசும்
தேரிடையெற்றுமெட்டுத்திசையினுஞ்செல்லச்சிந்தும்
தூரிடைமரத்துமோதுமலைகளிற்புடைக்குஞ்சுற்றி. (களஅ)

பறந்தனரமரரஞ்சிப்பல்பெரும்பிணத்தின்பம்மல்
நிறைந்தனபறவையெல்லாநெடுந்திசைநான்குநான்கும்
மறைந்தனபெருமைதீர்ந்தமலைக்குலம்வற்றிவற்றிக்
குறைந்தனகுரக்குவெள்ளங்கொன்றனன்கூற்றுங்கூச. (களகூ)

மற்றினியொருவன்மேலோர்மரனெடுங்கற்கள்வைக்கப்
பெற்றிலமாதுமன்றேயின்றொடும்பெறுவதாதும்
அற்றனதீங்குமென்னாவரிகுலத்தலைவர்பற்றி
எற்றினவெறிந்தவெல்லாமிணைநெடுந்தோளினேற்றான். (கஅ0)

கல்லொடுமரனும்வேருங்கட்டையுங்காலிற்றீண்டும்
புல்லொடுபிறவுமெல்லாம்பொடிப்பொடியாகிப்போன
இல்லைமற்றெறியத்தக்கவெற்றுவசுற்றுமென்னப்
பல்லொடுபல்லுமென்றுபட்டனகுரங்குமுட்டி. (கஅக)

குன்றின்வீழ்குரீஇக்குழாத்தினிற்குழாங்கொளக்குதித்துக்கூடிச்
சென்றுமேலெழுந்துபற்றிக்கைத்தலந்தேயக்குத்தி

வன்றிறலெயிற்றாற்கவ்விவள்ளுகிர்மடியக்கீளா
ஒன்றுமாகின்றதில்லையென்றிழிந்தோடிப்போன. (கஅ௨)

மூலமேமண்ணின்மூழ்கிக்கிடந்ததோர்பொருப்பைமுற்றும்
காலமேலெழுந்தகால்போற்கையினாற்கடிதின்வாங்கி
நீலன்மேனிமிர்ந்ததாங்கோர்நெருப்பெனத்திரித்துவிட்டான்
சூலமேகொண்டுநூறிமுறுவலுந்தோன்றிநின்றான். (கஅ௩)

பெயர்ந்தொருசிகரந்தேடினச்சமாம்பிறர்க்குமென்னாப்
புயங்களேபடைகளாகத்தேரெதிரோடிப்புக்கான்
இயங்களுங்கடலுமேகத்திடிகளுமொழியயாரும்
பயங்கொளக்கரங்களோச்சிக்குத்தினானுதைத்தான்பல்கால். (கஅ௪)

கைத்தலஞ்சலித்துக்காலுங்குலைந்துதன்கருத்துமுற்றி
நெய்த்தலையழலிற்காந்தியெரிகின்றநீலன்றன்னை
எற்றுயிர்குடிப்பலென்னாவெற்றினானிடதுகையால்
மெய்த்தலைச்சூலமோச்சான்வெறுங்கையானென்றுவெள்கி. (கஅ௫)

ஆண்டதுநோக்கிநின்றவங்கதனாழிதன்னுள்
நீண்டதோர்நெடுந்திண்குன்றநிலமுதுகாற்றநீக்கி
மாண்டனனரக்கன்றம்பியென்றுலகேழும்வாழ்த்தத்
தூண்டினனதனையன்னானொருதனித்தோளினேற்றான். (கஅ௬)

எற்றபோதனையகுன்றமண்ணுறுந்துகளதாகி
வீற்றுவீற்றாகியோடிவிழுதலுங்கவியின்வெள்ளம்
ஊற்றமேதமக்கென்றெண்ணியுடைந்ததுகுமரனுற்ற
சீற்றமுந்தானுநின்றான்பெயர்ந்திலன்சென்றுபாதம். (கஅ௭)

இடக்கையாலரக்கனுங்கோரெழுமுனைவயிரத்தண்டு
தடுக்கலாந்தரத்ததல்லாவலியதுதருக்கின்வாங்கி
மடக்குவாயுயிரையென்னாவீசினனதனைமைந்தன்
தடக்கையாற்பிடித்துக்கொண்டான்வானவர்தன்னைவாழ்த்த. (கஅ௮)

பிடித்ததுசுழற்றிமற்றப்பெருவலியரக்கன்றன்னை
இடித்துருமேறுகுன்றத்தெரிமடுத்தியங்குமாபோல்
அடித்துயிர்குடிப்பெனென்னாவனல்விழித்தார்த்துமண்டிக்
கொடித்தடந்தேரின்முன்னர்க்குதித்தெதிர்குறுகிநின்றான். (கஅ௯)

நின்றவன்றன்னையன்னானெருப்பெழநிமிரநோக்கிப்
பொன்றவந்தடைந்ததானைப்புரவலனொருவன்றானே
அன்றவன்மகனோவெம்மூரனன்மடுத்தரக்கர்தம்மை
வென்றவன்றானோவாரோசொல்லுதிவிரைவினென்றான். (க௯0)

நும்முனைவாலிற்சுற்றினோன்றிசைநான்குந்தாவி
மும்முனைநெடுவேலண்ணான்முளரியஞ்சரணந்தாழ்ந்த
வெம்முனைவீரன்மைந்தனின்னையென்வாலின்வீக்கித்
தெம்முனையிராமன்பாதம்வணங்கிடச்செல்வனென்றான். (௧௯௧)

உந்தையைமறைந்தோரம்பாலுயிருண்டவுதவியோற்குப்
பந்தனைபகையைச்செற்றுக்காட்டலையென்னிற்பாரோர்
நிந்தனைநின்னைச்செய்வர்நல்லதுநினைந்தாய்நேரே
வந்தனைபுரிவரன்றேவீரராய்வசையிற்றீர்ந்தார். (௧௯௨)

இத்தலைவந்ததென்னையிராமன்பால்வாலினீர்த்து
வைத்தலைநுதலியன்றுவானவர்மார்பிற்றைத்த
முத்தலையயிலினுச்சிமுதுகுறமூரிவால்போல்
கைத்தலங்காலுந்தூங்கக்கிடத்தலைக்கருதியென்றான். (௧௯௩)

அற்றவனுரைத்தலோடுமனல்விழித்தசனிகுன்றத்
துற்றதுபோலுமென்னுமொலிபடவுலகமுட்கப்
பொற்றடந்தோளின்வீசிப்புடைத்தனன்பொறியிற்சிந்தி
இற்றதுநூறுகூறாயெழுமுனைவயிரத்தண்டு. (௧௯௪)

தண்டிறத்தடக்கையோச்சித்தழுவியதறுகணானைக்
கொண்டிறப்புறவென்னாத்தலையுறக்குனிக்குங்காலைப்
புண்டிறப்புறவலாளன்கையினாற்புகைந்துகுத்த
மண்டிறப்பெய்தவீழ்ந்தான்மாருதியிமைப்பின்வந்தான். (௧௯௫)

மறித்தவனவனைத்தன்கைவயிரவாட்சூலமார்பில்
குறித்துறவெறியலுற்றகாலையிற்குன்றமொன்று
பறித்தவனெற்றிமுற்றப்பரப்பிடைப்பாகமுன்னே
செறித்தெனச்சுரிக்கவீசித்தீர்த்தனைவாழ்த்தியார்த்தான. (௧௯௬)

தலையினிற்றைத்துவேறோர்தலையெனநின்றதன்ன
மலையினைக்கையின்வாங்கிமாருதிவயிரமார்பின்
உலையுறவெந்தபொன்செய்கம்மியர்கூடமொப்பக்
கொலையுறுபொறிகள்சிந்தவீசித்தோள்கொட்டியார்த்தான். (௧௯௭)

அவ்வழிவாலிசேயையரிகுலவீரருஞ்சார்
வவ்வினர்கொண்டுபோந்தார்மாருதிவானைமுற்றும்
கவ்வியதனையதாங்கோர்நெடுவரைகடிதின்வாங்கி
எவ்வமிலாற்றலானைநோக்கிநின்றினையசொன்னான். (௧௯௮)

எறிகுவனிதனைநின்மேலிமைப்புறுமளவிலாற்றல்
மறிகுவதன்றியல்லான்மாற்றினையென்னின்வன்மை

அறிகுவரெவரும்பின்னையானுன்னோடமருஞ்செய்யேன்
பிறிகுவனுலகில்லவல்லோய்பெரும்புகழ்பெறுதியென்றான். (௧௯௯)

மாற்றமஃதுரைப்பக்கேளாமலைமுழைதிறந்ததென்னக்
கூற்றுறழ்பகுவாய்விள்ளச்சிரித்துநீகொணர்ந்தகுன்றை
ஏற்றனனேற்றகாலத்திறையதற்கொற்கமெய்தின்
தோற்றனனுனக்கென்வன்மைசுருங்குமென்றரக்கன்சொன்னான். (௨௦௦)

மாருதிவல்லையாமினில்லடாமாட்டாயாகிற்
பேருதியுயிர்கொண்டென்றுபெருங்கையானெருங்கிவிட்ட
காருதிர்வயிரக்குன்றைக்காத்திலன்றாண்மேலேற்றான்
ஓருதிர்நூறுகூறாயுக்கதெவ்வுலகுமுட்க. (௨௦௧)

இளக்கமொன்றின்றிநின்றவியற்கைபார்த்திவனதாற்றல்
அளக்குறற்பாலுமாகாகுலவரையமரினாற்றா
துளக்குறுநிலையானல்லன்சுந்தரத்தோளன்வாளி
பிளக்குமேற்பிளக்குமென்னாமாருதிபெயரப்போனான். (௨௦௨)

எழுபதுவெள்ளத்துள்ளாரிறந்தவரொழியயாரும்
முழுமுதன்மாள்வரின்றேயிவன்வலத்தமைந்தமுச்சூற்
கழுவினினென்றுவானோர்கலங்கினார்நடுங்கினாரால்
பொழுதினினுலகமூன்றுந்திரியுமென்றுள்ளம்பொங்கி. (௨௦௩)

தாக்கினார்தாக்கினார்தங்கைத்தலஞ்சலித்ததன்றி
நூக்கினாரில்லையாருநோவுசெய்தாருமில்லை
ஆக்கினான்களத்தினங்கோர்குரங்கினதடியுமின்றிப்
போக்கினானண்மையோடும்புதுக்கினான்புகழையம்மா. (௨௦௪)

சங்கத்தார்குரங்குசாயத்தாபதரென்னத்தக்கார்
இங்குற்றாரல்லரோதான்வேறுமோரிலங்கையுண்டோ
எங்குற்றாரெங்குற்றாரென்றெடுத்தழைத்திமையோரஞ்சத்
துங்கத்தோள்கொட்டியார்த்தான்கூற்றையுந்துணுக்கங்கொண்டான். ()

* பறந்தலையதனின்வந்தபலபெருங்கவியின்பண்ணை
இறந்ததுகிடக்கின்றதிரிதலின்யாருமின்றி
வறந்ததுசோரிபாயவளர்ந்தனமகரவேலை
குறைந்தனவுவாவுற்றோதங்கிளர்ந்துமீக்கொண்டதென்ன. (௨௦௬)

வேறு.

இலக்குமண கும்பகருண யுத்தம்.

குன்றுங்கற்களுமரங்களுங்குறைந்தனகுரங்கின்
வென்றியம்பெருஞ்சேனையோர்பாதியின்மேலும்

* பறந்தலை - போர்க்களம்.

இன்றுதேய்ந்ததென்றுரைத்தலுமமரர்கண்டுவெப்பச்
சென்றுதாக்கினனொருதனிச்சுமித்திரைச்சிங்கம். (௨௦௭)

நாணெறிந்தனன்சிலையினையரக்கியர்நகுபொற்
பூணெறிந்தனர்படியிடையிடிபொடித்தென்னச்
சேணெறிந்தெழுதிசைசெவிடெறிந்தனவலகை
தூணெறிந்தனகையெடுத்தாடின துணங்கை. (௨௦௮)

இலக்குவன்கடிதேவியதிரைபெருதிரைப்பச்
சிலைக்கடுங்கணைநெடுங்கணஞ்சிறையுடன்செல்ல
உலைக்கொடுங்கனல்வெதும்பிடவாயெரிந்தோடிக்
குலக்கயங்களிற்குளித்தன குடித்தன குருதி. (௨௦௯)

அலைபடைத்தவாளரக்கரைச்சிலகழுத்தரிவ
சிலசிரத்தினைத்துணித்தவைதிசைகொண்டுசெல்வ
கொலைபடைத்தவெங்களத்திடைவிழாக்கொண்டுபோவ
தலைபடைத்தனபோன்றனவானெடுஞ்சரங்கள். (௨௧௦)

உருப்பதங்களையொப்பனசிலகணையோடைப்
பொருப்பதங்களையுருவிமற்றப்புறம்போவ
செருப்பதம்பெருவரக்கர்தந்தலைபலசிந்திப்
பருப்பதங்கள்புக்கொளிப்பனமுழைபுகுபாம்பின். (௨௧௧)

மின்புகுந்தனபல்குழுவாமெனமிளிர்வ
பொன்புகுந்தொளிர்வடிம்பினகடுங்கணைபோவ
முன்புநின்றவர்முகத்திற்குங்கடைக்குழைமுதுகின்
பின்புநின்றவர்பிடர்க்குமிவ்விசையொக்கும்பிறழா. (௨௧௨)

போர்த்தபேரியின்கண்ணனகாளத்தின்பொகுட்ட
ஆர்த்தவாயனகையனவானையின்கழுத்த
ஈர்த்ததேரனவிவுளியின்றலையனவெவர்க்கும்
பார்த்தநோக்கனகலந்தனவிலக்குவன்பகழி. (௨௧௩)

மருப்பிழந்தனகளிறெலாம்வால்செவியிழந்த
நெருப்புகுங்கண்களிழந்தனநெடுங்கரந்துணிந்த
செருப்புகுங்கடுங்காற்றுரஞ்சிந்தினசிகரப்
பொருப்புருண்டனவாமெனத்தலத்திடைப்புரண்ட. (௨௧௪)

நிரந்தரந்தொடைநெகிழ்த்தலிற்றிசையெங்குநிறைந்த
சரந்தலைத்தலைபடப்படமயங்கினசாய்ந்த
உரந்தலத்துறவுழைத்தலாற்பிழைத்ததொன்றில்லைக்
குரந்தலத்தினும்விசும்பினுமிதித்திலாகுதிரை. (௨௧௫)

பல்லவப்படைபடப்படுபுரவியபல்கால்
வில்லுடைத்தலையாளொடுசூதரைவீழ்த்த
எல்லையுற்றவெங்குருதியினீர்ப்புண்டவல்லால்
செல்லகிற்றிலநின்றிலகொடிநெடுந்தேர்கள். (௨௧௬)

பேழையொத்தகல்வாயனபேய்க்கணமுகக்கும்
மூழையொத்தனகழுத்தறவீழ்ந்தனமுறைசால்
ஊழையொத்தனவோர்கணைதைத்தனவுதிரத்
தாழியொத்தவெங்குருதியின்மிதப்பனதலைகள். (௨௧௭)

ஓட்டிநாயகன்வென்றிநாள்குறித்தொளிர்முளைகள்
அட்டிவைத்தனபாலிகைநிகர்த்தனவழிந்து
நட்டவாமெனவீழ்ந்தனதுடிகளினவைதீர்
வட்டவான்கணில்வதிந்தனவருணசாமரைகள். (௨௧௮)

எரிந்தவெங்கணைநெற்றியிற்படுதொறும்யானை
அரிந்தவங்குசத்தங்கையிற்கல்வியினமைவால்
திரிந்தவேகத்தபாரங்கடீர்ந்தனசெருவில்
புரந்தவானரத்தானையிற்புக்கனபுயலின். (௨௧௯)

வேனிலானன்னவிலக்குவன்கடுங்கணைவிலக்க
மானவெள்ளெயிற்றரக்கர்தம்படைக்கலம்வாரிப்
போனபோயினதிசைதொறும்பொறிக்குலம்பொடிப்ப
மீனெலாமுடன்விசும்பினின்றுதிர்ந்தெனவீழ்ந்த. (௨௨௦)

உரங்குடைந்தனதொடர்ந்துபோய்க்கொய்யுளைக்கடுமாக்
குரங்குடைந்தனவெரிநுறக்கொடிநெடுங்கொற்றத்
தரங்குடைந்தனவணிநெடுந்தேர்க்குலங்குடைந்த
அரங்குடைந்தனவயினெடுவாளிகளம்மா. (௨௨௧)

துரக்குமெய்யுணர்விருவினைகளையெனுஞ்சொல்லில்
கரக்கும்வீரதைதீமையையெனுமிதுகண்டேம்
இரக்கநீங்கினரறத்தொடுந்திறம்பினரெனினும்
அரக்கராக்கையையரம்பையர்தழுவினர்விரும்பி. (௨௨௨)

மறக்கொடுந்தொழிலரக்கர்கண்மறுக்கிலாமழைபோல்
நிறக்கொடுங்கணைநெருப்பொடுநிகர்வனநிமிர
இறக்கமெய்தினர்யாவருமெய்தினரெனினத்
துறக்கமென்பதிற்பெரியதொன்றுளதெனச்சொல்லேம். (௨௨௩)

ஒருவரைக்கரமொருவரைச்சிரமற்றங்கொருவர்
குரைகழற்றுணைதோளிணைபிறமற்றுங்கொளலால்

விரவலர்ப்பெருவறுமையவாயினவெவ்வே
றிரவுகற்றனபோன்றனவிலக்குவன்பகழி. (உஉச)

சிலவரைக்கரஞ்சிலவரைச்செவிசிலர்நாசி
சிலவரைக்கழல்சிலவரைக்கண்கொளுஞ்செயலால்
நிலவரைத்தருபொருள்வழிதண்டமிழ்நிரப்பும்
புலவர்சொற்றுறைபுரிந்தவும்போன்றனபுங்கம். (உஉரு)

அறத்தினின்னுயிரனையவன்கணைபடவரக்கர்
இறத்துமிங்கிறைநிற்பினெனன்றிரியலின்மயங்கித்
திறத்திறம்படத்திசைதொறுந்திசைதொறுஞ்சிந்திப்
புறத்திலோடினரோடினகுருதியேபோல. (உஉசு)

செருவின்மாண்டவர்பெருமையுமிலக்குவன்செய்த
வரிவிலாண்மையுநோக்கியபுலத்தியன்மருமான்
திரிபுரஞ்செற்றதேவனுமிவனுமேசெருவின்
* ஒருவிலாளரென்றுயிர்க்காலெடுத்துரைத்தான். (உஉஎ)

படர்நெடுந்தடந்தட்டிடைத்திசைதொறும்பாகர்
கடவுகின்றதுகாற்றினுமனத்தினுங்கடிய
தடல்வயங்கொள்வெஞ்சீயமின்றூர்க்கின்றதம்பொன்
வடபெருங்கிரிபோல்வதேரோட்டினன்வந்தான். (உஉஅ)

தொளைகொள்வாளுகச்சுடர்நெடுந்தேர்மிசைத்தோன்றி
வளைகொள்வெள்ளெயிற்றரக்கன்வெஞ்செருத்தொழின்மலையக்
கிளைகொளாதிகலென்றெண்ணிமாருதிகிடைத்தான்
இளையவள்ளலேயேறுதிதோண்மிசையென்றான். (உஉகூ)

அனுமன்றோளி லிலக்குமணனேறி நிற்றல்.

ஏறினனிளங்கோளரியிமையவராசி
கூறினரெடுத்தார்த்தனவானரக்குழுவும்
நூறுபத்துடைப்பத்தியினேறிற்பரிபூண்ட
ஆறுதேரினுமகன்றதவ்வனுமன்றன்றடந்தோள். (உஙo)

தன்னினேர்பிறர்தானலாதில்லவன்றேண்மேல்
துன்னுபேரொளியிலக்குவன்றோன்றியதோற்றம்
பொன்னின்மால்வரைவெள்ளிமால்வரைமிசைபொலிந்த
தென்னுமாறன்றிப்பிறிதெடுத்தியம்புவதியாதோ. (உஙக)

ஆங்குவீரனோடமர்செய்வானமைந்தவாளரக்கன்
தாங்குபல்கணைப்புட்டிலுந்தகைபெறக்கட்டி

* ஒருவிலாளர்-நீங்காத சமானமானோர்.

வீங்குதோள்வலிக்கேயது * விசும்பில்வில்வெள்க
வாங்கினனெடவெடவரைபுரைவதோர்வரிவில். (௨௯௨)

இராமன்றம்பிநீயிராவணன்றம்பிநானிருவேம்
பொராநின்றேமிதுகாணியவந்தனர்புலவோர்
பராவுந்தொல்செருமுறைவலிக்குரியனபகர்ந்து
விராவுநல்லமர்விளைக்குதும்யாமெனவிளம்பா. (௨௯௩)

பெய்தவத்தினோர்பெண்கொடியெம்முழைப்பிறந்தாள்
செய்தகுற்றமொன்றில்லவணுசிவெஞ்சினத்தால்
கொய்தகொற்றவமற்றவள்கூந்தமிருட்டோர்த்த
கய்தலத்திடைக்கிடத்துவென்காக்குதியென்றான். (௨௯௪)

அல்லினூற்செய்தகிறத்தவனனையது பகர
மல்லினூற்செய்ததோளினன்மாற்றங்கணும்பால்
வில்லினூற்சொல்லினல்லது வெந்திறல் வெள்கச
சொல்லினூற்சொலக்கற்றிலம்யாமெனச்சொன்னான். (௨௯௫)

விண்ணிரண்டுகூறாயதுபிளந்ததுமவற்பு
மண்ணிரண்டுறக்கிழிந்ததென்றிமையவர்மறுகக்
கண்ணிரண்டினுந்தீயுகக்கதிர்முகப்பகழி
எண்ணிரண்டினோடிரண்டொருதொடைதொடுத்தெய்தான். (௨௯௬)

கொம்புநாலுடைக்குலக்கரிகும்பத்திற்குளித்த
உம்பராற்றலையொதுக்கியவுருமெனச்செல்வ
வெம்புவெஞ்சினத்திராவணற்கிளையவன்விட்ட
அம்புநான்கினூற்பத்தினோடெட்டையுமறுத்தான். (௨௯௭)

அறுத்தகாலையினரக்கனுமமரரைநெடுநாள்
ஒறுத்ததாயிரமுருவது திசைமுகனுதவப்
பொறுத்ததாங்கொருபுகர்முகக்கடுங்கணைப்புத்தேள்
இறுத்துமற்றிதுவல்லையேலென்றுகோத்தெய்தான். (௨௯௮)

புரிந்துநோக்கியதிசைதொறும்பகழியின்புயலால்
எரிந்துசெல்வதைநோக்கியவிராமனுக்கிளையான்
தெரிந்துமற்றது தன்னையோர்தெய்வவெங்கணையால்
அரிந்துவீழ்த்தலுமாயிரவுருச்சரமற்ற. (௨௯௯)

ஆறிரண்டுவெங்கடுங்கணையனுமன்மேலழுத்தி
வேறுவெஞ்சரமிரண்டிளங்குமரன்மேலேற்றி
நூறுமைம்பதுமொருதொடைதொடுத்தொருநொடியில்
கூறுதிக்கையும்விசும்பையுமறைத்தனன்கொடியோன். (௨௱௦)

* விசும்பில்வில் - இந்திரவில்.

மறைத்தவாளிகளெவற்றையுமவற்றினான்மாற்றித்
துறைத்தலந்தொறுந்தலந்தொறுநின்றுதேர்சுமக்கும்
பொறைக்கமைந்தவெங்கரிபரியாளிமாப்பூதம்
திறத்திறம்படத்துணித்தவன்றேரையுஞ்சிதைத்தான். (௨௪௧)

தேரழிந்ததுசெங்கதிர்ச்செல்வனைச்சூழ்ந்த
ஊரழிந்ததுபோற்றுறந்தூர்பவருலந்தார்
நீரழிந்திடாநெடுமழைக்குழாத்திடைநிமிர்ந்த
பாரவெஞ்சிலையழிந்தெனத்துமிந்ததப்பருவில். (௨௪௨)

ஊன்றுதேரொடுசிலையிலன்கடல்கிளர்ந்தொப்பான்
என்றுமற்றவனின்னுயிர்குடிப்பலென்றுலக
மூன்றும்வென்றமைக்கிடுகுறியென்னமுச்சிகைத்தாய்த்
தோன்றும்வெஞ்சுடர்ச்சூலவெங்கூற்றினைத்தொட்டான். (௨௪௩)

செய்தபோரினைநோக்கியித்தேரிடைச்சேர்ந்த
கொய்யுளைக்கடுங்கோளரிமுதலியகுழுவை
எய்துகொன்றனனோநெடுமந்திரமியம்பி
வய்துகொன்றனனோவெனவானவர்மயர்ந்தார். (௨௪௪)

இழியப்பாய்ந்தனனிருநிலம்பிளந்திருகூறாக்
கிழியப்பாய்புனல்கிளர்ந்தெனக்கிளர்சினத்தரக்கன்
பழியப்பாலிவன்பதாதியென்றனுமன்றன்படர்தோள்
ஒழியப்பார்மிசையிழிந்துசென்றிளவலுமுற்றான். (௨௪௫)

உற்றகாலையினிராவணன்றம்பிமாடுதவ
இற்றதானையினிருமடியிகற்படையேவ
முற்றியன்னவைமுழங்குமுந்நீரெனமுடுகிச்
சுற்றியார்த்தனசுமித்திரைசிங்கத்தைத்தொடர. (௨௪௬)

இரிந்துவானவரிரியலின்மயங்கினரெவரும்
சொரிந்தவெம்படைதுணித்திடத்தடுப்பருந்தொழிலால்
பரிந்தவண்ணலும்பரிவிலனொருபுடைபடரப்
புரிந்தவன்னெடுஞ்சேனையங்கருங்கடல்புக்கான். (௨௪௭)

முருக்கினாண்மலர்முகைவிரிந்தாலன்னமுரட்கண
அரக்கர்செம்மயிர்க்கருந்தலையடுக்கலினணைகள்
பெருக்கினாற்பெருங்கடலிடைப்பெய்துபெய்தெருவை
உருக்கினாலன்னகுருதிநீராறுகளோதுங்க. (௨௪௮)

கரியின்கைகளும்புரவியின்கால்களுங்காலின்
திரியுந்தேர்களின்சில்லியுமரக்கர்தஞ்சிரமும்

சொரியுஞ்சோரியுந்துறைதொறுந்துறைதொறுஞ்சுழிப்ப
நெரியும்பல்பிணப்பெருங்கரைகடந்திலநீத்தம். (௨௪௯)

கொற்றவாளெழுத்தண்டுவேல்கோன்மழுக்குலிசம்
மற்றும்வேறுளபடைக்கலமிலக்குவன்வாளி
சுற்றுமோடுவதொடர்ந்திடைதுணித்திடத்தொகையா
அற்றதுண்டங்கள்படப்படத்துணிந்தனவனந்தம். (௨௫௦)

குண்டலங்களுமோலியுமாரமுங்கோவை
தண்டைதோள்வளைகடகமென்றினையனதறுகட்
கண்டகண்டங்களொடுங்கணைதுரந்தனகதிர்சூழ்
மண்டலங்களைமாறுகொண்டிமைத்தனவாளி. (௨௫௧)

பரந்தவெண்குடைசாமரைநெடுங்கொடிபதாகை
சரந்தருஞ்சிலைகேடகம்பிச்சமொய்சரங்கள்
துரந்துசெல்வனகுருதிநீராறுகடோறும்
நிரந்தபேய்க்கணங்கரைதொறுங்குவித்தனநீந்தி. (௨௫௨)

ஈண்டுவெஞ்செருவினையனநிகழ்வுழியெவர்க்கும்
நீண்டவெள்ளெயிற்றரக்கன்மற்றொருதிசைநின்றான்
பூண்டவெஞ்செருவிரவிகான்முளையொடும்பொருதான்
காண்டகும்மெனவிமையவர்குழுக்கொண்டுகண்டார். (௨௫௩)

வேறு.

சுக்கிரீவ கும்பகருண யுத்தம்.

பொறிந்தெழுகண்ணினன்புகையும்வாயினன்
செறிந்தெழுகதிரவன்சிறுவன்சீறினான்
முறிந்தனவரக்கன்மாமுரட்டிண்டோளென
எறிந்தனன்விசும்பின்மாமலையொன்றேந்தியே. (௨௫௪)

அம்மலைநின்றுவந்தவனியெய்திய
செம்மலையனையவெங்களிறுஞ்சேனையின்
வெம்மலைவேழமும்பொருதவேறினி
எம்மலையுளவவற்கெடுக்கொணாதன. (௨௫௫)

இவ்வகைநெடுமலையிழிந்தமாசுணம்
கவ்வியநிருதர்தங்களிறுங்கட்டற
அவ்வகைமலையினையேற்றொருகையால்
வவ்வினனரக்கன்வாளவுணர்வாழ்த்தினார். (௨௫௬)

ஏற்றொருகையினாலிதுகொணீயடா
ஆற்றியகுன்றமென்றளவிலாற்றலான்

நீற்றியனுணுகுறப்பிசைந்துநீங்கெனாத்
தூற்றினனிமையவர்துணுக்கமெய்தினார். (௨௫௭)

செல்வெனோர்நெடுங்கிரியினுந்தேர்ந்தெனா
எல்லவன்கான்முளையுணருமேல்வையில்
கொல்லெனவெறிந்தனன்குறைவினோன்பினோர்
சொல்லெனப்பிழைப்பிலாச்சூலஞ்சோர்விலான். (௨௫௮)

பட்டனன்பட்டனனென்றுபார்த்தவர்
விட்டுலம்பிடநெடுவிசும்பிற்சேறலும்
எட்டினனதுபிடித்திறுத்துநீக்கினான்
ஒட்டுமோமாருதியறத்தையோம்புவான். (௨௫௯)

சித்திரவனமுலைச்சீதைசெவ்வியால்
முத்தனார்மிதிலையூரறிவுமுற்றிய
பித்தன்வெஞ்சிலையினையிறுத்தபேரொலி
ஒத்ததுசூலமன்றிற்றவோசையே. (௨௬௦)

மருதனுமனையவனிலைமைநோக்கியே
கருதவுமியம்பவுமரிதுன்கைவலி
அரியனமுடிப்பதற்கனைத்துநாட்டினும்
ஒருதனியுளையிதற்குவமம்யாதென்றான். (௨௬௧)

என்னொடும்பொருதியேலின்னும்யானமர்
சொன்னனபுரிவலென்றரக்கன்சொல்லலும்
முன்னினியெதிர்க்கிலேனென்றுமுற்றிய
பின்னிகல்பழுதெனாப்பெயர்ந்துபோயினான். (௨௬௨)

அற்றதுகாலையினரக்கனாயுதம்
பெற்றிலன்பெயர்ந்திலனையபெற்றியில்
பற்றினன்பாய்ந்தெதிர்பருதிகான்முளை
எற்றினன்குத்தினனெறியுங்கைகளால். (௨௬௩)

அரக்கனுநன்றுநின்றாண்மையாயினும்
தருக்கினியின்றொடு * சமையுந்தானென
நெருக்கினன்பற்றினனீங்கொணாவகை
உருக்கியசெம்பெனவுதிரக்கண்ணினான். (௨௬௪)

திரிந்தனர்சாரிகைதேவர்கண்டிலர்
புரிந்தனர்நெடுஞ்செருப்புகையும்போர்த்தெழு
எரிந்தனவுருமெலாமிருவர்வாய்களும்
சொரிந்தனகுருதிதாமிறையுஞ்சோர்ந்திலர். (௨௬௫)

* சமையும் - முடியும்.

உறுக்கினரொருவரையொருவருற்றிகல்
முறுக்கினர்முறைமுறையரக்கன்மொய்ம்பினால்
பொறுக்கிலாவகைநெடும்புயங்களாற்பிடித்
திறுக்கினனிவன்சிறிதுணர்வுமெஞ்சினான். (உசுசு)

சுக்கிரீவனைக் கும்பகருணனெடுத்துச் செல்லுதல்.

மண்டமரின்றெடுமெடங்குமன்னிலாத்
தண்டலில்பெரும்படைசிந்துந்தக்கதோர்
எண்டருகருமமற்றிதனினில்லெனக்
கொண்டனன்போயினனிருதர்கோநகர். (உசுஎ)

உரற்றினபரவையையூறுகொண்டெழச்
சிரற்றினபார்ப்பினிற்சிந்தைசிந்திட
விரற்றுறுகைத்தலத்தடித்துவெய்துயிர்த்
தரற்றினகவிக்குலமரக்கரார்த்தனர். (உசுஅ)

நடுங்கினரமரருநாவும்வேர்த்துலர்ந்
தொடுங்கினர்வானரத்தலைவருண்முகிழ்த்
திடுங்கினகண்ணினனெரிந்தநெஞ்சினன்
அடங்கினாருயிர்ப்பென்னுமன்பினார். (உசுகூ)

புழுங்கியவெஞ்சினத்தரக்கன்போகுவான்
அழுங்கலில்கோண்முகத்தரவமாயினான்
எழுங்கதிரிரவிதன்புதல்வனெண்ணுற
விழுங்கியமதியெனமெலிந்துதோன்றினான். (உஎ௦)

திக்குறவிளங்குவான்சிறுவன்றீயவன்
மைக்கருநிறத்திடைமறைந்ததன்னுரு
மிக்கதுங்குறைந்ததுமாகமேகத்துப்
புக்கதும்புறத்துமாமதியும்போன்றனன். (உஎக)

ஒருங்கமர்புரிகிலேனுன்னொடியானெனா
நெருங்கியவுரையினைநினைந்துநேர்கிலன்
கருங்கடல்கடந்தவக்காலன்காலன்வாழ்
பெருங்கரம்பிசைந்தவன்பின்புசென்றனன். (உஎஉ)

ஆயிரம்பெயரவனடியில்வீழ்ந்தனர்
நாயகமொக்கினியாவர்நாட்டினில்
காய்கதிர்ச்சிறுவனைப்பிணித்தகையினன்
போயினனரக்கனென்றிசைத்தபூசலார். (உஎங)

தீயினுமுதிர்வுறச்சிவந்தகண்ணினான்
காய்கணைசிலையொடுங்கவர்ந்தகையினான்

ஏயெனுமளவினினிலங்கைமாநகர்
வாயில்சென்றெய்தினான்மழையின்மேனியான். (௨௭௪)

இராமன் சரக்கூடங்கட்டிக் கும்பகருணனைத்தடுத்தல்.

உடைப்பெருந்துணைவனையுயிரிற்கொண்டுபோய்க்
கிடைப்பருங்கொடிநகரடையிற்கேடெனத்
தொடைப்பரும்பகழியின்மாரிதூர்த்துற
அடைப்பனென்றடைத்தனன்விசும்பினாறெலாம். (௨௭௫)

மாதிரமறைந்தனவயங்குவெய்யவன்
சோதியின்கிளர்நிலைதொடர்தலோவின
யாதும்விண்படர்கிலவியங்குகார்மழை
மீதுநின்றகன்றனவிசும்புதூர்த்தலால். (௨௭௬)

மனத்தினுங்கடியதோர்விசையின்வான்செல்வான்
இனக்கொடும்பகழியின்மதிலெய்தினான்
நினைத்தவைநீக்குதலருமையின்றெனச்
சினக்கொடுந்திறலவன்றிரிந்துநோக்கினான். (௨௭௭)

கும்பகருணனிராமனைக் காண்டல்.

கண்டனன்வதனம்வாய்கண்கைகாலெனப்
புண்டரீகத்தடம்பூத்துப்பொற்சிலை
மண்டலந்தொடர்ந்துமண்வயங்கவந்ததோர்
கொண்டலிற்பொலிதருகோலத்தான்றனை. (௨௭௮)

மடித்தவாய்கொழும்புகைவழங்கமாறிதழ்
துடித்தமார்புருவங்கள்சுறுக்கொண்டேறிடப்
பொடித்ததீநயனங்கள்பொறுக்கிலாமையால்
இடித்தவான்றெழிப்பினாலிடிந்தகுன்றெலாம். (௨௭௯)

இராமனைப்பார்த்துக் கும்பகருணன் சிலவுரைத்தல்.

மாக்கவந்தனும்வலிதொலைந்தவாலியாம்
பூக்கவர்ந்துண்ணியும்போலுமென்றெனைத்
தாக்கவந்தனையிவன்றன்னையின்னுயிர்
காக்கவந்தனையெனக்கழறன்மேயினான். (௨௮0)

உம்பியைமுனிந்திலேனவனுக்கூர்தியாம்
தும்பியைமுனிந்திலேன்றொடர்ந்தவாலிதன்
தம்பியைமுனிந்திலேன்சமரந்தன்னில்யான்
அம்பியல்சிலையினாய்புகழன்றாதலான். (௨௮௧)

தேடினன்றிரிந்தனனின்னைத்திக்கிறந்
தோடியதுன்படையும்பியோர்நதொரு
பாடுறநடந்தனனனுமன்பாறினன்
ஈடுறுமிவனைக்கொண்டெளிதினெய்தினேன். (உஅஉ)

காக்கியவந்தனையென்னிற்கண்டவென்
பாக்கியந்தந்ததுநின்னைப்பன்முறை
ஆக்கியசெருவெலாமாக்கியெம்முனைப்
போக்குவன்மனத்துறுகாதற்புன்கணேய். (உஅங)

ஏதிவெந்திறலினேயிமைப்பிலோரெதிர்
பேதுறுகுரங்கையான்பிணித்தகைப்பிணி
கோதைவெஞ்சிலையினுற் * கோடிவீடெனிற்
சீதையும்பெயர்ந்தனள்சிறைநின்றுமென்றான். (உஅச)

இராமன் கும்பகருணனுக்குப் பதிலுரைத்தல்.

என்றலுமுறுவலித்திராமன்யானுடை
இன்றுணையொருவனையெடுத்ததோளினைக்
குன்றினுமுயர்ந்தனகுறைக்கிலேனெனின்
பின்றினனுனக்குவிற்பிடிக்கிலேனென்றான். (உஅரு)

இராமன் கும்பகருணன்மீது அம்பேவுதல்.

மீட்டவன்கரங்களால்விலஙகலானையே
மூட்டறநீக்குவான்முயலும்வேலையில்
வாட்டலைபிடர்த்தலைவயங்கவாளிகள்
சேட்டகநெற்றியினிரண்டுசேர்த்தினன். (உஅசு)

சுற்றியகுருதியின்செக்கர்சூழ்நதெழ
நெற்றியினெடுங்கணையொளிரநின்றவன்
முற்றியகதிரவன்முளைக்குமுந்துவந
துற்றெழுமருணனதுதயம்போன்றனன். (உஅஎ)

குன்றின்வீழருவியிற்குதித்துக்கோத்திழி
புன்றலைக்குருதிநீர்முகத்தைப்போர்த்தலும்
இன்றுயிலெழுந்தனவுணர்ச்சியெய்தினன்
† வன்றிறலேற்றிலான்மயக்கமெய்தினன். (உஅஅ)

நெற்றியினின்றெளிநெடிதிமைப்பன
கொற்றவன்சரமெனக்குறிப்பினுன்னினன்

---

* கோடிவீடெனின் - விடுதலைக்கொள்ளுவாயாகின்.

† வன்றிறலேற்றிலான் - வலியவெற்றியை இழக்காதகும்பகருணன்.

சுற்றுறநோக்கினன்ருமுழுதுநோக்கினன்
முற்றியபொருட்கெலாமுடிவுளான்றனே. (உஅக)

கும்பகருணன் மூக்கினையுங் காதுகளையுஞ் சுக்கிரீவன் கடித்தெடுத்துச் செல்லுதல்.

கண்டனனுயகன்றன்னைக்கண்ணுருத்
தண்டலின்மானமுநாணுந்தாங்கினுன்
விண்டவனுசியுஞ்செவியும்வேரொடும்
கொண்டனனெழுந்துபோய்த்தமரைக்கூடினன். (உகo)

வானரமார்த்தனமழையுமார்த்தன
தானரமகளிருந்தமருமார்த்தனர்
மீனரல்வேலையும்வெற்புமார்த்தன
வானவரோடுநின்றறமுமார்த்ததே. (உகக)

சுக்கிரீவன் விடுதலையடைந்ததற்காக இராமன்மகிழ்வுறல்.

காந்திகலரக்கன்வெங்கரத்துணீங்கிய
ஏந்தலையகமகிழ்ந்தெய்தநோக்கிய
வேந்தனுஞ்சானகியிலங்கைவெஞ்சிறை
போந்தனளாமெனப்பொருமனீங்கினுன். (உகஉ)

மத்தகம்பிளந்துமாருவவார்சிலை
வித்தகன்சரந்தொடமெலிவுதோன்றியச்
சித்திரம்பெறுதலிற்செவியுமூக்குங்கொண்
டத்திசைபோயினனல்லதொண்ணுமோ. (உகங)

அக்கணத்தறிவுவந்தனுகவங்கைகின்
றுக்கனன்கவியரசென்னுமுண்மையும்
மிக்குயர்நாசியுஞ்செவியும்வேறிடம்
புக்கதுமுணர்ந்தனனுதிரப்போர்வையான். (உகச)

தாதுராகத்தடங்குன்றந்தாரைசால்
கூதிர்கானெடுமழைசொரியக்கோத்திழி
ஊதையோடருவிகளுமிழ்வதொத்தனன்
மீதுறுகுருதியாருமுழுகுமேனியான். (உகரு)

எண்ணுடைத்தன்மையனிளையவெண்ணிலாப்
பெண்ணுடைத்தன்மையனுயபீடையால்
புண்ணுடைசெவியொடுமூக்கும்போன்றலால்
கண்ணுடைச்சுழிகளுங்குருதிகால்வன. (உகசு)

ஏசியுற்றெழும்விசும்பினரைப்பார்க்குந்தன்
நாசியைப்பார்க்குமுன்னடந்ததாமென

வாசியைப்பார்க்குமிம்மண்ணைப்பார்க்குமால்
சீசியுற்றதுவெனத்தீயுநெஞ்சினான். (௨௯௭)

என்முகங்காண்பதன்முன்னம்யானவன்
தன்முகங்காண்பதுசரதந்தானெனாப்
பொன்முகங்காண்பதோர்தோலும்போரிடை
வன்முகங்காண்பதோர்வாளும்வாங்கினான். (௨௯௮)

வீசினன்கேடகம்விசும்பின்மீனெலாம்
கூசினவமரருங்குடர்குழம்பினார்
காய்சினவரக்கனுங்கன்னற்போதவன்
நாசியுஞ்செவியும்வெங்குருதிநான்றதே. (௨௯௯)

ஆயிரம்பேய்சுமந்தளித்ததாங்கொரு
மாயிருங்கேடகமிடத்துவாங்கினான்
பேயிரண்டாயிரஞ்சுமந்துபோர்வதோர்
காயொளிவயிரவாள்பிடித்தகையினான். (௩௦௦)

விதிர்த்தனன்வீசினன்விசும்பின்மீனெலாம்
உதிர்த்தனனுலகினையனந்தனுச்சியோ
டதிர்த்தனனார்த்தனனாயிரம்பெருங்
கதிர்த்தலஞ்சூழ்வடவரையின்காட்சியான். (௩௦௧)

வீசினகேடகமுகத்துவீங்குகால்
கூசினகுரக்குவெங்குழுவைக்கொண்டெழுந்
தாசைகடோறும்விட்டெறியவார்த்தெழும்
ஓசையொண்கடலையுந்திடர்செய்தோடுமால். (௩௦௨)

போயினகேடகம்போகநோக்கினன்
ஆயிரம்பெயரவனறியுமுன்பவன்
பேயிரண்டாயிரம்பேணுங்கேடகம்
எயெனுமளவினினெய்தச்சென்றதால். (௩௦௩)

தோலிடைத்துரக்கவுந்துகைக்கவுஞ்சுடர்
வேலுடைக்கூற்றினாற்றுணியவீசவும்
காலுடைக்கடலெனச்சிந்திக்கைகெட
வாலுடைநெடும்படையிரிந்துமாய்ந்ததால். (௩௦௪)

ஏறுபட்டதுமிடையெதிர்ந்துளோரெலாம்
கூறுபட்டதுங்கொழுங்குருதிகோத்திழிந்
தாறுபட்டதுநிலமனந்தனுச்சியும்
சேறுபட்டதுமொருகணத்திற்றீர்ந்ததால். (௩௦௫)

இடுக்கிலையெதிரினியிவனையிவ்வழித்
தடுக்கிலையாமெனிற்குரங்கின்றானையை
ஒடுக்கினையரக்கனையுயர்த்தினாயெனா
* முடுக்கினனிராமனைச்சாம்பன்முன்பினான். (௩௦௬)

அண்ணலுந்தானையினழிவுமாங்கவன்
திண்ணெடுங்கொற்றமும்வலியுஞ்சிந்தியா
நண்ணினனடங்கெதிர்நமனையின்றிவன்
கண்ணிடைநிறுத்துவனென்னுங்கற்பினான். (௩௦௭)

ஆறினோடேழுகோலசனியேறென
ஈறிலாவிசையனவிராமனெய்தனன்
பாறுகுசிறையெனவிசும்பிற்பாறிட
நூறினான்வாளினானுணங்குகல்வியான். (௩௦௮)

ஆடவர்க்கரசனுந்தொடரவவ்வழிக்
கோடையிற்கதிரெனக்கொடியகூர்ங்கணை
ஈடுறத்துரந்தனனவையுமிற்றுகக்
கேடகப்புறத்தினாற்கிழியச்சிந்தினான். (௩௦௯)

சிறுத்ததோர்முறுவலுந்தெரியச்செங்கணான்
மறித்தொருவடிக்கணைதொடுக்கமற்றவன்
ஒறுத்தொளிர்வாளினுமுரவுநாகத்தை
அறுத்ததுகலுழனினமரரார்க்கவே. (௩௧௦)

அற்றதுதடக்கைவாளற்றதில்லென
மற்றொருவயிரவாள்கடிதின்வாங்கினான்
முற்றினன்முற்றினனென்றுமுன்புவந்
துற்றனனூழித்தீயவியவூதுவான். (௩௧௧)

அந்நெடுவாளையுந்துணித்தவாண்டகை
பொன்னெடுங்கேடகம்புரட்டிப்போர்த்ததோர்
நன்னெடுங்கவசத்துநாமவெங்கணை
மின்னொடுநிகர்ப்பனபலவும்வீசினான். (௩௧௨)

அந்தரமன்னதுநிகழுமவ்வழி
இந்திரன்றமரொடுமிரியலெய்திடச்
சிந்துவந்தன்னிலைகுலையச்சேணுற
வந்ததுதசமுகன்விடுத்தமாப்படை. (௩௧௩)

வில்வினையொருவனுமிவனைவீட்டுதற்
கொல்வினையிதுவெனக்கருதியூன்றினான்

---

* முடுக்கினன் - முன்செல்லச் செய்தான்.

வல்வினைதீயெனவந்தபோதொரு
நல்வினையொத்ததுநடந்ததானையே. (௩௧௪)

கோத்ததுபுடைதொறுங்குதிரைதேரொடாள்
பூத்திழிமதமலைமிடைந்தபோர்ப்படை
காத்ததுகருணனைக்கண்டுமாயமாக்
கூத்தனும்வருகெனக்கடிதுகூவினான். (௩௧௫)

சூழிவெங்கடகரிபுரவிதூண்டுமால்
ஆழியந்தேரொடுமிடைந்தவார்கலி
ஏழிருகோடிவந்தெய்திற்றென்பரால்
ஊழியினொருவனுமெதிர்சென்றூன்றினான். (௩௧௬)

காலமுங்காலனுங்கணக்கிறீமையும்
மூலமூன்றிலையெனவகுத்துமுற்றிய
ஞாலமுநாகரும்விசும்புநக்குறும்
சூலமொன்றரக்கனும்வாங்கித்தோன்றினான். (௩௧௭)

வேறு.

அரங்கிடந்தனவறுகுறைநடிப்பனவல்லவென்றிமையோரும்
மரங்கிடந்தனமலைக்குவைகிடந்தனவாமெனமாருடிக்
கரங்கிடந்தனகாத்திரங்கிடந்தனகறைபடும்படிகவ்விச்
சிரங்கிடந்தனகண்டனர்கண்டிலருயிர்கொடுதிரிவாரை. (௩௧௮)

இற்றவல்லவுமீர்ப்புண்டவல்லவுமிடையிடைமுறிந்தெங்கும்
துற்றவல்லவுந்துணிபட்டவல்லவுஞ்சுடுபொறித்தொகைதூவி
வெற்றவெம்பொடியாயினவல்லவும்வேறொன்றுநூறாகி
அற்றவல்லவுங்கண்டிலர்படைக்கலமடுகளந்திடராக. (௩௧௯)

படர்ந்தகும்பத்துப்பாய்ந்தனபகழிகள்பாகரைப்பறிந்தோடிக்
குடைந்துவையகம்புக்குறத்தாக்கியகுருதியாற்குடற்சோரத்
தொடர்ந்துநோயொடுந்துணைமருப்பிழந்துதங்காத்திரந்துணியாகிக்
கிடந்தவல்லதுநடந்தனகண்டிலர்கிளர்மதகரியெங்கும் (௩௨௦)

வீழ்ந்தவாயினவிளிவுற்றபதாகையவெயிலுமிழயிலம்பு
போழ்ந்தபன்னெடும்புரவியமுறைமுறையச்சொடும்பொறியற்றுத்
தாழ்ந்தவெண்ணிணந்தயங்குவெங்குழம்பிடைத்தலைத்தலைமாருடி
ஆழ்ந்தவல்லதுபெயர்ந்தனகண்டிலரதிர்குரன்மணித்தேர்கள். (௩௨௧)

ஆடறீர்ந்தனவளைகழுத்தற்றனவதிர்பெருங்குரனீத்த
தாடுணிந்தனதறுகண்வெங்கரிநிரைதாங்கியபிணத்தோங்கற்
கோடமைந்தவெங்குருதிநீராறுகள்சுழிதொறுங்கொணர்ந்துந்தி
ஓடலன்றிநின்றுகள்வனகண்டிலருருகெழுபரியெல்லாம். (௩௨௨)

வேதநாயகன்வெங்கணைவழக்கத்தின்மிகுதியைவெவ்வேறிட்
டோதுகின்றதென்னும்பருமரக்கர்வெங்களத்துவந்துற்றாரைக்
காதல்விண்ணிடைக்கண்டனரல்லதுகணவர்தமுடலொடும்
மாதர்வெள்ளமேகண்டனர்கண்டிலர்மலையினும்பெரியாரை. (௩௨௩)

பணிப்பட்டாலெனக்கதிர்வரப்படுவதுபட்டதப்படைபற்றார்
துணிப்பட்டாரெனத்துலங்கினரிமையவர்யாவர்க்குந்தோலாதான்
இனிப்பட்டானெனவீங்கினவரக்கருமேங்கினரிவனந்தோ
தனிப்பட்டானெனவவன்முகநோக்கியொன்றுரைத்தனன்றனிநாதன். ()

கும்பகருணனை இராமன் சிலவினாதல்.

எதியோடெதிர்பெருந்துணையிழந்தனையெதிரொருதனிநின்றாய்
நீதியோனுடன்பிறந்தனையாகலினின்னுயிர்நினக்கீவேன்
போதியோபின்னைவருதியோவன்றெனிற்போர்புரிந்திப்போதே
சாதியோநினக்குறுவதுசொல்லுதிதெரிவுறச்சமைந்தம்மா. (௩௨௫)

இழைத்ததீவினையிற்றிலதாகலின்யானுனையிளையோனால்
அழைத்தபோதினும்வந்திலையந்தகனுணையின்வழிநின்றாய்
பிழைத்ததாலுனக்கருந்திருநாளொடுபெருந்துயினெடுங்காலம்
உழைத்துவீடுவதாயினையென்னுனக்குறுவதொன்றுரையென்றான். ()

கும்பகருணன் விடை யிறுத்தல்.

மற்றெலாநிற்கவாசியுமானமுமறத்துறைவழுவாத
கொற்றநீதியுங்குலமுந்தற்றருமமுமென்றிவைகுடியாகப்
பெற்றநுங்களாலெங்களைப்பிரிந்துதன்பெருஞ்செவிமூக்கோடும்
அற்றவெங்கைபோமலென்முகங்காட்டிநின்றாற்றலனுயிரம்மா. (௩௨௭)

நோக்கிழந்தனர்வானவரெங்களாலவ்வகைநிலைநோக்கித்
தாக்கணங்கனையவள்பிறர்மனையெனத்தடுத்தனன்றக்கோர்முன்
வாக்கிழந்ததென்றயர்வுறுவேன்செவிதன்னொடுமாற்றாராற்
மூக்கிழந்தபின்மீளலென்றாலதுமுடியுமோமுடியாதாய். (௩௨௮)

உங்கடோடலைவாள்கொடுதுணித்துயிர்குடித்தெம்முனுவந்தெய்த
நங்கைநன்னலங்கொடுக்கியவந்தநான்வானவர்நகைசெய்யச்
செங்கைதாங்கியசிரத்தொடுங்கண்ணினீர்குருதியினொடுதேக்கி
எங்கைபோலெடுத்தழைத்துநான்வீழ்வெனோவிராவணனெதிரம்மா. ()

ஒருத்தனீதனியுலகொருமூன்றிற்குமாயினும்பழியோரும்
கருத்தினால்வருஞ்சேவகனல்லையோசேவகர்கடனோராய்
செருத்திண்வாளினாற்றிறத்திறனுங்களையமர்த்துறைசிரங்கொய்து
பொருத்தினாலதுபொருந்துமோதக்கதுபுகன்றிலைபோலென்றான். ()

என்றுதன்னெடுஞ்சூலத்தையிடக்கையின்மாற்றினன்வலக்கையால்
குன்றுநின்றதுகோத்தெடுத்திருநிலக்குடர்கவர்ந்தெனக்கொண்டான்
சென்றுவிண்ணோடுபொறியொடுதீச்செலச்சேவகன்செனிநேரே
வென்றுதீர்கெனவிட்டனனதுவந்துபட்டதுமேலென்ன. (௩௩௧)

அனையகுன்றெனுமசனியையாவர்க்குமறிவருந்தனிமேனி
புனையவங்கெழுதுகளென நூறியபுரவலன்பொரவென்று
நினையுமாத்திரையொருகைநின்றொருகையினிமிர்கின்றநெடுவேலை
தினையின்மாத்திரை துணிபடவரன்முறைசிந்தினன்சரஞ்சிந்தி. (௩௩௨)

அண்ணல்விற்கொடுங்கால்விசைத்துகைத்தனவலைகடல்வறளாக
உண்ணகிற்பனவுருமையுஞ்சுடுவனமேருவையுருவிப்போய்
விண்ணகத்தையுங்கடப்பனபிழைப்பிலாமெய்யனமேற்சேர்ந்த
கண்ணுதற்பெருங்கடவுடன்கவசத்தைக்கடந்திலகதிர்வாளி. (௩௩௩)

தாக்குகின்றனனுழைகிலதலையதுதாமரைத்தடங்கண்ணான்
நோக்கியிங்கிதுசங்கரன்கவசமென்றுணர்வுறநுனித்துன்னி
ஆக்கியங்கவனடுபடைதொடுத்துவிட்டறுத்தனனதுசிந்தி
வீக்கிழந்ததுவீழ்ந்ததுவரைசுழல்விரிசுடர்வீழ்ந்தென்ன. (௩௩௪)

காந்துவெஞ்சுடர்க்கவசமற்றுகுதலுங்கண்டொறுங்கனல்சிந்தி
ஏந்துவன்னெடுந்தோள்புடைத்தார்த்தங்கொரெழுமுளைவயிரப்போர்
வாய்ந்தவன்னெடுந்தண்டுகைப்பற்றினன்வானரப்படைமுற்றும்
சாந்துசெய்குவனாமெனமுறைமுறையரைத்தனன்றரையோடும். (௩௩௫)

பறப்பவாயிரம்படுவனவாயிரம்பட்டெழிலகன்மார்பம்
திறப்பவாயிரந்திரிவனவாயிரஞ்சென்றுபுக்குருவாது
மறைப்பவாயிரம்வருவனவாயிரம்வடிக்கணையென்றாலும்
பிறப்பவாயிடைத்தெழித்துறத்திரிந்தனன்கறங்கெனப்பெருஞ்சாரி. ()

தண்டுகைத்தலத்துளதெனினுளதன்றுதானையென்றதுசாற்றக்
கொண்டலொத்தவன்கொடுங்கணைபத்தொருதொடையினிற்றொடுத்தெ
கண்டமுற்றனமற்றதுகருங்கழலரக்கனுங்கனன்றாங்கோர் [ய்தான்
மண்டலச்சுடராமெனக்கேடகம்வாங்கினன்வாளோடும். (௩௩௭)

வாளெடுத்தலும்வானரவீரர்கண்மறுகினர்வழிதோறும்
தாளெடுத்தனர்கழிந்தனர்வானவர்தலையெடுத்திலர்தாழ்ந்தார்
கோளெடித்ததுமீளவென்றுரைத்தலுங்கொற்றவன்குன்றொத்த
தோளெடுத்ததுதுணித்தியென்றொருசரந்துரந்தனன்சுரர்வாழ்த்த. ()

அலக்கணுற்றதுதீவினைநல்வினையார்த்தெழுந்ததுவேர்த்துக்
கலக்கமுற்றனனிராக்கதர்காலவெங்கருங்கடற்றிரைபோலும்
வலக்கையற்றதுவாளொடுங்கோளுடைவானமர்மதிபோலும்
இலக்கையற்றதவ்விலங்கைக்குமிராவணன்றனக்குமென்றெழுந்தோடா.

மற்றும்வீரர்களுளரெனற்கெளிதரோமறத்தொழிலிவன்மாடு
பெற்றுநீங்கினதாமெனினல்லதுபேரெழிற்றோளொடும்
அற்றுவீழ்ந்தகையறாதவெங்கையினுலெடுத்தவனூர்த்தோடி
எற்றவீழ்ந்தனவெயிறினித்தோடினவானரக்குலமெல்லாம். (௩௪0)

வள்ளல்காத்துடனிற்பவும்வானரத்தானையைமறக்கூற்றம்
கொள்ளைகொண்டிடப்பண்டையின்மும்மடிகுமைக்கின்றகுறிநோக்கி
வெள்ளமின்றொடும்வீந்துறுமென்பதோர்விம்மலுற்றுயிர்வெம்ப
உள்ளகையினுமற்றவெங்கரத்தையேயஞ்சினவுலகெல்லாம். (௩௪௧)

மாறுவானரப்பெருங்கடலோடத்தன்றோணின்றுவார்சோரி
யாறுவிண்டொடும்பிணஞ்சுமந்தோடமேலமரருமிரிந்தோடக்
கூறுகூறுபட்டிலங்கையும்விலங்கலும்பறவையுங்குலைந்தோட
ஏறுசேவகன்மேலெழுந்தோடினன்மழைக்குலமிரிந்தோட. (௩௪௨)

ஈற்றுக்கையையுமிக்கணத்தரிதியென்றிமையவர்தொழுதேத்தத்
தோற்றுக்கையகன்றொழிந்தவனுளவைதொலையவுந்தோன்றாத
கூற்றுக்கையுமமச்சமுங்கெடநெடுங்கொற்றவன்கொலையம்பால்
வேற்றுக்கையையும்வேலையிலிட்டனன்வேறுமோரணையாக. (௩௪௩)

சந்திரப்பெருந்தூணொடுசார்த்தியததிணென்றுந்தவறாகா
தந்தரத்தவரலைகடலமிழ்தெழக்கடைவுறுமந்நாளில்
சுந்தரத்தடந்தோள்வளைமாசுணஞ்சுற்றியதொழில்காட்ட
மந்தரத்தையுங்கடுத்ததுமற்றவன்மணியணிவயிரத்தோள். (௩௪௪)

சிவணவண்ணவான்கருங்கடற்கொடுவெந்தசெயலினுஞ்செறிதாரைச்
சுவணவண்ணவெஞ்சிறையுடைக்கடுவிசைமுடுகியதொழிலானும்
அவணவண்ணலதேவலினியற்றியவமைவினுமயில்வாளி
உவணவண்ணலையொத்ததுமந்தரமொத்ததவ்வுயர்பொற்றோள். (௩௪௫)

பழக்கநாள்வருமேருவையுள்ளுறத்தொளைத்தொருபணையாக்கி
வழக்கினுலுலகளந்தவனமைத்ததோர்வான்குணில்வலத்தேந்தி
முழக்கினுலெனமுழங்குபேராரப்பினன்வானரமுந்நீரை
உழக்கினன்றசைதோலெலும்பெனுமிவைகுருதியோடொன்றாக. ()

நிலத்தகால்கனல்புனலெனவிவைமுற்றுநிருதனதுருவாகிக்
கொலத்தகாததோர்வடிவுகொண்டாலெனவுயிர்களைக்குடிப்பானைச்
சலத்தகாலனைத்தறுகணர்க்கரசனைத்தருக்கினிற்பெரியானை
வலத்தகாலையும்வடித்தவெங்கணையினூற்றடிந்தனன்றனுவல்லான். ()

பந்திபந்தியின்பற்குலமீன்குலப்பாடுபாடுறப்பாகத்
திந்துவெள்ளெயிறிமைத்திடக்குருதியாமெக்கர்கொண்டெழுசெக்கர்

அந்திவந்தெனவகனெடுவாய்விரித்தடியொன்றுகடிதோட்டிக்
குந்திவந்தனனெடுநிலங்குழிபடக்குரைகடல்கோத்தேற. (௩௪௮

மாறுகாலின்றிவானுறநிமிர்ந்துமாடுளவெலாம்வளைத்தேந்திச்
சூறைமாருதமாமெனச்சுழித்துமேற்றொடர்கின்றதொழிலானை
ஏறுசேவகனெரிமுகப்பகழியாலிருநிலம்பொறைநீங்க
வேறுகாலையுந்துணித்தனனறத்தொடுவேதங்கள்கூத்தாட. (௩௪௯

கய்யிரண்டொடுங்கால்களுந்துணிந்தனகருவரைபொருவுந்தன்
மெய்யிரண்டுநூறாயிரம்பகழியால்வெரிநுறத்தொளைபோய
செய்யகண்பொழிதீச்சிகையிருமடிசிறந்ததுதெழிப்போடு
வய்யம்வானிடைமழையினும்பெருத்ததுவளர்ந்ததுபெருஞ்சீற்றம். (௩௫0)

கும்பகருணன் வாயா லோருமலையினை ஒடித்தெடுத்தெறிதல்.

பாதங்கைகளோடிழந்தனன்படியிடையிருந்துவான்பகுவாயால்
காதநீளியமலைகளைக்கடித்திறுத்தெடுத்துவெங்கனல்பொங்கி
மீதுமீதுதன்னகத்தெழுகாற்றினால்விசைகொடுதிசைசெல்ல
ஊதவூதப்பட்டலந்தனவானரமுருமின்வீழுயிரென்ன. (௩௫௧)

தீயினாற்செய்தகண்ணுடையானெடுஞ்சிகையினாற்றிசைதீய
வேயினாற்றிணிவெற்பொன்றுநாவினால்விசும்புறவளைத்தேந்திப்
பேயினார்ப்புடைப்பெருங்களமிரிந்தெழப்பிலந்திறந்ததுபோலும்
வாயினாற்செலவீசினன்வள்ளலுமலர்க்கரம்விதிர்ப்புற்றான். (௩௫௨)

அய்யன்விற்றொழிற்காயிரமிராவணரமைவிலரந்தோயான்
கய்யுங்கால்களுமிழந்தனன்வேறினியுதவலாந்துணைகாணேன்
மய்யனோய்கொடுமுடிந்தவனுளென்றுவரம்பின்றிவாழ்ந்தானுக்
குய்யுமாறரிதென்றுதன்னுள்ளத்தினுணர்ந்தொருதுயருற்றான். (௩௫௩)

வேறு.

சிந்துரச்செம்பசுங்குருதிதிசைகடொறுஞ்சிறையாறா
எந்திரத்தேர்கரிபரியாளீர்த்தோடப்பார்த்திருந்த
கந்தரப்பொற்கிரியாண்மைகளிறனையான்கண்ணின்ற
சுந்தரப்பொற்றோளானைமுகநோக்கியிவைசொன்னான். (௩௫௪)

கும்பகருணன் இராமனிடஞ் சிலகூறல்.

புக்கடைந்தபுறவொன்றின்பொருட்டாகத்துலைபுக்க
மைக்கடங்கார்மதயானைவாள்வேந்தன்வழிவந்தீர்
இக்கடன்களுடையீர்நீரெம்வினைதீர்த்தும்முடைய
கைக்கடன்றானுயிர்காக்கக்கடவீரென்கடைக்கூட்டால். (௩௫௫)

நீதியால்வந்ததொருநெடுந்தருமநெறியல்லால்
சாதியால்வந்தசிறுநெறியறியானென்றம்பி
ஆதியாயுனையடைந்தானரசருக்கொண்டமைந்த
வேதியாவின்றுமுனக்கடைக்கலம்யான்வேண்டினேன். (௩௫௬)

வெல்லுமாநினைக்கின்றவேலரக்கன்வேரோடும்
கல்லுமாமுயல்கின்றானிவனென்னுங்கறுவுடையான்
ஒல்லுமாறியலுமேலுடன்பிறப்பின்பயனோரான்
கொல்லுமாலவனிவனைக்குறிக்கோடிகோடாதாய். (௩௫௭)

தம்பியெனநினைந்திரங்கித்தவிரானத்தகவில்லான்
நம்பியிவன்றனைக்காணிற்கொல்லு * மிறைநல்கானேல்
உம்பியைத்தானுன்னைத்தானனுமனைத்தானொருபொழுதும்
எம்பிபிரியானாகவருளுதியான்வேண்டினேன். (௩௫௮)

மூக்கிலாமுகமென்றுமுனிவர்களுமமரர்களும்
நோக்குவார்நோக்காமைநுன்கணையாலென்கழுத்தை
நீக்குவாய்நீக்கியபின்னெடுந்தலையைக்கருங்கடலுள்
போக்குவாயிதுநின்னைவேண்டுகின்றபொருளென்றான். (௩௫௯)

இராமன் கும்பகருணன் தலையையறுத்துக் கடலிலிடுதல்.

வரங்கொண்டானினிமறுத்தல்வழக்கன்றென்றொருவாளி
உரங்கொண்டதடஞ்சிலையினுயர்நெடுநாணுட்கொளுவாச்
சிரங்கொண்டான்கொண்டதனைத்திண்காற்றின்கடும்படையால்
அரங்கொண்டகருங்கடலுளழுவத்துளழுத்தினான். (௩௬௦)

மாக்கூடுபடர்வேலைமறிமகரத்திரைவாங்கி
மேக்கூடுகிழக்கூடுமிக்கிரண்டுதிக்கூடு
போக்கூடுகவித்திருகண்புகையோடுபுகையுயிர்க்க
மூக்கூடுபுகபுக்குமூழ்கியதம்முகக்குன்றம். (௩௬௧)

ஆடினார்வானவர்களரமகளிரமுதவிசை
பாடினார்மாதவரும்வேதியரும்பயந்தீர்ந்தார்
கூடினார்படைத்தலைவர்கொற்றவனைக்குடர்கலங்கி
ஓடினாரடலரக்கரிராவணனுக்குணர்த்துவான். (௩௬௨)

௧௫ - வது, கும்பகருணன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௫௮௦.

---

* இறைநல்கான் - சற்றிருக்க வொட்டான்.

கசு - வது, மாயாசனகப்படலம்.

அவ்வழிக் * கருணன்செய்தபேரெழிலாண்மையெல்லாம்
செவ்வழியுணர்வுதோன்றச்செப்பினஞ்சிறுமைதீரா
வெவ்வழிமாயையொன்றுவேறிருந்தெண்ணி † வேட்கை
இவ்வழியிலங்கைவேந்தனியற்றியதியம்பலுற்றும். (க)

மாதிரங்கடந்ததோளான்மந்திரவிருக்கைவந்த
மோதரனென்னுநாமத்தொருவனைமுறையினோக்கிச்
சீதையையெய்தியுள்ளஞ்சிறுமையிற்றீருஞ்செய்கை
யாதெனக்குணர்த்தியின்றென்னின்னுயிரீதியென்றான். (உ)

இராவணனுக்கு மோதரன் உத்திகூறல்.

உணர்த்துவனின்றுநன்றோருபாயத்தினுறுதிமாயை
புணர்த்துவன்சீதைதானேபுணர்வதோர்வினையம்போற்றிக்
கணத்துவன்சனகன்றன்னைக்கட்டினென்கொணர்ந்துகாட்ட
மணத்தொழில்புரியுமன்றேமருத்தனையுருவமாற்றி. (ங)

எனவவனுரைத்தலோடுமெழுந்துமார்பிறுகப்புல்லி
அனையவன்றன்னைக்கொண்டாங்கணுகுதியன்பவென்றுப்
புனைமலர்ச்சரளச்சோலைநோக்கினனெழுந்துபோனான்
வினைகளைக்கற்பின்வென்றவிளக்கினைவெருவல்காண்பான். (ச)

பண்களாற்கிளவிசெய்துபவளத்தாலதரமாக்கிப்
பெண்களானோர்க்குநல்லவுறுப்பெலாம்பெருக்கினீட்ட
எண்களாலளவாமானக்குணந்தொகுத்தியற்றினானைக்
கண்களாலரக்கன்கண்டானவளையோர்கலக்கங்காண்பான். (ரு)

மின்னொளிர்மகுடகோடிவெயிலொளிவிரித்துவீசத்
துன்னிருளிரிந்துதோற்பச்சுடர்மணித்தோளிற்றோன்றும்
பொன்னரிமாலைநீலமலையின்வீழருவிபோர்ப்ப
நன்னெடுங்களிமால்யானைநாணுறநடந்துவந்தான். (சு)

விளக்கொருவிளக்கந்தாங்கிமின்னணியரவிற்சுற்றி
இளைப்புறுமருங்குனோவமுலைசுமந்தியங்குமென்று
முளைப்பிறைநெற்றிவானமடந்தையர்முன்னும்பின்னும்
வளைத்தனர்வந்துசூழவந்திகர்வாழ்த்தவந்தான். (எ)

---

* கருணன் - கும்பகருணன்.
† வேட்கை - சனகியிடத்துள்ள ஆசை.

இராவணன் சீதையினிடம் தன் வேட்கை யுரைத்தல்.

இட்டதோரிரணபீடத்தாமரையிருக்கைநின்றும்
கட்டதோட்கானஞ்சுற்றக்கழலொன்றுகாலிற்கோண
வட்டவெண்கவிகையோங்கச்சாமரைமருங்குவீசத்
தொட்டதோர்சுரிகையாளனிருந்தனனினையசொன்னான். (௮)

என்றுதானடியனேனுக்கிரங்குவதிந்துவென்பான்
என்றுதானிரவியோடும்வேற்றுமைதெரிவதென்பால்
என்றுதானநங்கவாளிக்கிலக்கலாதிருக்கலாவ
தென்றுதானுற்றதெல்லாமியம்புவானெடுத்துக்கொண்டான். (௯)

வஞ்சனேனெனக்குநானேமாதரார்வடிவுகொண்ட
நஞ்சுதோயமுதமுண்பானச்சினேனானுந்தேய்ந்து
நெஞ்சுநேரானதும்மைநினைப்புவிட்டாவிநீக்க
அஞ்சினேனடியனேனும்மடைக்கலமமுதின்வந்தீர். (௧0)

தோற்பித்தீர்மதிக்குமேனிசுடுவித்தீர்தென்றறூற்ற
வேர்ப்பித்தீர்வயிரத்தோளைமெலிவித்தீர்வேனில்வேளை
ஆர்ப்பித்தீரென்னையின்னலறிவித்தீரமரரச்சம்
தீர்ப்பித்தீரின்னமென்னென்செய்வித்துத்தீர்திரம்மா. (௧௧)

பெண்ணெலாநீரேயாக்கிப்பேரெலாமுழுதேயாக்கிக்
கண்ணெலாநுங்களுக்கிக்காமவேளென்னுநாமத்
தண்ணலெய்வானுமாக்கியைங்கணைக்கரியத்தக்க
புண்ணெலாமெனக்கேயாக்கிவிபரீதம்புணர்த்திவிட்டீர். (௧௨)

ஈசனேமுதலாமற்றைமானுடரிறுதியாகக்
கூசமூன்றுலகுங்காக்குங்கொற்றத்தென்வீரக்கோட்டி
பேசுவாரொருவற்காவிதோற்றிலென்பெண்பால்வைத்த
ஆசைநோய்கொன்றதென்னாண்மைமாசுண்டதன்றே. (௧௩)

நோயிடைநுகரவேயுநுணங்கிநின்றுணங்குமாவி
நாயுயிராகுமன்றேநாள்பலகழித்தகாலைப்
பாயிரமுணர்ந்துநூலோர்காமத்துப்பகுத்தபத்தி
ஆயிரமல்லபோனவையிரண்டென்பர்பொய்யே. (௧௪)

அறந்தருஞ்செல்வமன்னீரமிழ்தினுமினியீரென்னைப்
பிறந்திலனுக்கவந்தீர்பேரெழின்மானங்கொல்ல
மறந்தனபெரியபோனவருமெனுமருந்துதன்னால்
இறந்திறந்துய்கின்றேன்யான்யாரிதுதெரியுமீட்டார். (௧௫)

அந்தரமுணரின்மேனாளகலிகையென்பாள்காதல்
இந்திரனுரத்தைநல்கியெய்தினளிழுக்குற்றாளோ

மந்திரமில்லைவேறோர்மருந்தில்லைமையனோய்க்குச்
சுந்தரக்குமுதச்செவ்வாயமுதலாலமுதச்சொல்லீர். (க௬)

இராவணன் சீதைகால்களில் விழுந்துவணங்குதல்.

என்றுரைத்தெழுந்துசென்றங்கிருபதென்றுரைக்குநீலக்
குன்றுரைத்தாலுநேராக்குவவுத்தோணிலத்தைக்கூட
மின்றிரைத்தருக்கன்றன்னைவிரித்துமுன்றொகுத்தபோலும்
நின்றிமைக்கின்றதென்னமுடிபடிநெடிதின்வைத்தான். (க௭)

சீதை இராவணனுக்கு நற்புத்திபகர்தல்.

வல்லியமருங்குகண்டமானெனமறுக்கமுற்று
மெல்லியலாக்கைமுற்றுநடுங்கினள்விம்முகின்றாள்
கொல்லியவரினுமுள்ளகூறுவென்றெரியவென்னாப்
புல்லியகிடந்ததொன்றைநோக்கினாள்புகல்வதானாள். (க௮)

பழியிதுபாவமென்றுபார்க்கிலைபகரத்தக்க
மொழியிவையல்லவென்பதுணர்கிலைமுறைமைநோக்காய்
கிழிகிலைநெஞ்சம்வஞ்சக்கிளையொடுமின்றுகாறும்
அழிகிலையென்றபோதென்கற்பென்னுமறந்தானென்னும். (க௯)

வானுளவறத்திற்றோன்றுஞ்சொல்வழிவாழுமண்ணின்
ஊனுளவுடம்புக்கெல்லாமுயிருளவுணர்வுமுண்டால்
தானுளபத்துப்பேழ்வாய்தகாதனவுரைக்கத்தக்க
யானுளன்கேட்கவென்றாலென்சொலாயாதுசெய்யாய். (உ0)

வாசவன்மலரின்மேலான்மழுவலான்மைந்தன்மற்றக்
கேசவன்சிறுவரென்றதன்மையோர்தம்மைக்கேளாய்
பூசலினெதிர்ந்தேனென்றாய்போர்க்களம்புக்கபோதென்
* ஆசையின்கனியைக்கண்ணிற்கண்டிலைபோலுமஞ்சி. (உக)

ஊணிலாயாக்கைபேணியுயிர்புகழ்கூடாதுன்முன்
நாணிலாதிருந்தேனல்லேனவையறுகுணங்களென்னும்
பூணெலாம்பொறுத்தமேனிப்புண்ணியமூர்த்திதன்னைக்
காணலாமின்னுமென்னுங்காதலாலிருந்தேன்கண்டாய். (உஉ)

சென்றுசென்றழியுமாவிதிரிக்குமாற்செருவிற்சேமக்
குன்றுநின்றனையதம்பிபுறக்கொடைகாத்துநிற்பக்
கொன்றுநின்றலைகள்சிந்தியரக்கர்தங்குலத்தைமுற்றும்
வென்றுநின்றருளுங்கோலங்காணியகிடந்தவேட்கை. (உ௩)

---

* என்னாசையின்கனி என்றதிராமனை.

எனக்குயிர்பிறிதுமொன்றுண்டென்றிரேலெனக்குமல்லால்
தனக்குயிர்வேறின்றாகித்தாமரைக்கண்ணனாகிக்
கனக்கருமேகமொன்றுகார்முகந்தாங்கியார்க்கும்
மனக்கினிதாகிநிற்குமஃதன்றிவரம்பிலாதாய். (௨௪)

சீதைமொழிகேட்ட இராவணன் சீறுதல்.

என்றனளென்றலோடுமெரியுறுகண்ணன்றன்னைக்
கொன்றனமானந்தோன்றக்கூற்றனசீற்றங்கொண்டான்
வென்றெனையிராமனுன்னைமீட்டபினவனோடாவி
ஒன்றெனவாழ்திபோலென்றிடியுருமொக்கநக்கான். (௨௫)

இனத்துளாருலகத்துள்ளாரிமையவர்முதலினோரென்
சினத்துளார்யாவர்தீர்ந்தார்தயரதன்சிறுவன்றன்னைப்
புனத்துளாய்மாலையாளென்றுவக்கின்றவொருவன்புக்குன்
மனத்துளானெனினுங்கொல்வேன்வாழுதிபின்னைமன்னோ. (௨௬)

வளைத்தனமதிலைவேலைவகுத்தனவரம்புவாயால்
உளைத்தனகுரங்குபல்காலென்றகருவந்ததுண்டேல்
இளைத்தநுண்மருங்குனங்காயென்னைதிரெய்திற்றெல்லாம்
விளக்கெதிர்வந்தவிட்டிற்பான்மையேவியக்கவேண்டா. (௨௭)

கொற்றவாளரக்கர்தம்மையயோத்தியர்குலத்தைமுற்றும்
பற்றிநீர்தருதிரன்றேற்பசுந்தலைகொணர்திபாரித்
துற்றதொன்றியற்றுவீரென்றுந்தினேனுந்தைமேலும்
வெற்றியர்தம்மைச்செல்லச்சொல்லினன்விரைவினென்றான். (௨௮)

இராவணனுரைகேட்டுச் சீதைதுன்புறுதல்.

என்றவனுரைத்தகாலையென்னையிம்மாயஞ்செய்தாற்
கொன்றுமிங்கரியதில்லையென்பதோர்துணுக்கமுந்த
நின்றுநின்றுயிர்த்துநெஞ்சம்வெதும்பினெருப்பைமீளத்
தின்றுதின்றுமிழ்கின்றாரிற்றுயருக்கேசேக்கையானாள். (௨௯)

இத்தலைஇன்னசெய்தவிதியினோரென்னையின்னும்
அத்தலையன்னசெய்யச்சிறியரோவலியரம்மா
பொய்த்தலையுடையதெல்லாந்தருமமேபோலுமென்னாக்
கய்த்தனளுள்ளம்வெள்ளக்கண்ணினீர்கரையிலாதாள். (௩௦)

மாயாசனகனைச் சீதையெதிரேகொண்டுவருதல்.

ஆயதுகாலத்தாங்கோரரக்கனைச்சனகனாக்கி
வாய்திறந்தாற்றப்பற்றிமகோதரன்கடிதின்வந்தான்
காயெரியனையான்முன்னர்க்காட்டினன்வணங்கக்கண்டாள்
தாயெரிவீழக்கண்டபார்ப்பெனத்தரிக்கிலாதாள். (௩௧)

கய்களைநெரித்தாள்கண்ணைமோதினாள்கமலக்கால்கள்
நெய்யெரிமிதித்தாலென்னநிலத்திடைப்பதைத்தாணெஞ்சம்
மெய்யெனவெரிந்தாளேங்கிவிம்மினாணடுங்கிவீழ்ந்தாள்
பொய்யெனவுணராளன்பாற்புரண்டரும்பூசலிட்டாள். (௩௨)

தெய்வமோவென்னுமெய்ம்மைசிதைந்ததோவென்னுந்தீய
வய்வலோவுலகையென்னும்வஞ்சமோவலியதென்னும்
உய்வலோவின்னுமென்னுமொன்றலதுயரமுற்றாள்
தய்யலோதருமமேயோவாரவடன்மைதேர்வார். (௩௩)

எந்தையேயெந்தையேயின்றென்பொருட்டுனக்குமிக்கோள்
வந்ததேயென்னைப்பெற்றுவாழ்ந்தவாறிதுவோமண்ணோர்
தந்தையேதாயேசெய்ததருமமேதவமேயென்னும்
வெந்துயரென்னுந்தீவீழ்விறகெனவெந்துவீழ்ந்தாள். (௩௪)

இட்டுண்டாயறங்கள்செய்தாயெதிர்ந்துளோரிருக்கையெல்லாம்
சுட்டுண்டாயுயர்ந்தவேள்வித்துறையெலாந்தொலைவுகண்டாய்
மட்டுண்டார்மனிதர்த்தின்றவஞ்சரால்வயிரத்தோள்கள்
கட்டுண்டாயென்னேயானுங்காண்கின்றேன்போலுங்கண்ணால். (௩௫)

என்றனள்பலவும்பன்னியெழுந்துவீழ்ந்திடரிற்றோய்ந்தாள்
பொன்றினள்போலுமென்னப்பொறையழிந்துயிர்ப்புப்போவாள்
மின்றனிநிலத்துவீழ்ந்துபுரள்கின்றதனையமெய்யாள்
அன்றிலம்பேடைபோலவாய்திறந்தரற்றலுற்றாள். (௩௬)

பிறையுடைநுதலார்க்கேற்றபிறந்தவிக்கடன்கள்செய்ய
இறையுடையிருக்கைமூதூரென்றும்வந்திறக்கலாதீர்
சிறையிடைக்காணநீருஞ்சிறையொடுஞ்சேர்ந்தவாறோ
மறையுடைவரம்புநீங்காவழிவந்தமன்னர்நீரே. (௩௭)

வன்சிறைப்பறவையூரும்வானவன்வரம்பின்மாயப்
புன்சிறைப்பிறவிதீர்ப்பானுளனெனப்புலவர்நின்றார்
என்சிறைதீர்க்குவாரைக்காண்கிலேனென்னின்வந்த
உன்சிறைவிடுக்கற்பாலார்யாருளருலகத்துள்ளார். (௩௮)

பண்பெற்றாரோடுகூடாப்பகைபெற்றாய்பகழிபாய
விண்பெற்றாயெனினுநன்றால்வேந்தராயுயர்ந்தமேலோர்
எண்பெற்றாய்பழியும்பெற்றாயிதுநின்னாற்பெற்றதன்றால்
பெண்பெற்றாயதனாற்பெற்றாயாரின்னபேறுபெற்றார். (௩௯)

சுற்றுண்டபாசநாஞ்சிற்சுமையொடுஞ்சூடுண்டாற்ற
எற்றுண்டுமெலறுநீங்காவிழுசிறுகுண்டையென்னப்

பற்றுண்டநாளேமாளாப்பாவியேனும்மையெல்லாம்
விற்றுண்டேனெனக்குமீளும்விதியுண்டோநரகின்வீழ்ந்தால். (சo)

இருந்துநான்பகையையெல்லாமீறுகண்டளவிலின்பம்
பொருந்தினேனல்லேனெங்கோன்றிருவடிபுனைந்தேனல்லேன்
வருந்தினேனெநாளும்மைவழியொடுமுடித்தேன்வாயால்
அருந்தினேனயோத்திவந்தவரசர்தம்புகழையம்மா. (சக)

கொல்லெனக்கணவற்காங்கோர்நெடும்பகைகொடுத்தேனெந்தை
கல்லெனத்திரண்டதோளைப்பாசத்தாற்கட்டக்கண்டேன்
இல்லெனச்சிறந்துநின்றவிரண்டுக்குமின்னல்சூழ்ந்தேன்
அல்லலேனோவெளியெனோயானளியற்றேனிறக்கலாதேன். (சஉ)

இணையறுவேள்விமேனுளியற்றியீன்றெடுத்தவெந்தை
புணையுறுதிரடோளார்த்துப்பூழியிற்புரளக்கண்டேன்
மணவினைமுடித்தென்கையைமந்திரமரபிற்றொட்ட
கணவனைவினையேன்காண்டலின்றியேகழிகின்றேனே. (சங)

அன்னையீரையன்மீரென்னுருயிர்த்தங்கமீரே
என்னையீன்றெடுத்தவெந்தைக்கெய்தியதுமொன்றும்
முன்னநீருணர்ந்திலீரோவுமக்கும்வேறுற்றதுண்டோ
துன்னருநெறியின்வந்துதொடர்ந்திலீர்துஞ்சினீரோ. (சச)

மேருவிற்கும்பர்சேர்ந்துவிண்ணிணைமீக்கொண்டாலும்
நீருடைக்காவன்மூதூரெய்தலாநெறியிற்றன்றால்
போரிடைக்கொண்டாரேனும்வஞ்சனைபுணர்த்தாரேனும்
ஆருமக்கறையற்பாலாரனுமனுமுளனேநும்பால். (சரு)

சரதமற்றிவனைத்தந்தார்தவம்புரியாற்றல்சான்ற
பரதனைக்கொணர்தற்கேதுமையுறவில்லைப்பன்னுள்
வரதனும்வாழ்ந்தானல்லன்றம்பியுமனையன்வாழா
விரதமுற்றறத்தினின்றூற்கிவைகொலாம்விளைவமென்மேல். (சசு)

அடைத்ததுகடலைமேல்வந்தடைந்ததுமதிலையாவி
துடைத்ததுபகையைச்சேனையெனச்சிலர்சொல்லச்சொல்லப்
படைத்ததோருவகைதன்னைவேறொருவினையம்பண்ணி
உடைத்ததுவிதியேயென்றென்றுளைத்தனளுணர்வுதீர்வாள். (சஎ)

இராவணன் சீதைக்குச் சமாதானமுரைத்தல்.

ஏங்குவாளினையபன்னவிமையவரேற்றமெல்லாம்
வாங்குவாளரக்கனுற்றமனமகிழ்ந்தினிதினோக்கித்
தாங்குவாளல்லடன்பமிவளையுந்தாங்கித்தானும்
ஓங்குவானென்னவுன்னியினையனவுரைக்கலுற்றான். (சஅ)

காரிகைநின்னையெய்துங்காதலாற்கருதலாகாப்
பேரிடரியற்றலுற்றேன்பிழையிதுபொறுத்தியின்னும்
வேறமிதிலையோரைவிளிகிலேன்விளிந்தபோதும்
ஆருயிரிவனையுண்ணேனஞ்சலையன்னமன்னாய். (௪௧)

இமையவருலகமேதானிவ்வுலகேழுமேதான்
அமைவரும்புவனமூன்றிலென்னுடையாட்சியேதான்
சமைவுறத்தருவன்பற்றித்தாரணிமன்னற்கின்னற்
சுமையுடைக்காமவெங்நோய்துடைத்தியேற்றொழுதுவாழ்வேன். (௫௦)

இலங்கையூரிவனுக்கீந்துவேறிடத்திருந்துவாழ்வேன்
நலங்கிளர்நிதியமூன்றுநல்குவெனுமத்தெய்வப்
பொலங்கிளர்மானந்தானேபொதுவுறக்கொடுப்பென்புத்தேள்
வலங்கிளர்வாளும்வேண்டின்வழங்குவென்யாதுமாற்றேன. (௫௧)

இந்திரன்கவித்தமௌலியிமையவரிறைஞ்சியேத்த
மந்திரமரபிற்சூட்டிவானவர்மகளிர்யாரும்
பந்தரினுரிமைசெய்யாணிவன்பணியினிற்பேன்
சுந்தரப்பவளவாயோயருண்மொழிசிறிதுசொல்லின். (௫௨)

எந்தைதன்றந்தைதாதையிவ்வுலகீன்றானென்முன்
வந்தவன்றானேவிட்டவரமெலாம்வழங்கிமற்றை
அந்தமிலடியார்செய்கையாற்றுவேனமிழ்தின்வந்த
செந்திருநீரல்லீரேலவளும்வந்தேவல்செய்யும். (௫௩)

தேவரேமுதலாமற்றைத்திண்டிறனுகர்மண்ணோர்
யாவரும்வந்துநுந்தையடிதொழுதேவல்செய்வர்
பாவைநீயிவனின்வந்தபயன்பழுதாவதன்றால்
மூவுலகாளுஞ்செல்வங்கொடுத்ததுமுடித்தியென்றான். (௫௪)

இராவணற்கு சீதைமறுமாற்றமுரைத்தல்.

இத்திருப்பெறுகிற்பானுமிந்திரனிலங்கைநுங்கள்
பொய்த்திருப்பெறுகிற்பானும்வீடணன்புலவர்கோமான்
கய்த்திருச்சரங்களுன்றன்மார்பிடைக்கலக்கற்பால
மய்த்திருநிறத்தான்றோளென்றலைமிசைவைக்கற்பால. (௫௫)

நகுவனநின்னோடையநாயகனுமவாளி
புகுவனபோழ்ந்துன்மார்பிற்றிறந்தனபுண்களெல்லாம்
தகுவனவினையசொல்லத்தக்கனசாபநாணின்
உகுவனமலைகளெஞ்சப்பிறப்பனவொலிகளம்மா. (௫௬)

சொல்லுவமதுரமாற்றந்துண்டத்தாலுண்டென்கண்ணைக்
கல்லுவகாகம்வந்துகலப்பனகமலக்கண்ணன்

வில்லுமிழ்பகழிபின்னர்விலங்கெழிலலங்கன்மார்பம்
புல்லுவகளிப்புக்கூர்ந்துபுலவுநாறலகையெல்லாம். (ருஎ)

விரும்பிநான்கேட்பதுண்டாஎின்னுழைவார்த்தைவீரன்
இரும்பியல்வயிரவாளியிடறிடவெயிற்றுப்பேழ்வாய்ப்
பெரும்பியற்றலைகள்சிந்திப்பிழைப்பிலமுடிந்தாயென்ன
அரும்பியற்றுளவப்பைந்தாரனுமன்வந்தளித்தவந்நாள். (ருஅ)

புன்மகன்கேட்டிகேட்டற்குரியதுபுகுந்தபோரின்
உன்மகனுயிரையெம்மோய்ச்சுமித்திரையுய்யவீன்ற
நன்மகன்வாளிநக்கநாயவனுடலைநக்க
என்மகனிறந்தானென்னநீயெடுத்தரற்றலென்றாள். (ருக)

இராவணனை மகோதரன்தடுத்துபாயங்கூறல்.

வெய்யவனனையகேளாவெயிலுகவிழித்துவீரக்
கைபலபிசைந்துபேழ்வாயெயிறுபுக்கழுந்தக்கவ்வித்
தய்யன்மேலோடலோடுமகோதரன்றடுத்தானின்ற
மொய்கழற்றானைவேண்டவிசையுநீமுனியலென்றான். (சுO)

மாயாசனகன் சீதையைப்பார்த்துச் சிலகூறுதல்.

அன்றவன்றகைப்பமீண்டானுசனத்திருக்கவாவி
பொன்றினனுருமென்னத்தரையிடைக்கிடந்தபொய்யோன்
இன்றிதுநேராயென்னினென்னையென்குலத்தினோடும்
கொன்றனையாதியென்றுவினையனகூறலுற்றான். (சுக)

பூவின்மேலிருந்ததெய்வத்தையலும் * பொதுமையுற்றாள்
பாவியான்பயந்தநங்கைநின்பொருட்டாகப்பட்டேன்
ஆவிபோயழியநன்றேயமரர்க்குமரசனவான்
தேவியாயிருத்தநீதேசிறையிடைத்தேம்புகின்றாய். (சுஉ)

என்னையென்குலத்தினோடுமின்னுயிர்தாங்கியீண்டு
நன்னெடுஞ்செல்வந்துய்ப்பேனுக்கினைநல்கினாளும்
உன்னைவெஞ்சிறையினீக்கியின்பத்துளுய்ப்பாயென்றுப்
பொன்னடிமருங்குவீழ்ந்தானுருமுகப்பொருமுகின்றான். (சுங)

மாயாசனகனை யனுமானித்தன்றெனவுணர்ந்த சீதைகூறுதல்.

அவ்வுரைகேட்டநங்கைசெவிகளையமையப்பொத்தி
வெவ்வுயிர்த்தாவிதள்ளிவீங்கினள்வெகுளிபொங்கி
இவ்வுரையெந்தைகூறானின்னுயிர்வாழ்க்கைபேணிச்
செவ்வுரையன்றிதென்னுச்சீறினளுளையச்செப்பும். (சுச)

---

* பொதுமையுற்றாள் - ஒருவனிடந்தங்காது பலரிடத்துந் தங்கினள்.

அறங்கெட * வழக்குநீங்கவரசர்தமரபுக்கான்ற
மறங்கெடமெய்ம்மைதேயவசையுறமறைகளோதும்
திறங்கெடவொழுக்கங்குன்றத்தேவரும்பேணத்தக்க
நிறங்கெடவினையழிசொன்னாய்சனகன்கொணினையினைய. (௬௫)

வழிகெடவரினுந்தத்தம்வாழ்க்கைதேய்ந்திறினுமார்பம்
கிழிபடவயில்வேல்வந்துகிழிப்பினுமான்றோர்கூறும்
மொழிகொடுவொழ்வதல்லான்முறைகெடப்புறநின்றார்க்கும்
பழிபடவாழ்கிற்பாரும்பார்த்திவருளரோபாவம். (௬௬)

நீயுநின்கிளையுமற்றிந்நெடுநிலவரைப்புநேரே
மாயினுமுறைமைகுன்றவாழ்வெனோவயிரத்திண்டோள்
ஆயிரநாமத்தாழியரியினுக்கடிமைசெய்வேன்
நாயினைநோக்குவேனோநாண்டுறந்தாவிநச்சி. (௬௭)

வரிசிலையொருவனல்லான்மைந்தரென்மருங்குவந்தார்
எரியிடைவீழ்ந்தவிட்டிலல்லரோவரசுக்கேற்ற
அரியொடும்வாழ்ந்தபேடை † யங்கணத்தழுக்குத்தின்னும்
நரியொடும்வாழ்வதுண்டோநாயினுங்கடைப்பட்டோனே. (௬௮)

அல்லையேலெந்தையாணையாகத்தானலங்கல்வீரன்
வில்லையேவாழ்த்திமீட்கின்மீளுதுமீட்சியென்ப
தில்லையேலிறந்துதீர்துமிதுவலாலியம்பலாகாச்
சொல்லையேயுரைத்தாயென்னும்பழிகொண்டாயென்னச்சொன்னாள். ()

வன்றிறலரக்கனன்னவாசகமனத்துக்கொள்ளா
நின்றதுநிற்கமண்மேனிகழ்ந்தவாநிகழ்கநின்முன்
நின்றவனல்லன்போலாஞ்சனகனிக்கணத்தினின்முன்
கொன்றுயிர்குடிப்பெனென்னாச்சுரிகைவாளுரீஇக்கொண்டானால். (௭௦)

சீதை இராவணனைப்பார்த்துரைத்தல்.

என்னையுங்கொல்லாயின்னேயிவனையுங்கொல்லாயின்னும்
உன்னையுங்கொல்லாய்மற்றிவ்வுலகையுங்கொல்லாயானோ
இன்னுயிர்நீங்கியென்றுங்கெடாப்புகழெய்துகின்றேன்
பின்னையுமெங்கோனம்பிற்கிளையொடும்பிழையாயென்றாள். (௭௧)

இரந்தனன்வேண்டிற்றல்லாலிவன்பிழையிழைத்ததுண்டோ
புரந்தரன்செல்வத்தையாகொல்கையோர்பொருளிற்றோதான்
பரந்தவெம்பகையைவென்றானின்வழிப்படருநங்கை
அரந்தையளாகுமன்றேதந்தையைநலிவதாயின். (௭௨)

---

* வழக்கு - உலகானுபவம்.

† அங்கணம் - சேற்றுநிலமுற்றம்.

என்றவன்விலக்கமீண்டாண்டிருந்ததோரிறுதியின்கண்
குன்றெனநீண்டகும்பகருணனையிராமன்கொல்ல
வன்றிறற்குரங்கின்றானைவானுறவார்த்தவோதை
சென்றனசெவியினூடேதேவர்களார்ப்புஞ்செல்ல. (எஙு)

உகுந்திறலமரர்நாடும்வானரவோதத்தோரும்
மிகுந்திறம்பினில்லாவிருவர்நாணொலியும்விஞ்சத்
தகுந்திறனினைந்தேனெம்பிக்கமரிடைத்தனிமைப்பாடு
புகுந்துளதுண்டென்றுள்ளம்பொருமல்வந்துற்றபோழ்தின். (எச)

கும்பகருணனிறந்தானென்று தூதர் இராவணனுக்குரைத்தல்.

புறந்தருசேனைமுந்நீரிருஞ்சிறைபோக்கிப்போதப்
பறந்தனரனையதூதர்செவிமருங்கெய்திப்பையத்
திறந்திறமாகிநின்றகவிப்பெருங்கடலைச்சிந்தி
இறந்தனனும்பியம்பிற்கொன்றனனிராமனென்றார். (எரு)

* ஊரொடும்பொருந்தித்தோன்றுமொளியவனென்னவொண்பொற்
றாரொடும்புனைந்தமோலிதரையொடும்பொருந்தத்தள்ளப்
பாரொடும்பொருந்திநின்றமராமரம்பணைகளோடும்
வேரொடும்பறிந்துமண்மேல்வீழ்வதேபோலவீழ்ந்தான். (எசு)

பிறிவெனும்பீழைதாங்கள்பிறந்தநாட்டொடங்கியென்றும்
உறுவதொன்றின்றியாவியொன்றெனநினைந்துநின்றான்
எறிவருஞ்செருவிற்றம்பிதன்பொருட்டிறந்தானென்ன
அறிவழிந்தவசனாகியாற்றினானண்ட † முற்ற. (எஎ)

வேறு.

தம்பியோவானவராந்தாமரையின்காடுழக்கும்
‡ தும்பியோநான்முகத்தோன்செய்மதலைதோன்றாலோ
நம்பியோவிந்திரனைநாமப்பொறிதுடைத்த
எம்பியோயானுன்னையிவ்வுரையுங்கேட்டேனோ. (எஅ)

மின்னிலையவேலோனேயானுன்விழிகாணேன்
நின்னிலையாதென்றேனுயிர்பேணிநிற்கின்றேன்
உன்னிலைமையீதாயினோடைக்களிறுந்திப்
பொன்னுலகமீளப்புகாரோபுரந்தரனார். (எகூ)

வன்னெஞ்சினென்னைநீத்துப்போய்வானடைந்தால்
இன்னஞ்சிலரோடொருவயிற்றின்யார்பிறப்பார்

---

* ஊர் - பரிவேடம்.

† முற்ற - இடிய.

‡ தும்பியோ-யானையே, ஓ, இரக்கத்தைக்குறிக்கும் விளிவேற்றுமை.

மின்னஞ்சும்வேலோய்விழியஞ்சவாழ்கின்றார்
தன்னெஞ்சந்தாமேதடவாரோதானவர்கள். (௮௦)

கல்லன்றோநீராடுங்காலத்துட்காறேய்க்கும்
மல்லொன்றுதோளாய்வடமேருமானுடவன்
வில்லொன்றுநின்னைவிளிவித்துளதென்னும்
சொல்லன்றோவென்னைச்சுடுகின்றதுதோன்றால். (௮௧)

மாண்டனவாஞ்சூலமுஞ்சக்கரமும்வச்சிரமும்
தீண்டினவாவொன்றுஞ்செயலாற்றாவாந்தெரித்து
மீண்டனவாமானுடவன்மெல்லம்புமெய்யுருவ
நீண்டனவாந்தாமின்றுநின்றாராந்தோணோக்கி. (௮௨)

நோக்கறவுமெம்பியர்கண்மாளவுமிந்நொய்திலங்கை
போக்கறவுமாதுலனார்பொன்றவுமென்பின்பிறந்தாள்
மூக்கறவும்வாழ்ந்தேனொருத்திமுலைக்கிடந்த
* ஏக்கறவாலின்னமிரேனோவுனையிழந்தும். (௮௩)

தன்னைத்தான்றம்பியைத்தான்றானைத்தலைவனைத்தான்
மன்னைத்தான்மைந்தனைத்தான்மாருதத்தின்காதலைத்தான்
பின்னைக்கரடிக்கிறையைத்தான்பேர்மாய்த்தாய
என்னைத்தான்கேட்டிலேனென்னானவாறிதுவே. (௮௪)

ஏழைமகளீரடிவருடவீர்ந்தென்றல்
வாழுமணியரங்கிற்பூம்பள்ளிவைகுவாய
சூழுமலகைதுணங்கைப்பறைதுவைப்பப்
பூழியணைமேற்றுயின்றனையோபோர்க்களத்தே. (௮௫)

செந்தேன்பருகித்திசைதிசையுநீவாழ
உய்ந்தேனினியின்றுநானுமுனக்காவி
நொந்தேன்பிரியேன்றனிப்போகத்தாழ்க்கிலேன
வந்தேன்றொடரமதக்களிறேவந்தேனால். (௮௬)

அண்டத்தளவுமினையபகர்ந்தழைத்துப்
† பண்டைத்தன்னாமத்தின்காரணத்தைப்பாரித்தான்
தொண்டைக்கனிவாய்துடிப்பமயிர்பொடிப்பக்
கெண்டைத்தடங்கண்ணாளுள்ளேகிளுகிளுத்தாள். (௮௭)

வீங்கினாள்கொங்கைமெலிந்தமெலிவகல
ஓங்கினாளுள்ளமுவந்தாளுயிர்புகுந்தாள்

---

* ஏக்கறவால் - ஆசையால்.

† இராவணன் என்பதற்கழுபவன் என்றும் பொருளாதலிற் பண்டைத்தன்னாமத்தின் காரணத்தைப் பாரித்தான் என்றார்.

தீங்கிலாக்கற்பிற்றிருமடந்தைசேடியாம்
பாங்கினுளுற்றதனையாரேபகர்கிற்பார். (அஅ)

கண்டாள்கருணனைத்தன்கண்கடந்தேதாளானைக்
கொண்டாளொருத்துனுக்கமன்னவனைக்கொற்றவனூர்
தண்டாதவாளிதடிந்ததனிவார்த்தை
உண்டாளுடறடித்தாள்வேறொருத்தியொக்கின்றாள். (அகூ)

தாவரியபேருலகத்தெம்பிசவத்தோடும்
யாவரையுங்கொன்றடுக்கியென்னும்மிறவாத
மூவரையுமேலைநாண்மூவாமருந்துண்ட
தேவரையும்வைப்பேன்சிறையென்னச்சீறினான். (கூ0)

அக்கணத்துமந்திரியராற்றசிறிதாறி
இக்கணத்துமானுடவீரக்குருதியால்
* முக்கைப்புனலுகுப்பனெம்பிக்கெனமுனியாத்
திக்கனைத்தும்போர்கடந்தான்போயினான்றீவிழியான். (கூக)

கூறேமினிநாமக்கும்பகருணனார்
பாறடுவெங்களத்துப்பட்டாரெனப்பதையா
வேறோர்சிறையிவனைவைம்மின்விரைந்தென்ன
மாறோர்திசைநோக்கிப்போனார்மகோதரனார். (கூஉ)

வேறு.

வரிசடைநறுமலர்வண்டுபாடிலாத்
துரிசடைபுரிகுழல்சும்மைசுற்றிய
வொருசடையுடையவட்குடையவன்பினுள்
திரிசடைதெருட்டுவாளினையசெப்புவாள். (கூ௩)

திரிசடை மாயாசனகன் தன்மைகூறுதல்.

உந்தையென்றுனக்கெதிருருவமாற்றியே
வந்தவன்மருத்தனென்றுளனோர்மாயையான்
அந்தமில்கொடுந்தொழிலரக்கனேமனச
சிந்தையினுணர்த்தினளமுதின்செம்மையாள். (கூச)

நங்கையுமவளுரைநாளுந்தேறுவாள்
சங்கையுமின்னலுந்துயருநதள்ளினாள்
இங்குநின்றேகியவிலங்கைகாவலன்
அங்குநின்றியற்றியதறைகுவாமரோ. (கூரு)

ககூ - வது, மாயாசனகப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-ககூஎரு.

---

* முக்கைப்புனலுகுப்பன் - மூன்றுகை நீரளிப்பன்.

கஎ-வது, அதிகாயன்வதைப்படலம்.

கொழுந்துவிட்டழன்றெரிமடங்கல்கூட்டற
எழுந்தெரிவெகுளியானிருமருங்கினும்
தொழுந்தகையமைச்சரைச்சுளித்துநோக்குறு
மொழிந்தனனிடியொடுமுகிலுஞ்சிந்தவே. (க)

எகுதிரெம்முகத்தெவருமென்னுடை
யோகவெஞ்சேனையுமுடற்றுமும்முடைச்
சாகரத்தானையுந்தழுவச்சார்ந்தவர்
வேகவெஞ்சிலைத்தொழில்விலக்கிவீட்டிரால். (உ)

எடுத்தவரிருந்துழியெய்தியாரையும்
படுத்திவண்மீடுமென்றுரைத்தபண்பினீர்
தடுத்திலீரெம்பியைத்தாங்குகிற்றிலீர்
கொடுத்திலீருமுயிர்வீரக்கோட்டியீர். (ங)

உம்மையினின்றுநானுலகமூன்றுமென்
வெம்மையினுண்டதுநீரென்வென்றியால்
இம்மையினெடுந்திருவெய்தினீரினிச
செம்மையினின்றுயிர்தீர்ந்துதீர்திரால். (ச)

ஆற்றலமென்றிரே *லென்மின்யானவர்
தோற்றலம்வந்துகத்துரந்துதொன்னெடுங்
கூற்றலதுயிரதுகுடிக்குங்கூர்த்தவென்
வேற்றலைமானுடர்வெரிநிற்காண்பெறல். (ரு)

அல்லதுமுண்டுமெக்குரைப்பதாரமர்
வெல்லுதுமென்றிரேன்மேற்செல்வீரினி
வல்லதுமடிதலேயென்னின்மாறுதிர்
சொல்லுநுங்கருத்தெனமுனிந்துசொல்லினான். (சு)

வேறு.

நதிகாய்நெடுமானமுநாணுமுறு
மதிகாய்குடைமன்னனைவைதுரையா
விதிகாயினும்வீரம்வெலற்கரியான்
அதிகாயனெனும்பெயரானறைவான். (எ)

* என்மின் - என்றுரையுங்கள்.

அதிகாயன் இராவணனைநோக்கித் தன் வீரங்கூறுதல்.

வானஞ்சுகவையகமஞ்சுகமா
* லானஞ்சுமுகத்தவனஞ்சுகமேல்
நானஞ்சினெனென்றனைநாணுகபோர்
யானஞ்சினெனென்றுமியம்புமதோ. (அ)

வெம்மைப்பொருதானவர்மேல்வலியோர்
தம்மைத்தளையிற்கொடுதந்திலெனோ
உம்மைக்குலையப்பொருதும்பரையும்
கொம்மைக்குய † வட்டணைகொண்டிலெனோ. (௯)

காய்ப்புண்டநெடும்படைகையுளதாத்
‡ தேய்ப்புண்டவனுஞ்சிலசில்கணையால்
$ ஆய்ப்புண்டவனும்மவர்சொல்வலதால்
¶ எய்ப்புண்டவனும்மெனவெண்ணினையோ. (௧௦)

உம்பிக்குயிரீறுசெய்தானொருவன
தம்பிக்குயிரீறுசமைத்தவனைக்
கம்பிப்பதொர்வன்றுயர்கண்டிலெனேல்
o நம்பிக்கொருநன்மகனோவினிநான். (௧௧)

இட்டிப்பொருதக்கிளர்சேனையெலாம்
மட்டித்துயர்வானரர்வன்றலையை
வெட்டித்தரையிட்டிருவில்லினரைக்
கட்டித்தருவென்னிதுகாணுதியால். (௧௨)

சேனைக்கடலோடிடைசெல்கெனினும்
யானிப்பொழுதேதனியேகெனினும்
தானொத்ததுசொல்லுதிதாவிடையென்
றானித்திறமுன்னியரக்கர்பிரான். (௧௩)

சொன்னாயிதுநன்றுதுணிந்தனைநீ
அன்னானுயிர்தந்தனையாமெனின்யான்
பின்னாளவிராமனெனும்பெயரான்
தன்னாருயிர்கொண்டுசமைக்குவெனால். (௧௪)

போவாயிதுபோதுபொலங்கழலோய்
மூவாயிரகோடியரோடுமுரண்

---

* மாலான் அஞ்சுமுகத்தவன்-மாலும் ஐம்முகனாகிய சிவனும்.
† வட்டணைகொண்டிலனோ-தாளம்போட்டிலனோ.
‡ தேய்ப்புண்டவன்-அட்சன்.
$ ஆய்ப்புண்டவன்-கும்பகருணன்.
¶ எய்ப்புண்டவன்-விபீடணன்.
o நம்பிக்கு-ஆடவர்திலகனாகிய உனக்கு.

காவார்கரிதேர்பரிகாவலினின்
றேவாதனயாவையுமேவினனால். (கரு)

கும்பக்கொடியோனுநிகும்பனும்வே
றம்பொற்கழல்வீரனகம்பனுமுன்
செம்பொற்பொலிதேரயல்செய்குவரால்
உம்பர்க்கும்வெலற்கரியாருரவோர். (கசு)

ஓரேறுசிவற்குளதொப்புளவாம்
வாரேறுவயப்பரியாயிரம்வன்
போரேறிடவேறுவபூணுறுதிண்
தேரேறுதிதந்தனனென்வெந்திறலோய். (கஎ)

ஆமத்தனைமாவுடையத்தனைதேர்
சேமத்தனபின்புடைசெல்லவடும்
கோமத்தநெடுங்கரிகோடியொடும்
போமத்தனைவெம்புரவிக்கடலீர். (கஅ)

என்றேவிடைநல்கவிறைஞ்சியெழா
வன்றாள்வயிரச்சிலைகைக்கொடுவாள்
பொன்றாழ்கவசம்புகுதாமுகிலின்
நின்றானிமையோர்கணெளிந்தனரால். (ககூ)

பல்வேறுபடைக்கலம்வெம்பகலோன்
எல்வேறுதெரிப்பகொடேகினனால்
சொல்வேறுதெழிக்குநர்சுற்றவுமா
வில்வேறுதெரிப்புறுமேனியினான். (உ0)

இழையஞ்சனமால்களிறெண்ணிலரி
முழையஞ்சமுழங்கினமும்முறைநீர்
உழையஞ்சமுழங்கினநாணொலிகோள்
மழையஞ்சமுழங்கினமாமுரசே. (உக)

ஆர்த்தார்நெடுவானநடுங்கவடி
பேர்த்தார்நிலமாமகள்பேர்வதெனத்
தூர்த்தார்நெடுவேலைகடேளியினால்
வேர்த்தாரதுகண்டுவிசும்புறைவோர். (உஉ)

அடியோடுமெதக்களியானைகளில்
பிடியோடுநிகர்த்தனபின்புறமுன்
தடியோடுதொடக்கியதாரையவெண்
கொடியோடுதொடக்கியகொண்மூவெலாம். (உங)

தாரூடினமால்கரியின்புடைதாழ்
மாரூடினமாமதமண்டுதலால்
ஆரூடினபாய்பரியானைகளும்
சேரூடினசேணெறிசென்றவெலாம். (௨௪)

தேர்சென்றனசெங்கதிரோனொடுதேர்
ஊர்சென்றனபோலொளியோடைகளின்
கார்சென்றனகார்நிரைசென்றனபோல்
பார்சென்றனசென்றிலபாய்பரியே. (௨௫)

மேருத்தனைவெற்பினமொய்த்துநெடும்
பாரிற்செலுமாறுபடப்படரும்
தேர்சுற்றிடவேகொடுசென்றுமுரட்
போர்முற்றுகளத்திடைபுக்கனனால். (௨௬)

கண்டானவிராமனெனுங்களிமா
உண்டாடியவெங்களனூடுருவப்
புண்டானுறுநெஞ்சுபுழுக்கமுறத்
திண்டாடினன்வந்தசினத்திறலோன். (௨௭)

மலைகண்டனபோல்வருதோளொடுதோள்
கலைகண்டகருங்கடல்கண்டுளவாம்
நிலைகண்டனகண்டொருதாதைநெடுந்
தலைகண்டிலனின்றுசலித்தனனால். (௨௮)

மிடலொன்றுசரத்தொடுமீதுயர்வான்
திடலன்றுதிசைக்களிறன்றொருதிண்
கடலன்றிதெனந்தைகடக்கரியான்
உடலென்றுயிரோடுமுகுத்தனனால். (௨௯)

எல்லையிவைகாணியவெய்தினனோ
வல்லையுளராயினமானுடரைக்
கொல்லேனொருநானுயிர்கோணெறியிற்
செல்லேனெனினிவ்விடர்தீர்குவனோ. (௩௦)

என்றுமுனியாவிதிழைத்துளவன்
பின்றனையுமிப்படிசெய்துபெயர்க்
தன்றனிடர்கண்டிடராறுவனென்
றன்றொருவற்கிதுணர்த்தினனால். (௩௧)

அதிகாய னிலக்குமணற்குத் தூதனுப்புதல்.

வாநீமயிடன்றொருவல்விசையிற்
போநீயவிலக்குவனிற்புகல்வாய்

நானீதுதுணிந்தனெனண்ணினனால்
மேனீயிதுணர்ந்துவிளம்பிடுவாய். (௩௨)

அந்தாரிளவற்கயர்வெய்தியழும்
தந்தாதைமனத்திடர்தள்ளிடுவான்
உந்தார்துயரோடுமுருத்தெரிவான்
வந்தானெனமுன்சொல்வழங்குதியால். (௩௩)

கோளுற்றவனெஞ்சுசுடக்குழைவான்
ஆளுற்றவிருக்கையில்யானொருதன்
தாளற்றுருளக்கணைதள்ளிடுவான்
சூளுற்றதுமுண்டதுசொல்லுதியால். (௩௪)

நீதென்றதுசிந்தனைசெய்திலனால்
ஈதென்றறமன்னெறியாமெனநீ
தூதென்றிகழாதுளசொல்வதலால்
போதென்றுடனேகொடுபோதுதியால். (௩௫)

செருவாசையினார்புகழ்தேடுறுவார்
இருவோரையுநீவலியுற்றெதிரே
பொருவோர்நமனார்பதிபுக்குறைவோர்
வருவோரையெலாம்வருகென்னுதியால். (௩௬)

சிந்தாகுலமெந்தைதிருத்திடுவான்
வந்தானெனவென்னெதிரேமதியோய்
தந்தாயெனின்யானலதியார்தருவார்
* உந்தாரியவல்லவுயர்ந்தவெலாம். (௩௭)

வேறேயவிலக்குவனென்னவிளம்
பேறேவருமேலிமையோரெதிரே
கூறேபலசெய்துயிர்கொண்டுனையும்
மாறேயொருமன்னனைவைக்குவெனால். (௩௮)

விண்ணாடியர்விஞ்சையரஞ்சொலினார்
பெண்ணாரமுதன்னவர்பெய்தெவரும்
உண்ணாதனகூர்நறவுண்டதசும்
பெண்ணாயிரமாயினுமீகுவெனால். (௩௯)

உறைதந்தனசெங்கதிரோனுருவிற்
பொறைதந்தனகாசொளிர்பூணிமையோர்
திறைதந்தனதெய்வநிதிக்கிழவன்
முறைதந்தனதந்துமுடிக்குவெனால். (௪௦)

---

* உந்தாரிய-உந்தஅரிய. உந்த-நீக்க.

மாறாமதவாரியவண்டினொடும்
பாறாமுகத்தனபல்பகலும்
தேறாதனசெங்களிவெங்கதமா
நூறாயிரமாயினுநந்துவெனால். (சக)

செம்பொன்னினமைந்துசமைந்தனதேர்
உம்பர்நெடுவானினுமொப்புறழா
பம்பும்மணிதாரணிபாய்பரிமா
* இம்பர்நடவாதனவீகுவெனால். (சஉ)

நிதியின்னிரைகுப்பைநிறைந்தனவும்
பொதியின்மிளிர்காசுபொறுத்தனவும்
வதியின்னொளிர்தூசுவகுத்தனவும்
அதிகஞ்சுகமாயிரமீகுவெனால். (சங)

மற்றும்மொருநீதின்மணிக்கணிதாம்
உற்றுன்னினைவியாவையுமுந்துவெனால்
பொற்றிண்கழலாய்நனிபோவெனலோ
டெற்றுந்திரடோளவனேகினனால். (சச)

ஏகித்தனிசென்றெதிரெய்தலுறும்
காகுத்தனையெய்தியகாலையின்வாய்
வேகத்தொடுவீரர்விசைத்தெழலும்
ஓகைப்பொருளுண்டெனவோதினனால். (சரு)

இராமன்தூதனைப்பேணினனல்.

போதம்முதல்வாய்மொழியேபுகல்வோன்
ஏதும்மதியான்வறிதேகினனால்
தூதன்னவனைச்சுளியன்மினெனா
வேதம்முதனாதன்விலக்கினனால். (சசா)

என்வந்தகுறிப்பதியம்பெனலும்
மின்வந்தவெயிற்றவன்வில்வலவுன்
பின்வந்தவனேயறிபெற்றியதால்
மன்வந்தகருத்தெனமன்னர்பிரான். (சஎ)

தூதன் இலக்குமணனிடம் தான் வந்த செயலுரைத்தல்.

சொல்லாயதுசொல்லிடுசொல்லிடனா
வில்லாளனிளங்கிளையோன்வினவப்
பல்லாயிரகோடிபடைக்கடன்முன்
நில்லாவெனநின்றுநிகழ்த்தினனால். (சஅ)

---

* இம்பர்நடவாதன-வானிற்செல்வன.

உன்மேலதிகாயனுருத்துளனாய்
நன்மேருவினின்றனனாடியவன்
தன்மேலெதிரும்வலிதக்குளையேல்
பொன்மேனியவென்னொடுபோருதியால் (சகூ)

சய்யப்படிவத்தொருதந்தையைமுன்
மெய்யெய்ப்படிசெய்தனனும்முன்விரைந்
தய்யப்படலப்படியிப்படியில்
செய்யப்படுகிற்றிதெரித்தனனால். (ருo)

கொன்றானொழியக்கொலைகோளறியான்
நின்றானொடுநின்றதனோடியெனின்
தன்றாதைபடுந்துயர்தந்தையைமுன்
வென்றானையியற்றுமவேட்கையினால். (ருக)

வானோர்களுமண்ணினுளோர்களுமற்
றேனோர்களுமிவ்வுரைகேண்மினிவன்
தானேபொருவானயலேதமர்வந்
தானாருமுடன்பொருவானமைவான். (ருஉ)

என்றேயுலகேழினொடேழினையும்
தன்றாமரைபோலிருதாளளவா
நின்றானுரைசெய்யநிசாசரனும்
பின்றாவுரையொன்றுபிதற்றினனால். (ருங)

எழுவாயினியென்னுடனென்றெரியும்
மழுவாய்நிகர்வெஞ்சொல்வழங்குதலும்
தழுவாவுடனேகுதிதாழலெனத்
தொழுவார்தொழுதாளரிசொல்லுதலும். (ருச)

எல்லாமுடனெய்தியபின்னிவனே
வில்லாளொடுபோர்செயவேண்டுமெனா
நல்லாறுடைவீடணனாரணன்முன்
சொல்லாடினனன்னவைசொல்லுறுமால். (ருரு)

விபீடணன் அதிகாயன்றன்மைகூறல்.

வாரேறுகழற்சினவாளரியெம்
போரேறொடுபோர்புரிவானமையாத்
தேரேறுசினக்கடுவெந்தறுகட்
காரேறெனவந்தகதத்தொழிலோன். (ருசு)

ஓவாநெடுமாதவமொன்றுடையான்
தேவாசுரராதியர்செய்செருவில்

சாவாணிறையுஞ்சலியாவலியான்
மூவாமுதனான்முகனார்மொழியால். (௫௭)

கடமேய்கயிலைக்கிரிகண்ணுதலோ
டிடமேறவெடுத்தனமென்றிவனைத்
திடமேலுலகிற்பலதேவரொடும்
வடமேருவெடுக்கவளர்த்தனனால். (௫௮)

மாலாரொடுமந்தரமாசுணமும்
மேலாகியதேவரும்வேண்டுமெனா
ஆலாலமுமாரமிழ்தும்மமையக்
காலானெடுவேலைகலக்கிடுமால். (௫௯)

ஊழிக்குமுயர்ந்தொருநாளொருவாப்
பாழித்திசைநின்றுசுமந்தபணைச்
சூழிக்கரிதள்ளுதறோள்வலியோ
ஆழிக்கிரிதள்ளுமொரங்கையினால். (௬௦)

காலங்கள்கணக்கிலகண்ணிமையா
ஆலங்கொண்மிடற்றவனாரழல்வாய்
வேலங்கொழியக்கொடுவிட்டதுநீள்
சூலங்கொலெனப்பகர்சொல்லுடையான். (௬௧)

பகையாடியவானவர்பல்பகையூர்
புகையாடியநாள்புனைவாகையினான்
மிகையாருயிருண்ணெனவீசியவெந்
தகையாழிதகைந்ததனுத்தொழிலான். (௬௨)

உயிரொப்புறுபல்படையுள்ளவெலாம்
செயிரொப்புறுமிந்திரர்சிந்தியநாள்
அயிரொப்பனநுண்டுகள்செய்தவர்தம்
வயிரப்படைதள்ளியவாளியினான். (௬௩)

கற்றான்மறைநூலொடுகண்ணுதல்பால்
முற்றாதனதேவர்முரட்படைதாம்
மற்றாரும்வழங்கவலாரிலவும்
பெற்றானெடிதாண்மைபிறந்துடையான். (௬௪)

அறனல்லதுநல்லதுமற்றறியான்
மறனல்லதுபல்பணிமாறணியான்
திறனல்லதொராருயிருஞ்சிதையான்
உறனல்லதுபேரிசையென்றுணர்வான். (௬௫)

காயத்துயிரேவிகொலையினும்
மாயத்தவர்கூடிமலைந்திடினும்
தேயத்தவர்செய்குதல்செய்திடினும்
மாயத்தொழில்செய்யமதித்திலனால். (௬௬)

மதுகைடவ சரிதம்.

மதுகைடவரென்பவர்வானவர்தம்
பதிகைகொடுகெட்டவர்பண்டொருநாள்
அதிகைதவராழியனந்தனையும்
விதிகைம்மிகமுட்டியவெம்மையினர். (௬௭)

நீராழியிழிந்துநெடுந்தகையைத்
தாராயமரென்றனர்தாமொருநாள்
ஆராழியவண்ணனுமஃதிசையா
வாராவமர்செய்கெனவந்தனனால். (௬௮)

வல்லாருருவாயிரமாய்வரினும்
நல்லார்முறைவீசிநகுந்திறலார்
மல்லாவிளகாதுமலைந்தனன்மால்
அல்லாயிரமாயிரமஃகினவால். (௬௯)

தன்போல்பவர்தானுமிலாததனிப்
பொன்போலொளிர்மேனியனைப்புகழோய்
என்போல்பவர்சொல்லுவதெண்ணுடையார்
உன்போல்பவர்யாருளரென்றுரையா. (௭0)

ஒருவேமுலகேழையுமுண்டுமிழ்வேம்
இருவேமொடுநீதனியித்தனைநாள்
பொருவேமொடுநேர்பொருதாய்புகழோய்
தருவேநின்மனத்ததுதந்தனமால். (௭௧)

ஒல்லும்படிநல்லதுனக்குதவச்
சொல்லும்படியென்றவர்சோறலுமே
வெல்லும்படிநும்மைவிளம்புமெனக்
கொல்லும்படியாலரிகூறுதலும். (௭௨)

இடையிற்படுகிற்கிலம்யாமொருநின்
தொடையிற்படுகிற்றுமெனத்துணியா
அடையச்செயகிற்றியதாணையெனு
நடையிற்படுநீதியர்நல்குதலும். (௭௩)

விட்டானுலகியாவையுமேலொடுகீழ்
எட்டாவொருவன்றனிடத்தொடையை

ஒட்டாதவரொன்றினைசூழ்வலியால்
பட்டா * ரிதுபட்டதுபண்டொருநாள். (எச)

தனிநாயகன்வன்கதைதன்கைகொளா
நனிசாடவிழுந்தனர்நாளுலவாப்
பணியாமதுமேதைபடப்படர்மே
தினியானதுபூவுலகெங்கணுமே. (எரு)

விதியாலிவ்வுகந்தனின்மெய்வலியான்
மதுவானவனெம்முன்மடிந்தனனால்
கதிர்தானிகர்கைடவனிக்கதிர்வேல்
அதிகாயனிதாகவறிந்தனனால். (எசு)

இராமன் விபீடணற்கு இலக்குமணன் பராக்கிரமமுதலிய கூறல்.

என்றானவ்விராவணனுக்கிளையான்
நன்றாகுகவென்றொருநாயகனும்
மின்றானுமிழ்வெண்ணகைவேறுசெயா
நின்றானிதுகூறிநிகழ்த்தினனால். (எஎ)

எண்ணாயிரகோடியிராவணரும்
விண்ணாடரும்வேறுலகத்தெவரும்
நண்ணாவொருமூவருநண்ணிடினும்
கண்ணாலிவன்விற்றொழில்காணுதியால். (எஅ)

வானென்பதென்வையகமென்பதென்மால்
தானென்பதென்வேறுதனிச்சிலையோர்
யானென்பதெனீசனெனின்றிமையோர்
கோனென்பதெனெம்பி † கொதித்திடுமேல். (எகூ)

தெய்வப்படையுஞ்சினமுந்திறனும்
மெய்யற்றொழிமாதவமற்றுமெலாம்
எய்தற்குளவோவிவனிச்சிலையில்
கய்வைப்பளவேயிறல்காணுதியால். (அ0)

என்றேறவியைவஞ்சனைசெய்தெழுவான்
அன்றேமுடிவானிவனன்னவள்சொல்
குன்றேனெனவேகியகொள்கையினால்
நின்றானுளனாயநெடுந்தகையான். (அக)

எகாயுடனீயுமெதிர்ந்துளனும்
மாகாயநெடுந்தலைவாளியொடும்

---

* இதுபட்டது - இதுநடந்தது.

† கொதித்திடுமேல் - சீறுவானானால்.

ஆகாயமளந்துவிழுந்ததனைக்
காகாதியருங்குதல்காணுதியால். (௮௨)

நீரைக்கொடுநீரெதிர்நிற்கினுமே
தீரக்கொடியாரொடுதேவர்பொரும்
போரைக்கொடுவந்துபுகுந்ததுநாம்
ஆரைக்கொடுவந்ததயர்த்தனையோ. (௮௩)

சிவனல்லனெனிற்றுருவின்பெருமான்
அவனல்லனெனிற்புவிதந்தருளும்
தவனல்லனெனிற்றனியேவலியோன்
இவனல்லனெனிற்பிறர்யாருளரே. (௮௪)

ஒன்றாயிரவெள்ளமொருங்குளவாம்
வன்றானையர்வந்துவளைந்தவெலாம்
கொன்றானிவனல்லதுகொண்டடனே
நின்றார்பிறருண்மைநினைந்தனையோ. (௮௫)

கொல்வானுமிவன்கொடியோனையெலாம்
வெல்வானுமிவன்னடல்விண்டுவெனு
ஒல்வானுமிவன்னுடனேயொருநீ
செல்வாயெனவேவுதல்செய்தனனால். (௮௬)

இராமனைவணங்கி இலக்குமணன் போர்புரியச் செல்லுதல்.

அக்காலையிலக்குவனாரியனை
மூக்காலும்வலங்கொடுமூதுணர்வின்
மிக்கான்மதிவீடணன்மெய்தொடரப்
புக்கானவன்வந்துபுகுந்தகளம். (௮௭)

சேனைக்கடல்சென்றதுதென்கடன்மேல்
ஏனைக்கடல்வந்ததெழுந்ததென
ஆனைக்கடறேர்பரியாண்மிடையும்
தானைக்கடலோடுதலைப்படலும். (௮௮)

வேறு.

பசும்படுகுருதியிற்பண்டுசேறுபட்
டசும்பறவுருகியவுலகமார்ப்பெழக்
* குசும்பையினறுமலர்ச்சுண்ணக்குப்பையின்
விசும்பையுங்கடந்ததுவிரிந்ததூளியே. (௮௯)

தாமிடித்தெழும்பணைமுழக்குஞ்சங்கினம்
ஆமிடிக்குமுறலுமார்ப்பினோதையும்

* குசும்பை—ஒருமலர்விசேடம்.

ஏழுடைக்கொடுஞ்சிலையிடிப்புமஞ்சித்தம்
வாய்மடித்தொடுங்கினமகரவேலையே. (௬௦)

அசுரவானரயுத்தம்.

உலைதொறுங்குருதிநீரருவியொத்துக
இலைதுறுமரமெனக்கொடிகளிற்றுக
மலைதொறும்பாய்ந்தனமானையானையின்
தலைதொறும்பாய்ந்தனகுரங்குதாவியே. (௬௧)

கிட்டினகிளைநெடுங்கோட்டகீழுகு
மட்டினவருவியின்மதத்தவானரம்
விட்டனநெடுவரைவெம்மைவேழத்தை
முட்டினவொத்தனமுகத்தின்வீழ்வன. (௬௨)

இடித்தனவுறுக்கினவிறுக்கியேய்ந்தன
தடித்தனவெயிற்றிணுற்றலைகள்சந்தறக்
கடித்தனகவிக்குலங்கால்கண்மேற்படத்
துடித்தனகுருதியற்றுரகராசியே. (௬௩)

அடைந்தனகவிக்குலமெற்றவற்றன
குடைந்தெறிகால்பொரப்பூட்கைக்குப்பைகள்
இடைந்தனமுகிற்குலமிரிந்துசாய்ந்தென
உடைந்தனகுலமருப்புகுத்தமுத்தமே. (௬௪)

தோல்படத்துதைந்தெழுவயிரத்தூணிகர்
கால்படக்கைபடக்காலபாசம்போல்
வால்வடப்புரண்டனநிருதர்மற்றவர்
வேல்படப்புரண்டனர்கவியின்வீரரே. (௬௫)

மரவமுஞ்சிலையொடுமலையும்வாளெயிற்
றரவமுங்கரிகளும்பரியுமல்லவும்
விரவினகவிக்குலம்வீசவிம்மலால்
உரவருங்கானெனப்பொலிந்ததும்பரே. (௬௬)

தடவரைகவிக்குலத்தலைவர்தாங்கின
அடல்வலிநிருதர்தம்மணிகராசிமேல்
விடவிடவிசும்பிடைமிடைந்துவீழ்வன
படர்கடலினமழைபடிவபோன்றவே. (௬௭)

இழுக்கினரடிகளினிங்குமங்குமா
மழுக்களுமயில்களும்வாளுந்தோள்களும்
முழுக்கினருழக்கினர்மூரியாக்கையை
ஒழுக்கினர்நிருதரையுதிரவாற்றினே. (௬௮)

மிடலுடைக்கவிக்குலங்குருதிவெள்ளநீர்
இடையிடைநீந்தினவியைந்தயானையின்
திடரிடைச்சென்றவையொழுகிச்சேர்ந்தன
கடலிடைப்புக்கனகரையுங்காண்கில. (௯௯)

கால்பிடித்தீர்த்திழிகுருதிக்கண்ணகட்
சேல்பிடித்தெழுதிரையாற்றிற்றிண்ணெடுங்
கோல்பிடித்தெழுகுறுகுருடர்கூட்டம்போல்
வால்பிடித்தொழுகினகவியின்மாலையே. (௧௦௦)

பாய்ந்ததுநிருதர்தம்பரவைபன்முறை
காய்ந்ததுகடும்படைகலக்கிக்கைதொறும்
தேய்ந்ததுசிதைந்ததுசிந்திச்சேணுறச்
சாய்ந்ததுதகைப்பெருங்கவியின்றானையே. (௧௦௧)

இலக்குமணன் போர்த்திறம்.

அத்துணையிலக்குவனஞ்சலஞ்சலென்
றெத்துணைமொழிகளுமியம்பியேற்றினன்
கைத்துணைவில்லினைக்காலன்வாழ்வினை
மொய்த்துணைநாணினைமுழங்கத்தாக்கினான். (௧௦௨)

நூன்மறைந்தொளிப்பினுநுவன்றபூதங்கள்
மேன்மறைந்தொளிப்பினும்விரிஞ்சன்வீயினும்
கான்மறைந்தொளிக்கிலாக்கடையிற்கண்ணகன்
நான்மறையார்ப்பெனநடந்ததவ்வொலி. (௧௦௩)

துரந்தனசுடுசரந்துரந்ததோன்றல
கரந்தனநிருதர்தங்கரையில்யாக்கையின்
நிரந்தரநெடும்பிணம்விசும்பினெஞ்சுறப்
பரந்தனகுருதியப்பள்ளவெள்ளத்தின். (௧௦௪)

யானையின்கரந்துரந்திரதவீரர்தம்
வானுயர்முடித்தலைதடிந்துவாசியின்
காணிரையறுத்துவெங்கறைக்கண்மொய்ம்பரை
ஊனுடையுடல்பிளந்தோடுமம்புகள். (௧௦௫)

வில்லிடையறுத்துவேறுணித்துவீரர்தம்
எல்லிடுகவசமுமார்புமீர்த்தெறி
கல்லிடையறுத்துமாக்கடிந்துதேரழீஇக்
கொல்லியல்யானையைக்கொல்லுங்கூற்றினே. (௧௦௬)

வெற்றிவெங்கரிகளின்வளைந்தவெண்மருப்
பற்றெழுவிசைகளினும்பரண்மின

முற்றருமுப்பகற்றிங்கள்வெண்முளை
உற்றனவிசும்பிடைப்பலவுமொத்தன. (௧0௭)

கண்டகர்நெடுந்தலைகளனுங்கண்ணன
துண்டவெண்பிறைத்துணிகவ்வித்தூக்கிய
குண்டலமின்குலந்தழுவிக்கோண்மதி
மண்டலம்விழுந்தனபோன்றமண்ணினே. (௧0அ)

கூர்மருப்பிணையனகுறைந்தகையன
கார்மதக்கனவரைகவிழ்ந்துவீழ்வன
போர்முகக்குருதியின்புணரிபுக்கன
பாரெடுக்குறுநெடும்பன்றிபோன்றன. (௧0௯)

புண்ணுறவுயிருகும்புரவிபூட்டறக்
கண்ணகன்றேர்க்குலமறிந்தகாட்சிய
எண்ணுறுபெரும்பதம்வினையினெஞ்சிட
மண்ணுறவிண்ணின்வீழ்மானம்போன்றன. (௧௧0)

அடக்கருங்கவந்தநின்றாடுகின்றன
விடற்கரும்வினையறச்சிந்திமெய்யுயிர்
கடக்கருந்துறக்கமேகலந்தவாமென
உடற்பொறையுவகையிற்குனிப்பவொத்தன. (௧௧௧)

ஆடுவகவந்தமொன்றாறெண்ணாயிரம்
வீடியபொழுதெனும்பனுவன்மெய்யதேல்
கோடியின்மேலுளகுனித்த * கொற்றவன்
† பாடினியொருவராற்பகரற்பாலதோ. (௧௧௨)

ஆனையின்குருதியுமரக்கர்சோரியும்
ஏனைவெம்புரவியினுதிரத்தீட்டமும்
கானினுமலையினும்பரந்தகார்ப்புனல்
வானயாறெனக்கடன்மடுத்ததே. (௧௧௩)

தாக்கியசரங்களிற்றலைகணீங்கிய
ஆக்கையபுரசையோடளைந்ததாளன
மேக்குயரங்குசக்கையவெங்கரி
நூக்குவகணிப்பிலவரக்கர்நோன்பிணம். (௧௧௪)

தோளுடைக்கணைபடப்புரவிகூத்தன
தோளுடைநெடுந்தலைதுமிந்துந்தீர்கில
ஆளுடைக்குறைத்தலையுதிரவாடுவ
வாளுடைத்தடக்கையவாசிமேலன. (௧௧௫)

---

* கொற்றவன் - இலக்குமணவன்.

† பாடு - பெருமை.

வைவனமுனிவர்சொல்லனையவாளிகள்
கொய்வனதலைகடோள்குறைத்தலைக்குழாம்
கய்வளைவரிசிலைக்கடுப்பிற்கைவிடா
வெய்வனவெனைப்பலவிரதமேலன. (௧௧௬)

தாதையைத்தம்முனைத்தம்பியைத்தனிக்
காதலைப்பெயரனைமருகனைக்களத்
தூதையினொருகணையுருவமாண்டனர்
சீதையென்றொருகொடுங்கூற்றந்தேடினார். (௧௧௭)

தூண்டருங்கணைபடத்துமிந்துதுள்ளிய
நீண்டருநெடுந்தலைதழுவிச்சேர்ந்தன
பூண்டெழுகரதலம்பொறுக்கலாதன
ஆண்டலைநிகர்த்தனவெருவையாடுவ. (௧௧௮)

ஆயிரவாயிரகோடியாய்வரும்
தீயுமிழ்கடுங்கணைமனத்திற்செல்வன
பாய்வனபுகுவனநிருதர்பல்லுயிர்
ஓய்வனநமன்றமர்கால்களோயவே. (௧௧௯)

விளக்குவான்கணைகளால்விளிந்துமேருவைத்
துளக்குவாருடற்பொறைதுணிந்துதுள்ளுவார்
இளக்குவாரமரர்தஞ்சிரத்தையென்முது
குளுக்குவாணிலமகள்பிணத்தினேங்கலால். (௧௨௦)

தாருகனென்றுளனொருவன்றனெடு
மேருவின்பெருமையானெரியின்வெம்மையான்
போருவந்துழக்குவான்புகுந்துதாங்கினான்
தேரினன்சிலையினனுமிழுந்தீயினன். (௧௨௧)

துரந்தனனெடுஞ்சரநெருப்பின்றோற்றத்த
பரந்தனவிசும்பிடையொடுங்கப்பண்டுடை
வரந்தனின்வளர்வனவற்றைவள்ளலும்
கரந்தனன்கணைகளான்முனிவுகாந்துவான். (௧௨௨)

அண்ணறன்வடிக்கணைதுணிப்பவற்றவன்
கண்ணகனெடுந்தலைவிசையிற்காரென
விண்ணிடையார்த்ததுவிரைவின்மெய்யுயிர்
உண்ணியவந்தவெங்கூற்றுமுட்கவே. (௧௨௩)

காலனுங்குலிசனுங்காலசங்கனும்
மாலியுமருத்தனுமருவுமைவரும்

சூலமுங்கணிச்சியுங்கடிதுசுற்றினார்
பாலமும்பாசமுமயிலும்பற்றுவார். (கஉச)

அன்னவரெய்தனவெறிந்தவாயிரம்
துன்னரும்படைக்கலந்துணித்துத்தூவின
நன்னெடுந்தலைகளைத்துணித்துநால்வகைப்
பன்னெடுந்தானையைப்பாறநூறினான். (கஉ௫)

ஆண்டதிகாயன்றன்சேனையாடவர்
ஈண்டினமதகரியேழாயிரம்
தூண்டினர்மருங்குறச்சுற்றினார்தொகை
வேண்டியபடைக்கலமுறையின்வீசுவார். (கஉசு)

போக்கிலாவகைப்புறம்வளைத்துப்பொங்கினார்
தாக்கினார்திசைதொறுந்தடக்கைமால்வரை
நூக்கினார்படைகளானுறுக்கினார்குழம்
பாக்கினார்கவிகடங்குழுவையார்ப்பினார். (கஉஎ)

எறிந்தனவெய்தனவெய்தியொன்றொடொன்
றறைந்தனவசனியின்விசையினாசைகள்
நிறைந்தனமழையெனநெருக்கிநிற்றலால்
மறைந்தனவுலகொடுதிசையும்வானமும். (கஉஅ)

அப்படையனைத்தையுமறுத்துவீழ்த்தவர்
துப்புடைத்தடக்கைகடுணித்துச்சுற்றிய
முப்புடைமதமலைக்குலத்தைமுட்டினான்
எப்புடைமருங்கினுமெரியும்வாளியான். (கஉகூ)

வேறு.

குன்றனமதகரிகொம்பொடுகரமற
வன்றலைதுதரமஞ்செனமறிவன
ஒன்றலவொருபதுமொன்பதுமொருகணை
சென்றரிதரமழைசிந்துவமதமலை. (க௩0)

ஒருதொடைவிடுவனவுருமுறழ்கணைபட
இருதொடைபுரசையொடிறுபவரெறிபடை
விருதுடைநிருதர்கண்மலையெனவிழுவர்கள்
பொருதுடைவனமதமழையெனபுகர்மலை. (க௩க)

பருமமுமுதுகிடுபடிகையும்வலிபடர்
மருமமுமழிபடநுழைவனவடிகணை
உருமெனவலியெனவுருள்வனதிசைதிசை
கருமலைநிகர்வனதனிமலைகனல்வன. (க௩உ)

இறுவனகொடியவையெறிவனவிடையிடை
துறுவனசுடுகணைதுணிவனமதகரி
அறுவனவவையவைகடவினர்தடிதலை
வெறுமைகள்கெடுவனவிழிகுழிகழுதுகள். (௧௩௩)

மிடலொடுவிடுகணைமழையினுமிகையுள
படலொடுமுருமெறிபருவரைநிலையென
உடலொடுமுருள்கரியுதிரமதுருகெழு
கடலொடுபொருததுகரியொடுகரியென. (௧௩௪)

மேலவர்படுதலின்விடுமுறையிலமிடல்
ஆலமுமசனியுமனையனவிடுகரி
மாலுறுகரியினின்மறுகினமதமழை
போல்வனதமதமவெதிரெதிர்பொருவன. (௧௩௫)

கால்சிலதுணிவனகரமறுவனகதழ்
வால்சிலதுணிவனவயிறுகள்வெளிபட
நால்சிலகுடரனநகழ்வனசிலவரு
தோல்சிலகணைபலசொரிவனமழையன. (௧௩௬)

முட்டினமுட்டறமுரணுறுதிசைநிலை
எட்டினுமெட்டருநிலையனவெவையவன்
விட்டனவிட்டனவிடுகணைபடுதொறும்
பட்டனபட்டனபடர்பணைகுவிவன. (௧௩௭)

அறுபதின்முதலிடைநாலொழியாயிரம்
இறுதியமதகரியிறுதலுமெரியுமிழ்
தறுகணர்தகையறுநிலையினர்சலமுறு
கறுவினரவனெதிர்கடவினர்கடலென. (௧௩௮)

எல்லையின்மதகரிவிரவினவினனிகர்
செல்வனமுடிவிலதெறுதொழின்மறவனை
வில்லியையினியிதுவிடுகணைமழையன
கொல்லுதியெனவெதிர்கடலினர்கொடியவர். (௧௩௯)

வந்தனமதகரிவளைதலின்மழைபொதி
செந்தனியொருசுடரெனமறைதிறலவன்
இந்திரதனுவெனவெழுசிலைகுனிவழி
தந்தியினெடுமழைசிதறினதரையின. (௧௪0)

வேறு.

மய்யற்றனசெவிமுற்பொழிமழைபெற்றனமலையின்
மெய்பெற்றனகடலொப்பனவெயிலுக்கனவிழியின்

மொய்பெற்றனமுதுகிற்றனமுகமுக்கனமுரண்வெங்
கய்யற்றனமதமுற்றியகணிதத்தியல்கதமா. (கசக)

உண்ணின்றலையலைநீருகவிறுதிக்கடையுறுகால்
எண்ணின்றலைநிமிர்கின்றனவிகல்வெங்கணையிரணப்
பண்ணின்படர்தலையிற்படமடிகின்றனபலவா
மண்ணின்றலையுருள்கின்றனமழையொத்தனமதமா. (கசஉ)

பிறைபற்றியவெனுநெற்றியபிழையற்றனபிறழப்
பறையற்றமில்விசைபெற்றனபரியக்கிரியமரர்க்
கிறையற்றறையமுனிவிற்படையெறியப்புடையெழுபொற்
சிறையற்றனவெனவிற்றனசினமுற்றியமதமா. (கசங)

கதிரொப்பனகணைபட்டுளகதமற்றிலகதழ்கார்
அதிரத்தனியதிர்கைக்கிரியளவற்றனவுளவா
எதிர்ப்பட்டனமொழியக்கிரியிவரித்திரையெழுகார்
உதிரத்தொடுமொழுதிக்கடனடுவுற்றவுமுளவால். (கசச)

கண்ணின்றலையயில்வெங்கணைபடைநின்றனகாணு
எண்ணின்றலைநிமிர்வெங்கதமுதிர்கின்றனவினமா
மண்ணின்றலைநெரியும்படிதிரிகின்றனமலைபோல்
உண்ணின்றலைநிருதக்கடலுலறிட்டவுமுளவால். (கசரு)

ஓராயிரமயில்வெங்கணையொருகால்விடுதொடையில்
காராயிரம்விடுதாரையினிமிர்கின்றனகதுவுற்
றீராயிரமதமால்கரிவிழுகின்றனவினிமேல்
ஆராய்வதெனவன்விற்றொழிலமரேசருமறியார். (கசசா)

தேருந்தெறுகரியும்பொருசினமன்னரும்வயவெம்
போரின்றலையுகள்கின்றனபுரவிக்குலமெவையும்
பேருந்திசைபெறுகின்றிலபணையின்பிணைமதவெங்
காரின்றருகுருதிப்பொருகடனின்றனகடவா. (கசஎ)

நூறாயிரமதவெங்கரியொருநாழிகைநுவலக்
கூறாயினபயமுற்றொருகுலைவாயினவுலகம்
தேறாதனமலைநின்றனதெரியாதனசினமா
வேறாயினவவையாவையுமுடனேவரவிட்டான். (கசஅ)

ஒருகோடியமதமால்கரியுளவந்தனவுடன்முன்
பொருகோடியிலுயிருக்கனவொழியப்பொழிமதயா
றருகோடுவவரவுந்தினரசனிப்படிகணைகால்
இருகோடுடைமழைவெஞ்சிலையிளவாளரியெதிரே. (கசகூ)

உலகத்துளமலையெத்தனையவையத்தனையுடனே
கொலநிற்பனபொருகிற்பனபுடைசுற்றினகுழுவா
அலகற்றனசினமுற்றியவனவொப்பனவவையும்
தலையற்றனகரமற்றனதனிவிற்றொழிலதனால். (கருo)

நாலாயினநவயோசனைநனிவன்றிசையெவையும்
மாலாயினமதவெங்கரிதிரிகின்றனவரலும்
தோலாயினவுலகெங்கணுமெனவஞ்சினதுகளே
போலாயினவயவானமுமாறுனதுபுவியே. (கருக)

கடைகண்டனதலைகண்டிலகழுதின்றிரள்பிணமா
இடைகண்டனமலைகொண்டெனவெழுகின்றனதிரையால்
புடைகொண்டெறிகுருதிக்கடல்புணர்கின்றனபொறிவெம்
படைகொண்டிடைபடர்கின்றனமதயாறுகள்பலவால். (கருஉ)

ஒற்றைச்சரமதனோடொருகரிபட்டுகவொளிவாய்
வெற்றிக்கணையுருமொப்பனவெயிலொப்பனவயில்போல்
வற்றக்கடல்சுடுகிற்பனமழையொப்பனபொழியும்
கொற்றக்கரிபதினாயிரமொருபத்தியிற்கொல்வான். (கருங)

மலையஞ்சினமழையஞ்சினவனமஞ்சினபிறவும்
நிலையஞ்சினதிசைவெங்கரிநிமிர்கின்றனகடலின்
அலையஞ்சினபிறிதென்சிலதனியெங்கடகரியும்
கொலையஞ்சலிபுரிகின்றதுகரியின்படிகொளலால். (கருச)

காலேறினசிலநாணொலிகடலேறுகள்படவான்
மேலேறினர்மிசையாளர்கடலைமெய்தொறுமுருவக்
கோலேறினவுருமேறுகள்குடியேறினவெனலாய்
மாலேறினகளியானைகண்மழையேறெனமறிய. (கருரு)

அனுமன் யானைப்படையைப் பொருதழித்தல்.

இவ்வேலையினனுமான்முதலெழுவேலையுமனையான்
வெவ்வேலவர்செலவேவியகொலையானையின்மிகையைச்
செவ்வேயுறநினையாவொருசெயல்செய்குவெனென்பான்
தவ்வேவெனவந்தானிவன்றனிவேலெனத்தகையான். (கருசா)

ஆர்த்தங்கனவிழியாமுதிர்மதயானையையனையான்
தீர்த்தன்கழல்பரவாமுதலரிபோல்வருதிறலான்
வார்த்தங்கியகழலானொருமரனின்றதுநமனூர்
போர்த்தண்டினும்வலியதுகொண்டான்புகழ்கொண்டான். (கருஎ)

கருங்கார்புரைநெடுங்[illegible]களியானைகளவைசென்
றொருங்காயினவுயிர்மா[illegible]பிறிதென்பலவுரையால்

வருங்காலமும்பெரும்பூதமுமழைமேகமுமுடனுப்
பொருங்காலையின்மலைமேல்விழுமுருமேறெனப்புடைத்தான். (கருஅ)

மிதியாற்பலவிசையாற்பலமிடலாற்பலவிடறும்
கதியாற்பலகாலாற்பலவாலாற்பலவாலின்
நுதியாற்பலநுதலாற்பலநொடியாற்பலபயிலும்
குதியாற்பலகுமையாற்பலகொன்றானறனின்றான். (கருகூ)

பறித்தான்சிலபகிர்ந்தான்சிலவகிர்ந்தான்சிலபணைபோல்
இறுத்தான்சிலவிடந்தான்சிலபிளந்தான்சிலவெயிற்றால்
கறித்தான்சிலகவர்ந்தான்சிலகடித்தான்சிலபிடித்தான்
முறித்தான்சிலதிறத்தானையிலெனவெங்கோடுகண்முனிந்தான். (கசாo)

வாரிக்குரைகடலிற்புகவிலகுந்நெடுமரத்தால்
சாரித்தலைத்துருட்டுந்நெடுந்தலத்திற்படுத்தரைக்கும்
பாரிற்பிடித்தடிக்குங்குடர்பறிக்கும்படர்விசும்பின்
ஊரிற்செலவெறியும்மிதித்துழக்கும்முகத்துதைக்கும். (கசாக)

வாலால்வரவளைக்குந்நெடுமலைப்பாம்பெனவளையா
மேலாளொடுபிசையும்முழுமலைமேற்செலவிலக்கும்
ஆலாலமுண்டவனேயெனவகல்வாயினிட்டதுக்கும்
தோலாயிரமிமைப்போதினினரியேறெனத்தொலைக்கும். (கசாஉ)

சய்யத்தினுமுயர்வுற்றனதறுகட்களிமதமா
நொய்திற்கடிதெதிருற்றனநூறாயிரமாறு
மய்யற்கரியுகிரிற்சிலகுழைபுக்குருமறையத்
தொய்யற்படரழுவக்கொழுஞ்சேறாயுகத்துகைப்பான். (கசாங)

வேறாயினமதவெங்கரியொருகோடியின்விறலோன்
நூறாயிரம்படுத்தானிதுநுவல்காலையினிளையோன்
கூறாயினவெனவன்னவைகொலைவாளியிற்கொன்றான்
ஏறாநெடும்பயத்தானெடுநிசிகாவலரிரிந்தார். (கசாச)

அனுமதேவாந்தக யுத்தம்.

இரிந்தார்திசைதிசையெங்கணும்யானைப்பிணமெற்ற
நெரிந்தார்களுநெரியாதுயிர்நிலைத்தார்களுநெருக்கால்
எரிந்தார்நெடுந்தடந்தேரிழிந்தெல்லாருமுன்செல்லத்
திரிந்தானொருதனியேநெடுந்தேவாந்தகன்சினத்தான். (கசாரு)

உதிரக்கடல்பிணமால்வரையொன்றல்லனபலவா
எதிரக்கடுநெடும்போர்க்களத்தொருதான்புகுந்தேற்றான்
கதிரொப்பனசிலவெங்கணையனுமானுடற்கரந்தான்
அதிரக்கடுநெடுந்தேரினன்மழையேறெனவார்த்தான். (கசாசா)

அப்போதினினனுமானுமொர்மரமோச்சினின்றார்த்தான்
இப்போதிவனுயிர்போமெனவுருமேறெனவெறிந்தான்
வெப்போவெனவெயில்கால்வனவயில்வெங்கணைவிசையால்
துப்போவெனத்துணியாம்வகைதேவாந்தகன்றுரந்தான். (கசுஎ)

மாறுங்கொருமலைவாங்கினன்வயவானரக்குலத்தோர்க்
கேறுங்கதுவெறியாதமுன்முறியாயுகவெய்தான்
கோறுங்கியசிலையானுடனெடுமொருதிகொதித்தான்
பாறுங்கெனப்புகப்பாய்ந்தவனெடுவில்லினைப்பறித்தான். (கசுஅ)

பறித்தானெடும்படைவானவர்பலரார்த்திடப்பலவா
முறித்தானவன்வலிகண்டுயர்தேவாந்தகன்முனிந்தான்
மறித்தாங்கொருசுடர்த்தோமரம்வாங்காமிசையோங்காச
செறித்தானவனிடத்தோண்மிசையிமையோர்களுந்திகைத்தார். (கசுகூ)

சுடர்த்தோமரமெறிந்தார்த்தலுங்கனலாமெனச்சுளித்தான்
அடற்றோமரம்பறித்தான்றிரிந்துருமேறெனவடித்தான்
புடைத்தானவன்றடந்தேரொடுநெடுஞ்சாரதிபுரண்டான்
மடற்றோகையர்வலிவென்றவன்வானோர்முகமலர்ந்தார். (கஎ0)

சூலப்படைதொடுவான்றனையிமையாதமுன்றொடர்ந்தான்
ஆலத்தினும்வலியானும்வந்தெதிரேபுகுந்தடர்த்தான்
காலற்கிருகண்ணான்றனைகையாலவன்கதுப்பின்
மூலத்திடைபுடைத்தானுயிர்முடித்தான்சிரமடித்தான். (கஎக)

அனுமஅதிகாய வசனம்.

கண்டானெதிரதிகாயனுங்கனலாமெனக்கனன்றான்
புண்டாமெனப்புனலோடிழியுதிரம்விழிபொழிவான்
உண்டேனிவனுயிரிப்பொழுதொழியேனெனவுரையாத்
திண்டேரினைக்கடிதேவெனச்சென்றானவனின்றான். (கஎஉ)

அன்னான்வருமளவின்றலைநிலைநின்றனவனிகம்
பின்னானதுமுன்னானதுபிறிந்தார்களுஞ்செறிந்தார்
பொன்னாலுயர்நெடுமால்வரைபோல்வானெதிர்புக்கான்
சொன்னானிவையதிகாயனும்வடமேருவைத்துணிப்பான். (கஎங)

தேய்த்தாயொருதனியெம்பியைத்தலத்தோடொருதிறத்தால்
போய்த்தாவினைநெடுமாகடல்பிழைத்தாய்கடல்புகுந்தாய்
வாய்த்தானையுமடித்தாயதுகண்டேனெதிர்வந்தேன்
ஆய்த்தாயதுமுடிவின்றுனக்கணித்தாகவந்தடுத்தாய். (கஎச)

இன்றல்லதுநெடுநாளுனையொருநாளினுமெதிரேன்
ஒன்றல்லதுசெய்தாயெமையிளையோனையுமுனையும்

வென்றல்லதுமீளாதவென்மிடல்வெங்கணைமழையால்
கொன்றல்லதுசெல்லேனிதுகொள்ளென்றனன்கொடியோன். (கஎரு)

பிழையாதிதுபிழையாதெனப்பெருங்கைத்தலம்பிசையா
மழையாமெனச்சிரித்தான்வடமலையாமெனுநிலையான்
முழைவாளரியனையாயினுமெனைநீமிகமுனிவாய்
அழையாய்திரிசிரத்தோனையுநிலத்தோடுமிட்டிரைக்க. (கஎசு)

அனுமதிரிசிரயுத்தம்.

ஆமாமெனத்தலைமூன்றுடையவனார்த்துவந்தடர்த்தான்
கோமான்றனிப்பெருந்தூதனுமெதிரேசெருக்கொடுத்தான்
காமாண்டவர்கல்லாதவர்வல்லீரெனக்கழறா
நாமாண்டனரயனின்றுறநடுவேபுகநடந்தான். (கஎஎ)

தேர்மேற்செலக்குதித்தான்றிரிசிரத்தோனையோர்திறத்தால்
கார்மேற்றுயின்மலைபோலியைக்கரத்தாற்பிடித்தெடுத்தான்
பார்மேற்படுத்தரைத்தானவர்பழிமேற்படப்படுத்தான்
போர்மேற்றிசைநெடுவாயிலினுளதாமெனப்போனான். (கஎஅ)

வேறு.

* இமையிடையாகச்சென்றானிகலதிகாயனின்றான்
அமைவதொன்றாற்றறேற்றானருவியோடழல்கால்கண்ணான்
உமையொருபாகனேயுமிவன்முனிந்துருத்தபோது
கமையிலனாற்றலென்னுக்கதத்தொடுங்குலைக்குங்கையான். (கஎகூ)

பூணிப்பொன்றுடையனாகிப்புகுந்தநான்புறத்துநின்று
பாணித்தல்வீரமன்றாற்பருவலிபடைத்தோர்க்கெல்லாம்
ஆணிப்பொன்னானென்றன்னைப்பின்னுங்கண்டறிவெனென்னாத்
தூணிப்பொற்புறத்தான்றிண்டேரிளவன்மேற்றூண்டச்சொன்னான். ()

தேரொலிகடலைச்சீறச்சிலையொலிமழையைச்சீறப்
பேரொலிமு[illegible]சிரேஞைதைதிசைகளிற்புறத்துப்போகத்
தாரொலிகழற்கான்மைந்தன்றானையுந்தானுஞ்சென்றான்
வீரனுமெதிரேநின்றான்விண்ணவர்விசயஞ்சொல்ல. (கஅக)

வல்லையினணுகவந்துவணங்கியவாலிமைந்தன்
சில்லியந்தேரின்மேலானவனமர்செவ்விதன்றால்
வில்லியர்திலதமன்னநின்றிருமேனிதாங்கப்
புல்லியவெனினுமென்றோளேறுதிபுனிதவென்றான். (கஅஉ)

---

* இமையிடையாக-கண்ணிமைப்பொழுதிற்குள்ளாக.

அங்கதன்றோளி லிலக்குமணனேறி நின்றுபோருதல்.

ஆமெனவமலன்றம்பியங்கதனலங்கற்றோண்மேல்
தாமரைச்சரணம்வைத்தான்கலுழனிற்றூங்கிநின்ற
கோமகனுற்றனோக்கிக்குளிர்கின்றமனத்தராகிப்
பூமழைபொழிந்துவாழ்த்திப்புகழ்ந்தனர்புலவரெல்லாம். (௧௮௩)

ஆயிரம்புரவிபூண்டவதிர்குரலசனித்திண்டேர்
போயினதிசைகளெங்குங்கறங்கெனச்சாரிபோமால்
மீயெழினுயருந்தாழிற்றாழும்விண்செல்லிற்செல்லும்
தீயெழவுவரிநீரைக்கலக்கினான்சிறுவனம்மா. (௧௮௪)

அத்தொழினோக்கியாங்குவானரத்தலைவரார்த்தார்
இத்தொழில்கலுழற்கேயுமரிதெனவிமையோரெல்லாம்
கைத்தலங்குலைத்தாராகக்களிற்றினும்புரவிமேலும்
தைத்தனவிளையவீரன்சரமெனுந்தாரைமாரி. (௧௮௫)

முழங்கினமுரசம்வேழமுழங்கினமூரித்திண்டேர்
முழங்கினமுகரப்பாயமாமுழங்கினமுழுவெண்சங்கம்
முழங்கினதனுவினோதைமுழங்கினகழலுந்தாரும்
முழங்கினதெழிப்புமார்ப்புமுழங்கினமுகிலின்மும்மை. (௧௮௬)

கரிபடக்காலாள்வெள்ளங்களப்படக்கலினக்கால்போல்
பரிபடக்கண்டகூற்றும்பயம்படப்பைம்பொற்றிண்டேர்
எரிபடப்பொருதபூமியிடம்படவெதிர்ந்தவெல்லாம்
முரிபடப்பட்டவீரன்முரட்கணைமூரிமாரி. (௧௮௭)

அதிகாயனை இலக்குமணன் வினாதல்.

மன்றவன்றம்பிமற்றவ்விராவணன்மகனைநோக்கி
என்னுனக்கிச்சைநின்றவெறிபடைசசேனையெல்லாம்
சின்னபின்னங்கள்பட்டாற்பொருதியோதிரிந்துநீயே
நன்னெடுஞ்செருச்செய்வாயோசொல்லுதிநயந்ததென்றான். (௧௮௮)

யாவரும்பொருவரல்லரெதிர்ந்துளயானுநீயும்
தேவரும்பிறருங்காணச்செருவதுசெய்வவெல்லாம்
காவல்வந்துன்னைக்காப்பார்காப்பவுமமையும்வேறே
கூவியதனுக்கன்றோவென்றனன்கூற்றின்வெய்யோன். (௧௮௯)

உமையனேகாக்கமற்றங்குமையொருகூறன்காக்க
இமையவரெல்லாங்காக்கவுலகமோரேழுங்காக்க
சமையுமுன்வாழ்க்கையின்றோடென்றுதன்சங்கமூதி
அமையுருக்கொண்டகூற்றைநாணெறிந்துருமினார்த்தான். (௧௯௦)

இலக்குமணன் அதிகாயனுக்குப் பதிலுரைத்துப்போருதல்.

அன்னதுகேட்டமைந்தனரும்பியன்முறுவறோன்றச்
சொன்னவர்வாரார்யானேதோற்கினுந்தோற்கத்தக்கேன்
என்னைநீபொருதுவெல்லினவரையும்வென்றியென்றா
மின்னினுமிளிர்வதாங்கோர்வெஞ்சரங்கோத்துவிட்டான். (௧௧௧)

அதிகாயவிலக்குமணயுத்தம்.

விட்டவெம்பகழிதன்னைவெற்பினைவெதுப்புந்தோளான்
சுட்டதோர்கணையினாலேவிசும்பிடைத்துணித்துநீக்கி
எட்டினோடெட்டுவாளியிலக்குவவிலக்காவென்னாத்
திட்டியின்விடத்துநாகமனையனசிந்தியார்த்தான். (௧௧௨)

ஆர்த்தவனெய்தவாளியனைத்தையுமறுத்துமாற்றி
வேர்த்தொலிவயிரவெங்கோன்மேருவைப்பிளக்கற்பால
தூர்த்தனனிராமன்றம்பியவையெலாந்துணித்துச்சிந்திக்
கூர்த்தனபகழிகோத்தான்குபேரனையாடல்கொண்டான். (௧௧௩)

எய்தனவெய்தவெல்லாமெரிமுகப்பகழியாலே
கொய்தனனகற்றியார்க்குமரக்கனைக்குரிசில்கோபம்
செய்தனன்றுரந்தான்றெய்வச்செயலென்னகணையைவெங்கோல்
நொய்தின்கவசங்கீறிநுழைவனபிழைப்பிலாத. (௧௧௪)

நூறுகோல்கவசங்கீறிநுழைதலுங்குழைவுதோன்றத்
தேறலாந்துணையுந்தெய்வச்சிலைநெடுந்தேரினூன்றி
ஆறினனதுகாலத்தங்கவனுடையனீகமெல்லாம்
கூறுகூறாக்கியம்பாற்கோடியின்மேலுங்கொன்றான். (௧௧௫)

புடைநின்றார்புரண்டவாறும்போகின்றபுங்கவாளி
கடைநின்றுகணிக்கவாங்கோர்கணக்கிலாவாறுங்கண்டான்
இடைநின்றமயக்கந்தீர்ந்தானேந்தியசிலையன்காந்தித்
தொடைநின்றபகழிமாரிமாரியின்மும்மைதூர்த்தான். (௧௧௬)

வானெலாம்பகழிவானின்வரம்பெலாம்பகழிமண்ணோ
தானெலாம்பகழிகுன்றின்றலையெலாம்பகழிசார்ந்தோர்
ஊனெலாம்பகழிநின்றோருடலெலாம்பகழிவேலை
மீனெலாம்பகழியாகவித்தினன்வெகுளிமிக்கோன். (௧௧௭)

மறைந்தனதிசைகளெல்லாம்வானவர்மனமேபோலக்
குறைந்தனசுடரின்மும்மைக்கொழுங்கதிர்குவிந்தொன்றொன்றை
அறைந்தனபகழிவையமதிர்ந்ததுவிண்ணுமஃதே
நிறைந்தனபொறியின்குப்பைநிமிர்ந்தனநெருப்பின்கற்றை. (௧௧௮)

முற்றியதின்றேயன்றோவானரமுழங்குதானை
மற்றிவன்றன்னைவெல்லவல்லனோவள்ளறம்பி

கற்றதுகாலனோடோகொலையிவனொருவன்கற்ற
விற்றொழிலென்னேயென்னாத்தேவரும்வெருவலுற்றார். (௧௧௧)

அங்கதனெற்றிமேலுந்தோளினுமாகத்துள்ளும்
புங்கமேதோன்றாவண்ணம்பொருசரம்பலவும்போக்கி
வெங்கணையிரண்டுமொன்றும்வீரன்மேலேவிமேகச்
சங்கமுமூதிவிண்ணோர்தலைபொதிரெறியவார்த்தான். (௨00)

வாலிசேய்மேனிமேலுமழைபொருகுருதிவாரி
காலுயர்வரையிற்செங்கேழருவிபோலொழுகக்கண்டான்
கோலொருபத்துநூற்றாற்குதிரையின்றலைகள்கொய்து
* மேலவன்சிரத்தைசசிநதிவில்லையுந்துணித்தான்வீரன். (௨0௧)

மாற்றொருதடந்தேரேறிமாறொருசிலையும்வாங்கி
ஏற்றவல்லரக்கன்றன்மேலெரிமுதற்கடவுளென்பான்
ஆற்றல்சால்படையைவிட்டானாரியனரக்கனம்மா
வேற்றுளதாங்கவென்றுவெய்யவன்படையைவிட்டான். (௨0௨)

பொருபடையிரண்டுந்தம்மிற்பொருதனபொருதலோடும்
எரிகணையுருமின்வெய்யவிலக்குவன்றுரந்தமார்பை
உருவினவுலப்பிலாதவுலைகிலனாற்றலோயான்
சொரிகணைமழையின்மும்மைசொரிந்தனன்றெழிக்குஞ்சொல்லான். ()

பின்னின்றார்முன்னின்றாரைக்காணலாம்பெற்றித்தாக
மின்னின்றவயிரவாளிதிறந்தனமேனிமுற்றும்
அந்நின்றநிலையினாற்றல்குறைந்திலனாவிநீங்கான்
பொன்னின்றவடிம்பின்வாளியுருமெனப்பொழியும்வில்லான். (௨0௪)

வாயுதேவனதிகாயன்மீது பிரமாத்திரம் விடவுரைத்தல்.

கோன்முகந்தள்ளியள்ளிக்கொடுஞ்சிலைநாணிற்கோத்துக்
கான்முகங்குழையவாங்கிச்சொரிகின்றகாளைவீரன்
பான்முகந்தோன்றநின்றுகாற்றினுக்கரசன்பண்டை
நான்முகன்படையாலன்றிச்சாகிலனம்பவென்றான். (௨0௫)

அதிகாயன்தலையை இலக்குமணன் பிரமாத்திரத்தாலறுத்தல்.

நன்றெனவுவந்துவீரனான்முகன்படையைவாங்கி
மின்றனிதிரண்டதென்னச்சரத்தொடுங்கூட்டிவிட்டான்
குன்றினுமுயர்ந்ததீயோன்றலையினைக்கொண்டவாளி
சென்றதுவிசும்பினூடுதேவருந்தெரியக்கண்டார். (௨0௬)

* மேலவன் - சாரதி

பூமழைபொழிந்துவானோர்போயதெம்பொருமலென்றார்
தாமழைத்தலறியெங்குமிரிந்தனரரக்கர்தள்ளித்
தீமையுங்களிப்புநீங்கித்திகைத்தனர்குரங்குச்சேனைக்
கோமகன்றோளினின்றுங்குதித்தனன்கொற்றவில்லான். (௨௦௭)

வெந்திறற்சித்திகண்டவீடணன்வியந்தநெஞ்சன்
அந்தரசித்தரார்ப்புமமலையுங்கேட்டானையன்
மந்திரசித்தியன்னசிலைத்தொழில்வலியிதாயின்
இந்திரசித்தினாற்குமிறுதியேயியைவதென்றான். (௨௦௮)

அங்கதநராந்தகயுத்தம்.

ஏந்தெழிலாகத்தெம்முனிறந்தனனென்றுநீநின்
சாந்தகன்மார்புதிண்டோணோக்கிநின்றனுவைநோக்கிப்
போந்தகைக்குரியையன்றாற்போகலைபோகலென்னா
நாந்தகமின்னும்வீசிநராந்தகனடந்துவந்தான். (௨௦௯)

தேரிடைநின்றுகண்கடீயுகச்சீற்றம்பொங்கப்
பாரிடைகிழியப்பாய்ந்துபகலிடைப்பரிதியென்பான்
ஊரிடைநின்றானென்னக்கேடகமொருகைதோன்ற
நீரிடைமுகிலின்மின்போல்வாளிடைமிளிரவந்தான். (௨௧௦)

வீசினமரமுங்கல்லும்விலங்கலும்வீற்றுவீற்றா
ஆசைகடோறும்வீசவாளினாலறுத்துமாற்றித்
தூசியுமிரண்டுகையுநெற்றியுஞ்சுருண்டுநீர்மேற்
பாசியினொதுங்கவந்தானங்கதனதனைப்பார்த்தான். (௨௧௧)

மரமொன்றுவிரைவின்வாங்கிவாய்மடித்துருத்துவள்ளல்
சரமொன்றுகடிதிற்சென்றுதாக்கினான்றாக்கினான்றன்
கரமொன்றிற்றிரிவதாருங்காண்கிலாததனைத்தன்கை
அரமொன்றுவயிரவாளாலாயிரங்கண்டங்கண்டான். (௨௧௨)

அவ்விடைவெறுங்கைநின்றவங்கதனாண்மையன்றால்
இவ்விடைபெயர்தலென்னாவிமையிடையொதுங்காமுன்னம்
வெவ்விடமென்னப்பொங்கியவனிடையெறிந்தவீச்சுத்
தவ்விடவுருமிற்புக்குவாளொடுந்தழுவிக்கொண்டான். (௨௧௩)

அத்தொழில்கண்டவானோராவலங்கொட்டியார்த்தார்
இத்தொழிலிவனுக்கல்லாலீசற்குமியலாதென்பார்
குத்தொழித்தவன்கைவாடன்கூறுகிர்த்தடக்கைக்கொண்டான்
ஒத்திருகூறாய்வீழவீசினானுலையவார்த்தான். (௨௧௪)

மத்தநீலயுத்தம்.

கூர்மத்தின்வெரிநின்வைத்துவானவரமுதங்கொண்ட
நீர்மத்தினிமிர்ந்ததோளானிறைமத்தமதுவைத்தேக்கி

* ஊர்மத்தமுண்டாலன்னமயக்கத்தானுருமுத்தின்பான்
போர்மத்தனென்பான்வந்தான்புகர்மத்தப்பூட்கைமேலான். (உ௧௫)

காற்றன்றேற்கடுமையென்னுங்கடலன்றேன்முழக்கமென்னும்
கூற்றன்றேற்கொலைமற்றென்னுமுருமன்றேற்கொடுமையென்னும்
சீற்றந்தானன்றேற்சீற்றம்வேறுன்றுதெரிப்பதெங்கே
மாற்றன்றேமலைமற்றென்னேமத்தன்றன்மத்தயானே. (உ௧௬)

வேகமாக்கவிகள்வீசும்வெற்பினம்விழுவமேன்மேல்
பாகர்காற்சிலையிற்றூண்டுமுண்டையாமெனவும்பற்று
மாகமாமரங்களெல்லாங்கடாத்திடைவண்டுசேர்வ
தாகினுமாமதன்றேற்கரும்பென்றேயறையலாமால். (உ௧௭)

காலிடைப்பட்டுமானக்கையிடைப்பட்டுங்கால
வாலிடைப்பட்டும்வெய்யமருப்பிடைப்பட்டுமாண்டு
நாலிடைப்பட்டசேனைநாயகன்றம்பியெய்த
கோலிடைப்பட்டவெல்லாம்பட்டனகுரக்குச்சேனை. (உ௧௮)

தன்படையுற்றதன்மைநோக்கினன்றரிக்கிலாமை
அன்படையுள்ளத்தண்ணலனலின்றன்புதல்வனுழி
வன்படையனையதாங்கோர்மராமரஞ்சுழற்றிவந்தான்
பின்படைசெல்லநள்ளார்பெரும்படையிரிந்துபோர. (உ௧௯)

சேறலுங்களிற்றின்மேலான்றிண்டிறலரக்கன்செவ்வே
ஆறிரண்டம்பினலந்நெடுமரமறுத்துவீழ்த்தான்
வேறொருகுன்றநீலன்வீசினனதனைவிண்ணின்
ஊறுவெம்பகழிதன்னனூறுக்கினன்களிறுநூக்கி. (உ௨0)

பின்னெடுங்குன்றந்தேடிப்பெயர்குவான்பெயராவண்ணம்
பொன்னெடுங்குன்றஞ்சூழ்ந்தபொறிவரியரவம்போல
அந்நெடுங்கோபயானையமரரும்வெயர்ப்ப † வங்கி
தன்னெடுமகனைப்பற்றிப்பிடித்தது தடைக்கைநீட்டி. (உ௨௧)

ஒடுங்கினனுரமுமாற்றலூற்றமுமுயிருமென்னக்
கொடும்படைவயிரக்கோட்டாற்குத்துவான்குறிக்குங்காலை
நெடுங்கையுந்தலையும்பியாநொய்தினிமிர்ந்துபோனன்
நடுங்கினரரக்கர்விண்ணோர்நன்றுநன்றென்னநக்கார். (உ௨௨)

தறைத்தலையுற்றனீலனென்பதோர்காலந்தன்னில்
நிறத்தலைவழங்குஞ்சோரிநீர்த்ததுநெடுங்குன்றென்னக்
குறத்தலைவேழம்வீழவிசும்பின்மேற்கொண்டுநின்றன்
பிறத்தலைவயிரவாளிமழையெனப்பெய்யுங்கையான். (உ௨௩)

---

* ஊர்மத்தம்-ஊரிலுள்ள பூமத்தங்காய் இஃதிக்காலத்துஊமத்தங்காயென வழங்குகின்றது. † அங்கிதன்னெடுமகன் - அக்கினிகுமாரனனை நீலன்.

வாங்கியசிரத்தின்மற்றைவயிரவான்கோட்டைவவ்வி
வீங்கியவிசையினீலனரக்கன்மேற்செல்லவிட்டான்
ஆங்கவனவற்றையாண்டோரம்பினாலறுத்தோரம்பால்
ஓங்கல்போற்புயத்தினான்றனுரத்திடையொளிக்கவெய்தான். (உஉச)

எய்ததுகாலமாகவீழ்ந்திலதியானையென்னக்
கய்யுடைமலையொன்றேறிக்காற்றெனக்கடாவிவந்தான்
வெய்யவனவனைத்தானுமேற்கொளாவில்லினோடும்
மொய்பெருங்களிற்றினிட்டான்மும்மதக்களிற்றின்முன்னர். (உஉரு)

இட்டனனவனிநின்றுமெழுவதன்முன்னம்யானை
கட்டமைவயிரக்கோட்டாற்களப்படவீழ்த்திக்காலால்
வெட்டிவன்றடக்கைதன்னாலெடுத்தெங்கும்விரைவின்வீசப்
பட்டிலன்றானேதன்போர்க்கரியினைப்படுத்துவீழ்த்தான். (உஉசு)

தன்கரிதானேகொன்றுதடக்கையாற்படுத்துவீழ்த்த
மின்கரிதென்னமின்னுமெயிற்றினான்வெகுளிநோக்கிப்
பொன்கரிதென்னுங்கண்கள்பொறியுகநீலன்புக்கான்
வன்கரமுறுக்கிமார்பிற்குத்தினன்மத்தன்மாண்டான். (உஉஎ)

இடப வயமத்த யுத்தம்.

உன்மத்தன்வயிரமார்பினுருமொத்தகரஞ்சென்றுற்ற
வன்மத்தைக்கண்டுமாண்டமதமத்தமலையைப்பார்த்தும்
சன்மத்தின்றன்மையானுந்தருமத்தைத்தள்ளிவாழ்ந்த
கன்மத்தின்கடைக்கூட்டானும்வயமத்தன்கடிதின்வந்தான். (உஉஅ)

பொய்யினும்பெரியமெய்யான்பொருப்பினைப்பழித்ததோளான்
வெய்யனென்றுரைக்கச்சாலத்திண்ணியான்வில்லின்செல்வன்
பெய்கழலரக்கன்சேனையார்த்தெழப்பிறங்குபல்பேய்
அய்யிருநூறுபூண்டவாழியந்தேரின்மேலான். (உஉகூ)

ஆர்க்கின்றானுலகையெல்லாமதிர்க்கின்றானுருமுமஞ்சப்
பார்க்கின்றான்பொன்றினாரைப்பழிக்கின்றான்பகழிமாரி
தூர்க்கின்றான்குரங்குச்சேனைதுரக்கின்றான்றுணிவைநோக்கி
ஏற்கின்றாரில்லையென்னாவிடபன்வந்தவனோடேற்றான். (உ௩0)

சென்றவன்றன்னைநோக்கிச்சிரித்துநீசிறியையுன்னை
வென்றவமும்மையெல்லாம்விளிப்பெனோவிரிஞ்சன்றானே
என்றவனெதிர்ந்தபோதுமிராவணன்மகனையின்று
கொன்றவன்றன்னைக்கொன்றேகுரங்கின்மேற்கொதிப்பெனென்றான். ()

வாய்கொண்டுசொற்றற்கேற்றவலிகொண்டுபலியுண்வாழ்க்கைப்
பேய்கொண்டுவெல்லவந்தபித்தனேமிடுக்கைப்பேணி

நோய்கொண்டுமருந்துசெய்யாவொருவனின்னோன்மையெல்லாம்
ஓய்கின்றாய்காண்டியென்றாவுரைத்தனனிடபனொல்கான். (உ௩௨)

ஓடுதியென்னவோடாதுரைத்தியேலுன்னோடின்னே
ஆடுவென்விளையாட்டென்றாவயிலெயிற்றரக்கனம்பொற்
கோடுறுவயிரப்போர்விற்காலொடுபுருவங்கோட்டி
ஈடுறவிடபன்மார்பத்தீரைந்துபகழியெய்தான். (உ௩௩)

அசும்புடைக்குருதிபாயுமாகத்தான்வேகத்தாலத்
தசும்புடைக்கொடுந்தேர்தன்னைத்தடக்கையாலெடுத்துவீசப்
பசுங்கழற்கண்ணபேயும்பறந்தனபரவைநோக்கி
விசும்பிடைச்செல்லுங்காரின்றாரைபோனான்றமெய்யான். (உ௩௪)

தேரொடுங்கடலின்வீழ்ந்துசிலையுந்தன்றலையுமெல்லாம்
நீரிடையழுந்திப்பின்னுநெருப்பொடுநிமிரவந்தான்
பாரிடைக்குதியாமுன்னமிடபனும்பதகநீபோய்
ஆரிடைப்புகுதியென்றாவந்தரத்தார்த்துவந்தான். (உ௩௫)

அல்லினைத்தழுவிநின்றபகலெனவரக்கன்றன்னைக்
கல்லினும்வலியதோளாற்கட்டியிட்டிறுக்குங்காலைப்
பல்லிடைப்பிலவாயூடும்பசும்பெருங்குருதிபாய
வில்லுடைமேகமென்னவிழுந்தனனுயிர்விண்செல்ல. (உ௩௬)

சுக்கிரீவகும்பயுத்தம்.

குரங்கினுக்கரசும்வென்றிக்கும்பனுங்குறித்தவெம்போர்
அரங்கினுக்கழகுசெய்யவாயிரஞ்சாரிபோந்தார்
மரங்கொடுந்தண்டுகொண்டுமலையெனமலையாநின்றார்
சிரங்களுங்கரமுமெல்லாங்குலைந்தனர்கண்டதேவர்.

வேறு.

இடைத்தாருடலிற்கிழிசோரியைவாரித்
துடைத்தார்விழியிற்றழன்மாரிசொரிந்தார்
உடைத்தாரொடுபைங்கழலார்ப்பவுலாவிப்
புடைத்தார்பொருகின்றனர்கோளரிபோல்வார். (உ௩௮)

தண்டங்கையின்வீசியதாகவரக்கன்
அண்டங்கள்வெடிப்பனவென்னவடித்தான்
கண்டங்கதுமாமரமேகொடுகாத்தான்
விண்டங்கதுதீர்ந்ததுமன்னன்வெகுண்டான். (உ௩௯)

பொன்றப்பொருவேனினியென்றுபொருதான்
ஒன்றப்புகுகின்றதொர்காலமுணர்ந்தான்
நின்றப்பெரியோனினையாதமுனீலன்
குன்றொப்பதொர்தண்டுகொணர்ந்துகொடுத்தான். (உ௪௰)

அத்தண்டுகொடுத்ததுகைக்கொடமைந்தான்
ஒத்தண்டமுமண்ணுநடுங்கவுருத்தான்
பித்தன்றடமார்பொடுதோள்கள்பிளந்தான்
சித்தங்கணடுங்கியரக்கர்திகைத்தார். (உசக)

அடியுண்டவரக்கனருங்கனன்மின்று
இடியுண்டதொர்மால்வரையென்னவிழுந்தான்
முடியும்மிவனென்பதொர்முன்னம்வெகுண்டான்
ஒடியும்முனதோளெனமோதியுடன்றான். (உசஉ)

தோளிற்புடையுண்டயர்சூரியன்மைந்தன்
தாளிற்றடுமாறறவிர்ந்துதகைந்தான்
வாளிக்கடுவெல்விசையாலெதிர்மண்டி
ஆளித்தொழிலன்னவன்மார்பினறைந்தான். (உசங)

அடியாயிரகோடியின்மேலுமடித்தார்
முடிவானவன்யாரெனவானவர்மொய்த்தார்
இடியோடிடிகிட்டியதென்னவிரண்டும்
பொடியாயினதண்டுபொருந்தினர்புக்கார். (உசச)

மத்தச்சினமால்களிறென்னமலைந்தார்
பத்துத்திசையுஞ்செவிடெய்தினபல்கால்
தத்தித்தழுவித்திரடோள்கொடுதள்ளிக்
குத்தித்தனிகுத்தெனமார்புகொடுத்தான். (உசரு)

நிலையிற்சுடரோன்மகன்வன்கைநெருங்க
வலையிற்படுகம்மியர்கூடமலைப்ப
உலையிற்படிரும்பெனவன்மையொடுங்க
மலையிற்பிளவுற்றதுதீயவன்மார்பம். (உசசு)

செய்வாயிகலென்றவனின்றுசிரித்தான்
ஐவாயரவம்முழைபுக்கெனவையன்
கைவாய்வழிசென்றவனுருயிர்கக்கப்
பைவாய்நெடுநாவைமுனிந்துபறித்தான். (உசஎ)

அங்கத நிதுப்பயுத்தம்.

அக்காலைக்கும்பனனற்சொரிகண்ணன்
புக்கானினியெங்கடபோகுவதென்று
மிக்கானெதிரங்கதனூற்றுவெகுண்டான்
எக்காலமுமில்லதோர்பூசலிழைத்தார். (உசஅ)

சூலப்படையானிடைவந்துதொடர்ந்தான்
ஆலத்தினும்வெய்யவனங்கதனங்கோர்

தாலப்படைகைக்கொடுசென்றுதடுத்தான்
நீலக்கிரிமேனியிர்பொற்கிரிநேர்வான். (உசகூ)

எறிவானிகல்சூலமெடுத்தலுமின்னே
முனிவானிகலங்கதனென்பதன்முன்னே
அறிவானடன்மாருதியற்றமுணர்ந்தான்
பொறிவானுகுதீயெனவந்துபுகுந்தான். (உருo)

நிதம்பனை அனுமன் கொல்லுதல்.

தடையேதுமில்சூலமுனிந்துசலத்தால்
விடையேறிகரங்கதன்மேல்விடுவானை
இடையேதடைகொண்டுதனேடவிழுங்கைப்
புடையேகொடுகொன்றனன்மாருதிபோனான். (உருக)

நின்றார்கடப்பவரின்மைநெளிந்தார்
பின்றாதவர்பின்றியிரிந்துபிரிந்தார்
வன்றாண்மரம்வீசியவானரவீரர்
கொன்றார்மிகுதானையரக்கர்குறைந்தார். (உருஉ)

ஓடிப்புகுவானெரருக்கினுலந்தார்
கோடிக்கதிகத்தினுமேலுளர்குத்தால்
பீடிப்புறுபுண்ணுடலோடுபெயர்ந்தார்
பாடித்தலையுற்றவரெண்ணிலர்பட்டார். (உருங)

தண்ணீர்தருகென்றனர்தாவுறவோடி
உண்ணீரறவாவியுலர்ந்தனருக்கார்
கண்ணீரொடுமாவிகலுழ்ந்தனர்காலால்
மண்ணீரமுறக்கடிதூர்புகவந்தார். (உருச)

விண்மேனெடிதோடினராருயிர்விட்டார்
மண்மேனெடுமால்வரையென்னமறிந்தார்
எண்மேலுநிமிர்ந்துளநீருடயங்கப்
புண்மேலுடைமேனியினார்திசைபோனார். (உருரு)

அறியும்மவர்தங்களையயவிவம்பைப்
பறியும்மெனவந்துபறித்தலுமாவி
பிறியும்மவரெண்ணிலர்தம்மனைபெற்றார்
குறியும்பறிகின்றிலர்சிந்தைகுறைந்தார். (உருசா)

பரிபட்டுவிழச்சிலர்நின்றுபதைத்தார்
கரிபட்டுருளச்சிலர்கால்கொடுசென்றார்
நெரிபட்டழிதேரிடையேபலர்நின்றார்
எரிபட்டமனைக்குளிருந்தவரென்ன. (உருஎ)

மண்ணின்றலைவானரமேனியர்வந்தார்
புண்ணின்றவுடற்பொறையோர்சிலர்புக்கார்
கண்ணின்றகுரங்குகலந்தனவென்னா
உண்ணின்றவரக்கர்மலைக்கவுலந்தார். (௨௫௮)

வேறு.

இருகணுந்திறந்துநோக்கியயலிருந்திரங்குகின்ற
உருகுதங்காதலோரையுண்ணுநீருதவுமென்றார்
வருவதன்முன்னமாண்டார்சிலர்சிலர்வந்ததண்ணீர்
பருகுவாரிடையேபட்டார்சிலர்சிலர்பருகிப்பட்டார். (௨௫௯)

மக்களைச்சுமந்துசெல்லுந்தாதையர்வழியினாவி
உக்கனரென்னவீசித்தம்மைக்கொண்டோடிப்போனார்
கக்கினர்குருதிவாயாற்கண்மணிசிதறிக்காலால்
திக்கொடுநெறியுங்காணார்திரிந்துசென்றுயிருந்தீர்ந்தார். (௨௬0)

இன்னதோர்தன்மையெய்தியிராக்கதரிரிந்துசிந்திப்
பொன்னகர்புக்காரிப்பாற்பூசல்கண்டோடிப்போன
துன்னருந்தூதர்சென்றார்தொடுகழலரக்கர்க்கெல்லாம்
மன்னவனடியில்வீழ்ந்தார்மழையினீர்வழங்குகண்ணார். (௨௬௧)

நோக்கியவிலங்கைவேந்தனுற்றதுநுவன்மினென்றான்
போக்கியசேனைதம்மிற்புகுந்துளவிறையும்போதா
ஆக்கியபோரினையதிகாயன்முதல்வராய
கோக்குலக்குமரரெல்லாங்கொடுத்தனராவியென்றார். (௨௬௨)

அதிகாயாதியரிறந்தாரெனக் கேட்ட விராவணனது தன்மை.

ஏங்கியவிம்மன்மானமிரங்கியவிரக்கம்வீரம்
ஓங்கியவெகுளிதுன்பமென்றிவையொன்றற்கொன்று
தாங்கியதரங்கமாகக்கரையினைத்தள்ளித்தள்ளி
வாங்கியகடல்போனின்றானருவிநீர்வழங்குகண்ணான். (௨௬௩)

திசையினைநோக்குநின்றதேவரைநோக்கும்வந்த
வசையினைநோக்குங்கொற்றவாளினைநோக்கும்பற்றிப்
பிசையுறுங்கையைமீசைசுறுகொளவுயிர்க்கும்பேதை
நகையிடைக்கண்டானென்னநகுமழுமுனியுநாணும். (௨௬௪)

மண்ணினையெடுக்கவெண்ணும்வானினையிடிக்கவெண்ணும்
எண்ணியவுயிர்களெல்லாமொருகணத்தெற்றவெண்ணும்
பெண்ணெனும்பெயரவெல்லாம்பிளப்பெனென்றெண்ணுமெண்ணிப்
புண்ணிடையெரிபுக்கென்னமானத்தாற்புழுங்கிநையும். (௨௬௫)

தானிமாலை புலம்பல்.

ஒருவருமுரையார்வாயினுயிர்த்திலருள்ளமோய்வார்
வெருவருந்தகையராகிவிம்மினரிருந்தவேலை
தருவனமனையதோளான்றன்னெதிர்தானமாலை
இரியலிட்டலறியோயாப்பூசலிட்டேங்கிவந்தாள். (உசகூ)

மலைக்குவட்டிடிவீழ்ந்தென்னவளைகளோடாரமேங்க
முலைக்குவட்டெற்றுங்கையாண்முறைதிறந்தன்னவாயாள்
தலைக்குவட்டணைந்தசெக்கர்சரிந்தனகுழல்கடத்தி
உலைக்குவட்டுருகுசெம்பொத்துதிரநீர்வழங்குங்கண்ணாள். (உசஎ)

வீழ்ந்தனளரக்கன்றாண்மேன்மென்மைத்தோணிலத்தைமேவப்
போழ்ந்தனள்பெரும்பாம்பென்னப்புரண்டனள்பொருமிப்பொங்கிச்
சூழ்ந்தனகொடியாயென்றுத்துடித்தருந்துயரவெள்ளத்
தாழ்ந்தனள்புலம்பலுற்றாளழக்கண்டமெறிந்திலாதாள். (உசஅ)

வேறு.

மாட்டாயோவிக்காலம்வல்லோர்வலிதீர்க்க
மீட்டாயோவீரமெலிந்தாயோதோளாற்றல்
கேட்டாயுணர்ந்திலையோவென்னுரையுங்கேளாயோ
காட்டாயோவென்னுடையகண்மணியைக்காட்டாயோ. (உசகூ)

இந்திரற்குந்தோலாதநன்மகனையின்றன்னோன்
றந்தரத்துவாழ்வாருமேத்துமளியத்தேன்
மந்தரத்தோளென்மகனைமாட்டாமனிதன்றன்
உந்துசிலைப்பகழிக்குண்ணக்கொடுத்தேனே. (உஎ௦)

அக்கனுலந்தானதிகாயன்றானுலந்தான்
மிக்கதிறத்துள்ளார்களெல்லாரும்வீடினார்
மக்களினினின்றுள்ளானமாண்டோதரிமகனே
திக்குவிசயமினியொருகாற்செய்யாயோ. (உஎக)

ஏதையாசிந்தித்திருக்கின்றாயெண்ணிறந்த
கோதையார்வேலரக்கர்பட்டாரைக்கூவாயோ
பேதையாய்க்காமம்பிடிப்பாய்பிழைப்பாயோ
சீதையாலின்னும்வருவசிலவேயோ. ‘உஎஉ)

உம்பியுணர்வுடையான்சொன்னவுரைகேளாய்
நம்பிகுலக்கிழவன்னூறுநலமோராய்
கும்பகருணனையுங்கொல்வித்தென்கோமகனை
அம்புக்கிரையாக்கியாண்டாயரசைய. (உஎஉ)

என்றுபலபலவும்பன்னியெடுத்தழைத்துக்
கன்றுபடப்பிழைத்ததாய்போற்கவல்வாளை
நின்றவுருப்பசியுமேனைகையுநேர்ந்தெடுத்துக்
குன்றுபுரையுநெடுங்கோயில்கொண்டணைந்தார். (௨௭௪)

தானநகரரக்கர்தலைமயங்கிப்
போனமகவுடையார்போலப்புலம்பினார்
ஏனைமகளிர்நிலையென்னாரும்போயிரங்கி
வானமகளிருந்தம்வாய்திறந்துமாழ்கினார். (௨௭௫)

தாரகலத்தண்ணறனிக்கோயிறாசரதி
பேரவுலகுற்றதுற்றதாற்பேரிலங்கை
ஊரகலமெல்லாமரந்தையுவாவுற்ற
ஆர்கலியேயொத்ததழுகுரலோசை. (௨௭௬)

௧௭ - வது, அதிகாயன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ௯ திருவிருத்தம்-௧௯௫௧.

௧௮-வது, நாகபாசப்படலம்.

குழுமிக்கொலைவாட்கணரக்கியர்கூந்தறாழத்
தழுவித்தலைபெய்துதங்கைகொடுமார்பினெற்றி
அழுமித்தொழிலியாதுகொலென்றொரயிர்ப்புமுற்றான்
எழிலித்தனியேறெனவிந்திரசித்தெழுந்தான். (௧)

எட்டாகியதிக்கையும்வென்றவனின்றுமீடு
பட்டான்கொலதன்றனிற்பட்டழிந்ததுகொல்பண்டு
சுட்டானிவன்பதியைத்தொடுவேலையோடும்
கட்டான்கொலிதற்கொருகாரணமென்கொலென்றான். (௨)

கேட்டானிடையுற்றதென்னென்றுகிளத்தல்யாரும்
மாட்டாதுநடுங்கினர்மாற்றமறந்துநின்றார்
ஓட்டாநெடுந்தேர்கடிதோட்டியிமைப்பினுற்றான்
காட்டாதனகாட்டியதாதையைச்சென்றுகண்டான். (௩)

இராவணனிந்திரசித்தனிட மதிகாயாதியர் மரணமுரைத்தல்.

கண்டானிறையாறியநெஞ்சினன்கைகள்கூப்பி
உண்டாயதெனிவ்வழியென்றலுமெம்பிமாரைக்

கொண்டானுயிர்காலனுங்கும்பநிகும்பரோடும்
விண்டானடைந்தானதிகாயனும்வீரவென்றான். (௪)

சொல்லாதமுன்னஞ்சுடரைச்சுடர்தூண்டுகண்ணான்
பல்லாலதரத்தையதுக்கிவிண்மீதுபார்த்தான்
எல்லாருமிறந்தனரோவெனவேங்கினைந்தான்
வில்லாளரையெண்ணில்விரற்குமுன்னிற்கும்வீரன். (௫)

ஆர்கொன்றவரென்றலும்பேரதிகாயனென்னும்
பேர்கொன்றவன்வென்றியிலக்குவன்பின்புநின்றார்
ஊர்கொன்றவனாற்பிறராலெனவுற்றவெல்லாம்
தார்கொன்றையினான்கிரிசாய்த்தவன்றானுரைத்தான். (௬)

கொன்றாரவரோகொலைசூழ்கெனநீகொடுத்தாய்
வன்றானையர்மானுடர்வன்மையறிந்துமன்றோ
என்றானுமெனைச்செலவேவலையிற்றதென்றோ
நின்றானெடிதுன்னிமுனிந்துநெருப்புயிர்ப்பான். (௭)

அக்கப்பெயரோனைநிலத்தொடரைத்துளானை
விக்கற்பொருதூதுவனென்றுவிளம்பிவிட்டாய்
புக்கத்தலையெய்தநினைந்திலைபுந்தியில்லாய்
மக்கட்டுணையற்றனையிற்றதுன்வாழ்க்கைமன்றோ. (௮)

என்னின்றுநினைத்துமியம்பியுமெண்ணியுந்தான்
கொன்னின்றபடைக்கலத்தெம்பியைக்கொன்றுளானை
அந்நின்றநிலத்தவனுக்கையைநீக்கியல்லால்
மன்னின்றநகர்க்கினிவாரலென்வாழ்வும்வேண்டேன். (௯)

இந்திரசித்துச் சூளுரைத்தல்.

மாற்றாவுயிரெம்பியைமாற்றியமானுடன்றன்
ஊற்றார்குருதிப்புனல்பார்மகளுண்டிலாளேல்
ஏற்றானிகலிந்திரனீரிருகாலெனக்கே
தோற்றான்றனக்கென்னெடுஞ்சேவகந்தோற்கவென்றான். (௧௦)

வெங்கண்ணெடுவானரத்தானையைவீற்றுவீற்றாய்ப்
பங்கம்முறநூறியிலக்குவனைப்படேனேல்
அங்கந்தரவஞ்சியென்னாணைகடக்கிலாத
செங்கண்ணெடுமான்முதற்றேவர்சிரிக்கவென்னை. (௧௧)

பாம்பிற்றருவெம்படைபாசுபதத்தினோடும்
தேம்பற்பிறைசென்னிவைத்தான்றருதெய்வவேதி
ஓம்பித்திரிந்தேற்கினியின்றுதவாதுபோமேற்
சோம்பித்துறப்பன்னுயிர்சோறுமுகந்துவாழேன். (௧௨)

மருந்தேநிகரெம்பிதன்னாருயிர்வௌவினானை
விருந்தேயெனவந்தகற்கீகிலன்வில்லுமேந்திப்
பொருந்தேவர்குழாநகைசெய்திடப்போந்துபாரின்
இருந்தேனெனினானவ்விராவணியல்லனென்றான். (௧௩)

ஏகாவிதுசெய்தெனதின்னலைநீக்கிடெங்கைக்
காகாதனவும்முளவோவெனக்காற்றலார்மேல்
மாகால்வரிவெஞ்சிலையோடும்வளைத்தபோது
சேகாகுமென்றெண்ணியிவ்வின்னலிற்சிந்தைசெய்தேன். (௧௪)

இந்திரசித்து போர்க்கோலங் கொள்ளுதல்.

என்றானைவணங்கியிலங்கயில்வாளுமார்த்திட்
டொன்றானுமறாவுருவாருடற்காவலோடும்
பொன்றாழ்கணையின்னெடும் * புட்டில்புறத்துவீக்கி
வன்றாள்வயிரச்சிலைவாங்கினன்வானைவென்றான். (௧௫)

வயிரந்நெடுமால்வரைகொண்டுமலர்க்கண்வந்தான்
செயிரொன்றுமுறாவகையிந்திரற்கென்றுசெய்த
உயர்வெஞ்சிலையச்சிலைபண்டவன்றன்னையோட்டித்
துயரின்றலைவைத்திவன்கொண்டதுதோற்றமீதால். (௧௬)

தோளிற்கணைப்புட்டிலுமிந்திரன்றோற்றநாளே
ஆளித்திறலன்னவன்கொண்டனவாழியேழும்
மாளப்புனல்வற்றினும்வாளியறாதவன்கட்
கூளிக்கொடுங்கூற்றினுறாயதொர்கூடுபோல்வ. (௧௭)

பல்லாயிரகோடிபடைக்கலம்பண்டுதேவர்
எல்லாருமுனைத்தலையாவருமீந்தமேரு
வில்லாளன்கொடுத்தவிரிஞ்சனளித்தமெய்ம்மை
அல்லாற்புரியாதனயாவையுமாய்ந்துகொண்டான். (௧௮)

இந்திரசித்தன் சதுரங்காதிய.

நூறாயிரம்யாளியினோண்மைதெரிந்தசீயத்
தேறாமவையன்னவையாயிரம்பூண்டதென்ப
மாறாயொரிலங்கைநிகர்ப்பதுவானுளோரும்
தேறாததுமற்றவனேறியதெய்வமாத்தேர். (௧௯)

பொன்சென்றறியாவுவணத்தனிப்புள்ளினுக்கும்
மின்சென்றறியாமழுவாளன்விடைக்குமேனாள்
பின்சென்றதல்லதொருமாண்சிறப்புற்றபோதும்
முன்சென்றறியாததுமூன்றுலகத்தினுள்ளும். (௨௦)

* புட்டில் - அம்பறாத்தூணி.

ஏயாத்தனிப்போர்வலிகாட்டியவிந்திரன்றன்
சாயாப்பெருஞ்சாய்கெடத்தாம்புகளாற்றடந்தோள்
போயார்த்தவன்வந்தனன்வந்தனனென்றுபூசற்
பேயார்த்தெழுந்தாடுநெடுங்கொடிபெற்றதம்மா. (௨௧)

செதுகைப்பெருந்தானவரூனொடுந்தேய்த்தநேமி
யதுகைத்திசையானையையோட்டியதென்னலாமே
மதுகைத்தடந்தோள்வலிகாட்டியவானவேந்தன்
முதுகைத்தழும்பாக்கியமெய்யொளிமொட்டதம்மா. (௨௨)

அத்தேரினையேறியதொப்பனவாயிரந்தேர்
ஒத்தேய்வனசேமமதாய்வரவுள்ளம்வெம்போர்ப்
பித்தேறினனென்னநடந்தனன்பின்பலான்மற்
றெத்தேவரையும்முகங்கண்டறியாதவீட்டான். (௨௩)

அன்னானொடுபோகியதானையறிந்துகூற
என்னாலரிதேனுமியம்புவான்மீகனென்னும்
நன்னான்மறையானதுநாற்பதுவெள்ளமென்னச்
சொன்னான்பிறர்யாரஃதுணர்ந்துதொகுக்கவல்லார். (௨௪)

தூமக்கணரக்கனுந்தொல்லமர்யார்க்குந்தோலா
மாமக்கனுமந்நெடுந்தேர்மணியாழிகாக்கத்
தாமக்குடைமீதுயரப்பெருஞ்சங்கம்விம்ம
நாமக்கடற்பல்லியநாற்கடன்மேலுமார்ப்ப (௨௫)

தேராயிரமாயிரகோடிதன்மாடுசெல்லப்
போரானைபுறத்தினவற்றினிரட்டிபோதத்
தாரார்புரவிக்கடல்பின்செலத்தானைவீரப்
பேராழிமுகஞ்செலச்சென்றனன்பேர்ச்சியில்லான். (௨௬)

வேறு.

நின்றனனிலக்குவன்களத்தைநீங்கலன்
பொன்றினனிராவணன்புதல்வன்போர்க்கினி
அன்றவனல்லனோலமரர்வேந்தனை
வென்றவன்வருமெனவிரும்புஞ்சிந்தையான். (௨௭)

விபீடண னிலக்குமணனுக் கிவனிந்திரசித்தெனன் முதலிய.

யாரிவன்வருபவனியம்புவாயென
வீரவெந்தொழிலினான்விளம்பவீடணன்
ஆரியவிவனிகலமரர்வேந்தனைப்
போர்கடந்தவனின்றுவலிதுபோரென்றான். (௨௮)

எண்ணினதுணர்த்துவதுளதொன்றெம்பிரான்
கண்ணகன்பெரும்படைத்துணைவர்காத்திட

நண்ணின துணையொடுபொருதனன் றிது
திண்ணிதினுணர் தியாற்றெளியுஞ்சிந்தையால். (௨௯)

மாருதிசாம்பவன்வானரேந்திரன்
தாரைசேய்நீலனென்றினையதன்மையார்
வீரர்வந்துடனுறவிமலநீநெடும்
போர்செயத்தகுதியாற்புகழின்பூணினாய். (௩௧)

பல்பதினாயிரந்தேவர்பக்கமா
எல்லையில்சேனைகொண்டெதிர்ந்தவிந்திரன்
ஒல்லையினுடைந்தனனுயிர்கொண்டுய்ந்துளான்
மல்லலந்தோளினாயமிழ்தின்வன்மையால். (௩௧)

இனியவைமறையுமோவிந்திரன்புயப்
பனிவரையுளநெடும்பாசப்பஃறழும்
பனுமனைப்பிணித்துளானைபோதவன்
தனுமறைவித்தகந்தடுக்கற்பாலதோ. (௩௨)

என்றவனிறைஞ்சலுமிளையவள்ளலும்
நன்றெனமொழிதலுநனுகினனரோ
வன்றிறன்மாருதியிலங்கைக்கோமகன்
சென்றனனிளவன்மேலென்னுஞ்சிந்தையான். (௩௩)

கூற்றமுங்கட்புலம்புதைப்பக்கோத்தெழு
தோற்றமுமிராவணிதுணிபுநோக்குறா
மேற்றிசைவாயிலைவிட்டுவெங்கடுங்
காற்றெனவணுகினன்கடிதின்வந்தரோ. (௩௪)

அங்கதன்முன்னரேயாண்டையானயல்
துங்கவன்றோளினரெவருஞ்சுற்றினார்
செங்கதிரோன்மகன்முன்புசென்றனன்
சங்கநீர்க்கடலெனத்தழீஇயதானையான். (௩௫)

அசுரவானர யுத்தம்.

இருதிரைப்பெருங்கடலிரண்டுதிக்கினும்
பொருதொழில்வேட்டுவந்தார்த்துப்பொங்கின
வருவனபோன்றனமனத்திறற்சினம்
திருகினவெதிரெதிர்செல்லுஞ்சேனையே. (௩௬)

கண்ணினான்மனத்தினாற்கருத்தினாற்றெரிந்
தெண்ணினாற்பெறுபயனெய்துமின்றெனா
நண்ணினாரிமையவர்நங்கைமாரொடும்
விண்ணினாடுறைவிடம்வெறுமைகூரவே. (௩௭)

ஒருத்திருதானையுமுடற்றவுற்றுழி
அத்தனைவீரருமார்த்தவார்கலி
நத்தொலிமுரசொலிநடுக்கலாற்றலை
பொத்தினர்செவிகளைப்புரந்தராதியர். (௩௮)

எற்றுமின்பற்றுமினெறிமினெய்ம்மினென்
றுற்றனவுற்றனவுரைக்குமோதையும்
முற்றுறுகடையுகத்திடியின்மும்மடி
பெற்றனபிறந்தனசிலையின்பேரொலி. (௩௯)

கற்படைமரம்படக்காலவேல்பட
விற்படுகணைபடவீழும்வீரர்தம்
எற்படுமுடல்படவிரண்டுசேனையும்
பிற்படநெடுநிலம்பிளந்துபேருமால். (௪௦)

எழுத்தொடர்மரங்களாலெற்றமுற்றிய
விழுத்தலைமுழுவதுஞ்சிதறிவீழ்ந்தன
வழுத்தியபெருஞ்சினத்தரக்கராக்கைகள்
கழுத்துளதலையிலகளத்தினாடுவ. (௪௧)

வெட்டியதலையனநரம்புவீசமேல்
முட்டியகுருதியகுரங்கின்மொய்யுடல்
சுட்டுயர்நெடுவனந்தொலைந்தபின்னெடுங்
கட்டைகளெரிவனபோன்றுகாட்டுவ. (௪௨)

பிடித்தனநிருதரைப்பெரியதோள்பெயர்த்
தொடித்தனகால்விசைத்துதைத்தவுந்தின
கடித்தனகழுத்தறக்கைகளாலெடுத்
தடித்தனவரைத்தனவார்த்தவானரம். (௪௩)

வாள்களிற்கவிக்குலவீரர்வார்கழற்
றாள்களைத்துணித்தனர்தலையைத்தள்ளினர்
தோள்களைப்பிரித்தனருடலைத்துண்டவன்
போழ்களிற்புரட்டினர்நிருதர்பொங்கினார். (௪௪)

மரங்களிலரக்கரைமலைகள்போன்றுயர்
சிரங்களைச்சிதறினவுயிரைச்சிந்தின
கரங்களைக்கழல்களையொடியக்காதின
குரங்கெனப்பெயர்கொடுதிரியுங்கூற்றமே. (௪௫)

சுடர்த்தலைநெடும்பொறிசொரியுங்கண்ணன
வடற்றலைநெடுமரமற்றகையன

வுடற்றலைவயிரவேலுருவவற்றவர்
மிடற்றினைக்கடித்துடன்விளிந்துபோயின. (௪௬)

அடர்ந்தனகிரிகளையசனியேறெனத்
துடர்ந்தனமழைபொழிதும்பிக்கும்பங்க
ளிடந்தனமூளைகளினிதினுண்டன
கடந்தனபசிகளைக்கரடிகாதுவ. (௪௭)

கொலைமதகரியனகுதிரைமேலன
வலர்மணித்தேரனவாளின்மேலன
சிலைகளின்குடுமியசிரத்தின்மேலன
மலைகளிற்பெரியனகுரங்குவாவுவ. (௪௮)

வேறு.

தண்டுகொண்டரக்கர்தாக்கச்சாய்ந்துகுநிலையசந்திற்
றுண்டங்களாகவாளிற்றுணிந்தபேருடலைத்தூவிக்
கொண்டெழுமலைகளோடுங்குரக்கினப்பிணத்தின்குப்பை
மண்டுவெங்குருதியாறம்மறிகடன்மடுத்தமாதோ. (௪௯)

பனிவென்றபதாகையென்றும்பல்லுளைப்பரிமாவென்றுந்
தனுவென்றும்வாளென்றுந்தண்டென்றுந்தனிவேலென்றுஞ்
சினவென்றிமதமாவென்றுந்தேரென்றுந்தெரிந்ததில்லை
யனுமன்கைவயிரக்குன்றலைப்புண்டவரக்கர்தானை. (௫0)

பொங்குதேர்புரவியானைபொருகழனிருதரென்னுஞ்
சங்கையுமில்லாவண்ணந்தன்னுளேதழுவிக்கூற்ற
மெங்குளவுயிரென்றெண்ணியிணைக்கைகடிளைத்ததென்ப
வங்கதன்மரங்கொண்டெற்றவளறுபட்டழிந்ததானை. (௫௧)

தாக்கியதிசைகடோறுந்தலைத்தலைமயங்கித்தம்மி
னூக்கியகளிறுந்தேரும்புரவியுநூழில்செய்ய
வாக்கியசெருவைநோக்கியமரரோடசுரர்போரைத
தூக்கினர்முனிவரென்னையிதற்கதுதோற்குமென்றார். (௫௨)

எடுத்ததுநிருதர்தானையிரிந்ததுகுரங்கினீட்டந்
தடுத்தனர்முகங்கடாங்கித்தனித்தனிதலைவர்தள்ளிப்
படுத்தனரரக்கர்வேலைபட்டதும்படவும்பாரார்
கடுத்தனர்கடுத்தபின்னுங்காத்தனர்கவியின்வீரர். (௫௩)

சூலமுமழுவுந்தாங்கித்தோளிருநான்குந்தோன்ற
* மூலம்வந்துலகையுண்ணுமுருத்திரமூர்த்தியென்ன

* மூலம் - முடிவுகாலம்.

நீலனின்றுழியேநின்றானிரந்தரங்கணங்களோடுங்
காலனென்றொருவனியாண்டும்பிரிந்திலன்பாசக்கையான். (௫௪)

காற்றலன்புனலோவல்லன்கனலல்லனிரண்டுகையா
லாற்றலனாற்றுகின்றவருஞ்சமமிதுவேயாகி
லேற்றமென்பலவுஞ்சொல்லியென்பதமிழந்தேனென்னக்
கூற்றமுங்குலுங்கியஞ்சவெங்கதக்குமுதன்கொன்றான். (௫௫)

மறிகடல்புடைசூழ்வைப்பின்மானவன்வாளிபோன
செறிபணைமரமேநின்றமரங்களிற்றெறியச்செப்பும்
குறியுடைமலைகடம்மிற்குலவரைக்குலமேகொள்க
வெறிதலோடறைதல்வேட்டவிடவவன்றெடுத்திலாத. (௫௬)

வாம்பரிமதமாமான்றேர்வாளெயிற்றரக்கர்மாயப்
பாம்பினும்வெய்யோர்சாலப்படுகுவர்பயமின்றின்றே
தூம்புறழ்குருதிமண்டத்துடர்நெடுமரங்கள்சுற்றிச்
சாம்பவன்கொல்லச்சாம்புமென்றுரையமரர்தந்தார். (௫௭)

பொருங்குலப்புரவியானதிரைகளுங்கலம்பொற்றேரு
மிருங்களியானையானமகரமுமிரியல்போக
நெருங்கியபடைகளானமீன்குலமிரிந்துசிந்தக்
கருங்கடல்கலக்குமத்திற்பனசனுங்கலக்கிப்புக்கான். (௫௮)

மயிந்தனுமிளவறானுமழைக்குலங்கிழித்துவானத்
துயர்ந்தெழுமெருவைவேந்தருடன்பிறந்தவரையொத்தார்
கயங்குடைந்தாடும்வீரக்களிறொத்தான்கவையன்காலிற்
பெயர்ந்திலனுற்றதல்லாற்கேசரிபெரும்போர்பெற்றான். (௫௯)

பெரும்படைத்தலைவரியாரும்பெயர்ந்திலர்பிணத்தின்குப்பை
வரம்பிலபரம்பியார்த்துமலைகின்றபொழுதின்வந்துற்
றிரிந்தனகவியுங்கூடியெடுத்தனவெடுத்தலோடுஞ்
சரிந்ததுநிருதர்தானைதாக்கினனரக்கன்றானே. (௬௦)

வே று.

இந்திரசித்தன் போர்த்திறம்.

பூணெறிந்தகுவடனையதோள்களிருபுடைபரந்துயரவடல்வலித் [படச்
தூணெறிந்தனையவிரல்கள் கோதையொடு சிலையெறிந்ததொருதொழில்
சேணெறிந்துநிமிர்திசைகளோடுமலைசெவிடெறிந்துடையமிடல்வலோ
னாணெறிந்துமுறைமுறைதுடர்ந்துகடலுலகமியாவையுநடுக்கினான். (௬௧)

சிங்கவேறுகடல்போன்முழங்கிநிமிர்தேர்கடாய்நெடிதுசெல்கெனா
வங்கதாதியரனுங்கவானவர்களஞ்சவெஞ்சினவனந்தன்மாச்

சங்கபாலகுளிகாதிவாலெயிறுதந்ததீவிடமுமிழ்ந்துசேர்
வெங்கணாகமெனவேகமாயுருமுமஞ்சவெங்கணைகள்சிந்தினான். (௬௨)

சுற்றும்வந்துகவிவீரர்வீசியசுடர்த்தடங்கல்வரைதொன்மரா
மிற்றெறிந்துபொடியாயுதிர்ந்தனவெழுந்துசேணிடையிழிந்தபோல்
வெற்றிவெங்கணைபடப்படத்தலைகள்விண்ணினூடுதிசைமீதுபோ
யற்றெழுந்தனவிழுந்துமண்ணிடையழுந்துகின்றனவனந்தமால். (௬௩)

சிலைத்தடம்பொழிவயக்கடும்பகழிசெல்லவொல்கினர்சினத்தினா
லுலைத்தெறிந்திடவெடுத்தகுன்றுதொறுடற்பரங்கள்கொடொதுங்கினார்
நிலைத்துநின்றுசினமுந்துசெல்லவெதிர்சென்றுசென்றுறநெருக்கலான்
மலைத்தலங்களொடிரத்தலங்கழலவூடுசென்றபலவாளியே. (௬௪)

முழுத்தமொன்றிலொருவெள்ளவானரமுடிந்துமாள்வனதடிந்துபோய்க்
கழுத்தகையநிமிர்காலவாலபலகண்டமானபடிகண்டுநே
ரெழுத்துடர்ந்தபடர்தோள்களாலெறியவெற்றவுற்றனவெழுந்துமேல்
விழுத்தபைந்தலையவேணுமால்வரைகள்வீசிவீசியுடன்வீழுமால். (௬௫)

அற்றபைந்தலையரிந்துசென்றனவயிற்கடுங்க்ணைவெயிற்கள்போற்
புற்றடைந்தகொடுவெவ்வராவினெடுநாகலோகமதுபுக்கவால்
வெற்றவெள்ளிடைவிரிந்துபோவதொருமேடுபள்ளம்வெளியின்மையா
லுற்றசெங்குருதிவெள்ளமுள்ளதிரையோதவேலையொடுமொத்ததால். ( )

விழிக்குமேல்விழியநிற்கின்மார்பிடையமீளுமேன்முதுகைமேனியைக்
கழிக்குமேலுயரவோடுமேனெடியகால்கள்வீசிநிமிர்கையவாய்த்
தெழிக்குமேலகவுநாவுசிந்தையினவுன்னுமேற்சிகரமியாவையும்
பழிக்குமேனியகுரக்கின்மேலவன்விடுங்கொடும்பகழிபாயவே. (௬௭)

மொய்யெடுத்தகணைமாரியாலிடைமுடிந்ததொன்றுமுறைகண்டிலா
ரெய்விடத்தெறியுநாணினோசையலதியாதுமொன்றுசெவியுற்றிலார்
மெய்யெடுத்தகவிவெள்ளமியாவையும்விழுந்துபோனவெனும்விம்மலாற்
கையெடுத்தனகுரங்கினோடுமுறைகண்டுதேவர்கள்கலங்கினார். (௬௮)

சுக்கிரீவனது போர்த்திறம்.

கண்டவானரமநந்தகோடிமுறைகண்டமானபடிகண்டவக்
கண்டமாறொருவரின்மைகண்டுகணைமாறினான்விடுதலின்மையாய்க்
கண்டகாலையில்விலங்கினானிரவிகாதல்காதுவதொர்காதலாற்
கண்டகார்சிலைதயமீதுயர்ந்தொளிர்மராமரஞ்சுலவுகையினான். (௬௯)

உடைந்துதன்படையுலைந்துசிந்தியுயிரொல்கவெல்செருவுடலற்றலாற்
சடைந்ததெள்ளமுதுகொள்ளுமவ்வள்ளலெனமேனிமிர்ந்ததொர்கறுப்பினா
ணிடைந்துசென்றவனையெய்தியெய்தரியகாவல்பெற்றிகலியற்றுவான்
பிடைந்துநின்றபடைவேலைகாறளரவீசினானிருதர்கூசினார். (௭௦)

ஊற்றுநின்றபடைசிந்தியோடவோர்மராமரங்கொடுதுகைத்துளான்
வெற்றிகண்டவெலிநன்றுநன்றெனவியந்துவெங்கணைதெரிந்தவ
னெற்றியின்றலையிரண்டுமோர்பிடையொரஞ்சுநஞ்செனநிறுத்தவன்
பற்றிவந்தமரம்வேறுவேறறநுறுக்கிநுண்பொடிபரப்பினான். (எக)

அக்கணத்தனுமனாலகாலமெனலாயதோர்வெகுளியாயினான்
புக்கனைத்துலகமுங்குலுங்கநிமிர்தோள்புடைத்துருமுபோலுரு
விக்கணத்தவனிறக்குமென்பதொருகுன்றெடுத்துமிசையேவினா
னுக்கதக்கிரிசொரிந்தவாளிகளூழிலாதசிறுபூழியாய். (எஉ)

அனுமவிந்திரசித்தர் வீரவசனங்கள்.

நில்லடாசிறிதுநில்லடாவுனைநினைத்துவந்தனன்முனைக்குநான்
வில்லெடாமைநினதாண்மைபேசியுயிரோடுநின்றுவிளையாடினாய்
கல்லெடாநெடுமரங்களோவருகருத்தினேன்வலிகடக்கவோ
சொல்லடாவெனவியம்பினானிகலரக்கனையனிவைசொல்லினான். (எங)

வில்லெடுக்கவுரியார்களையசிலவீரரிங்குமுளர்மெல்லியோய்
* கல்லெடுக்கவுரியானுநின்றனனதின்றுநாளையிடைகாணலா
மெல்லெடுத்தபடையிந்திராதியருனக்கிடைந்துயிர்கொடேகுவார்
புல்லெடுத்தவர்களல்லம்வேறுசிலபோரெடுத்தெதிர்புகுந்துளேம். (எச)

என்னொடேபொருதியோவதன்றெனினிலக்குவப்பெயரினெம்பிரான்
றன்னொடேபொருதியோவுனுந்தைதலைதள்ளநின்றதனிவள்ளலா
மன்னொடேபொருதியோவுரைத்ததுமறுக்கிலோமெனவழங்கினான்
பொன்னொடேபொருவினல்லதொன்றொடுபொதுப்படாவுயர்புயத்தினான்

எங்குநின்றனனிலக்குவப்பெயரவ்வேழையெம்பியதிகாயனாஞ்
சிங்கம்வந்தவனைவென்றுதன்னுயிரெனக்குவைத்ததொர்சிறப்பினா
னங்கவன்றனைமலைந்துகொன்றுமுனிவாறவந்தனனதன்றியு
முங்கடன்மையினடங்குமோவுலகொடுக்கும்வெங்கணைதொடுப்பினே. ()

ஆருமென்படைஞரெய்தலின்றியயலேகயானுமிகல்வில்லுமோர்
தேரினின்றுமையடங்கலுந்திரள்சிரந்துணிப்பனிதுதிண்ணமால்
வாருமுங்களுடன்வானுளோர்களையுமண்ணுளோரையும்வரச்சொலும்
போருமின்றொருபகற்கணேபொருதுவெல்வன்வென்றலதுபோகிலேன்.

என்றுவெம்பகழியேழுநூறுமிருநூறும்வெஞ்சிலைகொடேவினான்
குன்றுநின்றனையவீரமாருதிதன்மேனிமேலவைகுழுக்களாய்ச
சென்றுசென்றுருவலோடும்வாளெயிறுதின்றுசீறியொருசேமவன்
குன்றுநின்றதுபறித்தெடுத்தவனையெய்திநொய்தினிதுகூறினான். (எஅ)

* கல்லெடுக்கவுரியான் - பிதிர்க்கடன் செய்யுங்காலத்து, பாடாணத்தாபனஞ் செய்தற்குரிய விபீடணன்.

தம்பியென்றுலகினுள்ளயாவையவையேவையுந்தொழுதி தன்னொடான்
வெம்புவெஞ்சினமடங்கலொன்றின்வலிதன்னினின்றெளிதின்வெல்லு
நம்பிதம்பியெனதெம்பிரான்வருதுணைத்தரிக்கிலைகலித்தியே [மோ
லம்பின்முந்தியுனதாவியுண்ணுமிதுகாவடாசிலைவலாண்மையால். (எக)

செருப்பயிற்றியதடக்கையாளிசெலவிட்டகுன்றுதிசையானையின்
மருப்பையுற்றதிரடோளிராவணன்மகன்றன்மார்பினுயர்வச்சிரப்
பொருப்பையுற்றதொர்பொருப்பெனக்கடிதொடிந்திடிந்துதிசைபோயதா
னெருப்பையுற்றதொரிரும்புகூடமுறநீறுபட்டதுநிகர்த்தவால். (அ0)

விலங்கன்மேல்வரவிலங்கவீசியவிலங்கனீறுபடுவேலையிற்
கலங்கமேனிமிரவெஞ்சினந்திருகிவஞ்சன்மேனிகர்தருக்கினுல்
வலங்கொள்பேருலகமேருவோவெனமதிக்குமாருதிதன்வாசகா
நலங்கன்மார்பினொடுதோளினொடுருவவாயிரஞ்சரமழுத்தினுன். (அக)

ஒன்றுபோல்வனவொராயிரம்பகழியூடுபோயுருவவாடகக்
குன்றுகாலுதைய மேலுயர்ந்திடைகுலுங்குகின்றனையகொளகையான்
மன்றனுறுதடமேனிமேலுதிரவாரிசோரவருமாருதி
நினைறுதேறுமளவின்கண் வயகண்விழிநீலன்வந்திடைநெருக்கினுன். ()

நீலனின்றதொருநீலமால்வரைநெடுநெடுந்தடக்கையினிடந்துநேர்
மேலெழுந்தரிவிசும்புசெல்வதொருவெம்மையோடுவரவீசலுஞ்
சூலமந்தகனெனநின்றன்னதுதுணிந்துசிந்தவிடைசொல்லுறுங்
காலமொன்றுமறியாமலம்புகொடுகல்லினுனடியவில்லினுன். (அந)

ஊகமெங்குமுயிரோடுநின்றனவுமோடவானவர்களுள்ளமு
மோகமெங்குமுளவாகமேருவினுமும்மடங்குவலிதிண்மைசா
னாகமெங்குமெளியாகவெங்குருதியாறுபாயவனலஞ்சுவாய்
நாகவெங்கணைகுவாளிபாய்தொறுநடுங்கினுன்மலைபிடுங்கினுன். (அச)

மேருமேருவெனவல்லவல்லவெனவேரினோடுநெடுவெற்பெலா
மாரின்மேலுமுயர்தோளின்மேலும்வரவாலிகாதலன்வழங்கினுன்
சேருமேயவைதனுக்கைகிற்கவெதிர்செல்லுமேகடிதுசெல்லினும்
பேருமேகொடியவாளியான்முறிபெறுக்கலாவவைநுறுக்கினுன். (அ௫)

நெற்றிமேலுமுயர்தோளின்மேலுநெடுமார்பின்மேலுநிமிர்தாளினும்
புற்றினூடுநுழைநாகமன்னபுகைவேகவாளிகள்புகப்புகத்
தெற்றிவாளெயிறுதின்றுகைத்துணைபிசைந்துகண்களெரிதீயுக
வற்றினேடுதிரவாரிசோர்வுறமயங்கினுனிலமுயங்கினுன். (அசு)

மற்றைவீரர்கடமார்பின்மேலுமுயர்தோளின்மேலுமழைமாரிபோற்
கொற்றவெங்கணையுலக்கவெய்தவைகுளிப்பநின்றுடல்குலுங்கினு

ரிற்றவிந்ததுபெரும்பதாதியுயிருள்ளவெங்கணுமிரிந்தவப்
பெற்றிகண்டினையவள்ளலொள்ளெரிபிறந்தகண்ணனிலைபேசினான். ()

வேறு.

பிழைத்ததுகொள்கைபோதப்பெரும்படைத்தலைவர்யாரு
முழைத்தனர்குருதிவெள்ளத்துலந்ததுமுலப்பிற்றன்றே
யழைத்திவன்றன்னையானேயாருயர்கொளப்படாதே
யிழைத்ததுபழுதேயன்றோவீடணனென்னச்சொன்னான். (௮௮)

விபீடணனாலோசனை கூறுதல்.

அய்யவிதன்னதேயாலாயிரகோடிதேவ
ரெய்தினரெய்தினாரேயீடுபட்டிரிந்ததல்லாற்
செய்திலரிவனையொன்றுநீயிசுதீர்ப்பினல்லா
லுய்திறனுண்டோவேறிவ்வுலகினுக்குயிரோடென்றான். (௮௯)

இந்திரசித் திலக்குமணனைக்காண்டல்.

என்பதுசொல்லக்கேட்டவிந்திரவில்லினோடும்
பொன்பொருமேகமொன்றுவருவதுபோல்கின்றானை
முன்பனைமுன்புநோக்கியிவன்கொலாம்பரதன்முன்னோன்
றன்பெருந்தம்பியென்றானெனச்சாரன்சொன்னான். (௯௦)

தீயவனிளவறன்மேற்செல்வதன்முன்னஞ்செல்கென்
றேயினனொருவரின்றியிராக்கதத்தலைவரொங்க
ணாயகன்மகனைக்கொன்றாய்நண்ணினைநாங்கள்காணப்
போயினியுய்வதெங்கேயென்றெறிவிழித்துப்புக்கார். (௯௧)

இலக்குமணன் போர்த்திறம்.

கோடிநூறமைந்தகூட்டத்திராக்கதர்கொடித்திண்டேரு
மாடன்மாக்களிறுமாவுங்கடாவினரார்த்துமண்டி
மூடினார்மூடினாரைமுறைமுறைதுணித்துவாகை
சூடினானிராமன்பாதஞ்சூடியதோன்றறம்பி. (௯௨)

அதிர்ந்தனவுலகமேழுமனற்பொறியசனியென்னப்
பிதிர்ந்தனமலையும்பாரும்பிளந்தனபிணத்தின்மேன்மே
லுதிர்ந்தனதலைகண்மண்டியோடினவுதிரநீத்தம்
விதிர்ந்தனவமரர்கைகள்விளைந்ததுகொடியவெம்போர். (௯௩)

விட்டனன்விசிகம்வேகம்விடாதனவீரன்மார்பிற்
பட்டனவுலகமெங்கும்பரந்தனபதாகைக்காட்டைச
சுட்டனதுரகராசிதுணித்தனபணைக்கைமாவை
யட்டனகூற்றமென்னவடர்ந்தனவனந்தமம்மா. (௯௪)

உலக்குனருலக்கின்றாரையெண்ணுவானுற்றவிண்ணோர்
தலக்குறுகண்ணர்நோக்கிக்கடையுறக்காணலாற்றார்
விலக்கரும்பகழிமாரிவிளைக்கின்றவிளைவையுன்னி
யிலக்குவன்சிலைகொடேகொலெழுமழைபயின்றதென்றார். (௯௫)

மீளியொண்கணைகடோறுமுந்தியவேழமொற்றை
வாளியின்றலையபாரின்மறிவனமலையிற்சூழ்ந்த
வாளியின்றுப்பின்வீரர்பொருகளத்தார்த்தவாழித்
தூளியின்றொகையவள்ளல்சுடுசணைத்தொகையுமம்மா. (௯௬)

பிறவியிற்பெரியநோக்கிற்பிசிதமூண்டுழலும்பெற்றிச்
சிறையனவன்னநோக்கித்தேவருந்திகைக்கத்தேற்றித்
துறைதொறுந்தடர்ந்து வானம்வெளியறத்தூவன்றிவீழும்
பறைவயிற்பெரிதுபட்டார்பிணத்தின்மேற்படிவமாதோ. (௯௭)

திறந்தருகவியின்சேனைசெறிகழனிருதன்சேற
விறந்தனகிடந்தவெள்ளமெழுபதிற்பாதிமேலும்
பறந்தலைமுழுதும்பட்டவஞ்சகர்படிவமூடி
மறைந்ததுகுருதியோடிமறிகடன்மடுத்திலாத. (௯௮)

கையற்றார்கால்களற்றார்கழுத்தற்றார்கவசமற்றார்
மெய்யற்றார்குடர்கள்சோரவிசையற்றார்விளிவுமற்றார்
மையற்றார்க்கரியுந்தேரும்வாசியுமற்றுமற்று
றுய்யச்சாய்ந்தோடிச்சென்றாருயிருள்ளாராகியுள்ளார். (௯௯)

இலக்குவணைந்திரசித்தர்களின் யுத்தத்திறம்.

வற்றியகடலுணின்றமலையெனமருங்கின்யாருஞ்
சுற்றினரின்றித்தோன்றுந்தசமுகன்றோன்றலுள்ளித்
தெற்றினபுருவத்தோன்றன்றனமனச்செல்லுந்தேரா
னுற்றனனிளையகோவையனுமனுடன்வந்துற்றான். (௧௦௦)

தோளின்மேலாதியையவன்றடிதொழுதுநின்று
னாளிபோன்மொய்ம்பினானுமெறிமணமரவார்த்தார்
காளியேயனையகாலன்கொலையனகனலின்வெய்ய
வாளிமேல்வாளிதூர்த்தார்மழையின்மேன்மழைவந்தன்னார். (௧௦௧)

ஒடித்தனசிலையினாண்களிரிந்தனதிசைகளிற்று
வெடித்தனமலைகள்விண்டுபிளந்தனவிசும்புமேன்மேற்
பொடித்தவிவ்வுலகமெங்கும்பொழிந்தனபொறிகள்பொங்கிக்
கடித்தனகணைகளோடுங்கணைகடம்மயில்வாயகவ்வி. (௧௦௨)

அம்பினோடம்பொன்றொன்றையறுக்கமற்றறுக்கிலாத
வெம்பொறிகதுவவிண்ணில்வெந்தனசரிந்துவீழ்ந்த

வும்பருமுணர்வுசிந்தியொடுங்கினருலகமியாவுங்
கம்பமுற்றலைந்தவேலைக்கலமெனக்கலங்கிற்றண்டம். (௧௦௩)

அரியினம்பூண்டதேருமனுமனுமனந்தசாரி
புரிதலினிலங்கையூருந்திரிந்ததுபுலவரேயு
மெரிகணைப்படலமூடவிலருளரென்னுந்தன்மை
தெரிகிலர்செவிடுசெல்லக்கிழிந்தன திசைகளெல்லாம். (௧௦௪)

நாண்பொருவரிவிற்செங்கைநாமநூனவின்றகல்வி
மாண்பொருவகையிற்றன்றுவலிக்கிலையவதிவானஞ்
சேண்பெரிதென்றுசென்றதேவருமிருவர்செய்கை
காண்பரிதென்றுகாட்சிக்கையறவெய்திற்றன்றே. (௧௦௫)

என்செய்தாரென்செய்தாரென்றியம்புவாரினையதன்மை
முன்செய்தாரியாவரென்பார்முன்னேதுபின்னேதென்பார்
கொன்செய்தார்வீரரின்னதிசையினரென்றுங்கொள்ளார்
பொன்செய்தார்மவுலிவிண்ணோருணர்ந்திலர்புகுந்ததொன்றும். (௧௦௬)

ஆயிரகோடிபல்லமயிலெயிற்றரக்கனெய்தா
னாயிரகோடிபல்லத்தலைதுணித்தறுத்தானைய
னாயிரகோடிநாகக்கணைதொடுத்தரக்கனெய்தா
னாயிரகோடிநாகக்கணைகளாலறுத்தானண்ணல். (௧௦௭)

கோட்டியின்றலையகோடிகோடியம்பரக்கன்கோத்தான்
கோட்டியின்றலையகோடிகோடியாற்குறைத்தான்கொண்டல்
மீட்டொருகோடிகோடிவெஞ்சினத்தரக்கன்விட்டான்
மீடடொருகோடிகோடிகொண்டவைதடுத்தான்வீரன். (௧௦௮)

கங்கபத்திரமோர்கோடிகைவிசைத்தரக்கனெய்தான்
கங்கபத்திரமோர்கோடிகணைதொடுத்திளவல்காத்தான்
றிங்களிற்பாதிகோடியிலக்குவன்றெரிந்துவிட்டான்
றிங்களிற்பாதிகோடிதொடுத்தவையரக்கன்றீர்த்தான். (௧௦௯)

கோரையின்றலையகோடிகொடுங்கணையரக்கன்கோத்தான்
கோரையின்றலையகோடிதொடுத்தவையிளவல்கொன்றான்
பாரையின்றலையகோடிபரப்பினனிளவல்பல்காற்
பாரையின்றலையகோடியரக்கனும்பதைக்கவெய்தான். (௧௧௦)

தாமரைத்தலையவாளிதாமரைக்கணக்கிற்சார்ந்த
தாம்வரத்துரந்துமுந்தித்தசமுகன்றனையனார்த்தான்
தாமரைத்தலையவாளிதாமரைக்கணக்கிற்சார்ந்த
தாம்வரத்தடுத்துவீழ்த்தான்றாமரைக்கண்ணன்றம்பி. (௧௧௧)

வச்சிரப்பகழிகோடிவளையெயிற்றரக்கனெய்தான்
வச்சிரப்பகழிகோடிதுரந்தவையனகன்மாய்த்தான்
முச்சிரப்பகழிகோடியிலக்குவன்முடுகவிட்டான்
முச்சிரப்பகழிகோடிதொடுத்தவைதடுத்தான்முன்பன். (௧௧௨)

அஞ்சலிஅஞ்சுகோடிதொடுத்திகலரக்கனெய்தா
னஞ்சலியஞ்சுகோடிதொடுத்தவையறுத்தானையன்
குஞ்சரக்கன்னகோடியிலக்குவன்சிலையிற்கோத்தான்
குஞ்சரக்கன்னகோடிதொடுத்தவையரக்கன்காத்தான். (௧௧௩)

எய்யவுமெய்தவாளிவிலக்கவுமுலகமெல்லா
மொய்கணைக்கானமாகிமுடிந்ததுமுழங்குவேலை
பெய்கணைப்பொதிகளாலேவளர்ந்ததுபிறந்தகோபங்
கைமிகக்கனன்றதல்லாற்றளர்ந்திலர்காளைவீரர். (௧௧௪)

வீழியின்கனிபோன்மேனிகிழிபடவனுமன்வீரச்
சூழ்பூழுவனையதோண்மேலாயிரம்பகழிதூவி
யூழியினிறந்தசெந்தீயுருமினையுமிழ்வதென்ன
வேழிருநூறுவாளியிலக்குவன்கவசத்தெய்தான். (௧௧௫)

முற்கொண்டானரக்கனென்றுமூரிவாண்முகங்கடேவா
பிற்கொண்டாரிளையகோவைப்பயற்கொண்டான்பெருந்தோணின்றுங
கற்கொண்டார்கிரியினூனுமருவிபோற்குருதிகண்டார்
விற்கொண்டாரிவனேயென்றுவெருக்கொண்டார்முனிவர்மேலார். ()

சீறுநூறெரிந்தசிந்தையிலக்குவன்சிலைகைவாளி
நூறுநூறேவிநொய்தினுடங்குளைமடங்கன்மாவும்
வேறுகூறியற்றிவீரக்கொடியையுமறுத்துவீழ்த்தி
யாறுநூறம்புசெம்பொற்கவசம்புக்கழுந்தவெய்தான். (௧௧௭)

காளமேகத்தைச்சார்ந்தகதிரவனென்னக்காந்தித்
தோளின்மேன்மார்பின்மேலுஞ்சுடர்விடுகவசஞ்சூழ
நீணீள்பவளவல்லிநிரையொளிமிளிர்வதென்ன
வாளிவாய்தோறும்வந்துபொடித்தனகுருதிவாரி. (௧௧௮)

பொன்னுறுசடந்தேர்பூண்டமடங்கன்மாப்புரண்டபோதும்
மின்னுறுபதாகையோடுசோதிவீழ்ந்தபோதும்
தன்னிறத்துருவவாளிதடுப்பிலசார்ந்தபோதும்
மின்னதென்றறியானன்றுனினையதோர்மாற்றஞ்சொன்னான். (௧௧௯)

இலக்குமணனை இந்திரசித்து மெச்சிப்பேசுதல்.

அந்நரனல்லனுகிரணனனையனன்றேற்
பின்னரன்பிரமனென்பார்ப்பேசுகபிறந்துவாழும்

மன்னர்நம்பதியின்வந்துவரிசிலைபிடித்தகல்வி
இந்நரன்றன்னோடொப்பார்யாருளரினையரென்றான். (௧௨௦)

வாயிடைநெருப்புக்காலவுடனெடுங்குருதிவாரத்
தீயிடைநெய்வார்த்தன்னவெகுளியானுயிர்தீர்ந்தாலும்
ஓய்விடமில்லான்வல்லையோரிமையொடுங்காமுன்னம்
ஆயிரம்புரவிபூண்டவாழியந்தேரினான். (௧௨௧)

வேறு.

* ஆசையெங்கணுமம்புகவெம்புபோர்
ஓசைவிம்மவுருத்திரனும்முடல்
கூசவாயிரகோடிகொலைக்கணை
வீசிவிண்ணைவெளியிலதாக்கினான். (௧௨௨)

அத்திறத்திலனகனுமாயிரம்
பத்திபத்தியினெய்துவபல்கணை
சித்திரத்தினிற்சிந்தியிராவணன்
புத்திரற்குமோராயிரம்போக்கினான். (௧௨௩)

ஆயிரங்கணைபாய்ந்தனவாற்றருங்
காமெயரித்தலைநெய்யெனக்காந்துறத்
† தூயவன்சுடர்சூழொளிநெற்றியில்
தீயவெங்கணைநூறுசெலுத்தினான். (௧௨௪)

நெற்றிமேலொருநூறுநெடுங்கணை
உற்றபோதினும்யாதுமொன்றுற்றிலன்
மற்றவன்றொழிலோன்மணிமார்பிடை
முற்றவெங்கணைநூறுமுடுக்கினான். (௧௨௫)

நூறுவெங்கணைமார்பினுழைதலின்
ஊறுசோரியொடுள்ளமுஞ்சோர்தரத்
தேறலாந்துணையுஞ்சிலையூன்றியே
ஆறினன்றனதாற்றலிற்றேற்றிலான். (௧௨௬)

அநுமனிந்திரசித்தன் தேரைக் காலாலுதைத்துத்தள்ளுதல்.

புதையுநன்மணிபொன்னுருளச்சொடு
சிதையவாயிரம்பாய்பரிசிந்திட
வதையின்மற்றொருகூற்றெனமாருதி
உதையினாலவன்றேரையுருட்டினான். (௧௨௭)

பேயொராயிரம்பூண்டதுபெய்ம்மணி
ஏயதேரிமைப்பின்னிடையேறினான்

---

* ஆசை - திசை. † தூயவன் - இலக்குமணன்.

தூயவன்சுடர்த்தோளிணைமேற்சுடர்
தீயவெங்கணையைம்பதுசிந்தினான். (கஉஅ)

ஏறியேறியிழிந்தசல்லாலிகல்
வேறுசெய்திலன்வெய்யவன்வீரனும்
ஆறுகோடிப்பகழியினையிரு
நூறுதேரொருநாழிகைநூறினான். (கஉகூ)

ஆசிகூறினரார்த்தனராய்மலர்
வீசிவீசிவணங்கினர்விண்ணவர்
* ஊசனீங்கினருத்தரிகத்தொடு
தூதுவீசினர்நன்னெறிதுன்னினார். (கஙo)

அக்கணத்தினோராயிரமாயிரம்
மிக்கவெங்கணரக்கரவ்வீரனை
டொக்கவின்பமொருவழியூண்டினார்
புகுமுந்தினர்போரிடைப்பொன்றுவார். (கஙக)

தேரர்தேரினிவுளியர்செம்முகக்
காரர்காரினிடிப்பினர்கண்டையின்
தாரர்தாரணியும்விசும்புநதவழ்
பேரர்பேரிமுழக்கன்னபேசினார். (கஙஉ)

பார்த்தபார்த்ததிசைதொறும்பன்மழை
போர்த்தவானமெனவிடிபோர்த்தெழ
ஆர்த்தவோசையுமம்பொடுவெம்படை
தூர்த்தவோசையும்விண்ணிணைத்தூர்த்தவால். (கஙங)

ஆளியார்த்தனவாளரியார்த்தன
கூளியார்த்தனகுஞ்சரமார்த்தன
வாளியார்த்தனதேரிவர்மண்டிலம்
தூளியார்த்திலதாற்பிணந்துன்னலால். (கஙச)

வந்தணைந்தசொர்வாளரிவாவுதேர்
இந்திரன்றனைவென்றவனேறினான்
சிந்தினன்சரமாரிதிசைதிசை
அந்திவண்ணனெராம்பினகற்றினான். (கஙரு)

சுற்றும்வந்துபரந்துதொடர்ந்தவர்
எற்றுகின்றனவெய்தவெறிந்தன
அற்றுதிர்ந்தனவாயிரமவன்றலை
ஒற்றைவெங்கணையோடுமுருண்டவால். (கஙசு)

* ஊசனீங்கி - தமொற்றமொழிந்து.

குடர்கிடந்தனபாம்பெனக்கோண்மதித்
திடர்கிடந்தனசிந்தினதேர்த்திரள்
படர்கிடந்தனர்பல்படைக்கையினர்
கடர்கிடந்தனபோன்றகளத்தினே. (௧௩௭)

குண்டலங்களுமாரமுங்கோவையும்
கண்டநாணுங்கழலுங்கவசமும்
சண்டமாருதம்வீசத்தலத்துகும்
விண்டலத்தினின்மீனெனவீழ்ந்தவால். (௧௩௮)

அரக்கன்மைந்தனையாரியனம்பினால்
கரக்கனூறியெதிர்பொருகண்டகர்
சிரக்கொடுங்குலைக்குன்றுதிரட்டினான்
இரக்கமெய்திவெங்காலனுமெஞ்சவே. (௧௩௯)

சுற்றிவால்கொடுதூர்வுந்துகைக்கும்விட்
டெற்றும்வானினெடுத்தெறியும்மெதிர்
உற்றுமோதுமுதைக்குமுறுக்குமால்
‡ கொற்றவில்லியன்றேறியகூற்றமே. (௧௪0)

பார்க்குமஞ்சவுறுக்கும்பகட்டினால்
தூர்க்கும்வேலையைத்தோள்புடைகொட்டினின்
றார்க்குமாயிரந்தேர்பிடித்தங்கையால்
ஈர்க்குமையனன்றேறியயானையே. (௧௪௧)

மாவும்யானையும்வாளுடைத்தானையும்
பூவுநீரும்புனைதளிரும்மெனத்
தூவுமள்ளிப்பிசையுந்துகைக்குமால்
சேவகன்றெரிந்தேறியசீயமே. (௧௪௨)

உரகம்பூண்டவுருளைபொருந்தின
இரதமாயிரமேயெனுமாத்திரை
சரதமாகத்தரைப்படச்சாடுமால்
வரதனன்றுவந்தேறியவாசியே. (௧௪௩)

அவ்விடத்தினிவாய்மருந்தாலழல்
வெவ்விடத்தினையுண்டவர்மீண்டென
எவ்விடத்தினும்வீழ்ந்தவினைத்தலைத்
தெவ்வடக்கும்வலியவர்தேறினார். (௧௪௪)

தேறினார்கணெருப்புகச்சீறினார்
ஊறினார்வந்திளவலையொன்றினார்

‡ கொற்றவில்லி-வெற்றிபொருந்திய விற்படையினன இலக்குமணன்.

மாறுமாறுமலையுமரங்களும்
நூறுமாயிரமுங்கொடுநூறினர். (கசரு)

விகடமுற்றமரனொடுவெற்பினம்
புகடவுற்றபொறுத்தனபோவன
துகடவத்தொழில்செய்துறைக்கம்மியர்
சகடமொத்தனதாரணிதேரெலாம். (கசசு)

வாலிமைந்தனோர்மாமரம்வாங்கினன்
காலில்வந்தவரக்கனைக்காவிது
போலுமுன்னுயிருண்பதுபுக்கென
மேனிமிர்ந்துநெருப்புகவீசினன். (கசஎ)

எரழித்ததுசெய்தவனீண்டெழிற்
சீரழித்தவனுமெனத்தேவர்கள்
ஊரழித்தவுயர்வரைத்தோளவன்
தேரழித்ததிமைப்பினிற்சென்றதால். (கசஅ)

அந்தவேலையினூர்த்தெழுந்தாடினர்
சிந்தைசீரினுயர்ந்தனர்தேவர்கள்
தந்தைதந்தபண்டுற்றசழக்கெலாம்
எந்தைதீர்த்தனனென்பதோரேம்பலால். (கசகூ)

அழிந்ததேரினின்றந்தரத்தக்கணத்
தெழுந்துமற்றோரிரதமுற்றேறினன்
கழிந்துபோகலைநில்லெனக்கைக்கணை
பொழிந்துசென்றனன்றீயெனப்பொங்கினன். (கரு0)

இந்திரன்மகன்மைந்தனையின்னுயிர்
தந்துபோகெனச்சாரலுற்றான்றனை
வந்துமற்றையவானரவீரரும்
முந்துபோர்க்குமுறைமுறைமுற்றினர். (கருக)

மரமுங்குன்றுமடிந்தவரக்கர்தம்
சிரமுந்தேரும்புரவியுந்திண்கரிக்
கரமுமாளியும்வாரிக்கடியவன்
சரமுந்தாழ்தரவீசினர்தாங்கினர். (கருஉ)

அனையகாலையிலாயிரமாயிரம்
வினையவெங்கணரக்கரைவிண்ணவர்
நினையுமாத்திரத்தாருயிர்நீக்கினன்
மனையும்வாழ்வுமுறக்குமுமாற்றினன். (கருங)

ஆனையுந்தடந்தேருந்தன்னாருயிர்த்
தானையும்பரியும்பட்டதன்மையை
மானவெங்கணரக்கன்மனக்கொளாப்
போனவென்றியன்றீயெனப்பொங்கினான். (க௫௪)

சீர்த்தடம்பெருஞ்சில்லியந்தேரினர்
காத்துநின்றவிருவரைக்கண்டனன்
ஆர்த்ததம்பெருஞ்சேனைகொண்டண்டமேல்
ஈர்த்தசோரிப்பரவைநின்றீர்த்தலால். (க௫௫)

நேர்செலாதிடைநின்றனர்நீணெடுங்
கார்செலாவிருள்சீறியக்கண்ணகன்
தேர்செலாதுவிசும்பிடைச்செல்வதோர்
போர்செலாது * பிணத்தின்பிறக்கமே. (க௫௬)

அன்றுதன்னயனின்றவரக்கரை
ஒன்றுவாண்முகநோக்கியொருவிலான்
நன்றுநம்படைநாற்பதுவெள்ளமும்
கொன்றுநின்றபடியெனக்கூறினான். (க௫௭)

ஆயவீரருமய்யவமர்த்தலை
நீயுநாற்பதுவெள்ளநெடும்படை
மாயவெங்கணைமாரிவழங்கினை
ஒய்வில்வெஞ்செருவொக்குமென்றோதினார். (க௫௮)

வந்துநேர்ந்தனர்மாருதிமேல்வரும்
அந்திவண்ணனுமாயிரமாயிரம்
சிந்தினான்கணைதேவரைவென்றவன்
நுந்தநுந்தமுறைமுறைநூறினான். (க௫௯)

ஆறுமேழுமறுபதுமைம்பதும்
நூறுமாயிரமுங்கணைநூக்கிவந்
தூறினாரையுணர்வுதொலைத்துயிர்
தேறினாரைநெடுநிலஞ்சேர்த்தினான். (க௬௦)

கதிரின்மைந்தன்முதலினோர்காவலர்
உதிரவெள்ளத்தினொல்கியொதுங்கலும்
எதிரினின்ற † விராவணியீடற
வெதிரின்காட்டெரிபோற்சரம்வித்தினான். (க௬க)

உளைவுதோன்றவிராவணியொல்கினான்
இளையினின்றவிருவர்கிளைத்தலும்

---

* பிணத்தின்பிறக்கம்-பிணத்தினச்சம்.
† இராவணி-இராவணன்மகன்.

அளவில்சேனையவிதரவாரியற்
இளையவீரன்சுடுசரமேவினான். (௧௬௨)

வேறு.

தெரிகணைமாரிபெய்யத்தேர்களுஞ்சினைக்கைமாவும்
பரிகளுந்தாமுமன்றுபட்டவர்கிடக்கக்கண்டார்
இருவருநின்றார்மற்றங்கிராக்கதரென்னும்பேரார்
ஒருவருநின்றாரில்லையுள்ளவரோடிப்போனார். (௧௬௩)

ஓடினாரரக்கர்தண்ணீருண்ணசையுலந்தநாவர்
தேடினாரெதிர்ந்துகையான்முகிலினைமுகந்துதேக்கிப்
பாடுறுபுண்கடோறும்பசும்புனல்பாயப்பாய
வீடினார்சிலவர்சில்லோர்பெற்றிலர்விளிந்துவீழ்ந்தார். (௧௬௪)

வெங்கணைதிறந்தமெய்யர்விளிந்திலர்விரைந்துசென்றார்
செங்குழற்கற்றைசோரத்தெரிவையராற்றத்தெய்வப்
பொங்கிரும்பள்ளிபுக்காரவருடல்பொருந்தப்புல்லி
அங்கவராவியோடுந்தம்முயிர்போக்கியற்றார். (௧௬௫)

பொறிக்கொடும்பகழிமார்பர்போயினரிடங்கள்புக்கார்
மறிங்கொளுஞ்சிறுவந்தம்மைமற்றுளசுற்றந்தம்மைக்
குறிக்கொளூஉமென்றுகூறியவர்முகங்குழையநோக்கி
நெறிக்கொளுங்கூற்றைநோக்கியாருயிரொறுத்துநீத்தார். (௧௬௬)

தாமரைக்கண்ணன்றம்பிதன்மையீதாகின்மெய்ம்மை
வேமரைக்கணத்தினிவ்வூரிராவணிவிளிதன்முன்னம்
மாமரக்கானிற்குன்றின்மறைந்திருமறையவல்லை
போமெனத்தமரைச்சொல்லிச்சிலருடனுறந்துபோனார். (௧௬௭)

வரையுண்டமதுகைமேனிமருமத்துவள்ளல்வாளி
இரையுண்டுதுயிலச்சென்றார்வாங்கிடினிறப்பெமென்றார்
பிரையுண்டபாலினுள்ளம்பிறிதுறப்பிறர்முன்சொல்லா
உரையுண்டநல்லோரென்னவுயிர்த்துயிர்த்துழைப்பதானார். (௧௬௮)

தேரிடைச்செல்லார்மானப்புரவியிற்செல்லார்செங்கட்
காரிடைச்செல்லார்காலிற்காலெனச்செல்லார்காவல்
ஊரிடைச்செல்லார்நாளுமுயிரின்மேலுடையவன்பால்
போரிடைத்திரியாநின்றுநடுங்கினர்புறத்துப்போகார். (௧௬௯)

நொய்தினிற்சென்றுகூடியிராவணியுளவைநோக்கி
வெய்தினிற்கான்றுவீழ்ப்பவென்பதோர்வெகுளிவீங்கிப்
பெய்துழிப்பெய்யுமாரியனையவன்பிணங்குகூற்றின்
கையினிற்பெரியவம்பாற்கவசத்தைக்கழித்துவீழ்த்தான். (௧௭௦)

கவசத்தைக்கழித்துவீழ்ப்பக்காப்புறுகடனின்றாகி
அவசத்தையடைந்தவீரனறிவுறுந்துணையின்வீரத்
துவசத்தின்புரவித்திண்டேர்கடிதுறத்தூண்டியாமித்
திவசத்தின்முடித்தும்வெம்போரெனச்சினந்திருகிச்சென்றார். [1](கஎக)

மாருதிமேலுமையன்மார்பினுந்தோளின்மேலும்
தேரினரிருவர்சென்றார்சிந்தினபகழிசிந்தி
ஆரியன்வாகைவில்லுமச்சுடைத்தேருமத்தேர்
ஊர்குவாருயிருங்கொண்டான்புரவியினுயிருமுண்டான். (கஎஉ)

இருவருமிழந்தவில்லாரெழுமுளைவயிரத்தண்டர்
உருமெனக்கடிதினோடியனுமனையிமைப்பினுற்றார்
பொருகனற்பொறிகள்சிந்தப்புடைத்தனர்புடைத்தலோடும்
பருவலிக்கரத்தினாற்றண்டிரண்டையும்பறித்துக்கொண்டான். (கஎங)

தண்டவன்கையதாயதன்மையைத்தறுகணாளர்
கண்டனர்கண்டுசெய்யலாவதொன்றானுங்காணார்
கொண்டனனெறிந்துநம்மைக்கொல்லுமென்றச்சங்கொண்டார்
உண்டசெஞ்சோறுநோக்காருயிருக்கேயுதவிசெய்தார். (கஎச)

காற்றுவந்தசைத்தலாலுங்காலமல்லாமையாலும்
கூற்றுவந்தாவிகொள்ளுங்குறியின்மைகுறித்தலாலும்
தேற்றம்வந்தெய்தினின்றமயக்கமுநோவுந்தீர்ந்தார்
ஏற்றமும்வலியும்பெற்றாரெழுந்தனர்வீரரெல்லாம். (கஎரு)

அங்கதன்குமுதனீலன்சாம்பவனருக்கன்மைந்தன்
பங்கமின்மயிந்தன்றம்பிசதவலிபனசன்முன்னாச்
சிங்கவேறனையவீரர்யாவருஞ்சிகரமேந்தி
மங்கலம்வானோர்சொல்லமழையெனவார்த்துவந்தார். (கஎசு)

அத்தனையோருங்குன்றமளப்பிலாவசனியேற்றோ
டொத்தனநெருப்புவீசுமுருமெனவொருங்கவுய்த்தார்
இத்தனைபோலுஞ்செய்யுமிகலெனாமுறுவலெய்திச்
சித்திரவில்வலோனுஞ்சின்னபின்னங்கள்செய்தான். (கஎஎ)

சூரியாத்தமனகாலம் ஆதல்.

மரங்களுமலையுங்கல்லுமழையெனவழங்கிவந்து
நெருங்கினார்நெருங்கக்கண்டுமொருதனிநெஞ்சும்வில்லும்
சரங்களுந்துணையாய்நின்றநிசாசரன்றனிமைநோக்கி
இரங்கினனென்னமேல்பாற்குன்றுபுக்கருக்கனின்றான். (கஎஅ)

வாழியவேதநான்குமனுமுதல்வந்தநூலும்
வேழ்வியுமெய்யுந்தெய்வவேதியர்விளைவுமஃதே

ஆழியங்கமலக் * கையானாகியபரமனென்னா
ஏழையருள்ளமென்னவிருண்டனதிசைகளெல்லாம். (௧௭௯)

நாகமேயனையநம்பநாழிகையொன்று † நான்கு
பாகமேகாலமாகப்படுத்தியேற்பட்டானன்றேல்
வேகவாளரக்கர்காலம்விளைந்ததுவிசும்பின்மீதா
ஏகுமேல்வெல்வனென்பதிராவணற்கிளவல்சொன்னான். (௧௮0)

அத்தனைவீரர்மேலுமாண்டகையனுமன்மேலும்
எத்தனைகோடிவாளிமழையெனவெய்யாநின்ற
வித்தகவில்லினானைக்கொல்வதுவிரும்பிவீரன்
சித்திரத்தேரைத்தெய்வப்பகழியாற்சிதைத்துவீழ்த்தான். (௧௮௧)

இந்திரசித்து வானத்தின் மறைதல்.

அழித்ததேராழுந்தாமுன்னமம்பொடுகிடந்துவெம்பி
உழைத்துயிர்விடுவதல்லாலுறுசெருவன்றேமென்று
பிழைத்திவர்போவரல்லர்பாசத்தாற்பிணிப்பெனென்னா
விழித்திமையாதமுன்னம்வில்லொடும்விசும்பிற்சென்றான். (௧௮௨)

பொன்குலாமேனிமைந்தன்றன்னொடும்புகழ்தற்கொத்தான்
வன்கலாமியற்றிநின்றான்மறைந்தருமனத்தனாகி
மின்குலாங்கழற்கால்வீரன்விண்ணிடைவிரைந்ததன்மை
என்கொலாமென்னவஞ்சிவானவரிரியல்போனார். (௧௮௩)

தாங்குவிற்கரத்தன்றூணிதழுவியபுறத்தன்றன்னின்
ஓங்கியுற்றெரியாநின்றவெகுளியினுயிர்ப்பன்றீயன்
தீங்கிழைப்பவர்கட்கெல்லாஞ்சீரியன்மாயச்செல்வன்
வீங்கிருட்பிழம்பினும்பர்வேகத்தின்மீதினானான். (௧௮௪)

இந்திரசித்தன்மாயையால் அணுவுருக்கோடல்.

தணிவறப்பண்டுசெய்ததவத்தினுந்தருமத்தானும்
பிணியறுப்பவரிற்பெற்றவரத்தினும்பிறப்பினானும்
மணிநிறத்தரக்கன்செய்தமாயமந்திரத்தினானும்
அணுவெனச்சிறியதாங்கோராக்கையுமுடையானானான். (௧௮௫)

வாங்கினான்மலரின்மேலவானவன்வானக்கங்கை
தாங்கினானுலகந்தாங்குஞ்சக்கரத்தவனென்றாலும்
வீங்குவான்றோளைவீக்கிவீழ்த்தலான்மீள்கிலாத
ஓங்குவாளரவினாமத்தொருதனிப்படையையுன்னி. (௧௮௬)

---

* கையானாகியம்பரமனென்னா என்றும் பாடம்.
† நான்குபாகம் - கால்நாழிகையளவு.

ஆயினகாலத்தார்த்தாரமர்தொழிலஞ்சியப்பால்
போயினனென்பதுன்னிவானரவீரர்போல்வார்
நாயகற்கிளையகோவுமன்னதேநினைந்துநக்கான்
மாயையைத்தெரியவுன்னார்போர்த்தொழின்மாற்றிநின்றார். (௧௮௭)

அதுகணத்தனுமன்றோணின்றையனுமிழிந்துவெய்ய
கதுவலிச்சிலையைவென்றியங்கதன்கையதாக்கி
முதுகுறச்சென்றுநின்றகணையெலாமுறையின்வாங்கி
விதுவிதுப்பாற்றலுற்றான்விளைகின்றதுணர்ந்திலாதான். (௧௮௮)

விட்டனனரக்கன்வெய்யபடையினைவிடுத்தலோடும்
எட்டினொடிரண்டுதிக்குமிருடிரிந்திரியவோடிக்
கட்டினதென்பமன்னோகாகுத்தற்கிளையகாளை
தட்டவான்வயிரத்திண்டோண்மலைகளையுளையவாங்கி. (௧௮௯)

இறுகுறப்பிணித்தலோடும்யாவையுமெதிர்ந்தபோதும்
மறுகுறக்கடவானல்லன்மாயமென்றுணர்வானல்லன்
உறுகுறைத்துன்பமில்லானொடுங்கினன்செய்வதோரான்
அறுகுறைக்களத்தைநோக்கியந்தரமதனைநோக்கும். (௧௯௦)

* காலுடைசசிறுவன்மாயக்கள்வனைக்கணத்தின்காலை
மேல்விசைத்தெழுந்துநாடிப்பிடிப்பெனென்றுறுக்கும்வேலை
எல்புடைப்பாசமேனாளிராவணன்புயத்தைவாலி
வால்பிணித்தென்னச்சுற்றிப்பிணித்ததுவயிரத்தோளை. (௧௯௧)

மற்றையோர்தமையுமெல்லாம்வாளெயிற்றரவம்வந்து
சுற்றினவயிரத்தூணின்மலையினிற்பெரியகோள்கள்
இற்றனவிற்றவென்னவிறுக்கினவிளகாவுள்ளம்
தெற்றெனவுடையவீரரிருந்தனர்செய்வதோரார். (௧௯௨)

மலையெனவெழுவர்வீழ்வர்மண்ணிடைப்புரள்வர்வானில்
தலைகளையெடுத்துநோக்கித்தழலெழவிழிப்பர்தாவி
அலைகிளர்வாலாற்பாரினடிப்பர்வாய்மடிப்பராண்மைச்
சிலையவற்கிளையகோவைநோக்குவருள்ளந்தீவர். (௧௯௩)

வீடணன்முகத்தைநோக்கிவினையுண்டேயிதனுக்கென்பர்
மூடினகங்குன்மாலையிருளினைமுனிவர்மொய்ம்பில்
ஈடறத்தக்கபோலாநம்மெதிரென்றுவேந்தல்
ஆடகத்தோளைநோக்கிநகைசெய்வர்விழுவரஞ்சார். (௧௯௪)

ஆரிதுதீர்க்கவல்லாரஞ்சனைபயந்தவள்ளல்
மாருதிபிழைத்தான்கொல்லோவென்றனர்மறுகிநோக்கி

---

* காலுடைச்சிறுவன் - அனுமன்.

வீரனைக்கண்டெபட்டதிதுகொலாமென்றுவிம்மி
வார்கழற்றம்பிதன்மைகாணுமோவள்ளலென்பார். (கசு௯)

என்சென்றதன்னசொல்லினெறுழ்வலியரக்கனெய்தான்
மின்சென்றதன்னவானத்துருமினம்வீழ்வவென்னப்
பொன்சொன்றவடிம்பின்வாளிபுகையொடுபொறியுஞ்சிந்தி
முன்சென்றமுதுகிற்பாயப்பின்சென்றமார்பமுற்ற. (கசுசு)

மலைத்தலைக்காலமாரிமறித்தெதறிவாடைமோதத்
தலைத்தலைமயங்கிவீழுந்தன்மையிற்றலைகள்சிந்தும்
கொலைத்தலைவாளிபாயுங்குன்றனகுவவுத்தோளார்
நிலைத்திலருலைந்துசாய்ந்தார்நிமிர்ந்ததுகுருதிநீத்தம். (கசுஎ)

ஆயிரகோடிமேலுமம்புதனுகைத்தூடு
போயினபோதுமொன்றுந்துடித்திலன்பொடித்துமானத்
தீயெரிசிதறுஞ்செங்கணஞ்சனைச்சிங்கமேனி
நாயகன்றம்பிக்குற்றதுயர்சுடநடுங்குகின்றான். (கசுஅ)

வேறுளவீரரெல்லாம்வீழ்ந்தனருருமின்வெய்ய
நூறுமாயிரமும்வாளியுடலிடைநுழையச்சோரி
ஆறுபோலொழுகவண்ணலங்கதனநந்தவாளி
ஏறினமெய்யனேனுமிருந்தனனிடைந்திலாதான். (கசுகூ)

கதிரவன்காதன்மைந்தன்கழலிளம்பசுங்காயன்ன
எதிரெதிர்பகழிதைத்தயாக்கையனெரியுங்கண்ணன்
வெதிர்நெடுங்கானமென்னவேகின்றமனத்தன்மெய்யன்
உதிரவெங்கடலுட்டாதையுதிக்கின்றான்றனையுமொத்தான். (உ00)

வெப்பாரும்பாசம்வீக்கிவெங்கணைவளைக்குமெய்யன்
ஒப்பாருமில்லான்றம்பியுணர்ந்திருந்தின்னலுய்ப்பான்
இப்பாசமாய்க்குமாயம்யான்வல்லெனென்பதோர்ந்தும்
அப்பாசம்வீசவாற்றாதழிந்தநல்லறிவுபோன்றான். (உ0க)

வேறு.

அம்பெலாங்கதிர்களாகவழிந்தழிந்திழியுமாகச்
செம்புனல்வெயிலிற்றோன்றத்திசையிருளிரியச்சீறிப்
பம்புபேரொளியநாகம்பற்றியவடிவத்தோடும்
உம்பர்நாடிறந்துவீழ்ந்தவொளியவனேயுமொத்தான். (உ0உ)

மயங்கினன்வள்ளறம்பிமற்றையோர்முற்றுமண்ணை
முயங்கினர்மேனியெல்லாமூடினரக்கன்மூரித்
தயங்குபேராற்றலானுந்தன்னுடைறத்தவாளிக்
குயங்கினனுளைந்தான்வாயாலுதிரநீருமிழாநின்றான். (உ0௩)

இந்திரசித்து ராவணனரண்மனையடைதல்.

சொற்றதுமுடித்தேனென்னையென்னுடற்சோர்வைநீக்கி
மற்றதுமுடிப்பெனென்றெண்ணினன்மனிதன்வாழ்க்கை
இற்றதுகுரங்கின்றானையிறந்ததென்றிரண்டுபாலும்
கொற்றமங்கலங்களார்ப்பவிராவணன்கோயில்புக்கான். (௨0௪)

ஈர்க்கடைப்பகழிமாரியிலக்குவனென்னநின்ற
நீர்க்கடைமேகந்தன்னைநீக்கியுஞ்செருவினீங்கான்
வார்க்கடைமதுகைக்கொங்கைமணிக்குறுமுறுவன்மாதர்
போர்க்கடைக்கருங்கண்வாளிபுயந்தொறும்பொழியப்புக்கான். (௨0௫)

ஐயிருகோடிசெம்பொன்மணிவிளக்கங்கையேந்தி
மையறுவானநாட்டுமாதருமற்றைநாட்டுப்
பையரவல்குலாரும்பலாண்டிசைபரவத்தங்கள்
தையலரறுகுதூவிவாழ்த்தினர்தழுவச்சார்ந்தான். (௨0௬)

இந்திரசித்துத் தன்மாளிகையடைதல்.

தந்தையையெய்தியன்றாங்குற்றுளதன்மையெல்லாம்
சிந்தையினுணரக்கூறித்திருதியிடர்நீயெந்தாய்
நொந்தனென்யாக்கைநோய்தினுற்றிமேனுவல்வனென்றுப்
புந்தியிலனுக்கந்தீர்ப்பான்றன்னுடைக்கோயில்புக்கான். (௨0எ)

விபீடணன் புலம்புதல்.

இத்தலையின்னலுற்றவீடணனிழைப்பதோரான்
மத்துறுதயிரினுள்ளமறுகினன்மயங்குகின்றான்
அத்தலைக்கொடியனென்னையடிலனளியத்தேனேன்
செத்திலன்வலியெனின்றேனென்றுபோய்வையஞ்சேர்ந்தான். (௨0அ)

பாசத்தாலநகன்றம்பிணிப்புண்டபடியேபட்ட
நேசத்தாரெல்லாம்வீழ்ந்தார்யானொருதமியேனின்றேன்
தேசத்தாரென்னையென்னென்சிந்திப்பாரென்றுதீயும்
வாசத்தார்மாலைமார்பன்வாய்திறந்தரற்றலுற்றான். (௨0௯)

கொல்வித்தானுடனேநின்றானென்பரோகொண்டுபோனான்
வெல்வித்தான்மகனையென்றுபகர்வரோவினைவிற்கெல்லாம்
நல்வித்தாய்நடந்தான்முன்னேயென்பரோநயந்தோர்சத்தம்
கல்வித்தாய்வார்த்தையென்றுகரைவித்தானுயிரைக்கண்போல். (௨௧0)

போரவன்புரிந்தபோதேபொருவருவயிரத்தண்டால்
தேரொடும்புரண்டுவீழச்சிந்தியென்சிந்தைசெப்பும்
வீரமுன்னெறித்தேனல்லேன்விளிந்திலேன்மெலிந்தேனிஞ்ஞான்
றாருறவாகத்தக்கேனளியத்தேனழுந்துகின்றேன். (௨௧௧)

ஒத்தலைத்தொக்கவீடியுய்வினுமுய்வித்துள்ளம்
கைத்தலைநெல்லிபோலக்காட்டிலேன்கழிந்துமில்லேன்
அத்தலைக்கல்லேன்யானீண்டவயமென்றடைந்துநின்ற
இத்தலைக்கல்லேனல்லேனிருதலைக்கொள்ளியொப்பேன். (உகஉ)

அனையனபலவும்பன்னியாகுலித்தரற்றுவானை
வினையுளபலவுஞ்செய்யத்தக்கனவீரநீயும்
நினைவிலார்போலநெஞ்சநெகிழ்தியோநீத்தியென்று
இனையனசொல்லித்தேற்றியனலன்மற்றிதுவுஞ்சொன்னான். (உகங)

இலக்குமணனை நாகபாசங்கட்டியதுகேட்டு இராமன்வருந்துதல்.

நீயினிதிருத்தியான்போய்நெடியவற்குரைப்பெனென்னாப்
போயினனனலன்போயப்புண்ணியன்பொலன்கொள்பாதம்
மேயினன்வணங்கியுற்றவினையெலாமியம்பிநின்றான்
ஆயிரம்பெயரினானுமருந்துயர்க்கடலுளாழ்ந்தான். (உகச)

உரைத்திலனொன்றுநந்தன்னையுணர்ந்திலனுயிருமோடக்
கரைத்திலன்கண்ணினீரைக்கண்டிலன்யாதுங்கண்ணால்
அரைத்திலனுலகமெல்லாமங்கையாற்பொங்கிப்பொங்கி
இரைத்திலனுளனென்றெண்ணியிருந்தனன்விம்மியேங்கி. (உகரு)

இராமன் செருக்கள மடைதல்.

விம்மினன்வெதும்பிவெய்துற்றேங்கினனிருந்தவீரன்
இம்முறையிருந்துசெய்வதியாவதுமில்லென்றெண்ணிப்
பொம்மெனவெழுந்துமநாய்திற்பொருக்கெனவிசையிற்போனான்
தெம்முறைதுறந்துவென்றசெங்களமருங்கிற்சேர்ந்தான். (உகசு)

இருளின் தன்மை.

இழிந்தெழுகாளமேகமெறிகடலனையமற்றும்
ஒழிந்தனநீலவண்ணமுள்ளனவெல்லாமொக்கப்
பிழிந்ததுகாலமாகக்காளிமைப்பிழம்புபோதப்
பொழிந்ததுபோன்றதன்றேபொங்கிருட்கங்குற்போர்வை. (உகஎ)

இராம னக்கினியாத்திரத்தா லொளியுண்டாக்குதல்.

ஆரிருளன்னதாகவாயிரநாமத்தண்ணல்
சீரியவனலித்தெய்வப்படைக்கலந்தெரிந்துவாங்கிப்
பாரியவிடுத்தலோடும்பகையிருளிரிந்துபாறச
சூரியனுச்சியுற்றாலொத்ததவ்வுலகின்சூழல் (உகஅ)

படையுறுபிணத்தின்பம்மற்பருப்பதந்துவன்றிப்பல்வே
றிடையுருகுருதிவெள்ளத்தெறிகடலெழுநீர் * தம்பி

* பொங்கி என்றும் வேறுபாடமுண்டு.

உடையுறுதலைக்கையண்ணலுயிரெலாமொருங்கியுண்ணும்
கடையுறுகாலத்தாழியுலகன்னகளத்தைக்கண்டான். (உ௧௯)

இராம னிலக்குமணனைக் காண்டல்.

பிணப்பெருங்குன்றினூடுங்குருதிநீர்ப்பெயரப்பேரும்
நிணப்பெருஞ்சேற்றினூடும்படைக்கலநெருக்கினூடும்
மணப்பெருங்களத்தின்மோடிமங்கலவாழ்க்கைவைப்பில்
கணத்தினும்பாதிப்போதிற்றம்பியைச்சென்றுகண்டான். (உஉ0)

இராமன் புலம்புதல்.

அய்யவனுக்கைதன்மேல்விழுந்துமார்பழுந்தப்புல்லி
உய்யலனென்னவாவியுயிர்த்துயிர்த்துருகுகின்றான்
பெய்யிருதாரைக்கண்ணன்பெருந்துளிபிறங்கவானின்
வெய்யவன்றன்னைச்சேர்ந்தநீனிறமேகமொத்தான். (உஉ௧)

உழைக்கும்வெய்துயிர்க்குமாவியுருகும்போயுணர்வுசோரும்
இழைக்குவதறிதறேற்றானிலக்குவாவிலக்குவாவென்
றழைக்குந்தன்கையைவாயின்மூக்கின்வைத்தயர்க்குமையா
பிழைத்தியோவென்னுமெய்யேபிறங்கேயும்பிறந்திலாதான். (உஉஉ)

தாமரைக்கையாற்றாளைத்தைவருங்குறங்கைத்தட்டும்
தூமலர்க்கண்ணைநோக்குமார்பிடைத்துடிப்புண்டென்று
ஏழுறும்விசும்பைநோக்குமடிக்குந்தன்மார்பினேற்றும்
பூமியின்வளர்த்துங்கள்வன்போயதன்றோவென்னும். (உஉ௩)

வில்லினைநோக்கும்பாசவிசிப்பினைநோக்கும்வீயா
வல்லினைநோக்கும்வானத்தமரரைநோக்கும்பாரைக்
கல்லுவென்வேரோடென்னும்பவளவாயகறிக்குங்கற்றோர்
சொல்லினைநோக்குந்தன்போற்புகழினைநோககுநதோளான. (உஉ௪)

வீரரையெல்லாம்பார்க்கும்விதியினைப்பார்க்கும்வீரப்
பாரவெஞ்சிலையைப்பார்க்கும்பகழியைப்பார்க்கும்பாரின்
யாரிதுபட்டாரென்போலெளிவந்தவண்ணமென்னும
* நேரிதுபெரிதென்றேதுமளவையினிமிரகின்றான். (உஉ௫)

விபீடணன் இது நாகபாசத்தாலானதெனல்.

எடுத்தபோரிலங்கைவேந்தன்மைந்தனேடிளையகோவுக்
கடுத்ததென்றன்னைவல்லையழைத்திலையமரர்பாசம்
தொடுத்தகைதலையினேடுந்துணித்துயிர்துடைக்கவென்னைக்
கெடுத்தனைவீடணாநீயென்றனன்கேடிலாதான். (உஉ௬)

---

* 'நேரிது பெரிதன்றேது மளவையான் நிமிரகின்றான்'—நேராக இது பெரிதென்று சொல்லுகின்ற அளவையினுமுயரநின்றான்.

அவ்வுரையருளக்கேட்டானழிகின்றவரக்கன்றம்பி
இவ்வழியவன்வந்தேற்பதறிந்திலமெதிர்ந்தபோதும்
வெவ்வழியவனேதோற்குமென்பதுவிரும்பினின்றேன்
தெய்வவன்பாசஞ்செய்தசெயலிந்தமாயச்செய்கை. (௨௨௭)

விபீடணன் பின்னு நடந்தவைகளையுரைத்தல்.

அற்றதிகாயனுக்கைதலையிலதாக்கியாண்ட
வெற்றியனுயவீரன்மீண்டிலனிலங்கைமேனாள்
பெற்றவனெய்துமென்னும்பெற்றியையுன்னிப்பிற்போ
தற்றனன்மைந்தன்றானைநாற்பதுவெள்ளத்தோடும். (௨௨௮)

ஈண்டுநஞ்சேனைவெள்ளமிருபதிற்றிரட்டிமாளத்
தூண்டினன்பகழிமாரிதலைவர்கடொலைந்துசோர
மூண்டெழுபோரிற்பாரின்முறைமுறைமுடித்தான்பின்னர்
ஆண்டகையோடுமேற்றானுயிரமடங்கற்றேரான். (௨௨௯)

அனுமன்மேனின்றவையனுயிரந்தேருமாயத்
தனுவலங்காட்டிப்பின்னைநாற்பதுவெள்ளத்தானை
பனியெனப்படுவித்தன்னன்பலத்தையுந்தொலைத்துப்பட்டான்
இனியெனவயிரவாளியெண்ணிலாறத்தினெய்தான். (௨௩௦)

ஏவுண்டபகுவாயோடுங்குருதிநீரிழியநின்றான்
தாவுண்டதானைமுற்றும்படவொருதமியன்சோர்வான்
போவுண்டதென்னினையபுணர்க்குமாமாயமென்று
பாவுண்டகீர்த்தியானுக்குணர்த்தினன்பரிதிபட்டான். (௨௩௧)

மாயத்தாலிருண்டதாழியுலகெலாம்வஞ்சன்வானில்
போயத்தானுடையவஞ்சவரத்தினான்மொளித்துப்போயிவ்
வாயத்தார்பாசமேவியயர்வித்தானம்பில்வெம்பும்
காயத்தானென்னச்சொல்லிவணங்கினன்கலுழிக்கண்ணான். (௨௩௨)

விபீடணனுபாயங் கூறல்

பின்னையுமெழுந்துபேர்த்தும்வணங்கியெம்பெருமயாரும்
இன்னுயிர்துறந்தாரல்லரிறுக்கியபாசமிற்றால்
புன்னனைப்பகழிக்கோயுந்தரத்தரோபுலம்பியன்னை
இன்னலுற்றயரல்வெல்லாதருமத்தைப்பாவமென்றான். (௨௩௩)

நாகபாசத்தின் வரலாறு கூறுதல்.

யாரிதுகொடுத்ததேவமென்னனையீதிதனைத்தீரும்
காரணம்யாதுநின்றுணுணர்ந்ததுகழறிக்காணென்
றாரியன்வினவவண்ணல்வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ளபரிசெலாந்தெரியச்சொன்னான். (௨௩௪)

ஆழியஞ்செல்வபண்டிங்ககலிடமளித்தவண்ணல்
வேழ்வியிற்படைத்தநீசன்வேண்டினன்பெற்றுவெற்றித்
தாழ்வுறுசிந்தையோர்க்குத்தவத்தினாலளித்ததாணை
ஊழியினிமிர்ந்தகாலத்துருமினதாற்றமீதால். (௨௫௫)

அன்னதனாற்றலன்றேயாயிரங்கண்ணினானைப்
பின்னுறவயிரத்திண்டோள்பிணித்ததுபெயர்த்தொன்றெண்ணி
என்னினியனுமன்றோளையிறுக்கியதினாலாண்டும்
பொன்னுலகாளுஞ்செல்வந்துறந்ததுபுலவோரெல்லாம். (௨௫௬)

தான்விடின்விடுமிதொன்றேசதுமுகன்முதல்வராய
வான்விடின்விடாதுமற்றிம்மண்ணினையெண்ணியென்னே
ஊன்விடவுயிர்போய்நீங்கநீங்கும்வேறுய்தியில்லைத்
தேன்விடுதுளபத்தாராயிதுவிதன்செயகையென்றான். (௨௫௭)

ஈய்ந்துளதேவர்மேலேயெழுகென்றேவுலகம்யாவும்
தீய்ந்துகநூறியானுந்தீர்கென்றேவிலங்கைசிந்தப்
பாய்ந்தவர்சுற்றமுற்று படுப்பென்றேவியன்றபண்போ
டேய்ந்ததுபகர்தியென்றானிமையவரிடுக்கண்டீர்ப்பான். (௨௫௮)

வரங்கொடுத்தினையபாசம்வழங்கினான்றானேநேர்வந்
திரங்கிடத்தக்கதுண்டேலிகழ்கிலெனில்லையென்னின்
உரங்கெடுத்துலகமூன்றுமொருவனேரம்பிற்சுட்ட
புரங்களிற்றீத்துக்காண்பேன்பொடியொருகடிகைப்போழ்தின். (௨௫௯)

எம்பியேயிறக்குமென்னின்னெனக்கினியிலங்கைவேந்தன்
தம்பியேபுகழ்தானென்னைபழியென்னையறந்தானென்னை
நம்பியேயென்னைச்சேர்ந்தநண்பரினல்லவாமேல்
உம்பருமுலகத்துள்ளவுயிர்களுமுதவிபார்த்தால். (௨௬௦)

என்றுகொண்டியம்பியீண்டிங்கொருவனிங்கிடுக்கண்செய்ய
வென்றருமுலகைமாய்த்தல்விதியன்றாலென்றுவிம்மி
நின்றுநின்றுன்னியுன்னிநெடிதுயிர்த்தலக்கணுற்றான்
தன்றுணைத்தம்பிமேலும் † துணைவர்மேற்றாழ்ந்தவன்பான். (௨௬௧)

மீட்டும்வந்திளையவீரன்வெற்பன்னவிசயத்தோளைப்
பூட்டுறுபாசந்தன்னைப்பன்முறைபுரிந்துநோக்கி
வீட்டியதென்னிற்பின்னைவீவெனென்றெண்ணும்வேதத்
தோட்டியின்றொடக்கினிற்குந்துணைக்கைமால்யானையன்னான். (௨௬௨)

---

† துணைவர் - வானரவீரர்.

பெரியதிருவடிதோத்திரம்.

இத்தன்மையெய்துமளவின்கண்வந்தவிமையோர்களஞ்சியிதுபோய்
எத்தன்மையெய்திமுடியுங்கொலென்றுகுலைகின்றவெல்லையிதன்வாய்
அத்தன்மைகண்டுபுடைநின்றவண்ணல்கலுழன்றனன்பின்மிசையால்
சித்தந்நடுங்கியிதுதீரமெள்ளவிருளூடுவந்துதெரிவான்.

இ-தன்பதப்பொருள்.

இத்தன்மை - இவ்வண்ணம், எய்துமளவின்கண் - நடக்குங்காலத்தில், வந்த - இராமாநுஜன் விறல்காணவுற்ற, இமையோர்கள் - பிரம உருத்திரேந்திராதிதேவர்கள், அஞ்சி - பயந்து, இது - இக்கோபம்,போய் - மிகுந்து, எத்தன்மை - எவ்விதமாய், எய்தி - நடந்து, முடியுங்கொலென - ஆறுமோவென்று, குலைகின்ற - நடுங்குகின்ற, எல்லை - சமயமாகிய, இதன்வாய் - இத்தருணத்தில், அத்தன்மை - அந்தப் பிரகாரத்தை, கண்டு - பார்த்து, புடை - பக்கத்திலே, நின்ற - நில்லாநின்ற, அண்ணல்கலுழன் - பெருமாளுடைய பெரியதிருவடி, தன் - பெருமாளுடைய, அன்பின்மிசையால் - பிரியத்தின்மிகுதியால், சித்தம் - மனது, நடுங்கி - கலங்கி, இது - இந்தத்துயரம், தீர - நீங்க, மெள்ள - மையை, இருளூடு - அந்தகாரத்தினுள்ளே, வந்துதெரிவான் - தோன்றிவிளங்குகிறான்,—என்றவாறு.

இதுமுதலெட்டுப்பாட்டும் குளகம். இதன்கருத்து பெரியதிருவடிகள் வருமாறும் பெருமாளைக்கண்டு தொழுமாறுந் துதிக்குமாறுங்கூறுகின்றது. பதப்பொருள் கீழுரைத்தாங்குரைக்க. காட்டு கோயில்கடோறும் பெரியதிருவடியை புறப்பாட்டிற்சேவித்து நடத்தல் - நிற்றல்-கைகுவித்தல் - பணிதல் - மொழிதல்களைப் பாவித்துக்காண்க. இனிவிடைகூறவே விளும் விளங்குமாகலா னவ்விரண்டு முள்ளுறுத்திக்கூறுகின்றாம். மறைந்துவந்த நியாமகனைத்தொடர்ந் தடிமைசெய்யக்கடவ நியாமியங்களு மறைந்துநின்றமையாற் புடைநின்றவண்ணல்கலுழனென்றார். ()

அசையாதசிந்தையரவாலனுங்கவழியாதவுள்ளமழிவான்
இசையாவிலங்கையரசோடுமெண்ணலருளின்மைகண்டுநயவான்
விசையாலனுங்கவடமேருவையமொளியால்விளங்கவிமையாத்
திசையானைகண்கண்முகிழாவொடுங்கநிறைகால்வழங்குசிறையான்.

இ-ள். அசையாத - கலங்காத, சிந்தை - மனம், அரவால் - நாகபாசத்தாலே, அனுங்க-பெருமாள்கலங்க, (அதுகண்டு) அழியாத-நடுங்காத, உள்ளம் - மனம், அழிவான்-நடுங்குவானாய், இசையா-சரணாகதிக்குடன்படாத, இலங்கையரசோடும்-இராவணன்முதலிய யாவர்விஷயத்திலும், அண்ணல்பெருமாள், அருளின்மை-அருளின்றிக் கோபங்கொள்ளுதலை, கண்டும் - பார்த்தும், நயவான் - விரும்பாதவனாய், விசையால் - வேகத்தாலே, அனுங்கவடமேரு - மேருமலைகுலையவும், வையம் - உலகமெல்

லாம், ஒளியால் - காந்தியால், விளங்க - பிரகாசிக்கவும், இமையா-நிமையாத, திசையானை - திக்கானைகள், கண்கள் - விழிகள், முகிழா - மூடி, ஒடுங்க - பதுங்கவும், நிறை - நிரம்பிய, கால் - காற்றை, வழங்கு-தருகின்ற, சிறையான் - இறகையுடையவனாய்,—எ-று.

கலங்காத திருவுள்ளம் பெருமாள் கலங்கக்கண்டு திருவடி தானுங் கலங்கினானென்றார். இசையா விலங்கை யரசோடுமென்ற தெச்சவும்மை யாகலான் யாவர் விஷயத்திலுமென்றும்.

காதங்கள்கோடிகடைசென்றுகாணுநயனங்கள்வாரிகலுழக்
கேதங்கள்கூரயர்கின்றவள்ளறிருமேனிகண்டுகிளர்வான்
சீதங்கொள்வேலையலைசிந்தஞாலமிருள்சிந்தவந்தசிறையான்
வேதங்கள்பாடவுலகங்கள்யாவும்வினைசிந்தநாகமெலிய.

இ-ள். காதங்கள் கோடி - கோடிகாதத்தின், கடைசென்று - எல்லையாவுஞ்சென்று, காணும் - அங்குள்ளனவற்றையுந் தெரியத்தக்க, நயனங்கள் - கண்களிலே, வாரி - ஊறிவருகிறநீர், கலுழ - சிந்தவும், கேதங்கள்கூற - துக்கமிகுதியாக, அயர்கின்ற - சோர்ந்து கிடக்கிற, வள்ளல் - பரமோதாரராகிய பெருமாளுடைய, திருமேனி - திவ்வியமங்கள விக்கிரகத்தை, கண்டு - பார்த்து, கிளர்வான் - பூரித்தவனாய், சீதங்கொள் - குளிர்ச்சியைக்கொண்ட, வேலை - சமுத்திரமானது, அலை - தரங்கங்களை, சிந்த - மிகுத்து வீசவும், ஞாலம் - உலகத்தை மூடிய, இருள் - அந்தகாரம், சிந்த - சிதறிவிலகவும், வந்த - விளங்கி வருகிற, சிறையான் - இறகினாலே, வேதங்கள் - வேதகானங்களை, பாட - கோஷிக்கவும், உலகங்கள்யாவும் - எல்லாவுலகங்களும், வினை - பாவங்களை, சிந்த - நீங்கவும், நாகம் - பிடித்திருக்கிற நாகபாசம், மெலிய - தளரவும்,—எ-று.

இருக்கெசுச்சாமவதருவணச் சிறையாகலானச்சிறகொலியான் வேதங்கள் பாடவென்றார். (௨௪௫)

அல்லைச்சுருட்டிவெயிலைப்பரப்பியகலாசையெங்குமழியா
வில்லைச்செலுத்திநிலவைத்திரட்டிவிரிகின்றசோதிமிளிர
எல்லைக்குயிற்றியெரிகின்றமோலியிடைநின்றமேருவெனுமத்
தொல்லைப்பொருப்பின்மிசையேவிளங்குசுடரோனின்மும்மைசுடர.

இ-ள். அல்லை - இருளை, சுருட்டி - இறகடிக்கொள்ளுதலாலே சுருளப்பண்ணியும், வெயிலை - சூரியகிரணத்தை, பரப்பி - பொன்னொளியாலே விரித்து, அகல் - அகன்ற, ஆசையெங்கும் - திக்குகளெல்லாம், அழியா - சேதியாத, வில்லை - மூக்கின் வளைவாகிற வில்லொளியை, செலுத்தி - ஒதுங்கப்பண்ணியும், நிலவை - சந்திரனை, திரட்டி - கண்டத்தொளியாலே திரளப்பண்ணியும், விரிகின்ற - அச்சந்திரனிழலிருந்து மிகாநிற்கிற, சோதி - சந்திரிகை, மிளிர-விளங்பவும், எல்லை - சூரியனொளியை, குயிற்றி - சேரப்பண்ணி, எரிகின்ற - காந்துகின்ற, மோ

லி - கிரீடமானது, இடைநின்ற - உலக நடுவிலே நில்லாநிற்கிற, மேரு வெனும் - வடமேரு வென்கிற, அ - அந்த, தொல்லை - பழமையான, பொருப்பின்மிசையே - மலையின்மேலே, விளங்கு - பிரகாசியா நின்ற, சுடரோனின் - சூரியனைப்பார்க்கிலும், மும்மை - மும்மடங்கு, சுடர் விளங்க,—எ-று.

தோன்றிமறையும் வானவில்லைப்போலாது அழியாவில்லென்றது வேற்றுமையணி. விற்போல் வளைந்த மூக்கை வில்லென்றதும் நில வைப்போலுங் கண்டத்தொளியை நிலவென்றது முருவகவுயர்வு நவிற்சி யணிகள். செலுத்தலும் திரட்டலும் அதனதன் பிரதி பிம்பத்தை. மோலி சுடரோனின் மும்மைசுடரவென்ற தெதிர்நிலையணி. பெரிய திருவடியை யிடைநின்றமேருவெனு மத்தொல்லைப் பொருப்பென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. ஆகவே வில்லுநிலவுஞ் சுடரோனுமொரு காலத்தின் மேருமிசை தொடரச்செய்தது தொடர்புயர்வு நவிற்சியணி.

நன்பால்விளங்குமணிகோடியோடுநளிர்போதுசெம்பொன்முதலாத்
தன்பாலியைந்தநிழல்கொண்டமைந்ததழுவாதுவந்துதழுவ
மின்பாலியன்றதொருகுன்றம்வானின்மிளிர்கின்றதென்னவெயிலோன்
தென்பாலெழுந்துவடபாணிமிர்ந்துவருகின்றசெய்கைதெரிய.

இ-ள். நன்பால் - கண்டத் தொளியாகிய பரிசுத்த வெள்ளையில், விளங்கும் - விளங்காநின்ற, மணிகோடியோடு - கோடி அரதநக்கோவை மாலையோடு, நளிர் - பிரகாசியாநின்ற, போது - புட்பமாலையும், செம் பொன் - சிவந்த பொன்னரிமாலையும், முதலா - ஆதியாகிய, தன்பால் - அம்மாலைகளிடத்து, இயைந்த - தனித்தனியே பொருந்திய, நிழல்கொ ண்டு - பிரபைகளைக்கொண்டு, அமைந்த - உண்டாகியவை, தழுவாது - மார்பிலே பொருந்தாமல், வந்து - அம்மாலைகளாய்த்தோன்றி, தழுவ - பொருந்தவும், மின்பால் - ஒளிவிடும் பகுதிகளெல்லாம், இயைந்தது - கூடியதாகிய, ஒருகுன்றம் - ஒருநெடியமலை, வானின் - ஆகாயத்தினின் றும், விழுகின்றதென்ன - இறங்குவதுபோல, வெயிலோன் - சூரியன், தென்பால் - தென்றிசையில், எழுந்து - உதயமாகி, வடபால் - வடதி சைநோக்கி, நிமிர்ந்து - மேலெழுந்து, வாருகின்ற - வாராநிற்கிற, செய் கைதெரிய - நூதனவிசேஷமாய்த் தோன்றவும்,—எ-று.

பொன்னரிமாலை - என்பது—பொன்வண்டுமாலை.

பால்போலுங் கண்டத் தொளியைப் பாலென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. மணியாலும் பூவாலும் பொன்னாலுமாகிய மாலைகளைத் தழுவாதென்றது அதனதன் பிரதிபிம்பத்தை தழுவவென்றது அம் மாலைகளை மின்பாலியைந்த தொருகுன்ற மென்னவென்றது பண்புவ மை. அம்மாலைகளது தொங்குதலை குன்றம் வானின் விழுகின்ற தென்னவென்றது தொழிலுவமை. தகுதிபற்றி விழுகின்றதற்கியை யத் தொங்குதலைவருவிக்க. கீழ்ப்பாட்டிலுரைத்தாமென்ற வுத்தியான்

மோலியாகிய சூரியன் மின்பாலியைந்த தொருகுன்றமாகிய வுதயகிரியிலே தென்றிசையிலுதித்து வடதிசைமேற் செல்வதாகச்செய்தது தொடர்புயர்வு நவிற்சி. உதயகிரியென்றது மின்பாலியைந்தவொரு குன்றமென்றதும், மோலியென்றது வெயிலோனென்றதும் உருவகவுயர்வு நவிற்சி. மொழிந்தபொருளோடென்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தலென்னு முத்தியால் உதயகிரிக்குந் தென்றிசைக்கும் வெயிலோனுக்கு மியையப் பெரியதிருவடி தலையாகிய தேர்மேலென்று கொள்வது முருவகவுயர்வு நவிற்சி. (உசஎ)

பன்னகர்சென்னிமணிகோடிகோடிபலகொண்டுசெய்தவகையால்
மின்னலியன்றதெனலாய்விளங்குமிளிர்பூண்வயங்கும்வெயில்கால்
பொன்னலியன்றநகையோடைபொங்கவனமாலைமார்புபுரளத்
தொன்னாள்பிரிந்ததுயர்தீரவண்ணறிருமேனிகண்டுதொழுவான்.

இ-ள். பன்னகர் - பலநாகங்களுக்குஞ் சிரேஷ்டர்களுடைய, சென்னிமணி - சிரோரத்திநங்களை, கோடிகோடி - உச்சியினின்றும் - உச்சியினின்றும், பல - அநேகமாக, கொண்டு - சீத்தெடுத்து, செய்தவகையால்- இழைத்தவகுப்புகளாலே, மின்னல் - மின்னலைக்கொண்டு, இயன்றது - செய்தது, எனலாய் - என்று சொல்லும்படியாய், விளங்கும் - பிரகாசியாநின்ற, மிளிர் - காந்தியையுடைய, பூண் - ஆபரணங்களும், வயங்கும் - பிரகாசியாநின்ற, வெயில் - சூரியப்பிரபையை, கால் - கக்குகின்ற, பொன்னல் - சுவர்ணத்தால், இயன்ற - செய்த, நகை - விளங்குதலையுடைய, ஓடை - நெற்றிப்பட்டமும், பொங்க - பிரகாசிக்கவும், வனமாலை - துளசிமணிமாலை, மார்பு - மார்பின்கண்ணே, புரள - அசையவும், தொன்னாள்- ஆதிகாலத்தில், பிரிந்த - நீங்கலாகிய, துயர் - கிலேசம், தீர - போக, அண்ணல் - பெருமானுடைய, திருமேனி - திவ்வியமங்கள விக்கிரகத்தை, கண்டு - பார்த்து, தொழுவான் - கைகுவிப்பானாய்,— எ-று.

கோடிகோடி யென்பவற்றி லடுக்குத் தனுருபகடொக்கன. இவ்வடுக்குமொழி பலவுச்சிகளைக் குறிப்பிக்கின்றது. பலகொண்டென்றமையால் பூண் - ஓடை - மாலை - என்பவற்றி லெண்ணும்மைக டொக்கன. ()

முடிமேனிமிர்ந்தமுகிழேறுகையன்முகின்மேனிமிர்ந்தவொளியான்
அடிமேல்விழுந்துபணியாமனின்றநிலையுன்னியுன்னியழிவான்
கொடிமேலிருந்திவ்வுலகேழொடேழுதொழநின்றகோனுமிலனாய்ப்
படிமேலெழுந்துவருவான்விரைந்துபலகானினைந்துபணிவான்.

இ-ள். முடிமேல் - உச்சிக்குமேலே, நிமிர்ந்த - உயர்ந்த, முகிழேறு - குவித்தலைக்கொண்ட, கையன் - கரங்களையுடையவனாய், முகின்மேல் - மேகத்தைக்காட்டிலும், நிமிர்ந்த - அதிகமான, ஒளியான் - சாமளவர்ணத்தையுடைய பெருமானுடைய, அடிமேல் - திருவடியின்கீழே, விழுந்துபணியாமல் - சாஷ்டாங்கதண்டஞ்சமர்ப்பியாமல், நின்று - நின்றுகொண்டு, அந்நிலை - சோதித்துக்கிடக்கிற வந்தச்சுபாவத்தை, உன்

ணியுன்னி - நினைத்து நினைத்து, அழிவான் - தளர்வானுய், கொடிமேல் - துவசத்தின்மேல், இருந்து - வாசம்பண்ணி, இ - இந்த, உலகேழோடே ழு - பதினுலுலகமும், தொழ - வணங்குதல்செய்ய, நின்றகோனும் - நில்லாநின்றகொள்கையும், இலனுய் - இல்லாதவனுய், படிமேல் - பூமியின் கண்ணே, எழுந்து - எழுந்தருளி, வருவான்விரைந்து - விரைந்துநடப்ப வனுய், பலகால் - அநேகவிதமாய், நினைந்து - எண்ணியெண்ணி, பணிவான் - வணங்குவானுய்,—எ-று.

தெரிவான் முதற்பொருழுவானுறுதியாகிய முற்றுக்களெச்சமாய் முனி மேழுறுகையனுய்ப் பணியலாயினுன் எனக்கூட்டுக. (உ௬௯)

வந்தான்மறைந்துபிரிவால்வருந்துமலர்மேலயன்றன்முதலோர்
தந்தாதைதாதையிறைவாமறைந்துவிளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்கள்களைவாய்தளர்ந்துதுயர்கூரலென்னசெயலோ
எந்தாய்வருந்தலுடையாய்வருந்தலெனவின்னபன்னிமொழிவான்.

இ-ள். வந்தான்மறைந்து - மறைந்துவந்தாலென்றபடி, (இனிச்சொல்லாமல் வந்தால்) பிரிவால் - பிரிவாற்ருமையாலே, வருந்தும் - நோவை யடைவான், (யாரென்ருல்) மலர்மேல் - பூமேலிருக்கிற, அயன் - நான்முகன், தன் - தனக்கு, முதலோர் - பூருவராகிய நித்தியசூரிகள், தம் - தமக்கு, தாதை - காரணராகிய சேனையர்கோனுக்கு, தாதை - பிரதானராகிய, (திருவநந்தாழ்வான் மறைந்துவந்தால் வருந்துமென்றநவயம்) இறைவா பரமபுருஷனே, மறைந்து - எனக்குரையாது, விளையாடுகின்ற- லீலைசெய்கின்ற, தனியோய் - ஒப்பற்றவனே, சிந்தாகுலங்கள் - மனக்கிலேசங்களை, களைவாய் - எல்லாருக்கும் போக்குகிறவனே, தளர்ந்து - மெலிந்து, துயர்கூரல் - துக்கத்தழுந்துதல், என்னசெயலோ - யாதுகாரணமோ, எந்தாய் - என்சுவாமியே, வருந்தல் - நோவுபடாதை,உடையாய்- சர்வசுவாமியே, வருந்தல் - நோவுபடாதை, என - என்று, இன்ன - இவ்விதங்களாய், பன்னி - பிரலாபித்து, மொழிவான் - துதிக்கத் தொடங்குவான்,—எ-று.

தாதையென்றது மகனெனுங் காரியம்பிறக்கக் காரணமாயினுனை யாகலா லயனுக்குக்காரணமானேர் நித்தியசூரிகளாகவும், அவருக்குக்காரணஞ்சேனையர் கோனுகவும், அவருக்குக்காரணங் கருடனுகிய தாமாயிருக்க நைச்சயாநுசந்தானத்தாற் றம்மைக்கூறுது திருவநந்தாழ்வானைக்கூறினு ரென்றுகொள்க. அண்ணல்கலுழனென்னு மெழுவாய் பணிவானுய் மொழிவானென்னும் பயனிலைகொண்டது. இனிவரும் பாட்டுகளுக்குக் கருத்து முதலியவைந்தும் பொருள்விளக்க வேண்டியவாறே யெழுதுகின்றமையாலாங்காங்குணர்க. இருக்கெசுச்சாம வதருவச்சிறையென்றது சிறையையுடையனென்ருகுபெயராய் சிரஞ்சேதனமென்கிற செய்யுளிற் காண்க. (உ௭௦)

தேவாதிதேவர்பலராலுமுந்துதிருநாமமோதுசெயலோய்
மூவாதநாளுமுலகேழொடேழுமரசாளுமேன்மைமுதல்வா

மேவாதவின்பமவைமேவிமேவுநெடுவீடுகாட்டுமுடியாய்
ஆவாய்வருந்தியழிவாய்கொலாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் வீற்றிருந் தேழுலகுந்தனிக் கோல்செல்ல வீவில் சீராற்றன் மிக்காளுமம்மானே வருந்தாதையென்கிறார்.

இ-ள். தேவு - சேனையர்கோனே, ஆதி - முதலாகவுடைய, தேவர்-நித்தியசூரிகள், பலராலும் - அநேகராலும், முந்து - ஆரம்பத்திலே, திருநாமம் - ஹரி என்கிற திருநாமத்தைக்கொண்டு, ஓது - துதிக்கத்தக்க, செயலோய் - செய்கையையுடையவனே, மூவாது - தேவ மனித திரியக்குத் தாவரமாம் யாவையுங்கெடாமல், அந்நாளும் - உட்கொண்ட அக்காலத்திலும், உலகு - உலகங்கள், எழொடேழும் - பதினாலும், அரசு - தனிக்கோல்வழியே, ஆளும் - செல்லநடாத்துகிற, மேன்மை-மேம்பாட்டையுடைய, முதல்வா - காரணபூதனே, மேவாத - மானிட ராகவரலரிதாகிய, இன்பம் - ஆநந்தங்கள், அவை - அப்பதினொன்றும், மேவி - அடைந்து, மேவு - பின்படையத்தக்க, அந்நெடுவீடு - அவ்வின் பங்களினெடியவின்பத்தை, காட்டு - காட்டுதற்கிடமான, அம் - அழகிய, முடியாய் - பதினாலுலகுக்குந் தலையான திருநாட்டையுடையவனே, ஆவாய் - இங்குநின்ற நிலையிலுமாகுமவன், வருந்தி - இங்ஙனேநோவு பட்டு, அழிவாய்கொல் - கலங்குமவனோ, ஆர் - மயர்வறமதிநலமருளப் பெறுதாரில் யாவர், இவ் - கலங்காதவன் கலங்குதலாகியவிந்த, அதிரேகமாயை - மகாமாயையை, அறிவார் - அறியத்தக்கவர், ஒருவருமறியா ரென்றபடி,—எ-று.

நாளுமென்றவும்மையா லுட்கொள்ளாத காலத்திலு மரசாளுகை தானேபோதரும். உருத்திரனுக் கந்தரியாமியாய்நின் றுயிர்வாழ்தற் கிடமாகிய பூதவுடம்பைப்பிரித்தபோ தவ்வுடம்பழிதல்பற்றி அழித்தலு மோர்செய்கையென்னும் பிறர்தம்மதமேற்கொண்டு களைந்து தானுட்டித் தனது நிறுப்பானுண்டபோது முண்ணுதபோதும் அரசாளுகை தவிரா னென்கிறார். இதுபற்றியன்றே கடவுள்வாழ்த்தில் உலகம் யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறுத்தலு நீக்கலுமென்றது. மனிதன் மனித கந்தருவன் றேவகந்தருவன் பிதிர்கருமத் தேவன்றனுடன்ன சுரன்சுர னிந்திரனுசானும் பிரசாபதியானோன் கனகன் விராட்டிரணிய கர்ப்பன் முறைகருதுமிப் பதினொருபேர்கள் பினவானந்தங்கணுரையாம்பிரளய வெள்ளக்கடல் வரமாநந்தம் என்னுமிப்பாட்டானே உயர்வறவுயர்நல மென்றுகொள்க. மனிதவின்பந்தொடங்கிமலரோனின் பங்காறு மோவ்வொன்றாக விட்டடையுமின்பத்தை வீடென்றதாகுபெயர். மேவகாட்டவெனப் பெயரெச்சங்களாகவும், உயர்வுறவுயர்நலத்தைக் காட்டுகின்ற திருநாட்டை முடியாகவும், அதனீற்றயலெதிர் மறையாகாரமாகவு மயங்கக் கூறுதல் குற்றமன்றோ வென்னிலன்று, தேவாதியென்று தொடங்கிய கீழுமெழுவாயென்று நடத்துகிற மேலுநோக்கி ஏற்புழியறிந்திதற்கிவ் வகையுமெனத்தகும் வகைசெலுத்துதறந்திரவுத்தி யென்கிறபடியே யுய்

த்துணர்கவென்பார் ஆழமுடைத்தாலாகிய வழகுதோன்றக் கூறினார். இங்ஙனங்கூறுகின்ற வெல்லாங் கம்பசூத்திரமென்பது நாடகவழக்கு சித்திரமெனவுங் கூறுப. (உ௬க)

எழுவாயெவர்க்குமுதலாகியீறொடிடையாகியெங்குமுளையாய்
வழுவாதவர்க்கும்வரமீயவல்லையவரால்வரங்கள்பெறுவாய்
தொழுவாயுணர்ச்சிதொடராததன்மையுருவாய்மறைந்துதுயரால்
அழுவாயொருத்தனுளைபோலுமாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே பரத்துவங்கூறியிதிலே வியூகமும் அந்தரியாமித்துவமும்விபவமுங் கூறத்தொடங்கி ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியாகி யைந்துபூதமா யிரண்டுசுடராயருவாகி நாகமேறி நடுக்கடலுட்டுயின்ற நாராயணனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். எழுவாய் - பாற்கடலில் வாசுதேவனா யெழுந்தருளுவாய், எவர்க்கும் - எவ்வகைமேம்பாட்டோருக்கும், முதலாகி - ஆக்குங்காரணனாய், ஈறொடு - நீக்குங்காரணனாதலோடு, இடையாகி - காக்குங்காரணனுமாயெழுவாயென்றங்வயம். எங்கும் - கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ்பொருடொறும், உளையாய் - வியாபிக்குமவனாய், வழுவாது - தப்பாமல், அவர்க்கும் - அந்த மூவருக்கும், வரம் - வேண்டுமவைகளை, ஈய வல்லை - கொடுக்கமாட்டுவை, அவரால் - அந்த மூவராலும், வரங்கள்- வேண்டுமவைகளை, பெறுவாய் - பிரமாவிஷ்ணுருத்திரர்களாகிக் கொள்ளுவாய், தொழுவாய் - இந்திராதிதேவர்களாய் வணங்குவாய், உணர்ச்சி- மெய்யுணர்வை, தொடராது - பொருந்தாமல் பிரமாதிகளைத் தொழுவாயென்றங்வயம், அது - அந்த மெய்யுணர்வை, அன்மை - அல்லாத வையந்திரிபறியாமைகளையுடைய, உருவாய் - மனிதவடிவாகி, மறைந்து-தெரியாதவனாய், துயரால் - துன்பத்தாலே, அழுவாய் - அழுமவனாய், ஒருத்தன் - இராமனென்னுமொப்பற்றவனாய், உளை-உளனாகிறாய், போலும்- முன்னிலையசை, ஆர் - எவர், இ - இந்த, அதிரேகம் - பெரிதாகிய, மாயை - மயக்கத்தை, அறிவார் - தெரிகிறவர், இப்படிப்பட்ட மகாமாயையறிவாரார்,—எ-று.

ஆமோத - பிரமோத - சமமோதமென்கிற மூன்றுலகங்களிலும் சங்கருஷணப் பிரத்யும்நாநிருத்தர்களாயெழுந்தருளி யிருக்கிறார்களென்பது சித்தாந்தமாகலாற் பிரமாதி மூவர்க்குரிய முத்தொழிற்குங் காரணமாக வம்மூவரையுங் கூறினாராயிற்று. வரங்கள் பெறுவாயென்றதனாலே அம்மூவரதநுக்கிரகத்தாலிம்மூவரு முத்தொழிற்குரியராயினரென்றாயிற்று. இப்பாட்டுமிகைபடக்கூறாது சுருங்கச்சொல்லலென்னு மழகுகுன்றக்கூறலன்று மேல்விளங்கவைத்தலால். (உ௬உ)

உன்னைக்கவைத்தவிருவர்க்குமொத்தியொருவர்க்குமுண்மையுரையாய்
முன்னைக்கிற்றியுலகொக்கவொத்திமுடிவொக்கினென்றுமுடிவாய்

என்னொக்குமின்னசெயலோவிதென்னிலிருளொக்குமென்றுவிடிவாய்
அந்நொப்பமேகொல்பிறிதேகொலாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே வைகுந்தத்திற் பரவாசுதேவனென்றேகமூர்த்தி பாற்கடலில்
வாசுதேவனோ டிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்று ராதியி
லே மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்றதை யநுவாதித் தைந்துபூதமா
யிரண்டுசுடரா யருவானவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். உன் - விஷ்ணுவாகிய வுன்னோடு, ஒக்க - கூட்டியெண்ண,
வைத்த - நிறுத்திய, இருவர்க்கும் - பிரமருத்திரர்க்கும், ஒத்தி - வியா
பகத்தி லொத்திருக்கிறாய், ஒருவர்க்கும் - இருவரிலொருவருக்காயினும்,
உண்மை - (எல்லாநாராயணனேயென்கிற) மெய்யுணர்ச்சியை, உரையா
ய் - தெரியப்படுத்தாய், முன் - இம்மூவருக்குமுன்பே, ஒக்க - விஷ்ணு
வவதரித்தானென்பதற்கியைய, நிற்றி - இராமனாய் நிற்கிறாய், உலகு-
ஐந்துபூத மிரண்டுசுடரென்பதற்கு, ஒக்க - இயைய, ஒத்தி - வியாபகத்
திலொத்திருக்கிறாய், முடிவு - இந்தலீலா விபூதியடங்கலும், ஒக்கின்-
இருமூர்த்தியு மேகமூர்த்தியேயென்று கலக்குமிடத்தில், ஒன்றும்-பொ
ருந்துதற்கிடமான, முடியாய் - திருநாடாகிய நித்திய விபூதிநாதனே,
என் - யாதொன்று, ஒக்கும் - இப்படியெல்லாவற்றிலும் வியாபித்திருக்
கும், இன்ன - இப்படிப்பட்ட, செயலோ - செய்கைதானோ, இது - இந்
தவியாபகவஸ்து, என்னில் - என்றாராயப்புக்கால், இருள் - அந்தகாரத்
தை, ஒக்கும் - ஒத்து விளங்காதிருக்கும், (இது இன்னசெயலோ என்
னொக்குமென்னி லிருளொக்குமென் றந்வயம்) என்று - சூரியன்போல,
விடியாய் - விளக்கமாகாய், (இரண்டு சுடரென்பதில்லையேயெனின் - இ
ருளென்பதில் மதிதோன்றியென் றிடலடங்கினதற்கொண் சுடரிரவியிட
த்தினிற்றிங்கடொறுமினிதுறவு செய்குவதேயென்பனாற் காண்க.) அந்
நொப்பமே - எங்குமுளையென் றங்குச்சொன்னநொப்பமே, (மங்கியவரு
வாநொப்பமுநீயே) பிறிதே - வேறொன்று அன்று, இரண்டுகொல்லு ம
சைநிலை, நொப்பத்தினேகாரந் தேற்றம்; பிறிதினேகாரம் வினா, முடி
வொக்கினென்பதில் ஏழனுரு பைந்தனுருபாய் மயங்கிற்று,—எ-று. ()

வாணாளளித்திமுடியாமனீதிவருநாளுநிற்றிமறையோய்
பேணாயுனக்கொர்பொருள்வேண்டுமென்றுபெறுவானருத்திபிழையாய்
ஊனாருயிர்க்குமுயிராகிநிற்றியுணர்வாயபெண்ணினுருவாய்
ஆணாகிமற்றுமலியாகியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் ஆய பதப்பொருளைக்கூறிக் கீழே எல்லாநாராயணனே யெ
ன்றதைத் திருஷ்டாந்தரத்தாற்கூறி வருந்தாதையென்கிறார்.

இ-ள். வாழ்நாள் - உடம்போடுகூடி வாழுநாளை, அளித்தி - கொடு
க்கிறாய், முடியாமல் - தீராமல், (நீங்காது பந்தத்தைக் கொடுக்கிறா யெ
ன்றாயிற்று.) நீதி - சிங்காமைவிரித்தவறநூலின்வழியே, வருநாளும் - அ

டையுங்காலத்திலும், நிற்றி - வீட்டையுந் தந்துநிற்கிருய், மறையோய் - வேதவிளக்கே, பேணுய் - அறம் பொருளின்பங்களை வேண்டினரை விரும்பாய், உனக்கு - ஒன்ருலொன்றுகுறைவில்லாதவுனக்கு, ஓர்பொருள் வேண்டுமென்று - ஏதேனுமொரு பொருளையாயினுங் கருதிப்பேணுயென்றந்வயம், (அவர்கருதிய வின்றியொன்றைத்தந்து பந்தத்தில்விடுகிருயென்றுகருத்து) பெறுவான் - கைங்கரியமாகிற பரமபுருஷார்த்தத்தை வேண்டினரைப்பெறுதற்கு, அருத்தி - விரும்பி நிற்றலை, பிழையாய் - தவிராய், (இவ்விரண்டடியாலும் உருவோபாய புருஷார்த்தங்களின்னபடியென்றும், அதற்குத்தகுதியாகத் தலைக்கட்டுகிருன் அர்ச்சாவதாரமாயென்றுங் கூறினாராயிற்று. தமருகந்த தெவ்வுருவமவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மற்றப்பேர், மாருயிணைந்த தன்பொன்னடியன்றி இவைகளாற்காண்க.) ஊணுய் - அன்னமயமாகியவுடம்பாகியும், உயிர்க்கும் - அவ்வுடம்பில்வாழு மான்மாவாகியு மவ்வான்மாவுக்கும், உயிராகி - பரமான்மாவாகி, நிற்றி - நிற்கிருய், (அசித்தும் சித்தும் ஈஸ்வரனுமாகி நிற்கிருயென்ருயிற்று. ஆகவே அசித்தும் - சித்தும் சரீரமாகத்தான் சரீரியாய் நிற்கிருனென்று கருத்து எங்ஙனே யென்னின்) உணர்வாய - இம்மூன்றையுங் காட்சியளவையாலறிதற்காகிய, பெண்ணினுருவாய் - பிரகிருதியென்றதற்குப் பெண்வடிவாகியும், ஆணுகி - அத்தாலே மயங்கிக்கிடக்கிற புருடனென்றறிதற் காண்வடிவாகியும், மற்று - அசைநிலை, (இவ்விரண்டுக்கும் வேருகிய பிறிதெனப்பொருள் கூறவுமாம்.) அலியாகி - பெண்டென்மையும் ஆண்டென்மையு மல்லாததுமாகி - ஊணுயுயிர்க்குமுயிராகி நிற்றியென்றந்வயம். மற்றின்கணும்மையை நடுநிலைச்சொற்றீவகமாக்கி யேனையிரண்டிடத்துங்கூட்டுக. ஊணுயென்றபோதே யுயிராயென்பதுதானே போதரவேண்டி யுயிர்க்குமொன்றுடனே விதந்தார். இவ்விடத்தும்மைகடொக்கன,—எ-று. (௨௫௪)

தானந்தமில்லைபலவென்னுமொன்றுதனியென்னுமொன்றுதவிரா
ஞானந்தொடர்ந்தசுடரென்னுமொன்றுநயனந்தொடர்ந்தவொளியால்
வானந்தொடர்ந்தபதமென்னுமுன்னைமறைநாலின்வந்தமுறையால்
ஆனந்தமென்னுமயலென்னுமாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தைசசொன்னுராய் வேதவிளக்கென்றது நால்வகையென்றும் அவற்றினதுசார மிருவகையென்றுங்கூறி வருந்தாதையென்கிருர்.

இ-ள். தான் - வேத விளக்காகியதுதான், அந்தமில்லை - முடிவில்லையாகலால், பல - மனமும்வாசகமுஞ்செய்கையும் யானுநீதானே, என்னும் - (ப்ரக்ஞாப்ரம்மம்) என்றுசொல்லும், ஒன்று - இருக்கு, தனி - யானுந்தானுயொந்தானே, என்னும் - (அஹம்ப்ரம்மாஸ்மி) என்றுசொல்லும், ஒன்று - எசு, தவிரா - நீங்காத, ஞானம் - அறிவை, தொடர்ந்த - கூடிய, சுடர் - ஜோதி அவனென்ருகியொழிந்தான், என்னும் - (தத்வமஸி) என்றுசொல்லும், ஒன்று - சாமம், நயனம் - (எண்ணிற்கண்ணிலொன்றே என்கையா

ல்அன்றிக்கே நயனம்) இரண்டுகண்களும், தொடர்ந்த-(கடலான்கண்ணாகிய சூரியமண்டலத்தை தொடர்ந்த) பற்றிச்செல்லுகிற, ஒளியால்-ஜோதியாலே, வானம் - பரமாகாசமாக, தொடர்ந்த - கூடப்பெற்ற, பதம் - இடம், (யானேநீயாகி யென்னையாள்வானே) என்னும்—(அயமான்மாப்ரம்மம்) என்றுசொல்லும் தகுதிபற்றிவருவித்து, ஒன்று - அதர்வணம், உன்னை-இராமனாகியவுன்னையே, மறைநாலின் - நான்குவேதத்தாலும், வந்த - திரண்டுவந்த, முறையால் - கிரமமிதுவாகையாலே ஆநந்தம் - முழுநலம், என்னும் - என்றுசொல்லும், அயல் - அவ்வாநந்தத்துக்கிடமாகிய முழுவுணர்வு, என்னும் - என்றுசொல்லும், ஆக ஞாநாந்தமயனென்றது சாரம். உன்னையேயென்பதிற் றேற்றேகாரந் தொக்கது செய்யுளாகலான்,—எ-று. (உருரு)

மீளாதவேதமுடிவின்கணின்னைமெய்யாகமெய்யினினையும்
கேளாதவென்றுபிறவென்றுசொன்னகெடுவார்கள்சொன்னகடவான்
மாளாதநீதியிகழாமைநின்கணபிமானமில்லைவறியோர்
ஆளாயும்வாழ்தியரசாள்தியாரிவ்வதிரேகமாயையறிவார்.

வேதாந்தக்கருத்துணராத சூனியவாதிகளைக் கண்டித்து அடிமையும் ஆண்டானுமானவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். மீளாதவேதம்-அவ்வேதம் மீளாது (இதன்றிதன்றென்றுசென்ற வேதங்கள் மீட்சியின்றிக்கே.) முடிவின்கண் - அந்தங்களிலே, நின்னை - நாராயணனாகிய வுன்னை, மெய்யாக - ஞாநாநந்தமயனாக,மெய்யில்-தமதறிவின்கண்ணே, நினையும்-எண்ணும் இவற்றை, கேளாதவென்று-கேட்டறியாதனவென்றும், பிறவென்று - கண்டறியாதன வென்றும், சொன்ன - முதலிலே சொன்னவைக்கு, கெடுவார்கள் - அறிவு கெடுமவர்கள், சொன்ன - அவாங்மனகோசரமென்றவற்றைத் தானேசொல்லிய, கடவால் - மறுமொழியினாலே, மாளாத - அழியாத, நீதி - வேதங்களது சொல்லுகையை, இகழாமல் - தப்பாமல், நின் - உன்னுடைய, கண்ணபிமானம் - கடாக்ஷவீக்ஷண்யம், இல்லை - இல்லையாகி, வறியோர் - சூனியவாதிகளானார்கள், (அவர்கள் வேதவிரோதிகளாகையாலே அவ்வேத விளக்காகிய வுனக்கு விரோதிகளானார்களென்று கருத்து. ஊன்சுடர்மிகு சுருதியுளென்றதை யறியாரே வறியார் நித்தியமாகலான் ஞானத்தை மெய்யென்றார்.) ஆளாயும் - நானென்கிறவடிமையாகியும், வாழ்தி-கைங்கரியமாகிய புருஷார்த்தத்தோடு வாழ்கிறாய், அரசு - நாராயணனென்கிற ஆண்டானாகியும், ஆள்தி - அக்கைங்கிரியத்தைக் கொள்ளுகிறாய்,—எ-று. (உருசு)

சொல்லொன்றுரைத்திபொருளாதிதூயமறையுந்துறந்துதிரிவாய்
வில்லொன்றெடுத்திசரமொன்றெடுத்திமிளிர்சங்கமங்கையுடையாய்
கொல்லென்றுரைத்திகொலையுண்டுநிற்றிகொடியாயுன்மாயையறியேன்
அல்லென்றுநிற்றிபகலாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தை வெளியிட்டபடியைக்கூறி யிதிலே அதனது சங்கிரகமாகிய பிரணவத்தையும் தனது பொருளையுங்கூறி வேதவிளக்கென்பதை யறியாது சூனியரான விராவணாதிகளறிய வெளிவந்தவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். சொல்லொன்று - மூன்றெழுத்தாகிய பதமொன்றை, உரைத்தி - உபதேசிக்கிறாய், பொருள் - ஆண்டானுக்கே அடிமைகளென்கிற பொருளும், ஆதி - நாராயணவடிவாகிறாய் (முந்து திருநாமமென்றதிலே ஹரி என்று இதிலே ஓம் என்று இப்படித்தொடங்குதாகிய), தூய - பரிசுத்தத்தையுடைய, மறையும் - வேதத்தையும், துறந்து - விட்டு, திரிவாய் - ஞானானந்தமயனென்பதற்குவேறாய், வில்லொன்று - வேறே ஒருவில்லை, எடுத்தி - எடுக்கிறாய், சரமொன்று - அவ்வில்லுக்கேற்ற பாணமொன்றும், எடுத்தி - எடுக்கிறாய், மிளிர் - பிரகாசியாநின்ற, சங்கம் - சங்குமுதலிய திவ்வியாயுதங்களை, அங்கை - அழகியகையிலே, உடையாய் - வேதத்திலே உடையவனென்று சொல்லப்படுகிறாய், (சங்கென்றதில் மற்றையாயுதங்களையு முபலக்ஷணமாய்க்கூட்டுக.) கொல்லென்றுரைத்தி - தேவருக் கந்தரியாமியாய் வதைபண்ணென்கிறாய், கொலையுண்டு - இராக்கதருக்கந்தரியாமியாய் வதைபட்டு, நிற்றி - நிற்கிறாய், கொடியாய் - இப்படிக் கோணலாயிருக்கிறவனே, உன்மாயை - உனது மயக்கச்செய்கையை, அறியேன் - ஊர்தியாகிய யானேயறியேன், அல்லென்றும் - ஆவரணமாகவும், நிற்றி - நிற்கிறாய், பகல் - விக்ஷேபமும், ஆதி - ஆகிறாய்,-எ-று. ()

மறந்தாயுமொத்திமறவாயுமொத்திமயலாரும்யானுமறியேம்
துறந்தாயுமொத்திதுறவாயுமொத்தியொருதன்மைசொல்லவரியாய்
பிறந்தாயுமொத்திபிறவாமனல்குபெரியோய்
அறந்தானிறுத்தலரிதாகவாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே அந்தரியாமியாகையாலே ஆவரணசத்தியாலே யொருகான்மயக்கியும், விக்ஷேபசத்தியாலே யொருகால் விளக்கியும் நிற்கிறதேயன்றிச் சூனியவாதிகளறிய விபவமாகி நிற்கிறநிலையும் அம்மயக்க விளக்கங்களையுடையவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். மறந்தாயும் - முற்றுமுணர்தல் முடிவிலாற்றல்களை மறந்தாயென்றாலும், ஒத்தி - அன்புமிகுத்துச் சித்தங்கலங்குதலாலே ஒத்திருக்கின்றாய், மறவாயும் - அவற்றை மறவாயென்றாலும், ஒத்தி - இலங்கையரசு முதலானாரோடருளின்மையாலே யொத்திருக்கின்றாய், மயல் - பிரகிருதிக்குள்ளாகிய, ஆரும் - எல்லாரும், யானும் - அது நீங்கியயானும், அறியேம் - அறியாதிருக்கிறோம், துறந்தாயும் — நீ சங்கசக்கராதி அநந்தகருடாதிகளை விட்டிருக்கிறாயென்றாலும், ஒத்தி - மறைந்து வந்தமையாலொத்திருக்கிறாய், துறவாயும் - அவைகளை விடாதிருக்கின்றாயென்றாலும், ஒத்தி - அவைகள் புடையே நின்றமையாலொத்திருக்கிறாய், ஒரு

தன்மை - (மறத்தல் துறத்தல்களையுடையன் மறவாமை துறவாமைகளை யிலனென்) றொருபடியாக, சொல்ல - (மயலாலே யவைகளையுடையனென்றும் என்னாலே யவைகளை யிலனென்றுஞ்) சொல்லுதற்கு, அரியாய் - அருமையானவனே (இருதிறத்தாருக்கு மிரண்டுபடியாகையா லொருபடியல்லை யென்கிறார்.) இவை யுரைத்தாமென்னு முத்திகள். பிறந்தாயும் - (சக்கிரவர்த்தித்திருமகனா) யவதரித்தாயென்றாலும், ஒத்தி - வில்லொன்று சரமொன்றெடுத்தமையா லொத்திருக்கிறாய், பிறவாயும் - நெடுவீடு காட்ட முடியாயென்றாலும், ஒத்தி - (பல்லாயிரத்தின் முடியாத பக்சம வைவீசமேனி வடுத்தீரவும், தன்னசங்கமுந் தானுமுழங்கிற்றாகவும், மேலேவிக்கொள்ளுதலாலே) ஒத்திருக்கிறாய், இவை உரைத்து மென்னுமுத்தி, பிறவாமல் - (பிறவித்துன்பமென் றடைந்தாரைமீள) வப்பிறவியில் விடாமல், நல்கு - கடைகணிக்கின்ற, பெரியோய் - இயல்பாகவே பாசங்களினீங்கினோய், அறம் - தருமத்தை, தான் - தானான தன்மை யொன்றையே கொண்டு, நிறுத்தல் - நிலைநிற்கச் செய்தலில், அரிதாகி - கூடாமையாயிரண்டு படியுங்கொண்டு நிற்கிறாயென்றந்வயம் என்றாலென்பது - சொல்லெச்சம்—எ-று. (௧௫௮)

வினைவர்க்கமுற்றுமுடனேபடைத்தியவையெய்தியென்றும்விளையா
நினைவர்க்குநெஞ்சினுறுகாமமுற்றியறியாமைநிற்றிமனமா
முனைவர்க்குமொத்தியமரர்க்குமொத்திமுழுமூடரென்றிம்முதலோர்
அனைவர்க்குமொத்தியறியாமையாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் முக்காலங்களுமுணர்ந்த பெரியதிருவடி தாமாக இந்திரியங்களின் மனமாகின்றேனும் யானேயென்னுங் கீதோப நிடதாசாரியனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். வினை-வினையைத் தருகையாலே வினையென்றதாகுபெயர், வர்க்கமுற்றும் - அவ்வினமுழுதும், உடனே - ஏககாலத்திலே, படைத்தி - சிருட்டிக்கிறாய், அவை - அவ்வினங்களை, எய்தி - அடைந்து, என்றும் - (அவற்றின் பயனைப்பொறுக்கமாட்டாம) லெக்காலத்திலும், விளையா - மீளவுண்டாகாமல், நினைவர்க்கு - எண்ணுவோர்க்கு, நெஞ்சில் - சுழுத்திநிலையில், உறு - எல்லாவற்றிலு மிகுந்த, காமம் - காமத்தை, முற்றி - நிரம்பச்செய்து, அறியாமல் - அவ்விளையாமையை யெண்ணுவோரை யறிய வொட்டாமல், நிற்றிமனமா - மனமாக நிற்கிறாய், முனைவர்க்கும் - முதல்வராகிய பிரமருத்திராதிகளுக்கும், ஒத்தி - ஒத்துநிற்கிறாய், அமரர்க்கும் - இந்திராதி தேவர்களுக்கும், ஒத்தி-ஒத்து நிற்கிறாய், முழுமூடர்-முழுதுமறிவீனர், என்று - என்றுசொல்லப்படுகிற, இம்முதலோர் - இவ்விராவணாதிகளோடு, அனைவர்க்கும் - எல்லாருக்கும், ஒத்தி - (உருப்பசி-மோகினி, அகலிகை - சீதை, கைகேசிமுதலாயினோர் விஷயத்தில், பிரம னுருத்திர னிந்திர னிராவணன் சக்கிரவர்த்தி முதலாயினோர் மிக்க காமங்கொண்டமையா) லொத்து நிற்கிறாய், அறியாமை - மதிநலமருளப்

பெற்றறியாமல், இவ்வதிரேகமாயையை யறிவாரார், எல்லாவற்றினு மிக்கது காமமென்பதை காதலகாதலறியாமையென்கிற திருவள்ளுவராற் காண்க—எ-று. (௨௫௯)

எறிந்தாருமேறுபடுவாருமின்னபொருள்கண்டிரங்குபவரும்
செறிந்தாரினுண்மையெனலாயதன்மைதெரிகின்றதுன்னதிடையே
பிறிந்தார்பிறிந்தபொருளோடுபோதிபிறியாதுநிற்றிபெரியோய்
அறிந்தாரறிந்தபொருளாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் அவ்வினைவர்க்க மித்துணைத்தென்று மத்துணையுமனமாகிய நின்னிடத்துந் தோன்றநிற்கிறவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். எறிந்தாரும் - நாகபாசத்தை வீசினேரும், ஏறுபடுவாரும் - அவ்வீசலையேற்றுக்கிடக்கிறவரும், இன்ன பொருள் - வெற்றி தோல்வியென்றிருவகையானபொருளையும், கண்டு - பார்த்து, இரங்குபவரும் - கலங்குபவருமாக, செறிந்தாரில் - கூடினேரிடத்தே, நுண்மையெனலாய தன்மை - அணுரூபமானமனமென்று சொல்லலாகியபடி, தெரிகின்றது - விளங்குகின்றது, உன்னதிடையே - உனது விஷயத்திலே, (எவவாறென்னில்) பிறிந்தார் - வெகுளியாற் பிறிந்தாராகிய இராவணாதிகள் விஷயத்தில், பிறிந்த பொருளோடு - பிறிதற்கேதுவான வெகுளியென்கிறபொருளோடு, போதி - போகிறாய், பிறியாது - (காமத்தாற் பிறியாராகிய இளையபெருமாளாதிகள் விஷயத்திற் காமத்தோடு) பிறியாமல், நிற்றி - நிற்கிறாய், பெரியோய் - வரம்பிலின்பத்தால் பெரியோனே, அறிந்தார் - இவ்விருதிறத்தையுங் கண்டறிந்தாராகிய விந்திராதிகள் விஷயத்தில், அறிந்தபொருள் - (எத்தன்மையெய்தி முடியுங்கொலென்னு) மயக்கமாகிய பொருள், ஆதி - காமித்தலும் கோபித்தலுமின்றி மயக்கமாகி நிற்கிறாய், இவ்வதிரேகமாயையறிவாரார், வாளுள் - மறந்தாய் எறிந்தார் இம்மூன்றுசெய்யுளு நிரனிறையணி. கண்டிருந்த தேவர்களையென் செயலாமென் றெண்ணுகையான் மயக்கமாயிற்று. காமாதி - ஆறுவர்க்கமும் இராகாதி - பதின்மூன்று வர்க்கமுமடங்க காமம் வெகுளி மயக்கமிவை மூன்றென்ற திருவள்ளுவரினிவருமடக்கினமைகாண்க—எ-று. (௨௬௦)

பேராயிரங்களுடையாய்பிறந்தபொருடோறுநிற்றிபிரியாய்
நீராய்பிரிந்துதிரிவாய்திறந்தொறவைதேறுமென்றுதெளியாய்
கூராழியங்கையுடையாய்திரண்டொருருவாதிகோடலுரிபோல்
ஆராயினேதுமிலையாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதிலே திரிபுடியாய்த் தேடுதற்கரியவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். பேராயிரங்களுடையாய் - ஆயிரநாமங்களை யுடையவனே, பிறந்த - உடம்போடுபிறந்த, பொருடோறும் - ஆன்மாக்களெல்லாம், நிற்றி-நிற்கிறாய், பிரியாய்-பிரியாதவனாய், நீராய்-அப்படி ஒருபடியே நீங்காதவனாய், பிரிந்து மெய் வாய் - கண்ணோடு மூக்குச்செவிவழியாலே, திரிவாய்-வேறுபடுவாய், திறந்தொறு - இதிலும்மைதொக்கது, (சுவையொளி யூ

றோசை நாற்றங்களையுண்டு) அவை - அப்பொறிகளும், தேறுமென்று- அறியுமென்று, தெளியாய் - தெளியப்படானாய், கூர் - கூரிய, ஆழி - திருவாழியை, அங்கை - அழகிய கையிலே, உடையாய் - உடையவனே, திரண்டு - திரிபுடியாகத்திரண்டு, ஒருருவாகி - ஒருவடிவாகினாய், கோடல் - வெண்காந்தட்கிழங்கை, உரிபோல் - உரித்தாற்போல, ஆராயின் - உள்ளேயிருப்பதேதுவென்றாராயப்புக்கால், ஏதுமிலையாகி - ஒன்றுமில்லையாகினாய், இவ்வதிரேகமாயையறிவாரார், இன்பமுதலிய பேற்றுக்கேதுவா மிந்திரியமனமாமஃதே - யின்பமலியான்மாத்தோறும் மிருப்பதாலநந்தமெனவுரித்தத் - தின்பகுதியெனவு மணுரூபமெனவுந் துலங்கவிலங்குமான்கண் - ணின்பகுதிகவர்ந்து கெண்டையெனப் பிறழ்ந்து வண்டுறழ்நேத்திரத்தினளே, என்பது நியாயவிவேகம் இம்மூன்றுபாட்டும் பிர்மதத்திற்குடன்படல்,—எ-று. (௨௬௧)

என்றின்னபன்னியழிவானெறிந்தவெறிசோதிகீறவிருள்போய்ப்
பொன்றுன்னியன்னவெயில்வீசுகின்றபொருள்கண்டுநின்றபுகழோன்
நின்றுன்னியுன்னியிவன்யாவனென்றுநிமிர்கின்றவெல்லைநிமிரச்
சென்றுன்னிமுன்னருடனாயினனிவ்வுலகேழுமூடுசிறையான்.

இவ்வாறு திருவடிதெருட்டப் பெருமாள் சோகந்தெளிந்து கண்டமைகூறுகின்றது.

இ-ள். என்று - என்றுசொல்லி, இன்ன - இவ்விதமாக, பன்னி- பிரலாபித்து, அழிவான் - கலங்குகின்றதிருவடி, எறிந்த - வீசிய, எறி சோதி - காந்துகிற சூரியன், கீற - கிழிக்க, இருள் - மயக்கவிருளானது, போய் - கழிந்து, பொன் - சுவர்ணப்பிரபை, துன்னியன்ன - நெருங்கினாற்போல, வெயில் - சூரியப்பிரபையை, வீசுகின்ற - தந்துநிற்கிற, பொருள் - தமது பொருளாகிய திருவடியை, கண்டு - பார்த்து, நின்ற- நிலைபெற்ற, புகழோன் - வாத்ஸல்யாதி கல்யாணகுணங்களையுடைய பெருமாள், நின்று - நிதானித்து, உன்னியுன்னி - எண்ணியெண்ணி, இவன் - இந்தமஹாபுருஷன், யாவனென்று - எவ்வுலகத்தானென்று, நிமிர்கின்ற - தலைதூக்குகிற, எல்லை - சமயத்தில், நிமிர - முழுதுந்தலைதூக்க, சென்று - போய், உன்னிமுன்னர் - ஆலோசிக்கிற பெருமாளுக்கு முன்னே, உடனாயினன் - கூடலானான், இவ்வுலகேழும் - இந்தவுலகேழையும், மூடு - மறைக்கத்தக்க, சிறையான்-சிறகையுடையவன்,—எ-று.

எறிந்தவெறிசோதி - இருள் - உருவகவுயர்நவிற்சி, பொன்றுன்னியன்னவெயில் உவமையணி. வீசுகின்ற பொருளென்பதுமது. வில்லியென்றாற்போல வுன்னியென்றது வினைமுதற்பொருண்மையுணர்த்து மிகரவிகுதி. (௨௬௨)

வாசங்கலந்தமறைநாளநூலின்வகையென்பதென்னைமழையென்
றாசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சரராமன்வெண்ணெயணுகும்
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுரந்தவுரகம்.

இ-ள். வாசம் - பரிமளத்தோடு, கலந்த - கூடிப்பிறந்த, மரை - தாமரையினது, நாளம் - தண்டிலுண்டாகிய, நூலின் - மெல்லியவிழையினது, வகை - விதமாயிற்று, என்பது - என்றுசொல்லுமது, என்னை - எப்படி, (தேரீர்க்கும் வடம்போலு நாகபாசத்தை மெல்லிய தாமரைநூல்போலாயிற்றென்கிறது முழுதுந் தேயாமையா லவ்வுவமை கூடாதென்றபடி.) மழையென்று - கைம்மாறு கருதாது வழங்குமேகமென்று, ஆசங்கைகொண்ட - மயங்குதலைசெய்து நிற்கிற, கொடை - கொடுத்தற்றொழிலிலே, மீளி - மீட்சியில்லாதவனாகையால், அண்ணல் - அக்கொடைவீரரிற்றலைவனாகிய, சரராமன் - சரராமமுதலியார்வாழும், வெண்ணையனாகும் - வெண்ணெய்நல்லூரையடைந்த, தேசங்கலந்த - ஞானவொளியாகிய வழகுகூடிய, மறைவாணர் - வடநூன்முனிவரும், செஞ்சொலறிவாளர் - தென்மொழிப்புலவரும், என்று - என்றுசொல்லுகிற, இம்முதலோர் - இவர் முதலாயினோரை, பாசம் - கயிறாக, கலந்த - பிணிக்கப்பட்டிருக்கிற, பசிபோல் - உதராக்கினிபோல, அகன்ற - நீங்கின, பதகன் - இந்திரசித்தாகிய வஞ்சகன், துரந்த - பிரயோகித்த, உரகம் - நாகபாசம், இவ்வுவமை நாகபாசமுழுது மில்லையாயிற்றென்று துவனிக்கின்றதாகையாற் கூடுமவ்வுவமை கூடாதென்றார் என்றதொழிற்பணி. சரராமனென்பதுருவகவுயர்வுநவிற்சி. ஆசங்கித்தல் - மயங்குதல்- இன்னதல்ல இதுவெனமொழிதலென்னுமுதகி,—எ-று. (உசுங)

பல்லாயிரத்தின்முடியாதபக்கமவைவீசவந்துபடர்கால்
செல்லாநிலத்தினிருளாதல்செல்லவுடனின்றவாளிசிதறுற்
றெல்லாவிதத்துமுணர்வோடுநண்ணியிவனேபிழைக்குமெனவோர்
வல்லானொருத்தனிடையேபடுத்தவடுவானமேனிவடுவும்.

இவ்விரண்டுபாட்டும் நாகபாசம் நீங்கினமை கூறுகின்றன.

இ-ள். பல் - பல்லுக்குவமையான முருந்து, (அதாவது இறகினடிக்குருத்து.) ஆயிரத்தின் - ஆயிரமென்கிற கணக்கினும், முடியாத - அளவுபடாதுமேலிடுகிற, பக்கம் - சிறகுகளாகிய, அவை - அவ்விரண்டாலும், வீச - வெயிலையெறிய, வந்து - நாசிவழியேவந்து, படர் - பாதிகழிந்து பாதிமீண்டு மவ்வழியே செல்லுகிற, கால் - பிராணவாயு, செல்லாத - போகக்கூடாத, நிலத்தின் - சுவாதிட்டான நிலையிலுள்ள, இருள் - மயக்கமாகியவிருள், ஆதல் - ஆகியிருந்தது, செல்ல - கழியுமளவில், உடல் - அவரவருடம்புகளிலே, நின்ற - தைத்திருந்த, வாளி - பாணங்களும், சிதைவுற்று - அழிவுபட்டு, எல்லாவிதத்தும் - சகல விஷயங்களிலும், உணர்வோடு - சோர்வுறாத வுணர்வோடு, நண்ணி - நடக்கப்பெற்று, இவனே - இத்தன்மையவனை, பிழைக்கும் - சோர்வையடைவான் என - என்றுசொல்லலாக, ஓர் - ஒப்பற்ற அல்லதுணருமவனை, வல்லானொருத்தன் - உணர்வால்வல்ல வொருவன், இடையே - இவ்வுணர்வோடு நண்ணிய நடுவிலே, படுத்த - பூர்வகர்மத்தா லடையலான, வடு - சோர்வாகிய குற்றத்தை, ஆன - ஒப்பாயின, மேனி - அவருடம்

பினுள்ள, வடுவும் - பாணத்தாலாகிய தழும்புகளும், உடலிற் றழும்பு கூட வில்லையென்றுயிற்று,—எ-று.

இசையுமெனினு மிசையாதெனினும் வசைதீரவெண்ணுவர் சான்றோராகலான் இடையேபடுத்த வடுவிசையினரி மாவுளங்கிளித்த வம்பினிற்றீதோ வரிமாப்பிழைப்பெய்த கோல்தீதன்றுகையாலே இடையே படுத்த வடுகுற்றமன்றென்றார். இது வேற்றுப்பொருள் வைப்பணி இத ற்குவமையணியங்கம். முருந்தைப்பல்லென்றது எதிர்நிலையை யங்கமாகக்கொண்ட வுருவகவுயர்வு நவிற்சி. மயக்கத்தை யிருளென்றதுமது. ()

தருமத்தினொன்றுமொழுகாதசெய்கைதழுவிப்புணர்ந்ததகையால்
உருமொத்தவெங்கண்வினைதீயவஞ்சருடலுய்த்ததில்லையுலகின்
கருமத்தினின்றகவிசேனைவெள்ளமலர்மேலவ்வள்ளல்கடைநாள்
நிருமித்தவென்னவுயிரோடெழுந்துநிலைநின்றதெய்வநெறியால்.

இ-ள். தருமத்தின்-அறத்தின்வழியே, ஒன்றும்-ஒருவிதத்திலும், ஒழுகாத-நடவாத, செய்கை - செய்யுந்தன்மையை, தழுவி-அநுசரித்து, புணர்ந்த-அச்செய்யுந்தன்மையான பாவத்தோடுகூடிய, தகையால்-பண்பினாலே, உரும் - இடியை, ஒத்த-ஒப்பான, வெங்கண்-கொடுமையான, வினை - பாவமானது, தீய - நசிக்கும்படி, வஞ்சர்-பாதகருடைய, உடல்-தேகங்களிலே, உய்த்ததில்லை - அப்பக்கத்தொளிசென்றதில்லை, உலகின் - உயர்ந்தோர்களுடைய, கருமத்தின் - காரியத்தின் கண்ணே, நின்ற - உத்தியோகித்துநின்ற, கவிசேனை - வானரசேனையாகிய, வெள்ளம் - எழுபதுவெள்ளமும், மலர்மேல் - பூமேலிருந்து, அவ்வள்ளல்-முன்னே சிருட்டித்த அந்தப்பிரமன், கடைநாள் - அவ்வெள்ள முடிவாகிய பிற்காலத்திலும், நிருமித்ததென்ன - மீளவுஞ் சிருட்டித்தாற்போல, உயிரோடெழுந்து - உயிருடனேயெழுந்து, நிலைநின்ற - பெருமாளருகே நின்றன, தெய்வநெறியால் - ஈஸ்வரசங்கல்பத்தாலே, கடைநாணிருமித் தென்னவென்பதில் பொருளுவமை. உலகினென்பதிலாறனுருபைந்தனுருபாய் மயங்கிற்று. வெவ்வியகண்போறலிற்கொடுமையை வெங்கணென்றார்,—எ-று. (உகூ௫)

இளையானெழுந்துதொழுவானையன்பினிணையாரமார்பினணையா
விளையாததுன்பம்விளைவித்ததெய்வம்வெளிவந்ததென்னவியவாக்
கிளையாரினின்னதுணையோரையாவிகெழுவாவெழுந்துதழுவா
முளையாததிங்களுகிரான்முன்வந்துமுறைநின்றவீரன்மொழிவான்.

இ-ள். இளையான் - சலியாதவனாய், எழுந்து - வீரத்தோடெழுந்து, தொழுவானை - வணங்குகிற விளையபெருமாளை, அன்போடு - பிரீதியோடே, இணை - தம்மோடொத்ததன்மை, ஆர-தோன்ற, மார்பின் - திருமார்பிலே, அணையா - அணைத்து, விளையாத - வரத்தகாத, துன்பம்-துக்கத்தை, விளைவித்த-வரப்பண்ணின, தெய்வம்-காட்சியாகாத தெய்வந்தானே, வெளிவந்தது - காணவந்தது, என்ன - என்கிறதாக, விய

வா - அதிசயித்து, இளையாரின் - மீண்டு முய்யாதவர்போல, இன்ன-இத்தன்மையான, துணையோரை-அளவாயினோரை, ஆவி - தமது பிராணன், கெழுவா - அப்போதுபொருந்தியதாக, எழுந்து - அத்துணையோரின் முன்னேயெழுந்து, தழுவா-தழுவிக்கொண்டு, முளையாத-ஆகாயத்தின்முளைத்து மறையாத, திங்கள்-பாதிச்சந்திரனைப்போலும், உகிரான் முன் - நகத்தையுடைய பெரிய திருவடிக்குமுன்னே, முறைநின்று-தெய்வசந்நிதானத்தின்முறையே நின்று, அவ்வீரன்-அவ்இரகு வீரனாகியபெருமாள், மொழிவான்-சொல்லத்தொடங்கினான்.

வேறு.

கருடனை இராமன் நீயாவனெனா வினவுதல்.

அய்யநீயாரையெங்களருந்தவப்பயத்தினான்வந்
தெய்தினையுயிரும்வாழ்வுமீந்தனையெம்மனோரால்
கய்யுறைகோடற்கொத்தகாட்சியையல்லைமீட்சி
செய்திறமிலையாலென்றான்றேவர்க்குந்தெரிக்கிலாதான். (உசுஎ)

பொருளினியுணரவேறுபுறத்துமொன்றுண்டோபுந்தித்
தெருளினையுடையராகிற்செயலருங்கருணைச்செல்வம்
மருளினையிரவின்வந்தவாழ்க்கையீதாகின்வாயால்
அருளினையென்னினெய்தவரியனவுளவோவைய. (உசுஅ)

இராமன் கருடனைப்புகழ்தல்.

கண்டிலைமுன்புசொல்லக்கேட்டிலைகடனென்றெம்பால்
கொண்டிலைகொடுப்பதல்லாற்குறையிலையிதுநின்கொள்கை
உண்டிலையென்னநின்றவுயிர்தந்தவுதவியோனே
பண்டிலைநண்புநாங்கள்செய்வதென்பகர்தியென்றான். (உசுகூ)

கருடன் போதல்.

பறவையின்குலங்கள்காக்கும்பாவகன்பழையநின்னோ
டுறவுளதன்மையெல்லாமுணர்த்துவெனரக்கனோடம்
மறவினைமுடித்தபின்னர்வருவெனின்னுழையன்மாயப்
பிறவியின்பகைஞநல்குவிடையெனப்பெயர்ந்துபோனான். (உஎ0)

ஆரியனவனைநோக்கியாருயிருதவியாதும்
காரியமில்லான்போனான்கருணையோர்கடன்மையீதால்
பேரியலாளர்செய்கையூதியம்பிடித்துமென்னார்
மாரியைநோக்கிக்கைம்மாறியற்றுமோவையமென்றான். (உஎக)

இறந்தனனிளவலென்னாவிறைவியுமிடுக்கணெய்தும்
மறந்தனருறங்குகின்றவஞ்சருமறுகிமீளப்
பிறந்தனரென்றுகொண்டோர்பெரும்பயப்பிடிப்பரன்றே
அறந்தருசிந்தையன்பவார்த்துமென்றனுமன்சொன்னான். (உஎஉ)

வானரராரவாரித்தல்.

அழகிதென்றண்ணல்கூறவார்த்தனர்கடல்களஞ்சிக்
குழைவுறவநந்தனுச்சிக்குன்றநின்றண்டகோளம்
எழுமிசையுலகமேன்மேலெங்கிவிரிந்துசிந்தி
மழைவிழுமலைகள்கீறமாதிரம்பிளக்கமாதோ. (௨௭௩)

ஆரவாரமிராவணன் கேட்டல்.

பழிப்பருஞ்சிந்தையாள்பாற்சிந்தனைபடரக்கண்கள்
விழிப்பிலன்மேனிசாலவெதும்பினனீசன்வேலும்
குழிப்பரிதாயமார்பைமன்மதன்கொற்றவாளி
கிழிப்புறவுயிர்ப்புநீங்கிக்கிடந்தவாளரக்கன்கேட்டான். (௨௭௪)

தாதைசொற்றலைமேற்கொண்டதாபதன்றருமமூர்த்தி
* ஈதைகடீர்க்குநாமத்திராமனையெண்ணியெங்கும்
சீதையுமவளையுன்னிச்சிந்தனைதீர்ந்துந்தீராப்
பேதையுமன்றியவ்வூர்யாருளர்துயில்பெறாதார். (௨௭௫)

இராவணன் நகைத்தல்.

சிங்கவேறசனியேறுகேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன்பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்றவார்த்தையேவலியதென்னா
அங்கையோடங்கைகொட்டியலங்கற்றோள்குலுங்கநக்கான். (௨௭௬)

இடிக்கின்றதசனியென்னவிரைக்கின்றதிராமன்போர்வில்
வெடிக்கின்றதண்டமென்னப்படுவதுதம்பிவின்னாண்
அடிக்கின்றதென்னவந்துசெவிதொறுமனுமனார்ப்புப்
பிடிக்கின்றதுலகமெங்கும்பரிதிசேயார்ப்பின்பெற்றி. (௨௭௭)

அங்கதனவனேவார்த்தானந்தரமார்க்கின்றானும்
வெங்கதநீலன்மற்றைவீரரும்வேறுவேறு
பொங்கினரார்த்தவோசையண்டத்தும்புறத்தும்போன
சங்கையொன்றின்றித்தீர்ந்தார்பாசத்தைத்தருமநல்க. (௨௭௮)

இராவணனிந்திரசித்தின் மாளிகையடைதல்.

என்பதுசொல்லிப்பன்னிச்சேக்கைநின்றிழிந்துவேந்தன்
ஒன்பதுகோடிவாட்கையரக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடிபூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயினின்றுமகன்றனிக்கோயில்சார்ந்தான். (௨௭௯)

தாங்கியதுகிலார்மெள்ளச்சரிந்துவீழ்குழலார்தாங்கி
வீங்கியவுயிர்ப்பார்விண்ணைவிழுங்கியமுலையார்மெல்லத்

---

* ஈதை - துன்பம்.

தூங்கியவிழியார்த்தள்ளித்துளங்கியநடையார்வல்லி
வாங்கியமருங்குன்மாதரனந்தரான்மயங்கிவந்தார். (௨௮௦)

பானமுந்துயிலுங்கண்டகனவும்பண்கனிந்தபண்ணைக்
கானமுந்தள்ளத்தள்ளிக்களியொடுங்கள்ளங்கற்ற
மீனினும்பெரியவாட்கண்விழிப்பதுமுகிழ்ப்பதாக
வானவர்மகளிர்போனார்மழலையஞ்சதங்கைமாழ்க. (௨௮௧)

மழையினைநீலமூட்டிவாசமும்புகையுமாட்டி
உழையுழைசுருட்டிமென்பூகுவித்திடைக்கிடையூறென்னாப்
பிழையுடைவிதியார்செய்தபெருங்குழற்கருங்கட்செவ்வாய்
இழையணிமகளிர்சூழ்ந்தாரனந்தராலிடங்கடோறும். (௨௮௨)

தேனிடைக்கரும்பிற்பாலிலமுதினிற்கிளவிதேடி
மானிடைக்கயலில்வாளின்மலரிடைநயனம்வாங்கி
மேனடையனையமற்றுநல்வழிநல்கவேண்டி
வானுடையண்ணல்செய்தமங்கையர்மருங்குசென்றார். (௨௮௩)

தொடங்கியவார்ப்பினோசைசெவிப்புலந்தொடர்தலோடும்
இடங்கரின்வயப்போத்தன்னவெறுழ்வலியரக்கர்யாரும்
மடங்கலின்முழக்கங்கேட்டவான்கரியொத்தார்மாதர்
அடங்கலுமசனிகேட்ட * வளையுறையரவமொத்தார். (௨௮௪)

அரக்கனுமைந்தன்வைகுமாடகத்தமைந்தமாடம்
பொருக்கெனச்சென்றுபுக்கான்புண்ணினிற்குமிழிபொங்கத்
தரிக்கிலன்மடங்கலேற்றாற்றொலைப்புண்டுசாய்ந்துபோன
கருக்கிளர்மேகமன்னகளிறனையானைக்கண்டான். (௨௮௫)

இந்திரசித்தனிராவணனை வந்ததென்னென வினாதல்.

எழுந்தடிவணங்கலாற்றானிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானைநோக்கித்துணுகுற்றமனத்தன்றான்றல்
அழுங்கினைவந்ததென்னையடுத்ததென்றடுத்துச்சொன்னான்
புழுங்கியபுண்ணினானுமினையனபுகறலுற்றான். (௨௮௬)

உருவினவுரத்தைமுற்றுமுலப்பிலவுதிரம்வற்றப்
பருகினவளப்பிலாதபகழிகள்கவசம்பற்றற்
றருகினபின்னைச்சாலவலசினெனையகண்கள்
செருகினவன்றேயானுமாயையிற்றீர்ந்திலேனேல். (௨௮௭)

இந்திரன்விடையின்பாகனேறும்வலிக்கலுழனேறும்
சுந்தரனருக்கனென்றித்தொடக்கத்தார்தொடர்ந்தபோரில்

---

* அளை - வளை.

நொந்திலெனினையதொன்றுறுவன்றிலென்மனிதனோன்மை
மந்தரமனையதோளாய்வரம்புடைத்தன்றுமன்னோ. (உஅஅ)

இளையவன்றன்மையீதாலிராமனதாற்றலெண்ணின்
தளையவிலழங்கன்மார்பகம்வயிற் * றங்கிற்றன்றால்
விளைவுகண்டுணர்தலல்லால்வென்றிமேல்விளையுமென்ன
உளையதன்றென்னச்சொன்னானுற்றுளதுணர்ந்திலாதான். (உஅகூ)

வென்றதுபாசத்தாலுமாயையின்விளைவினாலும்
கொன்றதுகுரக்குவீரர்தம்மொடக்கொற்றத்தோனை
நின்றனனிராமனின்னுநிகழ்ந்தவாநிகழ்கமேன்மேல்
என்றனனென்னக்கேட்டவிராவணனிதனைச்சொன்னான். (உகூ0)

இராவணன் இந்திரசித்திற் கிலக்குமணாதியரேழைமைகூறல்.

வார்கழற்காலமற்றவ்விலக்குவன்வயிரவில்லின்
பேரொலியரவம்விண்ணைப்பிளந்திடக்குரங்குபோந்த
காரொலிமடங்கவல்லைக்கம்பிக்கக்களத்தினார்த்த
போரொலியொன்றுமையவறிந்திலைபோலுமென்றான். (உகூக)

அய்யவெம்பாசந்தன்னாலார்ப்புண்டாரசனியென்னப்
பெய்யும்வெஞ்சரத்தான்மேனிபிளப்புண்டாருணர்வுபோந்தார்
உய்யுநரென்றுரைத்ததுண்மையோவொழிக்கவொன்றோ
செய்யுமென்றெண்ணத்தெய்வஞ்சிறிதன்றோதெரியினம்மா. (உகூஉ)

ஈதுரைநிகழும்வேலையெய்துவதறியப்போய
தூதுவர்விரைவின்வந்தார்புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்னவிராவணனியம்பவீறின்
றோதியகல்வியாளர்புகுந்துளதுரைக்கலுற்றார். (உகூங)

தூதர் நடந்தவைகூறல்.

பாசத்தாற்பிணிப்புண்டாரைப்பகழியாற்களப்பட்டாரைத்
தேசத்தாரரசன்மைந்தனிடையிருள்சேர்ந்துநின்றே
ஏசத்தானிரங்கியேங்கியுலகெலாமெரிப்பெனென்றான்
வாசத்தார்மாலைமார்பவானுறைகலுழன்வந்தான். (உகூச)

அன்னவன்வரவுகாணாவயிலெயிற்றரவமெல்லாம்
சின்னபின்னங்களானபுண்ணோடுமயர்வுதீர்ந்தார்
முன்னையின்வலியராகிமொய்க்களநெருங்கிமொய்த்தார்
இன்னதுநிகழ்ந்ததென்றாரரக்கனீதெடுத்துச்சொன்னான். (உகூரு)

இராவணன் கலுழனை இகழ்தல்.

ஏற்றருந்தடந்தோளாற்றலென்மகனெய்தபாசம்
காற்றிடைக்கழித்துத்தீர்த்தான்கலுழனுங்காண்மின்காண்மின்

* தங்கிற்றன்றால் - தங்கிற்று. ஆல் - அசை.

வார்த்தையீதாயினன்றுலிராவணன்வாழ்ந்தவாழ்க்கை
மூத்ததுகொள்கைபோலாமென்னுடைமுயற்சியெல்லாம். (௨௯௬)

உண்டுலகேழுமேழுமுமிழ்ந்தவனென்னுமாற்றம்
கொண்டவனென்னோடேற்றசெருவினின்மறுக்கங்கொண்டான்
மண்டிலந்திரிந்தபோதுமறிகடன்மறைந்தபோதும்
கண்டிலன்போலுஞ்சொற்றகலுழனன்றென்னைக்கண்ணால். (௨௯௭)

கரங்களினேமிசங்கந்தாங்கியகரியோன்காக்கும்
புரங்களுமழியப்போனபோழ்திலென்சிலையிற்பொங்கி
உரங்களில்முதுகிற்றோளினுறையுறுசிறையினுற்ற
சரங்களுநிற்கவேகொல்வந்ததவ்வருணன்றம்பி. (௨௯௮)

இந்திரசித்தனை நீயேசென்று பொருதிஎன இராவணனுரைத்தல்.

ஈண்டதுகிடக்கமேன்மேலியைந்தவாறிசையவெஞ்சி
மீண்டவர்தம்மைக்கொல்லும்வேட்கையைவேட்குமன்றே
ஆண்டகைநீயேயின்றுமாற்றுதியரும்போரன்னோன்
காண்டலுநாணுமென்றான்மைந்தனுங்கருத்தைச்சொன்னான். (௨௯௯)

இந்திரசித்துமறுத்துடன்படல்.

இன்றொருபொழுதுதாழ்த்தென்னிகழ்பெருஞ்சிரமநீங்கிச்
சென்றொருகணத்தினாலேநான்முகன்படைத்ததெய்வ
வென்றிவெம்படையினாலுன்மனத்துயர்மீட்பெனென்றான்
நன்றெனவரக்கன்போய்த்தனிமலர்க்கோயில்புக்கான். (௩00)

௧௮ - வது, நாகபாசப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨௨௫௧.

---

௧௯ - வது, படைத்தலைவர்வதைப்படலம்.

ஆர்த்தெழுமோசைகேட்டவரக்கருமுரசமார்ப்பப்
போர்த்தொழில்வேட்கைபூண்டுபொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தடமார்பன்றன்னைத்தாவிடையென்னச்சார்ந்தார்
பார்த்தனன்முனிந்துமன்னனினையனபகர்வதானான். (௧)

மாபெரும்பக்கனோடொன்புகைக்கண்ணன்வந்தான்
எவுதியெம்மையென்பார்தம்முகமினிதினோக்கிப்

போவதுபுரிதிரென்னப்புகறலும்பொருததூதர்
தேவமற்றிவர்கள்செய்கைகேளெனத்தெரியச்சொன்னார். (௨)

தூதர் சேனைவீரர் திறங்கூறல்.

ஆனையும்பரியுந்தேருமரக்கருமமைந்தவாளித்
தானையும்வீயநின்றதலைமகன்றனிமையோரார்
மானவன்வாளிவாளியென்கின்றமழலைவாயார்
போனவர்மீளவந்துபுகுந்தனர்போலுமென்றார். (௩)

வேறு.

சேனைகள்மீது இராவணன் சீற்றங்கோடல்.

அற்றவர்கூறலுமாரழலிற்றாய்
முற்றியகோபமுருங்கமுனிந்தான்
இற்றிதுவோவிவர்சேவகமென்னாப்
பற்றுமினென்றனன்வெம்மையின்றான். (௪)

என்றலுமெய்தினர்கிங்கரரென்பார்
பின்றலினேரைவலிந்துபிடித்தார்
நின்றனராயிடைநீலநிறத்தான்
கொன்றிடுவீரலிர்கொண்மினிதென்றான். (௫)

சேனைகள் மூக்கறுப்பான் இராவணன் கட்டளையிடல்.

எற்றமினிச்செயல்வேறிலையீர்வீர்
நாற்றநுகர்ந்துயர்நாசியைநாமக்
சோற்றருதிண்பணைகொட்டினிர்கொண்மீர்
சாற்றுமினஞ்சினரென்றுரைதந்தே. (௬)

மாலி தடுத்துரைத்தல்.

அக்கணனேயயில்வாளினர்நேரா
மிக்குயர்நாசியையீரவிரைந்தார
புக்கனரப்பொழுதிற்புகழ்தக்கோய
தக்கிலதென்றனன்மாலிதடுத்தான். (௭)

அஞ்சமமஞ்சியழிந்துளரானார்
வெஞ்சமம்வேறலும்வென்றியதன்றாயத
துஞ்சலுமென்றிலைதொல்லையவன்றே
தஞ்செனவாருளராண்மைதகைந்தார். (௮)

அந்தரமொன்றுமறிந்திலையன்றே
வந்தனநம்வயினெத்துணைமன்னா
தந்திரம்வானவர்தானவரென்னும்
இந்திரனஞ்சினனெண்ணுதியன்றே. (௯)

வருணனடங்கினன்வந்துவணங்கிக்
கருணைபெறுந்துணையும்முயிர்கால்வான்
இருணிறவஞ்சகரெங்குளரெந்தாய்
பருணிதர்தண்டமிதன்றுபகர்ந்தால். (௧0)

பத்தொருநான்குபகுத்தபரப்பின்
அத்தனைவெள்ளமரக்கரவிந்தார்
ஒத்தொருமூவர்பிழைத்தனருய்ந்தார்
வித்தகர்யாரினிவீரம்விளைப்பார். (௧௧)

பாசமுமிற்றதுபாதியின்மேலும்
நாசமுமுற்றதுநம்பிநடந்தாய்
பூசன்முகத்தொருகான்முளைபோதா
நீசரைவெட்டுதியோநெடுநாசி. (௧௨)

வாழியிலக்குவனென்னின்மறுக்குற்
றூழியரக்கர்தம்வாயிலடைப்பார்
ஏழுகடற்றுணையோவினிநாசி
ஊழியறுத்திடினும்முலவாதால். (௧௩)

தூதுநடந்தவனைத்தொழுதந்நாள்
ஓதுநெடுஞ்செருவஞ்சியுடைந்தார்
தீதிலர்நின்றவர்சேனையினின்றார்
பாதியின்மேலுளர்நாசிபடைத்தார். (௧௪)

விட்டிலைசீதையையாமெனின்வீரர்
ஒட்டியபொருளதோவொருநாளை
வெட்டுதிநாசியைவெந்தொழில்வல்லோா
பட்டிலரென்றிலையென்றுபகர்ந்தான். (௧௫)

ஆறினபின்னமழிந்தனரன்னார்
தேறினரன்னதுசிந்தையுணர்ந்தார்
சீறியநெஞ்சினர்செங்கணரொன்றே
கூறினர்தந்நிலைசெய்கைகுறித்தார். (௧௬)

நின்மகனான இந்திரசித்து மாயையாலோடி யொளித்திலனோவெனல்.

உன்மகனால்கியொதுங்கினனென்றோ
மின்னகுவானிடையேகவிரைந்தான்
அன்னதின்மாயையியற்றியகன்றான்
இந்நகரெய்தினனுய்ந்தனனெந்தாய். (௧௭)

இப்பகலொன்றினினாளையினல்லால்
முப்பகநீர்கிலமாவிமுடிப்பேம

வெப்பகலாவெரிவெந்தழல்வெந்த
செப்பகல்வெண்ணெயிளுைன்மைதெரிந்தோய். (௧௯)

விட்டனையெம்மைவிடுத்தினிவெம்போர்
பட்டனரென்றுபடுத்தனரொன்றோ
கெட்டனரென்பதுகேளலையென்று
ஓட்டினராவிமுடிக்கவுவந்தார். (௧௯)

இராவணன்சேனைகளையேவுதல்.

அன்னவர்தம்மொடுமையிருவெள்ளம்
மின்னுபடைக்கையரக்கரைவிட்டான்
சொன்னதொகைக்கமையானைசுடர்த்தேர்
துன்னுவயப்பரியோடுதொகுத்தான். (௨0)

நெய்யழல்வேள்விநெடும்பகைநேர்விண்
தய்வருசூரியசத்துருவென்பான்
பெய்கழன்மாலிபிசாசனெனும்பேர்
வெய்யவன்வச்சிரம்வென்றவெயிற்றன். (௨௧)

என்றவரோடுமெழுந்துலகேழும்
வென்றவனேவலின்முன்னம்விரைந்தார்
சென்றனமால்கரிதேர்பரிசெல்லக்
குன்றினமென்னநடந்தனர்கோட்பால். (௨௨)

விண்ணைவிழுங்கியதூளியவிண்ணோர்
கண்ணைவிழுங்குதலிற்கரைகாணார்
எண்ணைவிழுங்கியசேனையர்யாரும்
பண்ணைவிழுங்கவுணர்ந்திலர்பண்பால். (௨௩)

கால்கிளர்தேரொடுகால்வரையோடு
மேல்கிளர்பல்கொடிவெண்டிரைவீச
மால்கடலானதுமாமழைவானப்
பால்கிளர்மீனிடையாடியபண்பால். (௨௪)

பேரிகலித்தனபேருலகைச்சூழ்
ஏரிகலித்தனவாமெனயானைக்
காரிகலிக்கடலோடுகலித்த
மாரிகலித்தெனவாசிகலித்த. (௨௫)

சென்றனசென்றனசுவட்டொடுசெல்லா
நின்றுபிணங்கியகலவியினில்லா
ஒன்றினையொன்றுதொடர்ந்தனவோடைக்
குன்றுநடந்தனபோற்கொலையானை. (௨௬)

மாகநெடுங்கரம்வானின்வழங்கா
மேகநெடும்புனல்வாரினழேன்மேல்
போகவிலங்கினவுண்டனபோலாங்
காகநெடுங்களியானைகளிப்பால். (உஎ)

எரிந்தெழுபல்படையின்னொளிவீரர்
அருங்கலமின்னொளிதேர்பரியானை
பொருந்தியபண்ணொளிதாரொளிபொங்க
இரிந்தனபேரிருளெண்டிசைதோறும். (உஅ)

இராமன்வருபவன் யாவனென விபீடணன் பதிலுரைத்தல்.

எய்தியசேனையையீசனெதிர்ந்தான்
வெய்திவண்வந்தவன்மாயையின்வெற்றி
செய்தவனேகொடெறித்தியிதென்றான்
ஐயமில்வீடணனன்னதுரைத்தான். (உகூ)

வேறு.

முழைக்குலச்சீயம்வெம்போர்வேட்டதுமுனிந்ததென்னப்
புழைப்பிறையெயிற்றுப்பேழ்வாயிடிக்குலம்பொடிப்பவார்த்துத்
தழைப்பொறிவாளிப்புட்டில்கட்டிவிற்றாங்கிச்சார்வான்
மழைக்குரற்றேரின்மேலான்மாபெரும்பக்கன்மன்னோ. (௩௦)

வேறு.

சிகைநிறக்கனல்பொழிதெறுகட்செக்கரான்
பகைநிறத்தவருயிர்பருகும்பண்பினான்
நகைநிறப்பெருங்கடல்வாயைநக்குவான்
புகைநிறக்கண்ணவன்பொலம்பொற்றேரினான். (௩௧)

பிச்சரிற்றிகைத்தனன்பெற்றபோரினான்
மூச்சிரத்தயிலினான்மூரித்தேரினான்
இச்சிரமும்மதேயெனவந்தெய்துவான்
வச்சிரத்தெயிற்றவன்மலையின்மேனியான். (௩௨)

காலையுமனத்தையும்பிறகுகாண்பதோர்
வாலுளைப்புரவியின்மடித்தவாயினான்
வேலையினார்ப்பினன்விண்ணைமீக்கொளும்
சூலமொன்றுடையவன்பிசாசன்றோன்றினான். (௩௩)

சூரியன்பகைஞனச்சுடர்பொற்றேரினன்
நீரினுமுழக்கினனெருப்பின்வெம்மையான்
ஆரியவேள்வியின்பகைஞனமரோ
சோரியுங்கனலியுஞ்சொரியுங்கண்ணினான். (௩௪)

சாலிவண்கதிர்நிகர்புரவித்தானையான்
மூலிவெங்கொடுமையிற்றவத்தின்முற்றினான்
சூலியும்வெருக்கொளத்தேரிற்றோன்றுவான்
மாலியென்றடிமுறைறவணங்கிக்கூறினான். (௩௫)

அசுரவானர யுத்தம்.

ஆர்த்தெதிர்நடந்ததவ்வரியின்றானையும்
தீர்த்தனைவாழ்த்தியுற்றிரண்டுசேனையும்
போர்த்தொழில்புரிந்தனர்புலவர்போக்கிலார்
வேர்த்துயிர்பதைத்தனர்நடுங்கிவிம்மியே. (௩௬)

கல்லெறிந்தனகடையுருமிற்காலென
வில்லெறிந்தனகணைவிசும்பின்மேகத்த
செல்லெறிந்தனவெனச்சிதறிவீழ்ந்தன
பல்லெறிந்தனதலைமலையின்பண்பென. (௩௭)

கடம்படுகரிபடக்கலினமாப்பட
இடம்படுசில்லியினீர்த்ததேர்பட
உடம்படுமரக்கரையநந்தனுச்சியில்
படம்படுமெனப்படுங்கவியின்கற்படை. (௩௮)

கொலையொடுங்காநெடும்புயத்தின்குன்றொடும்
நிலைநெடுங்காலொடுநிமிர்ந்தவாலொடும்
மலையொடுமரத்தொடுங்கவியின்வன்னெடுந்
தலையொடும்போம்விசைந்தெறிந்தசக்கரம். (௩௯)

ஆண்டகைக்கவிக்குலத்தலைவராக்கையைக்
கீண்டனபுவியினைக்கிழித்தமாக்கரி
தாண்டுவகுலப்பரிமனத்திற்றாவுவ
தூண்டினர்கைவிசைத்தெரிந்ததோமரம். (௪0)

சில்லியந்தேர்க்கொடிசிதையச்சாரதி
பல்லுடைநெடுந்தலைமடியப்பாதகர்
வில்லொடுகெழுத்திறப்பகட்டைவீட்டுமால்
கல்லெனக்கவிக்குலம்வீசுங்கல்லரோ. (௪௧)

கரகமுந்தினமலைமுழையிற்கட்செவி
உரகமுந்தினவெனவொளிக்குமொள்ளிலை
அரகமுந்தினகவித்தலைவராக்கையில்
துரகமுந்தினரெடுத்தெறியுஞ்சூலமே. (௪௨)

வால்பிடித்தடிக்கும்வானரத்தைமால்கரி
கால்பிடித்தடிக்குமக்கரியினைக்கவி

தோல்பிடித்தரக்கரையெறியுஞ்சூர்முசு
வேல்பிடித்தெறிவரம்முசுவைவெங்கணார். (௪௩)

முற்படுகவிக்குலமுடுகவீசிய
கற்படக்களம்படுமரக்கர்க்கார்க்கடல்
பற்படுதலைப்படப்படுவர்பாதகர்
விற்படுகணைபடக்குரங்கின்வேலையே. (௪௪)

எயிற்றொடுநெடுந்தலையிட்டகல்லொடும்
வயிற்றிடைபுகப்பலபகலும்வைகிய
பயிற்றியராயினுந்தெரிக்கும்பண்பிலார்
அயிர்ப்பர்தங்கணவரையணுகியந்நலார். (௪௫)

இச்சுறுகிரிபடக்கிளர்பொற்றேர்க்கிழை
அச்சிறச்செல்கிலவாடல்வாம்பரி
எச்சுறுதுயரிடையெய்தவீத்துஞ
முச்சிறுவாழ்க்கையின்மூண்டுளோரென. (௪௬)

மீயவர்யாவரும்வீயவெங்கரி
சேயறுங்குருதியிற்றிரிவசேர்வில
நாயகராளொடுமெலியநவ்விதம்
பாயொடுவேலையிற்றிரியும்பண்பின. (௪௭)

படையொடுமேலவர்மடியப்பல்பரி
இடையிடைதரவிழுந்திழிந்தபண்பன
கடனெடுங்குருதியகனலிகாலுறு
வடவையைநிகர்த்தனவுதிரவாயன. (௪௮)

வேறு.

தூமக்கண்ணனுமநுமனுமெதிரெதிர்தொடர்ந்தார்
தாமத்தங்கதன்மாபெரும்பக்கனைத்தடுத்தான்
சேமத்திண்சிலைமாலியுநீலனுஞ்செறுத்தார்
வாமப்போர்வயப்பிசாசனும்பனசனுமலைந்தார். (௪௯)

சூரியன்பெரும்பகைஞனுஞ்சூரியன்மகனும்
நேரெதிர்ந்தனர்நெருப்புடைவேள்வியின்பகையும்
ஆரியன்றனித்தம்பியுமவ்வெதிரடர்ந்தார்
வீரவச்சிரத்தெயிற்றனுமிடபனுமிடைந்தார். (௫௦)

வெங்கண்வெள்ளெயிற்றரக்கரிற்கவிக்குலவீரச்
சிங்கமன்னபோர்த்தலைவரிற்றலைவராய்த்தெரிந்தார்
அங்கமர்க்களத்தொருவரோடொருவர்சென்றடர்த்தார்
பொங்குவெஞ்செருத்தேவருநடுக்குறப்பொருதார். (௫௧)

இன்னகாலையினீரைந்துவெள்ளம்வந்தேற்ற
மின்னும்வெள்ளெயிற்றரக்கர்தஞ்சேனையைவீரன்
அன்னவெஞ்சமத்தாறுவெள்ளத்தையுமவித்தான்
சொன்னநாலையுமிலக்குவன்பகழியாற்றொலைத்தான். (௫௨)

உப்புடைக்கடன்மடுத்தனவுதிரநீரோதம்
அப்பொடொத்தனகடுத்திலவார்கலிமுழுதும்
செப்புருக்கெனத்தெரிந்ததுமீன்குலஞ்செருக்கித்
துப்பொடொத்தனமுத்தினங்குன்றியிற்றோன்ற. (௫௩)

தத்துநீர்க்கடன்முழுவதுங்குருதியாய்த்தழங்கச்
சித்திரக்குலப்பன்னிறமணிகளுஞ்சேர்ந்த
ஒத்துவேறுருத்தெரியலவுயர்மதத்தோங்கல்
மத்தகத்துகுதரளமும்வளைசொரிமுத்தும். (௫௪)

அதிரவெஞ்செருவன்னதொன்றமைக்கின்றவளவில்
கதிரவன்கொழுஞ்சேயொளிக்கற்றையங்கரத்தான்
எதிரவல்லிருட்கரியிறுத்தெழுமுறைமூழ்கி
உதிரவெள்ளத்துளெழுந்தவனெனவுதித்தான். (௫௫)

அரக்கரென்றபேரிருளினையிராமனுமிரவி
துரக்கவெஞ்சுடர்க்கதிரவன்புறத்திருளிரக்கப்
புரக்கும்வெய்யவரிருவரையுடையவர்போல
நிரைக்குநல்லொளிபரந்தனவுலகெலாநிமிர. (௫௬)

நிலைகொள்பேரிருணீங்கலுநிலத்திடைநின்ற
மலையும்வேலையும்வரம்பிலவயின்றொறும்பரந்து
தொலைவிலாதவைதோன்றுவபோன்றனசோரி
அலைகொள்வேலையுமருப்பிணக்குன்றமுநிரம்ப. (௫௭)

போர்க்களத்திறம்.

நிலந்தவாதசெந்நீரிடைநிணக்கொழுஞ்சேற்றில்
புலர்ந்தகாலையிற்பொறிவரியம்பெனுந்தும்பி
கலந்ததாமரைப்பெருவனங்கதிரவன்கரத்தால்
மலர்ந்ததாமெனப்பொலிந்தனவுலர்ந்தவர்வதனம். (௫௮)

தேரும்யானையும்புரவியும்விரவினதேவர்
ஊருமானமுமுடுக்களுமுலகமுமலையும்
பேருமானவெங்காலத்துக்கால்பொரப்பிணங்கிப்
பாரின்வீழ்ந்தனபோன்றனகிடந்தனபரந்த. (௫௯)

எல்விசுற்றியமதிநிகர்முகத்தியரெரிவீழ்
அல்விசுற்றியகோதையர்களம்புகுந்தடைந்தார்

புல்விமுற்றியவுயிரினர்பொருந்தினர்கிடந்தார்
வல்விசுற்றியமாமரநிகர்த்தனர்வயவர். (௬0)

போர்க்களமெய்திய அரக்கியர் தன்மையுஞ்செயலும்.

வணங்குநுண்ணிடைமலைமுலைச்செக்கர்வார்கூந்தல்
அணங்குவெள்ளெயிற்றரக்கியர்களத்துவந்தடைந்தார்
குணங்கொளுந்துணைக்கணவர்தம்பசுந்தலைகொடாது
பிணங்குபேய்களைப்பிளந்தனர்தொடர்ந்தனர்பிடித்தார். (௬௧)

சுடரும்வெள்வளைத்தோளிதன்கொழுநனைத்தொடர்வாள்
உடருமங்கமுங்கண்டுகொண்டொருவழியுய்யாள்
குடருமீரலுங்கண்ணுமோர்குறுநரிகொள்ளத்
தொடரவாற்றலணைடிதுயிர்த்தாருயிர்துறந்தாள். (௬௨)

பெரியவாட்டடங்கண்ணியோர்கணவன்றன்பெருந்தோள்
நரிகளீர்த்தனவணங்கவுமிணங்கவுநல்கா
இரியல்போவனதொடர்ந்தயலினப்படைகிடந்த
அரியநொந்திலவலத்தகச்சீறடியயர்ந்தாள். (௬௩)

நலங்கொணஞ்சினர்தந்துணைக்கணவரைநாடி
விலங்கலன்னவான்பெரும்பிணக்குப்பையின்மேலார்
அலங்கலோதியருந்துணைபிரிந்துநின்றயரும்
பொலங்கொண்மாமயில்வரையின்மேற்றிரிவனபோன்றார். (௬௪)

சிலவர்தம்பெருங்கணவர்தஞ்செருத்தொழிற்சினத்தால்
பலரும்வாய்மடித்துயிர்துறந்தார்களைப்பார்த்தார்
அலகில்வெள்ளெயிற்றுலிதழ்மறைந்துளதயலாள்
கலவியின்குறிகாண்டுமென்றுமெனக்கனன்றார். (௬௫)

நவசெய்வன்றலையிழந்ததந்நண்பரைநணுகி
அவசமெய்தியமடந்தையருருத்தெரிந்தறியார்
துவசமன்னதங்கூருகிர்ப்பெருங்குறிதோண்மேல்
கவசநீங்கினர்க்கண்டுகண்டாருயிர்கழித்தார். (௬௬)

மாரியாக்கியகண்ணியர்கணவர்தம்வயிரப்
போரியாக்கைகணுடியப்பொருகளம்புகுந்தார்
பேரியாக்கையின்பிணப்பெருங்குன்றிடைப்பிறந்த
சோரியாற்றிடையழுந்தினரின்னுயிர்துறந்தார். (௬௭)

வேறு.

அறுமதூமாட்ச யுத்தம்.

வகைநின்றுயர்தாணெடுமொருதியும்
புகையின்பொருகண்ணவனும்பொருவார்

மிகைசென்றிலர்பின்றிலர்வென்றிலரால்
சிகைசென்றுநிரம்பியதீயுமிழ்வார். (௬௮)

அய்யஞ்சழல்வாளியழற்கொடியோன்
மெய்யஞ்சனைகான்முளைமேனியின்மேல்
வய்யஞ்சிலையாறுவழங்கினனால்
மொய்யஞ்சனமேகமுனிந்தனையான். (௬௯)

பாழிப்புயமம்புருவப்படலும்
வீழிக்கனிபோற்புனல்வீசவெகுண்
டாழிப்பெருந்தேரையழித்தனனால்
ஊழிப்பெயர்கார்நிகரொண்டிறலான். (௭௦)

சில்லிப்பொருதேர்சிதையச்சிலையோ
டெல்லிற்பொலிவிண்ணின்விசைத்தெழுவான்
வில்லிற்றதிலக்குவன்வெங்கணையால்
புல்லித்தரையிட்டனனேர்பொருவான். (௭௧)

மலையிற்பெரியானுடன்மண்ணிடையிட்
டுலறக்கடருவியகால்சொடுதைத்
தலையிற்பருகிப்பகுவாயனல்கால்
வலைகைக்கொடெறிந்துதணிந்தனனால். (௭௨)

அங்கதமாபக்கயுத்தம்.

மாபக்கனுமங்கதனும்மலைவார்
தீபத்தினெரிந்தெழுசெங்கணினார்
கோபத்தினர்கொல்லநினைந்தடர்வார்
தூபத்தினுயிர்ப்பர்தொடர்ந்தனரால். (௭௩)

ஐம்பத்தொருவெங்கணையங்கதன்மா
மொய்ம்பிற்புகவுய்த்தனன்மொய்தொழிலான்
வெம்பிக்களியோடுவிளிந்தெழுதிண்
கம்பக்கரியுண்டைகடாயெனவே. (௭௪)

ஊரோடுமெடுத்தொளியோனையுறும்
காரோடுநிகர்க்குதநாகமனான்
தேரோடுமெடுத்துயர்திண்கையினால்
பாரோடுமெடுத்தெறிபண்பிடையே. (௭௫)

வில்லைச்செலவீசிவிழுந்தழியும்
எல்லிற்பொலிதேரிடைநின்றிழியாச்
சொல்லிற்பிழையாதொருசூலமவன்
மல்லிற்பொலிமார்பின்வழங்கினனால். (௭௬)

சூலம்மெனினன்றிதுதொல்லைவரும்
காலம்மெனவுன்னுகருத்தினனாய்
ஞாலம்முடையானதுநாமறவோர்
ஆலம்முடையம்பினறுத்தனனால். (௭௭)

உளந்தாணிணையாதமுனுற்றுதவாக்
கிளர்ந்தானையிரண்டுகிழித்துணையாப்
பிளந்தானுலகேழினொடேழுபெயர்ந்
தளந்தான்வலிநன்றெனவங்கதனே. (௭௮)

மாலியும் நீலனும்போருதல்.

மாமாலியுநீலனும்வானவர்தம்
கோமானொடுதானவர்கோனிகலே
ஆமாறுமலைந்தனரென்றிமையோர்
பூமாரிபொழிந்துபுகழ்ந்தனரால். (௭௯)

கல்லொன்றுகடாவியகாலையவன்
வில்லொன்றிருகூறுவிளைத்திடலும்
செல்லொன்றியவாளொடுதேரினனாய்
நில்லென்றிடைசென்றுநெருக்கினனால். (௮௦)

அற்றத்தொழிலெய்தலுமக்கணனே
மற்றப்புறநின்றவன்வந்தணுகாக்
கொற்றக்குமுதன்னொருகுன்றுகொளா
எற்றப்பொருதேர்பொடியெய்தியதால். (௮௧)

தாளார்மரனீலனெடுத்தனதன்
வாளான்மடிவித்துவதித்தடர்வான்
தோளாசறவாளிதுரந்தனனால்
மீளாவினைநூறும்விடைக்கிளையான். (௮௨)

மின்போன்மிளிர்வாளொடுதோள்விழவும்
தன்போர்தவிராதவனைச்சலியா
என்போலியர்போரெனினன்றிதுவோர்
புன்போரெனநின்றயல்போயினனால். (௮௩)

நீர்வீரையனானெதிர்நேர்வரலும்
போர்வீரனைவாசிபிடித்தவனை
யார்வீரதையின்னசெய்தார்களெனப்
போர்வீரருவந்துபுகழ்ந்தனரால். (௮௪)

வேள்விப்பகையோடுவெகுண்டடரும்
தோள்வித்தகனங்கொர்சுடர்க்கணையால்

வாழ்வித்தனையென் றவன்மார்பகலம்
போழ்வித்தனனாருயிர்போயினனால். (௮௫)

மல்லற்றடமார்பன்வடிக்கணையால்
எல்லுற்றுயர்வேள்வியிரும்பகைஞன்
வில்லற்றதுதேரொடுமேனிமிரும்
கல்லற்றகழுத்தொடுகால்களொடும். (௮௬)

தன்றாதையைமுன்புதடுத்தொருநாள்
வென்றானைவிலங்கலின்மேனியனைப்
பின்றாதவலத்துயர்பெற்றியனைக்
கொன்றான்கவியின்குலமாளுடையான். (௮௭)

இடவன்றனிவெஞ்சமமுற்றெதிரும்
விடவெங்கணையிற்றவன்விண்ணதிரக்
கடவுங்கதழ்தேர்கடவாளினொடும்
படவுங்கொருகுன்றுபடர்த்தினனால். (௮௮)

திண்டேரழியச்சிலைவிட்டொருதன்
தண்டோடுமிழிந்துதலத்தினனாய்
உண்டோவுயிரென்னவுருத்துருமோ
டெண்டோளனுமுட்கிடவெற்றினனால். (௮௯)

அடியுண்டவனாவிகுலைந்தயரா
இடியுண்டமலைக்குவடிற்றனபோல்
முடியும்மெனுமெல்லையின்முந்தினனால்
நெடியன்குறியனெனுநீர்மையினான். (௯0)

கிடைத்தானிகன்மாருதியைக்கிளர்வான்
அடைத்தானெனமீதுயராக்கையினைப்
படைத்தானைநெடும்புகழ்பைங்கழலான்
புடைத்தானவன்மார்புபொடிச்சிதற. (௯௧)

எற்றிப்பெயர்வானையிடக்கையினால்
பற்றிக்கிளர்தண்டுபறித்தெறியா
வெற்றிக்கிளர்கைக்கொடுமெய்வலிபோய்
முற்றித்தனிகுத்தமுடிந்தனனால். (௯௨)

காத்தோர்மரம்வீசுறுகைக்கதழ்வன்
போத்தோர்புலிபோற்பனசன்புரளக்
கோத்தோடநெடுங்குருதிப்புனறிண்
மாத்தோமரமார்பின்வழங்கினனால். (௯௩)

கார்மேலினனோகடன்மேலினனோ
பார்மேலினனோபகன்மேலினனோ

ஆர்மேலினனேவினவென்றறியாம்
போர்மேலினன்வாசியெனும்பொறியான். (கூச)

நூறாயிரகோடிகொலன்றுகொலென்
றாறாயிரவானவருமறிவிற்
தேறாவகைநின்றுதிரிந்துளதால்
பாறாகெளத்தொருபாய்பரியே. (கூரு)

கண்ணிற்கடுகும்மனனிற்கடுகும்
விண்ணிற்படர்காலின்மிகக்கடுகும்
உண்ணிற்குமெனிற்புறனிற்குமுலாய
மண்ணிற்றிரியாதவயப்பரியே. (கூசு)

மாப்புண்டரவாசியின்வட்டணைமேல்
ஆப்புண்டவனொத்தவனூரயிலால்
பூப்புண்டரவாவிபுறத்தகலக்
கோப்புண்டனவானரவெங்குழுவே. (கூஎ)

நூறும்மிருநூறுநொடிப்பளவில்
ஏறுந்நதிவேலினிறைப்பொழுதில்
சீறுங்கவிசேனைசிதைக்குமெனா
ஆறுந்திறலும்பருமஞ்சினரால். (கூஅ)

தோற்றும்முருவொன்றெனவேதுணியாக்
கூற்றின்கொலையாலுழல்கொள்கையனை
ஏற்றுஞ்சிலையாண்மையிலக்குவன்வெங்
காற்றின்படைகொண்டுகெடந்தனனால். (கூகூ)

குலையப்பொருசூலநெடுங்கொலையும்
உலைவுற்றிலவுய்த்தலுமோய்விலனெண்
டலையற்றுகவுந்தரையுற்றிலனால்
இலையப்பரிகோளினிருக்கையினான். (க00)

இன்றாதியமுண்டெனவின்னகைபால்
சென்றாதியதும்பிகடென்றிசையான்
வன்றாதருமெய்தினர்வஞ்சனையான்
றன்றாதருமெய்தினர்தன்னகர்வாய். (க0க)

ஏகித்தனிமன்னனிருந்துழிபுக்
கோகைப்பொருளின்றெனவுள்ளழியா
வேகத்தடல்வீரர்விளிந்தவெலாம்
சோகத்தொடிறைஞ்சினர்சொல்லினரால். (க0உ)

ககூ - வது, படைத்தலைவர்வதைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-உ௲ருஅ.

௨0 - வது, மகரக்கண்ணன்வதைப்படலம்.

மகரக்கண்ணன் தன்னையேவர வேண்டுதல்.

சொன்னாரவர்சொற்செவிபாற்றொடர்வோன்
இன்னாதமனத்தனிலங்கையர்கோன்
வெந்நாகவுயிர்ப்பினன்விம்மினனால்
அன்னானிலைகண்டயனின்றறைவான். (௧)

முந்தேயெனதாதையைமொய்யமர்வாய்
அந்தோவுயிருண்டவனாருயிர்மேல்
உந்தாயெனையாதுமுணர்ந்திலையோ
எந்தாயொருநீயிடர்கூருதியோ. (௨)

யானேசெலவெண்ணுவெனெய்தவவன்
தானேர்வதுநீதெனவேதணிவேன்
வானேநிலனேமுதன்மற்றுமெலாம்
கோனேயெனைவெல்வதொர்கொள்கையதோ. (௩)

வேறு.

அருந்துயர்க்கடலுளாளென்னம்மனையழுதகண்ணள்
பெருந்திருக்கழித்தலாற்றாள்கணவனைக்கொன்றுபேர்ந்தோன்
கருந்தலைக்கலத்தினல்லாற்கடனதுகழியேனென்றாள்
பருந்தினுக்கினியவேலாயின்னருள்பணித்தியென்றான். (௪)

இராவணன் மகரக்கண்ணனை அனுப்புதல்.

அவ்வுரைமகரக்கண்ணனறைதலுமரக்கனைய
செவ்விதுசேறிசென்றுன்பழம்பகைதீர்த்தியென்றான்
வெவ்வழியவனும்பெற்றவிடையினன்றேர்மேற்கொண்டான்
வவ்வியவில்லான்போனான்வரம்பெற்றுவளர்ந்ததோளான். (௫)

தன்னுடைச்சேனைகோடியைந்துடன்றழுவத்தானை
மன்னுடைச்சேனைவெள்ளமோரைந்துமழையிற்பொங்கிப்
பின்னுடைத்தாகப்பேரிக்கடல்படப்பெயர்ந்ததூளி
பொன்னுடைச்சிமையத்துச்சிக்குச்சியும்புதையப்போனான். (௬)

சோணிதக்கண்ணனோடுஞ்சிங்கனுந்துரகத்திண்டேர்த்
தாண்முதற்காவல்பூண்டுசெல்கெனத்தக்கதென்னா
வாண்முதற்றானையோடுமனைவருந்தொடரப்போனான்
நாண்முதற்றிங்கடன்னைத்தழுவியவனையநண்பான். (௭)

பல்பெரும்பதாகைபற்றிமீமிசைதொடுத்தபந்தர்
எல்லவன்சுடரொண்கற்றைமுற்றியநீழலீயத்
தொல்சினையானையங்கைவிலாழிநீர்த்துவலைதூற்றச்
செல்பெருங்கவியின்சேனையமர்த்தொழிற்சிரமந்தீர்ந்த. (௮)

முழங்கினயானைவாசியொலித்ததன்முரசின்பணை
தழங்கினவயவரார்த்தாரென்பதோர்முறைமைதள்ள
தழங்கினபதலையோதையண்டத்தின்வரம்பின்காறும்
புழுங்கினவுயிர்கள்யாண்டுங்கால்புகப்புரையின்றாக. (௯)

அசுரவானர யுத்தம்.

வெய்தினினுற்றதானைமுறைவிடாதூழில்வெம்போர்
செய்தனசெருக்கிச்சென்றுநெருக்கினர்தலைவர்சேர்த்திக்
கையொடுகைகளுற்றுக்கலந்தனர்கல்லும்வில்லும்
எய்தனவெறிந்தயானையீர்த்தனகோத்தசோரி. (௧௦)

வானரவீரர்விட்டமலைகளையரக்கர்வவ்வி
மீனொடுமேகஞ்சிந்தவிசைத்தனர்மீட்டும்வீசக்
கானகமிடியுண்டென்னக்கவிக்குலமடியக்கவ்விப்
போனகநுகரும்பேய்கள்வாய்ப்புறப்புடைப்போடார்ப்ப. (௧௧)

மய்ந்நிறவரக்கர்வன்கைவயிரவாள்வலியின்வாங்கி
மெய்ந்நிறத்தெறிந்துகொல்வர்வானரவீரர்வீரர்
கய்ந்நிறத்தெடுத்தகல்லுமரனுந்தங்கரத்தின்வாங்கி
மொய்ந்நிறத்தெறிவரெற்றிமுருக்குவரரக்கர்முன்பர். (௧௨)

வண்டுலாவலங்கன்மார்பன்மகரக்கண்மழையேறென்னத்
திண்டிறலக்கன்கொற்றப்பொற்றடஞ்சில்லித்தேரைத்
தண்டலைமருதவைப்பிற்கங்கைநீர்தழுவுநாட்டுக்
கொண்டன்மேலோட்டிச்சென்றான்குரக்கினப்படையைக்கொன்றான். ()

இந்திரன்பகைஞனேகொலென்பதோரச்சமெய்தித்
தந்திரமிரிந்துசிந்தப்படைப்பெருந்தலைவர்தாக்கி
எந்திரமெறிந்தவென்னவேவுண்டுபுரண்டாரெய்திச்
சுந்தரத்தோளினானைநோக்கினின்றினையசொன்னான். (௧௪)

என்னுடைத்தாதைதன்னையின்னுயிருண்டாயென்று
முன்னுடைத்தாயதீயமுழுப்பகைமூவர்க்கின்றி
நின்னுடைத்தாயதன்றேயின்றதுநிமிர்வனென்றாள்
பொன்னுடைத்தாதைவண்டுகுடைந்துண்ணும்பொலன்பொற்றாரான். ()

தீயவன்பகர்ந்தமாற்றஞ்சேவகன்தெரியக்கேட்டான்
நீகரன்புதல்வன்கொல்லாநெடும்பகைநிமிரவந்தாய்

ஆயதுகடனேயன்றோவாண்பிறந்தமைந்தார்க்கைய
ஏயதுசொன்னாயென்றானிசையினுக்கிசைந்ததோளான். (௧௬)

யகரக்கண்ணன் போர்புரிதல்.

உருமிடித்தென்னவின்னாணொலிபடுத்துன்னோடெந்தை
செருமுடித்தென்கணின்றசினமுடித்தமைவெனென்னாக்
கருமுடித்தமைந்தமேகங்கான்முடித்தெழுந்தகாலம்
பெருமுடிக்கிரியிற்பெய்யுந்தாரைபோற்பகழிபெய்தான். (௧௭)

அம்புயக்கண்ணன்கண்டத்தாயிரம்பகழிநாட்டித்
தம்பிதன்கவசமீதேயிரட்டிச்சாயகங்கடாக்கி
வெம்பிகலநுமன்மீதேவெங்கணைமாரிவித்தி
உம்பர்தமுலகமுற்றுஞ்சரங்களாய்மூடியுய்த்தான். (௧௮)

சொரிந்தனபகழியெல்லாஞ்சுடர்க்கடுங்கணைகடேவி
அரிந்தனசுற்றிமற்றையாண்டகையலங்கலாகத்
தெரிந்தொருபகழிபாயவெய்தனனிராமனேவ
நெரிந்தெழுபுருவத்தான்றன்னிறத்தூற்றுநின்றதன்றே. (௧௯)

ஏவுண்டுதுளக்கமெய்தாவிரத்தகப்பரிதியீன்ற
பூவுண்டகண்ணன்வாயிற்புகையுண்டதுமிழ்வான்போல்வான்
தேவுண்டகீர்த்தியண்ணறிருவுண்டகவசஞ்சேரத்
தூவுண்டவயிரவாளியாயிரந்தூவியார்த்தான். (௨௦)

அன்னதுகண்டவானோரதிசயமுற்றாராழி
மன்னனுமுறுவலெய்திவாயம்போராறுவாங்கிப்
பொன்னெடுந்தடந்தேர்பூண்டபுரவியின்குரங்கள்போக்கி
வின்னடுவெறுத்துப்பாகன்றலையையுநிலத்துவீழ்த்தான். (௨௧)

மகரக்கண்ணன் தீமழையுங் காற்றும் வரச்செய்தல்.

மார்பிடைநின்றவாளிவாயிடைவெயிலின்வாரும்
சோரியன்விசும்பினூடோரிமைப்பிடைத்தோன்றாநின்றான்
காருருமேறுங்காற்றுங்கனலியுங்கடைநாள்வையம்
பேர்வுறுகாலமென்னப்பெருக்கினன்றவத்திற்பெற்றான். (௨௨)

உருமுறையநந்தகோடியுதிர்ந்தனவூழிநாளின்
இருமுறைகாற்றுச்சீறியெழுந்ததுவிழுந்தவெங்கும்
கருமுறைநிறைந்தமேகங்கான்றனகல்லின்மாரி
பொருமுறைமயங்கிச்சுற்றுமிரியலிற்கவிகள்போன. (௨௩)

போயினதிசைகளெங்கும்புகையொடுநெருப்பும்போர்ப்பத்
தீயினமனையசெல்லுமாயமாமாரிசிந்த

ஆயிரகோடிமேலுமவிந்தனகவிகளையன்
மாயமோவரமோவென்றான்வீடணன்வணங்கிச்சொன்னான். (௨௪)

நோற்றுடைத்தவத்தினன்மைநோக்கினர்கருணைநோக்கிக்
காற்றுடைச்செல்வன்றானுமழையுடைக்கடவுடானும்
மாற்றலரீந்ததெய்வவரத்தினல்வந்ததென்றான்
நூற்றிகழ்க்கமலநற்கண்ணனகற்றுவெனடியினென்றான். (௨௫)

இராமன் அக்கினியாத்திர வாயுவாத்திரங்களால் தீமழையாதியதடுத்தல்.

காலவன்படையுந்தெய்வக்கடலவன்படையுங்காலக்
கோலவன்சிலையிற்கோத்துக்கொடுங்கணையோடுங்கூட்டி
மேலவன்றூரத்தலோடும்விசும்பினின்றெறிந்துவெய்தின்
மாலிருங்கடலின்வீழ்ந்துமறைந்தனமழையுங்காற்றும். (௨௬)

மகரக்கண்ணன் மாயப்போர்புரிதல்.

அத்துணையரக்கனேக்கியந்தரவானமெல்லாம்
ஒத்தனவுருவேயாகித்தான்மறைந்தொளித்துச்சூலப்
பத்திகள்கோடிகோடிபரப்பினனதனைப்பார்த்த
வித்தகனொருவன்செய்தவினையமென்றினையசொன்னான். (௨௭)

மாயத்தால்வகுத்தான்யாண்டும்வரம்பிலாவுருவத்தானைத்
தேயத்தானென்னவண்ணங்கரந்தனன்றெறிந்திலாதான்
காயத்தாலினையனென்றுநினையலாங்கருத்தனல்லன்
தீயொத்தான்றிறத்தினென்னைசெயலெனச்சிந்தைநொந்தான். (௨௮)

இராமன் மகரக்கண்ணன்றலையை யறுத்தல்.

அம்பின்வாயாறுசோருமரக்கன்றனருளில்யாக்கை
உம்பரிற்பரப்பித்தான்வேறொளித்தனனென்னவோர்வான்
செம்புனற்சுவடுநோக்கியிதுநெறியென்றுதேவர்
தம்பிரான்பகழிதூண்டத்தலையற்றுத்தலத்தனானான். (௨௯)

மாயைநீக்கம்.

அயில்படைத்துருமிற்செல்லுமம்பொடுமரக்கன்யாக்கை
புயல்படக்குருதிவீசிப்படியிடைப்புரடலோடும்
வெயில்கெடுத்திருளையோட்டுங்காலத்தின்விளைவினோடும்
துயில்கெடக்கனவுமாய்ந்தாலொத்ததுசூழ்ந்தமாயை. (௩௦)

இரத்தாட்சன் யுத்தம்.

குருதியின்கண்ணன்வண்ணக்கொடிநெடுந்தேரன்கோடைப்
பரிதியினவெட்டோன்றும்பசுஞ்சுடர்மேகப்பண்பன்

எரிகணைசிந்திக்காலினெய்தினன் றன்னோடேற்றான்
* விரிகடற்றட்டான் † கொல்லன்வெஞ்சினத் ‡ தச்சன்வெய்யோன். ()

அன்றவனுமவின்னுணலங்கற்றோளிலங்கவாங்கி
ஒன்றலபகழிமாரியூழித்தீயென்னவுய்த்தான்
நின்றவனெடியதாங்கோர்தருவினலகலநீக்கிச்
சென்றனன்கரியின்வாரிக்கெதிர்பட்டசீயமன்னான். (௩௨)

சரத்தினிற்றிரியானின்றமரத்தினைக்கண்டமாகச்
சரத்தினிற்றுணித்துவீழ்த்ததறுகணன் றன்னைநோக்கி
உரத்தினைச்சுருக்கிப்பாரிநெடுங்கினன் றன்னையொப்பான்
சிரத்தினிற்குதித்தான்றேவர்திசைமுகங்கிழியவார்த்தார். (௩௩)

எரியும்வெங்குன்றினும்பரிந்திரவில்லிட்டென்னப்
பெரியவன்றலைமேனின்றபேரெழிலாளன்சோரி
சொரியவன்கண்ணின்மூக்கிற்செவிகளின்மூளைதூங்க
நெரியவன்றலையைக்காலாலுதைத்துமாநிலத்திலிட்டான். (௩௪)

சிங்கபனசயுத்தம்.

அங்கவனுலத்தலோடுமழற்கொழுந்தொழுகுங்கண்ணன்
சிங்கன்வெங்கணையன்வில்லன்றாரணிதேரின்மேலான்
எங்கடாபோதியென்னுவெய்தினனெதிரிலாத
பங்கமின்மேருவாற்றற்பனசன்வந்திடையிற்பாய்ந்தான். (௩௫)

பாய்ந்தவன்றோளின்மார்பின்பல்லங்கணல்லபண்போ
டாய்ந்தனவசனிபோலவையிரண்டழுந்தவெய்தான்
காய்ந்தனன்கனலிநெய்யாற்கனன்றதுபோலக்காந்தி
ஏய்ந்தெழுதேரினோடுமிமைப்பிடையெடுத்துக்கொண்டான். (௩௬)

தேரொடுமெடுத்தலோடுநிலத்திடைக்குதித்தசெங்கண்
மேருவிற்றோற்றத்தான்றனுச்சிமேலதனைவீசப்
பாரிடைவிழுதலோடுந்தானவனும்பர்பாயச்
சோரியுமுயிருஞ்சோரத்துகைத்தனன்வயிரத்தோளான். (௩௭)

தராதலவேந்தன்மைந்தர்சரத்தினுங்கவியின்றானை
மராமரமலையென்றின்னவழங்கவும்வளைந்ததானை
பராவரும்வெள்ளம்பத்தும்பட்டனபட்டிலாதார்
இராவணன்றூதர்போனார்படைக்கலமெடுத்திலாதார். (௩௮)

௨0 - வது, மகரக்கண்ணன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௩௬0.

---

* விரிகடற்றட்டான்-நளன்.
† கொல்லன்-கோபமுடையவன்.
‡ அச்சன்-அச்சமுள்ளவன்.

உக - வது, பிரமாத்திரப்படலம்.

கரன்மகன்பட்டவாறுங்குருதியின்கண்ணன்காவற்
சிரனெரிந்துக்கவாறுஞ்சிங்கனிற்சீறுஞ்சேனைப்
பரமினியுலகுக்காகாதென்பதும்பகரக்கேட்டான்
வரன்முறைதவீர்ந்தான்வல்லைதருதிரென்மகனையென்றான். (க)

கூயினனுந்தையென்றார்குன்றெனக்குவிந்ததோளான்
போயினநிருதர்யாரும்பொன்றினர்போலுமென்றான்
ஏயினபின்னைமீள்வார்நீயலாதியாவரென்னா
மேயதுசொன்னார்கேட்டான்றாதைபால்விரைவின்வந்தான். (உ)

வணங்கிநீயையநொய்தின்மாண்டனர்மக்களென்ன
உணங்கலையின்றுகாண்டியுலப்பறுகுரங்கைநீக்கிப்
பிணங்களின்குப்பைமற்றையாருயிர்பிரிந்தயாக்கை
கணங்குழைச்சீதைதானுமமரருங்காண்பரென்றான். (ங)

வலங்கொடுவணங்கிவான்செலாயிரமடங்கல்பூண்ட
பொலங்கொடிநெடுந்தேரேறிப்போர்ப்பணைமுழங்கப்போனான்
அலங்கல்வாளரக்கர்தானையறுபதுவெள்ளயானைக்
குலங்களுந்தேருமாவுங்குழாங்கொளக்குழீஇயவன்றே. (ச)

கும்பிகைதிமிலைசெண்டைகுறடுமாப்பேரிகொட்டும்
பம்பைதார்முரசங்கஞ்சம்பாண்டில்போர்ப்பணவந்தூரி
கம்பலியுறுமைதக்கைகரடிகைதுடிவேய்கண்டை
அம்பலிகணுவையூமைசகடையோடார்த்தவன்றே. (ரு)

யானைமேற்பறைசாலிட்டத்தறைமணியார்த்ததாழி
மானமாப்புரவிப்பொற்றார்மாக்கொடிக்கண்டைமானச்
சேனையோர்கழலுந்தாருஞ்சேடகப்புளகச்சில்லி
வானகத்தோடுவானையரியெனவளைந்தவன்றே. (சு)

சங்கொலிவயிரினோசையாகுளிதழங்குகாளம்
பொங்கொலிவரிகண்பீலிபோரொலிவேயின்பொம்மல்
சிங்கத்தின்முழக்கம்வாசிச்சிரிப்புத்தேரிடிப்புத்தின்கைம்
மங்குலினதிர்வுவானமழையொடுமலைந்தவன்றே. (எ)

பண்டருகிளவிச்செவ்விப்பல்லியத்தொழுகுதீந்தேன்
கண்டினிற்குயின்றவீணைநரம்பொடுமழுந்தேறல்
வண்டினிற்பொலியுநல்யாழ்வழியுறுநறவம்வானத்
தண்டார்தஞ்செவியினுண்ணுமமிழ்தெனலாயவன்றே. (அ)

வில்லொலிவயவரார்க்கும்விளியொலிதெழிப்பினோங்கும்
ஒல்லொலிவீரர்பேசுமுரையொலியுரப்பிற்றோன்றும்
செல்லொலிதிரடோள்கொட்டுஞ்சேணொலிநிலத்திற்செல்லும்
கல்லொலிதுரப்பமற்றைக்கடலொலிகரந்ததன்றே. (௯)

நாற்கடலனையதானைநடந்திடக்கிடந்தபாரின்
மேற்கடந்தெழுந்ததூளிவிசும்பின்மேற்கொழுந்துவீச
மாற்கடற்சேனைகாணும்வானவர்மகளிர்மானப்
பாற்கடலனையவாட்கண்பனிக்கடல்படைத்ததன்றே. (௧௦)

ஆயிரகோடித்திண்டேரமரர்கோனகரமென்ன
மேயவர்சுற்றத்தானோர்கொற்றப்பொற்றேரின்மேலான்
தூயவற்சுடர்களெல்லாஞ்சுற்றுறநடுவட்டோன்றும்
நாயகப்பரிதிபோன்றான்றேவரைநடுக்கங்கொண்டான். (௧௧)

இந்திரசித்துக் கிரவுஞ்சயூகம் வகுத்தல்.

சென்றுவெங்களத்தையெய்திச்சிறையொடுதுண்டஞ்செங்கண்
ஒன்றியகழுத்துமேனிகாலுகிர்வாலோடொப்பப்
பின்றலில்வெள்ளத்தானைமுறைபடப்பரப்பிப்பேழ்வாய்
* அன்றிலினுருவதாயவணிவகுத்தமைந்துநின்றான். (௧௨)

புரந்தரன்செருவிற்றந்துபோயதுபுணரியேழும்
உரந்தவிர்த்தூழிபேருங்காலத்துளொலிக்குமோதை
கரந்ததுவயிற்றுக்காலவலம்புரிகையின்வாங்கிச்
சிரம்பொதிர்ந்தமரரஞ்சவூதினான்றிசையுஞ்சிந்த. (௧௩)

சங்கத்தின்முழக்கங்கேட்டகவிப்பெருந்தானைதள்ளிச்
சிங்கத்தினாதம்வந்துசெவிப்புகவிலங்குசிந்தி
எங்குற்றவென்னாவண்ணமிரிந்தனதிருந்தவ்வேழை
பங்கத்தன்மலைவிலன்னசிலையொலிபரப்பியார்த்தான். (௧௪)

கீண்டனசெவிகணெஞ்சங்கிழிந்தனகிளர்ந்துசெல்லா
மீண்டனகால்கள்கையின்விழுந்தனமரனும்வெற்பும்
பூண்டனநடுக்கம்வாய்கள்புலர்ந்தனமயிரும்பொங்க
மாண்டனமன்றோவென்றவானரமெவையுமாதோ. (௧௫)

படைப்பெருந்தலைவர்நிற்கப்பல்பெருந்தானைவேலை
உடைப்புறுபுனலினோடவூழிநாளுவரியோதை
கிடைத்திடமுழங்கியார்த்துக்கிளர்ந்ததுநிருதர்சேனை
அடைத்ததுதிசைகளெல்லாமன்னவர்களத்தரானார். (௧௬)

---

* அன்றில் - கிரவுஞ்சம்.

செங்கதிர்ச்செல்வன்சேயுஞ்சமீரணன்சிறுவன்றானும்
அங்கதப்பெயரினானுமண்ணலுமிளையகோவும்
வெங்கதிர்மவுலிச்செங்கண்வீடணன்முதலர்வீரர்
இங்கிவர்நின்றாரல்லதிரிந்ததுகுரங்கினீட்டம். (கஎ)

மாருதியலங்கன்மாலைமணியணிவயிரத்தோண்மேல்
வீரனும்வாலிசேய்தன்விறல்கெழுசிகரத்தோண்மேல்
ஆரியற்கிளையகோவுமேவினன்றமரர்வாழ்த்தி
வேரியம்பூவின்மாரிசொரிந்தனரிடைவிடாமை. (கஅ)

விடையின்மேற்கலுழன்றன்மேல்வில்லினர்விளங்குகின்ற
கடையின்மேலுயர்ந்தகாட்சியிருவருங்கடுத்தார்கண்ணுற்
றடையின்மேருவையுஞ்சாய்க்குமநுமனங்கதனென்றன்னார்
தொடையின்மேன்மலர்ந்ததாரர்தோளின்மேற்றோன்றும்வீரர். (கக)

நீலனைமுதலாயுள்ளநெடும்படைத்தலைவர்நின்றார்
தாலமுமலையுமேந்தித்தரக்குவான்சமையுங்காலை
ஞாலமும்விசும்புங்காத்தநானிலக்கிழவனமைந்தன்
மேலமர்விளைவையுன்னிவிலக்கினன்விளம்பலுற்றான். (உ0)

கடவுளர்படைகளும்மேல்வெய்யவன்றுரந்தகாலம்
தடையுளவல்லதாகுந்தன்மையிரல்லிர்தாக்கிற்
கிடையுளதெம்பானல்கிப்பின்னின்றிநிற்றிரீண்டிப்
படையுளதனையேயின்றெம்விற்றொழில்பார்த்திரென்றான். (உக)

இராமவிலக்குமணர் அசுரசேனைகளை அழித்தல்.

அருண்முறையவருநின்றாராண்டகைவீரராழி
உருண்முறைத்தேரின்மாவினோடைமால்வரையினூழி
இருண்முறைநிருதர்தம்மேலேவினரிமைப்பிலோரும்
மருண்முறையெய்திற்றென்பர்சிலைவழங்கசனிமாரி. (உஉ)

இமைப்பதன்முன்னம்வந்தவிராக்கதவெள்ளந்தன்னைக்
குமைத்தொழில்புரிந்தவீரர்தனுத்தொழில்குறித்தின்றெம்மால்
அமைப்பதென்பிறிதொன்றுண்டோமேருவென்றமைந்தவில்லால்
உமைக்கொருபாகனெய்தபுரங்களினொருங்கிவீழ்ந்த. (உங)

தேரின்மேற்சிலையினின்றவிந்திரசித்தென்றோதும்
வீரருள்வீரன்கண்டான்விழுந்தனவிழுந்தவென்னும்
பாரின்மேனோக்கலன்றேறப்பட்டனர்பட்டாரென்னும்
போரின்மேனோக்கலீதிவ்விருவரும்பொருதபூசல். (உச)

யானைபட்டனவோவென்றானிரதமிற்றனவோவென்றான்
மானமாவந்தவெல்லாமறிந்தொழிந்தனவோவென்றான்

ஏனைவாளரக்கர்யாருமில்லையோவெடுக்கவென்றான்
வானுயர்பிணத்தின்குப்பைமறைத்தலின்மயக்கமுற்றான். (௨௫)

செய்கின்றாரிருவர்வெம்போர்சிதைகின்றசேனைநோக்கின்
அய்யந்தானில்லாவெள்ளமறுபதுமவிகவென்று
வய்கின்றாரல்லராகின்வரிசிலைவலத்தான்மாள
எய்கின்றாரல்லரீதெவ்விந்திரசாலமென்றான். (௨௬)

அம்பின்மாமழையைநோக்குமுதிரத்தினூற்றைநோக்கும்
உம்பரினளவுஞ்சென்றபிணக்குன்றினுயர்வைநோக்கும்
கொம்பறவுதிர்ந்தமுத்தின்குப்பையைநோக்குங்கொன்ற
தும்பியைநோக்கும்வீரர்சுந்தரத்தோளைநோக்கும். (௨௭)

மலைகளைநோக்குமற்றவானுறக்குவிந்தவன்கட்
டலைகளைநோக்கும்வீரர்சரங்களைநோக்குந்தாக்கி
உலைகொள்வெம்பொறியினுக்கபடைக்கலத்தொழுக்கைநோக்கும்
சிலைகளைநோக்குநாணேற்றிடியினைச்செவியினோக்கும். (௨௮)

ஆயிரந்தேரையாடலானையையலங்கன்மாவை
ஆயிரந்தலையையாழிப்படைகளையறுத்துமப்பால்
போயினபகழிவேகத்தன்மையைப்புரிந்துநோக்கும்
பாயும்வெம்பகழிக்கொன்றுங்கணக்கிலாப்பரப்பைப்பார்க்கும். (௨௯)

அறுபதுவெள்ளத்தாயவரக்கர்தமாற்றற்கேற்ற
எறிவனவெய்யபெய்வவெற்றுறுபடைகள்யாவும்
பொறிவனம்வெந்தபோலச்சாம்பராய்ப்போவதல்லால்
செறிவனவில்லாவார்த்தைசிந்தையாற்றெரியநோக்கும். (௩0)

வயிறலைத்தோடிவந்துகொழுநர்மேன்மகளிர்மாழ்கிக்
குயிறலத்துக்கவென்னக்குழைகின்றகுழைவைநோக்கும்
எயிறலைத்திடுக்கும்பேழ்வாய்த்தலையிலாவாக்கையீட்டம்
பயிறலைப்பறவைபாரிற்படிகலாப்படியைப்பார்க்கும். (௩௧)

அங்கதரநந்தகோடியுளரெனுமநுமனென்பார்க்
இங்கினியுலகமெல்லாமிடமிலைபோலுமென்னும்
எங்குமிம்மனிதரென்பாரிருவரேகொல்லென்றுன்னும்
சிங்கவேறனையவீரர்கடுமையைத்தெரிக்கிலாதான். (௩௨)

ஆர்க்கின்றவமரர்தம்மைநோக்குமங்கவர்களள்ளித்
தூர்க்கின்றபூவைநோக்குந்துடிக்கின்றதோளைநோக்கும்
பார்க்கின்றதிசைகளெங்கும்படும்பிணப்பரப்பைப்பார்க்கும்
ஈர்க்கின்றகுருதியாற்றோடியானையின்பிணத்தைநோக்கும். (௩௩)

ஆயிரகோடித்தேருமரக்கருமொழியவல்லார்
மாயிருஞ்சேனையெல்லாமாய்ந்தவாகண்டும்வல்லைப்
போயினகுரக்குத்தானைபுகுந்திலதன்றேபொற்றேர்த்
தீயவன்றன்மேலுள்ளபயத்தினாற்கலக்கந்தீரா. (௰௪)

தளப்பருஞ்சேனைவெள்ளத்தறுபதுந்தலத்ததாக
வளப்பருந்தேரினுள்ளதாயிரகோடியாகத்
துளக்கமிலாற்றல்வீரர்பொருதபோர்த்தொழிலைநோக்கி
அளப்பருந்தோளைக்கொட்டியஞ்சனைமதலையார்த்தான். (௰௫)

ஆரிடையநுமனார்த்தவார்கலியசனிகேளாத்
தேரிடைநின்றுவீழ்ந்தார்சிலர்சிலர்படைகள்சிந்திப்
பாரிடையிழிந்துபோகப்பாரித்தார்பைம்பொனிஞ்சி
ஊரிடைநின்றுளாருமுயிரினோடுதிரங்கான்றார். (௰௬)

அஞ்சினிர்போமினின்றோரார்ப்பொலிக்கிழியற்பாலிர்
வெஞ்சமம்விளைப்பதென்னோநீருமிவீரரோடு
துஞ்சினிர்போலுமன்றேயென்றவர்ச்சுளித்துநோக்கி
மஞ்சினிற்கரியமெய்யானிருவர்மேலொருவன்வந்தான். (௰௭)

அக்கணத்தார்த்துமண்டியாயிரகோடித்தேரும்
புக்கனநேமிப்பாட்டிற்கிழிந்தனபுவனமென்னத்
திக்கிடைநின்றயானைசிரம்பொதிதெறியச்சிந்தி
உக்கனவிசும்பின்மீன்களுதிர்ந்திடத்தேவருட்க. (௰௮)

வேறு.

இலக்குமணன் யானொருவனே பொருகின்றேனெனல்.

மாற்றமொன்றிளையவன்வளைவிற்செங்கரத்
தேற்றினன்வணங்கிநின்றியம்புவானிகல்
ஆற்றினனரவுகொண்டசைப்பவாரமர்
தோற்றனனென்றுகொண்டுலகஞ்சொல்லுமால். (௰௯)

காக்கவுங்கிற்றிலன்காதனண்பரைப்
போக்கவுங்கிற்றிலனொருவன்போய்ப்பிணி
ஆக்கவுங்கிற்றிலன்வென்றியாருயிர்
நீக்கவுங்கிற்றிலனென்றுநின்றதால். (௨0)

இந்திரன்பகையெனுமிவனையென்சரம்
அந்தரத்தருந்தலையறுக்கலாதெனின்
வெந்தொழிற்செய்கையன்விருந்துமாய்நெடு
மைந்தரிதகடையெனப்படுவென்வாழியாய். (௨௧)

நின்னுடைமுன்னரிந்நெறியினீர்மையான்
றன்னுடைச்சிரத்தையென்சரத்திற்றள்ளினால்
பொன்னுடைவனைகழற்பொலன்பொற்றோளினாய்
என்னுடையடிமையுமிசையிற்றாமரோ. (௪௨)

நெடியனவுலகெலாங்கண்டுரிற்கவென்
அடுசரமிவன்றலையறுக்கலாதெனின்
முடியவொன்றுணர்த்துவெனுனக்குநான்முயல்
அடிமையின்பயனிகந்தறுவதாகென்றான். (௪௩)

வல்லவனவ்வுரைவழங்குமேல்வையுள்
அல்லனீங்கினமெனவமரரார்த்தனர்
எல்லையிலுலகமுமெவையுமார்த்தன
நல்லறமார்த்தனநமனுமார்த்தனன். (௪௪)

இராமன் நீயேபொருதியெனல்.

முறுவல்வாண்முகத்தினன்முளரிக்கண்ணனும்
அறிவைநீயடுவெலென்றமைதியாமெனின்
இறுதியுங்காவலுமியற்றுமீசரும்
வெறுவியர்வேறினிவிளைவதியாதென்றான். (௪௫)

சொல்லிதுகேட்டடிதொழுதுசுற்றிய
பல்பெருந்தேரொடுமரக்கர்பண்ணையைக்
கொல்வலிங்கன்னதுகாண்டிகொல்லெனா
ஒல்லையிலெழுந்தனனுவகையுள்ளத்தான். (௪௬)

அங்கதனார்த்தனனசனியேறென
மங்குனின்றதிர்ந்தனவயவன்றேர்வரும்
சிங்கமுநடுக்குறத்திருவினாயகன்
சங்கமொன்றொலித்ததுகடலுந்தள்ளுற. (௪௭)

எழுமரச்சக்கரமீட்டிதோமரம்
முழுமுரட்டண்டுவேன்முசுண்டிமூவிலைக்
கழுவயில்கப்பணங்கவண்கல்கன்னகம்
விழுமழைக்கிரட்டிவிட்டரக்கர்வீசினார். (௪௮)

இலக்குமணன் அசுரரைப் பொருதொழித்தல்.

மீனெலாம்விண்ணினின்றொருங்குவீழ்ந்தன
வானெலாமண்ணெலாமறையவந்தன
தானெலாந்துணிந்துபோய்த்தகர்ந்துசாய்ந்தன
வேனிலானனையவன்பகழிவெம்மையால். (௪௯)

ஆயிரந்தேரொருதொடையினச்சிறும்
பாய்பரிக்குலம்படும்பாகர்பொன்றுவர்
நாயகர்நெடுந்தலைதுமியுநாமறத்
தீயெழும்புகையெழுமுலகந்தீய்ந்தற. (௫௦)

அடியறுந்தேர்முரணுழியச்சறும்
வடிநெடுஞ்சிலையறும்வாசிமார்பறும்
கொடியறுங்குடையறுங்கொற்றவீரர்தம்
முடியறுமுரசறுமுகிலுஞ்சிந்துமால். (௫௧)

இன்னவோருறுப்பிவையிளையதேர்பரி
மன்னவரிருவர்படைஞர்மற்றுளோர்
என்னவோர்தன்மையுந்தெரிந்ததில்லையால்
சின்னபின்னங்களாய்மயங்கிச்சிந்தலால். (௫௨)

தந்தையர்தேரிடைத்தநயர்வன்றலை
வந்தனதாதையர்வயிரவான்சிரம்
சிந்தினகாதலர்தேரிற்சின்னமா
அந்தரத்தம்பொடுமற்றெழுந்தன. (௫௩)

செம்பருங்குருதியிற்றிகழ்ந்தசெங்கண்மீன்
கொம்பொடும்பரவையிற்றிரியுங்கொட்பெனத்
தும்பையின்றொடையலார்தடக்கைதூணிவாங்
கம்பொடுந்துணிந்தனசிலையொடற்றன. (௫௪)

தடிவனகொடுஞ்சரந்தள்ளத்தள்ளுற
மடிவனகொடிகளுங்குடையுமற்றவும்
வெடிபடுகடணிகர்குருதிவெள்ளத்தில்
படிவனவொத்தனபறவைபன்மைய. (௫௫)

வேறு.

சிந்துரங்களின்பருமமும்பகழியுந்தேரும்
குந்துவன்னெடுஞ்சிலைமுதற்படைகளுங்கொடியும்
இந்தனங்களாயிறந்தவர்விழிக்கனலிலங்க
வெந்தவெம்பிணம்விழுங்கினகழுதுகள்விரும்பி. (௫௬)

சில்லியூடறச்சிதறினசிலசிலகோத்த
வல்லியூடறமறிந்தனபுரவிகண்மறையப்
புல்லிமண்ணிடைப்புரண்டனசிலசிலபோர்தாள்
வில்லிசாரதியொடும்படத்திரிந்தனவெறிய. (௫௭)

அலங்குபன்மணிக்கதிரனகுருதியினழுந்த
விலங்குசெஞ்சுடர்விடுவனவளவின்றிமிடைந்த

குலங்கொள்வெய்யவரமர்க்களத்தீயிடைக்குளித்த
இலங்கைமாநகர்மாளிகைநிகர்த்தனவிரதம். (௫௮)

இந்திரசித்துத்தனித்தல்.

ஆனகாலையினிராமனுமயின்முகப்பகழி
சோனைமாரியிற்சொரிந்தனனநுமனைத்தூண்டி
வானமானங்கண்மடிந்தெனத்தேரெலாமடிந்த
தானுந்தேருமேயாயினனிராவணன்றஙயன். (௫௯)

பல்விலங்கொடுபுரவிகள்பூண்டதேர்ப்பரவை
வல்விலங்கல்போலரக்கர்தங்குழாத்தொடுமேடிய
வில்விலங்கியவீரரைநோக்கினன்வெகுண்டான்
சொல்விலங்கலன்சொல்லினனிராவணன்றேன்றல். (௬௦)

இந்திரசித்து இராம விலக்குமணர்களைப் பார்த்துரைத்தல்.

இருவிரென்னொடுபொருதிரோவன்றெனினேற்ற
ஒருவிர்வந்துயிர்தருதிரோவும்படையோடும்
பொருதுபொன்றுதல்புரிதிரோவுறுவதுபுகலும்
தருவலின்றுமக்கேற்றுளதொன்றெனச்சலித்தான். (௬௧)

இலக்குமணனிந்திரசித்தினைநின்னைக்கொல்லயானே சூளுரைத்துளேனெனல்.

வாளிற்றிண்சிலைத்தொழிலின்மல்லினின்மற்றை
ஆளுற்றெண்ணியபடைக்கலமெவற்றினுமமரிற்
கோளுற்றுன்னொடுகுறித்ததுசெய்துயிர்கொள்வான்
சூளுற்றேனிதுசரதமென்றிலக்குவன்சொன்னான். (௬உ)

இந்திரசித்திலக்குமணனைகொல்லனெனல்.

முன்பிறந்தவுன்றம்முனைமுறைதவிர்த்துனக்குப்
பின்பிறந்தவனுக்குவென்பின்பிறந்தோயை
முன்பிறந்தவனுக்குவனிதுமுடியேனேல்
என்பிறந்ததனுற்பயனிராவணற்கென்றான். (௬௩)

இந்திரசித்தின்சூளுரை.

இலக்குவன்னெனும்பெயருனக்கியைவதேயென்று
இலக்குவன்கணைக்காக்குவெனிதுபுகுந்திடையே
விலக்குவன்னெனவிடையவன்விலக்கினும்வீரம்
விலக்குவன்னினைக்காணுமுன்றமையனும்விழியால்.

இதன்பொருள். வன்கணைக்கு - (என்) வலிய அம்புக்கு, இலக்கு - எய்யுங்குறியாக, ஆக்குவென் - (உன்னைச்) செய்வேன், (ஆதலால்) இலக்குவ

னெனும் பெயர் - இலக்குவனெனச் சிறப்பித்துக்கூறும் பெயர், உனக்கியைவதே - உனக்குத்தக்கதே, என்று - என்று கூறி, இனி - இவ்வாறு யான் துணிந்தபின், விடையவன் - எங்கட்கு வேண்டிய வரங்களைத்தரும் இடபவாகனனாகிய சிவன், புகுந்திடையே - போர்க்கிடையே புகுந்து, விலங்கு உவனென - சிங்கவுருக்கொண்ட அத்திருமாலைப்போல, விலக்கினும் - என்போரைமறுத்தாலும், நினை வீரம் விலக்குவல் - நின்னினின்றும் வீரத்தை நீக்குவேன், உன்றமையனும் - உன்னை உயிரினும் மேலாகக்கொண்ட உன்னண்ணனும், விழியால் காணும் - கண்களால் அதைப் பார்ப்பான்.

னகரமூன்றும் விரித்தல். விலக்கென்பதில் ககரம் வலித்தல், இது நரமடங்கலை யுணர்த்திற்று. இறைவனவ்வுருக்கொண்டு இரணியன் முதலிய இராக்கதர்குழுவைக் கொலைசெய்தானாகலின், காத்தலின் நன்மை புரிநுகர்நன்னலம் துய்த்துப்பல்கலாற் படைத்தலையும், தீமைபுரிநுநர் துன்பந்துய்த்தழிதலால் அழித்தலையுந் தன்னுள்ளடக்கிக்கொண்டுஅவ்விருதொழிலுக்கு மிடை நிகரதாய் நிற்றலி னதனுடைய விறைவனை உவனென்று சுட்டியும் தைத்தியர் காலனென்பவாகலின் அழித்தற்குரிய விடையவனுக் கவனையுவமித்துங் கூறினான். இது தொழிலுவமை. தன்னுயிரினுஞ் சிறப்பாகக் கொண்டானென்பது உன் தமையனுமென்ற சொல்லாற்றலாற் போந்தபொருள். உம்மைசிறப்பு காணுமென்றலே யமைந்திருக்க விழியாலெனவேண்டாது கூறியது, நீ அதிகாயன் முதலிய போர்வீரரை வெற்றிகொண்டதைக் கண்டதெனத் தான்வேண்டி அவ்விழியின் சிறப்பைத்தோற்றுவித்தற்கு. நினை என்பது உருபுமயக்கம். (௬௪)

அறுபதாகியவெள்ளத்தினரக்கரையம்பால்
இறுவதாகியவிரண்டுவில்லிருங்கண்டிரங்க
மறுவதாக்கியவெழுபதுவெள்ளமுமாள
வெறுவிதாக்குவெனுலகினைக்கணித்திறேனோர்வில்லால். (௬௫)

கும்பகன்னனென்றொருவனீரம்பிடைக்குறைத்த
தம்பியல்லநானிராவணன்மகனொருதமியேன்
எம்பிமாருக்குமென்சிறுதாதைக்குமிருவிர்
செம்புணீர்கொடுகடன்கழிப்பானின்றுதீர்ந்தேன். (௬௬)

இந்திரசித்தனை இலக்குமணனுங்க ளனைவருக்கும் கடன் விபீடணன் செய்வோனெனல்.

அரக்கரென்புதோர்பெயர்படைத்தவர்க்கெலாமடுத்த
புரக்குநன்கடன்செயவுளன்வீடணன்போந்தான்
கரக்குநுந்தைக்குநீசெயக்கடவன்கடன்கள்
இரக்கமுற்றுனக்கவன்செயுமென்றனனிளையோன். (௬௭)

இந்திரசித்தன் பிரதாபயுத்தம்.

ஆனகாலையினயிலெயிற்றரக்கனெஞ்சழன்ருன்
வானம்வையமுந்திசைகளும்யாவையுமறையப்
பானல்வேலையைப்பருகுவசுடர்முகப்பகழி
சோனைமாரியினிருமடிமும்மடிதுரந்தான். (௬அ)

அங்கதன்றன்மேலாயிரமவற்றினுக்கிரட்டி
வெங்கண்மாருதிமேனிமேல்வேறுளவீரச்
சிங்கமன்னவராக்கைமேலுலப்பிலசெலுத்தி
எங்கும்வெங்கணையாக்கினனிராவணன்சிறுவன். (௬௯)

இளையமைந்தன்மேலிராமன்மேலிராவணியிகலில்
விளையும்வன்றொழில்வானரவீரர்மேன்மெய்யுற்
றுளையும்வெஞ்சரஞ்சொரிந்தனனாழிகையொன்று
வளையமண்டிலப்பிறையெனநின்றதுவரிவில். (எ0)

பச்சிமத்தினுமுகத்தினுமருங்கினும்பகழி
உச்சிமுற்றியவெய்யவன்கதிரெனருமிழக்
கச்சுமுற்றவன்கைத்துணைக்கடுமையைக்காணூ
அச்சமுற்றனர்கண்புதைத்தொடுங்கினரமரர். (எக)

இலக்குமணன் பிரதாபயுத்தம்.

மெய்யிற்பட்டனபடப்படாதனவெலாம்விலக்கத்
தெய்வப்பொற்கணைக்கத்துணைக்கத்துணைசெலுத்தி
அய்யற்காங்கிளங்கோளரியறிவிலானறைந்த
பொய்யிற்போம்படிபோக்கினன்கடிதினிற்புக்கான். (எஉ)

பிறருநின்றனன்பெருந்தகையிளவலைப்பிரியான்
அறமிதன்றெனவரக்கன்மேற்சரந்துரந்தருளான்
இறவுகண்டிலரிருவருமொருவரையொருவார்
விரகின்வெந்தனவிசும்பிடைச்செறிந்தனவிசிகம். (எ௩)

மாடெரிந்தெழுந்திருவர்தங்கணைகளும்வழங்கக்
காடெரிந்தனகனவரையெரிந்தனகனக
வீடெரிந்தனவேலைகளெரிந்தனவிலங்கல்
ஊடெரிந்தன * ஆழியினெரிந்தனவுலகம். (எச)

படங்கொள்பாம்பணைதுறந்தவற்கிளையவன்பகழி
விடங்கொள்வெள்ளத்தின்மேலனவருவனவிலக்கி
இடங்கரேறனவெறுழ்வலியரக்கன்றேரீர்க்கும்
மடங்கலையிருநூற்றையுங்கூற்றின்வாய்மடுத்தான். (எ௫)

---

* ஊழியின் - பிரளயகாலத்திற்போல.

தேரழிந்திடச்சேமத்தேர்பிறிதிலன்செறிந்த
ஊரழிந்திடத்தனிநின்றகதிரவனொத்தான்
பாரழிந்ததுபுரமெனும்படியவான்பகையின்
சூரழிந்திடத்துரந்தனன்சுடுசரஞ்சொரிந்தான். (எசு)

அற்றதேர்மிசைநின்றுபோரங்கதனலங்கற்
கொற்றத்தோளினுமிலக்குவன்புயத்தினுங்குளிக்க
முற்றவெண்ணிலாமுரட்கணைதூர்த்தனன்முரட்போர்
ஒற்றைச்சங்கெடுத்தூதினனுலகெலாமுலைய. (எஎ)

சங்கமூதியதசமுகன்றனிமகன்றரித்த
கங்கமார்பெருங்கவசமுமிற்றுடன்கழல
வெங்கொடுங்கணையையிரண்டுருமெனவீசிச
சிங்கவேறன்னவிலக்குவன்சிலையைநாணெறிந்தான். (எஅ)

கண்டகார்முகில்வண்ணனுங்கமலக்கண்கலுழத்
துண்டவெண்பிறைநிலவெனமுறுவலுநதோன்ற
அண்டமுண்டதன்வாயினுலார்மினென்றருள
விண்டதண்டமென்றுலைந்திடவார்த்தனர்வீரர். (எகூ)

இந்திரசித்தாகாயத்தில் மறைதலும், இலக்குமணன் பிரமாத்திரம் விடுதற்குமுயறலும், இராமன் தடுத்தலும்.

கண்ணிமைப்பதன்முன்புபோய்விசும்பிடைகரந்தான்
அண்ணன்மற்றவனுக்கைகண்டறிகிலனுகிப்
பண்ணவற்கிவன்பிழைக்குமேற்படுக்குங்கம்படையை
எண்ணமற்றிலையயன்படைதொடுப்பலென்றிசைத்தான். (அ௦)

ஆன்றவன்னதுபுகறலுமறவனீமுனிந்தால்
ஈன்றவந்தணன்படைக்கலநதொடுக்கவிவ்வுலக
மூன்றையுஞ்சுடுமொருவனுன்முடிகலதென்றுன்
சான்றவன்னதுதவிர்ந்தனனுணர்வுடைதம்பி. (அக)

போர்கண்டதேவர்கள் இந்திரசித்தனைக்கண்டு நகைத்தல்.

மறைந்துபோய்நின்றவஞ்சனுமவருடைமனத்தை
அறிந்துதெய்வவான்படைக்கலநதொடுப்பதற்கமைநதான்
பிறிந்துபோவதேகருமமிப்பொழுதெனப்பெயர்ந்தான்
செறிந்ததேவர்களாவலங்கொட்டினர்சிரித்தார். (அஉ)

வானரர் ஆரவாரித்தல்.

செஞ்சரத்தொடு * செம்மழைவிசும்பின்மேற்செல்ல
† மஞ்சன்மாமழையோவியமாமெனமாற

* செம்மழை—செந்நிறமான மேகம்போல.
† மஞ்சன்—வீரனாகிய இந்திரசித்து.

அஞ்சினானகன்றானெனவறிந்தனரார்த்தார்
வெஞ்சினந்தருகளிப்பினர்வானரவீரர். (௮௩)

இந்திரசித்திலங்கையுட்புகுதல்.

உடைந்தவானரச்சேனையுமோதநீருவரி
அடைந்ததாமெனவந்திரைத்தார்த்தெழுந்தாடித்
தொடர்ந்துசென்றதுதோற்றவன்யாவர்க்குந்தோன்றாக்
கடைந்தவேலைபோற்கலங்குறுமிலங்கையைக்கலந்தான். (௮௪)

எற்கொணான்முகன்படைக்கலமிவரென்மேல்விடாமுன்
முற்கொள்வேனெனுமுயற்சியன்மறைமுறைமொழிந்த
சொற்கொள்வேள்விபோய்த்தொடங்குவானமைந்தவன்றுணிவை
மற்கொடோளவருணர்ந்திலரவன்றிறமறந்தார். (௮௫)

அனுமனங்கதன்றோளினின்றிழிந்தனராகித்
தனுவும்வெங்கணைப்புட்டிலுங்கவசமுந்தடக்கைக்
கினியகோதையுந்துறந்தனரிருந்தனரிமையோர்
பனிமலர்த்தொகைபொழிந்தனர்வாழ்த்தொலிபரப்பி. (௮௬)

ஏற்பாடு.

ஆர்த்தசேனையினமலைபோய்விசும்பினையலைக்க
ஈர்த்ததேரொடுங்கடிதுசென்றானகன்றிரவி
நீர்த்தன்மேலவன்றிசைமுகன்படைக்கலஞ்செலுத்தப்
பார்க்கிலேன்முந்திப்படுவலென்புழனெனப்பட்டான். (௮௭)

இராமன் விபீடணனை உணவுகொண்டுவர அனுப்புதல்.

இரவுநன்பகலும்பெருநெடுஞ்செருவியற்றி
உரவுநம்படைமெலிந்துளதருந்துதற்குணவு
வரவுதாழ்த்ததுவீடணவல்லையினேகித்
தரவுவேண்டினெனென்றனன்றாமரைக்கண்ணன். (௮௮)

இன்னதேகடிதியற்றுவெனெனத்தொழுதெழுந்தான்
பொன்னின்மோலியன்வீடணன்றமரொடும்போனான்
கன்னலொன்றிலோர்காலினின்வேலையைக்கடந்தான்
அன்னவேலையினிராமனீதிளையவற்கறைந்தான். (௮௯)

சேனைகாவல்நின்னதேன இராமனிலக்குமணற்குரைத்து அத்திரபூசைக்கேகுதல்.

தெய்வவான்பெரும்படைகட்குவரன்முறைதிருந்து
மெய்கொள்பூசனையியற்றினம்வி[illegible]மிதுவிதியால்
அய்யநாணிவையாற்றினன்வருவதோரளவும்
கய்கொள்சேனையைக்காவெனப்போர்க்களங்கடந்தான. (௯௰)

இந்திரசித்து இராவணனிடம்போரில் நிகழ்ந்தவை யுரைத்தல்.

தந்தையைக்கண்டுபுகுந்துள தன்மையுந்தன்மேல்
முந்தைநான்முகன்படைக்கலந்தொடுக்குற்றமுறையும்
சிந்தையுட்புகச்செப்பினனனையவன்றிகைத்தான்
எந்தையென்னினிச்செயத்தக்கதிசையெனவிசைத்தான். (௧௧)

வஞ்சனையாகப்பிரமாத்திரம் விடுதலேதகுதியென இந்திரசித்திராவணனிடங் கூறுதல்.

தன்னைக்கொல்வதுதுணிவரேற்றனக்கதுதகுமேல்
முன்னர்க்கொல்லியமுயல்கவென்றறிஞரேமொழிந்தார்
அன்னப்போரவரிருவரும்வகைமறைந்தயன்றன்
வென்னப்போர்ப்படைவிடுதலேநலமிதுவிதியால். (௧௨)

தொடுக்கின்றேனென்பதுணர்வரேலப்படைதொடுத்தே
தடுப்பர்காண்பரேற்கொல்லவும்வலத்தரத்தவத்தோர்
இடுக்கொன்றாகின்றதில்லைநல்வேள்வியையியற்றி
முடிப்பலன்னவர்வாழ்வையோர்கணத்தென்றுமுடித்தான். (௧௩)

என்னையன்னவர்மறந்தனர்நின்றிகலியற்றத்
துன்னுபோர்ப்படைமுடிவிலாதவர்வயிற்றூண்டிப்
பின்னைநின்றதுபுரிவலென்றனையவன்பேச
மன்னன்முன்னின்றமகோதரனிம்மொழிவழங்கும். (௧௪)

இராவணன் மகோதரனை நீ போர்புரியச் செல்லுதியெனல்.

வெள்ளநூறுடைவெஞ்சினச்சேனையைவீர
அள்ளிலைப்படையகம்பனைமுதலியவரக்கர்
எள்ளிலெண்ணிலர்தம்மொடுவிரைந்தனையேகிக்
கொள்ளைவெஞ்செருவியற்றுதிமனிதரைக்குறுகி. (௧௫)

மாயையென்றனவல்லனயாவையும்வழங்கித்
தீயிருட்பெரும்பரப்பினைச்செறிவுறத்திருத்தி
நீயொருத்தனேயுலகொருமூன்றையுநிமிர்வாய்
போயுருத்தவருயிர்குடித்துதவெனப்புகன்றான். (௧௬)

என்றகாலையினென்றுகொலேவுவதென்று
நின்றவாளெயிற்றரக்கனுமுவகையினிமிர்ந்தான்
சென்றுதேர்மிசையேறினனிராக்கதர்செறிந்தார்
குன்றுசுற்றியமதகரிக்குலமன்னகுறியார். (௧௭)

கோடிகோடிநூறாயிரமாயிரங்குறித்த
அடல்யானைகளணிதொறுமணிதொறுமமைந்த

ஓடுதேர்க்குலமுலப்பிலவோடிவந்துற்ற
கேடில்வாம்பரிக்கணக்கையுங்கடந்தனகிளர்ந்த. (௯௮)

படைக்கலங்களும்பருமணிப்பூண்களும்பகுவாய்
இடைக்கலந்தனவெயிற்றிளம்பிறைகளுமெறிப்பப்
புடைப்பரந்தனவெயில்களுநிலாக்களும்புரள
விடைக்குலங்கள்போலிராக்கதப்பதாதியுமிடைந்த. (௯௯)

கொடிக்குழீஇயனகொழுந்தெடுத்தெழுந்துமேற்கொள்ள
இடிக்குழீஇயனமழைப்பெருங்குலங்களையிரித்த
அடிக்குழீஇயிடமிடந்தொறும்பிதிர்ந்தெழுந்தார்த்த
பொடிக்குழீஇயண்டம்படைத்தவன்கண்ணையும்புதைத்த. (௧௦௦)

ஆனையென்னுமாமலைகளினிழிதருமருவி
வானயாறுகள்வாசிவாய்நுரையொடுமயங்கிக்
கானமாமரங்கல்லொடுமீர்த்தனகடிதில்
போனபோதரும்பெருமையபுணரியுட்புக்க. (௧௦௧)

தடித்துமின்குலம்விசும்பிடைத்தயங்குவசலத்தின்
மடித்தவாயினர்வாளெயிற்றரக்கர்தம்வலத்தின்
பிடித்ததிண்படைவிதிர்த்திடவிதிர்த்திடப்பிறழ்ந்து
பொடித்தவெம்பொறிகொதித்துமேற்போவனபோன்ற. (௧௦௨)

சொன்னநூறுடைவெள்ளமன்றிராவணன்றுரந்த
அன்னசேனையைவாயினூடுமிழ்கின்றவமைதி
முன்னம்வேலையைமுழுவதுங்குடித்ததுமுறையீ
தென்னமீட்டுமிழ்குறுமுனியொத்ததவ்விலங்கை. (௧௦௩)

சங்கபேரியுங்காளமுந்தாளமுந்தலைவர்
சிங்கநாதமுஞ்சிலையினொலிகளுஞ்சினமாப்
பொங்குமோதையும்புரவியினோதையும்பொலிதேர்
வெங்கணோலமுமாலெனவிழுங்கியவுலகை. (௧௦௪)

அசுரவானர யுத்தம்.

புக்கதநற்பெரும்போர்ப்படைப்பறந்தலைப்புறத்தில்
தொக்கதானெடுவானரத்தானையுந்துவன்றி
ஒக்கவார்த்தனவுருக்கினதெழித்தனவுருமின்
மிக்கவான்படைவிடுகணைமாமலைவிலக்கி. (௧௦௫)

குன்றுகோடியுங்கோடிமேற்கோடியுங்குறித்த
வென்றிவானரவீரர்கண்முகந்தொறும்விலங்கல்
ஒன்றினால்வருமைவருமிராக்கதருலந்தார்
பொன்றிவீழ்ந்தனபொருகரிபாய்பரிபொலந்தேர். (௧௦௬)

மழுவுஞ்சூலமும்வலயமுநாஞ்சிலும்வாளும்
எழுவுமீட்டியுந்தோட்டியுமெழுமுளைத்தண்டும்
கழுவும்வேலொடுகணையமும்பகழியுங்காத்த
குழுவினோடுபட்டுருண்டனவானரக்குலங்கள். (௧0௭)

முற்கரங்களுமுசலமுமுசுண்டியுமுளையும்
சக்கரங்களும்பிண்டிபாலத்தொடுதண்டும்
கற்பணங்களுங்கணையமுங்கவண்விடுகல்லும்
வெற்பினங்களைநுறுக்கினகவிகளைவீழ்த்த. (௧0௮)

கதிரயிற்படைக்கலம்வரன்முறைமுறைகடாவ
அதிர்பிணப்பெருங்குன்றுகள்படப்படவழிந்த
உதிரமுற்றபேராறுகடிசைத்திசையோட
எதிர்நடக்கிலகவிக்குலமரக்கருமியங்கார். (௧0௯)

யாவராங்கிகல்வானரராயினரெவரும்
தேவராகலினவரொடும்விசும்பிடைத்திரிந்தார்
மேவுகாதலின்மெலிவுறுமரம்பையர்விரும்பி
ஆவியொன்றிடவிழைவினர்பிரிவுநோயகன்றார். (௧௧0)

கரக்குமாயமும்வஞ்சமுங்களவுமேகடனா
இரக்கமேமுதற்றருமத்தினெறிக்கென்றுமிழியா
அரக்கரைப்பெருந்தேவர்களாக்கினவமலன்
சரத்தின்மேலினிப்பவித்திரமுளவெனத்தகுமே. (௧௧௧)

அந்தகன்பெரும்படைக்கலமந்திரத்தமைந்தான்
இந்துவெள்ளெயிற்றரக்கரும்யானையுந்தேரும்
வந்தவந்தனவானகமிடம்பெறாவண்ணம்
சிந்தினான்சரமிலக்குவன்முகந்தொறுந்திரிந்தான். (௧௧௨)

அநுமனது தண்டப்போர்.

கும்பகன்னனாண்டிட்டதுவயிரவான்குன்றின்
வெம்புவெஞ்சுடர்விரிப்பதுதேவரைமேனாள்
தும்பையின்றலைதுரந்ததுசுடர்மணித்தண்டொன்
றிம்பர்ஞாலத்தைநெளிப்பதுமாருதியெடுத்தான். (௧௧௩)

வேறு.

காற்றன்றிதுகனலன்றெனவிமையோரிடைகாணா
எற்றங்கடுவிசையோடுயர்கொலைநீடியவியல்பால்
சீற்றந்தனியுருவாயிடைதேறாததொர்மாறாய்க்
கூற்றங்கொடுமுனைவந்தெனக்கொன்றானிகனின்றான். (௧௧௪)

வெங்கண்மதமலைமேல்விரைபரிமேல்விடுதேர்மேல்
சங்கந்தருபடைவீரர்களுடன்மேலவர்தலைமேல்
எங்கும்முளனொருவன்னெதிர்த்திருநான்மறைதெரிக்கும்
செங்கண்ணவனிவனேயெனத்திரிந்தான்கலைதெரிந்தான். (௧௧௫)

கிளர்ந்தாரையுங்கிடைத்தாரையுங்கிழித்தான்கனல்விழித்தான்
களந்தானொருகுழம்பாம்வகையரைத்தானுருக்கரைத்தான்
வளர்ந்தானிலையுணர்ந்தாருலகொருமூன்றையும்வலத்தால்
அளர்ந்தான்முனமிவனேயெனவிமையோர்களுமயிர்த்தார். (௧௧௬)

மத்தக்கரிநெடுமத்தகம்வகிர்பட்டுகமணிமேல்
முத்திற்பொலிமுழுமேனியன்முகில்விண்டொடுமெய்யான்
ஒத்தக்கடையுகமுற்றுழியுறுகால்பொரவுடுமீன்
தொத்தப்பொலிகனகக்கிரிவெயில்சுற்றியதொத்தான். (௧௧௭)

இடித்தானிலம்விசும்போடெனவிட்டானடியெழுந்தான்
பொடித்தான்கடற்பெருஞ்சேனையைப்பொலந்தண்டுதன்வலத்தால்
பிடித்தான்மதகரிதேர்முதற்பிழம்பானவைகுழம்பா
அடித்தானுயிர்குடித்தானெடுத்தார்த்தான்பகைதீர்த்தான். (௧௧௮)

நூறாயிரமதமால்கரியொருநாழிகைநுவல்போ
தாறாய்நெடுங்கடுஞ்சோரியினளறாம்வகையரைப்பான்
ஏறாயிரமென்லாயெழுவயவீரரையிடறித்
தேறாதுறுகொலைமேவியதிசையானையிற்றிரிந்தான். (௧௧௯)

தேரேறினர்பரியேறினர்விடையேறினர்சினவெங்
காரேறினர்மழையேறினர்கலையேறினர்பலவெம்
போரேறினர்புகழேறினர்புகுந்தார்புடைவளைந்தார்
நேரேறினர்விசும்பேறிடநெரித்தான்கதைதிரித்தான். (௧௨௦)

வேறு.

அரிகுலமன்னனீலனங்கதன்குமுதன்சாம்பன்
பருவலிப்பனசனென்றிப்படைத்தலைவீரர்யாரும்
பொருசினந்திருகிவெற்றிப்போர்க்களமருங்கிற்புக்கார்
ஒருவரையொருவர்காணாருயர்படைக்கடலினுள்ளார். (௧௨௧)

தொகும்படையரக்கர்வெள்ளந்துறைதுறையள்ளத்தூவி
நகும்படைத்தலைவர்க்கொல்லுநரசிங்கநடந்ததென்ன
மிகும்படைக்கடலுட்செல்லுமாருதிவீரவாழ்க்கை
அகம்பனைக்கிடைத்தான்றண்டாலரக்கரையரைக்குங்கையான். (௧௨௨)

மலைப்பெருங்கழுதையைஞ்ஞூற்றிரட்டியான்மனத்திற்செல்லும்
தலைத்தடந்தேரன்வில்லன்றுருகனென்னுந்தன்மைக்

கொலைத்தொழிலவுணன்பின்னையிராக்கதவேடங்கொண்டான்
சிலைத்தொழிற்குமரன்கொல்லத்தொலைநாட்செருவிற்றீர்ந்தான். ()

பாகசாதனனுமற்றைப்பகையடுந்திகிரிபற்றும்
ஏகசாதனனுமூன்றுபுரமும்பண்டெரித்துளோனும்
போகதாமொருவர்பற்றிக்குரங்கொடுபொரக்கற்றாரே
ஆககூற்றாவியுண்பதிதனின்மேற்றாகுமென்றான். (௧௨௪)

யான்றடேனென்னின்மற்றிவ்வெழுதிரைவளாகமென்றும்
வான்றடாதரக்கரென்னும்பெயரையுமாய்க்குமென்று
ஊன்றடாநின்றவாளிமழைதுரந்துருத்துச்சென்றான்
மீன்றொடாநின்றதிண்டோளனுமனும்விரைவின்வந்தான். (௧௨௫)

தேரொடுகளிறுமாவுமரக்கருநெருக்கித்தெற்றிக்
காரொடுகனலுங்காலுங்கிளர்ந்ததோர்காலமென்ன
வாரொடுதொடர்ந்தபைம்பொற்கழலினான்வருதலோடும்
சூரொடுந்தொடர்ந்ததண்டைசுழற்றினான்வயிரத்தோளான். (௧௨௬)

எற்றினவெறிந்தவெல்லையெய்தினவெய்தபெய்த
முற்றினபடைகள்யாவுமுறைமுறைமுறிந்துசிந்தச்
சுற்றினவயிரத்தண்டாற்றுகைத்தனனமரர்துள்ளக்
கற்றிலனின்றுகற்றான்கதையினால்வதையின்கல்வி. (௧௨௭)

அகம்பனுங்காணக்காணவையிருகோடிகம்மா
முகம்பயில்கலினப்பாய்மாமுளையெயிற்றிட்டமூரி
நுகம்பயிறேரினோடுநுறுக்கினானூழிதீர்த்தான்
உகம்பெயருழிக்காற்றினுலைவிலாமேருவொப்பான். (௧௨௮)

படுகளப்பரப்பைநோக்கிப்பாழிவாயதுக்கிநூழிற்
சுடுகிளர்புகைவெங்கண்ணிற்றோன்றிடக்கொடித்தேர்தூண்டி
விடுகணைப்படலைமாரிமழையினுமும்மைவீசி
முடுகுறச்சென்றுகுன்றின்முட்டினான்முகிலினார்ப்பான். (௧௨௯)

சொரிந்தனபகழிமாரிதோளினுமார்பின்மேலும்
தெரிந்தன * வசனிபோல்வசெறிபொறிபிதிர்வதிக்கின்
வரிந்தனவெருவைமானச்சிறைகளாலமரர்மார்பை
அரிந்தனவடிம்புபொன்கொண்டமைந்தனவாகுங்கண்ண. (௧௩௦)

மார்பினுந்தோளின்மேலும்வாளிவாய்மடுத்தவாயில்
சோர்பெருங்குருதிசோரத்துளங்குவான்றேறாமுன்னம்
தேரிரண்டருகும்பூண்டகழுதையுமச்சுஞ்சிந்தச்
சாரதிபுரளவீரத்தண்டினாற்கண்டஞ்செய்தான். (௧௩௧)

* அசனிபோல்வசெறிபொறிபிதிர்வதிக்கின் - இடிபோன்ற ஓசையுடன் நெருங்கியதீப்பொறிகளைத் திசைகடோறுங்கக்குவன.

அகம்பனனுமயுத்தம்.

வில்லினாலிவனைவெல்வதரிதெனநிருதன்வெய்ய
மல்லினாலியன்றதோளின்வலியினால்வானத்தச்சன்
தொல்லினாலமைத்ததாண்டோர்கொடுமுனைத்தண்டுகொண்டான்
அல்லினால்வகுத்ததன்னமேனியான்கடலினார்ப்பான். (௧௩௨)

இன்றிவன்றன்னைவிண்ணாடேற்றிவாளிலங்கைவேந்தை
வென்றியனுக்கிமற்றைமணிதரைவெறியராக்கி
நின்றுயர்நெடியதுன்பமமரர்பாணிறுப்பலென்னாச்
சென்றனனரக்கனென்றுவருகெனவனுமன்சேர்ந்தான். (௧௩௩)

தாக்கினாரிடத்துமற்றும்வலத்தினுந்திரிந்தார்சாரி
ஒக்கினாரூழினார்ப்புக்கொட்டினார்கிட்டினார்கீழ்த்
தூக்கினார்சுழற்றிமேன்மேற்சுற்றினாரெற்றிவெற்றி
நீக்கினார்நெருக்கினார்போய்நீங்கினாரேங்கினார்மேல். (௧௩௪)

தட்டினார்தழுவினார்மேற்றாவினார்தரையினோடும்
கிட்டினார்கிடைத்தார்வீசிப்புடைத்தவைகீழுமேலும்
கட்டினார்காத்தாரொன்றுங்காண்கிலாரிறவுகண்ணுற்
றொட்டினார்மாதிவட்டமோடினாராதிபோனார். (௧௩௫)

மய்யொடுபகைத்துநின்றநிறத்தினான்வயிரமார்பில்
பொய்யொடுபகைத்துநின்றகுணத்தினான்புகுந்துமோத
வெய்யவனதனைத்தண்டால்விலக்கினான்விலக்கலோடும்
கய்யொடுமிற்றுமற்றைக்கதைகளங்கண்டதன்றே. (௧௩௬)

கய்யொடுதண்டுநீங்கக்கடலெனக்கலக்கமுற்ற
மெய்யொடுநின்றவெய்யோன்மிடலுடையிடக்கையோச்சி
அய்யனையலங்கலாகத்தடித்தனனடித்தலோடும்
ஒய்யெனவயிரக்குன்றத்துருமினேறிடித்ததொத்த. (௧௩௭)

அடித்தவன்றன்னைநோக்கியசனியேறனையதண்டு
பிடித்துநின்றேயுமெற்றான்வெறுங்கையான்பிழையிற்றென்னா
மடித்துவாயிடத்தகையான்மார்பிடைக்குத்தவாயால்
குடித்துநின்றுமிழ்வானென்னக்கக்கினன்குருதிக்கொள்ளை. (௧௩௮)

மீட்டுமக்கையால்வீசிச்செவித்தலத்தெற்றிவீழ்த்தான்
கூட்டினானுயிரைவிண்ணோர்குழாத்திடையரக்கர்கூட்டம்
காட்டில்வாழ்விலங்குமாக்கள்கோளரிகண்டவென்ன
ஈட்டமுற்றெதிர்ந்தவெல்லாமிரிந்தனதிசைகளெங்கும். (௧௩௯)

மாண்டனனகம்பன்மண்மேன்மடிந்தனநிருதர்சேனை
மீண்டனர்குரக்குவீரர்விழுந்தனசினக்கைவேழம்

தூண்டினகொடித்தேரற்றுத் துணிந்தனதொடுத்தவாசி
யாண்டகையிளையவீரனடுசிலைபொழியுமம்பால். (௧௪௦)

இலக்குமணன்முதலியோர் நின்றுபோரும் எல்லைஅளவு.

ஆர்க்கின்றகுரலுங்கேளானிலக்குவனசனியேற்றைப்
பேர்க்கின்றசிலையினாணின்பேரொலிகேளான்வீரர்
யார்க்கின்னலுற்றதென்றுதுணர்ந்திலனிசைப்போரில்லைப்
போர்க்குன்றமனையதோளானினையதோர்பொருமலுற்றான். (௧௪௧)

வீசினநிருதர்சேனைவேலையிற்றென்மேற்றிக்கின்
யோசனையேழுசென்றானங்கதனதனுக்கப்பால்
ஆசையினிரட்டிசென்றானரிகுலத்தரசனப்பால்
ஈசனுக்கிளையவீரனிரட்டிக்குமிரட்டிசென்றான். (௧௪௨)

மற்றையோர்நாலுமைந்தும்யோசனைமலைந்துபுக்கார்
கொற்றமாருதியும்வள்ளலிலக்குவனின்றசொற்றம்
முற்றினனிரண்டுமூன்றுகாவதமொழியப்பின்னும்
சுற்றியசேனைநீர்மேற்பாசிபோன்மிடையுந்துள்ளி. (௧௪௩)

இளையவனின்றசூழலெய்துவெவ்விரைவினன்றோர்
உளைவுவந்துள்ளந்தூண்டவூழிவெங்காலிற்செல்வான்
களைவருந்துன்பநீங்கக்கண்டனனென்பமன்றோ
விளைவனசெருவிற்பல்வேறாயினகுறிகண்மேய. (௧௪௪)

ஆனையின்கோடும்பீலித்தழைகளுமாரத்தோடு
மானமாமணியும்பொன்னுமுத்தமுங்கொழித்துவாரி
மீனெனவங்குமிங்கும்படைக்கலமிளிரவீசும்
பேனம்வெண்குடையவாயகுருதிப்பேராறுகண்டான். (௧௪௫)

ஆசைகடோறுஞ்சுற்றியலைக்கின்றவரக்கர்தம்மேல்
வீசினபகழிபற்றத்தலையொடும்விசும்பைமுட்டி
ஓசையினுலகமெங்குமுதிர்வுறவூழிநாளில்
காசறுகல்லின்மாரிபொழிவபோல்விழுவகண்டான். (௧௪௬)

மானவேலரக்கர்விட்டபடைக்கலம்வானமாரி
ஆனவன்பகழிசிந்தத்திசைதொறும்பொறியோடற்ற
மீனினம்விசும்பினின்றுமிருளுகவீழ்வபோலக்
கானகந்தொடர்ந்ததீயிற்சுடுவனபலவுங்கண்டான். (௧௪௭)

அருளுடைக்குரிசில்வாளியந்தரமெங்குந்தாமாய்த்
தெருளுறத்தொடர்ந்துவீசிச்செல்வனதேவர்காண
இருளுடைச்சுடலையாடுமண்புயத்தண்ணல்வண்ணச்
சுருளுடைச்சடையின்கற்றைச்சுற்றெனச்சுடர்வகண்டான். (௧௪௮)

நெய்யுறக்கொளுத்தப்பட்டநெருப்பெனப்பொருப்பினோங்கும்
மெய்யுறக்குருதித்தாரைவிசும்புறவிளங்குகின்ற
அய்யனிக்கங்குன்மாலையரசெனவறிந்துகாலம்
கய்விளக்கெடுத்ததென்னக்கவந்தத்தின்காடுகண்டான் (௧௪௯)

ஆளெலாமழிந்ததேருமானையுமாடன்மாவும்
நாளெலாமெண்ணினாலுந்தொலைவிலாநாதரின்றித்
தாளெலாங்குலையவோடித்திரிவனதாங்கலாற்றும்
கோளிலாமன்னனாட்டிற்குடியெனக்குலைவகண்டான் (௧௫௦)

மிடல்கொளும்பகழிமாரிவானினுமும்மைவீசி
மடல்கொளுமலங்கன்மார்பன்மலைந்திடவுலைந்துமாண்டார்
உடல்களுமுதிரநீருமுடைப்படைக்கலமுமுற்ற
கடல்களுநெடியகானுங்கார்தவழ்மலையுங்கண்டான். (௧௫௧)

சுழித்தெறியூழிக்காலிற்றுருவினன்றொடருந்தோன்றல்
தழிக்கொடுகுருதிவேலைதாவுவான்றனிப்பேரண்டம்
கிழித்ததுகிழித்ததென்னுநாணுருமேறுகேட்டான்
அழித்தொழிகாலத்தார்க்குமார்கலிக்கிரட்டியார்த்தான். (௧௫௨)

அநுமனிலக்ஷ்மணனைச் சந்தித்தல்.

ஆர்த்தபேரமலைகேளாவணுகினனநுமனெல்லார்
வார்த்தையுங்கேட்கலாகுமென்றகமகிழ்ந்துவள்ளல்
பார்ப்பதன்முன்னம்வந்துவணங்கினன்விசயப்பாவை
தூர்த்தனையிளையவீரன்றழுவினனினையசொன்னான். (௧௫௩)

அரிகுலவீரரையயாண்டையரருக்கன்மைந்தன்
பரிவினைச்செய்ததெவ்வாறங்கதன்பெயர்ந்ததெங்கே
விரியிருட்பரவைசேனைவெள்ளத்துவிளைந்ததொன்றும்
தெரிகிலெனுரைத்தியென்றான்சென்னிமேற்கையன்சொன்னான். ()

போயினார்போயவாறுபோயினதன்றிப்போரில்
ஆயினாராயதொன்றுமறிந்திலெனையயாரும்
மேயினார்மேயபோதேதெரிவதுவிளைந்ததென்றான்
தாயினான்வேலையோடு * மயிந்திரப்பரவைதானே. (௧௫௫)

மந்திரமுளதாலையவுணர்வுறுமாலைத்தஃதுன்
சிந்தையினுணர்ந்துசெய்யற்பாற்றெனிற்செய்திதெவ்வர்
தந்திரமிதனைத்தெய்வப்படையினாற்சமைப்பினல்லால்
எந்தைநின்னடியர்யாருமெய்தலர்நின்னையென்றான். (௧௫௬)

---

* அயிந்திரம் - ஐந்திரமென்னும் இலக்கணநூல்.

பாசுபதாஸ்திரப்பிரயோகம்.

அன்னதுபுரிவெனென்னுவாயிரநாமத்தண்ணல்
தன்னையேவணங்கிவாழ்த்திச்சரங்களைத்தெரிந்துதாங்கிப்
பொன்மலைவில்லினான்றன்படைக்கலம்பொருந்தவேந்தி
மின்னெயிற்றரக்கர்தம்மேல்வீசினான்வில்லின்செல்வன். (௧௫௭)

முக்கணான்படையைமூட்டிவிடுதலுமூங்கிற்காட்டில்
புக்கதோரூழித்தீயிற்புறத்தினோருருவும்போகா
தக்கணத்தெரிந்துவீழ்ந்ததரக்கர்தஞ்சேனையாழித்
திக்கெலாமிருளுந்தீர்ந்ததேவருமயக்கந்தீர்ந்தார். (௧௫௮)

மகோதரன் மறைதல்.

தேவர்தம்படையைவிட்டானென்பதுசிந்தைசெய்யா
மாவருமாயைநீங்கமகோதரன்மறையப்போனான்
யாவருமிரிந்தாரெல்லாமினமழைகழியவார்த்துக்
கோவிளங்களிற்றைவந்துகூடினாராடல்கொண்டார். (௧௫௯)

யாவர்க்குந்தீதிலாமைகண்டுகண்டுவகையேறத்
தேவர்க்குந்தேவன்றம்பிதிருமனத்தையந்தீர்ந்தான்
காவற்போர்க்குரக்குச்சேனைகல்லெனக்கலந்துபுல்லப்
பூவர்க்கமிமையோர்தூவப்பொலிந்தனர்தூதர்போனார். (௧௬௦)

தூதர் இராவணனை யடைதல்.

இலங்கையர்கோனையெய்தியெய்தியதுரைத்தார்நீவிர்
விலங்கினிர்போலும்வெள்ளநூற்றையோர்வில்லின்வேழக்
குலங்களினோடுங்கொல்லக்கூடுமோவென்னக்கொன்றை
அலங்கலான்படையினென்றானன்னதேலாகுமென்றான். (௧௬௧)

தோடவிழலங்கலென்சேய்க்குணர்த்துமினென்னச்சொன்னான்
ஓடினார்சாரர்வல்லையுணர்த்தினர்துணுக்கமெய்தா
ஆடவர்திலகன்யாண்டையானிகலநுமனேனோர்
வீடணன்யாங்கணுள்ளானுணர்த்துமின்விரைவினென்றார். (௧௬௨)

இந்திரசித்திற்கு ஒற்றர் இராமாதியர் நிலைகூறல்.

வந்திலனிராமன்வேறோர்மலையுளானுந்தைமாயம்
தந்தனதீர்வான்போனானுண்பனதாழ்ப்பத்தாழா
வெந்தைதீதியன்றதென்னமகோதரன்யாண்டையென்ன
அந்தரத்திடையானென்னவிராவணியழிகிற்றென்றான். (௧௬௩)

வேறு.

இந்திரசித்து இட்டதெய்வத்தினைப் பூசித்தல்.

காலமீதெனக்கருதியவிராவணன்காதல்
ஆலமாமரனொன்றினைவிரைவினினடைந்தான்

மூலவேள்விக்குவேண்டுவகலப்பைகண்முறையால்
கூலநீங்கியவிராக்கதப்பூசுரர்கொணர்ந்தார். (௧௬௪)

அம்பினாற்பெருஞ்சமிதைகளமைத்தனரனலில்
தும்பைமாமலர்தூவினர்காரியெட்சொரிந்தார்
கொம்புபல்லொடுகரியவெள்ளாட்டிருங்குருதி
வெம்புவெந்தசைமுறையினிட்டெண்ணெயால்வேட்டார். (௧௬௫)

வலஞ்சுழித்துவந்தெழுந்தெரிநறுவெறிவயங்கி
நலஞ்சுரந்தனபெருங்குறிமுறைமையினல்கக்
குலஞ்சுரந்தெழுகொடுமையான்முறையினிற்கொண்டே
நிலஞ்சுரந்தெழுவென்றியென்றும்பரினிமிர்ந்தான். (௧௬௬)

இந்திரசித்து ஆகாயமடைந்து மாயையான்மறைந்து சமய நோக்கி நிற்றல்.

விசும்புபோயினன்மாயையின்பெருமையான்மேலைப்
பசும்பொனாட்டவர்நாட்டமுமுள்ளமும்படரா
அசும்புவிண்ணிடையடங்கினன்முனிவருமறியார்
தசும்புநுண்ணெடுங்கோளொடுகாலமுஞ்சார. (௧௬௭)

மகோதரனது மாயப்போர்.

அனையனின்றனனவ்வழிமகோதரனறிந்தோர்
வினையமெண்ணினனிந்திரவேடத்தைமேவித்
துனைவலத்தவைராவதத்தெருத்தின்மேற்றோன்றி
முனைவர்வானரவரொடும்போர்செயமூண்டான். (௧௬௮)

அரக்கர்மானுடர்குரங்கெனுமவையெலாமல்ல
உருக்கள்யாவுளவுயிரினியுலகத்தினுழல்வ
தருக்குபோர்க்குடன்வந்துளவாமெனச்சமைத்தான்
வெருக்கொளப்பெருங்கவிப்படைகுலைந்ததுவிலங்கி. (௧௬௯)

கோடுநான்குடைப்பாணிறக்குன்றமேற்கொண்டான்
ஆடலிந்திரனல்லவர்யாவருமமரர்
சேடர்சிந்தனைமுனிவர்களமர்பொரச்சீறி
ஊடுவந்துற்றதென்கொலோவெனவுலைந்தார். (௧௭௦)

இலக்குமணன் அனுமானை இஃதென்னை செயலெனல்.

அனுமன்வாண்முகநோக்கினனாழியையகற்றித்
தனுவலங்கொண்டதாமரைக்கண்ணவன்றம்பி
முனிவர்வானவர்முனிந்துவந்தெய்தயாமுயன்ற
துனியிதென்கொலோசொல்லுதிவிரைந்தெனச்சொன்னான். (௧௭௧)

இந்திரசித்தன் பிரமாத்திரப் பிரயோகம்.

இன்னகாலையினிலக்குவன்மேனிமேலெய்தான்
முன்னைநான்முகன்படைக்கலமிமைப்பதன்முன்னம்
பொன்னின்மால்வரைக்குரீஇயினமொய்த்ததுபோலப்
பன்னலாந்தரமல்லனசுடர்க்கணைபாய்ந்த. (௧௭௨)

கோடிகோடிநூறாயிரங்கொடுங்கணைக்குழாங்கள்
மூடிமேனியைமுற்றுறச்சுற்றினமூழ்க
ஊடுசெய்வதொன்றுணர்ந்திலனுணர்வுபுக்கொடுங்க
ஆடன்மாகரிசேவகமமைந்தனவசைந்தான். (௧௭௩)

அனுமனிந்திரன்வந்தவனேகொலிதமைந்தான்
இனியென்னென்றுவென்களிற்றினோடெடுத்தெனவெழுந்தான்
தனுமனாயிரகோடிவெங்கடுங்கணைதைக்க
நினைவுஞ்செய்கையுமறந்துபோய்நெடுநிலஞ்சேர்ந்தான். (௧௭௪)

அருக்கன்மாமகனாடகக்குன்றமொன்றலர்ந்த
முருக்கின்கானகமாமெனக்குருதிநீர்முடுகத்
தருக்கின்வெஞ்சரந்தலைத்தலைமயங்கினதைக்க
உருக்குசெம்பெனக்கண்ணினனெடுநிலமுற்றான். (௧௭௫)

அங்கதன்பதினாயிரமயிற்கணையழுந்தச்
சிங்கவேறிடியுண்டெனநெடுநிலஞ்சேர்ந்தான்
சங்கமேறியபெரும்புகழ்ச்சாம்பனுஞ்சாய்ந்தான்
துங்கமார்பையுந்தோளையும்வடிக்கணைதொலைக்க. (௧௭௬)

நீலனாயிரம்வடிக்கணைநிறம்புக்குநெருங்கக்
காலனார்முகங்கண்டனனிடபன்விண்கலந்தான்
ஆலமேயன்னபகழியாற்பனசனுமசைந்தான்
கோலின்மேவியகூற்றினாற்குமுதனுங்குலைந்தான். (௧௭௭)

வேலைதட்டவனாயிரம்பகழியால்வீழ்ந்தான்
வாலிநேர்வலிமயிந்தனுந்துமிந்தனுமடிந்தார்
காலவெந்தொழிற்கவையனும்வானகங்கண்டான்
மாலைவாளியிற்கேசரிமண்ணிடைமறைந்தான். (௧௭௮)

விந்தமன்னதோட்சதவலிசுசேடணன்வினதன்
கெந்தமாதனனிடும்பன்வன்றதிமுகன்கிளர
உந்துவார்கணைகோடிதம்முடலமுற்றொளிப்பத்
தந்தநல்லுணர்வொடுங்கினர்மண்ணுறச்சாய்ந்தார். (௧௭௯)

மற்றைவீரர்கள்யாவரும்வடிக்கணைமழையால்
முற்றும்வீந்தனர்முழங்குபேருதிரத்தின்முந்நீர்

ஏற்றுவான்றிரைக்கடலொடும்பொருதுசென்றேற
ஒற்றைறவான்கணையாயிரங்குரங்கினையுருட்ட. (க௮௦)

தளைத்துவைத்ததுசதுமுகன்பெரும்படைதள்ளி
ஒளிக்கமற்றொருபுகலிடமுணர்கிலருருமின்
வளைத்துவித்தியவாளியான்மண்ணொடுந்திண்ண
முளைப்புடைத்தனவொத்தனவானரமுடிந்த. (க௮க)

குவளைக்கண்ணிணைவானவர்மடந்தையர்கோட்டித்
துவளப்பாரிடைக்கிடந்தனர்குருதிநீர்சுற்றித்
திவளக்கீழொடுமேல்புடைபரந்திடைசெறியப்
பவளக்காடுடைப்பாற்கடலொத்ததப்பரவை. (க௮௨)

விண்ணிற்சென்றதுகவிக்குலப்பெரும்படைவெள்ளம்
கண்ணிற்கண்டனர்வானவர்விருந்தெனக்கலந்தார்
உண்ணிற்கும்பெருங்களிப்பினரளவளாயுகந்தார்
மண்ணிற்செல்லுதிரிக்கணத்தேயெனவலிந்தார். (க௮௩)

பார்படைத்தவன்படைக்கொருபூசனைபடைத்தீர்
* நீர்படக்கடவீரலீர்வரிசிலைநெடியோன்
† பேர்படைத்தவர்க்கடியவர்க்கடியரும்பெறுவார்
வேர்படைத்தவெம்பிறவியாற்றுவக்குணாவீடு. (க௮௪)

நங்கள்காரியமியற்றுவானுலகிடைநடந்தீர்
உங்களாருயிரும்முயிருடல்பிறிதுற்றீர்
செங்கணாயகற்காகவெங்களத்திடைத்தீர்ந்தீர்
எங்கணாயகர்நீர்களென்றிமையவரிசைத்தார். (க௮௫)

இந்திரசித்தன்வெற்றிச்சங்கூதி இராவணனை யடைதல்.

வெங்கண்வானரக்குழுவொடுமிளையவன்விளிந்தான்
இங்குவந்திலனகன்றனனிராமனென்றிகழ்ந்தான்
சங்கமூதினன்றாதையைவல்லையிற்சார்ந்தான்
பொங்குபோரிடைப்புகுந்துளபொருளெலாம்புகன்றான். (க௮௬)

இறந்திலன்கொலவ்விராமனென்றிராவணனிசைத்தான்
துறந்துநீங்கினனல்லனேற்றம்பியைத்தொலைத்துச்
சிறந்தநண்பரைக்கொன்றுதன்சேனையைச்சிதைக்க
மறந்துநிற்குமேமற்றவன்றிறனென்றான்மதலை. (க௮௭)

அன்னதேயெனவரக்கனுமாதரித்தமைந்தான்
சொன்னமைந்தனுந்தன்பெருங்கோயிலைச்சூழ்ந்தான்

---

* நீர்படக்கடவீரலீர் - நீர்சாகக்கடவீரல்லீர்.

† பேர்படைத்தவர்க்கு - இராமனென்னும் பெயர்வாய்வருக்கு.

மன்னனேவலின்மகோதரன்போயினன்வந்தான்
என்னையாளுடைநாயகன்வேறிடத்திருந்தான். (௧௮௮)

இராமனிறந்தாரைக் காண்டலும் புலம்பலும்.

செய்யதாமரைநாண்மலர்க்கைத்தலஞ்சேப்பத்
துய்யதேவர்தம்படைக்கெலாம்வரன்முறைதுரக்கும்
மெய்கொள்பூசனைவிதிமுறையியற்றிமேல்வீரன்
மொய்கொள்போர்க்களத்தெய்துவாமினியெனமுயன்றான். (௧௮௯)

கொள்ளியிற்சுடரனலிதன்பகழிகைக்கொண்டான்
அள்ளிநுங்கலாவாரிருட்பிழம்பினையழித்தான்
வெள்ளிவெங்களப்பரப்பினிற்பொருக்கெனவிழித்தான்
தள்ளிறாமரைச்சேவடிநுடங்குறச்சார்ந்தான். (௧௯௦)

நோக்கினான்பெருந்திசைதொறுமுறைமுறைநோக்கி
ஊக்கினான்றடந்தாமரைத்திருமுகத்துதிரம்
போக்கினானிணப்பங்கயத்தழுவத்துட்புக்கான்
காக்கும்வன்றுணைத்தலைவரைத்தனித்தனிக்கண்டான். (௧௯௧)

சுக்கிரீவனைநோக்கித்தன்றாமரைத்துணைக்கண்
உக்கநீர்த்திரளொழுகிடநெடிதுநின்றுயிர்த்தான்
தக்கதோவிதுநினக்கென்றுதனிமனந்தளர்ந்தான்
பக்கநோக்கினன்மாருதிதன்மையைப்பார்த்தான். (௧௯௨)

கடர்கடந்துபுக்கரக்கரைககருவொடுங்கலக்கி
இடர்கடந்துநானிருக்கநீநல்கியதிதற்கோ
உடர்கடந்தனவோவுன்னையரக்கன்வில்லுதைத்த
அடர்கடந்தபோர்வாளியென்றுகுலித்தழுதான். (௧௯௩)

முன்னைத்தேவர்தம்வரங்களுமுனிவர்தம்மொழியும்
பின்னைச்சானகியுதவியும்பிழைத்தனபிறந்த
புன்மைசெய்தொழிலென்வினைக்கொடுமையாற்புகழோய
என்னைப்போல்பவராருளரொருவரென்றிசைத்தான். (௧௯௪)

புன்றொழிற்புலையரசினைவெஃகியென்பூண்டேன்
கொன்றொருக்கினேனெந்தையைச்சடாயுவைக்குறைத்தேன்
இன்றொருக்கினேனித்தனைவீரரையிருந்தேன்
வன்றொழிற்கொருவரம்புமுண்டாய்வரவற்றோ. (௧௯௫)

தமையனைக்கொன்றுதம்பிக்குவானரத்தலைமை
அமையநல்கினெனடங்கலுமவிப்பதற்கமைந்தேன்
கமைபிடித்துநின்றுங்களையித்துணைகண்டேன்
சுமையுடற்பொறைசுமக்கவந்தனெனெனச்சொன்னான். (௧௯௬)

விடைக்குலங்களினடுவணோர்விடைகிடந்தென்னக்
கடைக்கண்டீயுகவங்கதக்களிற்றினைக்கண்டான்
படைக்கலங்களைச்சுமக்கின்றபாதகனேன்பழிபார்த்
தடைக்கலப்பொருள்காத்தவாறழகிதென்றழுதான். (௧௯௭)

உடரிடைத்தொடர்பகழியினொளிர்கதிர்க்கற்றைச்
சுடருடைப்பெருங்குருதியிற்பாம்பெனச்சுமந்த
மிடருடைப்பணமீமிசைத்தான்பண்டைவெள்ளக்
கடரிடைத்துயில்வானன்னதம்பியைக்கண்டான். (௧௯௮)

பொருமினானகம்பொங்கினானுயிர்முற்றும்புகைந்தான்
குருமணித்திருமேனியுமன்னவாகுலைந்தான்
தருமநின்றுதன்கண்புடைத்தலம்வரச்சாய்ந்தான்
உருமினாலிடியுண்டதோர்மராமரமொத்தான். (௧௯௯)

உயிர்த்திலனொருநாழிகையுணர்ந்திலனொன்றும்
வியர்த்திலனுடல்விழித்திலன்கண்ணிணைவிண்ணோர்
அயிர்த்திலன்கொலென்றஞ்சினரங்கையுந்தாளும்
பெயர்த்திலனுயிர்த்திலன்கருணையாற்பிறந்தான். (௨௦௦)

தாங்குவாரில்லைத்தம்பியைத்தழீஇக்கொண்டதன்னை
வாங்குவாரில்லைவாக்கினாற்றெருட்டுவாரில்லை
பாங்கராயுள்ளோர்யாவரும்பட்டனர்பட்ட
தீங்குவாலிதுதமியனையார்துயர்தீர்ப்பார். (௨௦௧)

கவந்தபந்தமுங்கழுதுந்தங்கணவரைக்காணார்
சிவந்தகண்ணினர்தேடினர்திரிபவர்திரளும்
உவந்தசாதகத்தீட்டமுமோரியினொழுக்கும்
நிவந்தவல்லதுபிறவில்லைக்கடத்திடைநின்ற. (௨௦௨)

வானநாடியர்வயிறலைத்தழுதகண்மழைநீர்
சோனைமாரியிற்சொரிந்தனர்தேவருஞ்சொரிந்தார்
ஏனைநிற்பவுந்திரிபவுமிரங்கினவெவையும்
ஞானநாயகனுருவமேயாகலினடுங்கி. (௨௦௩)

முகையினுண்மலர்க்கிழவற்குமுக்கணான்றனக்கும்
நகையுநீக்கியதிருமுகங்கருணையுநலியத்
தொகையினின்றவர்க்குள்ளதுசொல்லியென்றொடர்ந்த
பகையும்பார்க்கின்றபாவமுங்கலுழ்ந்ததுபரிவால். (௨௦௪)

அண்ணலுஞ்சிறிதுணர்வினோடுயிர்ப்பணுகிக்
கண்விழித்தனன்றம்பியைத்தெரிவுறக்கண்டான்

விண்ணையுற்றனன்மீள்கிலனென்றகம்வெதும்பாப்
புண்ணினுற்றதோரெரியன்னதுயரினன்புலம்பும். (௨௦௫)

வேறு.

எந்தையிறந்தானென்றுமிருந்தேனுலகெல்லாம்
தந்தனனென்றுங்கொள்கைதவிர்ந்தேன்றமியல்லேன்
உய்ந்துமிருந்தாய்நீயெனநின்றேனுரைகாணேன்
வந்தனையாவந்தனையாவினிவாழேன். (௨௦௬)

தாயோநீயேதந்தையுநீயேதவநீயே
சேயோநீயேதம்பியுநீயேதிருநீயே
பேயோநின்றாயென்னையிகழ்ந்தாய்புகழ்பாராய்
நீயாயானோநின்னினுநெஞ்சம்வலியேனோ. (௨௦௭)

ஊறாநின்றபுண்ணுடையாய்பாலுயிர்காணேன்
ஆறாநின்றேனாவிசுமந்தேயழுகின்றேன்
ஏறேயின்னுமுய்யினுமுய்வேனிருகூறாக்
கீறாநெஞ்சம்பெற்றனனன்றோகெடுவேனே. (௨௦௮)

பயிலுங்காலம்பத்தொடுநாலும்படர்கானத்
தயில்கின்றேனுக்காவனநல்கியயிலாதாய்
வெயிலென்றுன்னாய்நின்றுதளர்ந்தேமெலிவெய்தித்
துயில்கின்றாயோவின்றிவ்வுறக்கந்துறவாயோ. (௨௦௯)

அயிராநெஞ்சுமாவியுமொன்றேயெனுமச்சொற்
பயிராவெல்லைபாதகனேற்கும்பரிவுண்டோ
செயிரோவில்லாவுன்னையிழந்துந்திரிகின்றேன்
உயிரோநானோவாரினியுன்னோடுறவையா. (௨௧௦)

வேழ்விக்கேகிவில்லுமிறுத்தோர்விடமம்மா
வாழ்விக்குமென்றெண்ணினென்முன்னேவருவித்தேன்
சூழ்வித்தென்னைச்சுற்றினரோடுஞ்சுடுவித்தேன்
தாழ்வித்தேனோவித்தனைகேடுந்தருவித்தேன். (௨௧௧)

மண்மேல்வைத்தகாதலின்மாதாமுதலோர்க்குப்
புண்மேல்வைத்ததீநிகர்துன்பம்புகுவித்தேன்
பெண்மேல்வைத்தகாதலினிப்பேறுகள்பெற்றேன்
எண்மேல்வைத்தேனென்புகழ்யான்றானெளியேனோ. (௨௧௨)

மாண்டாய்நீயோயானொருபோதுமுயிர்வாழேன்
ஆண்டானல்லனானிலமந்தோபரதன்றான்
பூண்டாரெல்லாம்பொன்றுவர்துன்பம்பொறையாற்றார்
வேண்டாவோநானல்லறமஞ்சிமெலிவுற்றால். (௨௧௩)

அறந்தாய்தந்தைசுற்றமுமற்றுமெனையல்லால்
துறந்தாயென்றுமெய்ம்மறவாதாய்துணைவந்து
பிறந்தாயென்னைப்பின்புதொடர்ந்தாய்பிரிவாற்றாய்
இறந்தாயுன்னைக்கண்டுமிருந்தேனெளியேனோ. (உகச)

சான்றோர்மாதைத்தக்கதரக்கன்சிறைதட்ட
ஆன்றோர்சொல்லுநல்லறமன்னன்வயமானால்
மூன்றாய்நின்றபேருலகொன்றாய்முடியாவேல்
தோன்றாவோவென்வல்வில்லின்வீரத்தொழிலம்மா. (உகரு)

வேலைப்பள்ளக்குண்டகழிக்கும்விராதற்கும்
காலிற்செல்லுங்காகமணிக்குங்கரனுக்கும்
மூலப்பொத்தற்செத்தமரத்தேழ்முதலுக்கும்
வாலிக்குமேயாயினவாறென்வலியம்மா. (உகசு)

இருந்தேனானலிந்திரசித்தேமுதலாய
பெருந்தேரோரைக்கொன்றுபிழைக்கப்பெறுவேனோ
வருந்தேனீயேவெல்லுதியென்னும்வலிகொண்டேன்
பொருந்தேனானினிப்பொய்ப்பிறவிக்கும்பொறையல்லேன். (உகஎ)

மாதாவுந்தஞ்சுற்றமுநாமறையோரும்
ஏதானாரோவென்றுதளர்ந்தேயிறுவாரைத்
தாதாய்காணச்சாலநினைந்தேன்றரையாள்வேம்
போதாயையாபொன்முடியென்னைப்புனைவிப்பான். (உகஅ)

பாசமுமுற்றச்சுற்றியபோதம்பகையாலே
நாசமுமுற்றப்போதுநடந்தேனுடனல்லேன்
நேசமுமற்றார்செய்வனசெய்தேநிலைநின்றேன்
தேசமுமற்றென்கொற்றநலத்தைத்தெரியாதோ. (உககூ)

கொடுத்தேனன்றேவீடணனுக்குக்குலமாள
முடித்தோர்செல்வம்யான்முடியாதேமுடிகின்றேன்
படித்தோனென்றேபொய்ம்மைகுடிக்குப்பழிபெற்றே
யொடித்தேனன்றேயென்புகழ்நானேயுணர்வற்றேன். (உஉ0)

என்றென்றேங்கும்விம்முமுயிர்க்குமிடையஃகிச்
சென்றொன்றொன்றோடிந்தியமெல்லாஞ்சிறையெய்தப்
பொன்றும்மென்னுந்தம்பியையார்வத்தொடுபுல்லி
ஒன்றுந்தேரான்றன்னைமறந்தான்றுயில்வுற்றான். (உஉக)

இராம னழுதலைக்கண்ட தேவர்புலம்பல்.

கண்டார்விண்ணோர்கண்கள்புடைத்தார்கலுழ்கின்றார்
கொண்டார்துன்பமென்முடிவென்னாக்குலைகின்றார்

தண்டாமரைப்பூநெருப்புற்றதன்மையுற்றாடரியாதாள்
பெண்டானுற்றபெரும்பீழையுலகுக்கெல்லாம்பெரிதன்றோ. (௪)

மங்கையழலும்வானாட்டுமயில்களழுதார்மழவிடையோன்
பங்கினுறையுங்குயிலழுதாள்பதுமமலர்மேன்மாதழுதாள்
கங்கையழுதாணாமடந்தையழுதாள்கமலத்தடங்கண்ணன்
தங்கையழுதாளிரங்காதவரக்கிமாருந்தளர்ந்தழுதார். (௫)

பொன்றாழ்குடையாடனையீன்றபூமாமடந்தைபுரிந்தழுதாள்
குன்றாமறையுந்தருமமுமெய்குழைந்துகுழைந்துவிழுந்தழுத
பின்றாதுடற்றும்பெரும்பாவமழுதபின்னென்பிறர்செய்கை
நின்றார்நின்றபடியழுதார்நினைப்புமுயிர்ப்புநீத்திட்டாள். (௬)

நினைப்புமுயிர்ப்புநீத்தாளைநீராற்றெளித்துநெடும்பொழுதின்
இனத்தினரக்கர்மடவார்களெடுத்தாருயிர்வந்தேங்கினாள்
கனத்தினிறத்தான்றனைப்பெயர்த்துங்கண்டாள்கயலைக்கமலத்தால்
சினத்தினலைப்பாளெனக்கண்ணைச்சிதையக்கையான்மோதினாள். (௭)

வடித்தாண்முலைமேல்வயிறலைத்தாளழுதாடொழுதாளனல்வீழ்ந்த,
கொடித்தாளென்னமெய்சுருண்டாள் கொதித்தாள்பதைத்தாள்குலைவுற்
றாள், துடித்தாண்மின்போலுயிர்கரப்பச்சோர்ந்தாள்சுழன்றாடுள்ளினாள்,
குடித்தாடுயரையுயிரோடுங்குழைத்தாளுழைத்தாள்குயிலன்னாள். (௮)

விழுந்தாள்புரண்டாளுடன்முழுதும்வியர்த்தாளுயிர்த்தாள்வெதும்பினாள்
எழுந்தாளிருந்தாண்மலர்க்கரத்தைநெரித்தாள்சிரித்தாளேங்கினாள்
கொழுந்தாவென்றாளயோத்தியர்தங்கோவேயென்றாளவ்வுலகும்
தொழுந்தாளரசேயோவென்றாள்சேர்ந்தாளரற்றத்தொடங்கினாள். (௯)

வேறு

உறமேவியகாதலுனக்குடையார்
புறமேதமிலாரொடுபூண்முலையான்'
மறமேபுரிவார்வசமாயினையோ
அறமேகொடியாயிதுவோவருடான். (௧௦)

முதியாருணர்வேதமொழிந்தவலால்
கதியேதுமிலார்துயர்காணுதியோ
மதியேன்மதியேனுனைவாய்மையினால்
விதியேகொடியாய்விளையாடுதியோ. (௧௧)

கொடியேனிவைகாணகிலேனுயிர்கோள்
முடியாநமனேமுறையோமுறையோ
விடியாவிருள்வாயெனைவீசினையோ
அடியேனுயிரேயருணாயகனே. (௧௨)

'பூணிலாய்

எண்ணுமயலோடெமிருந்ததுநின்
புண்ணியமேனிபொருந்திடவோ
மண்ணேருயிரேயிமையோர்வலியே
கண்ணேயமிழ்தேகருணாகரனே. (௧௩)

மேவிக்கனன்முன்மிதிலைத்தலையென்
பாவிக்கைபிடித்ததுபண்ணவநின்
ஆவிக்கொருகோள்வரவோவலர்வாழ்
தேவிக்கமிழ்தேமறையின்றெளிவே. (௧௪)

உய்யாளுயர்கோசலைதன்னுயிரோ
அய்யாவிளையோருயிர்வாழ்கிலரால்
மெய்யாவினையெண்ணிவிடுத்தகொடுங்
கய்கேசிகருத்திதுவோகளிறே. (௧௫)

தகைவாணகநீதவிர்வாயெனவும்
வகையாதுதொடர்ந்தொருமான்முதலாப்
புகையாடியகாடுபுகுந்துடனே
பகையாடியவாபரிவேதுமிலேன். (௧௬)

இன்றீகலையேலிறவிவ்விடைமான்
அன்றீயெனவும்பரிவோடடியேன்
நின்றீவதுநின்னைநெடுஞ்செருவில்
கொன்றீவதொர்தீமைகுறித்தலன்றே. (௧௭)

மேதாவிளையோய்விதியார்விளைவால்
போதாநெறியெம்மொடுபோதுறுநாள்
மூதானவன்முன்னர்முடிந்திடெனும்
மாதாவுரையின்வழிநின்றனையோ. (௧௮)

பூவுந்தளிருந்தொகுபொங்கணைமேல்
கோவுந்துயிலத்தருவாய்கொடியார்
ஏவின்றலைவந்தவிருங்கணையால்
மேவுங்குளிர்மெல்லணைமேவினையோ. (௧௯)

நெய்யார்பெருவேள்விநிரப்பிநெடுஞ்
செய்யார்புனனாடுதிருத்துதியால்
மெய்யாகியவாசகமும்விதியும்
பொய்யானவென்மேனிபொருந்துதலால். (௨௦)

இராமன்மீது விழவாளெழுந்த சீதைக்குத் திரிசடை யுண்மைகூறுதல்.

மழுவாள்வரினும்பிளவாமனனுண்
டழுவேனினியின்றிடராறிடயான்

விழுவேனவன்மேனியின்மீதினென்று
எழுவாளை விலக்கியயம்பினளால். (௨௧)

வேறு.

மாடுறவளைந்துநின்றவளையெயிற்றரக்கிமாரைப்
பாடுறவற்றநோக்கிப்பாவையைத்தழுவிப்பற்றிக்
கூடினளென்னநின்றுசெவியிடைக்குறுகிச்சொன்னாள்
தேடியதவமேயென்னத்திரிசடைமறுக்கந்தீர்ப்பாள். (௨௨)

மாயமான்விடுத்தவாறுஞ்சனகனைவகுத்தவாறும்
போயமாநாகபாசம்பிணித்ததுபோனவாறும்
நீயமாநினைவாய்மாளநினைதியோநெறியிலாரால்
ஆயமாமாயமொன்றுமறிந்திலையன்னமன்னாய். (௨௩)

கண்டனகனவும்பெற்றநிமித்தமுநன்னதுகற்பும்
தண்டவாளரக்கர்பாவச்செய்கையுந்தருமந்தாங்கும்
அண்டர்நாயகன்றன்வீரத்தன்மையுமயர்க்கலாமோ
புண்டரீகற்குமுண்டோவிறுதியிப்புலையர்க்கல்லால். (௨௪)

ஆழியானுக்கைதன்னினம்பொன்றுமறுக்கிலாமை
ஏழைநீகாண்டியன்றேயிளையவன்வதனமின்னும்
ஊழிநாளிரவியென்னவொளிர்கின்றவுயிருக்கின்னல்
வாழியாற்கில்லைவாளாமயங்கலைவேள்விவந்தாய். (௨௫)

வீய்ந்துளன்வீரனென்னினுலகமோரேழுமேழும்
தீய்ந்துறுமிரவிபின்னுந்திரியுமேதெய்வமென்னும்
ஈய்ந்துளவெண்கணான்முன்னுயிரெலாம்வெருவுமன்னை
ஆய்ந்தவையுள்ளபோதேயவருளரறமுமுண்டால். (௨௬)

மாருதிக்கில்லையன்றேமங்கைநின்வரத்தினாலே
ஆருயிர்நீங்கலானாற்கற்புக்குமழிவுண்டாமே
சீரியதன்றிதொன்றுந்திசைமுகன்படையின்செய்கை
பேருமிப்பொழுதேதேவரெண்ணமும்பிழைப்பதுண்டோ. (௨௭)

தேவரைக்கண்டேன்பைம்பொற்செங்கரஞ்சிரத்திற்சேர்த்தி
மூவரைக்கண்டாரன்னவிருவரைமுறையினோக்கி
ஆவலிப்பெய்துகின்றாரயர்த்திலரஞ்சலன்னை
கூவலிற்புக்குவேலைகோட்படுமென்றுகொள்ளேல். (௨௮)

திரிசடைமொழிகேட்ட சீதை சிறிதாறுதலடைதல்.

மங்கலநீங்கினளையாருயிர்வாங்கினளை
நங்கையைக்கடவுண்மாணந்தாங்குறுநவையிற்றன்றால்

இங்கிலையளவையாகவிடர்க்கடல்கடத்தியென்றாள்
செங்கையளாயதையல்சிறிதுயிர்தரிப்பதானாள். (௨௯)

அன்னைநீயுரைத்ததொன்றுமழிந்திலதாதலானே
உன்னையேதெய்வமாக்கொண்டித்தனைகாலமுய்ந்தேன்
இன்னமிவ்விரவுமுற்றுமிருக்கின்றேனிறத்தலென்பால்
முன்னமேமுடிந்ததன்றேயென்றனண்முளரிநீத்தாள். (௩௦)

நாணெலாந்துறந்தேனில்வினன்மையினல்லார்க்கேய்ந்த
பூணெலாந்துறந்தேனென்றன்பொருசிலைமேகந்தன்னைக்
காணெலாமென்னுமாசைகடுக்கவென்றாவிகாத்தேன்
ஏணிலாவுடலினீங்கவெளிதெனக்கெனவுஞ்சொன்னாள். (௩௧)

தையலையிராமன்மேனிதைத்தவேற்றடங்கணாளைக்
கய்களிற்பற்றிக்கொண்டார்விமானத்தைக்கடாவுகின்றார்
மெய்யுயிருலகத்தாகவிதியையும்வலித்துவிண்மேல்
பொய்யுடல்கொண்டுசெல்லுநமனுடைத்தூதர்போன்றார். (௩௨)

௨௨-வது, பிராட்டிகளங்காண்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨௬௫௩.

௨௩-வது, மருத்துமலைப்படலம்.

விபீடணன்போர்க்களமடைதல்.

போயினனடையலிப்பாற்புரிகெனப்புலவர்கோமான்
ஏயினகருமநோக்கியெய்தியவிலங்கைவேந்தன்
மேயினவுணவுகொண்டுமீண்டவையுறையுள்விட்ட
ஆயினவாகத்தான்வந்தமர்ப்பெருங்களத்தினான். (௧)

நோக்கினான்கண்டான்பண்டிவ்வுலகங்கள்படைக்கநோற்றான்
வாக்கினான்மாண்டாரென்னவானரவீரர்முற்றும்
தாக்கினாரெல்லாம்பட்டதன்மையைவிடத்தைத்தானே
தேக்கினானென்னநின்றுதியங்கினானுணர்வுதீர்ந்தான். (௨)

விளைந்தவாறுணர்ந்திலாதான்வீங்கினான்வெதும்பினான்மெய்
உளைந்துளைந்துயிர்த்தானாவியுண்டிலையென்னவோய்ந்தான்
வளைந்தபேய்க்கணமுநாயுநரிகளுமிரியவந்தான்
இளங்கிளையோடுஞ்சாய்ந்தவிராமனையிடையிற்கண்டான். (௩)

என்பென்பதியாக்கையென்பதுயிரென்பதிலைகளெல்லாம்
பின்பென்பவல்லவேனுந்தம்முடைநிலையிற்பேரா
முன்பெண்பவுளவென்றாலுமுழுவதுந்தெரிந்தவாற்றால்
அன்பென்பதொன்றின்றன்மையமரருமறிந்ததன்றால். (௪)

இராயனிறந்தவ னல்லனென விபீடணனறிதல்.

ஆயினுமிவருக்கில்லையழிவெனுமதனாலாவி
போயினதில்லைவாயாற்புலம்பலன்பொருமிப்பொங்கித்
தீயினுமெரியுநெஞ்சின்வெருவலாற்றெரியநோக்கி
நாயகன்மேனிக்கில்லைவடுவெனநடுக்கந்தீர்ந்தான். (௫)

அந்தணன்படையால்வந்தமதென்பதுமாற்றலான்ற
இந்திரசித்தேயெய்தானென்பதுமிளவற்காக
நொந்தனனிராமனென்னுநுண்மையுநொய்துநோக்கிச்
சிந்தையினெண்ணியெண்ணித்தீர்வதோருபாயந்தேர்வான். (௬)

உள்ளுறுதுன்பமூன்றவுற்றனவுறக்கமன்றே
தெள்ளிதினுணர்ந்தபின்னைச்சிந்தனைதெரிவதன்றே
வள்ளலோதம்பிமாயவாழ்கிலன்மாயவாழ்க்கைக்
கள்ளனோவென்றானன்றுமழையெனக்கலுழுங்கண்ணான். (௭)

பாசம்போயிற்றாற்போலப்பதுமத்தோன்படையுமின்றே
நாசம்போயெய்துநம்பிதம்பிக்குநடுக்கமில்லை
வீசும்போர்க்களத்துவீழ்ந்தசேனையுமீளும்வெய்ய
நீசன்போர்வெல்வதுண்டோவென்றுளநிலையினின்றான். (௮)

உணர்வதன்முன்னமின்னேயுற்றுழியுதவற்கொத்த
துணைவர்கடுஞ்சலில்லாருளரெனிற்றுருவித்தோன்றக்
கொணர்குவென்விரைவினென்னாக்கொள்ளியொன்றங்கைகொண்டான்
புணரியினுதிரவெள்ளக்கொள்ளத்துவிரைவிற்போனான். (௯)

வாய்மடித்திரண்டுகையுமுறுக்கித்தன்வயிரச்செங்கண்
தீயுகக்கனகக்குன்றிற்றிரண்டதோண்மழையைத்தீண்ட
ஆயிரகோடியானைப்பெரும்பிணத்தமளிமேலான்
காய்சினத்தநுமனென்னுங்கடல்கடந்தானைக்கண்டான். (௧௦)

விபீடணன் அநுமனுடலம்புகளைக் களைந்து மேகசலத்தான் முகங்கழுவிக் களையாற்றுதல்.

கண்டுதன்கண்களூடுமழையெனக்கலுழிவார
உண்டுயிரென்பதுன்னியுடற்கணையொன்றொன்றாக
விண்டுதிர்புண்ணினின்றுமெல்லெனவிரைவின்வாங்கிக்
கொண்டனீர்கொணர்ந்துகோலமுகத்தினைக்குளிரச்செய்தான். (௧௧)

அநுமன் களைநீங்குதல்.

உயிர்ப்புமுன்னுதித்தபின்னருரோமங்கள்சிலிர்ப்பவூறி
வியர்ப்புளதாகக்கண்கள்விழித்தனமேனிமெல்லப்
பெயர்த்துவாய்புனல்வந்தூறவிக்கலும்பிறந்ததாக
அயர்த்திலனிராமனாமம்வாழ்த்தினனமரரார்த்தார். (௧௨)

அழுகையோடுவகையுற்றவீடணனார்வங்கூரத்
தழுவினனவனைத்தானுமன்பொடுதழுவித்தக்கோய்
வழுவிலனன்றேவள்ளலென்றனன்வலியனென்றான்
தொழுதனனுலகமூன்றுந்தலையின்மேற்கொள்ளுந்தூயான். (௧௩)

அன்புதன்றம்பிமேலாத்தறிவினைமயக்கவையன்
துன்பொடுந்துயிலனானுணர்வினித்தொடர்ந்தபின்னை
என்புகுந்தெய்துமென்பதறிகிலமென்றலோடும்
தன்பெருந்தன்மைக்கொத்தசாம்பனைத்தலையனென்றான். (௧௪)

அறிந்திலெனவனையாண்டுங்கண்டிலெனாவியாக்கை
பிறிந்திலனுளனென்றொன்றுந்தெரிந்திலென்பெயர்ந்தேனென்று
செறிந்ததார்விருதர்வேந்தனுரைசெயக்காலின்செம்மல்
இறந்திறமவனுக்கின்றுறுதுமேகியென்றான். (௧௫)

அன்னவன்றன்னைக்கண்டாலானையேயரக்கர்க்கெல்லாம்
மன்னவவெம்மைமீட்டுவாழ்விக்குமுறுதிவல்லான்
என்னனுமுய்ந்தேமையவேகுதும்விரைவினென்னாச்
சின்னெறியிருளிற்சென்றார்சாம்பனைவிதியிற்சேர்ந்தார். (௧௬)

எரிகின்றவுப்பினாலுமேவுண்டநோவினாலும்
அரிகின்றதுன்பத்தாலுமாருயிர்ப்படங்கியொன்றும்
தெரிகின்றதில்லாமம்மார்ச்சிந்தையனெனினுஞ்செல்வர்
வருகின்றசுவட்டையோர்ந்தான்செவிகளால்வயிரத்தோளான். (௧௭)

அரக்கனோவென்னையாருமண்ணலோவநுமன்றானோ
இரக்கமுற்றருளவந்ததேவரோமுனிவரேயோ
வரக்கடவார்களல்லர்மாற்றலர்மலைந்துபோனார்
புரக்கவுள்ளாரோவென்னாக்கருதினன்பொருமதீர்ந்தான். (௧௮)

வந்தயனின்றுகுன்றின்வார்ந்துவீழருவிமானச்
சிந்தியகண்ணினீரரேங்குவார்தம்மைத்தேற்றி
அந்தமில்குணத்தீர்யாவரானுகினிரென்றானைய
உய்ந்தனமுய்ந்தேமென்றவீடணனுரையைக்கேட்டான். (௧௯)

மற்றயனின்றான்யாவனென்னமாருதியும்வாழிக்
கொற்றவவநுமனின்றேனென்றொழுதனனென்றுகூற

இற்றிலமையவெல்லேமெழுந்தனமெழுந்தேமென்னா
உற்றபேருவகையாலேயோங்கினானூற்றமுற்றான். (௨௰)
அரிஞ்சன்வெம்படையென்றாலும்வேதத்தின்வேதமன்ன
விரிந்தமன்றன்னையொன்றுமாற்றிலதென்னுமாற்றல்
தெரிந்தனென்முன்னேயன்னான்செய்ததென்றெரித்தியென்றான்
பெருந்தகைதன்பவெள்ளத்துயிலுளான்பெருமவென்றான். (௨௧)
அன்னவன்றன்மைகண்டாலாற்றுமேயாக்கைவேறே
இன்னுயிரொன்றேமூலத்திருவருமொருவரேயால்
இன்னதுகிடப்பத்தாழாவிங்கினியிமைப்பின்முன்னர்க்
கொன்னியல்வயிரத்தோளாய்மருந்துபோய்க்கொணர்தியென்றான். (௨௨)
எழுபதுவெள்ளத்தோருமிராமனுமிளையகோவும்
முழுவதிவ்வுலகமூன்றுநல்லறமூர்த்திதானும்
வழுவலின்மறையுமுன்னால்வாழ்ந்தனவாகுமைந்த
பொழுதிறைதாழாதென்சொனெறிதரக்கடிதுபோதி. (௨௩)

வேறு.

சாம்பன் மருந்துள்ள இடங்கூறுதல்.

பின்புளதிக்கடலென்னப்பெயர்ந்ததற்பின்யோசனைகள்பேசநின்ற
ஒன்பதினாயிரங்கடந்தாலிமயமெனுங்குலவரையையுறுதியுற்றால்
தன்பெருமையோரிரண்டாயிரமுளதியோசனைபின்றவிரப்போனால் [ம்ப
முன்புளயோசனையெல்லாமுற்றினை * பொற்கூடஞ்சென்றுறுதிமொய்
இம்மலைக்குமொன்பதினாயிரமுளதால்யோசனையினிடதமென்னும்
செம்மலைக்குமுளவாயவத்தனையோசனைகடந்தாற்சென்றுகாண்டி
எம்மலைக்கும்பெரிதாய † வடமலையையம்மலையினகலமெண்ணின்
மொய்ம்மலைந்ததிரடோளாய்முப்பத்தீராயிரயோசனையின்முற்றும். ()
மேருவினைக்கடந்தப்பாலொன்பதினாயிரமுளயோசனையைவிட்டால்
நேரணுகிநீலகிரிதானிரண்டாயிரமுளயோசனையினிற்கும்
மாருதிமற்றதற்கப்பால்யோசனைநாலாயிரத்துமருந்துவைகும்
கார்வரையைக்காணுதிமற்றதுகாணவித்துயர்க்குக்கரையுங்காண்டி. ()

மாண்டாரையுய்விக்குமருந்தொன்றுமுடல்வேறுவகிர்களாகக், கீண்டாலும்பொருந்துவிப்பதொருமருந்தும் ‡ படைக்கலங்கள்கிளைப்பதொன்றும், ¶ மீண்டேயும் ○ தம்முருவேயருளுவதோர்மெய்ம்மருந்துமுளநீவீர, ஆண்டேகிக்கொணர்தியெனவடையாளத்தொடுமுரைத்தானறிவின்மிக்கான். (௨௭)

---

* பொற்கூடம் - எமகூடம். † வடமலை-மகமேரு.
‡ படைக்கலங்கள்கிளைப்பதொன்றும் - உடலிற்பதிந்த ஆயுதங்களை வெளிப்படுத்துவதொருமருந்தும்.
¶ மீண்டேயும் - முற்றுமழிந்தபின்னர்.
○ தம்முருவே - பழயவுருவினையே.

இன்னமருந்தொருநான்கும் * பயோததியைக்கலக்கியஞான்றெழுந்ததே
உன்னியமைத்தனர்மறைக்குமெட்டாதபரஞ்சுடரிவ்வுலகமூன்றும் [வர்
தன்னிருதாளுள்ளடக்கிப் பொலிபோழ்தின் யான்முரசஞ்சாற்றும்வேலை
அன்னதுகண்டியாவுதலுந்தொன்முனிவரவற்றியலெற்கறிவித்தாரால். ()

இம்மருந்துகாத்துறைவவெண்ணிலவாற்றெய்வங்களிரங்காயார்க்கும், நெய்ம்மருங்குபடாகில்லாநெடுநேமிப்படையுமவற்றுடனேநிற்கும், பொய்ம்மருங்குமில்லாதாய்புரிகின்றகாரியத்தின்பொதுமைநோக்கிக், கய்ம்மருங்குதொடர்ந்துன்னைக்காவாயென்றப்புறம்போய்க்காக்குமென்றான். ()

அநுமன் மருந்திற்கேகப் பேருருக்கோடல்.

ஈங்கிதுவேபணியாகினிறந்தோரும்பிறந்தோரேயெங்கோற்கியாதும், தீங்கிடையூறெய்தாமற்றெருட்டுதிர்போயெனச் சொல்லியவரைத்தீர்ந்தான், ஓங்கினன்வானெடுமுகட்டையுற்றனன்பொற்றோளிரண்டுந்திசையோடொக்க, வீங்கினவாகாயத்தைவிழுங்கினனேயெனவளர்ந்தான் வேதம்போல்வான். (௩௦)

கோளோடுதாரகைகள்கோத்தமைத்தமணியாரக்கோவைபோன்ற
தோளோடுதோளகலமாயிரயோசனையளவுசொல்லவொண்ணு
தாளோடுதாள்பெயர்க்கவிடமிலதாயினவிலங்கைதடக்கைவீச
நீளோடுதிசைபோதாவிசைத்தெழுவானுருவத்தினிலையீதம்மா. (௩௧)

வால்விசைத்துக்கைந்நிமிர்த்துவாயினையுஞ்சிறிதகலம்வகுத்தமானக், கானிலத்தினிடை யூன்றியுரநெருக்கிக்கழுத்தினையுஞ் சுருக்கிக்காட்டித், தோன்மயிர்க்குந்தளஞ்சிலிர்ப்ப விசைத்தெழுவானவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த, வேலையிற்புக்கழுந்தியதோர்மரக்கலம்போற் சுரித்துலையவிசையத்தோளான். (௩௨)

அநுமன்மேலெழுந்து போதல்.

கிழிந்தனமாமழைக்குலங்கள்கீண்டது நீண்டகல்வேலைகிழக்குமேற்கும், பொழிந்தனமீன்றொடர்ந்தெழுந்தபொருப்பினமுந்தருக்குலமும்பிறவும்பொங்கி, அழிந்தனவானவர்மானமாகாயத்திடையனபேரசனியென்ன விழுந்தனநீர்க்கடலழுந்தவேறினமேற்கீறினபோய்த்திசைகளெல்லாம். ()

பாய்ந்தனனங்கப்பொழுதேபருவரைகளனைப்பலவும்வடபாகத்துச்
சாய்ந்தனபேருடற்பிறந்தசண்டமாருதம்வீசத்தாதைசால
ஓய்ந்தனனென்றுரைசெய்யவிசும்பூடுபடர்கின்றானுருவேகத்தால்
காய்ந்தனவேலைகண்மேகங்கரிந்தனவெந்தெரிந்தபெருங்கானமெல்லாம்.

கடன்முன்னேநிமிர்ந்தோடக்கால்பின்னேதொடர்ந்தோடக் கடிதிற்செல்வான், உடன்முன்னேசெலவுள்ளங்கடைக்குழைவால்செலச்செலவானுருவைநோக்கி, அடன்முன்னேதொடங்கியநாளாழ்கடல்சூழிலங்கையெனுமரக்கர்வைகும், திடர்முந்நீர்க்கிடையறிந்தான்முரிந்ததுநந்துயரென்றார்தேவரெல்லாம். (௩௫)

---

* பயோததி - பாற்கடல்.

மேகத்தின்பதங்கடந்துவெங்கதிருந்தண்கதிரும்விரைவிற்செல்லும்
மாகத்தினெறிக்கப்பால்வானமீன்குலம்வழங்கும்வரம்புநீங்கிப்
போகத்தினெறிகடந்தார்புகலிடங்கள்பிற்படப்போய்ப்பூவின்வந்த
ஏகத்தந்தணனிருக்கையினிச்சேய்த்தன்றாமென்னவெழுந்துசென்றான்.()

வானநாட்டுறைகின்றார்வயக்கலுழன்வல்விசையான்மாயன்வைகும்
தானநாட்டுறுகின்றானென்றுரைத்தார்சிலர்சிலர்கள்விரிஞ்சன்றான்றன்
ஏனைநாட்டெழுகின்றானென்றுரைத்தார்சிலர்சிலர்களீசனல்லார்
போனநாட்டிடைபோகவல்லரோவிவன்முக்கட்புனிதனென்றார். (௩௭)

வேண்டுருவங்கொண்டெழுந்துவிளையாடுகின்றான்மெய்வேதநான்கும்
தீண்டுருவனல்லாததிருமாலேயிவனென்றார்தெரியநோக்கிக் [ன்
காண்டுமெனவிமைப்பதன்முன்கட்புலத்தைக்கடந்தகலுமின்னுங்காண்மி
மீண்டுவருந்தரமல்லன்வீட்டுலகம்புகுமென்றார்மென்மேலுள்ளார். (௩௮)

உருவென்றார்சிலர்சிலர்களொளியென்றார்சிலர்சிலர்களொளிருமேனி
அருவென்றார்சிலர்சிலர்களண்டத்துக்கப்புறநின்றுலகமாக்கும்
கருவென்றார்சிலர்சிலர்கள்காற்றென்றார்சிலர்சிலர்கள்கடலைத்தாவிச்
செருவென்றானிலையொன்றுந்தெரியகிலாருலகனைத்துந்தெரியுஞ்செல்வர்.

வாசநாண்மலரோன்றனுலகளவுமிரிந்தனமேல்வானமான
காசமாயினவெல்லாங்கரந்தனதுருவிடையேகனகத்தோள்கள்
வீசவான்முகடுரிஞ்சவிசைத்தெழுவானுடற்பிறந்தமுழங்கம்விம்ம
ஆசைகாவலர்தலைகள்பொதிரெறிந்தார்விதிரெறிந்ததண்டகோளம். (௪௦)

வேறு

* தொடுத்தநாண்மாலைவானோர்முனிவரேமுதலதொல்லோர்
அடுத்தநாண்மறைகளோதியாய்ந்தநாளவுணர்வேந்தன்
கொடுத்தநாளளந்துகொண்டகுறளனார்குறியபாதம்
எடுத்தநாளொத்த † தண்ணலெழுந்தநாளுலகுக்கெல்லாம். (௪௧)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருந்தெரிவைமாரும்
மூவுலகிடையுளோருமூவகையாற்றொடர்ந்துமொய்த்தார்
தூவினமணியுஞ்சாந்துஞ்சுண்ணமுமலருந்தொக்குப்
பூவுடையமரர்தெய்வத்தருவெனவிசும்பிற்போனான். (௪௨)

இமையமால்வரையையுற்றானங்குளவிமைப்பிலோரும்
சமையுடைமுனிவர்மற்றுமறனெறிகலந்தோரெல்லாம்
அமைகவின்கருமமென்றுவாழ்த்தினரதனுக்கப்பால்
உமையொருபாகன்வைகுங்கயிலைகண்டுவகையுற்றான். (௪௩)

---

* தொடுத்தநாண்மாலை - கட்டிய அன்றலர்ந்தமாலை. † அண்ணலெழுந்தநாள் - அனுமான் மருந்துகொணர எழுந்தகாலத்து.

சிவன் அநுமனைச்சுட்டிக் காட்டி உமைக்குரைத்தல்.

வடகுண திசையிற்றோன்றுமழுவலானுண்டுவைகும்
தடவரையதனைநோக்கித்தாமரைச்செங்கைகூப்பிப்
படர்குவான்றன்னையன்னபரமனும்பரிவிற்பார்த்துத்
தடமுலையுமைக்குக்காட்டிவாயுவின்றனயனென்றான். (௪௪)

என்னவனெழுந்ததன்மையென் * றுலகீன்றாள்கேட்ப
மன்னவனிராமன்றூதன்மருந்தின்மேல்வந்தான்வஞ்சர்
தென்னகரிலங்கைத்தீமைதீர்ப்பதுதிண்ணஞ்சேர்ந்து
நன்னுதனுமும்வெம்போர்காணுதிநாளையென்றான். (௪௫)

நாமயோசனைகள்கொண்டதாயிரநடுவுநீங்கி
ஏமகூடத்தினும்பரெய்தினின்றிறுதியில்லாக்
காமமேநுகருஞ்செல்வக்கடவுளரீட்டங்கண்டான்
நேமியின்விசையிற்செல்வானிடதத்தினெற்றியுற்றான். (௪௬)

எண்ணுக்குமளவிலாதவறிவினோரிருந்துநோக்கும்
கண்ணுக்குங்கருணைத்தெய்வமனத்திற்குங்கடியனானான்
மண்ணுக்குந்திசைகள்வைத்தவரம்பிற்குமலரோன்வைகும்
விண்ணுக்குமளவையாயமேருவின்மீதுசென்றான். (௪௭)

யாவதுநிலைமைத்தன்மையின்னதென்றிமையாநாட்டத்
தேவருந்தெரிக்கிலாதவடமலைக்கும்பர்சென்றான்
நாவலம்பெருந்தீவென்னுநளிர்கடல்வளாகவைப்பில்
காவன்மூன்றுலகமோதுங் † கடவுண்மாமரத்தைக்கண்டான். (௪௮)

அன்னமாமலையினும்பருலகெலாமமைத்தவண்ணல்
நன்னகரதனைநோக்கியதனடுநாப்பணுமைப்
பொன்மலர்ப்பீடந்தன்மேனான்முகன்பொலியத்தோன்றும்
தன்மையுங்கண்டுகையால்வணங்கினான்றருமம்போல்வான். (௪௯)

ஆயதன்வடகீழ்பாகத்தாயிரமருக்கரான்ற
காய்கதிர்ப்பரப்பியைந்துகதிர்முகக்கமலங்காட்டித்
தூமபேருலகமூன்றுந் ‡ தூவியமலரிற்சூழ்ந்த
சேயிழைபாகத்தெண்டோளொருவனைவணக்கஞ்செய்தான். (௫௦)

தருவனமொன்றுவானோர்தலைத்தலைமயங்கித்தாழப்
பொருவருமுனிவர்வேதம்புகழ்ந்துரையோதைபொங்க
மருவிரிதுளவமோலிமாநிலக்கிழத்தியோடும்
திருவொடுமிருந்த $ மூலத்தேவையும்வணக்கஞ்செய்தான். (௫௧)

* உலகீன்றாள் - உலகமாதா. † கடவுள்மா மரத்தைக் கண்டான் - தெய்வத்தன்மைவாய்ந்த சம்புவிருக்கத்தினைத்தரிசித்தான். சம்பு-நாவல்.
‡ தூவிய - அருச்சித்த. $ மூலத்தேவையும்-உலககாரணனான திருமாலையும்.

சந்திரனனையகொற்றத்தனிக்குடைதலையிற்றாகச்
சுந்தரமகளிரங்கைச்சாமரைதென்றலாவ
அந்தரவானநாடரடிதொழமுரசமார்ப்ப
இந்திரனிருந்ததன்மைகண்டுவந்திறைஞ்சிப்போனான். (௫௨)

பூவலர்மரத்தைப்போர்ப்பப்பொற்பகம்விரிந்துபொங்கும்
தேவர்தமிருக்கையானமேருவின்சிகரச்சேர்ப்பின்
மூவகையுலகுஞ்சூழ்ந்தமுரட்டிசைமுறையிற்றாங்குக்
காவலரெண்மர்நின்றதன்மையுந்தெரியக்கண்டான். (௫௩)

அத்தடங்கிரியைநீங்கியத்தலையடைந்தவள்ளல்
உத்தரகுருவையுற்றானொளியவன்கதிர்களூன்றிச்
* செற்றியவிருளின்றாக்கிவிளங்கியசெயலைநோக்கி
வித்தகன்விடிந்ததன்றாமுடிந்ததென்வேகமென்றான். (௫௪)

ஆதியானுணராமுன்னமருமருந்துதவியல்லிற்
பாதியாலனையதுன்பமகற்றுவான்பாவித்தேற்குச்
சோதியானுதயஞ்செய்தானூற்றதோர்துணிதலாற்றேன்
ஏதியான்செய்வதென்னாவிடருற்றானிணையிலாதான். (௫௫)

காற்றிசைசுருங்கச்செல்லுங்கடுமையான்கதிரின்செல்வன்
மேற்றிசையெழுவானல்லன்விடிந்ததுமன்றுமேரு
மாற்றினன்வடபாற்றோன்றுமென்பதுமறைகள்வல்லோர்
சாற்றினாரென்னத்துன்பந்தணிந்தனன்றவத்தின்மிக்கான். (௫௬)

இருவரேதோன்றியென்றுமீறிலாவாயுமெய்தி
ஒருவரோடொருவருள்ளமுயிரொன்றேயாகிப்
பொருவருமின்பந்துய்த்துப்புண்ணியம்புரிந்தோர்வைகும்
திருவுறைகமலமன்னநாட்டையுந்தெரியக்கண்டான். (௫௭)

வன்னிநாட்டியபொன்மௌலிவானவன்மலரின்மேலான்
கன்னிநாட்டிருவைச்சேருங்கண்ணனுமானுங்காணி
சென்னிநாட்டெரியல்வீரன்றியாகவிநோதன்றெய்வப்
பொன்னிநாட்டுவமைவைப்பைப்புலன்கொளநோக்கிப்போனான். (௫௮)

விரியவன்மேருவென்னும்வெற்பினின்மீதுசெல்லும்
பெரியவனயனார்செல்வம்பெற்றவன்பிறப்பிற்போந்தான்
அரியவனுலகமெல்லாம்மளந்தநாள்வளர்ந்துதோன்றும்
கரியவனென்னநின்றநீலமால்வரையைக்கண்டான். (௫௯)

அற்குன்றவலங்குசோதியம்மலையகலப்போனான்
பொற்குன்றமனையதோளானோக்கினான் † புலவன்சொன்ன

* செற்றிய - நெருங்கிய. † புலவன் - சாம்பவன்.

நற்குன்றமதனைக்கண்டானுணர்ந்தனனுகமுற்ற
எற்குன்றவெறியுந்தெய்வமருந்தடையாளமென்ன. (௬௦)

அனுமன் சஞ்சீவி மலையைக்காண்டல்.

பாய்ந்தனன்பாய்தலோடும்மம்மலைபாதலத்துச்
சாய்ந்ததுகாக்குந்தெய்வஞ்சலித்தனகடுத்துவந்து
காய்ந்தனைநீதான்யாவன்கருத்தென்கொல்கழறுகென்ன
ஆய்ந்தவனுற்றதன்மையவற்றினுக்கறியச்சொன்னான். (௬௧)

அனுமனைத் திருவாழிகண்டு செல்லுதல்.

கேட்டனவுய்யவேண்டிற்றியற்றிப்பின்கெடாமலெம்பால்
காட்டெனவுணர்த்திவாழ்த்திக்கரந்தனகமலக்கண்ணன்
வாட்டலைநேமிதோன்றிமறைந்ததுமண்ணினின்றும்
* தோட்டனனநுமன்மற்றைக்குன்றினைவயிரத்தோளால். (௬௨)

வேறு.

அனுமன்சஞ்சீவிமலையைக் கையிலேந்திவருதல்.

இங்குநின்றின்னனமருந்தென்றெண்ணினால்
சிங்குமாற்காலமென்றுணர்ந்தசிந்தையான்
அங்கதுவேரோடுமங்கைதாங்கினான்
பொங்குநல்விசும்பிடைசகடிதுபோகுவான். (௬௩)

சஞ்சீவிமலையினகலநீளம்.

ஆயிரயோசனையகலமீதுயர்ந்
தாயிரயோசனையாழ்ந்ததம்மலை
ஏயெனுமாத்திரத்தொருகையேந்தினான்
தாயினனுலகெலாந்தவழ்ந்தசீர்த்தியான். (௬௪)

சாம்பவிபீடணர்களால் இராமன்விழித்தலும் பிரலாபமும்.

அத்தலையன்னவனவனையவாந்துணை
இத்தலையிருவரும்விரைவினெய்தினார்
கைத்தலத்தாலடிவருடுங்காலையின்
உத்தமற்குற்றதையுணர்த்துவாமரோ. (௬௫)

† வண்டனமடந்தையர்மனத்தைவேரொடும்
கண்டனகொளவருங்கருணைத்தாமெனக்
கொண்டனகொடிப்பனவரங்கள்கோளிலாப்
புண்டரீகத்துணை ‡ தருமம்பூத்தன. (௬௬)

---

* தோட்டனன் - எடுத்தான் இதுநீட்டுமிடத்துநீட்டல்.

† வண்டன - வண்டையொப்ப.

‡ தருமம்பூத்தன - அறம்போலமலர்ந்தன.

நோக்கினன்கரடிகட்கரசுநோன்புகழ்
ஆக்கியகிருதனுமழுதகண்ணினர்
தூக்கியதலையினர்தொழுதகையினர்
ஏக்கமுற்றருகிருந்திரங்குவார்களை. (௬௭)

ஏவியகாரியமியற்றியெய்தினை
நோவிலைகொல்லெனநோக்கிவீடணற்
றூவரும்பெரும்புகழ்சாம்பன்றன்னையும்
ஆவிவந்தனைகொலென்றருளினாரோ. (௬௮)

ஐயன்மீர்நமக்குற்றவழிவிதாதலின்
செய்வகைபிறிதிலையுயிரிற்றீர்ந்தவர்
உய்கிலரினிச்செயற்குரியதுண்டெனின்
பொய்யிலிர்புகலுதிர்புலமையுள்ளத்தீர். (௬௯)

சீதையென்றொருத்தியாலுள்ளந்தேம்பிய
பேதையன்சிறுமையாலுற்றபெற்றிமை
யாதெனவுணர்த்துகேனுலகொடூர்வுறக்
காதைவன்பழியொடுந்திருத்திக்காட்டினேன். (௭௦)

மாயையின்மானெனவெம்பிவாய்மையால்
தூயனவுறுதிகள்சொன்னசொற்கொளேன்
போயினென்பெண்ணுரைமறுதுபோகலால்
ஆயதிப்பழியுடையானியன்பினீர். (௭௧)

கண்டெனனிராவணன்றன்னைக்கண்களால்
மண்டமர்புரிந்தனென்வலியினாலுயிர்
கொண்டிலெனுறவெலாங்கொடுத்துமாளநான்
பண்டுடைத்தீவினைபயந்தபண்பினால். (௭௨)

தேவர்தம்படைக்கலந்தொடுத்துத்தீயவன்
சாவதுகாண்டுமென்றிளவல்சாற்றலும்
ஆவதையுணர்ந்திலனழிவதென்வயின்
மேவுதலுறுவதோர்விதியின்வெம்மையால். (௭௩)

நின்றிலெனுடனெறிபடைக்குநீதியால்
ஒன்றியபூசனையமைக்கவுன்னினேன்
பொன்றினர்நமரெலாமிளவல்போயினான்
வென்றிலனரக்கனைவினையின்மேன்மையால். (௭௪)

ஈண்டிவணிருந்திவையியம்புமேழைமை
வேண்டுவதன்றினியமரின்வீடிய

ஆண்டகையன்பரையமரர்நாட்டிடைக்
காண்டலேனலம்பிறகண்டதில்லையால். (௭௫)

எம்பியைத்துணைவரையிழந்தப்பாலினி
வெம்புபோரரக்கரைமுருக்கிவேரறுத்
தம்பினினிராவணனாவிபாழ்படுத்
தும்பருக்குதவிமேலுறுவதென்னரோ. (௭௬)

இளையவனிறந்தபின்னெவருமென்னெனக்
களவறுசீர்த்தியென்னறிவென்னாண்மையென்
கிளையுறுசுற்றமென்னரசென்கேண்மையென்
விளைவுதானென்மறைவிதியென்மெய்ம்மையென். (௭௭)

இரக்கமும்பாழ்படவெம்பியீறுகண்
டரக்கரைவென்றுநின்றாண்மையாள்வெனேல்
மரக்கண்வன்கள்வனென்வஞ்சனேனினிக்
கரக்குமதல்லதோர்கடனுண்டாகுமோ. (௭௮)

தாதையையிழந்தபின்சடாயுவிற்றபின்
காதலின்றுணைவருமுடியக்காத்துழல்
கோதறுதம்பியும்விளியக்கோளிலன்
சீதையையுகந்துளனென்பர்சீரியோர். (௭௯)

வென்றனனரக்கரைவேரும்வீந்தறக்
கொன்றனனயோத்தியைக்குறுகினேன்குணத்
தின்றுணைத்தம்பியையின்றியானுளேன்
அன்றரசாளுமாசாலநன்றரோ. (௮0)

படியினதாதலின்யாதும்பார்க்கிலன்
முடிகுவெனுடனெனமுடுகிக்கூறலும்
அடியிணைவணங்கியசாம்பனாழியாய்
நொடிகுவதுளதெனநுவல்வதாயினான். (௮௧)

உன்னைநீயுணர்கிலையடியனேனுனை
முன்னரேயறிகுவேன்மொழிதநீதிது
என்னெனினிமையவரெண்ணக்கீனமாம்
பின்னரேதெரிகுதிதெரிவில்பெற்றியாய். (௮௨)

அம்புயத்தவன்படையாதறேறினேன்
உம்பியையுலப்பருமுருவையூன்றிட
வெம்புவெங்களத்திடைவிழுத்தவென்றியால்
எம்பெருந்தலைவவிதெண்ணமுண்மையால். (௮௩)

அன்னவன்படைக்கலமமரர் தானவர்
தன்னையும்விடினுயிர்குடிக்கும் * தற்பர
உன்னையொன்றிழைக்கிலதொழிந்துநீங்கிய
இன்னமுமுவமையொன்றெண்ணவேண்டுமோ. (௮௪)

பெருந்திறலநுமனீண்டுணர்வுபெற்றுளான்
அருந்துயர்முடிக்குமளவினுற்றலான்
மருந்திரைப்பொழுதினிற்கொணரும்வாய்மொழி
பொருந்தினன்வடதிசைகடிதுபோயினான். (௮௫)

பனிவரைகடந்தனன்பருப்பதங்களின்
தனியரசதன்புறந்தவிர்ந்துசார்ந்துளான்
இனியொருகணத்தின்வந்தெய்துமீண்டுறு
துனிவருதுன்பநீதுடைத்திதொல்லையோய். (௮௬)

யானலாமலங்கையாயுலகையீன்றுளான்
தானலாற்சிவனலானேமிதாங்கிய
கோனலால்யாவருமுணருங † கோளிலா
வேனிலான்மேனியாய் ‡ மருந்தைமெய்யுற. (௮௭)

ஆர்கலிகடைந்தநாளமிழ்தின்வந்தன
கார்நிறத்தண்ணறன்னேமிகாப்பன
மேருவினுத்தரகுருவின்மேலுள
யாருமற்றுணர்கிலா $ வரணமெய்தின. (௮௮)

தோன்றியநாண்முதல்யாருந்தொட்டில
ஆன்றபேரண்ணலேயதனினுற்றல்கேள்
மூன்றெனவொன்றியவுலகமுன்னைநாள்
ஈன்றவனிறப்பினுமாவியீயுமால். (௮௯)

சல்லியமகற்றுவதொன்றுசந்துகள்
புல்லுறப்பொருத்துவதொன்றுபோயின
நல்லுயிர்நல்குவதொன்றுநன்னிறம்
தொல்லையதாக்குவதொன்றுதொல்லையோய். (௯௦)

வருமதுதிண்ணநீவருந்தன்மாருதி
தருநெறிதருமமேகாட்டத்தாழ்க்கிலன்
அருமையதன்றெனவடிவணங்கினான்
இருமையுந்துடைப்பவனேம்பலெய்தினான். (௯௧)

---

* தற்பர - அந்தமுதன்மையினை யுடையாய்.
† கோளிலா - கொள்கையில்லாதன.
‡ மருந்துமெய்யுற - மருந்துகள் உண்மையாக. மருந்தை என்றது ஐயீற்றுடைக் குற்றிய லுகரம்.
$ அரணம் - காவல்.

பொன்மலைமீதுபோய்ப்போகபூமியின்
நன்மருந்துதவுமென் றுரைத்தநல்லுரைக்
கன்மயமில்லையென் றயிர்ப்புநீங்கினேன்
என்னலும்வடதிசையெழுந்ததங்கொலி. (௧௨)

கடல்கிளர்ந்தெழுந்துமேற்படரக்கார்வரை
இடையிடைபறிந்துவிண்ணேரவிற்றிடை
தடையிலதுடற்றுறுசண்டமாருதம்
வடதிசைதோன்றியமயக்கம்வந்ததால். (௧௩)

மீன்குலங்குலைந்துகவெயிலின்மண்டிலம்
தான்குலைந்துயர்மதிதழுவத்தன்னுழை
மான்குலம்வெருக்கொளமயங்கிமண்டிவான்
தேன்குலங்கலங்கியநறவிற்சென்றவால். (௧௪)

வேர்த்துணர்தூரொடுவிசும்பைமீச்செலப்
போர்த்தனமலையொடுமொராறுமுன்புபோல்
தூர்த்தனவேலையைக்காலின்றோன்றலும்
ஆர்த்தனனனையவரங்கையாற்றுவான். (௧௫)

மழைகளுங்கடல்களுமற்றுமுற்றுமண்
உழையவும்விசும்பவுமொலித்தற்கொத்துள
குழைஇயினகுமுறினகொள்கைகொண்டதால்
உழுவையின்சினத்தவனார்த்தவோசையே. (௧௬)

எறிசுடர்ப்பெருங்கடல்கடையவேற்றநாள்
செறிசுடர்மந்தரந்தருதிசென்றென
வெறிதுகொலெனக்கொடுவிசும்பின்மீச்செலும்
* உறுவலிக்கலுழனேயொத்துத்தோன்றினன். (௧௭)

பூதலத்தரவொடுமலைந்துபோனநாள்
ஓதியவென்றியனுடற்றுமுற்றத்தன்
ஏதமிலங்கையங்கிரிகொடெய்திய
† தாதையுமொத்தனனுவமைதாழ்க்கிலான். (௧௮)

தோன்றினனென்னுமச்சொல்லின்முன்னம்வந்
தூன்றினனிலத்தடிகடவுளோங்கருன்
வான்றனிநின்றதுவஞ்சரூர்வர
என்றிலதாகலினனுமனெய்தினன் (௧௯)

வந்தனன்மருந்தினைமருத்துவானவன்
சிந்தையிற்பெருமகிழ்சிறப்பச்சேர்ந்துறீஇ

---

* உறுவலி-வன்மைபொருந்திய.

† தாதை - வாயுதேவன்.

அந்தரத்தருக்கன்மாமகனொடாயவர்
வந்திரைத்தார்த்தெழும்வகைசெய்தானரோ. (௧௦௦)

இலக்குமணன்முதலியோர் உயிர்பெற்றெழுதல்.

காற்றுவந்தசைத்தலுங்கடவுளுட்டவர்
போற்றினர்விருந்துவந்திருந்தபுண்ணியர்
ஏற்றமும்பெருவலியுமழகொடெய்தினார்
கூற்றினைவென்றுதம்முருவுங்கூடினார். (௧௦௧)

அரக்கர்தம்யாக்கைகளழிவிலாழியில்
கரக்கமற்றொழிந்தனவொழியக்கண்டன
* மரக்கலமுதலவுமுய்ந்துவாழ்ந்தன
குரக்கினமுய்ந்ததுகூறல்வேண்டுமோ. (௧௦௨)

கழன்றனநெடுங்கணைகழன்றபுண்கடுத்
தழன்றனகுளிர்ந்தனவங்கஞ்செங்கண்கள்
சுழன்றனவுலகெலாந்தொழுவதொங்கலின்
குழன்றெழுங்குஞ்சியானுணர்வுங்கூடினான். (௧௦௩)

யாவருமெழுந்தனரார்த்தவேழ்கடற்
றுவரும்பேரொலிசெவியிற்சார்தலும்
தேவர்கள்வாழ்த்தொலிகேட்டசெங்கணன்
ஏவநீங்கினனெனவிளவலோங்கினான். (௧௦௪)

இராமன் இலக்குமணனைக்கட்டித்தழுவி மகிழ்வுறல்.

ஓங்கியதம்பியையுயிர்வந்துள்ளுற
வீங்கியதோள்களாற்றழுவிவெந்துயர்
நீங்கினனிராமனுமுலகினின்றில
தீங்குளதேவருமறுக்கஞ்சிந்தினார். (௧௦௫)

அரம்பையராடினரமிழ்தவேழிசை
நரம்பியல்கின்னரமுதலநன்மையே
நிரம்பினவுலகெலாமுவகைநெய்விழாப்
பரம்பினமுனிவரர்வேதம்பாடினார். (௧௦௬)

பிரமாத்திரம் இராமனைவணங்கித் தன்னிடஞ்சேறல்.

உந்தினபின்கொலையொழிவிலுண்மையும்
தந்தனைநீயதுநினக்குச்சான்றெனச்
† சுந்தரவில்லியைத்தொழுதுசூழவந்
தந்தணன்படையுநின்றயர்ந்துபோயதால். (௧௦௭)

---

* மரக்கலமுதலவும்-கப்பன்முதலியனவும்.
† சுந்தரவில்லியை-அழகியவிற்படையினையுடைய இராமனை.

வேதநின்றார்த்தனவேதவேதியர்
போதநின்றார்த்தனபுகழுமார்த்தன
ஓதநின்றார்த்தனவோதமுள்ளுறச்
சீதநின்றார்த்தனதேவர்சிந்தனை. (௧௦௮)

வேறு.

ஆயகாலையினமரரார்த்தெழத்
தாயினன்பனைத்தழுவினான்றனி
நாயகன்பெருந்துயரநாமறத்
தூயகாதனீர்துளங்குகண்ணினான். (௧௦௯)

எழுதுகுங்குமத்திருவினேந்துகோ
டுழுதமார்பினானுருகியுள்ளுறத்
தழுவிநிற்றலுந்தாழ்ந்துதாளுறத்
தொழுதமாருதிக்கினையசொல்லினான். (௧௧௦)

இராமன் அனுமானைப் புகழ்தல்.

முன்னிற்றோன்றினோர்முறையினீங்கலா
என்னிற்றோன்றியதுயரினீறுசேர்
மன்னிற்றோன்றினேமுன்னமாண்டுளோம்
* நின்னிற்றோன்றினேநெறியிற்றோன்றினாய். (௧௧௧)

அழியுங்காற்றருமுதவியையனே
மொழியுங்காற்றருமுயிரின்முற்றுமே
பழியுங்காத்தரும்பகையுங்காத்தெமை
வழியுங்காத்தனைமறையுங்காத்தனை. (௧௧௨)

தாழ்விலங்கிறைப்பொழுதுதக்கதே
வாழியெம்பிமேலன்புமாட்டவான்
எழும்வீயுமென்பகர்வ † தெல்லைநாள்
ஊழிகாணுநீயுதவினாயரோ. (௧௧௩)

இன்றுவீகலாதெவருமெம்மொடு
நின்றுவாழுநாணெடிதுநல்கினாய்
ஒன்றுமின்னனாயுறுகிலாதுநீ
என்றும்வாழ்தியாலினிதெனேவலால். (௧௧௪)

மற்றையோர்களுமநுமன் ‡ வண்மையால்
பெற்றவாயுளார்பிறந்தகாதலார்

---

* நின்னிற்றோன்றினேம்-நின்னிடத்துபிறந்தேம்.

† எல்லைநாள்ஊழிகாணுநீ-உலகமுடிவுகாலத்தழியாதிருந்து பிரளய தரிசனஞ் செய்யவேண்டியநீ.

‡ வண்மையால்-வள்ளற்றன்மையால்.

சுற்றுமேயினார்தொழுதுவாழ்த்தினார்.
உற்றவாறெலாமுணரக்கூறினான். (௧௧௫)

சாம்பன்அனுமனை நீ சஞ்சீவிமலையைமுன்னிருந்த இடத்திலேயே கொண்டு வைத்தியெனல்.

* உய்த்தமாமருந்துதவவொன்னலார்
பொய்த்தசிந்தையாரிறுதல்பொய்க்குமால்
மொய்த்தகுன்றையம்மூலவூழின்வாய்
வய்த்துமீடியால்வரம்பிலாற்றலாய். (௧௧௬)

சஞ்சீவிமலையை அனுமன்இருந்த இடத்திலிருந்தச் செல்லுதல்.

என்றுசாம்பவனியம்பவீரரோ
நன்றுசாலவென்றோன்றுநாழிகை
சென்றுமீள்வனென்றுணர்ந்துதெய்வமாக்
குன்றுதாங்கியக்குரிசில்போயினான். (௧௧௭)

௨௩ - வது, மருத்துமலைப்படலம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௨௭௭௦.

---

௨௪ - வது, களியாட்டுப்படலம்.

இன்னதித்தலையதாகவிராவணனெழுந்துபொங்கித்
தன்னையுங்கடந்துநீண்டவுவகையன்சமைந்தகீதம்
கின்னரமுதல்வர்பாடமுகத்திடைக்கிடந்தகெண்டைக்
கன்னிநன்மயிலனாரைநெடுங்களியாட்டங்கண்டான். (௧)

அரம்பையர்விஞ்சைமாதரரக்கியரவுணர்மாதர்
† குரும்பையங்கொங்கைநாகர்கோதையரியக்கர்கோதில்
கரும்பினுமினியசொல்லார்சித்தர்தங்கன்னிமார்கள்
வரம்பறுசும்மையோர்கண்மயிற்குலமருளவந்தார். (௨)

மேனகைவிசயவாட்கட்டிலோத்தமையரம்பைமெல்லென்
தேனகுமழலையின்சொலுருப்பசிமுதலதெய்வ
வானகமகளிர்வந்தார்சில்லரிச்சதங்கைமாழ்கி
ஆனகமுரசஞ்சங்கமுருட்டொடுமிரட்டவாடி. (௩)

---

* உய்த்தமாமருந்துஉதவ - நீகொண்டுவந்த இச்சஞ்சீவியானதுயிர் கொடுக்க.

† குரும்பை - தெங்கிளநீர்.

தோடுண்டசுருளுந்தூங்குங்குழைகளுஞ்சுருளிற்றோன்றும்
ஏடுண்டபசும்பொற்பூவுந்திலதமுமிலவச்செவ்வாய்
மூடுண்டமுறுவன்முத்துமுள்ளுண்டமுளரிச்செங்கட்
காடுண்டுபுகுந்ததென்னமுனிந்ததுகறைவெண்டிங்கள். (௪)

முளைக்கொழுங்கதிரின்கற்றைமுதுவல்வெண்ணிலவுமூரி
ஒளிப்பிழம்பொழுகும்பூணினுமிழிளவெயிலுமொண்பொன்
விளக்கையும்விளக்குமேனிமிளிர்கதிர்ப்பரப்பும்வீசி
வளைத்தபேரிருளுங்கண்டோரறிவெனமருளுமாதோ. (௫)

நற்பெருங்கல்விச்செல்வநவையறுநெறியைநண்ணி
முற்பயமுணர்ந்ததூயோர்மொழியொடும்பழகிமுற்றிப்
* பிற்பயனுணர்தறேற்றுப்பேதைபோல்வஞ்சன்செய்த
கற்பனையென்னவோடிக்கலந்ததுகள்ளின்வேகம். (௬)

பலபடமுறுவல்வந்துபயந்தனபனித்தமெய்வேர்
இலவிதழ்துடித்தமுல்லையெயிறுவெண்ணிலவையீன்ற
கொலைபயினயனவேலின்கொழுங்கடைசிவந்தகொற்றச்
சிலைநிகர்புருவநெற்றிக்குனித்தனவிளர்த்தசெவ்வாய். (௭)

கூந்தலம்பாரக்கற்றைக்கொந்தளக்கோலக்கொண்டல்
ஏந்தகலல்குற்றேரையிகந்துபோயிறங்கயாணர்ப்
பூந்துகிலோடும்பூசன்மேகலைசிலம்புபூண்ட
மாந்தளிரெய்தநொய்தின்மயங்கினர்மழலைச்சொல்லார். (௮)

கோத்தமேகலையினோடுந்துகின்மணிக்குறங்கைக்கூடக்
காத்தனகூந்தற்கற்றையற்றவத்தன்மைகண்டு
வேத்தவை † கீழுளோருங்கீழ்மையேவிளைத்தார்மேலோர்
சீர்த்தவர்செய்யத்தக்ககருமமேசெய்தாரென்ன. (௯)

‡ பாணியிற்றள்ளிக்காலமாத்திரைபடாதுபட்ட
நாணினமுறையிற்செல்லாதொருவழிநடையிற்செல்லும்
ஆணியினழிந்தபாடனறவெனவநங்கவேடன்
தூணியினடத்தவம்பிற்கொடுந்தொழிலுறந்தகண்ணார். (௧௦)

வங்கியம்வகுத்தகானமாறுகோண்மழலைமாறாச்
சங்கையில்பெரும்பாணுற்றநிறத்துறைநிரம்பித்தள்ளச்
சிங்கலினமிழ்தினோடுமளியளிதேறலன்ன
வெங்குரலெடுத்தபாடல்விளித்தனர்மயக்கம்வீங்க. (௧௧)

ஏனையபிறவுங்கண்டார்க்கிந்திரசாலமென்னத்
தானவையுருவிற்றோன்றும்பாவனைத்தகைமைசான்றோர்

---

* பிற்பயன் - பின்னரதன்பொருள்.

† கீழுள்ளோரும் - ஈனர்களும். ‡ பாணி - தாளம்.

மானமர்நோக்கினாரைமைந்தரைக்காட்டிவாயால்
ஆனையைவிளம்பித்தேரையவிநயத்தியற்றியுற்றார். (௧௨)

அழுகுவார்நகுவார்பாடியாடுவாராயினாரைத்
தொழுகுவார்துயில்வார்தள்ளித்தூங்குவார்துவர்வாயிற்றேன்
ஒழுகலாரொல்கியொல்கியொருவர்மேலொருவர்புக்கு
முழுகுவார்மூரிவாட்கண்முகிழ்த்திடமூரிபோவார். (௧௩)

உயிர்ப்புறத்துற்றதன்மை * யுணர்த்தினாருள்ளத்துள்ள
தயிர்ப்பினிலற்றதன்றேயதுகளியாட்டமாகச்
செயிர்ப்பறுசிந்தைத்தெய்வத்திருமறைமுனிவர்க்கேயும்
மயிர்ப்புறந்தோறும்வந்துபொடித்ததுகாமவாரி. (௧௪)

மாப்பிறழ்நோக்கினார்தம்மணிநெடுங்குவளைவாட்கண்
சேப்புறவரத்தச்செவ்வாய்ச்செங்கிடைவெண்மைசேரக்
காப்புறுபடைக்கைக்கள்வகிருதர்க்கோரிறுதிகாட்டிப்
பூப்பிறழ்ந்துருவம்வேறாய்ப்பொலிந்ததோர்தன்மைபோன்ற. (௧௫)

கயல்வருகாலன்கைவேல்காமவேள்கணையென்றாலும்
இயல்வருகிற்கிலாதநெடுங்கணாரிணைமென்கொங்கை
துயல்வருகனகநாணுங்காஞ்சியுந்துகிலும்வாங்கிப்
புயல்வருகூந்தற்பாரக்கற்றையிற்புனையலுற்றார். (௧௬)

முத்தன்மைமொழியலாகாமுகிழிளமுறுவனல்லார்
இத்தன்மையெய்தனோக்கியரசுவீற்றிருந்தவெல்லை
அத்தன்மெய்யரியின்சேனையார்கலியார்த்தவோதை
மத்தன்மெய்மயங்கவந்துசெவிதொறுமடுத்தமாதோ. (௧௭)

ஆடலுங்களியின்வந்தவமலையுமமிழ்தினான்ற
பாடலுமுழவின்றெய்வப்பாணியும்பவளவாயார்
ஊடலுங்கடைக்கண்ணோக்குமழலைவெவ்வுரையுமெல்லாம்
வாடன்மென்மலரேயொத்தவார்ப்பொலிவருதலோடும். (௧௮)

தறிபொருகளிநல்யானைசேவகந்தள்ளியோங்கத்
துறுசுவற்புரவிதூங்கத்துணுக்குறவரக்கருட்கச்
செறிகழலிருவர்தெய்வச்சிலையொலிபிறந்ததன்றே
எறிகடல்கடைந்தமேனாளெழுந்தபேரோதையென்ன. (௧௯)

முத்தவாணகையின்மூரன்முகத்தியர்முழுக்கண்வேலால்
குத்துவார்கூட்டமெல்லாம்வானரக்குழுவிற்றோன்ற
மத்துவாழ்கடலினுள்ளமறுகுறவதனமென்னும்
பத்துவாழ்மதிக்குமந்நாட்பகலொத்ததிரவுபண்பால். (௨௦)

* உணர்த்தினார் - அபிநயத்தால் விளக்கினார்.

ஈதிடையாகவந்தாலரங்கன்மீதேறினார்போய்
ஊதினார்வேய்கள்வண்டினுருவினாருற்றவெல்லாம்
தீதிலார்பகைஞரென்னத்திக்கென்றமனத்தன்றெய்வப்
போதுகுபந்தர்நின்றுமந்திரத்திருக்கைபுக்கான். (௨௧)

௨௪ - வது, களியாட்டுப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨௭௯௧.

---

௨௫ - வது, மாயாசீதைப்படலம்.

மைந்தனுமற்றுளோருமகோதரன்முதலோராய
தந்திரத்தலைமையோருமுதியருந்தழுவத்தக்க
பந்தியரெவரும்வந்துமருங்குறப்படர்ந்தார்பட்ட
அந்தரமுழுதுந்தானேயனையவர்க்கறியச்சொன்னான். (௧)

நங்கிளையுலர்ந்ததெல்லாமுய்ந்திடநணுகுமன்றே
வெங்கொடுந்தீமைதன்னால்வேலையிலிட்டிலேமேல்
இங்குளவெல்லாமாடற்கினிவருமிடையூறில்லைப்
பங்கயத்தண்ணன்மீளாப்படைபழுதுற்றபண்பால். (௨)

இலங்கையினின்றுமேருபிற்படவிமைப்பிற்பாய்ந்து
வலங்கிளர்மருந்துநின்றமலையொடுங்கொணரவல்லான்
அலங்கலந்தடத்தோளண்ணலநுமனேயாதல்வேண்டும்
கலங்கலிலுலகுக்கெல்லாங் * காரணங்கண்டவாற்றால். (௩)

நீரினைக்கடக்கவாங்கியிலங்கையாநின்றகுன்றைப்
பாரினிற்கிழியவீசினாருளர்பிழைக்கற்பாலாற்
போரினிற்பொருவதெங்கேபோயினவநுமன்பொன்மா
மேருவைக்கொணர்ந்திவ்வூர்மேலிடுமெனின்விலக்கலாமோ. (௪)

முறைகெடவேண்டின்முன்புநினைந்ததேமுடிப்பன்முன்பின்
குறைவிலாக்குணங்கட்காங்கோர்கோதிலர்வேதங்கூறும்
இறைவர்கண்மூவரென்பதெண்ணிலாரெண்ணமேதான்
அறைகழலநுமனோடுநால்வரேமுதல்வரம்மா. (௫)

இறந்தவரிறந்துதீரவினியொருபிறவிவந்து
பிறந்தனமாகினுள்ளேமுய்ந்தனம்பிழைக்கும்பெற்றி

---

* காரணங்கண்டவாற்றால் - அருள்செய்த தன்மையால்.

மறந்தனமெனினுமின்னஞ்சனகியைமரபினீந்தல்
வறந்தருசிந்தையோரையடைக்கலம்புகுதுமைய. (௬)

மறிகடல்குடித்துவானைமண்ணொடுமெறிக்கவல்ல
எறிபடையரக்கரெல்லாமிறந்தனரிலங்கையூரும்
சிறுவனுநீயுமல்லாலாருளரொருவர்தீர்ந்தார்
வெறிதுநம்வென்றியென்றான்மாலிமேல்விளைவதோர்வான். (௭)

வாலியைவாளியொன்றால்வானிடைவைத்துவாரி
வேலையைவென்றுகும்பகருணனைவீட்டினானை
ஆலியின்மொக்குளன்னவரக்கரோவமரின்வெல்வார்
சூலியைப்பொருப்பினோடுந்துளக்கியவிசயத்தோளாய். (௮)

என்றுமாலியவான்கூறப்பிறையெயிற்றெழிலிநாப்பண்
மின்றெறிந்தென்னநக்குவெருவரவுரப்பிப்பேழ்வாய்
ஒன்றினொன்றசனியென்னவுருத்துநீயுரைத்தமாற்றம்
நன்றுநன்றென்றுசீறியுரைத்தனனலத்தையோரான். (௯)

கட்டுரையதனைக்கேளாக்கண்ணெரிகதுவநோக்கிப்
பட்டனரரக்கரென்னிற்படைக்கலம்படைத்தவெல்லாம்
கெட்டனவெனினும்வாழ்க்கைகெடாதினிக்கிளியனாளை
விட்டிடவெண்ணியோயான்பிடித்ததுவேட்கைவீய. (௧௦)

மைந்தரென்மற்றையோரெனெஞ்சினிர்வாழ்க்கைவேட்டிர்
உய்ந்தனிர்போவிர்நாளையூழிவெந்தீயினோங்கிச்
சிந்தியமனத்தரோடக்குரங்கினைத்தீப்பெனென்றான்
வெந்திறலரக்கர்வேந்தன்மகனிவைவிளம்பலுற்றான். (௧௧)

உளதுநானுணர்த்தற்பாலதுணர்ந்தனைகோடலுண்டேல்
தளமலர்க்கிழவன்றந்தபடைக்கலந்தழலிற்சாற்றி
அளவிலதமையவிட்டதிராமனையடையாவென்றால்
இளவலதனையமேனித்தீண்டின்றிமீண்டதம்மா. (௧௨)

மானுடனல்லன்றொல்லைவானவனல்லன்மற்று
மேனிவர்முனிவனல்லன்வீடணன்மெய்யிற்சொன்ன
ஏனவனெண்ணிற்றீர்ந்தாரெண்ணுறுமொருவனென்றே
தேனகுதெரியன்மன்னுசேகரத்தெரிந்ததன்றே. (௧௩)

இந்திரசித்து நிகும்பலையாகத்துக்குச் செல்வனெனல்.

அனையதுபிறவுமிற்கவன்னதுபகர்தலாண்மை
வினையெனினன்றுநின்றுவீழ்ந்ததுவீழ்கவீர
இனையனீமூண்டியான்போய்நிகும்பலைவிரைவினெய்தித்
துனியறுவேள்விவல்லைத்தொடங்கினேன்முடியுந்துன்பம். (௧௪)

அன்னதுநலத்ததேயாலமைதியென்றரக்கன்சொன்னான்
நன்மகனும்பிகடநண்ணலார்கண்டுநண்ணி
முன்னியவேள்விமுற்றாவகைசெருமுயல்வரென்று
என்னவரெய்தாவண்ணமியற்றலாமுறுதியென்றான். (௧௫)

சானகியுருவமாகச்சமைத்தவடன்மைகண்ட
வானுயரநுமன்முன்னேவாளினாற்கொன்றுமாற்றி
யானெடுஞ்சேனையோடுமெயோத்திமேலெழுந்தேனென்னப்
போனபின்புரிவதொன்றுமிலாதவர்துயரம்பூண்பர். (௧௬)

இத்தலைச்சீதைமாண்டாள்பயனிவணில்லையென்பார்
அத்தலைத்தம்பிமாருந்தாயருமடுத்துளோரும்
உத்தமநகருமாளுமென்பதோர்வருத்தமூன்றப்
பொத்தியதுன்பமூளச்சேனையுந்தாமும்போவார். (௧௭)

போகலரென்றபோதுமநுமனையாண்டுப்போக்கி
ஆகியதறிந்தாலன்றியருந்துயராற்றலாற்றார்
ஏகியகருமமுற்றியானவண்விரைவினெய்தி
வேகவெம்படையிற்கொன்றுதருகுவென்வென்றியென்றான். (௧௮)

அன்னதுபுரிதனன்றென்றரக்கனுமமையவஞ்சொற்
பொன்னுருக்குவமைமாயமியற்றுவானமைந்துபோனான்
இன்னதித்தலையதாகவிராமனுக்கிரவிசெம்மல்
தொன்னகரதனைவல்லைக்கடிகெடச்சுடுதுமென்றான். (௧௯)

வானரர்கொள்ளியா லிலங்கையைச்சுடமுயறல்.

அத்தொழில்புரிதனன்றென்றண்ணலுமமையவெண்ணித்
தத்தினனிலங்கைமூதூர்க்கோபுரத்தும்பர்சார்ந்தான்
பத்துடையேழுசான்றவானரப்பரவைபற்றிக்
கைத்தலத்தோரோர்கொள்ளியெடுத்ததெவ்வுலகுங்காண. (௨௦)

வேறு.

எண்ணினகோடிப்பல்படையாவும்
மண்ணுறுகாவற்றிண்மதில்வாயில்
வெண்ணிறமேகமின்னினம்வீசி
நண்ணினபோல்வதொன்னகர்நாண. (௨௧)

ஆசைகடோறுமள்ளினகொள்ளி
மாசறுதானைமர்க்கடவெள்ளம்
நாசமிவ்வூருக்குண்டெனநள்ளின்
வீசினவானின்மீன்விழலன்ன. (௨௨)

வஞ்சனைமன்னன்வாழுமிலங்கைக்
குஞ்சரமன்னார்வீசியகொள்ளி

அஞ்சனவண்ணனாழியினேவும்
செஞ்சரமென்னச்சென்றனமென்மேல். (௨௩)

கய்யகலிஞ்சிக்காவலிலங்கைச்
செய்யகொளுந்திச்சென்றுநெருங்க
அய்யநெடுங்காராழியையம்மால்
எய்யவெரிந்தாலொத்ததிலங்கை. (௨௪)

பரற்றுறுபல்பழுவத்தெரிபற்ற
நிரற்றுறுபல்பறவைக்குலநீளம்
உரற்றினவிண்ணிணொலித்தெழுவண்ணம்
அரற்றியெழுந்ததடங்கவிலங்கை. (௨௫)

மூவுலகத்தெவரும்முதலோரும்
ஏவினவிற்றொழில்வீரனிராமன்
தீவமெனச்சிலவாளிசெலுத்தக்
கோவுரமுற்றும்விழுந்ததுகுன்றின். (௨௬)

சஞ்சீவிமலை வைக்கச்சென்ற அனுமன் திரும்பிவருதல்.

இத்தலையின்னனிகழ்ந்திடுமெல்லைக்
கைத்தலையிற்கொடுகொவினெழுந்தான்
உய்த்தபெருங்கிரிமேருவினுப்பால்
வைத்தநெடுந்தகைமாருதிவந்தான். (௨௭)

அறையரவக்கழன்மாருதியார்த்தான்
உறையரவஞ்செவியுற்றுளதவ்வூர்
சிறையரவக்கலுழன்கொடுசீறும்
இறையரவக்குலமொத்ததிலங்கை. (௨௮)

இந்திரசித்து மாயாசீதையை அனுமனெதிரே கட்டியிழுத்து வருதல்.

மேற்றிசைவாயிலைமேவியவெங்கட்
காற்றின்மகன்றனைவந்துகலந்தான்
மாற்றலின்மாயைவகுக்கும்வலத்தான்
கூற்றையும்வென்றுயர்வட்டணைகொண்டான். (௨௯)

சானகியாம்வகைகொண்டுசமைத்தோர்
மானனையாளைவடிக்குழல்பற்றா
ஊனகுவாளொருகைக்கொடுருத்தான்
ஆனவனந்நிலையின்னவறைந்தான். (௩௦)

இந்திரசித்து சீதையைவெட்டி விடுவேனெனல்.

வந்திவள்காரணமாகமலைந்தீர்
எந்தையிகழ்ந்தனன்யானிவளாவி

சிந்துவெனென்றுசெறுத்துரைசெய்தான்
அந்தமின்மாருதியஞ்சியயர்ந்தான். (௩௧)

அனுமன் வருந்துதல்.

கண்டவளேயிவளென்பதுகண்டான்
விண்டதுபோலுநம்வாழ்வெனவெந்தான்
கொண்டிடைதீர்வதொர்கோளறிவில்லான்
உண்டுயிரோவெனவாயுமுலர்ந்தான். (௩௨)

அனுமானிந்திரசித்தினைப் புகழ்ந்து இவளைக்கோல்
லுதல் நீதியன்றெனல்.

யாதுமினிச்செயலில்லெனவென்றால்
நீதியுரைப்பதுநீரெனவோராக்
கோதில்குலத்தொருநீகுணமிக்காய்
மாதையொறுத்தல்வசைத்திறமன்றே. (௩௩)

நான்முகனுக்கொருநால்வரின்வந்தாய்
நூன்முகமுற்றுநுணங்கவுணர்ந்தாய்
பான்முகமுற்றபெரும்பழியன்றே
மான்முகமற்றொருமாதைவதைத்தால். (௩௪)

மண்குலையின்றதுவானநடுங்கிக்
கண்குலையின்றதுகாணுதிகண்ணால்
எண்குலையின்றிரங்கவுறந்தாய்
பெண்கொலைசெய்கைபெரும்பழியன்றே. (௩௫)

என்வயினல்கினையேகுதியென்றால்
நின்வயமாமுலகியாவையுநீநின்
அன்வயமேதுமறிந்திலையையா
புன்மைதொடங்கல்புகழ்க்கழிவென்றான். (௩௬)

இந்திரசித்துப் பதிலுரைத்தல்.

என்றனன்மாருதியிந்திரசித்தும்
ஒன்றுரைகேளனதெந்தையுமூவரும்
பொன்றுதறீருமிதிற்புகழுண்டே
நன்றுரையென்றுபினக்குரைசெய்தான். (௩௭)

இந்திரசித்து மாயாசீதையை வெட்டுதல்.

எந்தையுமிந்தவிலங்கையுளோரும்
உய்ந்திடவானவர்யாவருமோடச்
சிந்துவென்வாளினிலென்றுசெறுத்தான்
இந்திரசித்தவனின்னவிசைத்தான். (௩௮)

இந்திரசித்து அயோத்திசென்றங்குள்ளாரை யழிப்பேனெனல்.

போமினடாவினைபோயதுபோலாம்
ஆமெனினின்னுமயோத்தியையண்மிக்
காமினதின்றுகளங்கரியாக
வேமிதுசெய்தினிமீள்குவெனென்றான். (௩௯)

தம்பியர்தம்மொடுதாயருமாயோர்
உம்பர்விலக்கிடினும்மினியுய்யார்
வெம்புகடுங்கனல்வீசிடுமென்கை
அம்புகளோடுமெலிந்தனரம்மா. (௪௰)

இப்பொழுதேகடிதேகுவென்யானிப்
புட்பகமானமதிற்புகுகின்றேன்
தப்புவரேயவர்சங்கையிலாவென்
வெப்புறுவாளிகளின்றுவிரைந்தால். (௪௧)

ஆளுடையாயருளாயருளாயென்
றேழைவழங்குறுசொல்லினிரங்கான்
வாளினெறிந்தனன்மாகடல்போலுய
நீளுறுசேனையினூடுகிமிர்ந்தான். (௪௨)

தென்றிசைநின்றுவடாதுதிசைக்கட்
பொன்றிணிபுட்பகமேற்கொடுபோனான்
ஒன்றுமுணர்ந்திலன்மாருதிபுக்கான்
வென்றிநெடுங்கிரிபோலவிழுந்தான். (௪௩)

போயவன்மாநிகும்பலைபுக்கான்
தூயவனெஞ்சுதுயர்ந்துசுருண்டான்
ஓய்வொடுநெஞ்சமொராங்கவுலர்ந்தான்
ஏயனபன்னினனின்னனசொன்னான். (௪௪)

அனுமன் புலம்புதல்.

வேறு.

அன்னமேயென்னும்பெண்ணினருங்கலக்கலமேயென்னும்
என்னமேயென்னுந்தெய்வமில்லையோயாதுமென்னும்
சின்னமேசெய்யகண்டுந்தீவினைநெஞ்சமாவி
பின்னமேயாயதில்லையென்னும்போராற்றல்பேர்ந்தான். (௪௫)

எழுந்தவன்றேலேபாயமென்னும்பேரிடரைத்தள்ளி
விழுந்துமெவந்துயிர்த்துவிம்மிவீங்கும்போய்மெலியும்வெந்தீக்
கொழுந்துகளுயிர்க்கும்யாக்கைகுலைவுறுந்தலைமேற்கொண்டெற்
றழுந்தவைதன்னைப்பின்னையினையனவுரைப்பதானான். (௪௬)

முடிந்ததநந்தமெண்ணுமூவுலகிற்குங்கங்குல்
விடிந்ததென்றிருந்தேன்மீளவெந்துயரிருளின்வெள்ளம்
படிந்ததுவினையின்செய்கைபரந்ததுபாவிவாளால்
தடிந்தனன்றிருவையந்தோதவிர்ந்ததுறருமமம்மா. (௪௭)

பெருஞ்சிறைக்கற்பினாளைப்பெண்ணினைக் * கண்ணிற்கொல்ல
இருஞ்சிறகற்றபுட்போல்யாதுமொன்றியற்றலாற்றேன்
இருஞ்சிறையழுங்குகின்றேனெம்பிரான்றேவிபட்ட
அருஞ்சிறைமீட்டவண்ணமழகிதுபெரிதுமம்மா. (௪௮)

யாதகவரக்கன்றெய்வப்பத்தினித்தவத்துளாளைப்
பேதையைக்குலத்தின்வந்தபிழைப்பிலாதாளைப்பெண்ணைச்
சீதையைத்திருவைத்தீண்டிச்சிறைவைத்ததீயோன்சேயே
காதவுங்கண்டுநின்றகருமமேகருணைத்தம்மா. (௪௯)

† கல்விக்குநிமிர்ந்தகீர்த்திக்காகுத்தன்றூதனாகிச்
சொல்விக்கவந்துபோனேனாயவித்துயர்செய்தாரை
வெல்விக்கவந்தேனுன்னைமீட்பிக்கவன்றுவெய்தின்
கொல்விக்கவந்தேனென்றோர்கொடும்பழிகூட்டிக்கொண்டேன். (௫௦)

வஞ்சியையெங்குங்காணாதுயிரினைமறந்தானென்னச்
செஞ்சிலையுரவோன்றேடித்திரிகின்றானுள்ளந்தேற
அஞ்சொலாலிருந்தாள்கண்டேனென்றயானரக்கன்கொல்லத்
துஞ்சினாளென்றுசொல்லத்தோன்றினேன்றோற்றமீதால். (௫௧)

அருங்கடல்கடந்திவ்வூரையள்ளெரிமடுத்துவெள்ளக்
கருங்கடல்கட்டிமேருக்கடந்தொருமருந்துகாட்டிக்
குரங்கினியுன்னோடொப்பதில்லெனக்களிப்புக்கொண்டேன்
பெருங்கடற்கோட்டந்தேய்வையாயதென்னடிமைப்பெற்றி. (௫௨)

விண்டுநின்றாக்கைசிந்தப்புல்லுயிர்விட்டிலாதேன்
கொண்டுநின்றானைக்கொல்லக்கூசினேனெதிரேகொல்லக்
கண்டுநின்றேனேநன்றென்கையினிற்கலத்தின்வெண்சோ
றுண்டுநின்றுய்யவல்லேனெளியனோவொருவனுள்ளேன். (௫௩)

என்னநின்றிரங்கிக்கள்வனயோத்திமேலெழுவெனென்று
சொன்னதுமுண்டுபோனசுவண்டுதொடர்ந்துசெல்லின்
முன்னனிங்குற்றதன்மையுணர்கிலன்வருவதோரேன்
பின்னினிமுடிப்பதியாதென்றிரங்கினானுணர்வுபெற்றான். (௫௪)

உற்றதையுணர்த்திப்பின்னையுலகுடையொருவனோடும்
இற்றுறினிற்றுமாள்வெனன்றெனியெண்ணமெண்ணிச்

---

* கண்ணிற்கொல்ல-கண்ணெதிரில்கொலைபுரிய.
† கல்விக்கு-கல்வியில்.

சொற்றதுசெய்வென்வேறோர்பிறிதிலென் றுணிவிற்றென்னாப்
பொற்றடந்தோளான்வீரன்பொன்னடிமருங்கிற்போனான். (௫௫)

இராமன்காலடியிலனுமன் விழுந்து புலம்புதல்.

சிங்கவேறனையவீரன்செறிகழற்பாதஞ்சேர்ந்தான்
அங்கமுமனமுங்கண்ணுமாவியுமலக்கணுற்றான்
பொங்கியபொருமல்வீங்கியுயிர்ப்பொடுபுரத்தைப்போர்ப்ப
வெங்கணீரருவிசோரமால்வரையென்னவீழ்ந்தான். (௫௬)

வீழ்ந்தவன்றன்னைவீரன்விளைந்ததுவிளம்புகென்னாத்
தாழ்ந்திருதடக்கைபற்றியெடுக்கவுந்தறிக்கிலாதான்
ஆழ்ந்தெழுதுன்பத்தாளையரக்கனுன்றயில்கொள்வாளால்
போழ்ந்தனனென்னக்கூறிப்புரண்டனன்பொருமுகின்றான். (௫௭)

துடித்திலனுயிர்ப்புமில்லனிமைக்கிலன் றுள்ளிக்கண்ணீர்
பொடித்திலன்யாதுமொன் றும்புகன்றிலன் பொருமியுள்ளம்
வெடித்திலன்விம்மிப்பாரின்வீழ்ந்திலன்வியர்த்தானல்லன்
அயர்த்துளதுன்பம்யாவுமறிந்திலரமரரேயும். (௫௮)

இராமன்காலடியில் வானரர் விழுதல்.

சொற்பதங்கேட்டலோடுஞ் சுறுக்குறவுணர்வுசோர
நற்பெருவாடையுற்றமரங்களினடுக்கமெய்தாக
கற்பகமனையவள்ளல்கருங்கழற்கமலக்கான்மேல்
வெற்பினமென்னவீழ்ந்தார்வானரவீரரெல்லாம். (௫௯)

இராமன் மூர்ச்சையுறல்.

சித்திரத்தன்மையுற்றசேவகனுணர்வுதீர்ந்தான்
மித்திரர்வதனநோக்கானிளையவன்வினவப்பேசான்
பித்தருமிறைபொருதபேராபிமானமென்னும்
சத்திரமார்பிற்றைக்கவுயிரிலனன்னசாய்ந்தான். (௬௦)

இலக்குமணன் அயர்தல்.

நாயகன்றன்மைகண்டுந்தமக்குற்றநாணம்பார்த்தும்
ஆயனகருமமீளவழிவுற்றவதனைப்பார்த்தும்
வாயொடுமனமுங்கண்ணுமியாக்கையுமயர்ந்துசாம்பித்
தாயினையிழந்தகன்றிற்றம்பியுந்தலத்தனானான். (௬௧)

விபீடணனையங்கொள்ளுதல்.

தொல்லையதுணரத்தக்கவீடணன்றுளக்கமுற்றான்
எல்லையிறுன்பமென்றவிடையொன்றுந்தெரிக்கிலாதான்
வெல்லவுமரிதுநாசமிவடனல்விளைந்ததென்னாக்
கொல்வதுமடுக்குமென்றுமனத்திறோரையங்கொண்டான். (௬௨)

விபீடணன் இராமனுக்குச்சைத்தியோபசாரஞ்செய்ய மூர்ச்சைதெளிதல்.

சீதநீர்முகத்தினப்பிச்சேவகன்மேனிதீண்டிப்
போதம்வந்தெய்தற்பாலயாவையும்புரிந்துபொற்பூம்
பாதமுங்கையுமெய்யும்பற்றினன்வருடலோடும்
வேதமுங்காணாவள்ளல்விழித்தனன்விழியைமெல்ல. (௬௩)

ஊற்றுவார்கண்ணீரோடுமுள்ளழிந்துற்றதெண்ணி
ஆற்றுவானல்லனாகியயர்கின்றானெனினுமையன்
மாற்றுவானல்லன்மானமுயிருகவருந்துமென்னாத்
தேற்றுவானினைந்துதம்பியிவையிவைசெப்பலுற்றான். (௬௪)

இலக்குமணனதுறவுரை.

முடியுநாட்டானேவந்துமுற்றினாற்றுன்பமுந்தீர்ப்
படியுமாஞ்சிறியோர்தன்மையினக்கிதுபழியிற்றாமால்
குடியுமாசுண்டதென்னினறத்தொடுமுலகைக்கொன்று
கடியுமாறன்றிச்சோர்ந்துகழிதியோகருத்திலார்போல். (௬௫)

தையலைத்துணையிலாளைத்தவத்தியைத்தருமகற்பின்
தெய்வதந்தன்னைமற்றுன்றேவியைத்திருவைத்தீண்டி
வெய்யவன்கொன்றானென்றால்வேதனையுழப்பதின்னும்
உய்யவோகருணையாலோதருமத்தோடுறவுமுண்டோ. (௬௬)

அரக்கரென்னமரர்தாமென்னந்தணர்தாமென்னந்தக்
குருக்களென்முனிவர்தாமென்வேதத்தின்கொள்கைதானென்
செருக்கினர்வலியராகிநெறிநின்றார்சிதைவரென்றா
இருக்குமிதென்னாமிம்மூன்றுலகையுமெரிமடாதே. (௬௭)

முழுவதேழுலகமின்னமுறைமுறைசெய்கைமேன்மூண்
டெழுவதேயமரரின்னமிருப்பதேயறமுண்டென்று
தொழுவதேமேகமாரிசொரிவதேசோர்ந்துநாம்வீழ்ந்
தழுவதேநன்றுநந்தம்விற்றொழிலாற்றலம்மா. (௬௮)

புக்கிவ்வூரிமைப்பின்முன்னம்பொடிபடுத்தரக்கன்போன
திக்கெலாஞ்சுட்டுவானோருலகெலாந்தீத்துத்தீர்க்கத்
தக்கநாங்கண்ணீராற்றித்தலைசுமந்திருகைநாற்றித்
துக்கமேயுழப்பமென்றாற்சிறுமையாத்தோன்றுமன்றே. (௬௯)

அங்குமிவ்வறமேநோக்கியரசிழந்தடவியெய்தி
மங்கையைவஞ்சன்பற்றவரம்பழியாதுவாழ்ந்தேம்
இங்குமித்துன்பமெய்தியிருத்துமேலெளிமைநோக்கிப்
பொங்குவான்றளையிற்பூட்டியாட்செயப்புகல்வனன்றே. (௭௦)

மன்றலங்கோதையாளைத்தம்மெதிர்கொணர்ந்துவாளிற்
கொன்றவர்தம்மைக்கொல்லுங்கோளிலாநாணங்கூரப்
பொன்றினரென்பராவிபோக்கினார்பொதுமைபார்க்கின்
அன்றிதுகருமமென்னீயயர்கின்றதறிவிலார்போல். (௭௧)

சுக்கிரீவன் இராவணன்மார்பில்விழுந்து பழிவாங்குவேமெனல்.

அனையனவிளவல்கூறவருக்கன்சேயயர்கின்றனோர்
கனவுகண்டனனேயென்னக்கதுமெனவெழுந்துகாணும்
வினையினியுண்டேவல்லைவிளக்கின்வீழ்விட்டிலன்ன
மனையிடையரக்கன்மார்பிற்குதித்துநாம்வம்மினென்றான். (௭௨)

இலங்கையையிடந்துவெங்கணிராக்கதரென்கின்றாரைப்
பொலங்குழைமகளிரோடும்பானுகர்புதல்வரோடும்
குலங்களொடடங்கக்கொன்றுகொடுந்தொழில்குறித்துநம்மேல்
விலங்குவாரென்னிற்றேவர்விண்ணையுமண்ணில்வீழ்த்தும். (௭௩)

சுக்கிரீவன் இலங்கையிற்றவுதல்.

அறங்கெடச்செய்துமென்பதமைந்தனமாகினைய
புறங்கிடந்துழைப்பதென்னேபொருதினிப்புவனமூன்றும்
கறங்கெனத்திரிந்துதேவர்குலங்களுங்கட்டுமென்னா
மறங்கிளர்வயிரத்தோளானிலங்கைமேல்வாவலுற்றான். (௭௪)

அநுமனிந்திரசித்தயோத்திசென்றது கூறல்.

மற்றையவீரரெல்லாமன்னனின்முன்னம்வாவி
எற்றுதுமரக்கர்தம்மையில்லொடுமெடுத்தின்றேகல்
உற்றனருறுதலோடுமுணர்த்துவதுளதென்றன்னாச்
சொற்றனனநுமன்வஞ்சனயோத்திமேற்போனசூழ்ச்சி. (௭௫)

அதுகேட்டவிராமனவலமிகுந்தாறுதல்.

தாயருந்தம்பிமாருந்தவம்புரிநகரஞ்சாரப்
போயினனென்றமாற்றஞ்செவித்தொளைபுகுதலோடும்
மேயினவடியினின்றவேதனைக்கனையவெந்த
தீயிடைத்தணிந்ததென்னச்சீதைபாற்றுன்பந்தீர்ந்தான். (௭௬)

இராமன்வருந்தி யுரைத்தல்.

அழுந்தியபாலின்வெள்ளத்தாழிநின்றனந்தர்நீங்கி
எழுந்தனனென்னத்துன்பக்கடலினின்றேறியாருக்
கொழுந்துறுகோபத்தீயுநடுக்கமுமனத்தைக்கூட
உழுந்துருள்பொழுதுந்தாழாவினையினான்மறுக்கமுற்றான். (௭௭)

திருமிச்சீதையோடுமென்கிலதன்றென்றீமை
வேரொடுமுடிப்பதாகவினைந்ததுவேறுமின்னும்

யாரொடுந்தொடருமென்பதறிகிலேனிதனையைய
பேரிடவதியுண்டோவெம்பியர்பிழைக்கின்றாரோ. (௭௮)

நினைவதன்முன்புசெல்லுமானத்தினெடிதுநின்றான்
வினையொருகணத்தின்முற்றிமீள்கின்றான்வினையேன்வந்த
மனைபொடிபட்டதங்குமாண்டதுதாரமீண்டும்
எனையனதொடருகின்றதுணர்கிலேனிறப்புங்காணேன். (௭௯)

தாதைக்குஞ்சடாயுவானதந்தைக்குந்தமியளாய
சீதைக்குங்கூற்றங்காட்டித்தவிர்ந்திலதொருவென்றீமை
பேதைப்பெண்பிறந்துபெற்றதாயர்க்கும்பிழைப்பிலாத
காதற்றம்பியர்க்குமூர்க்குநாட்டிற்குங்காட்டிற்றன்றே. (௮௦)

உற்றதொன்றுணரகில்லாருணர்ந்துவந்துருத்தாரேனும்
வெற்றிவெம்பாசம்வீசிவிசித்தவன்கொன்றுவீழ்த்தால்
மற்றைவெம்புள்ளின்வேந்தன்வருகிலன்மருந்துநல்கக்
கொற்றமாருதியுமாங்கில்லாருயிர்கொடுக்கற்பாலார். (௮௧)

மாகவாகாயஞ்செல்லவல்லையின்வயிரத்தோளாய்
ஏகுவானுபாயமுண்டேலியம்புதிநின்றவெல்லாம்
சாகமற்றிலங்கைப்போருந்தவிர்கவச்சழக்கன்கண்கள்
காகமுண்டதற்பின்மீண்டுமுடிப்பனென்கருத்தையென்றான். (௮௨)

அவ்விடத்திளவலையபரதனையமரினோர்க்க
எவ்விடற்குரியான்போனவிந்திரசித்தேயன்று
தெவ்விடத்தமைவின்மும்மையுலகமுந்தீந்தருவோ
வெவ்விடர்க்கடலின்வைகல்கேளெனவிளம்பலுற்றான். (௮௩)

தீக்கொண்டவஞ்சன்வீசத்திசைமுகன்பாசந்தீண்ட
வீக்கொண்டுவீழ்கயானோபரதனும்வெய்யகூற்றைக்
கூய்க்கொண்டுகுத்துண்டன்னான்குலத்தொடுநிலத்தனாதல்
போய்க்கண்டுகோடியன்றேயென்றனன்புழுங்குகின்றான். (௮௪)

அநுமனிராம விலக்குமணர்களைத் தன்கரங்களிலேற வேண்டுதல்.

அக்கணத்தநுமனின்றானையவென்றேளினுதல்
கைத்துணைத்தலத்தேயாதலேறுதிர்காற்றுந்தாழ
இக்கணத்தயோத்திமூதூரெய்தினெனிடமுண்டென்னின்
திக்கனைத்தினிலுஞ்செல்வென்யானேபோய்ப்பகையுந்தீர்வென். (௮௫)

அநுமனிலங்கையைப் போர்த்துக்கொண்டு வரச்சொல்லினுஞ் செல்வேனெனல்.

எழுபதுவெள்ளத்தோடுமிலங்கையையிடந்தென்றோண்மேல்
தழுவுறவைத்தின்றேகென்றுரைத்தியேற்சமைவென்றக்கோய்

பொழுதிறைதாழ்ப்பதென்றோபுட்பகம்போதன்முன்னம்
குழுவொடுகொண்டுபோவென்கணத்தொடுகுதிப்பென்கூற்றின். (௮௬)

கொல்லவந்தானைநீதிகூறினென்விலக்கிக்கொள்வான்
சொல்லவுஞ்சொல்லிநின்றேன்கொன்றபின்றன்பமென்னை
வெல்லவுந்தரையின்வீழ்வுற்றுணர்ந்திலென்விரைந்துபோனான்
இல்லையென்றுளனேற்றீயோன்பிழைக்குமோவிழுக்கமுற்றான். (௮௭)

அனுமன் புட்பகத்திற்குமுன்னர் யான்செல்வேனெனல்.

மனத்தின்முன்செல்லுமானம்போனதுவழியதாக
நினைப்பின்முன்னயோத்தியெய்திவருநெறிபார்த்துநிற்பென்
இனிச்சிலதாழ்ப்பதென்னேயேறுதிரிரண்டுதோளும்
புனத்துழாய்மாலைமார்பீர்புட்பகம்போதன்முன்னம். (௮௮)

இராமவிலக்குமணர் அனுமன்றோளிலேறி அயோத்திசெல்ல
ஒருப்படலும் விபீடணன்தடுத்தலும்.

ஏறுதுமென்றுவீரரெழுதலுமிறைஞ்சியீண்டுக்
கூறுவதுளதுன்பங்கோளுறக்குலுங்கியுள்ளம்
தேறுவதரிதுசெய்கைமயங்கினனின்றிகைத்துநின்றேன்
ஆறினனதனையையமாயமென்றயிர்க்கின்றேனால். (௮௯)

இந்திரசித்துச்செய்தது மாயையாயிருக்கலாமென
விபீடணன் கூறுதல்.

பத்தினிதன்னைத்தீண்டிப்பாதகன்படுத்தபோது
முத்திறத்துலகும்வெந்துசாம்பராய்முடியுமன்றே
அத்திறமானதேனுமயோத்திமேற்போனதன்மை
சித்திரமிதனையெல்லாந்தெரிகலாஞ்சிறிதுபோழ்தின். (௯௦)

விபீடணன் சீதையிருப்பிடஞ்செல்லுதல்.

இமையிடையாகயான்சென்றந்தியிழையிருக்கையெய்தி
அமைவுறநோக்கியுற்றதறிந்துவந்தறைந்தபின்னர்ச்
சமைவதுசெய்வதென்றுவீடணன்விளம்பத்தக்க
தமைவதென்றிராமன்சொன்னானந்தரத்தவனுஞ்சென்றான். (௯௧)

விபீடணன் சீதையைவண்டுருவெய்திச்சென்றுகாண்டல்.

வண்டினதுருவங்கொண்டான்மானவன்மனத்திற்போனான்
தண்டலையிருக்கைதன்னைப்பொருக்கெனச்சார்ந்துதானே
கண்டனனென்பமன்றேகண்களாற்கருத்தாலாவி
உண்டிலையென்னச்செய்தவோவியமொக்கின்றாளை. (௯௨)

தீர்ப்பது துன்பம்யானென் னுயிரொடென் றுணர்ந்துசிந்தை
பேர்ப்பதுமின்சொலன்னை திரிசடைபேசப்போந்தாள்
கார்ப்பெருமேகம்வந்துகடையுகங்கலந்தவன்ன
ஆர்ப்பொலியமிழ்தமாகவாருயிராற்றினாளே. (௧௩)

வஞ்சனையென்பதுன்னிவானுயருவகைவைகும்
நெஞ்சினனாகியுள்ளந்தள்ளுறலொழிந்துநின்றான்
வெஞ்சிலைமைந்தன்போனானிகும்பலைவேள்வியானென்
றெஞ்சலிலரக்கன்சேனையெழுந்தெழுந்தேகக்கண்டான். (௧௪)

வேழ்விக்குவேண்டற்பாலகலப்பையும்விறகுநெய்யும்
வாழ்விக்குந்தாழ்விலென்னும்வானவர்மறுக்கங்கண்டான்
சூழ்வித்தவண்ணமீதோநன்றெனத்துணிவுகொண்டான்
தாழ்வித்தமுடியான்வீரன்றாமரைச்சரணந்தாழ்ந்தான். (௧௫)

விபீடணன் சீதை இருக்கின்றாள் நடந்ததுமாயமெனல்.

இருந்தனடேவியானேயெதிர்ந்தனெனென்கணாரா
அருந்ததிகற்பினாளுக்கழிவுண்டோவரக்கனம்மை
வருந்திடமாயஞ்செய்துநிகும்பலைமருங்குபுக்கான்
முருங்கழல்வேள்விமுற்றிமுதலறமுடிக்கலுண்டான். (௧௬)

அனைவருமகிழ்வுறல்.

என்றலுமுலகமேழுமேழுமாத்தீவுமெல்லை
ஒன்றியகடல்களேழுமொருங்கெழுந்தார்க்குமோதை
அன்றெனவாகுமென்னவமரருமயிர்க்கவார்த்துக்
குன்றினமிடியத்துள்ளியாடினகுரக்கினீட்டம். (௧௭)

வீரனுமையந்தீர்ந்தான்வீடணன்றன்னைமெய்யோ
டார்வமுமுயிருமொன்றவழுந்துறத்தழுவியைய
தீர்வதுபொருளோதுன்பநீயுண்டுதெய்வமுண்டு
மாருதியுண்டுநாஞ்செய்தவமுண்டுமறையுமுண்டால். (௧௮)

இந்திரசித்தின்மீது நிகும்பலைக்கு இலக்குமணனையேவ விபீடணன் வேண்டுதல்.

என்றலுமிறைஞ்சியாகமுற்றுமேல்யாரும்வெல்லார்
வென்றியுமரக்கர்மாடேவிடையருளிளவலோடும்
சென்றவனாவியுண்டுவேள்வியுஞ்சிதைப்பனென்றான்
நன்றதுபுரிதியென்னாநாயகனவில்வதானான். (௧௯)

௨௫ - வது, மாயாசீதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௮௧௦.

௨௬-வது, நிகும்பலைப்படலம்.

இலக்குமணற்கிராமன் நீ பிரமாத்திரம் அவன்விடாவிடில் விடாதேயெனல்.

தம்பியைத்தழுவியையன்றாமரைத்தவிசின்மேலான்
வெம்படைதொடுக்குமாயின்விலக்குவான்பொருட்டாலந்த
அம்புநீதுரப்பாயல்லையனையது துரந்தகாலை
உம்பருமுலகுமெல்லாம்விளியுமஃதொழிதியென்றான். (௧)

சங்கரநாராயணாத்திரங்களையு மவ்வாறேயெனல்.

முக்கணான்படையுமாழிமுதலவன்படையுமுன்னின்
றொக்கவேவிடுமேவிட்டாலவற்றையுமவற்றாலோயத்
தக்கவாறியற்றிமற்றுன்சிலைவலித்தருக்கினாலே
புக்கவனாவிகொண்டுபோதுதிபுகழின்மிக்கோய். (௨)

பலவிதப்போர்புரிந்து காலந்தாழ்த்தாமல் இந்திரசித்தினைக் கொல்லுதியெனல்.

வல்லனமாயவிஞ்சைவகுத்தனவறிந்துமாளக்
கல்லுதிதருமமென்னுங்கண்ணகன்கருத்தைக்கண்டு
பல்பெரும்போருஞ்செய்துவருந்தலையற்றம்பார்த்துக்
கொல்லுதியமரர்தங்கள்கூற்றினைக்கூற்றமொப்பாய். (௩)

பதைத்தவன்வெம்மையாடிப்பல்பெரும்பகழிமாரி
விதைத்தவன்விதையாமின்னுவிலக்கினுமெலிவுமிக்கால்
உதைத்தவன்சிலையின்வாளிமருமத்தைக்கருதியோடி
வதைத்தொழில்புரிதிசாபநூனெறிமறப்பிலாதாய். (௪)

தொடுப்பதன்முன்னம்வாளிகொடுத்தவைதுறைகடோறும்
தடுப்பனதடுத்தியெண்ணிக்குறிப்பினாலுணர்ந்துதக்க
கடுப்பினுமளவிலாதகதியினுங்கணைகள்காற்றின்
விடுப்பனவவற்றைநோக்கிவிடுதியால்விரைவிலாதாய. (௫)

இலக்குமணற்கிராமன் வில்லொன்றளித்தல்.

என்பனமுதலயாவுமியாவையுமியம்பியேற்ற
முன்பனைநோக்கியையமூவகையுலகுந்தாளாய்த்
தன்பெருந்தன்மைதானுமறிகிலாவொருவன்றாங்கும்
வன்பெருஞ்சிலையீதாகும்வாங்குதிவலமுங்கொள்வாய். (௬)

கவசமுதலளித்தல்.

இச்சிலையியற்கைமேனாட்டமிழ்முனியியம்பிற்றெல்லாம்
அச்செனக்கேட்டாயன்றேயாயிரமௌலியண்ணல்
மெய்ச்சிலைவிரிஞ்சன்மூட்டும்வேள்வியின்வேட்டுப்பெற்ற
கைச்சிலையென்றுதானேகொடுத்தனன்கவசத்தோடும். (௭)

அம்புக்கூடளித்தல்.

ஆணியிவ்வுலகுக்கானவாழியான்புறத்தினார்த்த
தூணியுங்கொடுத்துமற்றுமுறைகள்பலவுஞ்சொல்லித்
தாணுவின்றோற்றத்தானைத்தழுவினன்றழுவலோடும்
சேணுயர்விசும்பிற்றேவர்தீர்ந்ததெஞ்சிறுமையென்றார். (௮)

மங்கலந்தேவர்கூறவானவர்மகளிர்வாழ்த்தப்
பங்கமிலாசிகூறப்பலாண்டிசைபரவப்பாகத்
திங்களின்மௌலியண்ணறிரிபுரந்தீக்கச்சீறிப்
பொங்கினனென்னத்தோன்றிப்பொலிந்தனன்போர்மேற்போவான். (௯)

இராமனைவணங்கி இலக்குமணன் நிகும்பலைநோக்கிச் செல்லுதல்.

மாருதிமுதல்வராயவானரத்தலைவரோடும்
வீரநீசேறியென்றுவிடைகொடுத்தருளும்வேலை
ஆரியன்கமலபாதமகத்தினும்புறத்துமாகச்
சீரியசென்னிசேர்த்துச்சென்றனன்றருமச்செல்வன். (௧௦)

பொலங்கொண்டலனையமேனிப்புரவலன்பொருமிக்கண்ணீர்
நிலங்கொண்டுபடரநின்றுநெஞ்சுழிவானைத்தம்பி
வலங்கொண்டுவயிரவல்விலிடங்கொண்டுவஞ்சன்மேலே
சலங்கொண்டுகெடிதுசென்றான்றலைகொண்டுவருவெனென்றே. (௧௧)

இராமன் பிரிந்துநிற்றல்.

தான்பிரிகின்றிலாததம்பிவெங்கடுப்பிற்செல்வா
னூன்பிரிகின்றிலாதவுயிரெனமறைதலோடும்
வான்பெருவேள்விகாக்கவளர்கின்றபருவநாளில்
தான்பிரிந்தேகக்கண்டதயரதன்றன்னையொத்தான். (௧௨)

வேறு.

நிகும்பலையு மகராசேனை யூகமும்.

சேனாபதியேமுதல்சேவகர்தாம்
ஆனார்நிமிர்கொள்ளிகொளங்கையினார்
கானார்நெறியும்மலையுங்கழியப்
போனார்நிகும்பலைபுக்கனரால். (௧௩)

உண்டாயதொராலுலகுள்ளொருவன்
கொண்டானுறைகின்றதுபோற்குலவி
விண்டானும்விழுங்கவிரிந்ததனைக்
கண்டாரவரக்கர்கருங்கடலே. (௧௪)

நேமிப்பெயர்யூகநிறைத்துநெடுஞ்
சேமத்ததுநின்றதுதீவினையோன்
ஓமத்தனல்வெவ்வடவைக்குடனே
பாமக்கடனின்றதொர்பான்மையதே. (௧௫)

காராயினகாய்கரிதேர்பரிமாத்
தாராயிரகோடிதழீஇயதுதான்
நீராழியொடாழிநிரீஇயதுபோல்
ஓராயிரம்யோசனையுள்ளதனை. (௧௬)

பொற்றேர்பரிமாகரிமாபொருதார்
எற்றேபடைவீரரையெண்ணிலமால்
உற்றேவியயூகமுலோகமுடைச்
சுற்றாயிரமூடுசுலாயதனை. (௧௭)

வண்ணக்கருமேனியின்மேன்மழைவாழ்
விண்ணைத்தொடுசெம்மயிர்வீசுதலால்
அண்ணற்கரியானனலப்படைவெம்
பண்ணைக்கடல்போல்வதொர்பான்மையதே. (௧௮)

வழங்காசிலைநாணொலிவானின்வரும்
பழங்கார்முகமொத்த * பணிக்குலமும்
தழங்காகடல்வாழ்வனபோற்றகைசால்
முழங்காமுகிலொத்தனமாமுரசே. (௧௯)

நிதும்பலை காப்பவர்கட்கும் வானரருக்கும் யுத்தம்.

வலியானவிராகவன்வாய்மொழியால்
சலியாதநெடுங்கடறானெனலாய்
ஒலியாதுறுசேனையையுற்றொருநாள்
மெலியாதவரார்த்தனர்விண்கிழிய. (௨௦)

ஆர்த்தாரெதிரார்த்தவரக்கர்குலம்
போர்த்தார்முரசங்கள்புடைத்தபுகத்
தூர்த்தாரிவர்கற்படைசூன்முகிலின்
நீர்த்தாரையினம்பவர்நீட்டினரால். (௨௧)

* பணிலம் - கடைக்குறை; பணையென்றும் பாடம்.

மின்னும்படைவீசலின்வெம்படைமேல்
பன்னுங்கவிமீதுபடிந்துளதால்
துன்னுந்துறைநீர்நிறைவாவிதொடர்ந்
தன்னங்கள்படிந்தனவாமெனலாய். (௨௨)

வில்லும்மழுவும்மெழுவும்மிடலோர்
பல்லுந்தலையும்முடலும்படியிற்
செல்லும்படிசிந்தினசென்றனவாற்
கல்லும்மரமுங்கரமுங்கதுவ. (௨௩)

வாலுந்தலையும்முடலும்வயிறும்
காலுங்கரமுந்தரைகண்டனவால்
கோலும்மழுவும்மெழுவுங்கொழுவும்
வேலுங்கணையும்வளையும்விசிற. (௨௪)

வென்றிப்படைவீரனைவீடணனீ
நின்றிக்கடைதாழுதனீதியதோ
சென்றிக்கடிவேள்விசிதைத்திலையேல்
இன்றிக்கடல்வெல்கிலம்யாமெனலும். (௨௫)

தேவாசுரருந்திசைநான்முகனும்
மூவாமுதலீசனுமூவுலகின்
கோவாகியகொற்றவனும்முதலோர்
மேவாதவரில்லைவிசும்புறைவோர். (௨௬)

பல்லார்படைநின்றனபல்லணியால்
பல்லார்படைநின்றனபல்பிறைவெண்
பல்லார்படைநின்றனபல்லியமும்
பல்லார்படைநின்றனபல்படையே. (௨௭)

இ-ள். பல்படை - பல்வகைப்பட்ட சேனைகளில், பல்லார் - பலவீரர்களேறிய, படைநின்றன - தேர்ப்படைநின்றன, பல்லணியா - பலவணியாக, பல் - கல்லணை, ஆர் - தயங்கிய, படைநின்றன - குதிரைப்படைநின்றன, பல்பிறைவெண்பல்லார் - பலபிறைபோலும் வெண்மையாகிய பற்களையுடையாராகிய, படைநின்றன சாலாட்படைநின்றன, பல்லியம் - பலவாச்சியமும், உம்பல் - யானைகளும், ஆர்-நிரம்பிய, படைநின்றன - படைகள் நின்றன,—எ-று.

பல்லல் ஆகவென்பவற்றில் ஈறழிவும், உம் பல்லாரென்பதில் லகர வெழுத்துப்பேறும் செய்யுள் விகாரம். பிறைவெண் பல்லார்படை யென்றமையின தற்குக்காலாட்படையெனவும். பரிகாலாள் கரிகளைப்பின்னே கூறினமையின் முன்னே பொதுப்படநின்ற பல்லார் படையென்றதற்

குத்தேர்ப்படையெனவும் பொருள்கூறினும். நால்வகைப்படையையு மு றைபிறழக்கூறியது, வானரவீரர்களும் அப்படைத் தலைவர்களும் பொரு தபூசலால் அவைகலங்கிநின்றமை தோன்றற்கு. இச்செய்யுள் சொற் பின்வருநிலை.

இலக்குமணன் அசுரசேனையை அழித்தல்.

அக்காலையிலக்குவனப்படையுள்
புக்கானயிலம்புபொழிந்தனனால்
உக்காரவரக்கர்தழூரொழியப்
புக்கார்நமனூருறைதென்புலமே. (உஅ)

தேருமதமாகரிதேர்பரிமா
நூருயிரகோடியினூழில்படச்
சேருர்குருதிககடலிற்றிடரிற்
கூருயுகவாவிகுறைத்தனனால். (உகூ)

வாமக்கரிதானழிவார்குழிவன்
றீமொய்த்தவரக்கர்கள்செம்மயிரின்
தாமத்தலைபுக்கதழங்கெரியின்
ஓமத்தைநிகர்த்தவுலப்பிலவால். (௩0)

சிலையின்கணையூடுதிறந்தனதிண்
கொலைவெங்களி * மால்கரிசெம்புனல்கொண்
டுலைவின்றுகிடந்தனவொத்தனவால்
மலையுஞ்சுனையும்வயிறும்முடலும். (௩க)

விற்றொத்தியவெங்கணையெண்ணின்வியன்
பற்றொத்தியபோற்படியப்பலவும்
முற்றச்சுடர்மின்மினிமொய்த்துளவன்
புற்றொத்தமுடித்தலைபூழியன. (௩உ)

படுமாரிநெடுங்கணைபாய்தலினால்
விடுமாறுதிரப்புனல்வீழ்வனவால்
தடுமாறுநெடுங்கொடிதாழ்கடல்வாய்
நெடுமாமுகில்வீழ்வநிகர்த்தனவால். (௩௩)

மின்னூர்கணைதாளறவீசவிழுந்
தன்னூனுருதிரத்துளழிந்துதலால்
ஒன்னார்முழுவெண்குடையொத்தனவால்
சென்னூகம்விழுங்கியதிங்களினை. (௩௪)

---

* மால் - பெரிய.

கொடுநீள்கரிகையொடுதாள்குறையப்
படுநீள்குருதிப்படர்கின்றனவால்
அடுநீளுயிரின்மையினாழ்கிலவான்
நெடுநீரினிடங்கர்நிகர்த்தனவால். (௯௫)

கரியுண்டகளத்திடையுற்றனகார்
நரியுண்டியுகப்பனநட்டனவால்
இரியுண்டவரின்னியம்விட்டிலதால்
வரியுண்டவுடற்பொறைமானினவால். (௯௬)

வாயிற்கனல்வெங்கடுவாளியினம்
பாயப்பருமக்குலம்வேவனவால்
வேயுற்றநெடுங்கிரிமீவெயிலாம்
தீயுற்றனபோன்றசினக்கரியே. (௯௭)

அலைவேலையரக்கரையெண்கினுகிர்த்
தலைமேன்முடியைத்தரைதள்ளுதலால்
மலைமேலுயர்புற்றினைவள்ளுகிரால்
நிலைபேரமறிப்பநிகர்த்தனவால். (௯௮)

மாவாளிகண்மாமழைபோல்வரலால்
மாவாளிகள்போர்செறுமாமறவோர்
மாவாளிகள்வன்றலையின்றலைவாம்
மாவாளிகளோடுமறிந்தனரால். (௯௯)

இ-ள். மா-அழகிய, வாளிகள்-அம்புகள், மாமழைபோல் - பெருமழைபோல், வரலால்-வந்துபாய்வதினால், மா-பெரிய, ஆளிகள் - யாளிகளை. போர்செறும் - போரிற்கொல்லுகின்ற, மாமறவோர் - சிறந்தகாலாள் வீரர்களும், மாவாளிகள் - யானைவீரர்களுங் குதிரைவீரர்களும், வன்றலையின் தலை - திண்ணியதலையில், வாம் - தாவிமொய்க்கின்ற, மாவாளிகளோடு மாவாகியவண்டுகளோடு, மறிந்தனர் - இறந்துருண்டனர்கள்.

அழகென்றது போரின்முறைமையிற் பிறழாமையை. ஆளிநீட்டல். அணி - ஆகுபெயர், அது தும்பையென்பது போரினிலை கூறலாற் பெற்றாம்.

அங்கங்கிழியத்துணிபட்டதனால்
அங்கங்கிழிகுற்றவமர்த்தலைவர்
அங்கங்கிழிசெம்புனல்பம்பவமைந்
தங்கங்கணிரம்பியலம்பியதால்.

இ-ள். அங்கங்கு - அவ்வப்போர்த்துறைகளில், இழிகுற்ற - வெற்றியின்மையடைந்த, அமர்த்தலைவர் - போர்த்தலைவர்கள், அங்கம் - உறுப்புகள், கிழிய - பிளவுறும்படி, துணிபட்டதனால் - துணிபட்டமையால்,

அம் - அழகிய, கங்கு - பருந்துகள், இழி-அஞ்சாது உண்ண இழிகின்ற, செம்புனல்-உதிரமானது, பம்ப-பரவ, அலைந்து - அலைகளெறிந்து சென்று, ஆம் - அவ்விடத்துக் கிடக்கின்ற, கங்கள் - சிரங்களை, நிரம்பி-முழுமையு நிறைந்து, அலம்பியது - துகளொழியக் கழுவியது,—எ-று.

போர்த்துறைகளென்றது வில் வாள் தண்டுமுதலிய படைகளாற் செய்யும் போர்வகைகளையாகலின் அடுக்குப்பன்மைப் பொருட்டு. இராவணனது முதற்போர் நிகழ்ந்தநாட்டொட்டு அரக்கருடைய வூனுண்டுடல் தசைந்தனவாகலின் அங்கங்கென்றார். ஆம் என்னும் பெயரெஞ்சுகிளவி அம்மெனத் தொகுத்தலாயிற்று.

வன்றனையவார்கணைமாரியினால்
* முன்றுதைபொர்தேர்கொடுமொய்பலதேர்
பின்றுவெதிர்தானவர்பேரணியைக்
கொன்றனனவெய்துகுறைத்தனனால். (சக)

வேறு.

மலைகளுமழைகளும்வானமீன்களும்
அலையவெங்கால்பொரவழிந்தவாமென
உலைகொள்வெங்கனல்பொதியோமமுற்றவால்
தலைகளுமுடல்களுஞ்சரமுந்தாவுவ. (சஉ)

வாரணமனையவன்றுணிப்பவான்படர்
தாரணிமுடிப்பெருந்தலைகடாக்கலால்
ஆரணமந்திரமமையவோதிய
பூரணமணிக்குடமுடைந்துபோயதால். (சஙு)

தாறுகொண்மதகரிசுமந்துதாமரை
சீறியநெடுந்தலையுருட்டிச்செந்நிறத்
தாறுகள்செறிந்தபெருதிரத்தோங்கலை
ஆறுகளொழுங்கனலவியச்சென்றவால். (சச)

தெரிகணைவிசும்பிடைச்சுமந்துசெம்மயிர்
வரிகழலரக்கர்தந்தடக்கைவாளொடும்
உருமெனவிழுதலினனலுக்கோக்கிய
எருமைகண்மறிந்தனமறியுமீர்ந்தவால். (சரு)

அங்கடங்கழிந்தபேரருவிக்குன்றினின்
அங்கடங்கிழிந்திலரழிந்தவாடவர்
அங்கடங்கலும்படர்குருதியாழியின்
அங்கடங்கினர்தொடர்பகழியஞ்சினார். (சசு)

---

* அன்றுயிரமோலியநந்தனமாப் என்றும்பாடம்.

இ-ள். அம் - (சித்திரத்தொழில்பெற்று) அழகாகிய, கடம் - கன்னத்திநின்றும், கழிந்த - நீங்கி ஒழுகுகின்ற, பேரருவி - மிக்கமதவருவியையுடைய, குன்றினின் - யானையைப்போல, ஆம் - ஆகிய, கடம்- உடல், கிழிந்திலர் - பிளந்திலராகி, அழிந்த - ஊக்கமழிந்த, ஆடவர்-இராக்கதர்புருடர், தொடர் - மாலைபோல்வருகின்ற, பகழி - அம்புகளுக்கு, அஞ்சினார்-அஞ்சினவராகி, (வேறேஒளிப்பிடமின்மையால்) அங்கடங்கலும் - அப்போர்க்களமுழுமையும், படர் - பரவியோடுகின்ற, குருதியாழியின் - உதிரக்கடலாகிய, அங்கன் - அவ்விடத்து, தங்கினார் - மூழ்கியிருந்தனர் - எ-று.

ஆமென்பது அம்மெனவும், அங்கட்டங்கினரென்பது அங்கடங்கினரெனவும் முறையேகுறுக்கலும் தொகுத்தலும்பெற்றன. கற்பினின்வழாஅ நற்பலவுதவி. பாம்பினிற்கடிது தேள் என்பனபோலக் குன்றினினெனவந்த இன்னுருபு ஆமென்னும் பெயரெச்சங்கொண்டது. இங்ஙனஞ் சாரியைபெற்றுவருதலை, இன்சாரியை முழுவதுங் கெடுமிடனுணர்த்தும் "இன்னெனவரூஉம் வேற்றுமையுருபிற் கின்னென்சாரியை யின்மைவேண்டும்" என்னுஞ்சூத்திரத்தை, இன்சாரியைமுதறிரியுமாறு கூறும். அவற்றுள் - இன்னினிகரமென்னுஞ் சூத்திரத்தோடு சாரவையாமையால், உரையாசிரியரும், இன்மைவேண்டுமென்னுமிடத்து உம்மை தொக்குநின்றதாக்கியதனால், நச்சினியார்க்கினியாரும் அமைத்தனர். கடங்கழிந்த பேரருவிக்குன்றினினென்னு முவமைமுகத்தானே இராமாநுசரெய்தகணையால் தைப்புண்டமத்தகத்திநின்று மிரண்டுபாரிசங்களிலும் பெருங்குருதி யொழுகலுற்ற வுடலினராயின ராடவரென்பது. இதுமெய்யுவமை. (௪௬)

காறலத்தொடுதுணிந்தழியக்காய்கதிர்க்
கோறலைத்தலையுறமறுக்கங்கூடினார்
வேறலத்தூன்றினார் துளங்குமெய்யினார்
நாறலைக்குடரினர்பலருநண்ணினார். (௪௭)

பொங்குடறுணிந்ததம்புதல்வர்போக்கிலார்
தொங்குடற்றோண்மிசையிருந்துசோர்வுற
அங்குடற்றம்பியைத்தழுவியண்மினார்
தங்குடர்முதுகிடைச்சொரியத்தள்ளுவார். (௪௮)

மூடியநெய்யொடுநறவுமுற்றிய
சாடிகள்பொரியொடுதகர்ந்துதள்ளுறக்
கோடிகள்பலபலகுழாங்குழாங்களா
ஆடினவறுகுறையறுக்குமாக்கைகள். (௪௯)

காலெனக்கடுவெனக்கலிங்கக்கம்மியர்
நூலெனவுடற்பொறைதொடர்ந்தநோயெனப்

பாலுறுபிரையெனக்கலந்துபன்முறை
வேலுறுசேனையைத்துணித்துவீழ்த்தினான். (௫௦)

கண்டனன்றிசைதொறுநோக்கிக்கண்ணகன்
மண்டலமறிகடலன்னமாப்படை
விண்டெறிகால்பொரமறிந்துவீற்றிரும்
தண்டலையாமெனக்கிடந்ததன்மையே. (௫௧)

மிடலின்வெங்கடகரிப்பிணத்தின்விண்டொடும்
திடலும்வெம்புரவியுந்தேருஞ்சிந்திய
உடலும்வன்றலைகளுமுதிரத்தோங்கலைக்
கடலுமல்லாலிடையொன்றுங்கண்டிலன். (௫௨)

நூறுநூறாயிரகோடிநோன்கழல்
மாறுபோரரக்கரையொருவன்வாட்கணை
கூறுகூறாக்கியகுவையின்சோரியின்
ஆறுமேயன்றியோராக்கைகண்டிலன். (௫௩)

* நஞ்சினும்வெய்யவர்நடுங்கிநாவுலர்ந்
தஞ்சினர்சிலர்சிலரடைகின்றார்சிலர்
வெஞ்சினவீரர்கண்மீண்டிலாதவர்
துஞ்சினர்துணையிலரெனத்துளங்கினார். (௫௪)

ஓமவெங்கனலவிந்துழைக்கலப்பையும்
காமர்வெண்டருப்பையும்பிறவுங்கட்டற
நாமமந்திரத்தொழின்மறந்துநந்துறு
தூமவெங்கனலெனப்பொலிந்துதோன்றினான். (௫௫)

அக்கணத்தடுகளத்தப்புமாரியால்
உக்கவரொழிதரவுயிருளோரெலாம்
தொக்கனரரக்கனைச்சூழ்ந்துசுற்றுறப்
புக்கதுகவிப்பெருஞ்சேனைப்போர்சகடல் (௫௬)

ஆயிரமலருடையாழிமாப்படை
ஏயெனுமளவினினழிந்தவென்பதும்
தூயவன்சிலைவலித்தொழிலுந்துன்பமும்
மேயினவெகுளியுங்கிளரவெம்பினான். (௫௭)

மெய்குலைந்திருநிலமடந்தைவிம்முறச்
செய்கொலைத்தொழிலையுஞ்சென்றதீயவர்
மொய்குலத்திறுதியுமுனிவர்கண்டனர்
கய்குலைக்கின்றதுங்கண்ணினோக்கினான். (௫௮)

---

* நஞ்சினும் - காளகூடவிடத்தினும்.

இந்திரசித்து நியமந்தலைந்து வருந்திக்கூறுதல்.

மானமும்பாழ்படவகுத்தவேள்வியின்
மோனமும்பாழ்படமுடிவிலாமுரட்
சேனையும்பாழ்படச்சிறந்தமந்திரத்
தேனையும்பாழ்படவினையசெப்பினான். (௫௯)

வெள்ளமையைந்துடன்விரிந்தசேனையின்
உள்ளதக்குரோணியீரைந்தொடோயுமால்
எள்ளருவேள்விநின்றினிதியற்றுதல்
பிள்ளைமையனையதுசிதைந்துபோர்ந்ததால். (௬௦)

தொடங்கியவேள்வியின்றாமவெங்கனல்
அடங்கிடாதவிந்துளதமையுமாமன்றே
இடங்கொடுவெஞ்செருவென்றியின்றெனக்
கடங்கியதென்பதற்கேதுவாகுமால். (௬௧)

ஆங்கதுகிடக்கநான்மனிதர்க்காற்றலென்
நீங்கினானென்பதோரிழிவுநேருற
ஈங்குநின்றியாவருமியம்பவென்குலத்
தோங்குபேராற்றலுமொளியுமொல்குமால். (௬௨)

மந்திரவேள்விபோய்மடிந்ததாமெனச்
சிந்தையினினைந்துநொந்திருந்துதேய்வுறல்
அந்தரத்தமரர்தாமனிதர்க்காற்றலன்
இந்திரற்கேயிவன்வலியென்றேசவோ. (௬௩)

என்றவன்பகர்கின்றவெல்லையின்னிருங்
குன்றொடுமரங்களும்பிணத்தின்கூட்டமும்
பொன்றினகரிகளுங்கவிகள்போக்கின
சென்றனபெரும்படையிரிந்துசிந்தின. (௬௪)

ஒதுங்கினரொருவர்கீழொருவர்புக்குறப்
பதுங்கினர்நடுங்கினர்பகழிபாய்தலின்
பிதுங்கினர்குடருடல்பிளவுபட்டனர்
மதம்புலர்களிறெனச்சீற்றமாற்றினார். (௬௫)

வீரன்வெங்கணையொடுங்கவிகள்வீசிய
கார்வரையரக்கர்தங்கடலின்வீழ்ந்தன
போர்நெடுங்கால்பொரப்பொழியுமாமழைத்
தாரையுமேகமும்படிந்ததன்மைய. (௬௬)

---

* மந்திரவேள்வி - இரகசியமாக நடத்தும் யாகம்.

இந்திரசித்தனை அனுமனிகழ்தல்.

திரைக்கடற்பெரும்படையிரிந்துசிந்திட
மரத்தினிற்புடைத்தரைத்துதிர்த்தமாருதி
அரக்கனுக்கணித்தெனவணுகியன்னவன்
உரைக்கதமுறுவதோர்மாற்றமோதினான். (௬௭)

வேறு.

நானுனையிரந்துகூறுநயமொழியொன்றுங்கேளாய்
சானகிதன்னைவாளாற்றடிந்ததோதனதன்றந்த
யானமேற்சேனையோடும்வடதிசைநோக்கிமீது
போனதோகோடிகோடிவஞ்சமும்பொய்யும்வல்லாய். (௬௮)

தடந்திரைப்பரவையன்னசக்கரயூகம்புக்குக்
கிடந்ததுகண்டதுண்டோநானெலகேட்டிலாயோ
தொடர்ந்துபோயயோத்திசன்னைக்கிளையொடுந்துணிய நூறி
நடந்ததெப்பொழுதுவேள்விமுடிந்ததேகருமநன்றே. (௬௯)

எந்தகன்ஞாலமெல்லாமினிதுறைந்தியற்கைசாஙகும்
பாந்தளிற்பெரியதிண்டோட்பரதனைப்பழியிற்றீர்ந்த
வேந்தனைக்கண்டுநீநின்வில்வலங்காட்டிமீண்டு
போந்ததோவுயிருங்கொண்டேயாயினும்புதுமையன்றே. (௭௦)

* அம்பரத்துமைந்தவல்விற்சம்பரனுவிவாங்கி
உம்பருக்குதவிசெய்தவொருவனுக்குதயஞ்செய்த
நம்பியைமுதல்வரானமூவர்க்குநால்வரான
தம்பியைக்கண்டுநின்றன்றறுவலங்காட்டிற்றுண்டோ. (௭௧)

தீயொத்தவயிரவாளியுடலுறச்சிவந்தசோரி
காயத்தின்செவியினூடும்வாயினுங்கண்களூடும்
பாயப்போயிலங்கைபுக்குவஞ்சனைபரப்பச்செயயும
மாயப்போராற்றவெல்லாமின்றுமுடியுமன்றே. (௭௨)

பாசமோமலரின்மேலான்பெரும்படைக்கலமோபண்டை
ஈசனார்படையோமாயோனேமியோயாதோவின்னும்
வீசநீர்விரும்புகின்றீரதற்குநாம்வெருவிச்சாலக்
கூசினேம்போதும்போதுங்கூற்றினார்குறுகவந்தார். (௭௩)

வரங்கணீருடையவாறுமாயங்கள்வல்லவாறும்
பரங்கொள்வான்வரிவிற்றெய்வப்படைக்கலம்படைத்தவாறும்
உரங்களுநின்றதன்றேயும்மைநாமுயிரினோடும்
சிரங்களைத்துணித்துமென்னக்கண்டதுதிறம்பினாமோ. (௭௪)

---

* அம்பரத்து - ஆகாயத்தில்.

விடந்துடிக்கின்றகண்டத்தண்ணலும்விரிஞ்சன்றானும்
படந்துடிக்கின்றநாகப்பாற்கடற்பள்ளியானும்
சடந்துடிக்கிலராய்வந்துதாங்கினுஞ்சாதறிண்ணம்
இடந்துடிக்கின்றதுண்டேயிருத்திரோவியம்புவீரே. (௭௫)

கொல்வெனென்றன்னைத்தானேகுறித்தொருசூளுங்கொண்ட
வில்லிவந்தருகுசார்ந்துன்சேனையைமுழுதும்வீட்டி
வல்லைநீபொருவாயென்றுவிளிக்கின்றான்வரிவினாணின்
ஒல்லொலியையசெய்யுமோமதத்துக்குறுப்பொன்றாமோ. (௭௬)

மூவகையுலகுங்காக்குமுதலவன்றம்பிபூசல்
தேவர்கண்முனிவர்மற்றுந்திறத்திறத்துலகஞ்சேர்ந்தார்
யாவருங்காணநின்றானினியிறைதாழ்ப்பதென்னே
சாவதுசரதமன்றேயென்றனன்றருமங்காப்பான். (௭௭)

இந்திராசித்தின் வீரவசனம்.

அன்னவாசகங்கள்கேளாவனலுயிர்த்தலங்கள்பொற்றோள்
மின்னகுபகுவாயூடுவெயிலுகநகைபோய்வீங்க
முன்னரேவந்திம்மாற்றமொழிகின்றீர்மொழிந்தமாற்றம்
என்னதோநீயிரென்னையிகழ்ந்ததென்றினையசொன்னான். (௭௮)

மூண்டபோர்தோறும்பட்டுமுடிந்தனீர்முறையிற்றீர்ந்து
மீண்டபோததனையெல்லாமறத்திரேவிளிதல்வேண்டி
ஈண்டவாவென்னாநின்றீரித்தனைபேரும்பட்டு
மாண்டபோதுயிர்தந்தீயுமருந்துவைத்தனிரோமான. (௭௯)

இலக்குவனாகமற்றையிராமனேயாகவீண்டு
விலக்குவரெல்லாம்வந்துவிலக்குககுரக்கின்வெள்ளம்
குலக்குலமாகமாளுங்கொற்றமுமனிதர்கொள்ளும்
அலக்கணுமுனிவர்தாமுமமரருங்காண்பரன்றே. (௮௦)

யானுடைவில்லுமென்பொற்றோள்களுமிருக்கவின்னும்
ஊனுடையுயிர்கள்யாவுமுய்யுமோவொளிப்பிலாமல்
கூனுடைக்குரங்கினோடுமனிதரைக்கொன்றுசென்றவ்
வானினுந்தொடர்ந்துகொள்வென்மருந்தினுமுய்யமாட்டார். (௮௧)

வேட்கின்றவேள்வியின்றுபிழைத்ததுவென்றோமென்று
கேட்கின்றவீரமெல்லாங்கிளர்த்துவீர்கிளத்தல்வேண்டா
தாட்கின்றதில்லையும்மைத்தனித்தனிதலைகள்பாறச்
சூட்கின்றவீரமென்கைச்சரங்களாய்த்தோன்றுமன்றே. (௮௨)

மற்றெலாநும்மைப்போலவாயினாற்சொல்லமாட்டேன்
வெற்றிதான்மூன்றுதந்தீர்விரைவதுவெல்லற்கெல்லாம்

உற்றுநானுருத்தகாலத்தொருமுறையெதிரேநிற்கக்
கற்றிரோவின்னமாண்டுகிடத்திரோகடத்திரோதான். (அ௩)

இந்திரசித்துப் போருக்கெழுதல்.

நின்மின்கணின்மினென்றுநெருப்பெழவிழித்துநீண்ட
மின்மின்கொள்கவசமிட்டான்வீக்கினன்றூணிவீரப்
பொன்மின்கொள்கோதைகையிற்பூட்டினன்பொறுத்தான்போர்வில்
என்மின்கொள்வயிரத்திண்டேரேறினனெறிந்தாணி. (அ௪)

ஊதினன்சங்கம்வானத்தொண்டொடிமகளிரொண்கண்
மோதினர்கணத்தின்முன்னேமுழுவது † முருங்கமுற்றிக்
காதினனென்னவானோர்கலங்கினர்கயிலையானும்
போதினன்றானுமின்றுபுகுந்ததுபெரும்போரென்றார். (அ௫)

இழைத்தபேர்யாகந்தானேயாஞ்செய்ததவத்தினாலே
பிழைத்ததுபிழைத்தலாலேயிவனினிப்பிழைக்கலாற்றான்
அழைத்ததுவிதியேயாகுமிலக்குவனம்பினாலே
உழைத்ததுகாண்கின்றமென்றுணங்கினரும்பரெல்லாம். (அ௬)

நாண்டொழிலோசைவீசிச்செவிதொறுநடத்தலோடும்
ஆண்டொழிலுடனேகையினடுக்கியமரனுங்கல்லும்
மீண்டனமறிந்துசோரவீழ்ந்தனவிழுந்தமெய்யே
மாண்டனமென்றேயுன்னியிரிந்ததுகுரங்கின்மாலை. (அ௭)

அநுமன் மலைகொண்டுபொருதல்.

படைப்பெருந்தலைவர்நின்றாரல்லவரிறுதிபற்றும்
அடைப்பருங்காலக்காற்றலாற்றலதாகிக்கீறிப்
புடைத்திரிந்தோடும்வேலைப்புனலெனவிரியலுற்றார்
கிடைத்தபேரநுமனண்டோர்நெடுங்கிரிகிழித்துக்கொண்டான். (அ௮)

நில்லடாநில்லுநில்லுநீயடாவாசிபேசிக்
கல்லடாநின்றதென்னைப்போர்க்களத்தமரர்காணக்
கொல்லலாமென்றோநன்றுகுரங்கென்றற்கூடமென்றே
நல்லைபோர்வாவாவென்றனமனுக்குநமனாய்நின்றான், (அ௯)

வில்லெடுத்துருத்துநின்றவீரருள்வீரனேரே
கல்லெடுத்தெரியவந்தவநுமனைக்கண்ணினோக்கி
மல்லெடுத்துயர்ந்ததோளார்க்கென்கொலோவலியதென்னாச்
சொல்லெடுத்தமரர்சொன்னார்தாதையுந்துணுக்கமுற்றான். (௯௦)

† முருங்க - அழிய.

வீசினன்வயிரக்குன்றம்வெம்பொறிக்குலங்கள்விண்ணின்
ஆசையினிமிர்ந்துசெல்லவாயிரமுருமொன்றாகப்
பூசினபிளப்பிதென்னவருமதன்புரிவைநோக்கிக்
கூசினவுலகமெல்லாங்குலைந்ததவ்வரக்கர்கூட்டம். (௧௧)

குண்டலநெடுவில்வீசமேருவிற்குவிந்ததோளான்
அண்டமுங்குலங்கவார்த்துமாருதியசனியஞ்ச
விண்டலத்தெறிந்தகுன்றம்வெறுந்துகளாகிவீழக்
கண்டனனெய்ததன்மைகண்டிலரிமைப்பில்கண்ணார். (௧௨)

இந்திரசித்தனனுமனை அம்பினால் துன்புறுத்துதல்.

மாறொருகுன்றம்வாங்கிமறுகுவான்மார்பிற்றோளில்
காறருகாலிற்கையிற்கழுத்தினினுதலிற்கண்ணில்
ஏறினவென்பமன்றேவெரிமுகக்கடவுள்வெம்மை
சீறினபகழிமாரிதீக்கடுவிடத்திற்றோய்ந்த. (௧௩)

வெதிரொத்தசிகரக்குன்றின்மருங்குறவிளங்கலானும்
எதிரொத்தவிருளைக்கீறியெழுகின்றவியற்கையானும்
கதிரொத்தபகழிக் * கற்றைகதிரொளிகாட்டலானும்
உதிரத்தின்செம்மையானுமுதிக்கின்றகதிரோனொத்தான். (௧௪)

ஆயவனயர்தலோடுமெங்கதன்முதல்வரானோர்
காய்சினந்திருகிவந்துகலந்தனர்கதிரோன்பெற்ற
தூயசுக்கிரீவன்வந்துதோன்றினன்றோன்றக்கண்டு
தீயவனவனைநோக்கிக்கனலெனச்சினத்துச்சொன்னான். (௧௫)

வெம்பினசெருவின்வந்துமேவினும்வெகுண்டுசீயம்
தும்பியைத்தொடர்வதல்லாற்குரங்கினைத்தொடர்வதுண்டோ
அம்பினைமாட்டியென்னேசிறிதுபோராற்றவல்லான்
தம்பியைக்காட்டித்தாரீர்சாதிரோசலத்தினென்றான். (௧௬)

அனுமனைக்கண்டிலீரோவவனினும்வலியிரோவென்
றனுவுளதன்றோதோளினவ்வலிதவிர்ந்ததுண்டோ
இனுமுனைநீரலீரோவெவ்வலியீட்டிவந்தீர்
மனிதனைக்காட்டிநுந்தமலைதொறும்வழிக்கொளீரே. (௧௭)

என்றுரைத்திளவறன்மேலெழுகின்றவியற்கைநோக்கிக்
குன்றமுமரமும்வீசிக்குறுகினார்குழாங்கடோறும்
சென்றனபகழிமாரிமேருவையுருவித்தீர்வ
ஒன்றலகோடிகோடியுளைந்தனவலியுமோய்ந்த. (௧௮)

---

* கற்றை-கூட்டம்.

படுகின்றதன்றேவுன்றன்பெரும்படைபகழிமாரி
விடுகின்றதன்றேவென்றியரக்கனுங்காளமேகம்
இடுகின்றவேள்விமாண்டதினியவன்பிழைப்புறுமே
முடுகென்றானரக்கன்றம்பிநய்பியுஞ்சென்றுமூண்டான். (௯௯)

வேறு.

இலக்குமணன் அனுமன்றோண்மீது ஏறிநின்று பொருதல்.

வந்தானெடுந்தகைமாருதிமயங்காமுகமலர்ந்தான்
எந்தாய்கடிதேறுயென திருதோண்மிசையென்றான்
அந்தாகவென்றுவந்தையனுமமைவாயினனிமையோர்
சிந்தாகுலங்களைந்தானனெடுஞ்சாரிகைதிரிந்தான். (௧௦௦)

இலக்குமண இந்திரசித்த யுத்தம்.

காராயிரமுடனாகியதெனலாகியகடியோன்
ஓராயிரம்பரிபூண்டதொருயர்தேர்மிசையுயர்ந்தான்
நேராயினரிருவோர்களுநெடுமாருதிமிரும்
பேராயிரமுடையானெனத்திசையெங்கணும்பெயர்ந்தான். (௧௦௧)

தீயொப்பனவுருமொப்பனவுயிர்வேட்டனதிரியும்
பேயொப்பனபசியொப்பனபிணியொப்பனபிழையா
மாயக்கொடுவினையொப்பனமழுவொப்பனகழுகின்
தாயொப்பனசிலவாளிகடொடுத்தான்றுயிறுறந்தான். (௧௦௨)

அவ்வம்பினையவ்வம்பினினறுத்தாணிகலரக்கன்
எவ்வம்பினியுலகத்துளதென்னும்படியெய்தான்
எவ்வம்பரமெவ்வெண்டிசையெவ்வேலைகள்பிறவும்
வவ்வுங்கடையுகமாமழைபொழிகின்றதுமான. (௧௦௩)

* ஆயோனெடுங்குருவிக்குலமெனலாஞ்சிலவம்பால்
பேயோடிடத்துரந்தானவைபொறியோவெனமறியத்
தூயோனுமத்துணைவாளிகள்தொடுத்தானவைதடுத்தான்
தீயோனுமக்கணத்தாயிரநெடுஞ்சாரிகைதிரிந்தான். (௧௦௪)

கல்லுந்நெடுமலையும்பலமரனுங்கடைகாணும்
புல்லுஞ்சிறுபொடியும்மிடைதெரியாவகைபுரியச்
செல்லுந்நெறிதொறுஞ்சென்றனதெறுங்கால்புரைமறவோன்
மல்லின்முதிர்தேருஞ்சினவயமாருதிதாளும். (௧௦௫)

இருவீரருமிவனின்னவனிவனின்னவனென்னச்
செருவீரருமறியாவகைதிரிந்தார்கணைசொரிந்தார்

* ஆயோன்-இந்திரசித்து.

ஒருவீரருமிவரொக்கிலரெனவானவருவந்தார்
பொருவீரையும்பொருவீரையும்பொருதாலெனப்பொருதார். (௧௦௬)

விண்செல்கிலசெல்கின்றனவிசிகம்மெனவிமையோர்
கண்செல்கிலமனஞ்செல்கிலகணிதம்முறுமெனினோர்
எண்செல்கிலநெடுங்காலவனிடைசெல்கிலனுடன்மேல்
புண்செல்வனவல்லாலொருபொருள்செல்வனதெரியா. (௧௦௭)

எரிந்தேறினதிசையாவையுமிடியாமெனப்பொடியாய்
நெரிந்தேறினநெடுநாணொலிபடர்வானிறையுருமின்
சொரிந்தேறினசுடுவெங்கணைதொடுந்தாரகைமுழுதும்
கரிந்தேறினவுலகியாவையுங்கனல்வெம்புகைகதுவ. (௧௦௮)

வெடிக்கின்றனதிசையாவையும்விழுகின்றனவிடிவந்
திடிக்கின்றனசிறுநாணொலியிருவாய்களுமெதிராக்
கடிக்கின்றனகனல்வெங்கணைகலிவானுறவிசைமேல்
பொடிக்கின்றனபொறிவெங்கனலிவைகண்டனர்புலவோர். (௧௦௯)

கடல்வற்றினமலையுக்கனபருவக்கனல்பருகுற்
றுடல்வற்றினமரமுற்றினகனல்பற்றினவுதிரம்
சுடர்பற்றினசுறவுக்கனதுணிபட்டுதிர்கணையின்
திடருற்றதுபரவைக்குழிதிரிவுற்றதுபுவனம். (௧௧௦)

எரிகின்றனவுயில்வெங்கணையிருசேனையுமிரியத்
திரிகின்றனபுடைநின்றிலதிசைசென்றனசிதறிக்
கரிபொன்றினபரிமங்கினகவிசிந்தினகடல்போல்
சொரிகின்றனபொருசெம்புனறொலைகின்றனர்கொலையால். (௧௧௧)

* புரிந்தோடினபுகைந்தோடினபொரிந்தோடினபுகைபோய்
எரிந்தோடினகரிந்தோடினவிடமோடினவலமே
திரிந்தோடினசரிந்தோடினசெறிந்தோடினதிசைமேல்
சரிந்தோடினகருங்கோளரிக்கிளையான்விடுசரமே. (௧௧௨)

நீரொத்தனநெருப்பொத்தனபொருப்பொத்தனநிமிரும்
காரொத்தனவுருமொத்தனகடலொத்தனகதிரோன்
தேரொத்தனவிடைமேலவன்சிரிப்பொத்தனவுலகின்
வேரொத்தனவாயொத்தனநிருதன்விடுசரமே. (௧௧௩)

ஏமத்தடுகவசத்தனவொருவோரெனவிருவோர்
வாமப்பெருந்தோண்மேலெனவதனத்தனவுயிர்த்த
தாமத்தனமார்பத்தனசரணத்தனதங்காக்
காமக்குலமடமங்கையர்கடைக்கண்ணெனக்கணைகள். (௧௧௪)

* புரிந்தோடின - சுழன்றோடின.

எந்நாளினிமெனத்தேவர்களைத்தானவரெவரே
அன்னார்செருவொத்தாரெனவிமையோரெடுத்தார்த்தார்
பொன்னார்சிலையிருகால்களுமொருகால்பொறையுயிரா
முன்னாளினிலிரண்டாம்பிறைமுளைத்தாலெனவளைத்தார். (௧௧௫)

வேகின்றனவுலகங்கிளர்விடுகின்றனவிசிகம்
போகின்றனசுடர்வெந்தனவிமையோர்களும்புலர்ந்தார்
ஆகின்றதொரழிகாலமிதாமன்றெனவயிர்த்தார்
நோகின்றனதிசையானைகள்செவிநாணொலிநுழைய. (௧௧௬)

* மீனுக்கதுநெடுவானகம்வெயிலுக்கதுசுடரும்
மானுக்கதுமுழுவெண்மதிமழையுக்கதுவானம்
தானுக்கதுகுலமால்வரைதலையுக்கதுதகைசால்
ஊனுக்கதுவெவ்வுலகத்தினுமுளவாயினவுயிரும். (௧௧௭)

அக்காலையினயில்வெங்கணையையைந்துபுக்கழுந்தத்
திக்காசறவென்றான்மகனிளங்கோவுடல்செறித்தான்
கைக்கார்முகம்வளையச்சிலகனல்வெங்கணைகவசம்
புக்காகமுங்கழன்றோடிடவிளங்கோளரிபொழிந்தான். (௧௧௮)

தெரிந்தான்சிலசுடர்வெங்கணைதேர்பூண்டனசினமா
இரிந்தோடிடத்துரந்தோடினவிமையோரையுமுன்னாள்
அரிந்தோடினவெரிந்தோடினவவைகோத்தடலரக்கன்
சொரிந்தானுயர்நெடுமொருதிதோண்மேலினிற்றோன்ற. (௧௧௯)

குருதிப்புனல்சொரியும்முயர்குன்றென்னுமவநுமன்
பருதித்திருநிறமொத்தவையிளங்கோளரிபார்த்தான்
ஒருதிக்கினுமுயராவகையவன்றேரினையுதிர்த்தான்
பொருதிக்கணம்வென்றானனச்சரமாரிகள்பொழிந்தான். (௧௨௦)

அத்தேரழிந்ததுநோக்கியவிமையோரெடுத்தார்த்தார்
முத்தேவருமுவந்தாரவனுருமேறெனமுனிந்தான்
தத்தாவொருதடந்தேரினைத்தொடர்ந்தான்சரந்தலைமேல்
பத்தேவினனவைபாய்தலினிளங்கோளரிபதைத்தான். (௧௨௧)

பதைத்தானுடனிலைத்தான்சிலபகுவாயயிற்பகழி
விதைத்தானவன்விலக்காதமுன்விடைமேல்வருவிமலன்
மதத்தாலெதிர்வருகாலனையொருகாலுறமருமத்
துதைத்தாலெனத்தனித்தோர்கணையவன்மார்பிடைதைத்தான். (௧௨௨)

கவசத்தையுநெடுமார்பையுங்கழன்றக்கணைகழிய
அவசத்தொழிலடைந்தானதற்கிமையோரெடுத்தார்த்தார்

* மீனுக்கது - நட்சத்திரம் உதிர்ந்தது.

திவசத்தெழுகதிரோனெனத்திரிகின்றதொர்கணையால்
துவசத்தையுந்துணித்தேயவன்மணித்தோளையுந்தொளைத்தான். (௧௨௩)

உள்ளாடியவுதிரப்புனல்கொழுந்தீயெனவொழுகத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தானுடறரித்தான்
தொள்ளாயிரங்கடும்போர்க்கணைதுரந்தானவைதுறைபோய்
விள்ளாநெடுங்கவசத்திடைநுழையாதுகவெகுண்டான். (௧௨௪)

மறித்தாயிரம்வடிவெங்கணைமருமத்தினைமதியாக்
குறித்தாயிரம்பரித்தேரவன்விடுத்தானவைகுறிபார்த்
திறுத்தானெடுஞ்சரத்தாலொருதனிநாயகற்கிளையோன்
செறித்தானுடல்சிலபொற்கணைசிலைநாணறத்தெறித்தான். (௧௨௫)

வில்லிங்கிதுநெடுமால்சிவனயன்மேலவர்தனுவே
கொல்லென்றுகொண்டயிர்த்தானெடுங்கவசத்தையுங்குலையாச்
செல்லுங்கொடுங்கணையாவையுந்திசையாவையுந்தெரிந்தான்
வெல்லுந்தரமில்லாமையுமறிந்தானறமெலிந்தான். (௧௨௬)

மூத்தன்மையையறிந்தானவன்சிறுதாதையுமனுகா
அத்தன்முகநோக்காவொருமொழிகேளெனமொழிவான்
எத்தன்மையுமிமையோர்களைவென்றுனிகல்கண்டால்
* பித்தன்மனந்தளர்ந்தானினிப்பிழையானெனப்பகர்ந்தான். (௧௨௭)

கூற்றின்படிகொடுத்தானறக்கொலைவாளெயிற்றரக்கன்
ஏற்றுஞ்சிலைநெடுநாணொலியுலகேழினுமெய்தச்
சீற்றந்தலைத்தலைசென்றுறவிதுதீரெனத்தெரியாக்
காற்றின்படைதொடுத்தானவனதுவேகொடுகொத்தான். (௧௨௮)

அனலின்படைதொடுத்தானவனதுவேகொடுகாத்தான்
புனலின்படைதொடுத்தானவனதுவேகொடுபொறுத்தான்
கனவெங்கதிரவன்வெம்படைதுரந்தான்மனங்கரியான்
சினவெந்திறலிளங்கோளரியதுவேகொடுதீர்த்தான். (௧௨௯)

இதுகாத்திகொலென்றுவெடுத்திசிகப்படையெய்தான்
அதுகாப்பதற்கதுவேயுளதென்றுத்தொடுத்தமைத்தான்
செதுகாப்படைதொடுப்பேனெனநினைந்தான்றிசைமுகத்தான்
முதுமாப்படைதுரந்தாலினிமுடிந்தாயெனமொழிந்தான். (௧௩௦)

வானின்றலைநிலைநின்றவர்மழுவாளியுமலரோன்
தானும்முனிவரரும்பிறதவத்தோர்களுமறத்தோர்
கோனும்பிறபிறதேவர்கள்குழுவும்மனங்குலைந்தார்
ஊனம்மினியிலதாகுகவிளங்கோக்கெனவுரைத்தார். (௧௩௧)

* பித்தன் - பைத்தியகாரனை இந்திரசித்து.

ஊழிக்கடையிறுமத்தலையுலகியாவையுமுண்ணும்
ஆழிப்பெருங்கனறன்றொருசுடரென்னவுமாகாப்
பாழிச்சிகைவிரியத்தனிபடர்கின்றதுபார்த்தான்
ஆழித்தனிமுதனாயகற்கிளையானதுமதித்தான். (௧௩௨)

பிரமாத்திர பிரயோகம்.

மாட்டானினிமலரோன்படைமுதற்போதுதன்வலத்தால்
மீட்டானலன்றடுத்தானலன்முடிந்தானெனவிட்டான்
காட்டாதினிக்கரந்தாலதுகருமம்மலதென்றாத்
தாட்டாமரைமலரோன்படைதொடுப்பேனெனச்சமைந்தான். (௧௩௩)

நன்றாகுகவுலகுக்கெனமுதலோன்மொழிநவின்றான்
பின்றாதவனுயிர்மேற்செலவொழிகென்பதுபிடித்தான்
ஒன்றாகவிம்முதலோன்படைதனைமாய்க்கவென்றுரைத்தான்
நின்றானதுதுரந்தானிவன்றனிவானவர்நினைந்தார். (௧௩௪)

தான்விட்டனமலரோன்படையெனின்மற்றிடைதருமே
வான்விட்டதுமன்விட்டதுமறவோனுடலறுமே
தேன்விட்டுகுமலரோன்படைதீர்ப்பாயெனத்தெரிந்தான்
ஊன்விட்டவன்மறம்விட்டிலனெனவானவருவந்தார். (௧௩௫)

உருமேறுவந்தெதிர்த்தாலதனெதிரேநெருப்புய்த்தால்
வருமாங்கதுதவிர்ந்தாலெனமலரோன்படைமாயத்
திருமாறனக்கிளையான்படையுலகேழையுந்தீக்கும்
அருமாகனலெனநின்றதுவிசும்பெங்கணுமாகி. (௧௩௬)

படையங்கதுபடராவகைபகலோன்குலமருமான்
இடையொன்றதுதடுக்கும்படிசெந்தீயுகவெய்தான்
தொடையொன்றினைக்கணைமீமிசைத்துறுவாயினியென்றான்
விடையொன்றொருவிடமுற்றெனவிடுவித்ததுவேகம். (௧௩௭)

விண்ணாரதுகண்டார்வயவீரர்க்கினிமேன்மேல்
* ஒண்ணாதனவுளவோவெனமனந்தேறினருவந்தார்
கண்ணாநுதற்பெருமானவர்க்கரிதோவெனக்கடைபார்த்
தெண்ணாதிவைபகர்ந்தீர்பொருள்கேணீரெனவிசைத்தான். (௧௩௮)

நாராயணநரரென்றிவருளராய்நமர்க்கெல்லாம்
வேராய்முழுமுதற்காரணப்பொருளாய்வினைகடந்தோர்
ஆராயினுந்தெரியாததொர்நெடுமாயையினகத்தார்
பாராயணமறைநான்கையுங்கடந்தார்சிலபழையோர். (௧௩௯)

* ஒண்ணாதன - செய்துமுடிக்கக் கூடாதன.

அறத்தாறழிவுளதாமெனவறிவுந்தொடர்ந்தணுகாப்
புறத்தார்புகுந்தறத்தாரெனப்புகுந்தன்னதுபுரப்பார்
மரத்தார்முதற்குலம்வேரறமாய்ப்பாணிவண்வந்தார்
திறத்தாலதுதெரிந்தியாவருந்தெரியாவகைதிரிவார். (௧௪0)

உயிர்தோறுமுற்றுளன்றோத்திரத்தொருவன்னெனவுரைக்கும்
அயிராநிலையுடையானிவனவனிவ்வுலகனைத்தும்
தயிர்தோய்பிரையெனலாம்வகைகலந்தேறியதலைவன்
பயிராததொர்பொருளின்னதென்றுணரீரிதுபரமால். (௧௪௧)

நெடும்பாற்கடற்கிடந்தானும்பண்டிலர்நாங்குறைநேர
விடும்பாக்கியமுடையார்களைக்குலத்தோடறவீட்டி
இடும்பாக்கியத்தறங்காப்பதிற்கிசைந்தாரெனவிதெலாம்
அடும்பாக்கியத்துடைச்செஞ்சடைமுதலோன்பணித்தமைந்தான். (௧௪௨)

அறிந்தேயிருந்தறியேமவனெடுமாயையினயிர்ப்பேம்
பிறிந்தேமினிமுழுதையமும்பெருமானுரைபிடித்தேம்
எறிந்தேம்பகைமுழுதும்மினித்தீர்ந்தேமிடர்கடந்தேம்
செறிந்தோர்வினைப்பகைவாவெனத்தொழுதார்நெடுந்தேவர். (௧௪௩)

சக்கரப் பிரயோகம்.

மாயோனெடும்படைவாங்கியவளைவாளெயிற்றரக்கன்
நீயோவிதுதடுப்பாயெனினினக்காரெதிர்நிற்பார்
போயோவிசும்படைவாயிதுபிழையாதெனப்புகலாத்
தூயோன்மிசையுலகியாவையுந்தடுமாறிடத்துரந்தான். (௧௪௪)

இலக்குமணன் தன்னை நாராயணனாகநினைக்க வாழிவணங்கி விலகுதல்.

சேமித்தனரிமையோர்தமைச்சிரத்தேந்தியகரத்தார்
ஆமித்தொழில்பிறர்யாவருமடைந்தார்பழுதடையாக்
காமிப்பதுமுடிவிப்பதுபடிகின்றதுகண்டான்
நேமித்தனியரிதானெனநினைந்தா *னெதிர்நடந்தான். (ச௪௫)

நீக்கின்றதிவ்வுலகேழையுமெனச்செல்வதுந்தெரிந்தான்
நீக்குந்தரமல்லாமுழுமுதலோனெனநினைந்தான்
வீக்கின்றிலதயல்சென்றதுவிலங்காவலங்கொடுமேல்
போய்த்தங்கதுகனன்மாண்டதுபுகைவீந்ததுபொதுவே. (௧௪௬)

எத்தாடினரிமையோர்களுங்கவியின்குலமெல்லாம்
கூத்தாடினரரமங்கையர்குனித்தாடினர்தவத்தோர்
காத்தாயுலகனைத்தும்மெனக்களித்தாடினர்கமலம்
பூத்தானுமம்மழுவாளியுமுழுவாய்கொடுபுகழ்ந்தார். (௧௪௭)

---

* எதிர்நடந்தான் - நேமியினெதிரேசென்றான்.

பாசுபதாத்திரப் பிரயோகம்.

அவனன்னது கண்டானிவனாரோவெனவயிர்த்தான்
இவனன்னதுமுதலேயுடையிறையோனெனவியவா
எவனென்னினுநன்றாகுகவினியெண்ணலெனென்னாச்
* சிவனன்படைதொடுத்தாருயிர்முடிப்பேனெனத்தெரிந்தான். (௧௪௮)

பார்ப்பான்றருமுலகியாவையுமொருநாளொருபகலே
தீர்ப்பான்படைதொடுப்பேனெனத்தெரிந்தானதுதெரியா
மீப்பாவியவிமையோர்குலம்வெருவுற்றதிப்பொழுதே
மாய்ப்பானெனவுலகியாவையுமறுகுற்றனமயங்கா. (௧௪௯)

நானேசிவன்றரப்பெற்றதுதவநாள்பலவுழந்தே
தானேபிறரறியாததுதந்தேனெனச்சமைந்தான்
ஆனாலிவனுயிர்கோடலுக்கையம்மிலையென்னா
மேனாளுமிதனையேவிடினெதிர்நிற்பவரில்லை. (௧௫௦)

மனத்தான்மலர்புனல்சாந்தமொடவிதூபமும்வகுத்தான்
நினைத்தானிவனுயிர்கொண்டிவணிமிர்வாயெனநிமிர்த்தான்
சினத்தானெடுஞ்சிலைநாண்டடந்தோண்மேலுறச்செலுத்தா
எனைத்தாயதொர்பொருளாலிடைதடையில்லதைவிட்டான். (௧௫௧)

சூலங்களுமழுவுஞ்சுடுகணையுங்கறைசுடரும்
ஆலங்களுமரவங்களுமசனிக்குலமெவையும்
காலன்றனதுருவங்களுங்கரும்பூதமும்பெரும்பேய்ச்
சாலங்களுநிமிர்கின்றனவுலகெங்கணுந்தானாய். (௧௫௨)

ஊழிக்கனலொருபாலதனுடனேதொடர்ந்துடற்றும்
சூழிக்கொடுங்கடுங்காற்றதனுடனேவரத்தூர்க்கும்
வழிற்குமப்புறத்தாயுள பெரும்போர்க்கடலிழிந்தாங்
காழித்தலைகிடந்தாலென ஒருதூங்கிருளடைய. (௧௫௩)

இரிந்தார்குலநெடுந்தேவர்களிருடிக்குலத்தெவரும்
பரிந்தாரிதுபழுதாகிலதிறுவானெனும்பயத்தால்
நெரிந்தாங்கழிகுரங்குற்றதுபகருந்துணைநெடிதே
திரிந்தாரிருசுடரோடுலகொருமூன்றுடன்றிரிய. (௧௫௪)

இலக்ஷ்மணனல்லாதார் பாசுபதாத்திரங்கண்டு நடுங்குதல்.

பார்த்தானெடுந்தகைவீடணனுயிர்காலுறப்பயத்தால்
வேர்த்தானிதுவிலக்குந்துணையுளதோமுதல்வீரர்
தீர்த்தாவெனவழைத்தானதற்கிளங்கோளரிசிரித்தான்
போர்த்தாரடர்கவிவீரருமவன்றாணிழல்புகுந்தார். (௧௫௫)

---

* சிவனன்படை - பாசுபதாத்திரம்.

* அவையம்முனக்கவயம்மெனுமனைவோரையுமஞ்சேல்
அவையம்முமக்களித்தோமெனத்தன்கைத்தலத்தமைத்தான்
உவையம்முறுமுலகின்பயமுணர்ந்தேனினியொழியேன்
சிவையன்மனமுடையான்படைதொடுப்பேனெனத்தெளிந்தான். (௧௫௬)

அப்பொற்படைமனத்தானினைந்தர்ச்சித்ததையழிப்பாய்
இப்பொற்படைதனைமற்றொருதொழில்செய்கிலையென்னாத்
துப்பொப்பதொர்கணைகூட்டினன்றுரந்தானவைதொடரா
எப்பொற்படையெவையும்புகவிழுங்குற்றதொரிமைப்பின். (௧௫௭)

விண்ணார்த்ததுமண்ணார்த்ததுமேலோர்மணிமுரசின்
கண்ணார்த்ததுகடலார்த்ததுமழையார்த்ததுகலையோ
டெண்ணார்த்ததுகவியார்த்ததுவிசயம்மெனவிசயப்
பெண்ணார்த்தனளமரார்த்ததுபிறரார்த்ததுபெரிதால். (௧௫௮)

இறுகாலையினுலகியாவையுமவிப்பானிகற்படையை
மறுகாவகைவலித்தானதுவாங்கும்படிவல்லான்
தெறுகாலனிற்கொடியோனுமற்றதுகண்டகந்திகைத்தான்
அறுகால்வயக்கவிவீரருமரியென்பதையறிந்தார். (௧௫௯)

தெய்வப்படைபழுதுற்றதுவெனக்கூசுதல்சிதையா
வெய்வித்தகமுளதென்னிதுபிழையாதெனவிசையாக்
கய்வித்தகமதனாற்சிலகணைவித்தினனவையும்
மொய்வித்தகன்றடந்தோளினுநுதற்சூட்டினுமூழ்க. (௧௬0)

வெய்யோன்மகன்முதலாகியவிறலோர்மிகுதிறலோர்
கய்யோய்விலர்மலைமாரியினிருதக்கடல்கடப்பார்
உய்யாரெனவடிவாளிகள்சதகோடிகளுய்த்தான்
வெய்யோனயறனிநின்றதன்சிறுதாதையைவெறுத்தான். (௧௬௧)

வேறு.

விபீடணனை இந்திரசித்திகழ்தல்.

முரட்டடந்தண்டுமேந்திமணிதரைமுறையைக்குன்றிப்
பிரட்டரிற்புகழ்ந்துபேதையடியரினிரந்துபின்சென்
றிரட்டுறுமுரசமென்னவிசைத்ததேயிசைக்கின்றாயைப்
புரட்டுவென்றலையையின்றுபழியெனவொழிவென்போலாம். (௧௬௨)

விழிபடமுதல்வரெல்லாம்வெதும்பினரொதுங்கவீழ்ந்து
வழிபடவுலகமூன்றுமடிபடவந்ததேனும்
அழிபடைதாங்கலாற்றுமாடவர்யாண்டும்வெஃகாப்
பழிபடவந்தவாழ்வையாவரேபகரற்பாலார். (௧௬௩)

---

* அவையம் - அபையம் அது பயமின்மையைச்·செய்யெனல்.

நீருளதனையுமுள்ளமீனெனநிருதரெல்லாம்
வேருளதனையும்வீவாரிராவணனோடுமீளார்
ஊருளதொருவனின்றுய்ந்நீயுளையுறையநின்னோ
டாருளரரக்கர்சிற்பாரரசுவீற்றிருக்கவையா. (௧௬௪)

முந்தைநாளுலகந்தந்தமூத்தவானோர்கட்கெல்லாம்
* தந்தையார்தந்தையாரைச்செருவிடைச்சாயத்தள்ளிக்
கந்தனார்தந்தையாரைக்கயிலையோடொருகைக்கொண்ட
எந்தையாயரசுசெய்வதிப்பெரும்பலங்கொண்டேயோ. (௧௬௫)

பனிமலர்த்தவிசின்மேலோன்பார்ப்பனகுலத்துக்கெல்லாம்
தனிமுதற்றலைவனானவுன்னைவந்தமரர்தாழ்வார்
மனிதருக்கடிமையாய்நீயிராவணன்செல்வமாள்வாய்
இனியுனக்கென்னோமானமெங்களோடடங்கிற்றன்றே. (௧௬௬)

சொல்வித்தும்பழித்துநங்கைமூக்கினைத்துணிவித்தோரார்
எல்வித்தும்படைக்கையுங்கடமையனையெங்களோடும்
கொல்வித்துந்தோற்றுநின்றகூற்றினார்குலத்தையெல்லாம்
வெல்வித்தும்வாழும்வாழ்வின்பெருமையேவிழுமிதன்றே.. (௧௬௭)

எழுதியேரணிந்ததிண்டோளிராவணனிராமனம்பால்
புழுதியேபாயலாகப்புரண்டநாள்புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோநீயுங்கூடவார்த்தியோவிவனைவாழ்த்தித்
தொழுதியோயாதோசெய்யத்துணிந்தனைவிசயத்தோளாய். (௧௬௮)

ஊனுடையுடம்பினீங்கிமருந்தினாலுயிர்வந்தெய்து
மானுடரிலங்கைவேந்தைக்கொல்வரேநீயுமன்னான்
தானுடைச்செல்வந்துய்க்கத்தகுதியேசரத்தினோடும்
வானிடைப்புகுதியன்றேயான்பழிமறுக்கினென்றான். (௧௬௯)

இந்திரசித்திற்கு விபீடணன் பதிலுரைத்தல்.

அவ்வுரையமையக்கேட்டவீடணனலங்கன்மோலி
செவ்விதிற்றுளக்கித்தன்பான்முறுவலுந்தெரிவதாக்கி
வெவ்விதுபாவஞ்சாலத்தருமமேவிழுமிதைய
இவ்வுரைகேட்டியென்றுவினையனவிளம்பலுற்றான். (௧௭௦)

அறந்துணையாவதல்லாலருநரகமையநல்க
மறந்துணையாகமாயாப்பழியொடும்வாழமாட்டேன்
துறந்திலேன்மெய்ம்மையெய்தும்பொய்ம்மையேதுறப்பதல்லால்
பிறந்திலேனிலங்கைவேந்தன்பின்னவன்பிழைத்தபோதே. (௧௭௧)

---

* தந்தையார் தந்தையார்- திருமால்.

உண்டிலெனறவம்பொய்ம்மையுரைத்திலென்வலியாலொன்றும்
கொண்டிலென்மாயவஞ்சங்குறித்திலென்யாருங்குற்றம்
கண்டிலரென்பாலுண்டேனீயிருங்காண்டிரன்றே
பெண்டிரிற்றிறம்பினாரைத்துறந்ததுபிழையிற்றாமோ. (கஎஉ)

மூவகையுலகமேத்துமுதலவனெவர்க்குமூத்த
தேவர்தந்தேவன்றேவிகற்பினிற்சிறந்துளாளை
நோவெனசெய்தநீதென்றுரைப்பநுன்றாதைசீறிப்
போவெனப்போந்தேனின்றுநரகதிற்பொருந்துவேனோ. (கஎங)

வெம்மையிற்றருமநோக்காவேட்டதேவேட்டுவீயும்
உம்மையேபுகழும்பூண்கதுறக்கமுமுமக்கேயாக
செம்மையிற்பொருந்திமேலோரொழுக்கினோடறத்தைத்தேறும்
எம்மையேபழியும்பூண்கநரகமுமெமக்கேயாக. (கஎச)

அறத்தினைப்பாவம்வெல்லாதென்னுமதறிந்துஞானத்
திறத்தினதுறுமென்றெண்ணித்தேவர்க்குந்தேவைச்சேர்ந்தேன்
புறத்தினிற்புகழேயாகபழியொடும்புணர்கபோதச
சிறப்பினிப்பெறுகதீர்கவென்றனன்சீற்றந்தீர்ந்தான். (கஎரு)

இந்திரசித்து விபீடணன்மீது அம்பேவுதல்.

பெறுஞ்சிறப்பெல்லாமென்கைப்பிறைமுகப்பகழிபெற்றால்
இறுஞ்சிறப்பில்லையையெங்கினிப்போவையென்னாத்
தெறுஞ்சிறைக்கலுழனன்னவொருகணைதொடுத்துச்செம்பொன்
உறுஞ்சுடர்க்கழுத்தைநோக்கிநூக்கினானுருமின்வெய்யோன். (கஎசு)

விபீடணன்மீது வந்தவம்பினை இலக்குமணன் தடுத்தல்.

அக்கணையசனியென்னவன்றெனவாலமுண்ட
முக்கணான்சூலமென்னமுடுகியமுடிவைநோக்கி
இக்கணத்திற்றாணிற்றானென்கின்றவிமையோர்காணக்
கைக்கணையொன்றால்வள்ளலக்கணைகண்டங்கண்டான். (கஎஎ)

இந்திரசித்து வேலேவுதலு மிலக்குமணன் தடுத்தலும்.

கோலொன்றுதுணிதலோடுங்கூற்றுக்குங்கூற்றமன்னான்
வேலொன்றுவாங்கிவிட்டான்வெயிலொன்றுவிழுவதென்ன
நாலொன்றுமூன்றுமானபுவனங்கணடுங்கலோடும்
நூலொன்றுவிதிவலானுமதனையுநுறுக்கிவீழ்த்தான். (கஎஅ)

விபீடணன் இந்திரசித்தின் தேர்ப்புரவியாதியவழித்தல்.

வேல்கொடுகொல்லலுற்றானென்றொருவெகுளிபொங்கக்
கால்கொடுகாலிற்கூடிக்கைதொடர்கனகத்தண்டால்
கோல்கொளுமொருவனோடுங்கொடித்தடந்தேரிற்பூண்ட
பால்கொளும்புரவியெல்லாம்படுத்தினான்றுடிப்புமாற. (கஎகூ)

அழிந்ததேர்மீதுநின்றானுயிரகோடியம்பால்
பொழிந்தவன்றோளின்மேலுமிலக்குவன்புயத்தின்மேலும்
ஒழிந்தபேருரத்தின்மேலுமுதிரநீர்வாரியோதம்
அழிந்திழிந்தோடநோக்கியண்டமுமிரியவார்த்தான். (௧௮௦)

இந்திரசித்து மறைந்திராவணனிடம் புகுதல்.

ஆர்த்தவனனையபோழ்தினழிவிலாத்தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில்புரியலாகாதென்பதோர்பொருளையுன்னிக்
காத்தவரிமையாமுன்னம்விசும்பிடைக்கரந்தானென்னும்
வார்த்தையைநிறுத்திப்போனானிராவணன்மருங்குசென்றான். (௧௮௧)

௨௬ - வது, நிகும்பலைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௦௭௧.

---

௨௭ - வது, இந்திரசித்துவதைப்படலம்.

இராவணனிந்திரசித்தை வினவுதல்.

விண்ணிடைக்கரந்தானென்பார்வஞ்சனைவிளைக்குமென்பார்
கண்ணிடைக்கலக்கனோக்கியையுறவுழக்குங்காலை
புண்ணிடையாக்கைச்செந்நீரிழிதரப்புக்குநின்ற
எண்ணுடையமகனைநோக்கியிராவணனினையசொன்னான். (௧)

தொடங்கியவேள்விமுற்றும்பெற்றிலாத்தொழினின்றோண்மேல்
அடங்கியவம்பேயென்னையறிவித்ததழிவில்யாக்கை
நடுங்கினைபோலச்சாலத்தளர்ந்தனைகலுழனண்ணப்
படங்குறையரவமொத்தாயுற்றதுபகர்தியென்றான். (௨)

இந்திரசித்துப் பதிலுரைத்தல்.

சூழ்வினைமாயையெல்லாமும்பியேதுடைக்கச்சுற்றி
வேள்வியைச்சிதையநூறிவெகுளியாலெழுந்துவீங்கி
ஆள்வினையாற்றலாற்றானமர்த்தொழிற்புக்குநின்றான்
தாழ்விலாப்படைகண்மூன்றுந்தொடுத்தனென்றடுத்துவிட்டான். (௩)

இந்திரசித் திலக்குமணன் பெருமைகூறுதல்.

நிலஞ்செய்துவிசும்புஞ்செய்துநெடியவன்படைநின்றானை
வலஞ்செய்துபோவதானான்மற்றினிவலியதுண்டே

குலஞ்செய்தபாவத்தாலேகொடும்பழிதேடிக்கொண்டேம்
சலஞ்செயினுலகமூன்றுமிலக்குவன்முடிப்பன்றானே. (௪)

முட்டியசெருவின்முன்னமுதலவன்படையைமுன்பா
விட்டிலருலகையஞ்சியாதலால்வென்றுமீண்டேன்
இட்டியபோதுங்காத்தாரின்னமுங்கிளரவல்லார்
சுட்டியவலியினாலேகோறலைத்துணிந்துநின்றார். (௫)

ஆதலானஞ்சினேனென்றருளலையாசைதானச
சீதைபால்விடுதியாயினனையவர்சீற்றந்தீர்வர்
போதலும்புரிவர்செய்ததீமையும்பொறுப்பருன்மேல்
காதலானுரைத்தேனென்றானுலகெலாங்கலக்கிவென்றான். (௬)

இராவணன் இந்திரசித்தனை வெறுத்தல்.

இயம்பலுமிலங்கைவேந்தனெயிற்றிளநிலவுமெய்தப்
புயங்களுங்குலுங்கநக்குப்போர்க்கினிமொழிதிபோலாம்
மயங்கினைமனிதன்றன்னையஞ்சலைவருந்தலைய
சயங்கொடுதருவெனின்றேமனிதரைத்தனுவொன்றாலே. (௭)

முன்னையோரிறந்தாரெல்லாமிப்பகைமுடிப்பரென்றும்
பின்னையோர்நின்றாரெல்லாம்வென்றனர்பெயர்வரென்றும்
உன்னைநீயவரைவென்றுதருதியென்றுணர்ந்துமன்றால்
என்னையேநோக்கியானிந்நெடும்பகைதேடிக்கொண்டேன். (௮)

பேதைமையுரைத்தாய்மைந்தவுலகெலாம்பெயரப்பேராக்
காதையென்புகழினோடுநிலைபெறவமரர்காண
மீதெழுமொக்குளன்னயாக்கையைவிடுவதல்லால்
சீதையைவிடுவதுண்டோவிருபதுதிண்டோளுண்டால். (௯)

வென்றிலெனென்றபோதும்வேதமுள்ளளவும்யானும்
நின்றுளனன்றோமற்றவ்விராமன்பேர்நிற்குமாயின்
பொன்றுதலொருகாலத்துந்தவிருமோபொதுமைத்தன்றோ
இன்றுளார்நாளைமாள்வார்புகழுக்குமிறுதியுண்டோ. (௧0)

விட்டனன்சீதைதன்னையென்னலும்விண்ணோர்நண்ணிக்
கட்டுவதல்லாற்பின்னையாரெனக்கருதுவாரோ
பட்டனனென்றபோதுமெளிமையிற்படுகிலேன்யான்
எட்டினோரிரண்டுமாயதிசைகளையெறிந்துவென்றேன். (௧௧)

சொல்லியென்பலவுநீநின்னிருக்கையைத்தொடர்ந்துதோளில்
புல்லியபகழிவாங்கிப்போர்த்தொழிற்சிரமம்போக்கி
எல்லியுங்கழித்தியென்னாவெழுந்தனனெழுந்துபேழ்வாய்
வல்லியமுனிந்தாலன்னான்வருகதேர்தருகவென்றான். (௧௨)

இந்திரசித் திராவணனைத்தடுத்துத் தானிரதமேறுதல்.

எழுந்தனன்றன்னைநோக்கியிணையடியிறைஞ்சியெந்தாய்
ஒழிந்தருள்சீற்றஞ்சொன்னவுறுதியைப்பொறுத்தியானே
கழிந்தனெனென்றபின்னர்நல்லவாக்காண்டியென்று
மொழிந்தனன்றெய்வத்தேர்மேலேறினான்முடியலுற்றான். (கங)

படைக்கலவிஞ்சைமற்றும்படைத்தனபலவுந்தன்பால்
அடைக்கலமாகத்தேவரளித்தனவெல்லாம்வாங்கிக் [ன்னைக்
கொடைத்தொழில்வேட்டோர்க்கெல்லாங்கொடுத்தனன்கொடியோன்ற
கடைக்கணானோக்கிநோக்கியிருகணீர்கலுழப்போனான். (கச)

இலங்கையினிருதரெல்லாமழிந்தனர்விரைவினெய்தி
விலங்கலந்தோளநின்னைப்பிரிகலம்விளிதுமென்னா
வலங்கொடுதொடர்ந்தார்தம்மைமன்னனைக்காமின்யாதும்
கலங்கலிரினிமேற்சென்றுமணிதரைக்கடப்பலென்றான். (கரு)

வணங்குவார்வாழ்த்துவார்தன்வடிவினைநோக்கித்தம்வாய்
உணங்குவாருயிர்ப்பாருள்ளமுருகுவார்வெருவலுற்றுக்
கணங்குழைமகளிரீண்டியிரைத்தவர்கடைக்கணென்னும்
அணங்குறைநெடுவேல்பாயுமமர்கடந்தரிதிற்போனான். (கசு)

ஏயினனின்னனாகவிலக்குவனெடுத்தவில்லான்
சேயிருவிசும்பைநோக்கிவீடணற்யோனப்பால்
போயினனாதல்வேண்டும்புரிநதிலனென்றுமென்பான்
ஆயிரம்புரவிபூண்டதேரின்பேரரவங்கேட்டான். (கஎ)

வேறு

குன்றிடைநெரிதரவடவரையின்குவடுருள்குவதெனமுடுகுதொறும்
பொன்றிணிகொடியனதிடியுருமினதிர்குரன்முரல்லதுபுனைமணியின்
மின்றிரள்சுடரதுகடல்பருகும்வடவனல்வெளியுறவருவதெனச்
சென்றதுதிசைதிசையுலகிரியத்திரிபுவனமுழுறுதனியிரதம். (கஅ)

கடன்மறுகிடநிலைகுலையநெடுங்கரியிரிதரவெதிர்கவிகுலமும்
குடன்மறுகிடமலைகுலையநிலங்குழியொடுகிழிபடவழிபடரும்
இடமறுகியபொடிமுடுகிடலுமிருளுளதெனவெழுமிகலரவின்
படமறுகிடவெதிர்பரவியவண்பகலிருள்வருவனபகையிரதம். (ககூ)

இந்திரசித்தின்போர்.

ஆர்த்ததுநிருதர்தமனிகமுடனமரரும்வெருவினர்கவிகுலமும், வேர்த்ததுவெருவலொடலம்வரலால்விடுகணைசிதறினனடுதொழிலோன், தீர்த்தனுமவனெதிர்முடுகிநெடுந்திசைசெவிடெறிதரவிசைகெழுதிண், போர்த்தொழில்புரிதலுமுலகுசுடும்புகையொடுசிகையனல்பொதுளியதால். ()

வீடணனமலனைவிறல்கெழுபோர்விடலையயினியிடைவிடலுளதேல்
சூடலைதுறுமலர்வாகையெனத்தொழுதனனவ்வளவிலழகனுமக்
கோடணைவரிசிலையுலகுலையக்குலவரைபிதிர்படநிலவரையின்
சேடனும்வெருவுறவுருமுறழ்திண்டெறுகணைமுறைமுறைசிதறினனால்.

ஆயினவளவையினனன்முகவாயடுகணையவன்விடவிவன்விடலும்
தீயினுமெரிவனவுயிர்பருகச்சிதறினகவிகளோடினர்நிருதர்
போயினதிசைதிசையனநிறையப்புரள்பவர்முடிவிலர்பொருதிறலோர்
ஏயினவொருவரையொருவர்குறித்தெரிகணையிருமழைபொழிவனபோல்.

அற்றனவனல்விழிநிருதன்வழங்கடுகணையிடையிடையடலரியின்
கொற்றவன்விடுகணைமுடிகியவனுடல்பொதிகுருதிகள்பருகினகொண்
டுற்றனவொளிகிளர்கவசநுழைந்துறுகிலதெறுகிலவநுமனுடல்
புற்றிடையரவெனநுழையநெடும்பொருசரமவனவையுணர்கிலனால். (௨௩)

ஆயிடையிளையவன்விடமனையானவணிடுகவசமுமழிவுபடத்
தூயினனயின்முகவிசிகநெடுந்தொளைபடவிழியனல்சொரியமுனிந்
தேயினனிருதனதெரிகணைதானிடனிலபடுவனவிடையிடைவந்
தோய்வுறுவனவதுதெரிவுறலாலுரறினரிமையவருவகையினால். (௨௪)

வில்லினின்வலிதரவரிதெனலால்வெயிலினுமனலுமிழயில்விரைவிற்
செல்லெனமிடல்கொடுகடவினன்மற்றதுதிசைமுகன்மகனுதவியதால்
எல்லினும்வெளிபடவெதிர்வதுகண்டிளையவனெழுவகைமுனிவர்கடம்
'சொல்லினும்வலியதொர்சுடுகணையானடுவிருதுணிபடவுரறினனால். ()

ஆணியினிலையெனவிசிகனுழைத்தாயிரமுடல்புகவழிபடுசெஞ்
சோணிதநிலமுறவுலறிடவுந்தொடுகணைவிடுவனமிடல்கெழுதிண்
பாணிகள்கடுகினமுடுகிடலும்பகலவன்மருமகனடுகணைவன்
றாணியையுருமுறழ்பகழிகளாற்றுணிபடமுறைமுறைசிதறினனால். (௨௬)

தேருளதெனினிவன்வலிதொலையானெனுமதுதெரிவுறவுணருறுவான்
போருருபுரவிகள்படுகிலவாற்புனைபிணிதுணிகிலபொருகணையால்
சீறிதுபெரிதிதனிலைமையெனத்தெரிபவனொருசுடுதெறுகணையால்
சாரதிமலைபுரைதலையைநெடுந்தரையிடையிடுதலுநிலைதிரிய. (௨௭)

வேறு.

உய்வினையொருவன்றூண்டானுலத்தலிற்றவத்தைநண்ணி
அய்வினைநலியநைவானறிவிற்குமுவமையாகி
மெய்வினையமைந்தகாமம்விற்கின்றவிரகிற்றேலாப்
பொய்வினைமகளிர்கற்பும்போன்றதப்பொலம்பொற்றிண்டேர். (௨௮)

துள்ளுபாய்புரவித்தேருமுறைமுறைதானேதூண்டி
அள்ளினன்பறிக்குந்தன்பேராகமேயாவமாக

வள்ளன்மேலநுமன் றன்மேன்மற்றையோர்மற்றிண்டோண்மேல்
உள்ளுறப்பகழி தூவியார்த்தனனெவருமுட்க. (௨௯)

வீரரென்பார்க்கட்கெல்லாமுன்னிற்கும்வீரர்வீரன்
பேரரென்பார்களாகும்பெற்றியிற்பெற்றித்தாமே
சூரரென்றுரைக்கற்பாலார்துஞ்சும்போதுணர்விற்சோரார்
தீரரென்றமரர்செப்பிச்சிந்தினார்தெய்வப்பொற்பூ. (௩0)

எய்தவன்பகழியெல்லாம்பறித்தவனென்மேலெய்யும்
கய்தடுமொரு துள்ளமுயிரினங்கலங்காதியாக்கை
மொய்கணைகோடிகோடிமொய்க்கவுமிளைப்பொன்றில்லான்
அய்யனுமிவனேடெஞ்சுமாண்டொழிலாற்றலென்றான். (௩௧)

தேரினைக்கடாவிவானிற்செல்லினுஞ்செல்லுஞ்செய்யும்
போரினைக்கடந்துமாயம்புணர்க்கினும்புணர்க்கும்போயக்
காரினைகடந்தும்வஞ்சங்கருதினுங்கருதுங்காண்டி
வீரமெய்ப்பகலினல்லால்விளிகிலனிருளின்வெய்யோன். (௩௨)

என்றெடுத்திலங்கைவேந்தற்கிளையவனியம்பவின்னே
பொன்றுவதல்லாலப்பாலினியொருபோக்குமுண்டோ
சென்றுழிச்செல்லுமென்றேதெறுகணைவலியிற்றீர்ந்தால்
வென்றியிப்பொழுதேகோடிங்காணெனவிளம்புமெல்லை. (௩௩)

சூரியனுதித்தல்.

செம்புனற்சோரிச்செக்கர்திசையுறச்செறிகையாலும்
அம்பெனவுற்றகொற்றத்தாயிரங்கதிர்களாலும்
வெம்புபொற்றேரிற்றோன்றுஞ்சிறப்பினுமரக்கன்வெய்யோன்
உம்பரிற்சென்றானொத்துதித்தனனருக்கனுப்பால். (௩௪)

விடிந்தது பொழுதும் வெய்யோன்விளங்கினனுலகமீதா
விடுஞ்சுடர்விளக்கமென்னவரக்கரினிருளும்வீயக்
கொடுஞ்சினமாயச்செய்கைவலியொடுங்குறைந்துகுன்ற
முடிந்தனனரக்கனென்றுமுழங்கினரும்பர்முற்றும். (௩௫)

ஆரழியாதகூலத்தண்ணறனருளினீந்த
தேரழியாதபோதுஞ்சிலைகரத்திருந்தபோதும்
போரழியானிவ்வெய்யோன்புகழழியாதபொற்றோள்
வீரவிதாணையென்றான்வீடணன்வினைவதோர்வான். (௩௬)

பச்சைவெம்புரவிவீயாபல்லியற்சில்லிபாரின்
நிச்சயமற்றுநீங்காவென்பதுநினைந்துவில்லின்
விச்சையின்கணவனுனன்வின்மையால்வயிரமிட்ட
அச்சினோடழிவெவ்வேறாக்கினனிணிநீக்கி. (௩௭)

மணிநெடுந்தேரின்றட்டுவிட்டதுமறிதலோடும்
அணிநெடும்புரவியெல்லாமாற்றலவாயவன்றே
திணிநெடுமரமொன்றாழிவாண்மழுத்தாக்கச்சிந்திப்
பணைநெடுமுதலுநீங்கிப்பாங்குறுபறவைபோல. (௩௮)

இந்திரசித்துவானத்துண் மறைந்துபோருதல்.

அழிந்ததேர்த்தட்டினின்றுமங்குள்ளபடையையள்ளிப்
பொழிந்தனனிளையவள்ளல்கணைகளாற்றுணித்துப்போக்க
மொழிந்திருவகையில்விண்ணைமூட்டினானுலகமூன்றும்
கிழிந்தனவென்னவார்த்தான்கண்டிலரோசைகேட்டார். (௩௯)

மல்லின்மாமாரியன்னதோளினான்மழையின்வாய்ந்த
கல்லின்மாமாரிபெற்றவரத்தினாற்சொரியுங்காலைச்
செல்லுவான்றிசையுளோரார்சிரத்தினோடுடல்கள்சிந்தப்
புல்வினார்நிலத்தைநின்றவானரவீரர்போகார். (௪௦)

காண்கிலன்கல்லின்மாரியல்லதுகாளைவீரன்
சேண்கலந்தொளித்துநின்றசெய்கையாற்றிசைகளெங்கும்
மாண்கலந்தளந்தமாயன்வடிவெனமுழுதும்வௌவ
ஏண்கலந்தமைந்தவாளியேவினானிடைவிடாமல். (௪௧)

மறைந்தனதிசைகளெங்குமாறுபோய்மலையுமாற்றல்
குறைந்தனவிருண்டமேகக்குழாத்திடைக்குருதிக்கொண்மூ
உறைந்துளதென்னநின்றானுருவினையுலகமெல்லாம்
நிறைந்தமன்கண்டான்காணாவினையதோர்நினைவதானான். (௪௨)

இந்திரசித்தின் காமறுத்தல்.

சிலையறுதெனினுமற்றத்திண்ணியோன்றிரண்டதோளாம்
மலையறுதொழியாதென்னாவரிசிலையொன்றுவாங்கிக்
கலையறுத்திங்களன்னவாளியாற்கையைக்கொய்தான்
விலையறுமணிப்பூணோடும்வில்லொடுநிலத்துவீழ. (௪௩)

பாகவான்பிறைபோல்வெவ்வாய்ச்சுடுகணைபடுதலோடும்
வேகவான்கடுங்காலெற்றமுற்றும்போய்விளிந்தநாளின்
மாகவான்றடக்கைமண்மேல்விழுந்ததுமணிப்பூண்மின்ன
மேகமாகாயத்திட்டவில்லொடும்வீழ்ந்ததென்ன. (௪௪)

படித்தலஞ்சுமந்தநாகம்பாகவான்பிறையைப்பற்றிக்
கடித்ததுபோலக்கோலவிரல்களாலிறுகக்கட்டிப்
பிடித்தவெஞ்சிலையினோடும்பேரெழில்வீரன்பொற்றோள்
துடித்ததுமரமுங்கல்லுந்துகள்படக்குரங்குந்துஞ்ச. (௪௫)

அந்தரமதனினின்றவானவரருக்கன்வீழாச்
சந்திரன்வீழாமேருமேல்வரைதகர்ந்துவீழா
இந்திரசித்தின்பொற்றோளிற்றிடைவிழுந்ததென்றால்
எந்திரமனையவாழ்க்கையினிச்சிலருகந்தெனென்றார். (௬௬)

மொய்யறமூர்த்தியன்னமொய்ம்பினனம்பினாலப்
பொய்யறச்சிறிதென்றெண்ணும்பெருமையான்புதல்வன்பூத்த
மய்யறக்கரிதென்றெண்ணுமனத்தினன்வயிரமன்ன
கய்யறத்தலையற்றார்போற்கலங்கினார்நிருதர்கண்டார். (௬௭)

அன்னதுநிகழும்வேலையார்த்தெழுந்தரியின்வெள்ளம்
மின்னெயிற்றரக்கர்சேனையாவருமீளாவண்ணம்
கொன்னகக்கரத்தாற்பல்லான்மரங்களான்மானக்குன்றால
பொன்னெடுநாட்டையெல்லாம்புதுக்குடியேற்றிற்றன்றே. (௬௮)

காலங்கொண்டெழுந்தமேகக்கருமையான்செம்மைகாட்டும்
ஆலங்கொண்டிருண்டகண்டத்தமரர்கோனருளிற்பெற்ற
சூலங்கொண்டெறிவலென்றுதோன்றினான்பகையின்றோற்ற
மூலங்கொண்டுணராநின்னைமுடித்தன்றிமுடியேனென்றான். (௬௯)

இந்திரசித்து மாயப்போர் புரிதல்.

காற்றெனவுருமேறென்னக்கனலெனக்கடைநாளூற்ற
கூற்றெனவுருவுகொண்டுகுறுகியதென்னக்கொல்வான்
தோற்றினனதனைக்காணாவினித்தலைதுணிக்குங்காலம்
ஏற்றதென்றயோத்திவேந்தற்கிளையவனினையசெய்தான். (௭0)

இராமனே பரம்பொருளாகு லிந்திரசித்தினைக் கொல்கவென வம்பேவுதல்.

மறைகளேதேறத்தக்கவேதியர்வணங்கற்பால
இறையவனிராமனென்னுநல்லறமூர்த்தியென்னின்
பிறையெயிற்றிவனைக்கோறியென்றொருபிறைவாய்வாளி
நிறையுறவாங்கிவிட்டானுலகெலாநிறுத்திநின்றான். (௭௧)

இந்திரசித்தின் தலையற்று விழுதல்.

நேமியுங்குலிசவேலுநெற்றியினொருப்புக்கண்ணன்
நாமவேலுமற்றைநான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச்சென்றவன்சிரத்தைத்தள்ளிப்
பூமழைமாரிசிந்தப்பொலிந்ததப்பகழிப்புத்தேள். (௭௨)

அற்றவன்றலைமீதோங்கியண்டமுற்றணுகாமுன்னம்
பற்றியசூலத்தோடுமுடனிறைபகழியோடும்
எற்றியகாலக்காற்றான்மின்னொடுமிடியினோடும்
சுற்றியபுயல்வீழ்ந்தென்னவீழ்ந்ததுசோரன்யாக்கை. (௭௩)

விண்டலத்திலங்குதிங்களிரண்டொடுமின்னுவீசும்
குண்டலத்துணைகளோடுங்கொந்தளக்குஞ்சிச்செங்கேழ்ச்
சண்டவெங்கதிரோன்செக்கர்த்தழலொடுமெருவித் * தாம
மண்டலம்விழுந்ததென்னவிழுந்ததுதலையுமண்மேல். (௫௪)

உயிரிறப்புக்ககாலையுண்ணின்றவுணர்வினோடும்
செயிரறுபொறியுமந்தக்கரணமுஞ்சிந்துமாபோல்
அயிலெயிற்றரக்கருள்ளாராற்றலராகியான்ற
வெயிலுடையிலங்கைநோக்கியிரிந்தனர்படையும்விட்டார். (௫௫)

தேவராரவாரித்தல்.

வில்லாளரானோர்க்கெல்லாமேலவன்விளிதலோடும்
செல்லாதவ்விலங்கைவேந்தற்கரசெனக்களித்ததேவர்
எல்லாருந்தூசுநீக்கியேறிடவார்த்தபோது
கொல்லாதவிரதத்தார்தங்கடவுளர்கூட்டமொத்தார். (௫௬)

திருமூர்த்தியாதிதேவரை வானரர் தெரிசித்தல்.

வரந்தருமுதல்வன்மற்றைமான்மறிக்கரத்துவள்ளல்
புரந்தரன்முதல்வராயநான்மறைப்புலவர்பாரில்
நிரந்தரந்தோன்றிநின்றாரருளினானிறைந்தநெஞ்சர்
கரந்திலரவரையாக்கைகண்டனகுரங்குங்கண்ணால். (௫௭)

இறந்தவானரருயிர்பெற்றெழுதல்.

அறந்தலைநின்றார்க்கில்லையழிவெனுமறிஞர்வார்த்தை
சிறந்ததுசரங்கள்பாயச்சிந்தியசிரத்தவாகிப்
பறந்தலைதனின்மற்றைப்பாதகவரக்கன்கொல்ல
இறந்தனகவிகளெல்லாமெழுந்தனவிமையோரேத்த. (௫௮)

ஆக்கையினின்றுவீழ்ந்தவரக்கன்றன்றலையையங்கை
தூக்கினனுள்ளங்கூர்ந்தவாலிசேய் † தூசுசெல்ல
மேக்குயர்ந்தமரர்வெள்ளமள்ளினர்தொடர்ந்துவீசும்
பூக்கிளர்பந்தர்நீழலநுமன்மேலிளவல்போனான். (௫௯)

இராமனிந்திரசித்தின் தலையைக்காண்டல்.

வீங்கியதோளன்றேய்ந்துமெலிகின்றவழியன்மேன்மேல்
ஓங்கியவுவகையூறுமுள்ளத்தனும்பர்க்காகத்
தேங்கியகடலைமுன்னாட்டடித்தவன்சேய்செங்கையால்
தாங்கியகுரிசில்பற்றிக்கொணர்ந்திடுந்தலையைக்கண்டான். (௬௦)

எல்லிவான்மதியினூற்றகறையெனவென்மேல்வந்து
புல்லியவடுவும்போகாதென்றகம்புலம்புகின்றேன்

---

* தாமமண்டலம் - ஒளிமண்டலம்.

† தூசுசெல்ல - முன்னணியிற்போக.

சொல்லியதருமநல்கத்துவக்கற்றந்துயரந்தீர்ந்தேன்
செல்வமும்பெறுதற்குண்டேகுறையினிச்சிறுமையாதோ. (௬௧)

தென்றலையாழிசூழ்ந்ததிண்மதிலிலங்கைகாக்கும்
புன்றலைக்கள்வன்பெற்றபுதல்வனையிளவல்வீழ்த்த
வன்றலையெடுத்துநீமுன்வருதலால்வானரேச
என்றலையெடுக்கலானேனினிக்குடையெடுப்பேனென்றான். (௬௨)

வான்றலையெடுக்கவேலைமண்டலையெடுக்கவானோர்
கோன்றலையெடுக்கவேதக்குலந்தலையெடுக்கக்குன்றாத்
தேன்றலையெடுக்குந்தாராய்தேவரைவென்றான்றீய
ஊன்றலையெடுத்தாய்நீயென்றுரைத்தனருவகைமிக்கார். (௬௩)

வரதன்போய்மறுகாநின்றமனத்தினன்மாயத்தோனைச
சரதம்போர்வென்றுமீளுந்தருமமேதாங்குமென்பான்
விரதம்பூண்டுயிரிமேனுடந்தன்னுடைமீட்சிநோக்கும்
பரதன்போன்றிருந்தான்றம்பிவருகின்றபரிசைப்பார்த்தான். (௬௪)

வன்புலங்கடந்துமீளுந்தம்பிமேல்வைத்தமாலைத்
தன்புலநயனமென்னுந்தாமரைசொரியுந்தாரை
அன்புகொலழுகணீர்கொலானந்தவாரியேகொல்
என்புகளுருகிச்சோருங்கருணைகொல்யாரதோர்வார். (௬௫)

இராமன்காலெதிரே இந்திரசித்தின் தலையை இடுதல்.

விழுந்திழிகண்ணினீருமுவகையுங்களிப்பும்வீங்க
எழுந்தெதிர்வந்தவீரனிணையடிமுன்னரிட்டான்
கொழுந்தெழுஞ்செக்கர்க்கற்றைக்குழாங்கொளவெயிற்றினீட்டம
அழுந்துறமடித்தபேழ்வாய்த்தலையடியிறையோன்றாக. (௬௬)

தலையினைநோக்குந்தம்பிகொற்றவைதழீஇயபொற்றோள்
மலையினைநோக்குநின்றமாருதிவலியைநோக்கும்
சிலையினைநோக்குந்தேவர்செய்கையைநோக்குஞ்செய்த
கொலையினைநோக்குமொன்றுமுரைத்திலன்களிப்புக்கொண்டான். (௬௭)

இராமனிலக்குமணனைத் தழுவி மகிழ்தல்.

காளமேகத்தைச்செக்கர்கலந்தெனக்கரியகுன்றம்
நாள்வெயிற்பரந்ததென்னநம்பிதன்றம்பிமார்பில்
தோளின்மேலுதிரச்செங்கேழ்ச்சுவடுதன்னுருவிற்றோன்றத்
தாளின்மேல்வணங்கினானைத்தழுவினன்றனித்தொன்றில்லான். (௬௮)

வேறு.

இராமனிலக்குமணனைப் புகழுதல்.

கம்பமதத்துக்களியானைக்காவற்சனகன்பெற்றெடுத்த
கொம்புமென்பாலினிவந்துகுறுகினளன்றெனக்குளிர்ந்தேன்

வம்புசெறிந்தமலர்க்கோயின்மறையோன்படைத்தமாநிலத்தில்
தம்பியுடையான்பகையஞ்சானென்னுமாற்றந்தந்தனையால். (௬௯)

வேறு.

நீக்கியதூணிவாங்கித்தோளொடுமார்பைச்சுற்றித்
தூக்கியகவசபாசமொழித்ததுவிரைவினீக்கித்
தாக்கியபகழிக்கூர்வாய்தடிந்தபுண்டழும்புமின்றிப்
போக்கினன்றழுவிப்பல்காற்பொற்றடந்தோளினேற்றி. (எ0)

இராமன் விபீடணனைப் புகழ்தல்.

ஆடவர்திலகனின்னலன்றிகலநுமனென்னும்
சேடனலன்றுவேறோர்தெய்வத்தின்சிறப்புமன்று
வீடணன்றந்தவெற்றியீதெனவிளம்பிமெய்ம்மை
ஏடவிலழங்கன்மார்பனிருந்தனனினிதினிப்பால். (எக)

உஎ - வது, இந்திரசித்துவதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩கசஉ.

உஅ - வது, இராவணன்சோகப்படலம்.

ஓதரோதனவேலைகடந்துராய்ப்
பூதரோதரம்புக்கெனப்போர்த்திழி
சீதரோதக்குருதித்திரையொரீஇத்
தூதரோதவெங்காலிற்றுனைந்துளார்.

(இ-ள்.) தூதர் - தூதுவர், ஓத - இந்திரசித்துக்கொலையுண்ட செய்தியைச் சொல்லும்படி, ஓதம் - கடலோசையையொத்த, ரோதனம்-(போரிற்பட்டதமருக்காக ஒழிந்தோர்) அழுகையினது, வேலை - கரையை, கடந்து - தாவி, உராய் - (ஒருவரையொருவர்) உராய்ந்து சென்று, போர்த்து - (அப்போர்க்களமெங்கும்) தவழ்ந்து, உறுசீதம் - மிகுதியுந்தண்மையாகிய, ரோதம் - கரையையுடைய, குருதித்திரை - இரத்தக்கடலே, ஒரீஇ - கடந்து நீங்கி, பூதரோதரம் - பொன்மலையினது வயிற்றினுள், புக்கென - புகுந்தாற்போல (இலங்கையின் கோபுரவாயிலுள்,) வெங்காலின்-கடுங்காற்றைப்போல, துனைந்துளார் - விரைந்தோடினர்—எ-று.

ஓதரோதனம் சீதரோதமென்பன வடமொழிச்சந்தி. புகுந்தாலெனவென்பதனீறுதொகுத்தல். இலங்கையின் கோபுரவாயிலென்பது பூதரோதரம் புக்கென என்பதற்கியைவந்த இசையெச்சம். புகழ்பொருள்

இதுவேயென்பது ''மேருவைநிறுத்தி வெளிசெய்தது கொல்'' என்பதனு ற்பெறும். உரோதனத்திற்கு ஓதத்தை யுவமித்தமையான் அது நிகழு மிடத்தினெல்லையை வேலையென்றார். பூதரம் காரணவிடுகுறியாயினும் ஈண்டு இடுகுறிமாத்திரையாய் மேருவுக்காயிற்று. பூதரோதரம் புனக்கெ னப்போர்த்தென்பதற்கு - பூவாகிய தரையினது தரத்திலும் புகுந்ததென் னும்படி போர்க்களமுழுமையும் பரவியெனக் குருதித்திரையின்மேலேற் றிக் கூறலுமொன்று. புக்கதென்பதனீறும் உம்மையுந் தொகுத்தல். (க)

அன்றிலங்கரும்பேடைகளாமென
முன்றிலெங்குமரக்கரைமொய்த்தழ
இன்றிலங்கையழிந்ததென்றேங்குவார்
சென்றிலங்கையிற்றுறைதையைச்சேர்ந்துளார். (உ)

பல்லும்வாயுமனமுந்தம்பாசமும்
நல்லுயிர்ப்பொறையோடுநடுங்குவார்
இல்லையாயினனுன்மகனின்றெனச்
சொல்லினார்பயஞ்சுற்றத்துளங்குவார். (௩)

மாடிருந்தவர்மாதவர்வானவர்
ஆடனுண்ணிடையார்மற்றும்யாவரும்
வீடுமின்றிவ்வுலகெனவிம்முவார்
ஓடியெங்கணுஞ்சிந்தியொளித்தனர். (௪)

சுடர்க்கொழும்புகைத்தீவிழிதூண்டிடத்
தடக்கைவாளுருவித்தருந்தாதரை
மிடற்றுவீசலுறுவிழுந்தானரோ
கடற்பெருந்திரைபோற்கரஞ்சோரவே. (௫)

வாய்ப்பிறந்துமுயிர்ப்பின்வளர்ந்தும்வன்
காய்ப்புறுந்தொறுங்கண்ணிடைக்காந்தியும்
போய்ப்பிறந்திவ்வுலகைப்பொதியும்வெந்
தீய்ப்பிறந்துளதின்றெனச்செய்ததால். (௬)

படம்பிறங்கியபாந்தளும்பாரும்பேர்ந்
திடம்பிறங்கிவலம்பெயர்ந்தீடுற
உடம்பிறங்கிக்கிடந்துழைத்தோங்குதீ
விடம்பிறந்தகடலெனவெம்பினன். (௭)

இராவணனது புத்திரசோகம்.

திருகுவெஞ்சினத்தீநிகர்சீற்றமும்
பெருகுகாதலுந்துன்பும்பிறழ்ந்திட
இருபதென்னுமெரிபுரைகண்களும்
உருகுசெம்பெனவோடியதாற்றுநீர். (௮)

கடித்தபற்குலங்கற்குலங்கண்ணுற
இடித்தகாலத்துருமெனவெங்கணும்
அடித்தகைத்தலமம்மலையாழிநீர்
பொடித்தவாய்தொறும்பொங்கினமீச்செல. (௯)

மைந்தவோவெனுமாமகனேயெனும்
எந்தையோவெனுமென்னுயிரேயெனும்
முந்தினேனுனைநானுளனோவெனும்
வெந்தபுண்ணிடைவேல்பட்டவெம்மையான். (௧௦)

புரந்தரன்பகைபோயிற்றன்றோவெனும்
அரந்தைவானவரார்த்தனரோவெனும்
கரந்தைசூடியும்பாற்கடற்கள்வனும்
நிரந்தரம்பகைநீங்கினரோவெனும். (௧௧)

நீறுபூசியுநேமியுநீங்கினார்
மாறுகுன்றொடுவேலைமறைந்துளார்
ஊறுநீங்கினராயுவணத்தினோ
டேறுமேறியுலாவுவரென்னுமால். (௧௨)

வானமானமும்வானவரீட்டமும்
போனபோனதிசையிடைப்புக்கனர்
தானமானவைசார்கிலர்சார்குவ
தூனமானுடர்வென்றிகொண்டோவெனும். (௧௩)

கெட்டதூதர்கிளத்தினவாறொரு
கட்டமானுடன்கொல்லவென்காதலன்
பட்டொழிந்தனனேயெனும்பன்முறை
விட்டழைக்குமுழைக்கும்வெதும்புமால். (௧௪)

எழுமிருக்குமிரைக்குமிரக்குமுற்
றழுமரற்றுமயர்க்கும்வியர்க்கும்போய்
விழும்விழிக்குமுகிழ்க்குந்தன்மேனியால்
உழுநிலத்தையுருளும்புரளுமால். (௧௫)

இராவணன் தலையலைத்துந் தனித்தனி புலம்புதல்.

அய்யனேயெனுமோர்சிரம்யானினம்
செய்வெனேயரசென்னுமங்கோர்சிரம்
கய்யனேயுனைக்காட்டிக்கொடுத்தநான்
உய்வெனேயென்றுரைக்குமங்கோர்சிரம். (௧௬)

எழுவிற்கோலமெழுதியதோள்களால்
தழுவிக்கொள்கலையென்னுமங்கோர்தலை

உழுவைப்போத்தையுழையுயிருண்பதே
செழுவிற்சேவகனேயெனுமோர்சிரம். (கஎ)

நீலங்காட்டியகண்டனுநேமியும்
மேலுங்காட்டினறிந்தபடையெலாம்
தோலுங்காட்டித்துரந்தனைமீண்டுநின்
ஓலங்காட்டிலையோவெனுமோர்தலை. (கஅ)

துஞ்சினாய்கொறுனைபிரிந்தேனெனும்
வஞ்சமோவெனும்வாரலையோவெனும்
நெஞ்சுநோவநெடுந்தனியேகிடந்
தஞ்சினேன்றரற்றுமங்கோர்தலை. (கசு)

காகமாடுகளத்திடைக்காண்பெனோ
பாகசாதன்மௌலியொடும்பொறித்
தோகைமாதவருச்சியின்வைத்தநின்
வாகைநாண்மலரென்னுமற்றோர்தலை. (உ0)

சேலியற்கணியக்கர்தந்தேவிமார்
மேலினித்தவிர்கிற்பர்கொல்வீரநின்
கோலவிற்குரல்கேட்டுக்குலுங்கித்தந்
தாலியைத்தொடலென்னுமற்றோர்தலை. (உக)

கூற்றமுன்னைதிர்வந்துயிர்கொள்வதோ
ஏற்றந்தானுடைத்தன்றெனையும்மொளித்
தேற்றவெவ்வுலகுற்றனையெல்லையில்
ஆற்றலாயென்றழைக்குமங்கோர்தலை. (உஉ)

இராவணன் மகனைத்தேடிப் போர்க்களமடைதல்

இன்னவாறழைத்தேங்குகின்றானெழுந்
துன்னுமாத்திரத்தோடினனூழிநாள்
பொன்னின்வானன்னபோர்க்களம்புக்கனன்
நன்மகன்றனதாக்கையைநாடுவான். (உ௩)

தேவரேமுதலாகியசேவகர்
யாவரும்முடனேதொடர்ந்தேகினார்
மூவகைப்பேருலகுமுறைமையும்
ஏவதாகுமென்றெண்ணியிரங்குவார். (உச)

அழுதவாற்சிலவன்பினர்போன்றடி
தொழுதவாற்சிலதூங்கினவாற்சில
உழுதவானைப்பிணம்புக்கொளித்தவால்
கழுதும்புள்ளுமரக்கனைக்காண்டலும். (உ௫)

கோடிகோடிகுதிரையின்கூட்டமும்
ஆடல்வென்றியரக்கர்தமாக்கையும்
ஓடையானையுந்தேருமுருட்டினன்
நாடினன்றன்மகனுடனொலாம். (உசு)

வெட்டுண்ட கரத்தினை இராவணன் காண்டல்.

மெய்கிடந்தவிழிவழிநீர்விழ
நெய்கிடந்தகனல்புரைநெஞ்சினன்
மொய்கிடந்தசிலையொடுமூரிமாக்
கய்கிடந்ததுகண்டனன்கண்களால். (உஎ)

இந்திரசித்தின்கரத்தினை இராவணன் தலைமீது
எடுத்து வைத்து வருந்துதல்.

பொங்குதோள்வளையும்பொழிபுட்டிலோ
டங்கதங்களுமம்புமலங்கிட
வெங்கணைகமெனப்பொலிமெய்யதைச்
செங்கையாலெடுத்தான்சிரஞ்சேர்த்தினன். (உஅ)

கற்றிண்மார்பிற்றழுவுங்கழுத்தினில்
சுற்றுஞ்சென்னியிற்சூட்டுஞ்சுழல்கணே
டொற்றுமோர்ந்திட்டுருகுமுளைக்குமால்
முற்றுநாளின்விடுநெடுமூச்சினன். (உகூ)

இந்திரசித்தினுடன்மீதி ராவணன் விழுந்து புலம்புதல்.

கய்கண்டான்பின்கருங்கடல்கண்டன
மெய்கண்டானதன்மேல்விழுந்தானரோ
பெய்கண்டாரையருவிப்பெருந்திரை
மொய்கண்டார்திரைவேலையைமூடவே. (௩௦)

அப்புமாரியழுந்தியமார்பைத்தன்
அப்புமாரியழுதிழியாக்கையின்
அப்புமாரினணைக்குமரற்றுமால்
அப்புமானுற்றதியாவருற்றாரோ. (௩௧)

இ-ள். அப்புமாரி-அம்பினதுகொலை, அழுந்திய-நிலைத்த, மார்பை-இந்திரசித்துவினுடைய மார்பை, அழுதது - அழுதலினால், அப்புமாரி-கண்ணீர்மழை, இழி - ஒழுகுகின்ற, தன்யாக்கையின் - தனதுடலில், அப்பும் - சிறிதுபொழுது ஒற்றுவான், மாரின் - மார்பில், அணைக்கும் - (சிறிதுபொழுது) அணைப்பான், அரற்றும் - ஒழியாது கதறுவான், (அப்போது) அப்புமான் - அந்தவாண்மையிற்சிறந்த இராவணன், உற்றது - உற்றதுன்பத்தை, யாவருற்றார் - யாவரடைந்தனர் ஒருவருமிலர்—எ-று.

அப்பு - வலித்தல். அழூதென்பது செயவெனெச்சத்திரிபு. மாரென்பது கடைக்குறை. யாக்கை ஆகுபெயர். ஆல்அரோ அசை அப்பும் அணைக்குமென வினைமுற்றடுக்கி வந்தமையிற் சிறிதுபொழுதென்பது ஆங்காங்குத் தந்துரைக்கப்பட்டது. அரற்றல் அவ்விருதொழிலும் நிகழ்வழியும் நிகழ்ந்ததென்பது தோன்ற அரற்றுமென இறுதியிற்கூறினர். (௩௧)

பறிக்குமார்பிற்பகழியைப்பன்முறை
முறிக்குமூர்ச்சிக்குமோக்குமுயங்குமால்
எறிக்கும்வெங்கதிரோடுலகேழையும்
கறிக்கும்வாயினிட்டின்றெனக்காந்துவான். (௩௨)

தேவரோடுமுனிவருஞ்சீரியோர்
ஏவரோடுமிடமின்றிநின்றவன்
மூவரோடுமுலகொருமூன்றுடன்
போவதேகொன்முனிவெனும்பொம்மலான். (௩௩)

இந்திரசித்தின்றலை காணுதிராவணன் வருந்துதல்.

கண்டிலன்றலைகாந்தியமானுடன்
கொண்டிறந்தனனென்பதுங்கொண்டவன்
புண்டிறந்தனநெஞ்சன்பொருமலன்
விண்டிறந்திடவிம்மியரற்றினான். (௩௪)

வேறு.

நிலையுமாதிரத்துநின்றயானையுநெற்றிக்கண்ணன்
மலையுமேயெளியவென்றான்மனிதர்க்குமறிந்தமைந்தன்
தலையுமாருயிருங்கொண்டாரவருடலோடுநதங்கப்
புலையனேனின்னுமாவிசுமக்கின்றேன்போலும்போலும். (௩௫)

எரியுணவளகைமூதூரிந்திரனிருக்கையெல்லாம்
பொரியுணவுலகமூன்றும்பொதுவறப்புரந்தேன்போலாம்
அரியுணுமலங்கன்மௌலியிழந்தவென்மதலையாக்கை
நரியுணக்கண்டேனானேனுய்யுணுமுணவுநன்றால். (௩௬)

பூண்டொருபகைமேற்புக்கென்புத்திரனோடும்போனார்
மீண்டிலர்விளிந்துவீழ்ந்தார்விரதியிருவரோடும்
ஆண்டுளகுரங்குமொன்றுமமர்க்களத்தாருமின்னும்
மாண்டிலரினிமற்றுண்டோவிராவணன்வீரவாழ்க்கை. (௩௭)

கந்தர்ப்பரியக்கர்சித்தராக்கர்தங்கன்னிமார்கள்
சிந்தொக்குஞ்சொல்லினாருன்றேவியர்திருவினல்லார்
வந்துற்றெங்கணவன்றன்னைக்காட்டென்றுமருங்குவீழ்ந்தால்
அந்தொக்கவரற்றவோநான்கூற்றையுமாடல்கொண்டேன். (௩௮)

சினத்தொடுங்கொற்றமுற்றியிந்திரன்செல்வமேவி
நினைத்ததுமுடித்துநின்றேனேரிழையொருத்திநீரால்
எனக்குநீசெய்யத்தக்ககடனெலாமேங்கியேங்கி
உனக்குநான்செய்வதானேனென்னின்யாருலகத்துள்ளார். (௩௯)

இந்திரசித்தினுடலுடன் இராவணனிலங்கைக்கேகுதல்.

என்பனபலவும்பன்னியெடுத்தழைத்திரங்கியேங்கி
அன்பினான்மகனைத்தாங்கியரக்கியராரற்றிவீழப்
பொன்புனைநகரம்புக்கான்கண்டவர்புலம்பும்பூசல்
ஒன்பதுதிக்குமற்றையொருதிக்குமுற்றதன்றே. (௪௦)

அசுரர் புலம்புதல்.

கண்களைச்சூல்கின்றாருங்கழுத்தினைத்தடிகின்றாரும்
புண்கொளத்திறந்துமார்பினீருளைப்போக்குவாரும்
பண்கள்புக்கலம்புநாவையுயிரொடுபறிக்கின்றாரும்
எண்களிற்பெரியவாற்றாரிருந்துயர்பொறுக்கலாற்றார். (௪௧)

மாதிரங்கடந்ததிண்டோண்மைந்தன்றன்மகுடச்சென்னி
போதலைப்புரிந்தயாக்கைபொறுத்தனன்புகுதக்கண்டார்
ஓதநீர்வேலையன்னகண்களாலுகுத்தவெள்ளக்
காதனீரோடியாடற்கருங்கடன்மடுத்ததன்றே. (௪௨)

ஆவியினினியகாதலரக்கியர்முதல்வராய
தேவியர்குழாங்கள்சுற்றிச்சிரத்தின்மேற்றளிர்க்கைசேர்த்தி
ஓவியம்வீழ்ந்துவீழ்ந்துபுரள்வனவொப்பவொல்லை
கோவியல்கோயிற்புக்கான்குருதிநீர்க்குமிழிக்கண்ணான். (௪௩)

மண்டோதரி புலம்புதல்.

கருங்குழற்கற்றைப்பாரங்காறொடக்கமலப்பூவால்
குரும்பையைப்புடைக்கின்றாள்போற்கைகளான்முலைமேற்கொட்டி
அருங்கலச்சும்மைதாங்கவகலல்குலன்றிற்சற்றே
மருங்குலுமுண்டுண்டென்னமயன்மகண்மறுகிவந்தாள். (௪௪)

தலையின்மேற்சுமந்தகையளழலின்மேன்மிதிக்கின்றாள்போல்
நிலையின்மேன்மிதிக்குந்தாளணேசத்தானிறைந்தநெஞ்சள்
கொலையின்மேற்குறித்தவேடன்கூர்ங்கணையுயிரைக்கொள்ள
மலையின்மேன்மயில்வீழ்ந்தென்னமைந்தன்மேன்மறுகிவீழ்ந்தாள். (௪௫)

உயிர்த்திலளுணர்வுமில்லளுயிரிலள்கொல்லோவென்னப்
பெயர்த்திலள்யாக்கையொன்றும்பேசலள்விம்மியாதும்
வியர்த்திலணெடிதுபோதுவிம்மலண்மெல்லமெல்ல
அயர்த்திலளரிதிற்றேறிவாய்திறந்தாற்றலுற்றாள். (௪௬)

கலையினாற்றிங்களென்னவளர்கின்றகாலத்தேயுன்
சிலையினாலரியைவெல்லக்காண்பதோர்தவமுஞ்செய்தேன்
தலையிலாவாக்கைகாணவெத்தவஞ்செய்தேனந்தோ
நிலையிலாவாழ்வையின்னுநினைவெனோநினைவிலாதேன். (சஎ)

அய்யனேயழகனேயென்னரும்பெறலமிழ்தேயாழிக்
கய்யனேமழுவனேயென்றவர்வலிகடந்தகால
மொய்யனேமுளரியன்னநின்முகங்கண்டிலாதேன்
உய்வெனேயுலகமூன்றுகொருவனேசெருவலோனே. (சஅ)

தாளரிச்சதங்கையார்ப்பத்தவழ்கின்றபருவந்தன்னில்
கோளரியிரண்டுபெற்றிக்கொணர்ந்தனைகொணர்ந்துகோபம்
மூளுறப்பொருத்திமாடமுன்றிலின்முறையினோடி
மீளருவிளையாட்டின்னுங்காண்பெனோவிதியிலாதேன். (சகூ)

அம்புலியம்மவாவென்றழைத்தலுமவிர்வெண்டிங்கள்
இம்பர்வந்தானையஞ்சலெனவிருகரத்தினேந்தி
வம்புறுமறுவைப்பற்றிமுயலெனவாங்கும்வண்ணம்
எம்பெருங்களிறேகாணவேசற்றேனெழுந்திராயே. (ரு0)

இயக்கியரரக்கிமார்கள்விஞ்சையரேழைமாதர்
முயற்கறைபயிலாத்திங்கண்முகத்தியர்முருகனின்னை
மயக்கியமுயக்கந்தன்னான்மலரணையமளிமீதே
அயர்த்தனையுறங்குவாயோவமர்பொருதலசினாயோ. (ருக)

முக்கணான்முதலினோரையுலகொருமூன்றினோடும்
புக்கபோரெல்லாம்வென்றுநின்றவெண்புதல்வன்போலாம்
மக்களிலொருவன்கொல்லமாள்பவன்வானமேரு
உக்கிடவணுவொன்றோடியுதைத்ததுபோலுமம்மா. (ருஉ)

பஞ்செரியுற்றதென்னவரக்கர்தம்பரவையெல்லாம்
வெஞ்சினமனிதர்கொல்லவிளிந்ததேமீண்டதில்லை
அஞ்சினேனஞ்சினேனிச்சீதையென்றமிழ்தாற்செய்த
நஞ்சினாலிலங்கைவேந்தனானாயித்தகையனன்றோ. (ருங)

இராவணன் சீதையை வாளாலெறிய ஓடுதல்.

என்றழைத்திரங்கியேங்கவித்துயர்நமர்கட்கெல்லாம்
பொன்றழைத்தனையவல்குற்சீதையாற்புகுந்ததென்ன
வன்றழைக்கல்லினெஞ்சின்வஞ்சகத்தானைவாளால்
கொன்றிழைத்திடுவெனென்னாவோடினனரக்கர்கோமான். (ருச)

இராவணனை மகோதரன் தடுத்தல்.

ஓடுகின்றானைநோக்கியுயர்பெரும்பழியினுச்சி
சூடுகின்றானென்றஞ்சிமகோதரன்றுணிந்தநெஞ்சன்

மாடுசென் றடியின்வீழ்ந்துவணங்கிநின்புகழ்க்குமன்னா
கேடுவந்தடுத்ததென்னாவினையனகிளத்தலுற்றான். (௫௫)

நீருளதனையுஞ்சூழ்ந்தநெருப்புளதனையுநீண்ட
பாருளதனையும்வானப்பரப்புளதனையுங்காலின்
பேருளதனையும்பேராப்பெரும்பழிபிடித்திபோலாம்
போருளதனையும்வென்றுபுகழுளதனையுமுள்ளாய். (௫௬)

தெள்ளருங்காலகேயர்சிரத்தொடுந்திசைக்கையானை
வெள்ளியமருப்புச்சிந்தவீசியவிசயத்தோள்வாள்
வள்ளியமருங்குற்செவ்வாய்மாதர்மேல்வைத்தபோது
கொள்ளுமேயாவிதானேநாணத்தாற்குறைவதல்லால். (௫௭)

மங்கையர்குலத்துளானைத்தவத்தியைமுனிந்துவாளால்
சங்கையொன்றின்றிக்கொன்றான்குலத்துக்கேதக்கானென்று
கங்கையஞ்சென்னியானுங்கண்ணனுங்கமலத்தோனும்
செங்கையுங்கொட்டியுன்னைச்சிரிப்பராற்சிறியனென்னா. (௫௮)

நிலத்தியல்பன்றுவானினெறியன்றுநீதியன்று
தலத்தியல்பன்றுமேலோர்தருமமேலதுவுமன்று
புலத்தியன்மரபின்வந்துபுண்ணியமரபுபூண்டாய்
வலத்தியல்பன்றுமாயப்பழிகொளமறுகுவாயோ. (௫௯)

இன்றுநீயிவளைவாளாலெறிந்துபோயிராமன்றன்னை
வென்றுமீண்டிலங்கைமூதூரெய்தினைவெதும்புவாயோ
பொன்றினள்சீதையென்றேபோவர்களவர்தாமல்லால்
வென்றிடமுடியாதென்னும்வீரமோவிளம்பவென்றான். (௬௦)

இந்திரசித்தினுடலினை எண்ணெய்த்தோணியி லிடுதல்.

என்னலுமெடுத்தகூர்வாளிருநிலத்திட்டுமீண்டு
மன்னவன்மைந்தன்றன்னைமாற்றலார்வலியாற்கொண்ட
சின்னமுமவர்கடங்கள்சிரமுங்கொண்டன்றிச்சேர்கேன்
துன்னருந்தயிலத்தோணிவளர்த்துமினென்னச்சொன்னான். (௬௧)

அத்தொழிலவருஞ்செய்தாராயிடையனைத்துத்திக்கும்
பொத்தியநிருதர்தானைகொணரியபோயதூதர்
ஒத்தனரணுகிவந்துவணங்கினரிலங்கையுன்னார்
பத்தியின்மைந்ததானைக்கிடமிலைபணியிதென்றார். (௬௨)

௨௮ - வது, இராவணன்சோகப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௲௨௦௪.

௨௯ - வது, படைக்காட்சிப்படலம்.

ஏம்பலுற்றெழுந்தமன்னனெவ்வழியெய்திற்றென்றான்
கூம்பலுற்றுயர்ந்தகையரோருவழிகூறலாமோ
வாம்புனற்பரவையேழுமிறுதியின்வளர்ந்ததென்னத்
தாம்பொடித்தெழுந்ததானைக்குலகிடந்தானில்லென்றார். (௧)

மண்ணுறநடந்ததானைவளர்ந்தமாத்தூளிமண்ட
விண்ணுறநடக்கின்றாருமித்தனரேகமேன்மேல்
கண்ணுறவருமைகாணாக்கற்பத்தின்முடிவிற்கார்போல்
எண்ணுறவரியசேனையெய்தியதிலங்கைநோக்கி. (௨)

* வாட்டனின்வயங்கமின்னுமழையதினிருளமாட்டா
வீட்டியமுரசினார்ப்பையிடிப்பொடுமுழக்கமாட்டா
மீட்டினியுவமையில்லைவேலைமீச்சென்றவென்னின்
நீட்டியபடையுமாவும்யானையுந்தேருஞ்செல்லா. (௩)

உலகினுக்குலகுபோய்ப்போயொன்றினொன்றொதுங்கலுற்ற
தொலைவருந்தானைமேன்மேலெழுந்ததுதொடர்ந்துசுற்ற
நிலவினுக்கிறையுமீனுநீங்கினநிமிரநின்றான்
அலரியுமுந்துசெல்லுமாறுநீத்தஞ்சியப்பால். (௪)

மேற்படவிசும்பைமுட்டிமேருவின்விளங்கிவிண்ட
நாற்பெருவாயிலூடுமிலங்கையூர்நடக்குந்தானை
கார்க்கருங்கடலைமற்றோரிடைக்கிடைகாலன்றானே
சேர்ப்பதுபோன்றதியாண்டுஞ்சுமைபொறாதுலகமென்ன. (௫)

நெருக்குடைவாயிலூடுபுகுமெனினெடிதுகாலம்
இருக்குமித்தன்மையென்னாமதிலினுக்கும்பரெய்தி
அரக்கனதிலங்கையுற்றவண்டங்களனைத்தினுள்ள
கருக்குலமேகமெல்லாமொருங்குடன்கலந்ததென்ன. (௬)

அதுபொழுதரக்கர்கோனுமணிகொள்கோபுரத்தினெய்திப்
பொதுவுறநோக்கலுற்றானொருநெறிபோகப்போக
விதிமுறைகாண்பனென்னும்வேட்கையான்வேலையேழும்
கதுமெனவொருங்குநோககும்பேதையிற்காதல்கொண்டான். (௭)

மாதிரமொன்றினின்றுமாறொருதிசைமேன்மண்டி
ஓதநீர்செல்வதன்னதானையையுணர்வுகூட்டி

---

* வாட்டனின்வயங்கமின்னுமழை - வாளாயுதங்களையொப்ப விளக்கமாவொளிரமின்னுமேகங்கள்.

வேதவேதாந்தங்கூறும்பொருளினைவிரிக்கின்றார்போல்
தூதுவரணிகடோறும்வரன்முறைகாட்டிச்சொன்னார். (அ)

வேறு.

சாகத்தீவினினுறைபவர்தானவர்சமைத்த
யாகத்திற்பிறந்தியைந்தவர்தேவரையெல்லாம்
மோகத்திற்படமுடித்தவர்மாயையின்முதல்வர்
மேகத்தைத்தொடுமெய்யினரிவரெனவிரித்தார். (கூ)

குசையின்றீவினினுறைபவர்கூற்றுக்கும்விதிக்கும்
வசையும்வன்மையும்வளர்த்தவர்வானநாட்டுறைவார்
இசையுஞ்செல்வமுமிருக்கையுமிழந்ததிங்கிவரால்
விசையந்தோளெனநிற்பவரிவர்நெடுவிறலோய். (க0)

இலவத்தீவினினுறைபவரிவர்கள்பண்டிமையாப்
புலவர்க்கிந்திரன்பொன்னகரழிதரப்பொருதார்
நிலவைச்செஞ்சடைவைத்தவன்வரந்தரநிமிர்ந்தார்
உலவைக்காட்டுறுதீயெனவெகுளிபெற்றுடையார். (கக)

அன்றிற்றீவினினுறைபவரிவர்பண்டையமரர்க்
கென்றைக்குமிருந்துறைவிடமென்றிடமேருக்
குன்றைக்கொண்டுபோய்க்குரைகடலிடவறக்குலைந்தோர்
சென்றித்தன்மையைத்தவிருமென்றிரந்திடத்தீர்ந்தோர். (கஉ)

பவளத்தீவினினுறைபவர்வெள்ளிபண்பழிந்தோர்
குவளக்கண்ணியங்கிராக்கதக்கன்னியைக்கூட
அவளிற்றோன்றினரையிருகோடியர்நொய்தின்
திவளப்பாற்கடல்வறள்படத்தேக்கினர்சிலநாள். (கங)

கந்தமாதனமென்பதிக்கருங்கடற்கப்பால்
மந்தமாருதமூர்வதோர்கிரியினில்வாழ்வோர்
அந்தகாலத்தவ்வாலகாலத்துடன்பிறந்தோர்
இந்தவாளெயிற்றரக்கரெண்ணிறந்தவரிறைவ. (கச)

மலையமென்பதுபொதியமாமலையதின்மறவோர்
நிலையமன்னதுசாகரத்தீவிடைநிற்கும்
குலையுமெவ்வுலகெனக்கொண்டுநான்முகன்கூறி
உலைவிலீரிதிலுறையுமென்றிரந்திடவுறைந்தார். (கரு)

முக்கரக்கையர்மூவிலைவேலினர்முசுண்டி
சக்கரத்தினர்சாபத்தரிந்திரன்றலைவர்
நக்கரக்கடலுளொருமூன்றுக்குநாதர்
புக்கரப்பெருந்தீவிடையுறைபவர்புகழோய். (கசா)

மறலியைப்பண்டுதம்பெருந்தாய்சொலவலியால்
புறநிலைப்பெருஞ்சக்கரமால்வரைப்பொருப்பின்
விறல்கெடச்சிறையிட்டயனிரந்திடவிட்டோர்
இறலியப்பெருந்தீவிடையுறைபவரிவர்கள். (௧௭)

வேதாளக்கரத்திவர்பண்டுபுவியிடம்விரிவு
போதாதுந்தமக்கெழுவகையாய்நின்றபுவன
பாதாளத்துறைவீரெனநான்முகன்பணிப்ப
நாதாபுக்கிருந்துனக்கன்பினாலிவணடந்தார். (௧௮)

நிருதிதன்குலப்புதல்வர்நின்குலத்துக்குநேரே
பருதிதேவர்களெனத்தக்கபண்பினர்பானக்
குருதிபெற்றிலரேற்கடலேழையுங்குடிப்பார்
இருணிறத்தவரொருத்தரேழ்மலையையுமெடுப்பார். (௧௯)

பாரணைத்தவெம்பன்றியையன்பினாற்பார்த்த
காரணத்தினாதியிற்பயந்தபைங்கழலோர்
பூரணத்தடந்திசைதொறுமிந்திரன்புலரா
வாரணத்தினைநிறுத்தியேசூடினர்வாகை. (௨0)

மறக்கண்வெஞ்சினமலையெனவிங்ஙின்றவயவர்
இறக்கங்கீழிலாப்பாதலத்துறைகின்றவிகலோர்
அறக்கண்டுஞ்சிலனாயிரம்பணந்தலையநந்தன்
உறக்கந்தீர்ந்தனனுறைகின்றதிவர்தொடர்ந்தொறுக்க. (௨௧)

காளியைப்பண்டுகண்ணுதல்காட்டியகாலை
மூளமுற்றியசினக்கடுந்தீயிடைமுளைத்தோர்
கூளிகட்குநல்லுடன்பிறந்தார்பெருங்குழுவாய்
வாளிமைக்கவும்வாளெயிறிமைக்கவும்வருவார். (௨௨)

பாவந்தோன்றியகாலமேதோன்றியபழையோர்
தீவந்தோன்றியமுழைத்துணையெனத்தறுகண்ணர்
கோவந்தோன்றிடிற்றாயையுமுயிருணுங்கொடியோர்
சாவந்தோன்றிடவடதிசைமேல்வந்துசார்வார். (௨௩)

சீற்றமாகியவைம்முகனுலகெலாந்தீப்பான்
ஏற்றமாநுதல்விழியிடைத்தோன்றினரிவரால்
கூற்றமாகியகொம்பினைம்பாலுடைக்கொடுமை
ஊற்றமாகிப்பண்டுதித்தனரென்பவருவரால். (௨௪)

காலன்மார்புழைச்சிவன்கழல்படவன்றுகான்ற
வேலையேழன்னகுருதியிற்றோன்றியவீரர்
சூலமேந்திமுன்னின்றவரிங்கின்றதொகையார்
ஆலகாலத்தினமிழ்தின்முன்பிறந்தபோலரக்கர். (௨௫)

வடவைத்தீயினைவாசுகிகான்றமாகவெவை
இடவத்தீயிடையெழுந்தவரிவரினமழையைத்
தடவித்தீர்மிர்குஞ்சியரிவருவர்தனித்தோர்
கடவத்தீந்தவெம்புரத்திடைத்தோன்றியகழலோர். (உசு)

எனையரின்னவரென்பதோரளவிலரைய
நினையவுங்குறித்துரைக்கவுமரிதிவர்நினைந்த
வினையமும்பெருவரங்களுந்தவங்களும்விளம்பின்
அனையபேருகமாயிரத்தளவினுமடங்கா. (உஎ)

ஒருவரேசென்றவ்வுறுதிறற்குரங்கையுமுரவோர்
இருவரென்றவர்தம்மையுமொருகைகொண்டெற்றி
வருவர்மாறினிப்பகர்வதென்வானவர்க்கரிய
திருவவென்றனர்தூதுவரிராவணன்செப்பும். (உஅ)

இராவணன் தன்சேனையை ஆயிரவெள்ளமென்றர்பித்த ரெனல்.

எத்திறத்திதற்கெண்ணெனத்தொகைவகுத்தியன்ற
இத்திறத்தினையறைதிரென்றுரைசெயவவர்கள்
ஒத்தவெள்ளமோராயிரமுளதெனவுரைத்தார்
பித்தரிப்படைக்கெண்சிறிதென்றனர்பெயர்ந்தார். (உகூ)

இராவணன் சேனுபதிகளை அழைப்பித்தல்.

படைப்பெருங்குலத்தலைவரைக்கொணருதிரென்பால்
கிடைத்துநானவர்க்குற்றுளபொருளெலாங்கிளத்தி
அடைத்தநல்லுரைவிளம்பினுனளவளாயமைவுற்
றுடைத்தபூசனைவரன்முறையியற்றவென்றுரைத்தான். (௩௦)

இராவணன் கால்களில் சேனுபதிகள் விழுந்து வணங்குதல்.

தூதர்கூறிடத்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்த
ஓதவேலையினுயகரெவரும்வந்துற்றார்
போதுதூவினர்வணங்கினரிராவணன்பொலன்றாள்
மோதுமோலியின்பேரொலிவானினைமுட்ட. (௩க)

இராவணன் சேனுதிபதிகளை சேமம் விசாரித்தல்.

அனையர்யாவருமருகுசென்றடிமுறைவணங்கி
வினையமேவினரினிதினங்கிருந்ததோர்வேலை
நினையுநல்வரவாகநும்வரவெனநிரம்பி
மனையுமக்களும்வலியரேயென்றனன்மறவோன். (௩உ)

சேனுபதிகள் பதிலுரைத்தல்.

பெரியதிண்புயனீயுளைதவவரம்பெரிதால்
• உரியவேண்டியபொருளெலாமுடிப்பதற்கொன்றோ

இரியதேவரைக்கண்டனம்பகைபிறிதில்லை
அரியதென்னெமக்கென்றெனாவன்கருத்தறிவார். (௩௩)

இராவணன் நடந்தவைகளை யுரைத்தல்.

மாதரார்களுமைந்தருநின்மருங்கிருந்தார்
பேதுறுதவறில்லைநீவருந்தினைபெரிதும்
யாதுகாரணமருளெனவனையவரிசைத்தார்
சீதைகாதலிற்பிறந்துளபரிசெலாந்தெரித்தான். (௩௪)

சேனாதிபதிகள் நகுதல்.

கும்பகன்னனொடிந்திரசித்தையுங்குலத்தின்
வெம்புவெஞ்சினத்தரக்கர்தங்குழுவையும்வென்றார்
அம்பினாற்சிறுமனிதரேநன்றுநம்மாற்றல்
நம்பசேனையும்வானரமேயெனநக்கார். (௩௫)

உலகச்சேடன்றனுச்சிநின்றெடுக்கவன்றோரேழ்
மலையைவேரொடும்வாங்கவன்றவை யால்வாங்கி
அலைகொள்வேலையைக்குடிக்கவன்றழைத்ததுமலரோ
டிலைகள்கோதுமக்குரங்கின்மேலவைக்கொலெம்மை. (௩௬)

சேனாபதிகட்கு மாலியவான் இராமாதியர் திறமுரைத்தல்.

என்னக்கையெறிந்திடியுருமேறெனநக்க
மின்னும்வெள்ளெயிற்றரக்கரையங்கையாலவிலக்கி
வன்னியென்பவன்புட்கரத்தீவுக்குமன்னன்
அன்னமானுடரார்வலியாவதென்றறைந்தான். (௩௭)

மற்றவாசகங்கேட்டலுமாலியவான்வந்
துற்றதன்மையுமனிதரதாற்றலுமுடனும்
கொற்றவானரத்தலைவர்தங்கதைமையுங்கூறிக்
கிற்றுங்கேட்டிராமலென்றவன்கிளத்துவான்கிளர்ந்தான். (௩௮)

ஆழியன்னநீரறிதிரன்றேகடலனைத்தும்
ஊழிக்காலெனக்கடப்பவன்வாலியென்போனை
ஏழுகுன்றமுமெடுக்குறுமிடுக்கனையிந்நாள்
பாழிமார்பகம்பிளந்துயிர்குடித்ததோர்பகழி. (௩௯)

பரியதோளுடைவிராதன்மாரீசனும்பட்டார்
கரியமால்வரைநிகர்கரதூடணர்கதிர்வேற்
றிரிசிராவவர்திரைக்கடலனபெருஞ்சேனை
ஒருவிலாலொருநாழிகைப்பொழுதினிலுலந்தார். (௪௦)

இங்குவந்துநீர்விளையதென்னெறிதிரைப்பரவை
அங்குவெந்திலதோசிறிதறிந்ததுமிலிரோ

கங்கைசூடினன்கடுஞ்சிலையொடித்தவக்காலம்
உங்கள்வான்செவிபுகுந்திலதோமுழங்கோதை. (சக)

ஆயிரம்பெருவெள்ளமுண்டிலங்கையினளவில்
தீயின்வெய்யபேரரக்கர்தஞ்சேனையச்சேனை
போயதந்தகன்புரம்புகநிறைந்ததுபோலாம்
ஏயுமும்மைநூன்மார்பினரெய்தவிலிரண்டால் (சஉ)

கொற்றவெஞ்சிலைக்கும்பகன்னனுங்கள்கோமான்
பெற்றமக்களும்பிரகத்தன்முதலினர்பிறரும
மற்றைவீரருமிந்திரசித்தொடுமடிந்தார்
இற்றைநாள்வரையானுமற்றிவனுமேயிருந்தேம். (சங)

மூலத்தானையென்றுண்டதுமும்மைநூறமைந்த
கூலச்சேனையிவ்வெள்ளமற்றதற்கின்றுகுறித்த
காலச்செய்கையானீர்வந்திராயினக்கழலோர்
சீலச்செய்கையுங்கவிப்பெருசேனையுந்தெரிக்கின். (சச)

ஒருகுரங்குவந்திலங்கையைமலங்கெரியூட்டித்
திருகுவெஞ்சினத்தக்கனைநிலத்தொடுந்தேய்த்துப்
பொருதுதூதுரைத்தேகியதரக்கியர்புலம்பக்
கருதுசேனையாங்கடலையுங்கடந்து. (சரு)

கண்டிலீர்கொலாங்கடலினைமலைகொண்டுகட்டி
மண்டுபோர்செயவானரரியற்றியமார்க்கம்
உண்டுவெள்ளமோரெழுபதுமருங்கொருநொடியின்
கொண்டுவந்ததுமேருவிற்கப்புறங்குறித்து. (சசா)

இதுவியற்கையோர்சீதையென்றிருந்தவத்தியைந்தாள்
பொதுவியற்கைதீர்கற்புடைப்பத்தினிபொருட்டால்
விதிவிளைத்தவாவில்லியர்வெல்கநீர்வெல்க
முதுமொழிப்பதஞ்சொல்லினனென்றுரைமுடித்தான். (சஎ)

வன்னிமன்னனைநோக்கிநீயிவரெல்லாமடிய
என்னகாரணமிகல்செயாதிருந்ததென்றிசைத்தான்
புன்மைநோக்கினானினானாற்பொருந்திலேனென்றான்
அன்னதேலினியமையுமெங்கடனஃதென்றான. (சஅ)

மூதுணர்ந்தமிம்முதுமகன்கூறியமுயற்சி
சீதையென்பவடனைவிட்டம்மனிதரைத்திருத்தல்
ஆதியின்றலைசெயத்தக்கதினிச்செயலழிவால்
.காதலிந்திரசித்தையாம்யாண்டினிக்காண்டும். (சகூ)

விட்டமாயினுமாதினைவெஞ்சமம்விரும்பிப்
பட்டவீரரைப்பெறுகிலம்பெறுவதுபழிப்பால்
மூட்டிமற்றவர்குலத்தொடுமுடிக்குவதல்லால்
கட்டமத்தொழிற்செருத்தொழிலினிச்செயுங்கடமை. (௫0)

என்றெழுந்தனனிராக்கதரிருத்திநீயாமே
சென்றுமற்றவர்சில்லுடற்குருதிநீர்தேக்கி
வென்றுமீளுதும்வெள்குதுமேன்மிடலில்லாப்
புன்றொழிற்குலமாதுமென்றுரைத்தனர்போனார். (௫௧)

௨௯ - வது, படைக்காட்சிப்படலம் - முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம்-௩௨௫௪.

---

௩0 - வது, மூலபலவதைப்படலம்.

இராவணன் மூலபலத்தை இராமர்மீதேவுதல்.

வானரப்பெருஞ்சேனையையாரொருவழிசென்
றூனறக்குறைத்துயிருண்பனீயிர்போயொருங்கே
ஆனமற்றவரிருவரைக்கோறிரென்றமைந்தான்
தானவப்பெருங்கிரிகளைவாள்கொண்டுதடிந்தான். (௧)

எனவுரைத்தலுமெழுந்துதம்மூர்திமேலேறிக்
கனைகடற்பெருஞ்சேனையைக்கலந்ததுகாணா
வினையமற்றிலைமூலமாத்தானையைவிரவோ
டினையமுற்செலவேவுகென்றிராவணனிசைத்தான். (௨)

ஏவியப்பெருந்தானையைத்தானும்விட்டெழுந்தான்
தேவர்மெய்ப்புகழ்தேய்த்தவன்சில்லியந்தேர்மேல்
காவன்மூவகையுலகமுமுனிவருங்கலங்கப்
பூவைவண்ணத்தன்சேனைமேலொருபுறம்போனான். (௩)

மூலபலத்தன்மை.

எழுகசேனையென்றியானைமேலணிமுரசெற்றி
வழுவில்வள்ளுவர்துறைதொறும்விளித்தலும்வல்லைக்
குழுவியீண்டியதென்பராற்குவலயமுழுதும்
தழுவிவிண்ணையுந்திசையையுந்தடவுமாத்தானை. (௪)

அடங்கும்வேலைகளண்டத்தினகத்தகன்மலையும்
அடங்குமன்னுயிரனைத்துமவ்வரைப்பிடைமவைபோல்
அடங்குமேமற்றப்பெரும்படையிரும்படையாக்கை
அடங்குமாயவன்குறளுருத்தன்மையினவரால். (௫)

அறத்தைத்தின்றருங்கருணையைப்பருகிவேறமைந்த
மறத்தைப்பூண்டுவெம்பாவத்தைமணம்புணர்மணாளர்
நிறத்துக்காரன்னனெஞ்சினர்நெருப்புக்குநெருப்பாப்
புறத்துப்பொங்கியபங்கியர்காலனும்புகழ்வார். (௬)

நீண்டதோள்களால்வேலையைப்புறஞ்செலநீக்கி
வேண்டுமீனொடுமகரங்கள்வாயிட்டுவிழுங்கித்
தூண்டுவானுருமேற்றினைச்செவிதொறுந்தூக்கி
மூண்டவான்மழையுரித்துடுத்துலாவருமூர்க்கர். (௭)

மால்வரைக்குலம்பரலெனமழைக்குலஞ்சிலம்பக்
கால்வரைக்குலஞ்சிலம்புகொண்டசைத்தபைங்கழலார்
மேல்வரைப்படர்கலுழன்வன்காற்றெனும்விசையோர்
நால்வரைக்கொணர்ந்துடன்பிணித்தாலன்னநடையார். (௮)

உண்ணுந்தன்மையினூண்முறைதப்பினவ்வுடனே
பண்ணினின்றமால்யானையைவாயிடும்பசியார்
தண்ணினீர்முறைதப்பிடிற்றடக்கையாற்றடவி
விண்ணின்மேகத்தைவாரிவாய்ப்பிழிந்திடும்விடாயார். (௯)

உறைந்தமந்தரமுதலியகிரிகளையுருவ
வெறிந்துவேனிலைகாண்பவரிந்துவால்யாக்கை
சொரிந்துதீர்வுறுதினவினர்மலைகளைச்சுற்றி
அறைந்துகற்றமாத்தண்டினரசனியினார்ப்பார். (௧௦)

சூலம்வாங்கிடிற்சுடர்மழுவெறிந்திடிற்சுடர்வாள்
கோலவெஞ்சிலைபிடித்தலிற்கொற்றவேல்கொள்ளின்
சாலவன்றண்டுதரித்திடிற்சக்கரந்தாங்கின்
காலன்மால்சிவன்குமரனென்றிவரையுங்கடப்பார். (௧௧)

ஒருவரேவல்லரோருலகத்தினைவெல்ல
இருவர்வேண்டுவரேழுலகத்தையுமிறுக்கத்
திரிவரேனுடற்றிரிதருநெடுநிலஞ்செவ்வே
வருவரேனுடன்கடல்களுந்தொடர்ந்துபின்வருமால். (௧௨)

மேகமெத்தனையத்தனைமால்கரிவிரிந்த
நாகமெத்தனையத்தனைதேர்நனிநாளாப்

போகமுற்றினவெத்தனையத்தனைபுரவி
ஆகமேலனவெத்தனையத்தனையணிகம். (கங)

இன்னதன்மையயானைதேரிவுளியென்றிவற்றின்
பன்னுபல்லணமருமமற்றுறுப்பொடுபலவும்
பொன்னுநன்னெடுமணியுங்கொண்டல்லதுபுனைந்த
சின்னமுள்ளனவில்லனமெய்ம்முற்றுந்தெரிந்தால். (கச)

இப்பெரும்படையெழுந்திரைத்தேகமேலெழுந்த
துப்புதிர்ந்தனதூளியின்படலமீத்தூர்ப்பத்
தப்பில்கார்நிறந்தவிர்ந்ததுகரிமதந்தழுவ
உப்புநீங்கியதோங்குநீர்வீங்கலையுவரி. (கரு)

மலையும்வேலையுமற்றுளபொருள்களும்வானோர்
நிலையுமப்புறத்துலகங்கள்யாவையுநிரம்ப
உலைவுறுவகையுண்டுபண்டுமிழ்ந்தபேரொருமைத்
தலைவன்வாயொத்ததிலங்கையின்வாயில்கடருவ. (கசு)

கடம்பொருமதக்களிறுதேர்பரிமிடைகடல்கள்
படம்பொருமையினனந்தலையனந்தனும்பதைத்தான்
விடம்பொருதிரியமரர்போற்குரக்கினமிதிக்கும்
இடம்பொருமையினிரிந்துபோய்வடதிசையிறுத்த. (கஎ)

ஆழிமால்வரைவேலிசுற்றிடைவகுத்தமைத்த
ஏழுவேலையுமிடுவேலையரக்கரேயினமா
வாழிகாலனும்விதியும்வெவ்வினையுமேமன்னர்
தோழமாமதிலிலங்கைமால்வேட்டமேற்படர்ந்தான். (கஅ)

ஆர்த்தவோசையோவலங்குதேராழியினதிர்ப்போ
கார்த்திண்மால்கரிமுழக்கமோவாசியின்கலிப்போ
போர்த்தபல்லியத்தரவமோநெருக்கினுற்புழுங்கு
வேர்த்தவண்டத்தைவெடித்திடப்பொடித்ததுமேன்மேல். (ககூ)

வழங்குபல்படைமீனதுமதகரிமகரம்
முழங்குகன்றதுமுரிதிரைப்பரியதுமுரசம்
தழங்குபோரொலிகளிப்புறுந்தறுகண்மாநிருதப்
புழுங்குவெஞ்சினச்சுறவதுநிறைபுடைப்புணரி. (உ0)

தசும்பிற்பொங்கியதிரள்புயத்தரக்கர்தந்தானை
பசும்பொற்றிண்டலமிதித்தலிற்கரிபடுமதத்தின்
அசும்பிற்சேறுபட்டளறுபட்டமிழுமாலடங்க
விசும்பிற்சேறலிற்கிடந்ததவ்விலங்கன்மேலிலங்கை. (உக)

படியைப்பார்த்தனர்பரவையைப்பார்த்தனர்படர்வான்
முடியைப்பார்த்தனர்பார்த்தனர்நெடுந்திசைமுழுதும்
விடியப்பார்ப்பதோர்வெள்ளிடைகண்டிலர்மிடைந்த
கொடியைப்பார்த்தனர்வேர்த்தனர்வானவர்குலைந்தார். (௨௨)

உலகினுமலாவுருவெலாமிராக்கதவுருவா
அலகில்பல்படைபிடித்தமர்க்கெழுந்தவோவன்றேல்
விலகினீர்த்திரைவேலையோரேழும்போய்விதியால்
புலைகள்வல்லுருப்பொடித்தனவோவென்றுபுகன்றார். (௨௩)

தேவர் சிவனை அசுரசேனையின் வரலாறு வினவுதல்.

நடுங்கிநஞ்சடைகண்டனைவானவர்நம்ப
ஒடுங்கியாங்கரந்துறைவிடமறிகிலமுயிரைப்
பிடுங்கியுண்குவர்யாரிவர்பெருமைபண்டறிவார்
முடிந்ததெம்வலியென்றவரோடுவான்முயன்றார். (௨௪)

ஒருவரைக்கொல்லவாயிரமிராமர்வந்தொருங்கே
இருபதிற்றிரண்டாண்டுநின்றமர்செய்தாலென்னும்
நிருதரைக்கொல்வதிடம்பெற்றாரிடையினின்றன்றோ
பொருவதிப்படைகண்டுதன்னுயிர்பொறுத்தன்றோ. (௨௫)

சிவன்தேவர்க்கு இம்மூலபலத்தை இராமன் கொல்வானெனல்.

என்றிறைஞ்சலுமிருண்மிடற்றிறைவனுமினிநீர்
ஒன்றுமஞ்சலீர்வஞ்சனையரக்கரையொருங்கே
கொன்றுநீக்குமக்கொற்றவனிக்குலமெல்லாம்
பொன்றுவிப்பதோர்விதிதந்ததாமெனப்புகன்றான். (௨௬)

வானரங்கள் அஞ்சியோடுதல்.

புற்றினின்றுவல்லரவினம்புறப்படப்பொருமி
இற்றதெம்வலியெனவிரைந்திரிதருமெலிபோல்
மற்றவானரப்பெருங்கடல்பயங்கொண்டுமறுகிக்
கொற்றவீரரைப்பார்த்திலதிரிந்ததுகுலைவால். (௨௭)

அணையின்மேற்சென்றசிலசிலவாழியைநீந்தப்
புணைகடேடினசிலசிலநீந்தினபோன
துணைகளோடும்புக்கழுந்தினசிலசிலதோன்றாப்
பணைகளேறினமலைமுழைபுக்கனபலவால். (௨௮)

அடைத்தபேரணையளித்ததுநமக்குயிரழிவான்
உடைத்துபோதுமாலவர்தொடராமலென்றுரைத்த
புடைத்துச்செல்குவர்விசும்பினுமென்றனபோதோன்
படைத்ததிக்கெலாம்பாய்ந்தெனரென்றனபயத்தால். (௨௯)

அரியின்வேந்தனுமநுமனுமங்கதனவனும்
பிரியகிற்றிலரிறைவரைநின்றனர்பின்றூர்
இரியலுற்றனர்மற்றையோர்யாவருமெறிநீர்
விரியும்வேலையைக்கடந்தனர்நோக்கினன்வீரன். (ந௰)

விபீடணன் மூலபலத்தின் வரலாறு கூறுதல்.

இக்கொடும்படையெங்குளதியம்புதியென்றான்
மெய்க்கடுந்திறல்வீடணன்விளம்புவான்வீர
திக்கனைத்தினுமேழுமாத்தீவினுந்தீயோர்
புக்கழைத்திடப்புகுந்துளதிராக்கதப்புணரி. (நக)

ஏழெனப்படுங்கீழுளதலத்தினின்றேறி
ஊழிமுற்றியகடலெனப்புகுந்ததுமுளதால்
வாழிமற்றிவண்மூலமாத்தானைமுன்வருவ
ஆழிவேறினியப்புறத்தில்லைவாளரக்கர். (நஉ)

ஈண்டிவ்வண்டத்துளிராக்கதரெனும்பெயரெல்லாம்
மூண்டுவந்ததுதீவினைமுன்னின்றுமுடுக
மாண்டுவீழுமின்றென்கின்றதென்மதிவலியூழ்
தூண்டுகின்றதென்றடிமலர்தொழுதவன்சொன்னான். (நந)

வானரசேனையை அழைத்துவர விராமன் கட்டளையிடுதல்.

கேட்டவண்ணலுமுறுவலுஞ்சீற்றமுமுங்கிளரக்
காட்டுகின்றனென்காணுதியொருகணத்தென்று
ஓட்டின்மேற்கொண்டதானையைப்பயந்துடைத்துரவோய்
மீட்டிகொல்லெனவங்கதனேடினன்விரைந்தான். (நச)

வானரசேனுபதிகள் திரும்பிவருதல்.

சென்றுதானையையுற்றனன்சிறிதிறைகெடுவீர்
நின்றுகேட்டபினீங்குமினெனச்சொல்லிநேர்வான்
ஒன்றுங்கேட்கிலமென்றனர்குரக்கினமுறையால்
வென்றிவெந்திறற்படைப்பெருந்தலைவர்கண்மீண்டார். (நரு)

சேனுதிபர் ஓடிய காரணமுரைத்தல்.

மீண்டுவேலையின்வடகரையாண்டொருவெற்பின்
ஈண்டினார்களையென்குறித்திரிவுற்றதென்றான்
ஆண்டநாயககண்டிலைபோலுநீயவரை
மாண்டுசெய்வதெனென்றுரைகூறினர்மறுப்பார். (நசு)

ஒருவனிந்திரசித்தெனவுள்ளவனுளநாள்
செருவினுற்றவைகொற்றவமறத்தியோதெரியின்
பொருவின்மற்றவரிற்றிலர்யாரொடும்பொருவார்
இருவர்விற்பிடித்தியாவரைத்தடுத்துநின்றெய்வார். (நஎ)

புரங்கடந்தவப்புனிதனேமுதலியபுலவோர்
வரங்கடந்துலகளிப்பவர்யாவருமாட்டார்
கரந்தடங்கினரினிமற்றவ்வரக்கரைக்கடப்பார்
குரங்குகொண்டுவந்தமர்செயுமானுடர்கொல்லாம். (௩௮)

ஊழியாயிரகோடிநின்றுருத்திரனோடும்
ஆழியானுமற்றயனொடுபுரந்தரனவனும்
சூழுமோடினரொருவரைக்கொன்றுதந்தோளால்
வீழுமாசெய்யவல்லரேல்வென்றியினன்றே. (௩௯)

என்னப்பாமற்றிவ்வெழுபதுவெள்ளமுமொருவன்
தின்னப்போதுமோதேவரின்வலியமோசிறியேம்
முன்னிப்பாரெலாம்படைத்தவனுளெலாமுறைநின்
றுன்னிப்பார்த்துநின்றுரையிடக்குறையுமிவ்வூகம். (௪0)

நாயகன்றலைபத்துள்கையுநாலைந்தென்
றேயுமுள்ளதேயொருவன்மற்றவன்வந்திங்குற்றார்
ஆயிரந்தலையதற்கிரட்டிக்கையரையா
பாயும்வேலையிற்கூலத்துமணலினும்பலரால். (௪௧)

கும்பகன்னனென்றுளன்மற்றிங்கொருவன்கைக்கொண்ட
அம்புதாங்கவுமிடுக்கிலனவன்செய்ததறிதி
உம்பரன்றியேயுணர்வுடையார்பிறருளரோ
நம்பிநீயுமுன்றனிமையையறிந்திலைநடந்தாய். (௪௨)

அனுமனாற்றலுமரசனதாற்றலுமிருவர்
தனுவினாற்றலுந்தம்முயிர்தாங்கவுஞ்சாலா
கனியுங்காய்களுமுணவுளமுழையுளகரக்க
மனிதராளினென்னிராக்கதராளினென்வையம். (௪௩)

தாமுளாரன்றேபுகழினைத்திருவொடுந்தரிப்பார்
யாமுளேமெனினெங்கிளையுள்ளதெம்பெரும
போமினீரென்றுவிடைதரத்தக்கனைபுரம்போய்ச்
சாமினீரென்றறருமமன்றென்றனர்தளர்ந்தார். (௪௪)

வேறு.

அங்கதன் சாம்பனுக்குச் சமாதானமுரைத்தல்.

சாம்பனைவதனநோக்கிவாலிசேயறிவுசான்றோய்
பாம்பணையமலன்மற்றிவ்விராமனென்றெமக்குப்பண்டே
எம்பல்வந்துற்றகாலத்தியம்பினையல்லையோநீ
ஆம்பலம்பகைஞன்றன்னோடயிந்திரமமைந்தோனன்றாய். (௪௫)

தேற்றுவாய்தெரிந்தசொல்லாற்றெருட்டுவாய்தெளிவிலோரை
ஆற்றுவாயல்லைநீயுமஞ்சினைபோலுமாலி
போற்றுவாயென்றபோதுபுகழென்னும்புலமையென்னும்
கூற்றின்வாயுற்றால்வீரங்குறைவரேயிறைமைகொண்டார். (௪௬)

அஞ்சினும்பழியும்பூண்டாமம்புவியாண்டுமாலி
துஞ்சுமாறன்றிவாழ்வொண்ணுமோநாண்மேற்றோன்றின்
நஞ்சினையிட்டாலன்னவமிழ்தின்றேநம்மையம்மா
தஞ்சமென்றுணர்ந்தவீரர்தனிமையிற்சாதனன்றே. (௪௭)

தானவரோடுமற்றைச்சக்கரத்தலைவரோடும்
வானவர்கடையமாட்டாமறிகடல்கடைந்தவாலி
ஆனவனம்பொன்றாலேயயர்ந்தமையயர்த்ததென்னீ
மீனலாவேலைபட்டதுணர்ந்திலைபோலுமேலோய். (௪௮)

எத்தனையரக்கரேனுந்தருமமாண்டிலையன்றே
அத்தனையறத்தைவெல்லும்பாவமென்றறிந்ததுண்டோ
பித்தரைப்போலநீயுமிவரொடும்பெயர்ந்ததன்மை
ஒத்திலதென்னச்சொன்னானவனிவையுரைப்பானானான். (௪௯)

சாம்பன்பதிலுரைத்தல்.

நாணத்தாற்சிறிதுபோழ்துநல்கினனிருந்துபின்னும்
தூணொத்ததிரடோள்வீரதோன்றியவரக்கர்வீரம்
காணத்தானிற்கத்தானக்கறைமிடற்றவற்குமாமே
கோணற்பூவுண்ணும்வாழ்க்கைக்குரங்கின்மேற்குற்றமுண்டோ. (௫0)

தேவருமவுணர்தாமுஞ்செருப்பண்டுசெய்தகாலை
ஏவரேயென்றாற்காணப்பட்டிலரிருக்கையான்ற
மூவகையுலகினுள்ளாரிவர்துணையாற்றன்முற்றும்
பாவகருளரேகூற்றுமிவருடன்பகைக்கவற்றோ. (௫௧)

மாலியைக்கண்டேன்பண்டைமாலியவானைக்கண்டேன்
காலநேமியையுங்கண்டேனிரணியன்றனையுங்கண்டேன்
ஆலமாவிடமுங்கண்டேன்மதுவினையநுசனோடு
வேலையைக்கலக்கக்கண்டேனுவர்க்குளமிடுக்குமுண்டோ. (௫௨)

வலியிதன்மேலேபெற்றவரத்தினர்மாயம்வல்லர்
ஒலிகடன்மணலின்மிக்ககணக்கினருள்ளநோக்கின்
கலியினுங்கொடியர்கற்றபடைக்கலக்கரத்தரென்றால்
மெலிகுவதன்றியுண்டோவிண்ணுறவெருவல்கண்டால். (௫௩)

ஆகினுமையவுண்டாலார்க்கேனுமமரினஞ்சிச்
சாகினும்பெயர்ந்ததன்மைபழிதருநரகிற்றள்ளும்

எகுதுமீளவின்னுமியம்புவதுளதாலெய்தி
மேகமேயனையான்கண்முனெங்ஙனம்விழித்துநிற்றும். (௫௪)

அங்கதன் சமாதானங் கூறுதல்.

என்றெடுத்தெண்ணின்றானைக்கிறையவனியம்பலோடும்
வன்றிறற்குலிசமோச்சிவரைசிறகரிந்துவெள்ளிக்
குன்றிடைநீலக்கொண்மூவமர்ந்தெனமதத்தின்குன்றம்
நின்றவன்றிருமைந்தன்மகனிவைநிகழ்த்தலுற்றான். (௫௫)

[illegible]டுத்தலுஞ்சாய்த்தலுமெதிர்த்தலுமெதிர்ந்தோர்தம்மைப்
படுத்தலும்வீரவாழ்க்கைபற்றினர்க்குற்றமேனுள்
அடுத்ததேயஃதுநிற்பவன்றியுமொன்றுகூறக்
கடுத்ததுகேட்டீர்நீருங்கருத்துளீர்கருதிநோக்கின். (௫௬)

ஒன்றுநீயஞ்சலையயாமெலாமொருங்குசென்று
நின்றுமொன்றியற்றலாற்றானேமியான்றனைநேர்ந்து
கொன்றுபோர்கடக்குமாயிற்கொள்ளுதும்வென்றியன்றேல்
பொன்றுதுமவனோடென்றான்போதலோபுகழன்றென்றான். (௫௭)

இராம னிலக்குமணற் குரைத்தல்.

ஈண்டியதானைநீங்கநிற்பதென்யாமேசென்று
பூண்டவெம்பழியினோடும்போந்தநாம்போவதென்னே
மீண்டனர்தலைவரெல்லாமங்கதனோடும்வீரன்
மூண்டவெம்படையைநோக்கித்தம்பிக்குமொழிவதானான். (௫௮)

அத்தநீயுணர்தியன்றேயரக்கர்தானவுணரேதான்
எத்தனையுளரென்றாலும்யான்சிலையெடுத்தபோது
தொத்துறுகனலின்வீழ்ந்தபஞ்செனத்தொலையுந்தன்மை
ஒத்ததோரிடையூறுண்டென்றுணர்விடையுதிப்பதன்றால். (௫௯)

இலக்குமணனைநீ வானரசேனையைக்காத்து நிற்றியென
விராமன் கூறுதல்.

காக்குநரின்மைகண்டகலக்கத்தாற்கவியின்சேனை
போக்கறப்போகித்தத்தமுறைவிடம்புகுந்ததுண்டேல்
தாக்கியபடையைமுற்றுந்தலைதுமிப்பவளவுந்தாங்கி
நீக்குதிநிருதராங்குநெருக்குவார்நெருக்கவண்ணம். (௬௦)

இப்புறத்தினையசேனையேவியாண்டிருந்ததீயோன்
அப்புறத்தமைந்தசூழ்ச்சியறிந்தவனயலேவந்தால்
தப்புறக்கொன்றுநீக்குமவனையார்தடுக்கத்தக்கார்
வெப்புறுகின்றதுள்ளம்வீரநீயலதுவில்லோர். (௬௧)

மாருதியோடுநீயும்வானரக்கோனும்வல்லே
பேருதிர்சேனைகாக்கவென்னுடைத்தனிமைபேணிச்
சோருதிரென்னின்வெம்போர்தோற்றுநாமென்னச்சொன்னான்
வீரன்மற்றிதனைக்கேட்டவிளையவன்விளம்பலுற்றான். (௬௨)

இலக்குமணனிவ்வாறே செய்துமெனல்.

அன்னதேகருமமையவன்றியுமனைவேகின்றால்
என்னுனக்குதவிசெய்வதிதுபடையென்றபோது
சென்னியிற்சுமந்தகையர்தேவரேபோலயாமும்
பொன்னுடைவரிவிலாற்றல்புறனின்றுகாண்டுமென்றான். (௬௩)

அனுமன்றன்றோள்மீதேற இராமனைவேண்டுதல்.

என்றவனேகலுற்றகாலையினநுமனெந்தாய்
புன்றொழிற்குரங்கெனுதென்றோளின்மேலேறிப்புக்கால்
நன்றெனக்கருதாநின்றேனல்லதுநாயினேனுன்
பின்றனிநிற்றுமாயினடிமையிற்பிழைப்பிலென்றான். (௬௪)

நீஇலக்குமணற்குத் துணையாதியெனவனுமனுக்கிராமனுரைத்தல்.

ஐயவிற்கியலாதுண்டேயிராவணனயலேவந்துற்
றெய்யும்விற்கரத்துவீரனிலக்குவன்றன்னோடேற்றால்
மொய்யமர்க்களத்தினுன்னைத்துணைபெறுதொழியின்முன்பு
செய்யுமாவெற்றியுண்டோசேனையுஞ்சிதையுமன்றே. (௬௫)

ஏரைக்கொண்டமைந்தகுஞ்சியிந்திரசித்தென்பான்றன்
போரைக்கொண்டிருந்துமேனுளிளையவன்றன்னைப்போக்கின்
ஆரைக்கொண்டென்னுலன்றேவென்றதங்கவனையின்னும்
வீரற்கும்வீரநின்னைப்பிரிகிலன்வெல்லுமென்பேன். (௬௬)

சேனையைக்காத்தென்பின்னேதிருநகர்தீர்ந்துபோந்த
* யானையைக்காத்துமற்றை † யிறைவனைக்காத்தெண்டீர்ந்த
வானையித்தலத்தினோடுமறையொடும்வளர்த்தியென்றான்
ஏனைமற்றுரைக்கிலாதானிளவல்பினெழுந்துசென்றான். (௬௭)

விபீடணனையும் இலக்குமணற்குத் துணைபோகச் செய்தல்.

வீடணநீயுமற் ‡ றுன்றம்பியோடேகிவெம்மை
கூடினர்செய்யுமாயந்தெரிந்தனகுறிக்கொண்டேகி
நீடுறுதானைதன்னைத்தாங்கினைநில்லாயென்னின்
கேடுளதாகுமென்றானவனதுகேட்பதானான். (௬௮)

---

* யானையை - இலக்குமணனை.
† இறைவன் - சுக்கிரீவன்.
‡ உன்றம்பியென்றது - இலக்குமணனை.

சூரியன்சேயுஞ்செல்வன்சொற்றதேயெண்ணுஞ்சொல்லன்
ஆரியன்பின்புபோனவனைவருமதுவேநல்ல
காரியமென்னக்கொண்டார்கடற்படைகாத்துநின்றார்
வீரியன்பின்னர்செய்தசெயலெலாம்விரிக்கலுற்றாம். (சுக)

இராமனது போர்க்கோலம்.

வில்லினைத்தொழுதுவாங்கியேற்றினான்மெய்ந்நாண்மேருக்
கல்லெனச்சிறந்ததேனுங்கருணையங்கடலேயன்ன
எல்லொளிமார்பிற்றீராக்கவசமிட்டிழையாவேதச்
* சொல்லெனத்துளையவாளித்தூணியும்புறத்துத்தூக்கி. (எ0)

மூலபலம் பொருதல்.

யோசனைநூற்றின்வட்டமிடைவிடாதுறைந்தசேனைத்
தூசிவந்தண்ணறன்னைப்போக்கறவளைந்துசுற்றி
வீசினபடையுமம்புமிடைதலின்விண்ணோர்யாக்கை
கூசினபொடியாலெங்குங்குமிழ்ந்தனவியோமகூடம். (எக)

இராமனைத் தேவர்பரவுதல்.

கண்ணனேயெளியேமிட்டகவசமேகடலேயன்ன
வண்ணனேயறத்தின்வாழ்வேமறையவர்வலியேமாறா
தொண்ணுமேநீயலாதோரொருவர்க்கிப்படைமேலூன்ற
எண்ணமேமுடித்தியென்னாவேத்தினாரிமையோரெல்லாம். (எஉ)

இராமனே வெல்வானாகவென முனிவர் ஆசிகூறுதல்.

முனிவரேமுதல்வராயவறத்துறைமுற்றினோர்கள்
தனிமையுமரக்கர்தானைப்பெருமையுந்தரிக்கலாத்தார்
பனிவருகண்ணர்விம்மிப்பதைக்கின்றநெஞ்சர்பாவத்
தனைவருந்தோற்கவண்ணல்வெல்கவென்றாசிசொன்னார். (எங)

வேறு.

தேவராதியரும் இராமனைவாழ்த்துதல்.

மற்றும்வேறறத்துணின்றவானநாடனைத்துளோர்
கொற்றவில்லிவெல்கவஞ்சமாயர்வீககுவலயத்
துற்றதீமைதீர்கவின்றொடென்றுகூறினார்நிலம்
துற்றவெம்படைக்கைநீசரின்னவின்னசொல்லினார். (எச)

அசுரர் இராமனைக்கண்டு பலவாறுகூறுதல்.

இரிந்தசேனைசிந்தியாருமின்றியேநின்றுநம்
விரிந்தசேனைகண்டியாதுமஞ்சலின்றிவெஞ்சரம்
தெரிந்துசேவகன்றிறம்பலின்றியெய்துசெய்கையான்
புரிந்ததன்மைவென்றிமேலுநன்றுமாலிபொய்க்குமோ. (எரு)

---

* சொல்லெனத்தொலைவிலாததூணியும் என்றும்பாடம்.

புரங்களெய்தபுங்கவற்குமுண்டுதேர்பொருந்தினார்
பரந்ததேவர்மாயனம்மைவேறுறுத்தபண்டைநாள்
விரைந்துபுள்ளின்மீதுவிண்ணுளோர்களோடுமேவினான்
கரந்திலன்றனித்தொருத்தனேரும்வந்துகாலினான். (௭௬)

தேருமாவும்யானையோடும்சீயம்யாளியாதியா
மேருமானுமெய்யரின்றவேலையேழின்மேலவா
வாரும்வாருமென்றழைக்குமானுடற்கிம்மண்ணிடைப்
பேருமாறுநம்முழைப்பிழைக்குமாறுமெங்ஙனே. (௭௭)

இராமனது வின்னாணோசைத்திறம்.

என்றுசென்றடர்த்திரைத்தொர்சீயவேறடர்ந்ததைக்
குன்றுசூழ்வளைந்தபோற்செருடர்ந்தசேனைகூடலும்
நன்றிதென்றுஞாலமேழுநாகமேழுமானுதன்
வென்றிவில்லைவேதநாதனாணெறிந்தவேலைவாய். (௭௮)

கதம்புலர்ந்தசிந்தைவந்தகாவல்யானைமாலொடு
மதம்புலர்ந்தநின்றவீரர்வாய்புலர்ந்தமாவெலாம்
பதம்புலர்ந்தவேகமாகவாளரக்கர்பண்புசால்
விதம்புலர்ந்ததென்னின்வென்றவென்றிசொல்லவேண்டுமோ. (௭௯)

வெறிந்திரிந்துவாசியோடுசீயமாவுமீளியும்
செறிந்தமைந்தமுந்துசில்லிபுல்லுமாழிகூடுதேர்
முறிந்தெழுந்தமுற்கையானைவீசுமூசுபாகரைப்
பிறிந்திரிந்துசிந்தவந்தொராகுலம்பிறந்ததால். (௮௰)

இராமன் மூலபலத்தினைப் பொருதழித்தல்.

இந்நிமித்தமிப்படைக்கிடந்துடித்தடுத்ததோர்
துந்நிமித்தமென்றுகொண்டுவானுளோர்கடுள்ளினார்
அந்நிமித்தமுற்றபோதரக்கர்கண்ணரங்கமேல்
மின்னிமிர்த்ததன்வாளிவேதநாதன்வீசினான். (௮௧)

யாளிமேலுமாளின்மேலுமானைமேலுமாடன்மா
மீளிமேலும்வீரர்மேலும்வீரர்தேரின்மேலும்வெவ்
வாளிமேலும்வில்லின்மேலுமண்ணின்மேல்வளர்ந்தமாத்
தூளிமேலுமேறவேறவீரன்வாளிதூவினான். (௮௨)

மலைவிழுந்தவாவிழுந்தமானயானைமள்ளர்செந்
தலைவிழுந்தவாவிழுந்ததாயவாசிதாளிறும்
சிலைவிழுந்தவாவிழுந்திண்பதாகைதிங்களின்
கலைவிழுந்தவாவிழுந்தவெள்ளெயிற்றகாடெலாம். (௮௩)

வாடைநாலுபாலும்வீசமாகமேகமாலைவெங்
கோடைமாரிபோலவாளிகூடவோடையானையும்
ஆடன்மாவும்வீரர்தேருமாளுமாள்வதாயவால்
பாடுபேருமாறுகண்டுகண்செல்பண்புமில்லையால். (௮௪)

விழித்தகண்கள்கைகள்விற்கள்வேல்கள்வாள்கள்விண்ணினுள்
தெழித்தவாய்கள்செல்லலுற்றதாள்கடோள்கள்செல்லினைப்
பழித்தவாளிசிந்தநின்றுபட்டதன்றிவிட்டகோல்
கழித்தவாயுதங்களொன்றுசெய்ததில்லைகண்டதே. (௮௫)

தொடுத்தவாளியோடுவிற்றுணிந்துவீழுமுன்றுணிந்
தெடுத்தவாள்களோடுதோள்களிற்றுவீழமற்றுடன்
கடுத்ததாள்கள்கண்டமாகுமெங்ஙனேகலந்துநேர்
தடுத்தவீரர்தாமுமொன்றுசெய்யுமாசலத்தினால். (௮௬)

குரந்துணிந்தகண்சிதைந்தபல்லணங்குலைந்தபே
ருரந்துணிந்தவீழ்வதன்றியாவியோடவொண்ணுமே
சரந்துணிந்தவொன்றைநூறுசென்றுசென்றுதள்ளலால்
வரந்துணிந்தவீரர்போரின்முந்தவுந்துவாசியே. (௮௭)

ஊரவுன்னின்முன்புபட்டுயர்ந்தவெம்பிணங்களால்
பேரவொல்வதன்றுபேரினாயிரம்பெருஞ்சரம்
தூரவொன்றுநூறுகூறுபட்டுகுந்துயக்கலால்
தேர்களென்றுவந்தபாவியென்னசெய்கைசெய்யுமே. (௮௮)

எட்டுவென்றிசைக்கணின்றயாவும்வல்லயாவரும்
கிட்டினுய்ந்துபோகிலார்களென்னநின்றகேள்வியால்
முட்டும்வெங்கண்மானயானையம்புராயமுன்னமே
பட்டுவந்தபோல்விழுந்ததென்னதன்மைபண்ணுமே. (௮௯)

வாவிகொண்டபுண்டரீகமன்னகண்ணவாளியான்
றேவிநுண்டைநூறுகோடிகொல்லுமென்னவெண்ணுவான்
பூவினண்டர்கோனுமெண்மயங்குமன்னபோரின்வந்
தாவிகொண்டகாலனார்கடுப்புமன்னதாகுமே. (௯௦)

கொடிக்குலங்கடேரின்மேலயானைமேலகோடைநாள்
இடிக்குலங்கள்வீழவெந்தகாடுபோலெரிந்தவால்
முடிக்குலங்கள்கோடிகோடிசிந்தவேகமுற்றுறா
வடிக்குலங்கள்வாளியோடவாயினூடுதீயினால். (௯௧)

அற்றவேலும்வாளுமாகியாயுதங்கண்மீதெழுந்
துற்றவேகமுந்தவோடியோதவேலையூடுறத்

துற்றவெம்மைகைம்மிகச்சுறுக்கொளச்சுவைத்ததால்
வற்றிநீர்வறந்துமீன்மறிந்துமண்செறிந்தவால். (கஉ)

போரரிந்தமன்றுரந்தபுங்கவாளிபொங்கினூர்
ஊரெரிந்தநாடெரிந்ததென்னமின்னியோடலால்
நீரெரிந்தவண்ணமேநெருப்பெரிந்தநீணெடுந்
தேரெரிந்தவீரர்தஞ்சிரம்பொடிந்துசிந்தவே. (கங)

பிடித்தவாள்கள்வேல்களோடுதோள்கள்பேரராவெனத்
துடித்தயானைமீதிருந்துபோர்தொடங்குசூரர்தம்
மடித்தவாய்கள்செந்தலைக்குலம்புரண்டவானின்மின்
இடித்தவாயினிற்றமாமலைக்குலங்களென்னவே. (கச)

கோரவாளிசீயமீளிகூளியோடுஞாளியும்
போரவாளிஞேடுதேர்கணூறுகோடிபொன்றுமால்
நாரவாளிஞாலவாளிஞானவாளிநாந்தகப்
பாரவாளிவீரவாளியேகவாளிபாயவே. (கரு)

ஆழிபெற்றதேரழுந்துமாளழுந்துமாளொடச்
சூழிபெற்றமாவழுந்தும்வாசியுஞ்சுரிக்குமால்
பூழிபெற்றவெங்களங்குளம்படப்பொழிந்துபே
ரூழிபெற்றவாழியன்னசோரிநீரினுள்ளரோ. (கசு)

அற்றுமேலெழுந்தவன்சிரங்கடம்மையண்மிமேல்
ஒற்றுமென்னவங்குமிங்கும்விண்ணுளோரொதுங்குவார்
சுற்றும்வீழ்தலைக்குலங்கள்சொல்லுகல்லின்மாரிபோல்
எற்றுமென்றுபாரினெங்கும்வாழுவாரிரங்குவார். (கஎ)

மழைத்தமேகம்வீழ்வதென்னவானமானவாடையில்
சுழித்துவந்துவீழ்வதென்னமண்ணின்மீதுதுன்னுமால்
அழித்தொடுங்குகாலமாரியன்னவாளியோளியால்
விழித்தெழுந்துவானினூடுமொய்யபொய்யர்மெய்யெலாம். (கஅ)

வேறு.

தெய்வநெடும்படைக்கலங்கள்விடுவர்சிலர்சுடுகணைகள்சிலையிற்கோலி
எய்வர்சிலரெறிவர்சிலரெற்றுவர்சுற்றுவர்மலைகள்பலவுமேந்திப்
பெய்வர்சிலர்பிடித்துமெனக்கடுத்துறுவர்படைக்கலங்கள் பெறுதுவாயால்
வய்வர்சிலர்தெழிப்பர்சிலர்வருவர்சிலர்திரிவர்சிலர்வயவர்மன்னோ. (கக)

ஆர்ப்பர்பலரடர்ப்பர்பலரடுத்தடுத்தேபடைக்கலங்களள்ளியள்ளித்
தூர்ப்பர்பலர்மூவிலைவேறுரப்பர்பலர்கரப்பர்பலர்சுடுதீத்தோன்றப்
பார்ப்பர்பலர்நெடுவரையைப்பறிப்பர்பலர்பகலோனைப்பற்றிச்சுற்றும்
கார்ப்பருவமேகமெனவேகநெடும்படையரக்கர்கணிப்பிலாதார். (சOO)

எறிந்தனவுமெய்தனவுமெடுத்தனவும்பிடித்தனவும்படைகளெல்லா
ம், முறிந்தனவெங்கணைகள்படமுற்றினசுற்றினதேருமூரிமாவும், நெறி
ந்தனகுஞ்சிகளோடுநெடுந்தலைகளுருண்டனபேர்ருளினீங்கிப், பிறிந்தன
வெய்யவனென்னப்பெயர்ந்தனன்மீதுயர்ந்ததடம்பெரியதோளான். ()

சொல்லறுக்கும்வலியரக்கர்தொடுகவசந்துகள்படுக்குந்துணிக்கும்யாக்கை
வில்லறுக்குந்தலையறுக்குமிடலறுக்குமடலறுக்குமேன்மேல்வீசும்
கல்லறுக்குமரமறுக்குங்கையறுக்குஞ்செய்யமள்ளர்கமலத்தோடு
நெல்லறுக்குந்திருநாடனெடுஞ்சரமென்றுலெவர்க்குரிற்கலாமே. (௧௦௨)

காலிழந்தும்வாலிழந்துங்கையிழந்துங்கழுத்திழந்தும்பருமக்கட்டின்
மேலிழந்துமருப்பிழந்தும்வீழ்தனவென்குவவல்லால்வேலையென்ன
மாலிழந்துமழையனையமதமிழந்தும்வலியிழந்துமலைபோல்வந்த [ம்.
தோலிழந்ததொழிலொன்றுஞ்சொன்னார்களில்லைநெடுஞ்சுரர்களெல்லா

வேறு.

வேல்செல்வனசதகோடிகள்விண்மேனிமிர்விசிகக்
கோல்செல்வனசதகோடிகள்கொலைசெய்வனமலையைத்
தோல்செல்வனசதகோடிகடுரகந்தொடரிரதக்
கால்செல்வனசதகோடிகளொருவன்னவைகடிவான். (௧௦௪)

ஒருவில்லியையொருகாலையினுலகேழையுமுடற்றும்
பெருவில்லிகண்முடிவில்லவர்சரமாமழைபெய்வார்
பொருவில்லவர்கணைமாரிகள்பொடியாம்வகைபொழியத்
திருவில்லிகடலைபோய்நெடுமலைபோலுடல்சிதைவார். (௧௦௫)

நூறாயிரமதயானையின்வலியோரெனநுவல்வோர்
மாறாயினரொருகோல்படமலைபோலுடன்மறிவார்
ஆறாயிரமுளதாகுதலழிசெம்புலனவைபுக்
கேறாதெறிகடல்பாய்வனசினமால்கரியினமால். (௧௦௬)

மழுவற்றுகுமலையற்றுகும்வளையற்றுகும்வயிரத்
தெழுவற்றுகுமிலையற்றுகுமயிலற்றுகுமெழுவேல்
பழுவற்றுகுமதவெங்கரிபரியற்றுகுமிரதக்
குழுவற்றுகுமொருவெங்கணைதொடைபெற்றதொர்குறியால். (௧௦௭)

ஒருகாலையினுலகத்துறுமுயிர்யாவையுமுண்ணும்
வருகாலனுமவன்றாதருமன்றானுமவ்வரைப்பின்
இருகாலுடையவர்யாவருமிரிந்தாரிளைத்திருந்தார்
அருகாயிரமுயிர்கொண்டுதமாறேகலரயர்த்தார். (௧௦௮)

அடுக்குற்றனமதயானையுமழிதேர்களும்பரியும்
தொடுக்குற்றனவிசும்பூடுறச்சுமந்தோங்கினவெனினும்

மிடுக்குற்றன கவந்தக்குலமெழுந்தாடலினெல்லாம்
நடுக்குற்றனபிணக்குன்றுகளுயிர்நண்ணினவென்ன. (௧0௯)

பட்டாருடல்படுசெம்புனறிருமேனியிற்படலால்
கட்டார்சிலைக்கருஞாயிறுபுரைவான்கடையுகநாள்
சுட்டாசறுத்துலகுண்ணுமச்சுடரோனெனப்பொலிந்தான்
ஒட்டாருடற்குருதிக்குளித்தெழுந்தானையுமொத்தான். (௧௧0)

தீயொத்தனவுருமொத்தனசரஞ்சிந்திடச்சிரம்போய்
மாயத்தவர்படுகின்றனரெனவும்மறங்குறையார்
காயத்திடையுயிருண்டிடவுடன்மொய்த்தனகளியால்
ஈயொத்ததுவிருதக்குலநறவொத்தனனிறைவன். (௧௧௧)

மொய்த்தாரையொரிமைப்பின்றலைமுடுகத்தொடுசிலையால்
தய்த்தானவர்கழற்றிண்பசுங்காயொத்தனர்சரத்தால்
கய்த்தார்நெடுந்தேருங்கடுங்களிறுங்களத்தழுந்தக்
குய்த்தாரழிகுழம்பாம்வகைவழுவாசரக்குழுவால். (௧௧௨)

பிரிந்தார்பலரிரிந்தார்பலர்பிழைத்தார்பலருழைத்தார்
புரிந்தார்பலர்நெரிந்தார்பலர்புரண்டார்பலருருண்டார்
எரிந்தார்பலர்கரிந்தார்பலரெழுந்தார்பலர்விழுந்தார்
சொரிந்தார்குடறுமிந்தார்தலைதொலைந்தாரெதிர்தொடர்ந்தார். (௧௧௩)

மணிகுண்டலம்வலயங்குழைமகரஞ்சுடர்மகுடம்
அணிகண்டிகைகவசங்கழறிலகம்புதலகலம்
துணிவுண்டவருடல்சிந்தினதொடர்கின்றனசுடரும்
திணிகொண்டலினிடைமின்குலமிளிர்கின்றனசிவண. (௧௧௪)

முன்னேயுளன்பின்னேயுளன்முகத்தேயுளனகத்தின்
றன்னேயுளன்மருங்கேயுளன்றலைமேலுளன்மலைமேல்
கொன்னேயுளனிலத்தேயுளன்விசும்பேயுளன்கொடியோர்
என்னேயொருகடுப்பென்றிடவிருஞ்சாரிகைதிரிந்தான். (௧௧௫)

என்னேரினனென்னேரினனென்றியாவருமெண்ணப்
பொன்னேர்வருவரிவிற்கரத்தொருகோளரிபொருவான்
ஒன்றார்பெரும்படைப்போர்க்கடலுறையன்றுளதெனினும்
அன்னேரவருடனேதிரிநிழலேயெனலானான். (௧௧௬)

பள்ளம்படுகடலேழினும்படியேழினும்பகையின்
வெள்ளம்பலவுளவென்னினும்வினையம்பலதெரியாக்
கள்ளம்படர்பெருமாயையிற்கரந்தாருருப்பிறந்தார்
உள்ளன்றியும்புறத்தேயுமுற்றுளனுமெனவுற்றான். (௧௧௭)

நானாவிதப்பெருஞ்சாரிகைதிரிகின்றதுநவிலார்
போனானிடைபுகுந்தானெனப்புலன்கொள்கிலர்மறந்தார்
தானாவதுமுணர்ந்தானுணர்ந்துலகெங்கணுந்தானே
ஆனான்வினைதுறந்தானெனவிமையோர்களுமயிர்த்தார். (௧௧௮)

சண்டக்கடுநெடுங்காற்றிடைதுணிந்தெற்றிடத்தரைமேல்
கண்டப்படுமலைபோனெடுமரம்போற்கடுந்தொழிலோர்
துண்டப்படுகடுஞ்சாரிகைதிரிந்தான்சரஞ்சொரிந்தான்
அண்டத்தினையளந்தானெனகிளர்ந்தானிமிர்ந்தகன்றான். (௧௧௯)

களியானைநெடுந்தேர்களுங்கடும்பாய்பரிக்கணனும்
தெளியாளியுமுரட்சீயமுஞ்சினவீரர்தந்திறமும்
வெளிவானகமிலதாம்வகைவிழுந்தோங்கியபிழம்பால்
நளிமாமலைமலைதானெனநடந்தான்கடற்கிடந்தான். (௧௨௦)

வேறு.

அம்பரங்கடொடுங்கொடியாடையும்
அம்பரங்களொடுங்களியானையும்
அம்பரங்கவழுந்தினசோரியின்
அம்பரங்கமருங்கலமாழ்ந்தென.

இ-ள். அம்பு - (இராமபிரானெய்த) வாளி, அரங்க - அழுந்தலால், அம்பரங்கள் - ஆகாயத்தை, தொடும் - நீண்டுகின்ற, கொடியாடையும் - கொடிச்சீலையும், அம்பரங்களொடும் - அழகிய மேற்றவிசின் பாரத்தோடும், களியானையும் - மதத்தயானைகளும், அம்பரம் - கடலினது, கம் - நீரில் (பிரசண்டமாருதம் மோதலால்) அருங்கலம் - அரிய சரக்கேற்றிய மரக்கலங்கள், ஆழ்ந்தென - மூழ்கினதுபோல, சோரியின் - இரத்தவெள்ளத்தில், அழுந்தின - அமிழ்ந்தன—எ-று.

பரம் - ஆகுபெயர். ஆகாயம் மற்றைப்பூதங்களுக்கு முதன்மைத்தாகலின் அம்பரங்கள் என்பதும், மேற்றவிசு யானைகட்குப் போரணிகளினுமின்றியமையாச் சிறப்பிற்றாகலாற் பரங்கள் என்பதும், உயர்வுபற்றி வந்த பால்வழுவமைதி. அம்பரங்கம் - மெலித்தல். இது தொழிலும் உருவமும் பற்றிவந்த வுவமை. (௧௨௧)

தம்மனத்திற்சலத்தர்மலைத்தலை
வெம்மையுற்றெழுந்தேறுவமீளுவ
தெம்முனைச்செருமங்கைதன்செங்கையால்
அம்மனைக்குலமாடுவபோன்றவே. (௧௨௨)

கேடகங்கணவங்கையொடுங்கிளர்
கேடகங்கடுணிந்துகிடந்தன

கேடகங்கிளர்கின்றகளத்தநன்
கேடகங்கண்மறிந்துகிடந்தவே.

இ-ள். கேடு - அழிதல், அகம் - தன்னுள், கிளர்கின்ற - எழுகின்ற, களத்த - களத்தின்கணின்ற சேனைகள், கிளர் - விளங்குகின்ற, கேடகங்களொடும் - பல கைகளோடு, கேடகம் - கோள்களினது, மாலையையொத்தகங்கணம் - மணிக்கடகமணிந்த, வன்கை - வலிமையாகிய கைகள், துணிந்து கிடந்தன - அறுந்துகிடந்தன, நன்கு - நறுமணமமைந்த, ஏட - தும்பைமாலையைத்தரித்த, கங்கள் - தலைகள், மறிந்து கிடந்தன - உருண்டுகிடந்தன—எ-று.

களத்த என்றது - சேனைகளை, இது வினையால் விளக்கிற்று. கேடம், ஏடு இவ்விரண்டும் ஆகுபெயர். (௧௨௩)

* அங்கதங்களத்தற்றழிதாரொடும்
† அங்கதங்களத்தற்றழியுற்றவால்
புங்கவன்கணைப்புட்டில்பொருந்திய
புங்கவன்கணைப்புற்றரவம்பொர.

இ-ள். புங்கவன் - யாரினும் உயர்ந்தோனாகிய ஸ்ரீராமபிரானுடைய, கணை - திரண்ட வடிவினதாகிய, புட்டில் - தூணியில், பொருந்திய - தங்கியிருந்த, புங்கம் - குதையையுடைய, வன்கணை - வலியகணையாகிய, புற்றரவம் - புற்றிற்பொருந்திய பாம்பானது, பொர - பொருதலினால், அங்கதம் - (அச்சேனைவீரர்களின்) தோளணிகள், களத்தற்று - கழுத்துகள் துணிந்ததுபோலத் துணிந்தன, அழிதாரொடும் - (தேனொழுகலால்) அழிந்த தும்பைமலர்மாலையும், அம் - அழகிய, கதமொடும் - கோபமும், களத்து - போர்க்களத்தில், அற்று - நிலைமைகெட்டு, அழிவுற்ற - அழிவையடைந்தன—எ-று.

ஒடு - எண்ணிடைச்சொல், உம் - சாரியை, இது முற்றுருவகம். (௧௨௪)

கயிறுசேர்கழற்கார்நிறக்கண்டகர்
எயிறுவாளிபடத்துணிந்தியானையின்
வயிறுதோறுமறைவனவானிடைப்
புயலெறும்புகுவெண்பிறைபோன்றவே. (௧௨௫)

வென்றிவீரரெயிறும்விடாமதக்
குன்றின்வெள்ளைமருப்புங்குவிந்தன
வென்றுமெனாறுமமைந்தவிளம்பிறை
ஒன்றிமாநிலத்துக்கவுமொத்தவால். (௧௨௬)

---

* அங்கவெங்களத்தற்றழிதேரொடும்.

† அங்கவெங்களத்தற்றழிவுற்றவால். இவை பாடபேதம்.

ஒலிலாருடலூந்துதிரப்புனல்
பாவிவேலையுலகுபரத்தலால்
தீவுதோறுமினிதுறைசெய்கையர்
ஈவிலாதநெடுமலையேறினார். (கஉஎ)

விண்ணிறைந்தனமெய்யுயிர்வேலையும்
புண்ணிறைந்தபுனலினிறைந்தன
மண்ணிறைந்தனபேருடல்வானவர்
கண்ணிறைந்தனவிற்றொழிற்கல்வியே. (கஉஅ)

செறுத்தவீரர்பெரும்படைசிந்தின
பொறுத்தசோரிபுகக்கடல்புக்கன
இறுத்தநீரிற்செறிந்தனவெங்கணும்
அறுத்துமீனமுலந்தவநந்தமே. (கஉகூ)

ஆயிரம்பெருவெள்ளமரைபடத்
தேயவிற்பதுபின்பினியென்செயப்
பாயுமுற்றுடனேயெனப்பன்னினான்
நாயகற்கொருதவியைநல்குவான். (கங0)

கோல்விழுந்தழுந்தாமுனங்கூடியாம்
மேல்விழுந்திடினும்மிவன்வீயுமால்
கால்விழுந்தமழையன்னகாட்சியீர்
மால்விழுந்தளிபோலமயங்கினீர். (கஙக)

ஒல்வதேயிவ்வொருவனிவ்யூகத்தைக்
கொல்வதேநின்றுகுன்றெனயாமெலாம்
வெல்வதேதுமிலாமையின்வெண்பலே
மெல்வதேயெனவன்னிவிளம்பினான். (கஙஉ)

உற்றுருத்தெழுவெள்ளமுடன்றெழாச்
சுற்றுமுற்றும்வளைந்தபதாவின
ஒற்றைமால்வரைமேலுயர்தாரைகள்
பற்றிமேகம்பொழிந்தெனப்பல்படை. (கஙங)

குறித்தெறிந்தனவெய்தனகூறுறத்
தறித்ததேருங்களிறுந்தரைப்பட
மறித்தவாசிதுணித்தவர்மாப்படை
தெறித்துச்சிந்தச்சரமழைசிந்தினான். (கஙச)

வாய்விளித்தெழுபஃறலைவாளியில்
போய்விளித்தகுருதிகள்பொங்குவ

பேய்விளிப்பநடிப்பனபெட்புறும்
தீய்விளிப்புறுதீபங்கர்த்தவால். (கநடு)

நெய்கொள்சோரிநிறைந்தநெடுங்கடல்
அய்யவாடையளன்னசெந்தாளினள்
வய்யமங்கைபொலிந்தனண்மங்கலச்
செய்யகோலம்புனைந்தன்னசெய்கையாள். (கநகூ)

உப்புத்தேனுநெய்யொண்டயிர்பால்கரும்
பப்புத்தானென்றுரைப்பனவாழிகள்
துப்புப்போற்குருதிப்புனல்சுற்றலால்
தப்பிற்றவ்வுரையின்றொர்தனுவினே. (கநஎ)

ஒன்றுமேதொடைகோலொருகோடிகள்
சென்றுபாய்வனதிங்களிளம்பிறை
அன்றுபோலெனவாகியதச்சிலை
என்றுமாள்வரெதிர்த்தவிராக்கதர். (கநஅ)

வேறு.

எடுத்தவரிரைத்தவரெதிர்ந்தவரெதிர்ந்தவர்மறங்கொடெதிரே
தடுத்தவர்சலித்தவர்சரிந்தவரிருந்தவர்தனிக்களிறுபோல்
கடுத்தவர்கலித்தவர்கறுத்தவர்செறுத்தவர்கலந்துசரமேல்
தொடுத்தவர்துணிந்தவர்தொடர்ந்தனர்கிடந்தனர்துரந்தகணையால். ()

தொடுப்பதுசுடர்ப்பகழியாயிரநிரைத்தவைதுரந்துதுறைபோய்ப்
படுப்பதுவயப்பகழியாயிரரையன்றுபதினாயிரவரைக்
கடுப்பதுகருத்துமநுகட்புலன்மனங்கருதல்கையினயில்வேல்
எடுப்பதுபடப்பொருவதன்றியவர்செய்வதொருநன்றியுளதோ. (கசo)

தூசியொடுநெற்றியிருகையினொடுபேரணிகடைக்குழைதொகுத்
தூசிநுழையாவகைசரத்தணிவகுக்குமவையுண்ணுமுயிரை
ஆசைகளையுற்றுருவுமப்புறமுமோடுமெதனிப்புறமுளார்
ஈசனெதிருற்றுகுவதல்லதிகன்முற்றுவதொர்கொற்றமெவனோ. (கசக)

ஊனகுவடிக்கணைகளுழியனவொத்தனவுலந்தவுலவைக்
கானகநிகர்த்தனரரக்கர்மலையொத்தனகளித்தமதமா
மானவன்வயப்பகழிவீசுவலையொத்தனவளைப்புனலுள்வாழ்
மீனகுலமொத்தனகடற்படையினத்தொடும்விளிந்துறுதலால். (கசஉ)

ஊழியிறுதிக்கடுகுமாருதமுமொத்தனனிராமனுடனே
பூழியெனவுக்குதிருமால்வரைகளொத்தனரரக்கர்பொருதார்
ஏழுலகுமுற்றுயிர்கள்யாவையுமுருக்கியிறுதிக்கணின்வரும்
ஆழியையுமொத்தனனம்மன்னுயிருமொத்தனரலக்குநிருதர். (கசந)

மூலமுதலாயிடையுமாயிறுதியாயெவையுமுற்றுமுறலும்
காலமெனலாயினனிராமனவ்வரக்கர்கடைநாளில்விளியும்
கூலமில்சராசரமனைத்தினையுமொத்தனர்குரைக்கடலெழும்
ஆலமெனலாயினனிராமனவர்மீனமெனலாயினர்களால். (௧௪௪)

வஞ்சவினைசெய்துநெடுமென்றில்வளனுண்டுகெரிபொய்க்குமறமார்
நெஞ்சமுடையோர்கள்குலமொத்தனரரக்கரறனுக்குநெடியோன்
நஞ்சநெடுநீரினையுமொத்தனனடுத்தநனைநக்குநரையும்
பஞ்சமுறுநாளில்வறியோர்களையுமொத்தனரரக்கர்படுவார். (௧௪௫)

வெள்ளமொருநூறொடிருநூறுபடும்வேலையினிலங்கைவெளியும்
பள்ளமொடுமேடுதெரியாதவகைசோர்குருதிபம்பியெழலும்
உள்ளுமதிளும்புறமுமொன்றுமறியாதலறியோடினர்களால்
கள்ளநெடுமான்விழியரக்கியர்கலக்கமொடுகோல்கள்குலைவார். (௧௪௬)

நூறுகோடி சேனாதிபர்கள் ராமனோடுபோருதல்.

நீங்கினர்நெருங்கினர்முருங்கினருலைந்துலகினீளுமலைபோல்
வீங்கினர்பெரும்பிணம்விசும்புறவசும்புபடுசோரிவிரிவுற்
றோங்கினனெடும்பரவையொத்துயரவெத்திசையுமுற்றெதிருறத்
தாங்கினபடைத்தலைவர்நூறுசதகோடியர்தடுத்தலரியார். (௧௪௭)

தேருமதமாவும்வரையாளியொடுவாசிமிகுசீயமுதலா
ஊருமவையாவையுநடாயினர்கடாயினர்களுந்தினர்களால்
காருமுருமேறுமெரியேறுநிகர்வெம்படையொடம்புகடிதின்
தூரும்வகைதூயினர்துரந்தனர்களெய்தனர்தொடர்ந்தனர்களால். (௧௪௮)

வம்மினடவம்மினெதிர்வந்துநுமதாருயிர்வரங்கள்பிறவும்
தம்மினெனவின்னனமொழிந்தெதிர்பொழிந்தனதடுப்பரியவாம்
வெம்மினனவெம்பகழிவேலையெனவேயினனவ்வெய்யவினையோர்
தம்மினமனைத்தையுமுனைக்கெதிர்தடுத்தனதனித்தனியரோ. (௧௪௯)

இப்போரெவ்வாறெனச் சிவனைத் தேவர்வினாதல்.

அக்கணையயக்கணமறுத்தனர்செறுத்திகலரக்கரடரப்
புக்கணையலுற்றனர்மறைத்தனர்புயற்கதிகம்வாளிபொழிவார்
திக்கணைவகுத்தனரெனச்செலநெருக்கினர்செருக்கின்மிகையால்
முக்கணனையுற்றடிவணங்கியிமையோரிவைமொழிந்தனர்களால். (௧௫௦)

படைத்தலைவருற்றொருவர்மும்மடியிராவணனெனும்படிமையோர்
கிடைத்தனரவர்க்கொருகணக்கிலைவளைத்தனர்கிளர்ந்துலகெலாம்
அடைத்தனர்தெழித்தனரழித்தனர்தனித்துளனிராமனவரே
துடைத்தனரெம்வெற்றியெனவுற்றனரினிச்செயல்பணித்திசுடரோய். ()

எய்தகணைபெய்துவதன்றோன்பிடையறுத்திவர்களேழுலகமும்
பெய்தகணைமாமுகிலெனப்புடைவளைத்தனர்பிடித்தனர்கள்போல்
வய்தகலினல்லதுமறப்படைகொடிப்படைகடக்கும்வலிதான்
செய்ததிருமாலுடனுனக்குமரிதென்றனர்திகைத்துவிழுவார். (௧௫௨)

சிவன் இராமனை வெல்வானோ ஆறுதல் கூறுதல்.

அஞ்சியயரன்மினவரெத்தனையராயிடினுமத்தனைவரும்
பஞ்சிமெயரியுற்றதெனவெந்தழிவரிந்தவுரைபண்டுமுளதால்
நஞ்சமமிழ்தத்தைநனிவென்றிடினுநல்லறநடக்குமதனை
வஞ்சவினைபொய்க்கருமம்வெல்லினு மிராமனையம்மாயர்கடவார். (௧௫௩)

அரக்கருளரார்சிலரவ்வீடணனலாதுலகிளுவியுடையார்
இரக்கமுளதாகினதுநல்லறமெழுந்துவளர்கின்றதினிநீர்
கரக்கமுழைதேடியுழல்கின்றிலிர்களின்றொருகடும்பகலிலே
குரக்கின்முதனையகனையாளுடையகோளுழுவைகொல்லுமிவரை. (௧௫௪)

என்று * பரமன்பகரநான்முகனுமன்னபொருளேயிசைதலும்
நின்றுநிலையாறினர்கள்வானவருமானவனுநேமியெனலாத்
துன்றுநெடுவொளிமழைமாரியினுமேலனதுரந்துவிரைவில்
குன்றுகுலமால்வரைகண்மானுதலைமாமலைகுவித்தனனரோ. (௧௫௫)

வேறு.

மகரமறிகடலின்வளையும்வயிரிருதர்
சிகரமனையவுடல்சிதறியிறுவருயிர்
பகரவரியபதம்விரவவமரர்பழ
நகரமிடமருகநவையர்நலிவுபட. (௧௫௬)

உகளுமிவுளிதலைதுமியவுறுகழல்கள்
தகளியுறவலியதலைகளறுதலைவர்
துகளினுடல்கள்விழவுயிர்கள்சுரருலகின்
மகளிர்வனமுலைகடழுவியகமகிழ. (௧௫௭)

மலையுமறிகடலும்வனமுமுறுநிலமும்
உலைவிலமரருறையுலகுமுயிர்களொடு
தலையுமுடலுமிடைதழுவுதவழ்குருதி
அலையுமரியதொருதிசையுமிலதருகு. (௧௫௮)

இணையசெருநிகழுமளவினெதிர்பொருத
வினையமுடைமுதல்வரெவருமுடன்விளிய
அனையபடைநெளியவமரர்சொரிமலர்கள்
நனையவிசையினெழுதுவலைமழைகலிய. (௧௫௯)

---

* பரமன் - சிவன்.

இரியலுறுபடையைநிருதரிடைவிலகி
எரிகள்சொரியுநெடுவிழியரிழுதையர்கள்
திரிகதிரிகவெனவுரறுதெழிகுரலர்
கரிகளரிகள்பரிகடிதினெதிர்கவவ. (௧௬௦)

உலகுசெவிடுபடமழைகளுதிரவுயர்
அலகின்மலைகுலையவமரர்தலையதிர
இலகுதொடுபடைகளிடியொடுருமனைய
விலகியதுதிமிரம்வளையும்வகைவிளைய. (௧௬௧)

அழகிதழகிதெனவழகனுவகையொடு
பழகுமதிதியரையெதிர்கொள்பரிசுபட
விழைகுமெதிரவெதிரெதிர்கொள்விரிபகழி
மழைகண்மழைசொரியவமரர்மலர்சொரிய. (௧௬௨)

தினகரனையனையகொடிகடிசையடைவ
சினவுபொருபரிகள்செறிவவனுகவுயர்
அனகனெடுமெமரின்முடுகியெதிரவெழு
கனகவரைபொருவுகதிர்கொண்மணியிரதம். (௧௬௩)

பாறுபடுசிறகுகழுகுபகழிபட
நீறுபடுமிரதநிரையினுடறவிர
வேறுபடர்படரமிரவிசுடர்வலைய
மாறுபடவுலகின்மலைகளளறுபட. (௧௬௪)

அருகுகடறிரியவலகின்மலைகுலைய
உருகுசுடர்களிடைதிரியவுரனுடைய
இருகையொருகளிறுதிரியவிடுகுயவர்
திரிகையெனவுலகுமுழுதுமுறைதிரிய. (௧௬௫)

சிவனுமயனுமெழுதிகிரியமரர்பதி
அவனுமமரர்குலமெவருமுனிவரொடு
கவனமுறுகரணமிடுவர்கழுகினமும்
நமனும்வரிசிலையுமறனுநடனவில. (௧௬௬)

தேவர்திரிபுவனநிலையர்செருவிறலை
ஏவரறிவுறுவரிறுதிமுதலறிவின்
மூவர்தலைகள்பொதிரெறிவரறமுதல்வ
பூவைநிறவவெனவேதமுறைபுகழ. (௧௬௭)

எய்யுமொருபகழியேழுகடலுமிடு
வெய்யகளிறுபரியாளொடிரதம்விழ

ஒய்யவொருகதியினேடவுணரமரர்
கய்களெனவவுணர்கால்கள்கதிகுலைய. (கசு அ)

அண்ணல்விடுபகழியானையிரதமயல்
பண்ணுபுரவிபடைவீரர்தொகுபகுதி
புண்ணினிடுகுறிகள்புள்ளியெனவிரைவின்
எண்ணுவனவனையவெல்லையினினுழைய. (கசுகூ)

வேறு.

சுருக்கமுற்றதுபடைசுருக்கத்தாலினிக்
கரக்கமுற்றொருபுறத்தென்னுங்கண்ணினல்
அரக்கருக்கன்றுசெல்வரியதாம்வகை
சரக்கொடுநெடுமதில்சமைத்திட்டானரோ. (கஎO)

மாலியைமாலியவானைமால்வரை
போலுயர்கயிடனைமதுவைப்போன்றுளார்
சாலிகையாக்கையர்தணிப்பில்வெஞ்சர
வேலியைக்கடந்திலருலகைவென்றுளார். (கஎக)

மாண்டனர்மாண்டனர்மற்றுளோரெலாம்
மீண்டனரொருதிசையேழுவேலையும்
மூண்டறமுருங்கியவூழிக்காலத்தில்
தூண்டுறுசுடர்சுடச்சுருங்கித்தொக்கபோல். (கஎஉ)

புரஞ்சுடுகடவுளும்புள்ளின்பாகனும்
அரஞ்சுடுகுலிசவேலமரர்வேந்தனும்
உரஞ்சுடுகிற்கிலரொருவனுமுடை
வரஞ்சுடும்வலிசுடும்வாழுநாள்சுடும். (கஎஙு)

ஆயிரவெள்ளமுண்டொருவராழிசூழ்
மாயிருஞாலத்தைமறிக்கும்வன்மையோர்
மேயினபெரும்படையதனையோர்விலால்
ஏயெனுமாத்திரதசெய்துகொன்றனன். (கஎச)

இடைபடும்படாதனவிமைப்பிலோர்படை
புடைபடுவலங்கொடுவிலங்கிப்போகுமால்
படைபடுங்கோடியோர்சரத்திறுற்பழிக்
கடைபடுமரக்கர்தம்பிறவிக்கட்டமால். (கஎரு)

பண்டுலகுய்த்தவனேடும்பண்ணமை
குண்டையின்பாகனும்பிறருங்கூடினர்
அண்டர்கள்விசும்பினின்றார்க்கின்றாருழைக்
கண்டிலமிவனெடுமொயக்கள்வனல். (கஎசு)

கொன்றனனினியொருகோடிகோடிமற்
றன்றெனிற்பதுமமன்றாயின்வெள்ளமா
நின்றதுநின்றினிநினைவதென்பிற
ஒன்றெனநினைகெனவன்னியோதினான். (௧௭௭)

விழித்துமோவிராவணன்முகத்துமீண்டியாம்
பழித்துமோநம்மைநாம்படுத்தலஞ்சினும்
அழித்துமோர்பிறப்புறுநெறிசென்றண்மயாம்
கழித்துமிவ்யாக்கையைப்புகழைக்கண்ணுற. (௧௭௮)

இடுக்கினிப்பெயர்ந்துரையெண்ணுவேமெனின்
அடுத்தகூர்வாளியினரணநீங்கலோம்
எடுத்தொருமுகத்தினாலெய்தியாமினிக்
கொடுத்துநம்முயிரெனவொருமைகூறினான். (௧௭௯)

இளக்கருநெடுவரையீர்க்குமாறெலாம்
அளக்கரிற்பாய்ந்தெனப்பதங்கமாரழல்
விளக்கினில்வீழ்ந்தெனவிதிகொண்டுந்தலால்
வளைத்திரைத்தடர்த்தனர்மலையின்மேனியார். (௧௮௦)

மழுவெழுத்தண்டுகோல்வலயநாஞ்சில்வாள்
எழுவயிற்குலிசவேல்லீட்டிதோமரம்
கழுமுதற்கற்பணமுதலகைப்படை
தொழுவினிற்புலியனானுடலிற்றூவினார். (௧௮௧)

இராமன் காந்தர்ப்பாத்திரம்விடுதல்.

காந்தருப்பம்மெனுங்கடவுண்மாப்படை
வேந்தருக்கரசனும்வில்லினூக்கினான்
பாந்தளுக்கரசெனப்பறவைக்கேறெனப்
போந்துருத்தனநெருப்பனையபோர்க்கணை. (௧௮௨)

இராமன்விடுத்த அத்திரத்தின் உருவம்.

மூன்றுகண்ணமைந்தனவைம்முகத்தன
ஆன்றனநெய்கனல்புனலுமாடின
வான்றொடநிமிர்வனவாளிமாமழை
தோன்றினபுரஞ்சுடுமொருவன்றோற்றத்த. (௧௮௩)

ஐயிருகோடியரரக்கர்வேந்தர்கள்
மொய்வலிவீரர்களொழியமுற்றுற
எய்யெனுமாத்திரத்தவிந்ததென்பரால்
செய்தவத்திராவணன்மூலச்சேனையே. (௧௮௪)

மாப்பெருந்தீவுகளேழுமாதிரம்
பாப்பரும்பாதலத்துள்ளும்பல்வகைக்
காப்பருமலைகளும்பிறவுங்காப்பவர்
யாப்புறுகாதலரிராவணற்கவர். (௧௮௫)

மாத்தடமேருவைவளைந்தவான்சுடர்
கோத்தகன்மார்பிடையணியுங்கொள்கையார்
பூத்தவிசுகந்தவன்புகன்றுபொய்யறு
நாத்தழும்பேறியவரத்தர்நண்ணினார். (௧௮௬)

நம்முளீண்டொருவனைவெல்லுநன்கெனின்
வெம்முனையிராவணன்றனையும்வெல்லுமால்
இம்மெனவுடனெடுத்தெழுந்துசேறுமோ
செம்மையிற்றனித்தனிச்செய்துமோசெரு. (௧௮௭)

வேறு.

எல்லோமெல்லாமொன்றிவளைத்திடுநெடியோனை
வல்லோம்வல்லபோர்வளமுற்றிமலையோமேல்
வெல்லோம்வெல்லோமென்றனன்வன்னிமிடலோரும்
தொல்லோர்சொல்லேநன்றெனவஃதேதுணிவுற்றார். (௧௮௮)

அன்னார்தாமுமார்கலியேழுமெனவார்த்தார்
மின்னார்வானமிற்றுறுமென்றெறவிளிசங்கம்
கொன்னேயூதித்தோள்புடைகொட்டிக்கொடுசேர்ந்தால்
என்னும்வையமென்படும்வானந்திசையெல்லாம். (௧௮௯)

ஆர்த்தாரன்னாரன்னகணத்தேயவராற்றல்
தீர்த்தானுந்தன்வெஞ்சிலைநாணைத்தெரிவுற்றான்
பேர்த்தான்பேர்த்தான்முற்றுமளந்தான்பிறழ்சங்கம்
ஆர்த்தாலொத்ததவ்வொலியெல்லாவுலகுக்கும். (௧௯௦)

வேறு.

பல்லாயிரகோடியர்பல்கலைநூல்
வல்லாரவர்மெய்ம்மைவழங்கவலார்
எல்லாவுலகங்களுமேறியபோர்
வில்லாளரரக்கரின்மேதகையார். (௧௯௧)

வென்றாருலகங்களைவிண்ணவரோ
டொன்றாவுயர்தானவர்யூகமெலாம்
கொன்றார்நிமிர்கூற்றெனவெவ்வுயிரும்
தின்றாரெதிர்சென்றுசெறிந்தனரால். (௧௯௨)

வளைத்தார்மதயானையைவன்றொழுவில்
தளைத்தாரெனவந்துதனித்தனியே

உளைத்தாருருமேறெனவொன்னலர்போர்
விளைத்தாரிமையோர்கள்வெதும்பினரால். (௧௯௩)

விட்டியவழங்கியவெம்படையில்
சுட்டியநிமிர்ந்தசுடர்ச்சுடரும்
கட்டியுமொருங்குகலந்தெழலால்
உட்டியுறவெந்தனவேழுலகும். (௧௯௪)

தேரார்ப்பொலிவீரர்தெழிப்பொலியும்
தாரார்ப்பொலியுங்கழறாக்கொலியும்
போராற்சிலைநாணிபுடைப்பொலியும்
காரார்ப்பொலியுங்களிறார்ப்பொலியும். (௧௯௫)

எல்லாருமிராவணனேயனையார்
வெல்லாவுலகில்லவர்மெய்வலியார்
தொல்லார்படைவந்துதொடர்ந்ததெனா
நல்லானுமுருத்தெதிர்நண்ணினனால். (௧௯௬)

ஊழிக்கனல்போல்பவருந்தினபோர்
ஆழிப்படையம்பொடுமெற்றகலப்
பாழிக்கடைநாள்விடுபன்மழைபோல்
வாழிச்சுடர்வாளிவழங்கினனால். (௧௯௭)

சூரோடுதொடர்ந்தசுடர்க்கணைதான்
தாரோடகலங்கடிந்திடலும்
தேரோடுமடிந்தனர்செங்கதிரோன்
ஊரோடுமடிந்தனனாத்துரவோர். (௧௯௮)

கொல்லோடுசுடர்க்கணைகூற்றினிணைப்
பல்லோடுதொடர்ந்தனபாய்தலினால்
செல்லோடெழுமாமுகில்சிந்தினபோல்
வில்லோடும்விழுந்தமிடற்கரமே. (௧௯௯)

செம்போடுதிரத்திரையாழியின்வாய்
வெம்போடரவக்குலமேனிமிரும்
கொம்போடும்விழுந்தனவொத்தகுறைந்
தம்போடுவிழுந்தவடற்கரமே. (௨௦௦)

முன்னோடுதிரப்புனன்மூதுலகைப்
பின்னோடிவளைந்தபெருங்கடல்வாய்
மின்னோடும்விழுந்தனமேகமெனப்
பொன்னோடைநெடுங்கிரிபுககனவால். (௨௦௧)

மறவெற்றியரக்கர்வலக்கையொடும்
நறவக்குருதிக்கடல்வீழ்நகைவாள்
சுறவொத்தனமீதுதுடித்தெழலால்
இறவொத்தனவாவுமினப்பரியே. (௨௦௨)

தாமச்சுடர்வாளிதடிந்தகலப்
பாமக்குருதிப்படிகின்றபடைச்
சேமப்படர்கேடகமால்கடல்சேர்
ஆமைக்குலமொத்தனவத்தனையால். (௨௦௩)

காம்போடுபதாகைகள்காருதிரப்
பாம்போடுகெடற்படிவுற்றனவால்
வாம்போர்நெடுவொடைமலைந்தகலக்
கூம்போடுயர்பாய்கள்குறைந்தனபோல். (௨௦௪)

மண்டப்படுசோரியின்வாரியின்வீழ்
கண்டத்தொகைகவ்வியகாலொடுதோள்
முண்டத்திரிதண்டின்முரட்டொருவன்
றுண்டச்சுறவொத்ததுடித்தனவால். (௨௦௫)

தெளிவுற்றபளிங்குறுசில்லிகொடேர்
விளிவுற்றுறவேறுறவீழ்வனதாம்
அளிமுற்றியசோரியின்வாரியினாழ்
ஒளிமுற்றியதிங்களையொத்துளவால். (௨௦௬)

நிலைகோடலில்வென்றியரக்கரைநேர்
கொலைகோடலின்மன்குறிகோளுறுமேல்
சிலைகோடியதோறுசிரத்திரள்வன்
மலைகோடியின்மேலுமறிந்திடுமால். (௨௦௭)

திண்மார்பின்மிசைச்செறிசாலிகையின்
கண்வாளிகடைச்செறிகானநுழைந்
தெண்வாயுறமொய்த்தனவின்னறையுற்
றுண்வாய்வரிவண்டினமொத்தனவால். (௨௦௮)

பாறாகளத்தொருவன்பகலின்
கூறாகியநாலிலொர்கூறிடையே
நூறாயினயோசனைநூழில்களம்
மாறாதுழல்சாரிகைவந்தனனால். (௨௦௯)

நின்றாருடனின்றுநிமிர்ந்தயலே
சென்றானெதிர்சென்றுசிதைத்திடலால்

தன்றாதையையோர்வுறு தன்மகனோர்
கொன்றானிவனென்பதெனென்றுகொள்வார். (உகo)

இங்கேயுளனிங்குளனிங்குளனென்
றங்கேயுணர்கின்றவலந்தலைவாய்
வெங்கோபனெடும்படைவெஞ்சரம்விட்
டெங்கேனும்வழங்குவரேகுவரால். (உகக)

ஒருவன்னெனவுன்னுமுணர்ச்சியிலார்
இரவன்றிதுவோர்பகலென்பர்களால்
கரவன்றிதிராமர்கணக்கிலரால்
பரவைம்மணவிற்பலரென்பர்களால். (உகஉ)

ஒருவன்னொருவன்மலைபோனுயர்வோன்
ஒருவன்படைவெள்ளமொராயிரமே
ஒருவன்னொருவனுயிருண்டதலால்
ஒருவன்னுயிருண்டதுமுள்ளதுவே. (உகங)

தேர்மேலுளர்மாவொடுசெந்தறுகட்
கார்மேலுளர்மாகடன்மேலுளரிப்
பார்மேலுளரும்பர்பரந்துளரால்
போர்மேலரிராமர்புகுந்தடர்வார். (உகச)

என்னும்படியெங்கணுமெங்கணுமாய்த்
துன்னுஞ்சுழலுந்திரியுஞ்சுடரும்
பின்னுமம்ருகும்முடலும்பிரியான்
மன்னன்மகன்வீரர்மயங்கினரால். (உகரு)

வேறு.

படுமதகரிபரிசிந்தினபனிவரையிரதமவிந்தன
விடுதிசைசெவிடுபிளந்தனவிரிகடலளறெழுந்தன
அடுபுலியவுணர்தமங்கையரலர்விழியருவிகள்சிந்தின
கடுமணிநெடியவெனுஞ்சிலைகணகணகணகணெனுந்தொறும். (உகசு)

வேறு.

ஊனேறுபடைக்கைவீரரெதிரெதிருருவந்தோறும்
கூனேறுசிலையுந்தானுங்குதிக்கின்றகடுப்பின்கோட்பால்
வானேறினார்கடேருமலைகின்றவயவர்தேரும்
* தானேறிவந்ததேரேயாக்கினன்றனியேறன்னான். (உகஎ)

காயிருஞ்சிலையொன்றேனுங்கணைப்புட்டிலொன்றேனும்
தூயெழுபகழிமாரிமழைத்துளித்தொகையின்மேல

---

* தானேறிவந்ததேர் - தரை.

ஆயிரங்கைகள்செய்தசெய்தனவமலன்செங்கை
ஆயிரங்கையுங்கூடியிரண்டுகையாயவன்றே. (உகஅ)

பொய்யொருமுகத்தனுகிமனிதனும்புணர்ப்பிதன்றால்
மெய்யுறவுணர்ந்தோம்வெள்ளமாயிரமிடைந்தசேனை
செய்யுறுவினையமெல்லாமொருமுகந்தெரிவதுண்டே
ஐயிருநூறுமல்லவநந்தமாமுகங்களம்மா. (உகக)

கண்ணுதன்மூர்த்திதானுநான்முகக்கடவுடானும்
எண்ணுதுந்தொடரவெய்தகோலெனவெண்ணலுற்றார்
பண்ணையால்வகுக்கமாட்டார்தனித்தனிப்பார்க்கலுற்றார்
ஒண்ணுமோகணிக்கவென்பாருவகையினுயர்ந்ததோளார். (உஉ0)

வெள்ளமீரைந்துநூறேவிடுகணையவற்றின்மெய்யே
உள்ளவாறுளவாமென்றேருரைக்கணக்குணர்துமேனும்
கொள்ளையோருருவைநூறுகொண்டனபலவாற்கொற்ற
வள்ளலேவழங்கினுனென்றனர்மற்றைவானோர். (உஉக)

குடைக்கெலாங்கொடிகட்கெல்லாங்கொண்டனகுவிந்தகொற்றப்
படைக்கெலாம்பகழிக்கெல்லாம்யானைதேர்பரிமாவாதிக்
கடைக்கெலாந்துரந்தவாளிக்கணித்ததிறகளவைகாட்டி
அடைக்கலாமறிஞர்யாரேயென்றனர்முனிவரப்பால். (உஉஉ)

கண்டத்துங்கழுத்துமீதாய்க்கபாலத்துங்கடக்கலுற்ற
சண்டப்போரரக்கர்தம்மைத்தொடர்ந்துகோல்புணருந்தன்மை
பிண்டத்திற்கருவாந்தன்பேருருக்களைப்பிரமன்றந்த
அண்டத்தைநிறையப்பெய்துகுலுக்கியதனையவான. (உஉங)

கோடியையிரண்டுதொக்கபடைக்கலமள்ளர்கூவி
ஓடியோர்பக்கமாகவுயிரிழந்துலத்தலோடும்
வீடிநின்றழிவதென்னேவிண்ணவர்படைகள்வீசி
மூடுதுமிவனையென்றியாவருமூண்டுமொய்த்தார். (உஉச)

தேவாத்திரப்பிரயோககண்டனம்.

விண்டுவின்படையேயாதிமேவயன்படையீறாகக்
கொண்டொருங்குடனேவிட்டார்குலுங்கியதமரர்கூட்டம்
அண்டமுங்கீழ்மேலாவாகியததனையண்ணல்
கண்டொருமுறுவல்காட்டியவற்றினையவற்றாற்காத்தான். (உஉரு)

தானவைதொடுத்தபோதுதடுப்பரிதுலகந்தானே
பூநனிவடவைத்தீயிற்புக்கெனப்பொரிந்துபோமென்
றூனதுதெரிந்தவள்ளலளப்பருங்கோடியம்பால்
ஏனையர்தலைகளெல்லாமிடியுண்டமலையினிட்டான். (உஉசா)

மூலபல முற்றிலுமழிதல்.

ஆயிரவெள்ளத்தோருமடுகளத்தவிந்துவீழ்ந்தார்
மாயிருஞாலத்தாடன்வன்பொறைப்பாரநீங்கி
மீயுயர்ந்தெழுந்தானன்றேவீங்கொலிவேலைநின்றும்
போயொருங்கண்டத்தோங்கோடியோசனைகள்பொங்கி. (உஉஎ)

வேறு.

·ஆனையாயிரந்தேர்பதினாயிரமடர்பரியொருகோடி
சேனைகாவலாயிரம்பேர்படிற்செழுமணிக்கவந்தமொன்றுடும்
கானமாயிரமாயிரகோடிக்குக்கவின்மணிகணிலென்னும்
ஏனவம்மணியேழரைநாழிகையாடியதினிதன்றே. (உஉஅ)

வேறு.

வினைந்ததுமுடித்தேமென்றுவானவர்துயரநீத்தார்
புனைந்தனென்வாகையென்றுவிந்திரனுவகைபூத்தான்
வனைந்தனவல்லவேதம்வரம்புபெற்றுயர்ந்தமாதோ
அனந்தனுந்தலைகளேந்தியயர்வுயிர்த்தவலந்தீர்ந்தான். (உஉகூ)

தேவாதிய ரிராமனை வாழ்த்துதல்.

தாய்படைத்துடையசெல்வமீகெனத்தம்பிக்கீந்து
வேய்படைத்துடையகானம்விண்ணவர்தவத்தின்மேவி
தோய்படைத்தொழிலால்யார்க்குந்துயர்துடைத்தானைநோக்கி
வாய்படைத்துடையாரெல்லாம்வாழ்த்தினார்வணக்கஞ்செய்தார். (உஙo)

தீமொய்த்தவனையசெங்கணரக்கரைமுழுதுஞ்சிந்திப்
பூமொய்த்தகரத்தராகிவிண்ணவர்போற்றநின்றான்
பேய்மொய்த்தநரிகளீண்டிப்பெரும்பிணம்பிறங்கித்தோன்றும்
ஈமத்துட்டமியனின்றகறைமிடற்றிறைவனொத்தான். (உஙக)

* அண்டமர்க்களமும்வீந்தவரக்கரெவ்வுயிருமாகக்
கொண்டதோருருவந்தன்னுலிறுதிநாள்வந்துகூட
மண்டுநோண்மறித்துங்காட்டமன்னுயிரனைத்தும்வாரி
உண்டவன்றனேயானதன்னொருமூர்த்தியொத்தான். (உஙஉ)

தேவர் மலர்மழைபொழிதல்.

ஆகுலந்துறந்ததேவரள்ளினர்சொரிந்தவெள்ளச்
சேகறுமலருஞ்சாந்துஞ்செருத்தொழில்வருத்தந்தீர்க்க
மாகொலைசெய்தவள்ளல்வாளமர்க்களத்தைக்கைவிட்
டேகினனிளவலோடுமிராவணனேற்றகைம்மேல். (உஙங)

---

* அண்டமதளவவீந்த என்றும் பாடம்.

இவ்வழியியன்றவெல்லாமியம்பினுமிரிந்துபோன
தெவ்வழியாற்றல்வெற்றிச்சேனையின்செலவுஞ்சென்ற
வெவ்வழியரக்கர்கோமான்செய்கையுமிளையவீரன்
எவ்வமிலாற்றற்போருமுற்றுநாமியம்பலுற்றாம். (௨௩௪)

பெரும்படைத்தலைவர்யாரும்பெயர்ந்திலர்பெயர்ந்துபோய்நாம்
விரும்பினம்வாழ்க்கையென்றால்யாரிடைவிலக்கற்பாலார்
வரும்பழிதுடைத்தும்வானின்வைகுதும்யாமுமென்னா
இருங்கடல்பெயர்ந்ததென்னத்தானையுமீண்டதிப்பால். (௨௩௫)

௩௦ - வது, மூலபலவதைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௪௮௧.

---

௩௧ - வது, வேலேற்றபடலம்.

சில்லியாயிரஞ்சில்லுளைப்பரியொடுஞ்செறிந்த
எல்லவாங்கதிர்மண்டிலமாறுகொண்டிமைக்கும்
செல்லுந்தேர்மிசைச்சென்றனன்றேவரைத்தொலைத்த
வில்லும்வெங்கணைப்புட்டிலுங்கொற்றமும்விளங்க. (௧)

அரக்கர்சேனையோராயிரவெள்ளத்தையமரில்
துரக்கமானுடர்தம்மையென்றொருபுடைதுரந்து
வெருக்கொள்வானரச்சேனைமேற்றான்செல்வான்விரும்பி
இருக்குந்தேரொடும்போயவனிராவணனெதிர்ந்தான். (௨)

நூறுகோடிதேர்நொரிற்பரிநூறிருகோடி
யாறுபோன்மதமாகளிறையிருகோடி
எறுகோளுறுபதாதியுமிவற்றிவற்றிரட்டி
சீறுகோளரியேறனானுடனன்றுசென்ற. (௩)

மூன்றுவைப்பினுமப்புறத்துலகினுமுனையின்
என்றுகோளுறும்வீரர்கள்வம்மினென்றிசைக்கும்
ஆன்றபேரியுமதிர்குரற்சங்கமுமசனி
ஈன்றகாளமுமேழொடேழுலகமுமிசைப்ப. (௪)

அனையவாகியவரக்கர்க்குமரக்கனையவுணர்
வினையைவானவர்வெவ்வினைப்பயத்தினைவீரர்

நினையுமெஞ்சினைச்சுடுவதோர்நெருப்பினைநிமிர்ந்து
கனையுமெண்ணையுங்கடப்பதோர்கடலினைக்கண்டார். (௫)

கண்டுகைகளோடணிவகுத்துருமுழற்கற்கள்
கொண்டுகூற்றமுநடுக்குறத்தோள்புடைகொட்டி
அண்டகோளங்களடுக்கழிந்துலைவுறவார்த்தார்
மண்டுபோரிடைமடிவதேநலமெனமதித்தார். (௬)

அசுரவானராயுத்தம்.

அரக்கன்சேனையுமாருயிர்வழங்குவானமைந்த
குரக்குவேலையுமொன்றொடொன்றெதிரெதிர்கோத்த
நெருக்கிநேர்ந்தனநெருப்பிடைபொடித்தனநெருப்பின்
உருக்குசெம்பெனவம்பரத்தோடினதுதிரம். (௭)

அற்றவன்றலையறுகுறையெழுந்தெழுந்தண்டத்
தொற்றவானகமுதயமண்டிலமெனவொளிரச்
சுற்றுமேகத்தைத்தோற்றியகுருதிநீர்துளிப்ப
முற்றும்வையகம்போர்க்களமாமெனமுயல. (௮)

தூவியம்பெடையரியினமறிதரச்சூழி
தூவியம்பெடைசோர்ந்தனசொரியுடல்சுரிப்ப
மேவியம்படைபடப்படர்குருதியின்வீழ்ந்த
மேவியம்படைக்கடலிடைக்குடரொடுமிதப்ப. (௯)

இ-ள். (யானைகள்) அம் - அழகிய, படைக்கடலிடை - சேனைக்கடலினடுவே, மேவி - சேர்ந்து, (ஸ்ரீராமபிரான்) அம்பு - அம்புகளை, எடை- (தொடுக்க) எடுக்கையில், (மதநீருண்ணவரும்) தூவி - சிறகுவளத்தையுடைய, பெடையினம் - பெண்வண்டுக்கூட்டமும், அரியினம் - ஆண்வண்டுக்கூட்டமும், மறிதர - மீண்டுபோக, சூழி - முகபடாத்தை, தூவி - சின்னப்படுத்தியெறிந்து, சோர்ந்தன - சோர்வடைந்து, மேவியம் - பெருமைமேவிய, படை - அந்த அம்புகள், பட - பட்டதனால், படர்குருதியின் - பரவியோடுகின்ற உதிரத்தில், சொரியுடல் - இரத்தத்தைச்சொரிகின்ற தம்முடல், சுரிப்ப - சுழன்றமிழும்படி, வீழ்ந்த - வீழ்ந்து, குடரொடு - (வயிற்றினின்றும் வெளிப்பட்ட) குடரோடு, மிதப்ப - மிதப்பன,—எ-று.

இனமென்பதைப் பெடையென்பதனோடுங் கூட்டுக. யானைகள் சொல்லெச்சம், இது சூழிதூவியென்றமையால் பெறப்பட்டது ஒழிந்தவகலம் இசையெச்சம். மேவி என்னும் வினையெஞ்சுகிளவி தூவியென்னும் வினைகொண்டது. அம் சாரியை. (௰)

கண்டிறந்தனகணவர்தம்முகத்தவர்முறுவல்
கண்டிறந்தனமடந்தையருயிரொடுங்கலந்தார்

பண்டிறந்தனபழப்புணர்க்கன்புகப்பன்னிப்
பண்டிறந்தனபுலம்பொலிசிலம்பொலிபணிப்ப. (௧௦)

இ-ள். பண்டு - முன்னாள்களில், இறந்தன - உண்டுகழிந்தனவாகிய, பழம்புணர்க்கு - பழமையாகிய சுரதநூலிற்கூறும் புணர்ச்சிகள்காரணமாக, அன்புக - அன்பினைகண்ணீர்சிந்த, பன்னி - அப்புணர்ச்சிகளைப்பலவாறுகூறி, பண் - நிறைநரம்பியாழினிசையையும், திறம் - குறைநரம்பியாழினிசையையும், தன்புலம்பொலி - தமது அழுகையொலியும், சிலம்பொலி - சிலம்பிளுெலியும், பணிப்ப - இயம்பும்படி, (அழுதுகொண்டோடி) கணவர்தம் - நாயகருடைய, கண் - கண்கள், திறந்தன - விழித்தவாகிய, முகத்து - முகங்களில், அவர் முறுவல் - அவர்களுடைய நகையை, கண்டு - பார்த்து மகிழ்ந்து, இறந்து - உடலைவிட்டு, அனமடந்தையர் - அக்கற்புடைமகளிர்கள், உயிரொடும் - கணவருடைய உயிரோடும், கலந்தார் - சேர்ந்தனர்கள், —எ-று.

பண் - எழ்நரம்புமுள்ளது திறம் - எழிற்குறைநரம்புள்ளது. இவ்விரண்டுந் தம்மகத்தெழுமோசைக் கானமையினிவையும் அன்பும் ஆகுபெயர். அழுதுகொண்டோடி - இசையெச்சம். புணர் - முதனிலைத்தொழிற்பெயர்புணர்க்கு - உருபுமயக்கம். பணிப்ப - உபசாரவழக்கு. நூலினது பழமையை அதனுலுணர்த்தப்படும் பொருண்மேலேற்றிப்பழம்புணர்க்கெனக்கூறினுர் அன்னமடைந்தையர். சீராமபிரானுடைய அம்பு தம்முரத்தையுருவிச் செல்லாநிற்கையில் வேல்கொண்டெறியவிழித்தகணிமைத்தலு மோட்டாமெனக் கருது மியல்பினராகலின் விழித்துநின்று, விண்ணவர்முதலியோரையும் வென்றிகொண்டநம்மருமத்தை யுருவிற்றன்றோ விம்மனிதன்வாளியென வியந்து நகைத்துடலை நீத்து விண்ணடைந்த கணவரோடுகலந்தன ரென்பது கருத்து. இது தன்னைவேட்டல். ()

எழுமேழுமென்றுரைக்கின்றவுலகங்கள்யாவும்
ஊழிபோவதேயொப்பதோருலைவுறவுடற்ற
நூழில்வெஞ்சமநோக்கியவிராவணனுவன்றன்
தாழிலென்படைதருக்கறுமென்பதோர்தன்மை. (௧௧)

மரமுங்கல்லுமேவில்லொடுவாண்மழுச்சூலங்
அரமுங்கல்லும்வேன்முதலியவயிற்படையடுக்கிச்
சிரமுங்கல்லெனச்சிந்தலிற்சிதைந்ததென்சேனை
உரமுங்கல்வியுமுடையவன்செருநின்றதொருபால். (௧௨)

அழலுங்கட்களிறணியொடுந்துணிபடுமாவி
சுழலும்பல்பரித்தேரொடுபுரவியுஞ்சுற்றக்
கழலுஞ்சோரிநீராற்றொடுங்கடலிடைக்கலக்கும்
குழலுநூலும்போன்மனுமனுந்தானுமக்குமரன். (௧௩)

வில்லுங்கூற்றுவற்குண்டெனத்திரிகின்றவீரன்
கொல்லுங்கூற்றெனக்குறைக்குமிங்கிறைப்பெருங்குழுவை

ஒல்லுங்கோளரியுருமன்னகுரங்கினதுகிரும்
பல்லுங்கூர்க்கின்றகூர்க்கிலவரக்கர்தம்படைகள். (கச)

இராவணன்வானரசேனையைப் பொருதழித்தல்.

கண்டுநின்றிறைப்பொழுதினிக்காலத்தைக்கழிப்பின்
உண்டுகைவிடுங்கூற்றுவனிருதர்பேருயிரை
மண்டுவெஞ்செருநாளொருகளத்திடைமடித்தே
கொண்டுமீள்கவென்கொற்றமென்றிராவணன்கொதித்தான். (கரு)

ஊதைபோல்வனவுருமுறழ்திறலனவுருவிப்
பூதரங்களைப்பிளப்பனவண்டத்தைப்பொதுப்ப
மாதிரங்களையளப்பனமாற்றருங்கூற்றின்
தூதுபோல்வனசுடுகணைமுறைமுறைதுரந்தான். (கசு)

ஆளிபோன்றுளனெதிர்ந்தபோதமர்க்களத்தடைந்த
ஞாளிபோன்றுளவென்பதென்னள்ளிருளடைந்த
காளிபோன்றனனிராவணன்வெள்ளிடைக்கரந்த
பூளைபோன்றதப்பொருசினத்தரிகடம்புணரி. (கஎ)

இரியல்போகின்றசேனையையிலக்குவன்விலக்கி
அரிகளஞ்சன்மினஞ்சன்மினென்றருள்வழங்கித்
திரியுமாருதிதோளனுந்தேர்மிசைச்சென்றான்
எரியும்வெஞ்சினத்திராவணனெதிர்புகுந்தேற்றான். (கஅ)

இலக்குமணன் இராவணனம்புகளை யழித்தல்.

ஏற்றுக்கோடலுமிராவணனெரிமுகப்பகழி
நூற்றுக்கோடியின்மேற்செலச்சிலைகொடுநூக்கக்
காற்றுக்கோடியபஞ்செனத்திசைதொறுங்கரக்க
வேற்றுக்கோல்கொடுவிலக்கினனிலக்குவன்விசையால். (ககூ)

விலக்கினான்றடந்தோளினுமார்பினும்விசிகம்
உலக்கவுய்த்தனனிராவணனைந்தொடைந்துருவக்
கலக்கமுற்றிலனிளவலுமுள்ளத்திற்கனன்றான்
அலக்கணெய்துவித்தானடலரக்கனையம்பால். (உ0)

காக்கலாகலாக்கடுப்பினிற்றொடுப்பனகணைகள்
நூக்கினான்கணைநுறுக்கினனரக்கனுநூழில்
ஆக்கும்வெஞ்சமத்தரிதிவன்றனைவெல்வதம்பால்
நீக்கியென்னினிச்செய்வதென்றிராவணனினைந்தான். (உக)

கடவுண்மாப்படைதொடுக்கின்மற்றவைமுற்றுங்கடக்க
விடவுமாற்றவும்வல்லேனல்யாரையும்வெல்லும்

தடவுமாற்றலைக்கூற்றையுந்தமையனைப்போலச்
சுடவுமாற்றுமெவ்வுலகையுமெவனுக்குந்தோலான். (உ௩)

மோகமொன்றுண்டுமுதலவன்வகுத்ததுமுன்னாள்
ஆகமற்றதுகொற்றமுஞ்சிவன்றனையழிப்ப
தேகமுற்றியவிஞ்சையையிவன்வயினேவிக்
காகமுற்றுழல்களத்தினிற்கிடத்துவெங்கடிதின். (உ௩)

மோகனாத்திரப் பிரயோகமு மாழியாலழிவும்.

என்பதுன்னியவ்விஞ்சையைமனத்திடையெண்ணி
முன்பன்மேல்வரத்துரந்தனனதுகண்டுமுடுகி
அன்பின்வீடணனாழியான்படையினினறுத்தி
என்பதோதினனிலக்குவனதுதொடுத்தெய்தான். (உ௪)

வீடணன்சொலவிண்டுவின்படைக்கலம்விட்டான்
மூடுவெஞ்சினமோகத்தைநீக்கலுமுனிந்தான்
மாடுநின்றவனுபாயங்கண்மதித்திடவந்த
கேடுநந்தமக்கென்பதுமனங்கொண்டுகிளர்ந்தான். (உ௫)

மயன்கொடுத்ததுமகளொடுவெயங்கனல்வேள்வி
அயன்படைத்துளதாழியுங்குலிசமுமனைய
துயர்ந்தகொற்றமுமூழியுங்கடந்துளதுருமிற்
சயந்தனைப்பொருந்தம்பியையுயிர்கொளச்சமைந்தான். (உ௬)

இராவணன் விபீடணன்மீது வேலேவுதல்.

விட்டபோதினியொருவனைவீட்டியேமீளும்
பட்டபோதவனான்முகனாயினும்படுக்கும்
வட்டவேலதுவலங்கொண்டுவாங்கினன்வணங்கி
எட்டரிற்கலாத்தம்பிமேல்வல்விசைத்தெறிந்தான். (உ௭)

இலக்குமணன் விபீடணற் கபயமளித்தல்.

எறிந்தகாலையில்வீடணனதனிலையெல்லாம்
அறிந்தசிந்தையனையவீதென்னுயிரழிக்கும்
பிறிந்துசெய்யலாம்பொருளிலையென்றலும்பெரியோன்
அறிந்துபோக்குவலஞ்சனீயென்றிடையணைந்தான். (உ௮)

எய்தவாளியுமேயினபடைக்கலம்யாவும்
செய்தமாதவத்தொருவனைச்சிறுதொழிற்றீயோன்
வய்தவைவினிலொழிந்தனவீடணன்மாண்டான்
உய்தலில்லையென்றும்பரும்பெருமனமுலைந்தார். (உ௯)

வேலேற்பானொருவரை யொருவர் முந்துதல்.

தோற்பெனென்னினும்புகழ்நிற்குந்தருமமுந்தொடரும்
ஆர்ப்பநல்லவரடைக்கலம்புகுந்தவனழியப்
பார்ப்பதென்னெடும்பழிவந்துதொடர்வதன்முன்னம்
ஏற்பெனென்றனிமார்பினென்றிலக்குவனெதிர்ந்தான். (௩0)

இலக்குவற்குமுன்வீடணன்புகுமிருவரையும்
விலக்கியங்கதன்மேற்செலுமவனையும்விலக்கிக்
கலக்கும்வானரக்காவலனநுமன்முன்கடுகி
அலக்கணன்னதையின்னதென்றுரைசெயலாமே. (௩க)

இலக்குமணன் இராவணனேவிய வேலினை மார்பிலேற்றல்.

முன்னின்றாரெலாம்பின்னுறக்காலினின்முடுகி
நின்மின்யானிதுவிலக்குவனென்றுரைநேரா
மின்னும்வேலினைவிண்ணவர்கண்புடைத்திரங்கப்
பொன்னின்மார்பிடையேற்றனன்முதுகிடைப்போன. (௩௨)

விபீடணனிராவணன் தேர்க்குதிரைகளை யழித்தல்.

எங்குநீங்குதிநீயெனவீடணனெழுந்தான்
சிங்கவேறன்னசீற்றத்தானிராவணன்றேரில்
பொங்குபாய்பரிசாரதியொடும்படப்புடைத்தான்
சங்கவானவர்தலையெடுத்திடநெடுந்தண்டால். (௩௩)

இலங்கைக்கிராவணன்போதலும் விபீடணனிகழ்தலும்.

சேய்விசும்பினிமிர்ந்துநின்றிராவணன்சீறிப்
பாய்கடுங்கணைபத்தவனுடல்புகப்பாய்ச்சி
ஆயிரஞ்சரமநுமன்றனுடலிடையழுத்திப்
போயினன்செருமுடிந்ததென்றிலங்கையூர்புகுவான். (௩௪)

தேடிச்சேர்ந்தவென்பொருட்டினானுலகுடைச்செல்வன்
வாடிப்போயினனீயினிவஞ்சனைமதியால்
ஓடிப்போகுவதெங்கடாவுன்னொடுமுடனே
வீடிப்போவெனன்றரக்கன்மேல்வீடணன்வெகுண்டான். (௩௫)

வென்றியென்வயமானதுவீடணப்பசுவைக்
கொன்றினிப்பயனில்லையென்றிராவணன்கொண்டான்
நின்றிலனொன்றுநோக்கிலன்முனிவெலாநீத்தான்
பொன்றிணிந்தமதிலுடையிலங்கையூர்புகுந்தான். (௩௬)

அரக்கனேகினன்வீடணன்வாய்திறந்தரற்றி
இரக்கந்தானெனவிலக்குவனிணையடித்தலத்தில்

கரக்கலாகலாக்காதலன்வீழ்ந்தனன்கலுழ்ந்தான்
குரக்குவெள்ளமுந்தலைவருந்துயரிடைக்குளித்தார். (௩எ)

பொன்னிரும்புறுங்காளிமைப்பொருப்பினுற்பொன்ற
என்னிருந்துநானிறப்பெனிக்கணத்தெனையாளும்
மன்னிருந்தினிவாழ்கிலனென்றனன்மறுக
நின்னிலென்றிறைசாம்பவனுரையொன்றுநிகழ்த்தும். (௩அ)

அனுமனிற்கநாமாருயிர்க்கிரங்குவதறிவோ
நினையுமத்துணைமாத்திரத்துலகெலாநிமிர்வான்
வினையினன்மருந்தளிக்கின்றான்வீரர்க்குவீரன்
தினையுமல்லலுற்றழுங்கன்மினென்றிடர்தீர்த்தான். (௩௯)

அனுமன் மருந்துகொண்டுவந் திலக்குமணனை யெழுப்புதல்.

மருத்தின்காதலன்மார்பிடையம்பெலாம்வாங்கி
இருத்தியோகடிதேகலையிளவலையிஞ்ஞன்
வருத்தங்காணுமோமன்னவனென்னைலுமன்னன்
கருத்தையுன்னியம்மாருதியுலகெலாங்கடந்தான். (௪௦)

வேறு.

உய்த்தொருதிசைமேலோடியுலகெலாங்கடக்கப்பாய்ந்து
மெய்த்தொகுமருந்துதன்னைவெற்பொடுங்கொணர்ந்தவீரன்
பொய்த்தலில்குறிகடானேபொதுவறநோக்கிப்பொன்போல்
வய்த்ததுவாங்கிக்கொண்டுவருதலில்வருத்தமுண்டோ. (௪௧)

இலக்குமணனுயிர்த்தெழுதல்.

தந்தனன்மருந்துதன்னைத்தாக்குதன்முன்னேயோகம்
வந்ததுமாண்டார்க்கெல்லாமுயிர்தரும்வலத்ததென்றால்
நொந்தவர்நோய்வுதீர்க்கச்சிறிதன்றோநொடிதன்முன்னே
இந்திரனுலகமார்க்கவெழுந்தனனிளையவீரன். (௪௨)

இலக்குமணன் விபீடணன் கியோவெனல்.

எழுந்துநின்றநுமன்றன்னையிருகையாற்றழுவியெந்தாய்
விழுந்திலனன்றோமற்றவ்வீடணனென்னவிம்மித்
தொழுந்துணையவனைநோக்கித்துணுக்கமுந்துயருநீங்கிக்
கொழுந்தியுமீண்டாள்பட்டானரக்கனென்றுவகைகொண்டான். (௪௩)

அனைவரும் இராமனைக்காணப் போதல்.

தருமமென்றறிஞர்சொல்லுந்தனிப்பொருடன்னையின்னே
கருமமென்றநுமனுக்கிக்காட்டியதன்மைகண்டால்
அருமையென்னிராமற்கம்மாவறம்வெல்லும்பாவந்தோற்கும்
இருமையுநோக்கினென்னுவிராமன்பாலெழுந்துசென்றார். (௪௪)

ஒன்றலபலவென்றேங்குமுயர்பிணத்தும்பரோடும்
குன்றுகள்பலவுஞ்சோரிக்குரைகடலனைத்துந்தாவிச்
சென்றடைந்திராமன்றன்னைத்திருவடிவணக்கஞ்செய்தார்
வென்றியின்றலைவர்கண்டவிராமனென்விளைந்ததென்றான். (௪௫)

இராமனனுமனைத் தழுவிப்புகழ்தல்.

உற்றதுமுழுதுநோக்கியொழிவரவுணர்வுளூறச்
சொற்றனன்சாம்பன்வீரனனுமனைத்தொடரப்புல்லிப்
பெற்றனெனுன்னையென்னைப்பெருதனபெரியோயொன்று
மற்றிடையீறுசெல்லாவாயுளையாகவென்றான். (௪௬)

புயல்பொழியருவிக்கண்ணன்பொருமலன்பொங்குகின்றான்
உயிர்புறத்தொழியநின்றவுடலன்னவுருவத்தம்பி
துயர்தமக்குதவிமீளாத்துறக்கம்பெற்றுயர்ந்ததொல்லைத்
தயரதற்கண்டாலொத்தான்றம்முனைத்தொழுதுசார்வான். (௪௭)

இளவலைநோக்கியையவிராகவகுலத்துக்கேற்ற
வளவினமடைந்தோர்க்காகிமன்னுயிர்கொடுத்தவன்மைத்
துளவியவொருங்கலாய்நீயன்னதுதுணிந்தாயென்றால்
அளவியலன்றுசெய்தற்கடுப்பதேயாகுமன்றே. (௪௮)

புறவொன்றின்பொருட்டின்யாக்கைபுண்ணுறவரிந்தபுத்தேள்
அறவனுமையநின்னைநிகர்க்கிலனப்பானின்ற
பிறவினையுரைப்பதென்னேபேரருளாளரென்பார்
கறவையுங்கன்றுமொப்பார்தமக்கிடர்காண்கினென்றான். (௪௯)

சாலிகைமுதலவானபோர்ப்பரந்தாங்கிற்றெல்லாம்
நீனிறஞாயிறன்னநெடியவன்முறையினீக்கிக்
கோல்சொரிதனுவுங்கொற்றவநுமன்கைக்கொடுத்துக்கொண்டல்
மேனிறைகுன்றமொன்றின்மெய்ம்மெலிவாற்றலுற்றான். (௫௰)

௩௧ - வது, வேலேற்றபடலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௫௩௧.

---

௩௨ - வது, வானரர் களங்காண்படலம்.

ஆயபின்கவிதன்வேந்துமளப்பருந்தானையோடும்
மேயினனிராமன்பாதம்விதிமுறைவணங்கிவீந்த
தீயவர்பெருமைநோக்கிநடுக்கமுந்திகைப்புமுற்றார்
ஓய்வுறுமனத்தாரொன்றுமுணர்ந்திலர்நாணமுற்றார். (௧)

மூண்டெழுசேனைவெள்ளமுலகொருமூன்றின்மேலும்
நீண்டுளவதனையையவெங்கணனிமிர்ந்ததென்னத்
தூண்டிரண்டனையதிண்டோட்சூரியன்சிறுவன்சொல்லக்
காண்டிநீயரக்கர்வேந்தன்றன்னொடுங்களத்தையென்றான். (௨)

வானராதியர் படுகளங்காண்டல்.

தொழுதனர்தலைவரெல்லாந்தோன்றியகாதறூண்ட
எழுகெனவிரைவிற்சென்றாரிராவணற்கிளவலோடும்
கழுகொடுபெருந்தும்பாறும்பேய்களுங்கணங்கண்மற்றும்
குழுவியகளத்தைக்கண்ணினோக்கினர்துணுக்கங்கொண்டார். (௩)

ஏங்கினார்நடுக்கமுற்றாரிரைத்திரைத்துள்ளமேற
வீங்கினார்வெருவலுற்றார்விம்மினாருள்ளம்வெம்ப
ஓங்கினார்மெள்ளமெள்ளவுயிர்நிலைத்துவகையூற
ஆங்கவருற்றதன்மையாரறிந்தறையகிற்பார். (௪)

ஆயிரம்பருவங்கண்டாற்காட்சிக்கோர்கரையிற்றன்றால்
மேயினதுறைகடோறும்விம்மினார்நிற்பதல்லால்
பாய்திரைப்பரவையேழுங்காண்குறுபதகரென்ன
நீயிருந்துரைத்தியென்றார்வீடணனெறியிற்சொன்னான். (௫)

வேறு.

காகப்பந்தர்ச்செங்களமெங்குஞ்செறிகால
யோகத்தம்பிற்பொன்றினவேனுமுடலொன்றி
மேகச்சங்கந்தொக்கனவேழம்வெளியின்மை
நாகக்குன்றினின்றனகாண்மினமரங்காள். (௬)

வென்றிச்செங்கண்வெம்மையரக்கர்விசையூர்வ
ஒன்றிற்கொன்றுற்றம்புதலைப்பட்டுயிர்நுங்கப்
பொன்றிச்சிங்கநாகவடுக்கிற்பொலிகின்ற
குன்றிற்றுஞ்சுந்தன்மைநிகர்க்குங்குறிகாணீர். (௭)

அளியிற்பொங்குமங்கணனேவுமயில்வாளிக்
களியிற்பட்டார்வாண்முகமின்னுங்கரையில்ல

புளினத்திட்டிற்கண்ணகன்வாரிக்கடல்பூத்த
நளினக்காடேயொப்பனகாண்மினமரங்காள். (௮)

பூவாய்வாளிச்செல்லெறிகாலைப்பரிபொன்றக்
கோவாய்வன்பாய்வெண்கொடிதிண்பாயொடுகூட
மாவாய்திண்டேர்மண்டுதலானீர்மறுவேலை
நாவாய்மானச்செல்வனகாண்மினமரங்காள். (௯)

ஒழுகிப்பாயுமும்மதவேழமுயிரோடும்
எழுகிற்கில்லாசெம்புனல்வெள்ளத்திடையிற்ற
பழகிற்கில்லாப்பஃறிரைதூங்கும்படர்வேலை
முழுகித்தோன்றுமீனரசொக்குமுறைநோக்கீர். (௧௦)

கடக்காரென்னப்பொங்குகவந்தத்தொடுகைகள்
தொடக்காநிற்கும்பேயிலயத்தின்றொழில்பூண்ட
* மடக்கோவில்லாவார்படிமக்கூத்தமைவிப்பான்
நடக்கால்காட்டுங்கண்ணுளரொக்குநமரங்காள். (௧௧)

மழுவிற்கூர்வாள்வன்புலிடுக்கின்வயவீரர்
குழுவிற்கொண்டந்நா † தொடக்கப்பொறிகூட்டித்
தழுவிக்கொள்ளக்கள்ளமனப்பேயவைதள்ளி
நழுவிச்செல்லும்மியல்பினகாண்மின்னமரங்காள். (௧௨)

பொன்னின்றோடைமின்பிறழ்நெற்றிப்புகர்வேழம்
பின்னும்முன்னும்மாறினவீழ்விற்பிணைவுற்ற
தன்னின்னேராமெய்யிருபாலுந்தலைபெற்ற
என்னுந்தன்மைக்கேய்வனபல்வேறிவைகாணீர். (௧௩)

நாமத்திண்போர்முற்றியகோபந்நகைநாறிம்
பாமத்தொன்னீரன்னநிறத்தோர்பகுவாய்கள்
தூமத்தோடும்வெங்கனலின்னுஞ்சுடர்கின்ற
ஓமக்குண்டமொப்பனபல்வேறிவைகாணீர். (௧௪)

பின்னும்மோடையாடல்வயப்போர்மிடல்வேழக்
கன்னம்மூலத்துற்றனவெண்சாமரைகாணீர்
மன்னும்மாநீர்த்தாமரைமானும்வதனத்த
அன்னம்மெல்லத்துஞ்சுவவொக்கின்றவைகாணீர். (௧௫)

ஒளிம்முற்றாதுற்றுயர்வேழத்தொளிர்வெண்கோ
டாளின்முற்றாச்செம்புனல்வெள்ளத்தவைகாணீர்

---

* மடக்கோவில்லா - முடக்குதல் நீங்காத.
† தொடக்க - சுற்றிக்கொள்ள.

கோளின்முற்றுச்செருக்கண்மேகக்குழுவின்கண்
நாளின்முற்றுவெண்பிறைபோலுநமரங்காள். (கசு)

கொடியும்வில்லுங்கோலொடுவேலுங்குவிதேரும்
துடியின்பாதக்குன்றின்மிசைத்தோல்விசியின்கட்
டொடியும்வெய்யோர்கண்ணெறிசெல்லவுடன்வெந்த
தடியுண்டாடிக்கூளிதடிக்கின்றனகாணீர். (கஎ)

சகரம்மூன்றீர்செம்புனல்வெள்ளந்தடுமாறி
மகரந்தம்மின்வந்தனகாணுமனமுட்கிச்
சிகரம்மன்னயானைகொலென்னச்சிலநாணி
நகரன்னோக்கிச்செல்வனகாண்மின்னமரங்காள். (கஅ)

விண்ணிற்பட்டார்வெற்புரழ்காயம்பலமென்மேல்
மண்ணிற்செல்வார்மேனியின்வீழ்மடிவுற்றார்
எண்ணிற்றீராவன்னவைதீருமிடலில்லாக்
கண்ணிற்றோன்றார்விம்மியுளைக்கும்படிகாணீர். (கக)

அசைசிற்றிண்டேரானையின்மாமேற்காலாளின்
மொய்ச்சுச்சென்றார்மொய்குருதித்தாரைகண்மூட்ட
உச்சிச்சென்றானுயினும்வெய்யோனுதயத்தின்
குச்சிச்சென்றாறொத்துளனுகுங்குறிகாணீர். (உ0)

காறேய்மேனிக்கண்டகர்கண்டப்படுகாலை
ஆறேவென்னவிண்படர்செஞ்சோரியதாகி
வேறோர்நின்றவெண்மணிசெங்கேழ்நிறம்விம்மி
மாறோர்வெய்யோன்மண்டிலமொக்கின்றதுகாணீர். (உக)

வேறு.

வானையமண்ணனையவளைந்தெழுந்தகொழுங்குருதிமகரவேலை
தானைவுற்றெழும்பறவைச்சிறைதெளித்தபுதுமழையின்றுள்ளிதாங்கி
மீனனையநறும்போதும்விரையருந்துஞ்சிறைவண்டுநிறம்வேறெய்திக் [ன்
கானனமுங்கடிபொழிலு*முறியீன்றபோன்றொளிர்வகாண்மின்காண்மி

வரைபொருதமதயானைத்துணைமருப்புங்கிளைமுத்துமணியும்வாரித்,
திரைபொருதுபுறங்குவிப்பத்திறங்கொள்பணைமரமுருட்டிச் சிறைப்புள்
ளார்ப்ப, நுரைகொடியும்வெண்குடையுஞ்சாமரையுமெனச்சுமந்துபிணத்
திரளன்மைக், கரைபொருதுகடன்மடுக்குங்கடுங்குருதிப்பேர்யாறுகாண்
மின்காண்மின். (உஉ)

கய்க்குன்றப்பெருங்கரையநிருதர்புயக்கற்செறிந்தகதலிக்கானம்
மொய்க்கின்றபரித்திரையமுரட்கரியின்கோண்மாவமுளரிக்கானின்

---

* முறியீன்ற - தவிர்த்தன.

மெய்க்கின்றவாண்முகத்தவிழுக்குடரின்பாசடையரிணமேற்செற்ற
உய்க்கின்றவுதிரநிறக்களங்குளங்களுலப்பிறந்தவுவையுங்காண்மின். (உச)

நெடும்படைவாளுஞ்சிலுழுநிணச்சேற்றினுதிரநீர்நிறைந்தகாப்பின்
கடும்பகடுபடிகிடந்தகரும்பரம்பினினமள்ளர்பரந்தகையில்
படுங்கமலமலர்நாறுமுடிபரந்தபெருங்கிடக்கைபரந்தபண்ணை [ன்
தடம்பணையின்றும்பழனந்தழுவியதேயெனப்பொலியுந் தகையுங்காண்மி

வெளிறீர்த்தவரைபுரையுமிடலரக்கருடல்விழவும்வீரன்வில்லின்
ஒளிறீர்த்தமுழுநெடுநாணுருமேறுபலபடவுமுலகங்கீண்டு
நளிறீர்த்தநாகபுரம்புக்கிழிந்தபகழிவழிநதியினேடிக்
களிறீர்த்துப்புகமண்டுங்கருங்குருதித்தடஞ்சுழிகள்காண்மின்காண்மின்.

கைத்தலமுங்காத்திரமுங் கருங்கழுத்துநெடும்புயமுமுரமுங்கண்டித்,
தெய்த்திலபொய்த்திசைகடாறுமிருநிலத்தைக்கிழித்திழிந்த தென்னி
னல்லான், மத்தகரிவயமாவின்வாணிருதர் பெருங்கடலின்மற்றிவ்வாளி,
தைத்துளவாய்நின்றதெனவென்றேயுங்காண்பரியதகையுங்காண்மின். ()

வேறு.

குமுதநாறுமுகத்தனகூற்றன
சமுதரோடுமெடிந்தனசார்தரும்
திமிதமாலன்னவின்னனவித்திறம்
அமுதின்வந்தனவையிருகோடியால். (உஅ)

ஏறுநான்முகன்வேள்வியெழுந்தன
ஊறுமாரியுமோங்கலையோதமும்
மாறுமாயினுமாமதமாய்வரும்
ஆறுமாறிலவாறிருகோடியால். (உகூ)

உயிர்வறந்துமுதிரம்வறந்துதம்
மயர்வறந்துமதமறவாதன
புயலவன்றிசைப்போர்மதயானையின்
இயல்பரம்பரையேழிருகோடியால். (௩௦)

கொடாதுநிற்றலிற்கொற்றநெடுந்திசை
எடாதுநிற்பன * நாட்டமிமைப்பிய
வடாதுதிக்கின்மதவரையின்வழிக்
கடாமுகத்தமுளரிக்கணக்கவால். (௩க)

வானவர்க்கிறைவன்றிறைதந்தன
ஆனவர்க்கமோராயிரகோடியும்

* நாட்டம் இமைப்பில-கண்கள் இமைப்பற்றன.

தானவர்க்கிறைவன்றிறைதந்தன
வேனவர்க்கங்கணக்கிலவிவ்வெலாம். (௩௨)

பாற்கடல்பண்டமிழ்தம்பயந்தநாள்
ஆர்த்தெழுந்தனவாயிரமாயிரம்
மாற்கணப்பரியிங்கிவைமாறுவை
மேற்கின்வேலைவருணனைவென்றவால். (௩௩)

இருநிதிக்கிழவன்னிழந்தேகின
அரிவயப்பரியாயிரமாயிரம்
விரிசினத்திகல்விஞ்சையர்வேந்தனைப்
பொருதுபற்றியதாமரைபோலுமால். (௩௪)

என்றுகாணினுங்காட்டினுமீதிரைக்
குன்றுகாணினுங்கோளிலதாதலான்
நின்றுகாணுதுநேமியினுனுழைச்
சென்றுகாண்டுமென்றேகினர்செவ்வியோர். (௩௫)

ஆரியற்கெழுதாங்கவன்பாங்கரும்
போரியற்கைநினைந்தெழும்பொம்மலார்
பேருயிர்ப்பொடிருந்தனர்பின்புறும்
காரியத்தினிலைமைகழறுவாம். (௩௬)

௩௨ - வது, வானரர் களங்காண்படலம் - முற்றிற்று

ஆ திருவிருத்தம்-௩௫௭௫.

௩௩ - வது, இராவணன்களங்காண்படலம்.

அலக்கணெய்தியமரரழிந்திட
உலக்கவானரவீரரையோட்டியவ்
விலக்குவன்றனைவீட்டியிராவணன்
துலக்கமெய்தினன்றேமில்களிப்பினே. (௧)

பொருந்துபொற்பெருங்கோயிலுட்போர்த்தொழில்
வருந்தினர்க்குத்தம்மன்பினின்வந்தவர்க்
கருந்துதற்கமைவாயினவாக்குவான்
விருந்தமைக்கவமைக்கின்றவேட்கையான். (௨)

வானநாட்டைவருகெனவல்விரைந்
தேனைநாட்டவரோடும்வந்தெய்தனும்

மானநாட்டந்தபோகமமைத்திர்மற்
றானநாட்டினிழத்திருயிரென்ருன். (௫)

நறவுமூறுநவையறநல்லன
பிறவுமாடையுஞ்சாந்தமும்பெய்மலர்த்
திறமுநானப்புனலொடுசேக்கையும்
புறமுமுள்ளுநிறையப்புகுந்தவால். (௬)

நானநெய்ந்நன்குறைத்துநறுப்புன
லானகோதறவாட்டியமுதொடும்
பானமூட்டிச்சயனம்பரப்பவும்
வானநாட்டியர்யாவரும்வந்தரால். (௭)

பாடுவார்கள்பயினடம்பாவகத்
தாடுவார்களமளியினன்புறக்
கூடுவார்கண்முதலுங்குறைவறத்
தேடிஞனெனப்பண்ணையிற்சேர்ந்ததால். (௮)

அரைசராதியடியவரந்தமா
வரைசெய்மேனியிராக்கதர்வந்துளார்
விரைவினிந்திரபோகம்விழைதரக்
கரைசெலாதபெருவளங்கண்ணினர். (௯)

இன்னதன்மையமைந்தவிராக்கதர்
மன்னன்மாடுவந்தெய்திவணங்கினர்
அன்னசேனைகளப்பட்டவாறெலாம்
துன்னுதூதர்செவியிடைச்சொல்லுவார். (௮)

நடுங்குகின்றவுடலினர்நாவுலர்ந்
தொடுங்குகின்றவுயிர்ப்பினருள்ளழிந்
திடுங்குகின்றவிழியினரேங்கிமேல்
பிடுங்குகின்றவுரையினர்பேசுவார். (௯)

வேறு

மூலபலமழிந்தமை தூதர் இராவணற்குரைத்தல்.

இன்றியார்விருந்திங்குண்பாரிகன்முகத்திமையோர்தந்த
வென்றியாயேவச்சென்றவாயிரவெள்ளச்சேனை
நின்றதுபுறத்ததாகவிராமன்கைநிமிர்ந்தசாபம்
ஒன்றினுலிரண்டுமூன்றுகடிகையினுலந்ததென்றார். (௧௦)

வலிகடன்வானுளோரைக்கொண்டுநீவகுத்தபோகம்
கலிக்கடனளிப்பலென்றுநிருதர்க்குக்கருதினையேல்

பலிக்கடனளிக்கற்பாலையல்லதுன்குலத்தின்பாலோர்
ஒலிக்கடலுலகத்தில்லையூருளாருளரேயுள்ளார். (௧௧)

ஈட்டருமுவகையீட்டியிருந்தவனிசைத்தமாற்றம்
கேட்டலும்வெகுளியோடுதுணுக்கமுமிழிவுங்கிட்ட
ஊட்டரக்கனையசெங்கணெருப்புகவுயிர்ப்புவீங்கத்
தீட்டியபடிவமென்னத்தோன்றினன்றிகைத்தநெஞ்சன். (௧௨)

இராவணனையுறல்.

என்னினும்வலியரானவிராக்கதர்யாண்டும்வீயார்
உன்னினுமுலப்பிலாதாருவரியின்மணலினீள்வார்
பின்னொருபெயருமின்றிமாண்டனரென்றுபேசும்
வின்னிலையிதுவோபொய்ம்மைவிளம்பினர்போலுமென்றான். (௧௩)

கேட்டயலிருந்தமாலியீதொருகிழமைத்தாமோ
ஒட்டுறுதூதர்பொய்யேயுரைப்பரோவுலகம்யாவும்
வீட்டுவதிமைப்பினன்றேவீங்கெரிவிரிந்தவெல்லாம்
மாட்டுவானொருவனன்றேயிறுதியின்மனத்தாலென்றான். (௧௪)

அளப்பருமுலகம்யாவுமைத்துக்காத்தழிக்கின்றான்றன்
உளப்பருந்தகைமைதன்னாலொருவனென்றுண்மைவேதம்
கிளப்பதுங்கேட்டுமன்றேயரவின்மேற்கிடந்துமேனாள்
முளைத்தபேரிராமனென்றவீடணன்மொழிபொய்த்தாமோ. (௧௫)

* ஒன்றிடினுலகையுண்ணுமுலகத்தினுயிர்க்கொன்றாக
நின்றனவெல்லாம்பெய்தாலுடனுங்குநெருப்புங்காண்டும்
குன்றொடுமரனும்புல்லும்பல்லுயிர்க்குழுவுங்கொல்லும்
வன்றிறற்காற்றுங்காண்டும்வலிக்கொருவரம்புமுண்டோ. (௧௬)

பட்டதுமுண்டேயுன்னையிந்திரச்செல்வம்பற்று
விட்டதுமெய்யேயையமீண்டொருவினையுமில்லைக்
கெட்டதுன்பொருட்டினாலேநின்னுடைக்கேளிரெல்லாம்
சிட்டதுசெய்தியென்றானதற்கவன்சீற்றஞ்செய்தான். (௧௭)

இராவணனிலக்குவனைக்கொன்றமையால்வெற்றிதன்னதாமெனல்.

இலக்குவன்றன்னைவேலாலெறிந்துயிர்கூற்றுக்கீந்தேன்
அலக்கணிற்றலைவரெல்லாமழுந்தினரதனைக்கண்டால்
உலக்குமாலிராமன்பின்னேயுயிர்ப்பொறையுகவானுற்ற
மலக்கமுண்டாகினாகவாகையென்வயத்ததென்றான். (௧௮)

---

* ஒன்றிடினதனையுண்ணு முலகத்தை விறகென்றோத எனவும் பாடம்.

தூதர்மருந்தா லிலக்குமண னுயிர்பெற்றனனெனல்.

ஆண்டதுகேட்டுநின்றதா துவரையமெய்யே
மீண்டதவ்விளவலாவிமாருதிமருந்துமெய்யில்
தீண்டவுந்தாழ்ந்ததில்லையாருமச்செங்கணானைப்
பூண்டனர்மருந்துவெற்பைவீசினான்புக்கதென்றூர். (௧௯)

ஐயமுற்றவிராவணன் கோபுரத்தின்மீதேறி மூலபலமிறந்த வுண்மை காண்டல்

தேறிலனுதலானேமறுகுறுசிந்தைதேற
ஏறினன்கனகத்தாரைக்கோபுரத்தும்பரெய்தி
ஊறினசேனைவெள்ளமூலந்தபேருண்மையெல்லாம்
காறினவுள்ளநோவக்கண்களாற்றெரியக்கண்டான். (௨௦)

கொய்தலைப்பூசற்பட்டோர்குலத்தியர்குவளைதோற்று
நெய்தலைவென்றவாட்கண்குமுதத்தினீர்மைகாட்டக்
கய்தலையுற்றபூசல்கடலொடுநிமிருங்காலைச்
செய்தலையுற்றவோசைச்செயலதுசெவியிற்கேட்டான். (௨௧)

ண்ணினீர்கடந்தயானைப்பெரும்பிணமேந்தியாணர்
மண்ணினீரளவுங்கல்லிநெடுமலைமறித்துமண்டும்
புண்ணினீராறுபல்பேய்புதுப்புனலாடும்பொம்மற்
கண்ணினீராறுமாறக்கருங்கடன்மடுப்பக்கண்டான். (௨௨)

முற்றியற்சிலைவலாளன்மொய்க்கணைதுமிப்பவாவி
பெற்றியல்பெற்றிபெற்றுமென்னவாளரக்கர்யாக்கை
சிற்றியற்குறுங்காலோரிக்குரல்கொளையிசையாப்பல்பேய்
கற்றியல்பாணிகொட்டக்களிநடம்பயிலக்கண்டான். (௨௩)

விண்களிற்சென்றவன்றேட்கணவரையலகைவெய்ய
புண்களிற்கைகணீட்டிப்புதுநிணங்கவர்வநோக்கி
மண்களிற்றொடர்ந்துவானிற்பிடித்துவள்ளுகிரின்மானக்
கண்களைச்சூன்றுதீக்குமரக்கியர்குழாமுங்கண்டான். (௨௪)

குமிழிநீரோடுஞ்சோரிக்கனலொடுங்கொழிக்குங்கண்ணான்.
தமிழ்நெறிவழக்கமன்ன தனிச்சிலைவழக்கிற்சாய்ந்தார்
அமிழ்பெருங்குருதிவெள்ளமாற்றுவாய்முகற்றிற்றேக்கி
உமிழ்வதேயொக்கும்வேலையோதம்வந்துடற்றக்கண்டான். (௨௫)

விண்பிளந்தேங்கவார்க்கும்வானரவீக்கங்கண்டான்
மண்பிளந்தழுந்தவாடுங்கவந்தத்தின்வருக்கங்கண்டான்
கண்பிளந்தகலநோக்கும்வானவர்களிப்புங்கண்டான்
புண்பிளந்தனையநெஞ்சன்கோபுரத்திழிந்துபோந்தான். (௨௬)

இராவணனரசிருக்கை மண்டபமெய்துதல்.

நகைபிறக்கின்றவாயனுக்கொடுகடைவாய்நக்கிப்
புகைபிறக்கின்றமூக்கன்பொறிபிறக்கின்றகண்ணன்
மிகைபிறக்கின்றநெஞ்சன்வெஞ்சினத்தீமேல்வீங்கிச்
சிகைபிறக்கின்றசொல்லனரசியலிருக்கைசேர்ந்தான். (௨௭)

௩௩ - வது, இராவணன் களங்காண்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௬௦௨.

---

௩௪ - வது, தேரேறுபடலம்.

பூதரமனையமேனிப்புகைநிறப்புருவச்செந்தீ
மோதரனென்னுநாமத்தொருவனைமுகத்துநோக்கி
ஏதுளதிறந்திலாததிலங்கையுளிருந்தசேனை
யாதையுமெழுகின்றனைமணிமுரசெற்றுகென்றான். (௧)

எற்றியமுரசினோடுமேழிருநூறுகோடி
கொற்றவாணிருதர்சேனைகுழீஇயதுகொடித்திண்டேரும்
சுற்றுறுதொளைக்கைமாவுந்துரகமும்பிறவுந்தொக்க
வற்றியவேலையென்னவிலங்கையூர்வறளிற்றாக. (௨)

இராவணன் போர்க்கோலங் கொள்ளுதல்.

ஈசனையிமையாமுக்கணிறைவனையிருமைக்கேற்ற
பூசனைமுறையிற்செய்துதிருமறைபுகன்றதானம்
வீசினனியற்றிமற்றும்வேட்டனவேட்டோர்க்கெல்லாம்
ஆசறநல்கியொல்காப்போர்த்தொழிற்கமைவதானான். (௩)

வேறு.

அருவியஞ்சனக்குன்றிடையாயிரமருக்கர்
உருமினோடும்வந்துதித்தனராமெனவொளிரக்
கருவினான்முகன்வேள்வியிற்படைத்ததுங்கட்டிச்
செருவிலிந்திரன்றந்தபொற்கவசமுஞ்சேர்த்தான். (௪)

வாள்வலம்படமந்தரஞ்சுழன்றமாசுணத்தின்
தாள்வலந்தொளிர்தமனியக்கச்சொடுஞ்சார்த்திச்
கோள்வலந்தனகுவிந்தனவாமெனுங்கொள்கை
மீள்வில்கிம்புரிமணிக்கடிசூத்திரம்வீக்கி. (௫)

மறைவிரித்தன்ன * மாடுறுமானமாக்கலுழன்
சிறைவிரித்தன்னகொய்சகமருங்குறச்சேர்த்தி
முறைவிரித்தன்னமுறுக்கியகோசிகமுறையே
பிறைவிரித்தன்னவெள்ளெயிற்றரவமும்பிணித்து. (சு)

மழைக்குலத்தொடுவானுருமேறெலாம்வாரி
இழைத்தொடுத்தனவனையவாளிடைமணியார்த்து
முழைக்கிடந்தவல்லரியினமுழங்குவபோல்வ
தழைக்குமின்னொளிப்பொன்மலர்ச்சதங்கையுஞ்சார்த்தி. (எ)

உருமிடித்துழியரவெனக்கரக்கமாவுலகின்
இருநிலத்திடையெவ்வுலகத்திடையாரும்
புரிதரப்படும்பொலங்கழலிலங்குறப்பூட்டிச
சரியுடைச்சுடர்சாய்நலஞ்சார்வுறச்சார்த்தி. (அ)

நாலைஞ்சாகியகரங்களினனந்தலையநந்தன்
ஆலஞ்சார்மிடற்றறுங்கறைகிடந்தெனவிலங்கும்
கோலஞ்சார்நெடுங்கோதையும்புட்டிலுங்கட்டித்
தாலஞ்சார்ந்தமாசுணமெனக்கங்கணந்தழுவ. (கூ)

கடல்கடைந்தமால்வரையினைசசுற்றியகயிற்றின்
அடல்கடந்ததோளலங்குபோர்வலயங்களிலங்க
உடல்கடந்தநாளொளியவனுதிர்த்தபொற்கதிரின்
சுடர்தயங்குறக்குண்டலஞ்செவியிடைத்தூக்கி. (க0)

உதையக்குன்றத்தோடத்தத்தினுலாவுறுகதிரின்
துதையுங்குங்குமத்தோளொடுதோளிடைதொடரப்
புதையிருட்பகைக்குண்டலமனையவைபொலியச்
சிதைவிறிங்களுமீனும்போன்முத்தினந்திகழ. (கக)

வேலைவாய்வந்துவெய்யவரனைவரும்வெய்ய
காலையுற்றனராமெனக்கதிர்க்குலங்காலும்
மாலைபத்தின்மேன்மதியமுநாளிடைப்பலவாய்
மூலமுற்றியவனையமுத்தக்குடையிமைப்ப. (கஉ)

பகுத்தபல்வளக்குன்றினின்முழையன்னபகுவாய்
வகுத்தவான்கடைகடைதொறும்வளையெயிற்றீட்டம்
மிகுத்தநீலவான்மேகஞ்சூழ்விசும்பிடைத்தசும்பூ
டுகுத்தசெக்கரிற்பிறைக்குலமுளைத்தனவொக்க. (கங)

ஒத்ததன்மையினொளிர்வனதாளத்தினேதம்
தத்துகின்றனவீரபட்டத்தொகைதயங்க

---

* மாடுறு - பக்கத்தினையுடைய.

முத்தவோடையின்முரட்டிசைமுழுமதயானை
பத்துநெற்றியுஞ்சுற்றியபேரெழில்படைக்க. (௧௪)

புலவிமங்கையர்பூஞ்சிலம்பரற்றடிபோக்கித்
தலைமைகண்ணினர்தாழ்கிலர்மணிமுடித்தலங்கள்
உலகமொன்றினைவிளக்குறுங்கதிரினையோட்டி
அலகிலெவ்வுலகத்தினும்வயங்கிருளகற்ற. (௧௫)

நாகர்நாணிலநான்முகனொடெனநயந்த
பாகமூன்றையும்வென்றுகொண்டமரர்முன்பணிந்த
வாகைமாலையுமருங்குறவரிவண்டோடளவித்
தோகையன்னவர்விழிதொடர்தும்பையுஞ்சூட்டி. (௧௬)

அகழிவேலையைக்காலத்தையளக்கர்நுண்மலை
நிகழுமீன்களைவிஞ்சையைநினைப்பதேனின்ற
இகழ்வில்பூதங்களிறப்பினுமிறுதிசெல்லாத
புகழெனச்சரந்தொலைவிலாத்தூணியும்பூட்டி. (௧௭)

இராவணன் தேர்த்திறம்.

வருகதேரெனவந்ததுவையமும்வானும்
உரகதேயமுமொருங்குடனிவரினுமுச்சிச்
சொருகுபூவன்னசுமையதுதுரகமின்றெனினும்
நிருதர்கோமகனினைந்துழிச்செல்வதோர்நினைப்பில். (௧௮)

ஆயிரம்பரியமுதத்தின்வந்தவுமருக்கன்
பாய்வயப்பசுங்குதிரையின்வழியவும்படர்நீர்
வாய்மடுக்குமாவடவையின்வயிற்றின்வன்காற்றி
னுயகற்குவந்துதித்தவும்பூண்டதோர்நலத்தின். (௧௯)

பாரிற்செல்வதுவிசும்பிடைப்படர்வதுபரந்த
நீரிற்செல்வதுநெருப்பினுஞ்செல்வதுநிமிர்ந்த
போரிற்செல்வதுபொன்னெடுமுகட்டிடைவிரிஞ்சன்
ஊரிற்செல்வதெவ்வுலகத்துஞ்செல்வதோரிமைப்பின். (௨௰)

எண்டிசைப்பெருங்களிற்றிடைமணியெனவிசைக்கும்
கண்டையாயிரகோடியின்றொகையதுகதிரோன்
மண்டிலங்களைமேருவிற்குவித்தெனவயங்கும்
அண்டம்விற்குநன்காசினங்குயிற்றியதடங்க. (௨௧)

முனைவர்வானவர்முதலினரண்டத்துமுதல்வர்
எனைவரீந்தவுமிகலினிலிட்டவுமியம்பா
வினையின்வெய்யனபடைக்கலவேலையென்றிசைக்கும்
சுனையினுண்மணற்றொகையனசுமந்ததுதொக்க. (௨௨)

கண்ணனேமியுங்கண்ணுதல்கணிச்சியுங்கமலத்
தண்ணல்குண்டிகைக்கலசமுமழியினுமழியாத்
திண்மைசான்றதுதேவருமுணர்வருஞ்செய்கை
உண்மையாமெனப்பெரியதுவென்றியினுறையுள். (௨௩)

இராவணன் இரதபூசையும் சுவண்தானமுதலியவுஞ்செய்தல்.

அனையதேரினையருச்சனைவரன்முறையாற்றி
எனையரென்பதோர்கணக்கிலாமறையவரெவர்க்கும்
வினையினன்னிதிமுதலியவளப்பரும்வெறுக்கை
நினையினீண்டதோர்பெருங்கொடையருங்கடனேர்ந்தான். (௨௪)

இராவணனிரதத்தி லாரோகணித்தல்.

எறினானெறுழுதிந்திரன்முதலியவிமையோர்
தேறினார்களுநதியங்கினார்மயங்கினார்திகைத்தார்
வேறுநாஞ்சொலும்வினையிலைமெய்யினைம்புலனும்
ஆறினார்களுமஞ்சினாருலகெலாமனுங்க. (௨௫)

இராவணனது வஞ்சினமொழி.

மன்றலங்குழற்சனகிதன்மலர்க்கையான்வயிறு
கொன்றலந்தலைக்கொடுநெடுந்துயரிடைகுளித்தல்
அன்றிதென்றிடின்மயன்மகளத்தொழிலுறுதல்
இன்றிரண்டினொன்றாக்குவென்றலைப்படினென்றான். (௨௬)

இராவணனது தோற்றம்.

பலகளந்தலைமௌலியோடிலங்கலிற்பஃறோள்
அலகளந்தறியாநெடுப்படைகளோடலங்க
விலகளந்தருகடற்றரைவிசும்பொடுவியப்ப
உலகளந்தவன்வளர்ந்தனனுமெனவுயர்ந்தான். (௨௭)

இராவணன் றோள்புடைத்தார்த்தல்.

விசும்புவிண்டிருகூறுறக்கற்குலம்வெடிப்பப்
பசும்புண்விண்டெனப்புவிபடப்பகலவன்பசும்பொற்
* றசும்பினின்றிடைந்திரிந்திடமதிதகையமிழ்தின்
அசும்புசிந்திநொந்துலைவுறத்தோள்புடைத்தார்த்தான். (௨௮)

இராவணன் வின்னாணெறிதல்.

நணித்துவெஞ்சமமென்பதோருவகையினலத்தால்
திணித்தடங்கிரிவெடித்துகச்சிலையைநாணெறித்தான்
மணிக்கொடுங்குழைவானவர்தானவர்மகளீர்
துணுக்கமெய்தினர்மங்கலநாண்களைத்தொட்டார். (௨௯)

---

* தசும்பினின்று-தசும்பைப்போலநின்று; தசும்பு-குடம்.

சுரிக்குமண்டலந்தூங்குநீர்சுரிப்புறவீங்க
விரைக்கும்பல்லுயிர்யாவையுநடுக்கமுற்றிரியப்
பரித்திலன்புவிபடர்சுடர்மணித்தலைபலவும்
விரித்தெழுந்தனனநந்தன்மீதென்பதோர்மெய்யான். (௩0)

தோன்றினன்வந்துசுரர்களோடசுரரேதொடங்கி
மூன்றுநாட்டினுமுள்ளவர்யாவருமுடிய
ஊன்றினன்செறுவென்றுயிருமிழ்தரவுதிரம்
கான்றுநாட்டங்கள்வடவனற்கிருமடிகனல. (௩௧)

உலகிற்றோன்றியமறுக்கமுமிமைப்பிலருலைவும்
மலையும்வானமும்வையமுமறுகுறுமறுக்கும்
அலைகொள்வேலைகளஞ்சினசலிக்கின்றவயர்வும்
தலைவனேமுதற்றண்டலிலோரெலாங்கண்டார். (௩௨)

நீறிற்றுமண்டமென்பதோராகுலம்பிறக்க
வேறிட்டோர்பெருங்கம்பலைபம்பிமேல்வீங்க
மாறிப்பல்பொருள்வகுக்குறுங்காலத்துண்மறுக்கம்
ஏறிற்றுற்றுளதென்னைகொலோவெனவெழுந்தார். (௩௩)

கடர்கள்யாவையுங்கண்மலைக்குலங்களுங்காரும்
திடர்கொண்மேருவும்விசும்பிடைச்செல்வனசிவண
அடர்கொள்சேனையுமரக்கனுந்தேரும்வந்தார்க்கும்
குடர்கள்பேரொலிக்கறபலையென்பதுங்கொண்டான். (௩௪)

இராவணன் வருகையை விபீடணன் இராமற்குரைத்தல்.

எழுந்துவந்தனனிராவணனிராக்கதத்தானைக்
கொழுந்துமுற்றியதுற்றதுகொற்றவகுலுங்குற்
றழுந்துகின்றதுநம்பலமமரருமஞ்சி
விழுந்துசிந்தினரென்றனன்வீடணன்விரைந்தான். (௩௫)

வேறு.

இராமன் போருக்கெழுதல்.

தொழுங்கையொடுவாய்குழறிமெய்ம்முறைதுளங்க
விழுந்துகவிசேனையிடுபூசன்மிகவிண்ணோர்
அழுந்துபடுபாலமளிதுஞ்சியெழுமந்நாள்
எழுந்தபடியேகடிதெழுந்தனனிராமன். (௩௬)

இராமன் போர்க்கோலங் கோடல்.

கடக்களிறெனத்தகையகண்ணனொருகாலன்
விடக்கயிறெனப்பிறழும்வாள்வலன்விசித்தான்

மடக்கொடிதுயர்க்குநெடுவானினுறைவோர்தம்
இடக்கடலினுக்குமுடிவின்றெனவிசைத்தான். (௩௭)

தன்னகவசத்துருவுதங்கவொருதன்னின்
பின்னகவசத்தபொருளில்லைபெரியோனே
மன்னகவசத்துறவரிந்ததெனவென்கோ
இன்னகவசத்தையுமொரீசனெனலாமால். (௩௮)

புட்டிலொடுகோதைகள்புழுங்கியெரிகூற்றின்
அட்டிலெனலாயமலரங்கையினடக்கிக்
கட்டியுலகிற்பொருளெனக்கரையில்வாளி
வட்டில்புறம்வைத்தவைபொருந்திடவரிந்தான். (௩௯)

சிவன் இராமனுக்குத் தேரனுப்பக் கூறுதல்.

மூண்டசெருவின்றளவின்முற்றுமினிவெற்றி
ஆண்டகையதுண்மையினியச்சமகல்வுற்றீர்
பூண்டமணியாழிவயமாவிமிர்பொலந்தேர்
ஈண்டவிடுவீரமரரென்றரனிசைத்தான். (௪௦)

இந்திரன் தனது தேரினை இராமனுக்காக அனுப்புதல்.

தேவரதுகேட்டிதுசெயற்குரியமதென்றார்
ஏவல்புரியிந்திரவெனத்தொழுதிசைத்தார்
மூவுலகுமின்றொருகணத்தின்முறைமுற்றிக்
காவல்புரிதன்பொருவிறேர்கவர்தியென்றான். (௪௧)

மாதலிகொணர்ந்தநன்மகோததிவளாவும்
பூதலமெழுந்துபடர்தன்மையபொலன்றேர்
சீதமதிமண்டிலமுமேனையுளவுந்திண்
பாதமெனநின்றதுபடர்ந்ததுவிசும்பின். (௪௨)

குலக்கிரிகளேழின்வலிகொண்டுயர்கொடிஞ்சும்
அலக்குரியபாரின்வலியாழியினினச்சும்
கலக்கறவகுத்ததுகதத்தரவமெட்டும்
வலக்கயிறுகட்டியதுமுட்டியதுவானே. (௪௩)

ஆண்டினொடுநாளிருதுதிங்களிவையென்று
* மீண்டனவுமேலனவும்விட்டுவிரிதட்டின்
பூண்டுளதுதாரகைமணிப்பொருவில்கோவை
நீண்டபுனைதாரினதுநின்றுலவுகுன்றின். (௪௪)

தேவரதத்தின் றிறம்.

மாதிரமனைத்தையுமணிச்சுவர்களாகக்
கோதறவகுத்ததுமழைக்குழுவையெல்லாம்

* ஈண்டனவும்-ஒருங்குசேர்ந்தனவும்.

மீதுறுபதாகையெனவீசியதுமெய்ம்மைப்
பூதமவையைந்தின்வலியிற்பொலிவதம்மா. (௪௫)

மரத்தொடுமெருந்துலகில்யாவுமுளவாரித்
தரத்தொடுதொடுத்தகொடிதங்கியதுசங்கக்
கரத்தொடுதொடுத்தகடன்மீதுநிமிர்காலத்
துரத்தொடுகடுத்தகதழோதையதனோதை. (௪௬)

பண்டரிதனுந்தியயன்வந்தபழமுந்தைப்
புண்டரிகமொட்டனையமொட்டினதுபூதம்
உண்டவைவயிற்றிடையொடுக்கியுமிழ்கின்றோன்
* அண்டசமணிச்சயனமொப்பதகலத்தின். (௪௭)

வேதமொருநாலுநிறைவேள்விகளும்வெவ்வே
றோதமவையேழுமலையேழுமுலகேழும்
பூதமவையைந்துமெரிமூன்றுநனிபொய்தீர்
மாதவமுமாவுதியுமைம்புலனுமற்றும். (௪௮)

அருங்கரணமைந்துசுடரைந்துதிசைநாலும்
ஒருங்கரணமூன்றுமுழல்வாயுவொருபத்தும்
பெரும்பகலுநீளிரவுமென்றிவைபிணிக்கும்
பொரும்பரிகளாகநனிபூண்டதுபொலன்றேர். (௪௯)

வந்ததனைவானவர்வணங்கிவலியோய்நீ
எந்தைதரவந்ததனையெமக்குதவுகிற்பாய்
தந்துதவுவென்றியெனநின்றுதகைமென்பூச்
சிந்தினர்கள்மாதலிகடாவிநனிசென்றான். (௫0)

வினைப்பகைவிசைக்கொடுவிசும்புருவிமான
மனத்தின்விசைபெற்றுளதுவந்ததெனவானோ
டனைத்துலகமுந்தொழவடைந்ததமலன்பால்
நினைப்புமிடைபிற்படநிமிர்ந்துயர்நெடுந்தேர். (௫௧)

அலரிதனியாழிபுனைதேரினதென்றால்
உலகின்முடிவிற்பெரியவூழொளியிதன்றால்
நிலைகொணெடுமேருகிரியன்றுநெடிதம்மா
தலைவரொருமூவர்தனிமானமிதுதானே. (௫௨)

இராமன் மாதலியை வினாதல்.

என்னையிதுநம்மையிடையெய்தலெனவெண்ணா
மன்னவர்தமன்னன்மகன்மாதலியைவந்தாய்

---

* அண்டசமணிச்சயனம் - முட்டையிற்பிறந்த ஆதிசேடனாகிய படுக்கை.

பொன்னினொளிர்தேரிதுகொடாபுகறியென்றான்
அன்னவனுமன்னதனையாகவுரைசெய்தான். (௫௩)

இந்திரசாரதியின் விடை.

முப்புரமெரித்தவனுநான்முகனுமுன்னாள்
அப்பகலியற்றியுளதாயிரமருக்கர்க்
கொப்புடையதாழிதிரிகாலுமுலைவில்லா
இப்பொருவிறேர்வருவதிந்திரனதெந்தாய். (௫௪)

அண்டமிதுபோல்வனவளப்பிலவடுக்கிக்
கொண்டுபெயருங்குறுகுநீளுமவைகோளுற்
றுண்டவன்வயிற்றினையுமொக்குமுவமைக்குப்
புண்டரிகனின்சரமெனக்கடிதுபோமால். (௫௫)

கண்ணுமனமுந்நெடியகாலு *மிவைகண்டால்
உண்ணும்விசையாலுணர்வுபிற்படரவோடும்
விண்ணுநிலனும்மெனவிசேடமிலதஃதே
எண்ணுநெடுநீரினுநெருப்பிடையுமெந்தாய். (௫௬)

நீருமுளதேயிதனினீரிலெழுகிற்கும்
பாருமுளதேயிதினிரட்டியவைபண்பின்
பேருமொருகாலையிருகாலையிடைபேராத்
தேருமுளதேயிதுவலாலுலகுசெய்தோய். (௫௭)

தேவருமுனித்தலைவருஞ்சிவனுமுன்னாள்
மூவுலகளித்தமுதலும்முதல்வமுன்னின்
றேவினர்சுரர்க்கிறைவனீந்துளவனென்றான்
மாவின்மனமொப்பவுணர்மாதலிவலித்தான். (௫௮)

இராமனையமொழிய இரதாசுவங்கள் வேதமோதுதல்.

ஐயனிதுகேட்டிகலரக்கரகன்மாயச்
செய்கைகொலெனச்சிறிதுசிந்தையினினைந்தான்
மெய்யவனுரைத்ததெனவேண்டியிடைபூண்ட
மொய்யரிவயப்பரிமொழிந்தமுதுவேதம். (௫௯)

இந்திரன் சாரதியைப்பெயர் வினாதலுமவன் விடையிறுத்தலும்.

இல்லையினியையமெனவெண்ணியவிராமன்
நல்லவினைநீயுனதுநாமநவில்கென்ன
வல்லதனையூர்வதொருமாதலியெனப்பேர்
சொல்லுவரெனத்தொழுதுநெஞ்சினொடுசொன்னான். (௬0)

* இவைகண்டால் - இவைகளையுற்றுப்பார்க்கின்.

இராமனனுமவிலக்குமணர்களை வினாதலும் அன்னாரின்ன தீந்திரன் தேரேயென்றலும்.

மாருதியைநோக்கியிளவாளரியைநோக்கி
நீர்கருதுகின்றதைநிகழ்த்துமெனநின்றான்
ஆரியன்வணங்கியவரையமிலைமெய்யே
தேரிதுபுரந்தரனதென்றனர்தெளிந்தார். (௬௧)

தெய்வத்தேரிலிராமனேறியிருத்தல்.

விழுந்துபுரடீவினைநிலத்தொடுவெதும்பத்
தொழுந்தகையநல்வினைகளிப்பினொடுந்துள்ள
அழுந்துதுயரத்தமரரந்தணர்கைமுந்துற்
றெழுந்துதலையேறவினிதேறினனிராமன். (௬௨)

௩௪ - வது, தேரேறுபடலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௬௬௪.

---

௩௫ - வது, இராவணன்வதைப்படலம்.

இராவணனைத் தேவர் வாழ்த்துதல்.

ஆழியந்தடந்தேர்வீரனேறலுமாசிகூறிப்
பூழியிற்சுரித்ததன்மைநோக்கியபுலவர்போத
ஊழிவெங்காற்றின்வெய்யகலுழனேயொன்றுஞ்சொல்லார்
வாழியவநுமன்றோளையேத்தினார்மலர்கடூவி (௧)

எழுகதேர்சுமக்கவெல்லோம்வலியும்புக்கின்றேபொன்றி
விழுகபோயரக்கன்வெல்கவேந்தர்க்குவேந்தன்விம்மி
அழுகபோரரக்கிமாரென்றார்த்தனரமராராழி
முழுகிமீதெழுந்ததென்னச்சென்றதுமூரித்திண்டேர். (௨)

இராவணன் இராமன்மீது தன்தேரைவிடக் கூறுதல்.

அன்னதுகண்ணிற்கண்டவரக்கனுமமரரீந்தார்
மன்னெடுந்தேரென்றுன்னிவாய்மடித்தெயிறுதின்றான்
பின்னதுகிடக்கவென்னாத்தன்னுடைப்பெருந்திண்டேரை
மின்னகுவரிவிற்செங்கையிராமன்மேல்விடுதியென்றான். (௩)

இரிந்தனகவிகளெல்லாமிமையவரிரதமீந்தார்
அரிந்தமன்வெல்லுமென்றற்கையுறவில்லென்றஞ்சார்

திரிந்தனமரமுங்கல்லுஞ்சிந்தினர்திசையோடண்டம்
பிரிந்தனகொல்லென்றெண்ணப்பிறந்தனமுழக்கின்பெற்றி. (௪)

வார்ப்பொலிமுரசினோதைவயவர்வாய்புடைப்பினோதை
போர்த்தொழிற்களத்தைமுற்றுஞ்சுற்றியபொம்மலோதை
ஆர்த்தலின்யாரும்பார்வீழ்ந்தடங்கினரிருவராடற்
றேர்க்குரலோதைகொங்கச்செவிமுற்றுஞ்செவிடுசெய்ய. (௫)

இராமன் மாதலியை நீ என் கருத்திற்கிசையவோட்டுதேரெனல்.

மாதலிவதனநோக்கிமன்னர்தமன்னன்மைந்தன்
காதலாற்கருமமொன்றுகேட்டியாற்களித்தசிந்தை
ஏதலன்மிகுதியெல்லாமிடையிற்றபின்றையென்றன்
சோதனைநோக்கிச்செய்திதுடிப்பிலையென்னச்சொன்னான். (௬)

மாதலி அவ்வாறேசெய்வேனெனல்.

வள்ளனின்கருத்துமாவின்சிந்தையுமாற்றலார்தம்
உள்ளமுமிகையுமுற்றகுற்றமுமுறுதிதானும்
கள்ளமில்காலப்பாடுங்கருமமுங்கருதேனாகின்
தெள்ளிதென்விஞ்சையென்றானமலனுஞ்சீரிதென்றான். (௭)

மகோதரன் றன்னை இலக்ஷ்மணனோடுபோர வனுப்ப வேண்டுதலும் இராவணனவ்வாறே செய்தியென்றலும்.

தோன்றினனிராமனீதாற்புரந்தரன்றுரந்ததேர்மேல்
ஏன்றிருவருக்கும்வெம்போரெய்தியதிடையேயானோர்
சான்றெனநிற்றல்குற்றந்தருதியால்விடையீண்டென்றான்
வான்றொடர்குன்றமன்னமகோதரனிலங்கைமன்னை. (௮)

அம்புயமனையகண்ணன்றன்னையாளரியினேறு
தும்பியைத்தொலைத்ததென்னத்தொலைக்குவென்றொடர்ந்துநின்ற
தம்பியைத்தடுத்தியாயிற்றந்தனைகொற்றமென்றான்
வெம்பிகலரக்கனஃதேசெய்வெனென்றவனின்மீண்டான். (௯)

மகோதரன் இராமன்மேற் றேர்விடக் கூறுதல்.

மீண்டவனிளவனின்றபாணியின்விளங்காமுன்னம்
ஆண்டகைதெய்வத்திண்டேரணுகியதணுகுங்காலை
மூண்டெழுவெகுளியோடுமகோதரன்வெகுண்டுமுட்டத்
தூண்டுதிதேரையென்றான்சாரதிதொழுதுசொன்னான். (௧௦)

மகோதரனைச் சாரதிதடுத்தல்.

எண்ணருங்கோடிவெங்கணிராவணரேயுமின்று
நண்ணியபொழுதுமீண்டுநடப்பரோகிடப்பதல்லால்

அண்ணறன்றேற்றங்கண்டாலையநீகமலமன்ன
கண்ணனையொழியவிப்பாற்சேறலைகருமமென்றான். (௧௧)

மகோதர னிராமனொடு பொருதல்.

என்றலுமெயிற்றுப்பேழ்வாய்மடித்தடாவெடுத்துநின்னைத்
தின்றனெனெனினுமுண்டாம்பழுதெனச்சீற்றஞ்சிந்தும்
குன்றனதோற்றத்தான்றன்கொடிநெடுந்தேரினேரே
சென்றதவ்விராமன்றிண்டேர்விளைந்ததுதிமிலத்திண்போர். (௧௨)

பொற்றடந்தேருமாவும்பூட்கையுமிலங்குவாட்கைக்
கற்றடந்திண்டோளாளுநெருங்கியகடல்களெல்லாம்
வற்றியவிராமன்வாளிவடவனல்பருகவென்றான்
ஒற்றைவன்றடந்தேரோடுமகோதரனொருவன்சென்றான். (௧௩)

அசனியேறிருந்தகொற்றக்கொடியின்மேலரவத்தேர்மேல்
குசையுறுபாகன்றன்மேற்கொற்றவன்குலவுத்தோண்மேல்
விசையுறுபகழிமாரிவித்தினான்விண்ணினோடும்
திசைகளுங்கிழியவார்த்தான்றீர்த்தனுமுறுவல்செய்தான். (௧௪)

இராமனம்பால் மகோதரனிறத்தல்.

வில்லொன்றாற்கவசமொன்றால்விறலுடைக்கரமோரொன்றால்
கல்லொன்றுதோளுமொன்றாற்கழுத்தொன்றாற்கடிதின்வாங்கி
செல்லொன்றுகணையாலையன்சிந்தினான்செப்பிவந்த
சொல்லொன்றாய்ச்செய்கையொன்றாய்த்துணிந்தனனரக்கன்றுஞ்சி. (௧௫)

மோதரன்முடிந்தவண்ணமூவகையுலகத்தோடும்
மாதிரமெவையும்வென்றவன்றொழிலரக்கன்கண்டான்
சேதனையுண்ணக்கண்டான்செலவிடுசெலவிடென்றான்
சூதனுமுடுகத்தூண்டச்சென்றதுதுரகத்திண்டேர். (௧௬)

பணிப்படாநின்றதென்னப்பரக்கின்றசேனைபாறித்
தனிப்படாளுகினின்னுந்தாழ்கிலனென்னுந்தன்மை
நுனிப்படாநின்றவீரனவனொன்றுநோக்காவண்ணம்
குனிப்படாநின்றவில்லாலொல்லையினூறிக்கொன்றான். (௧௭)

இராவணன் துன்னிமித்தங்கள் காண்டல்.

அடல்வலியரக்கர்க்கப்போழ்தண்டங்களெழுந்துமண்டிய
கடல்களும்வற்றவெற்றிக்கால்கிளர்ந்துடற்றுங்காலை
வடவரைமுதலவானமலைக்குலஞ்சலிப்பபோன்று
சுடர்மணிவலயஞ்சிந்தத்துடித்தனவிடத்தபொற்றோள். (௧௮)

வேறு.

உதிரமாரிசொரிந்ததுலகெலாம்
அதிரவானமிடித்ததருவரை
பிதிரவீழ்ந்ததசனியொளிபெருக்
கதிரவன்றனையூருங்கலந்ததால். (௧௯)

வாவும்வாசிநடுங்கினவாங்கலில்
ஏவும்வெஞ்சிலைநாணிடையிற்றன
நாவும்வாயுமுலர்ந்தனநாண்மலர்ப்
பூவின்மாலைபுலால்வெறிபூத்தலால். (௨௦)

எழுதுவீணைகொடேந்துபதாகைமேல்
கழுதுங்காகமுமொய்த்தனகண்கணீர்
ஒழுகுகின்றனவோடிகலாடன்மாத்
தொழுவினின்றனபோன்றனசூழிமா. (௨௧)

இன்னவாகியிமையவர்க்கின்பஞ்செய்
துந்நிமித்தங்கடோன்றினதோன்றவும்
அன்னதொன்றுமறிந்திலனாற்றுமோ
என்னைவல்லமனித்தனென்றெண்ணுவான். (௨௨)

வீங்குதேர்செலும்வேகத்துவேலைநீர்
ஓங்குநாளினொதுங்குமுலகுபோல்
தாங்கலாற்றகிலார்தடுமாறித்தாம்
நீங்கினாரிருபாலுநெருங்கினார். (௨௩)

இராமவிராவணயுத்தம்.

கருமமுங்கடைக்கண்ணுறுஞானமும்
அருமைசேருமவிஞ்சையும்விஞ்சையும்
பெருமைசால்கொடும்பாவமும்பேர்கலாத்
தருமமும்மெனச்சென்றெதிர்தாக்கினார். (௨௪)

சிரமொராயிரந்தாங்கியசேடனும்
உரவுகொற்றத்துவணத்தரசனும்
பொரவுடன்றனர்போலப்பொருந்தினர்
இரவுநண்பகலும்மெனவேற்றனர். (௨௫)

வென்றியந்திசையானைவெகுண்டன
ஒன்றையொன்றுமுனிந்தவுமொத்தனர்
அன்றியுந்நரசிங்கமுமாடகக்
குன்றமன்னவனும்பொருங்கொள்கையார். (௨௬)

துவணவில்லின்பொருட்டொருதொல்லைநாள்
எவணவீசனென்பார்பொரவேற்றெதிர்
புவனமூன்றும்பொலங்கழலாற்சூடும்
அவனுமச்சிவனும்மெனலாயினர். (உஎ)

கண்டசங்கரநான்முகர்கைத்தலம்
விண்டசங்கத்தொல்லண்டம்வெடிபட
அண்டசங்கத்தமரர்தமார்ப்பெலாம்
உண்டசங்கமிராவணனூதினன். (உஅ)

இ-ள். கண்ட - ஸ்ரீராமபிரானைத் தரிசித்துநின்ற, சங்கரநான்முகர்- சிவனும் பிரமனும், கைத்தலம் - கூப்பியகைகள், விண்டு - அத்தொழிலினின்றும் நீங்கும்படி, அசங்க - நடுங்கவும், தொல்லண்டம் - பிரமனண்டத்தில், வெடிபட - மாறொலியுண்டாகவும், அண்டம் - விண்ணுலகத்தில், சங்கத்தமரர்தம் - தேவர்கூட்டத்தினது, ஆர்ப்பெலாம்-(களிப்பினாரவாரத்தையெல்லாம்) உண்ட - தொலைத்த, சங்கம் - சங்கை, இராவணனூதினன் - இராவணன்முழக்கினன்,—எ-று.

விண்டு - செயவெனெச்சத்திரிபு, இத்தொழிலானே கூப்பல்பெற்றும் எல்லாப்படைப்புகளினும் பிரமனண்டம் முற்பட்டதாகலி னதனைத் தொல்லண்டமென்றார். அசங்கவெடிபடவென்னுங் காரியப்பொருளாகிய வினையெச்சமிரண்டடுக்கி ஊதினனென்னும் வினைகொண்டன. சங்கத்தமர்தம் என்பதை அமரர்தஞ்சங்கமெனக்கூட்டுக. சங்கரநான்முகர் கைத்தலம்விண்டசங்கமெனவே ஏனையோரது கண்கலக்கம் சொல்லவேண்டுவதின்றாயிற்று.

சொன்னசங்கினதோசைதுளங்குற
என்னசங்கென்றிமையவரேங்குற
அன்னசங்கைப்பொறாமையினாரியன்
றன்னவெண்சங்கந்தானுமுழங்கிற்றால். (உகூ)

அய்யனைம்படைதானுமடித்தொழில்
செய்யவந்தயல்நின்றனதேவரில்
மெய்யனன்னவைகண்டிலன்வேதங்கள்
பொய்யிறன்னைப்புலன்றெரியாமைபோல். (௩0)

ஆசையும்விசும்புமலையாழியும்
தேசமுமலையுநெடுந்தேவரும்
கூசவண்டங்குலுங்கக்குலங்கொடார்
வாசவன்சங்கைமாதலிவாய்வைத்தான். (௩க)

துமிலவாளியரக்கன்றுரப்பன
விமலன்மேனியின்வீழ்தன்முன்னமே

* கமலவான்முகநடியர்கட்கடை
அமலமேனியிற்றைத்தவநந்தமால். (௩௨)

சென்றதேரோரிரண்டொடுஞ்சேர்த்திய
குன்றின்வெங்கட்குதிரைகுதிப்பன
ஒன்றையொன்றுற்றெறியுகநோக்கின
தின்றுதீர்வனபோலுஞ்சினத்தன. (௩௩)

கொடியின்மேலுறைவீணையுங்கொற்றமா
இடியினேறுமுறையினிடித்தன
படியும்விண்ணும்பரவையும்பன்முறை
முடியுமென்பதொர்மூரிமுழக்கினால். (௩௪)

எழுவேலையுமார்ப்பெடுத்தென்னலாம்
வீழிவெங்கணிராவணன்வில்லொலி
ஆழிநாதன்சிலையொலியண்டம்விண்
டூழிபேர்வுழிமாமழையொத்ததால். (௩௫)

ஆங்குநின்றவநுமனையாதியாம்
வீங்குவெஞ்சினவீரர்விழுந்தனர்
ஏங்கிநின்றதலாலொன்றிழைத்திலர்
வாங்குசிந்தையர்செய்கைமறந்துளார். (௩௬)

ஆவதென்னைகொலாமென்றறிகிலார்
ஏவர்வெல்வரென்றெண்ணலரேங்குவார்
போவர்மீள்வர்பதைப்பர்பொருமவால்
தேவருந்தங்கள்செய்கைமறந்துளார். (௩௭)

சேணவந்தரநோக்கலுந்திண்சரம்
பூணமுந்தினசிந்தினபூமழை
காணவந்தகடவுளர்கையெலாம்
ஆணவந்துணையாருளராவரே. (௩௮)

நீண்டமின்னொடுவானொடுநீலவில்
பூண்டிரண்டெதிர்நின்றவும்போன்றன
ஆண்டவில்லிதன்வில்லுமரக்கன்றன்
றீண்டவல்லரில்லாதசிலையுமே. (௩௯)

அரக்கனன்றெடுத்தார்க்கின்றவார்ப்பும்போர்
பொருப்புமெய்விற்றெழிப்புமுண்டேகொலாம்
குரைக்கும்வேலையுமேகக்குழாங்களும்
இரைத்திடிக்கின்றதின்றுமொரீறில. (௪௦)

---

* கமலமுகவானநாடியர் என்றும் பாடம்.

மண்ணிற்செல்வனசெல்லினுமாசற
எண்ணிற்சூன்மழையல்லவிராவணன்
கண்ணிற்சிந்தையதீக்கடுவேகத்த
விண்ணிற்செல்வனவிண்ணின்றுவீழ்வன. (௪௧)

மால்கலங்கலில்சிந்தையன்மாதிரம்
நால்கலங்கநகுந்தொறுநாவொடும்
கால்கலங்குவதேவர்கணமழைச்
சூல்கலங்குமிலங்கைதுளங்குமால். (௪௨)

இக்கணத்துமெறிப்பதடித்தெனச்
செக்கர்மேகத்துதிர்க்குநெருப்பெனப்
பக்கம்வீசும்படர்சுடர்பஃறிசை
புக்கபோதப்பொடிப்பனபோக்கில. (௪௩)

கொற்றம்பிற்கொடுகொள்ளுதல்கோளிலாச்
சிற்றையாளனைத்தேவர்தந்தேரொடும்
பற்றிவானிற்சுழற்றிப்படியின்மேல்
எற்றுவேனென்றுரைக்குமிரைக்குமால். (௪௪)

தடித்துவைத்தன்னவெங்கணைதாக்கற
வடித்துவைத்ததுமானுடற்கேவலி
ஒடித்துத்தேரையுதிர்த்தொருவில்லொடும்
பிடித்துக்கொள்வென்சிறையெனப்பேருமால். (௪௫)

வேறு.

பதைக்கின்றதொர்மனமும்மிடைபடர்கின்றதொர்சினமும்
விதைக்கின்றனபொறிபொங்கினவிழியும்முடைவெய்யோன்
குதைக்கின்றனநிமிர்வெஞ்சிலைகுழையக்கொடுங்கடுங்கால்
உதைக்கின்றனசுடர்வெங்கணையுருமேறெனவெய்தான். (௪௬)

உருமொப்பனகனலொப்பனவூற்றந்தருகூற்றின்
மருமத்தினுநுழைகிற்பனமழையொப்பனவானோர்
நிருமித்தனபடைபற்றறநிமிர்வுற்றனவமிழ்தப்
பெருமத்தினைமுறைசுற்றியபெரும்பாம்பினும்பெரிய. (௪௭)

துண்டப்படுநெடுமேருவைத்தொளைத்துள்ளுறைதொங்கா
தண்டத்தையும் * பொதுத்தேகுமென்றிமையோர்களுமயிர்த்தார்
கண்டத்தெறுகணைக்காற்றினைக்கருணைக்கடல்கனகச்
சண்டச்சரமழைகொண்டவையிடையேயறத்தடுத்தா. (௪௮)

* பொதுத்து - துவாரஞ்செய்து.

உடையான்முயன்றொருகாரியமுறுதீவினையுடற்ற
இடையூறுறச்சிதைதந்தாங்கெனச்சரஞ்சிந்தினவிரலும்
தொடையூறினகணைமாறிகடொகைதீர்த்தனதுரந்தான்
கடையூறுறுகணமாரிகள்கால்வீழ்ந்தெனக்கடியான். (௪௯)

இராவணன் போர்த்திறங்கண்டு சிவனுந் திகைத்தல்.

விண்போர்த்தனதிசைபோர்த்தனமலைபோர்த்தனவிமையோர்
கண்போர்த்தனகடல்போர்த்தனபடிபோர்த்தனகலையோர்
எண்போர்த்தனவெறிபோர்த்தனவிருள்போர்த்தனவென்னே
திண்போர்த்தொழிலென்றுனையினுரிபோர்த்தவன்றிகைத்தான். (௫௦)

அல்லாதொருபெருந்தேவருமறைவாணருமஞ்சி
எல்லாருந்தங்கரங்கொண்டிருவிழிபொத்தினரிருந்தார்
செல்லாயிரம்விழுங்காலுகும்விலங்கொத்ததுசேனை
வில்லாளனுமதுகண்டவைவிலக்குந்தொழில்வேட்டான். (௫௧)

செந்தீவினைமறைவாணனுக்கொருவன்சிறுவிலைநாள்
முந்தீந்ததொருணவின்பயனெனலாயினமுதல்வன்
வந்தீந்தனவடிவெங்கணையனையான்வருத்தமைந்த
வெந்தீவினைப்பயனொத்தனவரக்கன்சொரிவிசிகம். (௫௨)

நூறாயிரவடிவெங்கணைநொடியொன்றினின்விடுவான்
ஆறாவிறன்மறவோனவைதனிநாயகனறுப்பான்
கூறாயினகனல்சிந்தினகுடிக்கப்புனல்குறுகிச்
சேறாயினபொடியாயினதிடராயினகடலும். (௫௩)

வில்லார்சரந்துரக்கின்றவற்குடனேமிடல்வெம்போர்
வல்லானெழுமழுத்தோமரமணித்தண்டிருப்புலக்கை
தொல்லார்மிடல்வளைசக்கரஞ்சூலம்மிவைதொடக்கத்
தெல்லாநெடுங்கரத்தாலெடுத்தெறிந்தான்செருவறிந்தான். (௫௪)

வேலாயிரமழுவாயிரமெழுவாயிரம்விசிகக்
கோலாயிரம்பிறவாயிரமொருகோல்படக்குறைவ
காலாயினகனலாயினவுருமாயினகதிய
சூலாயினமழையன்னவன்றொடைபல்வகைதொடுக்க. (௫௫)

ஒத்துச்செருவிளைக்கின்றதொரளவின்றலையுடனே
பத்துச்சிலையெடுத்தான்கணைதொடுத்தான்பலமுகிலாத்
தொத்துப்படநெடுந்தாரைகள்சொரிந்தாலெனத்துரந்தான்
குத்துக்கொடுநெடுங்கோல்படுகளிறுமெனக்கொதித்தான். (௫௬)

ஈசன்விடுசரமாரியுமெரிசிந்துறுதறுகண்
நீசன்விடுசரமாரியுமிடையெங்கணுநெருங்கத்

தேசம்முதலேம்பூதமுஞ்செருக்கண்டனசெருக்கிக்
கூசம்மயிர்பொடிப்பற்றனவனலாயினகொடிய. (௫எ)

வேறு.

மந்தரக்கிரியெனமருந்துமாருதி
தந்தவப்பொருப்பெனபுரங்கண்டாமெனக்
கந்தருப்பங்கர்விசிம்பிற்கண்டென
அந்தரத்தெழுந்ததவ்வரக்கன்றேரரோ. (௫அ)

எழுந்துயர்தேர்மிசையிலங்கைக்காவலன்
பொழிந்தனசரமழையுருவிப்போதலால்
ஒழிந்ததுமொழிகிலதென்னவொல்லெனக்
கழிந்ததுகவிக்குலமிராமன்காணவே. (௫௯)

இராமன்மாதலியை இரதத்தினைவிரைவின்மேலோட்டச்சொல்லுதல்.

முழவிடுதோளொடுமுடியும்பஃறலை
விழவிடுவேனினிவிசும்புசேமமா
மழவிடையனையநம்படைஞர்மாண்டனர்
எழவிடுதேரையென்றிராமன்கூறினான். (௬0)

இராமஇராவணர்கள் இரதங்களில் வானத்திற் சுழன்றோடிப்பொருதல்.

அந்துசெய்குவெனெனவறிந்தமாதலி
உந்தினன்றேரெனுமூழிக்காற்றினை
இந்துமண்டிலத்தின்மேலிரவிமண்டிலம்
வந்தெனவந்ததம்மானத்தேரரோ. (௬௧)

இரிந்தனமழைக்குலமிழுகித்திக்கெலாம்
முரிந்தனவுடுக்குலமுதிர்ந்துசிந்தின
நெரிந்தனநெடுவரைக்குடுமிநேர்முறை
திரிந்தனசாரிகைதேருந்தேருமே. (௬௨)

வலம்வருமிடம்வருமறுகிவாறொடு
நிலம்வருமிடம்வலமிரும்வேலையும்
அலம்வருங்குலவரையனைத்துமண்டமும்
சலம்வருங்குயவனதிகிரித்தன்மைபோல். (௬௩)

எழும்புகழிறைவன்றேரரக்கன்றேரிதென்
றுழுந்துருள்பொழுதினெவ்வுலகுஞ்சேர்வன
தழும்பியதேவருந்தெரிவுதந்திலர்
பிழம்பினதிரிவனவென்னும்பெற்றியார். (௬௪)

உக்கிலாவுடுக்களுமுருள்கடாக்கவின்
நெக்கிலாமலைகளுநெருப்புச்சிந்தவின்

வக்கிலாத்திசைகளுமுதிரம்வாய்வழிக்
கக்கிலாவுயிர்களுமில்லைக்காண்பன. (௬௫)

இந்திரனுலகத்தாரென்பரென்றவர்
சந்திரனுலகத்தாரென்பர்தாமரை
அந்தணனுலகத்தாரென்பரல்லரால்
மந்தரமலையினாரென்பர்வானவர். (௬௬)

பாற்கடனடுவணாரென்பர்பல்வகை
மாக்கடலினுக்குமவ்வரம்பினாரென்பர்
மேற்கடலாரென்பர்கிளக்குளாரென்பர்
ஆர்க்கடையுருமென்பரறிந்தவானவர். (௬௭)

மீண்டனவோவென்பர்விசும்புவிண்டுகக்
கீண்டனவோவென்பர்கீழவோவென்பர்
பூண்டனபுரவியோபுதியகாற்றென்பர்
மாண்டனவுலகமென்றணங்கும்வாயினார். (௬௮)

எழுடைக்கடலினுந்தீவொரேழினும்
எழுடைமலையினுமுலகொரேழினும்
சூழுடையண்டத்தின்சுவர்களெல்லையா
ஊழியகாற்றெனத்திரிந்தவோவில. (௬௯)

உடைக்கடலேழினுமுலகமேழினும்
இடைப்படுந்தீவினுமலையொரேழினும்
அடைக்கலப்பொருளெனவரக்கன்வீசிய
படைக்கலமழைபடுதுளியின்பான்மைய. (௭௰)

ஒறுத்துலகனைத்தையுமுழலுமோட்டிடை
இறுத்திலவிராவணனெறிந்தவெய்தன
அறுத்ததுந்தடுத்ததுமன்றியாரியன்
செறுத்தொருதொழிலிடைசெய்ததில்லையால். (௭௧)

விலங்கலும்வேலையுமேலுங்கீழரும்
அலங்கொளிதிரிதருமுலகனைத்தையும்
கலங்குறத்திரிந்ததோரூழிக்காலக்காற்
றிலங்கையையெய்தினவிமைப்பின்வந்தரோ. (௭௨)

இருவர் தேர்களிலுமுள்ள குதிரைகளின்றிறம்.

உய்த்துலகனைத்தினுமுழன்றசாரிகை
மொய்த்ததுகடலிடைமணலின்மும்மையால்
வித்தகர்கடவியவிசயத்தேர்ப்பரி
எய்த்திலவியர்த்திலவிரண்டுபோலவும். (௭௩)

இராமன்றேரிலுள்ள இடிக்கொடியை இராவணனறுத்தெரிதல்.

இந்திரன்றேரின்மேலுயர்ந்தவெந்தொழில்
உந்தரும்பெருவலியுருமினேற்றினைச்
சந்திரனனையதோர்சரத்தினாற்றரை
சிந்தினனிராவணனெரியுஞ்செங்கணான். (௭௪)

சாய்ந்தவல்லுருமுபோயரவத்தாழ்கடல்
பாய்ந்தவல்லுருமெனமுழங்கிப்பாய்தலும்
காய்ந்தபேரிரும்பின்வன்கட்டிகாலுறத்
தோய்ந்தநீராமெனச்சுருங்கிற்றாழியே. (௭௫)

இராவணனது கடும்போர்.

எழுத்தெனச்சிதைவிலாவிராமன்றேர்ப்பரிக்
குழுககளைக்கூர்ங்கணைக்குப்பையாக்கினோர்
வழுத்தருமாதலிவயிரமார்பிடை
அழுத்தினன்கொடுஞ்சரமாறொடாறரோ. (௭௬)

மண்டிலவரிசிலைவானவில்லொடும்
துண்டவெண்பிறையெனத்தோன்றத்தூவிய
உண்டைவெங்கடுங்கணையொருங்குமூடலால்
கண்டிலரிராமனையிமைப்பில்கண்ணினார். (௭௭)

தோற்றனனேயினியென்னுந்தோற்றத்தால்
ஆற்றல்சாலமமரருமச்சமெய்தினார்
வேற்றலரார்த்தனர்மேலுங்கீழரும்
காற்றியகற்றதுகலங்கிற்றண்டமே. (௭௮)

அங்கியுந்தன்னொளியடங்கிற்றார்கலி
பொங்கலதிமிர்த்தனவிசும்பிற்போக்கில
வெங்கதிர்தண்கதிர்விலங்கிமீண்டன
மங்குலினெடும்புனன்மழைவறந்ததால். (௭௯)

திசைநிலைக்கடகரிசெருக்குச்சிந்தின
அசைவிலவேலைகளார்க்கவஞ்சின
விசைகொடுவிசாகத்தைநெருக்கியேறினன்
குசனெனமேருவுங்குலுக்கமுற்றதே. (௮௦)

வானரத்தலைவருமிளையமைந்தனும்
எனையத்தலைவனைக்காண்கிலேமெனக்
கானகக்கரியெனக்கலங்கினார்கடல்
மீனெனக்கலங்கினார்வீரர்வேறுளார். (௮௧)

நீனிறநிருதர்கோனெய்தநீதியிற்
சால்புடைமாதலிமார்பிற்றைத்தன
கோலினுமிலக்குவன்கோலமார்பின
வேலினும்வெம்மையேவிளைந்தவீரற்கும். (௮௨)

இராமனது கடும்போர்.

எய்தனசரமெலாமிமைப்பின்முந்துறக்
கொய்தனனகற்றிவெங்கோலின்கோவையால்
நொய்தெனவரக்கனைநெருங்கநொந்தன
செய்தனனிராகவனமரர்தேறினார். (௮௩)

வேறு.

தூணுடைநிரைபுரைகரமவைதொறுமக்
கோணுடைமலைநிகர்சிலையிடைகுறையச்
சேணுடைநிகர்கணைசிதறினனுணர்வோ
டூணுடையுயிர்தொறுமுறைவுறுமொருவன். (௮௪)

இராமன்தேரில் கருடன் கொடியாய் நிற்றல்.

படையுகவிமையவர்பருவரல்கெடவந்
திடையுறுதிசைதிசையிறுகுறலிறைவன்
அடையுறுகொடிமிசையணுகினனளவில்
கடையுகமுடிவெழுகடல்புரைகலுழன். (௮௫)

கயில்விரிவுறவருகவசமுழுமுருவிப்
பயில்விரிகுருதிகள்பருகிடவெயிலோ
டயில்விரிசுடுகணைகடவினனறிவின்
துயில்வுழியுணர்தகுசுடரொளியொருவன். (௮௬)

திசையுறுதுகிலதுசெறிமழைசிதறும்
விசையுறுமுகிழுறுவிரிதருசிரனோ
டிசையுறுகருவியினினிதுறுகொடியைத்
தசையுறுகணைகொடுதரையுறவிடலும். (௮௭)

பண்ணவனுயர்கொடியெனவொருபரவைக்
கண்ணகனுலகினைவலம்வருகலுழன்
நண்ணலுமிமையவர்நமதுறுகருமம்
எண்ணலமுனிவினினிவறினனெனவே. (௮௮)

இராமன்மீதிராவணன் தாமதாத்திரம்விடுதல்.

ஆயதொரமைதியினறிவினினறிவான்
நாயகனொருவனைநலிகிலதுணர்வான்

ஏயினனிருளுறு * தாமதமெனுமத்
தீய்வினைதருபடைதெறுதொழின்மறவோன். (அக)

தீமுகமுடையனசிலமுகமுதிரம்
தோய்முகமுடையனசுரர்முகமுடைய
பேய்முகமுடையனபிலமுகநுழையும்
வாய்முகம்வரியரவனையனவருவ. (கூ0)

ஒருதிசைமுதல்கடையொருதிசையளவும்
இருதிசையெயிறுறவருவனபெரிய
கருதியகருதியபுரிவனகனலும்
பருதியைமதியொடுபெருகுவபகழி. (கூக)

இருளொருதிசையொருதிசைவெயில்விரியும்
சுருளொருதிசையொருதிசைமழைதொடரும்
உருளொருதிசையொருதிசையுருமுரலும்
மருளொருதிசையொருதிசைசிலைவருடம். (கூஉ)

இனையனநிகழ்வுறவெழுவகையுலகும்
கனையிருள்கதுவிடவமரர்கள்கதற
வினையுறுதொழிலிடைவிரவலும்விமலன்
நினையுறுதகைமையினெறியுறுமுறையின். (கூங)

இராமன் சிவாத்திரம்விடுதல்.

கண்ணுதலொருவனதடுபடைகருதிப்
பண்ணவன்விடுதலுமதுநனிபருக
எண்ணுறுகனவினெனுணர்வெனவிமையில்
துண்ணெனுநிலையினினெறிபடைதொலைய. (கூச)

வே று.

விரிந்ததன்படைமெய்கண்டபொய்யெனவீய
எரிந்தனகண்ணினனெயிற்றிடைமடித்தவாயினன்றன்
தெரிந்தவெங்கணைகங்கவெஞ்சிறையன்னதிறத்த
அரிந்தமன்றிருமேனிமேலழுத்திநின்றார்த்தான். (கூரு)

இராவணனசுராத்திரம்விடுதல்.

ஆர்த்துவெஞ்சினத்தாசுரப்படைக்கலமமரர்
வார்த்தையுண்டதின்னுயிர்களான்மறலிதன்வயிற்றைத்

* தாமதம் - ஓரத்திர விசேடம்.

தூர்த்தஇந்திரன்றனுக்குறுதொழிலதுதொடுத்துத்
தீர்த்தன்மேல்வரத்துரந்தனனுலகெலாந்தெரிய. (௯௬)

ஆசுரப்பெரும்படைக்கலமமரரையமரின்
ஏசுவிப்பதெவ்வுலகமுமெவரையும்வென்று
வீசுவெற்பிறத்துரந்தவெங்கணையதுவிசையின்
பூசுரர்க்கொருகடவுண்மேற்சென்றதுபோலாம். (௯௭)

அக்கினியாத்திரத்தால் இராமனசுராத்திரத்தை யழித்தல்.

நுங்குகின்றதிவ்வுலகையோர்நொடிவரையென்ன
எங்குநின்றுநின்றலமருமமரர்கண்டிமைப்ப
மங்குல்வல்லுருமேற்றின்மேலெரிமடுத்தென்ன
அங்கிதன்னெடும்படைதொடுத்திராகவனறுத்தான். (௯௮)

கூற்றுக்கோடினுங்கோடலகடலெலாங்குடிப்ப
நீற்றுக்குப்பையின்மேருவைநூறுவநெடிய
காற்றுப்பின்செலச்செல்வனவுலகெலாங்கடப்ப
நூற்றுக்கோடியம்பெய்தனனிராவணனொடியின். (௯௯)

என்னகைக்கடுப்போவென்பர்சிலர்சிலரிவையும்
அன்னமாயமேயம்பலவென்பரவ்வம்புக்
கின்னமுண்டுகொலிடமென்பர்சிலர்சிலரிகற்போர்
முன்னமித்தனைமுயன்றிலனென்பர்முனைவர். (௱)

மறைமுதற்றனிநாயகன்வானினைமறைத்த
சிறையுடைக்கொடுஞ்சரமெலாமிமைப்பொன்றிற்றிரியப்
பொறைசிகைப்பொருந்தலைநின்றும்புங்கத்தினளவும்
பிறைமுகத்தடங்கடுங்கொடுஞ்சரங்கொண்டுபிளந்தான். (௱௧)

இராவணன் மாயாத்திரம் விடுதல்.

அயன்படைத்தபேரண்டத்தினருந்தவமாற்றிப்
பயன்படைத்தவர்யாரினும்படைத்தவன்பல்போர்
வியன்படைக்கலந்தொடுப்பெனினியெனவிரைந்தான்
மயன்படைக்கலந்துரந்தனன்றயரதன்மகன்மேல். (௱௨)

விட்டனன்விடுபடைக்கலம்வேரொடுமுலகைச்
சுட்டனன்னெனத்துணுக்கமுற்றமரருஞ்சுருண்டார்
கெட்டனம்மெனவானரத்தலைவருங்கிழிந்தார்
சிட்டர்தந்தனித்தேவனுமதனிலைதெரிந்தான். (௱௩)

இராமன் காந்தர்ப்பாத்திரத்தால் மாயாத்திரமழித்தல்.

பாந்தட்பஃறலைப்பரந்தகன்புவியிடைப்பயிலும்
மாந்தர்க்கில்லையால்வாழ்வெனவருகின்றவதனைக்

காந்தார்ப்பமெனுங்கடுங்கொடும்படையினாற்கடந்தான்
ஏந்தற்பன்மணியெறுழ்வலித்திரள்புயத்திராமன். (க0ச)

தாருகன்பண்டுதேவரைத்தகர்த்ததுதனிமா
மேருகந்தரம்புனைவதுவெயிலன்னவொளிய
தோருகந்தனினுலகநின்துருட்டினுமுருளாச்
சீருகந்ததுமுகந்ததுவானவர்சிரங்கள். (க0ரு)

இராவணன் தண்டாலெறிதல்.

பண்டுநான்முகன்படைத்ததுகனகனிப்பாரைத்
தொண்டுகொண்டதுமதுவெனுமவுணன்முன்றொட்ட
துண்டதென்வயினதுதுரந்துயிருண்பெனென்றோர்
தண்டுகொண்டெறிந்தானைந்தொடைந்துடைத்தலையான். (க0சு)

பசும்புனற்பெரும்பரவைபண்டுண்டவன்பணிப்புற்
றசும்புபாய்கின்றதருக்கனினொளிர்கின்றதண்டம்
தசும்புபோலுடைந்தொழியுமென்றனைவருந்தளர
விசிம்புபாழ்படவந்ததுமந்தரம்வெருவ. (க0எ)

இராமனம்பேவித் தண்டழித்தல்.

கண்டதாமரைக்கண்ணனக்கடவுண்மாக்கதைதான்
அண்டர்நாயகனாயிரங்கண்ணினுமடங்காப்
புண்டரீகத்தின்முகையன்னபுகர்முகம்விட்டான்
உண்டைநூறுடைநூறுபட்டுளதெனவுதிர்த்தான். (க0அ)

இராவணன் மாயாத்திரம் விடுதல்.

சேயைநின்றவன்சிலைவலங்காட்டினான்றீராப்
பேயையென்பலதுரப்பதிங்கிவன்பிழையாமல்
ஆயதன்பெரும்படையொடுமெடுகளத்தவிய
மாயையின்படைதொடுப்பெனென்றிராவணன்மதித்தான். (க0கூ)

பூசனைத்தொழில்புரிந்துதான்முறைமையிற்போற்றும்
ஈசனைத்தொழுதிருடியுஞ்சந்தமுமெண்ணி
ஆசைபத்தினுமந்தரப்பரப்பினுமடங்கா
வீசினன்செலவில்லிடைத்தொடைகொடுவிட்டான். (கக0)

மாயாத்திரச் செயல்.

மாயைபொத்தியவயப்படைவிடுதலும்வரம்பில்
காயமெத்தனையுளநெடுங்காயங்கள்கதுவ

ஆயமுற்றெழுந்தாரெனவார்த்தனரமரில்
தூயகொற்றவர்சுடுசரத்தான்முன்புதுணிந்தார். (௧௧௧)

இந்திரற்கொருபகைஞனுமவற்கிளையோனும்
தந்திரப்பெருந்தலைவருந்தலைத்தலையோரும்
மந்திரச்சுற்றத்தவர்களும்வரம்பிலர்பிறருங்
அந்தரத்தினைமறைத்தனர்மழையுகவார்ப்பார். (௧௧௨)

குடப்பெருஞ்செவிக்குன்றமுமற்றுளகுழுவும்
படைத்தமூலமாத்தானையுமுதலியபட்ட
விடைத்தெழுந்தனயானைதேர்பரிமுதல்வெவ்வே
றடைத்தவூர்திகளனைத்தும்வந்தவ்வழியடைய. (௧௧௩)

ஆசிலப்பெருவெள்ளமென்றறிஞரேயறைந்த
காய்சினப்பெருங்கடற்படைகளப்பட்டவெல்லாம்
ஈசனிற்பெற்றவரத்தினுமெய்தியவென்னத்
தேசமுற்றவுஞ்செறிந்தனதிசைகளுந்திகைப்ப. (௧௧௪)

சென்றவெங்கணுந்தேவருமுனிவருஞ்சிந்த
வென்றதெங்களைப்போலும்யாம்விளிவதுமுளதே
இன்றுகாட்டுதுமெய்துமினெய்துமினென்னுக்
கொன்றகொற்றவர்தம்பெயர்குறித்தறைகூற. (௧௧௫)

பாரிடந்துகொண்டெழுந்தனபாம்பெனும்படியப்
பாரிடந்துனைந்தெழுந்தனமலையன்னபடிய
பேரிடங்கதுவரிதினிவிசும்பெனப்பிறந்த
பேரிடங்கரிற்கொடுங்குழையணிந்தனபேய்கள். (௧௧௬)

இ-ள். பாம்பு - வாசுகிமுதலியபாம்புகள், பார் - பூமியை, இடந்துகொண்டு - (தாங்குதலையொழிந்து) பிளந்துகொண்டு, எழுந்தனவெனும்படி - புறத்தேசீறியெழுந்தனவென்று கண்டோர்சொல்லும்படி, அப்பாரிடம் - அப்பூதங்கள், மலையன்ன - மலையையொத்த, படிய - உருவினவாகி, துனைந்தெழுந்தன - விரைந்தெழுந்தன, பேர் - (நீரில்) உலாவுகின்ற, இடங்கரின் - முதலையைப்போன்ற, கொடுங்குழை - வளைந்த வடிவனவாகியகுழைகளை, அணிந்தனபேய்கள் - அணிந்தனவாகியபேய்கள், பேரிடம் - பூமியில், கதுவரிது - நாம்தங்குதலரிது, இனி - இனித்தங்குதல், விசும்பென - ஆகாயத்தின்கணென்று, பிறந்த - பிறந்தன - எ-று.

பேரிடம் - அன்மொழித்தொகை. கதுவு - முதனிலைத் தொழிற்பெயர். பகைவராயினோர் கண்டமாத்திரையில் ஊக்கமழியுந்தோற்றத்தின் பெருமையுடையனவாகலின் அப்பாரிடமென்றார். மலை, இடங்கர், மெய்யுவமம்.

தாமசத்தினிற்பிறந்தவரறந்தெறுந்தகையர்
தாமசத்தினிற்செல்கிலாச்சதுமுகத்தவற்குத்
தாமசத்திரஞ்செய்பவர்பரிந்தனர்தளரத்
தாமசத்திரஞ்சித்திரம்பொருந்தினர்தயங்க.

இ-ள். தாமசத்தினில் - பிரமனது) தாமசகுணத்தில், பிறந்தவர் - பிறந்தவர்களும், அறம் - அறங்களை, தெறுந்தகையர் - அழிக்குந்தன்மையுடையார்களுமாகிய அரக்கர்கள், தாம் - தாங்கள், அசத்தினில் - பொய்ந்நெறியில், செல்கிலா - ஒழுகுதலில்லாமல், சதுமுகத்தவற்கு - பிரமனுக்கு, உத்தமம் - சிறந்ததாகிய, சத்திரம் - யாகத்தை, செய்பவர் - செய்யுமுனிவர்கள், பரிந்தனர் - துன்புற்றவர்களாகி, தளர - ஊக்கமழிய, தாமம் - ஒளிபெற்ற, சத்திரம் - வாள்முதலிய கைவிடாப்படைகள், தயங்க - பிரகாசிக்க, சித்திரம்பொருந்தினர் - நானாவகையமைந்தனர்-எ-று.

உத்தாமம் - நீட்டல். சத்திரஞ்சித்திரம் பொருந்தினர் என்பதில் இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. (கசஎ)

தாமவிந்துமீதெழுந்தவர்க்கிரட்டியின்றகையார்
தாமவிந்துவின்பிளவெனத்தயங்கும்வாளெயிற்றர்
தாமவிஞ்சையர்கடற்பெருந்தகையினர்தரளத்
தாமவிஞ்சையர்துவன்றினர்திசைதொறுந்தருக்கி.

இ-ள். தாமவிந்து - (முன்னடந்தபோரிலெல்லாம்) தாங்கள் இறந்து, மீது - விண்ணுலகத்தில், எழுந்தவர்க்கு - உயர்ந்த அரக்கர்களினும், இரட்டியின்றகையர் - இருபங்காயின பெருமையுடையார்களும், தாமம் - ஒளியுள்ள, இந்துவின் பிளவென - சந்திரனது பிளவுபோல, தயங்கும் - விளங்கும், வாளெயிற்றர் - கூரியபல்லையுடையார்களும், தாம் - பரவுகின்ற, அவிஞ்சையர் - மாயையுடையார்களும், கடல் - கடலைப்போலும், பெருந்தகையினர் - மிக்கவழகுடையார்களுமாகிய அசுரர்களும், தரளத் தாமம் - முத்துமாலையையணிந்த, விஞ்சையர் - வித்தியாதரர்களும், திசைதொறும் - (போர்க்களத்தில்) எல்லாத்திக்குகளிலும், தருக்கி - செருக்குக்கொண்டு, துவன்றினர் - நிறைந்தனர்—எ-று.

மீது - ஆகுபெயர். எழுந்தவர்க்கு - உருபுமயக்கம். (கசஅ)

தாமடங்கலுமுடங்குளையாளியுந்தகுவார்
தாமடங்கலுநெடுந்திசையுலகொடுதகைவார்
தாமடங்கலுங்கடலுமொத்தார்தருந்தகையார்
தாமடங்கலுங்கொடுஞ்சுடர்ப்படைகளுந்தரித்தார்.

இ-ள். தாம்-தாவுகின்ற, மடங்கலும்-சிங்கத்தையும், முடங்கு-மடங்கிய, உளை-பிடரின்கண்மிக்கமயிரையுடைய, யாளியும்-யாளியையும், தகுவார்-ஒப்பாரும், தாமடங்கலும்-தாங்கள்யாவரும், நெடுந்திசையுலகொடு-

நெடியதிக்குப்பாலகர்களையும் உலகத்துள்ள வீரர்களையும், தகைவார்-போரில் தடுக்கவல்லாரும், தா-வலியையுடைய, மடங்கலும்-வடவைத்தீயையும், கடலும்-கடலையும், ஒத்து-உருவத்தாலொப்பாகி, ஆர்தரும்-சமர்க்களமெங்கும் நிறைகின்ற, தகையார்-பெருமையுடையாருமாகிய அரக்கர்கள், தாம்-விளக்கமாகிய, மடங்கலும்-இடிகளையும், கொடுஞ்சுடர்ப் படைகளும்-சுடருள்ள கொடியபடைகளையும், தரித்தார் - தாங்கிநின்றார். எ-று.

தாமமென்பதனீறுதொகுத்தல். ஒடு-இசைநிறை. (கககூ)

மாயாத்திரச் செயல்கண்ட இராமன் மாதலியைவினவுதல்.

இனையதன்மையைநோக்கியவிந்திரைகொழுநன்
வினையமற்றிதுமாயமோவிதியதுவிளைவோ
வனையும்வன்கழலரக்கர்தம்வரத்தினோமற்றோ
நினைதியாமெனிற்பகமெனமாதலிநிகழ்த்தும். (கஉ0)

மாதலியின் விடை.

இருப்புக்கம்மியற்கிழைநுழையூசியொன்றியற்றி
விருப்பிற்கோடியால்விலைக்கெனும்பதடியின்விட்டான்
கருப்புக்கார்மழைவண்ணவக்கடுந்திசைக்களிற்றின்
மருப்புக்கல்லியதோளவன்மீளருமாயம். (கஉக)

வீக்குவாயவில்வெள்ளெயிற்றரவின்வெவ்விடத்தை
மாய்க்குமாநெடுமந்திரந்தந்ததோர்வலியின்
நோய்க்குநோய்தருவினைக்குநின்பெரும்பெயர்நொடியின்
நீக்குவாய்நினைநினைக்குவார்பிறப்பென்னநீங்கும். (கஉஉ)

இராமன் ஞானாத்திரம் விடுதல்.

வரத்தினுயினுமாயையினுயினும்வலியோன்
உரத்தினுயினுமுண்மையினுயினுமோடத்
துரத்தியாலெனஞானமாக்கடுங்கணைதுரந்தான்
சிரத்தினுன்மறையிறஞ்சவுந்தொடரவுஞ்சேயோன். (கஉங)

மாயாத்திரம் அழிதல்.

துறத்தலாற்றுறுஞானமாக்கடுங்கணைதொடர
அறத்தலாதுசெல்லாதுநல்லறிவுவந்தணுகப்
பிறத்தலாற்றுறுபேதமைபிணிப்புறத்தம்மை
மறுத்தலாற்றந்தமாயையின்மாய்ந்ததம்மாயம். (கஉச)

வேறு.

இராவணன் சூலமேவுதல்.

நீலங்கொண்டார்கண்டனுநேமிப்படையோனும்
மூலங்கொண்டார்கண்டகராவிமுடிவிப்பான்

காலங்கொண்டார்கண்டனமுன்னேகழிவிப்பான்
சூலங்கொண்டானண்டரையெல்லாந்தொழில்கொண்டான். (கஉரு)

கண்டாகுலமுற்றுயிரமார்க்கின்றதுகண்ணின்
கண்டாகுலமுற்றும்பரயிர்க்கின்றதுவீரர்
கண்டாகுலமுற்றுஞ்சுடுமென்றக்கழல்வெய்யோன்
கண்டாகுதன்முன்செல்லவிசைத்துள்ளதுகண்டான். (கஉசு)

இ-ள். கண்டாகுலம் - சிறந்தமணிகள், முற்று - சூழ, ஆயிரமார்க்கின்றது - பலவொலிப்பதும், கண்ணின் - தங்கள்கண்களாலே, கண்டு - பார்த்து, ஆகுலம் - துன்பத்தை, உற்று - அடைந்து, உம்பர் - தேவர்களால், அயிர்க்கின்றது - யாதாய்முடியுமோவென்று ஐயப்படுவதும், வீரர்கண் - இங்குநின்ற வீரர்களிடத்துள்ள, தா - வலியும், குலம் -ஊக்கமும் மேம்பாடுமாகிய திரணக்கூட்டத்தை, முற்றும் - பற்றற, சுடுமென்று - எரிக்குமென்றுகருதி, அக்கழல்வெய்யோன் - வெவ்வியவீரக்கழலையணிந்த அவ்விராவணன், கண் - நோக்குவோருடைய கண்கள், தாகுதன்முன் - தாவுதலுக்குமுன்னே, செல்ல - செல்லும்படி, விசைத்துள்ளது - விரைந்துவிட்டதுமாகிய சூலமென்னுந்தீயை, கண்டான் - ஸ்ரீராமபிரான்கண்டான் - எ-று.

வலியையுணர்த்திநின்றதாவென்பதைச் சாரநின்றமையிற் குலமென்பதற்கு அஃதொழிந்த ஊக்கமும் மேம்பாடுமென்றும், சுடுமென்றமையால்-வலி ஊக்கமுதலியவற்றைத் திரணமென்றும், சூலத்தைத் தீயென்றுங்கூறினும். கழல்வெய்யோன் - குணந்தீயோரென்றாற்போலவந்த திணைவழுவமைதி. கழற்குவெம்மையாவது தன்னொலியால் அமரர்முதலியபகைஞரையச்சுறுத்தல்-குலம். ஆகுபெயர். தாகுதலில்-கு-சாரியை.

எரியாநிற்கும்பஃறலைமூன்றும்மெரியஞ்சத்
திரியாநிற்கத்தேவர்களோடத்திரளோட
இரியாநிற்கும்மெவ்வுலகுந்தன்னொளியேயாய்
விரியாநிற்குந்நிற்கிலதார்க்கும்விழிசெல்லா. (கஉஎ)

செல்வாயென்னச்செல்லவிடுத்தானிதிதீர்த்தற்
கொல்வாய்நீயேவேறொருவர்க்கும்முடையாதால்
வல்வாய்வெங்கட்சூலமெனுங்காலனைவள்ளால்
வெல்வாய்வெல்வாயென்றனர்வானோர்மெலிகின்றார். (கஉஅ)

துணையும்வேகத்தாலுருமேறுந்துண்ணென்ன
வினையுங்காலிற்செல்வனதன்னைமறவாதே
நினையுஞ்ஞானக்கண்ணுடையார்மேனினையாதார்
வினையம்போலச்சிந்தினன்வீரன்சரம்வெய்ய. (கஉகூ)

எய்யும்மெய்யுந்தேவருடைத்திண்படையெல்லாம்
பொய்யுந்துய்யும்மொத்தவைசிந்தும்புவிதந்தான்

வய்யுஞ்சாபமொப்பெனவெப்பின்வலிகண்டான்
அய்யன்னின்றான்செய்வகையெல்லாமறிகில்லான். (கங0)

மறந்தான்செய்கைமற்றெதிர்செய்யும்வகையெல்லாம்
துறந்தானென்றும்பர்துணுக்கந்தொடர்வுற்றார்
அறந்தானஞ்சிக்கால்குலையத்தானறியாதே
பிறந்தானின்றான்வந்ததுசூலம்பிறரஞ்ச. (கஙக)

இராவணனேவியசூலம் இராமன்மார்பிற்பட்டுதிர்தல்.

சங்காரத்தாற்கண்டையொலிப்பத்தழல்சிந்தப்
பொங்காரத்தான்மார்பெதிரோடிப்புகலோடும்
வெங்காரத்தான்முற்றுமுனிந்தான்வெகுளிப்பே
றாங்காரத்தானுக்கதுபன்னூறுதிராகி. (கஙஉ)

ஆர்ப்பாரானாரச்சமுமற்றாரலர்மாரி
தூர்ப்பாரானார்துள்ளல்புரிந்தார்தொழுகின்றார்
தீர்ப்பாய்நீயேதீயெனவேறாய்வருதீமை
பேர்ப்பாய்போலாமென்றனர்வானோருயிர்பெற்றார். (கஙங)

இராவணனிராமனை எவனுமிருக்கலாமென நினைத்தல்.

வென்றானென்றேயுள்ளம்வியந்தான்விடுசூலம
பொன்றானென்னிற்போகலதென்னும்பொருள்கொண்டான்
ஒன்றாமுங்காரத்திடையுக்கோடுதல்காணா
நின்றானந்நாள்வீடணனார்சொன்னினைவுற்றான். (கஙச)

சிவனோவல்லனான்முகனல்லன்றிருமாலாம்
அவனோவல்லன்மெய்வரமெல்லாமடுகின்றான்
தவனோவென்னிற்செய்துமுடிக்குந்தரனல்லன்
இவனோதானவ்வேதமுதற்காரணனென்றான். (கஙரு)

யாரேனுந்தானாகுகயானென்றனியாண்மை
பேரேனின்றேவென்றிமுடிப்பென்புகழ்பெற்றேன்
நேரேசெல்லுங்கொல்லுமெனிற்றானிமிர்வென்றி
வேரேநிற்கும்மீள்கிலனென்னாவிடலுற்றான். (கஙசு)

இராவணன் நாகாத்திரம் விடுதல்.

* நிருதித்திக்கின்னின்றவன்வென்றிப்படைநெஞ்சில்
கருதித்தன்பால்வந்ததவன்கைக்கொடுகாலன்
விருதிற்சிந்தும்வில்லின்வலித்துச்செலவிட்டான்
குருதிச்செங்கண்டீயுகஞாலங்குலைவெய்த. (கஙஎ)

---

* நிருதித்திக்கில்நின்றவன்-சங்கபாலனென்னு நாகன்.

வய்யந்துஞ்சும்வன்பிடர்நாகமனமஞ்சப்
பய்யுங்கோடிப்பஃறலையோடுமளவில்லா
மெய்யும்வாயும்பெற்றனமேருக்கிரிசால
நொய்தென்றோதுந்தன்மையவானநுழைகின்ற. (௧௩௮)

வாய்வாய்தோறுமாகடல்போலும்விடவாரி
போய்வார்கின்றபொங்கனல்கண்ணிற்பொழிகின்ற
மீய்வாயெங்கும்வெள்ளிடையின்றிமிடைகின்ற
பேய்வாயெங்கும்வெள்ளெயிறெங்கும்பிறழ்கின்ற. (௧௩௯)

கடித்தேதீருங்கண்ணகன்ஞாலங்கடலோடும்
குடித்தேதீரும்மென்றுலகெல்லாங்குலைகின்ற
முடித்தானன்றோவெங்கணரக்கன்முழுமுற்றும்
பொடித்தானுகும்மிப்பொழுதென்னப்புகைகின்ற. (௧௪0)

நாகாத்திரத்தினை இராமன் காருடாத்திரத்தாலழித்தல்.

அவ்வாறுற்றவாடரவங்காலகல்வாயால்
கவ்வாநின்றமால்வரைமுற்றும்மலைகண்டான்
எவ்வாய்தோறும்மெய்தினவென்றுவெதிரெய்தான்
தவ்வாமெய்மைக்காருடமென்னும்படைதன்னால். (௧௪௧)

காருடாத்திரத்திறம்.

எவணைத்தன்மைத்தேகினநாகத்தினமென்னப்
பவணத்தன்னவெஞ்சிறைவேகத்தொழில்பம்பச
சுவணக்கோலத்துண்டநகந்தொல்சிறைவேல்போல்
உவணப்புள்ளேயாயினவெல்லாமுலகெல்லாம். (௧௪௨)

வேறு.

அளக்கரும்புள்ளினமாயவாரழல்
துளக்கரும்வாய்தொறுமெரியத்தொட்டன
இளக்கருமிலங்கைதீயிடுதுமீண்டென
விளக்கினமெடுத்தனபோன்றவிண்ணின. (௧௪௩)

குயின்றனசுடர்மணிக்கனலின்குப்பையின்
பயின்றனகுடர்சுடர்ப்பதுமநாளங்கள்
வயின்றொறுங்கவர்ந்தெனத்துண்டவாள்களால்
அயின்றனபுள்ளினமுகிரினள்ளின. (௧௪௪)

எவ்வகையுரகமுமிரியல்போயின
நொவ்வியலுற்றனநொடிப்பதென்னினி
அவ்வயினரணியடலராவுமே
கவ்வையினுழந்தனசிறையின்காற்றினே. (௧௪௫)

ஆயிடையரக்கனுமழன்றநெஞ்சினன்
தீயிடைப்பொடிந்தெழுமுயிர்ப்பன்சீற்றத்தன்
மாயிருஞாலமும்விசும்பும்வைப்பறத்
தூயினன்சுடுசரமுருமின்றேற்றத்த. (௧௪௬)

அங்கவெங்கடுங்கணையயிலின்வாய்தொறும்
வெங்கணைபடப்படவிசையின்வீழ்ந்தன
புங்கமேதலையெனப்புக்கபோலுமால்
துங்கவாளரக்கனதுரத்திற்றோன்றல. (௧௪௭)

இராவணனது தளர்ச்சியும் இராமனதூக்கமும்.

ஒக்கநின்றெதிரமருழக்குங்காலையில்
முக்கணன்றடவரையெடுத்தமொய்ம்பற்கு
நெக்கெனவிஞ்சைகணிலையிற்றீர்ந்தன
மிக்கனவிராமற்குவலியும்வீரமும். (௧௪௮)

இராவணன்றலையை இராமனறுத்தல்.

வேதியர்வேதத்துமெய்யனவெய்யவர்க்
காதியனணுகியவற்றநோக்கினான்
சாதியினிமிர்ந்ததோர்தலையைத்தள்ளினான்
பாதியின்மதிமுகப்பகழியொன்றினால். (௧௪௯)

மேருவின்கொடுமுடிவீசுகாலெறி
போரிடையொடிந்துபோய்ப்புணரிபுக்கென
ஆரியன்சரம்படவரக்கன்வன்றலை
நீரிடைவிழுந்ததுநெருப்பொடன்றுபோய். (௧௫0)

இராவணன் சிரஞ்சிந்தியதுகண்ட தேவராரவாரித்தல்.

குதித்தனர்பாரிடைக்குன்றுகூட்டற
மிதித்தனர்வடகமுந்தூசும்வீசினர்
துதித்தனர்பாடினராடித்துள்ளினர்
மதித்தனரிராமனைவானுளோரெலாம். (௧௫௧)

இராவணன் தலைமீட்டு முளைத்தல்

இறந்ததோருயிருடன்றருமத்தீட்டினால்
பிறந்துளதாமெனப்பெயர்த்துமோர்தலை
மறந்திலதெழுந்ததுமடித்தவாயது
சிறந்ததுதவமலாற்செயலுண்டாகுமோ. (௧௫௨)

புதிதாயெழுந்த தலை இராமனை இகழ்தல்.

கொய்ததுகொய்திலதென்னுங்கொள்கையின்
எய்தவந்தக்கணத்தெழுந்ததோர்சிரம்

செய்தவெஞ்சினத்துடன்சிறக்குஞ்செல்வனை
வய்ததுதெழித்ததுமழையினார்ப்பது. (கருங)

அற்றுக்கடலில்விழுந்ததலையு மாரவாரித்தல்.

இடந்ததுகிரிக்குவடென்னவெங்கணும்
படர்ந்ததுகுரைகடல்பருகும்பண்பது
விடந்தருவிழியதுமுடுகிவேலையில்
கிடந்ததுமார்த்ததுமழையின்கேழது. (கருச)

விழுத்தினன்சிரமெனும்வெகுளிமீக்கொள
வழுத்தினவுயிர்களின்முதலின்வைத்தோ
ரெழுத்தின்வன்றோள்களினேழொடேழுகோல்
அழுத்தினனசனியேறயிர்க்குமார்பினான். (கருரு)

இராவணன்கரத்தினை இராமனறுத்தல்.

தலையறிற்றருவதோர்தவமுமுண்டென
நிலையுறுநேமியானறிந்துநீசனைக்
கலையுறுதிங்களின்வடிவுகாட்டிய
சிலையுறுகையையுந்தலத்திற்சேர்த்தினான். (கருசு)

கரமுமீண்டுமுளைத்தல்.

கொற்றவெஞ்சரம்படைக்குறைந்துபோனகை
பற்றியகிடந்ததுசிலையைப்பாங்குற
மற்றொருர்கைப்பிடித்ததுபோலவவ்விய
தற்றகைப்பிறந்தையாரதோர்குவார். (கருஎ)

பொன்கையிற்றூர்தியான்வலியைப்போக்குவான்
முன்கையிற்றுறுமயிர்முள்ளிற்றுள்ளூறு
மின்கையிற்கொண்டனவில்லைவிட்டிலா
வன்கையைத்தன்கையின்வலியின்வாங்கினான். (கருஅ)

இராவணன்அற்றகரத்தினை யெடுத்து மாதலிமீதெறிதல்.

விளங்கொளிவயிரவாளரக்கன்வீசிய
தளங்கிளர்தடக்கைதன்மார்பிற்றுக்கலும்
உளங்கிளர்பெருவலியுலைவின்மாதலி
துளங்கினன்வாய்வழியுதிரந்தூவுவான். (கருகூ)

மாதலிமீதிராவணன் தோமரமெறிதல்.

மாமரத்தார்கையால்வருந்துவானையோர்
தோமரத்தாலுயிர்தொலைப்பத்தூண்டினான்
தாமரத்தாற்பொராத்தகைகொள்வாட்படை
காமரத்தாற்சிவன்கரத்துவாங்கினான். (கசு0)

இ-ள். தாம்-தாவுகின்ற, அரத்தால்-அரத்தினுல், பொரா-அராவப்படாத, தகைகொள்-பெருமையாகிய கூர்படைத்த, வாட்படை - வாளாயுதத்தை, காமரத்தால் - தான்பாடியஇசைப்பாட்டால், சிவன்கரத்து-சிவனது கையினின்று, வாங்கினுன் - வாங்கியஇராவணன், மாமரத்து-வில்லினை, ஆர்-பொருந்திய, கையால்-கையினுல், வருந்துவாளை-வருந்துகின்றமாதலியை, ஓர்தோமரத்தால்-ஓர்பெருஞ்சவளப்படையால், உயிர்தொலைப்ப-உயிரைத்தொலைக்கும்படி, தூண்டினுன்-எறிந்தான்,—எ-று.

போர்கரு, மரத்தாலுகிய வேலையபடைகளிலும் சிறந்ததாகலின் வில்லினை மாமரமென்ருர். மரம்-ஆகுபெயர், அரத்துக்குத் தாவுதலாவது அராவாமிற்புழி அதுசென்று மீளுதலாகிய புடைபெயர்ச்சி. (கசுO)

வேறு.

இராமன்தோமரத்தினை இம்பாலழித்தல்.

மாண்டதின்றொடுமாதலிவாழ்வென
மூண்டவெம்படைசிந்தமுடுக்கினுன்
ஆண்டவில்லியோரைம்முகவெங்கணை
தூண்டினுன்றுகளானதுதோமரம். (கசுக)

இராவணன் சிரமுதலியவைகளை இராமனறுத்தல்.

ஒய்வகன்றதொருதலைநூறுறப்
போயகன்றுபுரளப்பொருகணை
ஆயிரந்தொடுத்தானறிவின்றனி
நாயகன்கைக்கடுமைநடத்துவான். (கசுஉ)

நீர்த்தரங்கங்கடோறுநிலந்தொறும்
சீர்த்தமால்வரைதோறுந்திசைதொறும்
பார்த்தபார்த்தவிடந்தொறும்பஃறலை
ஆர்த்துவீழ்ந்ததசனிகள்வீழ்ந்தென. (கசுந)

தகர்ந்துமால்வரைசாய்வுறத்தாக்கின
மிகுந்தவான்மிசைமீனமலைந்தன
புகுந்தமாமகரக்குலம்போக்கற
முகந்தவாயிற்புணரியைமுற்றுற. (கசுச)

பொழுதுநீட்டியபுண்ணியம்போனபின்
பழுதுசெல்லுமன்றேமற்றைப்பண்பெலாம்
தொழுதுசூழ்வனமுன்னின்றுதோன்றவே
கழுதுசூழ்ந்தவிராவணன்கண்ணெலாம். (கசுரு)

வாளும்வேலுமுலக்கையும்வச்சிரக்
கோளுந்தண்டுமெழுவெனுங்கூற்றமும்

தோளின்பத்திகடோறுஞ்சுமந்தன
மீளிமொய்ம்பனுருமெனவீசினான். (௧௬௬)

அனையசிந்திடவாண்டகைவீரனும்
வினையமென்னினியாதுகொல்வெல்லுமா
நினைவெனென்னநிசாசரன்மேனியைப்
புனைவன்வாளியினாலென்றுபொங்கினான். (௧௬௭)

மஞ்சரங்கியமார்பினுந்தோளினும்
நஞ்சரங்கியகண்ணினுநாவினும்
வஞ்சன்மேனியைவார்கணையட்டிய
பஞ்சரம்மெனலாம்வகைபண்ணினான். (௧௬௮)

வாய்நிறைந்தனகண்கண்மறைந்தன
மீய்நிறங்களினெங்குமிடைந்தன
தோய்வுறுங்கணைசெம்புனறோய்ந்தில
போய்நிறைந்தனவண்டப்புறமெலாம். (௧௬௯)

இராமனம்பாலிராவணன் அயர்ந்து நடுங்கல்.

மயிரின்காறுறும்வார்க்கணைமாரிபுக்
குயிருந்தீரவுருவினவோடலும்
செயிருஞ்சீற்றமுநிற்கத்திறநிரிந்
துயர்வுதோன்றத்துளங்கியழுங்கினான். (௧௭௦)

வாரிநீர்நின்றெதிர்மகரம்படச்
சோரிசோரவுணர்வுதுளங்கினான்
தேரின்மேலிருந்தான்பண்டுதேவர்தம்
ஊரின்மேலும்பவனியுலாவுவான். (௧௭௧)

இராவணன் சாரதிதேரினை விலக்கி நிறுத்தல்.

ஆர்த்துக்கொண்டெழுந்தும்பர்களாடினார்
வேர்த்துத்தீவினைவெம்பிவிழுந்தது
போர்த்துப்பொய்த்தனனென்றுபொலன்கொடேர்
பேர்த்துச்சாரதிபோயினன்பின்றுவான். (௧௭௨)

கய்துறந்தபடையினன்கண்ணகன்
மெய்துறந்தவுணர்வினன்வீழ்தலும்
எய்திறந்தவிர்ந்தானிமையோர்களை
உய்திறந்துணிந்தானறமுன்னுவான். (௧௭௩)

மாதலி இராவணனைக் கொல்லச்சொல்லுதலும் இராமன்தடுத்தலும்.

தேறினாற்பின்னையாருஞ்செயற்கரி
தாறுதானுற்றபோழ்தேயுயர்தவன்

நூறுவாயெனமாதலி நூக்கினான்
ஏறுசேவகனும்மிதியம்பினான். (கஎச)

படைதுறந்துமயங்கியபண்பினான்
இடைதெறும்படிபார்த்திகனீதியின்
நடைதுறந்துயிர்கோடலுநன்மையோ
கடைதுறந்ததுபோரென்கருத்தென்றான். (கஎரு)

இராவணன் களைநீங்கிஎழுந்து சாரதியைக்கடிதல்.

கூவிரஞ்செறிபொற்கொடித்தேரொடும்
போவரஞ்சினரன்னதொர்போழ்தினின்
ஏவரஞ்சலியாதவரெண்ணுடைத்
தேவரஞ்சவிராவணன்றேறினான். (கஎசு)

உறக்கநீங்கியுணர்ச்சியுற்றானென
மறக்கண்வஞ்சனிராமனைவான்றிசைச்
சிறக்குந்தேரொடுங்காண்டிலன்சீற்றத்தீப்
பிறக்கநோக்கினன் பின்னுறநோக்கினான். (கஎஎ)

தேர்திரித்தனைதேவருங்காணவே
வீரவிற்கையிராமற்குவெண்ணகை
பேரவுய்த்தனையேபிழைத்தாயெனாச்
சாரதிப்பெயரோனைச்சலிப்புறா. (கஎஅ)

**இராவணன் சாரதியை வாளால் வெட்டமுயறலும்
அவன் நடந்தது கூறலும்.**

தஞ்சனானுனைத்தேற்றத்தரிக்கிலா
வஞ்சநீபெருஞ்செல்வத்துவைகினை
அஞ்சினானெனச்செய்தனையாதலான்
உஞ்சுபோதிகொலாமென்றுருத்தெழா. (கஎகூ)

வாள்கடைக்கணித்தோச்சலும்வந்தவன்
தாள்கடைக்கணியாத்தலைதாழ்வுற
மூள்கடைக்கடுந்தீயின்முனிவொழி
கோள்கடைக்கணித்தென்றவன்கூறுவான். (கஅ0)

ஆண்டொழிற்றுணிவோய்ந்தனையாண்டிறை
ஈண்டநிற்றிடினையனேநின்னுயிர்
மாண்டதிக்கணமென்றிடர்மாற்றுவான்
மீண்டதித்தொழிலெம்வினைமெய்ம்மையால். (கஅக)

ஓய்வுமூற்றமுநோக்கியுயிர்ப்பொறைச்
சாய்வுநீக்குதல்சாரதிதன்மைத்தால்

மாய்வுநிச்சயம்வந்துழிவாளினால்
காய்வுதக்கதன்றாற்கடைகாண்டியால். (௧௮௨)

பின்னுமிராவணன் இராமனை யெதிர்த்தல்.

என்றிறைஞ்சலுமெண்ணியிரங்கினான்
வென்றியந்தடந்தேரினைமீட்டெனச்
சென்றெதிர்ந்ததுதேருமத்தேர்த்திசை
நின்றவஞ்சனிராமனைநேர்வுறா. (௧௮௩)

கூற்றின்வெங்கணைகோடியின்கோடிகள்
தூற்றினான்வலிமும்முறைதோற்றினான்
வேற்றோர்வாளரக்கன்னனவெம்மையால்
ஆற்றினான்செருக்கண்டவரஞ்சினார். (௧௮௪)

இராவணன் வில் துணிபடல்.

எல்லுண்டாகினெருப்புண்டெனுமிதச்
சொல்லுண்டாயதுபோலவன்றோளிடை
வில்லுண்டாகின்வெலற்கரிதாமெனாச்
செல்லுண்டாலன்னதோர்கணைசிந்தினான். (௧௮௫)

நாரணன்படையாகிநயப்புறாப்
பாரணங்கினைத்தாங்குறுபல்வகை
வாரணங்களைவென்றவன்வார்சிலை
ஆரணங்கையிருதுணியாக்கினான். (௧௮௬)

அயன்படைத்தவில்லாயிரம்பேரினான்
வியன்படைக்கலத்தாலற்றுவீழ்தலும்
உயர்ந்துயர்ந்துகுதித்தனரும்பரார்
பயன்படைத்தனம்பஃறவத்தாலென்றார். (௧௮௭)

இராவணன் வேறுவில்லெடுத்தலும் அவைகளை இராமனழித்தலும்.

மாறிமாறிவரிசிலைவாங்கினான்
நூறிநூறினொடையிருநூறவை
வேறுவேறுதிசையுறவெங்கணை
நூறிநூறியிராமனுறுக்கினான். (௧௮௮)

இருப்புலக்கைவேறண்டுகோலீட்டிவாள்
நெருப்புலக்கவருநெடுங்கப்பணம்
திருப்புலக்கவுந்தான்றிசையானையின்
மருப்புலக்கவழங்கியமார்பினான். (௧௮௯)

அவையனைத்துமறுத்தகன்வேலையிற்
குவையனைத்துமெனக்குறித்தான்குறித்

திவையனைத்துமிவனைவெல்லாவெனா
நவையனைத்துந்துறந்தவனோடினான். (௧௧0)

கண்ணினுண்மணியூடுகெழிந்தன
எண்ணினுண்மணலிற்பலவெங்கணை
புண்ணினுண்ணுழைந்தோடியபுந்தியோர்
எண்ணினுண்ணியவென்செயற்பாற்றெனா. (௧௧௧)

இராமன் பிரமாத்திரம் விடுதல்.

நாரணன்றிருவுந்தியினான்முகன்
பாரவெம்படைவாங்கியிப்பாதகன்
மாரினெய்வென்றெண்ணிவலித்தனன்
ஆரியன்னவனாவியகற்றுவான். (௧௧௨)

முந்திவந்துலகீன்றமுதற்பெயர்
அந்தணன்படைவாங்கியருச்சியாச
சுந்தரன்சிலைநாணிற்றொடுப்புறு
மந்தரம்புரைதோளுறவாங்கினான். (௧௧௩)

புரஞ்சுடப்பண்டமைத்ததுபொற்பணை
மரந்தொளைத்ததுவாலியைமாய்த்துள
தரஞ்சுடச்சுடர்நெஞ்சினரக்கர்கோன்
உரஞ்சுடச்சுடரோன்மகனுந்தினான். (௧௧௪)

காலும்வெங்கனலுங்கடைகாண்கிலா
மாலுங்கொண்டவடிக்கணைமாமுக
நாலுங்கொண்டுநடந்ததுநான்முகன்
மூலமந்திரந்தன்னொடுமூட்டலால். (௧௧௫)

ஆழிமால்வரைக்கப்புறத்தப்புறம்
பாழிமாகடலும்வெளிபாய்ந்ததால்
ஊழிஞாயிறுமின்மினியொப்புற
வாழிவெஞ்சுடர்பேரிருள்வாரவே. (௧௧௬)

அக்கணத்தினயன்படையாண்டகைச்
சக்கரப்படையோடுந்தழீஇச்சென்று
புக்கதக்கொடியோனுரம்பூமியும்
திக்கனைத்தும்விசும்புந்திரிந்தவே. (௧௧௭)

வேறு.

இராவணனுயிரிழத்தல்.

முக்கோடிவாழ்நாளுமுயன்றுடையபெருந்தவமுமுதல்வன்முன்னாள்
எக்கோடியாராலும்வெலப்படாயெனக்கொடுத்தவரமுமேனைத்

திக்கோடுமுலகனைத்துஞ்செருக்கடந்தபுயவலியுந்தின்றுமார்பிற்
புக்கோடியுயிர்பருகிப்புறம்போயிற்றிராகவன்றன்புனிதவாளி. (ககூஅ)

இராவணனைக்கொன்றவம்புமீட்டு மிராமன்றூணியுறல்.

ஆர்க்கின்றவானவருமந்தணருமுனிவர்களுமாசிகூறித்
தூர்க்கின்றவலர்மாரிதொடரப்போய்ப்பாற்கடலிற்றூய்நீராடித் [சென்று
தேர்க்குன்றவிராவணன்றன்செழுங்குருதிப் பெரும்பரவைத்திரைமேற்
கார்க்குன்றமனையான்றன்கடுங்கணைப்புட்டிலினடைகரந்ததம்மா. (ககூக)

கார்நின்றமழைநின்றுமுருமுதிர்வதெனத்திணிதோட்காட்டினின்றும்
தார்நின்றமலைநின்றும்பலர்க்குலமுமணிக்குலமுஞ்சார்ந்து சிந்தப்
போர்நின்றவிழிநின்றும்பொறிநின்றுபுகையோடுங்குருதிபொங்கத்
தேர்நின்றுநெடுநிலத்துச்சிரமுங்கீழ்ப்படவிழுந்தான்சிரம்போல்வான்.

இராவணன் முகப்பொலிவு.

வெம்மடங்கல்வெகுண்டனையசினமடங்கமனமடங்கவினையம்வீயத்
தெம்மடங்கப்பொருதடக்கைச்செயலடங்கமயலடங்கவாற்றறேயத்
தம்மடங்குமுனிவரையுந்தலையடங்கநிலையடங்கச்சாய்த்தநாளின்
மும்மடங்குபொலிந்தனவம்முறைதுறந்தானுயிர்துறந்தமுகங்களம்மா. ()

இராமனிரதத்தினைக்கீழிறக்கிவைத்து இராவணனைப்பார்த்தல்.

பூதலத்ததாக்குவாயாகவினிப்பொலந்தேரையென்றபோதின்
மாதலிப்பேரவன்கடவமண்டலத்தினப்பொழுதேவருதலோடும்
மீதலத்தபெருந்தாரைவிசும்பளப்பக்கிடந்தான்றன்மேனிமுற்றும்
காதலித்தவுருவாகியறம்வளர்க்குங்கண்ணுளன்றெரியக்கண்டான். ()

மாதலியைத் தேரினை யிந்திரனிடங் கொடுபோவெனல்.

தேரினைநீகொடுவிசும்பிற்செல்கென்ன மாதலியைச்செலுத்திப்பின்னர்ப், பாரிடமீதினிலனுகித்தம்பியொடும் படைத்தலைவர் பலருஞ்சுற்றப், போரிடைமீண்டொருவருக்கும்புறங்கொடாப்போர்வீரன்பொருது வீழ்ந்த, சீரினையேமனமுவப்பவுருமுற்றுந்திருவாளன்றெரியக்கண்டான்.

* புலைமேலுஞ்செலற்கொத்துப்பொதுநின்றசெல்வத்தின்புன்மைத்தன்
† நிலைமேலுமினியுண்டோநீர்மேலைக்கோலமெனுநிலைமைத்தன்றே [மை
தலைமேலுந்தோண்மேலுந்தடமுதுகிற்படர்புயத்துந்தாவியேறி
மலைமேனின்றுடினபோலாடினவால்வானரங்கள்வரம்பிலாத. (உ0ச)

தோடுழுத நறுந்தொடையற் றொகையுழுத கிளைவண்டின் சுழியத் தொங்கல், பாடுழுத படர்வெரிநின் பணியுழுத வணிநிகர்ப்ப பணைக்கை

---

* அலைமேவுங்கடல்புடைசூழவனியெலாங்காத்தளிக்குமடற்கைவீரன்.
† சிலைமேவுங்கடுங்கணையாற்படுகளத்தேமனத்தீமைசிதைந்துவீழ்ந்தோன்-எ-ம்-பாடம்.

யானைக், கோடுழுத நெடுந்தழும்பின் குவைதழுவியெழுமேகக் குழுவின்
கோவைக், காடுழுத கொழும்பிறையிற் கறைகழன்று கிடந்தனபோற்
கிடக்கக்கண்டான். (௨௦௫)

வேறு.

இராமன் முறுவலித்துரைத்தல்.

தளிரியல்பொருட்டின்வந்தசீற்றமுந்தருக்கினோன்றன்
கிளரியலுருவினோடுங்குழிப்புறக்கிளர்ந்துதோன்றும்
வளரியல்வடுவிற்செம்மைத்தன்மையுமருவநின்ற
முளரியங்கண்ணன்மூரன்முறுவலன்மொழிவதானான். (௨௦௬)

வென்றியாலுலகமூன்றுமெய்ம்மையான்மேவினாலும்
பொன்றியார்கின்றதோளைப்பொதுவறநோக்கும்பொற்பும்
குன்றியாசுற்றதன்றேயிவனெதிர்குறித்தபோரில்
பின்றியான்முதுகிற்பட்டபிழம்புளதழும்பினம்மா. (௨௦௭)

கார்த்தவீரியனென்பானாற்கட்டுண்டானென்னக்கற்கும்
வார்த்தையுண்டதனைக்கேட்டுநாணுறுமனத்தினேற்குப்
போர்த்தலைப்பிறகிட்டேற்றபுண்ணுடைத்தழும்புபோலாம்
நேர்த்ததுங்காணலுற்றவீசனாரிருக்கைநிற்க. (௨௦௮)

மாண்டொழிந்துலகினிற்கும்வயங்கிசைமுயங்கமாட்டா
தூண்டொழிலுகந்துதெவ்வர்முறுவலென்புகழையுண்ண
பூண்டொழிலுடையமார்பாபோர்புறங்கொடுத்தோர்போன்ற
ஆண்டொழிலோரிற்பெற்றவெற்றியுமவத்தமென்றான். (௨௦௯)

இராமற்கு விபீடணன் சமாதானமுரைத்தல்.

அவ்வுரைக்கிறுதிநோக்கிவீடணனருவிக்கண்ணன்
வெவ்வுயிர்ப்போடுநீண்டவிம்மலன்வெதும்புநெஞ்சன்
செவ்வியிற்றெருடார்ந்தவல்லசெப்பலைசெல்வவென்னா
எவ்வுயிர்ப்பொறையுநல்கியிரங்கிநின்றினையசொன்னான். (௨௧௦)

ஆயிரந்தோளினானும்வாலியுமரிதினைய
மேயினவென்றிவிண்ணோர்சாபத்தின்விளைந்தமெய்ம்மை
தாயினுந்தொழத்தக்காண்மேற்றங்கியகாதற்றன்மை
நோயுநின்முனிவுமல்லால்வெல்வரோநுவலற்பாலார். (௨௧௧)

நாடுளதனையுமோடிநண்ணலார்காண்கிலாமல்
பீடுளகுன்றம்போலும்பெருந்திசையெல்லையானைக்
கோடுளதனையும்புக்குக்கொடும்புறத்தழுந்துபுண்ணின்
பாடுளதன்றித்தெய்வர்படைக்கலம்பட்டென்செய்யும். (௨௧௨)

அப்பணையனைத்துமார்புக்கணியெனக்கிடந்தவீரக்
கைப்பணைமுழங்கமேனாளமரிடைக்கிடைத்தகாலன்

துப்பணைவயிரவாளிவிசையினுங்காலின்றோன்றல்
வெப்பணைகுத்தினாலும்வெரிநிடைப்போயவன்றே. (உகங)

அவ்வடுவென்றியிந்தவண்டத்தும்புறத்துமான்ற
தெவ்வடுபடைகளஞ்சாதிவன்வயிற்செல்லிற்றேவ
வெவ்விடமீசன்றன்னைவிழுங்கினும்பறவைவேந்தை
அவ்விடநாகமெல்லாமணுகினுமணுகலாற்றா. (உகச)

வென்றியாய்பிறிதுமுண்டேவேலைசூழ்ஞாலமாண்டோர்
பன்றியாயெயிற்றுக்கொண்டபராபரன்முதலபல்லோர்
என்றியாமிடுக்கணுர்வதென்கின்றாரிவனினூன்றால்
பொன்றியானென்றபோதும்புலப்படார்பொய்கொலென்பார். (உகரு)

அன்னதோவென்னாவீசனையமுநாணுநீங்கித்
தன்னதோளிணையைநோக்கிவீடணாதக்கதன்றால்
என்னதோவிறந்துளார்மேல்வயிர்த்தனீயிவனுக்கீண்டு
சொன்னதோர்விதியினாலேகடன்செயத்துணிதியென்றான். (உகசு)

அவ்வகையருளிவள்ளலனைத்துலகங்களோடும்
எவ்வகையுள்ளதேவர்யாவருமிரைத்துப்பொங்கிக்
கவ்வையிற்றீர்ந்தார்வந்துவீழ்கின்றார்தம்மைக்காணச்
செவ்வையினவர்முன்சென்றான்வீடணனிதனைச்செய்தான். (உகஎ)

இராமன் கட்டளையால் விபீடணன் இராவணன் மெய்யில் விழுந்து புலம்பல்.

போழ்ந்தெழவரக்கன்செய்தபுன்றொழில்பொறையிற்றாமால்
வாழ்ந்தநீயிவனுக்கேற்றவரன்முறைவகுத்தியென்னத்
தாழ்ந்ததோர்கருணைத்தன்றாற்றலைமகனருளத்தள்ளி
வீழ்ந்தனனவன்மேல்வீழ்ந்தமலையின்மேன்மலைவீழ்ந்தென்ன. (உகஅ)

ஓவருமுலகத்தெல்லாவுயிர்களுமெரியினெஞ்சின்
தேவருமுனிவர்தாமுஞ்சிந்தையினிரக்கஞ்சேரத்
தாவரும்பொறையினான்றனறிவினாற்றகைக்கநின்ற
யாவருந்துயரந்தீரவரற்றினான்பகுவாயார. (உககூ)

வேறு.

உண்ணாதேயுயிருண்ணாதொருநஞ்சுசனகியெனும்பெருநஞ்சுன்னைக்
கண்ணாலேநோக்கவேபோக்கியதேயுயிர்நீயுங்களப்பட்டாயே [லாற்றல்
எண்ணாதே னெண்ணியசொ லின்றினித்தா னெண்ணுதியோவெண்ணி
அண்ணாவோவண்ணாவோவசுரர்கடம்பிரளயமேயமரர்கூற்றே. (உஉ0)

ஓராசையொருவன்மேலுயிராசைக்குலமகண்மேலுடையகாதல்
தீராசைபழியென்றேனெனைமுனிந்தமுனிவாறித்தேறினாயோ

போராசைப்பட்டெழுந்தகுலமுற்றும்பொன்றவுந்தான்பொங்கின்ற
பேராசைபேர்ந்ததோபேர்ந்தாசைக்கரியிரியப்புருவம்பேர்த்தோய் (உஉக)

அன்றெறியின்விழுவேதவதியிவள்காணுலகுக்கோரன்னையென்று
குன்றனையநெடுந்தோளாய்கூறினேனதுமனத்துட்கொள்ளாதேயே
உன்றனதுகுலமடங்கவுருத்தமரிற்படக்கண்டுமுறவாகாதே
பொன்றினையேயிராகவன்றன்புயவலியின்றறிந்துதான்போகின்றாயே. ()

மன்றன்மாமலரானும்வடிமழுவாட்படையானும்வரங்களீந்த
ஒன்றலாதனவுடையமுடியோடும்பொடியாகியுதிர்ந்துபோன
அன்றுதானுணர்ந்திலையேயானுலுமவனுட்டையணுகின்ற
இன்றுதான்றெறிந்ததேயிராமனார்யாவருக்குமிறைவராதல். (உஉ௩)

வீரநாடெற்றாயோவிரிஞ்சனும்யாவருக்குமேலாமுன்பன்
பேரநாடெற்றாயோபிறைசூடிஞ்ஞுகன்றன்புரம்பெற்றாயோ
ஆரணுவுன்னுயிரையஞ்சாதேகொண்டகன்றாரதெலாநிற்க
மாரனார்வலியாட்டந்தவிர்ந்தாரேகுளிர்ந்தானேமதியமென்பான். (உஉ௪)

கொல்லாதமைத்துனனைக்கொன்றாயென்றதுகுறித்துக்கொடுமைசூழ்ந்து
பல்லாலேயிதழதுக்குங்கொடும்பாவிநெடும்பாரப்பழிதீர்ந்தானே
நல்லாருந்தீயாருநரகத்தார்துறக்கத்தார்நம்பிநம்மோ
டெல்லாரும்பகைஞரேயார்முகத்தேவிழிக்கின்றாயெளியையானாய். ()

போர்மகளைக்கலைமகளைப்புகழ்மகளைத்தழுவியகைபொறாமைகூரச்
சீர்மகளைத்திருமகளைத்தேவர்க்கும் * தெரிவரியதெய்வக்கற்பின்
பேர்மகளைத்தழுவுவானுயிர்கொடுத்துப்பழிகொண்டபித்தாபின்னைப்
பார்மகளைத்தழுவினையேதிசையானைப்பணையிறுத்தபணைத்தமார்பால். ()

என்றேங்கியரற்றுவான்றனையெடுத்துச்சாம்பவனுமெண்கின்வேந்தன்
குன்றோங்குநெடுந்தோளாய்விதிநிலையைமறியாதகொள்கைத்தாகிச்
சென்றோங்குமுணர்வினையோதேறாதேயழுந்துதியோவென்னத்தேறி
நின்றானப்புறத்தரக்கனிலைகேட்டாண்மயன்பயந்தநெடுங்கட்பாவை. ()

வேறு.

இராவணன்மனைவியான மண்டோதரியும் பிறமாதரும் புலம்புதல்.

அனந்தநூறாயிரமரக்கர்மங்கைமார்
புனைந்தபூங்குழல்விரித்தரற்றும்பூசலார்
இனந்தொடர்ந்துடன்வரவெய்திஞளென்ப
நினைந்ததுமறந்ததுமிலாதநெஞ்சினள். (உஉஅ)

இரக்கமுந்தருமமுந்துணைக்கொண்டின்னுயிர்
புரக்குநன்குலத்துவந்தொருவன்பூண்டதோர்

* தம்மோயைத்தெய்வக்கற்பின் எனவும்பாடம்.

பரக்கழியாமெனப்பரந்துநீண்டதால்
அரக்கியர்வாய்திறந்தரற்றுமோதையே. (௨௨௯)

நூபுரம்புலம்பிடச்சிலம்புநொந்தழக்
கோபுரந்தொறும்புறங்குறுகினார்சிலர்
ஆபுரந்தரன்பகையற்றதாமெனா
மாபுரந்தவிரவிண்வழிச்சென்றார்சிலர். (௨௩௦)

அழைப்பொலிமுழக்கெனவலங்கமின்னிடை
குழைப்பொலிநல்லணிக்குலங்கள்வில்லிட
உழைப்பொலியுண்கணீர்த்தாரைமீதுக
மழைப்பெருங்குலமெனவீழ்ந்துமாழ்கினார். (௨௩௧)

தலைமிசைத்தாங்கியகரத்தர்தாரைநீர்
முலைமிசைத்தூங்கியமுகத்தர்மொய்த்துவந்
தலைமிசைக்கடலின்வீழன்னம்போலவன்
மலைமிசைத்தோள்கண்மேல்வீழ்ந்துமாழ்கினார். (௨௩௨)

தழுவினர்தழுவினர்தலையுந்தாள்களும்
எழுவியபுயங்களுமார்புமெங்கணும்
குழுவினர்முறைமுறைக்கூறுகூறுகொண்
டழுதனரயர்த்தனரரக்கிமார்களே. (௨௩௩)

வருத்தமேதெனினதுபுலவிவைவலும்
பொருத்தமேவாழ்வெனப்பொழுதுபோக்குவார்
ஒருத்தர்மேலொருத்தர்வீழ்ந்துயிரிறப்புல்லினார்
திருத்தமேயெனவவன்சிகரத்தோள்கண்மேல். (௨௩௪)

இயக்கியரரக்கியருரகரேழையர்
மயக்கலில்சித்தியர்விஞ்சைமங்கையர்
முயக்கினர்முறைகெடமுயங்கினார்கடந்
துயக்கிலாவன்புமூண்டெவருஞ்சோரவே. (௨௩௫)

அறந்தொலைவுறமனத்தடைத்தசீதையை
மறந்திலையோவினுமெமக்குன்வாய்மலர்
திறந்திலைவிழித்திலையருளுஞ்செய்கிலை
இறந்தனையோவெனவிரங்கியேங்கினார். (௨௩௬)

தரங்கநீர்வேலையிற்றடித்துவீழ்ந்தென
உரங்கிளர்மதுகையானுருவினுற்றனள்
மரங்களுமலைகளுமுருகவாய்திறந்
திரங்கினண்மயன்மகளினையபன்னினாள். (௨௩௭)

வேறு.

அன்னேயோவன்னேயோவாகொடியேற்கடுத்தநாளரக்கர்வேந்தன்
பின்னேயோவிறப்பதுமுன்பிடித்திருந்தகருத்ததுவும்பிடித்திலேனே
முன்னேயோவிழுந்ததுவுமுடித்தலையோபடித்தலையமுகங்காட்டாயோ
என்னேயோவென்னேயோவிராவணனார்முடிந்தபரிசிதுவோபாவம். ()

வெள்ளெருக்கஞ்சடைமுடியான்வெற்பெடுத்ததிருமேனிமேலுங்கீழும்
எள்ளிருக்குமிடனின்றியுயிரிருக்குமிடனாடியிழைத்தவாறோ
கள்ளிருக்குமலர்க்கூந்தற்சானகியைமனச்சிறையிற்கரந்தகாதல்
உள்ளிருக்குமெனக்கருதியுடல்புகுந்துதடவியதோவொருவன்வாளி. ()

ஆரம்போர்திருமார்பையகன்முழைகளெனத்திறந்திவ்வுலகுக்கப்பால்
தூரம்போயினவொருவன்சிலைதுரந்தசரங்களேபோரிற்றோற்றும்
வீரம்போயுரங்குறைந்துவரங்குறைந்துவீழ்ந்தானேவேறேகெட்டேன்
ஓரம்போயியிர்பருகிற்றிராவணனைமானுடனாருற்றமீதோ. (௨௪௰)

காந்தையருக்கணியனையசானகியார்பேரழகுமவர்தங்கற்பும்
ஏந்துபுயத்திராவணனார்காதலுமச்சூர்ப்பணகையிழந்தமூக்கும்
வேந்தர்பிரான்றயரதனார்பணியினால்வெங்கானில்விரதம்பூண்டு
போந்ததுவுங்கடைமுறையேபுரந்தரனார்பெருந்தவமாய்ப்போயிற்றம்மா.

தேவர்க்குந்திசைக்கரிக்குஞ்சிவனார்க்குமயனார்க்குஞ்செங்கண்மாற்கும்
ஏவர்க்கும்வலியானுக்கென்றுண்டாமிறுதியெனவேமாப்புற்றேன்
ஆவற்கணீயுழன்றவருந்தவத்தின்பெருங்கடற்கும்வரமென்றான்ற
காவற்கும்வலியானோர்மானுடனாருளரென்னக்கருதினேனோ. (௨௪௨)

அரைகடையிட்டமைவுற்றமுக்கோடியாயுவுமுன்னறிஞர்க்கேயும்
உரைகடையிட்டளப்பரியபேராற்றற்றோளாற்றற்குலப்போவில்லைத்
திரைகடையிட்டளப்பரியவரமென்னும்பாற்கடலைச்சீதையென்னும் [ன்.
பிரைகடையிட்டழிப்பதனையறிந்தேனோதவப்பயனின்பெருமைபார்ப்பே

ஆரானுலகியற்கையறிதற்காரவையேழுமேழுமஞ்சும்
வீரனாருடறுறந்துவிண்புக்கார்கண்யுக்கவேழவில்லால்
நாரநாண்மலர்க்கணையானெல்லாந்தோளெல்லானையவெய்யும்
நாரனார்தனியிலக்கைமனித்தனாரழித்தனரேவரத்தினாலே. (௨௪௪)

வேறு.

ஆராவமுதாயலைகடலிற்கண்வளரும்
நாராயணனென்றிருப்பேனிராமனைநான்
ஓராதேகொண்டகன்றாயுத்தமனார்தேவிதனைப்
பாராயோநின்னுடையமார்பகலம்பட்டவெலாம். (௨௪௫)

வேறு.

மண்டோதரிஇராவணனைத்தழுவியுயிர்விடுதல்.

என்றழைத்தனளேங்கியெழுந்தவன்
பொன்றழைத்தபொருவருமார்பினைத்
தன்றழைக்கைகளாற்றழுவித்தனி
நின்றழைத்துயிர்த்தாளுயிர்நீங்கினாள். (உசசு)

மண்டோதரியை அனைவரும் புகழ்தல்.

வானமங்கையரும்மற்றுமற்றுமெத்
தானமங்கையருந்தவப்பாலவர்
ஆனமங்கையரும்மருங்கற்புடை
மானமங்கையர்தாமும்வழுத்தினார். (உசஎ)

இராவணனுக்கு விபீடணன் ஈமக்கடன்முடித்தல்.

பின்னைவீடணன்பேரெழிற்றம்முனை
வன்னிகூவிவரன்முறையான்மறை
சொன்னவீமம்விதிமுறையாற்றொகுத்
தின்னனெஞ்சினொடுஞ்சலித்தேற்றினான். (உசஅ)

இந்தனத்தகில்சந்தனமிட்டுமேல்
அந்தமானத்தழுகுறத்தானமைத்
தெந்தவோசையுங்கீழுறவார்த்திடை
முந்துசங்கொலியெங்குமுழங்குற. (உசகூ)

கொற்றவெண்குடையோடுகொடியிடைந்
துற்றவீமவிதியினுடம்படீஇச்
சுற்றுமாதர்தொடர்ந்துடன்சூழ்வர
மற்றவீரன்விதியின்வழங்கினான். (உருO)

கடன்கள்செய்துமுடித்துக்கணவனோ
டுடைந்துபோனமயன்மகளோடுடன்
அடங்கவெங்கனலுக்கவியாக்கினான்
குடங்கொணீரினுங்கண்சோர்குமிழியான். (உருக)

விபீடணனிறந்த வசுரரனைவர்க்கும் பிதிர்க்கடனியற்றல்.

மற்றையோர்க்கும்வரன்முறையால்வகுத்
துற்றதீக்கொடுத்துண்குறுநீருகுத்
தெற்றையோர்க்குமிவனலதில்லென
வெற்றிவீரன்குரைகழன்மேவினான். (உருஉ)

விபீடணனுக் கிராமனுரைதல் கூறுதல்.

வந்துதாழ்ந்ததுணைவனைவள்ளலும்
சிந்தைவெந்துயர் தீருதிதெள்ளியோய்
முந்தையெய்துமுறைமையிதாமென
அந்தமில்லிடர்ப்பாசமகற்றினான். (௨௫௩)

௩௫ - வது, இராவணன்வதைப்படலம் - முற்றிற்று

ஆக திருவிருத்தம்-௩௧௧௭.

---

௩௬ - வது, மீட்சிப்படலம்.

வருந்தனீதிமனுநெறியாவையும்
பொருந்துகேள்விப்புலமையினோயென
அருந்தவப்பயனாலடைந்தார்க்கறைந்
திருந்தவத்திளையோர்க்கியம்பினான். (௧)

இராமனிலக்குமணனை நீ விபீடணற்கு முடிசூட்டி வருதியெனல்.

சோதியான்மகன்வாயுவின்றோன்றன்மற்
றேதில்வானரவீரரொடேகிநீ
ஆதிநாயகனுக்கியநூன்முறை
நீதியானைநெடுமுடிசூட்டுவாய். (௨)

என்றுகூறியிளவலோடாரையும்
வென்றிவீரன்விடையருள்வேலையின்
நின்றதேவர்நெடுந்திசையோரொடும்
சென்றுதத்தமசெய்கைபுரிந்தனர். (௩)

விபீடணற்கு மகுடாபிஷேகம் புரிதல்.

சூழ்கடற்புனலும்பலதோயமும்
நீழ்முடித்தொகையும்பிறநீர்மையும்
பாழிதுற்றரிபற்றியபீடமும்
தாழ்வில்கொற்றத்தமரர்கடந்தனர். (௪)

வாசநாண்மலரோன்சொலமான்முகன்
காசுமாநிதியுங்கொடுகங்கைசூ
டீசனேமுதலோர்வியந்தேத்திடத்
தேசுலாமணிமண்டபஞ்செய்தனன். (௫)

விபீடணற் கிலக்குமணன் முடிதரித்தல்.

மெய்கொள்வேதவிதிமுறைவிண்ணுளோர்
தெய்வநீள்புனலாடறிருத்திட
அய்யனாணையினாலிளங்கோளரி
கய்யினான்மகுடங்கவித்தானரோ. (௬)

விபீடணன் சிங்காதனத்துப் பொலிதல்.

கரியகுன்றுகதிரினைச்சூடியோ
ரெரிமணித்தவிசிற்பொலிந்தென்னவே
விரியும்வெற்றியிலங்கையர்வேந்தனீ
டரியணைப்பொலிந்தான்றமரார்த்தெழ. (௭)

திருமூர்த்தியாதியர் விபீடணனை வாழ்த்துதல்.

தேவர்பூமழைசித்தர்முதலினோர்
மேவுகாதல்விரைமலர்வேறிலர்
மூவரோடுமுனிவர்மற்றியாவரும்
நாவிலாசிநறைமலர்தூவினார். (௮)

முடிபுனைந்தநிருதர்முதலவன்
அடிவணங்கியிளவலையாண்டையங்
நெடியகாதலினோற்குயர்நீர்மைசெய்
திடிகொள்சொல்லனவற்கியம்பினான். (௯)

விலங்கனாணமிடைதருதோளினாய்
இலங்கைமாநகர்யான்வருமெல்லைநீ
கலங்கலாநெடுங்காவலியற்றெனா
அலங்கல்வீரனடியிணையெய்தினான். (௧௦)

குரக்குவீரனரசிளங்கோளரி
அரக்கர்கோமகனோடடிதாழ்தலும்
பொருக்கெனப்புகல்புக்கவற்புல்லியத்
திருக்கொண்மார்பணினையனசெப்பினான். (௧௧)

இராமன் விபீடணற்குரைத்தல்.

உருமைமூவுலகுந்தொழவும்பர்தம்
பெருமைநீதியறன்வழிபேர்கிலா
திருமையேயரசாளுதியீறிலாத்
தருமசீலவென்றான்மறைதந்துளான். (௧௨)

பன்னுநீதிகள்பற்பலகூறிமற்
றுன்னுடைத்தவரோடுயர்கீர்த்தியோய்

மன்னிவாழ்கென்றுரைத்தடன்மாருதி
தன்னைநோக்கினன்றுயர்சொனோக்கினான். (௧௩)

இராமனனுமனைச் சீதைபாலனுப்புதல்.

இப்புறத்தினவெய்துறுகாலையில்
அப்புறத்ததையுன்னியநுமனைத்
துப்புறச்செய்யவாய்மணித்தோகைபால்
செப்புறிப்படிபோயெனச்செப்பினான். (௧௪)

அநுமன்சீதைபாலெய்திச் சோபனமுரைத்தல்.

வணங்கியந்தமின்மாருதிவாரணம்
அணங்குதன்கடிகாவுசென்றண்மினான்
உணங்குகொம்புக்குயிர்வருநீரெனச
சுணங்குதோய்முலையாட்சிவைசொல்லினான். (௧௫)

பாடினான்றிருநாமங்கள்பன்முறை
கூடுசொரியிற்குப்புற்றுக்கூத்துநின்
றாடியங்கையிரண்டுமேலங்குறச்
சூடிநின்றனன்குன்றன்னதோளினான். (௧௬)

ஏழைசோபனமேந்திழைசோபனம்
வாழிசோபனமங்கலசோபனம்
ஆழியானவரக்கனையாரியச்
சூழியானை துகைத்ததுசோபனம். (௧௭)

தலைகிடந்தன தாரணிதாங்கிய
மலைகிடந்தனபோன்மணித்தோளெனும்
அலைகிடந்தன வாழிகிடந்தன
நிலைகிடந்தவுடனிலத்தேயென்றான். (௧௮)

அண்ணலாணையின்வீடணனுமறக்
கண்ணலாதவன்காதறொடர்தலால்
பெண்ணலாதுபிழைத்துளதாகுமென்
றெண்ணலாவதொர்பேரிலதாலென்றான். (௧௯)

ஒருகலைத்தனிவெண்மதிநாளொடும்
வருகலைக்குவருமறுமானுறப்
பொருகலைக்குலம்பூத்தனபோன்றன
பருகலுற்றவமுதுபயந்தநாள். (௨௦)

இராவணனிறந்தானெனக்கேட்ட சனகிமகிழ்ச்சியுறல்.

ஆம்பல்வாயுமுகமுமலர்ந்திடத்
தேம்புநுண்ணிடைநோவத்திரண்முலை

எம்பலாஞ்சக்கிரட்டிவந்தெய்தினான்
பாம்புகானற்பனிமதிப்பான்மையாள். (௨௧)

புந்தியோபேருவகைப்பொருமலோ
உந்தியோங்குமொளிவளைத்தோள்களோ
சிந்தியோடுகலையுடைத்தேர்கொலோ
முந்தியோங்கினையாவைமுலைகொலோ. (௨௨)

குனித்தகோலப்புருவங்கள்கொம்மைவேர்
பனித்தகொங்கைமழலைப்பனிமொழி
நுனிப்பதொன்றுநுவல்வதொன்றாயினாள்
கனித்தவின்களிகள்ளினிற்காட்டுமோ. (௨௩)

சனகி சந்தோடமிகுதியா லொன்றுந்தோன்றாதிருத்தல்.

அனையளாகியநுமனைநோக்கினாள்
இனையதின்னதியம்புவதென்பதோர்
நினைவிலாதுநெடிதிருந்தாளொடு
மனையின்மாசுதுடைத்தமனத்தினாள். (௨௪)

அநுமன் சனகியை மௌனத்தின் காரணம்வினாதல்.

யாதிதற்கொன்றியம்புவலென்பது
மீதுயர்ந்தவுவகையின்விம்மலோ
தூதுபொய்க்குமென்றோவெனச்சொல்லினான்
நீதிவித்தகனங்கைநிகழ்த்தினாள். (௨௫)

சனகி பதில் கூறுதல்.

மேக்குநீங்கியவெள்ளவுவகையால்
ஏக்கமுற்றொன்றியம்புவதியாதென
நோக்கிநோக்கியரிதெனநொந்துளேன்
பாக்கியம்பெரும்பித்தும்பயக்குமோ. (௨௬)

சனகி அநுமனைப் புகழ்தல்.

முன்னைநீக்குவென்மொய்சிறையென்றநீ
பின்னைநீக்கியுவகையும்பேசினை
என்னபேற்றினையீகுவதென்பதை
உன்னிநோக்கியுரைமறந்தோவினேன். (௨௭)

உலகமூன்றுமுதவற்கொருதனி
விலையிலாமையுமுன்னினென்மேலவை
நிலையிலாமைநினைந்தனனின்னையென்
தலையினாற்றொழவுந்தகுந்தன்மையோய். (௨௮)

இனிச்செய்வதியாதெனச் சனகி அநுமனை வினாதல்.

ஆதலாலொன்றுதவுலாற்றலேன்
யாதுசெய்வதென்றெண்ணியிருந்தனென்
வேதநன்மணிவேகடஞ்செய்தன்ன
தூதவென்னினிச்செய்திறஞ்சொல்லென்றாள். (௨௯)

எனக்களிக்கும்வரமெம்பிராட்டிநின்
மனக்களிக்குமற்றுன்னையம்மானவன்
றனக்களிக்கும்பணியினுந்தக்கதோ
புனக்களிக்குலமாமயில்போன்றுளாய். (௩௦)

அநுமன்றிரிசடையல்லாவரக்கியரைச்சுட விரும்புகிறேனெனல்.

எனவுரைத்துத்திரிசடையாளெம்மோய்
மனையினிற்சுடர்மாமுகமாட்சியா
டனையொழித்திவ்வரக்கியர்தங்களை
வினையினிற்சுடவேண்டுமென்யானென்றான். (௩௧)

உரையிலாவுரையுன்னையுரைத்துராய்
விரையவோடிவிழுங்குவமென்றுளார்
வரைசெய்மேனியைவள்ளுகிராற்பிளந்
திரைசெய்வேன்மறலிக்கினியென்னுமால். (௩௨)

அரக்கியர் சனகியைச்சரணடைதல்.

குடல்குறைத்துக்குருதிகுடித்தவர்
உடன்முருக்கியிட்டுண்குவனென்றலும்
அடலரக்கியரன்னைநின்பாதமே
விடலமெய்ச்சரணென்றுவிளம்பலும். (௩௩)

சனகி அரக்கியர்பொருட்டுச் சமாதானமுரைத்தல்.

அன்னையஞ்சன்மினஞ்சன்மினீரெனு
மன்னுமாருதிமாமுகநோக்கியே
தென்னதீமையிவரிழைத்தாரவன்
சொன்னசொல்லினதல்லது தூய்மையோய். (௩௪)

யானிழைத்தவினையினினிவ்விடர்
தானடுத்தது தாயினுமன்பினோய்
கூனியிற்கொடியாரலரேயிவர்
போனவப்பொருள்போற்றலைபுந்தியோய் (௩௫)

எனக்குநீயருளிவ்வரந்தீவினை
தனக்குவாழ்விடமாயசழக்கியர்

மனக்குநோய்செயலென் றனண்மாமதி
தனக்குமாமறுத்தந்தமுகத்தினுள். (௩௬)

இராமன் விபீடணனைச் சீதையை அழைத்துவாவெனல்.

என்றபோதினிறைஞ்சினனெம்பிரான்
றன்றுணைப்பெருந்தேவிதயாவென
நின்றகாலைநெடியவன்வீடண
சென்றுதாநமதேவியைச்சீரொடும். (௩௭)

என்னுங்காலையிருளும்வெயிலுங்கார்
மின்னுங்காலையியற்கையவீடணன்
உன்னுங்காலைக்கொணர்தியென்றேதவப்
பொன்னின்காற்றளிர்சூடினன்போந்துளான். (௩௮)

வேறு.

கோலங்கொண்டு வருதியென விபீடணன் சீதைக்குரைத்தல்.

வேண்டிற்றுமுடிந்ததன்றேவேதியர்வேதனின்னைக்
காண்டற்குவிரும்புகின்றானும்பருங்காணவந்தார்
பூண்டகக்கோலம்வல்லைபுனைந்தனைவருத்தம்போக்கி
ஈண்டுக்கொண்டணைதியென்றானெழுந்தருளிறைவியென்றான். (௩௯)

சீதை கோலங்கோடல் தகுவன்றென மறுத்தல்.

யானிவணிருந்ததன்மையிமையவர்குழுவுமெங்கள்
கோனுமம்முனிவர்தங்கள்கூட்டமுங்குலத்துக்கேற்ற
வானுயர்கற்பின்மாதரீட்டமுங்காண்டன்மாட்சி
மேனினைகோலங்கோடல்விழுமியதன்றுவீர. (௪0)

விபீடணன் கோலங்கொள்ள விராமன் கட்டளையிட்டானெனலும் சனகி உடன்படலும்.

என்றனளிறைவிகேட்டவிராக்கதர்க்கிறைவனீலக்
குன்றனதோளினன்றன்பணியினிற்குறிப்பிதென்றான்
நன்றெனநங்கைநேர்ந்தாளுயகக்கோலங்கொள்ளச்
சென்றனர்வானநாட்டுத்திலோத்தமைமுதலோர்சேர. (௪௧)

மேனகையரம்பைமற்றையுருப்பசிவேறுமுள்ள
வானகநாட்டுமாதர்யாருமஞ்சனத்துக்கேற்ற
நானநெய்யூட்டப்பட்டநவையிலகலவைதாங்கிப்
போனகந்துறந்தகையன்மருங்குறநெருங்கிப்புக்கார். (௪௨)

காணியைப்பெண்மைக்கெல்லாங்கற்பினுக்கணியைப்பொற்பின்
ஆணியையமிழ்தின்வந்தவமிழ்தினையறத்தின்றாயைச்

சேணுயர்மறையையெல்லாமுறைசெய்தசெல்வனென்ன
வேணியையரம்பைமெல்ல * வரன்முறைசுருக்கவிட்டாள். (௪௩)

பாகடர்ந்தமுதுபில்கும்பவளவாய்த்தரளப்பத்தி
சேகறவிளக்கினானந்தீட்டிமண்சேர்ந்தகாசை
வேகடஞ்செய்யுமாபோன்மஞ்சனவிதியின் † வேதத்
தோகைமங்கலங்கள்பாடவாட்டினரும்பர்மாதர். (௪௪)

உருவிளைபவளவல்லிபானுரையுண்டதென்ன
மருவிளைகலவையூட்டிக்குங்குமமுலையின்மாட்டிக்
கருவிளைமலரின்காட்சிக்காசறுதூசுகாமன்
திருவிளையல்குற்கேற்பமேகலைதழுவச்சேர்த்தார். (௪௫)

சந்திரன்றேவிமாரிற்றகையுறுதரளப்பைம்பூண்
இந்திரன்றேவிக்கேற்பவியையவனபூட்டியாணர்
சிந்துரப்பவளச்செவ்வாய்த்தேம்பசும்பாகுந்தீற்றி
மந்திரத்தயினிநீரால்வலஞ்செய்துகாப்புமிட்டார். (௪௬)

மண்டிலமதியினுப்பண்மாணிருந்தென்னமானம்
கொண்டனரேற்றிவானமடந்தையர்தொடர்ந்துகூட
மண்டிவானரருமோடவரக்கரும்புறஞ்சூழ்ந்தோட
அண்டர்நாயகன்பாலண்ணல்வீடணனருளிற்சென்றான். (௪௭)

வேறு.

இப்புறத்திமையவர்முனிவரேழையர்
துப்புறச்சிவந்தவாய்விஞ்சைத்தோகையர்
முப்புறத்துலகினுமெண்ணின்முற்றினோர்
ஒப்புறக்குவிந்தனரோகைகூறுவார். (௪௮)

நெருக்கமிகுதியைகற்ற அரக்கர் பிரப்பாலோச்சுதலும்
ஆரவார முண்டாதலும்.

அருங்குலக்கற்பினுக்கணியையண்மினார்
மருங்குபின்முன்செலவழியின்றென்னலாய்
நெருங்கினர்நெருங்குழிநிருதரோச்சலால்
கருங்கடன்முழக்கெனப்பிறந்தகம்பலை. (௪௯)

முனிவர் ஆரவாரகாரணங்கூறுதல்.

அவ்வழியிராமனுமலர்ந்ததாமரைச்
செவ்விவாண்முகங்கொடுசெயிர்த்துநோக்குறா
இவ்வொலியாவதென்றியம்பவிற்றோனுக்
கவ்வையின்முனிவரர்கழறினாரரோ. (௫௦)

---

* விரன்முறை சுகிர்த்துவிட்டாள் என்றும் பாடம்.
† வேதத்தோகை வேதமாதா.

இராமன் விபீடணனை நீ தகர்துசெய்தியோவெனல்.

முனிவரர்வாசகங்கேட்புருதமுன்
நனியிதழ்துடித்திடநகைத்துவீடணன்
றனையெழநோக்கிநீதகாதசெய்தியோ
புனிதநூல்கற்றுணர்புந்தியோயென்றான். (௫௧)

கடுந்திறமலர்க்களங்காணுமாசையால்
நெடுந்திசைத்தேவருநின்றயாவரும்
அடைந்தனருவகையினடைகின்றார்களைக்
கடிந்திடயார்சொனார்கருது நூல்வலாய். (௫௨)

வேறு.

பரசுடைக்கடவுணேமிப்பண்ணவன்பதுமத்தண்ணல்
அரசுடைத்தெரிவைமாரையின்றியேயமைவதுண்டோ
கரைசெயற்கரியதேவரேனையோர்கரந்துகாண்பான்
விரசுறின்விலக்குவாரோவேறுளார்க்கென்கொல்வீர. (௫௩)

ஆதலானரக்கர்கோவேயடுப்பதன்றுனக்குமின்னே
சாதுகைமாந்தர்தம்மைத்தடுப்பதென்றருளிச்செங்கண்
வேதநாயகன்றானிற்பவெய்துயிர்த்தலக்கணெய்திக்
கோதிலாமனனுமெய்யுங்குலைந்தனன்குணங்கடேயோன். (௫௪)

அருந்ததியனையநங்கையமர்க்களமணுகியாடற்
பருந்தொடுகழுகும்பேயும்பசிப்பிணிதீருமாறு
விருந்திடுவில்லின்செல்வன்விழாவணிவிரும்பிநோக்கிக்
கருந்தடங்கண்ணுநெஞ்சுங்களித்திடவினையசொன்னாள். (௫௫)

வேறு.

சனகி களங்கண்டு கூறியது.

சீலமுங்காட்டியென்கணவன்சேவகக்
கோலமுங்காட்டியென்குலமுங்காட்டியிஞ்
ஞாலமுங்காட்டியகவிக்குநாளறாக்
காலமுங்காட்டுமேகொல்லென்கற்பென்றாள். (௫௬)

சனகி இராமனைக்காணுதல்

எச்சிலென்னுடலுயிரேகிற்றேயினி
நச்சிலையென்பதோர்நவையிலாளெதிர்
பச்சிலைவண்ணமும்பவளவாயுமாய்க்
கைச்சிலையேந்திநின்றதனைக்கண்ணுற்றாள். (௫௭)

மானமீதரம்பையர்சூழவந்துளாள்
போனபேருயிரினைக்கண்டபொய்யுட

ருனதுகவர்வுறுந்தன்மைத்தாமென
ஆனனங்காட்டுறவவனியெய்தினாள். (௫௮)

பிறப்பினுந்துணைவனைப்பிறவிப்பேரிடர்
துறப்பினுந்துணைவனைத்தொழுதுநாணினி
மறப்பினுநன்றிதுமாறுவேறுவீழ்ந்
திறப்பினுநன்றெனவேக்கநீங்கினாள். (௫௯)

இராமன் சீதையைக்காணுதல்.

கற்பினுக்கரசினைப்பெண்மைக்காப்பினைப்
பொற்பினுக்கழகினைப்புகழின்வாழ்க்கையைத்
தற்பிரிந்தருள்புரிதருமம்போலியை
அற்பினத்தலைவனுமமையநோக்கினான். (௬௦)

இராமன் சீதையைக் கடிந்துரைத்தல்.

சுணங்குறுதுணைமுலைமுன்பிற்றூங்கிய
அணங்குறுநெடுங்கணீராறுவார்வுற
வணங்கியமயிலினைக்கற்பின்வாழ்வினைப்
பணங்கிளரரவெனவெழுந்துபார்ப்புறா. (௬௧)

ஊண்டிறமுவந்தனையொழுக்கம்பாழ்பட
மாண்டிலைமுறைதிறம்பரக்கன்மாநகர்
ஆண்டுறைந்தடங்கினையச்சந்தீர்ந்திவண்
மீண்டதென்னினைவெனைவிரும்புமென்பதோ. (௬௨)

உன்னைமீட்பான்பொருட்டுவரிதூர்த்தொளிர்
மின்னைமீட்டுறுபடையரக்கர்வேரறப்
பின்னைமீட்டுறுபகைகடந்திலேன்பிழை
என்னைமீட்பான்பொருட்டிலங்கையெய்தினேன். (௬௩)

மருந்தினுமுரியமன்னுயிரின்வான்றசை
அருந்தினையோநறவமையவுண்டியே
இருந்தனையேயினியெமக்குமேற்பன
விருந்துளவோவுரைவெம்மைநீங்கினாய். (௬௪)

கலத்தினிற்பிறந்தமாமணியிற்காந்துறு
நலத்தினிற்பிறந்ததுநடந்தநன்மைசால்
குலத்தினிற்பிறந்திலைகோளில்கீடம்போல்
நிலத்தினிற்பிறந்தமைநிரப்பினாயரோ. (௬௫)

பெண்மையும்பெருமையும்பிறப்புங்கற்பெனும்
திண்மையுமொழுக்கமுந்தெளிவுஞ்சீர்மையும்

உண்மையுநீயெனுமொருத்திதோன்றலால்
வண்மையின்மன்னவன்புகழின்மாய்ந்ததால். (௬௬)

அடைப்பரைம்புலன்களையொழுக்கமாணியாய்ச்
சடைப்பரந்தகைந்ததோர்தகைவின்மாதவம்
படைப்பர்வந்திடையொருபழிவந்தாலது
துடைப்பர்தம்முயிரொடுங்குலத்திற்றோகைமார். (௬௭)

யாதியாணியம்புவதுணர்வையீடறச்
சேதியாநின்றதுன்னொழுக்கஞ்செய்வது
சாதியாலன்றெனிற்றக்கதோர்நெறி
போதியாலென்றனன்புலவர்புந்தியான். (௬௮)

இராமன்மொழிகேட் டனைவருமரற்றுதல்.

முனைவருமமரருமற்றுமுற்றிய
நினைவருமகளிருநிருதரென்றுளார்
எனைவரும்வானரத்தெவரும்வேறுளார்
அனைவரும்வாய்திறந்தரற்றினாரரோ. (௬௯)

சீதை வருந்திக் கூறுதல்.

கண்ணினையுதிரமும்புனலுங்கான்றுக
மண்ணினைநோக்கியமலரின்வைகுவாள்
புண்ணினைக்கோலுறுத்தனையபொம்மலால்
உண்ணினைப்போவிநின்றுயிர்ப்புவீங்கினாள். (௭0)

பருந்தடர்சுரத்திடைப்பருகுநீர்நசை
வருந்தருந்துயரினன்மாளலுற்றமான்
இருந்தடங்கண்டதினெய்துறுவகைப்
பெருந்தடையுற்றெனப்பேதுற்றாளரோ. (௭௧)

உற்றுநின்றுலகினைநோக்கியோரடி
முற்றுறுநெடுங்கணீராலிமொய்த்துக
இற்றதுபோலும்யானிருந்துபெற்றபே
றுற்றதாலென்றவமின்றென்றோதுவாள். (௭௨)

மாருதிவந்தெனைக்கண்டவெள்ளனீ
சாருதியீண்டெனச்சமையச்சொல்லினான்
யாரினுமேன்மையானிசைத்ததில்லையோ
சோருமென்னிலையவன்றூதுமல்லனே. (௭௩)

எத்தவமென்னலமென்றன்கற்புநான்
இத்தனைகாலமுமுழந்தவிவ்வெலாம்

பித்தெனலாயவம்பிழைத்ததாலன்றே
உத்தமநீமனத்துணிந்திலாமையால். (எச)

பார்க்கெலாம்பத்தினிபதுமத்தானுக்கும்
பேர்க்கெலாஞ்சிந்தையளல்லள்பேதையேன்
ஆர்க்கெலாங்கண்ணவனன்றென்றுலது
தீர்க்கலாந்தகையதுதெய்வந்தேறுமோ. (எரு)

பங்கயத்தொருவனும்விடையின்பாகனும்
சங்குகைத்தாங்கியதருமமூர்த்தியும்
அங்கையினெல்லிபோலனைத்துநோக்கினும்
மங்கையர்மனநிலையுணரவல்லரோ. (எசு)

ஆகலிற்புறத்தினியாருக்காகவென்
கோதறுதவத்தினைக்கூறிக்காட்டுகேன்
சாதலிற்சிறந்ததொன்றில்லைத்தக்கதே
வேதநின்பணியதுவிதியுமென்றனள். (எஎ)

இலக்குமணனைச்சனகி தீத்தருதியெனல்.

இளையவன்றனையழைத்திடுதீயென
வளையொலிமுன்கையாள்வாயிற்கூறினள்.
உளைவுறுமனத்தவனுலகம்யாவுக்கும்
களைகணைத்தொழுவவன்கண்ணிற்கூறினன். (எஅ)

சனகி தீயினருகிற்சேறல்.

ஏங்கியபொருமலினிழிகணீரினன்
வாங்கியவுயிரினனனையமைந்தனும்
ஆங்கெரிவிதிமுறையமைவித்தானதன்
பாங்குறநடந்தனள்பதுமப்போதினாள். (எகூ)

தீக்குழியினருகிற் சேறல்கண்ட வேதமுதலிய வருந்துதல்.

தீயிடையருகுறச்சென்றுதேவர்க்கும்
தாய்தனிகுருகலுந்தரிக்கிலாமையால்
வாய்திறந்தரற்றினமறைகளுன்கொடும்
ஒய்வினல்லறமுமற்றுயிர்கள்யாவையும். (அ0)

அக்கினி வருந்துதல்.

வலம்வருமளவையின்மறுகிவான்முதல்
உலகமுமுயிர்களுமோலமிட்டன
அலம்வரலுற்றனவலறியையவிச்
சலமிதுதக்கிலதென்னச்சாற்றின. (அக)

இந்திராணிமுதலியோர் வருந்துதல்.

இந்திரன்றேவியர்முதலவேழையர்
அந்தரவானினின்றரற்றுகின்றவர்
செந்தளிர்க்கைகளாற்சேயரிப்பெருஞ்
சுந்தரக்கண்களையெற்றித்துள்ளினார். (அஉ)

பிரமாதியர் நடுங்குதல்.

நடுங்கினர்நான்முகன்முதலநாயகர்
படங்குறைந்ததுபடிசுமந்தபாம்புவாய்
விடம்பிறந்துளதெனவெதும்பிற்றுலவ
கிடந்திரிந்தனசுடர்கடல்களேங்கின. (அங)

யான் கற்பிழந்தேனெனி னென்னைச் சுடுதியென அக்கினிக்குச் சனகிகூறுதல்.

கனத்திறற்கடந்தபூண்முலையகைவளை
மனத்தினல்வாக்கினன்மறுவுற்றேனெனின்
சினத்திறற்சுடுதியாற்றீச்செல்வாவென்றாள்
வனத்துழாய்க்கணவற்கும்வணக்கம்போக்கினாள். (அச)

சீதை தீயிற்பாய்தல்.

நீந்தரும்புனலிடைநிவந்ததாமரை
யேய்ந்ததன்கோயிலேயெய்துவாளெனப்
பாய்ந்தனள்பாய்தலும்பாலின்பஞ்செனத்
தீய்ந்ததவ்வெரியவள்கற்பின்றீயினால். (அரு)

அக்கினி சனகியையேந்தி வருந்திக்கூறுதல்.

அழுந்தினணங்கைமற்றங்கையாற்சுமந்
தெழுந்தனனங்கிவெந்தெரியுமேனியான்
றொழுங்கரத்துணையினன்சுருதிஞானத்தின்
கொழுந்தினைப்பூசலிட்டரற்றுங்கொள்கையான். (அசு)

ஊடினசீற்றத்தாலுதித்ததேவர்களும்
வாடினவில்லையாலுணர்த்துமாறுண்டோ
பாடியவண்டொடும்பணித்ததேனொடும்
சூடினமலர்களீர்தோய்ந்தபோன்றவால். (அஎ)

திரிந்தனவுலகமுஞ்செவ்வைநின்றன
பரிந்தவருயிரெலாம்பயந்தவிர்ந்தன
அருந்ததிமுதலியமகளிராடுதல்
புரிந்தனர்நாணமும்பொறையுநீங்கினார். (அஅ)

கனிந்துயர்கற்பெனுங்கடவுட்டீயினால்
நினைந்திலையென்வலிநீக்கினாயென
அனிந்தனையங்கிநீயயர்கிலென்னையும்
முனிந்தனையாமெனமுறையிட்டானரோ. (௮௯)

இராமனக்கினி தேவனைநீயாவனென வினாதல்.

இன்னதோர்காலையினிராமன்யாரைநீ
என்னைநீயியம்பியதெரியுட்டோன்றியிப்
புன்மைசாலொருத்தியைச்சுடாதுபோற்றினாய்
அன்னதார்சொல்லவீதறைதியாலென்றான். (௯0)

அக்கினி தன்னை யுணர்த்துதல்.

அங்கியானென்னையிவ்வனைகற்பெனும்
பொங்குவெந்தீச்சுடபொறுக்கிலாமையால்
இங்கணைந்தேனுறுமியற்கைநோக்கியும்
சங்கியாநிற்றியோவெவர்க்குஞ்சான்றுளாய். (௯௧)

வேட்பதுமங்கையர்விலங்கினாரெனின்
கேட்பதும்பல்பொருட்கையங்கேடற
மீட்பதுமென்வயினென்னுமெய்ப்பொருள்
வாட்பெருந்தோளினாய்மறைகள்சொல்லுமால். (௯௨)

ஐயுறுபொருள்களையரசின்மாசொரீஇக்
கையுறுநெல்லியின்கனியிற்காட்டுமென்
மெய்யுறுகட்டுரைகேட்டுமீட்டியோ
பொய்யறுமாருதியுரையும்போற்றலாய். (௯௩)

தேவருமுனிவருந்திரிவநிற்பவும்
மூவகையுலகமுங்கண்கண்மோதிநின்
றூவெனல்கேட்கிலையறத்தைநீக்கிவே
றேவமென்றொருபொருள்யாண்டுக்கொண்டியோ. (௯௪)

பெய்யுமேமழைபுவிபிளப்பதன்றியே
செய்யுமேபொறையறநெறியிற்செல்லுமே
உய்யுமேயுலகிவளுணர்வுசீறினால்
வய்யுமேன்மலர்மிசையயனுமாயுமே. (௯௫)

பாடுறுபன்மொழியினையபன்னிநின்
றாடுறுதேவரோடுலகமார்த்தெழச்
சூடுறுமேனியவவெரிதோகையை
மாடுறக்கொணர்ந்தனன்வள்ளல்கூறுவான். (௯௬)

இராமன் அங்கியையுணர்ந்து சனகியை அங்கீகரித்தல்.

அழிப்பிலசான்றுநீயுலகுக்காதலான்
இழிப்பிலசொல்லினீயிவளையாதுமோர்
பழிப்பிலளென்றனைபழியுமின்றினிக்
கழிப்பிலளென்றனன்கருணையுள்ளத்தான். (௯௭)

வேறு.

பிரமன் இராமற்கவனை யுணர்த்துதல்.

உணர்த்துவாயுண்மையொழிவின்றுகாலம்வந்துளதால்
புணர்த்துமாயையிற்பெரதுவுறநின்றவைபுணரா
இணர்த்துழாய்த்தொங்கலிராமற்கென்றிமையவரிசைப்பத்
தணப்பிருமறைச்சதுமுகனுரைசெயச்சமைந்தான். (௯௮)

மன்னர்தொல்குலத்தவரினத்துணையொருமனித்தன்
என்னவுன்னலையுன்னைநீயிராமகேளிதனைச்
சொன்னநான்மறைத்துணிவினிற்றுணிந்தமெய்த்துணிபு
நின்னலாதில்லைநின்னில்வேறுளதிலைநெடியோய். (௯௯)

பகுதியென்றுளதியாதினும்பழையதுபயந்த
விகுதியால்வந்தவிளைவுமற்றதற்குமேனின்ற
புகுதியாவர்க்குமறியவப்புருடனுநீயும்
மிகுதியுன்பெருமாயையினால்வந்தவீக்கம். (௧௦௦)

முன்புபின்பிருபுடையெனுங்குணிப்பருமுறைமைத்
தன்பெருந்தன்மைதான்றெரிமறைகளின்றலைகள்
மன்பெரும்பரமார்த்தமென்றுரைக்கின்றமாற்றம்
அன்பநின்னையல்லான்மற்றிங்கியாரையுமறையா. (௧௦௧)

எனக்குமெண்வகையொருவற்குமிமையவர்க்கிறைவன்
றனக்கும்பல்பெருமுனிவர்க்குமுயிருடன்றழீஇய
அனைத்தினுக்குநீயேபரமென்பதையறிந்தார்
வினைத்துவக்குடைவீட்டருந்தளைநின்றுமீள்வார். (௧௦௨)

என்னைத்தான்முதலாகியவுருவங்களெவையும்
முன்னைத்தாய்தந்தையெனும்பெருமாயையின்மூழ்கித்
தன்னைத்தானறியாமையிற்சலிப்பவச்சலந்தீர்ந்
துன்னைத்தாதையென்றுணர்குவமுத்திவித்தொழிந்த. (௧௦௩)

ஐயஞ்சாகியதத்துவந்தெரிந்தறிந்தவற்றின்
மெய்யெஞ்சாவகைமேனின்றநினக்குமேல்யாதும்
பொய்யெஞ்சாவிலதென்னுமீதருமறைபுகலும்
வய்யஞ்சான்றினிச்சான்றுக்குஞ்சான்றிலைவழக்கால். (௧௦௪)

அளவையாலளந்தாமன்றென்றறிவுறுமமைதி
உளவையாவையுமுனக்கில்லையுபரிடத்துனது
களவையாழ்ந்துறதெளிந்திலதாயினுங்கண்ணால்
துளவையாய்முடியாயுளைநீயெனத்துணியும். (௧௦௫)

கரணமொன்றுளதுன்னைவந்தறிவுகாணுமே
அரணமல்லவர்க்கிவைகடந்தறிவரிதாக
மரணந்தோற்றமென்றிவற்றிடைமயங்குபவவற்றுன்
சரணமல்லதோர்சரணில்லையன்னவைதவிர்ப்பான். (௧௦௬)

தோற்றமென்பதொன்றுனக்கில்லைநின்கணேதோற்றும்
ஆற்றல்சான்முதற்பகுதிமற்றதனுளாம்பண்பால்
காற்றைமுன்னுடைப்பூதங்களவைசென்றுகடைக்கால்
வீற்றுவீற்றுற்றுவீவுறுநீயென்றும் * விளியாய். (௧௦௭)

மின்னைக்காட்டுதல்போல்வந்துவிளியுமெய்யுலகம்
தன்னைக்காட்டவுந்தருமத்தைநாட்டவுந்தனியே
என்னைக்காட்டுதியிறுதியுங்காட்டுதியெனக்கு
முன்னைக்காட்டிலையொளிக்கினுமிலைமறையுரையால். (௧௦௮)

என்னுருக்கொடிவ்வுலகினையீனுதியிடையே
உன்னுருக்கொடுபுகுந்துநின்றோம்புதியுமையோன்
றன்னுருக்கொடுதுடைத்திமற்றிதுதனியருக்கன்
முன்னுருக்கொடுபகற்செய்யுந்தரத்ததுமுதலோய். (௧௦௯)

திருக்குவான்மலிசெல்வத்துச்செருக்குவேதிறத்துத்
தருக்குமாய்வறத்தானவரரக்கர்வெஞ்சமரில்
இரிக்கமாழ்கினொந்துனைப்புகல்யாம்புகவியையாக்
கருக்குளாய்வந்துதோற்றுதியீங்கிதுகடனே (௧௧௦)

ஓங்காரப்பொருடேருவோர்தாமுன்னையுணர்வோர்
ஓங்காரப்பொருளென்றுணர்ந்திருவினையுகுப்போர்
ஓங்காரப்பொருளாமன்றென்றாழிசென்றாலும்
ஓங்காரப்பொருளேபொருளென்கிலாவுரவோர். (௧௧௧)

இனையதாகலினெம்மைமூன்றுலகையுமீன்றிம்
மனையின்மாட்சியைவளர்த்தவெம்மோயினைவாளா
முனையலென்றதுமுடித்தனன்முந்துநீர்முளைத்த
சினையின்பந்தமும்பகுதிகளனைத்தையுஞ்செய்தோன். (௧௧௨)

சிவனுமிராமற்கவனையுணர்த்துதல்.

என்னுமாத்திரத் † தேறமர்கடவுளுமிசைத்தான்
உன்னைநீயொன்றுமுணர்ந்திலைபோலுமாலுரவோய்

---

* விளியாய் - அழியாய்.
† ஏறமர்கடவுள் - சிவன்.

முன்னையாதியாமூர்த்திநீமூவகையுலகின்
அன்னைசீதையாமாதுநின்மார்பின்வந்தமைந்தாள். (௧௧௩)

துறக்குந்தன்மையளல்லளாற்றொல்லையெவ்வுலகும்
பிறக்கும்பொன்வயிற்றன்னையிப்பெய்வளைபிழைக்கின்
இறக்கும்பல்லுயிரிராமனீயிவடிறத்திகழ்ச்சி
மறக்குந்தன்மையதென்றனன்வரதர்க்கும்வரதன். (௧௧௪)

பின்னுநோக்கினான்பெருந்தகைமுன்புதற்பிரிந்த
இன்னலாலுயிர்துறந்திருந்துறக்கத்துளிருந்த
மன்னனாங்குவற்சென்றுநீகண்டனைவணங்க
முன்னைவான்றுயர்நீக்குதிமொய்ம்பினோயென்றான். (௧௧௫)

தயரதன் இராமனெதிரே வருதலும் இராமனவனடி பணிதலும்.

ஆதியான்பணியருள்பெற்றவரசருக்கரசன்
காதல்மைந்தனைக்காணியவுவந்ததோர்கருத்தால்
பூதலத்திடைப்புக்கனன்புகுதலும்பொருவில்
* வேதவேத்தனுமவன்மலர்த்தாண்மிசைவீழ்ந்தான். (௧௧௬)

தயரதனிராமனைத் தழுவிமகிழ்தல்.

வீழ்ந்தமைந்தனையெடுத்துத்தன்விலங்கலாகத்தின்
ஆழ்ந்தழுந்திடத்தழுவித்தன்கண்ணினீராட்டி
வாழ்ந்தசிந்தையின்மனங்களுங்களிப்புறமன்னன்
போழ்ந்ததுன்பங்கள்புறப்படநின்றிவைபுகன்றான். (௧௧௭)

அன்றுகேகயன்மகள்கொண்டவரமென்னுமயில்வேல்
இன்றுகாறுமென்னிதயத்தினிடைநின்றதென்னைக்
கொன்றுநீங்கலதிப்பொழுதகன்றதுன்குலப்பூண்
மன்றலாகமாங்காந்தமாமணியின்றுவாங்க. (௧௧௮)

மைந்தரைப்பெற்றுவானுயர்தோற்றத்துமலர்ந்தார்
சுந்தரப்பெருந்தோளினாயென்றுணைத்தாளின்
பைந்துகட்களுமொக்கிலராமனைப்படைத்தாய்
உய்ந்தவர்க்கருந்துறக்கமும்புகழும்பெற்றுயர்ந்தேன். (௧௧௯)

பண்டுநான்றொழுந்தேவருமுனிவரும்பாராய்
கண்டுகண்டெனைக்கைத்தலங்குவிக்கின்றகாட்சி
புண்டரீகத்துப்புராதனன்றன்னொடும்பொருந்தி
அண்டமூலத்தொராசனத்திருத்தினையழக. (௧௨௦)

* வேத்தன்—என்பது தற்பவம். வேத்தியன்-என்பது வடமொழி.

தயரதனைச் சனகி வணங்குதல்.

என்றுமைந்தனையெடுத்தெடுத்திறுகுறத்தழுவிக்
குன்றுபோன்றுளதோளினான்சீதையைக்குறுகத்
தன்றுணைக்கழல்வணங்கலுங்கருணையாற்றழுவி
நின்றுமற்றிவைநிகழ்த்தினானிகழ்த்தரும்புகழோன். (௧௨௧)

தயரதனறவுரை.

நங்கைமற்றுநின்கற்பினையுலகுக்குநாட்ட
அங்கிபுக்கிடென்றுணர்த்தியவதுமனத்தடையேல்
சங்கையுற்றவர்பெறுவதுமுண்டதுசரதம்
கங்கைநாடுடைக்கணவனைமுனிவுறக்கருதேல். (௧௨௨)

பொன்னைத்தீயிடைப்பெய்தலப்பொன்னுடைத்தூய்மை
தன்னைக்காட்டுதற்கென்பதுமனக்கொளறகுதி
உன்னைக்காட்டினன்கற்பினுக்கரசியென்றுலகில்
பின்னைக்காட்டுதற்கரியதென்றெண்ணியிப்பெரியோன். (௧௨௩)

பெண்பிறந்தவரருந்ததியேமுதற்பெருமைப்
பண்பிறந்தவர்க்கருங்கலமாகியபாவாய்
மண்பிறந்தகமுனக்குநீவானின்றும்வந்தாய்
எண்பிறந்தநின்குணங்களுக்கினியிழுக்கிலையால். (௧௨௪)

என்னச்சொல்லியவ்வேந்திழைதிருமனத்தியாதும்
உன்னச்செய்யலோர்முனிவின்மைமனக்கொளாவுந்தான்
பின்னைச்செம்மலவ்விளவலையுள்ளன்புபிணிப்பத்
தன்னைத்தானெனத்தழுவினன்கண்கணீர்ததும்ப. (௧௨௫)

கண்ணினீர்ப்பெருந்தாரைமற்றவன்சடைக்கற்றை
மண்ணினீத்தமொத்திழிதரத்தழீஇநின்றுமைந்த
எண்ணினீக்கரும்பிறவியுமென்னெஞ்சினிறந்த
புண்ணுநீக்கினையுமையனைத்தொடர்ந்துடன்போந்தாய். (௧௨௬)

புரந்தரன்பெரும்பகைஞனைப்பொராவென்றவுன்றன்
பரம்புயர்ந்ததோளாற்றலேதேவரும்பலரும்
நிரந்தரம்புகல்கின்றதுநீயிந்தவுலகின்
அரந்தையாம்பகைதுடைத்தறநிறுத்தினையைய. (௧௨௭)

தயரதன் வரங்கேளெனல்.

என்றுபின்னருமிராமனையானுனைக்கீவ
தொன்றுகூறுதியுயர்குணத்தோயெனவுனையான்
சென்றுவானிடைக்கண்டிடர்தீர்வனென்றிருந்தேன்
இன்றுகாணப்பெற்றேனினிப்பெறுவதென்னென்றான். (௧௨௮)

ஆயினுமுனக்கமைந்ததொன்றுரையெனவழகன்
தீயனென்றுநீதுறந்தவென்றெய்வமுமகனும்
தாயுந்தம்பியுமாம்வரந்தருகெனத்தாழ்ந்தான்
வாய்திறந்தெழுந்தார்த்தனவுயிரெலாம்வழுத்தி. (௧௨௯)

இராமனுக்குத் தயரதன் வரமளித்தல்.

வரதகேளெனத்தயரதனுரைசெய்வான்மறுவில்
பரதனன்னதுபெறுகதான்முடியினைப்பறித்திவ்
விரதவேடமற்றுதவியபாவிமேல்விளிவு
சரதநீங்கலதாமென்றான்றழீஇயகைதளர. (௧௩௦)

தயரதன் கைகேசியையிகழ்தலும் இராமன் சமாதானங் கூறுதலும்.

ஊன்பிழைக்கிலாவுயிர்நெடிதளிக்குநீளரசை
வான்பிழைக்கினுமுதலெனுதாள்வுறமதித்து
யான்பிழைத்ததல்லாலென்னையீன்றவெம்பிராட்டி
தான்பிழைத்ததுண்டோவென்றானவன்சலந்தவிர்ந்தான். (௧௩௧)

இராமனுக் கிருவரமளித்த தயரதன் சுவர்க்கம் புகுதல்.

எவ்வரங்களுங்கடந்தவனைப்பொருளிசைப்பத்
தெவ்வரம்பறுகானிடைச்செலுத்தினட்கீந்த
அவ்வரங்களுமிரண்டவையாற்றினூற்கீந்த
இவ்வரங்களுமிரண்டென்றார்தேவருமிரங்கி. (௧௩௨)

வரமிரண்டளித்தழகனையிளவலைமலர்மேல்
விரவுபொன்னினைமண்ணிடைநிறுத்திவிண்ணிடையே
உரவுமானமிசேகினனும்பருமுலகும்
பரவுமெய்யினுக்குயிரளித்துறுபுகழ்படைத்தோன். (௧௩௩)

இராமனை யமரர்வரங்கேளென வேண்டுதலு மவன் இறந்தவானரங்களை யெழுப்பக் கூறுதலும்.

கோட்டுவார்சிலைக்குரிசிலையமரர்தங்குழாங்கள்
மீட்டுநோக்குறாவீரநீவேண்டுவவரங்கள்
கேட்டியாலெனவரக்கர்கள்கிளப்பருஞ்செருவில்
வீட்டமாண்டுளகுரங்கெலாமெழுகெனவிளம்பி. (௧௩௪)

பின்னுமோர்வரம்வானரப்பெருங்கடல்பெயர்ந்து
மன்னுபல்வனமால்வரைக்குலங்கள்மற்றின்ன
துன்னிடங்கள்காய்கனிகிழங்கோடுதேன்றுற்ற
இன்னுணீருளவாகெனவிளம்பிடுகென்றான். (௧௩௫)

வானரங்கள் புதுமிடங்கள் வளமுடையதாக வேளவயமரர் வரமளித்தல்.

வரந்தரும்முதன்மழுவலான்முனிவரர்வானோர்
புரந்தராதிமற்றேனையோர்தனித்தனிப்புகழ்ந்தாங்

கரந்தைவெம்பிறப்பறுக்குநாயகநின தருளால்
குரங்கினம்பெறுமென் றனருள்ளமுங்குளிர்ப்பார். (௧௩௬)

இறந்த வானரமுயிர் பெறுதல்.

முந்தைநாண்முதற்கடைமுறையளவையுமுடிந்த
அந்தவானரமடங்கலுமெழுந்துடனுூர்த்துச்
சிந்தையோடுகண்களிப்புறச்செருவெலாநினையா
வந்துதாமரைக்கண்ணனைவணங்கினமகிழ்ந்து. (௧௩௭)

கும்பகன்னனோடிந்திரசித்துவெங்குலபோர்
வெம்புவெஞ்சினத்திராவணன்முதலியவீரர்
அம்பின்மாண்டுளவானரமங்குவந்தார்ப்ப
உம்பர்யாவருமிராமனைப்பார்த்திவையுரைத்தார். (௧௩௮)

தேவர் இராமனுக்கு இராவணவதம் ஒருபக்கத்திலாயதெனல்.

*இடையுவாவினிற்சுவேலம்வந்திறுத்தெயிலிலங்கைப்
புடையவாவுறச்சேனையைவளைப்புறப்போக்கிப்
படையவாவுறுமரக்கர்தங்குலமுற்றும்படுத்துக்
கடையுவாவினிலிராவணன்றன்னையுங்கட்டு. (௧௩௯)

தேவர் வனவாசகால முடிந்ததெனல்.

வஞ்சரில்லையிவ்வண்டத்திலெனும்படிமடித்த
கஞ்சநாண்மலர்க்கையினுயன்னைசொற்காரும்
அஞ்சொடைஞ்சுநான்கென்றெனுமாண்டுபோய்முடிந்த
பஞ்சமிப்பெயர்படைத்துளதிதியின்றுபயந்த. (௧௪௦)

**தேவர் நீ இன்றே பரதனைக்காணுவிடி னவன்
தீப்புகுவானெனக் கூறியகறல்.**

இன்றுசென்றுநீபரதனையெய்தலையென்னின்
பொன்றுமாலவனெரியிடையன்னதுபோக்க
வென்றிவீரநீபோதியாலென்பதுவிளம்பா
நின்றதேவர்கணீங்கினரிராகவனினைந்தான். (௧௪௧)

விபீடணன் புட்பகமுளதெனப் புகறல்.

ஆண்டுபத்தொருநாலுமின்றோடறுமாயின்
மாண்டதாமினியென்குலம்பரதனேமாயின்
ஈண்டுபோகவோரூர்தியுண்டோவெனவின்றே
தூண்டுமானமுண்டெனறடல்வீடணனெழுதான். (௧௪௨)

வாங்கினனிருநிதியொடுதனதனில்வள்ளால்
ஓங்குமால்வெள்ளமெழுபஃதேறினுமொல்கா

* இடையுவா - பூரணை.

தீங்குளாரெலாவிருவதிவரினீயினிது
பூங்குலாநகர்புகுதியிஞ்ஞான்றெனப்புகலா. (கசங)

இராமன் புட்பகங் கொடுவரக் கூறல்.

இயக்கர்வேந்தனுக்கருமறைக்கிழவனன்றீந்த
துயக்கிலாதவர்மனமெனத்தூயதுசுரர்கள்
வியக்கவான்செலும்புட்பகவிமானமுண்டென்றே
மயக்கிலான்சொலக்கொணருதிவல்லையினென்றான். (கசச)

புட்பகங் கொண்டு வருதல்.

அண்டகோடிகளநந்தமொத்தாயிரமருக்கர்
விண்டதாமெனவிசும்பிடைத்திசையெலாம்விளங்கக்
கண்டையாயிரகோடிகளொலிப்புறக்கனலக்
கொண்டணைந்தனனொடியினிரக்கர்தங்கோமான். (கசரு)

தேவர் மலர்மாரி பொழிதல்.

அனையபுட்பகவிமானம்வந்தவனியையணுக
இனியசிந்தனையிராகவனுவகையோடினிநம்
வினையமுற்றியதென்றுகொண்டெழுந்தனன்விண்ணோர்
புனைமலர்ச்சொரிந்தார்த்தனராசிகள்புகன்றே. (கசசு)

சனகி திரிசடையை வாழ்த்தி இராமனருகிலிருத்தல்.

வணங்குநுண்ணிடைத்திரிசடைவணங்கவான்கற்பிற்
கிணங்கரின்மையாளேக்கியோரிடரின்றியிலங்கைக்
கணங்குதானெனவிருத்தியென்றையன்மாடணைந்தாள்
மணங்கொள்வேலிளங்கோளரிமானமீப்படர்ந்தான். (கசஎ)

இராமன் விபீடணற்கியர்க் குரைத்தல்.

அண்டமுண்டவன்மணியணியுதரமொத்தகிலன்
சண்டவேகமுங்குறைதரகினைவெனுந்தரத்தாய்
விண்டலந்திகழ்விமானப்புட்பகமெனுமதின்மேற்
கொண்டகொண்டறன்றுணைவரைப்பார்த்திவைகுணித்தான். (கசஅ)

வீடணன்றனையன்புறநோக்குறுவிமலன்
தோடணைந்ததார்மவ்லியாய்சொல்வதொன்றுளதுன்
மாடணைந்தவர்க்கின்பமேவழங்கிநீளரசி
ஞடணைந்தவர்புகழ்ந்திடவீற்றிருநலத்தால். (கசகூ)

நீதியாறெனத்தெரிவுறுநிலைமைபெற்றுடையாய்
ஆதிநான்மறைக்கிழவனின்குலமெனவமைந்தாய்
எதிலார்தொழுமிலங்கைமாநகரினுளினிநீ
போதியாலெனப்புகன்றனைனன்மறைபுகன்றான். (கருo)

சுக்கிரீவநின்றோளுடைவன்மையாற்றசந்தொ
கக்கிரீவனைத்தடிந்துவெம்படையினாலசந்த
மிக்கவானரச்சேனையினிளைப்பறமீண்டேர்ப்
புக்குவாழ்கெனப்புகன்றனனீறிலாப்புகழோன். (௧௫௧)

வாலிசேயினைச்சாம்பனைப்பனசனைவயப்போர்
நீலனாதியநெடும்படைத்தலைவரைநெடிய
காலின்வேலையைத்தாவிமீண்டருளியகருணை
போலும்வீரனைநோக்கிமற்றிம்மொழிபுகன்றான். (௧௫௨)

விபீடணாதியர் உடன் செலவிழைதல்.

அய்யனிம்மொழிபுகன்றிடத்துணுக்கமோடவர்கள்
மெய்யுமாவியுங்குலைதரவிழிகணீர்ததும்பச்
செய்யதாமரைத்தாளிணைமுடியுறச்சேர்த்தி
உய்கிலேநின்னைநீங்கினென்றினையனவுரைத்தார். (௧௫௩)

பாரமாமதிலயோத்தியினெய்திநின்பைம்பொன்
ஆரமாமுடிக்கோலமுஞ்செவ்வியுமழகும்
சோர்விலாதியாங்காண்குறுமளவையுந்தொடர்ந்து
பேரவேயருளென்றனருள்ளன்புபிணிப்பார். (௧௫௪)

இராமனுமவ்வாறே யெனல்.

அன்பினாலவர்மொழிந்தவாசகங்களுமவர்கள்
துன்பமெய்தியநடுக்கமுநோக்கிநீர்துளங்கல்
முன்புநானினைந்திருந்ததப்பரிசுநம்முயற்சி
பின்புகாணுமாறுரைத்ததென்றுரைத்தனன்பெரியோன். (௧௫௫)

சுக்கிரீவாதியர் மகிழ்வுறல்.

அய்யவன்வாசகங்கேட்டலுமரிகுலத்தரசும்
மொய்கொள்சேனையுமிலங்கையர்வேந்தனுமுதலோர்
வய்யமாளுடைநாயகன்மலர்ச்சரண்வணங்கி
மெய்யினோடருந்துறக்கமுற்றாரெனவியந்தார். (௧௫௬)

இராமனனைவரையும் புட்பகத்திலேறக் கட்டளையிடுதல்.

அனையதாகியசேனையோடரசனையநிலன்
தனையனாதியாம்படைப்பெருந்தலைவர்கடம்மை
வனையும்வார்கழலிலங்கையர்மன்னனைவந்திங்
கினிதினேறுமின்விமானமென்றிராகவனிசைத்தான். (௧௫௭)

அனைவரும் புட்பகமேறியிருத்தல்.

சொன்னவாசகம்பிற்படச்சூரியன்மகனும்
மன்னுவீரருமெழுபதுவெள்ளவானரரும்

கன்னிமாமதிலிலங்கைமன்னொடுகெடற்படையும்
துன்னினார்நெடும்புட்பகமிசையொருசூழல். (௧௫௮)

புட்பகத்திறம்.

பத்துநாலெனவடுக்கியவுலகங்கள்பலவின்
மெத்தியோனிகளேறினும்வெளியிடமிகுமால்
முத்தரானவரிதனிலைமொழிகுவதல்லால்
இத்தராதலத்தியம்புதற்குரியவர்யாரே. (௧௫௯)

வேறு.

இராமன் புட்பகத்தி லிவ்வாறிருந்தானெனல்.

எழுபதுவெள்ளத்தோறுமிரவிகான்முளையுமெண்ணின்
வழுவிலாவிலங்கைவேந்தும்வான்பெரும்படையுஞ்சூழத்
தழுவுசீரிளையகோவுஞ்சனகன்மாமயிலும்போற்ற
விழுமியகுணத்துவீரன்விளங்கினன்விமானத்தும்பர். (௧௬௦)

அண்டமேபோன்றதையன்புட்பகமண்டத்தும்பர்
எண்டருங்குணங்களின்றிமுதலிடையீறின்றாகிப்
பண்டைநான்மறைக்குமெட்டாப்பரஞ்சுடர்பொலிவதேபோல்
புண்டரீகக்கண்வென்றிப்புரவலன்பொலிந்தான்மன்னோ. (௧௬௧)

இராமனாணையால் சுக்கிரீவாதியர் மானுடவடிவங்கொண்டுறுதல்.

தேனுடையலங்கன்மோலிச்செங்கதிர்ச்செல்வன்சேயும்
மீனுடையகழிவேலையிலங்கையர்வேந்தும்வெற்றித்
தானையும்பிறருமற்றைப்படைப்பெருந்தலைவர்தாமும்
மானுடவடிவங்கொண்டார்வள்ளறன்வாய்மைதன்னால். (௧௬௨)

இராமன் சனகிக்கு இலங்கையாதிய காட்டிக்கூறுதல்.

குடதிசைமறைந்தபின்னர்க்குணதிசையுதயஞ்செய்வான்
வடதிசையயனமுன்னிவருவதேகடுப்பமானம்
தடையொருசிறிதின்றாகித்தாவிவான்படரும்வேலை
படையமைவிழியாட்கையனினையனபகரலுற்றான். (௧௬௩)

இலங்கையைவலஞ்செய்தேகவெனநினைந்திடுமுன்மானம்
வலங்கிளர்கீழைவாயில்வரப்பிரகததனீலன்
நலங்கிளர்கையின்மாண்டதிவணெனநமன்றன்வாயில்
கலந்திடவீங்குக்கண்டாய்சுபாரிசற்கட்டதென்றான். (௧௬௪)

குடதிசைவாயில்வேகக்குன்றரிந்தவனைவென்ற
விடநிகர்மேகநாதனிளவலால்வீழ்ந்ததென்முன்
வடதிசைவாயின்மேலவவிராவணன்மவுலிபத்தும்
உடலமுமிழந்ததிங்கென்றுணர்த்திவேறுரைக்கலுற்றான். (௧௬௫)

நன்னுதனின்னைநீங்கிநாள்பலகழிந்தபின்றை
மன்னவனிரவிமைந்தன்வான்றுணையாகநட்ட
பின்னைமாருதிவந்துன்னைப்பேதறுத்துனதுபெற்றி
சொன்னபின்வானரேசர்தொகுத்ததிச்சேதுகண்டாய். (கசுசு)

இராமன் சேதுமான்மியங்கூறுதல்.

மற்றிதன்றூய்மையெண்ணின்மலரயன்றனக்குமெட்டா
பொற்றொடித்தெரிவையானென்புகலுகேன்கேட்டியன்பால்
பெற்றதாய்தந்தையோடுதேசிகர்ப்பிழைத்துச்சூழ்ந்த
சுற்றமுங்கெடுத்துளோருமெதிர்தரிற்சுரர்களாவார். (கசுஎ)

இந்திரற்கஞ்சிமேனாளிருங்கடல்புக்குநீங்காக்
கந்தரசயிலந்தன்னுட்கண்டவர்வினைகடீர்க்கும்
கந்தமாதனமென்றோதுங்கிரியிவண்கிடப்பகண்டாய்
பைந்தொடியடைத்தசேதுப்பாவனமாவதென்றான். (கசுஅ)

கங்கையோடியமுனைகோதாவிரியொடுகளிந்தைசூழ்ந்த
பொங்குநீர்நதிகள்யாவும்படிதலாற்புன்மைபோகா
சங்கெறிதரங்கவேலைதட்டவிச்சேதுவென்னும்
இங்கிதினெதிர்ந்தோர்புன்மையாவையுநீக்குமன்றே. கசுகூ)

ஆவினைக்குரவரோடுமருமறைமுனிவர்தம்மைப்
பாவையர்குழவையின்சொற்பாலரைப்பயந்துதம்மின்
மேவினவவரைச்செற்றோர்விரிகடற்சேதுவந்து
தோய்வரேலவர்கள்கண்டாய்சுரர்தொழுஞ்சுரர்களாவார். (கஎ0)

மரக்கலமியங்கவேண்டிவரிசிலைக்குதையாற்கீறித்
தருக்கியவிடத்துப்பஞ்சபாதகரேனுஞ்சாரின்
பெருக்கியவேழுமூன்றுபிறவியும்பிணிகணீங்கி
நெருக்கியவமரர்க்கெல்லாநீணிதியாவரன்றே. (கஎக)

நெற்றியினழலுஞ்செங்கணீறணிகடவுணீடு
கற்றையின்சடையின்மேவுங்கங்கையுஞ்சேதுவாகப்
பெற்றிலமென்றுகொண்டுபெருந்தவம்புரிகின்றாளால்
மற்றிதன்றூய்மையெவ்வாறுரைப்பதுமலர்க்கண்வந்தாய். கஎஉ)

சனகிக்கிராமன் புல்லணைமுதலிய காட்டியுரைத்தல்.

தெவ்வடுஞ்சிலைக்கைவீரன்சேதுவின்பெருமையாவும்
வெவ்விடம்பொருதுமீண்டுமிளிர்தருங்கருங்கட்செவ்வாய்
நொவ்விடைக்குயிலனாட்குநுவன்றுழிவருணனோனை
இவ்விடைவந்துகண்டாய்சரணெனவியம்பிற்றென்றான். (கஎங)

இதுதமிழ்முனிவன்வைகுமியறருகுன்றுமுன்ஞு
னதுவளர்மணிமேலோங்கலப்புறத்துயர்ந்துதோன்றும்
அதுதிக * ழுநந்தவெற்பொன்றருடரவநுமன்ரேன்றிற்
றெதுவெனவணங்கைநோக்கியிற்றெனவிராமன்சொன்ஞன். (களச)

வாலியென்றளவிலாற்றல்வன்மையான்மகரநீர்சூழ்
வேலையைக்கடத்தலாயும்விறலுடையவனைவீட்டி
நூலியற்றருமநீதிநுனித்தறங்குணித்தமேலோர்
போலியற்றபனன்மைந்தனுறைதரும்பொறையீதென்ருன். (களரு)

சனகி வானரமாதரையும் விமானத்திலேற்றவேண்டுதல்.

கிட்கிந்தையிதுவேலையகேட்டியாலெனதுபெண்மை
மட்குந்தாருயவெள்ளமகளிரின்ருகிவாஞேர்
உட்கும்போர்ச்சேனைசூழவொருத்தியேயயோத்தியெய்தின்
கட்கொந்தார்குழலிஞரையேற்றுதல்கடன்மைத்தென்ருள். (களசு)

அனுமன் வானரமாதரை யழைத்துவருதல்.

அம்மொழியிரவிமைந்தற்கண்ணருஹுரைப்பவன்ஞன்
மெய்ம்மைசேரநுமன்றன்னைநோக்கிநீவிரைவின்வீர
மைம்மலிகுழலிஞரைமரபிஞற்கொணர்தியென்ஞச்
செம்மைசேருள்ளத்தண்ணல்கொணர்ந்தனன்சென்றுமன்ரே. (களஎ)

வானரமாதர் சீதையையுமிராமனையும் வணங்குதல்.

வரிசையின்வழாமைநோக்கிமாருதிமாதர்வெள்ளம்
கரைசெயலரியவண்ணங்கொணர்ந்தனன்கணத்தின்முன்னம்
விரைசெறிகுழலிஞர்தம்வேந்தனைவணங்கிப்பெண்மைக்
கரசியையயஞேடுமடியிணைதொழுதுநின்ருர். (களஅ)

வானரமாதரைப் புட்பகத்தேற்றிக்கொள்ளுதல்

மங்கலமுதலவாயமரபினிற்கலப்பையாவும்
அங்கவர்கொணர்ந்துபெண்மைக்கரசியைத்தொழுதுசூழ
நங்கையுமுவந்துவேருேர்நவையிலையினிமற்றென்ருள்
பொங்கியவிமானந்தாஞுமனமெனவெழுந்துபோன. (களகூ)

போதாவிசும்பிற்றிகழ்புட்பகம்போதலோடும்
சூதார்முலைத்தோகையைநோக்கிமுன்ரேன்றுசூழல்
கோதாவிரிமற்றதன்மாடுயர்குன்றுநின்னைப்
பேதாய்பிரிவித்துயர்மைபிணித்ததென்ருன். (கஅ0)

* மதங்கவெற்பு.

வேறு.

சிரத்துவாசவண்டலம்பிடுதெரிவைகேளிதுநீ
டரத்துவாசவர்வேள்வியதண்டகமதுதான்
வரத்துவாசவன்வணங்குறுசித்திரகூடம்
பரத்துவாசவனுறைவிடமிதுவெனப்பகர்ந்தான்.

இ-ள். சிரத்து - தலையின்கண், வாசவண்டு - மணமமைந்தவண்டுகள், அலம்பிடு - தேனுண்டொலிக்கின்ற, தெரிவைகேள் - நல்லறிவையுடையாளேகேள், இது - இந்தஇடம், நீள் - மிகுந்த, தரத்து - சலியாது நிற்றலாகிய வலியமைந்த, உவாசவர் - உபாசனைசெய்பவர்களும், வேள்வியர் - யாகங்களைச்செய்பவர்களும் வசிக்கின்ற, தண்டகம் - தண்டகாரணியமாகும், அது - அந்தஇடம், வரத்து - சிறப்பையுடைய, வாசவன் - இந்திரன், வணங்குறு - வணங்குகின்ற, சித்திரகூடம் - சித்திரகூடமலையாகும், இது - இவ்விடம், பரத்துவாசவன் - பரத்துவாசமுனிவன், உறைவிடமென - வசிக்குமிடமென்று, பகர்ந்தான் - சொல்லியருளினான்,—எ-று.

தெரிவையென்னுங் காரணப்பெயர் ஈண்டு யாவுமறியவல்ல இறைவிக்காயிற்று. (௧௮௧)

பரத்துவாசன் இராமனையெதிர்கோடல்.

மின்னைநோக்கியவீரதினியம்பிடும்வேலை
தன்னைநேரிலாமுனிவரனுணர்ந்துதன்னகத்தின்
என்னையாளுடைநாயகனெய்தினனென்றுத்
துன்னுமாதவர்சூழ்தரவெதிர்கொள்வான்றொடர்ந்தான். (௧௮௨)

பரத்துவாசன் வருகையை இராமன்காண்டல்.

ஆதபத்திரங்குண்டிகையொருகையினணைத்துப்
போதமுற்றியதண்டொருகையினிற்பொலிய
மாதவப்பயனுருவுகொண்டெதிர்வருமாபோல்
நீதிவித்தகனடந்தமைநோக்கினனடியோன். (௧௮௩)

புட்பகத்தினைக் கீழிறங்குமாறு இராமன்நினைத்தல்.

எட்பகத்தினையளவையுங்கருணையோடிசைந்த
நட்பகத்திலாவரக்கரைநருக்கிமாமேரு
விட்பகத்துறைகோளரியெனப்பொலிவீரன்
புட்பகத்தினைவதிகெனநினைந்தனன்புவியில்.

இ-ள். எண் - மற்றையோருடைய எண்ணங்கள், பக - குலைய, தினையளவையும் - தினையளவும், கருணையோடு - கருணையுடனே, இசைந்த - பிறவுயிர்களிடத்துப்பொருந்திய, நட்பு - அன்பு, அகத்திலா - உள்ளத்திலில்லாத, அரக்கரை - இராவணன்முதலிய அரக்கர்களை, நருக்கி - சின்னபின்னஞ்செய்து, மாமேரு - பெரியமேருமலையினது, விட்பகத்

து - குகையினிடத்தில், உறை - வசிக்கின்ற, கோளரியென - வலியமைந்த சிங்கம்போல, பொலிவீரன் - பொலிகின்றசீராகவபிரான், புட்பகத்தினை - புட்பகவிமானத்தை, புவியில் - அப்பூமியின்கண், வதிகெனநினைந்தனன் - தங்குகவென்று திருவுளங்கொண்டனன், — எ-று.

விட்பு - விள்ளெனும்பகுதியும் புவ்விகுதியும்பெற்று விட்டென்றுநீங்கிவிண்ட இடத்தை யுணர்த்தினமையின் ஆகுபெயர். (கஅச)

ஸ்ரீராமன் பரத்துவாசனடிபணிதல்.

உன்னுமாத்திரத்துலகினையெடுத்தும்பரோங்கும்
பொன்னினுமெவந்திழிந்தெனப்புட்பகந்தாழ
என்னையாளுடைநாயகன்வல்லையினெதிர்போய்ப்
பன்னுமாமறைத்தபோதனன்றுணைமிசைப்பணிந்தான். (கஅரு)

பரத்துவாசனிராமனை ஆசீர்வதித்தல்.

அடியின்வீழ்தலுமெடுத்துநல்லாசியோடணைத்து
முடியைமோயினனின்றுழிமுளரியங்கண்ணன்
சடிலநீங்கவொழிதரத்தனதுகண்ணருவி
நெடியகாதலங்கலசமதாட்டினனெடியோன். (கஅசு)

கருகும்வார்குழற்சனகியோடிளவல்கைதொழுதே
அருகுசார்தரவருந்தவஞ்சிகள்வழங்கி
உருகுகாதலினெழுகண்ணீரினனுவகை
பருகுமாரமிழ்தொத்துளங்களித்தனன்பரிவால். (கஅஎ)

இராமன் ஆசிரமத்துக் கழைத்துவருதல்.

வானரேசனும்வீடணக்குரிசிலுமற்றை
ஏனைவீரருந்தொழுதொறுமாசிகளியம்பி
ஞானநாதனைத்திருவொடுநன்மனைகொணர்ந்தான்
ஆனமாதவர்குழாத்தொடுமருமறைபுகன்றே. (கஅஅ)

பரத்துவாசன் இராமனுக்கு அதிதிபூசை நடத்திக்கூறுதல்.

பன்னகசாலையுட்புகுந்துநீடருச்சனைபலவும்
சொன்னநீதியிற்புரிந்துபின்சூரியன்மருமான்
றன்னைநோக்கினன்பன்முறைகண்கணீர்ததும்பப்
பின்னொர்வாசகமுரைத்தனன்றபோதரிற்பெரியோன். (கஅகூ)

முனிவர்வானுளோர்மூவுலகத்துளோர்யாரும்
துனியுழந்திடத்துயர்தருகொடுமனத்தொழிலோர்
நனிமடிந்திடவலகைகளுடைகநடிப்பக்
குனியும்வார்சிலைக்குரிசிலேயென்னினிக்குணிப்பாம். (ககூ0)

வே று.

விராதனுங்கரனுமானும்விறல்கெழுகவந்தன்றானும்
மராமரமேழும்வாலிமார்பமுமகரநீரும்
இராவணனுரமுங்கும்பகருணனதேற்றந்தானும்
அராவரும்பகழியொன்றாலழித்துலகளித்தாயைய. (௧௧௧)

சித்திரகூடந்தீர்ந்துதென்றிசைத்தீமைதீர்த்திட்
டித்திசையடைந்தெம்மில்லினிறுத்தமையிறுதியாக
வித்தகமறந்திலேன்யான்விருந்தினையாகியெம்மோ
டித்தினமிருத்தியென்றான்மறைகளினிறுதிகண்டான். (௧௧௨)

பரத்துவாசன் பரதனியல் கூறுதல்

கரதலமதனினீடுகொர்முகம்வளையவாங்கிச்
சரதம்வானவர்கடுன்பந்தணித்துலகங்கடாங்கும்
மரகதமேனிச்செங்கண்வள்ளலேவழுவாநீதிப்
பரதனதியல்புமின்றேபணிக்குவென்கேண்மினென்றான். (௧௧௩)

வே று.

வெயர்த்தமேனியன்விழிபொழிமழையன்மூவினையைச்
செயர்த்தசிந்தையன்றெருமரலுழந்துழந்திழிவான்
அயர்த்துநோக்கினுந்தென்றிசையன்றிவேறறியான்
பயத்ததுன்பமேவுருவுகொண்டென்னலாம்படியான். (௧௧௪)

இந்தியங்களைந்திருங்கனிகாய்நுகர்ந்திவுளிப்
பந்திவந்தபுற்பாயலான்பழம்பதிபுகாது
நந்தியம்பதியிருந்தனன்பரதனின்னுமம்
அந்தியும்பகலதனினுமறப்பிலனாகி. (௧௧௫)

வே று.

என்றுரைத்தரக்கர்வேந்தனிருபதென்றுரைக்குநீலக்
குன்றுரைத்தனையதோளுங்குலவரைக்குவடுமேய்க்கும்
என்றுறைத்தனையமௌலித்தலைபத்துமிறுத்தவீர
நின்றனைப்பிரிந்ததுண்டேயாமெனநிகழ்த்தினானல். (௧௧௬)

பாரத்துவாசற் கிராமன் பதிலுரைத்தல்.

பின்னையேருழையினானும்விரைமலர்த்தவிசினானும்
நின்னையேபுகழ்தற்கொத்தநீதிமாதவத்தின்மிக்கோய்
என்னையேவணங்கியுன்றனருள்சுமந்துயர்ந்தேன்மற்றிங்
கென்னையேபொருவுமைந்தர்யானலாதில்லையென்றான். (௧௧௭)

பரத்துவாசன் வரந்தருவேனென இராமன் வானரம் வாழ வரங்கேட்டல.

அவ்வுரைபுகலக்கேட்டவறிவனுமருளினோக்கி
வெவ்வரம்பொருதவேலோய்விளம்புகேன்கேட்டிவேண்டிற்
றெவ்வரமெனினுந்தந்தேனியம்புதியெனலுமையன்
கவ்வையின்றாகிவென்றிக்கவிக்குலம்பெற்றுவாழ்க. (௧௯௮)

பரத்துவாசன் வானரர்வாழிடம் வளமுடைத்தாகென வரமருளுதல்.

அரியினஞ்சென்றசென்றவடவிகளனைத்தும்வானம்
சொரிதருபருவம்போன்றுகிழங்கொடுகனிகாய்துன்றி
விரிபுனல்செழுந்தேன்மிக்குவிளங்குகவென விளம்புகென்றான்
புரியமாதவனுமஃதேயாகெனப்புகன்றிட்டானால். (௧௯௯)

பரத்துவாசன் ஓமத்தீயில் சுவர்க்கத்தினை யழைப்பித்தல்.

அருந்தவனையனின்றோடணிகவெஞ்சேனைக்கெல்லாம்
விருந்தினிதமைப்பமன்னனுவிளங்குமுத்தீயினுப்பண்
புரிந்தொராகுதியையீந்துபுறப்பமோவிற்போகம்
திருந்தியவானநாடுசேரவந்துற்றதன்றே. (௨௦௦)

அரைசரேயாதியாகவடியவரந்தமாகக்
கரைசெயலரியபோகந்துய்க்குமாகண்டிராமற்
கரைசியல்வழாமைநோக்கியறுசுவையமைக்கும்வேலை
விரைசெறிகமலக்கண்ணனனுமனைவிளித்துச்சொன்னான். (௨௦௧)

வேறு.

அனுமனையயோத்திக் கனுப்புதல்

ஒன்றுநம்பதிவருதுமுன்மாருதியீண்டச்
சென்றுநீதின்மைசெப்பியத்தீயவித்திளையோன்
நின்றநீர்மையுநினைவுநீதேர்ந்தெம்மினேர்தல்
நன்றெனவன்மோதிரங்கைக்கொடுநடந்தான். (௨௦௨)

அனுமன் குகனுக்குமிராமன் வரவுணர்த்திச் செல்லுதல்.

தந்தைவேகமுந்தனதுநாயகன்றனிச்சிலையின்
முந்துசாயகக்கடுமையும்பிற்படமுடுகிச்
சிந்தைபின்வரச்செல்பவன்குகற்குமச்சேயோன்
வந்தவாசகங்கூறிமேல்வான்வழிபோனான். (௨௦௩)

வேறு.

இன்றிசைக்கிடமாயவிராகவன்
தென்றிசைக்கருமச்செயல்செப்பினும்
அன்றிசைக்குமரியவயோத்தியின்
நின்றிசைத்துளதன்மைநிகழ்த்துவாம். (௨௦௪)

நந்திக்கிராமத்துற்ற பரதன் திறம்.

நந்தியின்பதியின் றலைநாடொறும்
சந்தியின் றிசிரந்தரந் தம்முனார்
பந்தியங்கழற்பாதமருச்சியா
இந்தியங்களைவென் றிருந்தானரோ. (௨௦௫)

துன்புறுக்கவுஞ்சுற்றியுருக்கொணா
என்புருக்குந்தகைமையதிட்டதாய்
முன்புருக்கொண்டொருவழிமுற்றுறா
அன்புருக்கொண்டதாமெனலாகுவான். (௨௦௬)

நினைக்கவுந்தடங்கண்ணிணைநீர்வர
இனத்ததண்டலைநாட்டிருந்தேயுமக்
கனத்தகந்தமுங்காயுங்கனிகளும்
வனத்தவல்லவருந்தலில்வாழ்க்கையான். (௨௦௭)

நோக்கிற்றென் றிசையல்லதுநோக்குறான்
எக்குற்றேக்குற்றிரவிகுலத்துளான்
வாக்கிற்பொய்யான்வரும்வருமென் றுயிர்
போக்கிப்போக்கியுழக்கும்பொருமலான். (௨௦௮)

உண்ணுநீர்க்குமுயிர்க்குமுயிரவன்
எண்ணுங்கீர்த்தியிராமன் றிருமுடி
மண்ணுநீர்க்குவரம்புகண்டாலன் றிக்
கண்ணினீர்க்கொர்கரையெங்குங்காண்கிலான். (௨௦௯)

அனையனாயபரதனலங்கலிற்
புனையுந்தம்முனார்பாதுகைப்பூசனை
நினையுங்காலநினைத்தனனாமரோ
மனையின்வந்தவனெய்தமதித்தநாள். (௨௧௦)

சோதிடர் இன்றிராமன் வரவேண்டுநாளெனல்.

யாண்டுவெந்திங்கிறுக்குமென் றெண்ணினான்
மாண்டசோதிடவாய்மைப்புலவரை
ஈண்டுகூய்த்தருகென்னவந்தெய்தினார்
ஆண்டகைக்கின் றறுதியென்றாரரோ. (௨௧௧)

என்றபோதத்திராமன்வனத்திடைச்
சென்றபோதத்தவ்வுரைசெல்வத்தை
வென்றபோதத்தவீரனும்வீழ்ந்தனன்
கொன்றபோதத்துயிர்ப்புக்குறைந்துளான். (௨௧௨)

பரதன் மயங்கித் தெளிதல்.

மீட்டெழுந்துவிரிந்தசெந்தாமரைக்
காட்டைவென்றெழுகண்கலுழிப்புனல்
ஓட்டவுள்ளவுயிரினையூசனின்
னாட்டவும்மவலத்தழிந்தானரோ. (௨௧௩)

இராமன் வாராமையைக்குறித்துப் பரதன் பலவாறு கருதுதல்.

எனக்கியம்பியநாளுமெனின்னலும்
தனைப்பயந்தவணையுந்தாங்கியவ்
வனத்துவைகல்செய்யான்வந்தடுத்ததோர்
வினைக்கொடும்பகையுண்டெனவிம்மினான். (௨௧௪)

மூவகைத்திருமூர்த்தியாராயினும்
பூவகத்தில்விசும்பிற்புறத்தினில்
ஏவர்நிற்பரெதிர்நிற்கவென்னுடைச்
சேவகற்கெனவையமுந்தேறினான். (௨௧௫)

என்னையின்னுமரசியலிச்சையான்
அன்னனாகினவனதுகொள்கவென்
றுன்னினான்கொலுறுவதுநோக்கினான்
இன்னதேநலனென்றிருந்தானரோ. (௨௧௬)

அனைத்திலங்கொன்றுமாயினுமாகுக
வனத்திருக்கவிவ்வையம்புகுதுக
நினைத்திருந்துதுயரமுழக்கிலேன்
மனத்துமாசென்னுயிரொடும்வாங்குவேன். (௨௧௭)

பரதன் சத்துருக்கனை அழைப்பித்தல்.

என்னப்பன்னியிளவலையென்னுழைத்
துன்னச்சொல்லுதிரென்றலுந்தூதர்போய்
உன்னைக்கூயினனும்முனோனாமுனம்
முன்னர்ச்சென்றனன்மூவர்க்கும்பின்னுளான். (௨௧௮)

தொழுதுநின்றதன்றம்பியைத்தோய்கணீர்
எழுதுமார்பத்திறுகத்தழுவினான்
அழுதுவேண்டுவதுண்டையவவ்வரம்
பழுதிலாமையினாற்றரற்பாற்றென்றான். (௨௧௯)

சத்துருக்கனை நீயரசனாக்கியெனப் பரதன்கூறுதல்.

என்னதாகுங்கொலவ்வரமென்றியேல்
சொன்னநாளிலிராகவன்றோன்றிலன்

மின்னுநீயிடையானினிவீடுவென்
மன்னனாதியென்சொல்லைமறாதென்றான். (௨௨௦)

அதுகேட்ட சத்துருக்கன் நடுங்குதல்.

கேட்டதோன்றல்கிளர்தடக்கைகளால்
தோட்டதன்செவிபொத்தித்துணுக்குறா
ஊட்டுநெஞ்சமுண்டாறொத்துயங்கினான்
நாட்டமும்மனமுந்நடுங்காநின்றான். (௨௨௧)

விழுந்துமேக்குயர்விம்மலன்வெய்துயிர்த்
தெழுந்துநானுனக்கென்னபிழைத்துள
தழுந்துதுன்பத்திறையெனச்சாற்றினான்
கொழுந்துவிட்டுநிமிர்கின்றகோபத்தான். (௨௨௨)

வேறு.

சத்துருக்கன் பதிலுரைத்தல்.

கானாளநிலமகளைக்கைவிட்டுப்போவானைக்காத்துப்பின்பு
போனானுமொருதம்பிபோனவர்கள்வருமவதிபோயிற்றென்று
ஆனாதவுயிர்விடவென்றமைவானுமொருதம்பியயலேநான்று
நீயாளுமிவ்வரசாள்வெனென்னேயிவ்வரசாட்சியினிதேயம்மா. (௨௨௩)

மன்னிற்பின்வளநகரம்புக்கிருந்துவாழ்ந்தானேபரதனென்னும்
சொன்னிற்குமென்றஞ்சிப்புறத்திருந்துமருந்தவமேதொடங்கினாயே
என்னிற்பின்னிவனுளனாமென்றேபின்னடிமையுனக்கிருந்ததேனும் [ன்.
உன்னிற்பின்னிருந்ததுவு மொருகுடைக்கீழிருப்பதுவு மொக்குமென்றா

முத்துருக்கொண்டமைந்தனைய முழுவெள்ளிக்கொழுநிறத்து முளரிச்செங்கட், சத்துருக்கனஃதுரைப்ப வவனிங்குத்தாழ்கின்ற தன்மையானிங், கொத்திருக்கலாலன்றேயுலந்தாற்பினிவ்வுலகை யுலையவொட்டான், அத்திருக்குங்கெடுமுடனே புகுந்தாளுமரசெரிபோ யமைக்கவென்றான்.

கோசலையெய்திப் பரதனைத் தடுத்தல்.

அப்பொழுதினிவ்வுரைசென் றயோத்தியினிசைத்தலுமே யரியையீன்ற, ஒப்பெழுதவொண்ணாத கற்புடையாள்வயிறுபுடைத் தலமந்தேங்கி, இப்பொழுதேயுலகிறக்கும் யாக்கையினை முடித்தொழிந்தான் மகனேயென்று, வெப்பெழுதினாலன்ன மெலிவுடையாள்கடிதோடி விலக்கவந்தாள். (௨௨௬)

மந்திரியர்தந்திரியர்வளநகரத்தவர்மறையோர்மற்றுஞ்சுற்றச்
சுந்தரியரெனைப்பலருங்கைதலையிற்பெய்திரங்கித்தொடர்ந்துசெல்ல
இந்திரனேமுதலாயவிமையவருமுனிவருமிறைஞ்சியேத்த
அந்தரமங்கையர்வணங்கவழுதாற்றிப்பரதனைவந்தடைந்தாளன்றே. ()

எரியமைக்குமயானத்தை யெய்துகின்றகாதலனை யிடையேவந்து, விரியமைத்தநெடுவேணிபுறத்தசைந்துவீழ்ந்தொசிய மேனிதள்ளச், சொரியமைப்பதரிதாய மழைக்கண்ணொடொடருதலுந் துணுக்கமெய்தாப், பரிவமைந்ததிருமனத்தா னடிதொழுதானவள்புகுந்து பற்றிக்கொண்டாள்.

வேறு.

மன்னிழைத்ததுமைந்தனிழைத்ததும்
முன்னிழைத்தவிதியின்முயற்சியால்
பின்னிழைத்ததுமெண்ணிலப்பெற்றியால்
என்னிழைத்தனையென்மகனேயென்றாள். (௨௨௯)

நீயிதெண்ணினையேனெநொடெரி
பாயுமன்னருஞ்சேனையும்பாயுமால்
தாயரெம்மளவன்றுதனியறம்
தீயின்வீழுமுலகுந்திரியுமால். (௨௩௦)

தருமநீதியின்றற்பயனாவதுன்
கருமமேயன்றிக்கண்டிலங்கண்களால்
அருமையொன்றுமுணர்ந்திலையையநின்
பெருமையூழிதிரியினும்பேருமோ. (௨௩௧)

எண்ணில்கோடியிராமர்களென்னினும்
அண்ணனின்னருளுக்கருகாவரோ
புண்ணியம்மெனுநின்னுயிர்போயினால்
மண்ணும்வானுமுயிர்களும்வாழுமோ. (௨௩௨)

இன்றுவந்திலனேயெனினூளையே
ஒன்றும்வந்துனையுன்னியுரைத்தசொல்
பின்றுமென்றுணரேற்பிழைத்தானெனின்
பொன்றுந்தன்மைபுகுந்ததுபோயென்றாள். (௨௩௩)

ஒருவன்மாண்டனனென்றுகொண்டேழிவாழ்
பெருநிலத்துப்பெறலருமின்னுயிர்க்
கருவுமாண்டறக்காணுதியோகலைத்
தருமநீயலதில்லெனுந்தன்மையாய். (௨௩௪)

இறக்கையுஞ்சிலரேகலுமோகத்தால்
பிறக்கையுங்கடனென்றுபின்பாசத்தை
மறக்கைகாண்மகனேவலியாவது
துறக்கைதானுமென்றாண்மனந்தூய்மையாள். (௨௩௫)

மைந்தனென்னைமறுத்துரைத்தானெனல்
எந்தைமெய்ம்மையுமிக்குலச்செய்கையும்

நைந்துபோகவுயிர்நிலைநச்சிலேன்
முந்துசெய்தசபதமுடிப்பனால். (௨௩௬)

பரதன் கோசலாதேவிக்குப் பதிலுரைத்தல்.

யானுமெய்யினுக்கின்னுயிரீந்துபோய்
வானுளெய்தியமன்னவன்மைந்தனல
கானுளெய்தியகாகுத்தற்கேகடன்
ஏனையோர்க்கிதிழுக்கில்வழக்கன்றே. (௨௩௭)

தாய்சொற்கேட்டலுந்தந்தைசொற்கேட்டலும்
பாசத்தன்பினைப்பற்றறநீக்கலும்
ஈசற்கேகடன்யானஃதிழைக்கிலென்
மாசற்றேனிதுகாட்டுவென்மாண்டென்றான். (௨௩௮)

பரதன் தீயில்விழ முந்துதலும் அநுமானெய்தித்தடுத்தலும்.

என்றுதீயினையெய்தியிரைத்தெழுந்
தொன்றுபூசலிடுமுலகோருடன்
நின்றுபூசனைசெய்கின்றநேசற்குக்
குன்றுபோனெடுமொருதிகூடினான். (௨௩௯)

அநுமன் கையாலெரியை யவித்தல்.

அய்யன்வந்தனனாரியன்வந்தனன்
மெய்யின்மெய்யனெனின்னுயிர்வீடினால்
உய்யுமேயவனென்றுரைத்துட்புகாக்
கய்யினாலெரியைக்கரியாக்கினான். (௨௪0)

ஆக்கிமற்றவனுய்மலர்த்தாள்களைத்
தாக்கத்தன்றலைதாழ்ந்துவணங்கிக்கை
வாக்கிற்கூடப்புதைத்தொருமாற்றநீ
தூக்கிக்கொள்ளத்தகுமெனச்சொல்லினான். (௨௪௧)

இராமன் வருதற்கின்னம் நாழிகைநாழ்பதுளதெனல்.

இன்னநாழிகையெண்ணந்துளதைய
உன்னைமுன்னும்வந்தெய்தவுரைத்தநாள்
அன்னதில்லையெனினடிநாயினேன்
முன்னம்வீழ்ந்திவ்வெரியின்முடிவெனால். (௨௪௨)

ஒன்றுதானுளதுன்னடியேன்சொலால்
நின்றுதாழ்ந்துளநேமிச்சுடர்குணக்
குன்றுதோன்றளவும்மிதுகுன்றுமேல்
பொன்றுநீயுமுலகமும்பொய்யிலாய். (௨௪௩)

இராமன் பரத்துவாசாச்சிரமத்தி லிருக்கின்றனென வநுமனுரைத்தல்.

எங்கணாயகற்கின்னமுதீகுவான்
பங்கயத்துபரத்துவன்வேண்டலால்
அங்குவைகினனல்லதுதாழ்க்குமோ
இங்கணல்லதொன்றின்னமுங்கேட்டியால். (௨௪௪)

அண்டர்நாதனருளியளித்துள
துண்டொர்பேரடையாளமுனக்கது
கொண்டுவந்தனென்கோதற்றசிந்தையாய்
கண்டுகொண்டருளவாயெனக்காட்டினான். (௨௪௫)

வேறு.

அநுமனிராமன் கணையாழியையளித்தல்.

காட்டியமோதிரங்கண்ணிற்காண்டலும்
ஊட்டியவல்விடமுற்றுமுற்றுவார்க்
கூட்டியநன்மருந்தொத்ததாமரோ
ஈட்டியவுலகுக்குமிளையவேந்தற்கும். (௨௪௬)

அழுகின்றவாயெலாமார்த்தெழுந்தன
விழுகின்றகண்ணெலாம்வெள்ளமாறிமுன்
உழுகின்றதலையெலாமுயர்ந்தெழுந்தன
தொழுகின்றகையவாய்க்காலின்றோன்றலை. (௨௪௭)

ஆழிகண்டவனைவரு மகிழ்வுறல்.

மோதிரம்வாங்கித்தன்முகத்தின்மேலணைத்
தாதரம்பெறுவதற்காக்கையோவெனா
ஓதினர்நாணுறவோங்கினான்றொழும்
தூதனைமுறைமுறைதொழுதுதுள்ளுவான். (௨௪௮)

ஆதிவெந்துயரலாலருந்தலின்மையால்
ஊதுறப்பறப்பதாயுலர்ந்தயாக்கைபோய்
எதிலனொருவன்கொலென்னலாயது
மாதிரம்வளர்ந்தனவயிரத்தோள்களே. (௨௪௯)

அழங்குமநுமனையாழிக்கைகளால்
தொழுமெழுந்துள்ளும்வெங்களிதுளக்கலால்
விழுமழிந்தேங்கும்போய்வீங்கும்வேர்க்குமக்
குழுவொடுங்குனிக்குந்தன்றடக்கைகொட்டுமால். (௨௫௦)

ஆடுமினாடுமினென்னுமையன்பால்
ஓடுமினோடுமினென்னுமோங்கிசை

பாடுமின்பாடுமினென்னும்பாவிகாள்
சூடுமின்சூடுமின்றூதன்றோளெனும். (௨௫௧)

வஞ்சனையியற்றியமாயக்கைகையார்
துஞ்சுவரினியெனத்தோளைக்கொட்டுமால்
குஞ்சிதவடிகண்மண்டிலத்திற்கூட்டுற
அஞ்சனக்குன்றுநின்றாடும்பாடுமால். (௨௫௨)

வேதியர்தமைத்தொழும்வேந்தரைத்தொழும்
தாதியர்தமைத்தொழுந்தன்னைத்தான்றொழும்
எதுமொன்றுணர்குறாதிருக்குறிற்குமால்
காதலென்றதுவுமோர்கள்ளிற்றோற்றிற்றே. (௨௫௩)

அனுமனைப்பரதன் நின் வரலாறறிய விரும்புகின்றேனெனல்.

அத்திறத்தாண்டகையநுமன்றன்னைநீ
எத்திறத்தாயெமக்கியம்பியீதியால்
முத்திறத்தவருளேயொருவன்மூர்த்திவே
றொத்திருந்தாயெனவுணர்கின்றேனென்றான். (௨௫௪)

மறையவர்வடிவுகொண்டணுகவந்தனை
இறைவரினொருவனென்றெண்ணுகின்றனென்
துறையெனக்கியாதெனச்சொல்லுசொல்லென்றான்
அறைகழலநுமனுமறியக்கூறுவான். (௨௫௫)

அனுமன் தன்வரலாறு கூறுதல்.

காற்றினுக்கயல்வந்தகவிக்குலத்துளான்
நோற்றனள்வயிற்றின்வந்துதித்துநம்முனாற்
கேற்றிலாவடித்தொழிலேவலாளனேன்
மாற்றினனுருவொருகுரங்குமன்னயான். (௨௫௬)

அனுமன் சுயவுருவங் கோடல்.

அடித்தொழினாயினேனற்பயாக்கையைக்
கடித்தடந்தாமரைக்கண்ணினோக்கெனுப்
பிடித்தபொய்யுருவினைப்பெயர்த்துநீக்கினான்
முடித்தலம்வானவர்நோக்கின்முன்னுவான். (௨௫௭)

வெஞ்சிலையிருவரும்விரிஞ்சன்மைந்தனும்
எஞ்சலிலதிசயமிதுவென்றெண்ணினார்
துஞ்சிலதாயினுஞ்சேனைதுண்ணென
அஞ்சினதஞ்சனைசிறுவனாக்கையால். (௨௫௮)

பரதன் அநுமனை உருவஞ்சுருக்க வேண்டுதல்.

ஈங்குநின்றியாமுனக்கிசைத்தமாற்றமத்
தூங்கிருங்குண்டலச்செவியின்சூழ்வர
ஓங்கலவாதலினுலப்பில்யாக்கையை
வாங்குதிவிரைந்தெனமன்னன்வேண்டினான். (௨௫௯)

அநுமனுக்குப் பரதன் சன்மானமளித்தல்.

சுருக்கியவுருவனாத்தொழுதுமுன்னின்ற
அருக்கன்மாணவகனுக்கையனன்பினால்
பொருக்கெனநிதியமும்புனைபொற்பூண்களின்
வருக்கமும்வரம்பிலநனிவழங்கினான். (௨௬௦)

கோவொடுதூசுநற்குலமணிக்குலம்
மாவொடுபரிக்குலம்வாவுதேரினம்
தாவுநீருடுத்தநற்றரணிதன்னுடன்
ஏவருஞ்சிலைவலான்யாவுநல்கினான். (௨௬௧)

பரதன் சத்துருக்கனை நகரலங்காரச் செய்யத்திட்டஞ் செய்தல்.

இளவலையண்ணலுக்கெதிர்கொளென்றுநம்
வளமதிலயோத்தியில்வாழுமாக்களைக்
கிளையொடுமேகெனக்கிளத்தியெக்கணும்
அலையொலிமுரசினமறைவிப்பாயென்றான். (௨௬௨)

தோரணநட்டுமேற்றுகில்பொதிந்துநற்
பூரணப்பொற்குடம்பொலியவைத்துநீள்
வாரணமிவுளிதேர்வரிசைதான்வழாச்
சீரணியணிகெனச்செப்புவாயென்றான். (௨௬௩)

பரத்துவனுறைவிடத்தளவும்பைம்பொனீள்
சிரத்தொகைமதிற்புறத்திறுதிசேர்தர
வரத்தகுதரளமென்பந்தர்வைத்துவான்
புரத்தையும்புதுக்குவபுகறிபோயென்றான். (௨௬௪)

என்றலுமவனடியிறைஞ்சியெய்தியக்
குன்றுறழ்வரிசிலைக்குவவுத்தோளினான்
நன்றுணர்கேள்வியனவையில்செய்கையன்
தன்றுணைச்சுமந்திரற்கறியச்சாற்றினான். (௨௬௫)

அவ்வுரைகேட்டலுமறிவின்வேலையான்
கவ்வையிலன்பினிற்களிக்குஞ்சிந்தையான்
வெவ்வியவெறிமணிவீதியெங்கணும்
எவ்வமின்றறைபறையெற்றுகென்றிட, (௨௬௬)

இராமனை எதிரேற்க வனைவரும் வருதிரென முரசறைதல்.

வானையுந்திசையையுங்கடந்தவான்புகழ்க்
கோனையின்றெதிர்கொள்வான்கோலமாநகர்த்
தானையுமரசருமெழுகதானென
யானையின்வள்ளுவன்முரசமெற்றினான். (௨௬௭)

முரைசொலிகேட்டலுமுழங்குமாநகர்
அரைசருமாந்தருமந்தணாளரும்
கரைசெயலரியதோருவகைகைதரத்
திரைசெறிகடலெனவெழுந்துசென்றதால். (௨௬௮)

அனகனையெதிர்கொளென்றறைந்தபேரிநற்
கனகநல்கூர்ந்தவன்கைப்பட்டென்னவும்
சனகனதூர்க்கென முன்னஞ்சாற்றிய
வனைகடிப்பேரியுமொத்தவாமரோ. (௨௬௯)

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமேனைவேந்தரும்
செறிநகர்மாந்தருந்தெரிவைமார்களும்
உறுபொறுளெதிர்ந்தனவுவந்துபோயினார். (௨௭௦)

அன்னையர்மூவருமமரர்போற்றிடப்
பொன்னினற்சிவிகையினெழுந்துபோயபின்
தன்னிகர்முனிவருந்தமருஞ்சூழ்தர
மன்னவன்மாருதிமலர்க்கைபற்றுரு. (௨௭௧)

திருவடியிரண்டுமேசெம்பொன்மௌலியா
இருபுறஞ்சாமரையிரட்டவேழ்கடல்
வெருவருமுழக்கெனவேழமார்த்தெழப்
பொருவருவெண்குடைநிழற்றப்போயினான். (௨௭௨)

சூரியாத்தமனம்.

எல்லவன்மறைந்தனனென்னையாளுடை
வில்லியையெதிர்கொளப்பரதன்மீசசெல்வான்
அல்லியங்கமலமேயனையதாள்களில்
கல்லதர்சுடுந்தனகதிரினென்னவே. (௨௭௩)

பரதன் அநுமனை இராமனிருப்பிட மாதியகேட்டல்.

அவ்வழிமாருதியங்கைபற்றிய
செவ்வழியுள்ளத்தான்றிருவினாயகன்
எவ்வழியுறைந்ததச்செயலெலாம்விரித்
திவ்வழியெமக்குநீயியம்புவாயென்றான். (௨௭௪)

அனுமன் இராமன்றிறமுரைத்தல்.

என்றனுமாருதிதொழுதிங்கெம்பிரான்
மன்றலந்தொடையினையயோத்திமாநகர்
நின்றதுமணவினைநிரப்பிமீண்டுதான்
சென்றதுநாயினேன்செப்பல்வேண்டுமோ. (௨௭௫)

சித்திரகூடத்தைத்தீர்ந்தபின்சிரம்
பத்துடையவனுடன்விளைந்தபண்புந்தான்
இத்தலையடைந்ததுமிறுதியாமென
வித்தகத்தூதனும்விரிக்குஞ்சிந்தையான். (௨௭௬)

குன்றுறழ்வரிசிலைக்குரிசிலெம்பிரான்
தென்றிசைச்சித்திரகூடந்தீர்ந்தபின்
வன்றிறல்விராதனைமடித்துமாதவர்
துன்றியதண்டகவனத்துட்டுன்னினான். (௨௭௭)

ஆங்குறைதபோதனரரக்கர்க்காற்றலே
நீங்கினந்தவத்துறைநீதியோவெனத்
தீங்குசெய்தவர்களைச்செகுத்தறிண்ணநீர்
வாங்குமின்மனத்துயர்வாய்மையாலென்றான். (௨௭௮)

ஆறுநாலாண்டவண்வைகியப்புறத்
தீறிலாமுனிவரரேயவாணையால்
மாறிலாத்தமிழ்முனிவனத்தைநண்ணினான்
ஊறிலாமுனிவரனுவந்துமுன்வர. (௨௭௯)

குடங்கையில்வாரிதியினைத்துங்கொண்டவன்
தடங்கணான்றனையெதிர்தழுவிச்சாபமும்
கடுங்கணைப்புட்டிலுங்கவசந்தானுமற்
றிடம்படுசுரிகையுஞ்சேரவீந்தனன். (௨௮௦)

அப்புறத்தெருவையினரசைக்கண்ணுறாத்
துப்புறச்சிவந்தவாய்த்தோகைதன்னுடன்
மெய்ப்புகழ்த்தம்பியும்வீரன்றானும்போய்
மைப்பொழிறுறுபஞ்சவடியின்வைகினான். (௨௮௧)

வேறு.

பல்பகலிறந்தபின்றைப்பாதகவரக்கிதோன்றி
மெல்லியவிடையினாளைவெருண்டுழியிளையவீரன்
அல்கியதிருவைத்தேற்றியவளுடைச்செவியுமூக்கும்
மல்கியமுலையுங்கொய்தான்மறித்திவள்கரற்குச்சொன்னாள். (௨௮௨)

கரனொடுதிரிசிராவுங்கரியதூடணனுங்காந்தி
எரியுமூன்றனலேயொப்பாரெழுந்துவெஞ்சேனையோடும்
விரவினரையன்செங்கைவில்லினைநோக்குமுன்போர்
எரிதழற்பஞ்சியொத்தாரரக்கியுமிலங்கைபுக்காள். (௨௮௩)

இருபதுதடக்கையான்மாட்டிசைத்தலுமெழுந்துபொங்கி
ஒருபதுதிசையுமுட்கவஞ்சகவுழையென்றேவித்
தருபதஞ்சமைந்தமுக்கோற்றுபதர்வடிவங்கொள்ளாத்
திருவினைநிலத்தோடேந்தித்தென்றிசையிலங்கைபுக்கான். (௨௮௪)

போகின்றகாலையேற்றசடாயுவைப்பொருதுவீட்டி
வேகின்றவுள்ளத்தாளைவெஞ்சிறையதனின்வைத்தான்
ஏகின்றவஞ்சமான்மாரீசற்கொன்றிளவலோடு
பாகின்றகீர்த்தியண்ணறந்தையைப்பரிவிற்கண்டான். (௨௮௫)

அன்னவன்றனக்குவேண்டுமெருங்கடன்முறையினாற்றி
நன்னுதறன்னைத்தேடித்தென்றிசைநடக்குமையன்
மன்னியகவந்தன்றன்னையுயிரொடுசாபமாற்றித்
தன்னையேமறப்பிலாதசவரிபூசனையுங்கொண்டான். (௨௮௬)

ஆங்கவடனதுசொல்லாலருக்கன்மாமகனையெய்திப்
பாங்குறநட்புவாலிபருவரல்கெடுப்பேனென்னா
ஓங்கியமரமும்வாலியுரமுமூடுருவவெய்திட்
டாங்கவன்றனக்குச்செல்வமரசொடுமருளினீந்தான். (௨௮௭)

காலமாமாரிநீங்கக்கயவனோடிடபன்காந்து
நீலன்மாமயிந்தன்சாம்பன்சதவலிபநசனீடும்
வாலிமாமைந்தனென்றிவ்வானரத்தலைவராய
கூலவான்சேனைசூழவடைந்தனனங்கள்கோமான். (௨௮௮)

எழுபதுவெள்ளத்துற்றகுரங்கினமெழுந்துபொங்கி
அழுவநீர்வேலையன்னவடைந்துழியருக்கன்மைந்தன்
தழுவியதிசைகடோறுந்தனித்தனியிரண்டுவெள்ளம்
பொழுதிறைதடாதுமீளப்போக்கினன்றிருவைநாடி. (௨௮௯)

தென்றிசையிரண்டுவெள்ளஞ்சேனையும்வாலிசேயும்
வன்றிறற்சாம்பனோடுவாவினரேவநாயேன்
குன்றிடையிலங்கைபுக்குத்திருவினைக்குறித்துமீண்ட
பின்றைறவந்தளக்கர்வேலைபெரும்படையிருத்ததன்றே. (௨௯௦)

அறிவினுக்கறிவுபோல்வான்வீடணனலங்கற்றோளான்
செறிபுயத்தரக்கன்றம்பிதிருவினைவிடுதியன்றேல்

இறுதியுற்றனைநின்வாழ்நாளெனவவனுரைப்பச்சீறிக்
கறுவுறப்பெயர்ந்துபோந்துகருணையான்சரணம்பூண்டான். (௨௯௧)

ஆங்கவற்கவயநல்கியரசொடுமுடியுமீந்து
பாங்கினால்வருணன்றன்னையழைத்திடப்பரிவிலாமை
தாங்கினன்சிறிதுபோதுதாமரைநயனஞ்சேப்ப
ஓங்கிநீரேழுமன்னானுடலமும்வெந்தவன்றே. (௨௯௨)

மற்றவனவயமென்னமலர்ச்சரணடைந்தவேலை
வெற்றிவானரர்கள்பொங்கிவெற்பினால்வேலைதட்டல்
முற்றுறநன்கியற்றிமொய்யொளியிலங்கைபுக்குப்
பற்றினர்சுற்றியார்த்தார்வானவர்பயங்கடீர்ந்தார். (௨௯௩)

மலையினையெடுத்ததோளுமதமலைதிளைத்தமார்பும்
தலையொருபத்துஞ்சிந்தித்தம்பிதன்றோளுந்தாளும்
கொலைதொழிலரக்கராயோர்குலத்தொடுந்தலத்துவீழச்
சிலையினைவளைவித்தையதேவர்களிடுக்கண்டீர்த்தான். (௨௯௪)

இலக்குவன்பகழியொன்றாலிந்திரசித்தென்றோதும்
விலக்கருவலத்தினானுமிளைஞருங்கிளையும்வீழ்ந்தார்
அலக்கணுண்டுழலுந்தேவரலர்மழைதூவியார்த்தன்
றுலக்குநர்குழுக்கடோறுமுடற்குறையாடல்கண்டார். (௨௯௫)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருந்தெரிவைமாரும்
மூவகையுலகுளோருந்தனித்தனிப்புகழ்ந்துமொய்ப்பப்
பூவைபோனிறத்தினானும்வீடணப்புலவர்கோமாற்
கியாவையுமியம்பிமாண்டோர்க்கியற்றுதிகடன்களென்றான். (௨௯௬)

நான்முகன்விடையையூருநாரியோர்பாகத்தண்ணல்
மான்முகன்முதலாயுள்ளவானவர்தொழுதுபோற்ற
ஊன்முகங்கெழுவுவேலாயும்பர்நாயகியைச்சீறித்
தேன்முகமலருந்தாரானரிசொலச்சீற்றந்தீர்ந்தான். (௨௯௭)

மெய்யினுக்குயிரையீந்தவேந்தர்கோன்விமானத்தெய்த
அய்யனுமிளையகோவுமன்னமுமடியில்வீழக்
கய்யினாற்பொருந்தப்புல்லிக்கண்ணினீர்க்கலசமாட்டிச்
செய்வரமருளுகென்றான்றிருவினாயகனுங்கொண்டான். (௨௯௮)

என்னைநன்கருணைதன்னாலீன்றெடுத்தினிதுபேணும்
அன்னையுமகனுமுன்போலாகெனவருளினீந்து
மன்னவன்போயபின்றைவானரம்வாழ்வுகூரப்
பொன்னெடுநாட்டிலுள்ளார்வரம்பலவழங்கிப்போனார். (௨௯௯)

வெள்ளமோரேழுபத்துவிலங்கரும்வீரராகி
உள்ளவரறுபத்தேழுகோடியுமொற்றையாழி
வள்ளறன்மகனுமுள்ளமகிழ்வுறவிமானமீந்தான்
எள்ளலிலாதகீர்த்திவீடணனிலங்கைவேந்தன். (௩௦௦)

ஆரியன்பின்னைநின்னையன்பினானிணைந்துகாதற்
சூரியன்மகனுந்தொல்லைத்துணைவருமிலங்கைவேந்தும்
பேரியற்படையுஞ்சூழப்பெண்ணினுக்கரசியோடும்
சீரியவிமானத்தேறிப்பரத்துவனிருக்கைசேர்ந்தான். (௩௦௧)

அன்பினாலென்னைநின்பாலாழியுங்காட்டியான்ற
துன்பெலாந்துடைத்தியென்றேதுரந்தனன்றோன்றலென்று
முன்பினாலியன்றவெல்லாமொழிந்தனன்முதுநீர்தாவி
அன்பினாலிலங்கைமுற்றுமெரிக்குணவாகவைத்தோன. (௩௦௨)

அனுமனா லிராமசரிதமுணர்ந்த பரதன்வருந்தி நிற்றல்.

காலின்மாமதலைசொல்லப்பரதனுங்கண்ணீர்சோர
வேலிமாமதில்கள்சூழுமிலங்கையில்வேட்டங்கொண்ட
நீலமாமுகில்பின்போனானொருவனானின்றுணைவேன்
போலுமாலிவைகள்கேட்பேன்புகழுடைத்தடிமைமன்னோ. (௩௦௩)

பரதன் கங்கைக்கரை யடைதல்.

என்றவனிரங்கியேங்கியிருகணுமருவிசோர
வன்றிறலநுமன்செங்கைவலகையாற்பற்றிக்காலிற்
சென்றனனிருளினூடுசெறிபுனற்கங்கைசேர்ந்தான்
குன்றினைவலஞ்செய்தேரோன்குணகடற்றோன்றுமுன்னர். (௩௦௪)

சூரியனுதித்தல்.

இராவணன்வேட்டம்போய்மீண்டெம்பிரானயோத்தியெய்தித்
தராதலமகளும்பூவிற்றையலுமகிழசூடும்
அராவுபொன்மௌலிக்கேய்ந்தசிகாமணிகுணபாலண்ணல்
விராவுறவெடுத்தாலென்னவெய்யவனுதயஞ்செய்தான். (௩௦௫)

காலைவந்திறுத்தபின்னர்க்கடன்முறைகமலக்கண்ணன்
கூலநீள்கழல்களேத்திக்குரக்கினத்தரசைநோக்கிச்
சாலவுங்கலைகள்வல்லோய்தவறுண்டுபோலும்வாய்மை
மூலமேயுணரினுன்றன்மொழிக்கெதிர்மொழியுமுண்டோ. (௩௦௬)

பரதன் சந்தேகத்தாலனுமனை வினாதல்.

எழுபதுவெள்ளஞ்சேனைவானரரிலங்கைவேந்தன்
முழுமுதற்சேனைவெள்ளங்கணக்கிலமொய்த்தவென்றால்
அழுவநீர்வேலைசுற்றுமரவமின்றாகவற்றோ
விழுமிதெம்பிரான்வந்தானென்றுரைத்ததுவீரவென்றான். (௩௦௭)

பரதன் இராமனிருப்பிடம் யாண்டெனல்.

ஓசனையிரண்டுண்டன்றேபரத்துவனுறையுஞ்சோலை
வீசுதெண்டிரையிற்றூயவெள்ளமோரேழுபத்தும்
பூசியபழுவமிங்ஙன்கிடப்பதோமுரற்றலின்றிப்
பேசியதமையுநங்கோனெங்குளன்பெருமவென்றான். (௩௦௮)

அனுமன் சமாதானங்கூறுதல்.

பரதனஃதுரைத்தலோடும்பணிந்துமாருதியுஞ்சீர்சால்
விரதமாதவன்மற்றோரைவிண்ணவர்தமையும்வேண்டி
வரதனுண்டளிப்பவந்தவரத்தினன்மலருந்தேனும்
சுரதமேமாந்திமாந்தித்துயின்றதுபோலுந்தானை. (௩௦௯)

வானவர்கொடுக்கவந்தவரத்தினன்மதுபமூசும்
தேனொடுகிழங்குங்காயுங்கனிகளும்பிறவுஞ்சேர்த்துக்
கானகம்பொலிதலாலேகவிக்குலமவற்றைமாந்தி
ஆனனமலர்ந்ததில்லையாகுநீதுயரலெந்தாய். (௩௧௦)

இனியொருகணத்தினங்கோனெழுந்தருடன்மையீண்டுப்
பனிவருங்கண்ணினீயேபார்த்தியென்றுரைத்தானிப்பால்
முனிதனதிடத்துவந்தமுளரியங்கண்ணன்வண்ணக்
குனிசிலைக்குரிசில்செய்ததிறந்தெனக்குணிக்கலுற்றாம். (௩௧௧)

இராமனிடம் குகன் வருதல்.

அருந்தவன்சுவைகளாறுடமுதினிதளிப்பவையன்
கருந்தடங்கண்ணியோடுங்களைகணுந்துணைவரோடும்
விருந்தினிதருந்தினின்றவேலையின்வேலைபோலும்
பெருந்தடந்தானையோடுங்கிராதர்கோன்பெயர்ந்துவந்தான். (௩௧௨)

குகன்வணங்கலும் இராமன் தழுவிமகிழுதலும்.

தொழுதனன்மனமுங்கண்ணுந்துளங்கினன்சூழவோடி
அழுதனன்கமலமன்னவடித்தலமதனின்வீழ்ந்தான்
தழுவினனெடுத்துமார்பிற்றம்பியைத்தழுவுமாபோல்
வழுவிலாவலியரன்றேமக்களுமனையுமென்றான். (௩௧௩)

இராமனுக்குக் குகன்மறுமொழி கூறல்.

அருளுனதுளதுநாயேற்கவரெலாமரியவாய
பொருளலர்நின்னைநீங்காப்புணர்ப்பினுற்றொடர்ந்துபோந்து
தெருடருமிளையவீரன்செய்வனசெய்கலாதேன்
மருடருமனத்தினேனுக்கினிதன்றோவாழ்வுமன்றே. (௩௧௪)

குகனிலக்குமணனையுஞ் சனகியையும் வணங்குதல்.

ஆயனபிறவும்பன்னியழுங்குவான்றன்னையைய
நீயிவையுரைப்பதென்னோபரதனினீவேறுண்டோ

போயினிதிருத்தியென்னப்புளிஞர்கோனிளவல்பொற்றாள்
மேயினன்வணங்கியன்னைவிரைமலர்த்தாளின்வீழ்ந்தான். (௩௧௫)

இராமன் சுக்கிரீவாதியர்க்குக் குகனையறிவித்தல்.

தொழுதுநின்றவனைநோக்கித்துணைவர்கடமையுநோக்கி
முழுதுணர்கேள்விமேலோன்மொழிகுவான்முழுநீர்க்கங்கை
தழுவிருகரைக்குநாதன்றாயினுமுயிர்க்குநல்லன்
வழுவிலாவெயினர்வேந்தன்குகனெனும்வள்ளலென்பான். (௩௧௬)

சுக்கிரீவாதியர் குகனைத்தழுவி நண்புகோடல்.

அண்ணலஃதுரைத்தலோடுமரிகுலத்தரசனாதி
நண்ணியதுணைவர்யாருமினிதுறத்தழுவிநட்டார்
கண்ணகன்ஞாலமெல்லாங்கங்குலாற்பொதிவான்போல
வண்ணமால்வரைக்குமப்பான்மறைந்தனனிரவியென்பான். (௩௧௭)

அலங்கலந்தொடையினானுமந்தியின்கடன்களாற்றிப்
பொலங்குழைமயிலினோடுதுயிலுறப்புணரிபோலும்
இலங்கியசேனைசூழவிளவலுமெயினர்கோனும்
கலங்கலர்காத்துநின்றார்கதிரவனுதயஞ்செய்தான். (௩௧௮)

புட்பகமேறியிராமன் பரத்துவாசாச்சிரமங் கடந்துசெல்லுதல்.

கதிரவனுதயகாலைக்கடன்கழித்திளவலோடும்
அதிர்பொலன்கழலினானவ்வருந்தவன்றன்னையேத்தி
விதிதருவிமானமேவிவிளங்கிழையோடுங்கொற்றம்
முதிர்தருகருணையோடுமுனிமனந்தொடரப்போனான். (௩௧௯)

தாவிவான்படர்ந்துமானந்தடையிலதேகும்வேலைத்
தீவியகன்னியாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஓவியமுயிர்பெற்றென்னவும்பர்கோனகருமொவ்வா
மாவியலயோத்திசூழுமதிற்புறந்தோன்றிற்றன்றே. (௩௨௦)

இராமன் இஃதயோத்தியென வானரராதியரெழுந்துவணங்குதல்.

பொன்மதிற்கிடக்கைசூழப்பொலிவுடைநகரந்தோன்ற
நன்மதிக்கிழவர்தம்மைநோக்கியஞானமூர்த்தி
சொன்மதித்தொருவராலுஞ்சொலப்படாவயோத்திதோன்றிற்
றென்னலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சிநின்றார். (௩௨௧)

வேறு.

அன்னதோரளவையின்விசும்பதாயினும்
துன்னிருங்கதிரவர்தோன்றினாலெனப்
பொன்னணிபுட்பகப்பொருவின்மானமும்
மன்னவர்க்கரசனுந்தானுந்தோன்றிற்றால். (௩௨௨)

அனுமன் இராமன் வருகையைப் பரதனுக்குக் காண்பித்தல்.

அண்ணலேகாண்டியாலலர்ந்ததாமரைக்
கண்ணனும்வானரக்கடலுங்கற்புடைப்
பெண்ணருங்கலமுநின்பின்புதோன்றிய
வண்ணவிற்குமரனும்வருகின்றார்களே. (௩௨௩)

ஏழிரண்டாகியவுலகமேறினும்
பாழ்புறங்கிடக்குறுபடியதாயதோர்
சூழொளிமானத்துத்தோன்றுகின்றனன்
ஊழியோனென்றுகொண்டுணர்த்துங்காலையே. (௩௨௪)

இராமனைக்கண்ட நகரமாந்தராரவாரித்தல்.

பொன்னொளிமேருவின்பொதும்பிற்புக்கதோர்
மின்னொளிமேகம்போல்வீரன்றோன்றலும்
மன்னெதிர்வருநர்களார்ப்பிராவணன்
தென்னகர்க்கப்புறத்தளவுஞ்சென்றதால். (௩௨௫)

இராமனை பரதன் தரிசித்தல்.

ஊனுடையாக்கைவிட்டுண்மைவேண்டிய
வானுடைத்தந்தையார்வரவுகண்டெனக்
கானிடைப்போகியகமலக்கண்ணனைத்
தானுடையுயிரினைத்தம்பிநோக்கினான். (௩௨௬)

கெட்டவான்பொருள்வந்துகிடைப்பமுன்புதாம்
பட்டவான்படரொழிந்தவரிற்பையுணோய்
சுட்டவான்மானவற்றொழுதலுன்னியே
விட்டனன்மாருதிகரத்தைமேன்மையான். (௩௨௭)

அனுமனாகாயத்தி லிராமனை யடைந்து பரதன்றிறமாதியகூறுதல்.

அக்கணத்தநுமனுமவணின்றேகியத்
திக்குறுமானத்தைச்செல்வனெய்தியச
சக்கரத்தண்ணலைத்தாழ்ந்துமுன்னின்றான்
உக்குறுகண்ணநீரொழுகுமார்பினான். (௩௨௮)

உருப்பவிர்கனலிடையொளிக்கலுற்றவப்
பொருப்பவிர்தோளனைப்பொருந்திநாயினேன்
திருப்பொலிமார்பநின்வரவுசெப்பினேன்
இருப்பனவாயனவுலகம்யாவையும். (௩௨௯)

இராமனநுமனைப்புகழ்ந்து தழுவுதல்.

தீவினையாம்பலசெய்யத்தீர்விலா
வீவிலமுறைமுறைவிளைவமெய்ம்மையால்

நீயிவை துடைத்துநின் றளிக்கநேர்ந்ததால்
ஆயினுமன் பினுயான்செய்மாதவம். (௯௯0)

என்றுரைத்தநுமனையிறுகப்புல்லினன்
ஒன்றுரைத்திறுப்பதென்னுனக்குமெந்தைக்கும்
இன்றுணைத்தம்பிக்கும்யார்க்குமென்றனன்
குன்றிணைத்தனவுயர்குவவுத்தோளினன். (௯௯௧)

ஈடுறுவான்றுணையிராமன்சேவடி
சூடியசென்னியன்றொழுதகையினன்
ஊடுயிருண்டெனவுலந்தயாக்கையன்
பாடுறுபெரும்புகழ்ப்பரதன்றோன்றினன். (௯௯௨)

தோன்றியபரதனைத்தொழுதுதொல்லறச்
சான்றெனநின்றவனிளையதம்பியை
வான்றொடர்பேரரசாண்டமன்னனை
ஈன்றவள்பகைஞனைக்காண்டியீண்டென்றான். (௯௯௩)

காட்டினன்மாருதிகண்ணிற்கண்டவத்
தோட்டலர்தெரியலானிலைமைசொல்லுங்கால்
ஓட்டியமானத்துளுயிரிற்றந்தையர்
கூட்டுருக்கண்டன்னதன்மைகூடினன். (௯௯௪)

வேறு.

இராமனினைவிற் கேற்ப விமானங்கீழிறங்குதல்.

அவ்வையினயோத்திவைகுஞ்சனமொடுமெக்குரோணி
தவ்வலிலாறுபத்தாயிரமொடுந்தாயரோடும்
இவ்வையினடைந்துளோரைக்காண்பெனென்றிராமனுன்னச்
செவ்வையினிலத்தைவந்துசேர்ந்ததுவிமானந்தானும். (௯௯௫)

வேறு.

எவ்வயினுயிர்கட்குமிராமனேறிய
செவ்வியபுட்பகநிலத்தைச்சேர்தலும்
அவ்வவர்க்கணுகியவமரர்நாடெய்க்கும்
எவ்வமின்மானமென்றிசைக்கலாயதால். (௯௯௬)

வேறு.

இராமனவரவர் தன்மைக்கேற்ப விளங்கினனெனல்.

தாயருக்கன்றுசார்ந்தகன்றெனுந்தகையனானன்
மாயையிற்பிரிந்தோர்க்கெல்லாமனோலயம்வந்தொத்தான்
ஆயினையர்க்குக்கண்ணுளாடிரும்பாவையானன்
நோய்வுறுத்துலந்தயாக்கைக்குயிர்புகுந்தாலுமொத்தான். (௯௯௭)

எளிவருமுயிர்கட்கெல்லாமின்றதாயெதிர்ந்ததொத்தான்
அளிவருமனத்தோர்க்கெல்லாமரும்பதவமுதமானான்
ஒளிவறப்பிறந்ததொத்தானுலகினுக்கொண்கணோர்க்குத்
தெளிவருகளிப்புச்செய்யுந்தேம்பிழித்தேறலொத்தான். (௩௩௮)

ஆவியங்கவனலான்மற்றின்மையாலனையனீங்கக்
காவியங்கழனிநாடுகரமுங்கவன்றுவாழும்
மாவியலொண்கணாருமைந்தரும்வள்ளலெய்த
ஓவியமுயிர்பெற்றாலேயொத்தனருணர்வுபெற்றார். (௩௩௯)

சுண்ணமுஞ்சாந்துநெய்யுஞ்சுரிவளைமுத்தும்பூவும்
எண்ணெயுங்கலினமாவிலாழியுமெண்ணில்யானை
வண்ணவார்மதமுநீருமான்மதந்தழுவுமாதர்
கண்ணவாம்புனலுமோடிக்கடலையுங்கடந்தவன்றே. (௩௪௰)

அன்னையர் தம்பியருடன் வந்த வசிட்டனை இராமனடிபணிதல்.

அனைவருமனையராகியடைந்துழியருளின்வேலை
தனையினிதளித்ததாயர்மூவருந்தம்பிமாரும்
புனையுநூன்முனிவன்றானும்பொன்னணிவிமானத்தேற
வனைகழற்குரிசின்முந்திமாதவன்றாளில்வீழ்ந்தான். (௩௪௧)

வசிட்டன் ஆசிகூறுதல்.

எடுத்தனன்முனிவன்மற்றவ்விராமனையாசிகூறி
அடுத்தனதுன்பநீங்கவணைத்தணைந்தன்புகூர்ந்து
விடுத்துழியிளையவீரன்வேதியன்றாளில்வீழ
வடுத்தநூன்முனியுமுன்போல்வாழ்த்தினனாசிகூறி. (௩௪௨)

இராமனன்னையரடிபணிதலு மன்னாராசிகூறுதலும்.

கய்கயன்றநயைமுந்தக்காலுறப்பணிந்துமற்றை
மொய்குழலிருவர்தாளுமுறைமையின்வணங்குஞ்செங்கண்
அய்யனையவர்கடாமுமன்புறத்தழுவித்தத்தம்
செய்யதாமரைக்கணீரான்மஞ்சனத்தொழிலுஞ்செய்தார். (௩௪௩)

அன்னமுமுன்னர்ச்சொன்னமுறைமையினடியில்வீழ்ந்தாள்
கன்னிகரிலாதவென்றித்தம்பியுந்தாயர்தங்கள்
பொன்னடித்தலத்தில்வீழத்தாயரும்பொருந்தப்புல்லி
மன்னவற்கிளவனீயேவாழியென்றாசிசொன்னார். (௩௪௪)

அடிபணிந்தபரதனைத் தழுவியிராமன் அவசமுறல்.

சேவடியிரண்டுமென்பினடியுறையாகச்சேர்த்திப்
பூவடிபணிந்துவீழ்ந்தபரதனைப்பொருமிவிம்மி
நாவிடைபெயர்ப்பதொன்றுமுணர்ந்திலனின்றநம்பி
ஆவியுமுடலுமொன்றத்தழுவினனழுதுசோர்வான். (௩௪௫)

தழுவினனின்றகாலத்தத்திவீழருவிகாலும்
விழுமலர்க்கண்ணீர்மூரிவெள்ளத்தான்முருகிற்செவ்வி
வழுவுறப்பின்னிமூசுமாசுண்டசடையின்மாலை
கழுவினனுச்சிமோந்துகன்றுகாண்கறவையன்னான். (௩௪௬)

இலக்குமணன் பரதனை வணங்குதல்.

அனையதோர்காலத்தம்பொற்சடைமுடியடியதாகக்
கனைகழலமரர்கோமாற்கட்டவற்படுத்தகாளை
துனைபரிகரிதேரூர்தியென்றிவைபிறவுந்தோலின்
வினையுறு செருப்புக்கீந்தான்விரைமலர்த்தாளின்வீழ்ந்தான். (௩௪௭)

ஊடுறுகமலக்கண்ணீர்திசைதொறுஞ்சிவிறியோடத்
தாடொடுதடக்கையாடத்தழுவினன்றனிமைநீங்கிக்
காடுறைந்துலைந்தமெய்யோகையறுகவலையூர
நாடுறைந்துலைந்தமெய்யோனைந்தனன்றுலகனைவ. (௩௪௮)

சத்துருக்கன் இராமலக்குமணர்களை வணங்குதல்.

மூவர்க்குமிளையவள்ளன்முடிமிசைமுகிழ்த்தகையன்
தேவர்க்குந்தேவன்றாளுஞ்செறிகழலிளவறாளும்
பூவர்க்கம்பொழிந்துவீழ்ந்தாமெனடுத்தனர்பொருந்தப்புல்லி
வாவிக்குளன்னமன்னுண்மலரடித்தலத்துவீழ்ந்தான். (௩௪௯)

சுக்கிரீவன்முதலியோர் பரதசத்துருக்கினர்களை வணங்குதல்.

பின்னிணைக்குரிசிறன்னைப்பெருங்கையால்வாங்கிவீங்கும்
தன்னிணைத்தோள்களாரத்தழுவியத்தம்பிமாருக்
கின்னுயிர்துணைவர்தம்மைக்காட்டின * னிருவர்தாளும்
மன்னுயிர்க்குவமைகூரவந்தவர்வணக்கஞ்செய்தார். (௩௫௦)

பரதன் சுக்கிரீவாதியர்க்கு முகமன்கூறுதல்.

குரக்கினத்தரசைச்சேயைக்குமுதனைச்சாம்பன்றன்னைச்
செருக்கிளர்நீலன்றன்னைமற்றுமத்திறத்திறனோரை
அரக்கருக்கரசைவெவ்வேறடைவினின்முதன்மைகூறி
மருக்கமழ்தொடையன்மாலைமார்பினன்பரதனின்றான். (௩௫௧)

முதலமைச்சனுன சுமந்திரன்வருதல்.

மந்திரச்சுற்றத்துள்ளார்தம்மொடும்வயங்குதானைத
தந்திரத்தலைவரோடுந்தமரொடுந்தரணியாளும்
சிந்துரக்களிறுபோல்வாரெவரொடுஞ்சேனையோடும்
சுந்தரத்தடந்தோள்வெற்றிச்சுமந்திரன்தோன்றினனால். (௩௫௨)

---

* இருவர் - பரதசத்துருக்கினர்.

இராமனைச் சுமந்திரன் றொழுதலும் அவன் புகழ்தலும்.

அழுகையுமுவகைதானுந்தனித்தனியமர்செய்தேறத்
தொழுதனனெழுந்துவிம்மிச்சுமந்திரனிற்றலோடும்
தழிவினனிராமன்மற்றைத்தம்பியுமனையநீரான்
வழுவினியுளதின்றிந்தமாநிலக்கிழத்திக்கென்றான். (௧௫௧)

இராமன் கட்டளையால் அனைவரும் புட்பகத்திலேறுதல்.

ஏறுகசேனையெல்லாம்விமானமீதென்றுதன்போல்
மாறிலாவீரன்கூறவந்துளவனிகவெள்ளம்
ஊறிரும்பறவைவானத்தெழிலியுளொடுங்குமாபோல்
ஏறிமற்றிளையவீரனிணையடிதொழுததன்றே. (௧௫௪)

புட்பத்தின்திறம்.

உரைசெயினுலகமுண்டான்மணியணியுதரமொவ்வா
கரைசெயலரியவேதக்குறுமுனிகையுமொவ்வா
விரைசெறியலங்கன்மாலைப்புட்பகவிமானமென்றென்
றுரைசெய்துவானுளோர்களொண்மலர்தூவியார்த்தார். (௧௫௫)

அசனியின்குழுவுமாழியேழுமொத்தார்த்ததென்ன
விசையுறுமுரசும்வேதத்தோதையும்விளிகொள்சங்கும்
இசையுறுகுரலுமேற்றினரவமுமெழுந்துபொங்கித்
திசையுறச்சென்றுவானோரந்தரத்தொலியிற்றீர்ந்த. (௧௫௬)

அவ்வயின்விமானந்தாவியந்தரத்தயோத்திநோக்கிச்
செவ்வையிற்படரலுற்றசெகதலமடந்தையோடும்
இவ்வுலகத்துளோர்களிந்திரற்குவகைகூரக்
கவ்வையினேகுமென்றநீர்மையைக்கடுக்குமன்றே. (௧௫௭)

வேறு.

புட்பகவிமானம் அயோத்தியெய்தி நிலத்திறங்கி நிற்றல்.

ஆனதோரளவையினமரர்கோனொடும்
வானவர்திருநகர்வருவதாமென
மேனிறைவானவர்வீசும்பூவொடும்
தானுயர்புட்பகநிலத்தைச்சார்ந்ததால். (௧௫௮)

௧௬-வது, மீட்சிப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௪௨௭௫.

௩௭-வது, திருமுடிசூட்டுப்படலம்.

இராமன் சடையகற்றி நந்திக்கிராமத்தில் நீராடி கோலங்கோடல்

நம்பியபரதனோடுநந்தியம்பதியைநண்ணி
வம்பலர்சடையுமாற்றிமயிர்வினைமுற்றிமற்றத்
தம்பியரோடுந்தானுந்தண்புனல்படிந்தபின்னர்
உம்பருமுவகைகூரவொப்பனையொப்பச்செய்தார். (௧)

இராமன் தேரேறி யூர்புகுதல்.

நிருதியின்றிசையிற்றோன்றுநந்தியம்பதியைநீங்கிக்
குருதிகொப்புளிக்கும்வேலோன்கொடிமதிலயோத்திமேவச்
சுருதியொத்தனையவெள்ளத்துரகதக்குலங்கள்பூண்டு
பருதியொத்திலங்கும்பைம்பூட்பருமணித்தேரனானான். (௨)

பிறர் செல்கைத்திறம்.

ஊழியினிறுதிகாணும்வலியினதுயர்பொற்றேரின்
ஏழுயர்மதமாவன்னவிலக்குவன்கவிகையேந்தப்
பாழியமற்றைத்தம்பிபாணிறக்கவரிபற்றப்
பூழியையடக்குங்கண்ணீர்ப்பரதன்கோல்கொள்ளப்போனான். (௩)

வீடணக்குரிசின்மற்றைவெங்கதிர்ச்செல்வன்வெற்றிக்
கோடணைகுன்றமேறிக்கொண்டேறர்மருங்குபோதத்
தோடணைமவுலிச்செங்கண்வாலிசேய்தூசுசெல்லச்
சேடனைப்பொருவும்வீரமாருதிபின்புசென்றான். (௪)

அறுபத்தேழமைந்தகோடியானைமேல்வரிசைக்கான்ற
திறமுற்றசிறப்பராகிமானுடச்செவ்விவீரம்
பெறுகுற்றவனப்பருச்சிபிறங்குவெண்குடையர்செச்சை
மறுவற்றவலங்கன்மார்பர்வானரத்தலைவர்போனார். (௫)

எட்டமையிறுத்தபத்தினேழ்பெருவளாகவேந்தர்
பட்டம்வைத்தமைந்தநெற்றிப்பகட்டினர்பைம்பொற்றேரர்
வட்டவெண்குடையர்வீசுசாமரைமருங்கர்வானைத்
தொட்டவெஞ்சோதிமோலிச்சென்னியர்தொழுதுசூழ்ந்தார். (௬)

வானரமகளிரெல்லாம்வானவர்மகளிராய்வந்
தூனமில்பிடியுமொண்டார்ப்புரவியும்பிறவுமூர்ந்து
மீனினமதியைச்சூழ்ந்ததன்மையின்விரிந்துசுற்றப்
பூநிறவிமானந்தன்மேன்மிதிலைநாட்டன்னம்போனாள். (௭)

தேவருமுனிவர்தாமுந்திசைதொறுமுறையிற்சிந்த
ஓவலின்மாரியேய்ப்பவெங்கணுமுதிர்ந்துவீங்கிக்
கேவலமலரால்வேறோரிடமின்றிக்கிடந்தவாற்றால்
பூவெனுநாமமன்றிவ்வுலகிற்கும்பொருந்திற்றன்றே. (௮)

கோடையில்வறந்தமேகக்குலமெனப்பதினாலாண்டு
பாடுறுமதஞ்செலாதபணைமுகப்பருமயானை
காடுறைந்தண்ணலெய்தக்கடாந்திறந்துகுத்துவாரி
ஓடினவோடிற்றுள்ளங்களிதிறந்துடைந்ததேபோல். (௯)

துரகத்தார்ப்புரவியெல்லாமுங்கையர்சொற்பெற்றன்ன
அரவப்போர்மேகமென்னவாலித்தமரங்களான்று
பருவத்தாற்பூத்தவென்னப்பூத்தனபகையிற்சீறும்
புருவத்தார்மேனியெல்லாம்பொன்னிறப்பசலைபூத்த. (௧௦)

இராமன் அரசமாளிகையடைதல்.

ஆயதோரளவில்செல்வத்தண்ணலுமயோத்திநண்ணித்
தாயரைவணங்கித்தங்களிறையொடுமுனியைத்தாழ்ந்து
நாயகக்கோயிலெய்தினானிலக்கிழத்தியோடும்
சேயொளிக்கமலத்தாளுந்திருநடஞ்செய்யக்கண்டான். (௧௧)

இராமனைக்கண்ட நகரமாக்கள் மகிழ்ச்சித்திறம்.

வாங்குதுந்துயில்களென்றுமனமிலரெனினும்பல்கால்
தாங்கினரென்றபோதுமைந்தருந்தையலாரும்
வீங்கியவுவகைமேனிசிறக்கவுமேன்மேற்றுள்ளி
ஓங்கவுங்களியாற்சோர்ந்தவுடையிலாதாரையொத்தார். (௧௨)

வேசியருடுத்தகூறைவேதியர்சுற்றவெற்பில்
பாசிழைமகளிராடையந்தணர்பரிந்துசுற்ற
வாசமென்கலவைசாந்தென்றிவையனமயக்கத்தன்னோர்
பூசினர்க்கிரட்டியானார்பூசலார்புகுந்துளோரும். (௧௩)

இறைப்பெருஞ்செல்வநீத்தவேழிரண்டாண்டும்யாரும்
உறைப்பிலராதலானேவேறிருந்தொழிந்தமின்னார்
பிறைக்கொழுந்தனையநெற்றிப்பெய்வளைமகளிர்மெய்யை
மறைத்தனர்பூணின்மைந்தருயிர்களுமறுகந்தோன்ற. (௧௪)

விண்ணுறைவோர்தந்தெய்வவெறியொடுவேறுளோர்தந்
தண்ணறுநாற்றந்தம்மிற்றலைதடுமாறுநீரால்
மண்ணுறைமாதரார்க்கும்வானுறைமடந்தைமார்க்கும்
உண்ணிறைந்துயிர்ப்புவீங்கியூடலுண்டாயிற்றன்றே. (௧௫)

இராமனாணையாற்பரதன்விபீடணாதியர்க்கு இராசமாளிகை வளங்காட்டுதல்.

ஆயதோரளவிலையன்பரதனையருளினோக்கித்
தூயவீடணற்குமற்றைச்சூரியன்மகற்குந்தொல்லை
மேயவானரங்களாயவீரர்க்கும்பிறர்க்குநந்தம்
நாயகக்கோயிலுள்ளநலமெலாந்தெரித்தியென்றான். (௧௬)

என்றலுமிறைஞ்சிமற்றைத்துணைவர்கள்யாவரோடும்
சென்றனனெழுந்துமாடம்பலவொரீஇயுலகிற்றெய்வப்
பொன்றிணிந்தமரேரோடும்பூமகளுறைந்துவாழும்
குன்றெனவிளங்கித்தோன்றுநாயகக்கோயில்புக்கான். (௧௭)

அரதனமாளிகைகண்ட விபீடணாதியர் ஆச்சரியங்கோடல்.

வயிரமாணிக்கநீலமரகதமுதலாயுள்ள
செயிரறுமணிகளீன்றசெழுஞ்சுடர்க்கற்றைசுற்ற
உயிர்துணுக்குற்றுநெஞ்சுமுள்ளமுமூசலாட
மயர்வறுமனத்தின்வீரரிமைப்பிலர்மயங்கிநின்றார். (௧௮)

பரதனரதனமாளிகை வரலாறுரைத்தல்.

விண்டுவின்மார்பிற்காந்துமணியெனவிளங்குமாடம்
கண்டனர்பரதன்றன்னைவினவினரவர்க்குக்காதற்
புண்டரீகத்துவைகும்புராதனனகன்னற்றோளான்
கொண்டநற்றவந்தன்னாலேயுவந்துமுன்கொடுத்ததென்றான். (௧௯)

பங்கயத்தொருவனிக்குவாகுவிற்களித்தபான்மைத்
திங்கிதுமலராள்வைகுமாடமென்றிசைத்தபோதின்
எங்களாற்றுதிக்கலாகுமியல்பதோவென்றுகூறிச்
செங்கைகள்கூப்பிவேறோர்மண்டபமதனிற்சேர்ந்தார். (௨௰)

சுக்ரீவன் இராமபட்டாபிடேகத்திற் கேச்சரித்தல்.

இருந்தனரினையமாடத்தியல்பெலாமெண்ணியெண்ணிப்
பரிந்தனனிரவிமைந்தன்பரதனைவணங்கித்தூயோய்
கருந்தடமுகிலினாற்குக்காப்புநாணணியுநன்னாள்
தெரிந்திடாதிருத்தலென்னோவென்றலுமண்ணல்செப்பும். (௨௧)

அனுமன்புண்ணியதீர்த்தங்கொண்டுவருதற்கேகுதல்.

ஏழ்கடலதனிற்றோயமிருநதிபிறவிற்றோயம்
தாழ்விலாதிவண்வந்தெய்தற்கருமைத்தோர்தன்மைத்தென்ன
ஆழியொன்றுடையோன்மைந்தனனுமனைக்கடிதினோக்கச்
சூழ்புவியதனையெல்லாங்கடந்தனன்காலின்றோன்றல். (௨௨)

வசிட்டன் வருதல்.

கோமுனியோடுமற்றைக்கணிதரைக்கொணர்கவென்று
ஏவினன்றேர்வலான்சென்றிசைத்தலுமுலகமீன்ற
பூமகன்றந்தவந்தப்புனிதமாதவன்வந்தெய்த
யாவருமெழுந்துபோற்றியிணையடிதொழுதுநின்றார். (உ௩)

வசிட்டன் நாளைப்பட்டாபிடேக நாளெனல்.

அரியணைபரதனீயவதன்கணாண்டிருந்தவந்தப்
பெரியவனவனைநோக்கிப்பெருநிலக்கிழத்தியோடும்
உரியமாமகளிரோடுமுகந்தனரொருவில்செல்வம்
கரியவன்றுய்த்தற்கேய்ந்தகாப்புநாணாளையென்றான். (உ௪)

அனைவருக்கு மோலைபோக்கல்.

இந்திரன்குருவுமன்றற்கேனையரெனவுநின்ற
மந்திரவிதியினார்க்குமயர்வறவரைந்துவிட்டார்
சந்திரகவிகையோங்குந்தயரதராமன்றுமச்
சுந்தரமவுலிசூடும்வாரமுநாளுந்தூற்றி. (உ௫)

அடுக்கியவுலகமூன்றுமாதரத்தூதர்கூவ
இடுக்கொருபெருமின்றியயோத்திவந்திறுத்ததென்றால்
தொடுக்குறுகவியான்மற்றைத்துழனியையிறுதிதோன்ற
வொடுக்குறுத்துரைக்குந்தன்மைநான்முகத்தொருவற்குண்டோ. (உ௬)

அவ்வயின்முனிவனோடும்பரதனுமரியின்சேயும்
செவ்வெயினிருதர்கோனுஞ்சாம்பனும்வாலிசேயும்
எவ்வமிலாற்றல்வீரர்யாவருமெழுந்துசென்றாங்
கவ்வியமவித்தசிந்தையண்ணலைத்தொழுதுசொன்னார். (உ௭)

நாளைநீமவுலிசூடுநலந்திகழ்பெரியநன்னாள்
காளைநீகிரிச்சமெல்லாங்கழித்தியென்றுரைத்துக்கன்னல்
வேளையேபொடியதாகவிழிக்குநீணுதலின்வெண்பூம்
பூளையேசூடுவானைப்பொருவுமாமுனியும்போனான். (உ௮)

பிரமன்கட்டளையால் மயன்மகுடாபிடேக மண்டபமமைத்தல்.

நான்முகத்தொருவவேநயனறிமயனென்றேதும்
நூன்முகத்தோங்குகேள்விநுணங்கியோன்வணங்குநெஞ்சன்
கோன்முகத்துகந்துகுற்றஞ்செற்றுலகெல்லாங்கொள்ளு
வான்முகத்தொருவனன்னாண்மண்டபம்வயங்கக்கண்டான். (உ௯)

அனுமன் அனைத்துத்தீர்த்தமும் கொண்டுவருதல்.

சூழ்கடனான்கிற்றோயமெழுவகைத்தாகச்சொன்ன
ஆழ்திரையாற்றினீரோடமைந்தனவென்னவாமென்

றாழியினிறுதிசெல்லுந்தாதையினுலாவியொன்று
ஏழ்கடனீருந்தந்தானிருந்துய்யமருந்துதந்தான். (௩௦)

எரிமணிக்குடங்கள்பன்னூற்றியானைமேல்வரிசைக்கான்ற
விரிமதிக்குடையினீழல்வேந்தர்கள்பலருமேந்திப்
புரைமணிக்காளமார்ப்பப்பல்லியந்துவைப்பப்பொங்கும்
சரயுவிற்புனலுந்தந்தார்சங்கினமார்ப்பமன்னோ. (௩௧)

இராமபட்டாபிடேகம்.

மாணிக்கப்பலகைதைத்தவயிரத்தின்கால்கள்சேர்த்தி
ஆணிப்பொன்சுற்றுமுச்சியழகுறச்சமைத்தபீடம்
ஏனுற்றபளிக்குமாடத்திட்டனரதனின்மீது
சேனுற்றதிரடோள்வீரன்றிருவொடும்பொலிந்தான்மன்னோ. (௩௨)

மங்கலகீதம்பாடமறையொலிமுழங்கவல்வாய்ச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமையொலிப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பூமழைபொழியவிண்ணோர்
எங்கணுயகனைவெவ்வேறெதிரபிடேகஞ்செய்தார். (௩௩)

மாதவர்மறைவலாளர்மந்திரக்கிழவர்மற்றும்
மூதறிவாளருள்ளஞ்சான்றவர்முதனீராட்டச்
சோதியான்மகனுமற்றைத்துணைவருமநுமன்றானும்
தீதிலாவிலங்கைவேந்தும்பின்னபிடேகஞ்செய்தார். (௩௪)

அங்கண்வானுலகந்தாயவடிமலர்த்தவிசோனாட்டும்
கங்கைவார்சடையினேற்றான்கண்ணுதலொருவனிந்நாள்
சிங்கவேறனையான்செய்யதிருமுடியாட்டுகின்னீர்
எங்கணேற்றன்னோன்வாழுமென்றனர்புலவரெல்லாம். (௩௫)

மரகதசயிலஞ்செந்தாமரைமலர்க்காடுபூத்துத்
திரைகெழுகங்கைவீசுந்திவலையானனைந்துசெய்ய
இருகுழைதொடரும்வேற்கண்மயிலொடுமிருந்ததேய்ப்பப்
பெருகியசெவ்விகண்டார்பிறப்பெனும்பிணிகடீர்ந்தார். (௩௬)

தெய்வநீராடற்கொத்தசெய்வினைவசிட்டன்செய்ய
ஐயமில்சிந்தையானைச்சுமந்திரவமைச்சனோடு
நொய்தினினியற்றினோன்பின்மாதவனுனித்துக்காட்ட
வெய்தினினியன்றபல்வேறிந்திரற்கேயவென்ன. (௩௭)

இராமனுக்கு வசிட்டன் மகுடந்தரித்தல்.

அரியணையநுமன்றாங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருங்கவரிவீச

விரைசெறிகுழலியோங்கவெண்ணெயூர்ச்சடையன்றங்கண்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி. (௩௮)

வெள்ளியும்பொன்னுமென்போர்விதிமுறைமெய்யிற்கொண்ட
ஒள்ளியநாளினல்லவோரையினுலகமூன்றும்
துள்ளினகுனிப்பமௌலிசூடினான்கடலின்வந்த
தெள்ளியதிருவுந்தெய்வப்பூமியுஞ்சேருந்தோளான். (௩௯)

சித்தமொத்தனனென்றோதுந்திருநகர்ச்செல்வமென்ன
உத்தமத்தொருவன்சென்னிவிளங்கியவுயர்பொன்மௌலி
ஒத்துமெய்க்குவமைகூரவோங்குமூவுலகத்தோர்க்கும்
தத்தமுச்சியின்மேல்வைத்ததொத்தெனத்தளர்வுதீர்ந்தார். (௪0)

பன்னெடுங்காலநோற்றுத்தன்னுடைப்பண்பிற்கேற்ற
பின்னெடுங்கணவன்றன்னைப்பெற்றிடைபிரிந்துமுற்றும்
தன்னெடும்பீழைநீங்கத்தழுவினாடளிர்க்கைநீட்டி
நன்னெடும்பூமியென்னுநங்கைதன்கொங்கையார. (௪௧)

* விரதநூன்முனிவன்சொன்னவிதிநெறிவழாமைநோக்கி
வரதனுமிளைஞர்க்காங்கண்மாமணிமகுடஞ்சூட்டிப்
பரதனைத்தனதுசெங்கோனடாவுறப்பணித்துநாளும்
கரைதெரிவிலாதபோகக்களிப்பினுளிருந்தகாலை. (௪௨)

௩௭ - வது, திருமுடிசூட்டுப்படலம் - முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௪௩௭.

---

௩௮ - வது, விடைகொடுத்தபடலம்.

இராமனரசிருக்கை மண்டபமுறுதல்.

பூமட்கணியதென்னப்பொலிபசும்பூரிசேர்த்தி
மாமணித்தூணிற்செய்தமண்டபமதனினாப்பண்
கோமணிச்சிவிகைமீதேகொண்டலுமின்னும்போலத்
தாமரைக்கிழத்தியோடுந்தயரதராமன்சார்ந்தான். (௧)

இராமனரியணையி லமர்தல்.

விரிகடனடுவெட்பூத்தமின்னெனவாரம்வீங்க
எரிகதிர்க்கடவுடன்னையினமணிமகுடமேய்ப்பக்

---

* இப்பாடல் சிலபிரதிகளிற் காணப்படவில்லை.

கருமுகிற்கரசுசெந்தாமரைமலர்க்காடுபூத்தோ
ரரியணைப்பொலிந்ததென்னவிருந்தனனயோத்திவேந்தன். (உ)

மரகதசயிலமீதுவாணிலாப்பாய்வதென்ன
இருகுழையிடறும்வேற்கணிளமுலையிளநலார்தம்
கரகமலங்கள்பூத்தகற்றையங்கவரிதெற்ற
உரகருநரரும்வானத்தும்பரும்பரவியேத்த. (ந)

உலகமீரேழுந்தன்னவொளிநிழல்பரப்பவானில்
திலகவாணுதல்வெண்டிங்கள்சிந்தைநொந்தெளிதிற்றேயக்
கலகவாணிருதர்கோனைக்கட்டழித்திட்டகீர்த்தி
இலகிமேனிவர்ந்ததென்னவெழுதனிக்குடைநின்றேய. (ச)

மங்கலகீதம்பாடமறையவராசிகூறச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமைதுவைப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பொருங்கயற்கருங்கட்செவ்வாய்ப்
பங்கயமுகத்தினார்கண்மயினடம்பயிலமாதோ (ரு)

திரைகடற்கதிருநாணச்செழுமணிமகுடகோடி
கரைதெரிவிலாதசோதிக்கதிரொளிபரப்பநாளும்
வரைபொருமாடவாயினெருக்குறவந்துமன்னர்
பரசியேவணங்குந்தோறும்பதயுகஞ்சேப்பமன்னோ. (சா)

மந்திரக்கிழவர்சுற்றமறையவர்வழுத்தியேத்தத்
தந்திரத்தலைவர்போற்றத்தம்பியர்மருங்குசூழச்
சிந்துரப்பவளச்செவ்வாய்த்தெரிவையர்பலாண்டுகூற
இந்திரற்குவமையேய்ப்பவெம்பிரானிருந்தகாலை (எ)

மயிந்தன்மாதுமிந்தன்கும்பன்கம்பன்மற்றநுமன்மாறில்
சயந்தருகுமுதக்கண்ணன்சதவலிகுமுதன்றண்டார்
நயந்தெரிததிமுகன்கோதசமுகன்முதலநண்ணார்
வியந்தெழுமறுபத்தேழுகோடியாம்வீரரோடும். (அ)

ஏனையர்பிறருஞ்சுற்றவெழுபதுவெள்ளத்திற்ற
வானரரோடும்வெய்யோன்மகன்வந்துவணங்கிசூழத்
தேனிமிரலங்கற்பைந்தார்வீடணக்குரிசில்செய்ய
மானவாளரக்கரோடுவந்தடிவணங்கிச்சூழ்ந்தான். (கூ)

வெற்றிவெஞ்சேனையோடும்வெறிப்பொலிப்புலியின்வெவ்வால்
சுற்றுறத்தொடுத்துவீக்குமரையினன்சுழல்செங்கண்ணன்
கற்றிரள்வயிரத்திண்டோட்கடுந்திறன்மடங்கலன்னான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகன்றொழுதுசூழ்ந்தான். (க0)

வள்ளலுமவர்கடம்மேல்வரம்பின்றிவளர்ந்தகாதல்
உள்ளுறப்பிணித்தசெய்கையொளிமுகக்கமலங்காட்டி
அள்ளுறத்தழுவினன்போலகமகிழ்ந்தினிதினோக்கி
எள்ளலிலாதமொய்ம்பரீண்டினிதிருத்திரென்றான். (௧௧)

நன்னெறியறிவுசான்றோர்நான்மறைக்கிழவர்மற்றைச்
சொன்னெறியறிவுநீரார்தோமறுபுலமைச்செல்வர்
பன்னெறித்தொன்றுதோன்றும்பருமணிப்பண்பிற்கேளார்
மன்னவர்க்கரசன்பாங்கர்மரபினாற்சுற்றமன்னோ. (௧௨)

தேம்புனற்படப்பைமூதூர்த்திருநகரயோத்திசேர்ந்த
பாம்பணையமலன்றன்னைப்பழிச்சொடும்வணக்கம்பேணி
வாம்புனற்பரவைஞாலத்தரசருமற்றுளோரும்
ஏம்பலுற்றிருந்தார்நொய்தி * னிருமதியிறந்ததன்றே. (௧௩)

நெருக்கியவமரரெல்லாநெடுங்கடற்கிறைநின்றேத்தப்
பொருக்கெனவயோத்தியெய்திமற்றவர்பொருமதீர
வருக்கமோடரக்கர்யாருமடிதரவரிவிற்கொண்ட
திருக்கிளர்மார்பினான்பிற்செய்ததுசெப்பலுற்றாம். (௧௪)

இராமன் விருந்தினருக்கு வெகுமதியளித்தல்.

மறையவர்தங்கட்கெல்லாமணியொடுமுத்தும்பொன்னும்
நிறைவளம்பெருகுபூவுஞ்சுரபியுநிரைத்துமேன்மேல்
குறையிதென்றிரந்தோர்க்கெல்லாங்குறைவறக்கொடுத்துப்பின்னர்
அறைகழலரசர்தம்மைவருகெனவருளவந்தார். (௧௫)

அய்யனுமவர்கடம்மையகமகிழ்ந்தருளினோக்கி
வய்யகஞ்சிவிகைதாங்கன்மாமணிமகுடம்பொற்பூண்
கொய்யுளைப்புரவிதிண்டேர்குஞ்சரமாடையின்சொல்
மெய்யுறக்கொடுத்தபின்னர்க்கொடுத்தனன்விடையுமன்னோ. (௧௬)

சம்பரன்றன்னைவென்றுதயரதனீன்றகாலத்
தும்பர்தம்பெருமானீந்தவொளிமணிக்கடகத்தோடும்
கொம்புடைமலையுந்தேருங்குரகதக்குழுவுந்தூசும்
அம்பரத்தனந்தர்நீத்தானலரிகாதலனுக்கீந்தான். (௧௭)

அங்கதமிலாதகொற்றத்தண்ணலுமகிலமெல்லாம்
அங்கதனென்னுநாமமழகுறத்திருத்துமாபோல்
அங்கதங்கன்னற்றோளாற்கயன்கொடுத்ததனையீந்தான்
அங்கதன்பெருமைமண்மேலாரறிந்தறையகிற்பார். (௧௮)

---

* இருமதி - இரண்டுமாதம்.

இ-ள். அங்கதமிலாத - வசையில்லாத, கொற்றத்தண்ணலும் - வெற்றியையுடைய சீராமபிரானும், அகிலமெல்லாம் - பூமியிலெங்கும், அங்கதனென்னுநாமம் - அங்கதனென்னும்பெயர், அழகுற - (காரணக்குறியென) அழகைப்பெற, திருத்துமாபோல் - அப்பெயரைத் திருந்தச்செய்வதுபோல, கன்னற்றோளாற்கு - இட்சுவாகுமகாராசனுக்கு, அயன்-பிரமன், அங்கதங்கொடுத்ததனை - தொடுத்ததாகிய தோளணியை; அங்கு - அத்திருவோலக்கத்தில், ஈந்தான் - அங்கதப்பெருமானுக்கு யீந்தான், அதன்பெருமை - அதனதுபெருமையை, மண்மேல் - பூமியில், ஆரறிந்து - எவர்கள் அறிந்து, அறையகிற்பார் - சொல்லமாட்டுவார்-எ-று.

ஆறென்னு மிடைச்சொல்லி னீறுதொகுத்தல். (கஅ)

பின்னருமவனுக்கையன்பெருவிலையாரத்தோடும்
அன்னநுண்டூசுமாவுமதமலைக்கரசுமீயா
உன்னைநீயன்றியிந்தவுலகினிலொப்பிலாதாய்
மன்னுககதிரோன்மைந்தன்றன்னொடுமருவியென்றான். (கக)

மாருதவிமலசேயைமகிழ்ந்தினிதருளினோக்கி
ஆருதவிடுதற்கொத்தார்நீயலாலன்றுசெய்த
பேருதவிக்கியான்செய்செயல்பிறிதில்லைமெய்ப்பூண்
போருதவியதிண்டோளாய்பொருந்துறப்புல்லுகென்றான். (உ0)

என்றலும்வணங்கிநாணிவாய்புதைத்திலங்குதானை
முன்றலையொதுக்கிநின்றமொய்ம்பனைமுழுதுநோக்கிப்
பொன்றிணிவயிரப்பைம்பூணாரமும்புனைமென்றூசும்
வன்றிறற்கயமுமாவும்வழங்கினன்வழங்குசீரான். (உக)

பூமலர்த்தவிசைநீத்துப்பொன்மதின்மிதிலைபூத்த
தேமொழித்திருவையையன்றிருவருண்முகந்துநோக்கப்
பாமறைக்கிழத்தியீந்தபருமுத்தமாலைகைக்கொண்
டேமுறக்கொடுத்தாளன்னாளிடரறிந்துதவினாற்கே. (உஉ)

சந்திரற்குவமைசான்றதாரகைக்குழுவைவென்ற
இந்திரற்கேய்ந்ததாகுமென்னுமுத்தாரத்தோடு
கந்தடுகளிறுவாசிதூசணிகலன்கண்மற்றும்
உந்தினனெண்கின்வேந்தற்குலகமுந்துதவினானே. (உ௩)

நவமணிக்கரசுமுத்துமாலையுநலங்கொடேசும்
உவமைமற்றிலாதபொற்பூணுலப்பிலபிறவுமொண்டார்க்
கவனவெம்பரியும்வேகக்கதமலைக்கரசுங்காதற்
பவனனுக்கினியநண்பன்பயந்தெடுத்தவனுக்கீந்தான். (உ௪)

பதவலிச்சதங்கைப்பைந்தார்ப்பாய்பரிபணைத்திண்கோட்டு
மதவலிச்சைலம்பொற்பூண்மாமணிக்கோவைமற்றும்
உதவலிற்றகைவவன்றியில்லனவுள்ளவெல்லாம்
சதவலிதனக்குத்தந்தான்சதுமுகத்தவனைத்தந்தான்.

இ-ள். சதுமுகத்தவனைத்தந்தான் - பிரமனைத்தந்த இறைவனாகிய ஸ்ரீராமபிரான், பதம் - காலில், வலி - பூங்கொடியையொத்த, சதங்கைப் பைந்தார் - பசும்பொற்சதங்கைமாலையணிந்த, பாய்பரி - பாய்ந்தோடுங் குதிரைகளையும், பணை - பெருமையாகிய, திண்கோட்டு - திண்ணிய தந்தங்களையும், மதம் - மதவளத்தையுமுடைய, வலிச்சைலம் - வலியயானைகளையும், பொற்பூண் - பொன்னாற்செய்த பூண்களையும், மாமணிக்கோவை - மாணிக்கமணிமாலைகளையும், மற்றும் - பிறவற்றையும், உதவலில் - ஈகையில், தகைவவன்றி - தடைசெய்வன அல்லாமல், இல்லன - தனதில்லினிடத்தனவாகி, உள்ளவெல்லாம் - உள்ளபொருள்களெல்லாவற்றையும், சதவலிதனக்கு தந்தான் - சதவலிக்குக் கொடுத்தான்—எ-று.

உதவலிற்றகைவன, தொன்றுதொட்டு வருமரசுக்குரிய முடிகொடி முதலியன. (௨௫)

பேசரிதொருவர்க்கேயும்பெருவிலையிதனுக்கீதுக்
கோசரியிலதென்றெண்ணுமொளிமணிப்பூணுந்தூசும்
மூசரிக்குவமைமும்மைமும்மதக்களிறுமாவும்
கேசரிதனக்குமீந்தான்கிளர்மணிமுழவுத்தோளான்.

இ-ள். கிளர் - விளங்குகின்ற, மணி - மணிகளழுத்திய, முழவுத்தோளான் - முழவுபோன்ற சுந்தரத்தோளையுடைய ஸ்ரீராமபிரான், இதனுக்கு - இதற்கு, பெருவிலை - மிக்கவிலையை, ஒருவர்க்கேயும் - ஒருவராலும், பேசரிது - சொல்லுதலரிது, ஈதுக்கோ - இதனுக்கோ, சரியிலதென்று - ஒப்பில்லதென்று, எண்ணும் - மதிக்கின்ற, ஒளிமணிப்பூணும் - ஒளியமைந்த மணிப்பூணும், தூசும் - பொற்றுகிலும், மூசு - உலகெங்கும் மொய்த்துக்கொள்ளும், அரிக்கு - வடவைத்தீயினும், உவமை மும்மை (சினத்திறல்) ஒப்புமும்மடங்கமைந்த, மும்மதக்களிறும் - மும்மதங்களையுடைய யானைகளையும், மாவும் - குதிரைகளையும், கேசரிதனக்குமீந்தான் - கேசரியென்னும் படைத்தலைவனுக்குங் கொடுத்தான்-எ-று.

ஆடவர் பெண்மையையவாவுந் தோளையுடையானாகலின், இறைவனை முழவுத்தோளானென்றார். ஒருவர்க்கு - மூசரிக்கு - வேற்றுமை மயக்கம். ஓ - சிறப்பு. அரியென்னும் பலபொருளொருசொல் ஈண்டுத்தீயின் மேனின்றது உம்மை இறந்தது தழீஇயது. (௨௬)

வளனணிகலனுந்தூசுமாமதக்களிறுமாவும்
நளனொடுகுமுதன்றாரனவையமுபநசன்மற்றோர்

உளமகிழ்வெய்தும்வண்ணமுலப்பிலபிறவுமீந்தான்
களனமர்கமலவேலிக்கோசலக்காவலோனே. (௨௭)

அவ்வகையறுபத்தேழுகோடியாமரியின்வேந்தர்க்
கெவ்வகைத்திறனுநல்கியினியனபிறவுங்கூறிப்
பவ்வமொத்துலகிற்பல்குமெழுபதுவெள்ளம்பார்மேல்
கவ்வையற்றினிதுவாழக்கொடுத்தனன்கடைக்கணோக்கம். (௨௮)

மின்னையோர்மௌலிச்செங்கண்வீடணப்புலவர்கோமான்
றன்னையேயினிதுநோக்கிச்சராசரஞ்சுமந்தசால்பின்
னின்னையேயொப்பார்நின்னையலதிலருளரேலைய
பொன்னையேயிரும்புநேருமாயினும்பொருவன்றென்றான். (௨௯)

என்னுரைத்தமரரீந்தவெரிமணிக்கடகத்தோடு
வன்றிறற்களிறுந்தேரும்வாசியுமணிப்பொற்பூணும்
பொன்றிணிதூசும்வாசக்கலவையும்புதுமென்சாந்தும்
நன்றுறவவனுக்கீந்தானநகணைத்துயிலைத்தீர்ந்தான். (௩௦)

சிருங்கபேரியமென்றோதுஞ்செழுநகர்க்கிறையைநோக்கி
மருங்கினியுரைப்பதென்னோமறுவறுதுணைவற்கென்னாக்
கருங்கைம்மாக்களிறுமாவுங்கனகமுந்தூசும்பூணும்
ஒருங்கறவுதவிப்பின்னருதவினன்விடையுமன்றே. (௩௧)

அனுமனைவாலிசேயைச்சாம்பனையருக்கன்றந்த
கனைகழற்காலினானைக்கருணையங்கடவுணோக்கி
நினைவதற்கரிதுநம்மைபிரிவென்றனீவிர்வைப்பும்
எனததுகாவற்கின்றென்னேவலினேகுமென்றான். (௩௨)

இலங்கைவேந்தனுக்குமிவ்வாறினியனயாவுங்கூறி
அலங்கல்வேன்மதுகையண்ணல்விடைகொடுத்தருளலோடும்
நலங்கொள்பேருணர்வின்மிக்கோர்நலனுறுநெஞ்சர்பின்னர்
கலங்கலரேயசெய்தல்கடனெனக்கருதிச்சூழ்ந்தார். (௩௩)

பரதனையிளையகோவைச்சத்துருக்கனனைப்பண்டை
விரதமாதவனைத்தாயர்மூவரைமிதிலைப்பொன்னை
வரதனைவலங்கொண்டேத்திவணங்கினர்விடையுங்கொண்டே
சரதமாநெறியும்வல்லோர்தத்தமபதியைச்சார்ந்தார். (௩௪)

குகனைத்தன்பதியினுய்த்துக்குன்றினைவலஞ்செய்தேரோன்
மகனைத்தன்புரத்தில்விட்டுவாளெயிற்றரக்கர்சூழக்
ககனத்தின்மிசையேயெய்திக்கனைகடலிலங்கைபுக்கான்
அகனுற்றகாதலண்ணலலங்கல்வீடணன்சென்றன்றே. (௩௫)

அய்யனுமவரைநீக்கியருள்செறிதுணைவரோடும்
வய்யகமுழுதுஞ்செங்கோன்மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச்செகதலமகளுமற்றும்
நய்யுமாறின்றிக்காத்தானிலம்பொறைகடீர்த்தே. (௧௬)

உம்பரோடிம்பர்காறுமுலகமோரேழுமேழும்
எம்பெருமானென்றேத்தியிறைஞ்சிநின்றேவல்செய்யத்
தம்பியரோடுந்தானுந்தருமமுந்தரணிகாத்தான்
அம்பரத்தனந்தர்நீங்கியயோத்திவந்திறுத்தகாளை. (௧௭)

வேறு.

இராவணன்றன்னைவீட்டியிராமனும்வந்துதோன்றித்
தராதலமுழுதுங்காத்துத்தம்பியுந்தானுமாகப்
பராபரமாகிநின்றபண்பினைப்பகருவார்கள்
நராபதியாகிப்பின்னுநமனையும்வெல்லுவாரே. (௧௮)

௧௮-வது, விடைகொடுத்தபடலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௪௧௫.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

உயுத்தகாண்டம் முற்றிற்று.